D
V2X1,31 N66
M66.39

137849

*Issued* 15—11—1966]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## TUESDAY, 2ND AUGUST 1966

VOLUME XXXIX—No. 2

*CONTENTS*

| | | PAGES |
|---|---|---|
| I | Obituary references to Sri SP. K. A. Lakshmanan Chettiar, M.L.C., Sri M. Kandaswamy Kandar, Sri A. Rathinam, Sri S. Kandaswami Gounder, Sri N. Rajagopal, Sri H. M. Jagannathan, and former Members of the Legislative Assembly .. .. .. .. .. .. .. .. | 87 |
| II | Questions and Answers .. .. .. .. .. .. | 88–110 |
| III | Adjournment Motions— | |
| | (1) Promulgation of order under Section 144 Cr.P.C. .. .. | 110–111 |
| | (2) Eviction of Agriculturists in Vanavasi-Pakkanad forest area, Salem district .. .. .. .. .. .. .. .. | 111–113 |
| | (3) Scarcity of foodgrains and opening of fair price shops in certain districts .. .. .. .. .. .. .. | 113–116 |
| IV | Privilege Matters— | |
| | (1) Chief Minister's announcement of date of meeting of the Legislature before publication of Governor's notification .. | 116–118 |
| | (2) Delay in intimation of the arrest of a Member .. .. | 119–124 |
| V | Motion expressing want of confidence in the Ministry—Motion given notice of by Sri M. Kalyanasundaram .. .. | 124 |

©
GOVERNMENT OF MADRAS
1966

*Legislative Assembly Department*
*Madras*

PRICE 60 *Paise*]

CONTENTS—*cont.*


| | PAGES |
|---|---|
| VI Announcements— | |
| (1) Election to the Senate of the Madurai University .. .. | 125 |
| (2) Business of the House .. .. .. .. .. .. | 125–126 |
| (3) The Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco (Validation) Bill, 1966 .. .. .. .. .. .. | 126 |
| (4) The Madras Urban Land Tax Bill, 1966 .. .. .. | 126 |
| (5) The Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966 .. .. .. .. .. | 126 |
| VII Government Bills— | |
| (1) The Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco (Validation) Bill, 1966 .. .. .. .. | 126 |
| (2) The Madras Urban Land Tax Bill, 1966 .. .. .. | 126–127 |
| (3) The Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966 .. .. .. .. .. | 127 |
| VIII Presentation of Report— Report of the Committee on Rules .. .. .. .. | 127 |
| IX Point of Order *re.* Precedence for No-confidence Motion .. | 127–128 |
| X First Supplementary Statement of Expenditure for 1966-67— Presentation .. .. .. .. .... .. .. | 128–131 |
| XI Discussion on the Madras State Electricity Board Budget for 1966-67—*cont.* .. .. .. .. .. .. .. | 131–206 |
| XII Papers laid on the Table of the House .. .. .. .. | 206–208 |


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 2nd August 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The Hon. SRI S. CHELLAPANDIAN), in the Chair.

## I.—OBITUARY REFERENCES TO SRI SP. K. A. LAKSHMANAN CHETTIAR, M.L.C., SRI M. KANDASWAMY KANDAR, SRI A. RATHINAM, SRI S. KANDASWAMI GOUNDER, SRI N. RAJAGOPAL AND SRI H. M. JAGANANTHAN, FORMER M.L.As.

MR. SPEAKER: It is my sad duty to inform the House of the demise on the 18th June 1966, of Sri SP. K. A. Lakshmanan Chettiar, a sitting Member of the Legislative Council representing Ramanathapuram Local Authorities Constituency since 1962.

It is also my painful duty to inform the House of the demise of—

(1) Sri M. Kandaswamy Kandar, a former Member of the Madras Legislative Assembly representing Mecheri Constituency during 1953—57 and Dharmapuri Constituency during 1957—62 on the 29th March 1966.

(2) Sri A. Rathinam, a former Member of the Madras Legislative Assembly during 1952-57 representing Cuddalore Reserved Constituency on the 16th April 1966.

(3) Sri S. Kandaswami Gounder, a former Member of the Madras Legislative Assembly during 1952-57 representing Pennagram Constituency on the 22nd April 1966.

(4) Sri N. Rajagopal, a former Member of the Madras Legislative Assembly during 1952-57 representing Manachanallur Constituency on the 8th May 1966; and

(5) Sri H. M. Jagannathan, a former Member of the Madras Legislative Assembly during 1952-57 representing Vellore Reserved Constituency on the 25th July 1966.

On behalf of the House, I will convey the condolences to the members of the bereaved families.

I request the Hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed souls.

The Members stood in silence for a minute.

[2nd August 1966

## II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Atlas published by Union Government*

*21 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn by the citizens of Kumbakonam, that in 1964 Edition of the Atlas brought out by the Union Education Ministry, the description of Kumbakonam as "the seat of Sri Sankaracharya Math" has been left out; and

(b) if so, whether the Government has made any recommendation to the Union Government in this regard?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) & (b) Yes.

**திரு. வை. சங்கரன்:** எப்போது இம்மாதிரி சிபாரிசு செய்யப்பட்டது, என்ன முறையிலே சிபாரிசு செய்யப்பட்டது, என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சங்கராச்சாரியார் மடத்தினுடைய தலைமை ஸ்தாபனம் என்று 1964 எடிஷன் ஸ்கூல் அட்லாசிலே இருந்தது. இந்த கவர்ன்மெண்டுக்கு அது எடுக்கப்பட்டுவிட்டது என்ற தகவல்பற்றி மனு வந்தது. அதற்குமேல் முன்னே இருந்தபடி போடவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

### பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை

*22 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை அரசினரால் பாதுகாக்கப்படுகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பாஞ்சாலங்குறிச்சியில், வீரபாண்டிய கட்டபொம்மனின் அரண்மனை இருந்த இடத்தைப் பாதுகாக்கவும், அங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளவும் மாநிலத் தொல் பொருள் ஆராய்ச்சித்துறை திட்டமிட்டுள்ளது.

**திரு. ஆ. தங்கவேலு:** தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்டத்தில் முன்னோடியாக இருந்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியில் இதுவரையிலும் எந்தவிதமான ஞாபகார்த்த சின்னமே இல்லாமல் பாதுகாக்கப்படாமலேயே சுடுகாடாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, எப்போது இதற்கான வேலையை எடுத்துச் செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆர்க்கயலாஜிகல் இலாகாவால் இதற்கான ஆராய்ச்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.



2nd August 1966]

**திரு. சா. கணேசன்:** இப்போது அந்த இடத்தில் பெரும்பாலும் இடிபாடுகளேயன்றி, ஒரு குளம், ஒரு சிறிய கோவில் இவைகளைத் தவிர வேறு ஒன்றுமே குறிப்பிடத்தக்கதாகக் காணப்படவில்லை. அங்கே கட்டபொம்மன் காட்டிய தேசபக்தியை வெளியிடுவதற்குச் சான்றாக அல்லது எடுத்துக்காட்டாகச் சில கட்டடங்கள் அல்லது ஞாபகச் சின்னங்கள் கட்டி அதன்மூலம் அவர்களுடைய தேச பக்தியை அல்லது ஞாபகத்தைக் காட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பு கூறியதுபோல் இப்போது ஒரு மேடுதான் அங்கே இருக்கிறது. முன்பு இருந்த அரண்மனைக் கட்டடங்களெல்லாம் இப்போது மறைந்து போய் விட்டன. பூமியின் கீழ் ஆராய்ச்சி செய்து, என்ன தகவல் கிடைக்கிறதோ அதை வைத்துக்கொண்டு அதற்குமேல் என்ன செய்ய வேண்டும் என்பது முடிவு செய்யப்படும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** அங்கே கோட்டை இருந்த போது பீரங்கித் தாக்குதலையும் சமாளிப்பதற்கான தகுந்த முறையில் அவ்வளவு பலம் பொருந்திய கட்டடம் இருந்ததாகத் தெரிகிறது அங்குள்ள இடிபாடுகளைப் பார்க்கிறபோது. இந்தப் புதை பொருள் ஆராய்ச்சி செய்கிறபோது அந்தக் கட்டடங்களை பலமாகக் கட்டுவதற்கு என்ன என்ன சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதையும் ஆராய்ச்சி செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவைகள் மறைந்து போய் விட்டன என்று சொன்னேன். மறைந்து போய்விட்ட கட்டடத்தை எப்படி ஆராய்ச்சி செய்வது என்று தெரியவில்லை. ஆனால் பூமியின் கீழ் எந்த அளவிற்கு ஆராய்ச்சி செய்யமுடியும் என்பதைப் பார்க்கலாம்.

**திரு. நா. இராசாங்கம்:** கட்டபொம்மனுக்கு அடைக்கலம் கொடுத்ததற்குக் காரணமாக இருந்த சிவகங்கைச் சீமை மருது பாண்டியர் பரம்பரையினர் செய்த தொண்டின் ஞாபகார்த்தமாக அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER: The hon. Member may put a separtte question.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசாங்கம் அம்மாதிரி ஒன்றும் செய்யவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, சாதாரண இடங்களைப் பாதுகாப்பதற்கு நமது சர்க்கார் முன்வருகிறதே, அப்படியிருக்கும்பொழுது பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் குடியிருந்த இடத்தைப் பாதுகாக்காததற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது பாதுகாக்கப்பட வேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அங்கு மேடு தான் இருக்கிறது; அது பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரண்மனை

[2nd August 1966

இருந்த இடம் பாதுகாக்கப்படவில்லை என்றால் அதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பல்ல.

**திரு. சி. பொன்னுசாமி :** பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் இருந்த காலத்தில் இருந்த அரண்மனை, குதிரை கட்டும் இடம் ஆகியவைகளினுடைய அஸ்திவாரங்கள் இருக்கின்றன. இந்த அஸ்திவாரங்களை அப்படியே வைத்து இருந்தால் அங்கே என்னென்ன இருந்தன என்பதை எடுத்துச்சொல்ல முடியும். ஆகவே, புதை பொருள் ஆராய்ச்சி செய்யும்போது அந்த அஸ்திவாரங்களுக்குச் சேதம் வராமல் கவனமாகச் செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புதைபொருள் ஆராய்ச்சி செய்பவர்கள் அனுபவப்பட்டவர்கள். பூமியின் கீழ் ஆராய்ச்சி செய்து என்னென்ன இருக்கிறதென்று பார்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** வீரபாண்டிய கட்டபொம்மன் வம்சாவளியில் யாராவது இருக்கிறார்களா ? அப்படியானால், அவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றிய விவரம் முன்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

## கிராக்கிப்படியைச் சம்பளத்துடன் இணைக்கும் திட்டம்

*** 23 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களுக்கு இப்போது அளிக்கப்படும் கிராக்கிப்படியை சம்பளத்தோடு இணைக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எந்த நிலையில் உள்ளது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, பொருளாதாரம் வளர்ச்சி அடைந்திருப்பதாக நாமே ஒப்புக்கொள்கிறோம். அப்படியிருக்கும்பொழுது ஏன் அரசாங்கம் கிராக்கிப்படியைத் தனியாக வைத்திருக்க வேண்டும் ? அதைச் சம்பளத்துடன் இணைத்தால் வேறு சில நன்மைகள் ஏற்படும் அல்லவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த விஷயம் அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஓரளவு கிராக்கிப்படி இணைக்கப்பட்டுத்தான் இருக்கிறது.



2nd August 1966]

## மயிலாப்பூரில் ஸ்கூட்டர் விபத்து

*** 24 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலை ஆர். கே. மடம் ரோட்டில் 4-2-1966 அன்று நண்பகல் 2 மணிக்கு ஸ்கூட்டர் MSV 706 ஒருவரை மோதியது சம்பந்தமாகப் புகார் ஏதேனும் செய்யப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்.

(இ) இராமகிருஷ்ண மடத்துச் சாலையும் தெற்கு மாட வீதியும் சந்திக்குமிடத்தில் 4-2-1966 அன்று MSV 706 என் கொண்ட ஒரு ஸ்கூட்டரும் ஒரு சைக்கிளும் மோதிக்கொண்டதினால் விபத்து ஏற்பட்டது. ஸ்கூட்டர், சைக்கிள் ஓட்டியைக் கீழே தள்ளியதால் அவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. ஸ்கூட்டர் ஓட்டி மீது சைதாப்பேட்டை 3-வது மாகாண மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஸ்கூட்டர் ஓட்டி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது.

## தனியார் துறை பஸ்களில் கட்டண உயர்வு

*** 25 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள தனியார் துறை பஸ்களில் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்தியது உண்மையா ?

(இ) ஆமெனில், பஸ் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்; வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட பஸ் முதலாளிகள் 1966 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பஸ் கட்டணத்தை உயர்த்தினர்; ஆனால், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பஸ் முதலாளிகள் 1966 மார்ச் மாதத்தில்தான் பஸ் கட்டணத்தை உயர்த்தினர்.

(இ) ஆம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இந்த பஸ் கட்டணத்தை உயர்த்தாமலே, முன்பு போட்டிருந்த கட்டணத்தை வசூலித்தே நடத்தினால் கூட கட்டுபடி ஆகும்; ஆனால் அரசாங்கம் தான் வற்புறுத்தி உயர்த்தச் சொன்னதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் வற்புறுத்த வேண்டிய நிமித்தம் இல்லை. இதற்கு மேல் போகாமல் கட்டணம் விதிக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. அந்த அளவில் பாதி

[2nd August 1966

அளவுக்குத் தான் கட்டணம் விதித்துக்கொண்டிருந்தார்கள். வரி உயர்த்தப்பட்டதும் அவர்கள் ஓரளவு கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நடத்தப்படும் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணம், தனியாரால் நடத்தப் படும் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணத்தை விட அதிகமாக இருக்கிறதே, அதன் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, எல்லா பஸ் முதலாளி களும் அரசாங்கம் அனுமதித்திருக்கும் உச்ச வரம்பு அளவுக்குக் கட்டணத்தை விதித்த பிறகும், ஒரு தனிப்பட்ட பஸ் முதலாளி தான் பழைய சார்ஜுக்கே ஓட்டுகிறேன் என்று சொல்லியும் கேட்காமல் அரசாங்கம் அவர் மீது நடவடிக்கை எடுத்திருப்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 'அரசாங்கம் ஒன்றும் உயர்த்தும்படி சொல்லவில்லை' என்று சொன்னார்கள். அரசாங்கம் உயர்த்தச் சொல்லி வற்புறுத்தியதாக ஒருவர் இப்போது கேஸ் போட்டிருக்கிறார். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சார், ஒரு மைலுக்கு இவ்வளவு கட்டணம் வசூலிக்கவேண்டும் என்று சர்க்கார் நிர்ணயித்திருப்ப தில் இத்தனை காசிலிருந்து இத்தனை காசு வரை வாங்கலாம் என்று இருப்பதால் இவ்வளவு குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதற்கு பதிலாக ஒரு மைலுக்கு இத்தனை தான் வாங்கவேண்டுமென்று நிர்ணயித்தால் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

*Wind mills for irrigational purposes*

* 26 *Q.*—Sri V. SANKARAN, Sri T. P. ALAGAMUTHU : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any of the experts has been requested to investigate and report on the installation of wind mills and utilisation of wind power for irrigational pumping; and

(b) if so, the details thereof?



2nd August 1966]

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை ௭ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வை. சங்கரன் :** சார், இந்த காற்று மில்களை ஏற்படுத்தினால் நாகப்பட்டினத்திற்கு உதவியாக இருக்கும் என்று இந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினத்தில் பாசன வசதி செய்வதற்காவது அங்கே அதிகபட்ச யந்திரங்களை அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எல்லாவற்றையும் பார்த்து அபிப்பிரா யம் சொல்லியிருக்கிறார்கள். பரீட்சார்த்தமாக தஞ்சாவூர் ஜில்லா விலே திருவாரூரிலும், இராமநாதபுரம் ஜில்லாவிலே உச்சிப்புளியி லும் காற்றாடி யந்திரங்களை வைத்துப் பார்க்கலாம், பிறகு அதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று இருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இரண்டு-மூன்று அபிப்பிராயங் கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு-மூன்று அபிப்பிராயங் களை சர்க்கார் பரிசீலித்ததா ? அவை எந்த எந்த இடங்களுக்குப் பொருந்தும் என்று சர்க்கார் ஏதாவது அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது அந்தத் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

*Prevention of wind erosion*

* 27 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state the measures proposed to be taken to prevent wind erosion and also the action of high velocity winds depositing soil particles in cultivable lands situated near Western Ghats in Bodinayakanur, Madurai district?

**கனம் திரு. பூ. கக்கன் :** மதுரை மாவட்டத்தில், போடிநாயக்க னூர் பகுதியில், காற்று அரிப்பையும், பெருங்காற்று வீச்சினால் ஏற்படும் விளைவுகளையும் தடுப்பதற்காகவும், மண்மேடுகள் பயிர் நிலங்களுக்குப் பரவவொட்டாமல் தடுக்கிற ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 36 மைல் தூரத்திற்குக் காற்றுத் தடைகள் எழுப்பப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் மேலும் மரங்களை வைத்துப் பயிரிடுவதன் மூலம் இக் காற்றுத் தடைப்பகுதி விரிவாக்கப்பட்டு வருகிறது.

இந்த வட்டாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெரும் பரப்பைக் கருத்தில் கொண்டு, போடிநாயக்கனூர் பகுதியில் புழுதிப் புயல் களால் மண்மேடிட்டுப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பரிசீலனை செய்வதற்கும், காற்று வீச்சினால் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்குரிய விரிவான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிப்பதற்கும் அண்மையில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது நிறைவேறி வருகிறது.

௭ 122–125-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[2nd August 1966

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், போடிநாயக்கனூரிலிருந்து தேவாரம் வரை 12 மைல் சாலை வருகிறது. அது பஸ் போக்குவரத்து இருக்கக் கூடிய சாலை. ஆடி மாதத்தில் காற்றினால் சாலை மணலால் மூடப்பட்டு வருகிறது. அங்கே மணலை அகற்ற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா ? இல்லை என்றால் அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** காற்றினால் ஹைவேசில் மண் விழுந்தால் அதை அப்புறப்படுத்தத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வை. சங்கரன் :** சார், இந்த இடமானது மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருப்பதால், இதை எவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேற்ற முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** வேலை நடந்துகொண்டுதான் வருகிறது. எவ்வளவு தூரம் கட்டுப்படுத்த முடியுமோ அதற்கு அதிகமாகச் செடிகளை வைத்துக் காற்றின் வேகத்தைத் தடுத்தால்தான் முடியும்.

## தீயணைப்புத்துறைத் தொழிற்கூடம், சென்னை

*** 28 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத் தலைநகரில் இருக்கின்ற தீயணைக்கும் படையினரால் வைத்து இயங்கிவருகின்ற தொழிற்கூடத்தை (ஓர்க்ஷாப்பை) கலைத்துவிட்டு நமது மாநில சர்க்கார் வைத்து நடத்தும் ட்ரான்ஸ்போர்ட்டு ஓர்க்ஷாப்பில் சேர்த்துக்கொள்வதற்கு செயற்குறிப்புகள் ஏதேனும் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நடத்தப்படுகிற டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப் ஒன்று இருக்கும்போது எதற்காக இது தனியாக இருக்கவேண்டும்? டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப் இல்லாதபோது எம். எஃப். எஸ். ஓர்க்ஷாப் தவிர்க்க முடியாத ஒன்று; இப்போது அது தேவையில்லாத ஒன்று. அரசாங்க டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப்பில் உள்ள தொழிலாளர்களுக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன; எம். எஃப். எஸ். ஓர்க்ஷாப்பில் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. இந்த ஓர்க்ஷாப்பை டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப்போடு சேர்த்துவிடலாம் என்று நான் கருதுகிறேன் ; அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் கருதுவதாலேயே ஓர்க்ஷாப்பை இணைக்க முடியாது. அவசரத்திற்கு அவ்வப்போது ரிப்பேர் செய்வதற்கு இந்த ஓர்க்ஷாப் தேவைப்படுகிறது என்ற காரணத்தினால் இது இணைக்கப்படவில்லை.



2nd August 1966]

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அந்த ஓர்க்ஷாப்பில் வேலை செய்யும் தொழிலாளர்கள் குறைந்த அளவில்தான் இருக்கிறார்கள். அங்கு செய்யப்படும் வேலையும் குறைவாகத்தான் இருக்கிறது. அந்த வேலைகளை டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப்பில் செய்து கொள்ளலாம். அதனால் கஷ்டமும் இருக்காது, நஷ்டமும் இருக்காது. இதைப்பற்றி மறுபரிசீலனையாவது செய்து அதைச் சேர்ப்பதற்கு வழிவகை செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதில் மறு பரிசிலனை செய்வதற்கு ஒன்றும் இடமில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, மறு பரிசீலனை செய்வதற்கு இட மில்லை என்று சொல்லியது ஓரளவு உண்மையாகக் கூட இருக்கலாம் ; இருந்தாலும் அம்மாதிரி சேர்ப்பதால் செலவு குறையலாம் அல்லவா ? சிக்கனம், சிக்கனம் என்று சொல்லக் கூடிய அமைச்சர்களுக்கும் இது நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏன் அப்படிச் செய்யக் கூடாது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தீயணைப்புப் படையைச் சேர்ந்த மோட்டார் என்ஜின்ஸ் வெகு சீக்கிரத்தில் ரிப்பேர் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படவேண்டும். அதை விட்டு டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப்புக்குப் போனால் அவர்கள் வேறு வேலை இருக்கிறது என்று உடனடியாகச் செய்ய முடியாமல் போகலாம். அப்போது அந்தப் பகுதியில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் கஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தினால் தான் தனியாக வைக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*** 29 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள தீயணைக்கும் படை தொழில்கூடத்தை 9-12-1965-ல் இரண்டாவது வட்ட தொழிற்சாலை ஆய்வாளர் பார்வையிட்டாரா ?

(இ) ஆமெனில், அது குறித்து I. G. அவர்களுக்கு புகார் ஏதேனும் செய்திருக்கிறாரா ?

(உ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) சென்னையிலுள்ள தீயணைக்கும் படை தொழில் கூடத்தை 9-12-1965-ல் மூன்றாவது வட்ட தொழிற்சாலை ஆய்வாளர் பார்வையிட்டார்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்வி எழவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தொழிற்சாலையைப் பார்வையிட்ட அதிகாரி அங்கே வைக்கப்பட்டுள்ள புகார்ப் புத்தகத்தில் எதையும் எழுதாமல் போயிருப்பாரானால்,

அந்தத் தொழிற் சாலையைப் பார்வையிட்டதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? ஏன் உண்மையைச் சொல்ல மறுக்கிறார் என்று கேட்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** யார் மறுக்கிறார்? It is not a question. Let the hon. Member put a question.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவல்களெல்லாம் அந்தத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை விரும்பிச் சொன்னார்கள். அந்தக் கோரிக்கைகளை அப்படியே அந்த அதிகாரி புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அதை எழுதி ஐ.ஜி. அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைத் தான் கேட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. தொழிலாளர்களின் வருத்தம் தீரவில்லை என்பதுதான் முக்கிய காரணம்.

**கனம் சபாநாயகர் :** கோரிக்கை எழுதுவதற்காக இன்ஸ்பெக்ஷன் புஸ்தகம் இல்லை. தான் தொழிற்சாலையைப் பார்வையிட்டது பற்றி ஏதாவது தகவல் எழுதவேண்டுமென்றால் அதைத்தான் இன்ஸ்பெக்ஷன் புஸ்தகத்தில் எழுதுவார்கள். கோரிக்கையைப் பற்றி இன்ஸ்பெக்ஷன் புஸ்தகத்தில் எழுதுவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி அது குறித்து ஐ.ஜி அவர்களுக்குப் புகார் ஏதேனும் செய்திருக்கிறாரா என்பதுதான். இல்லை என்று பதில் சொன்னேன். கோரிக்கை ஏதேனும் இருக்கிறதா என்பதைப்பற்றி கேள்வி இல்லை. புகார் எழுதவில்லை என்று பதில் சொன்னேன்.

### முத்திரைத் தாள்கள்

*30 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மின்சார பம்பு செட்டுகள் அமைக்க செய்யப்படும் அக்ரிமெண்டில் ஒட்டப்படும் ரூ. 2.30 புதுக்காசு ஸ்டாம்பு தமிழக மக்கள் அனைவருக்கும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மட்டும் விற்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், வட்டத் தலைநகரில் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) ஆம். (இ) கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள கருவூலங்களிலும் இந்த முத்திரைத் தாள்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. ஆ. தங்கவேலு :** மின்சார பம்பு செட்டுகள் அமைக்க செய்யப்படும் அக்ரிமெண்டில் ஒட்டப்படும் ரூ. 2.30 ஸ்டாம்புக்காக இந்த மாநிலத்தில் உள்ள அனைவரும் சென்னை கலெக்டர் ஆபீசுக்கு வந்து வாங்கவேண்டியிருக்கிறது. அந்த மாதிரி விதி இருப்பதினால் ரூ. 2.30 காசுக்கு அதிகமாகச் செலவு செய்து கொண்டு வர



வேண்டிய நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சில மாவட்டங்களில் டிரெஷரிகளில் இந்த முத்திரைத் தாள்கள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ளவர்கள் சென்னைக்கு வந்து இந்த முத்திரைத் தாள்கள் வாங்கவேண்டுமென்றால் அதிகமாகச் செலவு ஏற்படும். ஆகவே, அந்தந்த மாவட்டங்களிலுள்ள தாலூகா ஆபீஸ்களிலும், மின்சார இலாகா அதிகாரிகள் அலுவலகங்களிலும் இந்த முத்திரைத் தாள்களை வழங்குவதற்கு ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த முத்திரைத் தாள்கள் வாங்குவதற்குச் சென்னைக்கு வர வேண்டிய அவசியமில்லை இப்பொழுது இருக்கக்கூடிய நிலை பிரகாரம்.

If such agreements are typewritten, they can be executed on non-judicial stamp papers which are available in various denominations in the various treasuries and sub-treasuries in the State.

கட்டணத்திற்குச் சலான் வாங்கி அனுப்பினால் போதும். இங்கே ஸ்டாம்பு ஒட்டி அதைச் செல்லுபடியாக ஆக்கிவிடுவார்கள்.

**திரு. ஆ. தங்கவேலு :** சாதாரண விவசாயிகளுக்கு, படிக்காதவர்களுக்கு ஸ்டாம்பு வாங்குவதற்காக அங்கிருந்து சலான் வாங்கி, அதற்குப் பிறகு இங்கிருந்து ஸ்டாம்பு பெறுவது என்றால் எவ்வளவு சிரமமான காரியம்? ஆகவே, ஸ்டாம்ப்புகள் அந்தந்தப் பகுதிகளில் மின்சார இலாக்கா அலுவலகங்களிலும் தாலூகா ஆபீஸ்களிலும் கிடைப்பதற்கு வழி வகை செய்யக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** சென்னையில் மட்டுமல்ல, மற்ற ஜில்லாக்களிலும் எங்கெங்கே தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அம்மாதிரி திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேறு எந்தெந்த ஜில்லாக்களில் தேவை என்று நினைக்கிறார்களோ, தகவல் தெரிவித்தால், பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுப்பார்கள்.

**திரு. சா. கணேசன் :** மின்சார பம்பு செட்டுகளுக்கு மின்சார சம்பந்தமாக ஒரு உடன்பாடு செய்துகொள்வது என்பது மிகப் பெரும்பாலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. விவசாயிகளுக்கு முக்கிய ஊக்கமும், ஆக்கமும் கொடுக்க வேண்டிய நிலையிலே, அவர்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் கிடைக்க வேண்டியது உணவு உற்பத்தி செய்து, உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்குரிய அடிப்படைகளில் ஒன்றாக இருப்பதனால், இந்த மாதிரிக் கட்டணம் கட்டி சலான் வாங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமெல்லாம் இல்லாமல் இருப்பதற்கு ஸ்டாம்பு

[2nd August 1966

டியூட்டியையே எடுத்துவிடலாம், இது சம்பந்தப்பட்ட வரையில் அப்படியில்லை என்றால், மற்ற முத்திரை ஸ்டாம்புகள் கிடைப்பது போல, ஆங்காங்கு கிடைப்பதற்கு வழிவகை செய்வது அரசாங்கத்திற்கு சாத்தியம் இல்லாத ஒன்று என்று கருதமாட்டார்கள் என்று நம்புகிறேன். அதே மாதிரி பெருவாரியாக எல்லா இடங்களிலும் இந்த ஸ்டாம்புகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: This is a speech and not a question.

**கனம் திரு. வெ. ராமையா:** எங்கெங்கே டிமாண்டு இருக்கிறதோ அங்கெல்லாம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது சம்பந்தமாகக் கஷ்டம் இருப்பதாக மின்சார போர்டு பற்றிய அறிக்கை விவாதத்தின்போது அல்லது மற்ற சந்தர்ப்பங்களில் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி ஏதேனும் கஷ்டம் இருந்தால், பரிசீலனை செய்து அங்கங்கே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று முதலிலேயே ஒரு கேள்விக்குப் பதில் சொன்னேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** ஸ்பெஷல் அட்ஹெஸிவ் ஸ்டாம்பு ஒட்ட வேண்டும் என்ற முறை எல்லா இடங்களிலும் கைக்கொள்ளப்படவில்லை. வேலூர் ஜில்லாவில் சாதாரண ஸ்டாம்பு பேப்பரில் 'அக்ரிமெண்டு செய்து கொண்டால் போதும்' என்ற ஒரு முறை இருக்கிறதே? அப்படியிருக்கும்பொழுது இந்த முறையை ஏன் எல்லா இடங்களிலும் கைக்கொள்ளக் கூடாது?

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது ஸ்பெஷல் அட்ஹெஸிவ் ஸ்டாம்பு ஒட்டுவதுபற்றி. இப்பொழுது ஸ்டாம்பு கிடைப்பதில் டிபிகல்டி இருப்பது பற்றிக் கேள்வி. பரவலாக மற்ற ஜில்லாக்களிலும் இந்த ஸ்டாம்புகள் கிடைக்கும்படி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அங்கேயுள்ள ட்ரெஷரி ஆபீஸர்கள் அம்மாதிரி ஏற்பாடு செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இதற்கு முன்பு இந்த ஒப்பந்தம் செய்வது எப்படியிருந்தது என்றால், சாதாரணமாக ரூ. 2.50 பத்திரத்தில் எழுதிக் கொடுப்பது என்றுதான் இருந்தது. இப்பொழுதுதான் கலெக்டர் ஆபீசுக்குப் போய் கட்டணம் கட்டி சலான் வாங்கி, சென்னை கலெக்டர் ஆபீசுக்கு வந்து ஸ்டாம்பு வாங்கிக் கொண்டு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இருந்த முறையைக் கைக்கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது? பழைய முறையையே கைக்கொள்வதற்கு முயற்சி செய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** இப்பொழுது நடக்கப்போகிற மின்சார போர்டு பட்ஜெட் விவாதத்தில் கனம் அங்கத்தினர் இந்தப் பிரச்னையை எழுப்பினால், அது பரிசீலனை செய்து பார்க்கப்படும்.



2nd August 1966]

### அரசாங்க ஊழியர்கள் வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம்

***31 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுமார் 1,000 பேர்கள் கொண்ட சென்னை அரசாங்க சிப்பந்திகள் கூட்டுறவு வீட்டு சங்கம், பதிவு எண் XNC 644, பெரவள்ளூர் ஏரியை (விஸ்தீரணம் 110 ஏக்கர்) மேற்படி சங்கத்திற்கு வீடு கட்டிக் கொள்வதற்காக நில ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டி 1—2—1964-ம் தேதியிட்ட மனு ஒன்றை ரெவின்யூ செயலாளருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் பிறகு அரசாங்கத்திற்கும் கொடுத்துள்ளதா?

(இ) அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

(உ) இல்லையெனில், தாமதத்திற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. வெ. ராமையா:** (அ) தமிழ்நாடு அரசாங்க ஊழியர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் வீடுகள் கட்டுவதற்காகப் பெரவள்ளூர் ஏரியில் தன் பெயரில் நிலம் ஒப்படை செய்யுமாறு வேண்டி, அச் சங்கத்திடமிருந்து 1—2—1965 தேதியன்றுதான் மனு ஒன்று வந்தது; இது 1—2—1964-ல் வரவில்லை. அரசாங்க வருவாய்த் துறைச் செயலாளருக்கும் தொடர்புள்ள அதிகாரிகளுக்கும் பொதுநல அமைச்சருக்கும் அனுப்பப்பட்ட மனுக்களும் வந்தன.

(இ) மேற்படி சங்க உறுப்பினர்களுக்கு வீட்டு மனை வசதிக்காக பெரவள்ளூர் ஏரியில் நிலம் ஒப்படை செய்ய வேண்டி அச் சங்கம் கொடுத்த வேண்டுகோளை நிராகரித்து, 4—6—1966-ம் தேதியன்று வருவாய்த் துறையில் வெளியான அரசாங்கக் குறிப்பு எண் 9076-2 65.12-ல் ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்வதற்குரிய செலவில் ஒரு பகுதி சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா? அல்லது, பூராவும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** அது பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

### கொண்டைக் கடலை விநியோகம்

***32 கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில அரசாங்கம் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டைக் கடலை தருவிக்கின்றதா?

[2nd August 1966

(இ) அப்படித் தருவித்த கொண்டக் கடலையை வியாபாரி களுக்கு விநியோகிப்பதில் கையாளும் முறைகள் யாவை?

(உ) வறுகடலை உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையில் விநியோகம் செய்ய வேண்டும் என்று 11—3—1966-ம் தேதி அரசாங் கத்திற்கு விண்ணப்பம் தரப்பட்டதா?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Collectors in the districts and the Deputy Commissioner of Civil Supplies (Rationing) in Madras City, allot gram to the merchants according to their past turn-over with due regard to the stock position.

(c) Yes. ...

திரு. சா. கணேசன் : வெளி மாகாணங்களிலிருந்து தருவிக்கப் படுகிற கொண்டக் கடலையின் கொள்முதல் விலை என்ன? அதை நேரடியாக வியாபாரிகளுக்கு அரசாங்கம் விற்கும்பொழுது என்ன விலைக்கு விற்கப்பட்டது?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாக ஒரு கேள்வி வேண்டும்.

*Bridge over the Gadilam river at Cuddalore*

*33 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the bridge over the Gadilam river connecting Thiruppapuliyur and Manjakuppam, at Cuddalore, is too narrow and causing great inconvenience on account of frequent traffic jams; and

(b) if so, whether the Government have any proposal to widen the bridge?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Government have sanctioned the work of constructing a second bridge across the Gadilam river at mile 0/5-6 of the Cuddalore-Chidambaram road connecting Tiruppapuliyur and Manjakuppam. The construction work commenced on 21st March 1966 and is expected to be completed in September 1967.

செங்கற்பட்டு ஏரிக்கருகில் பாலம்

*34 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை-செங்கற்பட்டு டிரங்கு ரோட்டில், செங்கற்பட்டு ஏரிக்கருகில் கட்டப்படும் பாலத்தின் மதிப்பீடு எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப் பால வேலையின் மதிப்பீட்டுச் செலவு 3,41,640 ரூபாய் ஆகும்.



2nd August 1966]

திரு. ஆ. தங்கவேலு : சார், போக்கு வரத்து தடைப்படுகிறது என்று இந்தப் பாலம் கட்டப் படுகிறதா அல்லது வெள்ளத்தினால் ஆபத்து ஏற்படுகிறது என்று கட்டப்படுகிறதா அல்லது மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன் சொந்தக்காரர் திரு. முத்து முதலியார் என்பவருக்கு காண்ட்ராக்ட் கொடுக்க வேண்டும் என்பதற்காகக் கட்டப்படுகிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : குறிப்பாக ஒருவருக்கு காண்ட் ராக்ட் கொடுக்க வேண்டும் என்று எந்த ஒரு வேலையையும் கொடுப் பதில்லை. இது மெயின் ரோடில் இருப்பதாலும், கலுங்கல் பக்கத்தில் இருப்பதாலும், வெள்ளம் வந்தால் கெடுதல் வரும் என்றெல்லாம் இவற்றை யெல்லாம் மனதில் வைத்துத்தான் இந்த வேலை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஆலோசிக்கப்பட்டு, நிபுணர் பரிசீலனை செய்து சாங்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 9-00 a.m.

சிதம்பரநாதன்பேட்டை மதகு

*35 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியம்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவில் சிதம்பரத்திலிருந்து நடராஜ புரம் ரோட்டில் பஸ் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் சிதம்பரநாதன்பேட்டை (கலுங்கு) மதகை இடித்துவிட்டு சீர் செய்ய அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது வேலை எடுத்து[illegible]படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இத்த[illegible] செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Headquarters of Dharmapuri district*

*36 Q.—SRI M. KALYANASUNDARAM : [illegible] Minister for Food be pleased to state—

(a) the details of the proposals for housing the district offices at Dharmapuri for the new district; and

(b) whether there is any scheme before the Government for the improvement of Dharmapuri town so as to make it suitable as district headquarters and if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) In view of Emergency, a minimum necessary building programme for Dharmapuri district, phased over a period of three years, has been taken up with provision for construction of only important offices like Collector's Office, Office of the District Superintendent of Police and quarters for the Collector, the Superintendent of Police, the District

[2nd August 1966

Medical Officer, and the Ministerial staff and also an additional ward for increasing the bed strength of the existing taluk headquarters hospital at a total cost not exceeding Rs. 29.17 lakhs.

(b) Yes.

Investigation of water-supply scheme is in progress and certain other proposals for improvement of bus-stand, vegetable market and provision of better facilities for higher education are under consideration.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** *சார், தர்மபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகும், அந்த அலுவலகங்கள் இன்னும் சேலத்தில்தான் இருக்கின்றன. அவற்றை எப்பொழுது தர்மபுரிக்குக் கொண்டு போக உத்தேசம்?*

**கனம் திரு. வெ. ராமையா :** *கட்டட வசதி கிடைக்க வேண்டும். இப்பொழுது நெருக்கடி நிலைமையைப் பொருத்து, குறிப்பாக, அவசியமான கட்டடங்களை மட்டும் கட்டுகிறோம். மேலும் கட்டடங்கள் கிடைத்த பிறகு மற்றவை யோசிக்கப்படும்.*

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** *சார், தர்மபுரி மாவட்டத்தைத் தனியாகப் பிரிக்கும்போதே இதையெல்லாம் எதிர்பார்த்திருக்க வேண்டும். கலெக்டருக்கு மட்டும் பங்களா கட்டிக் கொடுத்து விட்டால் போதாது. அங்குள்ள சிப்பந்திகளுக்கும் இடவசதி செய்து கொடுக்கத் திட்டம் உண்டா?*

**கனம் திரு. வெ. ராமையா :** *கலெக்டருக்கு பங்களா கட்டுவது மட்டுமல்ல திட்டம். அவருடைய ஆபீசுக்குக் கட்டடங்கள் கட்டுவதும், சிப்பந்திகளுக்கு ஸ்டேட் ஹவுசிங் போர்டு மூலம் வீடுகள் கட்டுவதும் திட்டமாகும்.*

**திரு. ம. கமலநாதன் :** *மாவட்டம் பிரிந்த பிறகு, கிருஷ்ணகிரிக்கு ஜூடிஷல் ஹெட்குவார்ட்டர்ஸ் மாற்றப்பட்டு, அலுவலகங்கள் வைக்க, கட்டடங்கள் கட்ட செயற்குறிப்பு காணப்படாததற்குக் காரணம் என்ன?*

**கனம் திரு. வெ. ராமையா :** *இந்தக் கேள்வி தர்மபுரி நியூ டிஸ்ட்ரிக்ட் கட்டடங்கள் சம்பந்தப்பட்டது. கிருஷ்ணகிரி பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.*

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** *சார், தர்மபுரியில் வீடுகள் கட்டுவதற்கு வீட்டு வசதி போர்டுக்கு உத்தேசம் உண்டா? திட்டம் இருக்கிறதாக அமைச்சருக்குத் தகவல் இருக்கிறதா?*

**கனம் திரு. வெ. ராமையா :** *1965-66-ம் ஆண்டிலேயே ஐந்து லட்சம் ரூபாய் செல்வு செய்ய அவர்களிடம் திட்டம் இருக்கிறது.*



2nd August 1966]

*திருச்செந்தூரிலிருந்து அரசாங்க பஸ்கள் விடுதல்*

* 37 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** *கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) திருச்செந்தூரிலிருந்து, ராஜ்யத்தின் பல பகுதிகளுக்கும் சர்க்கார் பஸ் விட அத்தொகுதி சட்டசபை மெம்பர் கடந்த சில ஆண்டுகளாகக் கோரி வருகிறாரா?*

*(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?*

**கனம் திரு. வெ. ராமையா :** *(அ) & (இ) கனம் அங்கத்தினர்களிடமிருந்து அநேக யோசனைகள் வருகின்றன. அவை பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.*

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** *சார், திருச்செந்தூர் வழியாக எக்ஸ்பிரஸ் பஸ் செல்லுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறதா? எந்த எந்தப் பக்கத்திலிருந்து எங்கே, எங்கே பஸ் விடப் போகிறார்கள் என்கிற தகவல் தெரிவிக்க முடியுமா?*

THE HON. SRI V. RAMAIAH : Sir, the hon. Member has been informed that it is not possible for the Department to operate the Express Bus services from Tiruchendur, as terminus, since depot facilities are not available at Tiruchendur. He has also been informed that there is a proposal to open a route from Nagercoil to Palani and.when this materialises, Tiruchendur, Tuticorin and Palani will be connected by the route . But this route has been dropped from the programme for 1966–67. However, there is another route in the programme, viz., Nagercoil to Ramanathapuram (via) Tiruchendur. This route, when opened, will provide transport facilities of State Transport Department to Tiruchendur and connect it with other places.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** *நாகர்கோயிலில் இருந்து திருச்செந்தூர் வழியாகப் போகும் அந்த பஸ் எப்பொழுது விடுவதாக அரசாங்கத்திற்கு உத்தேசம்?*

**கனம் திரு. வெ. ராமையா :** ' Under consideration ' *என்று சொன்னேன். 'டெபனெட்டாக' ஆகவில்லை.*

*Enforcement of Prevention of Adulteration of Food Act*

* 38 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have proposed to constitute any Advisory Committee at State level to go into the day-to-day problems and difficulties of the business community in the operation of the Prevention of Adulteration of Food Act and Rules and make appropriate suggestions to the Government?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** *ஆம்.*

**திரு. வை. சங்கரன்** : சார், எப்பொழுது இந்த ஆலோசனைக் கமிட்டி ஏற்படுத்தப்படும்? யார் யார் மெம்பர்களாக எடுக்கப் படுவார்கள்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி இந்தக் கமிட்டி போட்டிருக்கிறோம். அதில்,

Minister for Public Health—*Chairman.*

Secretary, Education and Public Health Department—*Member.*

Director of Public Health—*Member-Secretary.*

Two representatives of the Southern India Chamber of Commerce, Madras.

A representative of the Madurai-Ramanathapuram Chamber of Commerce, Madurai.

A representative from the Tiruchirappalli Chamber of Commerce, Tiruchirappalli.

A representative from the Foodgrains Merchants' Association, Madras.

A representative from the Erode and Coimbatore Maligai Merchants' Association, Erode.

A representative from the Merchants' Association, Coimbatore.

A representative from the Nagapattinam Chamber of Commerce, Nagapattinam.

A representative from the Madurai Maligai Merchants' Association, Madurai.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : சார், இந்த ஆலோசனைக் குழுவினுடைய பணிகள் என்னென்ன என்று அறியலாமா? அதோடு, அங்கத்தினர்களையெல்லாம் பார்த்தால், எவ்வளவு கலப்படம் நடந்தாலும் சிக்காமல் எப்படிப் பாதுகாப்புக் கொடுக்கலாம் என்பதற்கு ஆலோசனை கூறுவதற்காகவே இருப்பதுபோல் இருக்கிறதா, தடுக்கும் முறைகளைக் கூறும் அளவில் இருக்கிறதா என்பதையும் அறியலாமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : இந்தக் குழு, கலப்படம் செய்வதைத் தடுக்க வேண்டிய ஆலோசனையையே தருகிறார்கள். அதைக் கூறுவதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. சங்கரன்** : கலப்படத்தைக் கண்டுபிடிப்பதிலும் இடர்பாடுகள் இருக்கின்றன. சில்லறை வியாபாரிகள், சப்-ஸ்டாண்டர்ட் எது என்பதைக் கண்டு பிடிக்கவும் முடிவதில்லை. அவர்கள் சில பொருள்கள் கலப்படம் என்பதைக் கண்டு பிடிக்க முடிவதில்லை. ஆகவே, அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் ஆண்டுக்கு ஒரு முறையாவது இந்தக் குழு கூட ஏற்பாடு செய்யப்படுமா?





**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி ஆலோசனை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன்** : இப்பொழுது இருக்கும் சட்டத்திலே கலப்படம் செய்யும் பெரிய வியாபாரிகள் அகப்படாமல், சின்ன வியாபாரிகள்தான் அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். சிறு வியாபாரிகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்க சட்டத்தில் வகை செய்யவும், இந்தக் கமிட்டியிலேயும் அவர்களின் பிரதிநிதிகளையும் சேர்க்க வழிவகை செய்யப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : பெரிய வியாபாரிகள் அகப்படுவதில்லை என்பதில்லை. அவர்களும் பிடிக்கப்படுகிறார்கள். வழக்குப் போடப்படுகிறது. ஆனால், சில்லறை வியாபாரிகளும் கலப்படம் செய்கிறார்கள். அதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். கலப்படச் சட்டத்தின்கீழ் எல்லோரும் பிடிக்கப்பட்டு, வழக்குகள் போடப்படுகின்றன. அதன் பிறகு கோர்ட்டு பார்த்துச் செய்கிறார்கள். சிறிய வியாபாரிகளுடைய பிரதிநிதி என்கிற முறையில்தான் மளிகை மர்சென்ட்ஸ் ரெப்ரசென்டேடிவ்களும் இதிலே இருக்கிறார்கள்.

**திரு. நா. ப. அழகமுத்து** : தலைவர் அவர்களே, கலப்படத் தடைச் சட்டத்தை அமலாக்குவதில் சிக்கல்கள் ஏற்படுவதனால், மாற்றங்கள் செய்ய மத்திய சர்க்காருக்கு எழுதியிருப்பதாக முன்பு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்கார் என்ன பதில் கொடுத்தார்கள்? மாற்றம் எப்பொழுது செய்யப்படும்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : சமீபத்தில்கூட பங்களூரில் நடத்தப்பட்ட சென்ட்ரல் ஹெல்த் கவுன்சிலில் மத்திய சர்க்கார் சுகாதார அமைச்சரைக் கண்டு, நம் மாநிலத்தில் இருக்கும் சிக்கல்களைக் கூறி, அமென்ட்மென்ட் கொண்டுவரும்படி கேட்டோம். அப்படிச் செய்ய அவர்கள் ஆவன செய்து கொண்டிருப்பதாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : இந்தக் குழுவில் ஹெல்த் போர்டு அங்கத்தினர்களையும் சேர்த்துக்கொள்ளுவதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : அடல்ட்டரேஷனைத் தடுப்பது பற்றி விரிவாக ஆலோசனை கூறத் தனி ஹெல்த் போர்டு இருக்கிறது. அதிலே கனம் அங்கத்தினரும் ஒரு அங்கத்தினராக இருக்கிறார்.

**திரு. ஜே. மாதா கவுடர்** : கலப்படம் செய்பவர்களே வியாபாரிகள். கலப்படம் செய்யும் வியாபாரிகளைக் கொண்டு, கலப்படத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு குழு அமைப்பது நியாயமா? வாங்கி உபயோகிப்பவர்களையும் அந்தக் குழுவிலே சேர்த்து, கலப்படம் இருக்கிறதா, கலப்படத்தைத் தடுக்க என்ன வழிகளைக்

[2nd August 1966

கையாளலாம் என்பதை ஆலோசிக்க வேண்டும். திருடுபவர்களையே சேர்த்து, அதாவது கலப்படம் செய்பவர்களையே சேர்த்துக் கொண்டு, கலப்படத்தைத் தடுப்பது எப்படி என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதென்றால், அந்தக் குழு எப்படிச் செயல்பட முடியும்? இந்தக் குழுவை மாற்றியமைக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் சபாநாயகர்:** எல்லா வியாபாரிகளையுமே திருடர்கள் என்று 'ப்ரெஸ்யூம்' பண்ணிக் கொள்ளுவதா? The presumption is incorrect.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சட்டத்தை மீறிக் கலப்படம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்கும் இருக்காது. எப்படியாவது எங்காவது தவறு ஏற்பட்டுவிட்டால், அதற்குச் சட்டம் இருக்கிறது. அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். பண்டங்கள் வாங்குபவர்களையும் அந்தக் குழுவில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றால், there will be no end to it.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கலப்படத் தடுப்புச் சட்டப் பிரகாரம் தவறு இருக்கிறது என்று கண்டாலுங்கூட, உண்மையிலே பாதிக்கப்படுகிறவர்கள் குற்றமற்ற பல சிறிய வியாபாரிகள்தான் என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அவர்களுக்கு விமோசனம் கிட்டுவதற்காக இது போன்ற விசாரணை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** எந்த எந்த இடங்களில் சிறு வியாபாரிகள் இந்தத் தண்டனைக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்தவுடன் அதற்குத் தக்கவாறு ஆலோசனை செய்து முடிவு எடுத்துக் கொள்ளுகிறோம்.

### பஞ்சாயத்து யூனியன்கள்

*** 39 கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, பஞ்சாயத்து யூனியன்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை ஏதேனும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா?

(உ) அதில் கூறியுள்ள யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அமல் செய்யும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) ஆம்.

(இ) இக் குழு சர்க்காரால் அமைக்கப்படாததால் அதன் அறிக்கையின் நகல் ஒன்றை இச் சபைமுன் வைக்கும் கேள்வி எழ இடமில்லை.



2nd August 1966]

(உ) குழுவின் சிபார்சுகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் கட்சிச் சார்பற்று நடைபெறுகின்ற நிலையில், ஒரு கட்சி தனது செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்ளுவதற்கு, கட்சியின் நலன்களை வளர்த்துக் கொள்ளுவதற்கு இப்படி ஒரு பரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்புவதைவிட, சர்வ கட்சிகளையும் கொண்ட ஒரு குழு அமைத்து, பஞ்சாயத்து யூனியன்களுடைய நிர்வாகங்களைப் பரிசீலனை செய்து, அது சமர்ப்பிக்கும் யோசனைகளை ஏற்றுக் கொள்ளுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** மூலக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, இது சர்க்காரால் அமைக்கப்பட்ட கமிட்டி அல்ல என்று நான் குறிப்பிட்டேன். எந்த விதமான அபிப்பிராயங்கள் சர்க்காருக்கு வந்தாலும், ஜனநாயக அடிப்படையில் இயங்குகிற சர்க்கார் அவற்றைப் பரிசீலிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** பஞ்சாயத்து நிர்வாகம் சீராக அமைய வேண்டும் என்பதிலே சிறந்த அக்கறை இருப்பதன் காரணமாகத்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு குழு அமைத்து அத்தகைய காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறதா? அந்த சிபாரிசுகளின் சிறந்த முக்கிய அம்சங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** சிறந்த முக்கிய அம்சங்கள் எவை எவை என்று எனக்கு இப்பொழுது ஞாபகத்தில் இல்லை. பஞ்சாயத்து வருமானத்தைப் பெருக்குவது, பஞ்சாயத்து நிர்வாகத்தை எந்தவிதமாகச் சீர்திருத்தம் செய்வது, முனிசிபாலிட்டிக்குச் சர்க்கார் எவ்விதமாக அரை கிராண்ட் கொடுக்கிறார்களோ அம்மாதிரி டவுன் பஞ்சாயத்துக்கும் கொடுக்கலாமா, நிர்வாக விஸ்தரிப்பு அதிகாரிக்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் இடையே இணக்கமான நிலையை ஏற்படுத்துவது எப்படி, ஜீப்களை யார் யார் எவ்வப்போது உபயோகிப்பது போன்று இப்படிப்பட்ட பல அம்சங்கள் இருக்கின்றன. விவரங்கள் எந்தப் பத்திரிகையில் வந்ததைக் கனம் அங்கத்தினர் பார்த்தாரோ அதைத்தான் நானும் பார்த்தேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போது, கனம் அமைச்சர் அவர்கள், "குழுவின் சிபார்சுகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அரசாங்கத்தின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, அந்த தஸ்தாவேஜ் அரசாங்க தஸ்தாவேஜுகளில் ஒன்றாக ஆகிறது. அப்படியிருக்கும்போது, அதைச் சபைக்கு வைப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சிபாரிசுகள் பரிசீலனையில் இருக்கின்றன என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். பரிசீலனை முடிவு பெற்ற பிறகு வேண்டுமானால், அதைச் சபையில் வைப்பதற்கு ஆட்சேபனை இல்லை. பரிசீலனை செய்து, சில சிபார்சுகளை ஏற்றுக் கொள்ளலாம்; பலவற்றைத் தள்ளிவிடலாம். அல்லது பலவற்றை ஏற்றுக் கொள்ளலாம்; சிலவற்றைத் தள்ளிவிடலாம். இப்பொழுது அதைச் சபையில் வைப்பதற்கில்லை.

**திரு. நா. துரைப்பாண்டியன் :** இந்தக் குழு ஜில்லா ஜில்லாவாக வந்தபோது, அந்தந்த ஜில்லாவில் கட்சிச் சார்பற்ற முறையில் எல்லாக் கட்சியினரையும் கலந்து கொண்டார்கள் என்பது உண்மைதானே ?

**கனம் திரு சே. ம. அ. மஜீத் :** அந்த விவரம் என்னிடம் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அக்கறை எடுத்துக் கொண்ட மாதிரி எதிர்க் கட்சியினரும் அக்கறை எடுத்துக் கொண்டாலும் சர்க்கார் அதை ஆட்சேபிக்கப் போவதில்லையே? ஏன் எதிர்க் கட்சிக்காரர்கள் இதற்காக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்று அறியலாமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** எதிர்க் கட்சியினரும் ஆட்சேபம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. பாராட்டுதலை மறைமுகமாகவே அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டில் இயற்றப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்திற்கு தினத்திற்கு ஒரு திருத்தம், புதிது புதிதாக வந்து கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. இதை விரிவாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும் வகையில், சர்வ கட்சியினரைக் கொண்ட, சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைத்து மறு பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி உத்தேசம் இல்லை. ஏற்கனவே இது சம்பந்தமாக அவ்வப்போது சர்க்கார் இலாக்காவே என்ன என்ன திருத்தம், என்ன என்ன மாற்றம் செய்யவேண்டும் என்பதைக் குறித்த விஷயத்தைக் கவனித்து வருவதால், கனம் அங்கத்தினர் கூறுகிறபடி குழு அமைத்துப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

*** 40 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களுக்கு, மான்யம் வழங்குவதற்கென அவை ஏ, பி, சி, டி, என்று பிரிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், இதை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா ?



**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) பஞ்சாயத்து யூனியன்களின் தற்போதைய வகைப் பாட்டினைத் திருத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** தற்போதைய பிரிவினை எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது? இதை எந்த அடிப் படையில் மாற்றியமைக்க அரசாங்கம் உத்தேசிக்கிறது என்பதை அறியலாமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** "லான்டு ரெவின்யூ பேர் காபிடா பேஸிஸ்" இல்தான் முன்பு, ஏ, பி, சி, டி என்று பிரிக்கப்பட்டது. படையாகக் கொண்டு செய்யலாமா என்று பரிசீலனை நடந்து கொண்டு வருகிறது. ரூரல் டெவலப்மெண்ட் டைரக்டரிடமிருந்து இன்னும் அம்மாதிரி முடிவான தகவல் ஒன்றும் வரவில்லை. ஒர்க்கிங் க்ரூப்பும் பஞ்சாயத்து அடிப்படையில் இதே அளவில்தான் சிபாரிசு செய்திருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** தற்போது சில ப்ளாக்குகளில் இரண்டு பிர்க்காக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இப்பொழுது "பேர் காபிடா ஜெனரல் ரெவின்யூ" வை அடிப் நஞ்சைப் பகுதியாக இருக்கலாம். மற்றொன்று, முற்றிலும் வறண்ட புஞ்சைப் பகுதியாக இருக்கலாம். இரண்டும் சேர்ந்து ஒரே ப்ளாக்காக இருப்பதன் காரணமாக, 'ஏ' பிரிவின்கீழ் வரக்கூடிய நிலை இருக்கிறது. இத்தகைய ப்ளாக்குகளில் அபிவிருத்தியின் வேகம் தடைப்பட்டிருக்கிற செய்தி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இத்தகைய 'ஏ' ப்ளாக்கில் அதற்குரிய உதவித் தொகையை மக்கள் கொடுக்க இயலாத நிலையில், அத்தகைய ப்ளாக்கில் வளர்ச்சி தடைப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா ? காலா காலத்தில் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தி விமோசனம் அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே பதிலளிக்கும்போது குறிப்பிட்டேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இது அமலாகும்போது, அநேகமாக இந்த க்ளாஸிபிகேஷனைத் திருத்தும் விஷயத்தையும் அரசாங்கம் பரிசீலிக்கும். கனம் அங்கத்தினர் குறிப்பிட்டபடி, ஒரு சில ப்ளாக்குகள் அவ்விதமாக இருக்கின்றன என்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், அது தவிர்க்க முடியாதது. நஞ்சை நிலமாகப் பார்த்து ப்ளாக் அமைப்பது, அல்லது புஞ்சை நிலமாகப் பார்த்து ப்ளாக் அமைப்பது என்பது அனுபவ சாத்தியமற்றது, நடைமுறையில் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** குறைந்த எண்ணிக்கையுள்ள பஞ்சாயத்துக்களையும், அதிகமான எண்ணிக்கையுள்ள பஞ்சாயத்துக்களையும் கொண்ட பல பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன.

[2nd August 1966

வழங்கப்படும் மானியம்; எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியாக இருப்பதால், அதிக எண்ணிக்கை உள்ள பஞ்சாயத்தில் அதிகமான அபிவிருத்தி வேலைகள் செய்ய முடியாத நிலை இருப்பதால், அதிகமான பஞ்சாயத்துக்கள் இருக்கும் ப்ளாக்குகளாகப் பிரிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** மூலக் கேள்வியிலிருந்து இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

**கனம் சபாநாயகர்:** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## III.—ADJOURNMENT MOTIONS.

### (1) PROMULGATION OF ORDER UNDER SECTION 144, CR. P.C.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion *re.* the issue of orders under section 144 Cr.P.C.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நமது சட்டசபை கூடுகிறபோதெல்லாம் சட்டசபைக்கு வரும் வழியில் யாரும் கூடக் கூடாது என்று போலீசார் தடை உத்தரவு பிறப்பிக்கிறார்கள். இது நம்முடைய சட்டசபையையே அவமதிக்கிற மாதிரி இருக்கிறது. என்னுடைய 15 வருட சட்டசபை அனுபவத்திலே, இந்தச் சட்டசபையை நடத்த முடியாமல் ஜனங்கள் தடுத்த நிகழ்ச்சியைப் பார்க்கவில்லை. வேறு எங்கே எப்படி இருக்குமோ அது எனக்குத் தெரியாது. அப்படியிருக்கும் போது, நம்முடைய ராஜ்யத்திற்கு மட்டும், இந்தச் சபைக்கும், நம்முடைய மக்களுக்கும் கேவலத்தைத் தேடும் முறையில், ஒவ்வொரு தடவையும் சட்டசபை கூடும்போதெல்லாம் போலீசார் தடை உத்தரவு பிறப்பிப்பதானது மிகவும் கேவலமாக இருக்கிறது; நம்முடைய மக்களை அவமதிப்பதாக இருக்கிறது; மக்கள் பிரதிநிதிகள் எப்படி வேலை செய்கிறார்கள் என்று பார்க்கவும் அவர்களிடத்தில் முறையீடுகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் தனியாகவோ சேர்ந்தோ வருபவர்களுடைய, அதுவும் அமைதியான முறையில் வர விரும்புகிறவர்களுடைய சுதந்தரத்தைப் பறிப்பதாக இருக்கிறது. ஆகவேதான், இந்தத் தடை உத்தரவிற்கு அவசியம் இல்லை, இந்தத் தடை உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்பதை இந்தச் சபையின் மூலமாகக் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் நான் சபையின் அலுவலை ஒத்திவைத்து இந்த விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்று விரும்புகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தைப் பார்க்க வருகின்றவர்களுக்குத் தடை ஒன்றும் இல்லை. ஆனால் கூட்டமாகக் கூடக் கூடாது, சட்ட



2nd August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சபைக்கு வருகின்றவர்களைத் தடுக்கக்கூடிய காரியங்களைச் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது நிர்வாக தோரணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. இம்மாதிரி உத்தரவுக்கு அவசியமே இல்லை என்று சொல்ல முடியாது. முன்பு மேல்சபைக்கு வந்து கொண்டிருந்த ஒரு அங்கத்தினர் சபைக்கு வர முடியாமல் தடுக்கப்பட்டதும், மறிக்கப்பட்டதும் நமக்குத் தெரியும். அதற்குள் யாரும் அதை மறந்திருக்க மாட்டார்கள். அதுபற்றி மேல்சபையில் ஒரு உரிமைப் பிரச்சினையே ஏற்பட்டது. எப்படியும் இந்த உத்தரவு, சட்டமன்ற செயல்முறைகள் நல்லவகையில் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் போலீஸ்காரர்களின் நிர்வாக தோரணையில் பிறப்பிக்கப்பட்ட ஒன்றாகும். ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: I withhold my consent to the hon. Member to raise an adjournment motion on this subject.

### (2) EVICTION OF AGRICULTURISTS IN VANAVASI PAKKANAD FOREST AREA, SALEM DISTRICT

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் வனவாசி பக்கநாடு என்ற இடத்தில் உணவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 600 விவசாயக் குடும்பங்கள் கடந்த சிலபல வருஷங்களாகச் சாகுபடி செய்து வருகிறார்கள். அந்த நிலம் பாரஸ்ட் இலாக்காவுக்குச் சொந்தமானது, அவர்கள் அதைக் காலி செய்ய வேண்டும் என்பதுதான் தகராறும் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி அந்த விவசாயக் குடும்பங்களுக்கும், பாரஸ்ட் இலாக்கா, ரெவின்யூ இலாக்கா ஆகியவற்றுக்கும் தகராறு, பேச்சுவார்த்தை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் போலீஸ்காரர்களை இரவோடு இரவாக அனுப்பி, அந்த விவசாயிகளைக் கைது செய்து போலீஸ் வான்களில் ஏற்றி தொப்பூர் கணவாய் போன்ற இடங்களில் கொண்டு போய் விட்டிருப்பதும், அவர்களது வீடுகளை அழித்து, இடித்து நெருப்பை வைத்துக் கொளுத்திவிட்டிருப்பதும் நியாயமானதல்ல. அந்த வீடுகளை அவர்கள் இடித்துத் தள்ளி, நெருப்பு வைத்தது சம்பந்தமான படங்கள் கூட இதோ இருக்கின்றன. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், அதிகமாகச் சாகுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிற இந்த நேரத்தில் இப்படிப் போலீஸ்காரர்களை இரவோடு இரவாக அனுப்பி அந்த விவசாயக் குடும்பங்களுக்குத் துன்பம் விளைவித்திருப்பதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் ஹைக்கோர்ட்டில் ரிட் போட்டு ஒரு இன்ஜெங்ஷன் கூட வாங்கியிருக்கிறார்கள். ஹைக்கோர்ட்டார் அந்த உத்தரவில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்--

'That an injunction do issue against the respondents herein restraining them from interfering with the possession of the members of the petitioner Sangam who are cultivating the land in the Vanavasi Pakkanadu Forest area.'

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [2nd August 1966

இப்படி இருக்க போலீஸ்காரர்களை இரவோடு இரவாக அனுப்பி காட்டு இலாக்கா, காட்டுத்தளமாக அந்த விவசாயக் குடும்பங்களை அழித்திருப்பதை நான் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தனித்தனியாக அந்த விவசாயிகளைப் பயமுறுத்தி, அவர்களைக் காலி செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டும். இது பற்றி விவாதிக்க நான் எனது ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர் இதைப்பற்றித் தகவல் வேண்டுமென்று கோரியிருந்தால் நான் அதுபற்றிய தகவலைச் சேகரித்துக் கொடுத்திருக்க முடியும். சில ஆண்டுகளாகவே அங்கு நடைபெற்று வந்த நிகழ்ச்சிகளைப் பற்றி எனக்கும் நன்கு தெரியும். காரணம், அந்த இலாக்கா அப்போது என்னிடமே இருந்தது. சமீப காலமாக—இரண்டு மூன்று ஆண்டுகளாகத்தான் எனக்கு அதைப் பற்றித் தெரியாது. முதலில் அந்த விவசாயிகள் யாருடைய அனுமதியும் இன்றித் தாங்களாகவே நான் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அதை உடனடியாகத் தவிர்க்கக் கூட இல்லை. நியாயமான முறையில் எடுத்துச் சொல்லி அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் அரசியல் தலையீடு இல்லை என்று சொல்வதற்கில்லை; அங்குள்ள அரசியல் தலைவர்கள் அந்த விஷயத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முற்பட்டிருக்கிறார்கள். எனக்கு அதுபற்றி ஓரளவு தெரியும். ஹைக்கோர்ட்டின் தடை உத்தரவை மீறியிருந்தால் அதற்கு ஹைக்கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் அது அப்படி இல்லை. ஹைக்கோர்ட் உத்தரவு வருவதற்கு முன்னால் நடந்த சம்பவம் இது. எனக்குத் தெரிந்த வரையில் அங்கே ஒன்றும் தவறாக நடைபெறவில்லை. அக்கிரமமாக அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டபோதே—அவர்களே 'நாங்கள் ஒரு மூன்று வருடம் சாகுபடி செய்கிறோம், அப்புறம் காலி செய்துவிடுகிறோம்' என்று ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார்கள். அப்போது காலி செய்யவில்லை. மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரும் அவர்கள் காலி செய்யவில்லை. அதோடு அவர்கள் இஷ்டம்போல் அளவு கூட இல்லாமல் ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தார்கள். சட்டத்திற்குப் புறம்பாக ஏற்பட்டிருந்த அந்த ஆக்கிரமிப்பை அகற்றத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுவும் நிர்வாக தோரணையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தான். அதுபற்றிய விவகாரம் ஹைக்கோர்ட் முன்பும் இருக்கிறது. ஆகையால், இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஹைக்கோர்ட்டார் தடை உத்தரவு போட்டிருந்தும் கூட இரவோடு இரவாகப் போலீஸ்காரர்கள்



2nd August 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அந்த விவசாயிகளை அப்புறப்படுத்தி குடிசைகளை இடித்து எரித்திருக்கிறார்கள். அந்த போட்டோக்கள் கூட இதோ இருக்கின்றன.

MR. SPEAKER: Whatever it is, this matter has been pending before the High Court for a long time.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** வீட்டை இடித்து நெருப்பு வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். இப்படி ஐநூறு விவசாயக் குடும்பங்களுக்கு இம்சை செய்யப்பட்டிருப்பதை எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் எடுத்துச் சொன்னால், அரசியல் கட்சித் தலைவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதாக முதல் அமைச்சர் அவர்கள் இடித்துக் காட்டவேண்டாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் பயன்படுத்திக்கொள்கிறார் என்று நான் சொல்லவில்லை. அந்த இடத்தில் உள்ளவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று நான் சொன்னேன். அதுபற்றி எனக்குத் தெரியும். இங்கே எந்தக் கேள்வி கேட்டாலும் அதைப்பற்றி நான் குறிப்பிடவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நான் இதுபற்றி ஒரு ஷார்ட் நோட்டீஸ் கேள்வி கொடுக்கிறேன்.

MR. SPEAKER: Yes, the hon. Member can put a short notice question and that would be considered; but, he should have done it earlier.

## (3) SCARCITY OF FOODGRAINS AND OPENING OF FAIR PRICE SHOPS IN CERTAIN DISTRICTS

**திரு. க. ர. நல்லசிவம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி ஆகிய ஜில்லாக்களின் பெரும் பகுதியில் கடந்த வருடமும் மழை கிடையாது. இந்த வருடமும் மழை கிடையாது. இப்படி இருக்கிற காரணத்தினால் பஞ்சப் பிரதேசமாக அவற்றை அறிவித்திருக்க வேண்டும். அப்படி பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கப்படவும் இல்லை. அங்கே நியாய விலைக் கடைகள் வைத்து மக்களுக்கு அரிசி விநியோகிக்கவாவது ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அம்மாதிரி நியாயவிலைக் கடைகள் வைத்து அரிசி வழங்கப்படவும் இல்லை. ஒரு லிட்டர் அரிசி ஒண்ணே முக்கால் ரூபாய்க்கு அந்தப் பகுதியில் விற்கப்படுகிறது. லிட்டர் ஒண்ணேமுக்கால் ரூபாய் கொடுத்து எத்தனை பேர்களினால் வாங்கிச் சாப்பிட முடியும்? கோயம்புத்தூர், ஈரோடு போன்ற நகரங்களிலாவது கொஞ்சம் அரிசி கிடைக்கிறது. கிராமங்களில் அடியோடு கிடையாது. மாடுகளுக்கு வைக்கோல் தீவனம் கிடையாது. அதுமட்டும் அல்ல. அதிகாரிகளிடம் சென்று கேட்டால் லட்சக்கணக்கில் கார்டுகளை அடித்து வைத்திருக்கிறோம், எங்களுக்குச் சர்க்கார் அரிசி சப்ளை செய்தால் தானே கார்டுகளை வழங்கி அரிசி விநியோகிக்க முடியும் என்கிறார்கள்.

MR. SPEAKER : Is it a definite matter of public importance?

SRI K. R. NALLASIVAM : It is a definite matter.

MR. SPEAKER : Let the hon. Member finish his speech soon.

திரு. க. ர. நல்லசிவம் : அங்கே உணவு தானியம் கிடைக்காமல் ஜனங்கள் பட்டினிச் சாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். பட்டினிச் சாவுகள் ஏற்படுவதைத் தவிர அங்கே வேறு வழியில்லை. இன்றையதினம் அந்தப் பகுதியில் உள்ள ஹரிஜனங்களை எடுத்துக் கொண்டால் ஒரு வேளை தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே உள்ள நிலைமை சகிக்க முடியவில்லை.

MR. SPEAKER : The hon. Member can speak on this subject when the No-confidence Motion is taken up for consideration or on any other occasion. Now, the hon. Member must finish his speech in a few minutes.

திரு. க. ர. நல்லசிவம் : உடனடியாக அந்தப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளை வைத்து உணவு தானியம் வழங்க வேண்டும். அங்கு உள்ள சகிக்க முடியாத நிலைமையைச் சமாளிக்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : I am not going to allow a discussion on the subject in detail. It would not come under an adjournment motion. The hon. Member has already spoken on the motion.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றிக் கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம். கனம் அங்கத்தினர் என்ன சொல்கிறார் என்றே என் சிற்றறிவுக்குப் புரியவில்லை.

SRI K. R. NALLASIVAM rose . . .

MR. SPEAKER : The mater is over and let the hon. Member, Sri Nallasivm resume his seat.

திரு. க. ர. நல்லசிவம் : அங்கு உடனடியாக நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்கிற உறுதியை முதல் அமைச்சர் அளித்தால் அன்றி நான் உட்கார முடியாது.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat.

திரு. க. ர. நல்லசிவம் : அங்குள்ள நிலைமை சகிக்க முடியாத்தாக இருக்கிறது. திட்டவட்டமான உறுதி முதல் அமைச்சரிடமிருந்து வந்தாலன்றி உட்கார முடியாது.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat



திரு. க. ர. நல்லசிவம் : முதல் அமைச்சர் வாக்குறுதி அளிக்காத வரை நான் உட்காரப் போவதில்லை. அங்கு நியாயவிலைக் கடைகள் உடனடியாகத் திறக்கப்பட்டாக வேண்டும்.

MR. SPEAKER : Then, the hon. Member has become violent. It appears that he has made up his mind to create trouble.

திரு. க. ர. நல்லசிவம் : அந்தமாதிரி எண்ணம் எனக்குக் கிடையாது. அந்தப் பகுதியில் அரிசி லிட்டர் ஒன்றேமுக்கால் ரூபாய்க்கு விற்கிறது. எப்படி மக்கள் வாழமுடியும்?

MR. SPEAKER : In that case, the hon. Member has come prepared to violate all the rules and the decorum of the House. Let the hon. Member please resume his seat.

திரு. க. ர. நல்லசிவம் : முதல் அமைச்சர் வாக்குறுதி அளித்தாலொழிய நான் உட்கார முடியாது.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat. He has said what all he wanted to say. 9-30 a.m.

திரு. க. ர. நல்லசிவம் : முதலமைச்சரிடமிருந்து நான் பதிலை எதிர்பார்க்கிறேன். அதுவரை நான் உட்காரமாட்டேன்.

MR. SPEAKER : The hon. Member cannot expect the whole House to go according to his wish.

திரு. க. ர. நல்லசிவம் : நான் பதில் கிடைத்த பிறகுதான் உட்காருவேன்.

MR. SPEAKER : Our Legislature has got a good history. Does the hon. Member want to cast a slur on it? He has got experience, as he has been a Member of this House for a long time.

திரு. க. ர. நல்லசிவம் : அங்கு இருக்கக்கூடிய நிலைமையை நான் இப்படித்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. நிச்சயமான பதிலை முதலமைச்சர் அவர்கள் கொடுக்கிற வரையிலே நான் உட்காரப் போவதில்லை.

MR. SPEAKER : I am extremely sorry. Let the hon. Member please take his seat or let him withdraw from the House.

திரு. க.ர. நல்லசிவம் : நான் வேண்டுமானால் வித்டிரா பண்ணுகிறேன்.

MR. SPEAKER : Let the hon. Member please withdraw from the House.

திரு. க. ர. நல்லசிவம் : நான் வித்டிரா பண்ணிக் கொள்ள வேண்டுமென்றால் பண்ணிக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் ஆராய்ந்து சரியான பதிலைத் தராத நிலையிலே நான் இந்தச் சபையைவிட்டு வித்டிரா பண்ணுகிறேன். நாளைக்கு ஏதாவது ஒன்று ஆகி அதை இங்கே கொண்டு வருவதைவிட நான் இப்பொழுதே வித்டிரா பண்ணிவிடுகிறேன்.

(Sri K. R. Nallasivam then collected his papers and walked out of the House).

MR. SPEAKER : This is a most reprehensible conduct on the part of the Member. I would like to bring to the notice of the House that the conduct of the Member is inconsistent with the rules. If every Member starts like this, I do not think we can prolong the sitting of the House unless we take definite and strong action against such conduct. I would like to know the opinion of the Leaders of Parties.

SRI M. KALYANASUNDARAM : Leaders of parties can meet in the Speaker's chamber and discuss about it.

MR. SPEAKER : Yes, I agree.

## IV.—PRIVILEGE MATTERS

### (1) CHIEF MINISTER'S ANNOUNCEMENT OF DATE OF MEETING OF THE LEGISLATURE BEFORE PUBLICATION OF GOVERNOR'S NOTIFICATION

SRI T. P. ALAGAMUTHU : Sir, I beg to move the following privilege motion against the Hon. Chief Minister.

MR. SPEAKER : I am not allowing the Member to move the motion. He can speak on the points for getting the leave of the House.

SRI T. P. ALAGAMUTHU : Under the Constitution, it is the duty and privilege of the Governor to summon the Legislature once it is prorogued. So, in the order of things, the Members of the Legislature and the public should be informed of the summoning of the Legislature by a notification by the Governor only. It is highly improper if this information is given by anybody else other than the Governor, especially to the newspaper correspondents.

On 21—6—1966, most of the newspapers in Madras published a news item that the Hon. Chief Minister gave out the information that the Assembly would be meeting on the 1st August 1966. Actually, the Members of the Assembly received the communication about this only on 12—7—1966 and even the notification summoning the Legislature by the Governor is dated only 11—7—1966. Thus, two weeks prior to the issue of the notification, the information had been given to the public in utter disregard of the sanctity attached to the constitutional functioning of the Governor and the right and privilege of the members to know the date of the summoning of tht Legislature in the first instance. Thus a serious breach of privilege of the House has been committed by the Hon Chief Minister in his announcing to the Press about the date of the summoning of the Legislature before the Governor's notification.



* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் விளக்கியதிலிருந்து இந்த மன்றத்தின் உரிமை எங்கே பாதிக்கப்பட்டது, எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பது எனக்குப் புரியவில்லை. சட்டசபைக் கூட்டம் துவக்கப்பட வேண்டுமென்றால் கவர்னர் அவர்கள் சம்மன்ஸ் அனுப்புகிறார்கள். கவர்னர் அவர்கள் சம்மன்ஸ் அனுப்புவதற்கு முன்பு முதன்மையாகத் தங்களுடைய யோசனை கோரப்படுகிறது. தங்களைக் கலந்து கொண்டு அரசாங்கமும் எந்தத் தேதியிலிருந்து சபை தொடங்கலாம் என்று கலந்து முடிவு செய்து அதற்கப்புறம்தான் கவர்னர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. கவர்னரும் முடிவுசெய்கிறார்கள். அதன் பிறகு கவர்னர் அவர்கள் சட்டசபையைக் கூட்டுகிறார்கள். ஆனால் இதிலே கான்ஸ்டிட்யூஷனிலே ஏதோ உரிமை இருந்தது, அந்த உரிமை பாதிக்கப்பட்டுவிட்டது என்று சொல்வது எனக்குப் புரியவில்லை. தங்களைக் கலந்து கொண்டு கவர்னர் அவர்கள் ஆகஸ்டு மாதம் முதல் தேதி துவக்கப்படும் என்று சொன்னால், விதிகளின்படி 15 நாட்களுக்கு முன்னால் நோட்டிபிகேஷன் அனுப்பினால் போதும், அதாவது ஜூலை 15-ஆம் தேதி கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்தால் போதும், அதற்கு முன்னால் தெரிய வேண்டாம் என்று சொன்னால் சரிதான். பத்திரிகைகளுக்கு இது வேண்டுமென்ற நிமித்தம் இல்லை, பத்திரிகைகள் மூலம் கனம் அங்கத்தினர்களுக்கு முன்னதாகத் தெரியட்டும், சீக்கிரமாகத் தெரிந்தால் அவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும், அவர்கள் முன்னாடியே தங்களுடைய அலுவல்களை நிர்ணயித்துக் கொள்ளட்டும் என்பதால் பத்திரிகைகள் மூலமாகத் தெரிவிக்கப் படுகிறது. பதினைந்து நாட்களுக்கு முன்னால் என் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டால்—கேட்கலாம்—அப்படி வேண்டாமென்று அபிப்பிராயப்பட்டால் விட்டுவிடலாம். நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை. தெரிவிக்கப்பட்டதெல்லாம் அங்கத்தினர்களுடைய சௌகரியத்தையொட்டித்தான். வேண்டாமென்று சொன்னால் அதையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இதில் உரிமைப் பிரச்னைக்கு இடம் ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தைக் கூட்டுகின்ற உரிமை கவர்னர் அவர்களுக்கு அமைகின்றது என்று சட்டமன்ற விதிகள் கூறுகின்றன. கவர்னர் அவர்கள் நாளைக் குறிப்பிட்டதற்குப் பிறகுதான் முறைப்படி செயல்படலாம் என்று விதிகள் இருக்கின்றன. கவர்னர் அவர்கள் 11-ஆம் தேதிதான் சட்டமன்றத்தைக் கூட்டுகின்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகஸ்டு முதல் தேதி கூடும் என்று முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். சௌகரியம் இருக்கிறதா, இல்லையா. வேண்டாமென்றால் நிறுத்திக்கொள்ளலாம் என்ற அளவிலே முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். பதினைந்து நாட்களுக்கு முன்பு தெரிவிக்கலாம் என்றால், முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த நாளும் அதே

2nd August 1966] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

*லீடர் ஆஃப் தி ஹவுசின் வசதியைக் கேட்டுத்தான் முடிவு செய்யப்படுகிறது என்றாலும், தேதி கவர்னர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட பிறகுதான் முதலமைச்சர் அவர்கள் அதை வெளியிட்டார்கள் என்பதைப் பொருத்துத் தாங்கள் திருப்தியடைந்தால் போதும்.*

MR. SPEAKER : I will give my ruling tomorrow.

(2) DELAY IN INTIMATION OF THE ARREST OF A MEMBER

***திரு. மீ. கலியாணசுந்தரம் :*** *கனம் சபாநாயகர் அவர்களே, இது ஓரளவுக்கு நேரடியாக நான் சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தாலும், இதை என் சொந்த விஷயமாக கருதிவிடக் கூடாது. ஜூலை மாதம் 3-ம் தேதி காலையில் திருச்சி போலீசார் என்னைக் கைது செய்தார்கள். நான் ஒன்றும் சட்ட விரோதமான காரியம் செய்யவோ, கலகம் செய்யவோ போகவில்லை. நம்முடைய பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் நாட்டின் பொருளாதார நிலையைப் பாதிக்கக்கூடிய வகையில், விலைவாசி ஏற்றத்திற்கு வழி வகுக்கும் வகையில் ரூபாய் மதிப்பைக் குறைத்ததைக் கண்டிப்பதற்காக அவர்கள் திருச்சி வந்த சமயத்தில் கறுப்புக் கொடி காட்ட வேண்டுமென்று என்னுடைய கட்சி முடிவு செய்தது. எந்த இடத்தில் நான் கறுப்புக்கொடி காட்ட வேண்டுமென்று முடிவு செய்தார்களோ அந்த இடத்திற்கு நான் சென்றேன். கறுப்புக்கொடி காட்டுவது என்பது சட்ட விரோதமான ஒன்றல்ல. கேரளத்தில் கறுப்புக்கொடி காட்டியிருக்கிறார்கள். அப்போது திருச்சியிலும், சென்னையிலும் மட்டும் ஆயிரம் பேருக்கும் அதிகமாகக் கைது செய்யப்பட்டார்கள். கம்யூனிஸ்டு கட்சிக் காரியாலயங்களில் எல்லாம் உடுப்பு இல்லாத போலீசார் ஆக்கிரமித்துக் கொண்டு கட்சி ஊழியர்களையே உள்ளே நுழைய முடியாதவாறு செய்தார்கள். கறுப்புக்கொடி காட்டுவது சட்ட விரோதமானதல்ல. ஆனால் நான் கைது செய்யப்பட்டது 120-பி பிரிவின் கீழ். தாங்கள் வக்கிலானதால் இதை விளக்கமாகப் புரிந்து கொள்ள முடியும். செக்ஷன் 143, 147-ஐயும் சிபாரிசு செய்தார்கள்.*

MR. SPEAKER : Now, let the hon. Member come to the point relating to the arrest.

***திரு. மீ. கலியாணசுந்தரம் :*** *அதற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறது. ஒரு நீதிமன்றம் பார்த்து 'பெயிலில்' என்னை விட்டிருக்கிறது. நான் நிபந்தனை இல்லாத ஜாமீனில் எங்கு வேண்டுமென்றாலும் போகலாம் என்ற முறையில் நீதிமன்றத்தால் விடப்பட்டிருக்கிறேன். ஆகவே, என்னை மறுபடியும் கைது செய்ய வேண்டுமென்றால் அந்த நீதி மன்றத்தின் அனுமதியை வாங்க வேண்டும். ஆனால் போலீசார் என்னைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனில் காலை 8-50-ல் இருந்து 2 மணி வரை உட்கார*

வைத்திருந்தார்கள். ஒரு இன்ஸ்பெக்டரும், நான்கு கான்ஸ்டபிள்களும் கூடவே இருந்தார்கள். என்னை எந்த செக்ஷனின் கீழ்க் கைது செய்தார்கள்? எந்தச் சட்டத்தின் கீழ்க் கைது செய்தார்கள்? இப்பொழுதுதான் பார்த்தேன், செக்ஷன் 151-ன் கீழ்க் கைது செய்ததாக. எந்தத் தேதி தங்களுக்குத் தகவல் அனுப்பினார்கள்? இதைப் பற்றிச் சட்டசபைக் காரியாலயத்திலிருந்து அங்கத்தினர்களுக்குத் தெரிவித்திருப்பது 27—7—1966 அன்று. நான் பிரிவிலெஜ் மோஷன் கொடுத்து இரண்டு நாட்களுக்குப் பிறகு நம்முடைய சட்டசபைக் காரியாலயத்திலிருந்து அங்கத்தினர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் நான் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த நேரம் ஐந்து மணியா, ஐந்து மாதமா, ஐந்து வருஷமா என்பது பிரச்னை அல்ல. ஐந்து மணி நேரம் என்னுடைய உரிமை பறிக்கப்பட்டது. சாப்பிட முடியாமல், தண்ணீர் அருந்த முடியாமல் என்னுடைய உரிமை பறிக்கப்பட்டு என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டு போலீசார் உட்கார்ந்திருந்தார்கள். நான் இந்தச் சபை அங்கத்தினர்; பொறுப்பு இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்து விடக் கூடியவன் அல்ல; என் போன்றவர்களுக்கே இந்த மாதிரி நிலைமை என்றால் இந்த மாதிரி அநீதி என்றால், சாதாரண பொதுமக்களைப் போலீசார் எப்படி நடத்துவார்கள்? கனம் முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுமானால் போலீசார் பேரிலே ஒரு நம்பிக்கை இருக்கலாம். கறுப்புக்கொடி பிடிக்கிறோம் என்று சொன்னதற்காகவா இந்த நிலைமை? கைது செய்யப்பட்டவர்களைப் போலீசார் அடித்திருக்கிறார்கள். அதையும் விசாரிக்க வேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களிடத்தில் மெமோரான்டம் கொடுத்திருக்கிறேன்.

MR. SPEAKER: Let the hon. Member come to the point regarding privilege. Let him confine himself to what he has stated in his motion.

*திரு. மீ. கலியாணசுந்தரம்:* என்னைச் சட்ட விரோதமாகக் கைது செய்து வைத்திருந்தது ஒன்று. இரண்டாவது, சபாநாயகருக்கு உடனே அறிவிக்காதது. சட்டசபைவிதி 245-லே—

'When a member is arrested on a criminal charge or for a criminal offence or is sentenced to imprisonment by a court or is detained under an executive order, the committing judge, magistrate or executive authority, as the case may be, shall immediately intimate such fact to the Speaker indicating the reasons for the arrest, detention or conviction, as the case may be, as also the place of detention or imprisonment of the Member in the appropriate forms prescribed by the Speaker' என்று இருக்கிறது.

'இம்மீடியட்லி' என்று இருக்கிறது. சபாநாயகர் அவர்களுக்குத் தகவல் எப்போது வந்திருக்கிறது? 16-ம் தேதி வரை காரியாலயத்திற்குத் தகவல் வரவில்லை; 3-ம் தேதி கைதானது 13, 14 நாட்கள்





கழித்துத் தங்களுடைய காரியாலயத்திற்கு வந்திருக்கிறது. 27-ம் தேதி அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 27-ம் தேதி தெரிவித்தாலும் ஒன்றுதான், தெரிவிக்காவிட்டாலும் ஒன்றுதான்.

MR. SPEAKER: I may tell for the information of the hon. Member that the communication is dated 16—7—1966. It first came here and then it was received at Courtallam on the 22nd July.

*திரு. மீ. கலியாணசுந்தரம்:* 16-ம் தேதி வந்ததாகவே வைத்துக் கொள்ளலாம். 3-ம் தேதி நடந்ததை 13-ம் தேதி அனுப்ப வேண்டிய காரணம் என்ன? சட்ட பூர்வமான நடவடிக்கையாக வைத்துக் கொள்ளாமல் தப்பிக்க வேண்டுமென்று பார்த்தார்கள். நான் இப்படி பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வருவேன் என்ற தகவல் கிடைத்தோ, சந்தேகம் ஏற்பட்டோ 16 நாட்களுக்குப் பிறகு விழித்துக் கொண்டு கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தகவல் கொடுத்ததாக சபாநாயகர் காரியாலயம் ஒப்புக்கொள்ளக் கூடாது. என்னைக் கைது செய்ததுபற்றி உடனடியாகத் தெரிவிக்காமல், 13 தினங்கள் காலதாமதத்திற்கு என்ன அவசியம் என்பதைப் பற்றியாவது குறைந்த பட்சம் பிரிவிலேஜ் கமிட்டி விசாரிக்க வேண்டும். சட்ட விரோதமான முறையிலே சட்டத்தின் கவுரவத்தைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கைகளிலே போலீசார் இறங்கியதைக் கண்டிக்க வேண்டியது ரொம்ப அவசியம்.

இந்தச் சபையின் நடவடிக்கையைக் குறித்து முதலிலே வெளியே சொல்வது தவறு, அது நல்லதல்ல என்ற அளவிலே சபையின் மீது அக்கறையுள்ள கனம் முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை ஆமோதித்து விசாரணைக்கு விடுங்கள் என்று நான் கூடக் கேட்டிருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஆட்சேபிக்கவில்லை. என்ன சொல்கிறார்கள் என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, யார் சொல்கிறார்கள் என்று பார்க்கக் கூடாது. கலியாணசுந்தரம் கறுப்புக்கொடி பிடிக்கப் போகிறார். ஆகவே அவர் சொல்வதை ஏற்கக் கூடாது, அதைக் கேட்கக் கூடாது என்று நினைப்பதை விட்டு விட்டு இதை உரிமைக் கமிட்டிக்கு விட்டுப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, உரிமைப் பிரச்னையை எழுப்பிய கனம் உறுப்பினர் அவர்கள் போலீஸ் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பற்றியும் பேசினார்கள். போலீசார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் தவறு என்று விவாதிக்க வேண்டுமென்றால் அது தனியாக விவாதிக்கப்படலாம். போலீசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd August 1966

எவ்வளவு ஆதாரமுள்ளவை அல்லது நியாயமுள்ளவை அல்லது நியாயமற்றவை என்பதில் அப்போது அரசாங்கம் சரியான நிலையை விளக்க ஒரு வாய்ப்பு ஏற்படும். உரிமைப் பிரச்னை பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட காரணத்தினால், கறுப்புக் கொடி பிடிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஏதோ காரணம் சொன்னார்கள். கொஞ்ச நாள் பொறுத்துப் போலீசுக்கு வந்த தகவல் கறுப்புக் கொடி என்றெல்லாம் இல்லை, டெமான்ஸ்ட்ரேஷன் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். பண்ணட்டும் என்று போலீசார் அபிப்பிராயப்பட்டிருந்தார்கள். பிரதம மந்திரி அவர்கள் போகிற வழியில் கறுப்புக் கொடி பிடிக்கப் போகிறோம் என்று அவர்கள் சொன்னதற்கு அவர்கள் வேறு ஒரு அலுவலாகப் போவதாக இருந்தது. அப்படிக் கறுப்புக் கொடி பிடிக்கப் போகிறார்கள் என்றால் அதை ஒப்புக் கொள்ளாதவர்கள் கௌண்டர் டெமான்ஸ்ட்ரேஷன் செய்யப் போவதாகப் போலீசாருக்குத் தகவல் வந்தது. அப்படி ஒருவர் பிடிப்பதை மக்கள் எதிர்த்து அதனால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும், அப்படி அமைதிக்குப் பங்கம் ஏற்பட இடம் கொடுக்கக் கூடாது என்ற வகையில், எனக்குத் தெரிந்த வரையில், போலீசார் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். போலீசார் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது சரியா இல்லையா என்றால் அதை வேறு வகையில் விவாதிக்கலாம். சேலத்தில் கனம் அங்கத்தினர் அரஸ்ட் செய்யப்பட்டார். பிறகு அப்படி ஒன்றும் செய்வதாக இல்லை என்று சொல்லி நிபந்தனையின்றி பெயிலில் விடுதலை செய்யப்பட்டார் மறுபடியும் திருச்சியில் போலீசார் அவர்களை ரெஸ்ட்ரெயின், டிட்டெயின் செய்து வைத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள் போலீசார் எதற்குச் செய்தார்கள் என்பது வேறு. போலீசார் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அது எதன் கீழ் வருகிறது? எப்போது தெரிவிக்க வேண்டும், எப்போது தெரிவித்தார்கள் என்பது வேறு. எப்போது தெரிவித்தார்கள் என்பதைப்பற்றி எனக்குத் தகவல் இல்லை. தாமதம் எதனால் ஏற்பட்டது, எதற்காக ஏற்பட்டது என்றால், அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதித்தான் தெரிய வேண்டும். ஆக, இதில் *prima facie* breach privilege. ஒன்றுமில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன் வேண்டுமென்றால் தாங்கள் தொடர்ந்து, இதுபற்றி விசாரிக்கலாம் விசாரித்து என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே இப்போது எழுப்பப்பட்டிருக்கிற ஒழுங்குப் பிரச்னையைப் பொருத்த மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்களைத் திருச்சியில் காரணம் இல்லாமல் கைது செய்திருக்கிறார்கள் என்பதுதான் மிக முக்கியமான குற்றச்சாட்டாக அமைந்திருக்கிறது. தாங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்குப் போலீசார் காரணம் சொல்லாமல் ஐந்து மணி நேரம் அவர்களைக் காவலில் வைத்தது எதற்காக, எந்தச் சட்டப் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டிரு



2nd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

க்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கவில்லை. அதோடு இந்த மன்றத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் கைது செய்யப்பட்டால் ஐந்து மணிக்குள்ளாக தங்களுக்கு அறிவிக்க வேண்டுமென்ற அத்தகைய விதிமுறை கூட நடைபெறாமல் 10, 15 நாட்கள் கழித்து அறிவிக்கப்பட்டிருக்கிற பிரச்னையும் வந்திருப்பதால் இது உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதாக இருக்கிறது. காரணம் சொல்லாமல் ஒரு உறுப்பினரைக் கைது செய்கிற நிலையும், அதை முறைப்படி சபாநாயகர் அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய முறையும் கையாளப்படாததால் எதிர் காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க உரிமைக் குழு இதைப்பற்றி பரிசீலித்துத் தீர்ப்பளித்தால் எதிர் காலத்தில் இந்த மன்றத்தின் மதிப்பிற்குரிய அங்கத்தினர்களின் உரிமைகள் காப்பாற்றப்பட்டு முறைப்படி இயங்க வழி ஏற்படும். ஆகவே, இதை உரிமைக் குழுவிற்கு விட்டு ஒரு தீர்ப்பை மேற்கொள்வது வசதியாக இருக்கும். ஆகவே, இந்தப் பிரச்னைகளை ஆராய்வதால் இந்த மன்றத்தில் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமையும் பாதுகாக்கப்படுகிற அளவிற்கு இருக்கிற காரணத்தால் இதை உரிமைக் குழுவிற்கு விட்டுத் தீர்ப்பு பெறுவது நலமென்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தாம் :** போலீஸார் நடத்தையைப்பற்றி தாங்கள் விசாரிக்கலாம் என்று கூறுகிறார்கள். போலீஸார் உடனே தகவல் கொடுக்காத குற்றமாவது இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது அதற்குரிய காரணம் என்னவென்று உரிமைக் கமிட்டி விசாரிப்பதுதான் பொருத்தம். ஆகவே இதை உரிமைக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று வற்புறுத்துவதோடு, முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள் கைது செய்யப்பட்டதற்குள்ள காரணங்களை, எங்கள் ஆர்ப்பாட்டத்தால் தகராறு வரும் என்றல்ல, நாங்கள் செய்வதை வேறு ஒரு சிலர் எதிர்ப்பதனால் அதன் காரணமாக அமைதிக்குப் பங்கம் ஏற்படலாம் என்று கூறினார்கள். அப்படிப்பட்டவர்களைக் கைது செய்யாமல் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துபவர்கள்தான் கைது செய்யப்பட்டார்கள். போட்டியிட்டவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது போலீசாருக்கு எங்கள் மீதுள்ள தனி அக்கறையைத் தெரிவிக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்னையில் இரண்டு விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியன. ஒன்று, இம் மன்றத்தின் உறுப்பினர் ஒருவர் தக்க முகாந்திரம் இல்லாமல் கைது செய்யப்பட்டது, அவரை 'டிடெய்ன்' செய்து வைத்திருந்தது. இது சம்பந்தமான விவரத்தை சபாநாயகரான தங்களுக்குக் கூட 13 நாட்களுக்குப் பிறகே தெரிவிக்க முன் வந்தது. இது ஒன்று. மற்றொன்று, ஜனநாயக ரீதியில் மக்கள் தாங்கள் ஒன்றை

[திரு. சா. கணேசன்] [2nd August 1966

அங்கீகரிக்கிறோம் அல்லது அதை மறுக்கிறோம் என்று காட்டுவதற்குரிய நேர்மையான, செம்மையான, திறமையான, ஒழுக்க ரீதியான ஒரு வழி கறுப்புக் கொடி ஏந்திக் கொண்டிருப்பது. வாயால் கூட கோஷம் போடாமல் தாங்கள் ஒன்றை அங்கீகரிக்கவில்லை என்பதை உணர்த்துவதற்கு ஒரு அடையாளம் மாதிரி, ஒரு எடுத்துக் காட்டாக ஏந்திக் கொண்டிருப்பது. அது ஒரு பெரிய குற்றமா? வெள்ளைக்காரன் காலத்தில் நாம் ஆயிரக்கணக்கான இடங்களில் கறுப்புக்கொடி பிடித்திருக்கிறோம். இதை யெல்லாம் மனத்திலே கொண்டு இந்த இரண்டு விஷயங்களையும் நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும். சிந்தித்து இதற்குச் சரியான நெறிமுறைகளைக் காண, இதில் ஏற்பட்டிருக்கிற தவறுகளைத் தீர்க்க அபிப்பிராயங்களைத் தெரிவித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்புவதுதான் மிக மிகச் சரியானதும், நியாயமானதும், நெறியானதும் கூட என்று நான் கருதுகிறேன் என்பதைத் தங்களிடம் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I will give my ruling to-morrow.

## V.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY

### MOTION GIVEN NOTICE OF BY SRI M. KALYANASUNDARAM

MR. SPEAKER : Hon. Members are aware that the No-confidence Motion brought forth by the Leader of the Opposition, Sri V. R. Nedunchezhian, has been admitted with the leave of the House. Sri M. Kalyanasundaram has given another No-confidence Motion more or less on the same lines. He wants the Speaker to put it to the House for leave for admission. The Chief Minister opposes it on the ground that only one motion can be admitted at one time.

In the Lok Sabha in 1965 August, eight notices of motions of no-confidence in the Council of Ministers were received and the Speaker had admitted only one. In the same way, on 25th July 1966, several motions were given by leaders of parties and only one motion given by the Right Communist Leader was admitted in the Lok Sabha. The Speaker had observed that all the motions were received by him at 10 o'Clock on a particular day and that he had no alternative but to give precedence to one. So, it seems to be the correct position to admit only one motion at a time, in the interest of clear and pointed debate on the subject before the House.

In 1964, we have admitted two motions, one, a No-confidence Motion and another, a motion of disapproval of a particular policy, and we have taken both of them simultaneously for discussion and they have been decided by this House. It seems to me that the procedure is not correct. Under the circumstances I do not give permission to Sri M. Kalyanasundaram to ask for the leave of the House for his motion.



2nd August 1966]

## VI. ANNOUNCEMENTS.

### (1) ELECTION TO THE SENATE OF THE MADURAI UNIVERSITY

MR. SPEAKER : I have to announce to the House that request has been made on behalf of the Madurai University to arrange for the election of four members to the Senate of the Madurai University by the Members of the Madras Legislative Assembly from among themselves under Section 15, Clause III, item (3) of the Madurai University Act, 1965 (Madras Act No. 33 of 1965).

I therefore fix 3 p.m. on Thursday, the 4th August 1966 as the time within which nomination papers of candidates for election should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 11 a.m. on Friday, the 5th August 1966. I also fix 3 p.m. on Saturday, the 6th August 1966 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, four, a poll will be taken in the Lounge Room, Fort St. George, Madras-9, between 9 a.m. and 1 p.m., on Monday, the 8th August 1966.

### (2) BUSINESS OF THE HOUSE

MR. SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee which met to-day has decided the following programme of business for the present sitting of the Assembly :— 10-00 a.m.

| Date. | | Business. |
|---|---|---|
| August 1966. | | |
| Tuesday, the 2nd .. | Forenoon .. | (1) Presentation of the First Supplementary Statement of Expenditure for 1966-67. |
| | | (2) Discussion on the Madras State Electricity Board Budget for 1966-67. |
| | Afternoon 3 to 5-30 p.m. | Discussion on the Madras State Electiricity Board Budget for 1966-67. |
| Wednesday, the 3rd .. Thursday, the 4th .. Friday, the 5th .. | | Discussion on the motion expressing want of confidence in the Council of Ministers. |
| Saturday, the 6th .. | | (1) Discussion on the First Supplementary Statement of Expenditure for 1966-67 and Voting on Demands for Further Grants for 1966-67. |
| | | (2) Discussion on the Madras State Electricity Board Budget for 1966-67—Last day. |

| Date. | | Business. |
|---|---|---|
| August 1966. | | |
| Sunday, the 7th | .. | Holiday. |
| Monday, the 8th<br>Tuesday, the 9th | ..<br>.. | Official Business. |

The Assembly will, as usual, meet daily from 8-30 a.m. to 1-30 p.m.

(3) THE MADRAS (TRANSFERRED TERRITORY) LUXURY TAX ON TOBACCO (VALIDATION) BILL, 1966.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco (Validation) Bill, 1966.

### VII.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS (TRANSFERRED TERRITORY) LUXURY TAX ON TOBACCO (VALIDATION) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco (Validation) Bill, 1966.

MR. SPEAKER: The question is—

'That leave be granted for the introduction of the Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco (Validation) Bill, 1966.

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

### VI.—ANNOUNCEMENT—*cont.*

(4) THE MADRAS URBAN LAND TAX BILL, 1966.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Urban Land Tax Bill, 1966.

### VII.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS URBAN LAND TAX BILL, 1966.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Urban Land Tax Bill, 1966.

MR. SPEAKER: The question is—

'That leave be granted for the introduction of the Madras Urban Land Tax Bill, 1966.'



The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

### VI.—ANNOUNCEMENTS—*cont.*

(5) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER-CESS (AMENDMENT) BILL, 1966.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966.

### VII.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER-CESS (AMENDMENT) BILL, 1966.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966.

MR. SPEAKER: The question is—

'That leave be granted for the introduction of the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

### VIII.—PRESENTATION OF REPORT.—REPORT OF THE COMMITTEE ON RULES.

SRI K. PARTHASARATHY: Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Rules.

MR. SPEAKER: Now the Hon. Chief Minister will present the First Supplementary Statement of Expenditure for 1966–67.

### IX.—POINT OF ORDER *RE.* PRECEDENCE FOR NO-CONFIDENCE MOTION.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்னையை கிளப்பினேன், இது சம்பந்தமாக. எலக்ட்ரிஸிட்டி போர்டு பட்ஜெட் இந்த சபையில் வோட் எடுக்க வேண்டிய விஷயமல்ல. இன்றும், 6-ம் தேதியும் அதைப் பற்றி விவாதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு, துணை மான்யக் கோரிக்கையின் மீதுள்ள விவாதம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதித்து முடிந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே,

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [2nd August 1966

நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக்கொண்ட பின்னுல்தான் துணை மான்யக் கோரிக்கை பற்றிய விவாதம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னையை நான் வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில், துணை மான்யக் கோரிக்கை விவாதத்திற்காக நாள் ஒதுக்கியது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை யொட்டி அல்ல. பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் விவாதிக்கப்பட்டு தேதி குறிப்பிடப்பட்டது. எல்க்ட்ரிஸிட்டி பட்ஜெட் பற்றி விவாதிப்பதற்கு நாட்கள் போதாது என்று சொன்னதின் காரணமாக இன்றும் அதோடு 6-ம் தேதியும் விவாதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. நானே கூட சொன்னேன், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை 5-ம் தேதியே எடுத்துக்கொள்ளலாம் என்று. ஆகவே, அதற்கும் மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் நாளைக்கு அதாவது மூன்றும் தேதியே எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு இந்த விவாதத்தை சட்டசபை நடைபெறுகிற பத்து நாட்களுக்குள் என்றைக்கு வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளலாம். பத்தாவது நாளோ அல்லது ஒன்பதாவது நாளோ எடுத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கமும் சொல்லி, பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியும் முடிவு செய்தால் அவ்விதமே எடுத்துக்கொள்ளலாம். அதிலும் எந்தவித தவறும் இல்லை. ஆனுல் ஒன்று, நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக்கொள்ளும்வரை சட்டசபைக் கூட்டம் நடைபெறவே கூடாது, அதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் நடைபெறக் கூடாது என்று சொல்வது முறையல்ல என்பதைத்தான் நான் நேற்றே கூறினேன்.

**Mr. SPEAKER** : That is what I also feel. Whatever that might be, the proposal regarding the admission of a motion should not bar any other business including the presentation of the Supplementary Statement of Expenditure. Therefore, that question does not arise.

Now the Hon. Chief Minister will present the Supplementary Statement of Expenditure for 1966–67.

## X.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1966–67—PRESENTATION.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகளை சபையின் முன் சமர்ப்பிக்கிறேன். பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகளின் மொத்தம் 20 கோடியே 72 லட்சம் ரூபாய் ஆகும். அதில் 3 கோடியே 46 லட்சம் ரூபாய் ரெவின்யூக் கணக்கிலும், எஞ்சிய 17 கோடியே 26 லட்சம் ரூபாய் மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.



2nd August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

இப்போது கோரப்படும் மானியக் கோரிக்கையில் வட்டிக்காக ரெவின்யூக் கணக்கில் 84 லட்சம் ரூபாயும், கடனைத் திருப்பித் தருவதற்கான 13 கோடி ரூபாயும், தானே சரிக்கட்டிக்கொள்ளும் செலவினங்களைக் குறிக்கின்றன. கடந்த எனது வரவு-செலவுத் திட்ட உரையில், உணவுத் தானியங்களைப் பெருமளவில் கொள்முதல் செய்து வருவதற்காக அரசாங்கம் வாணிக முறையிலான கடன் உதவிபெறும் என்று குறிப்பிட்டிருந்தேன். அதற்கேற்ப, கொள்முதல் செய்வதற்காக இந்திய ஸ்டேட் பாங்கியிலிருந்து கடன் பெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இது வரையில் பெற்ற 13 கோடி ரூபாய் கடனை, கொள்முதல் செய்த தானியங்கள் விற்பனையாவதற்கேற்ப திருப்பிக்கொடுக்க வேண்டி இருப்பதால், "பொதுக் கடன்—திருப்பிக் கொடுத்தல்" என்கிற தலைப்பின்கீழ் இத் தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக நிதி வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வப்பொழுதுள்ள உணவுத் தானிய இருப்பு நிலையைப் பொறுத்து, இந்தத் தொகை கொடுத்துத் தீர்க்கப்படும். அவ்வாறு கொடுக்கப்பட்ட கடன் தொகையும் வட்டித் தொகையும் உணவுத் தானியங்களின் விற்பனையிலிருந்து முழுவதுமாகப் பெறப்படும்.

ரெவின்யூக் கணக்கில் வகை செய்யப்பட்டுள்ள தொகையில் பெரும்பகுதி, கடந்த மார்ச் மாதத்தில் நிதி ஒதுக்க மசோதா விவாதத்தின்போது இந்த மன்றத்தில் கூறியதற்கேற்ப, அகவிலைப்படி விகிதங்கள் உயர்த்தப்பட்டிருப்பதைக் குறிக்கும். அந்த உயர்வின்படி, நமது அரசாங்கப் பணியாளர்களின் அகவிலைப்படி விகிதங்கள், மத்திய அரசாங்கப் பணியாளர்களின் விகிதங்களுக்கு சமமாக உள்ளன. மானிய உதவி பெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள், தல ஸ்தாபனப் பணியாளர்கள் ஆகியோருக்கும் உட்பட, இந்த அகவிலைப்படி விகிதங்களை வழங்குவதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதிப் பொறுப்பு ஒரு முழு ஆண்டில் 3 கோடியே 63 லட்சம் ரூபாய் ஆகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் இவற்றிற்கு ஏற்படும் செலவுகளுக்காக "71. பல்வகை" என்கிற தலைப்பின்கீழ் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1966-67-ம் ஆண்டுத் திருத்த மதிப்பீடுகளின் அடிப்படையில் பொருத்தமான மானியத் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரும்போது, இந்த மொத்த நிதி ஒதுக்கம் திருப்பித் தரப்படும். தற்போதைய துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ள இன்னொரு முக்கிய செலவினம், போலீஸ் கான்ஸ்டபிள்கள், தலைமை கான்ஸ்டபிள்கள் ஆகியோரின் சம்பள விகிதங்கள் உயர்த்தப்பட்டதன் விளைவாகத் தோன்றியதாகும். இதன் காரணமாக, ஒரு முழு ஆண்டில் ஏறக்குறைய 21 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

சமூகத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களின் நிலை குறித்து. அரசாங்கம் எப்பொழுதுமே தனி அக்கறை காட்டி வந்திருக்கிறது. கிராமப்புறங்களில் ஏழை மக்களுக்கு சாதி சமய வேறுபாடின்றி வீட்டு மனைகளை வகை செய்து தருவதற்கான

*[திரு. எம். பக்தவத்சலம்]* [2nd August 1966

விரிவான திட்டம் ஒன்று நான்காம் திட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் சேர்க்கப்பட்டுள்ளதை கனம் அங்கத்தினர்கள் அறிவர். நான்காவது திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றாலும், நடப்பு ஆண்டில் 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதன்மூலம் வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து வழங்கும் இத் திட்டத்தைத் தொடங்கி வைக்கலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. அகில இந்தியப் பணிகளுக்கும் மத்திய அரசாங்கப் பணிகளுக்கும் நடக்கும் தேர்வுகளை எழுத விரும்புகிற ஹரிஜன வகுப்பினர், மலைச்சாதி வகுப்பினர் ஆகியோருக்கென தேர்வுப் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டு இருப்பதை இந்த மன்றத்தினர் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இவ்வகுப்பு மக்கள் உயரிய பதவிகளில் போதிய அளவுக்குப் பங்கு பெற வேண்டுமெனும் நமது குறிக்கோள் இந்தத் திட்டத்தினால் நிறைவேறும் என்று நான் உறுதியுடன் நம்புகிறேன்.

வேளாண்மைத் திட்டங்களுக்கு—குறிப்பாக விரைந்து பலன் தரக்கூடிய திட்டங்களுக்கு—இப்பொழுது முதலிடம் கொடுக்கப்பட்டு வருவதை இந்த மன்றத்தினர் அனைவரும் நன்கு உணர்ந்திருப்பார்கள். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் முழு மூச்சுடன் முனைந்து பணியாற்றவேண்டிய இத்தருணத்தில், கிணறுகள் தோண்டும் திட்டங்களுக்காக நம்மால் இயன்ற வரையிலும் நிதி வசதி அளிக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. இந்தத் திட்டத்திற்கு 1961-62-ல் 56 லட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு இருந்தது. அது படிப்படியாக உயர்ந்து, 1966-67 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத் திட்டத்திற்காக ரெவின்யூ, கடன் கணக்குகளில் 302 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத் திட்டம் நிறைவேறி வருவதை ஆராய்ந்ததில், இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்வது உசிதமென அரசாங்கம் கருதியது. இதைவிடக் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய திட்டங்களுக்காகும் செலவினங்களை ஏற்ற வகையில் சரிக்கட்டுதல் செய்வதன் மூலம் இத் தொகை ஒதுக்கப்படும். உணவுப் பெருக்கத்திற்குப் பேருதவியாக இருக்கக்கூடிய இத்திட்டத்திற்காக, கூடுதல் நிதி உதவி பெறுவதற்கு இந்திய அரசாங்கத்துடனும் இடைவிடாமல் தொடர்பு வைத்து வருகிறோம். "அதிக விளைச்சல் தரும் பயிர்வகைத் திட்டத்தின்" பகுதியாக, விவசாயிகளுக்கு உர வகைகளும், பூச்சி கொல்லி மருந்துகளும் வாங்குவதற்கென குறுகிய கால கடன்கள் வழங்குவதற்கு இப்பொழுது கோரப்படும் 50 லட்ச ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கத்தையும் இம் மன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

தென்மேற்குப் பருவ மழை, காலம் தாழ்ந்து பெய்ய ஆரம்பித்து, ஒரு சமயத்தில் நமக்கு குறுவைப் பயிர்களின் விளைச்சல் வாய்ப்புகளைப்பற்றி பெரிதும் கவலையைத் தந்தது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவர். குறுவைப் பயிர் சாகுபடிப் பரப்பு, வழக்கமான பரப்பளவைவிடப் பெரிதும் குறைந்து விடாதென்று



2nd August 1966] *[திரு. எம். பக்தவத்சலம்]*

அண்மையில் மதிப்பிட்டுள்ளபடி தெரியவருகிறது. குறுவைப் பயிர்கள் விளைவிக்கும் விவசாயிகளுக்கு விசேஷ ஊக்கமளிக்கும் வகையில், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் காவிரி டெல்டாப் பகுதியில் அறுவடை ஆகிற குறுவை நெல் கொள்முதல் விலையில் ஒவ்வொரு குவிண்டால் நெல்லுக்கும் மூன்று ரூபாய் போனஸ் கொடுக்க உத்தேசிக்கப்படுகிறது. இந்த ஏற்பாட்டிற்கு அடையாள மானிய ஒதுக்கத்தின்மூலம், இம் மன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளது.

1967-ம் ஆண்டின் இறுதியில் சென்னையில் நடைபெறவிருக்கும் உலக நாடுகள் வர்த்தக தொழிற் பொருட்காட்சிக்குப் பற்பல வசதிகளைச் செய்து தருவதற்காகும் செலவுக்காக பல மானியங்களின்கீழ் நிதி வேண்டப்படுவதை கனம் அங்கத்தினர்கள் கவனித்திருக்கலாம். மாநில அரசாங்கம் இந்தப் பொருட்காட்சி சம்பந்தமான செலவுகளை ஏற்பதற்கென இந்திய அரசாங்கம் குறுகிய காலக் கடனாக 75 லட்சம் ரூபாய் உதவி அளித்திருக்கிறது. தற்போதைய துணை மதிப்பீடுகளில், இப் பொருட்காட்சியின் பொருட்டு அரசாங்கம் நேரடியாக நிறைவேற்றிவரும் வேலைகள் தவிர, மாநில வீட்டு வசதி போர்டும், சென்னை மாநகராட்சி மன்றமும் நிறைவேற்றவிருக்கிற வேலைகளுக்காகவும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1967-ம் ஆண்டு இறுதியில் நடைபெற வேண்டுமென்று இப்பொழுது நிச்சயிக்கப்பட்டுள்ள இப் பொருட்காட்சி, நமது மாநிலத் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாய் இருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற திட்டங்களைப் பொறுத்தவரையில், துணை மானிய விவர அறிக்கையில் கண்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகள் தவிர வேறு விளக்கம் எதுவும் தேவையில்லையெனக் கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## XI.—DISCUSSION ON THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1966-67—*cont.*

MR. SPEAKER: Let us now resume further discussion on the Annual Financial Statement for 1966-67 and the Supplementary Financial Statement for 1965-66 of the Madras State Electricity Board.

*திரு. க. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் மின்சார போர்டு பட்ஜெட் இந்தச் சபைக்கு வருவதற்கு முன்னால் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுவதும், அந்த பற்றாக்குறை ஏற்பட்டதற்கு நீர்த்தேக்கங்களில் நீர் இல்லாதது தான் காரணம் என்ற விளக்கத்தைச் சர்க்கார் கொடுப்பதுமான நிலை ஏற்பட்டு வருகிறது. ஆனால் இந்த ஆண்டு ஒரு உண்மையை மின்சாரத்துறை அமைச்சர் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதாவது, 'நீர் மின் விசைத் திட்டங்களைப்

[திரு. து. ப. அழகமுத்து] [2nd August 1966

பெருக்கிக்கொண்டு போவதில் பலன் இல்லை; அனல் மின் விசைத் திட்டத்தை அதிகமாக்க வேண்டும்; இதைப் பற்றித் திட்டமிடுகிறவர்கள் ஆலோசிக்கவேண்டும்; தவறாகத் திட்டமிட்டதன் விளைவாகத் தான் இப்படி பற்றாக்குறை ஏற்பட்டது' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒப்புக்கொண்ட அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களுக்கு நேரில் பாராட்டுக்களைத் தெரிவிக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் அவர் வேறு முக்கிய அலுவல் காரணமாக வெளிநாடு சென்றிருக்கிற காரணத்தினால் அதைத் தெரிவித்துக்கொள்ள முடியவில்லை.

இந்த ஆண்டு கனம் அமைச்சர் ராமையா அவர்கள் இந்த அறிக்கையைப் படித்திருக்கிறார்கள். அறிக்கையில் மின்சார இலாகா என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதைப் பற்றிக் கொடுத்துள்ள விளக்கத்தில் மூன்றாவது திட்டத்தில் திட்டமிட்டதற்கும், சாதனைகள் செய்ததற்குமான புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தச் செலவு மூன்றாவது திட்டத்தில் 100.19 கோடி ரூபாய் இருக்கவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருந்ததில், 120 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே போல 960 மெகா வாட். உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டமிட்டதற்கு அதிகமாகவே, 1,070 மெகாவாட் உற்பத்தி செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். உயர் அழுத்த லைன்கள் 11,000 கிலோ மீட்டர் அளவுக்கு நிறுவப்படவேண்டுமெனத் திட்டமிட்டிருந்ததற்கு பதிலாக 15,375 கிலோ மீட்டர் அளவுக்கு நிறுவியிருப்பதாகக் கொடுத்திருக்கிறார்கள். கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் 8,000 கிராமங்களுக்குக் கொடுப்பதாகத் திட்டமிட்டு 11,343 கிராமங்களுக்குக் கொடுத்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். அதைப் போலவே பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் ஒரு லட்சம் பம்ப்செட்டுகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று திட்டமிட்டு, 1,38,401 பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருப்பதாகக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சாதனைகள் பாராட்டப்படவேண்டியவைகளாகும். திட்டமிட்டதைவிட அதிகமாகச் செயலில் செய்திருக்கிறார்கள்—பாராட்டுகிறோம். ஆனால், இவையெல்லாம் வெளிச்சமான பகுதிகள். மின்சார இலாகா வெளிச்சம் கொடுக்கும் இலாகா. வெளிச்சமான பகுதிகளிலிருந்து கொடுத்துள்ள தகவல்கள் பாராட்டப்படக் கூடியதாக இருக்கின்றன. ஆனால், அதிலே இன்னொரு பகுதி இருக்கிறது—இருண்ட பகுதி. அதுதான் நிர்வாக சம்பந்தப்பட்ட பகுதியாகும். பொது மக்களிடமிருந்து அதிகக் கட்டணம் வசூலித்தும், கடன் தொகை வசூலித்தும், அதே சமயத்தில் பொது மக்கள் கொடுத்த வரிப் பணத்திலிருந்து சர்க்காரிடம் கடன் பெற்றும் இந்த இலாகா நடைபெறுகிறது. பொது மக்கள் வரிப்பணத்தைக்கொண்டு நடைபெறும் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதில் அனைவருக்கும் அக்கறை இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி நடைபெற்றிருக்கிறதா என்பதுதான் நம் முன் உள்ள பிரச்னை.



2nd August 1966] [திரு. து. ப. அழகமுத்து]

திட்டமிட்டுக் காரியம் செய்கிறோம் என்று கூறுகிறார்கள்; அவைகளாலும் பாராட்டப்படுகிறது என்று கூறுகிறார்கள். ஆனால், பெரிய திட்டங்களில் இவர்கள் திட்டமிட்டபடி நிறைவேற்றியிருக்கிறார்களா என்று பார்க்கும்போது, அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. குந்தா மூன்றாவது நிலையைப் பொறுத்த வரையில் ரூ. 23 கோடிக்குத் திட்டமிட்டார்கள்; ஆனால் முடிவு பெற்றது ரூ. 38 கோடி. கோதையாறு திட்டத்தை ரூ. 8 கோடிக்குத் திட்டமிட்டார்கள்; ஆனால் முடிவு பெற்றது ரூ. 12 கோடி. பாம்பிக்குளம் திட்டம் ரூ. 10 கோடிக்குத் திட்டமிடப்பட்டது; ஆனால் முடிவு பெற்றது ரூ. 20 கோடி. ஏன் இவ்வளவு அதிகமாகச் செலவு ஆயிற்று? திட்டமிடுவதில் நிபுணர்கள் என்று பாராட்டப்படுகிறவர்கள் திட்டமிட்டு, அதிகமாகச் செலவிடவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். ஓப்பன் டெண்டர் இல்லாமல் நாமினேஷன் முறையில் செய்வதால் தான் திட்டச் செலவுகள் அதிகமாக ஆகிவிட்டன என்று காரணம் கூறப்படுகிறது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

அறிந்தபடியாக, இந்த இலாகாவின் தேவைகளுக்காக பல யந்திர சாதனங்கள், கருவிகள் வாங்குகிறார்கள். இவைகள் திட்டமிட்டு வாங்கப்படுகின்றனவா என்று பார்க்கும்போது, அப்படி இல்லை--அதிகமாக வாங்கப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டை சென்ற தடவை எனது நண்பர் கனம் மாதவன் அவர்கள் கூறிய போது, தேவையானவைகள்தான் வாங்கப்பட்டன என்று கூறினார்கள். 1965-ம் ஆண்டில் ஆடிட்டில் எவ்வளவு அதிகமாக ஸ்டாக் வைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னிடத்தில் லிஸ்ட் இருக்கிறது. ரூ. 128 லட்சத்துக்கு ஒரு ஸ்டாக்கும், ரூ. 68 லட்சத்துக்கு ஒரு ஸ்டாக்கும் இருப்பதாகக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி தேவைக்கு அதிகமாகப் பொருள்கள் வாங்குவதற்கு என்ன காரணம் என்றால், வேண்டியவர்களுக்குச் சலுகை காட்ட இந்த முறை பயன்படுத்தப்படுகிறது என்று குறிப்பிடப்படுகிறது. அதோடு, வாங்கப்பட்ட பொருள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. ரூ. 1,000, ரூ. 500 பெறுமானமுள்ள மீட்டர்கள் கேட்பார் அற்று போட்டிருக்கிறார்கள். விக்கிரவாண்டி பகுதியில் போடப்பட்டுள்ள டிரான்ஸ்ஃபார்மரின் ஃபோட்டோவை நான் வைத்திருக்கிறேன். காட்டிலும் மேட்டிலும், வெய்யிலிலும் மழையிலும் பாதுகாப்பு இல்லாமல் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் வாங்கப்பட்ட பொருள்கள் பாதுகாப்பற்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில் வாங்கப்பட்ட பொருள்கள் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறதா என்றால், அதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பேசின் பிரிட்ஜில் காயில்கள் ஸ்டோர் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு காயில் விலை ரூ. 1,000 என்று கூறப்படுகிறது. காயில்கள் திருட்டுப்போகின்றன. திருட்டுப் போவதை தடுப்பதற்கு இந்த இலாகா நடவடிக்கை

*[திரு. து. ப. அழகமுத்து]* [2nd August 1966

எடுத்திருக்கிறதா என்றால் இல்லை. இப்படி திருட்டுப் போகிறது என்று புகார் யாராவது எழுதினால், இந்த இலாகாவில் இருப்பவர்கள்தான் அம்மாதிரி எழுதியிருப்பார்கள் என்று கருதிக்கொண்டு, இந்த இலாகாவின் சேர்மன் அவர்கள் ஒரு உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். யாராவது அனானிமஸ் பெட்டிஷன் எழுதினால், அவர்கள் மீது போலீஸ் இலாகாவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஒரு உத்தரவு அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் நிர்வாகம் இருக்கிறது. பேசின் பிரிட்ஜில் வருடம் ஒன்றுக்கு ரூ. 2 லட்சம் பொறுமான சொத்துக்கள் திருட்டுப்போயிருக்கின்றன. அதற்கு அங்கே இருக்கிற அதிகாரிகள் உடந்தையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அதே சமயத்தில் அங்கே ஒரு வாச்மேன் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இண்டியன் பீனல் கோடு 409, 467 பிரிவு பிரகாரம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ரூபாய் 500 அபராதம் விதிக்கப்பட்டு, 6 மாதங்கள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவர். அந்த போலீஸ் இலாகா அதிகாரி இப்பொழுது அங்கே வாச்மேனாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படியிருக்கும்பொழுது பொழுது நிலைமை எப்படியிருக்கும் என்பதை அமைச்சர் அவை புரிந்து கொள்ளவேண்டும்.

அதுமாத்திரமல்ல. பேஸின் பிரிட்ஜில் ஒரு அதிகாரி—எஸ்.ஈ. இருக்கிறார். அவருடைய பெயர் என். வி. குமாரன். அவருக்கு கோல் சப்ளை செய்கின்ற கண்டிராக்டர் திரு. காம்சந்த் தாபர் ஒரு வீடு கட்டிக்கொடுக்கிறார். இலாகாவில் அவர் மீது நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது. அந்த நடவடிக்கை சம்பந்தமான ரகசியத் தகவல்களை கொடுப்பதற்காக வீடு கட்டிக்கொடுப்பதாகக் கூறப்படுகிறது. நடவடிக்கை என்னவென்றால், 10 ஆண்டுகளாக அவர் கோல் சப்ளை செய்துகொண்டு வருகிறார். அவர் கொடுக்கிற விலை ஒன்று, பெற்றுக் கொள்கிற விலை ஒன்று. அவர் அதிகமாகப் பெற்றுக்கொண்ட தொகை ரூ. 2 லட்சம். அதிகமாகப் பெற்றுக் கொண்ட பணத்தை திரும்பப் பெற போர்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பணத்தை போர்டு அவரிடம் வசூல் செய்ய முடியுமா, முடியாதா என்பது தெரியவில்லை. பெற முடியாது என்றுதான் நான் நம்புகிறேன். ஏனென்றால் ஆடிட் ரிப்போர்ட்டில் வேறு ஒரு குறிப்பை நான் சொல்ல விரும்புகிறேன்.

The figure of Rs. 1,35,00,000 shown under sundry debtors item in the balance-sheet includes an amount of Rs. 46,000 held **as recoverable from certain officers of the Pykara Electricity System towards cost of materials drawn from stores but not actually used on works.**

**வேலை செய்யும்** அதிகாரிகளால் ரூ. 46,000-க்கு பொருள்கள் **வாங்கப்பட்டது,** ஆனால் அவை பயன்படுத்தப்படவில்லை. **அம்மாதிரி பயன்படுத்தப்படாதபோது,** அந்தப் பொருள்களை



2nd August 1966] *[திரு. து. ப. அழகமுத்து]*

திருப்பிப் பெறுவதற்காக ஒரு அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிவில் சூட் போட்டார்கள். ரூ. 21,000 வசூல் செய்யும்படி டிகிரி ஆகிவிட்டது. அந்த டிகிரியை நிறைவேற்றுவதற்கு இவர்களால் முடியவில்லை. காரணம், அந்த அதிகாரி எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை என்று சொல்லப்படுகிறது. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், அந்த அதிகாரியினுடைய மகன் பைகாரா சிஸ்டத்தில் வேலை செய்கிறார். ஆனால் அதிகாரிகள் இவர் அகப்படவில்லை என்று கூறுகிறார்கள். அதை ஆடிட் ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலே நிர்வாகம் இருந்துகொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. ரூ. 21,000 அந்த அதிகாரி தரவேண்டும் என்றால், ஏன் அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கவில்லை? சிவில் நடவடிக்கை எடுத்ததற்குக் காரணம் என்ன? கிரிமினல் நடவடிக்கை எடுத்தால் வேறு பலர் அதில் அகப்பட்டுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை, அதனால்தான் விட்டுவிட்டார்கள்.

மற்றொன்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

Large effective balances under stores value balances without quantity balances and minus balances without quantity balances were noticed in the accounts of most of the systems. This requires to be examined and necessary adjustments carried out.

இப்படி பொருத்தம் இல்லாத முறையில் இருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையிலே நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நிர்வாகத்திலுள்ள வேலைகள் சரிவர நடக்கிறதா என்றால், அதுவும் இல்லை. எம்.பி.எஸ்.ஸி. மூலம் உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும் என்று சென்ற தடவை நண்பர் திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இல்லை, போர்டுதான் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். இந்த ஆண்டில் மார்ச்சு மாதத்திலிருந்து மே மாதம் வரை 1,000 கிளர்க்குகள் போஸ்டுக்கு அப்ளிகேஷன் கோரினார்கள். அப்ளிகேஷன் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாய் வசூலித்தார்கள். அந்த முறையில் ரூ. 40,000 வசூலித்தார்கள். 30,000 பேர்கள் ரூ. 5 கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்துகொண்டார்கள். இதன் மூலம் போர்டுக்குக் கிடைத்த லாபம் ரூ. 2 லட்சம். ஆயிரம் பேர்களுக்கு உத்தியோகம் கொடுத்தார்களா என்றால், இல்லை. அப்படியே அதை பெண்டிங்காக வைத்திருக்கிறார்கள். அதே சமயத்தில் 100 பேர்களுக்கு டெம்பாரி அப்பாயிண்டுமெண்டு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சொந்தக்காரர்களுக்கு அப்படி டெம்பாரி அப்பாயிண்டுமெண்டு கொடுத்திருக்கிறார்கள். பெயர்களை வேண்டுமானாலும் சொல்ல முடியும். நேரம் இல்லாத காரணத்தினால் கூறாமல் விடுகிறேன். இப்படிப்பட்ட நிலையிலே தங்களுக்கு வேண்டியவர்களுக்கு **சலுகை** கொடுக்கப்படுகின்றன. ஆனந்தவிகடன் பத்திரிகையில் இதனுடைய தலைவரைப்பற்றி புகழ்ந்து எழுதிய திரு. மணியத்தி

[திரு. து. ப. அழகமுத்து] [2nd August 1966

னுடைய மாமனார் திரு. குளத்து என்பவர் சிப்-அக்கௌண்டென்டாக வேலை பார்க்கிறார். அவருக்கு இதற்காக கோதையாறு சிஸ்டத்திலிருந்து சென்னைக்கு மாற்றம் கொடுக்கப்பட்டது. இதே போன்று பல காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

நிர்வாகத்தில் பணம் வசூல் செய்வதில் ஒழுங்கான முறையில் செய்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. வேண்டியவர்களுக்கு சலுகை காட்டப்படுகிறது. அதற்கு நான் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். கனம் முதல் அமைச்சர் மருமகன் திரு. வரதப்பனுக்குச் சொந்தமான சர்வீஸ் மின்சாரக் கட்டணம் 1962 மே மாதத்திலிருந்து 1965 டிசம்பர் வரையில் செலுத்தப்படவில்லை. அதிகாரிகள் போய் பல முறை கேட்டும் பயன் இல்லை. கடைசியில் தைரியமாக சூபர்வைஸர் போய் பணத்தைக் கேட்டபிறகு 1966-ம் ஆண்டு பிப்ரவரி 25-ம் தேதி பணத்தைச் செலுத்தினார். செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்றால், ரூ. 1,450.50. வேண்டியவர்கள் என்பதற்காக, அதிகாரத்தில் இருப்பவர்கள் என்பதற்காக இப்படி விட்டுவைத்தார்கள். அதே சமயத்தில் ஒரு விவசாயி அல்லது தனிப்பட்ட ஒருவர் இப்படி கட்டணம் கட்டாமல் பாக்கி வைத்திருந்தால் கனெக்ஷனை எடுத்துவிட்டிருப்பார்கள். இப்படிப்பட்ட நிலையிலே இந்த ஸ்தாபனத்தினுடைய நிர்வாகம் இருந்து கொண்டிருக்கிறது.

இன்றையதினம் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் ஏற்படுத்தி விலைகளைக் கட்டுப்படுத்தப்போகிறோம் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மிகப் பெருமையாக சொல்லுகிறார்கள். கோவாபரேடிவ் சிஸ்டத்தில் எலெக்ட்ரிஸிட்டி போர்டில் ஒரு கான்டீன் நடந்துகொண்டிருந்தது. அது 1962-ல் மூடப்பட்டு விட்டது. ஏன் மூடப்பட்டுவிட்டது என்பதுபற்றி ஏதேனும் விசாரணை நடந்ததா என்றால் இல்லை. அதன் பிறகு தனியார்களிடம் அந்தக் கான்டீன் இப்பொழுது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கான்டீன் வைப்பதற்கு டெண்டர்கள் கோரப்பட்டது. திரு. ஷியாம் பிரசாத் ரூ. 5,000-க்கும், திரு. முனுசுவாமி ரூ. 5,000-க்கும் டெண்டர் கோரினார்கள். அப்படியிருக்கும்பொழுது திரு. குப்தா என்பவருக்கு ரூ. 4,000-க்கு அந்தக் கான்டீன் நடத்துவதற்கு டெண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் கனம் முதல் அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்தது தான் என்று கூறப்படுகிறது. அதில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்பது தெரியாது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எனக்கு இதைப்பற்றி இது வரையில் ஒன்றும் தெரியாது. இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதுதான் காதில் விழுகிறது. இதில் எவ்வளவு ஆதாரம் இருக்கிறது, இதில் என்னுடைய தலையீடு இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ளாமல் பேசுவது பொறுப்போடு பேசுவது அல்ல.



2nd August 1966]

**திரு. து. ப. அழகமுத்து:** இல்லையென்றால் நான் வருந்துகிறேன். நான் தெரிந்துகொண்டதைச் சொல்லுகிறேன், குறைந்த டெண்டருக்குத்தான் கொடுக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** ஹையஸ்ட் டெண்டருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பதில்லை. சம்பந்தப்பட்ட நபர் எப்படி, வேலை சரியாக நடக்குமா என்று பார்த்துக் கொடுக்க வேண்டும். அவர் திறமையுள்ளவரா என்றும் பார்க்க வேண்டும்.

**திரு. து. ப. அழகமுத்து:** நான் தெரிந்துகொண்டதைச் சொல்லுகிறேன். தொழிலாளிகள் அந்த கான்டீனில் விற்கப்படுகின்ற அத்தனையும் மோசமானவை, தரம் குறைந்தவை என்று கூறுகிறார்கள்.

**கனம் சபாநாயகர்:** நன்றாக விசாரணை செய்யாமல் நடவடிக்கை எடுக்க முடியுமா? சட்டசபை அங்கத்தினர் சொன்னால் மட்டும் போதுமா?

**திரு. து. ப. அழகமுத்து:** பெரும்பாலான தொழிலாளிகள் சொல்லும்போது அதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்?

**கனம் சபாநாயகர்:** தொழிலாளிகள் சொல்லுகிறார்கள் என்பதற்காக மட்டும் ஏற்றுக் கொண்டு விடமுடியுமா? சரி, டைம் ஆகிறது.

**திரு. து. ப. அழகமுத்து:** இப்படி அந்த நிர்வாகம் நடக்கிறது. விவசாயிகளுக்கு பம்புசெட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதில் அதிக அக்கறை காட்டுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் ஏற்கெனவே சாங்ஷன் ஆனவற்றைவிட்டு, சமீபத்தில் எடுத்தவைகளுக்குக் கொடுக்கிறார்கள். காரணம் என்ன? முசிறி தாலூகாவில் விவசாயிகள் கான்பரன்சை கலெக்டர் நடத்தியபோது, மின்சார போர்டு தலைவரும் வந்திருந்தார்கள். இந்த மாதம் வந்துவிடும், அடுத்த மாதம் வந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. விவசாயிகள் மின்சாரக் கனெக்ஷன் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அதிகாரிகளிடம் கேட்டால் சரியாகப் பதில் இல்லை. இந்த முறையில்தான் மின்சார போர்டு இயங்குகிறது. மொத்தத்தில் புள்ளி விவரங்களைப் பார்த்தால் பெருமைப்படக்கூடியதுபோல் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் நன்றாக நடக்கவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு, என்உரையை முடிக்கிறேன்.

*** திரு. ஜெ. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் தமிழ்நாடு மின்சார போர்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஜே. மாதா கவுடர்] [2nd August 1966

பாரத நாட்டிலே தமிழ்நாடு மின்சாரத்திலே மிக மிக முன்னேற்றம் கண்டிருக்கிறது. நல்ல முறையிலே கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு நல்ல முறையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்ட சபையிலே அதைப் போற்றவில்லை என்றாலும், வேறு மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள் நம்மைப் பாராட்டிப் பெருமைப்படுகிறார்கள். புள்ளிவிவரங்களையும், இடங்களையும், என்னென்ன திட்டங்கள் என்றும் பார்த்து நன்றாகப் போற்றியிருக்கிறார்கள். சிறு சிறு குறைகள் சொல்வது சுலபம். சென்ற ஆண்டு வரை இந்த மின்சார இலாகாவைப் பொறுத்த வரையில், நான் அறிந்த வரையில், எதிர்க்கட்சிகளெல்லாம் கூட பாராட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களே குறைகள் சொல்லுகிறார்கள் என்றால், நெருங்கிவருகின்ற தேர்தலை வைத்துக்கொண்டு இலாகாக்களைக் குறை சொல்லுவது என்கிற நோக்கத்தோடு பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

மின்சார போர்டிலே தேவைக்கு அதிகமான கருவிகளை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று குற்றம் சொன்னால் அதை யாராலும் ஒப்புக் கொள்ள முடியாது. அங்கத்தினர்கள் குறைகூறும்போதும்கூட என்ன சொல்லுகிறார்கள். எங்கள் ஊருக்கு மின்சாரம் வரவில்லை என்றால்; கம்பம் இல்லை, கம்பி இல்லை என்று சொல்லுகிறார்களே என்றுதான் குறைபடுகிறார்கள். ஸ்டாக் இருந்தால் போடாமல் இருப்பார்களா? ஆகவே, தேவைக்கு அதிகமான சாமான்களை வைத்திருப்பதாகச் சொல்வது பொருந்தாத குற்றச்சாட்டு.

குந்தா ப்ராஜெக்ட் சம்பந்தப்பட்டவரை, பல கோடி ரூபாயில் கனடா கூட்டுறவோடு செய்யப்பட்டது. அதிகமாகிவிட்டது என்று சொன்னால் என்ன காரணம்? திட்டத்திலே குறையில்லை. பொருள்கள் விலை ஏறியிருக்கிறது. கூலி ஏறிவிட்டது. நாமே கூலியாட்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆகவே, இப்படிப் பலதரப்பட்ட முறைகளிலே அதிகமாகியிருக்கிறது. அவர்கள் திட்டம் போட்ட அளவிலே தான் முடித்திருக்கிறார்கள். அந்த வேலையை எத்தனை ஆண்டுகளில் செய்ய வேண்டுமோ அதற்கும் முன்னதாகவே செய்து முடித்திருக்கிறார்கள். அப்படிச் செய்தவர்களை, உற்சாகத்துடன் உழைத்தவர்களைப் பாராட்டாமல் சிறு சிறு தவறுகளைச் சொல்லப் புகுவது சரியாகாது. அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மாற்றல் கொடுத்துவிட்டார்கள் என்றார்கள். ஆனந்தவிகடனில் ஏதோ பாராட்டி எழுதிவிட்டதற்காக மாற்றல் கொடுத்தார்கள் என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. கோதையாறில் இருப்பவருக்கு சென்னைக்கு மாற்றல் கொடுத்திருக்கிறார்கள் என்றால், கோதையாறில் இருப்பவர் வேண்டும் என்று கேட்டு, இலாகா நியாயம் என்று செய்தால் அதில் என்ன குற்றம்? அவர்களுக்குத் தொந்தரவு இல்லாமல், பக்கத்திலேயே இருக்கட்டும் என்று செய்தால் என்ன? இப்படிப்பட்ட சிறு சிறு காரியங்களைச் சொல்லுவது சரியல்ல.



2nd August 1966] [திரு. ஜே. மாதா கவுடர்]

இந்த ஆண்டு மின்சார போர்டின் சாதனை மிகச் சிறந்தது. மழை இல்லாமல், குந்தா போன்ற பெரிய திட்டங்களிலும், தண்ணீர் வரவு இருக்கக்கூடிய நெருக்கடியான நிலையில் கட்டுப்பாட்டோடு மின்சாரத்தை விநியோகித்து, சமாளித்திருக்கிறார்கள் என்றால் அது நாம் பெருமைப்படக் கூடிய காரியமாகும். குறிப்பிட்ட தொழில்களுக்குக் குறைந்து, யாருக்கும் இல்லாமல் போகாமல் 20, 25 சதவிகிதம் குறைத்துக் கொடுத்திருக்கிறோம் என்றால், இந்த மாதம், அடுத்த மாதம் சரிசெய்து விடுவோம் என்று நம்பிக்கையோடு செய்திருக்கிறோம். இந்தப் பணியை நல்ல முறையில் கடந்த ஆறுமாத காலமாகச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு வெட்டு இல்லை என்று ஆகிவிட்டது. அவர்களுடைய பணியை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்; குறை கூறுவதில் அர்த்தம் இல்லை.

இந்தக் குறிப்பிலே குன்னூர்-கல்லார் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன். ஆனால், நான் ஏற்கனவே இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிற St. Catharine Waterfall, கூக்கல்துறை ஆறு முதலிய இரண்டு திட்டங்களை எடுத்து, பரிசீலனை செய்தார்கள். ஆனால், அதைப் பற்றி இந்த ஆண்டு புள்ளிவிவரம் இல்லை. நான்காவது திட்டத்திலே இந்த இரண்டு திட்டங்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1961-வது ஆண்டிலேயே மஞ்சளாறு, புன்னைப்பள்ளம் திட்டம் பற்றி, பரிசீலனை செய்யப்படுவதாக அமைச்சர் வெங்கட்டராமன் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது குறிப்பில் எதுவும் காணப்படவில்லை. அது எந்த நிலையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூனூரில் 1962-63-ம் வருஷத்திலே 2½ லட்சம் ரூபாய் செலவில் ஒரு ரெவின்யூ யூனிட் ஆபீஸ் கட்டவேண்டும் என்று பட்ஜெட்டிலே போட்டிருந்தும், வேலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அப்படி ரெவின்யூ யூனிட் கட்டவேண்டும் என்று சொல்லும்போது, அந்த ஆபீசை குந்தாவிற்கு மாற்றி விடலாமா என்கிற யோசனை இருப்பதாகத் தெரிகிறது. அப்படி யோசனை இருந்தால், அதைக் கைவிடவேண்டும். குந்தாவிற்குப் போகாமல் அந்த யூனிட் குன்னூரிலேயே இருப்பதுதான் நல்லது. 2½ லட்சத்தில் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்படவேண்டும். கட்டடம் கட்ட நெருக்கடி காரணமாக இப்பொழுது நிதி நிலை சரியாக இல்லாவிட்டாலும், யூனிட்டை யாவது மாற்றாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேயிலையைப் பற்றி ஒரு வார்த்தை. தேயிலை பாக்டரிக்கு மின்சாரம் வழங்குவது சம்பந்தமாக 1959-லேயே இந்த மன்றத்திலே நான் எடுத்துச் சொன்னேன். அதன் பேரில் ஒரு ஸ்டாண்டிங் ஆர்டர் கூட, தேயிலைக்கு மின்சாரத்தைக் குறைக்கக்

கூடாது என்று போட்டார்கள் என்று நினைக்கிறேன். தேயிலை அன்னியச் செலாவணி கொடுக்கும் பொருள். தேயிலை பறித்து நான்கு மணி நேரத்திலே பண்படுத்தப் படவேண்டும். இல்லாவிட்டால் அது கெட்டுவிடும்; அந்நிய நாட்டுக்கு அனுப்பக் கூடிய உயர் ரக தேயிலையாக இருக்காது. உள்நாட்டில் உபயோகிக்கக் கூடிய, சாதாரண மட்ட ரக தேயிலைதான் கிடைக்கும். நல்ல தரமான தேயிலையாகச் செய்ய முடியாது. ஆகவே, தேயிலை பாக்டரிக்கு மின்சார வெட்டு இருக்கக் கூடாது. அந்த முறையில் ஏற்பாடு செய்யப் படவேண்டும், அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1966-67-ம் ஆண்டுக்கான நிதி நிலை தமிழ்நாடு மின்சார போர்டின் 1965-66-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் நடைபெறுகிற இந்த விவாதத்தில் நான் சில வார்த்தைகளை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த நம்முடைய கனம் உணவு அமைச்சர் அவர்கள், மின்சாரத் துறையில் நம்முடைய மாநிலத்தின் நிலையைப் பற்றியும், மின்சார போர்டார் மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைப்பற்றியும், எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், எவ்வளவுதான் மெத்தச் சிரமப்பட்டு பிரகாசமான ஒரு சொற்பொழிவை இந்த மன்றத்திற்கு அளிக்கவேண்டும் என்று விரும்பினாலும், அவர்களது உரை முற்றிலும் இருள் சூழ்ந்ததாகத் தான் இருக்கிறது என்பதை நான் மிக வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார இலாக்காவினுடைய நல்ல சாதனைகள் என்று எவ்வளவுதான் நாம் கவர்ச்சிகரமாகச் சொன்னாலும், கடந்த இரண்டு மூன்று வருஷங்களாகத் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலைகள் மிகப் பயங்கரமான அளவுக்கு உருவெடுத்திருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களேகூட மறுக்க முடியவில்லை. ஆனித் திருமஞ்சனம் என்று நான் சொன்னதைப்போல, ஆடிப் பதினெட்டு, கார்த்திகை தீபம் போல, ஆண்டுதோறும் வந்து கொண்டிருந்த இந்த மின்சாரவெட்டு, இந்த ஆண்டைப்பொறுத்த வரையில், ஏறக்குறைய ஒன்பது மாத காலம் பெரிய அளவில் வந்துவிட்டதை நாம் பார்த்தோம். இதனால் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள், கடன் சுமையில் ஆழ்ந்திருக்கவும், நல்ல தொழில் உற்பத்தி நசிக்கவும் ஆன ஒரு பெரும் துயரமான நிலையை நாம் பார்த்தோம். இதற்கெல்லாம் அடிப்படையான காரணங்கள் என்ன என்று பார்க்கும்போது, பருவ மழை தவறியதைக் குறிப்பிட்டு அடிக்கடி வானத்தை மந்திரிமார்கள் காட்டுகிறார்கள். உண்மையிலேயே வசனமும் பருவ மழை தவறும் நிலையும் இந்த நெருக்கடியைத்தான் நமக்கு ஆண்டுதோறும் தெளிவாக விளக்குகிறதே தவிர, பல ஆண்டுக் காலமாக இருந்து வருகிற ஒரு காரியம்தான் இது. நம்முடைய மாநிலத்தைப்



பொறுத்த வரையில், நீர் மின்சாரத்தை நம்பி இருக்கக் கூடாது. அனல் மின்சார உற்பத்தியையும் அதிகமாக்க வேண்டும் என்று வற்புறுத்தல் பல ஆண்டுக் காலமாக இருந்துவந்தாலும், அதற்குச் சரியாக, முறையாகத் திட்டமிடாத காரணத்தால்தான் இந்த அவதிக்கு ஆளாகும்படியான பெரு நிலைமைகள் ஏற்பட்டன.

இன்றைக்குக் கூட, நம்மிடத்தில் அளிக்கப்பட்ட இந்தப் பெரும் அறிக்கையில் பல்வேறு விவரங்கள் இருக்கின்றன என்றாலும், இன்றைக்கு இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், மத்திய சர்க்கார் மிகவும் ஓர வஞ்சனையாக நடந்துகொண்டிருக்கிறது, இந்த மாநிலத்தினுடைய மின்சார வசதியைப் பெருக்குவதில் இந்த அரசாங்கமும் பெருமளவில் தவறிவிட்டது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அழகழகான காரியங்களாகப் பல காரியங்கள்பற்றி சொல்லியிருக்கிறார்கள். பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இருக்கிறது. ஆனால், ஒன்றன்பின் ஒன்றாக இன்றைக்குள்ள நிலைமையைப் பார்க்கும்போது, ஷராவதி நதி மின்சாரமும், நெய்வேலி மின்சாரமும் மட்டும் இல்லாமல் இருந்திருக்குமானால், என்ன நிலைமை என்பதை நாம் பார்க்கவேண்டும். ஷராவதியின் கருணையும் நெய்வேலியின் தயவும் இல்லாமல் இருக்குமானால் இந்த மாநிலத்தின் பிரச்னை இன்னும் ஒரு பயங்கரமான, பூதாகாரமான உருவை எடுத்திருக்கும் என்பதை அமைச்சர் அவர்களே ஒத்துக் கொள்ளுவார்கள். நம்முடைய நீர்நிலைகள் வறண்டுவிட்டன. ஆனால் ஒரே சீராக அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்ன நேரத்தில் இன்னும் நிறைவேறாத காரியங்களாகத்தான் இருக்கின்றன. இன்றைக்குக் கூட அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தில் எதைச் சொல்லுகிறார்கள்? கல்பாக்கம் அணு மின் நிலையமும், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டமும் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே தவிர, ஒன்றையும் தெளிவாகச் சொல்லவில்லை. இப்பொழுது நாம் 16 லட்சம் யூனிட்தான் அனல் மின்சாரம் உற்பத்தி செய்கிறோமே தவிர, இன்னும் இந்தத் திட்டங்களெல்லாம் உருவெடுக்க இரண்டு, மூன்று ஆண்டுகள் நிச்சயமாக ஆகும் என்பதுதான் தெரிகிறது. அழகான பாதையில் வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ளுவேன். கல்பாக்கம் மின் நிலையத்திற்குப் பூர்வாங்க வேலை நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். என்ன பூர்வாங்க வேலை நடந்திருக்கிறது? சில ஆரம்ப வேலை நடக்கிறது. ஆபீசில் நான்கு இன்ஜினியர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சந்தேகத்திற்குரியதாகத்தான் நிலைமைகள் உருவெடுத்து வருகின்றன. மத்திய அமைச்சர் திரு. பக்ருதீன் அகமத் அவர்கள் வந்த நேரத்தில், இதற்கு இன்னும் ஓராண்டுக் காலம் ஆனாலும் ஆகலாம் என்று சொன்னார்கள். சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் என்ன நிலையை அடைந்துகொண்டிருக்கிறதோ, அதே தான் கல்பாக்கம் மின்நிலையத்திற்கும் இருக்கிறதே தவிர, அதற்குப் பூர்வாங்க வேலை நடந்துகொண்டிருக்கிறது என்பதற்

[திரு. கே. ஏ. மதியழகன்] [2nd August 1966

கான அறிகுறிகள் தென்படவில்லை. அந்தத் திட்டம் எப்படியும் வந்துவிடும் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதத்தையும் அமைச்சர் அவர்கள் அளிக்கவில்லை.

அது மாதிரி, எண்ணூர் அனல் மின்சார நிலையமும் நிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கே என்ன நடைபெறுகிறது? நில ஆர்ஜித வேலையும், ஸிவில் ஒர்க்ஸும் நடைபெறுகிறதே தவிர வேறொன்றுமில்லை. செக்கோஸ்லோவேகியாவிலிருந்து இயந்திரங்கள் வந்து, இன்னும் பாரத் எலெக்ட்ரிகல்ஸிலிருந்து இயந்திரங்கள் வந்து, முடிவுறுவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும் என்ற நிலை இருக்கிறதே தவிர, எண்ணூர் அனல் மின் நிலையம் சமீபத்தில் வரும் என்ற நிலை இல்லை.

தூத்துக்குடியைப் பொறுத்த வரையில், இன்னும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. நான்கு ஆண்டுகளாக நாம் கேட்ட நேரத்தில் எல்லாம் மிக அழகாகச் சொல்லி வருகிறார்கள். இங்கிருக்கும் ஏட்டிலும் மிக அழகாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். அங்கீகாரம் ஆகிவிட்டது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்களே தவிர, எந்தக் கட்டத்திலே இருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் கொஞ்சங்கூட இல்லை. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே மத்திய சர்க்கார் அனுமதித்து விட்டது என்று நம்முடைய அமைச்சர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு அதனுடைய நிலை என்ன? 250 மெகாவாட்டா? 100 மெகாவாட்டா? என்று நிர்ணயம் செய்யப்படாத நிலை இருக்கிறது. கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் "I have to battle with them" என்று பரிதாபகரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கீகாரம் தந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் முழுவதும் அங்கீகாரம் வந்துவிட்டது என்று சொல்லவில்லை. கல்பாக்கத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, எண்ணூரை எடுத்துக்கொண்டாலும் சரி, தூத்துக்குடியை எடுத்துக்கொண்டாலும் சரி, ஏன் 250 மெகாவாட் தான் என்று இந்த அரசாங்கமே உறுதியாக இருக்கக்கூடாது? சேலத்திலே பெரிய இரும்பு உருக்குத் தொழிற்சாலை வரவேண்டும் என்று முயற்சிகளை ஆரம்பித்து, சாதாரண இரும்புத் தொழிற்சாலை வந்தால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்ட மாதிரி, இதிலும் அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் என்ன? ஏன் வற்புறுத்தியிருக்கக் கூடாது? இந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சிகள் இல்லை. அனல் மின்சாரம் ஒன்றை நம்பித்தான் இங்கே தொழிலும் விவசாயமும் நடைபெற வேண்டியிருக்கிறது என்று காரணங்களை விளக்கிச் சொல்லி, ஏன் இந்த அரசாங்கமே கூட, 250 மெகாவாட்டா, 100 மெகாவாட்டா என்று நிச்சயமாகச் சொல்லியிருக்கக் கூடாது? ஒரு பக்கத்தில் மிக அலங்காரமாக சேதுசமுத்திரத் திட்டம் என்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் விரைவாகத் தூத்துக்குடித் துறைமுகம் வளருகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், அதற்கும் கொடுத்த பாடில்லை. இதற்கெல்லாம் சரியான பதிலை, சமாதானத்தைக் கூற



2nd August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

வேண்டும். அழகான பிரசங்கம் அமைச்சர் செய்திருந்தாலும் அது வெறும் கனவாகத்தான் இருக்கிறது. கல்பாக்கம் திட்டத்திற்கு இன்னும் ஓராண்டுக் காலம் ஆகும், உதவி செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மத்திய மந்திரியைக் கேட்டால், தாமதம் ஆகுமே என்கிறார். 1967-இலாவது கிடைக்குமா என்று தெரியவில்லை. எண்ணூர் திட்டத்தைக் கேட்டால், அதுவும் இதே நிலைதான். தூத்துக்குடித் திட்டமும் அதே நிலைதான். அதே மாதிரி, ஹொகேனக்கல் திட்டம் பற்றி மைசூர் மாநிலத்தோடு நாங்கள் 'நெகோஷியேட்' செய்கிறோம் என்கிறார்கள். ஆனால், சில மாதங்களுக்கு முன், மைசூர் மாநில சட்டசபையில் இந்த அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டினார்கள். "நாங்கள் ஒரு திட்டம் வைத்திருக்கிறோம், சென்னை மாநில அரசாங்கம் ஒத்துழைக்காத காரணத்தால் இந்தத் திட்டம் நிறைவேறவில்லை" என்று சகல கட்சிக்காரர்களும் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு என்ன சமாதானம் மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்? ஹொகேனக்கல் திட்டம்பற்றி மைசூர் மாநில சட்டசபையில் சொன்ன குற்றச்சாட்டுகளை நம்முடைய ராஜ்ய அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களா? அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இவர்கள் என்ன சமாதானம் சொன்னார்கள்?

அதே மாதிரிதான் ஆந்திர மாநிலச் சட்டசபையில் அங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நெய்வேலித் திட்டம் நமக்குச் சொந்தம் என்று நாம் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், பக்கத்தில் இருக்கும் ஆந்திர மாநிலத்தவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "நெய்வேலியிலிருந்து நமக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டும்; கொடுக்காவிட்டால், நெல்லூர் அரிசியை சென்னைக்குக் கொடுக்காமல் நிறுத்திவிடுங்கள்" என்று திரு. கோபாலகிருஷ்ணய்யா என்பவர் சில நாட்களுக்கு முன்பு ஆந்திர சட்டசபையில் திரு. பிரும்மானந்தரெட்டி அவர்களைப் பார்த்துச் சொன்னார்கள். திரு. பிரும்மானந்த ரெட்டி அவர்களும், "நானும் அரிசியை நிறுத்துகிற அந்தப் பாணியில்தான் சென்னைக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று சொன்னார்கள். நெய்வேலியைக் கண்டு மட்டும் பெருமைப்பட்டுவிட முடியுமா? ஹொகேனக்கல் திட்டத்தைக் குறித்து மைசூர் மாநிலத்தவர்கள் நம்மீது குறை சொல்லும் அளவிற்குக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, அனல் மின்சார உற்பத்திக் காரியங்கள் தடைபட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளுகின்றேன். ஆண்டுதோறும் அழகாகச் சொல்லப்படுகிறது. ஆனால், எங்கே முன்னேறியிருக்கிறோம்? தூத்துக்குடித் திட்டம், எண்ணூர்த் திட்டம், ஹொகேனக்கல் திட்டம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? நெய்வேலியை மட்டும் வைத்துக்கொண்டு நாம் ஈடேற்றிவிட முடியுமா என்று பார்க்கும்போது மிகப் பயங்கரமான விளையாட்டுத்தனமான காரியத்திலே, ஏதோ பொழுதுபோக்கான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்குத்தான் நிச்சயமாக வரவேண்டியிருக்கிறது.

[திரு. கே. ஏ. மதியழகன்] 2nd August 1966]

நேற்றையதினம் தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கும் கனம் உறுப்பினர்கள் சொன்னார்கள். வடிமுனைக் குழாய்க் கிணறு களுக்கு மின்சார இணைப்பு கொடுக்க வேண்டியதைக் குறித்துப் பேசும்போது, தஞ்சை மாவட்டத்தில் தென்னிந்திய எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன், கும்பகோணம் எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன் போன்றவை வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக்கவில்லை, அரசாங்கம் அவைகளுக்குப் பணம் கொடுத்தும்கூட, மின்சாரத் தொடர்பு கொடுக்கவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். அதை எதிர்த்து, அந்தக் கார்ப்பரேஷனின் தலைவர் விளக்க அறிக்கை கொடுத்தார்கள். அதற்கு அரசாங்கத்தின் பதில் உண்டா? பதில் சொல்லும்போது என்ன சொல்லுகிறார்கள்? 792 வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு அவர்கள் மின்சார இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் என்ன குற்றம் சாட்டு கிறார்கள்? "நாங்கள் சரியாகக் கொடுத்துவிட்டோம். ஆனால், மின்சார போர்டார்தான் போடவில்லை" என்கிறார்கள். அதற்கு இவர்கள் என்ன பதில் அளிக்கிறார்கள்? கனம் அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையிலே 'லைசென்சுதாரர்கள் 792 வடிமுனைக் கிணறு களுக்கும், பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்கி யுள்ளனர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சார போர்டு எத்தனை கிணறுகளுக்கு, பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கி யுள்ளது? பொதுப்படையாக 'மொத்தம் 126 லட்சம் செலவு செய்து தஞ்சாவூர் மாவட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத் திலும், ஏனைய மாவட்டங்களிலும் ஏராளமான வடிமுனைக் கிணறு களுக்கும் ஏனைய கிணறுகளுக்கும் மின் இணைப்பு வசதியை அளித்தது', என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு என்ன பொருள்? அதற்கு என்ன அர்த்தம்? நாடே நெருக்கடி யான நிலைமையில் கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. வயல்வெளி எல்லாம் வெடித்துக் கிடக்கின்றன. நாட்டு மக்கள் ஒரு கவளம் சோற்றுக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் கோடிக் கணக்கான ரூபாயை மின்சார போர்டார் விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இனி வானத்தைப் பார்த்துப் பயன் இல்லை, கிணறுகளைத்தான் பார்க்கவேண்டும் என்பதாக அற்புதமான பிரசங்கத்தைத்தான் செய்கிறார்களே தவிர—இந்தக் கனவுகள் எப்படி நனவாகும்? பாலாறு பேசின் விதிமுறைகளைத் தளர்த்துவதற்குப் பரிசீலனை செய்யப்பட்டதா? ஆயிரக்கணக் கான மக்கள் இன்றைக்குப் பட்டினி கிடக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். பவர் கட் என்று வந்தவுடனே, எத்தனை தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள் என்பது நமக்குத் தெரியாதா? கோயம்புத்தூர் ஜில்லாவில் இருகூர் என்ற ஒரு கிராமத்தில் ஒரு தொழிலாளியின் மனைவி வேலையில்லாத கொடுமை யினால் உண்டான பட்டினியைச் சகிக்க முடியாது, தன் இரண்டு குழந்தைகளையும், தன்னையும் கொன்றுகொண்ட செய்தி நமக்குத் தெரியாதா? இதுபோல எத்தனை பட்டினித் தற்கொலைச் சாவுகள் பத்திரிகையில் வந்துகொண்டிருக்கின்றன. அப்பர் தாம்பிரபரணி



2nd August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

நீர் மின் திட்டம், அப்பர் மணிமுத்தாறு நீர் மின்திட்டம் ஆகியவை எல்லாம் இங்கே இன்பச் சூழ்நிலையை உண்டாக்கப் பேசப் படுகிறதே தவிர இந்த ஏட்டுச் சுரைக்காய் நமக்குப் பயன்படுமா? கல்பாக்கம் திட்டம் என்ன ஆயிற்று? எண்ணூர் திட்டம் என்ன ஆயிற்று? தூத்துக்குடித் திட்டத்தின் கதி என்ன? இரண்டாயிரம் ஏக்கரா நில ஆர்ஜிதம் செய்துவிட்டோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் காரியம் ஆகிவிடுமா? இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன? வடக்கே இருக்கிற பரிவாரங்கள் எல்லாம்கூட நிதிநிலை சரியாக இல்லை என்பதைப்பற்றிப் பேசுகின்றன. இரண்டு ஆண்டு களுக்கு முன்னேகூட கோடிக்கணக்காக வாங்கியுள்ள கடன் களுக்கு வட்டி கூடக் கொடுக்க முடியாத நிலைதான் நமக்கு ஏற்பட்டுள்ளது என்று பேசப்பட்டது. திரு. வெங்கட்டராமன் அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிட்டியில் நமக்கு 11 சத விகிதம் லாபம் இருக்கக்கூடிய வகையில் செயல்படவேண்டும் என்று செய்துள்ள சிபார்சை ஏற்றுக்கொண்டோம். நமக்கு வட்டி கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறதா? மிக அழகாக இந்த அறிக்கை யில் 8 கோடி ரூபாய் வரிக்காகக் கொடுத்துவிடுகிறோம் என்று கூறப்பட்டுள்ளது. எங்கே கொடுத்தார்கள்? எங்கிருந்து கொடுப் பார்கள்? இன்றைக்கு சர்சார்ஜ்தானே கொடுக்கிறது. மின்சார நிறுவனம் 50 சதவிகிதம், சர்க்கார் 25 சதவிகிதம் என்பதாக சர்க்காரின் பொறுப்புத்தானே அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலை அதிபர்களுக்கு, மக்களுடைய செல்வத்தை உறிஞ்சுபவர்களுக்கு, கொள்ளை லாபம் அடிக்கிறவர்களுக்கு யூனிட் 4 பைசா, விவசாயிகளுக்கு 8, 9 பைசா என்பதாக இப்போது 11 பைசா கூட வாங்க ஆரம்பித்துவிட்டார்கள்; இதிலேகூடப் பாரபட்சம் நடைபெற ஆரம்பித்து விட்டது. இவ்வளவு பெரிய நிறுவனத்தில், பொதுத் துறையில் இப்படியெல்லாம் பணம் விரய மாக்கப்படுவதை எடுத்துச் சொன்னால் கோபித்துக்கொள்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் குற்றம் சாட்டுகிறார்களே என்கிறார்கள். ஒருவர் இருவர் திறமைசாலியாக இருந்தால் போதுமா? மின்சார போர்டின் தலைவருக்கு நூறு மனிதர்களுக்கு உள்ள திறமை இருக்க லாம். ஒரு மரம் தோப்பாகிவிடுமா? அங்கே உள்ள லஞ்ச ஊழல்கள் எத்தனை? தாமதங்கள் எத்தனை? ஒரு விவசாயி கிணற்றுக்குப் பம்பு செட்டு வைக்கவேண்டுமென்றால் மின் இணைப்பு உடனே கிடைக்கிறதா? எனக்குத் தெரியும், என்னுடைய கிராமத்தில் எனக்குத் தெரிந்தவர்களே எத்தனை பேர் வருடக் கணக்காக காத்துக்கொண்டு கிடக்கிறார்கள்? நானே அமைச்சரிடம் இரண்டாண்டுகளுக்கு முன்பு வந்து கேட்டேன். இதுவரை அந்தக் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அழகான பிரசங்கத்தைச் செய்துவிடுவதால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடுமா? இன்னும் தெளிவாகக்கூடக் கோடிட்டுக் காட்ட முடியும். லஞ்ச லாபம் அடிக்கிறவர்கள் எத்தனை பேர்? இத்தகைய நிலையில் மின்சார போர்டு நடைபெற்றுக் கொண்டிருக் கலாமா?

[திரு. கே. ஏ. மதியழகன்] [2nd August 1966

இன்னும்கூட நான் சொல்வேன். ஒரு அகில இந்திய ரிவர் க்ரிட் ஏற்பட்டாகவேண்டும். பிரம்மபுத்திரா, கங்கை நதியை தென்னக நதிகளுடன் இணைத்தால் இதனால் எத்தனை கோடி ஏக்கரா சாகுபடி செய்யமுடியும்? ஏன் ஆல் இந்தியா ரிவர் க்ரிட் ஏற்படுத்தக்கூடாது? இன்றைக்கு அங்கே உள்ளவர்களே சொல்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்களை விரயம் செய்து கொண்டிருக்கிறபோது ஏன் இப்படி ஒரு உருப்படியான காரியத்தைச் செய்யக் கூடாது? செய்ய முடியாதா? இமாசலப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் பிரம்மபுத்திரா, கங்கை போன்ற நதிகளை தென்னக நதிகளோடு இணைப்பதற்கு ஏன் ஆல் இந்தியா ரிவர் க்ரிட் ஏற்படுத்தக்கூடாது? (கனம் திரு. வெ. ராமையா: எதற்கு ரிவர் க்ரிட்?) ரிவர் க்ரிட் ஏற்படுத்தினால் அதன் மூலம் நீர்ப்பாசனம் செய்யலாம்: மின்சார உற்பத்தியையும் செய்யலாம். இப்போது நதிகளிலே மின்சார உற்பத்தி செய்யவில்லையா? அது தெரிந்தும் கனம் அமைச்சர் அவர்கள் இப்படிக் குறுக்கிடுவதற்கு ஆச்சரியப்படுகிறேன். இப்படி எல்லாம் திட்டமாக எதையும் செய்வதற்கு முன்வராமல் இன்றையதினம் மின்சார போர்டு லஞ்ச லாபத்தின் வளர்ப்புப் பண்ணையாகத்தான் ஆகிக் கொண்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். பொதுத் துறையில் இருக்கிற இந்த நிறுவனம் இப்படிச் சீர்கெட்டுப் போகலாமா? மின்சார போர்டுக்குத் தேவையான கம்பிகளை அவர்களே உற்பத்தி செய்துகொள்ளவேண்டும் என்று சொன்னேன். அத்துறையில் கவனம் செலுத்தப்படவில்லை. லஞ்ச ஊழல்களுக்கு அடிப்படையாக மாறிவரும் நிலையில் பட்நாய்க் கம்பெனியில் இருந்தே வாங்கப்படுகிறது. தூத்துக்குடி மின்சார நிலையம் என்ன ஆயிற்று? லஞ்ச ஊழல்களுக்கு மன்னனாகிய ஜெயந்தி கம்பெனிக்கே காண்டிராக்ட் விடப்பட்டு, இன்றையதினம் அதுவும் நடைபெறாது என்ற நிலைக்கு வந்துவிட்டது. என்றைக்கு இந்த நிர்வாகம் ஒழுங்கு செய்யப்பட்டு அனல் மின்சாரமும், நீர் மின்சாரமும் பாதிக்குப் பாதி உற்பத்தியாகின்ற நிலைக்கு வருகிறதோ அப்போதுதான் விமோசனம் ஏற்படும். அத்துறையில் கவனம் செலுத்தப்படவேண்டும். நிர்வாகம் சீர்திருத்தப்படவேண்டும். இவற்றுக்கு எல்லாம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

11-00 a.m. திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு பாட்டுக்கு ஒரு புலவன் பாடினான், 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று. அதேபோல் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்கிறது இந்த காங்கிரஸ் ஆட்சி. "வானம் பொழிகிறது, பூமி கொழிக்கிறது. உனக்கேன் கிஸ்தி" என்று கேட்டான் வீரபாண்டிய கட்டபொம்மன். வானம் பொழியாவிட்டாலும் கிணறுகளை வெட்டி. மாடுகளை வைத்து கவலையின்மூலம் தண்ணீர் இறைத்துக் காலத்தையும் நேரத்தையு



2nd August 1966] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

வீணாக்காமல், காலையிலே எழுந்து சென்று சுவிட்சைப் போட்டுவிட்டு வந்துவிட்டால், மாலையிலே திரும்பிச்சென்று அதை நிறுத்துவதற்குப் போனால் போதும் என்ற அளவில் மோட்டார் பம்புசெட்டுகளை அதிகமான அளவில் ஏற்படுத்தி, 1½ லட்சம் கிணறுகளுக்கு பம்புசெட்டுகள் கொடுத்திருந்த இந்த இலாகா இன்று 2½ லட்சத்திற்கு மேல் கொடுத்திருக்கிறது என்பது மிகவும் பாராட்டத் தகுந்ததுதான். அங்கங்கே, என் தொகுதியில் அது போடப்படவில்லை, இந்தத் தொகுதியில் இன்னும் போடவில்லை என்பது போன்ற சிறு சிறு குற்றச்சாட்டுகள் இருக்கலாம். ஆனால் பெருவாரியாகப் பார்க்கிற நேரத்திலே 2½ லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின்சக்தி கொடுத்திருக்கிறது இந்த இலாகா என்றால் அதை இந்த மன்றம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. ஒரு சில இடங்களிலே தவறுகள் இருக்கலாம். ஆனால் அவற்றை மிகைப்படுத்திச் சொல்வதானது, எதிர்கட்சியினர் ஒன்றும் பேச முடியாத நிலையிலே, பெரும் மகிழ்ச்சிக்குரிய பாராட்டத்தக்க நிலையிலே இருக்கக் கூடிய மின்சார இலாகாவைப் பாராட்டாமல் குற்றம் சொல்லவேண்டும் என்ற அளவில், வெறும் வாயை மெல்லுவதற்குப் பதிலாக, சிறு அவல் கிடைத்தால் அதை மெல்லுவதைப் போல்தான். ஏதோ அங்கங்கே ஒன்றிரண்டு கிணறுகளில் பம்பு செட்டுகளுக்கு மின்சக்தி கொடுக்கப்படவில்லை என்று குற்றஞ் சாட்டினார்கள். கம்பங்கள் நட்டுவிடலாம், வயர்கள் சுற்றிவிடலாம், விளக்குகள் போட்டுவிடலாம், இப்படியெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது மின்சார இலாகா என்று எதிர்க்கட்சியினர் தாக்கிப்பேசினார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. மதியழகன் சொன்னார்கள், இருள் சூழ்ந்த இடங்கள் பல இருக்கின்றன என்று. இராமாயணத்திலே வரும், இராமன் கால்பட்ட இடமெல்லாம் பொன்னாகிவிட்டதென்று. அதேபோல் இன்று அமைச்சர் கண் பார்வை பட்ட இடமெல்லாம், கட்டாந்தரையெல்லாம் வயல்களாகக் காட்சியளிக்கின்ற நிலையிலே, இருள் சூழ்ந்த இடங்களெல்லாம் அருள்சூழ்ந்து விளக்குகள் காட்சியளிக்கின்றன. மூன்றாவது திட்ட ஆரம்பத்திலே 500 மெகாவாட் ஆக இருந்தது, இப்பொழுது 1,000 மெகாவாட் அளவில் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. மூன்றாவது திட்டத்திலே 100 கோடிக்குக் கணக்குப் போடப்பட்டது, இன்றைக்கு 120 கோடியை எட்டக்கூடிய அளவிலே முன்னேற்றத்தைக் காட்டியிருக்கிறார்கள் என்றால் அதை ஏன் பாராட்டக் கூடாது? தமிழ்நாடு கல்வியிலே முன் நிற்கிறது, தொழிலிலே முன் நிற்கிறது, மின்சாரத்திலே முன்நிற்கிறது. காற்றுவேகம், மனோவேகம் என்றெல்லாம் எடுத்துக் காட்டிற்காகச் சொல்வார்கள். ஆனால், இன்று காங்கிரஸ் ஆட்சி இன்னொரு எடுத்துக்காட்டையும் காட்டியிருக்கிறது. அதுதான் மின்வேகம். மின்வேகம் என்ற புதுச் சொல்லை காங்கிரஸ் ஆட்சியும் இந்த இலாகாவும்தான் ஏற்படுத்தியிருக்கின்றன. அதற்காக நான் பெருமைப்படுகிறேன். அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் வீதிகளுக்கும், வீடுகளுக்கும் விளக்குகளை அதிகமாகப்போடுகின்ற அளவிலே முன்னேற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தொழிலுக்கு மட்டுமல்ல, உணவுத் துறைக்கும் தொடர்பு

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [2nd August 1966

இருக்கிறது என்ற அளவிலே கனம் உணவு அமைச்சர் அவர்கள் மூலம் இந்த அறிக்கை விவாதத்திற்கு வந்திருப்பது பொருத்தமான விஷயம்தான். இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டுகிறேன். மின்சார வெட்டு ஏற்பட்டது. சராசரி 12 யூனிட்டைப் பயன்படுத்திக்கொண்டுவந்த நிலைபோய் இப்பொழுது 120 யூனிட்டைப் பயன்படுத்துகிறார்கள் என்ற நிலையில் இந்த மின்சார வெட்டு மழையில்லாததால் வந்தது. திரு. மதியழகன் அவர்கள் மின்சார வெட்டைப்பற்றிக் கேட்டால் மழையைக் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். தண்ணீர் மின்சாரத்தை நம்பியிருக்கும் பொழுது மழையைக் காட்டாமல் வேறு எதைக் காட்டுவது? மழையில்லாததால்தானே வெட்டு வந்தது. இருந்தாலும் இந்த நிர்வாகத்திலே இருக்கிறவர்கள் பெருமைப்படத்தக்க விதத்திலே அதைச் சமாளித்தார்கள் என்றால் அதைப் பாராட்டியிருக்க வேண்டுமே தவிர, பெரிய குற்றச்சாட்டாகச் சொல்லக் கூடாது. தூத்துக்குடியில் 26 கோடி ரூபாயில் ஒரு அனல் மின்சாரத் திட்டம், எண்ணூரில் 340 மெகவாட் அளவில் ஒரு அனல் மின்சாரத் திட்டம், நெய்வேலி அனல் மின்சாரத் திட்டம், இன்னும் தாம்பிரபரணி, மேல் மணிமுத்தாறு மின்சாரத் திட்டங்கள் இவைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகையால், நல்ல முறையில் மக்களுக்குப் பெருவாரியாகப் பயன் கிடைக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கம்பெனியார்களுக்கு ஒரு குறை இருக்கிறது. எட்டுக் கம்பெனியார்கள் வேலை செய்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களுக்கு 122 லட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். தஞ்சாவூரில் இருக்கின்றவர்களுக்கு கிணறுகள் வெட்டித் தண்ணீர் கொண்டுவருவதற்குக் கடன் கொடுக்கிறார்கள். அதேமாதிரி தூத்துக்குடி, திருநெல்வேலி முதலிய இடங்களில் உள்ள மின்சாரக் கம்பெனிகளுக்கு அதிகப்படியாகக் கடன்கொடுத்து உதவினால் எங்களுடைய குறைகள் எல்லாம் தீரும். அங்கே தக்காளம்மபுரம், ஆரோக்கியநாதபுரம், துலுக்கர்பட்டி போன்ற இடங்களில் எல்லாம் மின்சார பம்புசெட்டுகளுக்காகக் கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு இன்னும் மின் இணைப்புக் கிடைக்கவில்லை. அங்கேயுள்ள கலெக்டர் அவர்கள், எஸ்.இ., ஏ.இ., இவர்களுடன் கூடிப்பேசி, எங்களூர்க்காரர் திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டினார்கள். அதிலே பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் வந்திருந்தார்கள். நாங்கள் எல்லாம் யோசனைகளை எடுத்துச்சொல்வதற்கு வசதியாக இருந்தது. அந்தக் கூட்டத்தின் பயனாக கைத்தறி நெசவாளர்கள், பீடித்தொழிலாளர்கள் இவர்களுடைய இடங்களிலே யூனிட்டுக்கு 29 பைசா போட்டதை 27 பைசாவாக ஆக்கினார்கள். வீட்டுக்கு 27 பைசா என்று வரும்பொழுது டொமெஸ்டிக் அல்லாத இடங்களுக்கு 29 பைசா என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தின் பயனாக நாங்கள் எம்.எல்.ஏ.-க்கள் எல்லாம் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு அது 27 பைசாவாகக் குறைக்கப்பட்டது. இதுபோன்ற நல்ல காரியங்கள் செய்வதற்கெல்லாம் அதுமாதிரிக் கூட்டங்கள்



[2nd August 1966 [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

பயன்படுகின்றன. ஏககாலத்தில் வசூலிப்பது என்பது ஒரு பெரிய குறையாக இருக்கிறது. ஜனவரி மாதத்திலே இருந்து சிறிது சிறிதாக வசூல்செய்திருந்தால், இப்பொழுது ஏக காலத்தில் 200, 300 என்று வசூல் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. ஜனவரியிலிருந்து ஆகஸ்டு வரையில் சேர்த்து வசூல்செய்ய வேண்டிய நிலை இல்லாமல், முதலிலிருந்தே சிறிது சிறிதாகத் தவணைகளில் 10, 20 என்ற முறையில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிகவும் முக்கியமாக இந்தச் சமயத்தில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது தூத்துக்குடியிலே உள்ள கம்பெனிக்கு அதிகப்படியான கடன் வசதி செய்துகொடுத்தால் அவர்கள் துரிதமாகக் கிணறுகளுக்கு பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புச் செய்துகொடுக்கமுடியும், ஆகவே, அதை நிறைவேற்றக்கூடிய வகையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. தா. சின்னசாமி: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது நடக்கும் இந்த விவாதத்தில் மின்சார இலாகாவைப் பற்றிச் சில வார்த்தைகள் தங்கள் மூலமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மின்சார இலாகா என்றால் அது இப்பொழுது சாப்பாடு போடுகிறது என்ற நிலையில் இருக்கிறது. இட்லிகூட மின்சாரத்தின் உதவியினால் செய்கிறார்கள். மின்சார இலாகா தீவிரமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு வேண்டிய பம்புசெட்டுகளுக்குக் கொடுத்தும், ஏழைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும் முன்வந்தால் நன்றாக இருக்கும். எங்கள் வட்டாரத்தில் நீர்ப்பாசன வசதிகள் இல்லாத காரணத்தினாலேயும் தண்ணீரை இறைத்தே பிழைக்கவேண்டிய நிலைமை இருப்பதினாலும், அங்கே இரண்டு ஏக்கர் அல்லது மூன்று ஏக்கர் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள்தான் இருக்கிறார்கள் என்பதாலும் அங்கே உள்ளவர்கள் மாடுகள் மூலம் இறைத்துப் பிழைக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அங்கேயுள்ளவர்கள் சால்வன்சி சர்ட்டிபிகேட் வாங்கி ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆகியும் கூட இன்னும் லைன் இழுக்காமல் இருப்பதினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதைப்பற்றி அங்கே இருக்கின்ற மின்சார இலாகா அதிகாரிகளைக் கேட்டால் ஜில்லா அதிகாரிகளைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சௌத் ஆற்காடு ஜில்லா அதிகாரிகளைக் கேட்டால், திருச்சி ஜில்லா சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகையால் இதிலே வயதிலும் அனுபவத்திலும் பெரியவர்களான கனம் அமைச்சர் அவர்கள் தீவிரமாகக் கவனம் செலுத்தி ஏழை விவசாய மக்களுக்கு உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இங்கே ஆளும் கட்சியிலுள்ளவர்கள் அனைவரும் ஹரிஜனங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்று வாயளவில் சொல்லுகிறார்களே தவிர, நடைமுறையில் ஒன்றும் காணோம். கிராமங்களில் எந்த ஹரிஜன் காலனியிலாவது மின்விளக்கு எரிகிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அவர்களுக்கு வேண்டிய போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து மூலமாகச் செய்ய வேண்டுமென்றால் பஞ்சாயத்துத் தலைவர்கள் பெரிய நிலச் சுவான்தார்களாகவும், பணக்காரர்களாவும் இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு உதவி செய்தால், அவர்கள் எங்கே முன்னேறித் தங்களுக்குச் சமத்துவமாக வந்து விடுவார்களோ என்று பயப்படும் நிலைமை இருக்கிறது. அந்த ஹரிஜன மக்களுக்கு பம்பு செட்டுகள் கொடுத்து மின் விசை கொடுப்பதற்கான காரியங்களைச் சர்க்காரே நேரடியாகச் செய்ய வேண்டும். அமைச்சர்கள் சார்ந்த தொகுதிகளைப் பொருத்தவரை மின்சார போர்டு சம்பந்தப்பட்ட வேலைகளாக இருந்தாலும் சரி, மற்ற இலாக்காக்கள் சம்பந்தப்பட்ட வேலைகளாக இருந்தாலும் சரி, சரிவர நடந்து வருகிறது என்று கேள்விப்பட்டேன். எதிர்க்கட்சியினர் உள்ள பகுதிகளில் அந்த மாதிரி வேலைகள் சரிவர நடைபெறுவதில்லை.

எங்கள் ஊரில் நடைபெற்ற ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். அங்கு ஹரிஜனங்களுக்கு நீர்ப்பாசனக் கேணிகள் ஒதுக்கும் வகையில் நடத்த நிகழ்ச்சிகள் கேலிக்குரியவையாக இருக்கின்றன. 300-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்ததிலிருந்து அரசினரால் அங்கீகாரம்பெற்ற சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் வெல்ஃபேர் டிப்பார்ட்மென்ட் அதிகாரியோடு சேர்ந்து கொண்டு தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்தார்கள். திருவுளச் சீட்டுப் போடுவதானாலும் இரண்டு சீட்டையும் பார்த்துத் தங்களுக்கு வேண்டியவர்களுக்கே கொடுக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. எங்கள் ஊரில் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் எனக்கு ஒரு வோட்டுக் கூடப் போடவில்லை.

* * * * *

ஆளுங் கட்சிக்கு ஆதாரவாக இருக்கக்கூடிய அந்த ஏழை ஹரிஜன மக்களுக்கு ஏன் இந்த உதவிகளைச் செய்யக் கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தால், அது காங்கிரஸ் கட்சிக்கே உதவியாக இருக்கும். இப்போது நீங்கள் செய்து வருவது எதிர்க்கட்சிக்குத்தான் உதவியாக இருக்கும். 'மண்டலத்தில் செய்த குறை மன்னரைச் சாரும்' என்ற வகையில் இதெல்லாம் ஆட்சியையே சாரும். சென்ற காலம், நிகழ் காலம், வருங் காலம் ஆகிய மூன்று காலத்தையும் அறிந்து காரியங்களைச் செய்ய வேண்டும். கள்ளக்குறிச்சியிலே நியாயமான முறையிலே கேணிகள் ஒதுக்கப்படவில்லை என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அந்தக் கேணி கொடுக்கப்பட்டதிலே, யார் முன்பே வீடு கட்டிக் கொண்டார்களோ, மாடு வாங்கிக் கொண்டார்களோ அவர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

Expunged as ordered by the Chair.



எங்கள் தொகுதியிலே உள்ள பல கிராமங்கள் இருட்டிலேதான் இருக்கின்றன. அந்த மக்களுக்கு மின்சாரம் என்றால் என்னவென்றே தெரியாது. அவர்கள் நாளெல்லாம் உழைத்து 1½ ரூபாய் கூலி பெற்று அந்த 1½ ரூபாய்க்கு முக்கால் படி அரிசி வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பத்து மூட்டை, இருபது மூட்டை என்று எடுத்துக் கொண்டு சென்றால் அவர்களைப் பிடிக்கலாம். ஆனால் தங்களுடைய சாப்பாட்டுக்காக நான்கு மரக்கால், ஐந்து மரக்கால் என்று எடுத்துக் கொண்டு போகிறவர்களிடமிருந்து பறித்துக் கொள்ளக்கூடாது. அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர், மற்ற அதிகாரிகளின் வீட்டில் 100 மூட்டை அரிசியைப் பார்க்கலாம். ஆறு மாதம் அவர்கள் ஒரே இடத்தில் பணியாற்றினால் மாடி வீடு கட்டிக் கொள்ளும் அளவுக்கு வந்து விடுகிறார்கள். பார்டர் தாண்டி அரிசி செல்வதைத் தடுக்கலாமே தவிர, கிராமத்திற்குக் கிராமம் எடுத்துச் செல்வதைத் தடுக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இங்கு பேசுவதற்கு இவ்வளவு நேரம் கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மா. தண்டாயுதபாணி: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மின்சார போர்டின் 1966-67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதும், 1965-66-ம் ஆண்டு ஆணைநிதிநிலை அறிக்கையின் மீதும் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்னை மாநிலம் சிறப்பாகப் பணி புரிந்து வருகிறது என்று கூறும் நேரத்தில் அதிலே இந்த நிறுவனம் முதலிடம் பெறுகிறது என்று கூறினால் அது மிகையாகாது. எதிர்க்கட்சியிலுள்ளவர்கள், இந்த நிறுவனம் சிறப்பாகப் பணி புரிந்தாலும் கூட, ஏதாவது குறை கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு நிர்வாகத்தில் ஏற்படுகிற ஒருசில குறைபாடுகளைப் பெரிதாக எடுத்துக் கூறுகிறார்களே தவிர, அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிற விளக்கக் குறிப்புகளை அவர்கள் மறுக்க முடியாது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் கிராமப் புறங்களுக்கு மின்சாரம் வழங்கியதன் எண்ணிக்கை 1,813; தற்போது ஏறத்தாழ 22,000 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் 14,000 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்து வந்தது தற்போது 2½ லட்சம் பம்பு செட்டுகள் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. நபர் ஒன்றுக்கு 12 யூனிட்டாக இருந்தது தற்போது 107 யூனிட் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இவற்றையெல்லாம் யாரும் மறுக்க முடியாது. நேற்று இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த மதிப்புக்குரிய மணி அவர்கள் கூட, தஞ்சை ஜில்லாவில் அவர் பகுதியில் கிணறுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் காலதாமதம் இருக்கிறது என்று சொன்னார்கள். எனக்கு அதைக் கேட்கிற நேரத்தில் வேடிக்கையாக இருந்தது. அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி தனிப்பட்ட கம்பெனியாருக்குச் சொந்தமான பகுதி தஞ்சை ஜில்லாவில் மின்சார விஸ்தரிப்பு பொதுவாகக் குறைவு. அதற்குக் காரணம்

அந்த ஜில்லாவைப் பொறுத்தவரை மின்சார விஸ்தரிப்புப் பொறுப்பு தனிப்பட்ட நிறுவனத்திடமே இருந்து வந்திருக்கிறது. அதோடு அது டெல்டாப் பிரதேசமாக இருந்த காரணத்தால்தான் மின்சாரத்தைப் பயன்படுத்தித் தண்ணீர் வசதியைப் பெற வேண்டிய நிலைமை இல்லை. அதனால் அங்கு மின்சார விஸ்தரிப்பு மிகக் குறைவாக இருந்தது. அங்கு தற்போது ஏற்படுகிற தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்கும் நோக்கத்தோடு கடந்த இரண்டு ஆண்டு காலமாக அரசாங்கம் பல கிணறுகளைத் தோண்டி வடிமுனைக் கிணறுகளை அமைத்தார்கள். அதன் மூலம் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம். மேட்டூர் நீர்த் தேக்கம் மிகக் காலந் தாழ்ந்தே திறக்கப்பட்டிருந்தாலும் கூட, வடிமுனைக் கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்து குறுவைச் சாகுபடி செய்ய நாற்று நடவேண்டிய அவசிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இந்த அளவிற்கு அந்த நிறுவனத்தை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்தாண்டு மின்சார வெட்டு கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் இருந்து வந்திருக்கிறது. இதற்கான காரணம் இந்த அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஜலத்தை நம்பித்தான் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்து வருகிறோம். நமக்கு, அனல் மின்சாரம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. அனல் மின்சாரத்தைப் பெருக்க நாம் திட்டமிட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதை 60 சத விகிதமாக உயர்த்த வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். இதுகாறும் திட்டமிட்ட பணிகளை இந்த இலாகா சிறப்பாகக் குறிப்பிட்ட காலத்திற்குள் எப்படி முடித்து வந்ததோ அதேபோல் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றி மின்சார வெட்டு ஏற்படாத வகையில் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுக்கிற நோக்கில் மின்சாரக் கழகம் அனுமதி தந்து விடுகிறது. பிறகு மின்சார விஸ்தரிப்பு அந்தப் பகுதியில் செய்வதற்கு அதிகக் காலமாகிறது. என் தொகுதியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட ஒன்பது லட்சம் ரூபாய் அளவிற்கு கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதி வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் வேலை துவங்கவில்லை. அதற்குக் காரணம் அந்தப் பகுதியில் நீண்ட நெடுங்காலமாக மின்சார விஸ்தரிப்பு மிகமிக குறைவாக இருந்து, ஒரே காலத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று திட்டமிட்டு நிறைவேற்றுவதற்குப் போதிய ஊழியர்கள் இல்லை. ஆகவே, அதிகப்படியான ஊழியர்களை நியமித்து மின்சார அனுமதி வழங்கிய குறிப்பிட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாக மின்சார இணைப்பைக் கொடுக்கவேண்டுமென்று ஒரு நியதியை ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் தான் குறிப்பிட்ட காலத்தில் மின்சாரம் கிடைக்கக் கூடிய ஒரு



சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். இப்படி இணைப்புக் கொடுத்த கிராமங்களுக்கு, மூன்று நான்கு கிராமங்களுக்கு ஒரு தனி லைன்மேன் இருக்கவேண்டும். ஒரு தாலுகா தலைநகரத்தில் அதைச் சுற்றி 15 கிராமங்களுக்கு ஒரு லைன்மேன் நியமித்து விடுகிறார்கள். கிராமப் பகுதிகளிலே போக்குவரத்து வசதியும் குறைவு. டெலிபோனும் கிடையாது. ஆகவே, இரவில் ப்யூஸ் போய் விட்டால் அவர்களிடம் தொடர்பு கொண்டு அதைச் சீர் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே மூன்று நான்கு கிராமங்களை ஒன்றாக இணைத்து மத்தியப் பகுதியில் ஒரு லைன்-மேனை நியமித்தால், இதுபோன்ற சிரமங்களைத் தவிர்க்க முடியும்.

அடுத்தபடியாக, இந்த மின்சார பம்ப் செட்களுக்கு மினிமம் இவ்வளவு சார்ஜ் கட்டவேண்டுமென்று இருக்கிறது. மின்சாரக் கழகம் நிர்ணயித்திருக்கிற தொகை கணிசமாக மிக மிகக் குறைவாகவே இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் உள்ள தனியார் நிறுவனப் பகுதிகளில் இதைப்போல் ஐந்தாறு மடங்கு அதிகமாக நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஒரு கிராமம் மின்சாரக் கழகத்திற்குச் சொந்தமான பகுதி, அடுத்த கிராமம் தனிப்பட்ட நிறுவனத்தாருக்குச் சொந்தமான பகுதி. இதில் 6 அல்லது 7 ரூபாய் செலுத்துகிற விவசாயி அடுத்த கிராமத்தில் ஒரு பம்ப் செட் வைத்தால் 28, 29 ரூபாய் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட வேறுபாட்டைப் போக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அனல் மின்சார நிலையத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் நாகையில் ஒரு அனல் மின்சார நிலையம் துவக்கலாம் என்ற எண்ணம் இருந்தது. அது கைவிடப்பட்டு விட்டதாக இந்தக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்று தெரியவில்லை. அதை மீண்டும் பரிசீலனை செய்து நாகையில் அனல் மின்சார நிலையத்தைத் துவக்கினால், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கும், மற்ற தொழில் துறை வளர்ச்சிக்கும் நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்பதை மனத்திலே கொண்டு, அதை மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்த மின்சாரக் கழகம் நல்லமுறையில் பணி புரிந்து வருகிறது. அதன் தலைவர் அவர்கள் சிறப்பான முறையில் பணி புரிந்து வருவதால்தான், இந்த மின்சாரத்துறை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நோக்கில் முதல் இடம் பெற்றிருக்கிறது. அதற்கு நாம் வழங்குகிற நிதிக்கு 6 சதவிகிதம் வட்டி வாங்குகிறோம். அப்படி வழங்குகிற நிதியில், ஒரு பகுதியை மானியமாக வழங்கலாம். நாம் வழங்குகிற நிதிக்கு வட்டி வசூல் செய்யாமலிருந்தால் சிறப்பாக இருக்கும். அப்படிச் செய்தா, ஊக்குவித்து மிகுதியுள்ள கிராமங்களுக்கும் குறிப்பிட்ட காலத்தில் மின்சார வசதி செய்து கொடுத்து விவசாயத்தைப் பெருக்குவதற்கும், தொழில் வளர்ச்சியைப் பெருவதற்கும் அதுபோன்ற முறையைக் கையாள முடியுமா என்று பரிசீலனை செய்யவேண்டு

மென்று கேட்டுக்கொண்டு எனக்கு, பேசுவதற்கு அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

* **திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் உதவி சபாநாயகர்
அவர்களே, உணவு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்
டிருக்கக்கூடிய இந்த மின்சார போர்ட் அறிக்கை மீது சில
விஷயங்கள் கூறுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். ஒரு நாட்டின்
விவசாய வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் மிக
மிக இன்றியமையாததாகும். மின்சாரத்தின் மூலம் விவசாய
அபிவிருத்தியைப் பெருக்குவதற்கு நாம் துரிதமான நடவடிக்
கைகள் எடுக்கவேண்டுமென்று சொன்னால், மின்சாரம் மூலம்
பாசனத்திற்கு வேண்டிய தண்ணீரை இறைக்க வசதி செய்து
கொடுக்கவேண்டும். இன்றையதினம் போர்டார் விவசாயத்திற்
காக முன் பாத்தியதை அளித்திருந்தாலும் கூட, 23 சத விகிதம்
தான் விவசாயத்திற்காக மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்
கிறார்கள். அது போதுமானதாக இல்லை. ஆகவே, 40 சத விகித
மாவது விவசாயத்திற்காக மின்சாரம் விநியோகம் செய்தால்தான்
உதவியாக இருக்கமுடியும் என்பதை கவனிக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் பற்றுக்குறை காரணமாக
இரண்டு ஆண்டுகளாக விவசாயத்தை நம்பியிருக்கக் கூடிய
விவசாயிகளும், நாட்டிலுள்ளவர்களும் மிகவும் கஷ்டப்படு
கிறார்கள் என்பது நாம் அறிந்த விஷயமே. இந்தச் சந்தர்ப்பத்தில்
விவசாயத்திற்குக் கிணறுகள் வெட்டி அதன் மூலம் தண்ணீர் எடுப்
பதற்காக மின்சாரம் விஸ்தரிக்கவேண்டியது அவசியமாகிறது.
இன்றையதினம் தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால்,
மின்சார விஸ்தரிப்பு மிகவும் பின்தங்கி இருக்கிறது. எங்கள்
ஜில்லாவில் நாலைந்து தனியார் கம்பனிகள் இருக்கின்றன. அவர்
களுக்கு எவ்வளவுதான் அறிவுரைகள் கூறினாலும், அரசாங்கத்தி
லிருந்து லட்சக்கணக்கான ரூபாய் கடன் கொடுத்தாலும், அவர்கள்
வேலைகளை எப்போதும் போல் தாமதமாய்ச் செய்து கொண்டிருக்
கிறார்களே தவிர, கடன் கொடுக்கிறார்கள் என்பதற்காகவோ,
அல்லது அரசாங்கத்திலிருந்து சொல்கிறார்கள் என்பதற்காகவோ,
அவர்கள் வேலை செய்வது கிடையாது. ஏனெனில் அவர்களுக்கு
ஒரு அச்சம் ஏற்பட்டு இருக்கிறது. அரசாங்கம் தனியார்த்
துறையை எடுத்துக் கொள்ளப் போகிறது என்று தெரிந்தவுடன்
அவர்கள் வேலைகளை மிகவும் தாமதமாகச் செய்து கொண்டு
வருகிறார்கள். தனியார்த்துறை மின்சாரத்தை அரசாங்கம்
எடுத்துக் கொள்வதுதான் நியாயமாக இருக்கமுடியும். மின்சாரக்
கம்பிகள், நாகக் கம்பிகள் போட்டுக் கொண்டிருந்ததை எடுத்து
விட்டு அலுமினியம் கம்பிகள் போடுகிறார்கள் என்று சொல்லப்
படுகிறது. காரணம் என்னவென்றால், அரசாங்கம் எடுத்துக்
கொள்ளப் போகிறார்கள் என்பதற்காக விலை உயர்ந்த கம்பிகளை
எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்
கொள்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் 1,600 பஞ்சாயத்துக்களைக்
கொண்டிருக்கக் கூடிய கிராமப் பகுதிகளில் இன்றைய தினம்





நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குத்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்காக இதுவரையில் 2,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டப் பட்டிருக்கின்றன. 2,000 கிணறுகள் தோண்டப்பட்டிருக்கக்கூடிய அந்த ஜில்லாவில் 792 கிணறுகளுக்குத்தான் மின்சாரம் கொடுத்திருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த 792 கிணறுகளுக்கும் மின்சாரம் பூராவும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் இல்லை என்றுதான் சொல்லமுடியும். அதற்கு வேண்டிய தயாரிப்புகளைச் செய்வதற்கு வேண்டிய வேலைகளை செய்திருப்பார்களே தவிர, பூராவும் கொடுத்திருப்பதாக என்னைப் பொறுத்தவரையில் சொல்வதற்கில்லை. என் தொகுதியில் 120 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவற்றில் 30-க்குத்தான் மின்சார வசதியிருக்கிறது. நீர்முளை என்ற கிராமத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு ஓவர்ஹெட் டாங்க் கட்டி அதற்கு மின்சாரத் தொடர்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றையவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே, எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் கூறியதுபோல், நாகையில் ஒரு அனல் மின்சார நிலையத்தை அமைக்க அரசாங்கம் மறுபரிசீலனை செய்வது சரியாக இருக்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள், தூத்துக்குடியை எடுத்துக்கொண்டிருப்பதால் நாகைப்பட்டினம் தேவையில்லை என்று. | ஆகவே, இதை மறுபரி 11-30 p.m. சீலனை செய்து நாகப்பட்டினத்தில் அனல் மின்சார நிலையத்தை ஆரம்பிப்பதற்கு உடனடியாக வேண்டிய சிபாரிசுகளை மத்திய சர்க்காருக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில், விவசாயத்திற்கு மின்சாரம் மிகவும் தேவைப்படுகிறது. விவசாயத்தை பிரதானமாக எடுத்துக் கொண்டு பார்த்தால், தஞ்சை ஜில்லாவில் இப்போது கிணறுகளை வெட்டுவதின் மூலமாக எல்லா கிராமங்களிலும் நல்ல முறையில் தண்ணீரை உபயோகப்படுத்தி விவசாயத்தை மேலும் அபிவிருத்தியடையச்செய்ய முடியும் என்ற நல்லெண்ணம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. மின்சாரம் எல்லாக் கிராமங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இதற்கான எல்லா முயற்சிகளையும் துரிதமாக எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார இலாகா, அரசாங்கத்தின் பல இலாகாக்களில் பாராட்டப்பட வேண்டிய இலாகாக்களில் ஒன்று. சென்னை ராஜ்யம் இந்த தேசத்தில் பல துறைகளில் நல்ல பெயர் வாங்குவதற்கு முக்கிய காரணமாக இருப்பது இந்த இலாகா என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த ராஜ்யத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, இந்த தேசத்திலுள்ள அனைவரும் இந்த இலாகாவைப் பற்றி பாராட்டு தெரிவிக்கின்றனர். ஆனால், எதிர்கட்சி நண்பர்கள் அரசாங்கத்தை எந்த அளவுக்கு 'கண்டெம்' பண்ணிப் பேச

[திரு. கே. டி. கோசல்ராம்] [2nd August 1966

வேண்டுமோ, அந்த அளவுக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதையெல்லாம் நாட்டு மக்கள் நன்றாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். தேசம் முழுமைக்கும் என்ன நிலைமை என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். ஆளும் கட்சியில் நான் இருந்தாலும், நிர்வாகத்தில் குறைகள் இருந்தால், அதை எடுத்துக் காட்டி கண்டிக்க நான் என்றுமே தவறியதில்லை. என்னுடைய உற்ற நண்பர்களாக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந் தாலும் சரி, இலாகா அதிகாரிகளாக இருந்தாலும் சரி, நிர்வா கத்தில் குறைகள் இருந்தால், அதை நான் 'கண்டெம்' பண்ணாத நாளே கிடையாது. பாராட்டப் படவேண்டிய அளவுக்கு பாராட்டி விட்டு, இருக்கின்ற தப்புகளை எடுத்துச் சொல்லி; அதற்கு இன்னின்ன செய்யவேண்டும் என்று 'கன்ஸ்ட்ரக்டிவ்' ஆக சொல்லவும் வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நண்பர் திரு. மதியழகன் அவர்கள் மின்சார போர்ட் தலைவர் திரு. அப்பாத் துரை அவர்களைப் பாராட்டிவிட்டு, அதிலுள்ள குறைகளையும் எடுத்துச்சொன்னார்கள், அதற்காக நான் அவரைப் பாராட்டு கிறேன். (குறுக்கீடு) திரு. மதியழகன் அவர்களைத்தான். ஒரு வழியில் அதிகாரிகளைப் பாராட்டிவிட்டு பின்னால் குறைகளைச் சொன்னார்களே அந்த அளவுக்கு அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

இந்த ராஜ்யத்தில் தேவைக்கு மிகுந்த மின்சார உற்பத்தி இருக்கவேண்டும் என்ற அளவில் மின்சார இலாகா டார்ஜெட் போட்டு அதற்குத் தகுந்த முறையில் செயல்பட்டு வருகிறது. எத்தனை கோடி ரூபாய் செலவு செய்து ஒதுக்கியிருந்தாலும், அத்தனையும் செலவு செய்து விட்டோம் என்று முதல் தரமாகச் சொல்லக்கூடிய இலாகா இந்த இலாகா. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொடுத்த பணத்தையும் செலவு செய்துவிட்டோம், அது மட்டுமல்ல, நான்காவது திட்டத்தில் சேர்த்திருந்த மேட்டூர் வேலையையும் முடித்து விட்டோம் என்று சொல்வதைப் பார்க்கும் போது நாம் மிகவும் மகிழ்ச்சி அடைய வேண்டும். (குறுக்கீடு) நண்பர் அமைச்சர் திரு. ராமைய்யா அவர்கள், கேட்கிற பணத்தை எல்லாம் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். அதைக் கேட்ப தற்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. என்னுடைய அபிப்பி ராயம், மின்சார இலாகா கேட்கின்ற பணத்தை அரசாங்கத்தால் கொடுக்க முடியாது என்பதுதான். அது தவறாக வேண்டு மென்றால் இருக்கலாம். நண்பர் திரு. அப்பாத்துரை அவர்களிடம் இன்னும் எவ்வளவு பணம் கொடுத்தாலும், ஒரு குந்தா அல்ல, இன்னும் பத்து குந்தாத் திட்டங்களையும் சீக்கிரமாகவே முடித்துக் கொடுப்பார்.

**கனம் உதவி சபாநாயகர்:** இப்படிப்பட்ட விவாதத்தில் பேசும்போது, குறிப்பிட்ட அதிகாரிகளின் பெயர்களைச் சொல்லாமல், அவர்கள் வகிக்கும் பதவியைக் குறிப்பிட்டுச் சொல்வது நல்ல சம்பிரதாயமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



2nd August 1966]

**திரு. கே. டி. கோசல்ராம்:** மின்சார இலாகா என்பது ஒரு 'ஸ்டாச்சுடரி பாடி' அதற்கென்று தனியாகச் சட்டங்களை இயற்றியிருக்கிறோம், சர்க்காருக்கும், இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் செயல்படுகிறது. ஒரு இலாகாவைப்பற்றி சொல்லும்போது, அதன் தலைவரைப்பற்றி குறிப்பிட வேண்டி யிருக்கிறது. அமைச்சர் பொறுப்பு வகிக்கின்ற ஒரு இலாகாவைப் பற்றி பேசும் போது, அவரைப்பற்றியும் குறிப்பிடவேண்டியிருக் கிறது, அப்போது நண்பர் பட்டக்காரர், நண்பர் திரு. ராமைய்யா என்று சொல்லவேண்டியிருக்கிறது. என்றால் அப்படிச் சொல் லாமல் இருக்க முடியவில்லை ஒருவேளை என்னை அறியாமல் சொல்லும் ஒரு குறையாக இருக்கலாம். அந்த முறையில் மின்சார இலாகாவின் தலைவர் என்ற முறையில்தான் அவர்களுடைய பெயரைச் சொல்லவேண்டியிருக்கிறதே தவிர, தனிப்பட்ட முறை யில் அவரைப்பற்றி குறிப்பிட வேண்டும் என்பதற்காக சொல் வதல்ல, அப்படிச் சொல்வதற்கு இடமேயில்லை என்பது என்னுடைய ஸ்ட்ராங்கான அபிப்பிராயம் என்பதை நான் பல முறை சொல்லி யிருக்கிறேன். அந்த முறையில் தலைவர் பதவியில் இருக்கின்ற காரணத்தால்தான், அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

.. தமிழகத்தைப் பொறுத்தவரையில், 'அக்ரோ இன்டஸ்ட்ரீஸ்' அதாவது, விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்கள், சர்க்கரை ஆலை, காட்டன் மில் இவைகள் எல்லாம் நன்றாக வளர்ந்திருக் கின்றன. அதோடு விவசாயத்திற்கென்று இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிறோம் என்றால், அதைப்பார்த்து நாம் எல்லோரும் பெருமையடையவேண்டும். முக்கியமாக, இதில் மின்சார வெட்டு அவசியமா என்பதையும் நாம் பார்க்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இந்த 'கட்' அவசியமேயில்லை என்பதுதான். இது தேவைதானா என்பதை நண்பர் திரு. ராமைய்யா அவர்களிடத்தில் கேட்கிறேன். இந்தக் 'கட்'டினால் எந்த இன்டஸ்ட்ரியாவது பாதிக்கப்பட்டதா? என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்த இன்டஸ்ட் ரீயும் இந்த மின்சாரக் 'கட்'டினால் பாதிக்கப்படவேயில்லை, ஏதோ இப்படிப் பட்ட 'கட்' இன்ட்ரட்யூஸ் செய்வதின் மூலமாக அரசாங்கம் சில அதிகாரங்களை எடுத்துக்கொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட அதிகாரங்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட கட்' கொண்டுவரப்பட்டதோ என்று கூடநான் சந்தேகப்படுகிறேன். எல்லா சிமின்ட் பாக்டரி களும் ஓடிக்கொண்டிருந்தன. கோயம்புத்தூரிலுள்ள பல மில்களை எற்கெனவே அவர்கள் 'க்ளோஸ்' பண்ணுவது நல்லது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, 'கட்' வேண்டுமென்று சொல்லியிருக்கக்கூடும். ஆனால் உண்மையில் பாதிக்கப் பட்டவர்கள் யார்? சிறிய சிறிய அளவில் அதாவது 100 யூனிட், 50 யூனிட், 20 யூனிட், 10 யூனிட் என்று உபயோகித்து தொழில் செய்துகொண்டிருந்தவர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் இங்குள்ள தலைமை காரியாலயங்களில் வந்து யாரிடம் சொல்வகா

[திரு. கே. டி. கோசல்ராம்] [2nd August 1966

கொண்டு போனுர்கள். இவ்விதம் சிறிய சிறிய இன்டஸ்ட்ரீஸ் பாதிக்கப்பட்டன, பெரிய இன்டஸ்டரீஸ் எதுவுமே பாதிக்கப்பட வில்லை. அதைப்பார்த்து நாம் ஓரளவுக்கு பெருமைப்பட வேண்டியது தான். நண்பர் திரு. ராமைய்யா அவர்கள் மின்சார இலாகாவின் பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில், இந்த மாநிலத்தில் 'கட்' என்பது இல்லாமல் இருந்தது. அதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. எந்தவிதமான தொந்தரவும் இல்லாமல் சில வருஷங்களாக காப்பாற்றப்பட்டது. அதற்குத் துணையாக மின்சார போர்ட் தலைவர் அவர்களும், அவர்களுடைய சபார்டினேட்டுகளும் இருந்து வந்தார்கள். அதற்கேற்ற முறையில் அமைச்சர் நண்பர் திரு. ராமைய்யா அவர்கள் அங்கங்கு ஏற்படுகின்ற குறைகளைப் புரிந்து கொண்டு தீர்த்துக் கொண்டிருந்தார்.

இப்போதுள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால், கிராமங் களில் பலவிதமான குறைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. முக்கியமாக டிஸ்ட்ரிப்யூஷனில் இருக்கக்கூடிய குறைகள், தப்புகள் அதிகமாக இருக்கின்றன. அவைகளை இந்த இலாகா திறம்பட நிவர்த்தித்துவிட்டால், எந்த மனிதனும் அவன் எந்தக் கட்சியாக இருந்தாலும், இந்த இலாகாவை குறை கூறவே முடியாது. அதிகாரிகள் பல உத்தரவுகள் போடுகிருர்கள். ஆனல், கிராமத்தில் அந்த உத்தரவு சரியாக செயல்படுவதில்லை. இங்கேயுள்ள போர்ட் தலைவர் அவர்கள் 24 மணி நேரத்திற்குள் ஒரு காரியம் நடைபெறவேண்டும் என்று உத்தரவை போடு கிருர்கள் என்ருல், அந்த இடத்தில் காரியம் நடைபெற வேண்டும். நண்பர் அமைச்சர் திரு. ராமைய்யா அவர்கள் அந்த இடத்தில் இருந்து கொண்டு உடனடியாக—நேரடியாக இருந்து காரியத்தைச் செய்து காட்டியிருக்கிருர்கள். இதை மற்றவர்கள் வழிகாட்டியாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இப்போதுள்ள குறைகளை எடுத்துக்கொண்டால், பல மேலெழுந்தவாரியாக இருக்கின்றன. விவசாயிகளுக்கு கிராமங்களில் பல குறைகள் இருக்கின்றன. இந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து விட்டால் எல்லோராலும் இந்த இலாகா பாராட்டப்படும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, ஹொகனக்கல் திட்டம் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது அமைச்சர் நண்பர் திரு. ராமைய்யா அவர்களுக்கும், நமது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுக்கும் அத்யந்த நண்பர் மைசூர் முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா அவர்கள். இவர்கள் லெவலில் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமே தவிர, அதிகாரிகள் லெவலில் பேச்சுவார்த்தை நடத்துவது தவறு. இது ஒரு பொலிட்டிக்கல் டிஸ்கஷனுக இருக்க வேண்டுமே தவிர, நிர்வாக டிஸ்கஷனுக இருக்கக்கூடாது என்பது என் அபிப்பிராயம். அப்படிச் செய்வ தாக இருந்தால் சிரமமில்லாமல் இது நடந்துவிடும். அப்படிச் செய்திருந்தால் இப்போது இந்த அறிக்கையில்கூட சேர்த்து



2nd August 1966] [திரு. கே. டி. கோசல்ராம்]

அதைச் சொல்லியிருக்கலாம். அமைச்சர்கள் நேரடியாக பேச்சு வார்த்தை நடத்துவதாக இருந்தால் மைசூர் அரசாங்கம் ஒப்புதல் கொடுத்திருக்கக்கூடும். மைசூர் அரசாங்கம் பல நேரங்களில் நமக்கு உதவியாக இருந்திருக்கிறது. நமக்கு பெரும் கஷ்டம் வந்துவிடுமோ என்று சொல்லும்போது, சென்ட்பர்சென்ட் கட் வந்துவிடுமோ என்று சொல்லும்போது ஒரு அக்ரிமென்ட் போட்டார்கள். அதற்கு அந்த அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். எவ்வளவு வேண்டுமானலும், மின்சாரம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னர்கள். இப்போது அந்த அக்ரிமென்ட் கான்ஸல் ஆகிவிட்டது என்று கேள்விப்படுகிறேன். அப்படி இல்லாமல் அந்த அக்ரிமென்ட் நிரந்தரமாக இருந்தால்—அவர்களிடம் ஏராளமான மின்சாரம் இருக்கிறது—எப்போது வேண்டுமோ, அப்போது வேண்டிய அளவுக்கு நாம் அதை உபயோகித்துக்கொள்ளலாம். அந்த அக்ரிமென்டை கான்ஸல் செய்திருப்பார்களானல், அதை ரென்யூ செய்து எந்த நேரத் திலும் எடுத்துக்கொள்ளுவதற்குத் தகுந்தபடி அக்ரிமென்டை மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக, இதில் ஒன்று இருக்கிறது. 1968-69-ம் ஆண்டுதான் 3 சதவிகிதம் லாபம் வரும் என்று கண்டிருக்கிறது. 11 சதவிகித லாபம் வந்தால், 3 சதவிகிதம் நிகர லாபம் வரும் என்று கணக்கிட்டிருக்கிருர்கள். 1968-69-ம்தான் லாபம் வரும் என்று கண்டிருக்கிறதே தவிர, இன்று எவ்வளவு லாபம் வருகிறது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. அங்கத்தினர் களுக்கு அறிக்கை கொடுக்கும்போது நாளை என்ன வரும் என்று சொல்லி இருக்கிருர்கள். அதே நேரத்தில் இன்று என்ன இருக் கிறது என்று குறிப்பிடவேண்டும். அதைக் குறிப்பிடவில்லை. அதையும் குறிப்பிட்டிருந்தால் நன்முக இருக்கும். 1968-ல் 3 சத விகித லாபம் வரப் போகிறது என்று சொல்லும்போது, 1966-ல் எவ்வளவு லாபம் சம்பாதித்திருக்கிருர்கள் என்று சொல்ல வேண்டும். அதே நேரத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். லாபம் சம்பாதிக்கும்போது மின்சாரக் கட்டணத்தைக் கூட்டி விடவேண்டும் என்பது இல்லை. நிர்வாகத்தில் சிக்கனம் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டுமே தவிர, பொது மக்களிட மிருந்து கட்டணத்தை அதிகமாக வசூலிக்கவேண்டும் என்ற முறையை விட்டு விடவேண்டும். மக்கள் அரசாங்கத்தினல், மக்கள் பணத்தைக் கொண்டு நடத்தப்படும் இலாகா இது. பொது மக்களுக்கு நன்மை செய்கிற கருத்து இருக்கவேண்டுமே தவிர, அதிக லாபம் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதிக லாபம் வேண்டுமென்று சொல்லும்போது கட்டணத்தை அதிகமாக உயர்த்தக் கூடாது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற வருஷம் ஒன்று சொன்னேன். பதனீர் காய்ச்சுவது ஒரு காட்டேஜ் இன்டஸ்ட்ரி. அக்ரிகல்ச் சருக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்திற்கு எந்த அளவுக்கு சார்ஜ்

செய்கிறார்களோ, அந்த அளவுக்குப் பதனீரைக் காய்ச்சி கருப்பட்டி செய்யும் தொழிலுக்கு சார்ஜ் செய்ய உத்தரவு போட வேண்டுமென்று சொன்னேன். அப்போது கனம் முதல் அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அது இன்னும் காரியாம்சத்தில் வரவில்லை. அதை கனம் முதல் அமைச்சர், அவர்களுடைய கவனத்திற்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவருகிறேன். பதனீர் காய்ச்சுவதற்கு வேண்டிய ஃப்யூயல் கிடையாது. பதனீர் காய்ச்சும் இண்டஸ்ட்ரி இருக்கவேண்டுமென்றால், இனிமேல் மின்சாரம் மூலமாகத்தான் காய்ச்ச முடியும். பதனீர் காய்ச்சுவதற்கு மின்சாரம் கொடுப்பதில் எவ்வளவு அக்கறை காட்டவேண்டுமோ, அவ்வளவு காட்டவேண்டுமென்று மின்சார போர்டையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இலாகா அடிக்கடி கனம் திரு. ராமைய்யா அவர்களிடமும், கனம் திரு. வெங்கட்டராமன் அவர்களிடமும் வருகின்றது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு குறை சொன்னார்கள். கல்பாக்கம் மின்சார நிலையத்தின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்தாகி விட்டது. எவ்வளவு அவசரமாகக் கொண்டுவர முடியுமோ, அவ்வளவு அவசரமாகக் கொண்டு வந்தால்தான் மக்கள் ஏமாற்றம் இல்லாமல் இருப்பார்கள். இதிலே அரசாங்கம் நேரடியாக எந்த அளவுக்கு பிரயத்தனம் எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தூத்துக்குடி மின்சார நிலையத்தைப் பற்றி கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களுடைய கடிதங்கள், மத்திய அமைச்சர் திரு. ராவ் அவர்களுடைய கடிதங்கள் எல்லாவற்றையும் பத்திரிகையில் பார்த்தோம். அசிங்கமான நிலையில் இருந்தது. எப்படியும் அது வந்து விடும் என்று கனம் முதல் அமைச்சரும் சம்பந்தப்பட்ட அமைச்சரும் சொல்லும்போது அவர்களைப் பாராட்டுகிறேன். இப்போது தூத்துக்குடிக்கு மின்சாரம் குந்தாவிலிருந்து போகிறது. அதனால் வோல்டேஜ் 25 சதவிகிதம் போகிறது. எங்கள் ஊரில் இருக்கிற தாங்கத்ராவுக்கு அங்கிருந்து போகிறது. அதனால் வோல்டேஜ் ஏற்படுகிறது. இப்படி வோல்டேஜ் ஆவதை உபயோகப் படுத்தினால் நூற்றுக் கணக்கான பம்ப்செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியும். தூத்துக்குடி மின் நிலையம் வந்தாலொழிய, விமோசனம் கிடையாது.

சேர்வராயனில் மின்சாரம் உற்பத்திச் செய்யவேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்னால், 15 ஆண்டுகளுக்கு முன்னால், திட்டம் போடப்பட்டது. இன்றும் அந்தத் திட்டம் அச்சிட்டுக் கொடுக்கப் படுகிறதே தவிர, இன்னும் பூர்த்தி ஆகவில்லை. 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பரிசீலனை செய்து முடிவு கண்ட திட்டம். நான்காவது திட்டத்தில் அதையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





இப்போது இருக்கிற திட்டங்களெல்லாம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமானால், அரசாங்கத்தின் திறமை இருக்கிறது, மின்சார போர்டின் திறமை இருக்கிறது. இந்த இரண்டும் சேர்ந்துதான் இந்த மாநிலம் உணவில் பற்றாக்குறையாக இருந்தது போக, நாம் செல்ஃப்-சஃபிஷியெண்ட்டாக இருக்க முடியும். நாமே இயங்க முடியும் என்ற நிலையில் கொண்டு வந்திருக்கின்றன. அந்த அளவுக்கு முக்கிய காரணமாக இருக்கும் இலாகாவுக்கு எந்த அளவிலே அரசாங்கம் உதவி செய்யவேண்டுமோ, மத்திய அரசாங்கத்திலிருந்து எவ்வளவு உதவி பெறவேண்டுமோ, பெற்று— மந்திரிகள் எழுதும் கடிதத்தையே இல்லை என்று கூறுகிறார்கள், திரு. ராவ் போன்ற பொறுப்புள்ள மந்திரி இல்லை என்று கூறுகிறார், அந்த மந்திரி பப்ளிஷ் செய்கிறேன் என்று பப்ளிஷ் செய்கிறார், இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்றால், இங்குள்ள அமைச்சர்கள் தைரியமாக, பலமாகச் சண்டை போடவேண்டும், அப்படிப் போட்டால் ஒழிய இந்தக் குறையைத் திருத்த முடியாது— அந்த அளவில் உதவிகளைப் பெற்று திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. KUNJAN NADAR ; Mr. Deputy Speaker, Sir, I wish to place before the House some facts regarding the Kodayar Hydro-Electric Scheme which is being executed in the Kanyakumari district. Sir, the Electricity Board has very successfully established a Government there, just like the Naga Government or the Mizo Government. They are taxing the labourers working in that Project at the rate of two paise per head per day. They are collecting it as a sort of poll tax..

Regarding the execution of the scheme, there are two dams, a Lower Dam and an Upper Dam. Two tunnels are connected with these dams. About the contract for the construction of the tunnels, tenders were called for for the Upper Dam tunnel and finally the contract was given to Messers. Patel and Company for several lakhs of rupees. Sir, the contract for the Lower Dam tunnel was also given to the same Company at the same rate without calling for tenders. The work connected with the Lower Dam can be done at one-fourth of the rate for the work connected with the Upper Dam. The wage paid to a coolie at the Lower Dam is only Rs. 1.50 per head while the wage paid at the Upper Dam is Rs. 6 or 7. The living condition in the Upper Dam is very bad and the workers there are shivering in the biting cold there. A worker will not be able to work for more than two hours a day but he is paid Rs. 7. The Upper Dam is situated at an height of 5,000 feet above the Lower Dam. Also for rock blasting, Messrs. Patel & Company are paid Rs. 200 for 100 cubic feet. Perhaps the local contractors are doing this work for Rs. 18 or 19. Apart from that, for removing 1,000 units of loose earth, the same company is paid Rs. 180 per 1,000 cubic feet, whereas the local contractors are doing it for Rs. 18 per 1,000 cubic feet. What the people there say is that the wife of some

[Sri A. Kunjan Nadar] [2nd August 1966

big officer in the Electricity Board had to be treated at Bombay and the whole medical expenditure was met by this Patel Company and that is why they are given these rates.

MR. DEPUTY SPEAKER : When the hon. Member is making an allegation, has he made sure that there is any substance in it? It is not enough if the hon. Member says 'People are saying'. In the interest of parliamentary democracy, such allegations should not be made in the House, unless the hon. Member is prepared to take the responsibility for them.

SRI A. KUNJAN NADAR : I take full responsibility for that. I want to be charitable to that particular officer. That is why I did not say anything on my part about him.

Kanyakumari is famous for timber and for its cheapness and quality. This hydro-electric scheme is done in the interior of very dense forests. Timber contract is given to a timber contractor in Salem. He has to supply timber at the spot. But the Electricity Board lorries take the timber from Salem to the spot. One can see at the site, wood worth several lakhs of rupees fallen down and deteriorating for thousands of years, because there is nobody to remove it and no roadway to take it out of the forest. At that place timber is brought from Salem.

I will begin from the very foundation. The site for the foundation is decided after a thorough investigation, boring and testing the soil. The Lower Dam foundation is struck forty feet deep, spending several lakhs of rupees. There is loose clay. Now the authorities are thinking of just avoiding the site or filling up the whole pit with concrete. That means that the money spent for investigation was swallowed by somebody and that no investigation was done at all.

There is a road called the Malamore-Muthukuzhi Road. That is the main road which leads to the dam site. All the traffic is only through this road. It is three years since the road was laid. Till now, no metalling has been done. The authorities are going on engaging nominal muster roll coolies for repairing the road. They have spent 2 to 3 lakhs of rupees for repair alone. If the road is metalled according to the local Highways Department rate, it will cost only 30 or 40 thousand rupees. Instead of spending 30 or 40 thousand rupees, they are engaging nominal muster roll coolies and have spent 2 to 3 lakhs of rupees for repair.

Iron and cement required for both the dams are brought to the Lower Dam site through Nagercoil and Kuzhithurai. Afterwards they take the machinery and cement required for the Upper Dam back *via* Valliyur and Manjolai estates where they have to pay a toll of Rs. 10 per lorry. They come *via* Valliyur and they are transported *via* Valliyur. They are transporting the materials after taking them back 250 miles. This is the sort of business that is being done there.



2nd August 1966] [Sri A. Kunjan Nadar]

As regards workers, they employ less number of workers and show as if more persons are employed. It is a joint stock company, a co-operative society where the spoils are divided among all the people concerned. This is the third time that I am saying these things in this House. Nothing has happened till now. Evidence is available and I am prepared to prove all these things.

Then, about contracts. There is no tender, no agreement. Orally contractor is told : 'You do this work'. After finishing the work, the contractor is asked to quote. For a work costing Rs. 5,000, he quotes Rs. 50,000. Then he is told : 'You take Rs. 45,000 and give me Rs, 5,000. There will be leakages and wastages and I am prepared to leave a margin for them. But this is simply looting. Some expert committee must look into these things and see what amount of money has been spent and what has actually been turned out.

There is another thing going on there, a sort of double payment. If a contractor does the work, they pay his bill. After ten days they open another account, they say that they have directly done the work through muster roll coolies and show expenditure. I have verified myself. Many of these things are true. The Government say that they have spent so much money in excess of the target. Any fool can spend any amount of money in no time. What is the work done and what is the return we get? That is important. The Minister may say that the Government have spent a lot of money. I agree that they might have spent. But for nothing, for no return. It is not the Minister's money. It is the poor tax-payers' money.

Then there is the poll-tax. There is a widespread complaint. It is actually paid by the labourer. Thousands of labourers are working there, and they have to pay two paise a day. Not only steps should be taken to control this thing, but money must be realized from those who are responsible and they must be punished. With these words I resume my seat.

* **திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 12-00 noon.
சபை முன் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் மின்சாரத் துறை வரவு செலவு அறிக்கையை ஆதரித்து, வரவேற்று, ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த இலாகாவானது, உண்மையிலேயே பாராட்டுக்குரியது. அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இந்த இலாகா மற்ற இலாகா போன்றது அல்ல. இவர்கள் எப்பொழுதும் என்னென்ன ஸ்கீம்கள் புதிதுபுதிதாக போடமுடியும் என்று பரிசீலனை செய்து கொண்டே இருப்பார்கள். அப்படிப் பற்பல வேலைகளை எடுத்துச் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் இந்த இலாகாவில் சற்று குறைகள் இருப்பதற்குக்கூட காரணம் இருக்கிறது. தவறுகள் ஏற்பட்டாலும், எவ்வளவோ வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். அவர்கள் ரூ. 120 கோடிக்குமேல் 3-வது திட்டத்தில் செலவழித்

[திரு. வை. சங்கரன்] [2nd August 1966

திருக்கிறார்கள். 4-வது திட்டத்தில், சுமார் 217 கோடிக்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் செய்திருக்கும் வேலைகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால், அவர்கள் செய்திருக்கும் வேலைகளையும், அவர்களிடம் காணப்படும் தவறுகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால், அவர்களுடைய சிரமங்கள் புலப்படும். நமக்கு உரிமை இருக்கிறது. குற்றங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களும் குற்றங்குறைகளைத் தவிர்க்க வேண்டும். அதே நேரத்திலே அவர்களுடைய வேலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அந்த முறையில் பார்த்தால், அந்த இலாகாவிற்கும் அதன் தலைவருக்கும் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். இன்றைக்கு 25 சத விகிதம் கட் என்று சொன்னாலும் கூட—சாதாரண காலத்தில் தினம் 120 லட்சம் யூனிட் செலவாகி வந்திருக்கிறது, இந்த சமயத்தில் 110, 112 லட்சம் யூனிட் அளவுக்குக் குறையாமல் தினம் கொடுத்து வந்திருக்கிறார்கள். எந்தத் தொழிலும் பாதிக்கப் படவில்லை. உண்மையிலேயே எந்த சந்தர்ப்பத்திலேயும், 4, 5 சத விகிதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொண்டு அந்த அளவில் கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்கள் கன்சர்வேடிவாக முன்னதாகவே ஆரம்பித்துக் குறைத்துக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல், யாவரும் பாதிக்கபடாமல் பார்த்துச் செய்திருக்கிறார்கள். நல்ல வேளையாக தற்போது மழையும் வந்துவிட்டது. இதற்காக இந்த இலாகாவிற்கும், தலைவருக்கும் பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

போன தடவை நானே, இன்டர்-ஸ்டேட் கனெக்டிங் லைன்ஸ் சம்மந்தமாகப் பேசும்போது, அதற்கு யூடிலிடி இருக்குமா என்று சந்தேகப் பட்டுச் சொன்னேன். ஆனால், இன்றைக்கு அதன்மூலமாக மைசூரிலிருந்து 21 லட்சம் யூனிட்டுகள் பெறமுடிந்தது. கேரளாவிற்கும், ஆந்திராவிற்கும்கூட அனுப்ப முடிந்தது. நல்ல உபயோகமாக இருந்திருக்கிறது.

இன்றைக்கு அதற்குக் கிரையம் 9 பைசா என்று போட்டிருக்கிறார்கள். உற்பத்தி செய்வதின் முதலாவது ஆண்டு காஸ்டை வைத்துக்கொண்டு போட்டிருக்கிறார்கள். அதை விட்டு முதல் பத்து ஆண்டுச் செலவை சராசரி கணக்கிட்டு, அந்த முறையில் போட்டால், 5 அல்லது 6 பைசாதான் வரும். குறைந்த அளவில் போடவேண்டும் என்பதுதான் என்னுடைய யோசனை. அந்த அளவில் செய்தால், பயன் உள்ளதாக இருக்கும்.

பக்கத்து ராச்சியத்தில் ஏராளமாக சர்ப்ளஸ் இருக்கிறது. அதை நாம் உபயோகப்படுத்தினால், அதன் காரணமாக நெய்வேலி நிலக்கரிகூட மிச்சப்படும். 'ஸப்ஜெக்ட் டு திஸ் கண்டிஷன்', சீப்பாக, மத்திய சர்க்காரைத் தூண்டி, நீலகிரி ரேட்டிலே கொடுக்க இணங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு சர்பிளசாக உள்ள, மின்சாரத்தை வருடம் பூராவும் தொடர்ந்து சர்ப்ளஸை எடுத்துக்கொண்டால்,



2nd August 1966] [திரு. வை. சங்கரன்]

நெய்வேலி நிலக்கரியையும் கன்சர்வ் செய்து, அதை வேறு துறைக்கோ, அல்லது பிற்காலத்திற்கோ உபயோகப்படுத்த முடியும்.

தர்மல் ஸ்டேஷன் சம்பந்தமாகவும், அடாமிக் ஸ்டேஷன் சம்மந்தமாகவும், எதிர்க்கட்சி நண்பர்களும், ஆளும் கட்சி நண்பர்களும் எடுத்துச் சொன்னார்கள், அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். அரசாங்கத்தைத் தூண்டவேண்டியது அவசியம் தான். ஆனால், சொல்லும்போது ஏதோ அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைபோலச் சொல்லுவது சரியில்லை. இந்த பிரச்சினைகளில், நம் ராச்சியம் மட்டும் அல்ல, வேறு பல ராச்சியங்களோடும் சேர்ந்து சுமூகமாக முடிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனாலும் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, நாம் 'அன்சேரிடபிள் க்ரிடிஸிஸம்' ஆக சர்க்கார், போர்டார் நடவடிக்கை எடுக்கவில்லை, எடுக்கத் தவறிவிட்டது என்று சொல்வது சரியாகாது. நாமும் தூண்டி கூடிய சீக்கிரத்தில் செய்யச் சொல்ல வேண்டியதுதான்.

அடுத்து, எலெக்ட்ரிசிடி போர்டு எம்ப்ளாயிகளுக்கு இடம் விட்டுவசதி கிடைக்க அகாமடேஷன் கண்ட்ரோல் சம்மந்தமாக, ஏற்கனவேயே கனம் சீப் மினிஸ்டர் உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள், போர்டு எம்ப்ளாயிகளுக்கு அனுகூலம் செய்வதாக உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் எஸென்ஷியல் சர்வீஸ் தான், ஃபுட் பிரசர்வேஷன், வுட் ஓர்கிங் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்களை எஸென்ஷியல் சர்விஸாக கருதப்படும்போது இவர்களையும் எஸென்ஷியல் சர்விஸாகவேதான் கருதவேண்டும். அப்படிச் செய்ய ஆக்ட், ரூல் இரண்டையுமே மாற்ற வேண்டும் என்று அறிகிறேன். அப்படி இந்த எம்ப்ளாயிகளுக்கு அனுகூலமாகச் செய்ய ஆக்ட், ரூல் இரண்டையுமே திருத்தி, ரிக்விஸிஷன் எவிக்ஷன் இல்லாது பாதுகாப்பு இரண்டும் செய்ய சர்க்கார் கண்டிப்பாக பவர் எடுத்துக் கொள்ள வேண்டும். இவர்கள், போலீசார்கள், மாஜிஸ்ட்ரேட்டு இவர்களைவிடவும் முக்கியமானவர்கள். மொபசல் ஸ்டேஷன்களிலே வீடுகள் இல்லாமல் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் அகாமடேஷன் தேடித்தர வழிவகைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் சம்பந்தப்பட்டவரை நல்ல முறையிலே வேலைகள் செய்கிறார்கள். ஆனால், 'அட் தி காஸ்ட் ஆப் டொமஸ்டிக் கன்ஸ்யூமர்' என்கிற வகையிலேதான் செய்யப்படுகிறது. நான் அறிகிறேன், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவில் ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் அட்மினிஸ்ட்ரேஷனுக்குத் தனியாக 2½ சத விகிதத்திற்கு லோ இன்டரஸ்டிலே கடன் உதவி கொடுக்கிறார்கள். அந்த முறையில் நம் ராச்சியத்திலும், தனியாகக் கொடுத்து, 2½ சத விகிதத்திற்கு மேல் வட்டி வாங்காமல் செய்து, அதிக ரூரல் அபிவிருத்திச் செய்யலாம்.

எலெக்ட்ரிசிடி டெவலப்மெண்ட் பண்ட் சம்மந்தமாக செண்ட்ரல் பில் வரப்போவதாகத் தெரிகிறது. அதிலிருந்தும்

[திரு. வை. சங்கரன்] [2nd August 1966

ரூரல் எலெக்ட்ரிபிகேஷனுக்குக் கொடுக்க, நம் சர்க்கார் வழிவகைச் செய்ய வேண்டும். அதைச் சிப்பாகச் செய்யவும் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

கஸ்டம்ஸ், விற்பனைவரி போன்ற டாக்ஸ் சம்பந்தப்பட்டவரை மின்சார போர்டுக்கு ரிபேட் கொடுக்க வேண்டும். மெடீரியல் வாங்குவதில் 30 சதவிகிதம் காஸ்ட் வரிகளில் போய்விடுகிறது. அதற்கெல்லாம், போர்டுக்கு ரிபேட் கொடுக்க வேண்டும், அப்படிக் கொடுத்தால் மெடீரியல் விலையும் குறையும். ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் காஸ்டும் குறையும்.

இன்ஷூரன்ஸ் சம்மந்தமாகச் சொல்லும்போது, ஓபன் லைனில் வேலைசெய்கிறவர்களுக்கு / மட்டும் செய்கிறார்கள். மின்சாரத் துறையில் இருப்பவர்கள் அனைவரும் அதிக 'ஹஸார்டஸ்' வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள். ஆதலால் டிபார்ட்மெண்டே எடுத்துச் செய்ய வேண்டும். அவனுடைய ஆபத்து அவனை மட்டும் பொறுத்திருக்கவில்லை. மற்றவனுடைய ஜாக்கிரதையையும் பொறுத்திருக்கிறது. இட் டிபெண்ட்ஸ் ஆன் அதர்மான்ஸ் ஸேஃடி ஆல்ஸோ. ஆகவே அப்படி ஹசார்டசாக வேலை செய்பவர்களுக்கு இலாகாவே இன்ஷூர் செய்ய வேண்டும்.

ரெயில்வே ஊழியர்களுக்கு கிடைப்பதுபோல, போர்டு ஊழியர்களுக்கும், காண்டுக்கு 15 பைசா என்று ரேட்டு போட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன், ரெயில்வேயில் அவர்களுடைய ஊழியர்களுக்கு அந்த மாதிரிச் சலுகை காட்டப்படுகிறது; அதே போல, போர்டு ஊழியர்களுக்கும் ரெஸிடென்ஷியல் யூஸேஜுக்கு காண்டுக்கு 15 பைசாவே போடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஃப்யூயல் ஸர்சார்ஜ் சம்பந்தப்பட்டவரையில் சென்னையில் ஜூலை-டிசம்பரில் தர்மல் பவரை நாம் நம்பி இருக்கவில்லை; ஹைட்ரோ பவர் கிடைக்கிறது. ஆகவே, தற்போது ஹைட்ரோ பவர் இடத்தில் இருப்பதைப்போல இரண்டு மடங்கு ஆகிறது. அந்தக் காலத்தில் இம்மாதிரி சர்சார்ஜ் போடுவது பொருந்தாது. ஆகவே, அந்தக் காலத்திலாவது அந்தச் சர்சார்ஜை நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

போர்டில் ஊரளவுக்கு நல்ல இன்டரஸ்ட் உள்ள நான்அபிஷியல்களுக்கு ரெப்ரஸென்டேஷன் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கன்ஸல்டேடிவ் கவுன்ஸில் ஸ்டேட் லெவலோடு நின்றுவிடுகிறது. இன்றைக்கு ராஜ்ஜியத்தில் பல ஸிஸ்டம்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஸிஸ்டத்திற்கும் தனியாக லோகல் கன்ஸல்டேடிவ் கவுன்சில் அமைத்தால் நல்லது. அப்படிச் செய்தால் ஆங்காங்குள்ள நிலைமைகளைத் தெரிந்துகொண்டு வேலை செய்வதற்கு மிக ஆதரவாக இருக்கும். அதையும் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பேஸின் பிரிட்ஜ் ஒர்க்கர்ஸ் க்வார்ட்டர்ஸ் இடப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருந்தாலும், குவார்ட்டர்ஸ் வேலையைச் சீக்கிரம் எடுத்து நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.



2nd August 1966] [திரு. வை. சங்கரன்]

அடுத்து, வயர்மென் கண்ட்ராக்டர்கள் பற்றி எடுத்துச் சொன்னேன். இந்தக் கூட்டத்தில் கூடக் கூறினார்கள். ஏ, பி, ஸி என்று பிரித்து 'பி' கண்டிராக்டர்கள் எல்.ஈ.ஈ. படித்த சூபர்வைசர்களை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக, கண்ட்ராக்டர்களை எடுத்துக் கொண்டால், ஒரு சிலர் அதிகப் படிப்பு இல்லாதவர்கள்கூட இதில் இருக்கிறார்கள். அவர்களிடம் எல்.ஈ.ஈ படித்தவர்கள் சூபர்வைசர்களாக வந்து வேலை செய்வதற்குச் சம்மதிக்க மாட்டேன் என்கிறார்கள். மதுரை போன்ற பெரிய நகரங்களில்கூட ஐந்தாறு எல்.ஈ.ஈ. சூபர்வைசர்கள் கிடைப்பதுகூட அரிதாக இருக்கிறது. சூபர்வைசர்கள் வைத்திருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கும் நிலையில், அது சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. அதுபோன்ற நிபந்தனை போட்டிருப்பது 'பி' லைசன்ஸ் பெற்றுள்ள கண்ட்ராக்டர்களுக்கு 'ஹார்ட்ஷிப்' ஆக இருக்கும். அந்த நிபந்தனையை எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இவர்கள் மெக்கர் எர்த் டெஸ்டர் போன்ற பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இன்ஸ்ட்ருமென்ட்கள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்நியச் செலாவணி கிடைக்காத காரணத்தால், அது மிகவும் கடுமையாக இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும், இத்தகைய இன்ஸ்ட்ருமென்ட்களை வைத்திருந்து இத்தகைய கண்டிராக்டர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். வயர்மென் கண்டிராக்டர்களுக்கு இந்த அனுகூலத்தைச் செய்து கொடுக்க வேண்டும்.

'பி' லைசன்ஸ்தார்களுக்கு ஆயிரம் ரூபாயும், 'ஸி' லைசன்ஸ்தார்களுக்கு ஐந்நூறு ரூபாயும் என்று பிரித்திருக்கிறார்கள். அதுபற்றி சென்ற தடவையும் உறுதி அளித்தார்கள். 'பி' லைசன்ஸ்தார்களுக்கும் ஐந்நூறு ரூபாய் அளவிற்குக் குறைக்கப்படும் என்று சொன்னார்கள். இரண்டு விதமாகப் பாகுபாடு செய்யாமல், ஐந்நூறு ரூபாய் அளவிற்குக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல கிராமங்களில் அடிக்கடி ஃப்யூஸ் போய்விடுகிறது. பல மணி நேரம் விளக்கு இல்லாத நிலை ஏற்படுகிறது. போதிய லைன்மென் இல்லாததுதான் இதற்குக் காரணம். ஆகவே, அதிகமான லைன்மேன்களை நியமிக்க வேண்டும். உடனடியாகத் தொடர்பு கொள்ள அவர்களுக்கு டெலிபோன் வசதியும் செய்து கொடுத்தால்தான் கிராமங்களில் தட்டுப்பாடு, பிரேக்டௌன் இல்லாமல் மின்சார வசதி கிடைக்க வசதியாக இருக்கும்.

அடுத்து, ஓனர்ஷிப் சர்டிபிகேட் தாசில்தாரிடம் சென்று வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. மின்சார பம்ப்செட் போட வேண்டுமென்றால் ஓனர்ஷிப் சர்டிபிகேட் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக நிலைமையை ஸிம்ப்ளிஃபை செய்ய ஏதாவது செய்யவேண்டும்.

[திரு. வை. சங்கரன்] [2nd August 1966

லைசென்ஸிகள் இருக்கும் இடங்களில் மின்சாரக் கட்டண விகிதத்தை அதிகரித்திருக்கிறார்கள். 25 சத விகிதம் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. திடீர் என்று ஒரேயடியாக உயர்த்துவது நல்லதா என்று பார்க்க வேண்டும். படிப்படியாக இருந்தால் பரவாயில்லை. திடீரென்று 25 சத விகிதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதைக் குறைப்பதுபற்றியும் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

பொதுவாக நம்முடைய மின்சார இலாக்கா நல்ல முறையில் வேலை செய்துகொண்டு வந்திருக்கிறது ; துணிச்சலாகப் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. இந்த இலாக்காவையும், அதன் தலைவரையும் பாராட்டிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. வி. எஸ். எஸ். மணி : கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மின்சார போர்டின் 1966-67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரிலும், 1965-66-ம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையின் பேரிலும் ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய நண்பர் திரு. கோசல்ராம் அவர்கள், மின்சார வெட்டினால் பெரிய தொழில்கள் பாதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதை நான் ஏற்கவில்லை. நண்பர் திரு. கோசல்ராம் அவர்கள் சார்ந்துள்ள கட்சிக்கு உறுதுணையாக இருந்துவருகிற பெரிய பெரிய தொழிலதிபர்கள் வேண்டுமானால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால், தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது ; உற்பத்தி பாதிக்கப்படுகிறது. உற்பத்திக் குறைவு ஏற்பட்டால் அதனால் விலைவாசி கூடுகின்றது.

குறிப்பாக, நூல் உற்பத்தி செய்யக்கூடிய மில்களை எடுத்துக் கொள்ளுங்கள். நூல் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டவுடனேயே நூலின் விலை கூடுகிறது. அதனால் நெசவாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இவற்றைத் தவிர்க்க ஒரே ஒரு வழி அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதுதான். நீர் மின்சார (ஹைடல் பவர்) உற்பத்தியையே எப்போதும் நம்பியிருப்பது சாலச் சிறந்தது அல்ல. குறிப்பாக, கோடை காலத்தில் ஆண்டுதோறும் மின் வெட்டு வருகிறது. அதைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி அனல் மின்சார நிலையங்களை (தெர்மல் பவர் ஸ்டேஷன்ஸ்) அதிகப்படுத்துவதுதான். இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் ; அதிக அக்கறைகொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, மைசூர் மாநிலத்திற்கும் நமது மாநிலத்திற்கும் பொதுவான ஹொகேனக்கல் நீர் மின்சாரத் திட்டம் பற்றிப் பல நாட்களாகப் பேச்சுகள் நடந்துகொண்டு வருகின்றன. இன்னும் குறிப்பிட்ட அபிவிருத்தி ஏற்பட்டபாடில்லை. ஆனால், நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மாநிலத்தில் நீர் வசதி அதிகமாயிருந்தால், அதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சக்தி அந்த மாநிலத்திற்கு மட்டும் தனி உரிமை உடையது என்று கருதுவது நல்ல



2nd August 1966] [திரு. வி. எஸ். எஸ். மணி]

தல்ல. கேரளம், மைசூர், தமிழகம் ஆகிய இந்த மூன்று மாநிலங்களுக்கும் சம்பந்தப்பட்ட நீர்த் திட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து, ஒரு ஸோனல் கண்ட்ரோலுக்கு (Zonal Contrel) உட்படுத்தி அமலாக்கினால் எந்தவிதமான தட்டுப்பாடும் வராது என்பது என்னுடைய கருத்தாகும். இந்த ஆலோசனையை மின்சாரக் கழகமும், அமைச்சரவையும் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ரூபாய் மதிப்புக் குறைவின் விளைவாக, நமது மின்சார போர்டுக்குத் தேவையான அத்தியாவசியமான இயந்திர சாதனங்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும்போது அதிக விலை கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. சுமார் இரண்டு கோடி ரூபாய்க்கு மேலாக அதிக விலை கொடுக்கவேண்டியிருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த அதிகத் தொகையை ஈடுகட்ட கூடுதல் நிதியை மத்திய அரசாங்கத்திடமிருந்து வற்புறுத்தி வாங்க வேண்டுமே யொழிய, வரியின்மூலமோ, மின்சாரக் கட்டணத்தை அதிகப்படுத்தியோ மக்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எலெக்ட்ரிஸிடி போர்டார் கடன் பத்திரங்கள் மூலமாகக் கடன் வசூலிக்கிறது. பொது மக்களிடமிருந்து குறிப்பாக விவசாயிகளிடமிருந்து, இவ்வாறு வசூலிக்கப்படுகிறது. அந்தப் பத்திரத்தை வைத்துப் பாங்குகளில் கடன் வாங்க முடியவில்லை. அந்தப் பத்திரங்களை நெகோஷியபிள் பாண்டாக Negetiable ஆக்கி, ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் வாங்குவதற்கு வழி செய்யவேண்டும். நமது மாநில சர்க்கார் மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி அந்த முறையைச் செய்தால் மின்சார போர்டார் வெளியிட்டிருக்கும் கடன் பத்திரத்தை வைத்திருப்பவர்கள் அந்தப் பத்திரங்களின் பேரில் கடன் வாங்க வசதியாக இருக்கும்.

மின்சார வெட்டு வரும் காலங்களில் கிராமங்களில் உள்ள நெல் அரைக்கக்கூடிய மில்களைப் பகல் நேரத்தில் ஓட்டக்கூடாது, இரவில்தான் ஓட்டவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறார்கள். பெரும்பாலும் கிராமங்களில் உள்ள பெரிய ரைஸ்மில்கள் எல்லாம் கூலிக்கு அரைக்கும் மில்களாகத்தான் இருக்கின்றன. கூலிக்குத் தானியத்தை எடுத்துச் சென்று அரைத்து வருகிறவர்கள் பெண்கள். தலையில் தானியத்தைச் சுமந்துகொண்டு வருகிற பெண்களிடம் இரவு நேரங்களில் வந்தால் தான் அரைத்துக் கொடுப்போம் என்று சொல்வது சரியல்ல. இதனால் பொது மக்களுக்கு மிகுந்த கஷ்டம் வருகிறது. ஒரு மில்லுக்கு இத்தனை யூனிட்தான் என்று நிர்ணயித்து விடுவதால் அவர்கள் எப்போது அரைத்தால் என்ன ? இரண்டாவதாக தோட்ட விவசாயிகள் பம்புசெட்டுகள் வைத்திருந்தால் அவர்களும் இரவில்தான் மின்சாரப் பம்பு செட்டை உபயோகிக்கவேண்டுமென்கிறார்கள். அவர்களுக்கும் நாம் யூனிட் இவ்வளவு என்று நிர்ணயித்திருக்

கிறோம். ஆகவே பகல் நேரங்களிலேயே தோட்ட வேலைக்கு இடையூறு இல்லாமல், மின்சாரத்தை எடுத்துக்கொள்ள அனுமதித்தால் என்ன என்பதையும் யோசிக்கவேண்டும். அவர்களுக்கு வசதியான நேரத்தில் மின்சாரத்தை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

மேலும் தோட்ட விவசாயம் செய்கிறவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கடன் வாங்கி பம்பு செட்டுகள் வைக்கிறார்கள். பம்பு செட்டு வைக்க நாலாயிரம், ஐயாயிரம் ரூபாய் என்று கடன் வாங்கி பம்பு செட்டு வைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைப்பதில்லை. வருடக் கணக்கில் இணைப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் மேலதிகாரிகள் கூட இல்லை, கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் அவர்களுக்குள்ள தட்சிணையைக் கொடுக்காத காரணத்தினால் இப்படிச் செய்வதாகப் புகார்கள் வருகின்றன. மேலதிகாரிகள் இதனையும் கண்காணித்துப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். பொதுமக்களுக்கு மின்சாரச் சாமான்கள், பல்பு, ஒயர் போன்றவைகள் எல்லாம் அதிகம் தேவைப்படுகின்றன. ஒரு சில கம்பெனிகள்தான் அவற்றுக்கு லைசென்ஸ் பெற்றிருக்கின்றன. தாங்கள் வாங்குகிற சாமான்களுக்கு நியாயமான விலையை வெளியே கொடுத்து வாங்குகிறோமா இல்லையா என்பதே பொதுமக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே ஒவ்வொரு மின்சார சாமானின் நியாயமான விலை என்ன என்பதை மின்சார போர்டார் அவ்வப்போது அறிவிக்கவேண்டும். இரண்டாவதாக முடிந்தால் அந்த அந்த சாமான்களை வாங்கி மின்சார போர்டார் பெரிய நகரங்களில் தங்கள் Sales units மூலம் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும், காலாகாலத்தில் கிடைக்கச் செய்யவேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மின்சார போர்டின் நிதி நிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்திலே மின்சார போர்டு ஆற்றி வரும் பணி மிகவும் பாராட்டத்தக்கது. சிறப்பாக விவசாயிகளுக்குத் தொடர்ந்து அவர்கள் செய்து வரும் பணிகளுக்காகக் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களின் சார்பாகவும், விவசாயிகளின் சார்பாகவும், நான் மின்சார போர்டின் தலைவருக்கும், அதன் அங்கத்தினர்களுக்கும் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால், இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், மிகமிக வருந்தத்தக்க நிலையில் உள்ள விவசாயிகளுக்கு மின்சார போர்டார் எத்தனை கிணறுகளுக்கு முடியுமோ, அத்தனை கிணறுகளுக்கு பம்புசெட்டு கனெக்ஷன் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். ஆகவேதான், விவசாயிகளின் சார்பில் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.





எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் ஏதோ விவசாயிகள் நாலாயிரம், ஐயாயிரம் ரூபாய் கடன்பட்டு மின்சார மோட்டார் வைத்திருப்பதாகவும், மின்சார போர்டார் இணைப்புக் கொடுக்கவில்லை என்றும் குற்றம் சொன்னார்கள். நான் கோவை மாவட்டத்தில் இருந்து வந்திருக்கிறேன். அந்த மாவட்டம்தான் லட்சக்கணக்கான மோட்டார்களைத் தயார்செய்து நமது மாநிலத்திற்கு சப்ளை செய்கிறது. சாதாரணமாகப் பத்து ஹார்ஸ் பவர் மோட்டார் என்றாலும்கூட இரண்டாயிரம் ரூபாய்களுக்குமேல் இல்லை. ஐந்து ஹார்ஸ் பவர் என்றால் ரூபாய் ஆயிரத்திற்குள்தான் இருக்கும். ஆனால் அந்த அங்கத்தினர் நாலாயிரம், ஐயாயிரம் ரூபாய் 'கடன்பட்டு' என்றார்கள்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** நான் ஒரு பம்புசெட்டின் விலை அது என்று சொல்லவில்லை. அப்படி ஆயிரக்கணக்காக பம்புசெட்டுகள் வைத்து நஷ்டம் அடைந்து கொண்டிருக்கிற விவசாயிகள் பலர் என்பதைக் குறிப்பிடத்தான் சொன்னேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆயிரக்கணக்கான பம்பு செட்டுகள் என்றாலும் நாலாயிரம், ஐயாயிரம் ரூபாய் என்பது பொருத்தமாக இருக்காது. இப்படி ஏதோ பொருத்தமில்லாமல் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகப் பேசுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டத்தான் சொன்னேன்.

அடுத்து, ஓர் அங்கத்தினர் மின்சார வெட்டினால் பட்டினிச்சாவு ஏற்பட்டதாகச் சொன்னார். நான் கோவை மாவட்டத்திலிருந்துதான் வருகிறேன். இருகூர் கிராமம் எனக்குத் தெரியாதது அல்ல. அங்குள்ளவர்கள் என்னுடன் நெருங்கிப் பழகுகிறவர்கள். அங்கே உள்ள ஒரு தாய் தன் இரு குழந்தைகளுடன் தற்கொலை செய்துகொண்டது மின்சாரவெட்டின் காரணமாக வேலை இழந்து, பட்டினி ஏற்பட்டதன் காரணமாக என்பதாக ஒரு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சொல்வதைப்போல் கேவலமானது எதுவும் இல்லை. எனக்கு அது விவரம் தெரியும், நிலைமை என்ன என்பதைச் சிந்திப்பதே கிடையாது. 'ஐயோ பாவம், இந்தத் தற்கொலைக்குப் பட்டினிதான் காரணம்' என்று அங்கலாய்ப்பது, ஒரு சட்டசபை அங்கத்தினர் அதுவும் இந்த மன்றத்தில் பேசக்கூடியதா என்று சிந்திக்கவேண்டும்.

* * * * *

அதற்குமேல், எத்தனையோ என்ஜினியர்கள், ஊழியர்கள் லஞ்சம் வாங்குவதாகச் சொன்னார்கள். யார் லஞ்சம் வாங்கினார்கள் என்பதாக மின்சார போர்டின் தலைவருக்குச் சொன்னார்களா? தலைவர் அதற்கு என்ன சொன்னார், 'அப்படித்தான் வாங்குவார்கள்' என்பதாகச் சொன்னார்களா என்று அறிய விரும்புகிறேன். இப்படி ஆதாரமற்ற வகையில் பொதுப்படையாகச் சொல்வது சரியல்ல. எனக்குத் தெரிந்தவரையில் என்னுடைய தொகுதியில் 77 கிராமங்களுக்கு மின்சார வசதி

** Expunged as ordered by the Chair.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [2nd August 1966

அளித்திருக்கிறார்கள். ஏராளமாக விவசாயிகளுக்கு உதவி
செய்து வருகிறார்கள். கோதுமை, சோளம் முதலியன அரைப்
பதற்கு ஒவ்வொரு மில்லுக்கும் 300 யூனிட் என்பதாகக்
கொடுத்துவிடுகிறார்கள். அதற்கு மேலும் செலவாகிறது. அந்த
அளவைத்தான் இரவு நேரங்களில் உபயோகப்படுத்திக்கொள்ளச்
சொல்கிறார்கள். அதுபற்றி நாங்கள் அதிகாரிகளிடத்தில்
சொன்னோம். பகல்வேளையில் லோட் தாங்காது, மாலை 6 மணி
முதல் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றார்கள். அவர்கள்
சொல்வது நியாயம்தான். அதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வந்தன,
எத்தனைக்குக் கொடுத்தார்கள் என்று கேட்டார்கள். இன்று
களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்றால் அந்தச்
செய்தியை எல்லோருக்கும் அறிவிக்க வேண்டியிருக்கிறது. 600
பேர்களுக்குத்தான் கொடுக்க முடியும் என்றால் குறிப்பாக 600
பேர்களிடம் மட்டும் சொல்வது என்றால் அது ஜனநாயகமா?
எல்லோருக்கும் அறிவிக்கிறோம். விண்ணப்பம் போடுகிறார்கள்.
அதிகமான விண்ணப்பங்கள் வருகின்றன. கொடுக்க முடிந்த
அளவு கொடுத்து விடுகிறார்கள். இதில் தவறு என்ன இருக்
கின்றது?

அடுத்து கோடிக்கணக்கான ரூபாய்களைப் போட்டு வாங்கிய
சாமான்கள் இன்றையதினம் வெய்யிலிலும், மழையிலும் கிடக்
கின்றன என்றார்கள். இது ஒரு குற்றச்சாட்டா? மின்சார
போர்டார் வாங்கியுள்ள சாமான்கள் வெய்யிலிலும், மழையிலும்
கிடக்கின்றன என்றால், அவை வெய்யிலிலும், மழையிலும் கிடந்து
தான் நமக்குப் பயன்படப்போகின்றன. ஒரு வீட்டைக் கட்டி
அதற்குள்ளேயா அவற்றைப் போட்டு வைக்க முடியும்? அல்லது
அதற்காகக் கோடிக்கணக்கில் செலவிட்டு கோடவுன்கள் கட்ட
முடியுமா? ரூபாய் மதிப்புக் குறைப்பின் காரணமாக அவர்களே
விலையேற்றத்தைக் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு ஒரு
கோடிக்கு வாங்கியுள்ள சாமான்களை இந்த ஆண்டு வாங்கப்
போவது என்றால் நிச்சயம் ஒன்னேகால் கோடி, ஒன்றரைக்
கோடி ஆகும். நாளுக்கு நாள் அலுமினியம், செம்பு, இரும்பு
இவற்றின் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றன. அந்த வகையில்
பார்த்தாலும் விவசாயிகளுக்கு லாபம்தான். வெய்யிலிலும்,
மழையிலும் கிடக்கின்ற பொருள்கள் நமக்கு என்றைக்குமே
வெய்யிலிலும், மழையிலும் கிடந்துதான் பயன்படவேண்டும்.
ஆகவே, அதன் தரத்தையும் நாம் தெரிந்துகொண்டுவிட முடியும்.

30 அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப்பற்றிய சில கருத்
துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி ஒரு
பஞ்சப் பிரதேசம். ஒரு கிணறுக்கு இரண்டு மோட்டார்கள்
ஓடுகின்றன. 10 ஹார்ஸ் பவர் மோட்டார்கள் ஓடுகின்றன. ஒரு
மோட்டார் கீழே உள்ள தண்ணீரை மேலே கொண்டு வருகின்றது.
மற்றொரு மோட்டார் அந்தத் தண்ணீரை இறைக்கிறது. ஒரு



2nd August 1966] [திருமதி சி. குழந்தையம்மாள்]

விவசாயிக்குச் சாதாரணமாக 150 ரூபாய் மின்சாரக் கட்டணம்
என்று சொன்னால், எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய
விவசாயிக்கு 210 ரூபாய் மின்சாரக் கட்டணம் வருகிறது.
மின்சார போர்டார் மூன்று மாதச் சராசரிப் பணம் கட்ட
வேண்டுமென்று சொல்கிறார்கள். இரண்டு மோட்டார்கள் வைத்து
தண்ணீர் இறைத்து விவசாயம் பண்ணக்கூடிய நிலையில் நாங்கள்
மூன்று மாதச் சராசரிப் பணம் கட்டமுடியாத நிலை இருக்கிறது.
ஆகவே, மூன்று மாதச் சராசரி கட்டவேண்டுமென்று சொல்லி
கியாரண்டி வாங்கினால் மீண்டும் அவர்கள் கஷ்டப்படுவார்கள்
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுப் பட்டாதார்கள் நான்கு பேர்கள்
இருக்கிறார்கள் என்றால் அவர்களில் ஒரு ஆள் கையெழுத்துப்
போடவில்லை என்றால்கூட அவர்களுக்குக் கனெக்ஷன் கிடைப்பதே
இல்லை. நான்கு பேர்களில் மூன்று பேர்கள் கையெழுத்துப்
போட்டாலும்கூட அவர்களுக்குக் காரியம் நடைபெறுவதில்லை.
ஆகவே, இந்த விஷயத்தில் அவரவர்கள் பரம்பரை பாத்திய
தையைப் பார்த்து, அவரவர்கள் பட்டாக்களைப் பார்த்து
மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
மின்சார இலாகா தீவிரமாக விவசாயிகளுக்கு மின்சாரத்தை
வழங்கிக்கொண்டு வருகிறது. விவசாயிகள் அனுபவிக்கக்கூடிய
மின்சாரத்தினுடைய விலைக்கும், தொழிற்சாலைகளுக்கும் கொடுக்
கக்கூடிய மின்சாரத்தினுடைய விலைக்கும் வித்தியாசம் அதிகமாக
இருக்கிறது. நம்முடைய மாகாணத்திலே உணவு உற்பத்தியைத்
தீவிரப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் இருக்கும்
பொழுது, விவசாயிகளுக்கு அதிகப்படியான சலுகைகள் கொடுக்
கப்பட வேண்டுமென்று டில்லி அரசாங்கம் வற்புறுத்திவருவதை
நோக்க, விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் சலுகைகள்
கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புது கனெக்ஷன் கொடுக்கும்பொழுது பத்து
மணிக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள்.
தண்ணீர் இறைக்கவேண்டுமென்றால், ஒரு ஜோடி மாடு 1,500
ரூபாயில் இரண்டு ஜோடி மாடுகள் தேவைப்படுகின்றன. இரண்டு
ஆட்கள், மேற்கொண்டு தண்ணீர் கட்ட ஒரு ஆள் ஆகமொத்தம்
மூன்று ஆட்கள் வேண்டும். எப்படியும் ஒரு நாளைக்குக்
குறைந்தது ஐந்து ரூபாயாவது செலவு செய்யவேண்டியிருக்கிறது.
ஆனால், மின்சாரம் கொடுத்தால் இந்தக் கஷ்டங்கள் எல்லாம்
கிடையாது. ஆகவே, 10 மணிக்குக் கொடுக்கிறேன் என்று சொன்
னாலும்கூட ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். ஆனால், அந்த
நேரத்தில் அங்கே வரப்பும் தெரியாது, வாய்க்காலும் தெரியாது.
கரும்புத் தோட்டத்திலும் அப்படித்தான், பருத்திக் காட்டிலும்
அப்படித்தான். பாம்பு இல்லாத ஊரே கிடையாது. பாம்பு
கடித்து இரண்டு விவசாயிகள் இறந்தால்கூட இந்த நேரத்தில் அது
பெரிய நஷ்டம்தான். ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுக்கக்
கூடிய மின்சாரத்தை இரவு 10 மணிக்குக் கொடுக்காமல் அதை
மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [2nd August 1966

விவசாயிகளுக்கு மொத்தம் கொடுப்பதே மூன்று விளக்குகள் தான். அது போதாது. அதுவும் 40 வாட்தான் போடவேண்டுமென்றிருக்கிறது. 40 வாட் வெளிச்சத்தில் படிப்பதற்குக்கூட முடியாது. அப்படியிருக்கும்போழுது 7 எக்கர், 8 ஏக்கர் விஸ்திரணமுள்ள இடத்திலே 40 வாட் எப்படிப் போதுமானதாக இருக்கும்? ஆகவே அங்கெல்லாம் 150 வாட் போட்டுக்கொள்ள வசதி செய்துகொடுக்கவேண்டும். அவர்களுக்கு மூன்று விளக்குகள் அவசியமாக வேண்டியிருக்கிறது. ஒன்று கிணறு இருக்கிற இடத்தில் வேண்டியிருக்கிறது, மற்றொன்று தண்ணீர் பாய்கிற இடத்திலே வேண்டியிருக்கிறது, இன்னொன்று மாடு கட்டுகிற இடத்திலே வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட வசதிகளையெல்லாம் விவசாயிகளுக்குச் செய்துகொடுத்தால் ஒழிய நாம் விவசாயிகளுடைய அக்கறையில் பங்கு கொள்வதிலிருந்து தவறியவர்கள் ஆவோம். கட்டணத்தை அதிகப்படுத்தக் கூடாது. கட்டணத்தில் சலுகை கொடுக்கவேண்டும். அதோடு இரவில் பத்து மணிக்கு கனெக்ஷன் கொடுப்பதை விட்டுவிட்டுப் பகலிலே கொடுக்க வேண்டும். கூட்டுப் பட்டாதாரர்களுக்குப் பல ஆண்டுக் காலமாக கனெக்ஷன் கிடைக்காமல் இருக்கிற இடங்களில் கனெக்ஷன் கிடைக்க உடனே வழி செய்ய வேண்டும். எதிர்க்கட்சியினர் தெரிவித்த கருத்துக்களிலே பெண் இனத்தைப்பற்றிப் பொறுப்பற்ற முறையில் சட்டசபையில் சொல்வது வருந்தத் தக்கது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இருகூர் என்ற இடத்தில் ஒரு பெண் பட்டினிச் சாவு ஏற்பட்டிருக்கிறது என்பது பொறுப்பில்லாமல் பேசுவதா? அங்கே மின்சார வெட்டு ஏற்பட்டதின் காரணமாக பதினைந்து நாட்களுக்கு வேலையில்லாமல். . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member is making another speech.

SRI K. A. MATHIALAGAN: I want a clarification from the Member. She has said that I have made an irresponsible statement. கஷ்டப்பட்டு வேர்க்கடலை விற்றார்கள். பிறகு பாலிடால் சாப்பிட்டு இறந்துவிட்டதாகத் தெரிகிறது. பிரேத விசாரணைகூட நடந்திருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன். ஆகவே நான் பொறுப்பில்லாமல் பேசுகிறேன் என்று தயவுசெய்து அம்மையார் அவர்கள் கூறவேண்டாம்.

* **திரு. இரா. நாராயணன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1966-67-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீதும், 1965-66-ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் என்னுடைய கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சியில் உள்ளவர்களும், ஆளும் கட்சியில் உள்ளவர்களும் மின்சார போர்டின் நிலைமையைப்பற்றி விளக்கிக் கூறினார்கள். ஆனால், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் முதலில் பல்லவி



2nd August 1966] [திரு. இரா. நாராயணன்]

பாடி பிறகு முடியும் தருணத்தில் முகாரி பாடவேண்டிய நிலையில் தான் இருக்கிறார்கள். மின்சார போர்டைப்பற்றி எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் எல்லாம் எதை எதைச் சொல்லவேண்டுமோ அவற்றைச் சொல்லி வருகிறோம். அம்மையார் அவர்கள் பம்புசெட் ஆயிரம் ரூபாய்க்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள். கோயம்புத்தூரில் ஒரு பம்புசெட் ஆயிரம் ரூபாய்க்குக் கிடைக்குமென்று சொன்னால் நாங்கள் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு விவசாயத்திலே நீடித்த அனுபவம் இல்லை என்பதைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு பம்புசெட் 1,800 ரூபாய்க்குக் குறையாமல்தான் வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இதற்கு முன்னால் ஒரு அம்மையார் பேசும் பொழுது சொன்னார்கள், எலக்டிரிசிடி போர்டைப்பற்றித் தரக் குறைவாகப் பேசுகிறார்கள் என்று. என்னுடைய தொகுதியிலே ஒரு விவசாயி, கலெக்டருக்கும், வேப்பூர் கமிஷனருக்கும் தான் ஒரு மும்முனைப் போராட்டம் நடத்தப்போவதாகத் தாக்கிது விட்டிருக்கிறார். அடிக் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்கவில்லை என்றும் 30-ஆம் தேதிக்குள் கடன் கொடுத்தால் மும்முனைப் போராட்டத்தை நடத்தவில்லை என்று அறிக்கை விட்டிருக்கிறார். அதனைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. மின்சார போர்டாலே நாங்கள் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறோம். நான்கு நாட்களுக்கு முன்பு நான் போய் வேலை செய்துகொண்டிருந்த நேரத்திலே பியூஸ் போய்விட்டது. பியூஸ் போய்விட்டதால் பியூஸ் காரியர் மாற்ற முடியவில்லை. மாற்ற வேண்டுமானால் எங்கே ஆபீஸ் இருக்கிறதோ அங்கேதான் போய்ச் செல்லவேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகுதான் பியூஸ் காரியர் வேறு போட நேரிடுகிறது. கனம் அமைச்சர் அவர்கள் திருச்சி மாவட்டத்திற்கு இரண்டு கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்று புகழ்ந்து பேசினார்கள். ஆனால் இன்றைக்கு பம்புசெட் வாங்குவதற்கு வேப்பூர் பஞ்சாயத்து யூனியனிலே எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. நான் கூட அதுபற்றிக் கேட்டேன். கேணி வெட்டுவதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேப்பூர் வட்டாரத்தில் மின்சார மோட்டார் செட் வாங்குவதற்காகப் பணம் ஒதுக்கப்படவில்லை என்று கிராம சேவக் என்னிடம் சொன்னார். நாங்கள் மின்சார போர்டைப்பற்றிக் குறை கூற வேண்டுமென்ற நோக்கத்துடன் எதுவும் சொல்லவில்லை. சில மேலதிகாரிகளைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு பல தினுசாக நடந்து வருகிறார்கள். நான் டி. இ. அவர்களிடத்தில் குறைகளைச் சொன்னேன். எஸ். ஓ. அவர்களிடத்திலும் சொன்னேன். அவர்கள் பல காரணங்களைச் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒயர் இல்லை என்று சொல்கிறார்கள்; சாங்ஷன் ஆகவில்லை என்று சொல்கிறார்கள்; கம்பம் நடுவதற்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தால்தான் செய்வோம் என்று சொல்கிறார்கள். இவையெல்லாம் அதிகாரிகள் முன் நின்று தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிழப் பெரம்பலூர் கிராமத்தில் எஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்பட்டு ஒரு வருஷம் ஆகியும், மின் ஒளி விளக்கு இல்லாமல், பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. இரா. நாராயணன்] [2nd August 1966

அரியலூர் அதிகாரியைக் கேட்டால் எஸ்டிமேட் போட்டு அனுப்பி இருக்கிறோம், சாங்ஷன் ஆகி வரவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு எஸ்டிமேட் போட்டு சாங்ஷன் ஆவதற்கு ஒரு வருஷத்திற்கு மேலாகும் கால தாமதத்தைத் தவிர்க்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியானவர்களிடத்திலும் சில குறைகள் இருக்கின்றன. சந்நியாசிநல்லூர் என்ற கிராமத்தில் குடியானவர்கள் சரிவர அக்ரிமெண்ட் செய்து கொடுக்கவில்லை என்று மின்சார போர்டு அதிகாரிகள் என்னிடத்தில் சொன்னார்கள். குடியானவர்களை அணுகிக் கேட்டால் அவர்களுக்கு வேண்டிய உற்சாகம் இல்லை. பம்பு செட்டுக்காக 1,800 ரூபாய் கடன் வாங்குவதாக இருந்தால் 250 ரூபாய் லஞ்சமாகக் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையைத் தவிர்த்து அதிகாரிகள் உடனுக்குடன் விவசாயிகளை நேரடியாக அணுகி அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு லோன் கொடுக்கும்போது நேஷனல் சேவிங்சுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டும்; ஸ்மால் சேவிங்சுக்கு இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளால் விவசாயிகள் வற்புறுத்தப்படு கிறார்கள். இதற்காகப் பஞ்சாயத்துக் கமிஷனர், அதிகாரிகள் எல்லலாம் கிராமத்திற்கு வருகிறார்கள். இந்த மாதிரி வற்புறுத் தல்கள் எல்லாம் இல்லாமல் ஏழை விவசாய மக்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று காலையிலே எல்லாப் பத்திரிகைகளையும் பார்க்கும்போது, நம்முடைய அரசாங்கம் மின்சாரத் திட்டங் களுக்காக 217 கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறது என்று பெரிதாகப் போடப்பட்டிருந்தது. சாதாரண ஜனங்கள், 'நாட்டிலே பணம் இல்லையென்று சொல்கிறார்கள்; 217 கோடி ரூபாய் எங்கிருந்து வந்தது' என்று பேசிக்கொள்கிறார்கள். நான் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருக்கும்போது இந்த மாதிரிப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்கும்போது ஆச்சரிய மாக இருந்தது. அதே சமயத்தில், மின்சாரத்திற்காக இந்த அளவு செலவழிக்கும் திட்டம் ரொம்ப நல்ல திட்டம் என்று பேசிக் கொண்டதைக் கேட்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. என்னுடைய தொகுதியான வேடசந்தூரைச் சுற்றிக் கடந்த ஒன்பது வருஷங்களுக்கு முன்பு ஒரு ஊரில் கூட மின்சாரம் கிடையாது. ஆனால் இந்த ஒன்பது வருஷ காலத்தில் இருக்கின்ற 50 பஞ்சாயத்துக்களில் 40-க்கு மின்சாரம் வந்துவிட்டது ஒவ்வொரு கிராமத்திலும் 100 கிணறுகளுக்கு மேல் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. இந்த அளவுக்கு முன்னேற்றமான காரியங்களைச் செய்துள்ள மின்சார போர்டை அந்தக் கிராம மக்கள் நல்ல முறையில் பாராட்டுகிறார்கள். அவ்வாறு பாராட்டும் போது அங்கிருக்கும் குறைகளையும் யாரும் சொல்லாமல் இருக்க மாட்டார்கள்.



2nd August 1966] [திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்]

இருநூற்றுப் பதினேழு கோடி ரூபாய் செலவு செய்து 2,000 மெகவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் எல்லா மக்களுக்கும் மின்சாரம் கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு குடிசையிலும் மின் விளக்கு எரிய வேண்டும்; மின்விசை கிடைக்காத பம்பு செட்டுகளே இருக்கக்கூடாது. அர்பன் ஏரியாக்களில் எந்தத் தொழிலுக்கு மின்சாரம் கேட்டாலும் கொடுக்கவேண்டும். பெரிய தொழிலானாலும், சிறிய தொழிலானாலும் மின்சாரம் கொடுக்க வேண்டும். காந்தியடிகள் சொன்னார்கள், கைராட்டை மின்சாரத் தைக் கொண்டு ஓட்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்தால் நான் ஆட்சேபிக்க மாட்டேன் என்று. ஆகவே, சாதாரண ஜனங்கள் வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டுமென்றால், உயர வேண்டு மென்றால், அதற்கு மின்சாரந்தான் வழிகாட்டியாக இருக்குமே தவிர, மின்சாரம் இல்லாமல் வாழ்க்கைத் தரம் உயராது என்று இந்த மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். ஆனால், இன்றுள்ள நிலைமையில் சாதாரணக் குடிசையில் லைட் போட வேண்டுமென்றால் கிராம ஜனங்களுக்குச் சக்தி இல்லாமல் இருக்கிறது. சிறு கிணறு களுக்கு மின்சாரம் கொண்டுவர வேண்டுமென்றால் அது சாதாரண விவசாயிகளுக்குக் கிடைக்காத ஒன்றாகத்தான் இருக்கிறது. அதோடு பம்பு செட் தயார் செய்யும் விதம், மற்றப்படி எக்விப்மெண்ட்ஸ், ஒயர், ஸ்விச் இவற்றையெல்லாம் தயாரித்து விற்பதிலே காம்பிடிஷன் வேறு இருக்கிறது. இதிலே எப்படி லாபம் சம்பாதிக்கலாம் என்று மான்யுபாக்சரர்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிராமத்தார்களுக்கும், ஏழை ஜனங்களுக்கும் அவை எல்லாம் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த யூடிலிடி ஆர்டிகிள்ஸ், பம்பு செட்டுகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஸ்தாபனங்களை மின்சார போர்டே ஏற்படுத்தி நல்ல முறையில் கிராம மக்களுக்கு உதவ முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள சில குறைகளைக் கூற விரும்பு கிறேன். என்னுடைய தொகுதியில் கடந்த ஒன்பது வருஷங் களாக மின்சார விஸ்தரிப்பு வேலை நடந்துகொண்டு வருகிறது. ஐந்து வருஷங்களுக்கு முன்பு புரொபோசல் அனுப்பப்பட்டு, அக்ரிமெண்ட் சைன் பண்ணாமல் சாங்ஷன் ஆன புரொபோசல் களுக்கு நடைமுறையில் ஒர்க் ஆர்டர் வாங்க சிரமப்பட்டு, மறுபடியும் தாசில்தாரிடம் சென்று ஓனர்ஷிப் சர்டிபிகேட் வாங்கப் போக வேண்டுமென்று சொன்னால் சிரமாக இருக்கிறது. ஆகவே, புரொபோசல் அனுப்பும்போதே அக்ரிமெண்ட் கையெழுத்து வாங்கிச் சீக்கிரமாக சாங்ஷன் ஆர்டர், ஒர்க் ஆர்டர் கொடுத்தால், உடனடியாக ஆறு மாதத்தில் வேலையை ஆரம்பிக்க முடியும். இவ்வாறு செய்தால் இதிலே எந்தச் சிரமமும் இருக்காது. என்னுடைய தொகுதியில் 50 பஞ்சாயத்துக்களில் 40 பஞ்சாயத்துக்களுக்கு மின்சாரம் கிடைத்துவிட்டது. அந்தப் பத்து பஞ்சாயத்துக்களுக்கும் இன்னும் ஆறு மாதங்களுக் குள்ளாக ஒர்க் ஆர்டர் கொடுக்க வழி செய்யவேண்டும். என்னுடைய தொகுதியிலிருந்து திண்டுக்கலுக்கு வந்து

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [2nd August 1966

ஏ.இ.-யைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் 30, 35 மைல் தூரம் வரவேண்டும். வேடசந்தூரிலேயே ஒரு ஏ.இ. ஆபீஸ் திறந்தால் சௌகரியமாக இருக்கும். குஜிலியம்பாறையத்தில் சூபபர்வைசர் ஆபீஸ் திறக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சில கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டுப் போகும்போது, எஸ.இ. ஆபீஸுக்குப் போனால், 'இது ஒரு லட்சததிற்கு மேல் போகிறது, ஆகவே, சீப் எஞ்ஜினியர் ஆபீஸுக்குப் போகவேண்டுமென்றும், எங்களுக்கு பவர் இல்லை என்றும் கூறுகிறார்கள். ஆகவே, ஒரு லட்சத்திற்கு மேல் போனாலும் அந்த எஸ்டிமேட்டை சாங்ஷன் செய்யும் பவரை எஸ். இ.-க்குக் கொடுத்து டி-சென்டரலைஸ் செய்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும். டிவிஷனல் என்ஜினியருக்கு எஸ்டிமேட்ஸ் 10,000 ரூபாய் வரைதான் சாங்ஷன் செய்ய பவர் இருக்கிறது. 20,000 ரூபாய் வரையுள்ள எஸ்டிமேட்டுகளை சாங்ஷன் செய்வதற்கு அவருக்கு பவரை டெலிகேட் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'நைட் சப்ளை' கொடுப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சோளக் காடுகளுக்குப் போகும்போது பாம்பு கடித்து இரண்டு மூன்று பேர்கள் கூட இறந்து போயிருக்கிறார்கள். ஆக, எதற்காக இப்படி நைட் சப்ளை கொடுக்கிறார்கள் என்று விவசாயிகள் வருத்தப்படுகிறார்கள். இப்போது பவர் கட் தீர்ந்த பிறகு காலை ஐந்து மணி முதல் மத்தியானம் 12 மணி வரையில் மின்சார சப்ளை கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் பத்து பஞ்சாயத்துக்களில் மின்சார வேலை நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். அங்கு கண்டக்டர்கள் இல்லை, பின் இன்ஸுலேட்டர்கள் இல்லை, கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். டிவாலியூவேஷனின் கஷ்டம் இருந்தாலும் கிராமங்களுக்கு வேண்டிய எல்.டி. லைன்ஸ், பி.டி. லைன்ஸுக்கு வேண்டியவைகளை சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மின்சார போர்டாரைப் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆ. தங்கவேலு: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த வருடத்திய மின்சார இலாகா நிதிநிலை அறிக்கை மீது நான் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு வரையில் நாங்கள் மின்சார போர்டை ஏதோ பாராட்டி வந்ததாகவும், இந்த வருடம் தேர்தல் வருகிற காரணத்தினால் நாங்கள் குறை கூறுவதாகவும், ஆளும் கட்சியைச் சார்ந்த சில அங்கத்தினர்கள் கூறினார்கள். நல்லது செய்தால் பாராட்டுவோம், குறைகள் கண்டால் கண்டிப்போம். நமது அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்களே கூட ஒப்புக் கொண்டார்கள். நீர் மின்சார நிலையங்களைச் செய்துகொண்டு போவதால் மழை இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படும்போது மிகவும் பாதிக்கப் படுகிறோம், அனல் மின்சார நிலையங்கள் ஏற்படுத்தத் திட்டக் குழு செய்யத் தவறியதால்தான் இந்தச் சங்கடங்கள் இருக்கின்றன



2nd August 1966] [திரு. ஆ. தங்கவேலு]

என்று அவர்களே ஒப்புக்கொள்ளும்போது, இதை நாங்கள் எடுத்துச் சொல்வதினால் நாங்கள் குற்றஞ்சாட்டுகிறோம் என்று அவர்கள் சொல்வது அவ்வளவு சரியல்ல. என் திண்டிவனம் பகுதியில் மின்சார விஸ்தரிப்பு மிக மிகக் குறைந்த அளவில் செயயப்படுகிறது. சென்ற ஆண்டில் கூட இப்படி மிகக் குறைந்த அளவில் செய்யப்பட்டது, அதை அதிகமாக விஸ்தரிக்க வேண்டும் என்று நான் கேட்டிருந்தேன். அந்த நேரத்தில் அவர்கள் அதைச் செய்வதாகவும் 65-66-ம் ஆண்டு அறிக்கையில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 50.74 லட்சம் ரூபாய் செலவில் 93 கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் 65 வேலைத் திட்டங்களின்கீழ் மின்விசை அளிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எந்தளவு நடைபெற்றது என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. சென்ற ஆண்டிலிருந்து இதுவரை ஏதோ செய்திருக்கிறார்களே தவிர, குறிப்பிட்ட அளவிற்குச் செய்யப்படவில்லை என்பது எங்கள் குற்றச்சாட்டு.

தென் ஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு ஸிஸ்டம் கிடையாது. செங்கற்பட்டு மாவட்டத்திற்குக் காஞ்சபுரத்தில் ஒரு ஸிஸ்டம், வட ஆற்காட்டிற்கு வேலூரில் ஒரு ஸிஸ்டம் என்று வைத்து வேலைகள் துரிதமாக நடக்க வழிசெய்யப்பட்டிருக்கிறது. தென் ஆற்காட்டைப் பொறுத்தவரையில் பெரும்பகுதி செங்கல்பட்டு ஸிஸ்டத்திலும், ஒரு சிறு பகுதி திருச்சி ஸிஸ்டத்திலும் இருப்பதால் வேலைகள் தடைபடுகின்றன. சரியான முறையில் வேலைகளை எடுத்துச் செய்ய முடிவதில்லை. கேட்டால் காஞ்சிபுரத்தில் இருக்கிறது, அங்கிருந்து செய்வார்கள் என்று காரணங்கள் சொல்லப்படுகிறது. அப்படிச் சேர்ந்திருப்பதால் செங்கல்பட்டு ஸிஸ்டத்திற்கு ஒதுக்கியிருக்கும் சாமான்களை எல்லாம் செங்கல்பட்டு பகுதிக்கும், மதுராந்தகத்திற்கும் அதிகமாகக் கொண்டு போய் செலவு செய்யப்படுவதாகத் தெரிகிறது. குறிப்பாக மத்திய அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன் தொகுதியில் இரண்டு மாத காலமாக நடக்கிற வேலைகளைப்பற்றி இங்குள்ள அனைவருக்கும் தெரியும். மிகத் துரிதமாக, எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவையும், எங்களுக்கு வரக் கூடிய எல்லா சாமான்களையும் கூட அங்கு அனுப்பிச் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருக்கிற காரணத்தினால் ஒரு வேலையும் எங்கள் பகுதியில் செய்யப்படவில்லை. அதுபற்றி அதிகாரிகளைக் கேட்டால் கம்பம் இல்லை என்கிறார்கள், கம்பம் இருந்தால் கம்பி இல்லை என்கிறார்கள், கம்பியும் இருக்கிறது என்றால் மின்சாரம் இல்லை என்று சொல்லக்கூடிய அவலநிலை இருக்கிறது. எப்போதும் சாமான்கள் இல்லை, இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் மதுராந்தகம் பகுதியில் வேலைகள் துரிதமாக நடக்கின்றன. நிர்வாகத்தில் தலையிட்டு அமைச்சர்கள் அவர்களுக்கு வேண்டிய காரியத்தை அவர்கள் பகுதிக்கு வேண்டியதைச் செய்யும்போது நாங்கள் அதைப்பற்றி எடுத்துக் கூறும்போது, இருக்கிற குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லாமல் எப்படியிருக்க முடியும்?

[திரு. ஆ. தங்கவேலு] [2nd August 1966

பாண்டிச்சேரிக்குப் போகிற வழியில் இரும்பை கிராமத்தில் ஒரு அரசாங்க பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அங்குள்ள ஹாஸ்டலில் மின்சார வசதியில்லை. பெண்கள் ஹரிக்கேன் விளக்குகளை வாங்கிக்கொண்டு போகிறார்கள். அது பற்றி விசாரிக்க, அங்கே மின்சார விளக்குகள் இல்லை, ஆகவே இதை வாங்கிக்கொண்டு போகிறோம் என்று சொல்கிறார்கள். பிரதம அமைச்சர் இந்திரா காந்தி போன்றவர்களை எல்லாம் உற்பத்தி செய்யக் கூடிய ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிற இடத்தில் மின்சார விளக்கு இல்லாது மண்ணெண்ணெய் விளக்குகளை உபயோகிக்கிறார்கள். சேலை கட்டிக்கொண்டிருக்கக்கூடியவர்கள் மண்ணெண்ணெய் விளக்கின் பக்கத்தில் படிக்கும்போது அபாயம் ஏற்படலாம். தனியார் துறையில் உள்ள பள்ளியில் இப்படியிருந்தால் பரவாயில்லை, ஏதோ செய்யவில்லை என்று சொல்லிவிடலாம். இது அரசாங்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளி. அங்குள்ள ஹாஸ்டலில் மண்ணெண்ணெய் விளக்குதான் இருக்கிறது. இதைச் சுட்டிக்காட்டும்போது ஏதோ குறைபாடுகள் அங்கொன்று, இங்கொன்று என்றிருக்கும், இதைப் பெரிதாகச் சொல்வதா என்று சொன்னால் பின்னர் எதைத்தான் சொல்வது? இதை உடனடியாகக் கவனிக்கவேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு தனி ஸிஸ்டம் ஏற்படுத்தி கடலூரில் ஒரு ஆபீஸ், விழுப்புரத்தில் ஒரு டிவிஷனல் என்ஜினியர் ஆபீஸ் ஏற்படுத்தி அங்கு வேலைகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட வேண்டும். செங்கல்பட்டு, மதுராந்தகம் பகுதிகளில் உள்ள மின்சார இலாகா அதிகாரிகளையெல்லாம் இந்த ஒரு மாத காலத்தில் பல பேர்களை மாற்றியிருக்கிறார்கள். காரணம், திரு. ஒ. வி. அளகேசன் அவர்களின் தூண்டுதலால், அவர் ஆலோசனையின் பேரில் செய்து, தேர்தலுக்காக வேலைகள் நடைபெறுகின்றன. தேர்தலுக்காக இவர்கள் சொல்கிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர அவர்கள் செய்கிற வேலைகள் என்ன? பல அதிகாரிகளை மாற்றி விட்டார்கள். ஏன் இப்படியெல்லாம் செய்ய வேண்டும்? திண்டிவனத்தில் ஒரே மாதத்தில் மூன்று உதவி என்ஜினியர்களை மாற்றியிருக்கிறார்கள். விருத்தாசலத்திற்கும் திண்டிவனத்திற்குமாக மாற்றியிருக்கிறார்கள். ஒரு மாதத்தில் மூன்று பேர்களை மாற்றுவது என்று சொன்னால் அவர்கள் போக்குவரத்துப் படி எங்கிருந்து கொடுக்கப்படுகிறது? பணம் வீண் விரயமாகிறது. அமைச்சர் திரு. பூவராகன் அவர்களின் விருப்பு வெறுப்புக் காரணமாக ஒரே மாதத்தில் மூன்று பேர்கள் மாற்றப்பட்டிருந்தால் நிலைமை எப்படி சீரடையுமென்று கேட்கிறேன். மின்சாரம் தாக்கி ஆபத்து ஏற்படுகிறவர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திண்டிவனம் கடை வீதியில் மத்தியானம் இரண்டு மணிக்கு செருப்பு தைக்கும் தொழிலாளி ஒருவர்மீது கம்பி அறுந்து விழுந்து அவர் உயிரிழந்தார். அது நடந்து பத்து மாதங்கள் ஆகின்றன. இதுவரையில் நஷ்டயீடு கொடுக்கப்படவில்லை. அவரது இளம் மனைவியும், இரண்டு குழந்தைகளும் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்டால் வந்துவிடும்,



2nd August 1966] [திரு. ஆ. தங்கவேலு]

வந்து விடும் என்று சொல்கிறார்கள். அதே மாதிரி, சலவாதி என்ற கிராமத்தில் பசு ஒன்றின் மீது எட்டு மாதத்திற்கு முன் மின்சார கம்பி விழுந்ததின் காரணமாக பசு இறந்து போயிற்று, அதற்கான நஷ்டயீடு உடனடியாகக் கொடுக்கப்படவேண்டும் என்று இருந்தும் இன்னும் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்படுவதில் எவ்வளவு காலதாமதம் ஆகிறதோ, அவ்வளவு காலதாமதம் மின்சார போர்டிலும் ஆகிறது. நான் முன்னால் சொன்ன விஷயத்தில் கணவனை இழந்த அந்த இளம் மனைவி இரு குழந்தைகளுடன் பிழைப்புக்கு எந்தவிதமான வழியுமில்லாமல் இன்றைய தினம் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மின்சார இலாகாவில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு, தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு கொடுப்பது போதாது. இன்னும் அதிகம் கொடுக்கப்படவேண்டும். வேறு இலாகாக்களில் வேலை செய்யும் மின்சாரத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறது. இவர்கள் மிகவும் ஆபத்தான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மின்சார இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் போனஸ் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இலஞ்ச ஊழல்கள் இருக்கின்றன என்று குறிப்பிடும்போது, இலஞ்சம் எங்கேயிருக்கிறது என்று வருத்தத்தோடு கேட்கிறார்கள். நாங்கள் லஞ்சம் இருக்கிறது என்று சொல்லும்போது, எங்கிருக்கிறது என்று இப்படிக் கேட்பதைவிட, இதன் மீது நடவடிக்கை எடுக்க கவனம் செலுத்துவார்களேயானால் நல்லதாக இருக்கும். ஒலக்கூர் என்ற கிராமத்தில் கணக்குப்பிள்ளை ஒருவர் மின்சார இணைப்புக் கிடைப்பதற்காக மனுச் செய்து இரண்டு ஆண்டுக் காலம் ஆகியிருக்கிறது. அக்ரிமென்ட் எல்லாம் கூட நடந்து ஆறு மாதம் ஆகிறது. லோன் வாங்கி பம்புசெட்டும் எடுத்தாய்விட்டது. கணக்குப்பிள்ளையைப் பொறுத்தவரை வாங்கித்தான் பழக்கமே தவிர, கொடுத்துப் பழக்கம் இல்லாதவர். ஆகவே இதற்காக இலஞ்சம் கொடுக்கவில்லை, அதனால் அவருக்குக் காரியம் நடைபெறவில்லை. அதற்குப்பிறகு, ஆறு மாதங்களுக்குள் அதே லைனில் இருக்கக்கூடிய வேறு ஒருவர் மனுப்போட்டு, 200 ரூபாய் கொடுத்து கனெக்ஷன் வாங்கி விட்டார். இப்போது கணக்குப்பிள்ளையைப் பார்த்து, பார்த்தாயா கணக்குப்பிள்ளை, நான் காரியத்தை நடத்தி விட்டேன் பார், உன் கதை என்ன? என்று கேலியாகக் கேட்கிறார். இப்படி காரியத்தை நடத்தியவர் யார் என்பதை இங்கு சொல்ல வேண்டுமென்றாலும் சொல்லவும் தயாராக இருக்கிறேன். பணம் கொடுத்தால் தான் காரியம் நடக்கும் என்கின்ற நிலை பரவலாக இருந்து கொண்டு இருக்கிறது. இதை தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச்சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதே நேரத்தில், ஆளும் கட்சியினர் பேசுகின்ற பேச்சு இப்படிப்பட்ட செய்கையை லஞ்சப் பழக்கத்தை உற்சாகப்படுத்தக்கூடிய வகையில் தான் அமைந்திருக்கிறது.

இதன் மூலமாக லஞ்சம் இன்னும் அதிகமாகுமே தவிர குறையாது
03 என்பதை தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்
m. கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m. to day.

The house then rose.

[பிற்பகல் 3-00 மணி]

* திரு. சு. அங்கமுத்து நாயக்கர் : மதிப்புக்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, இங்கு விவாதத்திற்கு வந்திருக்கும் மின்சார நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச முன் வந்துள்ளேன்.

இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு மின்சாரத் துறையில் முன் மாதிரியாக விளங்குகிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அதை யாரும் மறுக்கவும் முடியாது. இப்போது பல மாதங்களாக மழையின்மையால் மின்சார உற்பத்தி தடைபட்டிருந்தாலும், ஓரளவு விவசாயிகளுக்கு நல்ல விதத்தில் பகிர்ந்து கொடுத்திருப்பதானது மின்சார போர்டின் திறமையைத் தான் காட்டுகிறது என்பது நான் சொல்லாமலேயே விளங்கும். மின்சாரத் துறையில், நமக்கு சுதந்திரம் கிடைத்த பிறகு, கடந்த 18 ஆண்டுகளாக, வருடாவருடம் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வேண்டிய மின்சாரத்தைக் கொடுத்து நல்ல விதத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்கும் அளவில் நல்ல வேலைகளைச் செய்து வருகிறார்கள். அந்த வகையில் நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தத் துறையில் இன்னும் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தால்தான் நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தையும், மின்சார போர்டையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆத்தூர் தாலூகாவில் சில கிராமங்களில் விவசாயிகளுக்கு மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு உடனடியாக மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று மின்சார போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் கிராமங்களுக்கு மின்விளக்கு வேண்டுமென்று பல பஞ்சாயத்துக்கள் பல வருடங்களாகத் தீர்மானம் போட்டுக் கொடுத்திருந்தும் இதுவரையில் பல கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. அந்த கிராமங்களுக்கெல்லாம் மின் இணைப்பு கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மின்சார போர்டாரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு ஹொகேனக்கல் திட்டத்தையும் நான்காவது திட்டத்தில்கொண்டு வந்தால் ஓரளவு மின்சார கட் அடிக்கடி வராமல் இருக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சேலம் ஜில்லாவில் பல தாலூகாக்களில் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. ஆத்தூர் தாலூகாவில் சில கிராமங்களுக்கு இன்னும் மின்சாரமே போகவில்லை. சில உபகருவிகள் இல்லாத காரணத்தினால் தான் அது தடைப்பட்டிருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்





கள். நமது அரசாங்கம் அதைப் பற்றி கவனித்து, வேண்டிய உபகருவிகளை உடனடியாகக் கொடுத்து விவசாயிகளுக்கு மின் இணைப்பு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சார போர்டானது நமது மாநிலத்தில் நல்ல முறையில், திறமையாக வேலை செய்துவருவதன் காரணமாக மூன்றுவது திட்டம் வரையில் நம் நாட்டில் திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன. இங்கு எதிர்க்கட்சி நண்பர்கள் குற்றச்சாட்டுகளாகச் சொன்னார்கள். மின்சார போர்டு நல்ல முறையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு பேசவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு இரவில் பிரயாணம் செய்யும்போது எங்கு பார்த்தாலும் நட்சத்திரம் போல மின் ஒளி வீசுவதைப் பார்க்கிறோம். அந்த முறையில் நமது மாநிலத்திற்கு நல்ல மின்சார போர்டு அமைந்திருக்கிறது. போர்டின் தலைவர் நிர்வாகத் திறமையோடு பாடுபட்டுக்கொண்டிருப்பதால் இந்தத் துறையானது நல்ல விதத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது. மின்சார போர்டுத் தலைவர் நீண்ட காலம் இருக்க அரசாங்கம் முயற்சி செய்தால் இன்னும் மக்களுக்கு நல்ல உதவி செய்ததாக ஆகும். தலைவர் அவர்களின் வேலைத் திறமையைப் பொறுத்து அவர் போர்டில் நீண்ட காலம் இருக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது ஆத்தூர் தாலூகாவில் மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்து மின் விளக்குகள் போடவேண்டும் என்றும், விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்காத சில கிராமங்களில் மின்சாரம் கொடுத்து உதவவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. நா. இராசாங்கம் : மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, 1966–67-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதும், 1965–66-ம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சாரம் பொதுவாக எல்லோருக்கும் வழங்கப்படுவது என்று இருந்தாலும், அதிலே ஹரிஜனக் காலனிகளுக்கு வெகுவாக, விரைவாகக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் போர்டார் அல்ல. சர்க்காருடைய கொள்கை அடிப்படையில் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அதற்கு மின்சார போர்டின் மீது பழியைப் போட முடியாது. காரணம் பஞ்சாயத்து யூனியனோ, பஞ்சாயத்தோ அவர்களுடைய எல்லைகளுக்குள் மின்சாரம் வழங்கவேண்டும் என்று கேட்கும்போது, அந்தப் பகுதியில் சேரிக்கும், ஜாதி இந்துக்கள் இருக்கிற இடத்திற்கும் உள்ள தூரம் அதிகம். ஒரு கிராமத்திற்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்கும் போது நிதி நிலையைப் பொறுத்து முடிவு செய்யப்படுகிறது. அதைப் பார்க்கும்போது ஒரு இடத்திற்கு மின்சாரம் வழங்கிவிட்டு, அதே ஊரைச் சேர்ந்த மற்றொரு இடத்திற்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று சொல்லும்போது, அதில் தூரத்தை

[திரு. நா. இராசாங்கம்] [2nd August 1966

வைத்துக் கணக்கிடும்போது அதற்கு நிதி இல்லை. அதனால் வேலை நிறுத்தப் படுகிறது. இதற்கு போர்டு நிர்வாகம் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆகவே அமைத்திருக்கிற விதியைத் திருத்த வேண்டும் என்று சென்ற ஆண்டே கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அதையும் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ரைஸ் மில்கள், பம்ப்செட்டுகள் ஆகியவற்றுக்கு மின்சாரம் வழங்குவதில் இன்றைக்கு இருக்கிற கட்டுப்பாடுகள் காரணமாகத்தான் குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகளின் காரணமாகத்தான் போர்டின் பேரில் குறை சொல்லும் நிலைமை இருக்கிறது. இன்றைக்கு மணியக்காரர், கணக்குப்பிள்ளை அவர்களிடமிருந்து அத்தாட்சி வேண்டும் என்று சொல்லும்போது அவர்களை அணுகும்போது தொல்லைகள் வருகின்றன. இடையில் இருக்கிற தொல்லைகள் பற்றித் தான் சட்ட சபையில் கூடப் பேசப்படுகிறது. அந்த அடிப்படையில் ரைஸ் மில்கள், பம்ப்செட்டுகள் ஆகியவற்றுக்குள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்பது எனது கருத்து.

அடுத்தபடியாக, இன்றைக்கு அனல் மின்சாரத்தை அதிகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அனல் மின்சாரத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை. தண்ணீரிலிருந்து கிடைப்பதானது காலத்தை ஒட்டியதாக இருக்கிறது. இடையில் ஏற்பட்ட கஷ்டம் கூட தண்ணீரில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தையே நம்பிக் கொண்டிருந்ததால் தான். நீர் மின்சாரம் வருஷம் பூராவும் கிடைக்குமா என்ற நிலை இருக்கிறது. இயற்கை சதி செய்து விட்டது என்று சொல்லலாம். இயற்கை மாறி மாறித் தான் வரும். தண்ணீர் மின்சாரத்தை விட அனல் மின்சாரம் நிரந்தரமாகக் கிடைக்கக் கூடியதாகும். ஆகவே, அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்த அரசாங்கமும் போர்டாரும் போதிய சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தென் ஆற்காடு மாவட்டம் அனல் மின்சார நிலையத்தையே வைத்திருக்கும் மாவட்டம். அனல் மின்சார நிலையம் நெய்வேலியில் இருக்கிறது. அங்கே ஒரு சூப்பரின்டென்டிங் இன்ஜினீயர் இருக்கவேண்டும். அது அந்த ஜில்லாவிலிருந்து மற்ற ஜில்லாக்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யும் இடம். அது பொறுப்புள்ள ஒரு அதிகாரி இருக்கவேண்டிய இடம். நெய்வேலி மின்சார நிலையத்தை உத்தேசித்தாவது நெய்வேலி பகுதியிலேயோ அல்லது தென் ஆற்காட்டில் வேறு எந்த இடத்திலேயோ அந்த அலுவலகம் இருக்கவேண்டும். அத்தகைய ஒரு அதிகாரி அங்கு இருக்கவேண்டுமென்று போன நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போதே சொல்லியிருந்தேன். அதைப் பற்றி 'இப்போது சாத்தியப்படவில்லை' என்று குறிப்பில் இருக்கிறது.



2nd August 1966] [திரு. நா. இராசாங்கம்]

சாத்தியப்படாமல் இருக்கலாம், நிதி நிலை ஒரு சமயம் எப்படி இருக்குமோ? குறைகள் வருகின்றன என்றால், காரியங்கள் நடப்பதற்கு தடை. எப்படி இருந்தாலும் காரியங்கள் நடப்பதற்கு ஏற்பட்டிருக்கிற தடையை நீக்குவதற்கு இந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மிகவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாம் முன்பு சொன்னபடி அரிசன காலனிகளுக்கு நாம் எந்தத் திட்டங்களைப் போட்டாலும், அதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இப்பொழுதிருக்கும் விதிகளின் பிரகாரம், இருக்கிற நிதிநிலையைப் பொறுத்து அரிசன காலனிகளுக்கு மின்சக்தி வழங்குவது என்றால், அதில் தடைகள் ஏற்படுத் தான் தீரும். அந்தத் தடையை நீக்குவதற்கு இப்பொழுது உள்ள விதிகளை தளர்த்தி பஞ்சாயத்து நிதியிலிருந்து தான் செய்யவேண்டும் என்ற நிலை இல்லாமல். சர்க்கார் நிதியிலிருந்து இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: மதிப்பு மிக்க துணைச் சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான மின்சார போர்டின் நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை நான் ஆரம்பிக்க முற்படுகிறேன். குறிப்பாக, நமது தேசத்திலே தமிழ் நாடு எல்லா துறைகளிலும் முன்னேறி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. கல்வித் துறை, தொழில் துறை ஆகிய துறைகளில் நமது மாநிலம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னேறி இருப்பதைப் போலவே, மின்சாரத் துறையிலும் பரவலாக மூலை முடுக்குகளிலும் கிராமப்புரத்திலிருந்து நகர்புரம் வரை மாநிலம் பூராவும் இன்று மின் ஒளி கொடுத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் மின்சார போர்டும் அந்த இலாகாவை கவனிக்கும் நமது அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களும் என்ற உண்மையை இந்த மாநிலம் பூராவும் அறியும். அதற்காக நமது அமைச்சர் அவர்களையும் மின்சார போர்டு தலைவர் அவர்களையும் தலைமை என்ஜினியரையும், மற்ற அலுவலர்களையும் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்து, நாம் நம்முடைய மின்சாரத் தேவையை மூன்று விதங்களாக பிரித்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். நீர்நிலை மின்சாரத் திட்டம், அனல் மின்சாரத் திட்டம், அணு மின்சாரத் திட்டம் இப்படி மூன்று பிரிவுகளாகப் பிரித்து நாம் இதில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். நீர்நிலை மின்சாரத் திட்டங்களில் பெருவாரியான திட்டங்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. குந்தா, எமரால்டு, அவலாஞ்சி, பைகாரா ஆகிய நீர்நிலைத் திட்டங்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. அணை கட்டப்பட்டுள்ள இடங்களைப் பார்த்தால், கடந்த இரண்டு ஆண்டுகளாக மழையின்மையின் காரணமாக வரண்ட பிரதேசமாக காட்சி அளித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நீர் தேங்கிக் கொண்டிருந்த இடங்களில் எருமை மாடுகள் மேய்ந்துகொண்

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [2nd August 1966

டிருக்கும் ஒரு காட்சியை இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கிறோம். மழை ஏன் இப்படி பொய்த்து விடுகிறது என்பது பற்றி ஆராய்ச்சி செய்து பார்த்தோமானால், நமது அமைச்சர் அவர்களும், மற்ற நிபுணர்களும் என்ன சொல்லுகிறார்கள் என்றால், நீலகிரியில் உள்ள மக்கள் மரங்களை வெட்டுகிறார்கள், அதனால் தான் பெரும் மழை பிரதேசமாக இருந்த நீலகிரியில் மழை பொய்த்துவிடுகிறது என்று காரணம் கூறுகிறார்கள். இது ஓரளவுக்கு உண்மை என்றாலும் கூட, இப்பொழுது மரங்களை வெட்டுபவர்கள் யார் என்ற ஒரு உண்மை நிலையை நான் இந்த சமயத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். சர்க்காருக்குச் சொந்தமான இயற்கை வனங்களில் சர்க்காரே விறகு வெட்டுவதற்காக மற்றவர்களுக்கு அந்த உரிமையை ஏலத்தில் விட்டு பணம் திரட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை உடனே நிறுத்தவேண்டும் என்று நான் இந்த சமயத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது இந்த அணைப்பகுதிகளில் பெருவாரியாக யூகாலிப்டஸ் மரங்களை நட்டுக்கொண்டு வருகிறார்கள். இந்த மரங்கள் தண்ணீரை குடிக்கின்றன, தண்ணீரை உற்பத்தி செய்வதற்கு சாதகமாக இல்லை என்ற விஷயத்தை நான் அடிக்கடி இந்தச் சபையில் கூறியிருக்கிறேன். தண்ணீரைச் சுரக்கும் சிலவகை மரங்கள் காட்டு இலாகாவுக்குச் சொந்தமான இடங்களில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்படி பல மரங்கள் நீலகிரி ஜில்லாவில் இருக்கின்றன. அப்படிப்பட்ட மரங்களை இந்த பிராஜக்ட் ஏரியாவில் நட்டு தண்ணீர் சுரப்பதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். ஆகவே, யூகலிப்டஸ் மரங்களை நட்டு மேலும் தண்ணீரை வற்றும்படி செய்து, பூமியை பிளக்கும்படி செய்யாமல் இருக்குமாறு வன இலாகா அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நீர்நிலை பிடிப்புகளில் கடந்த இரண்டு வருஷங்களாக மழை இல்லாத காரணத்தினால் மின்சார வெட்டு கடந்த சில மாதங்களாக நமது மாநிலம் பூராவும் அமுலில் இருந்தாலும் கூட, இந்த இலாகாவினரும், மின்சார போர்டும் எப்படியோ சிரமப்பட்டு மைசூர், கேரளா போன்ற அண்டை மாநிலங்களின் உதவியைப் பெற்று, ஓரளவுக்கு நமது தேவையை மாநிலம் பூராவும் பெருவாரியாக சமாளித்துக்கொண்டு வந்த ஒரு அரிய சாதனையை அவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள். இப்பொழுது அனல் மின்சார நிலையங்களை நாம் எடுத்துக்கொண்டால், உடனடியாக தூத்துக்குடி திட்டத்தை மின்சார இலாகாவினர் நிறைவேற்றும்படியான ஒரு கடமை இருக்கிறது. நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், நீலகிரி ஜில்லாவில் பருவ மழை ஆரம்பித்து விட்டால், வீடுகளிலிருந்து வெளியே வர முடியாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கும். ஆனால், இப்பொழுது மழை ரொம்பவும் குறைவாக இருப்பதன் காரணமாக, எப்பொழுது போதுமான மழை பெய்து இந்த அணைக்கட்டுக்களெல்லாம் நிரம்பப் போகின்றன என்பது ஒரு பெரிய சந்தேகத்திற்கு உரிய குறியாக இருக்கிறது. இந்த நிலையில் நீர்நிலை மின்சார திட்டங்களைப்



2nd August 1966] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

பற்றியும், நீலகிரியில் குன்னூரில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் பற்றியும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் நிறுத்திவிட்டு, அனல் மின்சார திட்டங்களை எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவர முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றுவது நலம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

அடுத்து, நீலகிரி ஜில்லாவில் தேயிலைத் தொழில் தான் முக்கியமான தொழில். ஏறக்குறைய 100, 150 சிறு சிறு தேயிலைத் தொழிற்சாலைகள் ஆங்காங்கு இருக்கின்றன. மின்சார வெட்டு வந்தபொழுது சென்ற ஆண்டு கூட தேயிலைத் தொழிலுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு தேயிலைத் தொழிலுக்கும் மின்சார வெட்டை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். இதனால் சிறு சிறு தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்கள், கூட்டுறவு முறையில் செய்யும் பாக்டரியைத் தவிர, மற்றபடி சிறு சிறு தொழிற்சாலை வைத்திருக்கும் தனிப்பட்டவர்கள் பாக்டரிக்கு மின்சாரம் கொடுக்காததால் மிகவும் அல்லலுற்றார்கள். அந்த ஒரு நிலையை இந்த சமயத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். தேயிலைத் தொழில் அன்னியச் செலாவணி சம்பாதிக்கும் ஒரு நல்ல தொழில். ஆகவே, தேயிலைத் தொழிற்சாலைகளுககு எப்பொழுதும் மின்சாரம் சப்ளை செய்யவேண்டும், மின்சார வெட்டிலிருந்து அந்தத் தொழிலுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று நான் இந்த சமயத்தில் இந்த இலாகாவினரையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, குந்தா திட்டப் பிரதேசத்தில் அட்டுப்பாயில் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்த அட்டுப்பாயில் கிராமத்தில் இருக்கும் மக்களை வேறு ஒரு இடத்திற்கு மாற்றவேண்டும் என்று இலாகாவினரும், சர்க்காரும் முடிவு செய்து ஏறக்குறைய 10 ஆண்டுகள் ஆகியும், அவர்களை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு வேண்டிய ஒருவிதமான ஏற்பாடும் இன்னும் செய்யப்படவில்லை. சமீபத்தில் சாக்காருக்கும், மின்சார போர்டுக்கும் இது சம்பந்தமாக ஏதோ ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. இதற்கான செலவை 50 சதவிகிதம் மின்சார போர்டும், 50 சதவிகிதம் சர்க்காரும் கொடுத்து, அவர்களை வேறு இடத்திற்கு மாற்றுவது என்று முடிவு செய்திருப்பதாக நான் அறிகிறேன். அந்த உத்தரவை விரைவில் அமல் நடத்தி, அதிருப்தி அடைந்துள்ள அந்த வட்டார மக்களுக்கு ஆறுதல் ஏற்படும்படிச் செய்யவேண்டும் என்று நான் குறிப்பாக மின்சார போர்டு தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி போர்த்தி என்ற இன்னொரு கிராமமும் இருக்கிறது. அந்தக் கிராமமும் தண்ணீர் நிற்கும் இடத்திற்குப் பக்கத்தில் இருப்பதினால், அந்த கிராமத்திலுள்ள மக்களையும் வேறு இடத்திற்கு அகற்றுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டால் மிகவும் நலமாக இருக்கும் என்று இந்த சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத் துறைக்கு தமிழ் நாட்டில் மின்சாரம் வழங்கி இருப்பது போல் வேறு எந்த மாநிலத்திலும் விவசாயத்திற்கு மின்சாரம் உபயோகப்படுத்தப்படவில்லை." நீலகிரிப் பிரதேசத்தில், மழை பொய்த்துவிட்டதால் ஆங்காங்குள்ள சமவெளிப் பிரதேசங்களில் கிணறுகளைத் தோண்டுவதற்கு இப்பொழுது முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. ஏறக்குறைய என்னுடைய தொகுதியில் 10, 15 கிணறுகள் தோண்டி மின்சார வசதி செய்துகொடுக்குமாறு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களையெல்லாம் மிகவும் துரிதமாக பரிசீலனை செய்து மின்சாரம் வழங்கினால் மிகவும் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த இலாகா நல்லதொரு இலாகா, நம்மை முன்னேற்றும் ஒரு இலாகா இந்த நவீன காலத்தில், மின்சாரம் இன்றி யாரும் வாழமுடியாத ஒரு காலமாக மாறிக் கொண்டு வருகிற இந்த சமயத்தில் இந்த இலாகா நல்ல பணிகளைச் செய்துகொண்டு வருகிறது என்று கூறி, அதைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **புலவர் கா. கோவிந்தன்:** கனம் துணைச் சபைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார போர்டின் நிதி நிலை அறிக்கை பற்றி, கனம் உணவு அமைச்சர் ஆற்றிய உரையில், 22,000 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு விட்டன என்றும், இரண்டரை லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், இந்த சாதனைகளைக் கூறி பெருமைப் பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே எண்ணிக்கையைப் பார்க்கும்போது, பாராட்டுக்கு உரியதாக இருக்கிறது. ஆனால், அந்தக் கிராமங்களில் ஏற்றப்பட்டிருக்கின்ற விளக்குகளின் நிலையைப் பார்க்கும்போது வருந்தத் தக்க நிலையில்தான் இருக்கிறது. ஒரு பஞ்சாயத்தின் நிதிநிலையை அனுசரித்து, ஆர்.டி.ஓ. அனுமதித்து இருக்கும் விளக்குகளின் எண்ணிக்கை மிகமிகக் குறைவுதான். அதிலும் பாதி இப்பொழுது மின்சார வெட்டுக்காரணமாக, போடப்படுவதில்லை. நேற்று பேசிய அம்மையார் குறிப்பிட்டது போல, காடை விளக்கு போல்தான் இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதே போல, 2½ லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லும்போது, விவசாயிகளுக்கு வேண்டும் போது அவர்கள் தங்கள் பம்புகளை ஓட்ட முடிகிறதா என்றால், இல்லை. வேண்டிய அளவு ஓட்ட முடிகிறதா என்றால், இல்லை. கொடுக்கப்படும் மின்சாரம் போதிய வோல்டேஜ் உடன் வருகிறதா என்றால், இல்லை. அப்படிக் குறைந்த வோல்டேஜோடு ஓட்டுவிதால், மோட்டார் சரிவர ஓடுவது இல்லை. தண்ணீர் எடுப்பதில்லை. காயில் தேய்ந்து போய்விடுகிறது. மோட்டார் பழுதாகிவிடுகிறது. இந்த நிலைமை பாராட்டக் கூடியதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிக்கை மட்டும் பாராட்டுக்குக் உரியதாக ஆகாது. இந்த நிலை ஆண்டுதோறும் வருகிறது. இதைக் கண்டு அமைச்சரவை வெட்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆண்டுதோறும் இந்தக் குறை எடுத்துக் கூறப்படுகிறதே, இந்த நிலை ஏன் என்று எண்ணிப் பார்க்கிறதா இந்த அரசாங்கம் என்றால் ,இல்லை.





சர்க்கார் நீர் மின்சாரத்தையே நம்பியிருக்கிறார்கள், அனல் மின்சாரம், அணு மின்சாரம் இவற்றை நம்பியிருக்கவில்லை. அமைச்சருடைய அறிக்கையில், திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் திட்டங்கள் ஆறில், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் போக, பாக்கியெல்லாம் நீர் வழி மின்சாரத் திட்டங்கள். அதே போல, அறிக்கையில் 14-வது பக்கத்தில் புதிய திட்டங்கள் ஆராய்ச்சியில் இருப்பது ஏழு என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏழு திட்டங்களும் நீர்வழி மின்சாரத் திட்டங்கள். நீர்வழி மின்சாரம் ஏமாற்றியிருக்கிறது என்று தெரிந்திருந்தும், அனல் வழி, அணு வழி மின்சாரத்தை எடுக்காமல் இருக்கும் இந்த சர்க்காரை எப்படிப் பாராட்ட முடியும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்பொழுது தூத்துக்குடி அனல் மின்சாரத்தைப் பார்க்கும் போது அது 100 மெகா வாட்டா, 250 மெகா வாட்டா என்று இன்னும் தெரியவில்லை. இன்னும் இந்த சர்க்காருக்கு சந்தேகம். கிராமங்களில் சொல்லுவார்கள், கொடுவாப் பிடிக்குத் தயார் செய்தால்தான், அறிவாள் பிடிக்குத் தேரும் என்று. இந்த சர்க்கார் கேட்பதே குறைவு. இந்த அமைச்சர்கள் விராதி வீரர்கள், இங்கே எதிர்க் கட்சியை அடக்குவதோடு சரி, வடக்கே சென்றால் கையைக் கட்டிக் கொண்டு, அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டு வரும் பரிதாப நிலையில்தான் இருக்கிறார்கள். இங்கே விளக்கு ஏற்ற வேண்டும் என்றால், ஸ்விச் போடலாமா என்று கேட்டு, அவர்கள் போடலாம் என்றால்தான் இங்கே . . .

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினருடைய கன்னோட்டத்தில் அப்படியிருக்கலாம்.

**புலவர் கா. கோவிந்தன்:** கன்னோட்டத்தில் சொல்லவில்லை ஏட்டில் கொடுத்திருக்கிறது.

அடுத்து, நெய்வேலியைப் பற்றி பாராட்டியிருக்கிறார்கள். காலையில் நண்பர் திரு. மதியழகன் சொன்னார்கள்: ஆந்திரா இதில் தங்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் நெல் கொடுக்க முடியாது என்றும் தைரியமாக சொல்லியிருக்கிறார்கள் என்று. இங்கே அமைகின்ற அமைச்சர் அதையும் கோட்டைவிடப் போகிறார்கள்.

**திருமதி டி. என் அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். ஆந்திரர்களும் திராவிடர்கள் தானே, அவர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** ஆந்திரர்கள் அரிசி கிடையாது என்று சொல்லும் ஆண்மை கூட நம் மந்திரி சபைக்கு இல்லையே என்பது தான் வருத்தம்.

அடுத்து, கல்பாக்கம் அனல் மின்சாரம் பற்றி பத்திரிகையில் செய்தி வந்து விட்டது. கல்பாக்கம் அனல் மின்சாரத் திட்டத்திற்கு பிரெஞ்சு உதவி கிடைக்குமா என்று சந்தேகப்படும் நிலைக்கு செய்தி வந்திருக்கிறது. சேலம் உருக்காலை போல இந்த

அனல் மின்சாரத் திட்டமும் உருவாகும் என்கிற நம்பிக்கை நாட்டில் உள்ள மக்களுக்கு அற்று விட்டது, சர்க்காருடைய செயல்களைப் பார்த்து என்று கூறக்கடமைப் பட்டிருக்கிறேன்.

கடைசியில் அமைச்சரவர்கள் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். "திருப்திகரமான அளவில் மின்சாரம் வழங்குவதற்கு தொடர்ந்து அக்கறையுடனும், கண்காணிப்புடனும் செயலாற்றியதற்காக போர்டுக்கும், நிறைவேறிவரும் திட்ட வேலைகளை முடிப்பதில் அயராது உழைத்த மாநில மின்சார போர்டின் தலைவர், உறுப்பினர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் தொழிலாளர்கள் ஆகியோர் அனைவருக்கும் எனது பாராட்டுதலை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று. ஒரு குறள் உண்டு :

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லாள் மாணாக்கடை.

வீட்டிலே ஒன்றும் இல்லை என்றாலும், குடும்பத்தை நிர்வகிக்கும் மனைவி திறம் உள்ளவளானால், நிறைவு இருக்கும். மனைவி திறன் அற்றவளாக இருந்தாள் என்றால், நிறைவு ஏது? ஆகவே, இல்லவள் மாண்பானால், இல்லது என்? அந்த முறையில், நமக்கு மின்சாரம் இல்லை, போதிய கம்பி பெற பணம் இல்லை, கம்பம் உண்டு பண்ண போதிய நிதி வசதி இல்லை என்று இருந்தாலும், தமிழ் நாட்டில் திருப்திகரமாக மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அது மின்சாரக் கழகத்தின் திறமையால், இந்த சர்க்காரின் மானத்தைக் காப்பாற்றியதற்கு, தலைவர், பணியாளர்கள் எல்லோருக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறேன். அவர்கள் பணி தொடர்ந்து தமிழ் நாட்டில் நடைபெற இந்த அமைச்சரவை வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மின்சாரக் கழகத்தினரே கனம் அங்கத்தினர் சொல்வதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** நான் சொல்வதில் எதை ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்று சொன்னால் நலமாக இருக்கும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** சர்க்காரின் ஒத்துழைப்பின்றி வந்திருக்கிறது என்று கனம் அங்கத்தினர் சொல்வதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

*** திரு. சா. ராமசாமி :** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பொறுத்த அளவில், இரண்டு மூன்று முறை கூறியிருக்கிறேன். அந்தப் பிரச்சினைகளை இதுவரையில், சரியான முறையில் கவனிக்கவில்லை. இந்த அறிக்கையைச் சமர்ப்பித்த அமைச்சர் இப்பொழுது இங்கே இல்லை. கடந்த தடவை மின்சார போர்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருந்த போது. என்னுடைய தொகுதியில் சில கிராமங்களுக்கு, 62 தேர்தல்



வருவதற்கு முன்பு, தேர்தல் பிரசாரத்திற்காக 6, 7 கிராமங்களில் அடிக்கல் கம்பங்கள் நாட்டி, அதோடு நின்று இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதுபற்றி இரண்டு மூன்று முறை நான் பேசியிருந்தும், இதுவரையில் அதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்படி மின்சாரம் கொடுக்கப் போவதில்லை என்றால் அடிக்கல் நாட்டியதன் நோக்கம் என்ன? அதற்கு என்ன அவசியம்? தேர்தலுக்காக அது செய்யப்பட்டதா? மின்சாரப் பிரச்சினை வரும்போதெல்லாம் இதைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. இத்தனை ஆண்டுகள் கழித்து இப்பொழுது இரண்டு கிராமங்களில் வேலை துவக்கியிருக்கிறார்கள். மேலும், 3-30 p.m.
இதுபோன்ற அலுவல்களைத் தேர்தல் காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டாம் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கீழப்பழூர், கோக்குடி ஆகிய இந்த இரு கிராமங்களும் 15 ஆண்டுகளுக்கு முன்பே மின்சாரம் வரப்பெற்று இருந்தும், அதே கிராமத்தில், அதே தெருவைச் சேர்ந்த அரிசனத் தெருக்களுக்கு இன்று வரையிலும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. 1964-65-ம் ஆண்டில் உள்துறை அமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட இலாக்காவினரையும் சந்தித்துக் கேட்ட சமயத்தில், அரிசன நல இலாக்கா மூலமாக அரிசனத் தெருவுக்காக முப்பதாயிரம் ரூபாய் 1964-65-இலேயே ஒதுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். 1964-65-இல் முப்பதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டும் இன்று வரையில் வேலை செய்யப்படவில்லை. இதற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல, பலர் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மின்சாரம் ஒரு கிராமத்தில் முதன் முதலில் விஸ்தரிக்கிறபோது, ஜாதி இந்துக்கள் தெருக்களுக்குக் கொடுத்து விட்டு, அரிசனத் தெருக்களுக்குக் கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள். இப்படிப் பல கிராமங்களில் நிலைமை இருக்கிறது. ஆகவே, மின்சாரம் அமைக்கப்படும் இடங்களில் எல்லாம் கண்டிப்பாக அரிசனத் தெருக்களுக்கும் அமைக்கவேண்டும் என்ற முறையை அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டு என்னுடைய தொகுதியில், டால்மியாபுரம் ஸப்-ஸ்டேஷன் பகுதியில் உள்ள அத்தனை ஊர்களுக்கும் த்ரீ-பேஸ்டு லைன் கொடுக்கவேண்டும் என்று அங்குள்ளவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஓராண்டுக் காலமாகக் கடனை இஞ்சின்களை வாங்கி வைத்துக்கொண்டு, த்ரீ-பேஸ்டு லைன் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் கொடுக்கவில்லை.

விருத்தாசலத்திலிருந்து தாப்பளூருக்கு வருகிற மின்பகுதியில் அணைக்குடம் கிராமத்தில் 21 இஞ்சின்கள் கடனை வாங்கி வைத்துக்கொண்டு. ஒன்றரை ஆண்டுகாலமாக மின்சாரக் கனெக்ஷன் கிடைக்காமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு, கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான தவணைப் பணத்தைக் கட்டவேண்டும் என்று ஜப்தி செய்யக்கூடிய

[திரு. சா. ராமசாமி] [2nd August 1966

நிலை ஏற்பட்டது. உடனே ஆர்.டி.ஓ. வையும், கலெக்டரையும் அணுகி, ஜப்தியை நிறுத்தி வைக்கும் நிலைமைக்கு நான் ஏற்பாடு செய்துவிட்டு வந்தேன். மின்சாரக் கனெக்ஷன் கிடைக்காததால், இப்படிப்பட்ட சிரமம் ஏற்படுகிறது. மின்சாரம் வருவதற்கு முன்பாகவே ரெவின்யூ துறையினர் பம்ப் செட்டுக்கான கடனைக் கொடுத்து விடுகிறார்கள். மின்சாரம் வருவதற்கு முன்பாக பம்ப் செட்டுக்கான கடன் தொகையைக் கொடுக்கும்போது, அந்தப் பம்ப் செட்டை உபயோகப்படுத்தி விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இல்லாத நிலையை மின்சார இலாகாவினர் செய்துவிடுகிறார்கள். மின்சார பம்ப் செட்டை உபயோகப் படுத்தாத நிலையிலேயே, பம்ப் செட்டுக்கான கடன் பணத்தைக் கேட்கும்போது, அதை விவசாயிகள் கட்ட முடியவில்லை. ஆகவே, மின்சாரம் விநியோகிப்பதற்கு முன்னால் கடனைக் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால், மின்சாரம் விநியோகிக்கப்படுகிற காலத்திற்குள்ளாகக் கடனைத் திருப்பிக் கேட்கக் கூடாது. இத்தகைய முறையைக் கையாளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் 81 மின்சார பம்ப்செட்களுக்கு மேல் ஓராண்டுக்கு முன்னால் விவசாயிகள் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவற்றிற்கு இன்னும் மின்சாரக் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை.

காலையில் கனம் உறுப்பினர் திரு. அழகமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். மின்சார போர்டில் வேலை பார்ப்பதற்கான நபர்களைத் தெரிந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அந்த விண்ணப்பத்திற்கு ஒரு ரூபாய் கட்டணம் விதித்தார்கள். மேலும் ஐந்து ரூபாய் செலுத்தி, விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்பியவர்கள் கிட்டத்தட்ட முப்பதாயிரம் பேர்கள். அத்தனை விண்ணப்பங்கள் கோரப்பட்டும் இன்று வரையில் விண்ணப்பம் செய்து கொண்டவர்களில் யாருக்கும் வேலை கிடைக்கவில்லை. வேலை கொடுப்பதாகவும் தெரியவில்லை. வேலை கிடைக்காது நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் செலுத்திய தொகையை அவரவர்களிடமே திருப்பிச் சேர்த்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சாரத் துறைக் கடன் திட்டத்தின் கீழ் அதிகப்படியாக கிராம மக்கள் தொந்தரவுக்குள்ளாகியிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் திரு. நாராயணன் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய பகுதியில் கடந்த ஆண்டு வாய்க்கால்களில் நன்னீர் வரவில்லை. இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு தண்ணீர் வரவில்லை. மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். உணவிற்கு வழி இல்லை. கடன் பிரச்னையும் இருக்கிறது. அரசாங்கம் பல முனைகளில் போட்டி போட்டுக்கொண்டு கடன் தொகையை வசூல் செய்கிறது. ரெவின்யூ துறையில் தாசில்தார், டெபுடி தாசில்தார் ஒரு புறமும், ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் இன்னொரு புறமும் தனித்தனியாக வசூலிக்கிறார்கள். பஞ்சாயத்து கமிஷனரும் தனிப்பட்ட முறையில் வசூல் செய்துகொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகள் அரசாங்க திட்டக் கடன் திட்டங்களுக்கு ஆதரவு கொடுக்க முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சார இலாக்கா கடன் சென்ற ஆண்டு வசூலிக்கப்பட்டது. அதற்கு முந்திய ஆண்டும் வசூலிக்கப் பட்டது. இப்போதும் வசூலிக்க இருக்கிறார்கள். இந்தத் தொகையை வசூலிக்கிறபோது, ஓரளவு வசதி இருக்கிறவர்களிடத்தில் வசூலிப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. அப்படி வாங்குகிறபோது, நூறு ரூபாய் கொடுப்பதற்கு ஆயிரம் ரூபாய்க்கு மதிப்பீட்டை உயர்த்திக்கொண்டு, அந்தப் பங்கீட்டின் பேரில் நூறு ரூபாயை ஆயிரம் ரூபாய் ஆக்கிவிடுகிறார்கள். 100 ரூபாயை வாங்கும்போது, 68, 70 ரூபாய்க்குமேல் கிடைப்பதில்லை. எனவே, இந்த முறையை மாற்றியமைக்கவேண்டும். பல துறைகள் மூலமாக வசூல் செய்கின்ற நிலைமையை எடுத்துவிட வேண்டும். குறிப்பாக, ரெவின்யூ துறை வசூலித்தால், பஞ்சாயத்து யூனியன் வசூலிக்காமல் இருக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் வசூலிக்கும் நிலைமை ஏற்படுகிறபோது, ரெவினியூ துறை வசூலிக்காத நிலையை உண்டாக்கவேண்டும். பல துறைகளில் வசூலிக்கும் காரணத்தால், விவசாய மக்கள் பாதிக்கப் படுகிறார்கள்.



2nd August 1966] [திரு. சா. ராமசாமி]

என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் சென்ற ஆண்டு அங்கிகரிக்கப்பட்ட பல வேலைகள் இன்று வரை துவக்கப்படாமல் இருக்கின்றன. காரணம், மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு சில பகுதிகளில் அனுமதிக்கப்படாத இடங்களில் திடீர் என்று அனுமதிக்கப்படுகிற நிலையை விடுத்து விட்டு, அனுமதிக்கப்பட்ட வேலையை உடனடியாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று விவாதத்தில் இருந்துகொண்டிருக்கிற தமிழ் நாடு மின்சார போர்டின் 1966–67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1965–66-ம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் நடந்து கொண்டிருக்கிற விவாதத்திலே என்னுடைய கருத்தையும் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

இன்று வரை, மூன்று ஐந்தாண்டுத் திட்டக் கணக்குகளை எப்போதும் காட்டுவதுபோல் காட்டுகிறார்கள். மின்சாரத்தைப் பொறுத்த அளவில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 120 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகக் கணக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மதிப்பிடப்பட்ட தொகை 100 கோடி ரூபாய். அதிலே 20 கோடி ரூபாய் அதிகம் செலவிட்டதாகக் காட்டுகிறார்கள். அதிலும் குறிப்பாக, எண்ணாயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதென்பது அவர்களுடைய திட்டம். ஆனால், அவர்கள் செய்திருக்கும் வேலை—சிறிய கிராமங்கள், பெரிய கிராமங்கள் எல்லாம் சேர்ந்து—22,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயத்திற்கு உபயோகப்படும் பம்ப் செட்டுகளுக்காக

மின்சார இணைப்பு ஒரு லட்சம் கிணறுகளுக்கு என்பது அவர்களுடைய மதிப்பீடு. ஆனால், அவர்கள் கொடுத்திருப்பது கிட்டத்தட்ட 13,000 கிணறுகளுக்கு என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் திட்டம் இடும்போது குறைத்துத் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்தது அதிகமாகத்தான் இருக்கிறது. இவ்வளவு சிரமப்பட்டு விவசாயத்தைப் பெருக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இவ்வளவு செலவு செய்ததன் காரணமாக விவசாயம் பெருகித்தான் இருக்கவேண்டும். ஆனால், நிலைமை என்ன? பெருகியிருக்கவேண்டிய விவசாயத்திற்குப் பதில் பஞ்சம் வருவதற்குக் காரணம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மற்ற வருஷங்களைவிட இந்த வருஷம் அதிகம் செலவு செய்திருக்கிறார்கள். அதிகமாகச் செலவு செய்திருக்கும்போது, "பஞ்சம் வருவதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்க்கும்போது, இதில் எங்காவது ஓட்டை இருக்கத்தான் வேண்டும். அந்த ஓட்டை எங்கே இருக்கிறது என்பதை அந்தத் துறையில் உள்ளவர்கள்தான் நுணுக்கமாகக் கண்டுபிடிக்க முடியுமே தவிர, எங்களைப் போன்றவர்கள் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்துக் கணக்குப் போட்டாலும், எங்கே விரயம் ஆகிறது என்பதை எங்களால் கண்டுபிடிக்க முடியாது. தயவு செய்து இந்த இலாகாவிலுள்ள அதிகாரிகள், இதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்தால் நலமாக இருக்கும், அரசாங்கத்திற்கும் நலமாக இருக்கும். விவசாயிகளுக்கும் நலமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே மின்சாரத்தை எவ்வளவுக்கெவ்வளவு தேவையை பூர்த்தி செய்து விட முடியுமோ அந்த அளவிற்குப் பூர்த்தி செய்துவிட முடியும் என்று சென்ற வருஷத்திலே சொன்னார்கள். ஆனால், நான்காவது ஐந்தாண்டு திட்டத்தைக் காட்டுகிறார்கள் இப்போது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 120 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். இதைக் குறித்து நாம் பெருமைப்பட வேண்டாமா என்று கூட ஒரு உறுப்பினர் கேட்டார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் 217 கோடி ரூபாய். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே முடிய வேண்டியது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, 217 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு வேலை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது நாம் காத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று.

குறிப்பாக, கிணறுகளுக்கு மின்சாரம் கொடுக்கும்போது நிலைமை வேறு. அதை வாங்கும்போது நிலைமை வேறு. அனுபவிக்கும்போது நிலைமை வேறு. இது உண்மையில் அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு, விவசாயத்தை நன்றாகப் புரிந்து கொண்டுள்ளவர்களுக்குத்தான் தெரியும். விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாமல், எத்தனை ஏக்கரா பயிரிட்டார்கள், என்ன செலவா



யிற்று, என்ன வருமானம் வந்தது என்பதாகக் கணக்கை மட்டும் வைத்துக்கொண்டு பார்க்கிறவர்களுக்கு அது ஒன்றும் தெரியாது. நேரிடையாக விவசாயத்தில் ஈடுபடக் கூடியவர்களால் தான் இதை புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக நான் மின்சார விஸ்தரிப்பை பற்றிக் கூடப் பேச விரும்பவில்லை. விவசாயத்திற்காக மின்சார விஸ்தரிப்பை அளிக்க இத்தனை கோடி ரூபாய் செலவு செய்திருந்தும் கூட பஞ்சம் வருவதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தாக வேண்டும் என்பதைத்தான் வற்புறுத்துகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதே ரீதியில் போனால் எத்தனை கோடி ரூபாய் செலவு செய்தாலும் செலவு தான் ஆகிக்கொண்டே இருக்குமே தவிர நமக்கு ஒரு பலனும் வப்போவதில்லை.

இன்றைய தினம் நம்முடைய மின்சார உற்பத்தி மூன்று துறைப்பட்டதாக இருக்கிறது. ஒன்று நீர் மின்சாரம், இரண்டாவது அனல் மின்சாரம், மூன்றாவது அணு மின்சாரம். இதுவரைக்கும் நீர் மின்சாரத்தைப்பற்றி என்ன என்ன திட்டங்களைப் போட வேண்டுமோ அவற்றை எல்லாம் போட்டுவிட்டோம். இன்னும் ஐந்தாறு சிறிய திட்டங்கள் இருக்கின்றன என்றால் அவற்றையும் முடித்துவிடுவோம். நீர் மின்சாரம் ஒன்றினால் மட்டும் நமது தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிடுமா என்றால் நிச்சயமாக முடியாது. இந்த மின்சாரம் விவசாயத்திற்கு மட்டும் தான் பயன்படுகிறதா என்றால் நண்பர் திரு. சின்னசாமி சொன்னது போல மாவு அரைக்கக் கூட இதனைத்தான் இப்போது பயன்படுத்துகிறார்கள். அந்த நிலையில் எல்லாவிதத் தொழில்களுக்கும் மின்சாரம் தேவைப்படுகிறது. மழை இல்லை என்றால் கிடைத்துக்கொண்டிருந்தது கூடத் தடைப்பட்டுப் போகிறது. ஆகவே நீர் மின்சாரத்தை மட்டும் நம்பிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. அதற்கு அடுத்தபடியாக அனல் மின்சாரத்தைத்தான் நாம் எதிர்பார்க்கவேண்டியதாக இருக்கிறது. நெய்வேலித் திட்டம் வருகிறது, வருகிறது என்று சொல்லி, கடைசியில் அந்த நிலக்கரித் திட்டம் பழுப்பு நிலக்கரியை எடுக்கக் கூடியதாகமாறி, அதைக்கொண்டு மின்சாரத்தையாவது உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். அந்த அளவுக்காவது அது உருவாயிற்றே என்பதற்காக தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் சந்தோஷப்பட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நீர் மின்சாரம் என்றால் தண்ணீர் வறண்டால் மின்சாரம் இல்லை. அனல் மின்சாரம் என்றால் நிலக்கரி இல்லை என்றால் மின்சாரம் கிடையாது. இந்த இரண்டினால் மட்டும் நம்முடைய மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்படுமா என்றால் கிடையாது. நிலக்கரியாவது நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்குப் பல வருஷங்கள் கிடைக்குமா என்றால் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆக சுருக்கமாகச் சொல்லப்போனால் நமக்கு நிச்சயமாகத் தேவைப்படுவது அணுமின்சார திட்டந்தான். கல்பாக்கத்தில் அமைக்கப்பட இருக்கிற அணுமின் திட்டத்தைத்தான் நாம் உடனடியாக நிறைவேற்ற

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [2nd August 1966

முயற்சி செய்யவேண்டும். அதைத் தயவுசெய்து சேலம் இரும்புத் தொழிற்சாலை மாதிரியாகப் போய்விடாமல், வருமா வராதா என்கிற கேள்வி தொங்கிக் கொண்டிருக்க விடாமல்—நான்காவது திட்டத்தில் சேர்த்துவிட்டதாகப் பத்திரிகையில் கூட வந்து விட்டது என்றார்கள், நான் பார்க்கவில்லை. அதைக் கண்டிப்பாகக் கொண்டு வந்தே ஆகவேண்டும். கல்பாக்கம் அணுமின்சாரத் திட்டம் நம் நாட்டுக்கு அவசியம். அந்தத் திட்டம் விவசாயத்திற்கு மிகவும் முக்கியமானது என்பதை மனதில் கொண்டாவது அதைத் நிறைவேற்றித் தரவேண்டும். அந்த அளவுக்கு அந்த இலாக்கா அதிகாரிகளுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொருத்தவரையில் பல கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். இந்த அறிக்கையில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சில கிராமங்களின் பெயர்கள் வருகின்றன. சிலர் வேகமாகப் பேசுவார்கள். சிலர் மெல்லப் பேசுவார்கள். என்னால் வேகமாகவும் பேச முடியாது. மெல்லவும் பேச முடியாது. நான் ஊக்கத்தான் பேசுவேன். அப்படி இருந்தும் நான் பேசுகிறபோது சொல்கிற ஊர்களின் பெயர்களை எழுதுபவர்கள் சரியாக எழுதுவது இல்லை. அதன் காரணமாக வானூர் என்பது இங்கே வன்னூர் என்றும், முன்னூர் என்பது மண்ணூர் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளை அதைப்பற்றி பரிசீலனை செய்யச் சொல்லி அனுப்பினால்—அங்குள்ளவர்கள் என்ன செய்வார்கள்? இந்தத் தொகுதியில் வன்னூர் என்பதாகவும், மண்ணூர் என்பதாகவும் ஊர்களே இல்லை என்றுதான் சொல்லிவிடுவார்கள். அவர் ஏதோ பேசிவிட்டுப்போகிறார். அது மாதிரி ஊர்களே இல்லை என்று வந்து விட்டால் என்ன செய்வது?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஆங்கிலத்தில் வானூர் என்று இருப்பதை மொழி பெயர்க்கும்போது வன்னூர் என்று போட்டிருக்கலாம். அது மொழி பெயர்ப்பின் காரணமாக ஏற்பட்டிருக்கும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** வானூர் என்றால் ஒரு 'N' வரும். வன்னூர் என்றால் இரண்டு 'N' வருகிறது. இப்படிக் கூட பிழை ஏற்படுமா? இல்லாத ஊர்களின் பெயர்கள் இங்கே இருக்கின்றன. வானூர் பகுதி உப்புவேலூர் என்ற இடத்தில் 300 பம்பு செட்டுகள் வைக்கவேண்டும் என்று கோரியிருந்தார்களே, அது என்ன ஆயிற்று என்று அதிகாரிகளைக் கேட்டால் அதற்கு அவர்கள் அக்ரிமெண்டு எழுதித் தரவில்லை என்கிறார்கள். அந்த கிராமத்திலே போய்க் கேட்டால் நாங்கள் அக்ரிமெண்டு எழுதிக் கொடுத்துவிட்டோம். ஸ்டாம்ப் ஏதோ 5 நையா பைசா குறைகிறது, போதவில்லை என்று சொன்னார்கள். நீங்கள் கொஞ்சம் சொல்லிப் பாருங்களேன் என்கிறார்கள். அதையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.



2nd August 1966] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

வானூர் பிர்க்காவில் நான்கைந்து கிராமங்களுக்கு மின்சாரம் வந்திருக்கிறது. கிளியனூரில் ரெட்டியார் ஹோதாவில் நான்கைந்து கிராமங்களுக்கு வந்திருக்கிறது. மரக்காணத்தில் முதலியார் ஹோதாவில் நான்கைந்து தெருக்களுக்கு வந்திருக்கிறது. ஆனால் ஊரிலே தேவைப்படுகிற அளவுக்கு மின்சாரம் வந்திருக்கிறதா என்றால் இல்லை. அதுதான் அங்கே இருக்கிற ஆச்சரியம். "விழித்துக் கொண்டிருந்தவன் பெட்டைக்குட்டியை எடுத்துக்கொண்டு போனான். தூங்கினவனுக்கு கிடாக் குட்டி கிடந்தது" என்பார்களே, அதுபோலத்தான் கொஞ்சம் விழிப்போடு செயல்பட்டவர்களுக்கு மின்சாரம் கிடைத்து விட்டது. நானே சர்விஸ் வாங்குவதற்கு கடந்த ஐந்து வருஷங்களாக முயற்சி செய்து கடைசியில் இந்த ஜனவரியில் தான் வாங்கினேன். எனக்கே அந்த நிலை என்றால் சாதாரண விவசாயிகளுடைய நிலைமை என்ன ஆகும்? பலருக்கு யார் அதிகாரிகள் என்றே தெரியாது. மேலும் அந்த இலாகாவின் காரியாலயங்கள் எங்கே இருக்கின்றன என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. எங்களுக்கே இரண்டு டி.இ. இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒருவர் செங்கல்பட்டில் இருக்கிறார். இன்னொருவர் விழுப்புரத்தில் இருப்பதாக அறிகிறேன். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு இலாகா என்று ஏன் ஏற்படுத்தக் கூடாது. அவர்களை டி.டி.வி. கூட்டத்திற்கு வரச் சொல்லலாம். மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறோம். போலீஸ்காரர்களிடம் கேட்பது போல அவர்களிடம் எத்தனை பேர் கனெக்ஷன் கேட்டார்கள், எத்தனை பேர்களுக்குக் கொடுத்தீர்கள், எத்தனை ரிஜெக்ட் ஆயிற்று என்பதாக மாதந்தோறும் ஸ்டேட்மெண்டு கேட்டுப் பாருங்கள். அப்படியிருந்தால் உங்களுக்கு சௌகரியமாக இருந்தது. எங்களுக்கும் சௌகரியமாக இருக்கும். விட்டுப்போனவையும் தெரியும். இன்னும் செய்யவேண்டியதைச் சொல்வதற்கு வாய்ப்பாகவும் இருக்கும். இந்த சிட்டத்தை தென் ஆற்காட்டிலே நெய்வேலியிலாவது அல்லது கடலூரிலாவது மாவட்ட ரீதியிலே அமைத்து எங்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரத்திலே வேலைகளைச் செய்துகொடுக்க முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாய் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (கனம் உதவி சபாநாயகர் மணியடிக்க முற்பட்டார்.) யாருமே பேச வரவில்லையே, நானாவது பேசுகிறேன். தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்களைத் திறப்பு விழாவுக்கு விளக்குகளைப் போட்டுவிட்டு அழைக்கலாம் என்று நினைத்து இருந்தேன். அதற்காக மூச்செடுத்து முயற்சித்துப் பார்த்தேன். முடியவில்லை. 1962-லிருந்து எல்லா வேலைகளும் முடிந்து டிவிஷனல் எஞ்சினியர், சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர் எல்லாம் நாற்பது தெரு விளக்குகளுக்கு சாங்ஷன் செய்திருக்கிறார்கள். ஆனால் 7, 8 மாதங்களுக்கு முன்பு இதைப்பற்றிக் கேட்டால், 'கம்பம் இல்லை, நீங்கள் தலைகீழே நின்றால்கூட கம்பம் கிடைக்காது' என்று சொன்னார்கள். பிறகு கம்பம் கிடைக்கிற மாதிரித் தெரிந்தது. 'கம்பம்தான் கிடைக்கிறதே, இனிமேலாவது வேலையைச் செய்யுங்கள்' என்று சொன்னேன். 'கம்பி இல்லை'

என்று சொன்னார்கள். கம்பியும் கம்பமும் சேர்ந்துதானே வரும், அப்படி வராமல் தனித்தனியாக வருவதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. அவர்கள் எட்டாம் நம்பர் கம்பி வேண்டுமென்றும் அந்தக் கம்பி கேரளாவிலிருந்து இறக்குமதியாகிறது, அதை வாங்குவதற்கு சரியாகப் பணம் அரசாங்கம் கொடுப்பதில்லை, நீங்கள்தான் அமைச்சர்களையும் எங்கள் தலைவரையும் பார்க்கிறீர்களே, நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள் என்றும் என்னிடத்திலே சொல்கிறார்கள். ஆகவே, அந்த எட்டாம் நம்பர் கம்பி எங்கே இருக்கிறது? அது வராததற்குக் காரணம் என்ன? இதையெல்லாம் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து, எட்டாம் நம்பர் கம்பியை இறக்குமதி செய்து, வேலைகளை எல்லாம் சீக்கிரத்திலே செய்தால் ஓரளவுக்கு எனக்குத் திருப்தி ஏற்படும், அங்குள்ளவர்களும் வசதிகளைப் பெறுவார்கள்.

குறிப்பாக, என்னுடைய பகுதி பிற்பட்ட பகுதி. ஆற்று நீர் பாய்கின்ற பகுதி இல்லை, வானம் பார்த்த பூமி. மழை பெய்தால் தண்ணீர் வரும். இல்லாவிட்டால் காய்ந்த பிரதேசம் தான். கிணறு வைத்து இறைத்துத்தான் 1 காணி அல்லது ½ காணி பயிர் செய்யமுடியும். அதை வைத்து ஜீவனம் செய்யமுடியும். நல்ல காலம், 1961-லேயே நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னமேயே எலக்ட்ரிசிடி என்னுடைய கிராமத்திற்கு வந்துவிட்டது. ஆனால் அங்கே இன்னும் 20 பம்புசெட்டுகளுக்கு. கிணறு வெட்டி, மோட்டார் வாங்கி வைத்து அப்ளிகேஷன் எல்லாம் கொடுத்து எல்லாம் பண்ணியுங்கூட, சர்வீஸ் கொடுக்க கம்பம் நடவில்லை, கம்பி போடவில்லை. அங்கே சூபர்வைசர் வந்தார். 'என்னங்க என்று கேட்டேன்'. அதற்கு அவர் 'நீங்கள் சட்டசபையிலே என்னமோ கேட்டீங்களாம், அதைப் பார்த்து செய்வதற்காகத்தான் வந்தேன்' என்று சொன்னார். நானும் அவர் கூட இருந்து சர்வே வேலையெல்லாம் செய்து முடிக்கப்பட்டது. அவர் அதுபற்றிச் சொல்லும்பொழுது, '15, 20 கிணறுகளுக்குத்தான் இப்பொழுது இருக்கிற ட்ரான்ஸ்பார்மரின் கெப்பாசிட்டி, அந்த அளவுக்குத்தான் டிரான்ஸ்பார்மர் சப்ளை செய்யும், நீங்கள் சொல்லக்கூடிய அளவுக்கு இன்னும் சப்ளை கொடுக்கவேண்டுமென்றால் பெரிய டிரான்ஸ்பார்மர் வேண்டும். இல்லாவிட்டால் இதே மாதிரி இன்னொரு டிரான்ஸ்பார்மர் தனியே வைக்க வேண்டும். இப்பொழுது எந்த டிரான்ஸ்பார்மரும் கிடையாது. ஆகவே, இது அறுபத்தேழைத் தள்ளினாலும் தள்ளும், கிடைத்தால் வைத்துக்கொள்ளலாம், இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது' என்று சொல்லிவிட்டார். நான் இதைப்பற்றி 1962, 1963, 1964, 1965, 1966 ஆகிய எல்லா வருஷங்களிலும், மானியங்களின் பேரிலும் ஐந்து தடவைகள் பேசிவிட்டேன். இன்னும் நடக்கவில்லை. என்னுடைய தொகுதி பூராவும் இன்னும் மின் விஸ்தரிப்பு வேலை முடியவில்லை. ஒரு அம்மையார் அவர்கள் 100-க்கு 99 ஊர்களுக்கு மின் விஸ்தரிப்பு வேலை முடிந்துபோய் விட்டது என்று சொன்னார்கள், அப்படியானால் கம்பியும், கம்பமும் அங்கேதான் பூராவும் இறக்குமதியாகி விட்டதோ என்னமோ



தெரியவில்லை. ஆகவே, இனிமேலாவது உடனடியாக வேலை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவுக்கு நீண்ட நேரம் பேசுவதற்கு ஒரு வாய்ப்பைத் தந்த கனம் மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. மு. சண்முகம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டின் நிதிநிலை அறிக்கையின் மீது இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அறிக்கையில், நமது மாநிலத்திலே இதுவரையில் ஏறக்குறைய இரண்டரை லட்சம் பம்புசெட்களுக்கு மின்சாரம் வழங்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். மேலும் நடைபெறப்போகும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இன்னும் ஒரு இரண்டரை லட்சம் பம்புசெட்களுக்குமேல் மின்சாரம் கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்றெல்லாம் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதிலே முக்கியமாக விவசாயக் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருப்பது பாராட்டுதற்குரியதுதான். ஆனால், சாதாரணமாக இன்றையதினம் நாள் ஒன்றுக்கு மாநிலத்திலே 112 லட்சம் யூனிட்கள் செலவாகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 112 லட்சம் யூனிட்களில் விவசாயக் காரியங்களுக்காக எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்ற விவரம் அறிக்கையிலே கொடுக்கப் பட்டிருந்தால் நலமாக இருக்கும். பம்புசெட்டுகளை நாளுக்குநாள் அதிகப்படுத்தி எண்ணிக்கையை அதிகரிப்பது மகிழ்ச்சிக்குரிய காரியம் என்று மின்சார போர்டு கருதுகிறதேயொழிய உண்மையிலேயே பம்புசெட்டுகளுக்கு வழங்கி விவசாயக்காரியங்களுக்காக எவ்வளவு பயன்பட்டு வருகிறது, எப்படி வழங்கினால் விளைபொருட்களை அதிகரிக்கலாம் என்பது போன்றவற்றையெல்லாம் கூட அவர்கள் எடுத்துக்கொண்டு இந்த போர்டின் நிர்வாகஸ்தர்கள் அந்தக் கணக்கையும் ஓரளவுக்குப் பரிசீலித்துப் பார்த்து இந்த அறிக்கையிலே கொடுத்து இருந்தால் பொதுமக்களுக்கு எந்த நிலைமையில் அரசாங்கம் விவசாயக் காரியங்களுக்கு மின்சாரத்தை வழங்குகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வசதியாக இருந்திருக்கும். சாதாரணமாக ஒரு விவசாயி அந்த பம்பு செட்டுக்கு 3,000 ரூபாயாவது குறைந்தது செலவு செய்ய வேண்டியிருக்கும். கிணறு வெட்டுவது என்றால் 4,000 ரூபாயாவது செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஒரு எக்கர் வைத்திருக்கக் கூடிய குடியானவன் செய்யக்கூடிய காரியமல்ல இது. நடுநிலையில் உள்ள விவசாயிகள்தான் செய்ய முடியும். இவ்வளவு செலவுசெய்து பம்புசெட் ஏற்படுத்தி அவனுக்கு வேண்டிய மின்சாரம் வழங்கினால் அவனுக்கு வேண்டிய சாகுபடி செய்து கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய அளவையும் பார்க்க வேண்டும். ஒரு பம்புசெட்டுக்கு 5 அல்லது 6 எக்கர் விவசாயம்

[திரு. மு. சன்முகம்] [2nd August 1966

செய்தால்தான் உண்மையான பயனடைய முடியும். இன்றைக்கு எவ்வளவு பயிர்செய்ய முடியும் என்பதையும் அரசாங்கம் கவனித்து இருந்தால் ஓரளவிற்கு நன்மையாக இருந்திருக்கும். அனுபவத்தில் அவர்கள் இதைப்பற்றி சிந்தித்து கண்காணித்துப் பார்ப்பார்களானால் மின்சாரம் வழங்கப்படுகின்ற அளவுக்கு இன்றைக்கு இரண்டு அல்லது மூன்று ஏக்கருக்குமேல் சாகுபடி செய்யக்கூடிய 4-00 p.m. நிலை இல்லை. அவன் பெறும் மின்சாரம் போதிய அளவு நேரத்திற்குக் கிடைக்கவில்லை. பருவ கால மழை இல்லாமல் மின்சார உற்பத்தி குறைவாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறோம். இந்த நிலைமை தெரிந்தும்கூட பம்புசெட்டுகளின் எண்ணிக்கையை ஏன் ஏட்டளவில் அதிகப்படுத்திக் காட்ட வேண்டும்? இந்த நிலையில் விவசாயிகள் பம்பு செட்டுகளை வாங்கி வைத்து மின்சாரம் கிடைக்காமல் அதிகச் செலவு செய்து பயிர்த் தொழிலைச் செய்தாலும் பலன் பெற முடியாத நிலை இருக்கிறது. இரண்டு, மூன்று ஏக்கருக்கு மேல் மிராசுதார்கள், கொஞ்சம் வசதியுள்ளவர்கள் ஒரு பம்பு செட்டுக்குப் பதிலாக இரண்டு மூன்று பம்பு செட்டுகளைப் வைத்து விவசாயம் செய்கிறார்கள். அவ்வாறு இரண்டு மூன்று பம்பு செட் வைத்து விவசாயத்தைச் செய்வதனால் மிகுந்த பிரயாசைக்குப் பிறகு முயற்சிக்குப் பிறகு கிடைக்கிற பலன் குறைவாகவோ அல்லது நஷ்டப்படுகிற நிலைதான் இருக்கிறதே தவிர, விவசாயி பலன் பெறக்கூடிய தகுதி இல்லை. இப்படி பம்பு செட்டுகளைக் கொடுத்து அவைற்றுக்கு மின்சாரத்தைக் கொடுக்காததன் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இரவு 12½ மணிக்கு மேல் மின்சாரம் வழங்கினால் நடவு நடுவதற்கு வேலைக்காரர்கள் எப்படி வர முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமீபத்தில் இரவு காலங்களில் 10 மணிக்கு மேல் மின்சாரம் வழங்கப்படுகிறது. இரவு நேரத்தில் விவசாயி எப்படி பயிர் வேலை செய்ய முடியும் என்று புரியவில்லை. சில கிராமங்களில் இரவில் விளக்கை வைத்துக் கொண்டு நடவு நட்டிருக்கிறார்கள். இது உண்மையிலேயே விளைபொருள்கள் அபிவிருத்திக்குப் பொருந்துமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டுமென்று போர்டாரையும், அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது செலவாகும் 112 லட்சம் யூனிட் மின்சாரத்தில் கூடுமான வரையில் பெரும்பகுதியை மின்சார பம்புசெட்டுகளுக்கு வழங்குவதற்குத் திட்டங்களை வகுத்துக் கொடுத்தால் விவசாய காரியங்களுக்குப் பயன் தரத்தக்கதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது; ஆனால் சரியாக வழங்கப்படுவதில்லை. 12 மணி நேரம் ஒழுங்காக மின்சாரத்தைக் கொடுத்தாலே நல்ல முறையில் விவசாயம் செய்ய ஏதுவாக இருக்கும். தொழிற்சாலைகள் கட்டடங்களிலே இருப்பதால் இரவு 12 மணிக்கு மேல் கூட வேலை செய்ய முடியும். ஆனால் விவசாயிகளுக்குப் பகலில் மின்சாரம் கொடுத்தால்தான் விவசாயம் செய்வதற்குப் பயன்பட முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.



2nd August 1966] [திரு. மு. சன்முகம்]

விவசாயிகள் மின்சாரத்தைப் பெறுவதிலே அநேக சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இவை பற்றியெல்லாம் பல முறை மின்சார போர்டுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இதுவரையில் சீர்திருத்தம் ஆனதாகத் தெரியவில்லை. சாதாரண விஷயமாக இருந்தாலும் தவிர்க்கப்பட வேண்டிய விஷயம். ஒருவர் பம்புசெட் தேவை என்று விண்ணப்பம் செய்தால் அதைப் பெறுவதற்கு லஞ்சம் கொடுத்துத்தான் தீர வேண்டியிருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டிய நிலைமை. கூடுமான வரையில் இதைத் தவிர்ப்பதற்கு மின்சார போர்டார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். முருகையன் : கனம் சட்ட மன்ற அவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கழக நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த போர்டு நல்ல முறையில் வேலை செய்து வந்தாலும்கூட, இதிலே பல குறைபாடுகளை ஒவ்வொருவரும் எழுப்புவதற்குக் காரணம் சர்க்காரால் செய்யப்பட வேண்டிய சில வேலைகள் காலா காலத்தில் செய்ய முடியாததுதான். ஆகையால் இதற்கு ஒரு கெட்ட பெயர் உண்டாகக்கூடிய அளவுக்குக் குறை சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

எங்களுடைய மாவட்டத்தைப் பொருத்தவரையிலே மின்சாரம் பெறுவதிலே இரண்டு குறைபாடுகள் இருந்து கொண்டு வருகின்றன. ஒன்று பாலாறு படுகை விதியாகும். இன்னொன்று ஓனர்ஷிப் சர்ட்டிபிகேட் பெறுவது. அந்த சர்ட்டிபிகேட் பெறும் முறையை ஓரளவு இப்போது தளர்த்தியிருந்தாலும் இன்னும் நல்ல முறையில் விரைவாக அதைப் பெற முடியவில்லை. பாலாற்றுக்கும் எங்கள் பகுதிக்கும் இடையே உள்ள தூரம் 50 மைல் இருந்தும் கூட, அந்த விதி எங்கள் பகுதியில் இருந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு கூட இதைப்பற்றிச் சொன்னேன். சர்க்கார் இதைப்பற்றி எந்த விதமான கவனமும் செலுத்தியதாகத் தெரியவில்லை. இந்த விதியின் காரணமாக எங்களுக்கு உடனடியாக மின்சாரம் கிடைக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. அந்தச் சட்டப்படி அதற்குரிய சான்றிதழை வாங்கி வர வேண்டுமென்று சொல்கிறார்கள். சாதாரணமாக, ஒரு விவசாயி எல்லா வேலைகளையும் விட்டு விட்டு பாலாறு படுகை விதி சர்ட்டிபிகேட் வாங்க நடந்து கொண்டே இருந்தால் மூன்று மாத காலத்திற்குப் பிறகு அதற்கான சான்றிதழைப் பெற முடிகிறது.

அடுத்து, சர்க்காரிலே மின்சார இலாகாவினர் ஒரு ஸ்கீமை எடுத்து சாங்க்ஷன் செய்கிறார்கள். ஒரு கிராமத்தில் ஐம்பது பேர்களுக்கு சாங்க்ஷன் செய்கிறார்கள். உடனடியாக அவர்கள் போட

[திரு. எஸ். முருகையன்] [2nd August 1966

டார் பம்ப் செட் மின்சார இணைப்பு வாங்குவதற்காக மனு செய்கிறார்கள். மனு செய்து ஆறு மாதம் அல்லது ஒரு வருட காலத்தில் மின் இணைப்பு வாங்கிவிட்டால் அந்த விவசாயி திறமையான விவசாயி என்றுதான் சொல்லமுடியும். ஏனெனில் இந்த ஆண்டு மனுப் போட்டால் அடுத்த ஆண்டுதான் விசாரணைக்கு வருகிறார்கள். கர்ணம் மணியம் எல்லோரும் உரிய நேரத்தில் தங்கள் சான்றிதழ்களை வாங்கினாலும்கூட அது தாலுகா ஆபீஸ் அல்லது பஞ்சாயத்து ஆபீஸுக்கு சென்று உட்கார்ந்துவிட்டால் ஆறு மாதம் அல்லது ஒரு ஆண்டுக்கு மேலாகிவிடுகிறது. மின்சார மோட்டார் வாங்க கடன் உதவியைப் பெறுவதற்கு ஒரு திட்டம் இருந்தாலும்கூட உடனே கடன் பெற முடிவதில்லை. அப்படியே கடன் கிடைத்து மோட்டார் வாங்கினாலும் சர்க்காரின் தொல்லைகள் காரணமாகவும் பாலாறு படுகை விதி என்ற காரணத்தினாலும் எங்கள் மாவட்டத்தில் மின்சாரம் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது. அதற்கு இந்த இரண்டு காரணங்கள்தான். இந்த இலாகாவில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் சர்க்கார்தானே தவிர, எங்கள் மாவட்டத்தைப் பொருத்தவரையில் சொல்கிறேன், மின்சாரக் கழகம் அல்ல. அந்தந்த அலுவலகங்களுக்குச் சென்று எவ்வளவு காரியங்கள் செய்தாலும்கூட ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்கு முன்பாக மின் இணைப்பு பெறுவது என்பது கடினமான நிலையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே சர்க்கார் இந்த நிலையை மாற்றி விவசாயிகளுக்கு உடனடியாக இந்தக் கடன்கள் கிடைப்பதற்கு பாலாறு படுகை விதிகளிலிருந்து நிவர்த்தி செய்து கொடுத்து ஒரு வழி செய்தால் நலமாயிருக்கும்.

மின்சாரக் கழகத்தில் ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன. ஒரு கிராமத்தில் உள்ளவர்கள் மின்சாரம் வேண்டுமென்று சம்பந்தப்பட்ட கமர்ஷியல் டி.இ. அவர்களுக்கு மனு செய்கிறார்கள். சம்பந்தப்பட்ட சூப்பர்வைசர்களை அனுப்பி சர்வே செய்து இத்தனை பம்ப் செட்களை அமைக்கலாம் என்ற நிலையை ஏற்படுத்துகிறார்கள். அப்படி ஏற்படுத்திய பின்னர் கன்ஸ்ட்ரக்ஷனுக்கு அனுப்புகிறார்கள். கன்ஸ்ட்ரக்ஷனுக்கு வந்தவுடன் ப்ராயாரிட்டி லிஸ்டில் வைத்துவிடுகிறார்கள். அதைப் பார்த்து ப்ரையாரிட்டி படி சாங்க்ஷன் செய்கிறார்கள். யாராவது சென்று சொன்னால் உடனடியாக லிஸ்டிலிருந்து முதல் சலுகை கொடுத்து மாற்றுகிறார்கள். அப்படி மாற்றியவுடன் கன்ஸ்ட்ரக்ஷன் இஞ்சினியர் வந்து வேலை செய்கிறார்கள். வேலை செய்யும் நேரத்தில் விவசாயிகள் என்ன நினைக்கிறார்கள் என்றால் மனு செய்து ஒரு வருடமாயிற்றே, முன்பு சர்வே செய்தார்கள் இப்போதும் வந்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் காலதாமதமாகும் என்று நினைக்கிறார்கள். அதன் காரணமாக உடனடியாக பம்ப் செட்ஸ் வாங்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்படுவது கிடையாது. ஆகவே தாமதப்படுத்துகிறார்கள். கன்ஸ்ட்ரக்ஷன் வேலை செய்து விட்டு டிரான்ஸ்பார்மர் வைத்துவிட்டு ஓ. அண்ட் எம். டி. இ. யிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். ஃபீடர் லைன் போடுவதில்லை. பின் ஓ. அண்ட் எம்.டி.இ. ஆபீசுக்கு நடக்க வேண்டியிருக்கிறது. அங்கு செல்வது



2nd August 1966] [திரு. எஸ். முருகையன்]

என்பது சாமான்யமான காரியம் அல்ல. கன்ஸ்ட்ரக்ஷனுக்கு முதலில் திட்டமிடும்போது எவ்வளவு கம்பங்கள், கம்பிகள் வேண்டுமென்று திட்டத்தை ஆராய்வதற்கு விவசாயிகள் தயாராக இல்லாத காரணத்தினால் கனெக்ஷன் கொடுக்காமல் ஓ. அண்ட் எம்.டி.இ. ஆபீசில் ஒப்படைத்து விடுகிறார்கள். கம்பங்கள், கம்பிகள் வேண்டுமென்று டிரான்ஸ்பார்மர் சார்ந்து கொடுத்தவுடன் ஒப்படைத்து விடுகிறார்கள். ஆகவே, இந்த சாமான்கள் இல்லாததால் கனெக்ஷன் கொடுப்பது ஓ. அண்ட் எம்.டி.இ. ஆபீசில் தடைப்படுகிறது. விவசாயிகளுக்கு இதனால் ஏற்படுகிற தொல்லைகளுக்கு சரியான வேறு காரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே கன்ஸ்ட்ரக்ஷன் வேலை செய்யும் நேரத்தில் வேலை ஆரம்பிப்பதற்கு முன்பேயே எல்லா விவசாயிகளுக்கும், இம்மாதிரி வைக்கப்போகிறோம். இரண்டு மாதங்களுக்குள்ளாகவே எல்லாம் தயாராக வைத்துக்கொண்டால் உடனடியாக கனெக்ஷன் கொடுத்துவிடுவோம் என்று எச்சரிக்கை செய்வது மாதிரி செய்யவேண்டும். முதலில் ஏதோ எழுதிக் கொடுக்கிறார்கள், எக்ரிமெண்ட் செய்துவிடுகிறார்கள். இவ்வளவு நாட்களுக்கு முன்பு நாங்கள் கனெக்ஷன் கொடுத்துவிடுவோம் என்று விவசாயிகளுக்கு தெரிவித்துவிட்டால் அவர்கள் உடனடியாக மோட்டார்களை வாங்குவதற்குள்ள ஏற்பாடுகளைச் செய்வார்கள். ஆகவே, மின்சாரக் கழகம் இதில் கவனம் செலுத்தி அவர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹரிஜன காலனிகளுக்கு விளக்கு கொடுப்பதுபற்றி எனக்கு முன்பு பேசிய சில உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள். சென்ற ஆண்டு இதற்காக மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். மூன்று லட்சம் ரூபாய் இந்த மாநிலம் முழுமைக்கும் போதுமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று லட்சம் ரூபாயை ஒரு மாநிலம் முழுமைக்கும் கொடுத்துவிட்டு எல்லா ஹரிஜனக் காலனிகளுக்கும் விளக்குகள் போட வேண்டுமென்று சொன்னால் முடிகிற காரியமா? ஹரிஜனங்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற எண்ணம் எல்லோருக்கும் இருந்தாலும் பொதுவாக ஒரு பஞ்சாயத்து தலைவர் தமது பஞ்சாயத்துக்கு விளக்கு போட, முதலில் ஊருக்குப் போடுவதைப் பற்றித்தான் சிந்திக்கிறார்களே தவிர ஹரிஜன காலனிகளை மறந்து விடுகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் ஹரிஜன காலனிகளுக்கும் ஊருக்கும் அதிக தூரம் இருக்கிற காரணத்தினால் எஸ்டிமேட் போட்டால் 10 சதவிகிதம் சரியாக வருவதில்லை என்ற காரணத்தினால் போடாமல் விட்டு விட்டு ஊருக்கு மட்டும் போட்டு விடுகிறார்கள். ஆகவே, முதலில் ஹரிஜன காலனிகளுக்கு எல்லாம் விளக்கு போட்ட பிறகுதான் ஊருக்குப் போட வேண்டுமென்று சட்டம் இயற்ற வேண்டும். இல்லாவிடில் ஹரிஜனக் காலனிகளுக்கு போடக் கூடிய அளவிற்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் தகுந்த அளவு நிதி ஒதுக்க வேண்டும். இதில் எதையாவது செய்யவில்லை

[திரு. எஸ். முருகையன்] [2nd August 1966

என்றால் ஹரிஜன காலனிகளுக்கு மின்சாரம் கிடைப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஹரிஜனங்களுக்கு பம்ப் செட்ஸ் போடவேண்டுமென்றால் முதலில் 10 சத விகிதம் லாபம் வரவில்லை என்றாலும் எவ்வளவு வந்தாலும் சரி அவர்களுக்கு பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்குவது அல்லது ஹரிஜன காலனி களுக்கு விளக்குகள் போடுவது இவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று பொதுவாக ஒரு சட்டம் போட்டால்தான் ஹரிஜன மக்கள் சரியான நிவாரணம் பெற முடியும் என்றும் அதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சார வெட்டு வந்தபோது எங்கள் பகுதியைப் பொறுத்த வரை கிட்டத்தட்ட 300, 400 மோட்டார்களுக்கு மேல் பர்ன் ஆகி விட்டன. எந்த நேரத்தில் மின்சாரம் வருகிறது, எந்த நேரத்தில் வருவதில்லை என்பதை அங்குள்ள விவசாய மக்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்காததினால் மேல் இடத்திலிருந்து உத்தரவு சென்றிருக்கலாம்—கீழ்இல் உள்ள அதிகாரிகள் விளக்கித் தெரிவிக்கா ததினால் பல விவசாயிகள் கரண்ட் வருகிறதா இல்லையா என்று லைட் போட்டுப் பார்க்காத காரணத்தினால் பல மோட்டார்கள் பர்னாகி இருக்கிறது. முன்பெல்லாம் ரீ ஒயிண்டிங் செய்ய ஒரு மோட்டாருக்கு 90 ரூபாய் கொடுத்தால் காயில் சுற்றிக் கொடுத்து விடுவார்கள். இப்போது அதற்கு 240 ரூபாய்க்கு மேல் ஆகிறது. ஆக, வெட்டு வரும்போது இப்படி மோட்டார்கள் பர்னாகி விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு ஏழை விவசாயி மூன்று எக்கர் சாகுபடி செய்து வந்தார், மோட்டார் பர்னாகி விட்டது. 240 ரூபாய் கடன் பெற்று அந்த மின்சார மோட்டாரை சீர்செய்ய முடியாததினால் மூன்று எக்கர் பயிரும் நாசமாகிவிட்டது. ஆகவே கீழே உள்ள அதிகாரிகள் எந்தெந்த நேரத்தில் கரெண்ட் வரும் என்பதை விவசாயிகளுக்கு அவ்வப்போது தெரியப்படுத்தவேண்டும். ஆகவே இந்த இலாகா தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஓ. அண்ட் எம்.ட்.இ.-யிடம் சார்ஜ் ஒப்படைத்துவிட்டு போன பிறகு கம்பம், கம்பி கிடைக்காத காரணத்தினால் வட ஆற்காடு மாவட்டத்தில் வொயரிங் செய்து தயாராக இருக்கக்கூடிய மோட்டார்கள் ஆயிரத்திற்கு மேல் கனெக்ஷன் கிடைக்காமல் தாமதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரை மின்சார வெட்டு இருந்தது. இப்போது வெட்டும் நீங்கியிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொருத்தவரையில் செய்யாற்றைத் தவிர வேறு பாசனம் இல்லை. ஆயிரத்திற்கு மேல் மோட்டார்கள் வொயரிங் செய்யப்பட்டுத் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த மாதத்திலாவது அவற்றிற்கு கனெக்ஷன் கொடுத்து உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மின்சாரக் கழகமும், சர்க்காரும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.



2nd August 1966]

* திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மின்சார வசதி கொடுப்பதில் இருக்கின்ற சில குறைகளைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்காட்டில் ஒவ்வொரு ஊருக்கும் மின்சார வசதி வேண்டும் என்று கேட்டு ஒரு வருடம், ஒன்றரை வருடம் ஆகிறது. அது என்னவாயிற்று என்று இன்னும் தெரியவில்லை. அங்கு மழை காலத்தில் எல்லா இடத்திலும் கம் என்று இருட்டு வந்து அடைந்துக் கொள்கிறது. இதனால் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளில் எல்லாம் ரோடு மூலமாக மின்சார வசதியை விஸ்தரிக்க வேண்டும் என்று மிகவும் வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, பனைமரத்துப்பட்டி தொகுதியில் தொம்பல்பட்டி என்ற கிராமத்திற்கு மின்சாரம் கொடுப்பதற்கு கம்பம், கம்பி இவைகளை எல்லாம் கொண்டுபோய் போட்டார்கள். இப்படிப் போட்டு இரண்டு வருடங்கள் ஆகியும், கம்பி இழுக்கப்படாமல் கம்பத்தை எல்லாம் அப்படியே போட்டு வைத்திருந்தார்கள். இரண்டு வருடமாக அப்படியேதான் இருக்கிறது. அதேபோன்று தான் பம்பு செட் வேண்டும் என்று கேட்டு மனுக்கள் அனுப்பி இரண்டு வருடங்கள் ஆகிறது. இன்னும் சர்வீஸ் கொடுக்கப்பட வில்லை, என்ன பண்ணியிருக்கிறார்களோ தெரியவில்லை. இதற் கிடையில் என்ன நடந்தது என்றால், தொம்பல்பட்டி கிராமத்தில் கிடந்த கம்பம், பைப், கம்பி இவைகளை எல்லாம் இன்னொரு கிராமத்திற்கு கொண்டுபோய் போட்டிருக்கிறார்கள். இந்த சாமான்களை எடுக்க வந்தவர்களிடம், ஏம்பா இப்படி. இங்கிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துக்கொண்டு போகிறீர்கள் என்று கேட்டதற்கு, இன்னொரு இடத்திற்கு மின்சாரம் கொடுப்பதற்கு ஆர்டர் வந்திருக்கிறது, சூப்பர்வைசர் எடுத்துக்கொண்டு வரச் சொன்னார் என்று சொல்லி அதை எடுத்துக்கொண்டு போனார்கள். அங்குள்ள மக்கள் மலை ஜாதியினர், படிப்பு தெரியாத மக்கள் அதனால் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. வேறுள்ள கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு கிராமத்தில் கொண்டு போட்டிருப் பதை இன்னொரு கிராமத்திற்கு எடுத்துச் செல்வது சரியல்ல, ஒரு மனிதனுக்குள்ள சாப்பாட்டை எடுத்து இன்னொருவனுக்கு எடுத்துக் கொடுப்பது நியாயம் அல்ல. இன்னொரு கிராமத்திற்கு வேண்டுமென்றால், தனியாக சாமான்களைத் தயார்பண்ணி கொண்டு வந்து கொடுக்கவேண்டும். ஆகவே, இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து, தொம்பல்பட்டி கிராமத்திற்கு வேண்டிய சாமான்களை எல்லாம் இரண்டாவது தடவை தயார் செய்து அங்குள்ள மக்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தொம்பல்பட்டி கிராமத்தின் பக்கத்திலுள்ள கோணமடுவு, குரால் நத்தம் கிராமத்திற்கு 42 கிணறுகளுக்கு ஆர்டராகி ஏழெட்டு வருடங்கள் ஆகிறது. பம்பு செட் வாங்கி ஒரு வருடம்,

*[திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்]* [2nd August 1966

ஒன்றரை வருடம் ஆகியும், எந்தவிதமான சர்விஸ் கனக்ஷனும் கொடுக்கப்படவில்லை. முன்னால் எட்டு வருடங்களுக்கு முன்னால் ஆர்டர் கொடுத்த கிணறுகளில் உள்ள மோட்டார்கள்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. இப்போது புதிதாக சர்விஸ் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. அங்குள்ள கிணறுகள் எல்லாம் ஆழங்காலில் இருக்கின்ற கிணறுகள். ஆகவே இந்தக் கிணறுகளுக்கு எல்லாம் சர்விஸ் உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துக்கள் மூலமாக மின்சார வசதி செய்து கொடுப்பதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். பனைமரத்துப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரை அங்குள்ள கிராமங்கள் எல்லாம் மலைப் பிரதேசம். பனைமரத்துப்பட்டி வரை மின்சாரம் இருக்கிறது. அதற்கு கிழக்கே ஐந்தாறு மைல் தூரமுள்ள இடங்களில் இருக்கும் எட்டு ஊர்களுக்கு மின்சார வசதியில்லை. அதாவது கோனமடுவு, சல்லூத்துப்பட்டி, கம்மாளப்பட்டி போன்ற இடங்களுக்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

4-24 p.m. MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## XII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 73. *Notification issued with G.O. Ms. No. 1576, Rural Development and Local Administration, dated the 21th June 1966, regarding the supersession of Aruppukottai Municipal Council for a period of two years on and with effect from 21th June 1966, and its reconstitution thereafter. [Laid on the Table of the House under Section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920.)]*

* 74. *Notification issued with G.O. Ms. No. 1643, Rural Development and Local Administration, dated 2nd July 1966, regardng the supersession of the Tirunelveli Municipal Council for a period of two years with effect on and from the 2nd July 1966, and its reconstitution thereafter. [Laid on the Table of the House under Section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920.)]*

75. *Notification issued with G.O. Ms. No. 752, Rural Development and Local Administration, dated the 19th March 1966 making certain amendment to the rule relating to illicit cutting of trees vesting in Panchayats published with the Rural Development and Local Administration Department Notification (Notification 14) S.R.O. No. A.123 of 1962, dated the 1st February 1962, at page 73 of the Supplement to Part V of the* Fort St.



2nd August 1966]

George Gazette, *dated the 11th February 1962. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.)]*

76. *Notification issued with G.O. Ms. No. 1140, Revenue, dated the 28th April 1966 appointing the 1st June 1966, as the date on which certain provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 to come into force in the inam estate specified in the schedule of the notification. [Laid on the Table of the House under Section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963.)]*

77. *Notification issued with G.O. Ms. No. 861, Local Administration, dated the 28th March 1966 regarding the inclusion of certain areas specified in the Schedule of the notification, within the jurisdiction of Tambaram Municipality. [Laid on the Table of the House under Section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920.)]*

78. *Notification issued with G.O. Ms. No. 1150, Rural Development and Local Administration, dated the 4th May 1966, removing Dr. T. P. Natesan from the Office of the Chairman of the Coonoor Municipal Council. [Laid on the Table of the House under Section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920.)]*

79. *Notification issued with G.O. P.J No. 2282, Revenue, dated the 5th July 1966, regarding the reduction from $6\frac{1}{2}$ ver cent to $2\frac{1}{2}$ per cent single point, the rate of tax payable under item 41 in the First Schedule to the Madras General Sales Tax Act, 1959, in respect of sale of electrical goods by any dealer to Madras Government departments and Indian Railways. [Laid on the Table of the House under Section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959.)]*

80. *Notification issued with G.O. Ms. No. 1553, Rural Development and Local Administration Department, dated the 21st June 1966, making certain rule regarding co-option of woman Member to Panchayat. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.)]*

81. *Notification issued with G.O. Ms. No. 992, Rural Development and Local Administration, dated 18th April 1966, making certain amendments to the Conduct of Election of Members of Village Panchayats Rules, 1964 published with the Rural Development and Local Administration Department (Local Administration) Notification S.R.O. No. A-950 of 1964, dated 25th September 1964 at pages 1 to 10 of Part V of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 28th September 1964, as subsequently amended. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.)]*

[2nd August 1966

82. *Notification issued with G.O. Ms. No. 1554, Rural Development and Local Administration, dated the 21st June 1966 making an amendment to the Madras Panchayats (Election of Presidents and Vice-Presidents) Rules, 1961. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.)]*

83. *Notification issued with G.O. Ms. No. 1796, Revenue, dated the 23rd May 1966, appointing certain persons as members of the Area Committee, Coimbatore. [Laid on the Table of the House under Section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Maddas Act 22 of 1959.)]*

84. *Notification issued with G.O. Ms. No. 1793, Revenue, dated the 23rd May 1966, appointing certain persons as members of the Area Committee, Coimbatore. [Laid on the Table of the House under Section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959.)]*

85. *Notification issued with G.O. Ms. No. 1241, Local Administration, dated the 17th May 1966 making certain amendments to the Rural Development and Local Administration Department Notification II-I No. 519 of 1966, dated the 16th February 1966, published at pages 198–199 of the Part II—Section 1 of the* Fort St. George Gazette, *dated the 16th February 1966. [Laid on the Table of the House under Section 25 (4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965.)]*

† 86. *Audit Report on the Annual Accounts of the Madras State Electricity Board for the year 1962–63 and Balance Sheet as on 31st March 1963. [Laid on the Table of the House under Section 69 (5) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948.)]*

† 87. *Audit Report on the Annual Accounts of the Madras State Electricity Board for the year 1963–64 and Balance Sheet as on 31st March 1964. [Laid on the Table of the House under Section 69 (5) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948.)]*

### B. Reports, notifications and other papers

† 10. *Statement showing the action taken on the suggestions made by the Members of the Madras Legislature during the discussions on the Annual Financial Statement of the Madras State Electricity Board for the year 1965–66. (Tamil and English).*

* 11. *Speech of Sri V. Ramaiah, Minister for Food, initiating the discussions in the Madras Legislature on the Annual Financial Statement for 1966–67 and the Supplementary Financial Statement for 1965–66 of the Madras State Electricity Board (Tamil and English.)*

* Laid on the table of the House on 1st August 1966.

† Despatched to Members on 30th July 1966.



2nd August 1966]

## APPENDIX.

[*Vide* Answer to Starred question No. 26 on page 92]

Mr. L. I. Terentiev (U.N. Expert), National Aeronautical Laboratory, Bangalore, has visited the Thanjavur district and has reported on the scope for utilizing wind-power for irrigational pumping. An extract of his report is given below :—

*Observation.*

" The most important factor to be considered before proceeding with the installation of a windmill pumping plant for irrigation purposes is knowledge of wind velocity at the selected site. If this is less than 3 metres per second over a large part of year it is not worthwhile to install wind power machines. In view of the above only one area Nagapattinam, where average annual wind speed is 3·95 metres per second is considered suitable for installation of wind-mills. In this area also, the wind velocity during the months August to October is very low. To ensure continuous supply of water, it is considered necessary to have a stand by diesel plant. This plant will supply about 10 to 15 per cent of the water during the year. This increases the life of auxiliary plant considerably.

*Recommendations.*

*Irrigation of land up to* 50 *acres.*—A windmill of type D-12 coupled with centrifugal pump is recommended for such lands. The machine will give output of 5 h.p. at the rated speed of 6 metres per second and will start pumping at windspeeds of 3 m/sec. This machine will pump 90,000 cubic metres of water at 25 feet head during irrigation period of six months.

Wind-mill type D-12 is a machine of simple construction. This consists of two propeller type blades driving a set of bevel gear and pinion which in turn rotates the impeller of the centrifugal pump.

The annual output of this machine will be 28,000 h.p. hrs. As the irrigation season is only for six months, the output during this period will be 14,000 h. p. or 10,000 k. w. hrs. This is equivalent to 3,500 litres of diesel fuel (considering 0·27 kg/h.p. hr.) or Rs. 1,000 towards electrical charges for pumping during the season at the rate of 10 Paise per k. w. hr.

*Cost breakdown of machine.*—The cost of production of the machine is estimated to be Rs.5,000 in large scale production and Rs. 6,000 in case the number of machines to be produced is one hundred.

[2nd August 1966

The breakdown of cost works out as follows :—

| | Cost in Rupees. |
|---|---|
| Propeller .. .. .. .. | 1,500 |
| Tower .. .. .. .. .. | 1,000 |
| Turn-table .. .. .. .. | 500 |
| Pump .. .. .. .. .. | 500 |
| Head Mechanism .. .. .. | 1,500 |
| Total .. | 5,000 |

The weight of the machine will be roughly 2,000 kilograms.

Considering 10 per cent depreciation of the cost of the machine will be fully recovered in ten years.

*Irrigation of lands—200 acres and above.*—Irrigation of large fields could be done successfully by D-18 type windmill. This machine develops 20 h.p. at a rated speed of 7 m/sec. and states pumping at 3·5 m/sec. A battery of such windmills depending upon area to be irrigated could be installed in place of existing pump houses. However, to cater for low wind speeds, it is essential that stand by diesel sets must be installed in these cases. The economics of such installation has to be worked out with care.

In the United States of Soviet Russia these windmills are installed in collective farms together with additional diesel plant. The plant output is of the order of 10 to 15 per cent. This works out very cheap and it is found to be economic as considerable money is saved by these machines.

*Conclusion.*

For small fields D-12 type machine seems adequate and will generally meet the requirement of the cultivator. This requires practically no maintenance and is simple to operate.

For large fields and as an alternate to pump stations, D-18 machine is good but the economics of operation is to be worked out in detail. In my country as the price of diesel engine is considerably low this is found very economic. As the price of diesel engines of 20 h.p. capacity is high in India, I don't think it will be practicable to use these machines for large scale irrigation"

(அ) பெங்களூர் தேசிய வானூர்தி ஆய்வுக் கூடத்தைச் சேர்ந்த திரு L.I. பெரென்டியவ் (ஐக்கிய நாடுகள் வல்லுனர்), தஞ்சாவூர் மாவட்டத்திற்குப் போய், பாசனத்திற்கு நீர் இறைப்பதற்காக காற்றின் சக்தியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைக் குறித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அவரது அறிக்கையின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

கருத்து.

"பாசனத்திற்கு நீர் இறைப்பதற்காகக் காற்றுடி இயந்திரத்தை நிறுவ முற்படுவதற்கு முன்பு, குறிப்பிட்ட இடத்தில் காற்றின் வேகத்தைப்பற்றி அறிவது மிக முக்கியமானதாகும். ஆண்டின் பெரும் பகுதியில் காற்றின்



2nd August 1966]

சக்தி விநாடிக்கு 3 மீட்டருக்குக் குறைவாக இருந்தால், அங்கு காற்றுடி இயந்திரங்களை நிறுவுவதில் பயனில்லை. மேற்சொன்ன காரணத்தால் நாகப்பட்டினத்தில் ஒரு பகுதியில் மட்டும் சராசரி ஆண்டு காற்று வேகம் விநாடிக்கு 3·95 மீட்டராயிருப்பதால், அங்குக் காற்றுடி இயந்திரங்களை நிறுவுவது ஏற்றதெனக் கருதப்படுகிறது. இந்தப் பகுதியிலும் ஆகஸ்டு—அக்டோபர் மாதங்களில் காற்றின் வேகம் மிகக் குறைவு. தொடர்ந்து நீர் பாய்ச்சுவதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு, அவசர சமயங்களில் பயன்படுத்துவதற்காக ஒரு டீசல் இயந்திரத்தைத் தயாராக வைத்திருப்பது அவசியமெனக் கருதப்படுகிறது. இந்த டீசல் இயந்திரம் ஓர் ஆண்டில் சுமார் 10 முதல் 15 சதவீதத் தண்ணீரை இறைக்கப் பயன்படும். அனை இயந்திரம் நீண்ட நாட்கள் செயல்படுவது இதனால் சாத்தியமாகிறது.

பரிவுரைகள்.

ஐம்பது ஏக்கர் வரை பரப்புள்ள நிலங்களுக்குப் பாசன வசதி அளித்தல்.

ஐம்பது ஏக்கர் வரை பரப்புக் கொண்ட நிலங்களுக்கு மையம் விட்டோடும் விசை ஏற்றத்துடன் கூடிய (centrifugal pump) D-12 இயந்திரத்தை நிறுவலாம். விநாடிக்கு 6 மீட்டர் வேகத்தில் ஐந்து குதிரைத் திறன் ஆற்றல் அந்த இயந்திரம் மூலம் கிடைக்கும். விநாடிக்கு 3 மீட்டர் காற்று வேகத்திலும் இயந்திரம் நீர் இறைக்கத் தொடங்கும். ஆறு மாதப் பாசனக் கால அளவில் 25 அடி உயரத்தில் 90,000 கன மீட்டர் தண்ணீரை இந்த இயந்திரம் இறைக்கும்.

D-12 வகைக் காற்றுடி இயந்திரம் எளிய வகையில் அமைக்கப்பட்டுள்ள ஓர் இயந்திரமாகும். இதில் இரண்டு காற்றுடி அலகுகள் இருக்கும். சாய்வான பற்சக்கரங்கள் (bevel gear), சிறு பற்சக்கரங்கள் (pinion) ஆகிய பாகங்களைக் காற்றுடி அலகுகள் அசைக்க அளவு மையம் விட்டோடும் விசை ஏற்றத்தில் முன்னோக்கி இயங்கும் பகுதியை (impeller) சுழலச் செய்யும்.

ஆண்டு தோறும் இந்த இயந்திரத்தின் மூலம் 28,000 குதிரைத் திறன் மணி சக்தி கிடைக்கும். பாசனப் பருவம் ஆறு மாதங்களுக்கு மட்டுமே நீடிப்பதால், இக் கால அளவில் பெறப்படும் சக்தி 14,000 குதிரைத் திறன் மணி சக்தி அல்லது 10,000 கிலோவாட் மணி சக்தி ஆகும். (குதிரைத் திறன் மணி ஒன்றுக்கு 0.27 கி. கிராம் வீதம் 3,500 லிட்டர் டீசல் எண்ணெய்க்கு அல்லது கிலோவாட் மணி ஒன்றுக்கு 10 காசு வீதம் இக்கால அளவில் நீர் இறைப்பதற்கான மின்சாரக் கட்டணங்களுக்கு ஆகும் 1,000 ரூபாய்க்குச் சமமாகும்.

இயந்திரம் சம்பந்தமான தனித்தனிச் செலவு விவரம்.

இந்த இயந்திரங்களைப் பெருமளவில் தயாரிக்கும்போது ஒரு இயந்திரத்தைத் தயாரிக்க ரூ. 5,000 செலவாகும் என்றும், நூறு இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டால் ஒவ்வொன்றுக்கும் ரூ. 6,000 செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தை நிறுவுவது சம்பந்தமான தனித்தனிச் செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ரூபாய். |
|---|---|
| காற்றுடி .. .. .. .. | 1,500 |
| உச்சிப் பகுதி .. .. .. | 1,000 |
| சுழல் பலகை .. .. .. .. | 500 |
| நீர் ஏற்றம் .. .. .. .. | 500 |
| உச்சிப் பகுதி இயந்திரங்கள் . .. | 1,500 |
| மொத்தம் .. | 5,000 |

இயந்திரத்தின் எடை தோராயமாக 2,000 கிலோ கிராமாக இருக்கும்.

[2nd August 1966

தேய்மானத்திற்கு 10 சத வீதம் கழித்துக்கொண்டால், இயந்திரத்தின் விலையை பத்தாண்டுகளில் முழுவதும் பெற்று விடலாம்.

**200 ஏக்கர், அதற்கு மேற்பட்ட பரப்பளவுள்ள நிலங்களுக்கு பாசன வசதி.**

அதிகப் பரப்பளவுள்ள நிலங்களுக்கு நல்ல முறையில் பாசன வசதி அளிக்க D-18 வகைக் காற்றடி இயந்திரம் மிகவும் பயன்படும். விநாடிக்கு 7 மீட்டர் வீதம் 20 குதிரைத் திறனை இந்த இயந்திரம் உற்பத்தி செய்து, விநாடிக்கு 3·5 மீட்டர் வேகத்தில் நீர் இறைக்கத் தொடங்கும். தற்போது நீர் ஏற்றங்கள் இயங்கும் இடங்களில் அவற்றிற்குப் பதிலாக பல காற்றடி இயந்திரங்களை நிறுவலாம். அவற்றின் எண்ணிக்கை பாசன வசதி பெற வேண்டிய பரப்பளவுக்கு ஏற்ப இருக்கவேண்டும். எனினும், காற்று வேகம் குறைவாக உள்ள இடங்களில் அவசரக் காலங்களில் பயன்படுத்துவதற்காக டீசல் இயந்திரங்களைப் பக்கத்தில் வைத்திருப்பது நல்லது. இந்த இயந்திரங்களை நிறுவுவதால் லாபம் கிடைக்கிறதா என்பதைக் கவனமாகக் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும்.

சோவியத் ரஷ்யாவில் கூட்டுப் பண்ணைகளில் டீசல் இயந்திர வசதிகளுடன் இக் காற்றடி இயந்திரங்கள் நிறுவப்படுகின்றன. டீசல் இயந்திரங்களால் 10 முதல் 15 சதவீத அளவிற்குத் தண்ணீர் இறைக்கப்படுகிறது. இது மிக மலிவானது என்றும், இந்த இயந்திரங்களால் அதிகப் பணம் மிச்சப்படுவதால், இது லாபகரமானது என்றும் அறியப்படுகிறது.

**முடிவுரை**

குறைந்த பரப்புள்ள சிறிய நிலங்களுக்கு D-12 வகை இயந்திரங்களை நிறுவுவது போதுமானதெனத் தோன்றுகிறது. குடியானவர்களின் தேவைகளை அவை பொதுவாகப் பூர்த்தி செய்யும் எனலாம். இந்த இயந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டிய தேவையில்லை. இதை இயக்குவதும் எளிது.

அதிகப் பரப்புள்ள பெரிய நிலங்களுக்கு விசையேற்ற நிலையங்களுக்குப் பதிலாக D-18 வகை இயந்திரத்தை நிறுவுவது நல்லது. ஆனால் அதை இயக்குவதால் கிடைக்கும் லாபம் என்ன என்பதை விவரமாகக் கணக்கிட வேண்டும். என்னுடைய நாட்டில் டீசல் இயந்திரங்களின் விலை மிகக் குறைவாக இருப்பதால் இது பெரிதும் லாபகரமாயுள்ளது. இருபது குதிரைத் திறன் டீசல் இயந்திரங்களின் விலை இந்தியாவில் மிகவும் அதிகமாக இருப்பதால், அதிகப் பரப்புள்ள நிலங்களுக்கு டீசல் இயந்திரங்களைப் பயன்படுத்துவது நடைமுறை சாத்தியமானதல்ல.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 3rd August 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: Question Nos. 41, 42 and 43 relate to the same subject. So, I think they may be taken up together.

**உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு**

*41. கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி:
திரு. மீ. கலியாணசுந்தரம்: } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 ஏப்ரலில் மலேயாவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில், தமிழகத்திலிருந்து எத்தனை பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்?

(இ) அவர்களின் பெயர்கள் என்னென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

(a) Forty-seven delegates from Tamilnad participated in the International Conference of Tamil Studies at Kuala Lumpur in April 1966.

(b) A list * is placed on the Table of the House.

*42 கேள்வி—திரு. து.ப. அழகமுத்து:
திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோலாலம்பூரில், உலகத் தமிழ்க் கருத்தரங்கிற்குத் தமிழகத்திலிருந்து அனுப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனரா?

(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்?

(உ) அங்கு சென்ற பிரதிநிதிகளுக்கு ஏற்பட்ட செலவை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா?

(எ) ஆமெனில், எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The delegates were selected by Government in consultation with the Regional Committee for India of the International Conference Seminar of Tamil Studies at Kuala Lumpur.

* Printed as Appendix on page 322–324

[3rd August 1966

(c) This Government have met the full return fare of the Chief Minister and his Security Officer, 50 per cent of the return air fare in respect of 27 delegates and 50 per cent of the return steamer fare of three delegates.

(d) The total expenditure comes to Rs. 23,088.50.

* 43 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any representation was received from Sri N. Vanamamalai, M.A., L.T., a Tamil scholar of Tirunelveli district regarding inclusion of his name in the list of delegates to the International Conference of Tamil Studies Seminar held in Malaysia recently; and

(b) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM:

(a) Yes.

(b) In view of the limited number of delegates permitted by the Government of India, the name of Sri N. Vanamamalai could not be included.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், இந்தப் பிரதிநிதிகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்? அவர்கள் அந்தக் கருத்தரங்கிற்கு ஏதாவது கட்டுரைகளோ அல்லது விரிவுரைகளோ அனுப்பியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா? அல்லது, வேறு காரணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சிலர் கட்டுரை அனுப்பியிருந்தார்கள். கட்டுரை அனுப்பியிருந்தவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கட்டுரை அனுப்பாதவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கட்டுரை அனுப்பியவர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ரீஜினல் கமிட்டிதான் இந்த மாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென்று முதல் முதலில் இந்த அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்தது. பிரயாணச் செலவில் பாதித் தொகையை மலேசிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. பாதித் தொகையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. மத்திய அரசாங்கம் சில பேர்களுக்குப் பாதித் தொகையை ஏற்றுக்கொண்டார்கள். இது மட்டுமல்லாமல் சில பேர்கள் பிரயாணச் செலவை அவர்களே ஏற்றுக்கொண்டார்கள் அல்லது ரீஜினல் கமிட்டி ஏற்றுக்கொண்டது. முதலில் 100 டெலிகேட்ஸ் அனுப்புவதாக இருந்தது. மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சும் அதை ஏற்றுக்கொண்டது. அதற்கு ஃபாரின் எக்சேன்ஜ் இருந்தாலும்கூட 'பி' பாரம் வழங்கமுடியாத நிலை இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. ஆகவே, அத்தனை பேர்களையும் அனுப்ப முடியவில்லை. அதனால்தான் 47 பேர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஐம்பத்து நான்கு பேர்களை அனுப்ப முடியவில்லை. முதலில் அனுப்பப்படலாம் என்று கருதப்பட்டவர்களையும்கூட பின்னால் அனுப்ப முடியவில்லை.



3rd August 1966]

**திரு. கரு. சிமைச்சாமி:** புகழ்பெற்ற மொழி வல்லுநர் திரு. தேவநேயப் பாவாணர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்தார்களா? அப்படியானால் அவர்களை ஏன் அனுப்பவில்லை?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்னிடம் அதுபற்றிய தகவல் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து:** இந்த ரீஜினல் கமிட்டி மாநில சர்க்காரைக் கலந்துகொண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்ததாக முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நம் மாநில சர்க்கார் யார் யார் பெயர்களைச் சிபார்சு செய்தது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மாநில சர்க்கார் சிபார்சு செய்தது ஒன்றும் இல்லை. ரீஜினல் கமிட்டிதான் பெயர்களைச் சொன்னார்கள். ரீஜினல் கமிட்டியும் இந்த அரசாங்கமும் கலந்து எண்ணிக்கையை நிர்ணயித்தன.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அனுப்பவேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை இடம் கொடுக்காததால்தான் திரு. வானமாமலை அவர்களை அனுப்பவில்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திரு. வானமாமலை அவர்கள் அந்தக் கருத்தரங்கிற்குக் கட்டுரை, விரிவுரை எல்லாம் அனுப்பியவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு 47 பேர்களில் இடம் இல்லை. ஆனால் அனுப்பப்பட்டிருக்கிற திரு. பி. டி. ராஜன், திருமதி பி. டி. ராஜன், திரு. வி. எஸ். தியாகராஜன், திருமதி ஜெயா அருணாசலம் இவர்களுக்குத் தமிழிலே என்ன அனுபவம், என்ன பயிற்சி இருக்கிறது? அவர்கள் என்ன கட்டுரை, விரிவுரை அனுப்பியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்ன பயிற்சி, என்ன யோக்கியதை என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் அங்கே பேப்பர்கூடப் படித்தார்கள். ரீஜினல் கமிட்டியின் யோசனையோடுதான் அனுப்பப்பட்டார்கள். சில பேர்கள் விஷயத்தில் இந்த அரசாங்கத்திற்கும் செலவு இல்லை. மலேசிய அரசாங்கத்திற்கும் செலவு இல்லை. சில பேர்களுக்கு இந்த அரசாங்கம் பாதிச்செலவை ஏற்றுக்கொண்டது. சில பேர்களுக்கு ரீஜினல் கமிட்டி முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டது.

[3rd August 1966

**திரு. கரு. சீமைச்சாமி:** மலேசியாவில் நடைபெற்ற இந்த மாநாட்டிற்குத் தமிழ் நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள் அனுப்பப் படவில்லை என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி எனக்குத் தெரியாது. ரீஜினல் கமிட்டி தேர்ந்தெடுத்து பெயர்கள் கொடுத்தார்கள். மாநில அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். பாதிச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அது ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** அடுத்த ஆண்டு தமிழகத்தில் இந்த மாநாடு நடைபெற அழைப்பு விடப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதை மதுரையில் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் மாநாடு நடக்கும். தமிழ்நாட்டிலே நடத்தவேண்டுமென்று அழைப்பு விடப்பட்டிருக்கிறது. எங்கே நடத்தவேண்டும் என்பதெல்லாம் வரவேற்புக் குழு அமைக்கப்பட்டு அதற்குப் பிறகு தான் முடிவு எடுக்கப்படும்.

**திரு. சி. பொன்னுசாமி:** நம்முடைய சர்க்கார், நம்முடைய மக்கள், மலேசிய சர்க்கார், மலேசிய மக்கள் ஆகியவர்கள் எந்த வகையில் இதனால் நன்மை அடைந்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** குறிப்பாக, எவ்வளவு நன்மை அடைந்திருக்கிறார்கள் என்று என்றால் கூறமுடியாது. பொதுவாக ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் அந்த நாட்டிற்கும் நன்மைதான், இந்த நாட்டிற்கும் நன்மைதான்.

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, எண்ணிக்கை தான் மாநில சர்க்காரைக் கலந்து முடிவு செய்யப்பட்டது, ரீஜினல் கமிட்டிதான் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அவர்கள் தேர்ந்தெடுத்தவர்களுக்கு நாம் ஏன் செலவை ஒப்புக்கொள்ள வேண்டும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பாதிப் பேர்களுக்கு பாதிச் செலவை ஏற்றுக்கொண்டது என்று சொன்னேன். மீதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் செலவை ரீஜினல் கமிட்டி ஏற்றுக் கொண்டது. போனவர்களில் பாதிப் பேருக்குத்தான் இந்த அரசாங்கம் செலவை ஏற்றுக்கொண்டது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், யார் செலவு செய்தார்கள் என்பது ஒருபுறம் இருக்க, தமிழ் வளர்ச்சிக்காக அரசாங்கம் செலவு செய்தாலும் ஆட்சேபிப்பதற்கில்லை. ரீஜினல் கமிட்டி எப்படி அமைந்தது? இந்த 47 பேர்களையும் ரீஜினல் கமிட்டி அங்கீகரித்து அப்படியே அவர்கள் எடுக்கப்பட்டார்களா ?



3rd August 1966]

ரீஜினல் கமிட்டி அங்கீகரிக்காதவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா ? அங்கீகரிக்கப்பட்டவர்கள் யாராவது விடப்பட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ரீஜினல் கமிட்டி தான் இனிஷியேட்டிவ் எடுத்துக்கொண்டது. அவர்கள் மலேசியா அரசாங்கத்திற்கும், அந்த யுனிவர்ஸிட்டிக்கும், அந்தக் குழுவினருக்கும், இந்த அரசாங்கத்திற்கும் தொடர்பாக இருந்தார்கள். அவர்களுடைய யோசனையின் பேரில்தான் இந்த அரசாங்கம் தலையிட்டது. அவர்கள் குறிப்பிட்ட பேர்கள்; அவர்களைக் கலந்துகொண்டுதான் முடிவு ஏற்பட்டதே தவிர, அவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேலாகவோ, அவர்கள் குறிப்பிடாதவர்களையோ எடுத்துக்கொள்ளவேண்டும், அவர்களை அனுப்பவேண்டும் என்று இந்த அரசாங்கம் முடிவு செய்யவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், தமிழ் மொழி வளர்ச்சிக்கு பாமரர்கள் பழகும் மொழியின் வளர்ச்சிதான் முக்கியம். அதிலே திரு. என். வானமாமலை என்பவர் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறார். மற்றவர்கள் அணுகாத முறையில் அணுகி, இருக்கிற பிரச்னைகளைப் பார்ப்பவர். அவர்களுக்கு அங்கிருந்து அழைப்பு வந்திருக்கிறது. அவர்களுடைய பெயரை ரீஜினல் கமிட்டி சிபாரிசு செய்யவில்லையா? அல்லது அவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்று விடப்பட்டாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** முதலில் 100 என்று முடிவு செய்யப்பட்டது; அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சு, சரி என்று சொல்லியது. நூறு பேர்களுக்கு அங்கீகாரம் வரும் என்று எதிர்பார்க்கப் பட்டது. பிறகு, அந்த அளவு முடியாது, பாதிப் பேர்களைக் குறைக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. குறைப்பது என்ற நிலை வந்த பிறகு எப்படி எப்படி, யார் யாரைக் குறைப்பது என்று ரீஜினல் கமிட்டியைக் கலந்துகொண்டு அவர்கள் யோசனைப்படி எண்ணிக்கையைக் குறைக்கவேண்டியிருந்தது. அப்படி எண்ணிக்கையைக் குறைக்கும்போது திரு. வானமாமலை மட்டுமல்ல, வேறு பல அறிஞர்களும், ஆராய்ச்சிகளில் நன்கு பங்கெடுத்துக் கொண்டிருப்பவர்களும்கூட விடப்படவேண்டியிருந்தது. வேறு காரணம் ஏதும் இல்லை.

**திரு. செ. மாதவன்:** ஸார், மலேசியா சர்க்கார் தமிழ் நாட்டிலிருந்து சில அறிஞர்களை வரவழைக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்கு எழுதினார்களா? அப்படிப்பட்டவர்கள் அழைக்கப்பட்டார்களா? அப்படி அழைக்கப்பட்டவர்கள் யாராவது விடப்பட்டிருக்கிறார்களா? அப்படியானால் அதற்கான காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்களும் சிலர் வந்தால் நலம் என்று கருதினார்கள். அப்போதெல்லாம் 100 பேர்களுக்கு அனுமதி கிடைக்கும் என்று யோசிக்கப்பட்டது. திடீரென்று

[3rd August 1966

எண்ணிக்கை குறைக்கப்பட்ட காரணத்தினால், ரீஜினல் கமிட்டியுடன் கலந்து இன்னாரை அனுப்புவது, இன்னாரை அனுப்புவது இல்லை என்று முடிவு செய்யவேண்டியிருந்தது.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த ரீஜினல் கமிட்டி யாரால் அமைக்கப்பட்டது? அதன் உறுப்பினர்கள் யார்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மலேசிய யுனிவர்ஸிட்டி, மகாநாட்டைக் கூட்டியவர்கள் ஆகியவர்களைக் கலந்து அமைக்கப்பட்டது. அதைப் பற்றி இந்த அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் தமிழர் பிரதிநிதிகளைச் சந்தித்தார்களா? அவர்கள் ஏதாவது ரெப்ரெஸன்ட்டேஷன் கொடுத்தார்களா? அவை மீது கனம் முதல் அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாதாரணமாகப் பல பிரச்னைகள், யோசனைகள், குறைகள், கோரிக்கைகள் தெரிவித்தார்கள். அவற்றைப் பற்றிக் கலந்து பேசினோம். அவை மீது இயன்ற அளவு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒன்று குறிப்பாக அவர்கள் தெரிவித்தது, இதுதான். மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவைகளில் எங்களுக்கு இடம் இல்லை, இது வரையில் ஓரளவு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள், தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டும்" என்பதுதான் பலர் சொன்னது. அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸார், மலேசியா மகாநாட்டுக்குச் சென்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிலர் அங்கு கட்சிப் பிரசாரம் செய்தார்கள் என்பது உண்மையா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றியெல்லாம் என்னிடம் தகவல் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார், அந்தக் கருத்து அரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளில் தமிழ்நாட்டிலிருந்து சென்ற கட்டுரைகள் எவை ஏற்றுக் கொள்ளப்பட்டன? அவைகளின் தரம் என்ன? சில கட்டுரைகள் தமிழ்நாட்டிலிருந்து வருகிற தமிழர்கள் தரம் இவ்வளவுதானா என்று கூறும் வகையில் கேலிக்கூத்தாக இருந்தது உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்த வரையில் எதையும் கேலிக்கூத்தாக நினைத்ததாகவோ அல்லது தெரிவித்ததாகவோ தெரியாது. தரத்தைப் பற்றி நான் சொல்ல முடியாது. என்னைவிட உயர்ந்தவர்கள்தான் சொல்லவேண்டும். தரம் என்பது 'கம்பாரிடிவ்' தான். ஒன்றைவிட ஒன்று மேலானதரம் என்று இருக்கலாம். அதை மதிப்பிட்டுச் சொல்ல எனக்குத் தகுதி இல்லை.



3rd August 1966]

## தங்கக் கட்டுப்பாடு விதிகள்

* 44 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாடு சட்டத்திற்குப்பின், 1-10-1964 முதல் வேலை கோரிப் பதிவு செய்த நகைத் தொழிலாளர் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எத்தனை பேர் வேலை பெற்றிருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) Up to 30th April 1966—831.

(b) 338.

*திரு. எம். எஸ். செல்வராஜன் :* ஸார், வேலை பெற்றிருப்பவர்களில், சர்க்கார் நிறுவனங்களில் எத்தனை பேர்? தனியார் நிறுவனங்களில் எத்தனை பேர்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

* 45 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்ட விதிகள் அடங்கிய மத்திய சர்க்கார் விசேஷ கெஜட்டின் ( Part II )—செக்ஷன் 3—சப்-செக்ஷன் a (i) தேதி, 7-2-1966) பிரதி இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்விதிகளின்மீது ராஜ்ய அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு ஏதேனும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறதா?

(உ) அவ்விதிகளின் நகல் ஒன்று மேஜையின்மீது வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) As the draft rules have been published by the Government of India, there is no need to place a copy of the draft rules on the table of the House.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஸார், மத்திய சர்க்கார் பிறப்பித்திருக்கக்கூடிய இந்த விதிகளில் ஒரு தனிப்பட்ட தங்க வேலை செய்யும் தொழிலாளி ஏக காலத்தில், ஒரு நேரத்தில் வேலை செய்ய 100 கிராமுக்கு அதிகமாக வைத்துக்கொள்ளக் கூடாது என்று தெளிவாக இருக்கிறதா? தன்னிடத்தில் வைத்துக்கொள்ளக் கூடியது 100 கிராமுக்கு அதிகமாக இருக்கலாம், ஆனால், வேலை செய்ய எடுத்து வைத்துக்கொள்ளுவது 100 கிராமுக்கு மேல் இருக்கக்கூடாது என்று விதியா என்று சொல்ல முடியுமா?

[3rd August 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், இந்தத் தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தை அடியோடு ரத்து செய்யும் உத்தேசம் மத்திய சர்க்காருக்கு உண்டா? அதைப் பற்றி ராஜ்ய சர்க்காருக்குத் தகவல் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எனக்குத் தெரிந்த வரையில் இந்தத் தங்கக் கட்டுப்பாடு முறையை மாற்ற இருக்கிறார்கள். அவர்களுடைய முடிவு தெரிந்த பிறகுதான் எந்த அளவுக்கு மாற்றப் போகிறார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தை மாற்றி அமைக்கும்போது லைஸென்ஸ் கேட்கிறவர்களுக்கு லைஸென்ஸ் கொடுத்து, 22 காரட்டில் நகைகள் செய்துகொள்ளலாம் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததே, அதைப் பற்றி நம் அரசாங்கத்தை யோசனை கேட்டார்களா? நம் அரசாங்கம் என்ன யோசனை சொல்லியது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எந்த அளவுக்கு மாற்ற வேண்டுமென்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. இறுதி முடிவு என்ன என்பது தெரியவில்லை.

**திரு. சா. கணேசன்:** சபாநாயகர் அவர்களே, பொற்கொல்லர்களுடைய எண்ணிக்கையும், தங்கக் கட்டுப்பாட்டினால் ஏற்பட்ட கஷ்டமும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, இதைத் தமிழக அரசும் நன்றாக உணர்ந்திருக்கிற காரணத்தினாலே, இந்தச் சட்டத்தில் எத்தகைய மாற்றம் வேண்டும், அல்லது முழுவதும் நீக்கப்படவேண்டும் என்பன போன்ற என்னென்ன ஆலோசனைகளை அல்லது கருத்துக்களை மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்தது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் சற்று முன்பு தான் விடை அளித்தேன். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குப் பொற்கொல்லர்களுடைய கஷ்டங்களைத் தவிர்க்க, தவறுதல்களைத் தவிர்க்க எந்தெந்த வகையில் கட்டுப்பாட்டை மாற்றவேண்டும் என்று தெரிவித்திருக்கிறது. எத்தகைய மாற்றம் வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது என்பதைப்பற்றி தனிக்கேள்வி வேண்டும்.

## நெல் வயல்கள் பருத்தி உற்பத்திக்கு மாற்றம்

*46 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி ஆகிய பிளாக்குகளிலுள்ள நெல் விளையும் 7,500 ஏக்கர்கள் பருத்தி உற்பத்திக்காக விவசாய இலாக்காவினரால் மாற்றப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?



3rd August 1966]

**கனம் திரு. பூ. கக்கன் (அ) & (இ):** இந்த வட்டாரங்களில் புதிதாக எந்தப் பகுதியிலும் நெல் வயல்களைப் பருத்தி விளைவுக்கு ஏற்ற முறையில் மாற்றவில்லை. ஆயினும், பிப்ரவரி-ஜூன் மாதங்களுக்கிடையில் கிணறுகளிலும், பாசன ஏரிகளிலும் உள்ள தண்ணீர் நெல் பயிரிடுவதற்குப் போதாமலிருக்கும்போது, நெல் பயிரிடப்படாத நிலங்களில் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது.

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, நெல் பயிரிடுவதற்குச் சாத்தியமான நிலங்கள்தான் பருத்தி பயிரிடுவதற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று அங்கு உள்ளவர்கள் கூறுகிறார்கள். உணவுப் பஞ்ச காலத்தில் இந்த நடவடிக்கை அவசியம்தானா?

**கனம் திரு. பூ. கக்கன்:** தண்ணீர் தாராளமாக இருந்தால் நெல் பயிரிடலாம், தண்ணீர் சொற்பமாக இருந்தால் பருத்தி பயிரிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளே முன் வருகிறார்கள். அரசாங்கம் யோசனை சொல்லியிருக்கிறது. விவசாயிகள் முன்வந்து செய்கிறார்கள்.

**திரு. சா. கணேசன்:** சபாநாயகர் அவர்களே, உணவு நெருக்கடி பெருகியிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே தண்ணீர்ப் பற்றுக்குறை இருக்குமானால் அதை முழு ஏக்கர்களுக்கும் பாய விடாமல், எந்த அளவுக்குத் தண்ணீர் பாய்வது சாத்தியமாக இருக்குமோ அந்த அளவு ஏக்கர்களுக்குப் பாயவிட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதுதான் சரியான நெறியாக, முறையாக இருக்கும் என்று அரசாங்கம் ஒப்புக் கொள்ளக்கூடும். அதை விட்டு பருத்திக்கு ஆக்கம் கொடுக்கும் நிலைக்கு அரசாங்கம் ஏன் ஆலோசனை செய்யவேண்டுமென்று அறிய விரும்புகிறேன். பருத்தி அவசியமாக இருக்கலாம்; இல்லை என்று சொல்லவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பருத்தி நமக்கு ரொம்பவும் பற்றுக்குறை. நூறு கவுன்ட், 80 கவுன்ட் நூல் வேண்டியிருக்கிறது. மக்கள் உயர்ந்த ரகத் துணிகளைத்தான் விரும்புகிறார்கள். இப்போது நாம் பருத்தியை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. விலை ஏறுகிறது. பருத்தியிலும் நாம் சுயநிறைவு காண வேண்டியிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, சில இடங்களில் நெல் சாகுபடி செய்வதற்குப் பதிலாக பருத்தி, கரும்பு சாகுபடி செய்வதினால் நெல் உற்பத்தி குறைந்துவிட்டது என்று அரசாங்கம் சொன்னாலும் அல்லது வேறு யார் சொன்னாலும், நான் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. விலை ஏறியிருப்பதற்கும், பற்றுக்குறை இருப்பதற்கும் காரணம் அரசாங்கம் விநியோகம் செய்யக்கூடிய முறையில் உள்ள கோளாறு. நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தாசில்தார், சப்ளை ஆபீசர் ஆகியோர்களிடம் போய்த் திண்டாடுவதைவிட, பருத்தி உற்பத்தி செய்வது லாபகரமாக இருக்கிறது, தொந்தரவு குறைவாக இருக்கிறது. ஆகையால் அரசாங்கம் விவசாயிகளிடத்தில் தலையிடாமல் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[3rd August 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் கூறுகிற கருத்து கனம் அங்கத்தினர் அவர்களுடையது. இதை விவசாயிகள் ஒருகாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

MR. SPEAKER: Some other subject is discussed in this question.

**திரு. சா. கணேசன்:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறபொழுது பருத்தி ஓரளவுக்குப் பற்றாக்குறையாக இருப்பதாகக் கூறினார்கள். ஓரளவுக்கு அது உண்மையாக இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பருத்தி பற்றாக்குறையாக இருப்பதைவிட, உணவுப் பற்றாக்குறை மிகக் கொடியது என்பதினால் உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமே அன்றி, பருத்திக்குக் கொடுக்கப்படாது. ஆதலினாலே இதைக் கவனத்தில் கொண்டு, பருத்தி உற்பத்தி தடைப்பட்டாலும், உணவு உற்பத்திக்கு ஆக்கம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒன்றோடு ஒன்று ஒப்பிடுவது முறையல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒப்பிடுவதாக இருந்தாலும், இரண்டு நாட்களுக்கு உணவு இல்லாமல் இருக்கலாம், ஆனால் ஒரு நாளைக்குக்கூட ஆடை இல்லாமல் இருக்கமுடியாது (சிரிப்பு).

*Export of cotton seeds from Coimbatore*

* 47 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that cotton seeds are exported from the State in particular, from Coimbatore area to outside regions, particularly Bombay for extraction of oil; and

(b) whether the Government are aware of the consequent rise in price of cotton seeds in the State?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) 1965-ம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்குப் பருத்திக் கொட்டை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பம்பாய்க்கு ஏற்றுமதியான அளவைப் பற்றிய சரியான விவரங்கள் கிடைக்கவில்லை. பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காகவே பருத்தி விதைகள் வெளியிலுள்ள ஏஜன்டுகளால் வாங்கப்படுகின்றன.

(இ) தெரியும்.

**திரு. வை. சங்கரன்:** அப்படித் தெரியுமானால், இம்மாதிரி பருத்திக்கொட்டையை இங்கிருந்து வெளி மாகாணங்களுக்கு அனுப்புவதால், இங்குள்ள பருத்திக்கொட்டையின் விலை அதிகரித்துக்கொண்டு வருவதின் விளைவை மனத்தில்கொண்டு, வெளி ராஜ்யங்களுக்கு இதை அனுப்புவதை அனுமதிக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, அதற்குத் தடை விதிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?



3rd August 1966]

**கனம் திரு. பூ. கக்கன்:** இதைப்பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்யலாம்.

மதுவிலக்கு வழக்குகள்

* 48 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும், மதுவிலக்கு கேஸ்கள் (Headwar statement) வாரத்திற்கு எத்தனை என்று கேட்கப்படுகிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** துப்புதுலக்கப்பட்ட வழக்குகள் பற்றிய வார, அல்லது மாத அறிக்கைகள் போலீஸ் நிலையங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு போலீஸ் சூப்பிரண்டுகளால் ஆய்வு செய்யப்படுகின்றன. வாரத்திற்கு இத்தனை மதுவிலக்குக் குற்றங்கள் கண்டு பிடிக்க வேண்டும் என்கிற அளவு எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** ஒரு வாரத்திற்கு இத்தனை கேஸ்கள் போடவேண்டும் என்று சொல்லி, அப்படிப் போடாதவர்களுக்கு பனிஷ்மெண்டு கொடுத்திருக்கிறார்களே, அந்த பனிஷ்மென்டைப்பற்றிய குறிப்பை எழுதி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பினால், அத்தனையையும் 'வித்டிரா' செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: It is a hypothetical question. Let the hon. Member please send it first and then ask what action was taken on it.

பசுக் கொலைத் தடுப்பு

* 49 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில், பசுக்களைக் கொலை செய்வதைத் தடுக்க அரசாங்கம் சட்டம் பிறப்பிக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** தமிழ்நாட்டில் பசுக்கொலையைத் தடுக்கச் சட்டம் இயற்றுவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

*Food-rationing*

* 50 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to increase the quantum of food-ration to manual workers in the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (a) No.

(b) Does not arise.

**திரு. வை. சங்கரன்** : ராஜ்யத்தில் உடல் உழைப்பு வேலை செய்பவர்களுக்கு உணவின் அளவை சற்று அதிகரிக்க வேண்டியிருக்கிறது. அதை மனத்தில் கொண்டு அரசாங்கம் இந்த அளவை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : இந்த அளவை உயர்த்துவதற்கு இப்பொழுது ஆலோசனை இல்லை. அவர்களுக்குக் கொஞ்சம் கூடவே கொடுக்கிறோம்.

*** 51 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதியில் டெல்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில், நமது மாநிலத்திற்கு ஏழு அவுன்சு அரிசிதான் கொடுக்கவேண்டும் என்ற முடிவை நமது அரசாங்கம் ஒத்துக்கொண்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : (அ) ஆம்.

(இ) இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வயது வந்தவர்களுக்குப் பங்கீட்டின் மூலம் வழங்கப்படும் அரிசியின் அளவு 200 கிராமுக்கு மேல் இருக்காது. இந்த அளவு ஒரு வாரத்திற்குத் தோராயமாக ஏழு அவுன்சு இருக்கும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : தலைவர் அவர்களே, அகில இந்தியாவுக்கும் ஏழு அவுன்ஸ் முறை என்று அந்த மகாநாட்டில் பேசப்பட்டதா ? அப்படிப் பேசப்பட்டிருந்தால், நமது மாகாணத்திற்கு ஏழு அவுன்ஸ் போதுமா? அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்ததா? போதாததற்கு என்ன நடவடிக்கை எடுத்தது?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : ஏழு அவுன்ஸ் மட்டும் அல்ல. கோதுமையும் மற்ற பொருள்களும் சேர்த்துக் கொடுக்கிறோம்.

**திரு. ஜே. மாதா கவுடர்** : பங்கீட்டுமுறை இருக்கும் மாவட்டங்களில் நெல் உற்பத்தி ஆகக் கூடிய மாவட்டங்களுக்கும் ஏழு அவுன்சு கொடுப்பது போல் உற்பத்தி ஆகாத மாவட்டங்களுக்கும், அதாவது என்னுடைய நீலகிரி ஜில்லாவுக்கும் ஏழு அவுன்ஸ் கொடுக்கப்படுகிறது. எங்களுக்கு மார்க்கெட்டில் அரிசி கிடைக்காத காரணத்தினால், அந்த மாதிரி நெல் விளையாத மாவட்டங்களுக்கு உணவின் அளவை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : கோதுமை, மைதா போன்ற மற்ற உணவுப் பொருள்களையும் சேர்த்துக் கொடுக்கிறோம்.

**திரு. ஜே. மாதா கவுடர்** : மற்ற உணவுப் பொருள்கள் கொடுத்தாலும் கூட, நெல் விளையக்கூடிய ஜில்லாவுக்கும், நெல் விளையாத ஜில்லாவுக்கும் ஒரே மாதிரியாக விநியோகம் செய்வது சரியல்ல, நெல் விளையாத இடங்களில் உணவுப் பொருளின் அளவை சற்று உயர்த்திக்கொடுப்பதற்கு ஏன் தயக்கம் இருக்கிறது?



**கனம் திரு. வெ. ராமைய்யா** : நீலகிரி ஜில்லாவின் நிலை விசேஷமானது என்ற காரணத்தினால், அங்கு கார்டு முறை ஏற்படுத்தி, அங்கு இருக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் அந்த முறையின் கீழ் உணவுப் பொருள்கள் கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் அந்த நிலை இல்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : திருநெல்வேலி ஜில்லாவில் கிராமப் பகுதிகளில் நபர் ஒன்றுக்கு வாரத்திற்கு 1,200 கிராம் கொடுக்கப்பட்டு வந்தது, இப்பொழுது 1,000 கிராமாகக் குறைத்துத் தான் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் தாக்கீது அனுப்பியது உண்மையா? அப்படியானால் அதற்குரிய காரணம் என்ன?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. செ. மாதவன்** : 1966-ல் 18 அவுன்ஸ் கொடுக்கப்படும் என்று ஒரு புள்ளி விவரத்தை ஒரு கட்டுரை மூலம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் . அது ஏழு அவுன்ஸ் ஆனதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : இப்பொழுது இருக்கக்கூடியது இந்த ராஜ்யத்திற்கு மட்டுமல்ல. இந்தியா பூராவையும் மனத்தில் கொண்டு, இருக்கக்கூடிய பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : நமது மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய நெல் எவ்வளவு? அது நமது மாநிலத்திற்குப் போதுமான அளவிற்கு இருக்கிறதா? அதிகமாக இருந்தால், ஏழு அவுன்ஸுக்கு மேல் உயர்த்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய நெல் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லாவிட்டாலும், அதைக் கொடுக்க முடியும். உற்பத்தியாகக்கூடிய நெல் பூராவும் நமது மாநிலத்திற்கே பயன்படவேண்டும் என்பது இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் அமைப்புக்கும், நாட்டில் இருக்கக்கூடிய ஒன்றுபட்ட நிலைக்கும் உகந்தது அல்ல.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தி ஆவதை நம்முடைய ராஜ்யத்திற்கே வைத்துக்கொள்ள முடியாது, பிற ராஜ்யங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்ற பெருந்தன்மை நமக்கு இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். நாட்டில் 16 அவுன்ஸ் 'பெர் காபிடா அவைலபிலிடி' என்று மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கக்கூடிய அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, இப்பொழுது ஏழு அவுன்ஸுக்கு மேல் கொடுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா?

[3rd August 1966

**கனம் திரு. வெ. ராமையா:** நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய நிலவரத்தைப்பற்றி விவரம் சொல்ல வேண்டுமென்றால் நம் இராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் உற்பத்தி ஆகக்கூடிய உணவு பூராவையும் வாங்கிப் பங்கிட்டுக் கொடுக்கவில்லை. சென்னை, கோயம்பத்தூர், நீலகிரி போன்ற இடங்களில் எல்லோருக்கும் உணவு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மற்ற இடங்களில் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை வாங்கி, அவர்கள் எவ்வளவு கொடுக்க முடியுமோ அதை வாங்கி, நெல் உற்பத்தி செய்யாத இடங்களில் விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். அப்படிப் பார்த்தால், நெல் உற்பத்தியாகக் கூடிய தஞ்சை, தென்னாற்காடு, வடாற்காடு இது போன்ற ஜில்லாக்களுக்கு நாம் விநியோகம் செய்வது மிகக் குறைவு.

*52 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சட்டபூர்வ ரேஷன் எத்தனை மாவட்டங்களில் அமல் செய்யப்படுகிறது?

(இ) அதன் விபரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) Statutory rationing has been introduced in the City of Madras, in the Municipal Town of Coimbatore and in Singanallur and Perur Panchayat Union areas of Coimbatore District.

*53 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரேஷன் முறை அமலுக்கு வந்ததிலிருந்து சென்னை, கோயம்பத்தூர் ஆகிய இரு நகரங்களுக்கு முறையே தேவையான அரிசி, கோதுமை அளவு என்ன?

(இ) மேற்படி இரு நகரங்களுக்கும் முறையே எத்தனை குடும்பங்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டன?

(உ) ஓட்டல், விடுதிகள், ஆகியவைகளுக்கு எந்த அடிப்படையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன?

(எ) ரேஷன் கார்டுகளுக்கு விண்ணப்பம் கோரி வந்த மனுக்களில் இதுவரை பைசலாகாமல் இருப்பவை எத்தனை?

**கனம் திரு. வெ. ராமையா:**

| | | சென்னை. | கோயம்பத்தூர். |
|---|---|---|---|
| (அ) உணவுப் பங்கீடு செயலுக்கு வந்தால், சென்னையிலும், கோயம்பத்தூரிலும் ஒரு வாரத்திற்குத் தேவைப்படும் அரிசி, கோதுமை (டன் அளவில்). | அரிசி | 4,181 | 1,300 |
| | கோதுமை | 612 | 325 |



3rd August 1966]

| | சென்னை | | கோயம்பத்தூர் |
|---|---|---|---|
| (இ) அந்த இரண்டு நகரங்களிலும் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பங்கீட்டுக் கார்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 4,78,333 | நகர் | 80,698 |
| | | எல்லையோரப் பகுதி. | 45,899 |
| | | மொத்தம் .. | 1,26,597 |

| | சென்னை | கோயம்பத்தூர் |
|---|---|---|
| (உ) ஹோட்டல்களுக்கும், விடுதிகளுக்கும் உணவு தானியங்களை ஒதுக்கும் அடிப்படை. | அந்தந்த ஹோட்டல்களின் மொத்த விற்பனைத் தொகையையும், அந்த ஹோட்டல்களில் சிற்றுண்டி, உணவு உட்கொள்ளும் நபர்களின் சராசரி எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. | வீடுகளுக்கும், விடுதி போன்ற நிறுவனங்களுக்கும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 10 அவுன்சு என்ற அளவில் உணவு தானியங்கள் அனுமதிக்கப்படுகின்றன. ஹோட்டல்களைப் பொறுத்த வரை, ஒவ்வொரு ஹோட்டலுக்கும் பங்கீட்டளவு (quota) தனிப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| (எ) உணவுப் பங்கீட்டுக் கார்டுகள் வழங்குமாறு வந்த மனுக்களில் இது வரை முடிவு பெறாத மனுக்களின் எண்ணிக்கை. | இல்லை. | மனுக்கள் தாமதமின்றி அவ்வப்போது விசாரிக்கப்பட்டு உணவுப் பங்கீட்டுக் கார்டுகள் வழங்கப்படுகின்றன. |

**திரு. கரு. சீமைச்சாமி:** சார், பெரிய நகரங்களில் மக்களுக்கு கார்டுகள் மூலம் அரிசி கொடுக்கப்பட்டாலும், போலிக் கார்டுகள் தயார் செய்து மோசடி செய்கிறார்கள் சிலர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சர்க்கார் முயற்சி செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** ஸ்டாசுடரி ரேஷன் இருக்கும் நகரங்களில் கார்டுகள் அடிப்படையில் பங்கீடு செய்யப்படுகிறது. அந்தக் கார்டுகள் அடிக்கடி செக் செய்யப்பட்டு, வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிகாரிகள் அடிக்கடி 9-00 a.m.
விசாரித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். மதுரையில் கூட சமீபத்தில், ரீ-செக் செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சார், சட்ட பூர்வமாக ரேஷன் இருக்கும் நகரங்கள் தவிர, கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, முக்கியமாக மீனவர்களுக்கு, சட்டபூர்வமான ரேஷன் போலவே பங்கீட்டை அமல் நடத்த உத்தேசம் உண்டா? இல்லையென்றால் என்ன காரணம்?

**கனம் திரு. வெ. ராமையா:** அத்தனை பேர்களுக்கும் கார்டுகள் கொடுத்து விநியோகம் செய்யப்படுகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், சென்னை, கோவை ஆகிய இரண்டு பெரிய நகரங்களில் மட்டும் கட்டாய உணவுப் பங்கீடு முறை இருக்கிறது. மற்ற இடங்களில், திருச்சி, சேலம் போன்ற

[3rd August 1966

இடங்களில் அரிசி ஒரு லிட்டர் ரூ. 1.45 என்று விற்கிறது. நியாய விலைக் கடைகளில் அரிசி இல்லை. ஆகவே, அங்கும் நியாய விலையில் அரிசி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஸ்டாசுடரி ரேஷன் இல்லா விட்டாலும், குடும்பக் கார்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கலெக்டர்கள் விநியோகத்தைக் கவனித்து வருகிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** விலை ஏறியிருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். திருச்சி, சேலம் கலெக்டர்களுக்கு வேண்டிய ஸ்டாக் கொடுக்கப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதைப் பற்றிய விவரம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஒவ்வொரு இடத்திலும் போதுமான ஸ்டாக் இருக்கிறது என்பதுதான் நான் தெரிந்து கொண்டிருப்பது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், மதுரையில் போலிக் கார்டுகள் வைத்திருந்ததாக 40 பேர்களுடைய லைசென்சுகள் ரத்து செய்யப் பட்டன. ஏன் அத்தோடு நிறுத்திவிட்டார்கள்? அந்த நபர்களை ஏன் ஜெயிலில் அடைக்க ஏற்பாடு செய்யப்படவில்லை ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்று தெரியாது. தனியாக எழுதினால், விசாரித்துச் சொல்லுகிறேன்.

*Fair price shops in Madurai district*

* 54 Q.—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of fair price shops opened in Madurai district; and

(b) whether there is any proposal to open some fair price shops in Vedasandur area in Dindigul taluk?

THE HON. SRI V. RAMAIAH : (a) The number of fair price shops opened in Madurai is 587.

(b) No.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** வேடசெந்தூர் பகுதி மக்கள் மழை பெய்யாததால் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க, அதற்கான நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அந்தப் பகுதியில் தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்காவிட்டாலும், கூட்டுறவு சொசைடி மூலம் அரிசி விநியோகம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

*State Transport Express buses*

* 55 Q.—SRI V. SANKARAN : Will the Hon. Minister for Food be pleased to state the new long distant routes to be taken up by the Madras State Transport Department for running direct Express Bus Service in 1966–67 ?



3rd August 1966]

THE HON. SRI V. RAMAIAH : Government have approved the following routes for implementation during 1966–67 :—

(1) Tuticorin to Coimbatore;
(2) Nagapattinam to Tuticorin;
(3) Nagercoil to Kumili;
(4) Madras to Krishnagiri (via) Sunkuvarchatram;
(5) Tuticorin to Kodaikanal;
(6) Ramanathapuram to Krishnagiri;
(7) Tiruchirappalli to Kodaikanal;
(8) Madras to Neyveli (via) Pondicherry;
(9) Nagercoil to Ramanathapuram;
(10) Madurai to Coimbatore;
(11) Madras to Tiruchirappalli.
(12) Madras to Salem;
(13) Tiruchirappalli to Tuticorin;
(14) Thanjavur to Salem;
(15) Vellore to Cuddalore (via) Pondicherry; and
(16) Nagapattinam to Salem (via) Pondicherry.

**திரு. நா. இராசாங்கம் :** சார், சர்க்கார் எக்ஸ்ப்ரஸ் பஸ்களை எல்லா இடங்களிலும் நிறுத்தாவிட்டாலும், பல பஸ்கள் போகும் போது, ஒரு பஸ் நிறுத்திய இடத்தில் அடுத்த பஸ்ஸையும் நிறுத்த வசதி செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், அனுமதிக்க முடிவு செய்யப் பட்டவைகளைக் குறிப்பிட்டார்கள். அவை தவிர, பரிசீலனையில் இப்பொழுது எவை இருக்கின்றன என்பதையும் கூறலாமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

**திரு. வை. சங்கரன் :** இன்டர்-ஸ்டேட் பஸ் விட கேரளா, மைசூர் ராஜ்யங்களோடு நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் எந்த அளவில் இருக்கின்றன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தனிக் கேள்வி வேண்டும்.

**சுற்றுப்புற துப்புரவும் சுகாதாரக் கல்வியும்**

* 56 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : } திரு. வை. சங்கரன் : } கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுற்றுப்புற துப்புரவு, சுகாதாரக் கல்வி ஆகியவைகளை (Environmental Sanitation and Health Education) பரிசீலிக்க ஒரு கமிட்டி சர்க்காரால் அமைக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் சிபாரிசுகளின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.**

(இ) உறுப்பினர்களின் தகவலுக்காக, அறிக்கையின் நகல் ஒன்று சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

### நஞ்சை நிலங்களில் சினிமாக் கொட்டகைகள்

* 57 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) வடார்க்காடு ஜில்லாவில் 1965-66-ல் எத்தனை இடங்களில், நஞ்சை நிலங்களில் சினிமாக் கொட்டகைகளுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டது?

(இ) நஞ்சை நிலங்களில் சினிமாக் கொட்டகைகள் கட்டுவது உணவு உற்பத்தியை பாதிக்கும் என்பது அரசாங்கம் அறியுமா?

(உ) நஞ்சை நிலங்களில் சினிமாக் கொட்டகைகள் கட்டுவதற்கு அரசாங்கம் தடைவிதிக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Seven cases.

(b) Yes.

(c) No.

### *Additional Sub-Magistrate for Tiruchirappalli*

* 58 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have proposed to appoint an additional Sub-Magistrate No. IV for Tiruchirappalli to relieve the congestion in the existing Sub-Magistrate Courts there?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: No Sir.

திரு. வை. சங்கரன்: இம்மாதிரி அங்கே ஏராளமாக வழக்குகள் குவிந்து விட்டன. ஆகவே, அங்கே இன்னொரு சப்-மாஜிஸ்ட்ரேட் வேண்டும் என்று பார் அசோசியேஷனிலிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்திருக்கின்றனவா? அவற்றின் பேரில் எடுத்த முடிவு என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சார், திரு. பி. என். சுப்பிரமணியம் என்கிற ஒரு லோகல் அட்வகேட் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அதை ஹைக்கோர்ட்டுக்கு ட்ரான்ஸ்பர் செய்து இருக்கிறோம். அவர்கள் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.**



### ஏழைகளுக்கு வழக்காட உதவி

* 59 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவில் வழக்குகளில் வழக்காட இயலாத ஏழை மக்களுக்கு, கோர்ட்டு பீஸுக்கு உதவி செய்வதுபோல், வழக்கறிஞர்கள் இலவசமாக ஆஜர் ஆவதற்கு வகை செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (*a*) No Sir.

(*b*) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, ஏழைகளாக இருக்கிறவர்கள் தங்களுடைய சொத்துக்கள் சம்பந்தமாக கேஸ்கள் போட்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதால், தங்களுடைய சொத்துக்களை இழக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உதவி செய்ய, கிரிமினல் கேசுகளில் போல, இலவசமாக வழக்கறிஞர்களைக் கொடுத்து உதவ ஏற்பாடு செய்யப் படுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்ததில், செலவு அதிகமாகப் போகும் என்பதால், எமர்ஜன்சி காரணமாகவும் அத்தகைய யோசனை நடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

### கோட்டக்குப்பம் பஞ்சாயத்து

* 60 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கோட்டக்குப்பம் பஞ்சாயத்தை மேஜர் பஞ்சாயத்தாக்க கோரிய தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) இந்தக் கோரிக்கை சென்னை கிராம வளர்ச்சி நெறியாளரிடம் வந்தது.

(இ) 1958 ஆம் ஆண்டு தமிழ்நா பஞ்சாயத்துச் சட்டத்தின்படி நகரப் பஞ்சாயத்தாகப் பாகுபடுத்துவதற்குள்ள தகுதிகளை இப் பஞ்சாயத்து பெறாததால் இக் கோரிக்கை கிராம வளர்ச்சி நெறியாளரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கோட்டக்குப்பம் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக ஆக்க முடியவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி

யில்லையென்றாலும், ஆறு, ஏழு மைல் நீளத்திற்குக் கிராமங்கள் தனித்தனியாக இணைந்திருக்கின்றன. தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நகரப் பஞ்சாயத்தாக ஆக்குவதற்கு ஐயாயிரம் மக்கள் தொகை வேண்டும்; பத்தாயிரம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அதற்குச் சற்று குறைவாக இருக்கிறது. அந்த மக்கள் தொகையும் வருமானமும் வந்துவிட்டால் டவுன் பஞ்சாயத்தாக ஆக்கிவிடலாம். வளர்ச்சியுள்ள நகரத்தை விட்டு கிராமப் பஞ்சாயத்தாக ஆக்குவதும் முறை அல்ல. அதற்காக மனு சர்க்காரிடம் வரவில்லை. மனு வேண்டுமானால் அனுப்பலாம். அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கோட்டக்குப்பம் பஞ்சாயத்தை மேஜர் பஞ்சாயத்தாக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, வளர்ச்சி மன்றமும் சிபார்சு செய்து அனுப்பப்பட்டது. குறிப்பிட்ட மக்கள் தொகை இல்லாததால், அதை மேஜர் பஞ்சாயத்தாக ஆக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதன் பிறகு, பல பகுதிகளிலிருந்தும், அந்தக் கிராமங்களிலிருந்தும் தனிப் பஞ்சாயத்தாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று மனுக்கள் சர்க்காருக்கு அனுப்பியதாகக் கேள்விப்பட்டேன். அதையாவது பரிசீலனை செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மனுக்கள் வந்ததாக ஞாபகம் இல்லை. கனம் அங்கத்தினர் முயற்சி எடுத்துக் கொண்டால் பரிசீலிக்கலாம் என்று முன்பே ஒரு கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—EXPRESSION OF REGRET BY A MEMBER

Mr. SPEAKER : I would like to know the views of the Leaders of Parties on the conduct of hon. Member, Sri K. R. Nallasivam, while raising an adjournment motion in the House on 2nd August 1966.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பொருத்தவரையிலும், ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கனம் உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் கொண்டுவந்தார்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு உரியதா என்ற முறையில் தாங்கள் விவாதத்திற்கு விட்டு, அவரை அதுபற்றிக் கருத்தைக் கூறும்படியாகக் கேட்டுக்கொண்டீர்கள். அதன் பேரில் கருத்துத் தெரிவித்தார். அரசினர் தன்னுடைய கோரிக்கைக்கு இணங்கவில்லை என்பதைத் தெரிவிக்கும் வகையிலும், முதலமைச்சர் அவர்கள் அதைப் பொருத்து ஒரு வாக்குறுதியோ, அதைப் பொருத்த கருத்தோ தெரிவிப்பார்களானால் அது தனக்குச் சமாதானம் அளிக்க முடியும் என்ற வகையிலும்





கனம் உறுப்பினர் கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால், வந்திருக்கிற பிரச்சினை, தங்களுக்கே கனம் உறுப்பினர் அடங்கி நடப்பதா இல்லையா என்ற பிரச்சினையைப் பொருத்துத் தாங்கள் அவரை உட்காரும்படியாகக் கூறினீர்கள். உட்காரும்படியாகத் தாங்கள் கூறிய அத்தகைய உத்தரவை கனம் உறுப்பினர் ஏற்றுக் கொண்டு நடக்க வேண்டாமா என்ற முறையில், இந்த மன்றத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுகிற வகையில், ஆளுங்கட்சியினருக்கும் அமைச்சரவைக்கும், அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளைக் குறித்து, உறுப்பினர்கள் பல்வேறு குறைபாடுகளையும், மாச்சரியங்களையும் தெரிவித்து அவற்றை மறுத்தும் எதிர்த்தும் கூறுகின்ற வாய்ப்புக்கள் இருந்தாலும், கனம் சபாநாயகராகிய தங்களுக்கு அடங்கி இந்த மன்றத்தை ஒழுங்காக நடத்திச் செல்லவேண்டும் என்பதிலே அத்தனை பேருக்கும் கருத்து ஒற்றுமை இருக்கிறது. ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள், தன்னுடைய கருத்தையொட்டி முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்கவில்லை என்ற அடிப்படையிலேதான், தன்னுடைய நிலையை எடுத்துச் சொன்னார்களே தவிர, தங்களுக்கு இழுக்குத் தேடவேண்டும் என்றோ, இந்த அவைக்கு இழுக்குத் தேட வேண்டும் என்ற தன்மையிலோ செய்யவில்லை என்று நான் கருதுகிறேன். எனவே, அந்த நோக்கத்தோடு அவர் செய்திருக்கமாட்டார். அந்த அடிப்படையில்தான், அவர் தன்னுடைய கருத்தைத் தெரிவிப்பார் என்று நான் கருதுகிறேன். அமைச்சரவை மீது, தான் கொண்டிருக்கும் மாச்சரியமான அடிப்படையில் எடுத்துத் தெரிவிக்கின்ற வகையில்தான் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த நடவடிக்கைப் பிரச்சினையில், அவரே தன்னுடைய செய்கைக்கு வருத்தம் தெரிவிப்பதாகச் சொல்லிவிட்டால், இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடலாம் என்று நான் கருதுகிறேன். அதுதான் இந்த மன்றத்தினுடைய பண்பாடுகளைக் காப்பாற்றுவதற்கு வழிவகையாக இருக்கக்கூடும். எனவே, தங்களுக்கு இழுக்குத் தேடும் நோக்கம் தனக்கு இல்லை என்றும், அப்படிக் கருதினால் அதற்காக வருத்தம் தெரிவிப்பதாகவும் கனம் உறுப்பினர் சொல்லிவிடுவாரானால், அந்த அளவோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

Mr. SPEAKER : As the hon. Leader of the Opposition put it, the question was whether the motion was in order. If the motion itself was under discussion, then of course the Member might be right in asking for a statement. A statement may or may not be given and any inference can be drawn. But the initial question itself was whether the motion was in order for admission as an adjournment motion. At that stage no question of 'வாக்குறுதி' (assurance) arises. If it was a debate on a motion, the Member might have asked for an assurance. If he does not get it, there may be some other way of expressing his dissatisfaction. Here, it is not a question of making any promise, but it is only a question of giving permission by the Speaker. This is more or less a legal question. Under such circumstances, this sort of conduct cannot be tolerated.

**Has the Hon. Leader of the House anything to say?**

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி நான் ஒன்றும் கருத்துத் தெரிவிப்பதற்கில்லை.

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி நான் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தனிப்பட்ட முறையில் முதல் அமைச்சர் அவர்கள் மீது வருத்தம் இல்லை. கனம் சபாநாயகர் அவர்களுடைய உத்தரவிற்குக் கீழ்ப்படியாதிருக்க வேண்டும் என்ற கருத்தும் எனக்குக் கிடையாது. உண்மை என்னவென்று கேட்டால், அங்குள்ள உண்மையான நிலையைக் குறித்துத்தான் நான் உணர்ச்சி வயப்பட வேண்டியதாக இருந்தது. மனப்பூர்வமாக நான் சொல்லுகிறேன். கனம் சபாநாயகர் அவர்களுடைய உத்தரவிற்குக் கீழ்ப்படியாமல் இருக்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல. கனம் சபாநாயகருக்கோ இந்த சபைக்கோ ஏதாவது ஒரு சிறு அளவிலே கூட செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு நான் எதுவும் செய்ததில்லை. அதற்கு மேலே இந்தச் சபை எப்படிக் கருதுகிறதோ அப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER: Does the hon. Member regret for what happened yesterday?

திரு. க. ர. நல்லசிவம்: நான் வருத்தம் தெரிவித்துக்கொள்ளத் தயாராயில்லை.

Mr. SPEAKER: This is very unfortunate. A real democrat must admit if he has done anything wrong in emotion and say 'I feel sorry for it'. If that is not done, how are we to dispose of this matter?

திரு. க. ர. நல்லசிவம்: என்னுடைய நடவடிக்கை உண்மையிலேயே கனம் சபாநாயகருடைய உள்ளத்தைப் புண்படுத்தக் கூடிய நிலையில் இருந்திருக்குமானால், அதற்காக நான் அவரைப் பொருத்த வரையில், வருத்தம் தெரிவித்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

Mr. SPEAKER: I take it on behalf of the House and not with reference to 'Sabhanayakar' (Speaker) alone.

Sri M. KALYANASUNDARAM: The hon. Member has made it clear that he did not mean any disrespect to the Chair. I think the House should accept it.

Mr. SPEAKER: 'Sabhanayakar' (Speaker) by himself has no existence without the House. So, the regret is to the House and not to the Speaker. If the House is prepared to take any insult, why should the 'Sabhanayakar' (Speaker) worry? Anyway I appreciate Mr. Nallasivam to that extent. I leave the matter there.



### III.—PRIVILEGE MATTERS.

#### (1) Advance announcement to the press by a D.M.K. Member re. No-confidence Motion.

Mr. SPEAKER: The hon. Member Sri M. S. Selvarajan has given notice of a matter of privilege against Mr. A. P. Dharmalingam for giving a news item to the Press which has been reported in the 'Dinamalar' that the D. M. K. Party is going to bring forth a no-confidence motion. This very fact was mentioned on the first day of this sitting itself by the Hon. Chief Minister as well as by the hon. Leader of the Opposition. I think the hon. Member was present on that day. I do not think this is a matter of privilege. Therefore I disallow it.

Sri M. S. SELVARAJAN: Sir, I have something else to say apart from that. I plead that the Hon. Speaker may allow me to have my say in the matter.

Mr. SPEAKER: No, it is not necessary.

#### (2) Delay in intimation of arrest of a Member.

Mr. SPEAKER: The hon. Member, Sri M. Kalyanasundaram raised a matter of privilege regarding his arrest on 3rd July 1966 and detention in the Police Station from 9-00 a.m. to 2-00 p.m., in that the fact was not reported to the Speaker immediately as required by Rule 245 of the Madras Assembly Rules. It is admitted by the Superintendent of Police, Tiruchirappalli, that the hon. Member was secured under Section 151 of the Criminal Procedure Code, as he had a design to commit cognizable offences. But this matter was reported to the Speaker by a communication, dated 16th July 1966 by the Superintendent of Police. There is no doubt that there was a long delay to report the matter according to the Rules. Apparently there cannot be any valid reason for such a delay. I strongly disapprove of the conduct of the Police in treating these matters so lightly and I like to administer a warning to the officers concerned in the matter. I want to impress on the Government to give necessary instructions to their officers not to repeat such violations of the rules.

Other matters raised in the notice regarding the propriety of the arrest or treatment, etc., cannot be discussed under the head of privilege.

Under such circumstances, I hold that it is not necessary to refer the matter to the Committee of Privileges.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Sir, I would like to submit that the Inspector-General of Police who met me this morning has mentioned to me that very strict instructions have been issued to all the officers to take prompt action in the case of the arrest of legislators and that he was looking into the matter of delay relating to the intimation of the arrest of the hon. Member, Sri Kalyanasundaram, at Tiruchirappalli. He has further told me

[Sri M. Bhaktavatsalam] 3rd August 1966

that if it is necessary, he would take disciplinary action against the officer concerned for any default that may be found in the course of the enquiry.

### (3) CHIEF MINISTER'S ANNOUNCEMENT OF THE DATE OF MEETING OF THE ASSEMBLY BEFORE PUBLICATION OF GOVERNOR'S NOTIFICATION.

MR. SPEAKER: The hon. Member, Sri T. P. Alagamuthu, has given notice under Rule 184 of the Assembly Rules, for permission to raise a matter of privilege, viz., advance announcement made to the Press by the Hon. Chief Minister about the date of the meeting of the Legislature before the publication of the Governor's notification summoning the Legislature. The hon. Member has stated that it is the privilege of a Member of the House to be informed in the first instance of the date of the meeting of the Legislature. According to the Constitution, the Governor is to summon the Assembly, at the time and date fixed by him. Of course, the Government, in consultation with the Speaker, used to fix a date, and leave it to the Governor for notifying it. Usually, the Governor's notification is published in the *Fort St. George Gazette* and individual intimation is sent to the Members by the Secretary to the Legislative Assembly Department. So, evidently it is not a matter which is informed to the Member or to the House in the first instance, as in the case of important business which is brought before the House for transaction such as Budget, No-Confidence Motion or any Policy of the Government, and as such, no question of privilege arises.

The hon. Member, Sri Alagamuthu, also questions the propriety of the advance information on the ground that the Governor has got the privilege and duty to do the same. The Chief Minister, in his reply, contends that the date and time was fixed far in advance and it was given out for the benefit of the Members. This is a moot point but not a point for privilege. But, my opinion is, apart from the propriety or impropriety of the act of the Chief Minister in giving advance information, it is always better to leave all conventions to be carried through respective machineries according to normal procedure.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே;
நான் ஒரு விளக்கம் கோருகிறேன். நேற்று இதைப்பற்றி
விளக்கினேன். இந்தச் செய்தி கெஜட்டில் வருகிறது. உறுப்பினர்
களுக்குத் தனித்தனியாகவும் அனுப்பப்படுகிறது. எத்தனை
நாட்களுக்கு, முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டுமோ அத்தனை
நாட்களுக்கு முன், அறிவிக்கப்படுகிறது. இப்படி எல்லா
வகையிலும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுவதையொட்டித்
தான்—நான் மெம்பர்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான்,
கூறினேன். அது வேண்டாம் என்று கூறினால்—கெஜட் மூலம்
அறிவிக்கப்படுகிறபோது தெரிந்துகொண்டால் போதும், அவர்
களுக்கே எழுதித் தெரிந்துகொள்கிறபோது தெரிந்துகொண்டால்



3rd August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

போதும் என்றால்—நான் இனிமேல் கூறவில்லை. எனக்குத் தெரி
விக்க வேண்டுமென்பது ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர்
களுடைய சௌகர்யத்திற்காகத்தான் தெரிவித்தேன் என்று
கூறினேன். கூறவேண்டாம் என்றால் இனி நான் பத்திரிகை
களுக்கோ, வேறு யாருக்குமோ தெரிவிக்கவில்லை. அப்படித் தெரி
விக்க வேண்டாம் என்பதுதான் இந்த மன்றத்தின் அபிப்பிராயமா,
தங்கள் அபிப்பிராயமா என்பதற்கு விளக்கம் கோருகிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து** : கனம் சபாநாயகர் அவர்களே, நான்
ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறேன். தாங்கள் ருலிங்
கொடுத்த பிறகு அதற்கு விளக்கம் கோருவது முறையா, சம்பிர
தாயத்திற்கு ஏற்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதில் என்ன பாயின்ட் ஆஃப்
ஆர்டர் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. நான் என்ன
செய்யவேண்டும் என்பதற்கு விளக்கம் கோரினேன். அது தவறு?

MR. SPEAKER: I have not given any ruling with regard to the advance information. I have stated that it is not a matter of privilege and that it is better that it is left to the normal course. The Hon. Chief Minister also has endorsed my opinion and has stated that if the House so desires, he would do that. So, it is not a point of order or anything like that.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : மேலும் ஒன்று கூற விரும்பு
கிறேன். எப்போது சட்டசபை கூடப் போகிறது என்று தனிப்
பட்ட முறையில் சபை அங்கத்தினர் யார் வந்து என்னிடம்
கேட்டாலும்கூட நான் சொல்லக் கூடாது என்று நினைக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : இதுதான் கனம் முதல் அமைச்சர்
அங்கத்தினர்களைப் பழி வாங்குவது மாதிரி இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அங்கத்தினர்களைப் பழி
வாங்குவது ஒன்றும் இல்லை. ஒரு அங்கத்தினர் வந்து கேட்டால்
நான் ஆகஸ்டு 1-ஆம் தேதி கூடுகிறது என்று சொல்கிறேன். நான்
சொல்லி பத்து நாட்களுக்குப் பிறகு அந்த அங்கத்தினருக்கு
கூட்ட அறிவிப்புக் கொடுக்கப்பட்டால் அதையும் தவறாக எடுத்துக்
கொள்ளக்கூடும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : ஒரு அங்கத்தினர் முதல்
அமைச்சரை வந்து கேட்டால் அவருக்குச் சொல்வது வேறு
விஷயம். முதல் அமைச்சர் தான் சொல்ல வேண்டும். அவரைத்
தான் வந்து கேட்பார்கள். Even the Governor acts only on the advice of the Chief Minister.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இனி அது கூடத் தவறாக
இருக்கக்கூடும் என்று தான் நான் கருதுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அங்கத்தினருக்குத் தெரிவிப்பது வேறு விஷயம். பத்திரிகைகளுக்கு வெளியிடுவது வேறு விஷயம். பத்திரிகைகளில் வெளியிடுவது என்பது வேறு வேறு வகையில் பயன்படுத்திக்கொள்ளப்படும். அதை ஆட்சேபிப்பதற்காக கனம் அங்கத்தினர்கள் தனிப்பட்ட முறையில் கேட்டால் கூடச் சொல்லக் கூடாது என்பது சரியல்ல.

MR. SPEAKER : Now I want to ask the hon. Member, Sri Kalyanasundaram, one question. Suppose the Hon. Chief Minister had revealed to him that the House was going to meet on 1st August. What would happen if he had told the Press that he got that information from the Hon. Chief Minister?

SRI M. KALYANASUNDARAM : Then, I might be guilty of a breach of privilege.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுமாத்திரம் அல்ல. என்னைத் தனியாக வந்து சந்தித்த அங்கத்தினருக்குச் சொல்லிவிட்டு, மற்ற அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்காமல் இருந்தால் அதுவும் கூடத் தவறாக இருக்கலாம். அதனால் தான் அப்படித் தெரிவிப்பதும் கூடச் சரியல்ல என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்காமல் சபையைக் கூட்டிவிட முடியாது. அதனால் அங்கத்தினர்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை.

கனம் சபாநாயகர் : நஷ்டம் இல்லை என்றால் இவ்வளவு நேரம் எதற்காக விவாதம் செய்து கொண்டிருக்கவேண்டும்?

## IV.—ANNOUNCEMENT.

### THE MADRAS DISTRICT MUNICIPALITIES BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the President of India has given his sanction, under Article 304 (b) of the Constitution, for the introduction in the Madras Legislative Assembly of the Madras District Municipalities Bill, 1966.

I am also to inform the House that the Governor has given his recommendation for the consideration by the Madras Legislative Assembly, of the Madras District Municipalities Bill, 1966.

## V.—GOVERNMENT BILL.

### THE MADRAS DISTRICT MUNICIPALITIES BILL, 1966.

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras District Municipalities Bill, 1966.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras District Municipalities Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.





THE HON. SRI S. M. A. MAJID : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## VI.—PRESENTATION OF REPORTS.

### (1) REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE AUDIT REPORT ON THE ACCOUNTS OF THE MADRAS STATE ELECTRICITY BOARD FOR THE YEAR 1958-59 TO 1961-62.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1958-59 முதல் 1961-62 வரையுள்ள ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்துச் செய்த தணிக்கை அறிக்கைகளின் மீது பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கையை இந்த மன்றத்தின் முன் நான் வைக்கிறேன்.

### (2) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES ON THE MADRAS RECORD OFFICE.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on the Madras Record Office (Second Report).

## VII.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள தீர்மானத்தை நான் இப்பொழுது முன்மொழிகிறேன் :— 9-30 a.m.

"கீழ்க்கண்ட காரணங்களையும், வேறு சில காரணங்களையும் ஒட்டி கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகிற அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கை இழந்துவிட்டது என்பதை இந்தப் பேரவை தெரிவித்துக் கொள்ளுகிறது :—

(1) இந்த அரசாங்கம், பொதுவாக எல்லாப் பண்டங்களின்—குறிப்பாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற இன்றியமையாத பண்டங்களின் மிதமிஞ்சிய விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது;

(2) இந்த அரசாங்கம் இந்த மாநிலத்தில் உணவு நிலைமையைச் சீராக்கவும், விவசாயத்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்கவும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தரவும் தவறிவிட்டது;

(3) இந்த அரசாங்கம் தொழில் நுட்பக் கல்வித் துறைகளுக்கு, குறிப்பாக மருத்துவக் கல்வித் துறைக்கு மாணவ, மாணவியரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செம்மையான முறையில் செய்யத் தவறிவிட்டது;

(4) இந்த அரசாங்கம் கோயம்பத்தூரில் மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்யவும், சென்ற சில திங்கள்களாக வேலையின்றித் தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்களின் துயரத்தை துடைக்கவும் தவறிவிட்டது;

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

(5) இந்த அரசாங்கம் சேலம் எஃகு (உருக்கு) தொழிற்சாலை நிறுவுவது பற்றி பலமுறை மீண்டும் மீண்டும் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கத் தவறிவிட்டது ;

(6) இந்த அரசாங்கம் நகராட்சிகளில் காங்கிரசல்லாத பிற கட்சிகளின் செல்வாக்கை ஒடுக்கும் வகையில், சில நகராட்சி மன்றங்களைக் கலைத்து, தனது அதிகாரத்தை முறை தவறிப் பயன்படுத்தியுள்ளது ;

(7) இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழக மக்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த உணர்ச்சிகளை, 1965 சனவரி-பிப்ரவரி திங்கள்களில் பலரின் உயிரிழப்பு ஏற்படும் அளவுக்கு இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடந்தும், இந்த அரசாங்கம் உணரத் தவறிவிட்டது; அதுமட்டுமல்லாமல் இந்தியத் தலைமை அமைச்சர்களும், தமிழக முதலமைச்சரும் பல தடவைகளில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமதலும், அவற்றின் அடிப்படையில் சட்டத் திருத்தத்தை இந்திய அரசு கொண்டுவர ஏற்பாடு செய்யாமலும் தவறியதன் மூலம் தமிழக மக்களுக்கு இந்த அரசாங்கம் துரோகம் இழைத்துவிட்டது ;

(8) இந்த அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாக ஆக்கவும் தமிழ் வகுப்புகளில் சேர மாணவர்களுக்குத் தனிச் சலுகைகளும், வசதிகளும் அளிக்கவும் 1956-ம் ஆண்டின் ஆட்சி மொழிச் சட்டத்தை செம்மையாகவும், விரைவாகவும் நடைமுறைக்குக் கொண்டு வரவும், தமிழை மாநிலத்தின் ஆட்சிமொழியாகப் பரவலான முறையில் நடைமுறைப்படுத்தவும் தவறிவிட்டது.”

இந்தக் காரணங்களால் இந்தப் பேரவை இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இழந்துவிட்டது என்பதால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன் :** நான் அதை ஆமோதிக்கிறேன்.

**திரு. பி. பொன்னுசாமி :** இந்த மகாசபை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். எதிர்க்கட்சி கொண்டு வருகிறதா அல்லது மகாசபை கொண்டுவருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : What is the last sentence ?

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** “இந்த அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாக ஆக்கவும், தமிழ் வகுப்புகளில் சேர மாணவர்களுக்குத் தனிச் சலுகைகளும், வசதிகளும் அளிக்கவும் 1956-ஆம் ஆண்டின் ஆட்சிமொழிச் சட்டத்தைச் செம்மையாகவும், விரைவாகவும் நடைமுறைக்குக் கொண்டு வரவும், தமிழை மாநிலத்தின் ஆட்சிமொழியாகப் பரவலான முறையில் நடைமுறைப்படுத்தவும் தவறிவிட்டது” என்று



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அளவோடு நிறுத்தாமல் தீர்மான வடிவாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மகாசபை அமைச்சரவையின்மீது நம்பிக்கை இழந்துவிட்டது என்று கூறினேன்.

MR. SPEAKER : What is the statement ? The statement is that ‘ this House expresses its want of confidence ’.
இந்தமாதிரி விஷயத்தில் இந்தச் சபை நம்பிக்கையை இழந்துவிட்டது என்றுதான் இருக்கும்.

திரு. பி. பொன்னுசாமி : இந்தச் சபை என்றால் ஆளுங்கட்சியும் சேர்ந்ததாகத்தானே இருக்கும், அதனால்தான் கேட்டேன்.

கனம் சபாநாயகர் : ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பது இதிலே கிடையாது. பொதுவாக ஹவுஸ் என்றுதான் இருக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த மந்திரிசபையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன். இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவது இரண்டாவது முறையாக அமைந்திருக்கிறது. 1964-ஆம் ஆண்டிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. மீண்டும் இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்படக்கூடிய நிலைமையிலே இருக்கின்றது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒட்டி நான் கூறுகின்ற கருத்துக்களையும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்ற கருத்துக்களையும், கனம் முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் பொருட்படுத்தாமல் இருக்கக்கூடும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முடிவு என்ன ஆகும் என்பது இந்த மன்றத்திலே இருக்கின்ற அனைவருக்கும் நன்றாக விளங்கும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதின்மூலம் இந்த அரசு செய்யத் தவறியவற்றை எடுத்துக் கூறுகின்ற வகையிலே பயன்தரக்கூடியதாக இருக்கின்றது. இந்த அரசாங்கம் செய்யவேண்டியவற்றைச் செய்யத் தவறிவிட்டது, செய்யக் கூடாதவற்றை செய்திருக்கிறது என்பதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சுட்டிக்காட்டவும், அவற்றை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பயன்படுகின்றது. இன்றைய ஆட்சியினுடைய போக்கைப் பொதுமக்கள் புரிந்துகொள்வதற்கும், ஆட்சியிலே உள்ள குற்றங்குறைகளைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கும் விவாதத்தின்மூலம் தெரிவிக்கப்படுகின்ற அத்தகைய கருத்துக்கள் பொதுமக்களுக்கு மிகவும் பயன்படுவனவாக இருக்கும். இந்தக் கருத்துடன்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. எடுத்துத் தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்கள் அமைச்சர்களுடைய சிந்தனைக்கு எடுப்பாக அமைந்து, அவர்கள் அவற்றை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்ற வகையிலேதான் இந்தத் தீர்மானம் இங்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த மன்றத்தில் இன்று இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படுகின்ற நிலையிலேயே அங்கே

பாராளுமன்றத்திலேயும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்
வரப்பட்டு இருக்கிறது. இந்திய அரசிலேயும் மாநில அரசிலேயு
இன்றைய ஆட்சி செய்கின்ற தவறுகள் பலவும் எடுத்துச் சொல்ல
பட்டு வருகின்றன. இதுபோன்று வேறு பல மாநில
களிலும்கூட காங்கிரஸ் ஆட்சிகளின்மீது நம்பிக்கையில்லா
தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு கருத்துக்கள் எடுத்துச்சொல்ல
படுகின்றன. காங்கிரஸ் ஆட்சியின்கீழ் எப்படிப்பட்ட நிலைமைக
நிலவுகின்றன என்பதைத் தெளிவாகக் காட்டுவதற்கு இவையெ
லாம் பயன்படும்.

இதிலே முதலாவதாகக் கூறப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்
முக்கியமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற இன்
யமையாத பண்டங்களின் மிதமிஞ்சிய விலையேற்றத்தைக் கட்டு
படுத்தவும், தடுத்து நிறுத்தவும், அதற்குத் தக்க வழிவகைகளை
காணவும் இந்த அரசு தவறிவிட்டது ' என்பது ஆகும். மக்க
அனைவரும் இன்று விலைவாசி ஏற்றத்தினால் பாதிக்கப்பட்டிரு
கிறார்கள். விலைவாசிகள் மிதமிஞ்சிய வகையில் ஏறிக்கொண்டே
போகின்றன. தடுத்து நிறுத்துவோம் என்று அமைச்சர்க
வாக்குறுதிகள் அளித்தாலும்கூட, ஏறிய விலைவாசிகள் ஏறி
படியேதான் இருக்கின்றன. ஏழைகள், பாட்டாளி மக்கள்
அன்றாடக் கூலி வேலை செய்பவர்கள், மாதச் சம்பளக்காரர்க
இவர்கள் எல்லாம் வாழமுடியாத அளவுக்கு 'வரவினம் செ
வினத்தைத் தாண்டிச் செல்லும் அளவுக்கு, செலவினம் மேலு
மேலும் பெருகுகின்ற அளவுக்கு விலைவாசி ஏற்றம் மிக முக்கியமா
காரணமாக அமைந்திருக்கிறது. வாழமுடியாத அளவுக்குப் ப
குடும்பங்கள் வாடுகின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். வறுமை
யினால் தற்கொலை செய்துகொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை
யும் இவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டும். விலைவாசிகளை
கட்டுப்படுத்திக்கொண்டு தான் வருகிறோம் என்ற அளவிலே
முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தெரிவித்து
கொண்டிருக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் இருக்கின்ற நிலை
யைப் பார்ப்போமானால் மிதமிஞ்சிய வகையில் விலைவாசிகள் ஏறி
கொண்டேதான் வருகின்றன. இந்த அரசாங்கத்தின் நடவடிக்கை
களும், மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் சேர்ந்துதா
இதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. வரிவிதிப்ப
பணவீக்கம் போன்ற காரணங்கள் இருந்தாலும் விலைவாசிக
ஏறுவதைத் தடுக்க நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் காரண
மாக இன்னும் விலையேற்றம் அதிகரித்துக்கொண்டே போகு
தன்மையைத்தான் நாம் பார்க்கிறோம். அதைக் கட்டுப்படுத்
திருக்கிறோம், அதற்காக முயற்சிகள் எடுத்துக் கொண்டிரு
கிறோம் என்று அமைச்சர்கள் தெரிவித்தாலும்கூட கட்டுப்படுத்த
படாத சூழ்நிலையைத்தான் உண்மையான நிகழ்ச்சிகள், விவரங்க
நமக்கு எடுத்துரைக்கின்றன.

பொதுவாக, கடந்த நான்கு மாதக் கணக்குகளை மட்டு
பார்ப்போமானால் எல்லாப் பண்டங்களின் விலையும் எந்த அளவுக்
ஏறிக்கொண்டே இருக்கிறது என்ற புள்ளி விவரத்தைப் பார்க்





முடியும். 1966 மார்ச் மாதத்தில் 853 புள்ளியாக இருந்தது ஏப்ரல் திங்களில் 863 புள்ளியாக உயர்ந்து, மே திங்களில் 889 புள்ளியாகி, ஜூன் திங்களில் 912 புள்ளி என்ற அளவுக்கு ஏறியிருக்கிறது. மார்ச் மாதத்திற்கும் ஜூன் மாதத்திற்கும் இடையில் 59 புள்ளிகள் ஏறியிருக்கின்றன. 'இவ்வாறு ஏறி வருகின்ற விலைவாசியைத் தடுத்து நிறுத்துகிறோம், அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறோம்' என்று கூறுகிறார்கள். ஆனால், அது எந்த அளவுக்குப் பலனைத் தந்திருக்கிறது என்பதை இந்தப் புள்ளி விவரத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும். மே மாதத்திற்கும் ஜூன் மாதத்திற்கும் இடையில் மட்டும் விலைவாசி 23 புள்ளிகள் ஏறியிருக்கின்றன.

உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தை எடுத்துக் கொண்டாலும் மார்ச் மாதம் 680 புள்ளியாக இருந்து, ஏப்ரல் மாதத்தில் 683 புள்ளியாகி, மே மாதத்தில் 685 புள்ளியாகி, ஜூன் மாதத்தில் 704 புள்ளி அளவுக்கு ஏறியிருக்கிறது. இந்த மூன்று மாத இடைவெளியில் 24 புள்ளிகள் மொத்தமாக ஏறியிருக்கின்றன. மே-ஜூன் மாத இடைவெளியில் மட்டும் 19 புள்ளிகள் உணவுப் பண்டங்களைப் பொருத்து ஏறியிருக்கிறது. ஜூன் மாதத்திலிருந்து இந்த ஆகஸ்டு வரை மேலும் பல புள்ளிகள் ஏறியிருக்கின்ற அளவுக்கு விலைவாசிகள் காணப்படுகின்றன.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வைப் பார்த்தாலும், 1966 மார்ச் மாதத்தில் 626 ஆக இருந்தது, ஏப்ரல் மாதத்தில் 629 ஆகி, மே மாதத்தில் 640 புள்ளி ஆகி, ஜூன் மாதத்தில் 652 புள்ளி அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இந்த மூன்று மாத காலத்திற்குள் 26 புள்ளி ஏறியிருக்கிறது. மே முதல் ஜூன் வரை உள்ள ஒரு திங்களுக்குள் 12 புள்ளி அளவுக்கு ஏறியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் எதைக் காட்டுகின்றன ?

மே மாதத்திலிருந்து ஜூன் மாதத்திற்குள்ளாக பெருமளவுக்கு விலைவாசி ஏறியிருப்பதற்குக் காரணம் இந்திய அரசினால் கொண்டு வரப்பட்ட ரூபாயின் மதிப்புக் குறைப்பே ஆகும். ரூபாய் மதிப்புக் குறைப்பின் விளைவாகவே விலைவாசிகள் ஏறியிருக்கின்றன என்று பொருளாதார நிபுணர்களும் மற்றவர்களும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ரூபாய் மதிப்பைக் குறைக்கும்போது உள்நாட்டுப் பண்டங்களின் விலை, உற்பத்தியாகின்ற பொருள்களின் விலை ஏறும்படியான நிலைமைகள் இருந்தால், ஏற்கனவே தாங்க முடியாத விலைவாசி ஏற்றத்தைக் கொண்டிருக்கின்ற இந்த நாட்டில் மீண்டும் தாங்க முடியாத நிலைமைகள் உருவாகி தொல்லைகளைத் தான் தோற்றுவிக்கும். இந்தியாவின் நிதியமைச்சர் கூட, 'ரூபாயின் மதிப்பைக் குறைக்கின்ற நிலை அந்நிய நாட்டு ஏற்று மதிப் பொருள்களைப் பொருத்தே தவிர, உள்நாட்டுப் பண்டங்களின் விலை ஏறுவதற்கு வழிவகை இல்லை ; உள்நாட்டுப் பண்டங்களின் விலைகள் ஏறாது' என்ற வகையில் சொன்னார்கள். அந்தக் கருத்தையொட்டித்தான் கனம் முதலமைச்சர் அவர்கள் கூட இரண்டொரு கூட்டங்களிலே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

'ரூபாயின் மதிப்பைக் குறைப்பது இன்றியமையாத ஒன்று; தவிர்க்கப்பட முடியாத ஒன்று; எதிர்காலத்திலே பொருளாதார ஏற்றத்தையும், வசதியையும் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கும் ஒன்று; இதனால் உள்நாட்டுப் பண்டங்களின் விலைகள் ஏற வழி இருக்காது' என்ற கருத்துப்பட தெரிவித்திருக்கிறார்கள். தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் விழா ஒன்றில் கனம் முதல அமைச்சர் அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் வந்த செய்தியைப் படிக்கிறேன்:—

"Critics of devaluation viewed it from the political and personal angle, while much of the support had come from those who viewed it as a long-term proposition. The benefits of devaluation should not be dimmed by the transient difficulties."

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ரூபாய் மதிப்புக் குறைப்பின் காரணமாக விலைவாசி நிச்சயமாக ஏறும்; அவ்வாறு ஏறுவதைத் தடுக்க முன் கூட்டியே நடவடிக்கை எடுத்தால் ஏறாமல் இருக்கும் என்றார்கள். அவ்வாறு விலைவாசி ஏறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா? முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? ரூபாய் மதிப்புக் குறைப்பின் காரணமாக நிச்சயமாக விலை ஏறும் என்றே பொருளாதார நிபுணர்களும், பொதுமக்கள் தலைவர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு விலைவாசி ஏறுவதைத் 'தடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க இந்த அரசு தவறிவிட்டது. ரூபாய் மதிப்புக் குறைப்பின் காரணமாக பயங்கரமான எதிர்காலத்தை எதிர்பார்த்து, அதனால் பாதகம் ஏற்படாத வகையில்—அதனுடைய பாதகத்தை இந்த நாடு அனுபவித்துத் தீர வேண்டுமென்பதை இந்த அமைச்சரவை உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் உணரத் தவறி விட்டது—தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறி விட்டது. இதை உணர ஆட்சி தவறி விட்டதே தவிர, ஆளும் கட்சி உணராமல் இருக்கிறதா என்றால், கட்சி இதை உணர்ந்திருக்கிறது.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் இருப்பவர்கள் எல்லாம் கூட விலைவாசிகள் இதனால் உயர்ந்து வருவதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உயர் திரு. காமராஜர் அவர்கள் கூட இந்தக் கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ரூபாய் மதிப்புக் குறைவின் காரணமாக இந்த நாடு பாதிக்கப்படும்' என்று கூறியிருக்கிறார்கள். காலத்திற்குப் பொருந்தாத நிலைமையில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; தீங்கான ஆலோசனையின் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ற கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் ரூபாய் மதிப்பைக் குறைத்தது பற்றித் தம்முடைய கருத்தைத் தெரிவித்ததாகச் சொன்னார்கள். இது வரை அவர்கள் இது பற்றிய எந்தக் கருத்தையும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.





**திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பெரும்பாலானவர்களால் இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டபோது கட்சித் தலைவர் அவர்கள் அதற்கு மாறுபட்ட எந்தக் கருத்தையும் தெரிவிக்காமல் இருந்ததிலிருந்தே. —silence is acceptance—அவர்கள் ரூபாய் மதிப்புக் குறைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் கொள்ளவேண்டும். பத்திரிகையில் வந்த செய்தியை ஒட்டிப் பார்க்கும்போது பதினொரு பேரில் பத்துப் பேர் அளவுக்கு ரூபாய் மதிப்புக் குறைப்பு தவறானது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அங்கு கூறப்பட்ட கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்தையோ, விளக்கத்தையோ கொடுக்காத வரையில் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கொள்ள வேண்டும். அவர்கள் அங்கு கூறப்பட்ட கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறுவார்களேயானால் அப்போது வேண்டுமானால் நம்முடைய கருத்தை மாற்றிக் கொள்ளலாம். இந்த அமைச்சரவையைச் சார்ந்த தொழிலமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் கூட ரூபாய் மதிப்புக் குறைப்பினால் விலைவாசிகள் ஏறும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கருத்திலிருந்து வேறுபடும் முறையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'அதனால் பாதகம் ஏற்படாது' என்று பேசியிருக்கிறார்கள்.

ரூபாய் மதிப்புக் குறைப்பைப் பொருத்து நேரடியாக இந்த அரசுக்குத் தொடர்பு இல்லையென்றாலும்கூட, அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை இந்த அரசினர் சமாளித்துத் தீரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ரூபாய் மதிப்புக் குறைப்பினால் விலைவாசிகள் ஏறும் நிலைமை ஏற்படும் என்று பல்வேறு தரப்பினர் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தின் வர்த்தக துறை இலாகாவே, 'ரூபாய் மதிப்பு குறைக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் இந்திய வியாபாரம் வெளிநாட்டில் 80-82 சதவிகிதம் பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படும்; விலைகள் ஏறும்படியான நிலைமைகள் ஏற்படும்; இறக்குமதியாகின்ற பொருள்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்; அதையொட்டி பல்வேறு பண்டங்களில் விலை யேறும்படியான நிலைமை ஏற்படும்' என்று கூறுகிறார்கள். ரூபாய் மதிப்பைக் காரணமாக வைத்து அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய தேவையில்லாத பண்டங்களின் விலைகள் கூட ஏற்றப்பட்டிருக்கின்றன. உள்நாட்டுப் பண்டங்களின் விலை ஏறுவதற்கு எந்த வகையும் இல்லையென்று எடுத்துச் சொல்லப்படுகிறது. ஆனால், உணவுப் பண்டங்களின் விலைகள் எந்த அளவுக்கு ஏறியிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட கடந்த மூன்று மாதங்களில் 24 புள்ளி அதிகமாக ஏறியிருக்கிறது. இந்த விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசாங்கம் தவறி விட்டது என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறோம். இந்த விலையேற்றத்தைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? வானொலி மூலம் இரண்டு நாட்களுக்கு முன் சொல்லப்பட்ட விலைகள்—தேங்காய் 38 காசு, முட்டை 25 காசு, வெங்காயம் 45 காசு, பால் ரூ. 1.04 காசு, சவுக்கு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

ரூ. 3.25 காசு, காட்டு விறகு ரூ. 3, காட்டுக்கரி ரூ. 11, துவரம் பருப்பு ரூ. 1.20, கடலைப் பருப்பு ரூ. 1.23, உளுத்தம் பருப்பு ரூ. 1.52, பாசிப் பருப்பு ரூ. 1.52, மிளகாய் ரூ. 5.30, புளி ரூ. 2.25, பூண்டு ரூ. 3;50, தனியா ரூ 3;50, காப்பிக்கொட்டை ரூ. 5.80 என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர இதே விலைக்கு கடைகளில் போய்க் கேட்டால் கொடுக்கிறார்களா என்றால்—கடைக்காரர்களிடம் சென்று வானொலியில் வந்திருக்கிற விலைக்கு அல்லவா கொடுக்கவேண்டுமென்று கேட்டால்—வானொலி நிலையத்திற்கு வேண்டுமானால் போய் வாங்கிக் கொள்ளுங்கள், அந்த விலையில் இங்கு கொடுப்பதில்லை என்று கூறுகிறார்கள். அப்படி கூறுபவர்கள்மீது யாரிடம் சொல்லி நடவடிக்கைகள் எடுப்பது என்று தெரியவில்லை. வானொலியில் கூறப்பட்டிருப்பதற்கு மேலாக விற்கிறார்கள் என்று போலீஸாரிடம் குறைபட்டுக் கொண்டாலும் கூட இதில் தலையிடுவதற்கு எங்களுக்கு உரிமையில்லை, நாங்கள் எப்படித் தலையிட முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். இதைப் பற்றி யாரிடம் எடுத்துச் சொல்லி இந்தக் குறைபாட்டை நிவர்த்திப்பது என்று தெரியவில்லை. வானொலியில் ஒரு குறிப்பிட்ட விலை சொல்லப்படுகிறது. அதே விலைகள் புழக்கத்தில் இருக்கிறதா என்றால் புழக்கத்தில் இல்லை. அதை நீக்குவதற்கு என்ன வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றால் கட்டுப்படுத்துகிறோம் என்று சொல்லப்படுகிறதே தவிர உண்மையில் விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படவில்லை. விலைகளை ஏற்றுகிறவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அதிக லாபம் பெறும் அளவிற்கு விலைகளை ஏற்றிக் கொண்டுதானிருக்கிறார்கள். இந்த விலைவாசி ஏற்றத்தை, அதிக லாபம் பெறுவதைத் தடுத்து நிறுத்த எத்தகைய முயற்சியும் செய்யப்படவில்லை.

கொள்ளை லாபத்தை அடிப்படையாகக் கொண்டு பல பேர்கள் தங்கள் ஏகபோக உரிமை காரணமாக, அவர்கள் விருப்பு வெறுப்புகளுக்கிணங்க, ஒரு சிலர் கூடி செய்யும் விலை முடிவுகளின் அடிப்படையில்தான் மற்றவர்கள் வாங்க வேண்டிய அடிப்படையில் இருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு தீவிர நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதா என்றால் அவ்விதம் ஒன்றும் மேற்கொள்ளவில்லை, திரும்பத் திரும்ப இந்த மன்றத்தில் பல்லாண்டு காலமாக அவர்கள் எடுத்துச் சொல்வது ஒன்றேதான். இன்றல்ல, நேற்றல்ல; மெல்ல மெல்ல சிறுகச் சிறுக விலைவாசிகள் ஏறிக்கொண்டுதான் செல்கிறது. அப்படி விலைவாசி ஏறுவதைத் தடுக்க என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று கேட்கப்பட்ட போதெல்லாம் அரசு கூறுகிற பதில் நியாய விலைக் கடைகளை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். அவை விலைவாசி உயர்வைத் தடுத்து நிறுத்த பயன்படும் என்று சொல்கிறார்களே தவிர, ஏற்படுத்தப்பட்டிருக்கிற நியாயவிலைக் கடைகள் நாடெங்கும் திறக்கப்படுகிற அளவிற்கு, மக்கள் எல்லோரும் அவற்றில் வாங்குவதற்குத் தக்க அளவிற்கு, விலைவாசியேற்றத்தை தடுக்கிற அளவிற்கு வலிவு கொண்டிருக்கிறதா என்பதை அரசு உணருகிறதா? நியாயவிலைக் கடைகள் நாட்டு மக்களால் விரும்பப்படுகிற அளவிற்கு விலைவாசியேற்றத்தை தடுக்க பயன்படும்படி



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அமைந்திருக்கின்றனவா? ஒரு சில இடங்களில்தான் நியாயவிலைக் கடைகளை அமைக்க முடிந்திருக்கிறது. மிகக் குறைந்த சதவிகிதத்தினர் மட்டும்தான் அங்கு வாங்கக்கூடிய அளவிற்கு அவை அமைந்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மற்றவர்கள் வேறு கடைகளில்தான் வாங்குகிற அளவிற்கு, அதிக விலை கொடுத்து வாங்குகிற அளவிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவரவர்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி விலைகளை ஏற்றிக்கொண்டு போகும் சூழ்நிலைதான் இன்றிருக்கிறது. கொள்ளை லாபக்காரர்கள், பதுக்கல்காரர்கள் அதிகப்படியான லாபத்தைப் பெறும் அளவிற்குத்தான் பண்டங்களை விற்று வருகிறார்கள். அதுவும் உணவுப் பண்டங்களை விற்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

அண்மையில் சில நாட்களாக பஞ்சாபில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். கொள்ளை லாபக்காரர்கள் அவர்கள் விருப்பப்படி கொள்ளை லாபம் அடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கு அமைச்சரவை மாறி கவர்னர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மிகத் தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதின் மூலம் பதுக்கல்காரர்கள் யார் யார், யார் யார் அதிகமாக, நியாயத்திற்குப் புறம்பாக விலைகள் வைத்து விற்கிறார்களோ, கலப்படக்காரர்கள் யார் யாரே அவர்கள்மீது தீவிர நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் அதிகமான பேர்கள் பிடிபட்டிருக்கிறார்கள் என்பதும், அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட முடிகிறது என்பதையும் பத்திரிகைகளில் வரும் படங்கள் மூலமாக அறிகிறோம். கலப்பட மருந்துகள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அந்த மருந்துகளை நடுத்தெருவில் கொட்டி விட்டு தாங்கள்மீது நடவடிக்கைகள் எடுக்க முடியாத அளவிற்கு தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பத்திரிகைகளில் வரும் படங்கள் மூலம் அறிகிறோம். அமைச்சரவை மாறி கவர்னர் ஆட்சி வந்தால்தான் இப்படி நடைபெறும் என்பதற்காகச் சொல்கிறேன் என்று தவறாகக் கருத வேண்டாம். அமைச்சரவை இருந்த காலத்தில் அவர்களுக்கு சலுகைகள் செய்திருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து ஊகித்துக்கொள்ள முடிகிறது. கவர்னர் ஆட்சி வந்த பிறகு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்காமல் விட்டு விட்டிருந்தால் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது. தீவிர நடவடிக்கைகள் எடுத்ததின் காரணமாக, எடுப்பதின் காரணமாக, பதுக்கல்காரர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் பிடிபட்டு மற்றவர்கள் தங்கள் விலைகளை இறக்கிக் கொள்ளவும், பிடிபட்டுவிடுவோம் என்ற அச்சம் காரணமாக அபரிமிதமான கொள்ளை லாபம் அடிக்க முன்வருகிறவர்கள்கூட, கலப்படப் பொருள்களை விற்பவர்கள்கூட சட்டத்திற்குள் பிடிபடாமல் இருக்க நடுத்தெருக்களில் தங்கள் பண்டங்களை, கலப்படப் பண்டங்களைப் போடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. முன்பே தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்குமானால் கவர்னர் ஆட்சியில் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்பட்டிருக்காது. கவர்னர் ஆட்சி வந்துதான் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அமைச்சரவை தக்க நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதன் காரணமாக,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

எவ்வளவு கொள்ளை லாபம் அடித்தாலும், எவ்வளவு அதிகமாக விற்றாலும்கூட எந்த ஒரு சட்டமும் தங்களை தடுக்காது என்ற அளவிற்கு அவர்கள் தங்கள் விருப்பம் போல் செய்திருக்கிறார்கள். விலைவாசியைத் தடுக்க இந்த அரசினால் ஒரே ஒரு கருத்தைத்தான் சொல்ல முடிகிறது. நியாயவிலைக் கடைகளை வைக்கிறோம், அங்கு சென்று வாங்கிக் கொள்ளுங்கள் என்ற ஒரே ஒரு கருத்தைத்தான் சொல்லமுடிகிறது. ஏற்படுத்தப்பட்டிருக்கிற நியாயவிலைக் கடைகள் மக்களுடைய குறைகளை போக்குகிற அளவிற்கு பயன் படத்தக்க வகையில் அமைந்திருக்கிறதா என்றால் இல்லை. இவை அறவே பயன் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. மற்றவர்கள் அபரிமிதமான விலைக்கு விற்க முடியாத அளவிற்கு, நியாயவிலைக் கடைகள் எங்கு பார்த்தாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள் விலைகளை ஏற்றிக் கொண்டே போகிறார்கள், அதைத் தடுத்து நிறுத்துகிற சூழ்நிலை யில் இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற குற்றச் சாட்டை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏறிக் கொண்டிருக்கிற விலைவாசியை மீண்டும் தடுக்க தவறி விட்டால் மேற்கொண்டும் எதிர்காலத்தில் ரூபாயின் மதிப்பு இன்னும் குறைக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்ற கருத்தை முன்னாள் ரிசர்வ் பாங்க் கவர்ன ராக இருந்த திரு. எச். வி. ஆர். ஐயங்கார் அவர்கள் தெளிவாக பத்திரிகைகளில் அறிக்கைகள் மூலம் தெளிவுபடுத்தியிருக் கிறார்கள். "நாம் ஜாக்கிரதையாக, முன் எச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுத்திருப்போமானால், அப்படி ஏற்கனவே எடுத்துக் கொண்டிருந்தால், ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டிய அவசியம்கூட வந்திருக்காது. அப்படிச் செய்யத் தவறியதன் காரணமாகத்தான் ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டிய அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்போதும் அதன் காரணமாக ஏற்படுகிற விளைவைத் தடுக்கத் தவறிவிட்டால் எதிர்காலத்தில் மீண்டும் ரூபாயின் மதிப்பு குறைந்து இன்னும் பல சங்கடங்களுக்கு நம் நாடு உள்ளாகும், அத்தகைய ஒரு நிலைக்கு கொண்டு போய் விடும்" என்று அவர்கள் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். "மீண்டும் பெருவாரியாக செலாவணிப் பெருக்கத்தில் இறங்கி நாட்டின் பொருளாதாரத்தில் கோளாறுகள் ஏற்படாமல் தவிர்க்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இந்த நடவடிக்கைகள் வெற்றியடைந்திருக்கும். இதற்கு தைரியமான அரசியல் முடிவுகள் செய்திருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக இப்படி நடக்கவில்லை. தவிரவும் கட்டுப் பாடுகளையும் ஏற்றுமதி ஊக்கத் திட்டங்களையும் நிர்வகிக்கும் அரசாங்கம் துரிதமாகவும் திறமையாகவும் செயல்பட்டிருக்க வேண்டும். வர்த்தக சமுதாயத்தினரும் ஓரளவு கண்யமாகவும் நாணயத்துடனும் நடந்திருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக தனியார் துறையில் சிலர் வசதிகளையும் ஊக்கத் திட்டங்களையும் துஷ்பிரயோகம் செய்தனர். இதன் விளைவாக அந்நிய நாணய செலாவணி வெளியே போக ஆரம்பித்தன. எல்லோரும் ஓரளவு அடிப்படைக் கட்டுப்பாடு, திறமை, கண்யத்துடன் நடந்து



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொண்டிருந்தால் ரூபாய் மதிப்புக் குறைப்பை தவிர்த்திருக்கலாம். அடிப்படைப் பொருள்களின் விலைகள் ஏறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதைச் செய்யாத வரை அவசரச் சட்டங்களைக் கொண்டு வருவதும் சர்க்கார் பண்டகசாலைகளை அமைப்பதும் பிரயோஜனமில்லை. அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத் தாலும் விலைவாசிகள் பொதுவாக ஏறுவதைத் தவிர்க்க முடியாது. விலைவாசிகள் ஏறும் அளவைக் குறைக்கவேண்டும். உற்பத்தியும் துரிதமாகப் பெருகவேண்டும்." இவ்விதம் முன்னாள் ரிசர்வ் பாங்கு கவர்னராக இருந்த திரு. எச். வி. ஆர். ஐயங்கார் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு தவறிவிட்டதன் காரணமாகத்தான் இத்தகைய விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. தக்க நடவடிக்கை கள், தக்க நேரத்தில் எடுக்க அரசு முன்வந்திருக்குமானால் இந்த விளைவுகள் ஏற்பட்டிருக்காது என்று நான் மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தக்க நடவடிக்கைகள் எடுக்காத தின் காரணமாக விலைவாசிகள் தாங்கமுடியாத அளவிற்கு ஏறிக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், பண்டங்கள் கிடைக் காத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாபில் தீவிர நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம், ஒரு சிலர்மீது நடவடிக்கை எடுத்திருப்பதால், குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க முயல்கிறார்கள் என்பது இனிமேல் அவ்விதம் நடக்காதிருக்க அச்சுறுத்தும் கருவியாக அமைந்திருக்கிறது. சட்டப்படி தக்க நடவடிக்கைகள் எடுக்கமுன்வராவிட்டால் பயங்கரமானதொரு சூழ்நிலை எதிர்காலத்தில் ஏற்படக்கூடும்..

அடுத்தபடியாக அமைச்சரவையின்மீது சாட்டப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு விவசாயிகளுக்கும், விவசாயத்துறைக்கும் போது மான அளவிற்கு உதவிகள் செய்ய முடியாத அளவிற்கு அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிற சூழ்நிலை இருந்து கொண்டு வருகிறது என்பது. புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் எந்த அளவிற்கு அந்த வசதிகள் போய் சேர்ந்தன, எந்த அளவிற்கு அந்த வசதிகளை அவர்கள் பெற்றிருக்கிறார்கள், அதைக் கொண்டு எந்த அளவிற்கு தங்கள் வாழ்க்கை வசதியைப் பெருக்கி தங்கள் வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக்கொள்ள அவை பயன்பட்டிருக்கின்றன என்பதைக் கவனிக்கவேண்டும். ஆக விவசாயிகளைப் பொறுத்தவரையிலும், அவர்களுடைய வாழ்க்கைச் செலவு ஏற ஏற அவர்களுடைய விவசாயத் தொழிலை நடத்து
வதற்கு போதுமான அளவு பண வசதியில்லாமல் இருக்கிறார்கள். 10-00 a.m.
இந்த நாட்டில் உற்பத்தி பெருக வேண்டுமென்றால், நிலங்களைப் பொறுத்தவரையில் நல்லமுறையில் போதிய அளவில் முதலீடு செய்யவேண்டும், இதற்கு முக்கியமாக உரத்தைப் பொறுத்தும், விதையைப் பொறுத்தும், வேறு பல பாசன வசதிகளைப் பொறுத் தும், எவ்வளவுக்கெவ்வளவு முதலீடு அதிகமாகச் செய்யப் படுகிறதோ அந்த அளவுக்கு உற்பத்தி பெருக முடியும். அந்த அளவுக்கு முதலீடு செய்யாமல், அதற்கான வாய்ப்பும் வசதிகளை யும் செய்யாமல், உற்பத்தி பெருகும், உற்பத்தி பெருகும் என்று

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

சொல்லிக்கொண்டிருந்தால், அதன் மூலம் வெறும் சொற்கள்தான் மிஞ்சுமே தவிர உண்மையான பலன் எதுவும் ஏற்படாது. அந்த முறையில் இப்போது விவசாயிகள் தங்கள் தொழிலை நல்ல முறையில் கவனிப்பதற்கு வசதியற்ற நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இப்போதுள்ள நிலையில் விவசாயிகளுக்கு என்ன வசதி செய்து தந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, கூட்டுறவு பாங்குகள் மூலமாக கிரெடிட் சொசைட்டிகளுக்கு கடன் கொடுத்து, அதன் மூலமாக விவசாயிகளுக்கு உணவைப் பெருக்குவதற்காக கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. கூட்டுறவு பாங்குகளைப் பொறுத்தவரையில், இதற்கு மட்டும் கிரெடிட் சொசைட்டிகளுக்கு கடன் கொடுப்பதில்லை, வேறு பலவிதமான காரியங்களுக்கும் கடன் உதவி கொடுக்கிறார்கள். இவ்விதம் கொடுக்கப்படும் கடன் தொகைகளுக்காக திருப்பிச் செலுத்தப்படவேண்டிய பணம் சரியான நேரத்தில் கொடுக்கப்படாத சூழ்நிலை ஏற்படுவதின் மூலமாக விவசாயிகளுக்கு தரப்படவேண்டிய கடன் உதவி அவர்களுக்கு கிடைக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. கிரெடிட் சொசைட்டியிலிருந்து ஏற்கனவே செலுத்தப்படவேண்டிய தொகை உரிய நேரத்தில் செலுத்தப்பட முடியாத நிலை ஏற்படுகின்றபொழுது விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டிய கடன் தொகையை பெற முடியாத சங்கடமான சூழ்நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு—விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கடன் தொகை பட்டுவாடா செய்வதற்கு பணம் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. உதாரணமாக, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் காவேரி டெல்டா பிரதேசங்களுக்கு ஜூன் 10, 12 தேதிகளில் காவேரியில் தண்ணீர் வந்துவிடுகிற நேரத்தில் குறுவை பயிர் ஏற்றுவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த நேரத்தில் விவசாயிகளுக்கு இந்தக் கடன் தொகை கிடைத்தால்தான் உரிய நேரத்தில் அதைப் பயன்படுத்தி விவசாயத்தை நல்லமுறையில் செய்ய முடியும். குறிப்பாக ஜூலை 20, 30 தேதிக்குள் கடன் தொகை கிடைத்தால், அதன் மூலம் உரம் வாங்குவது, விதைகள் வாங்குவது போன்ற பலனை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும். கடன் பெறுவதற்கான விண்ணப்பம் செய்தாலும், விவசாயிகளுடைய கையில் கடன் தொகை வந்து சேருவதற்கு எத்தனையோ நாட்கள் ஆகிவிடுகின்றன. இதன் காரணமாக விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படுகிற நேரத்தில் அதிக வட்டிக்கு பணத்தை வெளியிலிருந்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த ஆண்டில் ஜூலை மாதத்தில்தான் தண்ணீர் விடப்பட்டிருந்தாலும்—சாதாரணமாக ஜூன் மாதத்தில் தண்ணீர் விடப்படும், சென்ற ஆண்டு 1965-ல் ஜூன் மாதத்தில் தண்ணீர் விடப்பட்டது—அவ்விதம் விடும்போது ஜூலை மாத இறுதிக்குள் விவசாயிகளுடைய கையில் கடன் தொகை கிடைத்தால்தான் அவர்கள் அதைத் தங்கள் தேவைக்கு



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பயன்படுத்திக்கொள்ள முடியும். கடன் பெறாத அளவில் நல்ல முறையில் விவசாயத்தை நடத்திக்கொள்வதற்கான நிலையில் பெரும்பாலான விவசாயிகள் இல்லை. ஆனால் நடைமுறையில் மிக்வும் காலந்தள்ளித்தான் கடன் தொகை கொடுக்கப்படுகிறது. இதற்கிடையில் எப்படியாவது தங்கள் தொழிலை நடத்திவிட வேண்டும் என்ற இக்கட்டான நிலைமைக்கு வரும்போது, விவசாயிகள் அதிக வட்டிக்கு வெளியிலிருந்து கடன் வாங்குகிறார்கள். இவ்விதம் நாட்கள் கழிந்து பெறப்படுகிற கடன் தொகையை வேறு பல வகைகளில் செலவழித்துவிடுகிறார்கள். கிரெடிட் சொசைட்டியிலிருந்து கிடைக்கின்ற பணம் தீபாவளி நேரத்தின்போது கிடைக்கின்ற நிலைமை இருந்தால், அல்லது வேறு பல பண்டிகைகளின் போது கிடைக்கின்ற நிலைமை இருந்தால், எப்படியாவது அந்த பண்டிகையை கொண்டாடிவிடலாம் என்ற எண்ணத்துடன் அந்தப் பணத்தை செலவு செய்துவிடுகிறார்கள். இதன் காரணமாக விவசாயத்திற்கும் அந்தத் தொகை பயன்படாமல், கிரெடிட் சொசைட்டிக்கும் பணம் திருப்பிக் கொடுக்க முடியாமல் இன்னும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே கொடுக்கப்படுகின்ற உதவி பயன் தரத்தக்க வகையில் அமையவில்லை. விவசாயிகள் அதன் மூலமாக தங்கள் விவசாயத்தைப் பெருக்கி உற்பத்தியை பெருக்குவதற்கான வாய்ப்பும் வசதியும் இல்லை. காலாகாலத்தில் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய உதவியைக் கொடுக்க இந்த அரசு தவறியிருக்கிறது. விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற உதவித் தொகைகள் ஒழுங்கான முறையில், போய்ச்சேருவதற்கான வாய்ப்பு இல்லை. அது மட்டுமல்ல, கொடுக்கப்படுகிற இந்த உதவி எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்க முடியாத சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. சாதாரண நிலையில் இருப்பவர்களும் இந்த உதவியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகைய முறையில்தான் இப்போதுள்ள வாய்ப்பும் வசதியும் அமைந்திருக்கிறது. எல்லோருக்கும் சீரான முறையில் இந்த உதவித் தொகை கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது, உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் இன்னும் பின்தங்கிய நிலைமையே இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் மேலும் உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்று அரசினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அளவில் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற அத்தகைய குறிக்கோள் வெற்றி பெற முடியாத அளவுக்குத்தான் உற்பத்தியின் அளவு அமைந்திருக்கின்றது. இந்த வகையில் மேலும் உற்பத்தி பெருகுவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. விவசாயத்தில் பல நவீன முறைகளைக் கொண்டு வந்தால் ஒழிய உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கான வாய்ப்பும் வழியும் இல்லை. அது மட்டுமல்ல, புது நிலங்களையும் விவசாய உற்பத்திக்கு கொண்டு வரவேண்டும். அதிலும் நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்த மட்டில் மேலும் வசதிகளைப் பெருக்குவதற்கான வாய்ப்பு எதுவும் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் இல்லை என்றே தெரிகிறது. புதிதாக விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

கான நிலங்களும் இல்லை என்றே தெரிகிறது. ஆகவே, இருக்கின்ற நிலங்களை வைத்துக்கொண்டு, உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும். பிற நாடுகளில் எல்லாம், பத்து ஆண்டுகளுக்குள்ளாக 80 சதமானம், 90 சதமானம் இருக்கின்ற நிலங்களிலேயே உற்பத்தியை பெருக்கிக் காட்டுகின்ற அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள். அத்தகைய முயற்சிகளை நாம் கைக்கொள்வதில் மூலமாக, அத்தகைய நவீன வசதிகளை கைக்கொள்வதின் மூலமாக நாமும் நமது உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதையே இந்திய அரசின் உணவு அமைச்சர் கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

'Unless we have a programme of modernising agriculture according to science and technology, there is no remedy to our food problem,'

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பல நவீன முறைகளை கைக்கொண்டால் ஒழிய உணவு உற்பத்தியை நாம் பெருக்க இயலாது என்று அவர்களால் எடுத்துச்சொல்லப் பட்டிருக்கிறது. இவ்விதம் சொல்லப்படுகிறதே தவிர திட்டவட்டமான நடவடிக்கை எதுவும் இந்த அரசால் எடுக்கப்படவில்லை. அத்தகைய முறையில் எந்த அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறோம் என்பதைக் கணக்கிட்டுப்பார்த்தால்—வடிமுனைக் கிணறுகளின் மூலம் நம்முடைய தண்ணீர்த் தேவையைப் போக்கிக் கொள்ளலாம் என்ற அளவில், தஞ்சை மாவட்டத்தில் வடிமுனைக் குழாய் கிணறுகள் ஏற்படுத்தி—மின்சாரத்தின் மூலமாக நீர் இறவை செய்வதற்கு திட்டங்கள் போடப்பட்டன. அந்த வகையில் 2,000 செட்டுகள் போடப்பட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தும் 300 செட்டுகள் அளவுக்குத்தான் இப்போது மின்சாரம் வழங்கப் பட்டிருப்பதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அளவு குறைந்திருப்பதற்குக் காரணம், அந்த மாவட்டத்தில் இருக்கின்ற மின்சார உரிமை, தனிப்பட்டவர்களின் கையில் இருப்பதால் போதிய அளவில் கவனம் செலுத்தி திட்டத்தை நிறைவேற்றாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நமது கனம் முதலமைச்சர் அவர்கள்கூட குறிப்பிட்டதாக பத்திரிகையில் வந்த செய்திகளின் மூலமாக அறிந்தேன். 2,000 அளவுக்கு திட்டமிட்டிருந்தும் 300 என்ற அளவிற்குத்தான் செயலாற்ற முடிந்திருப்பது வருந்தத்தக்கது. சீக்கிரமாகவே குறிப்பிட்டபடி 2,000 பேர்களுக்கும் மின் வசதி ஏற்படுத்திக்கொடுத்து, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று அவர்களும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இவ்வளவு நடந்தும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக திட்டங்கள் பல போட்டும், நூற்றுக் கணக்கான கோடி அளவில் ரூபாய்களை செலவு செய்தும், அகில இந்திய அளவில் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்கள் செலவு செய்தும், உணவுப் பெருக்கம் நாளுக்குநாள் குறைந்து கொண்டு தான் வருகிறது. திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை எப்படி செலவு செய்யப்படுகிறது, செலவு செய்த அளவிற்கு



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பலன் அளித்திருக்கிறதா என்பதை நாம் கவனிக்கவேண்டும். இவ்வளவு ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்தும், எந்த அளவுக்கு நாம் உணவு உற்பத்தியை பெருக்கியிருக்கிறோம் என்று பார்க்கும்போது, புள்ளிவிவரங்கள் தான் சட்ட மன்றத்தில் தரப்படுகிறதே தவிர, பலன்களைப்பற்றி சுவரொட்டிகளில் அச்சடித்து வெளியிடுகிறார்களே தவிர—செலவழித்திருக்கின்ற தொகையின் அளவுக்கு பெறப்பட்ட பலன் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் பார்க்க இந்த அரசு தவறி விடுகிறது. 16.9 அவுன்ஸ் அரிசி என்று இருந்த சூழ்நிலை குறைந்து, 15.7 என்கின்ற நிலை ஏற்பட்டு, இப்போது 8 அவுன்ஸ்க்கும் குறைவாக இருக்கக்கூடிய நிலைமையில், வர வர குறைந்து கொண்டே வந்திருக்கிறது. அதிலும் சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டிலும் கொடுக்கப்படுகின்ற எட்டு அவுன்ஸ் அரிசியிலும், நைஸ் ரக அரிசி பாதியும் மோட்டா ரக அரிசி பாதியும் தான் கொடுக்கப்படும் என்று பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கின்ற அளவில் தான் சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதன் மூலமாக மக்களுடைய தேவைகளை நிறைவேற்றித்தர இந்த அரசு தவறிவிட்டது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. திட்டங்களைப் போட்டுக்கொண்டே போகிறோம், வரி இனங்களும் வளர்ந்து கொண்டே போகின்றன, வசூல் செய்யப்படுகின்ற வரி இனங்களுக்கு ஏற்ப, பலன் வளர்ந்திருக்கிறதா, அல்லது பலன் அதிகப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் உரிய அளவுக்கு பலன் ஏற்படவில்லை, போதிய அளவுக்கு பலனை உருவாக்குவதில் இந்த அரசு தோற்றுப்போய்விட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் கூறியிருக்கிற குற்றச்சாட்டுகளில் ஒன்று, தொழில் நுட்பக் கல்வித்துறை, மருத்துவக் கல்வித்துறை இந்த இரண்டிலும் போதுமான அளவுக்கு வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் செம்மைப்படுத்துவதற்கும் இந்த அரசு தவறிவிட்டது என்பதாகும். முக்கியமாக பி.யு.சி. படிப்பு படித்து தேறிய மாணவர்கள், புக விரும்புவது, மருத்துவத்துறையும், பொறியியல் துறையுமாக அமைந்திருக்கின்றது.' பெரும்பாலான மாணவர்களும் இந்த இரண்டு துறைகளில் புகுவதின் மூலமாக தங்களது எதிர்கால வாழ்க்கையை செம்மையுள்ளதாக, வளமுள்ளதாக ஆக்கிக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதற்கேற்ற வகையில் வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அத்தகைய வசதிகள் இல்லாமல் இருப்பதின் காரணமாக பலவித சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இந்த ஆண்டு பொறியியல் துறையில் மாணவர்களை எடுத்துக்கொள்வதற்காக ஒரு முறை கையாளப்பட்டது. மருத்துவத் துறையில் 4,300 பேர்களை இண்டர்வியூ செய்வதற்கு கார்டுகள் அனுப்பப்பட்டன. இவ்வளவு பேர்களை இன்டர்வியூ செய்து 1,000 சொச்சம் பேர்களைத்தான் தேர்ந்தெடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி 1,000 பேர்கள் தேர்ந்தெடுப்பதற்காக 4,000 பேர்கள்—கன்னியாகுமரி

மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் சென்னை நகரத்தை நோக்கி வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாணவ-மாணவியர் மட்டும் வரக் கூடிய சூழ்நிலை இல்லை: ஒருவர்-இருவர், தாய்-தந்தையர் ஒவ்வொரு மாணவ-மாணவியருடனும் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் வந்து சென்னையில் 4-5 நாட்கள் தங்கி இருந்து நூற்றுக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்க வேண்டிய முறையில் ஏற்பாடுகள் அமைந்திருக்கின்றன. அத்தனை பேர்கள் வந்தாலும், வந்து அவ்வளவு ரூபாய் செலவழித்தாலும், கடைசியில் இடம் கிடைத்தாலாவது திருப்தியாக இருக்கும். சென்னையில் இண்டர்வ்யூவிற்காகச் சென்று ரூ. 200-300 செலவழித்தாலும், இடம் கிடைத்தது என்று திருப்தி பெற முடியும். ஆனால், சென்னைக்கு வந்து, ரூ. 300, 400 செலவழித்துவிட்டு, கடைசியில் இடமும் கிடைக்காது, வேதனைப்படும் அளவுக்குப் பல பெற்றோர்கள் இருக்கிறார்கள். முன்பே இந்த மன்றத்தில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. தேர்வு செய்கிற நேரத்தில், சென்னை மாநகர் என்று இந்த ஊரை மட்டும் நிர்ணயிக்காமல், நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்து, மதுரையில் ஒரு இடத்தையும், கோயம்பத்தூரில் ஒரு இடத்தையும், தஞ்சை அல்லது திருச்சியில் ஒரு இடத்தையும், சென்னையில் ஒரு இடத்தையும் தேர்ந்தெடுத்து, இப்படி நான்கு இடங்களாகப் பிரித்து வைக்கப்பட்டால், அந்தந்த இடத்தைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் இருக்கக் கூடிய தாய்-தந்தையர் தங்கள் பிள்ளைகளை அழைத்து வரக்கூடிய நிலை ஏற்பட்டு அவர்களுக்குச் செலவு குறையும். நாலாயிரத்துச் சில்லரை மாணவர்களும், அவர்களோடு வரக் கூடியவர்களும் சென்னைக்கு வருவதன் மூலம் ஏற்படுகிற செலவைவிட, குறைந்த எண்ணிக்கை உள்ள குழுவினர் அந்தந்த இடங்களுக்குச் சென்று தேர்வு செய்கிற நிலை ஏற்படுமானால், வீண் செலவு தவிர்க்கப்படக் கூடும். பொறியியல் துறையைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு 60 மார்க்குகளுக்கு மேல் இருந்தால் தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற நிலையில், அந்த அளவுக்குக் கீழே இருப்பவர்கள் விண்ணப்பம் போட்டாலும் கூப்பாடு வராது, இண்டர்வ்யூவிற்கு அழைக்கப்படமாட்டார்கள் என்ற நிலையில், சென்ற ஆண்டு இருந்த அளவுக்கு அவ்வளவு கோளாறு அதில் ஏற்படவில்லை. காரணம் அதிக மார்க்குகள் வாங்கியவர்களுக்குத்தான் இடம் என்று சொல்லப்பட்டுவிட்டது. இவைகள் முக்கியமான துறைகளாக இருப்பதால் அந்தத் துறைகளில் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பலருக்கு இருக்கிறது. இப்போது இருக்கின்ற முறையில் பி.யு.ஸி.-யில் பெறுகிற மார்க்குகளைப் பொறுத்தும், சமுதாயத்தில் இருக்கிற இடத்தைப் பொறுத்தும் இடம் கொடுப்பது என்ற முறை இருக்கிறது. சமுதாயத்தில் இருக்கிற இடத்தை பொறுத்து வைத்திருக்கிற, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இத்தனை இடம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இத்தனை இடம் என்று ஒதுக்கி வைக்கப்படுகிற சூழ்நிலையும், மற்றவர்களுக்குப் பாக்கி இடங்கள் என்று ஒதுக்கி வைக்கப்படுகிற சூழ்நிலையும் வைத்திருக்க வேண்டியதுதான். ஆனால், குறிப்பிட்ட அளவு என்று நிர்ணயிக்கப்பட்டவுடன் அந்த அளவுக்கு இருக்கக்



கூடியவர்கள் யாரும் விடப்படாத அளவுக்குப் பார்த்துக் கொள்ளுவது நியாயமாக இருக்க முடியும். 60 மார்க்குகளுக்கு மேல், வாங்குகிறவர்கள் எண்ணிக்கையே தேவைப்படுகிற எண்ணிக்கையாக அமையும் என்ற சூழ்நிலை இருக்குமானால், 60 மார்க்குகளுக்கு மேல் இருக்கிறவர்களுக்குத் தான் மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் இடம், அந்த அளவுக்குக் குறைவாக வாங்கியவர்கள் அந்த இடத்தைப் பெறுவதில்லை என்ற நிலை ஏற்படுமானால் அவர்கள் வேறு துறைகளுக்குச் செல்ல வாய்ப்பு ஏற்படும். வீண் செலவுகளும் குறையும். பொறியியல் துறையைப் பொறுத்த மட்டில் 60 மார்க்குகள் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதால் அதிலே இத்தகைய குறைபாடு இல்லை. மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் 4,300 பேர்களையும் இண்டர்வ்யூவுக்கு அழைத்து, அவர்கள் அத்தனை பேர்களும் சென்னைக்கு வந்து, திறமையைச் சோதிக்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும் சூழ்நிலை ஏற்பட்டு, அவர்கள் வாழ்க்கை நிலைமை, வசிக்கும் நிலைமை அத்தனையையும் பார்க்கும் போது, குறைந்த மார்க்குகள் உள்ளவர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லுவதைப் பொறுத்தோ, அல்லது அவர்கள் குடும்பத்தைப் பொறுத்தோ அல்லது அவர்கள் வாழுகின்ற இடங்களைப் பொறுத்தோ இடம் பெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. குறைந்த மார்க்குகள் உள்ளவர்களுக்கு இடம் கிடைத்து விடுகிறது. அதே நேரத்தில் அதிக மார்க்குகள் வாங்கிய பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த, அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் சில ஐயப்பாடுகள் ஏற்படுகின்றன. இத்தகைய ஐயப்பாடுகளுக்கு இடம் ஏற்படாது அவைகளைத் தவிர்க்கவேண்டும். அதைத் தவிர்க்கத் தவறிய காரணத்தினால் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன, மக்களுக்கு அதிருப்தி ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் இந்தக் குறைபாடு இருக்கிறது. ஏராளமான பணம் செலவழித்த பிறகும் இடம் கிடைக்கவில்லை. குறைந்த மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கிடைத்து, அதிக மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கான காரணங்களைக் கண்டறிய பொது மக்களுக்கு வாய்ப்பும் வசதியும் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் கூட எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், என்னென்ன காரணங்களையொட்டித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று பரிசீலனை செய்ய, குழுவோடு சம்பந்தம் இல்லாத, இந்தத் துறையோடு சம்பந்தம் இல்லாத யாராவது ஒருவரை நியமித்து, அதைப் பற்றிக் கண்டறிந்து, நியாயமாக நடந்திருக்கிறதா என்று தீர்ப்பு வழங்கும் நிலை ஏற்பட்டால் இந்த ஐயப்பாடுகள் இல்லாத நிலை ஏற்படும். ஏன் ஒருவரைத் தேர்ந்தெடுத்தோம், ஏன் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தேர்ந்தெடுக்கும் குழு அறிவிக்கும் சூழ்நிலை இல்லை—அந்தச் சூழ்நிலை இருக்கவும் முடியாது. அதற்கான வாய்ப்பும் வசதியும் இருக்க முடியாது. பொது மக்கள் அதைப் பற்றிப் பார்வையிட வாய்ப்பும் ஏற்படுத்த முடியாது. குழு நியமிக்கப்பட்டு, மாணவ-மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு

பட்டியல் தயாரித்திருக்கிறார்கள் என்றால், நியாய அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா என்று பரிசீலிக்க, தனியாக, அந்தத் துறையோடு தொடர்பு இல்லாத ஒருவரை நியமித்து, அவர் அதைக் கண்டறிந்து சரியாக இருக்கிறது என்று சொல்லும் சூழ்நிலை ஏற்பட்டால், தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் மீது ஐயப்பாடு இல்லாமல் இருக்கும். இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்யத் தவறியதன் காரணமாகக் குறைபாடுகளை வளர்த்தும், மக்களிடையே அதிருப்தியை வளர்த்தும், மக்களுக்கு வீண் செலவுகளை ஏற்படுத்தியும் இருக்கிறார்கள். இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து இடம் கிடைக்காது தற்கொலை முயற்சிக்குக் கூட சிலர் வரும் அளவுக்கும், அதைத் தடுத்து நிறுத்தும் அளவுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிலர் இடம் கிடைக்காவிட்டால், பட்டியலில் போடாவிட்டால் தற்கொலை செய்துகொள்ளுகிறேன் என்று கூறினார்கள் என்றும் கூட கூறப்படுகிறது. இந்த நிலைமைகளைப் போக்க முயற்சி செய்யப்பட்டிருக்கவேண்டும். அப்படி செய்யப்படவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசாங்கம் கோயம்புத்தூரில் மூடிக் கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்யும், சென்ற சில திங்கள்களாக வேலையின்றித் தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்களின் துயரத்தைத் துடைக்கவும் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் குறிப்பிட்டிருக்கிறேன். அது நீண்டகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகிற ஒன்று. அத்தகைய மில்களை மூடிவிட்டுத் திறக்காமல் முதலாளிகள் பிடிவாதப் போக்கில் இருக்கிறார்கள். அதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது; உற்பத்தி குறைகிறது. வேறு பல வகைகளில் விலைவாசி உயர உற்பத்திக் குறைவு காரணமாக அமைந்து விடும். மக்களுக்குச் சாதகமாக இருக்க உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். உற்பத்தி பெருகுவது இல்லாமல், அளவோடு உற்பத்தி ஆகும் நிலை கூட தவிர்க்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மில் முதலாளிகளுக்கு குறிப்பிட்ட காலத்தில் மில்களைத் திறக்க முன்வரவேண்டுமென்று உத்தரவு இடவேண்டும். அப்படி அதற்குள் அவர்கள் திறக்க முன் வராவிட்டால் அரசாங்கமே மில்களை எடுத்து நடத்த முன் வந்தால் தான் உற்பத்தி பெருகும், தொழிலாளர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழி ஏற்படும். தனியாரைத் திறக்க வேண்டும் என்று உத்தரவிடாமல், அரசாங்கமும் ஏற்று நடத்தாமல் மூடிக் கிடக்கும் சூழ்நிலை இருக்குமானால் பட்டினிச் சாவுகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் இந்த நிலை இன்னும் நீடித்து வருகிறது; மில்கள் திறக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமை கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குப் பல தடவைகள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏதேனும் ஒன்று செய்ய வேண்டும்—ஒன்று முதலாளிகளுக்கு உத்தரவு போட்டு, மூடிக் கிடக்கக் கூடாது என்று அவைகளைத் திறக்க முயற்சி செய்ய





வேண்டும்; அல்லது, அவர்கள் அதைத் திறந்து நடத்த முன்வரவில்லை என்றால் அரசாங்கமே அந்த மில்லை ஏற்று, அரசாங்கத்தின் சார்பாக அந்த மில்லை ஏற்று, திறந்து நடத்தும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அதனைச் செய்ய இந்த அரசு தவறி விட்டது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் சேலம் எஃகுத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி பலமுறை மீண்டும் மீண்டும் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கத் தவறிவிட்டது என்பது என்னுடைய அடுத்த குற்றச்சாட்டு ஆகும். இந்த மன்றத்தில் 15-16 ஆண்டுகளுக்கு மேலாக, ஆண்டுதோறும், நிதி நிலை அறிக்கையை வைக்கும் போதும் சரி, கவர்னர் உரை மீது விவாதம் செய்யும்போதும் சரி, சேலம் உருக்கு ஆலை பற்றிக் கருத்துக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தடவையும் சமாதானம் கூறிக்கொண்டிருக்கிறார்கள். திட்டம் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது, மற்றைய நாட்டினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள், சுவீடன், சுவிட்சர்லாந்து, ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி என்று ஏதாவது பெயர் சொல்லி, அவர்கள் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று ஒவ்வொரு தடவையும் சமாதானம் கூறப்பட்டு வந்திருக்கிறது. ஒரு தடவை அறிக்கையில் கூறும்போது ரூ. 25 கோடி உருக்காலையைத் தொடங்குவதற்கு தொகை ஒதுக்கப்பட்டுவிட்டது என்று கூறப்பட்டது. ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்பட்டுவிட்டதா? ஒதுக்கப்பட்டது என்ன ஆயிற்று? என்று கேட்கப்பட்டது. அதற்கு எந்தவித விடையும் தரப்படவில்லை. மீண்டும் மீண்டும் சமாதானம் சொல்லப்பட்டு வருகிறது. எப்படியும் சேலம் உருக்குத் தொழிற்சாலை மூன்றாவது திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று உறுதி கூறப்பட்டது. மூன்றாவது திட்டமும் முடிந்து இப்போது நான்காவது திட்டம் வரும் சூழ்நிலை இருக்கிறது. நான்காவது திட்டத்திலாவது வரும் என்ற உறுதி இருக்கிறதா என்றால் இல்லை. இந்த உருக்காலையை நிறுவுவதற்கு எல்லா சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஜப்பான் நிபுணர்கள் வந்து பார்த்துவிட்டு சேலம் இரும்பையும் நெய்வேலி நிலக்கரியையும் பயன்படுத்தி உருக்காலையை அமைக்க முடியும் என்ற சாத்தியக்கூறு இருக்கிறது. அது நல்ல விதமாக அமையும் என்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சேலம் உருக்காலை நல்லமுறையில் அமையும் என்ற உறுதிப்பாட்டைத் தந்திருக்கிறார்கள். ஆனால், இன்னும் அந்த உருக்காலை ஏற்படவில்லை. பத்திரிகையில் வரும் செய்திகளைப் பார்த்தால், இந்தப் பிரச்னையோடு ஆந்திரப் பிரதேசத்தில், கர்நாடகப் பிரதேசத்தில் ஏற்படுத்த இருக்கிற, ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பப்படுகிற உருக்குத் தொழிற்சாலைகளையும் பிணைத்து, மூன்றில் ஒன்று என்று இந்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு இந்தப் பிரச்னையை விட்டிருக்கக்கூடாது இந்த அரசு. இந்தப் பிரச்னை தனியாகக் கவனிக்கப்படவேண்டிய பிரச்னை. மூன்று உருக்குத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான சூழ்நிலையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, இப்பொழுது

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

ஏதாவது ஒன்று தான் ஏற்படுத்த முடியும். அது விசாகப் பட்டினத்திலா, ஹாஸ்பெட்டிலா அல்லது சேலத்திலா என்ற அளவுக்கு இந்தப் பிரச்னையை இந்திய அரசுக்கு கொண்டுபோனதே தவறு. அதைக்கொண்டு போக இந்த அரசு விட்டிருக்கக்கூடாது. அப்படிக் கொண்டுபோக விட்டு, இதைப் பற்றி ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்ற ஒரு பதிலுரையைத் தான் மத்திய அரசு தந்துகொண்டிருக்கிறது. அதே பதில்தான் இங்கு எப்பொழுதும் திரும்பித் திரும்பி சொல்லப்படுகிறது. இதைப்பற்றி எப்பொழுது ஒரு முடிவு ஏற்படப்போகிறது? அதிலும் மூன்று தொழிற்சாலைகளை எடுத்துக்கொள்கிறபொழுது, சிறிய சிறிய அளவில் தொழிற்சாலைகள் துவக்கப்படவேண்டும் என்ற கருத்தை அண்மையில் இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மூன்று உருக்குத் தொழிற்சாலைகளைப் பற்றிப் பேசும்பொழுது இங்கே இப்படிக் கூறுகிறார்கள். ஆனால், 'பொகாரோ இரும்புத் தொழிற்சாலைக்கு முதலீடு ரூ. 650 முதல் 670 கோடி வரை, அப்படி ரூ. 650, 670 கோடி முதலீட்டில் அங்கே ஒரு இரும்புத் தொழிற்சாலை துவக்குவதற்கான முயற்சிகள் இப்பொழுது இருக்கின்றன. அத்தகைய முயற்சிகளை இந்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அதையும்விட குறைந்த அளவு முதலீட்டில் இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம் என்ற நிலை இருந்தாலும்கூட, அதை இங்கே ஆரம்பிப்பதற்கு அவர்கள் முன்வராமல் இருக்கிறார்கள். எத்தகைய வகையில் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமோ, அத்தகைய வகையில் வற்புறுத்த இந்த அரசு தவறிவிட்டது. ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று இது. ஏற்கனவே வாக்குறுதி தரப்பட்ட ஒன்று. அடிக்கடி இந்திய அரசு இது குறித்து வாக்குறுதி தந்திருக்கிறது. அப்படியிருந்தும் இது பின் தள்ளிக்கொண்டு போகிறது. இந்த அரசு இங்கே உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதற்குப் போதுமான அளவுக்கு அக்கறை காட்டாமல், மற்ற மாநிலங்கள் இந்திய அரசை வற்புறுத்துகிற அளவுக்கு இம்மாநில அரசு செயல்பட தவறிவிட்டது என்ற தன்மைக்குத்தான் நாம் வரமுடிகிறதே தவிர வேறு ஒரு முடிவுக்கும் வரமுடியாத நிலைமையில் இருக்கிறோம். மற்றவர்கள் இந்திய அரசிடம் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு முன்வருவதுபோல், இந்த அரசு மட்டும் அந்த அளவுக்குச் சாதிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் இந்த அமைச்சரவையில் திறமையின்மை அடிப்படையில் காரியங்கள் நடக்கின்றனவா என்று ஐயப்படுகிற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே தான் இந்தப் பிரச்னை மிக, மிக முக்கியமானது. இந்த மன்றத்திலுள்ள எல்லாக் கட்சியினரும் இது குறித்து வற்புறுத்தியும்கூட, இது இன்னும் நடைமுறைக்கு வராமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். இன்னும் இதுபற்றி ஒரு முடிவும் காணாமல் இருப்பது கண்டிக்கத் தக்கதாகும்.

நான் கூறியிருக்கக்கூடிய மற்றொரு குற்றச்சாட்டு இந்த அரசாங்கம் நகராட்சிகளில் காங்கிரசல்லாத பிற கட்சிகளின் செல்



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வாக்கை ஒடுக்கும் வகையில், சில நகராட்சி மன்றங்களைக் கலைத்து, தனது அதிகாரத்தை முறை தவறிப் பயன்படுத்தியுள்ளது என்பதாகும். திருநெல்வேலி, அருப்புக்கோட்டை நகராட்சி மன்றங்களை அண்மையிலே இந்த அரசாங்கம் கலைத்திருக்கிறது. அதற்கான காரணங்களையும் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. கெசட்டில் காரணங்கள் முழுவதும் எடுத்துச் சொல்லப்படாவிட்டாலும், பத்திரிகைகளிலே காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்னையில் நடவடிக்கை எடுத்தது சரியா, தவறா, அது சட்டத்திற்கு உட்பட்டது அல்லவா, இல்லையா, நீதியா, நீதியில்லையா என்ற நிலைக்குள் நான் நுழைய விரும்பவில்லை. இது சட்டத்திற்கு உட்பட்டதா, இல்லையா, சட்டத்திற்குப் புறம்பானதா, இல்லையா என்ற பிரச்னை இப்பொழுது உயர் நீதிமன்றத்தின் முன் இருக்கிறது. நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் இந்த நகராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு கூறியிருக்கிற காரணங்கள் எத்தகைய காரணங்கள் என்பதை இந்த மன்றம் உணர்ந்துகொள்ளவேண்டும் என்பது தான். அதே அடிப்படையில் நடைபெறுகின்ற மற்ற நகராட்சி மன்றங்களின் மீது நடவடிக்கை எடுக்கிற அளவுக்கு இந்த அரசாங்கத்திற்குத் துணிவு இருக்கிறதா என்றால், இல்லை என்பதைச் சுட்டிக்காட்டவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிட விரும்புகிறேனே தவிர, வேறுவகையில் அல்ல. கூறப்பட்டிருக்கிற காரணங்கள் மிக மிகச் சாதாரணமான காரணங்கள். அத்தகைய காரணங்களை வைத்து இந்த நகராட்சி மன்றங்களைக் கலைத்திருக்கிறார்கள். அத்தகைய குறைபாடுகள் இருக்கவேண்டும், அத்தகைய குறைபாடுகள் கவனிக்கப்படவேண்டியவை அல்ல என்று நான் கூற வரவில்லை. இவைகளெல்லாம் குறைபாடுகள் என்று எடுக்கப்படுமானால், அவைகளுக்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை இது தானா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தக் குறைபாடுகளை உடைய மற்ற நகராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் இந்த அரசு அதே முடிவை எடுத்துக்கொண்டிருக்கிறதா என்றால், அம்மாதிரி முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை. இதைப்பற்றி இந்த மன்றம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருநெல்வேலி நகராட்சி மன்றத்தைக் கலைப்பதற்காக அரசாங்கம் கூறியிருக்கிற காரணங்கள் பத்திரிகைகளிலே வெளி வந்திருக்கின்றன. ஒன்பது காரணங்களின் அடிப்படையில் இந்த நகராட்சி மன்றம் கலைக்கப் பட்டிருக்கிறது. இம்மாதிரிக் குற்றச்சாட்டுகளைச் சொல்லி, அவைகளுக்கான சமாதானத்தைச் சொல்லச்சொல்லி, நகராட்சி மன்றம் சமாதானம் சொல்லி, அந்த சமாதானம் பொருத்தமற்றது என்று இந்த அரசாங்கம் கருதி, அந்த நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி கெசெட்டில் வெளிவந்திருக்கிறது. நகராட்சி மன்றத்தைக் கலைப்பதற்காகக் கூறப்பட்டிருக்கிற காரணங்கள் யாவை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(1) 1—8—1964-ல் நடந்த நகரசபைக் கூட்டத்தில், தலைவரைக் குற்றம் சாட்டி ஒரு மெம்பர் வெளிநடப்பு செய்தார். 3 மெம்பர்கள் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டதாகத் தெரிகிறது.

இதனால் கூட்ட நடவடிக்கை ஒழுங்காக நடைபெற தடை இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

(2) 1—8—1964-ல் நடந்த அவசரக் கூட்டத்தில், தமிழ்நாடு கவர்னருக்கு வரவேற்புக் கொடுக்கும் தீர்மானம் பரிசீலனைக்கு வந்தது. தலைவர் மேற்படி கூட்டத்தை ஒத்திவைத்து இருக்கிறார், ஆனால் 'மெம்பர்கள் ஆஜர் புத்தகத்தில்' கையெழுத்து வாங்கவில்லை. கூட்டத்தில், திறமை இல்லாத தலைமை காரணமாகத் தலைவர் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமல் போய்விட்டது.

இது ஒரே நாளில் நடைபெற்றது. ஒரே கூட்டமா அல்லது வெவ்வேறு கூட்டமா என்பதற்கு விளக்கம் இல்லை.

(3) 17—8—1964-ல் நகரசபையின் கூட்டம் நடக்கவேண்டி இருந்தது. ஆனால், கூட்டம் நடக்கவில்லை. கலெக்டர் அரசாங்கத்திற்குத் தெரிவித்தபடி மேற்படி கூட்டத்துக்கு 7 மெம்பர்கள் வந்திருந்தனர், தலைவர், உதவித் தலைவர் வரவில்லை. அதனால், ஒரு மெம்பர் கோரம் இல்லாமல், கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்று, மெம்பர்கள் ஆஜர் புத்தகத்தில் எழுதி உள்ளார்கள். கூட்டத்தில் ஒழுங்கீனமான நடவடிக்கைகள் இருந்திருக்கிறது. சிலர் கூட்டத்தைவிட்டு வெளியேறி உள்ளனர். உண்மையில் நடந்தது என்ன என்பதை 'மினிட்' புத்தகத்தில் எழுதவில்லை.

(4) 3—5—1964-ல் நடந்த நியமனக் கமிட்டிக் கூட்டத்தில் 'எம்ப்ளாய்மெண்டு எக்சேஞ்சு' (வேலை தேடித்தரும் நிலையம்) மூலம் இல்லாமல் சையத்தனி என்பவரை பில் கலெக்டராக நியமித்தது.

(5) 7—11—1964-ல் நடந்த கூட்டத்தில், 14 மெம்பர்கள் இருந்தனர். ஆனால் கூட்டம் நடக்கவில்லை. தலைவரோ, உதவித் தலைவரோ வரவில்லை. இந்தக் கூட்டத்தில் "யார் தலைமை தாங்குவது?" என்பதில் தகராறு நடந்து உள்ளது.

(6) 16—11—1964-ல் நடந்த சாதாரணக் கூட்டத்தில், வந்திருந்த 19 மெம்பர்களில் 10 பேர் வெளிநடப்புச் செய்தனர். கூட்டத்துக்கு வேண்டிய கோரம் இல்லை. ஆனால் தலைவர் கூட்டத்தை ஒத்தி வைக்காமல் நாற்காலியை விட்டு எழுந்து தலைவருடைய அறைக்குப் போனார். சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்தார். அப்போது கூட்ட மண்டபத்தில் 2 மெம்பர்கள் இருந்தனர், "அஜெண்டா" வில் உள்ள 73 விஷயங்களும் நிறைவேற்றப்பட்டன என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

(7) 6—2—1965-ல் நடந்த கூட்டத்தில், இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் காயம் அடைந்தவர்களுக்கு, அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கம் நீதி விசாரணை நடத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "நகரசபை நிர்வாகத்திற்குத் தொடர்பு இல்லாத எந்தப் பிரச்சினையிலும் தலையிடக் கூடாது" என்ற விதியை நகரசபை மீறி விட்டது.

(8) 19—4—1965-ல் நடந்த கூட்டத்தில் தலைவர் ஒரு மெம்பர் கேள்வி கேட்டதை அனுமதிக்கவில்லை. இதனால் கூட்டத்தில் சண்டை ஏற்பட்டு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.





(9) 5—2—1966-ல் நடந்த கூட்டம் 5-30 மணிக்கு நடக்க வேண்டும். கையெழுத்து வாங்கி முடிந்ததும், தலைவர் 6 மணிக்கு வந்தார். பல மெம்பர்கள் கூட்ட மண்டபத்தை விட்டு வெளியே போனார்கள். தலைவர் 'மினிட்' புத்தகத்தில், மெம்பர்கள் வெளி நடப்பைப் பதிவு செய்யவில்லை.

இப்படி 9 காரணங்கள் சொல்லப் பட்டுத் தான் இந்த நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது. கோரம் இல்லை என்ற காரணத்திற்காகவும், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்ற காரணத்திற்காகவும், கூட்டம் நடைபெறமுடியாத அளவுக்கு நிலைமைகள் இருந்திருக்கின்றன என்ற காரணத்திற்காகவும் கலைக்கப்பட்டிருக்கின்றது. இது சட்டப்படி சரியா என்பது உயர்நீதி மன்றத்தின் முடிவைப் பொறுத்து அமைந்திருக்கிறது. இந்தக் காரணங்களின் அடிப்படையில் இந்த நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. நகராட்சி மன்றங்கள் பலவற்றில் இத்தகைய குறைபாடுகள் இல்லையா? இத்தகைய குறைபாடுகளின் காரணமாக இந்த அளவுக்கு நடவடிக்கை அமையவேண்டிய ஒன்றுதானா என்பதை சட்டத்தைப்பற்றியும், உரிமையைப்பற்றியும் பேசுகின்ற, கவனிக்கின்ற இந்த மன்றம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதே போன்ற நிலையில் 5, 6 முறை வெளி நடப்புகள் பல்வேறு நகராட்சி மன்றங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அண்மையிலே மதுரை நகராட்சி மன்றத்தில் கலவரம் ஏற்பட்டிருக்கிறது, அடிதடி கலவரம் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக நகராட்சி மன்றக் கூட்டம் நடத்த முடியாத அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டு, கூட்டம் கலைக்கப்பட்டிருக்கிறது. சேலம் போன்ற பல்வேறு நகராட்சி மன்றங்களில் இது போன்ற குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு குறைபாடுகளை மற்றவர்களும் கூட அரசாங்கத்திற்கு அவ்வப்பொழுது அறிவித்திருக்கிறார்கள். அவற்றின் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று பார்த்தால், எத்தகைய நடவடிக்கையும் மற்ற நகராட்சி மன்றங்களின்மீது எடுத்ததாகத் தெரியவில்லை. திருநெல்வேலிக்குப் பக்கத்திலுள்ள மேலப்பாளையம் நகராட்சி மன்றத்தில் நடந்துள்ள பல்வேறு குறைபாடுகள் பல தடவையும் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. 10 மெம்பர்கள் கையெழுத்திட்டு கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று கேட்டிருந்தும் தலைவர் கூட்டத்தைக் கூட்டாமல் இருந்திருக்கிறார், வெளி நடப்பைப் பதிவு செய்யாமல் இருந்திருக்கிறார், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பல்வேறு நகராட்சி மன்றங்களில் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன. சாதாரணக் குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து—குறைபாடுகள் இருக்கவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை—ஒரு நகராட்சி மன்றத்தை கலைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று இந்த அரசு கருதினால், அதே அடிப்படையில் மற்ற நகராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு, இந்தக் குறைபாடுகள் இருக்கிற நகராட்சி மன்றங்களை இந்த அரசு சமாதானம் கேட்டிருக்கிறதா என்றால், இல்லை. இப்படிப்பட்ட காரணங்களைக்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

கொண்டுதான் அருப்புக் கோட்டை நகராட்சி மன்றமும் கலைக்கப் பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் இந்த இரண்டு நகராட்சி மன்றங்களையும் அரசாங்கம் கலைக்க முன்வந்ததோ, 'அதே காரணத்தை வைத்து, அதே முறையில் குறைபாடுகள் இருக்கிற மற்ற நகராட்சி மன்றங்களையும் அரசு கலைக்க முன்வந்ததா என்றால், இல்லை. வெளி நடப்பு செய்ததற்கு, கோரம் இல்லாமல் போனதற்குத் தலைவரே காரணம் என்று சொல்வதற்கில்லை. திருநெல்வேலி நகராட்சி மன்றத்தின் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், துணைத் தலைவர் காங்கிரசை சேர்ந்தவர். ஆகவே, பலரும் ஈடுபட்டிருக்கிற நிலைமைதான் இருக்கிறது. ஒருவர், இருவர் வெளி நடப்புச் செய்திருக்கிறார்கள், அதனால் காரியங்கள் நடைபெறவில்லை, கோரம் இல்லை, இம்மாதிரி நிலைமைகள் பல சந்தர்ப்பத்தில் பல நகராட்சி மன்றங்களில் ஏற்பட்டிருக்கின்றன.

10-30 a.m. மாதம் ஒரு தடவையாவது ஒரு கூட்டம் நடத்தியே தீரவேண்டும் என்கிற விதி இருக்கிறது. ஜில்லா நகராட்சி சட்டப்படி மாதம் ஒரு முறை மன்றத்தின் இயல்பு கூட்டம் கூட்டப் படவேண்டும் என்பது தான் விதி. ஆனால் அந்த விதி முறையை சேலம் நகராட்சி கடைப் பிடித்திருக்கிறதா என்றால், இல்லை. அங்கீகரிக்கப்பட்ட மீட்டிங் நடைமுறை விதிகளின்படி மாதம் இரண்டு இயல்பு கூட்டம் கூட்டப்பட வேண்டும். ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் நான்காம் வியாழக்கிழமைகளில் கூட்டப்படுதல் நியதியாகும். ஆனால், மீட்டிங் ரெகுலேஷன் படி இரண்டு வருட காலத்தில் எந்த ஒரு மாதத்திலும் இரண்டு இயல்புக் கூட்டங்கள் கூட்டப்படவில்லை. உறுப்பினர்களால் கொடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் உரிய காலத்தில் பொருள் பட்டியலில் சேர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணங்களையும் தெரிவிப்பது இல்லை. 1964-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் கூட இன்னும் பொருள் பட்டியலில் சேர்க்கப் படாமல் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இது பற்றி அரசினருக்குப் பல குறிப்புக்கள் தெரிவித்தும், எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் குறைபாடுகள் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கின்றன. இன்னும், இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில், அனுதாபம் தெரிவிக்கும் முறையில் தீர்மானங்கள் போட்டும், நீதி விசாரணை கோரியும் தீர்மானங்கள் பல நகராட்சி மன்றங்களில் நிறைவேற்றப்பட்டன. ஆனால், அரசு தன்னுடைய விசேஷ அதிகாரத்தை உபயோகித்து, அத்தகைய தீர்மானங்களை வாபஸ் பெற வேண்டும் என்று நகராட்சி மன்றங்களுக்கு தாக்கீது விட்டு, அவை ரத்து செய்யப் பட்டிருக்கின்றன. அது அரசாங்கம் எடுக்கும் தனி நடவடிக்கை. ஆகவே, கலைக்கப் படவேண்டியதற்காகக் காரணமாகக் காட்டப்படும் குறைபாடுகள் எத்தகையவை என்பதை இந்த மன்றம் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சேலம் நகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரை, 16-5-1966-ஆம் தேதிக்குப் பின்னர் மன்றத்தின் இயல்பு அல்லது சிறப்பு அல்லது விரைவு ஆகிய எத்தகைய வகைப்பட்ட கூட்டமும் நடைபெற



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வில்லை. கூட்டம் நடக்கவில்லை என்று அரசினருக்குத் தெரிவித்தும் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. தலைவர் கையொப்பம் இட்டு 28—6—1966-ஆம் தேதிய அறிக்கை ஒன்று பிற்பகலில் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதில் உரிய காலத்தில் 30—6—1966-ஆம் தேதிய இயல்பு கூட்டத்தின் பொருள் பட்டியல் கிடைக்கவில்லை என்று ஒரு உறுப்பினர் ஆட்சேபிப்பதால் முன் அறிவித்தபடி 30—6—1966-ஆம் தேதிய இயல்பு கூட்டம் நடைபெறாது என்று கண்டுள்ளது. 16—5—1966-ஆம் தேதி நடந்த கூட்டத்திற்கும் 30—6—1966-ஆம் தேதிக்கும் நீண்ட இடைவெளி இருந்தும் உரிய காலத்தில் உறுப்பினர்களுக்கு கூட்ட அறிவிப்பு கிடைக்கச் செய்யாமை தலைவர் ஆணையர் இவர்களின் பொறுப்பற்றத் தன்மை அல்லது கூட்டத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செய்த சதியாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அதைப் பற்றி எழுதியும் கொடுத்திருக்கிறார்கள். தலைவர் சட்டத்தையும் மீட்டிங் ரெகுலேஷனையும் பொறுப்போடு பின் பற்றாமல் ஒரு உறுப்பினருக்குப் பதவி இழப்பு ஏற்பட்டது என்ற அறிவிப்பினை அனுப்பி அதைப் பெற வேண்டிய சம்பவத்திற்கு ஆளாக்கப்பட்டார் என்ற குறை சொல்லப் பட்டிருக்கிறது. இதே போன்று எடுத்துச் சொல்லலாம். இவை அருப்புக்கோட்டை, நெல்லை நகரசபைகளுக்கு மட்டும் பொருந்தும் என்பதல்ல. சாதாரணமாக பல நகரசபைகளில் நடக்கும் குற்றங்கள். இவை நீக்கப்படவேண்டியவை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அப்படி தவிர்க்கப்பட வேண்டிய, நீக்கப்பட வேண்டிய குறைபாடுகள் மற்றைய நகர சபைகளில் இருந்ததும், அந்த நகரசபைகளைப் பொறுத்தவரை எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல், இந்த நகராட்சி மன்றங்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் கரங்களில் இருக்கின்றன என்கிற அடிப்படையில் செய்யப்பட்டதோ என்று எண்ணுகின்ற தன்மைகள் இருக்கின்றன என்கிற குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகின்றேன். இது ஜனநாயகத்திற்கு உகந்ததா என்று பார்க்க வேண்டும். ஜனநாயகத்தில் காரியங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு நடக்க வேண்டும். இந்தச் செயலில் ஜனநாயகப் பண்பு, இழக்கப்பட்டிருக்கிறது, மறுக்கப்பட்டிருக்கிறது, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே கலைத்தாலும், இரண்டு ஆண்டு காலத்திற்காக கலைக்க வேண்டும்? இரண்டு ஆண்டு காலத்திற்குக் கலைத்து, ஜனநாயகத்திற்குப் புறம்பாக, ஆணையர் அதிகாரத்தில் விட்டிருக்கிறார்கள். இன்னின்ன காரணங்களுக்காகக் கலைக்கப்படுகிறது என்று, ஒரு திங்கள், இரண்டு திங்கள் கலைத்து வைத்து, உடனடியாகத் தேர்தல் வைத்து, மக்கள் தீர்ப்பை அறிந்து கொண்டு காரியங்கள் செய்ய வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இரண்டு ஆண்டு காலத்திற்கு ஆணையர் ஆட்சியில் வைக்கும் நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இது கட்சிக் கண்ணோட்டத்தோடு தான் செய்யப் பட்டிருக்கிறது. மாற்றுக் கட்சியினர் செல்வாக்குப் படைத்த இடம் என்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயல் செய்யப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

இந்தித் திணிப்பை எதிர்த்து இந்த மாநிலத்தவர்கள் எண்ணத்தையும் செயலையும் கண்டு கொண்டு, முன்னாள் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு வாக்குறுதி அளித்தார்கள்; இந்தி பேசாத மாநிலத்தவர்கள் விரும்பும் வரை, ஆங்கிலம் ஆட்சிமொழியிலிருந்து நீக்கப்படமாட்டாது, ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்து வரும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதையொட்டியே சட்டமும் வரும் என்றும் குறிப்பிட்டார்கள். அவருக்குப் பின்னால் வந்த தலைமை அமைச்சர் கனம் லால் பகதூர் சாஸ்திரி அவர்களும் பாராளுமன்றத்திலும், பொதுக் கூட்டங்களிலும் வர்க்குறுதியைக் கொடுத்தார்கள். இந்த மன்றத்திலேயும் அத்தகைய வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனாலும் இன்றைக்கு இருக்கும் நிலையைப் பார்த்தால், எதிர் காலத்தில் எத்தகைய பயங்கரம் ஏற்படுமோ என்று ஐயப்பாடு கொள்ளும் நிலைதான் எல்லாத் தரப்பினருக்கும், இருக்கிறது. இன்றைக்கு இந்தி பேசாத மக்களை மதிக்காத வகையில், இந்தி ஆதிக்க வெறியர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இந்தியை ஆட்சி மொழியாக்க, ஊக்கம் கொடுக்கும் முறையில் முயற்சிகள் நாளுக்கு நாள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மாநில அரசு மக்களுடைய விருப்பத்திற்குச் செவி சாய்க்காத வகையில் திட்டங்கள் வருகின்றன. எதிர்காலத்தில் எப்படி ஆகுமோ என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. சட்டம் செய்யப்படுவதன் மூலமாகத்தான் வாக்குறுதி செயல் படுத்தப்படவேண்டும். அளிக்கப்பட்ட வாக்குறுதி, வாக்குறுதி அளவில் இல்லாமல், சட்ட வடிவம் கொள்ளும் என்று சொல்லப்பட்டது. ஒவ்வொரு பாராளு மன்றக் கூட்டத்திலும் வரும் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சென்ற கூட்டத்தில் வரும் என்று நினைத்தார்கள். இந்தக் கூட்டத்தில் வரும் என்று கருதினார்கள். ஆனால் வரவில்லை. அடுத்த கூட்டத்தில் வருமோ அல்லது அதற்கும் அப்பாலே தேர்தலுக்குப் பிறகாவது வருமோ என்று சந்தேகப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைத்தான் பத்திரிகைச் செய்திகள் காட்டுகின்றன. இந்த அச்சம் எதிர்க் கட்சிகளுக்கு மட்டுமல்ல. முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், முதல் அமைச்சரிடம் சட்டத்தைக் கொண்டுவர தமிழ்நாடு அரசு இந்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும், வாக்குறுதியைச் சட்ட வடிவில் கொண்டு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள் என்கிற செய்தி வந்து இருக்கிறது. ஆகவே, அதில் தவறியிருக்கிறது இந்த சர்க்கார். கனம் முதல் அமைச்சரும் ஆட்சி மொழி இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டபோது, அன்றைக்குச் சொன்னார்கள்: "இன்றைக்கு சட்டம் வந்தால் அது நல்ல சட்டமாக வரவேண்டும். நிரந்தரமான தீர்வாக இருக்க வேண்டும். ஆகவே, என்னைப் பொறுத்த மட்டில், சட்டம் சீக்கிரத்திலே வந்தால் நலம்தான். அதை நான் வரவேற்பேன், வற்புறுத்துவேன். ஆனால், அவசரப்பட்டு, அதனால் தவறு ஏற்பட்டுவிடக் கூடாது என்பது தான் என்னுடைய கவலை. ஆகவே, எப்படியும், இந்த அரசாங்கம் கோருகிற வகையிலே சட்டம் வரும்". மேலும் சொன்னார்கள்:



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

"என் கருத்து அரசாங்கத்தின் கருத்து, பிரதம மந்திரியின் உறுதிமொழியைச் சட்டபூர்வமாக ஆக்கவேண்டும் என்பது" என்று. ஆனால், இன்றுவரை சட்டம் வரவில்லை. ஆகவே, அங்கேயும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இங்கேயும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது நிறைவேற்றப் படாத சூழ்நிலைதான் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? பத்திரிகையில் வந்த செய்தி, இந்தி பேசும் மக்கள் சட்டம் வரவிட மாட்டார்கள், அவர்களுக்கு அஞ்சிக் கொண்டு இந்திய சர்க்கார் கொண்டு வரவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறது. இந்தி பேசும் மக்களுடைய வற்புறுத்தலுக்குப் பணிந்துபோகும் சூழ்நிலை ஏற்படாத வகையில், இந்தி பேசாத மக்களுள் மிக முக்கியமான இந்த மாநிலத்தவர்கள் அத்தனைபேரும் தெரிவித்தது போல சட்டம் வராமல் இருப்பது, எதிர்காலத்தில் அதைப் பொறுத்து எத்தகைய பயங்கரமான விளைவுகள், ஏற்படுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இந்த மாநில மக்களுடைய விருப்பத்திற்கு மாறான வகையில் சூழ்நிலை உருவாகும் நிலைமைக்கு இடம் தருகிறது என்பதை இந்த அரசு வற்புறுத்தி, வாக்குறுதியைச் சட்டமாக்கும் முயற்சியில் தவறி விட்டது. இந்தி பேசும் மக்கள் உணர்ச்சியோடு பாடுபட்டு, சட்டம் கொண்டு வராமல் இருப்பதற்கான முயற்சிகளில் எப்படி ஈடுபட்டிருக்கிறார்களோ அதே போல, இந்தி பேசாத மாநிலங்களில் மிக முக்கியமான இந்த மாநில மக்களுடைய உணர்ச்சியையும், எண்ணத்தையும் வற்புறுத்தும் வகையில் சூழ்நிலையை உருவாக்கி, அதை எடுத்துச் சொல்வதற்கு இந்த மாநில அரசு முன் வந்திருக்க வேண்டும், அப்படி முன்வரத் தவறிவிட்டது என்கிற குற்றச் சாட்டையும் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சட்டம் வருவதிலே தாமதம் ஏற்படுகிறது என்பது ஒரு விஷயம். அதன்மேல் தான் இப்பொழுது கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மந்திரிசபையின் மீது குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தம்முடைய பேச்சை முடிப்பதற்கு முன்பே ஒரு விளக்கம் தெரிவித்தால் நலம் என்று கருதுகிறேன். அதற்காகத்தான் நான் குறுக்கிடுகிறேன். இப்பொழுது உத்தேசிக்கப்படுகிற சட்டம் வரவில்லையென்றாலும் கூட, அந்தச் சட்டத்தை அப்படியே கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவர்களுடைய கட்சியின் சார்பாக, ஏற்றுக்கொள்ளுகிறாரா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் வரும் என்று வாக்குறுதி தரப்பட்டது. அந்த வாக்குறுதி அளவிற்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை நாங்கள் வற்புறுத்துகிறோம். வற்புறுத்துகிற அளவோடு நின்றுவிடுவோமா என்றால், நின்றுவிடமாட்டோம்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

வாக்குறுதி தரப்பட்ட காரணத்தால், அந்த வாக்குறுதி அளவிற்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஆகையால், இந்தியை என்றைக்கும் ஆட்சிமொழியாக ஆக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தி, இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக ஆகுமானால், தென்னக மக்களுடைய, குறிப்பாகத் தமிழக மக்களுடைய வாழ்வு, நலம் பாதிக்கப்படும். அத்தகைய கருத்து வலுப் பெறுகிற காலம் வரையில் அந்தக் கருத்துக்காக நாங்கள் தொடர்ந்து போராடிக் கொண்டுதான் இருப்போம். வாக்குறுதி ஒன்று தந்தீர்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறீர்களா? அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு என்ன? என்ற அளவோடு ஒரு 'கமா' போட்டு நிறுத்துகிறோம். "ஃபுல் ஸ்டாப்" போடும் நிலை இல்லை. தொடர்ந்து அதற்காக வற்புத்தும் நிலையில் இருப்போம் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து,

"இந்த அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாட மொழியாக ஆக்கவும், தமிழ் வகுப்புகளில் சேர மாணவர்களுக்குத் தனிச் சலுகைகளும், வசதிகளும் அளிக்கவும் 1956-ம் ஆண்டின் ஆட்சி மொழிச் சட்டத்தைச் செம்மையாகவும், விரைவாகவும் நடைமுறைக்குக் கொண்டுவரவும், தமிழை மாநிலத்தின் ஆட்சி மொழியாகப் பரவலான முறையில் நடைமுறைப் படுத்தவும் தவறிவிட்டது"

என்ற குற்றச்சாட்டை நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழை எல்லாக் கல்லூரிகளிலும் பாட மொழியாக ஆக்கவேண்டும் என்ற முயற்சி வெற்றி பெறவில்லை என்ற கருத்துக்களும் சொல்லப் பட்டன. அது இரண்டு மூன்று கல்லூரிகளில் பரீட்ச்சார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட நிலையில், மாணவர்கள் வரவில்லை என்று சொல்லப்பட்டது. இந்த ஆண்டு தந்திருக்கிற தன்மையின் அடிப் படையில், கோயமுத்தூரைப் பொறுத்த வரையில், தமிழைப்பாட மொழியாக எடுத்துப் பயிலுவதற்கு மாணவர்கள் பலர் முன் வந்திருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. இதிலே இருக்கிற அடிப்படைத்தன்மையை நாம் உள்ளபடியே உணர வேண்டும். தமிழைப் பாட மொழியாக எடுத்துப் படிக்க கல்லூரியில் அதிக மாணவர்கள் வரவில்லை, எனவே அந்த வாய்ப்பை எல்லாக் கல்லூரிகளிலும் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை என்று சமாதானம் எடுத்துச் சொல்லப் படுகிறது. தமிழை எந்த வகையில் இப்பொழுது பாட மொழியாக ஆக்க முனைந்திருக்கிறோம் என்று பார்த்தால், பொருளாதாரம், வரலாறு, நில நூல் (பூகோளம்) ஆகிய பிரிவுகளில் தமிழைப் பாடமொழியாக்கியிருக்கிறார்கள். அந்தப் பிரிவுகளை எடுத்துக்கொண்டு படிக்கலாம் என்று கூறுகிறார்கள். அந்தப் பிரிவுகளை ஆங்கிலத்தில் வைத்தாலுங்கூட, அவற்றை எடுத்துப் படிப்பதற்கு மாணவர்கள் வர மாட்டார்கள். மற்ற அறிவியல் துறைகளைவிட்டு இந்தத் துறைகளை எடுத்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்லூரியில் பார்த்தாலும் குறைவாகத்தான் இருக்கும். எந்தப் பல்கலைக் கழகத்தைப் பார்த்தாலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் சரி, சென்னைப்



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பல்கலைக் கழகத்திலும் சரி, வரலாற்றுத் துறையில் ஹானர்ஸிலில் ஒரு மாணவர், இரண்டு மாணவர்கள், ஐந்து மாணவர்கள், பத்து மாணவர்கள் என்றுதான் இருப்பார்கள். இருபது, ஐம்பது மாணவர்கள்கூட சேர்வதற்கு இடம் இருக்கிறது. பல ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், வரலாற்றுத் துறைக்கு ஒரு மாணவர், இரண்டு மாணவர்கள், ஐந்து, பத்து மாணவர்கள் தான் சேர்ந்திருக்கும் அளவிற்குக்கூட நிலைமை இருந்து இருக்கிறது. நில நூல் துறை, வரலாற்றுத் துறை, பொருளாதாரத் துறை இவற்றில் கொஞ்சம் அதிக இடம் இருக்கிறது. அவற்றை மட்டுமே தமிழாக்கிவிட்டு, மாணவர்கள் வரவில்லை என்று குறை பட்டுக்கொள்ளுவதில் பொருள் இல்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மற்ற அறிவியல் துறையில் இருக்கும் அக்கறை இந்தத் துறைகளுக்கு பொதுவாக, ஆங்கிலத்தில் வைத்தாலும் கூட, ஏற்படுவதில்லை. ஆனால், இந்தத் துறைகளில் தமிழை ஏற்படுத்தி, இப்போதே குறை இருக்கிறது என்ற முடிவிற்கு வருவதற்கில்லை. மற்றத் துறைகளிலும் தமிழைப் பரவலாக்குவதன் மூலமாக மாணவர்கள் சேருவார்கள். மாணவர்கள் சேர்ந்து படித்துவிட்டு வந்ததற்குப் பிறகு, தங்களுடைய வாழ்வுக்கு இடம் கிடைக்குமா, தங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதைப் பொருத்துத்தான், அவர்கள் தமிழ் மூலமாகக் கல்லூரிகளில் படிக்க முன்வருவார்கள். இப்பொழுது ஆங்கிலத்திலேயே முழுவதும் படித்து, பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெற்று வருகிற மாணவர்களுக்கு எத்தகைய மதிப்பு கொடுக்கிறோமோ, அத்தகைய மதிப்பு தமிழில் படித்துப் பட்டம் பெற்று வருகிறவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. எந்த வேலைக்கு மனுச் செய்துகொண்டாலும்கூட, தமிழில் பி.ஏ. படித்திருந்தாலும், தமிழில் எம்.ஏ. படித்திருந்தாலும், அவர்களை விட்டுவிட்டு, ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர்களை எடுத்துக்கொள்ளும் நிலைமை இருப்பதன் காரணமாகத்தான், மாணவர்கள் ஆங்கிலத்தை எடுத்துப் படிக்கிறார்கள். எதிர்காலத்தில் அவர்கள் தங்கள் வாழ்வுக்கு இடம் பெற முயலுவார்களே தவிர, தமிழை ஆர்வமாக எடுத்துப் படிக்கவேண்டும் என்று விரும்பமாட்டார்கள். தமிழை எடுத்துப் படித்தால் நிச்சயம் இடம் உண்டு என்ற நிலைமை ஏற்பட வேண்டுமென்றால், தமிழை ஆட்சி மொழியாக்கும் முயற்சியிலே, தமிழில் படிக்கிறவர்களை ஊக்குவிக்கும் வகையிலே நாம் அதற்காகச் சலுகை தந்துதான் தர வேண்டும். நாற்பது, ஐம்பது ஆண்டுக்காலம் கழித்து, எல்லா மக்களாலும் போற்றப்பட்டு, தமிழ் வேரூன்றும் நிலை ஏற்பட்டு, அதற்குப் பிறகு வேண்டுமானால் சலுகை இல்லாத நிலைமை ஏற்படலாம். தமிழை ஆட்சி மொழியாக்குவதோடு, அதைப் பாட மொழியாகவும் ஆக்கும் நிலை ஏற்படும் வரையில், சலுகை தந்துதான் தீரவேண்டும். உதவித் தொகை அளிப்பது மட்டுமல்லாமல், தமிழில் படித்து வருகிறவர்கள் அரசாங்க வேலைகளுக்குப் போகும்போது, முதல் சலுகை தமிழ் படித்து வருகிறவர்களுக்கு உண்டு என்ற நிலை ஏற்பட்டால்தான், மாணவர்கள் அதைப் படிக்க முன்வருவார்கள். மேற்கொண்டு, ஆட்சிமொழி தமிழ் என்று ஆக்கியிருக்கிறோம். அதிகாரிகள் தமிழில் ஆட்சியை நடத்தும் அறிவும், ஆற்றலும், பயிற்சியும் பெற்றிருந்தால்தான்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1966

ஆட்சி மொழி தமிழாக வர முடியும். அதிகாரிகள் தமிழிலே ஆர்வமுடையவர்களாக இருந்து, தமிழில் பயிற்சி பெற்று, அதற்கான தேர்வை பெற்றவர்களாயிருந்தால், ஆட்சியைத் தமிழில் நடத்துவார்கள். ஆட்சியைத் தமிழில் நடத்துவதற்கு அதிகாரிகள் தமிழ் அறிந்தவர்களாக இருக்கவேண்டும். தமிழ் அறிந்தவர்கள் அந்த வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு அரசாங்கத்தில் முதல் சலுகை உண்டு என்ற நிலையை ஏற்படுத்துவதனால், இரண்டுவித நன்மைகள் உண்டு. ஒன்று மாணவர்களைத் தமிழ் படிக்க ஊக்குவிக்கப் பயன்படும். இரண்டு தமிழை ஆட்சிமொழியாக நடைமுறைப்படுத்தப் பயன்படும். தமிழை ஆட்சிமொழியாக்கியிருக்கும் அமைப்பில், தமிழ் படித்தவர்களுக்கு முதல் சலுகை உண்டு, அரசாங்க உத்தியோகங்களில் அவர்களுக்கு முதல் இடம் உண்டு என்ற சூழ்நிலை ஏற்பட்டால், பலர் தமிழ் வகுப்பில் சேர்ந்து படிக்கவும், கல்லூரிகளில் தமிழ் வகுப்புக்களில் இடம் போதாது என்று சொல்லும் அளவிற்கும் மாணவர்கள் சேர்ந்து படிக்கும் நிலைமையைப் பார்க்கலாம். அந்தச் சலுகைகளையும், மற்றவைகளையும் செய்யத் தவறியதன் காரணமாக, அதைப் படிக்க முன்வராத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. தமிழ் எடுத்துப் படித்தால், ஆங்கிலம் படித்தவர்களுக்குள்ள பலன் ஏற்படாது என்ற சூழ்நிலையும், ஆங்கிலம் படித்த அதிகாரிகளையே வைத்துக்கொண்டு தொடர்ந்து நடத்தும் சூழ்நிலையும் இருப்பதால், தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவரவேண்டும் என்ற கொள்கை, குறிக்கோள் நிறைவேற முடியாதிருக்கிறது. நீந்தத் தெரிந்துகொண்டு தண்ணீரில் இறங்குவதா? தண்ணீரில் இறங்கி நீந்தக் கற்றுக் கொள்ளுவதா? என்ற பழமொழி ஒன்றுண்டு. நீந்தத் தெரிந்து கொண்டு தண்ணீரில் இறங்குவது என்பது சாத்தியமான ஒன்றல்ல. தண்ணீரில் இறங்கித்தான் நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலில் குறைந்த தண்ணீர் உள்ள நீர்நிலையில் இறங்கி இந்தக் கற்றுதலை வைத்துக்கொண்டு, மற்ற நீர்நிலைகளில் இறங்கி நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டும். தண்ணீரில் இறங்காமலேயே நீந்தக் கற்றுக்கொள்ள முடியாது. நீந்தத் தெரிந்து கொண்டு தண்ணீரில் இறங்குவது என்பது சாத்தியமானதொன்றல்ல. தண்ணீரில் இறங்கி நீந்தக் கற்றுக்கொள்ளுவது போல தமிழைப் பரிட்சார்த்தமாகக் கல்லூரியில் பாடமொழியாகக் கொண்டுவருவதன் மூலமாகவும், அதற்காகச் சலுகை அளிப்பதன் மூலமாகவும்தான், மாணவர்களுக்கு ஊக்கம் தர முடியும்; தமிழை ஆட்சிமொழியாக்க முடியும். அதைச் செய்ய இந்த அரசு தவறிவிட்டது. அந்தக் கல்லூரிகளில் மாணவர்கள் குறைவாக வருகிறார்கள்; மாணவர்களுக்கு ஆர்வம் இல்லை, ஆகவே அதில் சேர விருப்பம் இல்லை, அதனால் எல்லாக் கல்லூரிகளிலும் வைக்கவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். தமிழில் படித்து வருகிறவர்களுக்கு உத்தியோகத்தில் சலுகையும், இன்னும் மற்ற சலுகைகளும் அளித்தால் மாணவர்கள் ஏராளமாக முன்வருவார்கள். அதன் மூலம் இந்த நோக்கம் நிறைவேற வழி ஏற்படும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



3rd August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஒரு கருத்தை மீண்டும் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். மற்ற விவரங்களை மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூற இருக்கிறார்கள். ஒன்றை மட்டும் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆட்சி காங்கிரஸ் கட்சிக்கும், அரசுக்கும் வேறுபாடு இல்லாத வகையில் பல வகைகளிலே நடந்துகொண்டு வருகிறது என்ற குற்றச்சாட்டை நான் குறிப்பிட விரும்புகிறேன். பல வகைகளிலே ஆளும் கட்சிக்கும், அரசுக்கும் வேறுபாடு இல்லாத வகையிலேதான் இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது. எந்தத் தன்மைகள் ஏற்பட்டாலும்கூட, ஆளும் கட்சிக்குச் சலுகை ஏற்படுத்துகிற வகையிலே இந்த அரசு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. முக்கியமாக, அரிசன நல கமிட்டிகளையும், மற்றவைகளையும் அமைக்கும்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அதிகப் பிரதிநிதித்துவம் தரப்படும் அளவுக்கு இருக்கிறது. சட்ட மன்றத்தில் 138 பேர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்; அதாவது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். எதிர்க் கட்சிகளில் 61 பேர்கள் இருக்கிறார்கள். மூன்றில் ஒரு பகுதியினர் எதிர்க் கட்சியில் இருந்தாலும்கூட, அந்த அளவிற்குக் கமிட்டிகளில் இடம் அளிக்கப்பெறவில்லை. ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் நாட்டில் எதிர்க் கட்சியினருக்கும் பல வகைகளில் சலுகை அளிக்கப்படவேண்டும். அந்தச் சலுகை அளிக்காத சூழ்நிலை இன்று நாட்டில் அமைந்திருக்கிறது. சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில், முக்கிய எதிர்க் கட்சியாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஐம்பது உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும்கூட, பாதுகாப்புக் கமிட்டியில் நான் ஒருவன்தான் இடம் பெறும் அளவிற்கு நிலைமை இருக்கிறது. 97, 98 பேர்களில் நான் ஒருவனேதான் இடம் பெற்றிருக்கிறேன். பல நாட்கள் கழித்து, அடுத்தடுத்துச் சொல்லியதற்குப் பிறகு, கட்சித் தலைவர் ஒருவரும் இடம் பெறுகின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் நாட்டிலுள்ள கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கமிட்டிகளில் அதிகாரச் சார்பு அல்லாதவர்கள் நியமிக்கப்படுகிற விதத்திலேகூட, காங்கிரஸ் உறுப்பினர்களாகப் பார்த்து நியமிக்கப்படுகிறார்களே தவிர, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கும் இடம் ஏற்படுகிற சூழ்நிலை இல்லை. காங்கிரஸ் கட்சியினருக்கு இடம் அளிக்கக்கூடாது என்றுகூற நான் வரவில்லை. என்றாலும், சேலம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசினர் கல்லூரிகளிலும், சென்னையிலும் வேறு பல இடங்களிலும் உள்ள கல்லூரிகளிலும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான எந்த ஒரு கமிட்டியிலும்கூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடம் பெறவில்லை. கல்லூரி இருக்கும் அந்தந்த ஊரில் உள்ள எம்.எல்.ஏ. இடம் பெறலாம் என்ற பொதுவான நியதியையாவது மேற்கொண்டால்தான், நியாயம் இருக்கும். கல்லூரி இருக்கும் அந்தந்த இடங்களில் உள்ள சட்ட மன்ற உறுப்பினர், கல்லூரி முதல்வர், மற்றும் ஒருவர் இடம் பெறலாம் என்ற நியதியை

ஏற்படுத்திஞல், அது நியாயமாக இருக்க முடியும். புதுக்கோட்டையில் ஒரு கல்லூரி இருக்கிறது. புதுக்கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்ற உறுப்பினர் இருக்கிருர். அவர் அந்தக் கமிட்டியில் இடம் பெறவில்லை. வேருெரு சட்டமன்ற உறுப்பினர் இடம் பெற்றிருக்கிருர். தஞ்சையில் ஒரு கல்லூரி இருக்கிறது. தஞ்சையிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் இருக்கிருர். அவரும் அதில் இடம் பெறவில்லை. சென்னையைப் பொறுத்தவரையிலும், இடம் கிடைத்திருக்கிறவர்கள், அந்த இடத்தைப் பெறுவதற்குத் தகுதி படைத்தவர்கள் அல்லர் என்று நான் வாதாட விரும்பவில்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இப்படிப்பட்ட பல்வேறு கமிட்டிகளில் இடம் பெற்றிருக்கிருர்கள். சென்னை நகரத்தில் எதிர்க்கட்சியிலிருந்து நான்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், பட்டியலைப் பார்த்தால், முழுவதும் காங்கிரஸ் கட்சியினருக்கே இடம் தரும் அளவிற்கு அமைந்திருக்கிறது. ஜனநாயக அடிப்படையில் எதிர்க்கட்சிகளுக்கும் மதிப்பு அளிக்கப்பட வேண்டும். ஆகவே, அத்தனை பேர்களுடைய அபிப்பிராயங்களையும், அத்தனை பேர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று காரியங்கள் நடைபெற வேண்டும் என்ற முறை மேற்கொள்ளப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில் நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கிருர்கள். என்னைக் கூடப் போடவேண்டும் என்று நான் வற்புறுத்த முன் வரவில்லை. எல்லா இடங்களிலும் இந்த ஆண்டும் சரி காங்கிரஸ் கட்சிக்கு, காங்கிரஸ்காரர்களுக்கு ஆதிக்கியம் தேடுகின்ற அளவுக்குத்தான் அவர்களையே போட்டுக் கொள்ளுகிருர்களே தவிர, மற்றவர்களுக்கு இடம் கொடுக்கப்படாமல் இருக்கிறது.

அரசாங்கச் சார்பாக நடைபெறுகிற விழாக்களாக இருந்தாலும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள், காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள் ஆகியவர்கள்தான் கௌரவமான முறையில் பங்கெடுத்துக்கொள்ள அழைக்கப்படுகிருர்கள். அரசாங்க விழாக்களில் அமைச்சர்கள் கலந்துகொள்கிருர்கள். அரசாங்கச் சார்பாக, அரசாங்கச் செலவில் நடத்தப்பட்டு வருகிற எல்லா விழாக்களிலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், இவர்கள் மட்டும் கலந்துகொள்கிற முறையில் அழைக்கப் படுகிருர்களே தவிர, அல்லாதவர்களும் கலந்து கொள்ளுகிற முறையில் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. ஆளும் கட்சியைச் சாராதவர்களும் கலந்துகொள்கிற சூழ்நிலை அமையவில்லை என்ற தன்மையை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஜனநாயக அரசாங்கத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் அமைச்சர் பதவியைப் பெறுகின்ருர்கள். அமைச்சர்களாக அவர்கள் பதவி ஏற்றவுடன் அரசாங்கக் காரியங்களைக் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களாக நின்று செயல் படுத்த வேண்டும். அதற்காக கட்சிக் கருத்துக்களையே விட்டுவிடவேண்டும் என்று





சொல்லவில்லை. கட்சியில் கொள்கைகளைக், கோட்பாடுகளை நிறைவேற்ற அவர்கள் கடமைப்பட்டிருக்கிருர்கள். கட்சிக் கருத்துக்களின் அடிப்படையில் சட்டங்களை இயற்றக் கடமைப்பட்டிருக்கிருர்கள். ஆனால் நிர்வாகத்தை நடத்தும்போது கட்சியின் அமைச்சர்களாகத் தங்களை கருதிவிடாமல், இந்த ராஜ்யத்தில் உள்ள அத்தனை மக்களின் அமைச்சர்களாக இருந்து செயலாற்றக் கடமைப்பட்டிருக்கிருர்கள். அப்படிச். செயலாற்ற இந்த அரசு தவறிவிட்டது.

மேலும் அரசாங்க அலுவலர்கள்—என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள், போன்றவர்கள் மகாநாடு எதாவது கூட்டினாலும். அவற்றில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களையே அழைக்க அஞ்சுகிருர்கள். அமைச்சர்களையோ அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களையோ, பாராளுமன்ற உறுப்பினர்களையோ கலந்துகொள்ள அழைப்பதுதான் தங்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்கும், இல்லாவிட்டால் தங்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று அஞ்சுகிற சூழ்நிலையைத்தான் உருவாக்கியிருக்கிருர்கள். அதன் காரணமாக என்.ஜி.ஓ.-க்கள், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள், மற்ற அலுவலர்கள் மகாநாடு நடத்துகிற போதும் எதிர்க்கட்சிக்காரர்களை அழைப்பதற்கே அஞ்சுகிருர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மதிப்பு அளிக்காத சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜனநாயகம் காப்பாற்றப்படவும், முறையான செயல்முறைகள் காப்பாற்றப்படவும், மக்களுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவும், குறைபாடுகள் போக்கப்படவும், மக்கள் மன்றத்தினர் அவ்வப்போது சுட்டிக்காட்டுகிற குற்றங்களை நிவர்த்திக்கவும் இந்த அரசு தவறிவிட்டது என்பதை வற்புறுத்தி, நான் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை சபை முன்பு வைக்கிறேன். அதை நிறைவேற்றுவதன் மூலம் ஜனநாயக ஆட்சி நல்ல முறையில் தழைக்க கனம் அங்கத்தினர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. சா. கணேசன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே. எதிர்க்கட்சித் தலைவர் இந்தச் சபையில் தமிழ் நாட்டு அமைச்சரவையின்மீது கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆமோதித்து, என்னுடைய கருத்துக்களைப் புலப்படுத்த உங்கள் அனுமதியோடு முன்வருகின்றேன்.

இந்த மாநிலம். ஆட்சி. இவற்றைப் பற்றி எல்லாம் நன்றாக அறிவோம். புறந்தாலத்திலே. காந்தியடிகள் கருத்துப்படி மட்டுமின்றி, ஜனநாயக ரீதியில் ஏற்பட்ட உணர்ச்சியினாலும் மாநில சுயாட்சி—ப்ரொவின்ஷியல் அடானமி—என்று சொல்லி அதற்காக எல்லாம் போராடியவர்கள் நாங்கள் தெரியும். 1935-ஆம் ஆண்டு சட்டம் என்ற பெயரால் ஒன்று வந்தபோதும். அதிலே மாநில உரிமை இல்லாததாலும். எந்த நிலையிலும் கவர்னர் தலையிடக்கூடும் என்று ஓர் அங்கம் இருந்ததையும். அதைப் பிரயோகிப்பது இல்லை என்ற ஒரு வாக்குறுதி கொடுத்தாலன்றி ஆட்சிக்கு நாங்கள் வரமாட்டோம்,

என்று தேசபக்தர்களாகிய நாம் அன்று கூறி, அந்த வாக்குறுதியின் மீது மாநில சுயாட்சியின் அடிப்படையில் ஆட்சியை ஏற்றதும் ஆகிய இவற்றை எல்லாம் நாம் மறந்துவிடவில்லை. இது எதைக் காட்டுகிறது? அதிகாரம் ஓரிடத்தில் குவிந்துவிடுமானால் பலவித தீமைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. அதிகாரம் பரவலாக இருக்குமானால் அங்கே செம்மையானதோர் ஆட்சி நிலவும்; ஓரிடத்தில் தவறு நிகழ்ந்தாலும், அந்தத் தவறு அந்த இடத்தை மட்டும் பாதிக்குமேயன்றி சர்வ வியாபியாக எங்கும் பாதிக்கின்ற நிலைமை ஏற்படாது என்ற உண்மைகளை எல்லாம் உணர்ந்துதான் அன்று அதைத் தொடங்கினோம். ஆனால் இன்று 'கழுதை தேய்ந்து, கட்டெறும்பு ஆயிற்று' என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அதைப்போல ஆகிவிட்டது. மாநிலத்திற்கு ஓர் அமைச்சரவை என்று மிஞ்சியது தவிர, இந்த அமைச்சரவைக்கு முழுக்க முழுக்க அதிகாரம் இருக்கிறதா என்றால்—சில குறிப்பிட்டவற்றைத் தவிர—இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அன்றாட வயிற்றுப்பாட்டுக்குக் கூட மத்திய ஆட்சியை எதிர்நோக்கி இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுமானால், இது உண்மையில் சுயராஜ்யம் அல்ல என்று நான் குறிப்பிடுவேனானால் அதைத் தத்துவ ரீதியாகவும் சரி, காந்திய நெறியாகவும் சரி மறுக்கவொண்ணாது, மறுக்க முடியாது என்றே கருதுகிறேன். அடிப்படையில் நம்முடைய மாநிலத்திலே இன்று மிகமிக முக்கிய பிரச்சினையாக இருப்பது உணவுப் பிரச்சினை. இரண்டாண்டுகளுக்கு முன்னே இந்தச் சபையிலே ஒரு விதியை உணவு அமைச்சர் அவர்கள் பிரேரித்தார்கள். குறிப்பிட்ட நிலங்களில் உணவு தானியங்களைப் பயிரிடக்கூடாது என்று சொல்லி கட்டுப்படுத்துகின்ற ஒரு விதி அது. அதை அப்பொழுதே நான் மறுத்தபோது அமைச்சர் அவர்கள் பதில் இறுத்தார்கள், 'எந்த நிலத்தில் எந்தப் பயிரை இடவேண்டும் என்று சொல்வதற்கு அரசாங்கத்திற்கு உரிமையும், அதிகாரமும் வேண்டும்' என்று. அதனால் ஏற்பட்ட பலனைத்தான் இன்று பார்க்கிறோம். அந்த விதியைக்கூட இப்போது தளர்த்திவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அதனைச் செய்து, தீமையைப் பெற்று அதன் பிறகு தளர்த்துவதால் பயன் உண்டா என்று கவனிக்கவேண்டும். இது மாதிரி பல்வேறு காரியங்களில் நமது மாநில ஆட்சி வழி தவறிச் சென்று, பல இடையூறுகளை வரவேற்று துன்பம் அடைந்திருக்கிறது என்று சொல்ல வருத்தப்படுகிறேன். மன்னிக்க வேண்டும்.

இன்னொன்று. எனது ஒரு கேள்விக்குப் பதில் சொன்னபோது முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 'உணவு இல்லாது இரண்டு நாட்கள் இருக்கலாம், உடை இல்லாமல் ஒரு நிமிஷம் இருக்க முடியுமா?' என்றார்கள். ஒரு ஆடையை ஒரு வருஷம் முழுதும் தோய்த்துத் தோய்த்துக் கட்டிக்கொள்ள முடியும். ஒரு பானை சோற்றை ஒரு வருஷம் உண்டு கொண்டிருக்க முடியுமா? இன்னும் சொல்லப்போனால், ஒருவன் உடுத்துக் கழித்த ஆடையை இன்னொருவன் உடுத்திக்கொள்ள முடியும். ஒருவன் உண்டு கழித்த சோற்றை இன்னொருவனால் உண்ண முடியுமா? இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன்? சில உண்மைகளை, அடிப்படைக்



கருத்துக்களைச் சொன்னால் உடனே தங்களுடைய வாதத் திறமையைக் காட்டி அதை மறுக்கிறார்கள். அந்தத் திறமைக்குப் பணிகிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அது நல்லதல்ல பயனும் இல்லை. நானும் ஏதாவது கெட்ட எண்ணத்தோடு யார் மீதும் குற்றத்தைச் சுமத்தவில்லை. உண்மையை எடுத்துக்காட்ட வேண்டும் என்ற உணர்ச்சியிலே தான் இதைச் சொல்கிறேன். கரும்பு எதற்காக இவ்வளவு பயிரிடவேண்டும்? இங்கு உற்பத்தியாகிற கரும்பு தருகிற ஜீனி அத்தனையும் நம்முடைய தமிழ் நாட்டுக்கு மட்டும் பயன்படுகிறதா? கேட்டால் அது அந்நியச் செலாவணியைத் தேடித் தருகிறது என்பார்கள். இங்கு இருக்கிறவர்கள் உணவு இல்லாமல் திண்டாடுகிறபோது அது டாலர் தேடித் தருகிறது, ஃபாரின் காரன்ஸி தேடித்தருகிறது என்று மாயவித்தை காட்டிக்கொண்டிருந்தால் என்ன பயன்? உண்மை நிலையைப் பார்ப்போமானால் அவற்றினால் நமக்கு வெளிநாட்டில் கிடைக்கிற டாலர்களைவிட, வெளிநாடுகளில் இருந்து உணவு இறக்குமதிக்காக நாம் செலவிடுகிற டாலர்கள் எத்தனையோ மடங்கு அதிகமானதாகும். இந்த அந்நியச் செல்வாணி மூலம் நமக்குக் கிடைத்த நன்மையைவிட தீமையே பெரிது என்பதை மறுக்க முடியாதபடி சமீப காலத்திய நிகழ்ச்சிகள் நிரூபித்துவிட்டன.

இன்னொன்று. இந்த மாநிலத்தில் இருந்துதான் உணவுப் பண்டங்கள் அதிக அளவில் ஏற்றுமதி ஆகின்றன என்பதை நாம் மறந்துவிடப்படாது. சங்க காலத்தில் இருந்தே மிளகு தென்னகத்தில் இருந்துதான் ஏற்றுமதியாகி வருகிறது. ஏலம் இங்கிருந்துதான் ஏற்றுமதியாகி வருகிறது. முந்திரி இங்கிருந்துதான் ஏற்றுமதியாகி வருகிறது. இன்னும் எண்ணெய்வித்துக்கள், தேங்காய் கிட்டத்தட்ட முழுதும் தென்னகத்தில் இருந்துதான் ஏற்றுமதியாகி வருகின்றன. கொப்பரா என்று சொல்கிறார்கள். (திரு. வெ. ராமைய்யா குறுக்கிட்டார்கள்.) குறுக்கிடுகிறீர்கள். என்னவென்று கேட்டால் நீங்களே சொல்லிவிடுங்கள் என்கிறீர்கள். ஒரு ஃபாக்டரி அல்லது இரண்டு ஃபாக்டரிகளின் 11-00 a.m.
மூலம் சோப்புகளை வனஸ்பதிகளைத் தயாரித்து இந்தியா முழுவதற்கும் அனுப்புவதற்குத்தான் தேங்காயா? இங்கேயுள்ள தமிழருடைய உபயோகத்திற்குத் தேங்காய் கிடையாதா? யாரோ ஒரு மத்திய அமைச்சர் இளநீர் குடிப்பதையே விட்டு விடுங்கள் என்று புத்திமதி சொல்லியிருக்கிறார்கள். அதைக் கேட்க எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நீங்கள் சாயா குடிப்பதை நிறுத்திவிடுங்கள் என்று நான் சொல்லலாமா? சொல்வது சரியா? தேங்காய் உணவுக்குரிய ஒன்றல்லவா? தேங்காய் இல்லாமல் சட்னி கிடையாது. குருமா கிடையாது. அப்புறம் சோறும் உண்ணுகிறீர்கள் என்றும் உபதேசிக்க முன்வருவார்கள். ஆகவே இந்த அளவிலேதான் உபதேசங்கள் வந்துகொண்டு இருக்கின்றன என்று சொன்னேன். என்மேல் வருத்தப்படக்கூடாது. நெல் உற்பத்தி செய்யக்கூடிய நிலத்திலே கரும்பு உற்பத்தி செய்யச் சொல்வது நம்மை மத்திய ஆட்சி கவர்ச்சி செய்யக்கூடிய ஒன்றாக இருக்கிறது. வடநாட்டில் இருக்கக் கூடியவர்களுக்கு, தென் நாட்டிலே இருக்கக்கூடியவர்களுக்குத்தான், ஜீனி அவசியம்.

[திரு. சா. கணேசன்] [3rd August 1966

அங்கே யெல்லாம் சாம்பாரிலேயும் கூடச் சர்க்கரைபோட்டுச் சாப்பிடுவார்கள். இங்கேயும் சாப்பிடுகிறார்கள் என்கிறார்கள், ரொம்ப சந்தோஷம். அங்கே சாம்பாரில் சர்க்கரை போதவில்லை என்பார்கள். எனவே பந்திகளில் "சக்கர் டாலோ, சக்கர் டாலோ" என்ற ஒலி அதிகம் கேட்கும். அரிசிக்கு இங்கே கதி இல்லாத அளவுக்கு சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துகிறோம். சர்க்கரை உற்பத்தி செய்வதற்காக கரும்பை விளைவிக்கிறோம் என்று சொல்லி இந்த மாயையிலே அகப்பட்டுக் கொண்டு விட்டது இந்த சர்க்கார். இதனால்தான் இந்த மாநிலத்திற்கு அரிசி அல்லது அரிசியைப்போன்ற தானியங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பும் வசதியும் மிகக் குறைந்துவிட்டது. இதுவும் ஒரு காரணம்தான் பற்றாக்குறை ஏற்படுவதற்கு என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அகண்ட இந்தியா, ஒருமைப்பாடு என்றெல்லாம் ஆளுங் கணத்தவர் சொல்லிக் கொள்ளும்பொழுது, தாலுகாவுக்குத் தாலுகா, மாவட்டத்திற்கு மாவட்டம், மாநிலத்திற்கு மாநிலம் ஏன் செக்போஸ்ட்கள் வைக்க வேண்டும்? அது எதைச் செக் பண்ணுகிறது? நடமாட்டத்தைச் செக் பண்ணுகிறதா அல்லது ஒழுக்கத்தை செக் பண்ணுகிறதா என்று தெரியவில்லை. இதைப்பற்றி போன தடவைகூடச் சொன்னேன். செக்போஸ்ட்களில் லாரிக்கு 500, 1,000 என்று கொடுத்துவிட்டு ஒரு ஜில்லா பார்டரிலிருந்து வேறு ஜில்லாவுக்கோ, வெளி மாநிலங்களுக்கோ போகிறது. அப்படிப் போவதை நான் ஆட்சேபிக்கவில்லை, எல்லோரும் வாழவேண்டும். ஆனால் ஒழுங்கு தவறி, பண்பாடு தவறி போக்குவரத்து நிர்ப்பந்தத்தை உண்டாக்குவதால், உண்மையாகவே பெரும் பலன் பெற்றவர்கள் செக் போஸ்ட்களில் இருக்கிறவர்கள்தான், அவர்கள்தான் இன்றைக்கு லட்சாதிபதிகளாகிக்கொண்டு வருகிறார்கள் என்பதை இருதய சுத்தியோடு பார்க்கிறவர்கள் மறுக்கமாட்டார்கள். ஆயிரம் இங்கே கொடுத்து அரிசியையோ அல்லது நெல்லையோ கொண்டுபோய் அதற்குமேலே அவன் விற்க நினைக்கிறான். அதோடுகூட தப்பாகக் கொண்டுவந்தால் பாதுகாக்க நினைத்தாலும் கூட அதைக் காயப்போடமுடியாமல் பதுக்கிவைப்பதால் அது மிகமிகக் கெட்டுப்போகிறது. ஆகவே அதற்கும் சேர்த்து அவன் கொடுத்தவிலைக்கு மேல் விற்கவேண்டுமென்று அவன் நினைக்கிறான். இந்தமாதிரிக் காரணங்களால்தான் விலை ஏறிக்கொண்டே போகிறது. அரிசியின் விலை ஏறத்தொடங்கினால் மற்றப் பொருள்களின் விலையும் ஏறத் தொடங்கிவிடுகிறது. இதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறோம். இதை நிவர்த்திக்க மறுக்கிறது இந்த ஆட்சி. இந்தத் தீமையை வேண்டுமென்றே செய்யவேண்டுமென்று எண்ணுகிறார்கள் என்று நான் எண்ணவில்லை. இதைச் சீராக்கவோ அல்லது தவறைத் திருத்தவோ, இந்த ஆட்சிக்குத் துணிச்சல் இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. மேலே இருக்கிறவர்கள் ரேஷன் என்று சொன்னால் "சரி சாமி!" என்று கொள்கிறார்கள். ஆட்சியில் அமர்ந்துள்ளவர்கள் அவர்கள் சொல்வதைச் சரியா இல்லையா என்று சிந்திப்பதுகூட இல்லை. வரிகளை எடுத்துக்கொண்டால், எல்லா நேர்முக வரிகளும் ஒரு



3rd August 1966] [திரு. சா. கணேசன்]

முறை கூட பாக்கியில்லாமல் விதிக்கப்பட்டாகிவிட்டது. எல்லா நேர்முக வரிகளும் சாத்தியமான அளவு உச்ச நிலைமைக்குப் போய் விட்டன என்று இந்தியாவில் உள்ள எல்லாப் பொருளாதார நிபுணர்களும் சொல்லிவிட்டனர். இனிமேல் நேர்முகம் இல்லாத அதாவது இன்டைரக்ட் டாக்ஸஸ் தான் போடமுடியும், அதாவது தீப்பெட்டி, மண்ணெண்ணெய் போன்றவற்றின்மீது போட்டால் அவற்றின் விலை ஏறிக்கொண்டேதான் போகும். மிக இனிமையாக பொருளாதார அமைச்சர் ரூபாயினுடைய மதிப்புக் குறைப்பு அன்னிய நாட்டு வாணிபத்தைப் பாதிக்குமேயொழிய, உள்நாட்டு வாணிபத்திலே தலையிடாது என்று சம்பிரதாயத்திற்குச் சொன்னார்களே, சொல்கிறார்களேயன்றி, ரூபாயின் மதிப்புக் குறைந்த நிமிஷமே விலைகள் அதிகரித்துவிட்டன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ரேடியோ பற்றிச் சொன்னார்கள். அது ஒரு கட்சி. கிராமப் பிராந்தியங்களில் பார்த்தால், நான் சென்னைக்கு வரும்பொழுது கூட வேண்டுமென்றே காரை நிறுத்தி விசாரித்தேன், அச்சரப்பாக்கம் என்ற இடத்தில் கோவாப்பரேடிவ் கோழிப்பண்ணை என்று நினைக்கிறேன், அங்கே ஒரு டேபிள் போட்டு அதன்முன் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் முட்டை ஒன்று 22 பைசா வாங்கு, வாங்கு என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள், எனக்குப் பின்னால் வந்தவர்கள் 20, 30 பேர்கள் காரை நிறுத்தி அவற்றை வாங்கிக் கொண்டு போனார்கள். அங்கே 22 பைசா என்று விற்கப்படுகிறது. ரேடியோவில் 25 பைசா ஒரு முட்டை என்று சொன்னால் என்ன ஆகும்? அவர்களும் 25 பைசா என்று விற்கிறார்கள். எங்கள் பக்கத்தில் இப்பொழுது 25 பைசா ஆகிவிட்டது. எங்கள் வீட்டிற்கு நான் தினமும் ஒரு தேங்காய் வாங்குகிறேன், அதற்கு 25 பைசா கொடுத்தோம், இப்பொழுது ரேடியோவில் அதன் விலை 35 காசு என்று சொன்னால் அங்கே அவனும் விலையை ஏற்றிவிட்டான். ரேடியோவில் சொன்னால் ரேடியோ ஸ்டேஷனில் போய் வாங்கிக்கொள் என்று சென்னையில் சொல்கிறார்கள். வெளியூர்களில் விலையை ஏற்றுபவர்களோ என்றால், சர்க்கார் ரேடியோவில் சொன்ன விலை தான் என்று கூட்டி விற்கிறார்கள். நிலைநாட்ட முடியாத ஒன்றைச் சொல்லிவிடுவது என்பது சர்க்காரின் தகுதிக்கு உகந்தது அல்ல, அது சர்க்கார், அல்லது ஆட்சி அல்லது அரசு என்பதற்கு ஏற்புடையதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரி ஏய்ப்பு என்பது நம்முடைய நாட்டிற்கு ஒரு சாபம என்று கருதுகிறேன். நம்முடைய நாட்டிலே இருக்கிற சகோதரன், அல்லது சகோதரி ஆட்சிக்குக் கொடுக்கவேண்டிய வரியை ஏய்க்கவேண்டுமென்று எண்ணுவது பாவம். அதை உணரும்போது அத்துடன் ஏய்க்கவேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதைத்தான் சிந்திக்கவேண்டும். வரி என்பது எந்தத் தொழிலுக்கு கொடுக்கிறோமோ, அத்தொழிலுக்கு ஆக்கத்தைக் கொடுக்கின்றதாக இருக்கவேண்டும். அதை வேண்டுமென்றே ஏய்க்கிறானா என்று ஆராய வேண்டும். அப்படி ஒருகால் ஏய்ப்பானால், அவனுக்குக் கடுந் தண்டனை அல்ல, கொடுந் தண்டனை கூட உறுதி என்று அமைத்துவிட வேண்டும். அப்படியில்லாமல் இத்தனை சதவீத வரி விதித்தால்தான் இத்தனை

சதவிதமாவது வசூலாகும் என்று சகட்டுமேனிக்குப் பார்ப்பது நேர்மையாகாது. எந்த எந்த வழிகளில் எல்லாம் வரி ஏய்க்கப் படுகிறது என்றால், சட்ட ரீதியாக ஏய்ப்பது ஒன்று, சட்டத்திற்குள்ளே, அகப்பட்டுக்கொண்டுவிடமுடியாதபடி பித்தலாட்டம் செய்வது ஒன்று, சட்டத்தையே மீறிச் செய்கின்ற பித்தலாட்டம் ஒன்று ஆகிய மூன்று வழிகளிலே வரியை ஏமாற்றுகிறார்கள். இவ்வளவு வரிகள் ஏறிய பிறகு, அதனாலேதான் இந்தப் பதினைந்து இருபது வருஷங்களுக்குள்ளே ஒவ்வொரு தொழிற்சாலையையும் பார்த்தால், சரிடபிள் டிரஸ்ட் ஒன்று அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. எப்படி ஏற்பட்டது இந்த அற உணர்வு? இதற்கு முன்னால் தமிழ்நாட்டிலே இப்படித் தோன்றவில்லை. இப்பொழுது மட்டும் ஒரு தொழிற்சாலை பாக்கியில்லாமல் எல்லாத் தொழிற்சாலைகளிலும் சரிடபிள் டிரஸ்ட் தோன்றியிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் என்ன? வரி ஏய்ப்புக்கு இத்தகைய டிரஸ்டுகளும் உதவுகின்றன. சாரிடிக்கு என்று ஒதுக்குவதற்கு சட்ட ரீதியாகச் சில வாய்ப்புகளும், வசதிகளும் உண்டு. அதன் மூலம் சாரிடிக்கு என்று முதலில் ஒதுக்கி விட்டுப் பிறகு சாரிடியில் இருந்து தாங்கள் கபளீகரம் செய்யலாம். எல்லோரும் அப்படி என்று சொல்லவில்லை; இப்படிச் சிலர் அல்லது பலர். இதன் நோக்கம் என்ன என்பதைப் புள்ளி விவரம் காட்டுகிறது. இந்த சாரிடிகள் தற்போது பல நூற்றுக் கணக்கில் வளர்ந்து வருகின்றன. இந்த 20 ஆண்டுகளாக மட்டுந்தான் ஒரு சாரிடி பண்ட் அல்லது டிரஸ்ட் அமைப்பது என்ற நிலை இருக்கிறது. நான் அவர்களைக் குற்றம் சொல்லவில்லை இவ்வளவு அவக்கேட்டிற்கும் காரணம் வரிச் சுமைதான். இந்த மாதிரியான நிலைமையை உண்டாக்குவது தவறு. அரசுக்கு எவ்வளவு பணம் நஷ்டம் வந்தாலும் சரி, அரசே கவிழ்ந்து விடும் என்றாலும் சரி; அதனால் தீமை இல்லை. ஆனால் மக்களுடைய ஒழுக்கம் தவறி விடுமானால், அரசு மட்டுமல்ல, மனித குலமே சரிந்து விடும். ஒழுக்கக் குறைவு ஏற்படாமல் இருக்க ஆட்சி எந்தக் கஷ்டத்தை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளத் தயங்கக்கூடாது. வரியைச் செம்மையானதாக, ஏய்க்க முடியாததாக, தாங்கக் கூடிய அளவுக்கு விதித்து, அதற்கு மேலே சுயநலத்தின் காரணமாக யாராவது ஏய்ப்பார்களானால், விதியை மீறுவார்களானால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவும் வழிவகை செய்யவேண்டும். அதிலேயும் ஆட்சி தவறி விட்டது.

இன்னொரு வகையிலும் நஷ்டம். இவ்வளவு வரி போட்டுக் காரணம் என்ன? பல்வேறு துறைகளையும் ஆட்சி தானே எடுத்து நிர்வகிக்க விரும்புகிறது. கடவுளே வந்தாலும் அத்தனை துறைகளையும், தொழில்களையும் எடுத்து நிர்வகிக்க முடியாது. ஆண்டவனுக்கேகூட அது முடியாது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. ஆட்சி என்றால் வரியைச் செம்மையாக வசூலிக்க வேண்டும்; அதைப் பயன்படும் வழியில் செலவு செய்யவேண்டும். ஆட்சியே அனைத்தையும் எடுத்துக்கொண்டு விட்டதால் என்ன ஆயிற்று? உத்தியோகஸ்தர்கள் பட்டாளம் கிட்டத்தட்ட 10 மடங்குக்கு மேல் ஏறிவிட்டது. படித்தவர்கள், படிப்பவர்கள் அவ்வளவு பேரும் உத்தியோகத்திற்கு வரவே நினைக்கிறார்கள்.





ஒரு வழியில் கஷ்டம் இருந்தாலும், ஒரு வழியில் லாபம். பொறுப்பின்றிப் பயன் கிடைக்கிறது. நேரடியாகத் தொழில் செய்தால் அவரவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆனால் இதிலே யாருக்கும் பொறுப்பு இல்லை. லாப நஷ்டத்தைப் பற்றிக் கவலை இல்லை. ஏதோ குறிப்பிட்ட சம்பளம் கிடைத்து விடுகிறது. எப்படியோ நம் பாட்டை ஓட்டிவிட்டுப் போகலாம் என்று எண்ணுகிறார்கள். இப்படி அரசாங்கம் தொழில்களை எடுத்ததால் லாபம் இருக்கிறதா? அன்றி நஷ்டம் இல்லாமலாவது இருக்கிறதா? சர்க்கார் துறைத் தொழில்கள் முழுவதும் என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது—நஷ்டந்தான் வருகிறது. எதை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள், லாபம் எங்கே வந்திருக்கிறது? பால் பண்ணையை எடுத்துக் கொண்டால் நான்கு ஆண்டில் 1½ கோடி ரூபாய் நஷ்டம். அதைப் பற்றிக் கேட்டால் பால் பண்ணையை லாபத்திற்காக வைக்கவில்லை; பிரசாரத்திற்காக வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். முதலில் வயிற்றுப்பாட்டுக்குக் கொடுத்து விட்டுப் பிறகு பிரசாரம் பண்ணுங்கள். வெறுமனே பிரசாரம் பண்ணிவிட்டு பால் கிடைக்காமல் சாகடிக்க விடுவதா? (டாக்டர் பா. நடராஜன்: நல்ல பால் கிடைக்கிறது.) பொருளாதார நிபுணர் அவர்கள் சொல்கிறார்கள் நல்ல பால் கிடைப்பதாக! எங்கே கிடைக்கிறது? வெறும் புளித்த பால்தான் கிடைக்கிறது. இவ்வளவு தீமை, இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்ட பிறகும் கூட அதை மாற்றியமைக்க ஆட்சிக்கு மனம் துணியவில்லை. இந்த ஆட்சியை நான் பாராட்டுவேனா? அதற்காகப் பழிக்கமாட்டேன்; உங்கள் மீது நம்பிக்கை இல்லையென்று கண்ணியமாகச் சொல்வேன்; சொல்லத்தான் நிற்கிறேன். சொல்லவும் செய்கிறேன்.

அதுமட்டுமல்ல, நாங்கள் திட்டத்தை எதிர்க்கிறோம் என்று சொல்கிறார்கள். திட்டம் எதற்கும் தேவையாக இருக்கிறது. வீட்டில் சோறு சாப்பிட வேண்டுமென்றாலும், உழக்கு அரிசிச் சோற்றுக்கு இரண்டு உழக்கோ, மூன்று உழக்கோ தண்ணீர் வைக்க வேண்டுமென்ற திட்டம் வேண்டும். எட்டு பானைத் தண்ணீரிலே எட்டு அரிசியைப் போட்டுச் சமைத்து விட முடியாது. எதற்கும் திட்டம் வேண்டுமென்பதை மறுக்கவில்லை. திட்டம் செம்மையாக இருக்க வேண்டும்; பயனுடையதாக இருக்க வேண்டும்; லாபம் தரத்தக்கதாக இருக்க வேண்டும்; தீமை பயக்காததாக இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கத்தை சிதைப்பதாக இருக்கக்கூடாது. திட்டம் போடுங்கள் போட்ட திட்டம் பலன் அளித்ததா என்று ஆராய வேண்டாமா? பத்து அறிஞர்களைக் கூட்டி—கட்சி வேண்டாம்; கட்சிப் பிரதிநிதித்துவம் வேண்டாம்—தகுதியுள்ளவர்களை நியமித்து ஆலோசனை பண்ணவேண்டாமா? லாப நஷ்டம் என்ன; பலன் என்ன; நன்மை தீமை என்ன, ஒழுங்கீனங்கள் இருக்கின்றனவா என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து நன்மையே என்று தீர்ப்புக் கிடைத்தபின் மேற்கொண்டும் திட்டத்தைச் செயலாற்ற முனைந்தால் நான் தலை வணங்கி, திட்டத்திற்குத் தொண்டனாகிவிட்டு சம்பளமின்றிப் பணி செய்யவும் காத்திருக்கிறேன்.

இதைச் சொன்னால், திட்டத்தைப் பற்றி விவாதித்திருக்கிறோம்; ரிப்போர்ட் கொடுத்திருக்கிறோம் என்று கூறுவார்கள். ரிப்போர்ட் யார் கொடுப்பது? நானே கணக்கெழுதி, நான் எழுதிய கணக்கை நானே ஆடிட் செய்து, நானே எத்தனை வருமானம் வருகிறது என்று சொல்லிவிட்டால் போதுமா? நான் எழுதிய கணக்கைப் பிறிதொருவன் கூட்டிப் பார்த்துக் கணிக்க, தணிக்கை அதிகாரி சரியாக இருக்கிறது என்று சொல்லவேண்டும். அப்படி யின்றி நெறி பிறழ்ந்தன்றோ செயல்படுகிறது அரசாங்கம்.

இனி உணவு விஷயத்தைப் பற்றிச் சொல்லவேண்டும். சர்க்கார் கொள்முதல் செய்கிறது. அவ்வாறு கொள்முதல் செய்த வற்றைக் கிடங்குகளில் கட்டி வைக்கிறது. தனிப்பட்டவனிடம் அந்தத் தானியம் இருந்தால், காயப் போட்டு அவ்வப்போது திறந்து பார்த்து மக்கிப்போகாமல் அந்தடிக்காமல் பார்த்துக் கொள்வான். சிமெண்ட் கட்டடத்திற்குள் போட்டுப் பூட்டி வைத்து விட்டுப் பல மாதங்களுக்குப் பிறகு திறந்தால், அரிசி மக்கிப் போகாமல் எப்படி இருக்கும்? இவ்வாறு கெட்டுப் போவதைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா? யாராய் இருந்தாலும், இதைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. தமிழ் நாட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'கிழவியைப் பாட்டி என்று சொல்லக் கேட்கவா வேண்டும்?' சிமெண்ட் கட்டடத்திற்குள் பல நாட்கள் பூட்டிப் பிறகு திறந்தால், எப்படி இருக்கும்? (குறுக்கீடு) 'கிழவனைப் பாட்டன் என்று சொல்லக் கேட்கவா வேண்டும்?' என்று வேண்டுமானால் மாற்றிச் சொல்லுங்கள். எனக்குத் தாய்மார்களிடத்திலே கோபம் ஏதுவும் இல்லை. இரண்டும் ஒன்றுதான். தமிழ் நாட்டில் வழங்கு கின்ற பழமொழியைச் சொன்னேன். இந்த மாதிரி சிமெண்ட் அறைக்குள் பல நாட்கள் பூட்டி வைத்து விட்டு பிறகு அதைக் கொடுக்கிறீர்கள். இதை வியாபாரியே நேரடியாகச் செய்தால், மக்களுக்கு உணவுப்பண்டம் நல்ல முறையிலும் கிடைக்கும்; அரசாங்கத்திற்கு வரியும் வரும். இப்போது இரண்டும் போயிற்று. கொள்முதல் செய்கிற பிற மாநிலங்களிலிருந்தும் சிலவகைப் பயறு, தானியங்களை அரசாங்கம் கொள்முதல் செய்கிறது. கடலை போன்றவற்றைக் கொள்முதல் செய்கிறது. சாதாரணமாக ஒருவன் அதை நான்கு ரூபாய், எட்டு ரூபாய் லாபத்திற்கு விற்றால் அவனைக் கொள்ளை லாபக்காரன் என்று வுறுவார்கள். ஆட்சி எத்தனை சதவிகிதம் அதிகமாகப் போட்டு விற்கிறது? நெல்லைக் கொள்முதல் செய்து மில்லுக்குக் கொடுக்கும்போது, நெல் விலைக்கு மேலே எவ்வளவு கஜானாவில் கட்டவேண்டுமென்று சொல்கிறது? அதனுடைய விகிதாசாரம் என்ன? கடலை என்ன விகிதாசாரத்தில் கொள்முதல் செய்யப்படுகிறது? என்ன விகிதாசாரத்தில் மொத்த விற்பனையாளர்களுக்கு விற்கப்படுகிறது? சுமார் 17 சதவிகிதம் மேலே வைத்து விற்கப்படுகிறது. இது விலைவாசியை ஏற்றாமல் என்ன பண்ணும்? அரசாங்கமே வாங்கி விற்கிற தொழிலிலே 17 சதவிகிதத்திற்கு மேல் விலை வைக்கத் தொடங்கினால் தனிப் பட்டவன் என்ன செய்வான்? தனிப்பட்டவன் வரி வேறு கட்ட வேண்டும். அரசாங்கத்திற்கு அதெல்லாம் ஒன்றும் கிடையாது.





இப்படியெல்லாம் செய்வதால்தான் விலைவாசி ஏறுகிறது, உணவுப் பஞ்சமும் வருகிறது. இப்படிச் செய்யும் அரசின் மீது நம்பிக்கை யில்லை என்று எப்படிச் சொல்லாமலிருக்கமுடியும்?

எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, தேர்தலுக்கு ஆறு மாதத் திற்கு முன்பு ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று சொன்னால் ஏதோ காரணங்கள், உள் நோக்கங்கள் கற்பிக்கத் தொடங்கு கிறார்கள். பிரத்தியட்சமாக இன்று பஞ்சாப் நமக்கு வழி காட்டு கிறது. எந்தக் காரணத்தாலோ இன்று அங்கு பிரசிடெண்ட் ஆட்சி வந்து விட்டது. பல மோசம், நாசம் செய்தவர்களை எல்லாம் கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யார் என்று பார்த்தால் நமக்குத் தெரியும். எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரியும். இவ்வளவு மகா மோசங்கள் செய்பவர்களுக்கு இங்கும் குறைவு இல்லை. பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்றால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இவர்களை எல்லாம் ஏன் பிடிக்கவில்லை, ஏன் தண்டிக்கவில்லை? எத்தனை காண்ட்ராக்டர்கள் எத்தனை அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள்? கிழக்கு இராமநாதபுரத்தில் ஒரு பெரிய காங்கிரஸ்காரர் காண்ட்ராக்டர். அவர் செய்த பணியின் அருமையைச் சிறிது பார்ப்போம்.

அதைப் போய் பார்த்த எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர் இது தவறு, நிறுத்து என்று தடை செய்து விட்டு வருகிறார்கள். மூன்றாம் நாள் காலையில் அவரிடம் சென்று என்னைத் தெரியாதா என்று பயமுறுத்துகிறார் அவர். அதே மண் தளத்தின் மீது பாலம் மறுபடியும் எழும்பிவிடுகிறது. பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. அவர் ஆளும் கட்சிக்குரியவர். பொறுப்பேற்றுக் கொண்டுதான் பேசுகிறேன், நிரூபிக்க. இந்தமாதிரி தப்புத் தவறுகள் செய்பவர்கள் யாராகயிருந்தாலும் நமக்கென்ன? தேசம் பெரிதா, எனக்கு வேண்டியவர், எனக்கு உறவு அல்லது ஒட்டு என்று பார்ப்பது சரியா? இதைத்தான் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். ஆட்சியில் இருப்பவர்கள், ஒரு கட்சிக்காரர்கள் அதை நான் எதிர்க்கவில்லை. அது உண்மையான ஜனநாயகம்தான். அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதற்கு அவர்கள் பெருமதிப்பு கொடுக்கவேண்டும். அதைப் பின்பற்றவும் வேண்டும். ஆட்சியில் இருக்கிற வரையில் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை நிறைவேற்ற இவர்கள் தயாராக இருக்கவேண்டுமே அன்றி, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என்பதை அவர்கள் மறந்து விட வேண்டும். சபாநாயகர் அவர்கள் மட்டுமல்ல, ஆளுவோரும் கூடத்தான். கட்சிக்கு கொள்கைகளை வகுப்பதோடு சரி, அதை ஆட்சி ரூபமாக ஏற்று நடத்தும்போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சகோதரர்கள் அல்லது சகோதரிகளுக்கு மட்டும் ஆட்சி நடைபெறவில்லை. இந்தியா அல்லது தமிழகம் முழுவதற்கும் ஆட்சி புரிகிறவர்கள். அவர்களுக்கு மக்களின் ஆட்சியாளர்கள் என்று பெயரே அன்றி காங்கிரஸ்காரர்களின் ஆட்சியாளர்கள் என்பது பெயர் அல்ல. நீங்கள் மாநிலத்தின் ஆட்சியாளர்கள். ஆகவே மாநிலத்தில் உள்ள எல்லோருக்கும் நீங்கள் உரியவர்கள்.

எல்லோருடைய மதிப்பிற்கும், பாராட்டுக்கும் உரியவர்கள். அதே போல் கண்டனத்திற்கும் உரியவர்கள். இதை மனத்திலே கொள்ள வேண்டும் என்று சபாநாயகர் அவர்களே! உங்கள் மூலம் அவர்கட்குச் சொல்லுகிறேன். கொள்கைகளை வகுக்கிற வரையில் கட்சியாளர்களாக இருக்கலாம் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட பின்னர் ஆட்சியாளர்களாக இருக்க வேண்டுமேயன்றி கட்சிக்காரர்களாக செயல்படுவது செம்மையாகாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேர்தலுக்கு முன் அமைச்சரவை ராஜிநாமா செய்து விட்டால் சிரமங்கள் ஒன்றும் வராது. எத்தனையோ அதிகாரிகள் நீண்ட நாட்களாக நேர்மையுடன் பழகியவர்கள். சில குறிப்பிட்ட அமைச்சர்கள் ஆங்காங்கு சென்று இன்னின்னது செய்யவேண்டும், இப்படி இப்படிச் செய்யவேண்டும், இன்னார் இன்னாருக்கு எதுவும் செய்ய வேண்டாம் என்றெல்லாம் அதிகாரிகளிடம் சொல்வதாகச் செய்தி வருகிறது. இதை பலர் நிரூபிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அது எனக்குத் தெரியாது, ஆகவே அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை நான் நம்புகிறேன். ஒன்றுமில்லையானால், பொய்யானதொரு குற்றச்சாட்டு வர மாட்டாதல்லவா? இதை உணர வேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு நிறுவனங்கள். கிட்டத்தட்ட 99 சதவிகிதம் முழுக்க முழுக்க மோசடி செய்கின்றன. அதற்கு பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் நிரூபிக்க. கோவாப்பரேஷன் மேல் எனக்குக் கோபம் இல்லை, அதில் இருக்கிறவர்கள் பெயரிலும் எனக்குக் கோபம் இல்லை. ஒரு நாள் பத்திரிகையிலாவது இந்தக் கூட்டுறவு ஸ்டோர் அல்லது அந்தக் கூட்டுறவு சொசைட்டி அல்லது அந்தப் பண்ணை அல்லது இந்த வங்கி என்று ஏதாவது ஒன்றின் மீது வழக்கு தொடுக்கிற கதை வராமல் இல்லை. காரணம் என்ன? கோவாப்பரேஷனில் சம்பந்தப்பட்டிருக்கிற கோவாப்பரேட்டர்களுக்கு பொறுப்பில்லை, உரிமை உண்டு. கடமை இல்லை, உரிமை உண்டு. ஐந்து ரூபாய் ஷேர் காப்பிட்டல் கொடுத்து விட்டு ஐந்து லட்சம் ரூபாயை அவர்கள் கையாளலாம், கையாடலாம் என்றல்ல கையாளலாம். அவர்களுக்கு நஷ்டம் வந்தால் எனக்குக் கவலையில்லை. ஆயிரம் ரூபாய் ஷேர் காப்பிட்டல் உள்ள சொஸைட்டிக்கு சர்க்கார் லட்சம் ரூபாய் கொடுக்கத் தொடங்குகிறது. அதனால் தான் இந்த தீமை எல்லாம். அவர்கள் ஷேர் காப்பிட்டல் எவ்வளவு இருக்கிறதோ, அந்த அளவிற்கு பாங்கில் கடன் வாங்கிக் கொள்ளட்டுமே. கோவாப்பரேஷன் என்று இவ்வளவு வாய்ப்புக்கள், வசதிகள், சலுகைகள் கொடுப்பதின் காரணமாக சர்க்கார் மக்களிடமிருந்து வாங்குகிற வரிப்பணம் கோவாப்பரேஷன் என்ற பெயரால் சிலர் அல்லது பலர் ஏப்பம்விட்டு விட்டுப் போகவா உதவவேண்டும்? இப்படிச் சொன்னால் கோவாப்பரேஷன் அல்லது இத்திட்டத்தின் மீது எங்களுக்கு கோபம் என்பார்கள். எந்தத் திட்டமும் புனிதமான முறையில்தான் தோற்றுவிக்கப்படுகிறது. தொடக்க எண்ணத்தில் குறையே இல்லை. கரையான் புற்றெடுக்கிறது, கருநாகம் குடி புகுகிறது என்ற நிலைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டங்களை தகர்த்தெறிய





தாட்சண்ணியம் அல்லது தயக்கம் காட்டுவானேன்? ஆக இதிலும் தக்க முறையில் செயல்படவில்லை இந்த ஆட்சி என்பதும் என் குற்றச்சாட்டு.

பின்னர், தங்கப் பத்திர வசூல். இது எல்லா அரசாங்கச் சிப்பந்திகளையுமே ஒழுங்கீனமாக நடக்கச் செய்கிறது. இதை நெஞ்சுள்ள, மனசாட்சியுள்ள யாரும் மறுக்க மாட்டார்கள். தாசில்தார் வருகிறார் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கூடவே என்னைப் போல் ஒன்றிரு எம்.எல்.ஏ. அல்லது எம்.எல்.சி அல்லது ஒரு பொதுஜன ஊழியர் வருகிறார். பக்கத்தில் தங்க ப்ரோக்கரும் கூட வருகிறார். அவர் ஆசாரியார். நீங்கள் ஐந்து பவுன் கொடுங்கள் என்று கேட்கிறார், ஒருவரைப் பார்த்து. அவரோ, என்னிடம் பவுன் இல்லை என்று சொல்கிறார். 500 ரூபாய் கொடுங்கள், சுப்பையா ஆசாரியாரே ஐந்து பவுன் வாங்கி வாரும் என்று சொல்கிறார்கள். அப்படி வாங்கி வந்து பத்திரத்திற்காக அதைக் கொடுக்கிறார்கள். இது ப்ளாக் மார்க்கெட்டா இல்லையா? இப்படி அதிகாரி பொது ஜனப் பிரதிநிதி, பொது ஜன ஊழியர், வாணிபம் சம்பந்தப்பட்ட தரகர் இவ்வளவு பேர்களும் கடைவீதிகளில் பகிரங்கமாக இந்தத்தொழிலை செய்ய அனுமதித்தோம் என்றால் இது செம்மையா, இது ஆட்சிக்கு அழகா என்று கேட்கிறேன். ஆகவே இந்த ஆட்சி தன் கடமையை உதாசீனப்படுத்தி விட்டது என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன்.

மந்திரிகள் கட்சிப் பிரசாரம் செய்ய அல்லது கட்சித் தேர்தலுக்கு நிதி சேர்க்க செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் நேர்மையும் ஒழுங்கும் பட்டுப் போய்விடுகின்றன. இத் தீமையை முதன் முதல் களைந்தெறிந்த ஒருவரை நான் நெஞ்சாறப் பாராட்டுகிறேன். முதலில் நமக்குத் தெரிந்த வரையில் இப்படிப்பட்ட நல்ல வழியைக் காட்டியவர் கேரளா முதல் அமைச்சராக இருந்த திரு. நம்பூதிரிபாட். அங்கு ஒரு உபதேர்தல் நடந்தது. "நாங்கள் யாரும் அங்கு தலை வைத்துப் படுக்கமாட்டோம்" என்று சொல்லி அப்பகுதிக்குத் தேர்தல் காலம் முழுவதும் செல்லாமல் தலைநகரிலிருந்தே ஆட்சி நடத்தி வந்தார்கள். அவர்கள் ஒரு கம்யூனிஸ்ட். அவர்கள் கொள்கைகளை நான் ஒப்புக் கொள்கின்றேனோ, மறுக்கிறேனோ அது வேறு விஷயம். நல்லது செய்பவர்களைப் பாராட்டுவது என் கடமை. அந்த நிலையில் கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பவர்கள் காட்டிய வழியைக் கூட காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் பின்பற்ற முன்வரவில்லை என்று சொன்னால் இவர்களைப்பற்றி நான் என்ன சொல்வது? அவ்வளவுதான். ஊர்தோறும் போய் அதைச் செய், இதைச் செய் என்று எச்சரிக்கை கொடுத்து தேர்தல் அடிப்படையில் திட்டங்களை, அதற்கு வேண்டிய நெறிமுறைகளை அல்லது நெறிமுறைகளுக்கு மாறுபட்டவைகளை எல்லாம் அமைச்சர்கள் செய்து வருகிறார்கள் என்பது எங்கும் பகிரங்கமான புகாராக இருந்து வருகிறது. இதை எப்படி நான் சரி என்று கூறமுடியும்? திரு. காமராஜ் அவர்கள் சேவையை அவர்கள் திறமையை நான் குறைக்கவில்லை, குறைப்பவனும் அல்ல.

அவர்களுக்குத் திறமையிருக்கிறது, அறிவு இருக்கிறது. ஆனால் அவர் தேசத்தின் ஒரு பெரிய கட்சியின் தலைவர். அவருடன் கூட ஒரு அரசாங்கத்தின் மந்திரியாக இருப்பவர் கூடச் செல்கிறார். இங்கு பல்வேறு விஷயங்கள் வருகின்றன. இங்கு இந்தக் கூட்டம் நடந்துகொண்டு இருக்கிறது. இந்தக் கூட்டத்திற்கு அவர்களால் இருக்க முடியவில்லை. வெளிநாடுகளுக்கு அவருடன் சென்றிருக்கிறார்கள். மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்து விட்டோ அல்லது தனிப்பட்ட முறையில் ஸ்ரீமான் ஆர். வெங்கட்டராமன் என்ற ரீதியில் அவர்கள் போனால் ஆட்சேபமில்லை. ஒரு ஆட்சிக் குழுவில், ஆளும் கணத்தில் ஒருவராக இருந்துகொண்டே அவருடன் கூடச் செல்வது என்றால்—செலவு—இலவு என்ற சின்னப்புத்தியில் நான் போகவில்லை, அதைப்பற்றிக் / கவலையில்லை—அது ஜனநாயகமா. ரூபாய், அணா, பைசாக் கணக்கில் நான் பேசவில்லை. இந்த அமைச்சரவையிலுள்ள ஓர் அமைச்சர் ஒரு கட்சித் தலைவரின் ஆலோசகராகவோ அல்லது துணைவராகவோ இப்படிச் செல்வது நியாயமா? அப்படிப் போனது ஜனநாயக ரீதியில் நியாயம் அல்ல; தவறு, குற்றம் என்று சொல்லி இந்த அமைச்சரவையின் மீது எனக்குள்ள நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறேன்.

1-30 p.m. இனி மின்சாரம். எங்கும் உணவுப் பற்றாக்குறையாக இருக்கிறது என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த மின்சாரத் துறையிலிருந்து கணிசமான அளவுக்கு மின்சாரம் ரயில் ஓட்டுவதற்குக் கொடுக்கப்படுகிறது. அதே காலத்தில் விவசாயத்தைப் பெருக்குவதற்காக நீர் இறைக்கும் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் தர முடியாது, ராத்திரி 10 மணிக்கு மேல் எடுத்துக்கொள்ளுங்கள் என்றெல்லாம் கட்டுப்பாடு வைக்கப்படுகிறது. மின்சாரத்தை உபயோகித்து ரயில் ஓட்டுவது முக்கியமா? அல்லது விவசாயம் முக்கியமா? ரயில் ஓட்டவேண்டுமென்றால் நிலக்கரி எங்கே போயிற்று? அப்படி மின்சாரத்தை உபயோகித்துத்தான் ரயில் ஓட்ட முடியும் என்றால் இந்தப் பஞ்ச காலத்தில் கொஞ்சம் தள்ளி வைத்தால் என்ன? நிலக்கரி வைத்து ஓட்டினால் என்ன? எலக்ட்ரிக் ரயிலாகத்தான் ஓட்டவேண்டும் என்று இருக்கிறதா? இவ்விதம் விவசாயத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் ரயில் ஓட்டுவதற்கு மின்சாரத்தைக் கொடுத்திருக்கிறது. இது செம்மையான நெறியா என்பதைச் சிந்திக்கவேண்டும். தண்ணீர் இல்லை, ஆகவே பருத்தி போடுங்கள் என்று சொல்லுகிறோம் என்று சொன்னார்கள். தண்ணீர் இல்லை என்று ஏன் சொல்லுகிறார்கள், மின்சாரத்தைக் கொடுத்தால் தண்ணீர் கிடைக்கும். பயிர் வேளாண்மை செய்திருக்கலாம். மின்சாரத்தைத் தடை செய்யாமலிருந்திருந்தால் தண்ணீர் வந்திருக்காதா?

கனம் திரு. பூ. கக்கன்: நன்றாக இருந்த நிலத்தில் பருத்தி போடுங்கள் என்று சொல்லவில்லை. சும்மா இருக்கின்ற நிலங்களில் பருத்தியைப் போடலாம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. சும்மா இருப்பதைக் காட்டிலும் பருத்தியைப்போட்டால் நல்லது என்று தான் சொல்லப்பட்டது.

திரு. சா. கணேசன்: இந்த நிலங்கள் சும்மா இருந்த நிலங்கள் அல்ல. ஏற்கனவே நன்செய்யாக இருந்த நிலங்கள், ஏழாயிரத்துச் சில்லரை ஏக்கர்கள் நன்செய்யாக இருந்தன. சும்மா கிடந்தது





என்று சொன்னால், நத்தம் புறம்போக்கு, பாடு காணுக் காடு என்ற நிலைமையில் இருந்து இருக்கவேண்டும். அப்படிக் கிடந்த நிலங்களல்ல அவை. மாறாக அந்த நிலங்களில் எல்லாம் நெல், கேப்பை, முதலியவை விளைந்து கொண்டுதான் இருந்தன. அந்த நிலங்களில் பம்பு செட் போடலாம், மின்சாரம் கொடுத்து பம்பு செட்டுகளை ஏற்படுத்தித் தண்ணீரைக் கொண்டு வந்திருக்கவேண்டும். ஆற்று நீர் இல்லையென்றார். ஊற்று நீரையாவது பயன்படுத்தியிருக்க வேண்டும். அதில் தவறிவிட்டார்கள். நான் இதைச் சொல்லும் போது ஆட்சியாளர்கள் மறுக்கலாம். மறுக்க வேண்டியது அவர்களின் நிலை. ஆனால் நான் சொல்வதைச் சற்றுச் சிந்திக்கவேண்டும். விவசாயத்திற்கு மின்சாரத்தைக் கொடுப்பதைக் காட்டிலும் ரயிலை ஓட்டுவது தான் இந்த அரசுக்குப் பெரிதாகத் தோன்றியதோ என்னவோ தெரியவில்லை. இருக்கின்ற நிலைமை இது, விளைவும் இது. நன்மை எதுவும் இதன் மூலம் பயக்கவில்லை. ஆகவே இந்த ஆட்சி, உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு வழிகள் பல இருந்தும், செம்மையான வழிகள் பல இருந்தும், அதைச் சிந்திக்கத் தவறிவிட்டது என்று இந்த அமைச்சரவையின் மீது குற்றஞ்சாட்டுகிறேன்.

இனிமேல், ஹைக்கோர்ட் நீதிபதியைப்பற்றியது. நான் ஒரு சிறிய தவறு செய்துவிட்டால், சாதாரணத் தண்டனை கிடைக்கும். சட்டத்தைப் படித்தவர்கள் சட்டத்தை எடுத்துச்சொல்லவேண்டியவர்கள். அதாவது வக்கீல் போன்றவர்கள் ஏதாவது குற்றம் செய்தால், எனக்கு இரண்டு மாதம் தண்டனை என்றால் அவர்களுக்கு 2 வருடம் தண்டனை கிடைக்கும். அதற்கு மேலாக இருக்கக்கூடிய ஒரு ஜட்ஜ் ஒரு குற்றத்தைச் செய்தால், அதிலும் சீப்-ஜஸ்டிஸாக இருக்கக்கூடியவர்கள் தவறு செய்தால் என்ன தண்டனை கொடுக்கவேண்டும்? இந்த மாநிலத்தின் ஹைக்கோர்ட்டின் தலைமை நீதிபதியாக இருப்பவர் பொய்யைப் பகிரங்கமாக சொல்லிச் சம்பளத்தைப் பெற்றிருக்கிறார். இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும். இது மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயம் என்று பதில் சொல்லக்கூடும். அவ்விதம் மத்திய சர்க்கார் இதில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த கவர்ன்மெண்ட் ஏதாவது குறிப்பு அல்லது ஆலோசனையாவது கூறியிருக்கவேண்டும். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பொய்யைச் சொல்லிச் சம்பளம் பெற்றிருக்கிறார்கள் என்றால், அதைத் தண்டிக்காமல் விடுவது, வெறும் ராஜிநாமாவை மட்டும் பெற்றுக்கொண்டு சும்மா விட்டுவிடுவது ஒரு ஆட்சியின் சிறப்புக்கு, பொலிவுக்கு அழகல்ல. தண்டிக்கவேண்டியது கோல், கோலுக்கு அஞ்சித்தான் மக்கள் வாழ்கிறார்கள். நாட்டில் கோலுக்கு அஞ்சித்தான் 100-க்கு 90 பேர்கள் வாழ்கிறார்கள். ஒன்றிரண்டு பேர்கள் வேண்டுமென்றால், நீதிக்கும், நெறிக்கும் ஆண்டவனுக்கும் அஞ்சி வாழக்கூடும். ஆகவே, சட்டத்தை மீறுபவர்களின் மீது நடவடிக்கை எடுக்க இந்த ஆட்சி தவறிவிட்டது. பகிரங்கமாகச் சட்டத்தை மீறிய தலைமை நீதிபதியின் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இது தமிழகத்திற்கே ஒரு பெரிய இழுக்காக அமைந்திருக்கின்றது என்ற குற்றச்சாட்டை நான் அமைச்சரவையின் மேல் சாட்ட விரும்புகிறேன்.

[திரு. சா. கணேசன்] [3rd August 1966

அதைப்போலவே, நான்கு வருடமாக நமது அரசாங்கத்தின் இலச்சினை விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். இதில் காங்கிரஸ்காரன் என்றோ, சுதந்திராக்கட்சிக்காரன் என்றோ கொள்கை வித்தியாசம் இருக்கவேண்டிய அவசியமில்லை. இதில நான் பொறுப்பெடுத்துக்கூட கேட்டிருக்கிறேன், என்னிடத்தில் விட்டுவிடுங்கள், ஒரே வாரத்தில் இதற்கு 'டீ டிராயிங்' போட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். இருந்தும் இன்னும் அதைச் செம்மைப்படுத்தவில்லை. கவர்னர் அவர்களிடமிருந்து வருகின்ற லெட்டர் ஹெட்டில் ஒரு மாதிரியிருக்கிறது, அரசாங் கத்தில் இருந்து வருகின்ற லெட்டர் ஹெட்டில் ஒரு மாதிரி இருக் கிறது, அமைச்சர்களிடமிருந்து வருகின்ற லெட்டர், ஹெட்டில் வேறொரு மாதிரி இருக்கிறது, சபையில் கொடுக்கப்படுகிற பேப்பர் களில் வேறு ஒரு மாதிரி இருக்கிறது. சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் லெட்டர் ஹெட்டில் ஒரு மாதிரி இருக்கிறது. இப்படி நமக்குள் இருக்கின்ற ஒரு வரம்புக்குள் இருக்கின்ற இந்தச் சிறு காரியத்தை ஒருமைப்படுத்த முடியவில்லை, அப்படி யிருக்கும்போது உலகத்தவரை நாம் எப்படி ஒருமைப்படுத்த முடியும்? ஏதோ இந்தத் துறையில் உள்ள அமைச்சருக்கு இதில் கவனம் செலுத்த நேரம் இல்லை என்று நினைக்கிறேன். அவர் களுக்குப் பல்வேறு ஊர்களில் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது என்று நினைக்கிறேன். இத்தனை தவறுகள் இருந்தும், இப்படிப்பட்ட புனிதமான ஒன்றில் கூட ஒழுங்கு ஏற்படுத்தக் கவனம் செலுத்தாமல் இருக்கின்ற நிலைமையைத்தான் இந்த ஆட்சியில் நாம் காண முடிகிறது. இவற்றையெல்லாம் காணுகிற பொழுது இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல் லாமல் எப்படியிருக்க முடியும்?

கடைசியில் நகராட்சியைப்பற்றிச் சில வார்த்தைகள். நகராட்சிக் கலைப்புகளைப் பற்றிப் பேசினார்கள். அருப்புக்கோட்டை, திருநெல்வேலி முதலிய இடங்களிலுள்ள நகரசபைகள் கலைக்கப் பட்டதைப்பற்றித் தெரிவித்தார்கள். அருப்புக்கோட்டையில் பார்வர்ட் பிளாக்கைச் சேர்ந்தவர் தலைவராக இருந்தார். அது பற்றிய விஷயம் கோர்ட்டில் இருப்பதால் 'இருந்தார்' என்று சொல்லக்கூடாது. எனவே தலைவர் என்று முடிக்கிறேன். திருநெல்வேலியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் தலைவர். அதனால் அவை கலைக்கப்பட்டன. ஆனால் பலவிதமான குற்றங்கள், கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்ற முனிசிபா லிட்டியைப்பற்றி நான் நேரில் கண்டு சொல்லியும், அதைப்பற்றி எழுதியும் இன்னும் இந்த ஆட்சி அதற்காகத் தலையைக்கூட அசைக்கவில்லை. காரைக்குடி முனிசிபாலிட்டியைப் பற்றித்தான் சொல்லுகிறேன். காரணம், அங்கே காங்கிரஸ்காரர் தலைவராக இருக்கிறார். அங்குள்ள (காங்கிரஸ்காரர்கள்) கம்யூனிஸ்ட்காரர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஆகியோர் சேர்ந்த ஒரு எதிர்க் கட்சி தலைவரை எதிர்க்கிறார்கள். சட்ட விரோதமாகச் சில கமிட்டி களுக்குத் தேர்தல் நடந்ததாகச் சொல்லி முடிவு செய்திருக் கிறார்கள். அதைப் பற்றி அதிகாரிகளுக்கு எழுதினோம். பல மாதங்கள், அதற்குப் பதிலே கிடையாது. பிறகு கோர்ட்டில் கேஸ் போட்டோம். அவர்கள் செய்தது தப்பு என்று சொல்லப்பட்டது.



3rd August 1966] [திரு. சா. கணேசன்]

அதன் மீது அப்பீல் போட்டார்கள். அந்தக் கமிட்டி இயங்கக் கூடாது என்று ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் காங்கிரஸ்காரர் தலைவராக இருக்கிறார் என்பது தான். அப்பீல் போடவேண்டும் என்றால் சாதாரணமானவர் களுக்குப் பணத்திற்கு எங்கே போவது, அவர்களுக்கு வேண்டு மென்றால் ஊர் மக்கள் கொடுக்கின்ற பணத்திலிருந்து முனிசிபல் கௌன்ஸிலை வைத்து வழக்காடலாம். இப்போது மறுபடியும் அப்பீலுக்கு வந்திருக்கிறது. அது போக, அங்குள்ள கமிஷனர், சேர்மன் இவர்கள் ஸாங்ஷன் இல்லாமலேயே பல கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். இதைப்பற்றியும் கவர்ன்மெண்டுக்கு எழுதி யாய்விட்டது. ஒரு கட்டடத்தில் கூரை போடப்பட்டிருக்கிறது, பனங்கூரை போடப்பட்டிருக்கிறது, அதற்கு 6,000 ரூபாய் செலவு செய்திருப்பதாகத் தெரிகிறது. அனுமதியின்றி ஏன் செய்தீர் என்று ஆட்சி ஏன் கமிஷனரைக் கேட்கவில்லை? அவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? காரணம், தலைவர் காங்கிரஸ்காரர் என்பதுதான். காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டியாக இருப்பதால் பாஸாக்கிவிடலாம் என்று நினைத்துச் செய்தார்கள். ஆனால் இன்னும் பாஸ் செய்யாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். கமிஷனர் இதை பாஸ் செய்துவிடுங்கள் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் மீட்டிங் அஜெண்டா பேசுகிறது. பணம் கொடுத்த செக் பேசுகிறது, பணம் கொடுத்த தேதி பேசுகிறது. அங்கேயுள்ள (முனிசிபாலிட்டி) மினிட் புக் பேசுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக காண்ட்ராக்டர் போட்டிருக்கிற கேஸ் பேசுகிறது. இவற்றை நான் சொன்னால் குற்றமாகுமா? இவையெல்லாம் அங்கே நடைபெறுகின்ற உண்மை. இங்கு நான் எடுத்துக் காட்டிய குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கோ அதற்குரிய பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கோ நான் தயாராக இருக் கிறேன். அப்படி நிரூபிக்காவிட்டால், விதிக்கப்படுகிற எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். இப்படியெல்லாம் இருக்கிறபொழுது, இந்த அமைச்சவை, பல நல்ல காரியங்கள் பண்ணியிருக்கிறது, தவறே செய்யவில்லை, இந்த அமைச்சவை செம்மையாக நடக்கிறது என்று நான் சொல் வேனானால், அது உண்மையான நிலை அல்ல, அது உண்மைக்கு முரணானதாகும். ஆகவே இந்த அமைச்சவை மீது நம்பிக்கை யில்லை என்கிற தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்து என்னுடைய உரையை நிறைவுபடுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று எதிர்க்கட்சி சார்பில், இந்த மந்திரிசபை மீது நம்பிக்கையில்லை என்று கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துச் சொல்லிய அடிப்படையில் முக்கியமான கருத்து, நாடு முழுவதும் தெரிந்திருக்கின்ற ஒரு உண்மையை மறைத்துக் கூறி, அதன் காரணமாக இந்த மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்று குறிப்பிட்டார்கள். அதாவது விவசாயிகளுக்குச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்ய இந்த அரசு தவறி இருக்கிறது என்பதுதான் அது. இந்த

*[திருமதி சி. குழந்தையம்மாள்]* [3rd August 1966

அமைச்சரவையானது பொறுப்பு ஏற்ற பிறகு நாட்டிலே இருக்கிற ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு—ஏன் ஆயிரம் என்று சொல்ல வேண்டும்? லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு—இந்த நாட்டிலே அன்று செய்யத் தவறியிருந்த பல நல்ல காரியங்களை, விவசாயிகளின் முன்னேற்றத்திற்கான காரியங்களை இன்றைக்கு இருக்கக்கூடிய அமைச்சரவையானது செய்திருக்கிறது. ஒவ்வொன்றாக எடுத்துப் பார்ப்போமானால், முன்பு விவசாயிகளுக்கு இவ்வளவு தாராளமாகக் கடன் வசதி கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு ஒரு விவசாயி குறைந்த பட்சம் மூன்று விதத் தலைப்பிலே கடன் வாங்கலாம் என்று இருக்கிறது. விவசாயிகளுக்கு இன்றைக்குப் பல்வேறு தலைப்புகளிலே கடன் கொடுக்கப்படுகிறது. இந்த மந்திரி சபையானது பொறுப்பு ஏற்ற பிறகு ஒரு விவசாயிக்கு பம்ப்செட் வாங்கக் கடன், புதிய கிணறு வெட்டக் கடன், பழைய கிணறுகளில் அடிவெட்டு வெட்டக் கடன், விவசாயிகள் மாட்டுத் தொழுவம் கட்டக் கடன், விவசாயிகள் குடி இருக்கும் வீட்டைச் சீர்படுத்தக் கடன், விவசாயிகள் நிலத்தைப் பண்படுத்தக் கடன், விவசாயிகள் பொறுக்கு விதைகள் வாங்கக் கடன், விவசாயிகள் களை எடுப்பதற்குக் கடன், விவசாயிகள் உரம் வாங்குவதற்குக் கடன் என்று அத்தனையும் கொடுத்து, அந்தக் கடனை மூன்று மாதத்திலோ அல்லது 6 மாதத்திலோ திரும்பப் பெறும் முறையில், 6¼ சதவிகிதம் வட்டிக்கும், 8 சதவிகிதம் வட்டிக்கும் கொடுத்து, கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெறும் சூழ்நிலை இன்றைக்கு இருக்கும் மந்திரிசபை அமைந்த பிறகுதான் ஏற்பட்டது என்பதை நாடு முழுவதும் நன்றாக உணரும். அப்படி இருக்கும்போது விவசாயிகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளிலிருந்து தவறி இருக்கிறது என்று உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டைக் கொண்டு வருகிறார்கள் என்றால், இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்கள் விவசாயிகள், ஏதோ விவசாயிகளுக்காகப் பரிந்து அழுவதுபோல் 1967-ம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்னால் பொய்க் கண்ணீரை வடித்து அவர்களுடைய அனுதாபத்தை பெற முடியுமோ, என்று . . . .

திரு. சா. கணேசன் எழுந்தார்—

**திருமதி சி. குழந்தையம்மாள்:** அவர்கள் பேசியதிலும் இருந்தது . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பொய்க் கண்ணீர் என்று சொல்லியதில் இங்குள்ள உறுப்பினர் யாரையும் குறிப்பிடாதது மட்டுமல்ல, மனிதனையே குறிப்பிடவில்லை. ஆகவே, அதில் ஒன்றும் தவறு இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி எழுந்தார்—

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது நீலிக் கண்ணீர் என்று . . .

**திரு. கரு. சீமைச்சாமி:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார், கனம் அங்கத்தினர் சொல்லும்போது கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒத்துக்கொள்ளுகிறேன். எத்தனை . . . .



3rd August 1966]

**கனம் உதவி சபாநாயகர்:** இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் உபயோகித்த வார்த்தை, பொய்க் கண்ணீர் என்று சொன்னது, இங்கு உள்ள கனம் அங்கத்தினரைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கண்ணீரைத்தான் பொய்க் கண்ணீர் என்று குறிப்பிட்டார்கள்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** 1967-ம் ஆண்டு தேர்தலுக்கு முன்னால் அவர்களுடைய மதிப்பையும், ஆதரவையும் பெற முடியுமோ என்று, அவர்களுக்காக அனுதாபத்தைக் காட்டி அவர்களுடைய மதிப்பைப் பெறுவதற்காகத்தான் அப்படிக் கூறியிருக்கிறார்கள் என்ற எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாட்டிலே இருக்கிற விவசாயிகள் அப்படி நன்றிகெட்ட தனமாகத் திரும்பமாட்டார்கள் என்ற சவாலைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மேலும் செய்ததை எடுத்துச் சொல்லுவோமானால், விவசாயிகள் மத்தியில் தலை குனிந்து நிற்கும் கட்டம் எதிர்க்கட்சியினருக்கு வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமெரிக்காவிலிருந்து விஞ்ஞானக் கூடங்களிலிருந்து விரிய விதைச் சோளத்தையும், விரிய விதைக் கம்பையும், விரிய விதை பருத்தியையும் தருவித்துக் கொடுத்து, கோவை மாவட்டத்தில் இன்றைக்கு ஏக்கருக்கு 40 சலவை சோளத்தையும், ஏக்கருக்கு 40 சலவை கம்பையும் உற்பத்தி செய்து, நம் விவசாயிகளை முன்னுக்குக் கொண்டுவந்து, பொறுக்கு விதைகளை மற்ற மாநிலங்களிலிருந்து விவசாயிகள் வந்து நம் மாநிலத்தில் உற்பத்தி செய்த பொறுக்கு விதைகளை லட்சக் கணக்கான ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து வாங்கிச் செல்ல கோவை மாவட்டத்தில் காத்துக் கிடக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இன்றைக்கு இருக்கும் மந்திரிசபை என்று தலை நிமிர்ந்து சொல்ல முடியும். மைசூர் மாநிலம் என்ன, ஆந்திர மாநிலம் என்ன, வடக்கே இருக்கிற பிற மாநிலங்களென்ன, அங்கிருந்து வரக்கூடிய விவசாயிகளுக்கு எனது தொகுதியில் உள்ள விவசாயிகள் லட்சக்கணக்கான ரூபாய்க்கு விதைகளை விற்றிருக்கிறார்கள். அரசாங்கம் செய்யத் தவறி இருக்குமானால் மற்ற மாநிலங்களிலிருந்து வந்து காத்துக் கிடப்பார்களா, அட்வான்ஸ் கொடுப்பார்களா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு சோளம் ஏக்கருக்கு 40 சலவை விளைகிறது. ஒரு சலவை சோளத்தின் விலை என்ன? ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 2,000, ரூபாய் 3,000 லாபம் வரும் அளவுக்கு உணவு தானியத்தைச் சர்க்கார் உற்பத்தி செய்து கொடுக்கிறது என்பது உலகம் அறிந்த உண்மை.

அடுத்தபடியாக, நம் சர்க்கார் விவசாயிகளுக்கு இன்னும் செய்திருக்கும் சலுகைகளை எண்ணிப் பார்க்கவேண்டும். விவசாயிகளுக்குச் சாதாரணமாகக் கடன் கொடுப்பது மட்டுமல்ல. இன்றைக்கு விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய டிராக்டர்கள் இருக்கின்றன. டிராக்டர்கள் ரஷ்யாவிலிருந்து கொண்டுவரப்படுகின்றன. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். சாதாரணமாக ரூபாய் 5,000 பெற்றுக்கொண்டு, ரூபாய் 30,000 மதிப்புள்ள டிராக்டர்களைக் கொடுக்கிறார்கள். ஒரு ஜோடி மாட்டின் விலை ரூபாய் 1,500

ஆகிறது. அறுபது எக்கர் நிலம் இருக்கிறது என்றால் அவர் 10 ஜோடி மாடு வைத்திருக்கவேண்டும். அவற்றின் விலை என்ன, செலவு என்ன என்று பார்த்தால் மந்திரிசபை கொடுத்திருக்கும் சலுகை காரணமாகப் பெரிய விவசாயிகள் டிராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். பெரிய விவசாயிகளுக்கு டிராக்டர்கள் மட்டுமல்ல, இன்னும் அதிகபட்சமாகப் பார்க்கும்போது கதிர் அடிக்க யந்திரங்கள் கொடுக்கிறார்கள்; கதிர் அறுக்க யந்திரங்கள் கொடுக்கிறார்கள்; களை பிடுங்க யந்திரங்கள் கொடுக்கிறார்கள். அத்தனையையும் விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்தி வருகிறார்கள். விவசாயிகளுடைய அனுதாபத்தைப் பெறவேண்டும் என்ற குறிக்கோளில், தேர்தல் வந்து விட்டதே என்ற அச்சத்தில் பினாத்துகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். எத்தனை நன்மைகளை இந்த மந்திரிசபை விவசாயிகளுக்குச் செய்திருக்கிறது? விவசாயிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தது. குத்தகைக்காரர்களை, நிலத்தை உழக்கூடியவர்களை வெளியேற்ற முடியாது. 6¼ சதவிகிதம் வட்டியில் கடன் கொடுக்கிறார்கள். இல்லை என்று மறுக்க முடியுமா? இத்தனையும் விவசாயிகள் பெற்று வருகிறார்கள். ஏதோ விவசாயிகளுக்குச் செய்யத் தவறி விட்டதாகச் சொல்லுகிறார்களே, இதைவிட என்ன செய்ய முடியும் என்று ஆலோசனை சொன்னார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

அதற்கு மேல் இந்த மந்திரிசபை இன்னும் பெரிய காரியத்தைச் செய்திருக்கிறது. விவசாயிகளுக்கு ஏராளமான 'ரசாயன உரம் வேண்டும். ரூபாய் 100 கோடிக்கு மேல் செலவு செய்து நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு உரத்தை உற்பத்தி செய்து வழங்குகிறது.. மேல் பவானி, அமராவதி, பரம்பிக்குளம், குந்தா மின்சார உற்பத்தித் திட்டம், சாத்தனூர், மணிமுத்தாறு என்று இத்தனை திட்டங்களைப் போட்டு வறண்டு கிடந்த காடுகளை நன்செய் நிலங்களாக ஆக்கியிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு மழை பெய்யவில்லை. இந்த ஆண்டு மட்டுமா பெய்யவில்லை? வரலாற்றை எடுத்துப் பாருங்கள். சீதக்காதி வரோதயன் என்பவன் வாழ்ந்த காலத்தில், ஒரு தட்டிலே பொன்னும், ஒரு தட்டிலே நெல்லும் வைத்து விற்றிருக்கிறார்கள். தாது வருஷப் பஞ்சம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். 1948-க்கு முன்னால் பல பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. அந்த நிலைமைகளுக்கு மாறாக இந்த மந்திரிசபை ஏற்பட்ட பிறகு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு அது செய்யவில்லை, இது செய்யவில்லை என்று சொல்லுகிறார்களே, நல்ல முறையில் சிந்தித்துப் பார்த்தால், ஈரோடு, தாராபுரம் தாலுகாக்களிலே ஒரு விவசாயி உழவு மாட்டுக்குத் தண்ணீர் காட்டவேண்டுமென்று சொன்னால், ஒரு குடத்தில் கொட்டாங்கச்சு வைத்து தண்ணீரை இறைத்து குடத்தில் நிரப்ப நான்கு மணி ஆகும். மாடுகளுக்குத் தீனியாகப் பனை ஓலைகளை வெட்டிப் போட்டார்கள். இன்று அந்தப் பகுதியில் லட்சக்கணக்கான ஏக்கர்களில் நெல் விளைகிறது, சோளம் விளைகிறது. விவசாயிகள் வாய்க்காலைத் திறந்தால் தண்ணீர் வருகிறது. இந்த ஆண்டு மழை இல்லாததால் தண்ணீர் இல்லை. 'உங்களால் தான் மழை பெய்யவில்லை' என்று குற்றம் சாட்ட முடியும். மூன்றில் ஒரு பாகம், 50 பேர்கள் அவர்கள் இருக்கிறார்களே,





மூன்றில் ஒரு பாகம் மழை பெய்யவேண்டுமே, ஏன் பெய்யவில்லை என்று கேட்கிறேன். (குறுக்கீடு). வரலாற்றிலே மழை பெய்யாத காலம் பல உண்டு. மழை இல்லை என்றால் பஞ்சம் வரும். தண்ணீர் இல்லை என்றால் நிலம் விளையாது. இது யாரும் மறுக்க முடியாத உண்மை. அதற்காக மத்திய அரசாங்கம் என்ன செய்ய முடியும்? அவர்கள் செய்யவேண்டியதைச் சிரிய முறையில், செம்மையான முறையில் விரைவாகத்தான் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

சேலம் உருக்காலைபற்றிக் குறிப்பிடப்பட்டது. சேலம் உருக்காலை அமைப்பது என்பது வெண்டைக்காய், கத்தரிக்காய் கிலோக் கணக்கில் கடையில் வாங்குவது போல என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நம்பிவிடக்கூடாது என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பல தொழிற்சாலைகள் உள்ள வட்டாரத்திலிருந்து வருகிறவள் நான். ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரும்பு இல்லையா, இல்லை என்று சொன்னால் பிலாய் தொழிற்சாலையிலிருந்து வருகிற இரும்பு இல்லையா, அதுவும் இல்லை என்று சொன்னால், லோகலாக இருக்கக்கூடிய இரும்பை உபயோகப்படுத்துகிறார்கள். இன்றைக்கு கோவை மாவட்டத்தில் ரஷ்யாவிலிருந்து இறக்குமதியாகக்கூடிய இரும்பு ரூ. 540-க்கு இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் குவிந்து கிடக்கிறது. பிலாயிலிருந்து வரக்கூடிய இரும்பு ரூ. 410-ஆக இருக்கிறது. எப்படி நாங்கள் வாங்குகிறோம் என்றால், 5 டன் இரும்பு ரஷ்யாவிலிருந்து வரக்கூடிய இரும்பு, ஒரு டன் பிலாயிலிருந்து வரக்கூடிய இரும்பு, லோகலாக கிடைக்கக்கூடிய இரும்பு ஸ்கிராப் வாங்கிக் கலந்து அதைக் கொண்டுபோய் பாய்லரில் போட்டுக் காய்ச்சினால், சரக்கு நன்றாக இருக்கும். ஏர் ஹோல்ஸ் இருக்காது. நீங்கள் சொல்லக்கூடிய அளவுக்கு சேலத்தில் இருக்கக்கூடிய இரும்பு 100-க்கு 33.3 என்ற அளவுக்கு லாபம் வரக்கூடியது. மந்திரிமார்களுக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்பது பழமொழி. ஆகவே, இங்கே ஆராய்ந்து பார்த்தோம், மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல் என்ற முறைப்படி 100-க்கு 73 லாபம் தரக்கூடிய குன்னூர், சத்தியமங்கலம் காடுகளில் கிடைக்கக்கூடிய இரும்புக்கு முதல் இடம் கொடுத்து, ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யக் கூடிய இரும்புக்கு அடுத்த இடம் கொடுத்து, அதனைத் திட்டக் கமிஷனுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கண்டிப்பாக வந்துவிடும்.

எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஒரு ஆசை. காலையிலே 6 மணிக்கு நாள்தோறும் சூரிய உதயம் ஆகிவிடுகிறது. ஆனால் இவர்கள் 5 மணிக்கே எழுந்திருந்து 'சூரியனே, எழுந்திரு, எழுந்திரு' என்று சொல்லிக்கொண்டு இருந்துவிட்டு, 'நாங்கள் ஒரு மணி நேரம் இப்படிக் கூச்சல் போட்டிருக்காமல் போனால் சூரியன் உதயமாகாமல் அப்படியே இருந்துவிடுவான்' என்று சொல்லுவார்கள். அதேபோலத்தான் 'சேலம் இரும்புத் தொழிற்சாலை நாங்கள் கேட்டதால்தான் வந்தது. எதிர்க்கட்சியினர் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருந்ததினால்தான், அந்த வற்புறுத்தலைத் தவிர்க்க முடியாமல் மத்திய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது' என்று 1967-ம் ஆண்டுத் தேர்தலிலே மார்தட்டிக்கொள்வதற்காகத்

தான் இன்றைக்கு ரூன் எச்சரிக்கையாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இந்தக் கருத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நீங்கள் என்னதான் சொன்னாலும் அவள் பெற்ற பிள்ளை அவள் பெற்ற பிள்ளைதான். நாலடியாரில்

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை . . ."

என்று கூறப்பட்டிருப்பதுபோல், ஆயிரம் கன்றுகளை அவிழ்த்து விட்டு, ஆயிரம் பசுக்களையும் அவிழ்த்துவிட்டாலும், அந்தந்தப் பசுவினுடைய கன்று அந்தந்தத் தாயினிடம் போய்விடும். 'நாங்கல்லாவா இதைக் கொண்டு வந்தோம்' என்றுதான் நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தாலும், சேலம் இரும்புத் தொழிற்சாலை யாரால் வந்தது என்பது பொதுமக்களாகிய கன்றுக்குட்டிகளுக்குத் தெரியாமல் போய்விடாது, மக்கள் இது விஷயத்தில் ஏமாந்துபோய்விட மாட்டார்கள் என்பதை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரியில் தமிழைப் பாட மொழியாக்க வேண்டும் என்பதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். நாட்டிலிருக்கிற கிராமவாசிகளுக்கு, நாட்டில் பிறந்திருக்கிற விவசாயிகளுக்கு எதிர்க்கட்சியினர் செய்யும் துரோகச் செயல் இது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். படித்தவர்கள், படித்த பரம்பரையிலே வந்தவர்கள், படித்துப் பட்டம் பெற்றவர்கள், உத்தியோகஸ்தர்கள் பரம்பரையிலே வந்தவர்கள், ஆங்கிலமும், மற்ற மொழிகளும் படித்துப் பல்வேறு துறைகளிலும் முன்னுக்கு வந்தவர்கள். கிராமப் புறத்திலுள்ள விவசாயிகளின் குழந்தைகள் இப்போது படிக்க வருகிறார்கள். மாடு மேய்க்கிறவர்களுடைய குழந்தைகள், துணி துவைக்கிறவர்களின் குழந்தைகள், கிராமத்திலுள்ள விவசாயிகளின் குழந்தைகள் இன்று படிக்க முன்வந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீங்கள் கல்லூரிக்குச் சென்று தமிழிலே பாடங்களைப் படிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தமிழைப்பற்றி எங்களுக்குக் குறை இல்லை. என்னைப் பெற்ற தாய் தமிழ்த் தாய். சிறப்பும், முதலிடமும் அதற்குண்டு என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால், வடக்கே இருக்கிற டெல்லிக்கும், மேலை நாடுகளுக்கும், பாக்கு லட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறோம். ஈரோட்டிலிருந்து வாழைப் பழம், மஞ்சள் ஏற்றுமதி செய்கிறோம். கோவையிலும், சேலத்திலும் உற்பத்தி செய்கிற 100-ம் நம்பர் சேலைகளையும், கரை போட்ட வேஷ்டிகளையும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். அங்கே போய் இவர்கள் என்ன மொழியில் பேசுவது? இந்த நாட்டில் பிறந்த வியாபாரிகளுடைய குழந்தைகளுக்கு அவர்கள் செய்யக்கூடிய நல்ல செயலாக இது எப்படி இருக்க முடியும்? பாஷை தெரியாமல் அவர்களுடைய முன்னேற்றம் தடைப்படுவதற்குச் செய்யும் துரோகச் செயலாகாதா இது என்று நான் கேட்கிறேன்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில்
இயற்றல் வேண்டும்.





என்று பாரதியார் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மூன்று மொழிகள் தெரிந்தால் மட்டும் போதாது. ஆங்கிலமும் தெரியவேண்டும், ரஷ்ய மொழியும் தெரியவேண்டும், ஜெர்மன் மொழியும் தெரிய வேண்டும். அப்பொழுதுதான் டைரக்டாக மொழி பெயர்க்கக் கூடிய அறிவைப் பெற முடியும். தமிழை மட்டும் படித்துவிட்டு எப்படி முன்னேற முடியும்? கிராமப்புறமக்கள் படிக்க வருகிற காலத்தில் இப்படிப்பட்ட ஒரு தடை விதித்தால், அந்தப் பரம்பரைக்கே எதிர்க்கட்சிகள் செய்யக்கூடிய ஒரு துரோகச் செயலாக இது அமையக்கூடும் என்பதை அவர்களுக்கு மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அவர்கள் குறிப்பிட்டது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்கள், நகராட்சி மன்றங்களை கலைத்ததுபற்றி கிராமப்புறங்களிலே ஒரு கதை சொல்வார்கள். ஒரு மாப்பிள்ளையைப் பார்த்தார்கள். மாப்பிள்ளைக்கு எல்லா லட்சணங்களும் இருந்தன. முப்பத்திரெண்டு சாமுத்திரிகா லட்சணங்களில் இரண்டுதான் குறைவு, 30 லட்சணங்கள் இருக்கிறதே, என்ன குறைவு, இரண்டுதான் குறைவு, பரவாயில்லை என்று சொல்லி மாப்பிள்ளையைக் கொண்டுவந்து மணவறையில் உட்கார வைத்து பெண்ணுக்குத் தாலி கட்டு என்று சொன்னால், மாப்பிள்ளை தாலி கட்டவில்லை. கொஞ்சம் பொறுத்துப் பார்த்தார்கள். டைம் ஆகிவிட்டது என்று சொல்லியும்கூட மாப்பிள்ளை தாலி கட்டவில்லை. சுயபுத்தியும் கிடையாது. சொல் புத்தியும் கிடையாது. 30 லட்சணங்கள் இருந்தும், இரண்டு லட்சணங்கள் குறைவு. அதே மாதிரி எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி, டவுன் பிளானிங்காக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பிலுள்ள நகராட்சி மன்றங்களில் எந்தத் திட்டமும் வந்தது இல்லை. நகராட்சி மன்றங்களில் ஆட்சியில் இருந்தால், மக்களுக்கு வேண்டிய எல்லா காரியங்களையும் செய்ய வேண்டும். ஒரு மாதத்திற்கு ஒரு முறைகூடிக் கலைந்தால் மட்டும் போதாது. எத்தனை நாட்களுக்குப் பொறுக்க முடியும்? செயலே புரியாமல் நகராட்சி மன்றங்கள் எப்படி நீடித்திருக்க முடியும்? ஆணையர் ஒரு வேலையும் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்த்து நகராட்சி மன்றங்களைக் கலைக்காவிட்டால், மந்திரிசபை கடமையிலிருந்து தவறியவர்கள் ஆவார்கள். அவர்கள் செய்தது ரொம்ப நல்லது. ஏதோ இரண்டு இடத்தில் இருந்தோம், அதுவும் போய்விட்டதே என்று வருத்தப்படக்கூடிய நிலைக்கு, அந்தக் கருத்துக்கு நாங்கள் அதிகமாக எதிர்ப்புச் சொல்லவில்லை.

மருத்துவக் கல்லூரிகளுக்கும், என்ஜினியரிங் கல்லூரிகளுக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது செம்மையான முறையில் நடைபெறவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் எடுத்துக் கொண்டால், மாணவனைக் கூப்பிட்டுக்கொண்டு, அப்பா அல்லது தமையன் சென்னைக்கு வந்து கூடக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். வாஸ்தவம்தான். கிராமத்தில் இருக்கிற ஒரு நிலைமையை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆண்டுதோறும்

15 நாட்களுக்கு ஒரு முறை கிராமத்தில் எதாவது சீர் செய்து கொண்டிருப்பார்கள். பிறந்த நாள் என்றாலும், காதுகுத்தல் என்றாலும், இப்படிச் சிறு சிறு நிகழ்ச்சிகளுக்கெல்லாம்கூட, கிராமப்புறங்களில் பணத்தைச் செலவழித்து சீர்செய்யவேண்டிய கட்டாயம் முன்பு இருந்தது. இப்பொழுது கிராமப்புற குழந்தைகள் படிக்க முன்வந்துள்ளார்கள். கிராமத்திலுள்ள மாணவர்களை அழைத்துக்கொண்டு, ரூ. 100, 200 பணத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் சென்னைக்கு வந்தாலும் பரவாயில்லை. அவர்கள் ஒன்றையும் பார்த்ததே கிடையாது. இங்கு வந்து இருந்து எம்.பி.பி.எஸ். அட்மிஷனையும் பார்த்துக்கொண்டு, பிறகு மகாபலிபுரம், காஞ்சீபுரம், திருப்பதி ஆகிய இடங்களைப் பார்த்துவிட்டுப் போவதில் என்ன ஆட்சேபனை இருக்க முடியும்? விவசாயிகள் வேறு ஊரையே பார்த்தது கிடையாது. இப்படி ஆண்டுக்கு ஒரு முறை, இரண்டு முறைகள் வந்து பார்த்துவிட்டு, ரூ. 100, 200 செலவழித்து விட்டுப்போவதில் என்ன குறைந்துவிடுகிறது? 40, 50 வருஷகாலமாகக் கிராமத்தில் எல்லாவற்றிற்கும் சீர் செய்ய வேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருந்திருக்கிறார்கள். இப்பொழுது அதைவிட்டு, என்ஜினியரிங் காலேஜில் தன்னுடைய பிள்ளைக்கு செலக்ஷனுக்காக இங்கே சென்னைக்கு வந்து சேருகிறார்கள் என்றால், அவர்களுக்கு நீங்களும் ஒத்துழைப்புக் கொடுங்கள், 'சென்னைக்கு வாருங்கள், வாருங்கள், மகாபலிபுரத்தைப் பாருங்கள், திருப்பதியைப் பாருங்கள், மின்சார ரயிலைப் பாருங்கள், சட்டமன்றத்தைப் பாருங்கள், நடவடிக்கையைப் பாருங்கள்' என்று சொல்லுங்கள். விவசாயிகள் கிராமத்தில் சீர் செய்வதை விட்டுவிட்டு, இங்கு வந்து இந்த இடங்களை எல்லாம் பார்த்து விட்டு, ரூ. 200, 300 செலவழித்துவிட்டுப் போனால் என்ன குறைந்து போய்விட்டது? ஆகவே, விவசாயிகள் முன்னேறி வருவதற்கு நீங்கள் ஆதரவு கொடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கனம் முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லை என்று சொன்னார்கள். பாவம், அவர்கள் பெருமையை இவர்கள் பாராட்டாவிட்டாலும் மற்ற மாநிலங்களில், அகில இந்தியாவில், அவருடைய அறிவும், வலிவும் பெருமையும் பாராட்டப்படுகின்றன. பிரதம மந்திரி தேர்தல் வந்தபோது அவருடைய திறமையை எல்லோரும் பார்த்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு மாச்சரியம் காரணமாக அவருடைய பெருமை தெரிவதில்லை. "ஐயையோ, 1967 தேர்தலில் மறுபடியும் இந்த முதலமைச்சர் வந்து விட்டால், எங்கள் கதி என்ன?" என்ற அச்சம் இவர்களுக்கு. முன்இரவிலே அஞ்சுகிறவன் போல, பாவம், அப்படி அஞ்சுகிறார்கள்! இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேர்தலை முன்னிட்டுக் கொண்டு வரப்பட்டது என்றாலும், நாட்டிலுள்ள மக்களுக்கு நம்பிக்கை குறையாது என்று சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் விலைவாசி உயர்வைப்பற்றிச் சொன்னார்கள். விலைவாசி உயர்ந்திருக்கிறது உண்மைதான். விவசாயிகளுடைய கையில் இன்றைக்குப் பணம் இருக்கிறது. கூலிக்குச் செல்கிறவர்களுக்கும், ரூ. 2.50 ஆணுக்கும், ரூ. 1.50 பெண்ணுக்கும், ஆக ஒரு குடும்பத்திற்கு ரூ. 4 கிடைக்கிறது.





எங்கள் ஊரில் மட்டும் மூன்று டூரிங் டாக்கீஸ்கள் இருக்கின்றன. கூலியில் 30, 60 காசு எடுத்து வைத்துவிட்டுத்தான் வேறு வேலை செய்வார்கள். அந்த மாதிரி நிலைமை இருக்கிறது. இப்பொழுது கிராமத்தில் ஒரு பையன் மாடு மேய்க்க வருவதில்லை. அவனவன் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கிறான். அமாவாசைக்கும், ஆடிப் பதினெட்டுக்கும் அரிசிச் சோறு ஆக்கியவளெல்லாம், கூப்பன் கொடு, அரிசி கொடு என்று கேட்கும் சுதந்திரம் வந்திருக்கிறது. யாரும் ராகிச் சோற்றை விரும்பவில்லை. பரம்பரை பரம்பரையாக 10, 20 முறையே அரிசிச் சோறு தின்றவர்களெல்லாம், 365 முறையும் அரிசிதான் தின்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மறைக்காமல் எல்லோரும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மக்களுக்குச் சர்க்கார் பேரில் நிறைய நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**புலவர் கா. கோவிந்தன்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் சார்ந்திருக்கும் மந்திரி சபைமீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை எங்கள் கட்சித் தலைவர் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை ஒட்டி என்னுடைய கருத்துக்களைச்சொல்ல விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானமா? இந்த மன்றத்திலா? யார் கொண்டு வருவது? எதிர்க் கட்சிக் காரர்களா? அவர்களுடைய எண்ணிக்கை என்ன? மந்திரி சபை மீது நம்பிக்கை இருக்கிறது ஆளும் கட்சிக்கு, எங்கள் எண்ணிக்கை என்ன? என்றெல்லாம் கேள்விகள் எழக்கூடும். எங்களுக்குத் தெரியும், காங்கிரஸ்காரர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் 139 பேர்கள் இருக்கிறார்கள் என்று. எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் 68 பேர்கள் தான் என்கிற உண்மையும் எங்களுக்குத் தெரியும். ஆனால், உறுப்பினர் எண்ணிக்கையை விட்டுவிட்டு சென்ற தேர்தலின்போது ஆளும் கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் எவ்வளவு, எதிர்க் கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள் எவ்வளவு என்று பார்த்தால் தெரியும் உண்மை நிலை. ஆளும் கட்சிக்காரர் 139 பேர்களுக்கும் எத்தனை வோட்டுக்கள், எதிர்க் கட்சிக்காரர்கள் 68 பேர்களுக்கும் எத்தனை வோட்டுக்கள்? அவர்கள் 139 பேர்களுக்கும் கிடைத்த வோட்டுக்கள் 58,48,974; எதிர்க் கட்சிக்காரர்கள் 68 தான் என்றாலும், அவர்களுக்குக் கிடைத்த வோட்டுக்கள் 68,27,372. காங்கிரஸ்காரர்களுக்குக் கிடைத்தது 46 சதவிகிதம். எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கிடைத்தது 54 சதவிகிதம். ஆக, நாட்டிலே 100-க்கு 54 பேர்கள் சார்பிலே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆளும் கட்சி உறுப்பினர்களும் விலை ஏற்றத்தைப்பற்றிச் சொன்னார்கள், இந்த விலை ஏற்றம்பற்றி, விலை ஏறுகிறது என்கிற கருத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கூறினோம். கூட்டம் போட்டுச் சொன்னோம். உண்ணாவிரதம் இருந்து சொன்னோம். அப்பொழுது மந்திரி சபை என்ன கூறியது? எங்கே விலை ஏறியிருக்கிறது? விலை ஏறியிருந்தால் அது பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது என்றது. உண்ணாவிரதம் இருந்தார்கள் என்றால், அது உடலுக்கு நல்லது என்று கூறும் ஆணவப்

போக்கைத்தான் பார்த்தோம். போராட்டத்தை நடத்தி, ஆயிரக் கணக்கான தோழர்களை ஈடுபடுத்தி, சிலரை இழந்து எடுத்துச் சொன்னால், "ஆமாம், உணவு விலை ஏறியிருக்கிறது" என்று ஒப்புக் கொள்ளும் அளவுக்கு இந்த அரசு இருக்கிறது. அவ்வளவு பாடுபட்டு உணர்த்தினால்தான் இந்த மந்திரிசபைக்கு ஏறும் என்கிற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் அரிசி விலையைக் குறையுங்கள் என்று சொல்லிற்று. இவர்கள் நெல்லுக்குக் கட்டுப்பாடு கொண்டு வந்தால் போதும் என்று செய்தார்கள். வீட்டில் ஒரு ஆள் வந்திருக்கிறான், சோறு போடு என்றால், எந்தத் தாய்மாரும் வெறும் சோற்றைப் போட்டு அனுப்பிவிட மாட்டார். சோறு போட்டு, பருப்பு போட்டு நெய் வார்த்துத்தான் போடுவார்கள். ஆனால், இவர்கள் அரிசி விலையைக் குறைக்கவேண்டும் என்றால், நெல்லுக்குக் கட்டுப்பாடு கொண்டு வந்தால்போதும் என்றார்கள். இவர்களுக்கு மற்றப் பொருள்களைப் பற்றிக் கவலை இல்லை, அக்கறை இல்லை. கடலைப் பருப்பு விலை ஏறிவிட்டது என்றால், அதை இவர்களுக்கு உணர்த்த, ஒரு மாநாடு போட்டு, இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி, உண்ணாவிரதம் இருந்து, போராட்டம் நடத்தி, சிறை சென்று, உயிர்களை இழந்தால், இவர்கள் "ஆமாம் கடலைப் பருப்பு விலை ஏறியிருக்கிறது" என்பார்கள். அப்பொழுதுதான் இந்த மந்திரி சபைக்குப் புரியும் என்று எண்ணும் நிலைமைதான் இருக்கிறது என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெல்லுக்குக் கட்டுப்பாடு கொண்டு வந்தார்கள், பயன் என்ன? சொல்லுவார்கள், "ஓட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்று. இன்றைக்கு நெல் இருக்கும் இடம் தெரியவில்லை. நிர்வாகத்தின் தவறு காரணமாக என்னென்ன நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன? இவர்களுடைய நிர்வாக ஊழல்கள், தவறுகள் காரணமாக, அறுவடை காலத்தில் ரூ. 33 என்று விற்கிற நெல், அடுத்த ஆறு மாதத்தில் ரூ. 56 என்று விற்கிறது. கொள் முதல் விலை 33 தான். ஆனால் அடுத்த இடத்தில் அதுவே ரூ. 56-ஆக இருக்கிறது. காஞ்சீபுரத்தில் ரூ. 33, ஆனால் செய்யாற்றில் ரூ. 56. இந்த நிலைமை ஏன்? இந்த நிலைமை ஏற்பட்ட பிறகு, விவசாயிகள் உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தையே விட்டு விட்டு, நெல்லுக்குப் பதிலாகக் கரும்பை உற்பத்தி செய்யப் புகுகிறார்கள். பருத்தியைப் பயிர் செய்கிறார்கள். இந்த நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். எனக்கு முன்னால் அம்மையார் பேசும் போது சொன்னார்கள், விவசாயிகள் பற்றியும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் பற்றியும் அடுக்கிக்கொண்டே போனார்கள். நிலம் வாங்கக் கடன், பம்பு செட்டு வைக்கக் கடன், உரம் வாங்கக் கடன், பொறுக்கு விதை வாங்கக் கடன், பூச்சி மருந்துக்குக் கடன், இதற்குக் கடன், அதற்குக் கடன், கடன், என்று அடுக்கிக் கொண்டே போனார்கள். இத்தனை கடன்களையும் வாங்கினால்தான் விவசாயி வாழமுடியும் என்கிற நிலையில் இந்த அரசாங்கம் வைத்திருக்கிறது. இவ்வளவு கடன்களையும் விவசாயி வாங்கவேண்டும் என்றால், 18 ஆண்டுகளில் விவசாயிகள் பெற்றிருக்கும் கடன் தொகை எவ்வளவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். விவசாயக் கடன் பெருகியிருக்கிறதா, குறைந்





திருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மந்திரிசபை, விவசாயிகளைக் கடனாளிகளாக்கி விட்டது. கடன் கொடுத்து பெருமைப்படக் கூடியதுதானா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். . . .

**கனம் திரு. வெ. ராமையா:** உற்பத்தி என்ன ஆயிற்று?

**புலவர் கா. கோவிந்தன்:** நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்தார்கள். உரத்திற்கு விலை நிர்ணயம் செய்தார்கள். ஆனால், உழவனுக்கு வேண்டிய கருவிகளுக்கு விலை நிர்ணயம் செய்யவில்லை. விவசாயக் கூலிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்யவில்லை. உழவு மாடுகளுக்கு விலை நிர்ணயம் செய்யவில்லை. என்ன உறுதிப்பாடு இருக்கிறது? நிலத்தை உழுதால், உழுதபின் நிலத்திற்குத் தண்ணீர் வேண்டும். அந்தத் தண்ணீருக்கு உறுதிப்பாடு உண்டா என்றால், அந்த உறுதிப்பாடு இல்லை. மின்சாரம் கொடுக்கப்படும் என்ற உறுதிப்பாடு இருக்கிறதா என்றால், அந்த உறுதிப்பாடு இல்லை. உரம் கிடைக்கும் என்பதற்கு உறுதிப்பாடு உண்டா என்றால், அதற்கும் உறுதிப்பாடு இல்லை. பூச்சித் தொல்லையைத் தடுக்க மருந்து கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருக்கிறதா என்றால், அதற்கும் உத்தரவாதம் இல்லை. உணவுப் பொருள்கள் உரிய விலைக்கு விற்கப்படும் என்பதற்காவது உத்தரவாதம் உண்டா என்றால், அதற்கும் உத்தரவாதம் இல்லை. இந்த நிலையில் விவசாயிகளை வைத்துக் கொண்டு, விவசாயிகளைப்பற்றிப் பாராட்டுகிறார்கள். விவசாயிகள் ஏமாறமாட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். எந்த அளவிற்கு அவர்கள் ஏமாறமாட்டார்கள் என்பதை நாங்களும் 1967-இல் பார்க்கப் போகின்றோம். அப்பொழுது அந்த நிலைமை தெளிவாகிவிடும் என்று நானும் கூற விரும்புகிறேன்.

வள்ளுவர் உருவப் படத்தை இந்த மன்றத்தில் திறந்துவைக்க முதலமைச்சர் அவர்கள் வழிவகுத்தார். அதற்காக அவருக்குப் பாராட்டு. மேல்சபையிலும் வள்ளுவர் படத்தைத் திறந்து வைக்கவும் வழிவகை செய்யப்படுகிறது. அதற்கும் அவருக்குப் பாராட்டு. படத்தைத் திறந்து வைத்துவிட்டால் மட்டும் போதுமா? வள்ளுவர் திருக்குறளைப் படிக்க வேண்டாமா?

வள்ளுவர் திருக்குறளில் "மருந்து" என்னும் அதிகாரம் இருக்கிறது. அதிலே, நோய் எப்படி வருகிறது என்பதற்கான காரணம் சொல்லுகிறார். திருக்குறள் படிக்கிறேன்.

"இழிவறித் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்"

பசி எடுத்துச் சாப்பிட்டால் உடலிலே ஒட்டும். அதிகமாகச் சாப்பிடுவார்களானால் நோய் வரும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின்"

சாப்பிட்டது ஜீரணமாகிவிட்டதா என்று தெரிந்துகொண்டு சாப்பிடுகிறவர்களுக்கு மருந்தே தேவை இல்லை.

[புலவர் கா. கோவிந்தன்] [3rd August 1966

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு"

அளவறிந்து உண்பவர்களுடைய உடம்பு நெடு நாளைக்கு வாழும்.

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து"

மிகப் பசித்த பிறகு சாப்பிட வேண்டும்.

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்."

இந்தத் திருக்குறள்களில் எல்லாம் அதிகமாகச்சாப்பிட்டுச் சாப்பிட்டு வந்த நோயைத்தான் வள்ளுவர் சொல்லுகிறாரே தவிர, சோறு இல்லாமல் அதை குறைப் பட்டினியாகச் சாப்பிடுகிறவர்களுக்கு நோய் வந்ததைச் சொல்லவில்லை. வள்ளுவர் காலத்திலே தமிழ் நாட்டின் நிலைமை எப்படி இருந்தது? எல்லோரும் நிறையச் சாப்பிடக்கூடிய நிலை இருந்தது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** வள்ளுவர் அவர்கள்,

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.'—

என்றும் சொல்லியிருக்கிறார். அதைப் புலவர் அவர்கள் படிக்க மறந்து விட்டாரா? அல்லது ஞாபகம் இல்லையா?

**புலவர் கா. கோவிந்தன் :** அம்மையாருக்கே அவசரம் அதிகம். அதிகம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, முதலிலே கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே நான் ஒன்று அவரைக் கேட்டுக்கொள்ளலாம் என்று நினைத்தேன். நான் எல்லாம் படித்ததில்லை. வள்ளுவரைப்பற்றி ஒரு வகுப்பு வைத்தால் இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சௌகரியமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால், அம்மையார் குறிப்பிட்ட பிறகு, ஒரு கருத்தரங்கே வைத்துவிடலாம் என்று தோன்றியது.

**புலவர் கா. கோவிந்தன் :** முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள் அப்படியிருக்குமானால், என்னால் முடிகிற தொண்டை நான் செய்வேன் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வள்ளுவர் காலத்தில் உணவு மிகுதியாக இருந்தது. மிகுதியாகச் சாப்பிட்டதன் காரணமாக நோய் வந்தது என்று சொன்னேன். நேற்று கேள்வி நேரத்தின்போது, "ஹாஸ்டலில் இருக்கும் பிள்ளைகளுக்கு ஏன் சொறி, சிரங்கு ஏற்பட்டது?" என்ற கேள்விக்கு, "சோறு சரியில்லை, மதிய உணவு சரியில்லை" என்று பதில் அளிக்கப் பட்டதை இப்பொழுது நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். நோயைத் தடுப்பதற்கு மருந்து போடும்போது, ஊசியால் ஏற்றப்படுகிற மருந்தைக் கொண்டு செல்லக்கூடிய அளவிற்கு இரத்தம் உண்டாவதற்குத் தேவையான அளவு சோறு இல்லை. இது இந்த நாட்டின் இன்றைய நிலைமை.



3rd August 1966] [புலவர் கா. கோவிந்தன்]

வள்ளுவர், "நாடு" என்னும் அதிகாரத்தில்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்று சொல்லியிருக்கிறார். அவர் கூறியபடியா இன்று நாடு இருக்கிறது? இதுவா அவர் குறிப்பிட்ட நாடு? பசி இருக்கக் கூடாது. பசி இல்லையென்றால், பிணி இல்லை. பிணி இல்லையென்றால் பகை இல்லை. ஆகவே, பசி போக வேண்டும். இந்த ஆட்சியினர் நாட்டில் பசியைப் போக்கியிருக்கிறார்களா? "ஒரு நாள் பட்டினி இரு; திங்கட்கிழமை இரவு பட்டினி இரு; புதன் கிழமை இரவு ஒரு வேளை பட்டினி இரு" என்ற முறையில் சொல்லப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். இட்டிலி விலை ஏறுகிறதே என்றால், இட்டிலியின் விலையை ஏற்ற வேண்டாம். ஆனால், சாம்பாருக்கு விலை போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார். சென்னை ஓட்டல் முதலாளிகள் சங்கத்தில் முதலமைச்சர் அவர்கள் அவ்வாறு சொன்னார்கள். சாம்பாருக்கு விலை போடச் சொன்ன சர்க்கார் மீது இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இருக்குமா? இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

பசியும் பிணியும் பகையும் நீங்கி, வாழ்வும் வளமும் சிறக்க வேண்டும். அதுதான் நாடு என்று வள்ளுவர் கூறியுள்ளார். பசிப் பிணி நீங்கியிருக்கிறதா என்றால், பசியும் நீங்கவில்லை. பசியைப் போக்குவதுதான் அடிப்படையான காரியம். அணைக்கட்டு கட்டினோம். மின்சாரத்தை உண்டாக்கினோம். பிள்ளைகள் பள்ளிக் கூடம் போகிறார்கள். சினிமாவுக்கு மக்கள் போகிறார்கள் என்றெல்லாம் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் சாதாரண நிகழ்ச்சிகள். உதாரணம் சொன்னால், அவர்களுக்குக் கோபம் வரக்கூடும். எந்த புருஷனும் தன்னுடைய மனைவிக்கு சேலை வாங்கிக் கொடுத்திருக்கிறேன். பூ வாங்கிக் கொடுத்திருக்கிறேன், நகை பண்ணிப் போட்டிருக்கிறேன் என்று பக்கத்து வீட்டுக் காரனிடம் சொல்லிக் கொண்டிருக்க மாட்டான். அவன் கட்டின மனைவிக்கு அவன்தான் வாங்கிக் கொடுக்க வேண்டும். பக்கத்து வீட்டுக்காரனா வாங்கிக் கொடுப்பான்? அது போல, நம்முடைய பிள்ளைகளுக்கு நாம்தான் எல்லாம் செய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு உணவு அளிக்க வேண்டும். சட்டை தைத்துக் கொடுக்க வேண்டும், பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும், புத்தகம் வாங்கிக் கொடுக்க வேண்டும். நானே செய்கிறேனே? என்றால், வேறு யார் செய்வார்கள்? "நீ பெற்ற பிள்ளைக்கு வேறு யார் இதையெல்லாம் செய்வார்கள்?" என்றுதானே மற்றவர்கள் கேட்பார்கள். ஆகவே நீங்கள் ஆளுகிறீர்கள். 18 ஆண்டுக்காலம் ஆண்டு வந்திருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் செய்யக் கடமை பட்டிருக்கிறீர்கள். எங்களுடைய குற்றச்சாட்டெல்லாம் போடுகின்றீர்களே, அதை ஒரு வேளைச் சோறாவது நல்ல சோறாகப் போடக் கூடாதா என்பதுதான். அதுவும் அரை வயிற்றுச் சோறுதானே போடுகிறீர்கள்? சேலை வாங்கிக் கொடுத்தீர்கள். ஆனால், அது எட்டாத முழம்: நிற்காத சாயம். பூ வாங்கிக் கொடுத்தீர்கள். ஆனால் அது மணம் வீசாத காகிதப் பூ. இதுதானே இந்த அரசின்மீது எங்கள் குற்றச்சாட்டு.

இதைச் செய்கின்ற அரசின் மீது எப்படி நம்பிக்கை இருக்க முடியும்? இந்த நிலைமை எவ்வளவு காலத்திற்குப் பிறகு? இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? 18 ஆண்டுக் கால ஆட்சி. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள். 21,000 கோடி ரூபாய் அளவிற்குப் பாழ் படுத்தி விட்டார்கள். இவர்களிடத்தில் வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஒப்படைக்கும் நேரத்தில் 1,800 கோடி ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணி வைத்துப் போயிருந்தார்கள். அது தீர்ந்து விட்டது. வெளிநாட்டில் நான்காயிரம் கோடி ரூபாய் கடன்; உள்நாட்டில் ஆறாயிரம் கோடி ரூபாய் கடன். பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு இந்த நாட்டைக் கடனாளியாக்கி யிருக்கிறார்கள். இருந்த ரூபாயும் கறைந்தது. பத்தாயிரம் கோடி ரூபாயும் கடன். மத்திய அரசிலே அப்பொழுது போட்ட வரி 700 கோடி ரூபாய்தான். இப்பொழுது 2,500 கோடி ரூபாய் வரி. வெள்ளைக்காரன் போன நேரத்தில் மாநில சர்க்கார் போட்ட வரி 56 கோடி ரூபாய்தான். இப்பொழுது 200 கோடி ரூபாய்க்கு மேலே வரி போடப்படு கிறது. இவ்வளவும் ஆய்விட்ட பிறகு, நீங்கள் விவசாயத்திற்கு மட்டும் 3,400 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறீர்கள். 3,400 கோடி ரூபாய் செலவழித்த பிறகும் நீங்கள் ஆண்டொன்றுக்கு இந்த நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிற உணவுப் பொருள்களின் பெறுமானம் 3,400 கோடி ரூபாய். இதைக் குறித்து வெட்கப்பட வேண்டாமா? உரம் கொடுத்துவிட்டோம், மின்சாரம் கொடுத்திருக்கிறோம், கடன் கொடுத்திருக்கிறோம் என்கிறீர்களே? எங்கே அதெல்லாம்? எங்கே அதன் காரணமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள்? வந்தது என்ன, கணக்குச் சொல்ல முடிகிறதா? ஆகையால், இந்த நிலைக்குக் காரணம் யார்?

அம்மையார் அவர்கள் சொல்லும்போது, பொறுக்கு விதைகள் மூலம் உணவு உற்பத்தி செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் ஒரு விவசாயி பொறுக்கு விதை உற்பத்தி செய்து ஒரு லட்சம் ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறார் என்றால், வடார்க்காடு மாவட்டத்திற்கு என்ன ஆயிற்று? நான் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன். எங்கள் மாவட்டத்தில், "எங்கே சோறு?" என்று கேட்கிறார்கள்? ஏன் இந்த நிலை? ஒரு லட்சத் திற்கு ஒரு நபர் பொறுக்கு விதை விற்றார் என்றால், அவர் சிறு விவசாயியாக இருக்க முடியுமா? முப்பது ஏக்கருக்கு மேலே நிலம் வைத்திருக்கக் கூடாது என்று உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோமே, எங்கே அந்தச் சட்டம்? முப்பது ஏக்கர் விவசாயி ஒரு லட்சம் ரூபாய்க்குப் பொறுக்கு விதை உற்பத்தி செய்துவிட முடியுமா? அவர் உண்மையிலேயே முப்பது ஏக்கர் நிலம் தான் வைத்திருக்கிறார் என்றால், அது உண்மைக்கு மாறானதாகத்தானே இருக்க வேண்டும்? ஒன்று அது உண்மைக்கு மாறானது என்று சொல்லுங்கள். அல்லது இதையாவது உண்மை என்று சொல்லுங்கள். கதிர் அறுக்க இயந்திரம் அங்கே. ஆனால், வடார்க்காடு மாவட்டத்தில், "அப்படியென்றால் என்ன?" என்று எங்கள் விவசாயி கேட்பான். எங்கள் மாவட்ட விவசாயிக்கு அரிவாள் கூடச் சரியாக இருக்காது. யானை மேலே இருக்கிற வனைச் சுண்ணாம்பு கேட்கும் கதையாகத்தான் இருக்கிறது. கோவை மாவட்டத்தையும் மற்ற மாவட்டத்தையும் சுட்டிக்





காட்டுவது. கோவை குபேரநாடு. குபேரர்கள் ஆகிய கோயம் புத்தூர் மாவட்ட வாசிகளுக்கு இந்தச் சர்க்கார் மீது நம்பிக்கை இருக்கத்தான் செய்யும். ஆனால், எங்களுக்கு இல்லை. நாட்டு மக்களுக்கு இல்லை. ஏழை எளியவர்களுக்கு இல்லை. அதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்நாடு இந்த அரசு அப்படி விலை வாசிகளைக் கட்டுப்படுத்தி ஒரு நிலையில் வைக்கத் தவறிவிட்டது என்பதை இங்கே எடுத்துக் கூறினேன்.

அடுத்து, ஆட்சி மொழித் திருத்தச் சட்டம். நமது முதல் அமைச்சர் அவர்களுடைய திறமையின் மீது எனக்குச் சந்தேகம் கிடையாது. அவருக்குத் திறமை உண்டு. ஆனால் தைரியம் கிடையாது. ஆட்சி மொழித் திருத்தச் சட்டம் வந்தபோதே 'மே' என்பதற்குப் பதிலாக 'ஷல்' என்று போட வேண்டும் என்று சொன்னபோது 'அது தேவையில்லை என்பதற்கு மிகத் திறமை யாக, "அமைச்சர் 'மே' என்றால், செயலாளர் 'மே நாட்' என்று கூறமாட்டார்" என்பதாக வாதாடினார்கள். காரணம், அப்படிப் போட வேண்டும் என்பதாக வடக்கே உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லத் தைரியம் இல்லை. அதன் விளைவாக ஒரு போராட்டமே நடந்தது. அதற்கான பழிகளையும் அவர் எதிர்க்கட்சிகளின் மீதே சுமத்துவார். எதிர்க்கட்சிகள்தான் அதைத் தூண்டிவிட்டது என்பார். ஆனால், உண்மையிலேயே அந்தப் போராட்டத்தைத் தூண்டிவிட்டது யார்? முதல் அமைச்சர் தான் தூண்டிவிட்டது. இல்லை என்று மறுக்க முடியுமா? 'மே' என்பதற்குப் பதிலாக 'ஷல்' என்று போட வேண்டும் என்பதற்கான காரணங்களைப் புரிந்து கொண்டு, ஆரம்பத்திலேயே அதை எடுத்து வடக்கே உள்ள வர்களுக்குச் சொல்லியிருந்தால் போராட்டமே வந்திருக்காது. குதர்க்க வாதங்களைச் சொல்லி இங்கேயே மறுத்த காரணத்தினால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் சேதம், பல உயிர்களை இழக்க வேண்டிய நிலை உண்டாயிற்று. அதை உணர்ந்தார்களா? பிரதமர் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் திருத்த மசோதா கொண்டுவரப்படும் என்று சொன்னார்களே, அது உருவாயிற்றா? எனக்கு முன்னே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மசோதா கூடக் கொண்டுவரப்படுமா, படாதா என்று சந்தேகம் இருக்கிறது என்று நமது முதல் அமைச்சரே சொன்னதாகப் பார்லிமெண்டு உறுப்பினர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்று. இந்த நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்த்ததா?

நமது முதல் அமைச்சர் அவர்கள் தமிழைக் காக்கக் கடமைப் பட்டவர்கள். தமிழைக் காக்கிறார்களா என்றால் இல்லை. ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். 'இந்தி படிக்க வேண்டும் என்று கட்டாயமே இல்லை, விரும்பினால் படிக்கலாம்' என்று சொன்ன முதல் அமைச்சர் இன்றைக்குக் கட்டாயத்திற்கு ஒப்புக் கொண்டு வந்திருக்கிறார்கள். சர்வீஸ் கமிஷன் தேர்வில் தாய்மொழியின் மூலம் விடை அளிப்பதை ஒப்புக் கொண்டு அதே நேரத்தில் இந்தியிலும் கட்டாயமாக ஒரு தேர்வு உண்டு என்ற நிலையை ஏற்படுத்தினார்கள். அதற்கு ஒப்புக் கொண்டு வந்திருக் கிறார். 'இந்தியிலும் கட்டாயமாக ஒரு தேர்வு உண்டு' என்ற நிலை

புகுத்தப்பட்ட பிறகு, இந்தியைப் படித்தாலும் படிக்கலாம், இல்லாவிட்டாலும் இல்லை, கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்பதில்லை என்ற வாக்குறுதிக்கு இடம் எங்கே இருக்கிறது? கட்டாயம் இல்லை, விரும்பினால் படி, படி என்று சொன்னால் எப்படி முடியும்? மறைமுகமாக, கட்டாயம் இல்லை என்று சொல்கிற முதல் அமைச்சர் அவர்கள் கட்டாயத்திற்கு ஒப்புக் கொண்டு வந்திருக்கிறார். கட்டாயமாகப் படித்தாக வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி விட்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். அவ்வாறு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அதை அப்படியே ஒப்புக்கொள்கிறீர்களா என்று கேட்டால் நாங்கள் என்ன சொல்ல முடியும்? புலி வருமா, பசு வருமா என்று தெரியவில்லை. பசுத் தோலைப் போர்த்திக் கொண்டு வந்தாலும் உள்ளே புலி இருக்கும். அவர்கள் எப்படி அதை உருவாக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகுதான் அதன்மீது எங்கள் முடிவு இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மும்மொழித் திட்டம் என்று உருவானது. நமக்கு மும்மொழித் திட்டத்தினால் பயன் ஒன்றும் இல்லை என்று சொன்னோம். கோதாரி தலைமையில் வந்த எஜுகேஷன் கமிஷன் ரிப்போர்ட்டை வைத்துக் கொண்டு இந்துப் பத்திரிக்கையில் வந்துள்ள தலையங்கத்தில் உள்ள ஒரு பாராவைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

'Under the modified formula, pupils in the Non-Hindi regions would be studying (a) their regional language, then (b) English or Hindi and (c) a modern Indian or European language. Since few schools can afford to provide for the teaching of a modern European language other than English or of a modern Indian language other than Hindi, the formula would in effect reduce itself to the study of the mother-tongue under (a), of Hindi under (b) and English under (c), or to English under (b) and Hindi under (c). As for the Hindi regions, if pupils study Hindi under (a) and, say, English under (b), they would have no language to study under (c) for many years to come, as it has been found that the schools (in U.P., Bihar, etc.) could hardly find all the teachers to teach other modern languages, Indian or European.'

ஆகையால் இந்த நிலையில் தமிழ் நாட்டில் இருக்கிறவர்கள் மட்டும்தான் மூன்று மொழிகளைப் படிக்க வேண்டியதாக இருக்கிறதே தவிர வடக்கே இருக்கிறவர்கள் இரண்டு மொழிகளைப் படித்தால் போதும். இதைத்தான் ஒப்புக் கொள்வதற்கில்லை என்பதாகப் பலமுறை சொல்லி வந்திருக்கிறோம். நிலைமை இப்படி இருந்தால் எப்படி ஆட்சி மொழித் திட்டத்தை வகுத்துக் கொள்ள முடியும்? கனம் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். 'எங்கள் பகுதியில் உள்ள விவசாயி இந்தி படிக்க ஆரம்பித்துவிட்டான். அங்கிருந்து வடக்கே பஞ்சை அனுப்புகிறான், துணியை அனுப்புகிறான், இந்தியைப் படிக்காமல் எப்படி வடக்கே உள்ளவர்களோடு தொடர்பு கொள்ள முடியும்?' என்றார்கள். நாம் வடக்கே மட்டுமா பஞ்சை அனுப்புகிறோம், சர்க்கரையை அனுப்புகிறோம்? இந்தி





மட்டும் தெரிந்தால் வடக்கு தவிர மற்ற பாகங்களில் உள்ளவர்களோடு நாம் வர்த்தகத் துறையில் தொடர்பு கொண்டுவிட முடியுமா? விந்திய மலைக்கு அப்பாற்பட்ட எல்லாப் பகுதிகளோடும் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள முடிகிறபோது, விந்திய மலைக்கு வடக்கில் உள்ளவர்களோடு ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள முடியாதா? இதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தி தேசிய மொழி என்று ஆரம்பத்தில் ஒரு பிடி பிடித்தார்கள். அது தவறான கொள்கை என்பதைக் காலத்தினால் உணர ஆரம்பித்த பிற்பாடும் கூட அந்தப் பிடியைவிட மனம் இல்லாது பிடிவாதம் செய்கிறார்கள்.

பாடமொழித் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நானும் பல முறை சொல்லி வந்துள்ளேன். மாணவர்கள் தாய்மொழி மூலம் படிக்க முன் வருவதில்லை என்றால் எப்படி முன் வருவார்கள்? ஆட்சி மொழிக்கும், பயிற்சி மொழிக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. பயிற்சி மொழி ஒன்றாக இருக்கிறபோது, ஆட்சி மொழி வேறாக இருந்தால் எப்படி அந்தப் பயிற்சி மொழி பயன்படும்? எந்த மாணவனும் ஆட்சி மொழிக்கு வேறான ஒரு மொழியைப் பயிற்சி மொழியாக எடுத்துக் கொள்ள முன் வரமாட்டான். காரணம் அவன் படிப்பது ஒரு நானூறு, ஐநூறு ரூபாய் உத்தியோகம் கிடைக்காதா என்பதற்காகத்தானே. ஆகவே மாணவ சமுதாயம் ஆட்சி மொழி எதுவோ, அதையே தான் பயிற்சி மொழியாக்கிக் கொள்வர் என்பதை நாம் உணர மறுப்பதும், பயிற்சி மொழியை ஆட்சி மொழியாக ஆக்காமல் குளறிக் கொண்டிருப்பதும் தான் காரணம் என்பதை உணர வேண்டும். பயிற்சி மொழியையே ஆட்சிமொழியாக்க நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டால், ஏன் தாய்மொழி மூலம் பயிற்சி பெற மாணவர்கள் முன் வரமாட்டார்கள்? இதைச் செய்யத் தவறிய இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை என்ற என் கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையைப் பற்றி இந்த மந்திரி சபையினிடத்தில் எவ்வளவோ சொல்லியாகிவிட்டது. அவர்கள் கேட்பதே இல்லை. காரணம் அவர்கள் கூட்டுறவுக்காரர்கள். ஒருசிலர் வேண்டுமானால் விதிவிலக்காக இருக்கலாம். கூட்டுறவை விட்டுவிட்டுத் தேர்தலுக்கு வந்து பார்க்கட்டும். தர்மபுரித் தேர்தலில் எப்படி வந்தார்கள்? கூட்டுறவுத் துறை ஒன்றை வைத்துத்தான் தர்மபுரித் தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அதற்குள் நுழைந்துவிட்டவர்கள் இன்றைய தினம் எவ்வளவு பெரிய திமிங்கலங்களாக இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் இந்த மன்றத்தில் பலமுறை எடுத்துக் கூறினோம். தொடர்ந்து மூன்றாண்டுகள் பதவி வகித்தவர்கள் ஓர் ஆண்டாவது பதவியில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்பதாகச் சட்டத்தில் திருத்தம் செய்யுங்கள் என்று சொன்னோம். கொள்ளை அடிப்பவன் அந்த ஒரு மூன்றாண்டுகளோடாவது தொலையட்டும் என்று. செய்தார்களா? இன்றையதினம் ஆளும் கட்சியினர் கூட்டுறவுத் துறையில் அடிக்கும் கொள்ளைக்கு அளவேயில்லை. ஒரு முறை பதவிக்கு வந்துவிட்டால்—தொடர்ந்து பதவியைவிட்டு நீங்காமல், நீக்க

[புலவர் கா. கோவிந்தன்] [3rd August 1966

முடியாமல் கொள்ளை அடிக்கிறார்கள். எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை லாபம் என்பதைப்போல. இளைத்தவனாக இருந்தால் பிடித்து வழக்குப் போடுவது, வலுத்தவனாக இருந்தால் அவனுக்கு உறு துணையாக இருப்பது என்கிற ரீதியில் அரசாங்கமும் செயல்பட்டு வருகிறது. கொள்ளைக்காரர்களுக்கு இந்த அரசு துணை போகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்கு கூட்டுறவுத் துறையில் நம்பிக்கையே இல்லை. 'நம்பிக்கையை இழந்துவிட்டேன்' என்றே சொல்லி இருக்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலை, கூட்டுறவு சர்க்கரை ஆலை என்பதாக அரசாங்கப் பணம் அள்ளி வீசப்படுகிறது. அதில் நடக்கிற கொள்ளை கொஞ்சநஞ்சமல்ல; அங்குள்ளவர்கள் 5 லட்சம் ஷேர் போடுகிறார்கள். தங்கள் கைப் பணத்தைப் போடுகிறார்களா, கள்ளப் பணத்தைப் போடுகிறார்களா. ஐந்து லட்சம் ஆனவுடன் கோவாப்பரேடிவ் சென்ட்ரல் பாங்க் 20 லட்சம் கடன் கொடுக்கிறது. சென்ட்ரல் மார்க்கெட்டிங் சொஸைட்டி 20 லட்சம் கொடுக்கிறது. கவர்ன்மெண்ட் 20 லட்சம் கொடுக்கிறது. இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் 20 லட்சம் கொடுக்கிறது. கிட்டத்தட்ட இப்படி ஒரு கோடி ரூபாய் மூலதனமிடப்பட்ட ஒரு கூட்டுறவு ஆலை ஒரு காங்கிரஸ்காரர் கையில் ஒப்படைக்கப்படுகிறது. இந்தவகையில் மாவட்டத்திற்கு ஒரு காங்கிரஸ்காரர் மண்டலேசுவரர் ஆக்கப்படுகிறார்.

12-30 p.m. **திரு. ர. ஜீவரத்னம்:** எந்தக் கூட்டுறவு நூற்பு ஆலையில் இம்மாதிரி நடந்தது என்பதை விவரமாகக் கூறவேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன்:** நம்முடைய திரு. ர. ஜீவரத்தினம் அவர்கள் பகுதியிலேயே நடந்த ஒன்றைப்பற்றிச் சொல்கிறேன். ஒரு கார் 12 ஆயிரம் ரூபாய்க்கு ஒருவரால் வாங்கப்பட்டது. அப்படி வாங்கப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு அதே கார் 16 ஆயிரம் ரூபாய்க்கு நூற்பாலையால் வாங்கப்பட்டிருக்கிறது. மீண்டும் ஆறு மாதங்கள் கழித்து அதே கார் 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. இது ஏன்? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். ஆயிரம் ஊழல்கள் இருக்கின்றன, அவற்றில் இது ஒன்று. இப்படி பஞ்சிலே பணம், நூலிலே பணம், கட்டடத்திலே பணம், உற்றார் உறவினர்மேல் பணம், இந்தப் பணமெல்லாம் சென்ட்ரல் பாங்கு பணமாக இருக்கட்டும், அல்லது மார்க்கெட்டிங் சொஸைட்டி பணமாக இருக்கட்டும். அல்லது இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் பணமாக இருக்கட்டும், அது நாட்டு மக்களுடைய பணம், அந்தப் பணத்தை ஒரு கோடி ரூபாய் வரையில் இப்படிப்பட்டவர்களிடம் ஒப்படைத்திருக்கிற இந்த சர்க்கார் மீது பொது மக்களுக்கு எப்படி நம்பிக்கை இருக்க முடியும்? இப்படி நடந்திருக்கிறது இல்லையென்று அவர்கள் சொல்ல முடியுமா?

அடுத்து, நம்முடைய மந்திரிகள் நிர்வாகத்திலே நிலவிடுகின்ற கொடுமை மிக அதிகம். ஊதாரித்தனமான சுற்றுப்பயணம். செய்யாற்றிலே மாவட்டப் பள்ளிச் சீரமைப்பு மாநாடு ஒன்று நடந்தது. மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். அதற்கு பல லட்சக்



3rd August 1966] [புலவர் கா. கோவிந்தன்]

கணக்கான ரூபாய் அளவிலே மக்கள் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் இப்பொழுது சொல்லவில்லை. இந்த மன்றத்திலேயிருந்துதான் மூன்று உறுப்பினர்கள் அதைப் பற்றி அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள், வாங்கப்பட்ட பணத்திற்கு கணக்கில்லை என்று திரு. கருத்தினம் நாயுடு அவர்கள் தலைமையில் திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்களும், இன்னொருவர் திரு. கரையாளர் என்று நினைக்கிறேன், இவர்கள் கொண்ட இந்த சட்டசபை கமிட்டிதான் இப்படித் தீர்ப்பளித்திருக்கிறது. அந்த மாநாடு செய்யாற்றில் நடைபெற்றது. அதிலே முதலமைச்சர் அவர்கள், மத்திய சர்க்கார் அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், கல்வித் துறை நிபுணர்கள் எல்லோரும் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். அதே தாலுகாவிலே சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டிருக்கிறார் நம்முடைய அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள். டூர் ப்ரோக்ராமைப் படிக்கிறேன்.

Departure 2.00 p.m. Madras by car *via* Poonamallee, Sriperumbudur and Kancheepuram, arrive 4.00 p.m. Palli, 4-30 p.m. Ezahachari, 5-00 p.m. Menaloor, 5-30 p.m. Keeznaickenpalayam, 6-00 p.m. Vadakkalpakkam, 7-00 p.m. Lakshmipuram declare open the Gandhiji Statue, departure 8-00 p.m. Lakshmipuram by car *via* Kancheepuram, Sriperumbudur and Poonamallee, and arrival 10.00 p.m. Madras.

முதலமைச்சர், மாநில அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், கல்வித் துறை நிபுணர்கள் அத்தனைபேரும் கலந்துகொண்டு பெரும் விழாவாக அங்கே அந்த மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில் ஒரு மந்திரி இந்தச் சுற்றுப் பயணம் செய்கிறார். ஏனய்யா இதுபோன்ற சுற்றுப் பயணம்? டி. ஏ. வாங்கப்பட்டிருக்கிறதா? இல்லையா? அதுவும் லக்ஷ்மிபுரத்தில் காந்தி சிலையைத் திறந்து வைக்கப் போயிருக்கிறார். அங்கே ரோடு சரியாக இருக்கிறதா என்று எல்லாம் பார்க்கவேண்டியிருக்கிறது. அங்கேயிருக்கிற ஆர்.டி.ஓ. சீப் மினிஸ்டரைப் பார்ப்பாரா அல்லது திரு. பூவராகனைப் பார்ப்பாரா? ஏன் இப்படி? இங்கே உள்ள அமைச்சர்களிலே நான் ரொம்ப மதிப்பு வைத்திருப்பது உள்துறை அமைச்சர் அவர்களிடத்தில்தான். சிலர்கூட குற்றம் சொல்வார்கள். அவர் ஜாதிக்காரர். கட்சிப் பற்றைக் காட்டிலும் ஜாதிப்பற்று அவருக்கு அதிகம் என்று சொல்வார்கள். நான் அவ்வளவு குறைத்து மதிப்பிடவில்லை. வேண்டுமானால் அவர் ஜாதிக்காரர்களை கட்சிக்குக் கொண்டுவருவார் என்று சொல்லலாம். அரசங்குப்பம் காலனி, தேத்துறை சம்பந்தமாக எனக்கும் அங்கேயுள்ள டி.டபிள்யூ.ஓ.வுக்கும் தகராறு. அந்த டிஸ்ப்யூட்டைத் தீர்ப்பதற்காக அவர்கள் அங்கே வரவேண்டுமென்று 1964-ஆம் ஆண்டிலிருந்து அமைச்சர் அவர்களைக் கேட்டுப்பார்க்கிறேன். ஒரு முறை தேதி குறிப்பிட்டால், கடைசியில் வரமுடியாது என்று தந்தி வரும். கடைசியாக 30-ஆம் தேதி வந்தார். அவர் 30-ம் தேதி வருகிறார் என்று 20-ம் தேதியிலிருந்து காங்கிரஸ்காரர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர் வருகிறார் என்று ஆர்.டி.ஓ.வுக்குத் தெரியாது, கமிஷனருக்குத் தெரியாது, எனக்கும் தெரியாது. ஆனால் அங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்களுக்குத் தெரிந்திருக்கிறது. காரணம் என்னவென்றால் அசனமாப்பேட்டையில் ஒரு காங்கிரஸ் கூட்டம்

[புலவர் கா. கோவிந்தன்] [3rd August 1966

இருந்தது அதற்காக வந்திருக்கிறார், தேர்தல்காலம், அப்படியே கூட்டத்திற்கு வந்துவிட்டு அங்கேயும் வரலாம் என்று வந்திருக்கிறார். நான் பத்து முறைகள் அவருடைய அறைக்குச் சென்று அழைத்தும் வரவில்லை. அவருடைய பி.ஏ. வைக் கேட்டால் அவர் டூர் ப்ரோக்ராமை கொடுப்பார். ஆனால் அவர் கடைசியாக இப்பொழுது வரும்பொழுது நான் 30, 31-ஆம் தேதிகளில் சிவகங்கை மாநாட்டுக்குப் போகவேண்டும், எப்படிப் போவது?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் மதிப்புக்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் தொகுதிக்கு வரவேண்டுமென்றுதான் வந்தேன். இப்பொழுது ஏன்டா வந்தாய் என்று கேட்கிறார் போலிருக்கிறது. அங்கே ஹரிஜன மக்களுக்கு வேண்டிய வீட்டுமனை கொடுப்பது சம்பந்தமாகத்தான் வந்தேன். அதற்கு மட்டும் வந்துவிட்டு திரும்பி வந்துவிடுவேன். அதிலே அரசியல் பண்ணலாம் என்று நினைத்திருப்பார்கள். நான் மற்ற எல்லா வேலைகளையும் பார்த்துவிட்டுத்தான் திரும்பி வந்தேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** ஆனால், அந்த வேலைகள் எல்லாம் கட்சி வேலைகள். எனக்கு அந்தத் தேதியில் சிவகங்கை மாநாட்டுக்கு போகவேண்டும். வத்தலக்குண்டிற்கு ஆர்.டி.ஓ. போன் மூலம் தேதியை மாற்ற முடியுமா என்று கேட்டார். மாற்ற முடியாது என்று பதில் வந்துவிட்டது என்று சொன்னார்கள். பிறகு நான் வழக்கம்போல் வேண்டுகோள்மூலம் எல்லாவற்றையும் தெரிவித்துவிட்டேன். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் மந்திரிகள் கட்சி வளர்ச்சிக்காக அரசாங்கப் பணத்தை உபயோகிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்காகத்தான் சொல்கிறேன்.

இதைத்தவிர அதிகாரிகள் தலையீடு வேறு இருக்கிறது. என்னுடைய மாவட்டத்திலே சில பள்ளிகளிலே தவறுகள் நடக்கின்றன என்பதைப்பற்றி நான் பலமுறை சுட்டிக்காட்டினேன். அந்தப் பள்ளிகளிலே இருந்து மாற்றிய ஆசிரியர்களை மறுபடியும் அங்கேயே போட்டிருக்கிறார்கள். அந்த நெறியாளர் அந்த இடத்தைவிட்டுப் போனவுடனே, அந்த டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அந்த இடத்தைவிட்டுப் போனபிறகு மறுபடியும் அந்தப் பள்ளிகளுக்கு அதே ஆசிரியர்களைப் போட்டிருக்கிறார்கள். வடமனப்பாக்கத்தில் புதிதாக ஒரு ஹைஸ்கூல் திறக்கப்பட்டது. அதற்கு செய்யாறு பள்ளியிலே இருக்கின்ற திரு. முத்துகிருஷ்ணன், பி.டி. அவர்களை தலைமையாசிரியராகப் போட்டார்கள். ஆனால் அவரை அங்கே போடவேண்டாமென்று வேலூருக்கு சென்று சொல்லி அவரை சோழவரத்திற்கு மாற்றிவிட்டதாக உத்தரவை மாற்றி வாங்கிவிட்டார்கள். அந்த உத்தரவைக் கொண்டுவந்து கொடுத்தது ஒரு ட்ரில் மாஸ்டர். இப்படி உத்தரவை மாற்றக்கூடிய அளவிற்கு காங்கிரஸ்காரர்களிடம் அவருக்குச் செல்வாக்கு இருக்கிறது. காரணம், அவர் காங்கிரசைச் சேர்ந்தவர் என்பதால், அவருக்கு காங்கிரஸிலே பலம் இருக்கிறது. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பலம் கொடுக்கிறார் என்ற காரணம் தவிர வேறு என்ன இருக்க முடியும்? ஒரு சாரார் இப்படி ஒரு அதிகாரியை மாற்ற உத்தரவு பெற முடிகிறது என்றால், இன்றைக்கு



3rd August 1966] [புலவர் கா. கோவிந்தன்]

ஒருவரை இப்படி மாற்றுகிறார்கள் என்றால், நாளைக்கு அதுவே டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கும், பிறகு டைரக்டருக்கும் வந்து சேரும் நிலை ஏற்படும். ஆட்சியாளர்கள் அதிகார வர்க்கத்தினருக்கு அநீதி புரிகிறார்கள் என்பதற்கு ஒரு ஆதாரமாக இதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவும் சொல்லியாகி விட்டது. இந்த அமைச்சரவை மீது மேலும் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசினோம்; இப்போதும் சொன்னோம். வள்ளுவர் திருக்குறளிலே—

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

என்று கூறியிருக்கிறார்.

சொன்னால் பயனுடைய சொற்களைத்தான் கூற வேண்டும். இதிலே இன்னொன்றையும் பார்க்க வேண்டும். ஏ.டி.டி. 27 என்ற உயர்ந்த ரக நெல்லை எந்த நிலத்திலே போட்டாலும் விளைந்து விடாது. களர் நிலமாக இல்லாமல் பயன்தரத்தக்க நிலத்தில் போட்டால்தான் விளையும். எந்த நெல்லாக இருந்தாலும் களர் நிலமாக இல்லாதிருந்தால்தான் விளையும். அதேபோன்றுதான் கேட்கிறவர்கள் நல்லவர்களாக இருந்தால்தான் சொல்வதால் பயன் ஏற்படும்.

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி"

என்றும் கூறியிருக்கிறார். கேள்வியால் துளைக்கப்படாத செவி என்று கூறுகிறார். ஏற்கனவே காதில் இருக்கிற துளையோடு கேள்வியால் துளைக்கப்படுகிற செவி வேண்டுமென்று கூறுகிறார். இவ்வளவும் சொல்லியாயிற்று. இவை எல்லாம்

"புல்லோர்க்கு நல்லோர் சொன்ன
பொருள் எனப் போயிற்றே"

என்று போய்விடுகிறது.

கதை ஒன்று சொல்வார்கள். ஒருவன் வாழைக்காயைத் திருடிவிட்டான். அவ்வாறு வாழைக்காயைத் திருடியவனுக்கு வாழைக்காய் மாலை போட்டு ஊரைச் சுற்றிக் கூட்டிச் செல்கிறார்கள். பல தெருக்களைச் சுற்றிவிட்டு அவன் குடியிருக்கும் தெருவுக்கு வருகிறார்கள். அங்கே அவன் மனைவி தொலைவில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாள். இவன் அவளிடம் சென்று இரண்டு வாழைக்காயைப் பிய்த்துக் கொடுத்து பொரியல் பண்ணி வைக்கும்படிச் சொல்கிறான். அப்படிப்பட்டவர்களாக இருந்தால் எவ்வளவு சொன்னாலும் பிரயோசனப்படாது. கேள்வி கேட்கின்ற காலத்தில் கேளாக் காதினராக இருந்தால் 1967-ல் பொதுமக்கள் கேட்பார்கள் என்று கூறி இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லையென்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[3rd August 1966

* **திரு. ர. ஜீவரத்னம் :** மதிப்புக்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மந்திரிசபையின் மீது எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நான் இன்று காலையிலே நான்கு மணிக்கு எழுந்தவுடனே இசைத்தட்டு ஒன்று என் காதிலே ஒலித்தது. அந்தப் பாட்டு—

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட
மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சியஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை
அவனியிலே"

என்ற பாட்டு ஒலித்தது. இன்று சட்டசபையிலே எதிர்க்கட்சியினர் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள் என்ற சிந்தனை இந்தப் பாட்டைக் கேட்டவுடன் எழுந்தது. இவர்கள் என்ன குறை சொல்லப்போகிறார்கள் என்று வரும் வழியில் எல்லாம் சிந்தனை செய்து கொண்டு வந்தேன். பாட்டிலே சொன்னபடி "அஞ்சியஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்றபடி இவர்களுக்கு காங்கிரஸ்காரர்களைக் கண்டாலே ஒரு பயம்; பொது மக்களைக் கண்டாலே ஒரு பயம்.

அடுத்தாற்போல், மதிப்புக்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் என்னைப் பற்றியே கூட ஒரு வார்த்தை சொல்லிவிட்டார்கள். அதை நான் விளக்குவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். வட ஆர்க்காடு ஜில்லா கூட்டுறவு நூற்பு ஆலைக்காக பழைய கார் ஒன்றை வாங்கி அதை ஆறு மாதத்திற்குப் பிறகு 1½ அல்லது 2 ஆயிரம் ரூபாய் நஷ்டத்திற்கு விற்றதாகக் கூறினார்கள்.

**புலவர் கா. கோவிந்தன் :** நான் 'கார்' என்றுதான் சொன்னேன். பழைய கார் என்று சொல்லவில்லை.

**திரு. ர. ஜீவரத்னம் :** வாங்கியது பழைய கார். புதிய கார் கிடைக்கவில்லை என்பதற்காக மில் நிர்வாகியால் பழைய கார் 14,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டது. அதை பிறகு விற்கும்போது பத்திரிகையில் விளம்பரப்படுத்தி யார் அதிக விலை கொடுத்தார்களோ அவர்களுக்குத்தான் விற்கப்பட்டது. கார் வாங்கியதற்கும், விற்றதற்கும், எனக்கும் சம்பந்தம் எதுவும் கிடையாது. மில் நிர்வாகியின் பொறுப்பு அது.

**புலவர் கா. கோவிந்தன் :** நான் சொன்ன குற்றச்சாட்டு, 12,000 ரூபாய்க்கு ஒருவர் வாங்கிய காரை, கூட்டுறவு நூற்பாலையில் இருந்து 14,000 ரூபாய்க்கு வாங்கப்பெற்று, பிறகு ஆறு மாதம் கழித்து 12,000 ரூபாய்க்கு விற்கப்பட்டது என்பது.

**திரு. ர. ஜீவரத்னம் :** யார் என்ன விலைக்கு வாங்கினார்கள், என்ன விலைக்கு விற்றார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

(எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பலர் 'ஷேம், ஷேம்' என்றனர்.)

என்ன விலைக்கு வாங்கினார்கள், என்ன விலைக்கு விற்றார்கள் என்பதிலே எனக்குச் சம்பந்தம் இல்லை.

(எதிர்த் தரப்பிலிருந்து பல அங்கத்தினர்கள் எழுந்தனர்)



3rd August 1966]

**திரு. எஸ். முருகையன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்கிறீர்களா ?

(பல குரல்கள்)

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் உதவி சபநாயகர் அவர்களே, புலவர் அவர்கள் பேசினார்கள். இப்போது மதிப்புக்குரிய ஜீவரத்தினம் அவர்கள் பேசுகிறார்கள். அவரைப் பேச விடாது கூக்குரல் போடுவது சரியல்ல. கொஞ்சம் மரியாதையாக, கட்டுப்பாடாக நடந்து கொள்வதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது சில கூட்டுறவு நூற்பாலைகளில் மோசடி நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார்கள். நண்பர் ஜீவரத்தினம் அவர்கள் எந்த சொசைட்டியில் மோசடி என்று குறிப்பாகச் சொன்னால் நல்லது என்று கேட்டவுடன் புலவர் கோவிந்தன் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அதுபற்றிய விவாதத்தில் புலவர் கோவிந்தன் தரப்பில் எடுத்துச் சொல்லப்பட்ட வாதந்தான் வெற்றியடைந்திருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். (ஆரவாரம்)

**புலவர் கா. கோவிந்தன் :** அந்தக் கூட்டுறவு நூற்பு ஆலையின் சேர்மனை திரு. ஜீவரத்தினம் அவர்கள் அதுபற்றி ஒன்றும் தெரியாது என்று குறிப்பிட்டார்கள். கடந்த போர்டுக் கூட்டத்தில் இதுபற்றி கேள்வி எழுப்பப்பட்டு பதில் அளிக்க முடியாத நிலைமையில் கூட்டம் முடிந்திருக்கிறது. அந்த ரெக்கார்டுகள் எல்லாம் அவரிடத்தில்தான் இருக்கின்றன. அவர்கள் அதை இங்கு கொண்டு வந்து காட்டட்டும்.

**திரு. ர. ஜீவரத்னம் :** கூட்டத்தில் கேள்வி கேட்டார்கள். வாங்கின விலை சொல்லப்பட்டது. அதற்கு எல்லோரும் ஓட்டளித்தார்கள். அந்த ரிப்போர்ட்டை வேண்டுமானால் வந்து பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, "சிப்பாயைக் கண்டு அஞ்சுவார், ஊர் சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார். . ."

(பல எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எழுந்தனர்.)

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் பேசும்போது குறிப்பாக குறுக்கிட்டுப் பேசுவது என்றால் அனுமதிக்கப்படுகிறது. பல அங்கத்தினர்களும் ஒரே சமயத்தில் பேசுவது நம்முடைய சபையின் சம்பிரதாயத்திற்கு உகந்தது அல்ல.

**திரு. ர. ஜீவரத்னம் :** அவர்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் உண்டு. ஆரம்பத்தில் திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமென்று கேட்டார்கள். பார்லிமெண்டில் சட்டம் வரப் போகிறது என்று தெரிந்தவுடனே கொள்கையைக் கைவிட்டு. . .

**புலவர் கா. கோவிந்தன்:** மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் விவாதத்தில் இருக்கிறது. நம்பிக்கை இருப்பவர்கள் அதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டுமே தவிர சம்பந்தப்படாத பேச்சுகளைப் பேசுவது முறையல்ல.

**கனம் உதவி சபாநாயகர்:** அவர்கள் சொல்வதை பொருத்திருந்து கேட்க வேண்டும்.

**திரு. ர. ஜீவரத்னம்:** நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு. ஒருவரை ஒருவர் குறை சொல்வதற்கு முன்னர் தாங்கள் எவ்வளவு யோக்கியமானவர்கள் என்று பார்த்து சொல்லவேண்டும். சட்டம் கொண்டுவரப் போகிறார்கள் என்று தெரிந்தவுடனே திராவிட நாட்டுப் பிரச்னையை கைவிட்டு விட்டார்கள். "சிப்பாயைக் கண்டு அஞ்சுவார், ஊர் சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்" என்ற பாட்டு என் நினைவிற்கு வருகிறது. அதேபோன்று சட்டம் வரப்போகிறது என்பதை அறிந்து திராவிட நாட்டுக் கொள்கையை கைவிட்டு விட்டார்கள். "சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி, கிளியே" என்ற ஒரு பாட்டு உண்டு. சுதந்திரா கட்சியினர் இருக்கிறார்கள், அவர்களோடு இப்போது இவர்களுக்கு கூட்டு. சுதந்திரா கட்சியின் கொள்கையே ஏழை ஏழையாக வாழ வேண்டும், வண்ணான் மகன் வண்ணானாக இருக்கவேண்டும், நாவிதன் மகன் நாவிதனாக இருக்கவேண்டும், ஏழையின் மகன் ஏழையாகத்தான் இருக்கவேண்டும் என்பதுதான். ஏழைகள் இறந்தாலும் அவர்களுக்கு அதைப் பற்றி கவலையில்லை. ஏழை மக்கள் வாழக் கூடாது, பணக்காரர்கள்தான் வாழவேண்டும், அவர்கள்தான் நல்லபடி இருக்கவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள் சுதந்திரா கட்சியினர்.

**திரு. முனு ஆதி:** வண்ணான் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வது அவர்களை இழிவுபடுத்துவதாகும். அதை வாபஸ் பெறவேண்டும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஜாதியைப் பற்றிக் கூறும்போது ஒரு கண்ணியம் இருக்கவேண்டும் என்பது நம் சபையின் மரபு. அவர்கள் வண்ணான் என்று சொன்னார்கள். அந்த வார்த்தையை மாற்றிச் சொல்லுமாறு அவர்களுக்கு உத்தரவிட வேண்டிக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** காங்கிரஸ்காரன், காங்கிரஸ்காரன் என்று அவர்கள் கூறுகிறார்களே . . .

**திரு. இராம அரங்கண்ணல்:** தங்கள் தீர்ப்பு வேண்டும்.

**திரு. முனு. ஆதி:** வண்ணான் என்று சொல்லக்கூடாது. சலவைத் தொழிலாளி என்று சொல்லவேண்டும்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** முன்பு அவர்கள் பேசிய போது காங்கிரஸ்காரன், காங்கிரஸ்காரன் என்று குறிப்பிட்டதை அவர்கள் வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும்.





**கனம் உதவி சபாநாயகர்:** வண்ணான் என்று குறிப்பிட்டாரா அல்லது வண்ணார் என்று குறிப்பிட்டாரா, அதை நான் கவனிக்கவில்லை.

**திரு. முனு. ஆதி:** வண்ணான் என்று சொல்லக்கூடாது. சலவைத் தொழிலாளி என்று சொல்லவேண்டும்.

**திரு. ர. ஜீவரத்னம்:** "சிந்தையிற் கள் விரும்பி சிவா, சிவா என்பதுபோல் வந்தேமாதரம் என்பார் கிளியே" என்ற பாட்டு எனக்கு ஞாபகத்தில் வந்தது. தேசத்தைத் துண்டாடுவதற்கு யார் காரணமாக இருந்தார்களோ, ஏராளமான ஆண்களும், பெண்களும் கொலை செய்யப்பட்டு மரணம் அடைவதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அந்தக் கட்சியினருடன் இந்தக் கட்சிக்காரர்கள் கூட்டு கொண்டிருக்கிறார்கள். இவர்களா தேசத்தை ஆளப்போகிறார்கள்? பிரமாதமாகச் சொல்லிக் கொள்கிறார்கள். 1967-ல் பார்ப்போம் என்று கூறுகிறார்கள். அதையும் பார்த்துவிட்டால் பரவாயில்லை. சீக்கிரம் 1967 வரட்டும் என்ற நிலையில் நான் மனத்தைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொண்டு வந்தேன்.

மதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபித்து பேசியதைப் பார்த்தேன். அதில் குற்றச்சாட்டு எதுவும் என் கண்களுக்குப் புலப்படவில்லை. இந்தியைப்புகுத்தி விட்டோம் என்று சொன்னார்கள். காந்தி அடிகள் தலைமை ஏற்று காங்கிரஸ் மகாசபை போராட்டம் நடத்திய காலம் முதற்கொண்டு இந்த தேசத்திற்கு ஒரு பொது மொழி வேண்டும், அது இந்தியாக இருக்க வேண்டும் என்று அப்போது முதற்கொண்டே சொல்லி வந்தார்கள். இன்று இந்தி வேண்டாம் என்று சொல்கிறவர்கள் அன்று சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி நடத்தியவர்கள்தான். சுதந்திரமாவது கிடைப்பதாவது என்று அன்று கூறியவர்கள்தான் இன்று இந்தி வேண்டாமென்று சொல்கிறார்கள். அன்று அதை ஆதரித்தவர்கள் ஓரிருவர் இன்று இப்படிச் சொல்கிறார்கள் என்றால் அவர்கள் தங்கள் சுயநலத்திற்காகவே சொல்கிறார்களே தவிர தேசத்தின் பொது மொழி என்று எதையாவது அவர்கள் கூறியிருக்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சர்வீஸ் கமிஷன் பற்றிச் சொன்னார்கள். 14 மொழிகளிலும் பரீட்சைகள் வைக்க வேண்டுமென்றும், அதற்காக சட்டம் இயற்றவேண்டும் என்றும் சொன்னார்கள். மத்திய அரசாங்க உத்தியோகம்வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இந்தியைக் கட்டாயம் படித்தே தீரவேண்டும். தேசத்திற்கு ஒரு பொது மொழி இருக்கவேண்டுமென்றால் அது இந்தி மொழியாகத்தான் இருக்கவேண்டும். அதை மத்திய அரசாங்க வேலைக்குப் போக விரும்புகிறவர்கள் கற்றுத்தான் தீர வேண்டும். அது தமிழுக்கு விரோதி என்று யாரும் சொல்வதற்கில்லை. "2சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற பாட்டு எனக்கு நினைவிற்கு வருகிறது. நமது மாபெரும் தமிழ்த் தலைவர், நமது மாபெரும் காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ நாடார் அவர்கள் இன்று எட்டுத் திக்கிற்கும் சென்று தமிழில் தமது புலமையை

[திரு. ர. ஜீவரத்னம்] [3rd August 1966

எல்லாம் உலகிற்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யக் கூடியவர் காங்கிரஸ்காரரில்லையா? என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று அன்று நடந்தது. அது போராட்டமா? பேயாட்டம். மாணவர்களை யார் யாரோ தூண்டி விட்டார்கள். அன்று பஸ்ஸில் செல்ல முடியாது, காரில் செல்லமுடியாது, ரெயிலில் செல்ல முடியாது என்றதொரு நிலை சிருஷ்டிக்கப்பட்டது. யார் அதற்குத் தலைமை ஏற்று நடத்தினாலும், யார் அதைச் செய்தாலும் அவர்கள் யாரும் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. இந்தி மீது வெறுப்பிருந்தால் அதைத் தூண்டி விட்டவர்கள் யாராகயிருந்தாலும் 'நாங்கள் தான் தூண்டிவிட்டோம். அதற்குரிய விளைவுகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்' என்றல்லவா சொல்லியிருக்கவேண்டும். யாரோ சொன்னார்கள். அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். அப்போது தான், "சிப்பாயைக் கண்டு அஞ்சுவார், ஊர் சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்" என்ற பாட்டு என் நினைவிற்கு வந்தது. பல குடும்பங்கள் கஷ்டப்பட்டன பொது மக்கள் கஷ்டப்பட்டார்கள், போலீஸார் உயிருடனே எரிக்கப்பட்டார்கள், இதெல்லாம் நியாயமா, நீதியா? அவர்கள் மனித இனம்தானே, அவர்களும் நம் சகோதரர்கள்தானே என்று சிந்தித்துப்பார்த்தார்களா? கான்பூரில் காந்தி அடிகள் சுதந்திரப் போராட்டத்தை நடத்தியபோது அங்கு ஏற்பட்ட இந்து முஸ்லீம் கலகத்தை தீர்த்து வைக்க கணேஷ் சங்கர் வித்தியார்த்தி என்ற ஒரு காங்கிரஸ்காரர் தம் உயிரைத் திரணமாக மதித்து உயிர் நீத்தார். இங்கு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது திருப்பூரில் கான்ஸ்டேபிள் ஒருவர் கொளுத்தப்பட்டதை யாராவது தடுத்து நிறுத்தினார்களா? இவர்களை நம்பி அரசாங்கத்தை ஒப்படைத்தால் அவர்கள் நிலை என்னவாகும்? 1967-ல் அவர்களே அதைத் தெரிந்து கொள்வார்கள்.

காங்கிரஸ் அரசாங்கம் உணவு உற்பத்தியைப் பெருக்கவில்லை, விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதிகள் செய்து கொடுக்கவில்லை என்று மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். எனது நண்பர் புலவர் கோவிந்தன் அவர்கள் கடன் வாங்கி இந்த விவசாயிகளைக் கடனாளியாக்கிவிட்டார்கள் என்று சொன்னார். அவர்களுக்குள் இருக்கும் வித்தியாசத்தை இந்த இரண்டு நாட்கள் விவாதத்தில் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் உருக்காலை பற்றியும் இதில் கூறியிருக்கிறார்கள். சேலம் உருக்காலை அமைவது பற்றி நமது முதல் அமைச்சர் அவர்களுக்கும், காங்கிரஸ் அக்கிராசனர் அவர்களுக்கும் உள்ளதை விட அதிக அக்கறை உடையவர்கள் யாரும் இல்லை. அவர்களால் நடக்காதது இவர்களால் நடக்கும் என்பது நம்பக் கூடிய சமாசாரமா. திருமதி குழந்தையம்மாள் அவர்கள் கூறியது போன்று சேலம் உருக்காலை வரத்தான் போகிறது. வந்த பிற்பாடு நாங்களும் அதுகுறித்துச் சொன்னோம், எங்களால்தான் வந்தது



3rd August 1966] [திரு. ர. ஜீவரத்னம்]

என்று தேர்தல் சமயத்தில் சொல்வதற்காக இதையும் சேர்த்திருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். அவர்கள் வேண்டுமென்றாலும் சரி, வேண்டாமென்றாலும் சரி சேலம் உருக்காலை வந்துதான் தீரும். ஒரு தொழிலை ஆரம்பித்து நடத்தவேண்டும் என்றால் அதற்கு எவ்வளவு மூலதனம் போடவேண்டும், அதற்கு நிர்வாகச் செலவு எவ்வளவு ஆகும், இதற்கு எத்தனை அளவுக்கு ரூபாய் தேவைப்படும், டிவிடென்ட் எந்த அளவுக்குக் கிடைக்கும் என்பதைப் பற்றி யெல்லாம் பார்த்துக்கொண்டுதான் ஒரு தொழிலை ஆரம்பிக்கவேண்டும். இவற்றைப் பற்றி பரிசீலிக்க வேண்டியிருப்பதால்தான் இவ்வளவு கால தாமதம் ஆகிறதே தவிர எப்படியும் உருக்காலை வந்தே தீரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உருக்காலை வருகின்ற நேரத்தில் நாங்கள் மட்டு 1-00 p.m.
மல்ல, நீங்களும் சந்தோஷப்படத்தான் போகிறீர்கள், எதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோம் என்று அன்றைக்கு நீங்கள் வருத்தப்படத்தான் போகிறீர்கள் என்பதை மட்டும் இப்போதே நான் கூறிக்கொள்கிறேன்.

நகரசபைக் கலைப்பைப்பற்றிச் சொல்லப்பட்டது. வேலூர் நகரசபையைப் பற்றிச் சொல்லப்போனால் மிகவும் மோசமாக இருக்கும். இதைப்பற்றி சொல்லவே வேண்டாம் என்று நினைக்கிறேன். அவ்வளவு மோசம் நடந்து கொண்டிருக்கிறது. லஞ்சம் நடக்கிறது என்று சொன்னார்கள். அங்கே லஞ்சம் என்பது சகஜமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள ரோட்டை எடுத்துக் கொண்டால், ஒரு கர்ப்ப ஸ்திரி வண்டி வைத்து ஆஸ்பத்ரிக்கு கொண்டு போகப்பட்டால் (குறுக்கீடு) அதாவது வண்டிமாடு போகின்ற போக்கில், வண்டியிலேயே பிரசவித்து விடுவாள். அந்த அளவில் முனிசிபாலிட்டி நிர்வகிக்கின்ற ரோடு இருக்கிறது. நிர்வாகத்தில் இவர்களுடைய தலையீடு தான் அதிகம். ஒழுக்கம் என்பதே சீர்கெட்டுப் போய்விட்டது. அவ்வளவு மோசமாக இருக்கிறது. குறிப்பாக நகரசபைத் தலைவர் தன்னுடைய உறவினர் ஒருவருடைய பெயரில் தான் எல்லா காண்டிராக்ட்டும். அவர்களுடைய வேலையாட்கள் எல்லாம் என்ஜினியரிங் சிப்பந்திகள். சர்க்கார் சிப்பந்திகளை அவர்களே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். (எதிர்க்கட்சிப் பக்கத்திலிருந்து குறுக்கீடு) அங்கே நடைபெற்றுக்கொண்டிருப்பதைத்தான் சொல்லுகிறேன். இன்னும் பல காரியங்கள் நடைபெறுகின்றன, அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. . . (எதிர்க் கட்சிப் பக்கமிருந்து, குறுக்கீடு) மேலும் . . .

புலவர் கா. கோவிந்தன்: நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள், வேலூர் நகரசபையைப்பற்றி பேசுகிறார்கள். நகரசபையின் சார்பில் பதில் சொல்வதற்கு இங்கு யாரும் இல்லை. ஆகவே, அவர் சொல்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். அவற்றை நிரூபிப்பதற்கு பொறுப்பேற்கிறேன் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் பேசவேண்டும். அப்படிப்பட்ட ஒரு பழக்கத்தை நாம் கடைப்பிடித்து வருகிறோம். அப்போது வழக்குமன்றத்திற்கு வரும்போது அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியும் . . .

**திரு. ர. ஜீவரத்னம்:** நான் மிகுந்த பொறுப்போடு தான் பேசுகிறேன், பொறுப்புணர்ச்சி இல்லாமல் பேசவில்லை. பொறுப்போடு தான் நான் இந்தக் குற்றச்சாட்டுகளை சொல் கிறேன். அதற்கான பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள் கிறேன் . . . (எதிர்க்கட்சி வரிசையிலிருந்து: என்ன குற்றச் சாட்டுகள்? . . . ) என்ன குற்றச்சாட்டுகள் என்பதை எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம், மேடையில் அவற்றைப் பேசிக் கொள்ளலாம். ஆகவே, நிர்வாகத்தை நல்லமுறையில் நடத்தாத நகரசபைகள் பல கலைக்கப்பட்டு விடுமோ என்ற பயத்தினால் தான் இப்போதே, ஒரு அணை போடுவது மாதிரி அந்த நகரசபையைக் கலைத்துவிட்டார்கள். இந்த நகரசபையை கலைத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். எங்கே இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கீழ் இருக்கும் நகரசபை என்ன வாகுமோ என்ற பயம் அவர்களுக்கு. அங்கேயுள்ள குறைகள் எல்லாம் இவர்களுக்குத் தெரியும், இந்த இடத்தில் அவர்கள் ஒத்துக்கொள்ள தயாராக இல்லை, அவ்வளவு தான்.

இன்னும் கொஞ்ச தூரத்தில் வரும்போது திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய தூத்துக்குடி, கல்லக்குடி போராட்டம் பற்றியும் எழுதப் பட்டிருந்தது. அதில் பிராமணர்களை என்ன என்ன செய்யவேண்டும், பிராமணக் குழந்தைகளை என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் சொல்லியிருந்த வார்த்தை களையும் பார்த்தேன். அதற்குக் கீழே ராஜாஜி அவர்களின் பக்தர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்பதைச் சொல்வது போன்று ராம பக்தர்கள் என்றும் போட்டிருந்தது. ராமபக்தர்கள் என்றால் என்ன பொருள் என்பதை எல்லோரும் அறிவார்கள். அதாவது இராமாயணத்தில் ராமன் வானரங்களைச் சேர்த்துக்கொண்டது போல், காங்கிரஸை எதிர்ப்பதற்கு ராஜாஜி இவர்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற பொருளில் தான் எழுதப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** மதிப்பிற்குரிய நண்பர் ஜீவரத்னம் அவர்கள் நாமம் போட்டிருக்கிறார்கள், அவர்கள் என்ன பக்தர் என்பதை அறிந்து கொள்ளலாமா? . . .

**திரு. ர. ஜீவரத்னம்:** எனக்கு பாதகம் வரக்கூடிய வகையில் இன்னும் கொஞ்ச தூரத்தில் வரும்போது. எழுதப்பட்டிருந்தது. அதாவது 'நாமத்தைக் கண்டால் நாவினால் நக்கு' என்று எழுதப் பட்டிருந்தது . . .

**திரு. மு. கருணாநிதி:** ஸார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கனம் உறுப்பினர் அவர்கள், உண்மைக்கு மாறான விஷயத்தை தான் நேரில் கண்டதாக சட்டசபையில் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 'நாமத்தைக் கண்டால் நாவினால் நக்கு' என்று, இன்றைக்கு காங்கிரஸ்காரர்களை அழைத்துக்கொண்டு போகும் பெரியார் ராமசாமி அவர்களின் ஆட்கள் வேண்டு மென்றால் எழுதியிருக்கக்கூடும். இவ்விதம் எழுதியவர்கள் நிச்சய மாக திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாக இருக்க முடியாது என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் கண்ணைத் திறந்து பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** மதிப்பிற்குரிய நண்பர் ஜீவரத்னம் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அவர்கள் நெற்றியில் நாமம் இட்டிருக்கிறார்கள், அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகக்காரராக இருந்தாலும் சரி, நண்பர் அவர்கள் நாமமிட்டிருப் பதால் சற்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் . . .

**திரு. மு. கருணாநிதி:** நண்பர் ஜீவரத்னம் அவர்கள் இதற்காக பயப்படவேண்டியதில்லை, நண்பர் சுவாமிநாதன் அவர்கள் அவ்விதம் ஒன்றும் செய்துவிட மாட்டார் . . .

**திரு. ர. ஜீவரத்னம்:** இதையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்தேன். ஏற்கனவே பல கொள்கைகளை வைத்திருக்கக்கூடிய இவர்கள் சட்டசபையில் வந்து இப்படிப்பட்ட நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வர மாட்டார்கள், இவர்கள் அடிக்கடி கொள்கைகளை மாற்றிக்கொள்வது போல், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விஷயத்திலும் தங்கள் முடிவை மாற்றிக்கொள்வார்கள், அல்லது வாபஸ் பெற்றுக்கொள்வார்கள் என்று என் மனத்திற்கு அப்போது பட்டது, அதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மெடிகல் காலேஜைப்பற்றிச் சொன்னார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை 2, 3, கல்லூரிகள் இருந்தன, இப்போது ஏழு கல்லூரிகள் இருக்கின்றன. இதில் தேறிய மாணவர்கள் எப்படியாவது இடம் கிடைத்துவிடாதா என்று மெடிக்கல் காலேஜுக்கு அப்ளிகேஷன் போடுகிறார்கள். அப்ளி கேஷன் போடுவதோடு, சென்னைக்கு வரலாம், சென்னையையும் வந்து பார்த்துவிட்டு போகலாம் என்று வருகிறார்கள். அப்படி அட்மிஷன் கிடைத்துவிட்டால், எப்படியாவது டாக்டர்களாக நாமும் வந்துவிடக்கூடாதா என்ற நினைப்பில் அப்ளிகேஷன் போடுகிறார்கள். வைத்தியக் கல்லூரியைப் பொறுத்தளவில் 4,000 பேர்களில் 1,000 பேர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இன்னும் அதிகமான பேர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றால், இன்னும் அதிகமான கல்லூரிகளை ஏற்படுத்தவேண்டும். அதிகமான கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்றால் இன்னும் பணம் வேண்டும், அதற்காக வரிகள்போடவேண்டும். புதிய வரிகளை போட்டால், இவர்களே எதிர்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆகவே, இருக்கின்ற இடங்களை ஓரளவுக்கு பரிசிலனை செய்து பார்த்து, எந்தெந்த அளவுக்கு தேர்ந்தெடுக்க முடியுமோ அந்த அளவுக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதிகமான அளவில் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றால் அதிகக் கல்லூரிகள் வேண்டும். அதற்கு வரிகளைத்தான் இன்னும் அதிகமாகப் போட வேண்டும், அல்லது கடன் வாங்கவேண்டும். இதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, நம்முடைய நேரத்திலேயே நம்முடைய ராஜ்யத்தின் நிர்வாகம் தான் திறமையாக நடை பெறுகிறது என்பது இந்தியாவிலுள்ள எல்லோருடைய

அபிப்பிராயம். காரணம், நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கண்ணியமானவர், நேர்மையானவர், இதை எதிர்க் கட்சியினரே தாராளமாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். கனம் சட்டசபை அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கூடச் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்களின் திறமையைப் பற்றி அவர்கள் சந்தேகிக்கவில்லை என்று. திறமையானவர் தான் ஆனால் போதிய தைரியம் இல்லை என்று சொன்னார்கள். நமது முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டிய தைரியம் இருக்கிறது, ஆனால் இவர்களை நம்பக் கூடிய தைரியம் இல்லை, காரணம் இவர்களை நம்பினால் காலை வாரி விட்டுவிடுவார்கள். நமது முதலமைச்சர் அவர்களுக்குப் பொதுமக்களுடைய நம்பிக்கை இருக்கிறது, பொது மக்களுடைய ஒத்துழைப்பு இருக்கிறது. அதைத் துணையாகக் கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் தைரியத்தோடு இந்த தேசத்திற்கும், குறிப்பாக, இந்த மாநிலத்திற்கும் சிறந்த காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். அதிலும் முக்கிய மாக எதிர்கட்சியினருக்கு அவர்கள் அளிக்கக் கூடிய சலுகைகள் மிகவும் அதிகம். என்னைப்பொறுத்தவரையில் எந்த விதமான சலுகைகளையும் அளிக்கவில்லை. நான் கேட்டது ஒரு ஹைஸ்கூல். அதைக் கூட அவர்கள் கொடுக்கவில்லை. எதிர்க் கட்சியினரை எடுத்துக்கொண்டால் எத்தனையோ ஹைஸ்கூல்களைக் கொடுத்திருக் கிறார்கள். இதுவே மிகவும் பாராட்டப்பட வேண்டிய தைரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில், விஞ்ஞான முறை களை அமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள். அப்படி பல விஞ்ஞான முறைகளை ஏற்படுத்த வேண்டுமென்றால் நிலங்களுக்கு உச்ச வரம்பு போடவேண்டும். அப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டால், சுதந்திராக் கட்சி தலைவர் அவர்கள் அதை ஒத்துக் கொள்வார்களா என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். மேலும், விஞ்ஞான முறையைப் புகுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவுக்குப் பரவும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஏற்கனவேயே வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதோடு நவீன முறைகளையும் புகுத்தினால் இந்த தேசத்திலுள்ள மக்களில்—45 கோடி மக்களில் 22½ கோடி மக்கள் அவதிப் படுவார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1½ கோடி மக்கள் விவசாயத் துறையில் இருக்கிறார்கள். நவீன முறைகளைப் புகுத்தினால் இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா என்பதை யும் பார்க்கவேண்டும். ஏதோ கணக்குக்குச் சொல்லலாமே தவிர உண்மையில் அது சரியான கருத்து அல்ல என்பதைத் தெரியப் படுத்திக்கொள்கிறேன்.

பிறகு விலைவாசி ஏராளமாக உயர்ந்துவிட்டது என்று அவர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். விலைகள் எப்படி உயர்ந்து விட்டது? அன்றைக்கு 45 ரூபாய் சம்பளம் வாங்கியவன் இன்றைக்கு 200 ரூபாய் சம்பளம் வாங்குகிறான்; அன்றைக்கு ரூ. 30 சம்பளம் வாங்கியவன் இன்றைக்கு ரூ. 130 சம்பளம் வாங்கு கிறான்; அன்றைக்கு 8 அணா கூலி வாங்கியவன் இன்றைக்கு ரூ. 3,



ரூ. 3-50, ரூ. 4 கூலி வாங்குகிறான். கோயம்பத்தூரில் ரூ. 5-க்குக் குறைவாக யாருக்கும் கூலி கிடையாது என்று சொன்னார்கள். என்னுடைய நகரத்தை எடுத்துக்கொண்டால் ரூ. 3, ரூ. 4 தினக் கூலி பெறுகிறார்கள். விவசாயக் கூலி ரூ. 2-50க்குக் குறைவாகக் கிடையாது. பெண்களுக்கு 8 அணா கூலியாக இருந்தது. இன்றைக்கு ரூ. 1-50-க்குக் குறைவாகக் கிடையாது. கொல்லத்துக் காரர்களுக்குக் கூலி கூடியிருக்கிறது. தச்சு வேலைக்காரர்களுக்குக் கூலி கூடியிருக்கிறது. எல்லோருக்கும் கூலி கூடியிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் ஏராளமாக உயர்ந்திருக்கிறது. வாழ்க்கைத்தரம் ஏராளமாக உயர்ந்திருக்கும் நிலையில் எந்த விலை கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிடவேண்டுமென்ற நிலையில் அவர்களே வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமோ அவைகளையெல்லாம் அரசாங்கம் செய்துகொண்டிருக் கிறது. ஏராளமான கூட்டுறவு சொஸைட்டிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. எங்கள் நகரத்தில் கூட ஒரு கூட்டுறவு சொஸைட்டி இருக்கிறது. கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாக ஓரளவுக்கு விலைகள் கட்டுப்படுத்தப்பட்டுத் தான் இருக்கிறது. நெல் விலை வட ஆற்காட்டில் கூடிவிட்டது, காஞ்சிபுரத்தில் கூடி விட்டது என்று பேசினார்கள். எங்கள் ஜில்லாவில் அதிகமாகக் கூடியதாக என்னைப் பொறுத்த வரையில் தெரியவில்லை. வேலூர் தான் விலை ஏற்றத்திற்கும், வீழ்ச்சிக்கும் காரணமாக இருக்கிறது. அங்குகூட விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. விலையைக் குறைக்கவேண்டுமென்றால் துரதிருஷ்டவசமாக இந்த வருஷம் மழை இல்லாமல் போய்விட்டது. மழை பெய்திருந்தால் ரூ. 1 அல்லது ரூ. 1-10-க்கு வந்திருக்கும். இயற்கையின் சோதனையின் காரணமாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று அவரைப் பாராட்ட வேண்டும். அடிக்கு ஒரு தடவை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, ஆறு மாதத்திற்கு ஒரு தடவை, ஒரு வருஷத்திற்கு ஒரு தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவது என்ற முறையை வகுக்கவேண்டாம் என்று எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம்:** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மந்திரிசபை மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி, இந்த மந்திரி சபை ராஜினுமா செய்யவேண்டும் என்ற அடிப்படையில் தீர்மானத்தை வலியுறுத்தி என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் அவர்கள் சில போஸ்டர்களில் திராவிட முன்னேற்றக் கழகம் இப்படியெல்லாம் பிரசாரம் செய்தது என்று குறிப்பிட்டு இங்கே பேசினார்கள். நாம் சில சந்தைக்கடைகளிலும் பார்த்திருக்கிறோம். சிலர் பிக்-பாக்கெட் அடித்துவிட்டு, பிக்-பாக்கெட் அடித்தவர்களே, 'அதோ பார்! திருடன் போகிறான்!' என்று கூச்சல் போடு

வார்கள். அதே போலத் தான் சில போஸ்டர்களில் அப்படிப் பட்டவர்களே சிலர் எழுதிவிட்டு, 'திராவிட முன்னேற்றக் கழகத் திற்கும் சுதந்திராக் கட்சிக்கும் பார்த்தாயா தொடர்பு!' என்று பேசுவது போல இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். . .

**திரு. ர. ஜீவரத்னம்:** திராவிட முன்னேற்றக் கழகத் தினுடைய கொள்கை 10 வருஷங்களுக்கு முன்னே அம்மாதிரி இருந்ததா இல்லையா, அப்போது எழுதினார்களா இல்லையா என்று கேட்கிறேன். அப்படி எழுதவில்லை என்று மறுக்க முடியுமா?

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலத்திலிருந்து என்றைக்கும் அத்தகைய கொள்கையைக் கடைபிடித்ததில்லை என்று அழுத்தம் திருத்த மாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ர. ஜீவரத்னம்:** கொள்கை இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். எங்கள் ஊருக்கு வந்தால் 10 ஆண்டுகளுக்கு முன் தாரில் எழுதியதைக் காட்டுகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்:** அந்த அடிப்படையில்தான் அந்தத் தரப்பிலிருந்து பேசப்படக் கூடிய வாதங்கள் இருக்கின்றன என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக இந்த நாட்டிலே ஆண்டுகொண்டிருக்கிற காங்கிரஸ் சர்க்கார் தங்கள் அதிகாரத்தை எந்த வகையில் பயன் படுத்துகிறது என்பதைப் பற்றி இரண்டொரு பிரச்னைகளை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நேற்றைய தினம் கூட இந்தச் சட்டமன்றத்தில் கனம் அங்கத்தினர் கலியாண சுந்தரம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தப் பிரச்னை சங்கரி, ஓமலூர் வட்டத்தைச் சேர்ந்த வனவாசிபக்காடு கிராமப் பகுதிகளில் வாழக்கூடிய 750 குடும்பங்கள், கிட்டத்தட்ட 2,000-க்கு மேற்பட்ட மக்கள், 20 ஆண்டுகளாக அங்கு தர்காஸ்து நிலங்களைப் பிடித்து உழுது வருகிறார்கள். அந்த நிலங்களிலிருந்து அவர்களை அகற்ற வேண்டுமென்று அந்த வட்டாரத்தினுடைய சட்ட மன்ற உறுப்பினர், காங்கிரஸ் உறுப்பினர், திரு. அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள், பல வகைகளில் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 1946-வது ஆண்டிலிருந்து எடுத்துக்கொண்ட முயற்சி தொடர்ந்து இருந்து வந்தது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இப்போது அங்கத்தினர் குறிப்பிடுகிற விஷயத்தைப் பற்றி நானும் விடை அளிக்கவேண்டுமென்றால், இப்போது வழக்கு கோர்ட்டில் இருக்கிற காரணத்தினால் விடை அளிக்கக் கூடாத நிலையில் இருக்கிறேன். ஆகையால் தங்கள் கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர்:** இது சம்பந்தமாக வழக்கு இருப்ப தாகச் சொல்லப்படுவதால், இது பற்றிக் கனம் அங்கத்தினரும் குறிப்பிடக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.





**திரு. சோ. ஆறுமுகம்:** இந்தப் பிரச்னையைப் பற்றிச் சொல்லு வதிலே அமைச்சர் அவர்கள் தன் பதிலை எல்லா விதத்திலும் அளிக்காவிட்டாலும்கூட, தற்போது மக்கள் அவதிப்படுவதை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது. கோர்ட்டில் ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறது. 1958-ம் ஆண்டு சர்க்காரும் அங்குள்ள மக்களும் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். சர்க்காரில் வசூல் செய்யும் தீர்வையைச் செலுத்தி வரவேண்டியது என்று.

SRIMATHI T. N. ANADANAYAKI: Sir, on a point of order. Since the matter is *sub-judice*, the hon. Member should not express any opinion on it.

**கனம் உதவி சபாநாயகர்:** வழக்கைப் பற்றிச் சொல்ல வேண்டாம், வேறு சொல்லுங்கள்.

**திரு. சோ. ஆறுமுகம்:** வழக்கு எந்த வகையில் முடிவு அடையப் போகிறது என்று குறிப்பிடவில்லை. மக்கள் அவதிப் படுவதை எடுத்துச் சொல்லும் வகையில்தான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்களை போலீஸ்காரர்கள் லாரிகளில் ஏற்றி 150 மைல்களுக்கு அப்பால் விட்டுவிட்டு வருகிறார்கள். போலீஸ்காரர்கள் தலையீடு இருக்கிறது; அதற்கு அமைச்சர்களும் உறு துணையாக இருக்கிறார்கள். காரணம் காங்கிரஸ் உறுப்பினர் சொல்லுகிறார் என்பதால். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டி ருக்கும் நேரத்தில் இப்படிப்பட்ட கேடான நிலைமையைச் செய்யலாமா, அப்படிச் செய்தால் இந்த மந்திரி சபையின் மீது மக்களுக்கு நம்பிக்கை இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் காங்கிரஸில் இருப்பவர்கள் பலர் நீதி மன்றங்களில்கூட தலையிடுகிறார்கள். சில வழக்கறிஞர் களை அரசாங்கத் தரப்பு வக்கீல்களாக நியமிப்பதில்கூட தலையிடு கிறார்கள் என்பதற்கு ஆதாரத்தை என்னால் குறிப்பிட்டுக் காட்ட முடியும். தர்மபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டபிறகு அதற்கு ஒரு பப்ளிக் பிராஸிக்யூட்டர் தனியாக நியமனம் செய்தார்கள். அதற்குப் பல வழக்கறிஞர்கள் தங்கள் மனுக்களைச் செய்து கொண்டார்கள். ஆனால் அத்தனை பேர்களிலும் திறமையானவர் என்று குணசேகர நாயுடு என்பவரை பப்ளிக் பிராஸிக்யூட்டராக தர்மபுரி கோர்ட்டுக்கு நியமித்தார்கள். நியமிக்கப்பட்டு இரண்டு மாதங்கள்தான் ஆகியது. உடனே, சேலம் செஷன்ஸ் கோர்ட்டுக்கு அடிஷனல் பப்ளிக் பிராஸிக்யூட்டர் நியமிக்கவேண்டுமென்று ஏற்பட்டது. இவர் உத்தியோகத்தில் இருந்துகொண்டு சேலம் அடிஷனல் பப்ளிக் பிராஸிக்யூட்டராக இருப்பதற்கு மனுச் செய்து கொண்டார். அவருடைய மனுவைச் சர்க்கார் நிராகரித்தார்கள். ஒரு இடத்தில் இருந்து கொண்டு மனுச் செய்துகொள்ளக் கூடாது என்று அதே மனுவில் எழுதி மனுவைத் திருப்பி அனுப்பினார்கள். ஆகவே, அவர் அதைப் பெற்றுக்கொண்டு, உடனே ராஜிநாமா செய்துவிடுகிறேன் என்று சொன்னார். அவரை சேலத்தில் அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டராகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று மீண்டும் மனு செய்துகொண்டார். அந்த மனுவை

பரிசிலனை செய்து அவர் சேலம் அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டராக நியமனம் செய்யப்பட்டார். அந்த குணசேகர நாயுடு என்பவர் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்று சர்க்கார் கருதினார்களோ என்னவோ, எங்களைப் பொறுத்தவரையில், ஒன்று தெரிய வருகிறது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசுவாமி நாயுடுக்கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகவே, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்களின் தலையீட்டின் பேரில்தான் அவர்களுக்கு சேலத்தில் இப்படிப்பட்ட பொறுப்பைக் கொடுத்தார்கள் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்களுக்கும் திரு. குணசேகர நாயுடு அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று சொன்னார்கள். தொடர்பு என்றால் என்ன, அதற்குப் பொருள் புரியவில்லை.

**திரு. சோ. ஆறுமுகம்:** வகுப்பு அடிப்படையில் உண்டு. அதே நோத்தில் அந்த உத்தியோகத்தைப் பெற்றுத்தருவதற்கு அவர் உறுதுணையாக இருந்தார் என்பதற்குக் குறிப்புகள் இருக்கின்றன. தங்களுக்கு யார் தேவை என்பதைப் பார்த்து, அவர்களுக்குத்தான் நாட்டிலே உத்தியோகம் கிடைக்கும் என்ற நிலைமை இருந்து வருகிறது. காங்கிரஸ் உறுப்பினர்களாக இருந்தால்தான், அந்தப் பக்கத்தில்தான் அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் என்ற நிலைமை நாட்டில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் இந்த மந்திரி சபையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் எப்படி நம்பிக்கை இருக்கும் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, சேலம் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலையைப் பற்றி இங்கு பல அங்கத்தினர்களும் பேசினார்கள். அந்தத் தொழிற்சாலை என்னுடைய தொகுதியில் ஏற்பட இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி நான் பேசுவது, அங்குள்ள மக்களுடைய நிலைகளை நான் எடுத்துச் சொல்வது நியாயம் என்ற அடிப்படையிலே நான் இந்தப் பிரச்னைக்கு வருகிறேன். 1964-ம் ஆண்டுக்கு முன்பாக 22,000 ஏகர் நிலங்களை நாங்கள் எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று சர்க்கார் கெசெட்டில் விளம்பரம் செய்தார்கள். 1962-63-லிருந்து நிலத்தை சர்வே செய்த காலத்திற்கு முன்பாகவே பொது மக்களுக்கு ஒரு பீதி ஏற்பட்டது. சர்க்கார் தங்களுடைய நிலத்தை எப்பொழுது எடுத்துக் கொள்ளப்போகிறார்களோ, தம்முடைய நிலத்தில் எந்தவிதமான அபிவிருத்தி வேலையும் செய்வதற்கில்லை என்ற அச்சத்தில் இருந்தார்கள். ஆனால் 1964-ம் ஆண்டில் விளம்பரம் செய்தார்கள், நிலத்தை எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று. 1964-ம் ஆண்டுக்கு முன்பாக மின்சாரம் கோரியும், மின்சாரம் தருவதற்கு மின்சார போர்டு அங்கீகாரம் கொடுத்தும், அந்தப் பகுதியிலே மின்சார இணைப்புக் கொடுப்பதை தடை செய்திருக்கிறார்கள். இருபத்திரண்டாயிரம் ஏகர் நிலங்களில் உணவு உற்பத்தி செய்வதை, அந்த நிலங்களை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்துவதைத் தடை செய்து நிறுத்துகிற





அந்த நிலையில்தான் இந்தச் சர்க்காரின் போக்கு இருக்கிறதே தவிர, அந்த இடத்தில் திட்டங்கள் ஏற்படக்கூடிய வழிவகை காணப்படுகிறதா என்றால், நிச்சயம் இல்லை. இந்த இலாகாவை ஏற்றுக் கொண்டிருக்கிற தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் விடாப்பிடியாக, ஆமைப் பிடியாக பிடித்துக்கொண்டிருக்கிறார். நிச்சயம் இந்தத் தொழிற்சாலை உண்டு என்று இந்த சட்டமன்றத்திலும் சொல்லியிருக்கிறார், மேல் சபையிலும் சொல்லியிருக்கிறார். சேலம் கனி கனிந்து விட்டது, நாம் எல்லாம் அருந்தலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். பயன் என்ன? இன்றைய தினம் நிலைமை எப்படி இருக்கிறது. திரு. வெங்கட்டராமன் அவர்கள் பேச்சு வெண்டைக்காய் குழம்பு போல் வழ வழ என்று இருக்கிறது என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. மத்திய சர்க்கார் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிடுவார்கள் என்ற நிலைமை ஏற்பட்டதும், தொழில் அமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்னையில் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் அந்த வாதத்தை எடுத்துக்கொண்டு பேசினார்கள், நிச்சயம் இந்தத் தொழிற்சாலை உண்டு, இதை நம்பலாம் என்று பல முறை பேசியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசியதற்குப் பின் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்த்தால், சேலம் இரும்புத் தொழிற்சாலை வரக்கூடியதாக இருக்கிறதா என்றால், நிச்சயம் இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாதத்திலும், பேச்சிலும் நம்பிக்கை இருந்தாலும், அவர்களுக்கு ஒரு பயம் இருக்கிறது. மத்திய சர்க்காரிடம் அவர் எதையோ எதிர்பார்ப்பது போல் அவருடைய நிலை இருந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நமது மாநிலத்தில் முன்பு கவர்னராக இருந்த திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தபோது, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வேண்டும் என்று கேட்டபொழுது, மத்திய சர்க்கார் கொடுக்க மாட்டேன் என்று சொன்னாலும், 'நீங்கள் இதற்கு ஒத்துக் கொள்ளாவிட்டால் நான் இந்தப் பதவியிலிருந்து ராஜிநாமா செய்வேன்' என்று சொல்லி, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையைப் பெற்றார். அந்தமாதிரி துணிவு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வாராததற்குக் காரணம் என்ன? ஒரு வேளை அவர்களை மிரட்டி பயமுறுத்தினால், அவர்கள் அதற்கு காது கொடுக்காவிட்டால், ராஜிநாமாவை எழுதி அனுப்பினால், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தின் காரணமாகவா என்று தெரியவில்லை. நமது முதலமைச்சருக்கு பதவியின் மீது ஆசை இருக்கிறது; பதவி ஆசை போகவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. சேலம் இரும்புத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், மத்திய சர்க்காரிடம் வாதாடி, அதைப் பெறும் ஆற்றலும், திறமையும் அவருக்கு இல்லை. ஆகவே, தொழில் துறையில் பின்தங்கியிருக்கிற தமிழகத்திற்கு மத்திய அரசிடம் வாதாடி இந்தத் தொழிற்சாலையை பெற்றுத் தரமுடியாத இந்த சர்க்காரின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு எப்படி நம்பிக்கை இருக்க முடியும்? நாட்டி-

ஆள்ள எதிர்க்கட்சியினர் எப்படி நம்புவார்கள்? நாட்டிலுள்ள மக்கள் எப்படி நம்புவார்கள்? ஆகவே ராஜிநாமா செய்வதைவிட இவர்களுக்கு வேறு என்ன வழி இருக்க முடியும்?

விவசாய உற்பத்தியில்கூட அப்படித்தான். சர்க்கார் போடக்கூடிய திட்டங்களின் பலன் அனைத்தும் விவசாயிகளுக்கு நேரடியாகப் போய்ச் சேருவதில்லை. இடையிலே இருக்கக்கூடிய திமிங்கிலங்கள் இதை விழுங்கிவிடுகின்றன. ஏழை விவசாயிகளுக்குப் போய்ச் சேரக்கூடிய உதவிகள் அனைத்தும் செல்லாத காசாகத்தான் இருக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. விவசாயத்தில் முன்னேறியிருக்கக்கூடிய தஞ்சை போன்ற மாவட்டங்களை மட்டும் வைத்துக்கொண்டு பேசுவதில் பிரயோசனம் இல்லை. சேலம் மாவட்டத்தில் பார்த்தால் அங்குள்ள விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபகரமானதாக உள்ளது. அவர்கள் எந்த வகையில் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உரம் காலாகாலத்தில் '' கிடைக்கிறதா என்றால், அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகள் செய்து தரப்படுகிறதா என்றால், நிச்சயம் இல்லை. சர்க்கார் விவசாயத் திட்டங்கள் ஏட்டளவில் இருக்கின்றனவே தவிர, விவசாய இலாகா, ஒன்று இருப்பதை நாம் பார்க்கிறபொழுது, அது பேப்பர் அளவில் இருக்கிறதே தவிர, செயல்படக்கூடிய அளவில் இல்லை. விவசாயிகளை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய ', நிலையில் விவசாயிகளுக்கு நல்ல முறையில் பலன் அளிக்கக்கூடிய வகையில் வட்டார அளவுக்கு விவசாய திட்டங்கள் பரவலாக அமைந்திருக்கின்றனவா என்றால், நிச்சயமாக இல்லை. விவசாயிகள் வாழ வழி செய்யப்படவில்லை, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு வழி செய்யப்படவில்லை. அப்படியிருக்கும் பொழுது இந்த சர்க்கார் பேரில் நாட்டிலுள்ள மக்கள் யார்தான் நம்பிக்கை வைக்க முடியும்? பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின் சோஷலிஸம் பேசுகிற இந்த சர்க்கார், சோஷலிஸம் பேசுவதற்கு முன்பு இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு சரியாக சோறு கிடைக்க வழி செய்திருக்கிறதா? மக்களுக்கு சோற்றுக்கு வழி உண்டா? கிராமப்புறங்களில் ஒரு சிறிய படி சோளம் ஒரு ரூபாய் விற்கிறது, ராகி ஒரு ரூபாய் விற்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VIII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*Nil.*





### B. Reports, Notifications and other papers.

* 12. The Madras Cultivating Tenants (Protection from Eviction) Bill, 1966.

† 13. Speech of Sri M. Bhaktavatsalam, Chief Minister, on the First Supplementary Estimates 1966–67 (Tamil and English).

‡ 14. Demands for Grants for Further Expenditure and the Detailed Supplementary Estimates thereof for the year 1966-67.

‡ 15. Report of the Committee on Rules, 1966.

* Despatched to Members on 1st August 1966.

† Circulated to Members on 2nd August 1966.

‡ Laid on the Table of the House on 2nd August 1966.

APPENDIX

[*Vide* answer to Starred Question No. 41 on page 213.]

List of Delegates from India to the International Conference Seminar of Tamil Studies at Kuala Lumpur.

1. Sri M. Bhaktavatsalam—*Chief Minister.*
2. Sri V. Karthikeyan, I.A.S.
3. Sri A. S. Gnanasambandam.
4. Sri I. Mahadevan, I.A.S.
5. Sri M. Shanmughasubramaniam.
6. Sri R. Nagasamy.
7. Prof. T. P. Meenakshisundaram.
8. Sri V. R. Nedunchezhiyan, M.L.A.
9. Sri Saw. Ganesan, M.L.A.
10. Sri M. P. Sivagnana Gramani.
11. Dr. M. Varadarajan.
12. Dr. K. K. Pillai.
13. Prof. M. A. Dorairangasamy.
14. Prof. L. P. K. R. Ramanathan Chettiar.
15. Prof. V. S. P. Manickam Chettiar
16. Sri P. Thirugnanasambandhan.
17. Dr. M. Arokiasami.
18. Dr. M. Rajamanickam.
19. Dr. M. Shanmugham Pillai.
20. Srimathi Nirmala Ramachandran.
21. Sri K. M. Balasubramaniam.
22. Sri K. V. Jagannathan.
23. Kumari Vijaya Bharathi.
24. Rev. Father V. M. Gnanaprakasam.
25. Sangeetha Bhushanam, Veenai S. Ramanathan
26. Kumari Masillamoney.
27. Prof. A. Srinivasaraghavan.
28. Sri T. K. Shanmugham.
29. Sri P. T. Rajan.
30. Sri A. Raghavan.
31. Sri K. Palaniappan.
32. Sri K. P. S. Hameed.
33. Dr. M. Manuel.
34. Dr. (Mrs.) Prema Nanda Kumar.
35. Sri S. Maharajan.
36. Prof. V. I. Subramaniam.
37. Prof. K. Arumugham.



38. Sri N. D. Sundaravadivelu.
39. Sri A. Subbiah.
40. Srimathi Sarojini Varadappan.
41. Sri V. S. Thyagaraja Mudaliar.
42. Dr. T. E. Gnanamurthi.
43. Srimathi A. Subbiah.
44. Srimathi Jaya Arunachalam.
45. Sri V. P. Raman.
46. Srimathi P. T. Rajan.
47. Sri S. V. Natarajan.

கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதிகளின் பட்டியல்.

1. ஸ்ரீ மீ. பக்தவத்சலம், முதலமைச்சர்
2. ஸ்ரீ வே. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.
3. ஸ்ரீ அ. ச. ஞானசம்பந்தம்
4. ஸ்ரீ ஐ. மகாதேவன், ஐ.ஏ.எஸ்.
5. ஸ்ரீ எம். சண்முகசுப்பிரமணியம்
6. ஸ்ரீ ஆர். நாகசாமி
7. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்
8. ஸ்ரீ வி. ஆர். நெடுஞ்செழியன், எம்.எல்.ஏ.
9. ஸ்ரீ சா. கணேசன், எம். எல். ஏ.
10. ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணி
11. டாக்டர் மு. வரதராஜன்
12. டாக்டர் கே. கே. பிள்ளை
13. பேராசிரியர் மொ. அ. துரை அரங்கசாமி
14. பேராசிரியர் லெ. ப. கரு. ராமநாதன் செட்டிய
15. பேராசிரியர் வ. சு. ப. மாணிக்கம் செட்டியார்
16. ஸ்ரீ பி. திருஞானசம்பந்தன்
17. டாக்டர் மு. ஆரோக்கியசாமி
18. டாக்டர் மா. ராஜமாணிக்கம்
19. டாக்டர் எம். சண்முகம் பிள்ளை
20. ஸ்ரீமதி நிர்மலா ராமச்சந்திரன்
21. ஸ்ரீ. கே. எம். பாலசுப்பிரமணியம்
22. ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்
23. குமாரி விஜயபாரதி
24. அருட்திரு வி. எம். ஞானப்பிரகாசம்
25. சங்கீத பூஷணம் வீணை எஸ். ராமநாதன்
26. குமாரி மாசிலாமணி

[3rd August 1966

27. பேராசிரியர் அ. ஸ்ரீநிவாசராகவன்
28. ஸ்ரீ டி. கே. ஷண்முகம்
29. ஸ்ரீ பி. டி. ராஜன்
30. ஸ்ரீ ஏ. ராகவன்
31. ஸ்ரீ கே. பழநியப்பன்
32. ஸ்ரீ கே. பி. எஸ். ஹமீது
33. டாக்டர் எம். மானுவல்
34. டாக்டர் (ஸ்ரீமதி) பிரேமாநந்த குமார்
35. ஸ்ரீ எஸ். மஹாராஜன்
36. பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம்
37. பேராசிரியர் கே. ஆறுமுகம்
38. ஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு
39. ஸ்ரீ ஏ. சுப்பையா.
40. ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன்
41. ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார்
42. டாக்டர் டி. இ. ஞானமூர்த்தி
43. ஸ்ரீமதி ஏ. சுப்பையா
44. ஸ்ரீமதி ஜெயா அருணாசலம்
45. ஸ்ரீ வி. பி. ராமன்
46. ஸ்ரீமதி பி. டி. ராஜன்
47. ஸ்ரீ எஸ். வி. நடராஜன்

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 4th August 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### டாக்டர் அம்பேத்காருடைய நூல்கள்.

*61 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கனம் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில புத்தகங்களைத் தமிழாக்கி எல்லா நூலகங்களுக்கும் கொடுக்கவும், வேண்டுமென்கிறவர்களுக்கு விலைக்குக் கொடுக்கவும் திட்டம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில் எப்பொழுது அத் திட்டம் மேற்கொள்ளப் படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் சுய சரித்திரம் நம்முடைய நூலகத்தில் கூட இருக்கிறது. அவர்களுடைய புத்தகங்களை ஆதித்திராவிட மக்கள் படித்தால், பிற்காலத்தில் அவர்களுடைய வாழ்க்கைக்கு அது உதவியாக இருக்கும். ஆனால், கனம் அமைச்சர் 'இல்லை' என்று சொல்லுகிறார்கள். அந்த விஷயத்தை மறுபரிசிலனை செய்து, அவர்கள் என்ன என்ன கருத்துக்களைச் சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, அந்தப் புத்தகங்களை தமிழாக்கி, எல்லா நூலகங்களிலும் வைக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: டாக்டர் அம்பேத்கார் நூல்கள் என்று சொன்னால், எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. என்னென்ன புத்தகங்களை மொழி பெயர்க்க வேண்டும். எதைப் பற்றிச் சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை. அதையெல்லாம் கவனிக்க (Bureau of Tamil Publications) தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம் என்று இருக்கிறது. இன்னும் வேறு ஸ்தாபனங்களும் இருக்கின்றன. அவ்வப்பொழுது அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

[4th August 1966

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், டாக்டர் அம்பேத்கார் புத்தகம் என்று சொன்னால், அவர் அரசியல் சட்டம் எழுதியதைப் பற்றிச் சொல்லவில்லை. அரிஜனங்களுக்கும், அவர்களுடைய முன்னேற்றத்திற்கும் அவர்களுடைய உரிமையைக் காத்துக் கொள்ளவும் அம்பேத்கார் ஒரு புது அணுகும் வழியைக் கையாண்டார்கள். அதனால் காந்திஜிகூட அவரோடு பேசி ஒப்பந்தம் செய்ய வேண்டியிருந்தது. ஆகவே, அப்படிப்பட்ட புத்தகங்களை மொழி பெயர்க்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா? அல்லது யாராவது தனியார் முயற்சி எடுத்தால், சர்க்கார் உதவி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கேள்வி கேட்ட அங்கத்தின ருடைய உள்ளக் கருத்தைப்பற்றி, உப கேள்வி கேட்ட கனம் அங்கத்தினர் தெரிவித்ததற்காக அந்த கனம் அங்கத்தினர் சார்பாக நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்கிறேன். (சிரிப்பு) அரிஜன நல இலாகா அவ்வப்பொழுது பிரசுரங்கள் வெளியிடுகிறது. அதையும் பார்க்கலாம். என்னென்ன புத்தகங்கள் அறிவு வளர்ச் சிக்கு அவசியம் என்று கருதப்படுகிறதோ, அவை தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தாலும் வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு இலாகாவும் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சார், டாக்டர் அம்பேத்கார் திரு உருவப் படங்களைச் சர்க்கார் பணி மனைகளிலும், நீதி மன்றங் களிலும் வைக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** முக்கிய கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி எழுவதில்லை. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** டாக்டர் அம்பேத்கார் ஒரு சிறந்த அறிவாளி. இன்னது என்று இல்லாமல், அவர்களுடைய எல்லாப் புத்தகங்களையுமே தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும் என்று அரசு வழி வகை செய்யுமா? தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கு அந்தக் கருத்தைத் தெரிவிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுதான் முதலிலேயே சொன்னேன். அறிவாளிகள் பல பேர் இருக்கிறார்கள், பல புத்தகங்கள் எழுதியிருக்கலாம். அவற்றில் எவற்றையெல்லாம் மொழி பெயர்த்தால் நலம் என்று தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம் ஆராய்ந்து செய்கிறது.

'சுதந்திரப் போராட்ட வீரர்கள் யார் யார்?'

* 62 கேள்வி—**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் தேசீய சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட தியாகிகளின் தொகுப்புப் புத்தகம் வெளியிட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா?



4th August 1966]

(இ) இத் தியாகிகளின் பட்டியலில் சுதந்திரப் போராட்டத் திற்குத் துணை நின்ற பத்திரிகைகள், எடிட்டர்கள், பத்திரிகை ரிப்போர்ட்டர்கள் முதலியவர்களையும் சேர்த்துக்கொள்ள உத்தேச முண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes. A 'Who is Who of Freedom Fighters in Madras State is under complilation.

(b) As the name denotes, the publication will contain particulars only in respect of persons who have taken part in Freedom Struggle inclusive of the names of Editors, Press Reporters, etc., regardless of their subsequent activities. But the names of Newspapers will have no place in such a publication.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சார், சுதந்தரப் போராட்ட காலத்தில், தேசீயப் பணியில் பங்கு பெற்ற காரணத்திற்காக, தமிழ் நாட்டிலிருந்து வெளியான பத்திரிகைகள் சில நிறுத்தப்பட்டன. அப்படித் தண்டனை அடைந்த பத்திரிகைகள் விவரம் அரசாங்கம் சேகரித்து வைத்து இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அத்தகைய தகவல் என்னிடம் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களுடைய சரித்திரம் பற்றி ஒரு நூல் தொகுத்துக் கொண்டு இருப்பதாக கனம் முதல் அமைச்சர் தெரிவித்தார்கள். அதில், அவர்கள் ஆற்றிய பங்கு. . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விவரங்கள் என்றால், அது 'Anthology' -ஆக இருக்கும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** விவரமாக அது எந்த முறையில் தொகுக்கப்படுகிறது, தொகுக்க என்னென்ன முயற்சிகள் எடுக்கப் படுகின்றன, அப்படிப் பங்கு பெற்றவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாலும் இடம் பெறுவார்களா, ஆளும் கட்சியைச் சேர்ந்திருந்தால்தான் சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பதில் படித்தேன். கனம் அங்கத்தினர் சரியாகக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். "regardless of their subsequent activities" என்று படித் திருக்கிறேன். பின்னால் அவர்கள் எப்படி இருந்தாலும், விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களாக இருந்தால், 'Anthology' என்று ஆங்கிலத்தில் சொல்லலாம், அந்த முறையில் தயாரிக்கத் திட்டம். அது அகில இந்தியத் திட்டம். அந்தத் திட்டத்தின் கீழ் ஆங்காங்கே கமிட்டியாக நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. பல துறைகளிலிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

[4th August 1966

**திரு. இராம. அரங்கண்ணல் :** சுதந்திர வீரர்கள் சரித்திரம் பற்றி விவரங்கள் சேகரிக்க மாநில அளவில் குழுக்கள் இருக்கின்றனவா? தலைமை தாங்குகிறவர்கள் யார், அங்கம் வகிப்பவர்கள் யார் யார்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. விவரங்கள் என்னிடம் இல்லை. ஒரு சிறிய குழு அமைத்து, அந்தக் குழு இது பற்றிக் கவனம் செலுத்தி வருகிறது.

(Sri M. Kalyanasundaram rose)

MR. SPEAKER : Next question. I wish to remind the hon. Member that we have got 40 questions to be answered to-day. So, I am sorry, I cannot allow more than one minute for each question.

SRI M. KALYANASUNDARAM : Just one supplementary, Sir.

MR. SPEAKER : No, no. I am sorry.

*Children's Encyclopædia*

*63 Q.—SRI V. SANKARAN. Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have proposed to give any aid to the Tamil Valarchi Kazhagam (தமிழ் வளர்ச்சிக் கழகம்) towards their preparation and publication of Children's Encyclopaedia (சிறுவர் கலைக் களஞ்சியம்) in Tamil; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The project " Compilation and Publication of Children's Encyclopædia in Tamil " undertaken by the Tamil Valarchi Kazhagam, Madras is receiving financial aid from both the Government of India and the Madras Government. The Government of India have agreed, in principle, to the payment of Rs. 5.5 lakhs or one half of the actual expenditure on the project whichever is less. This Government have also sanctioned the payment of a grant of Rs. 2 lakhs or 25 per cent of the actual expenditure whichever is less. The grants from both the Government of India and this Government are payable in instalments.

**திரு. வை. சங்கரன் :** தமிழில் சிறுவர் கலைக் களஞ்சியம் தொகுத்து வெளியிடுவதற்கு ஏதாவது காலவரையறை விதிக்கப்பட்டிருக்கிறதா? அந்தத் தொகுப்பைச் சரிபார்க்கவோ, பரிசீலனை செய்யவோ அரசாங்கத்திற்கு ஏதாவது உரிமை இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் வளர்ச்சிக் கழகம் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள்தான் முன்வந்தார்கள். அவர்கள்தான் அரசாங்க உதவியை நாடினார்கள். அரசாங்கம் இம்மாதிரி உதவி அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறது. அவர்கள் இப்போதே அந்த வேலையை மேற்கொண்டிருக்கிறார்கள்.



4th August 1966]

**புலவர் கா. கோவிந்தன் :** சிறுவர் கலைக் களஞ்சியம் தொகுத்து வெளியிடுகின்ற அந்தக் குழுவில் யார் யார் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவிக்க முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் வளர்ச்சிக் கழகம் தான் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே யார் யார் இந்தப் பணியைக் கவனித்து வருகிறார்கள் என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

கோயில் அர்ச்சகர்களுக்குச் சம்பள உயர்வு.

*64 கேள்வி—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள பல பெரிய தேவாலய அர்ச்சகர்கள், ஊழியர்கள் தங்களுக்கு சம்பள உயர்வு கோரி சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டும் முறையிட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The South Indian Archakas Association, Madras in its 16th Annual Conference held in November 1964 at Madras passed a resolution that the Dittams in the temples are too low to meet the necessities of the poojas in the temples, that they may be enhanced, and that the previleges shown on Non-Gazetted Officers may be granted to the Archakas also;

(b) The Commissioner, Hindu Religious and Charitable Endowments has issued instructions to the Executive Authorities of Religious Institutions to revise the Dhittam regarding the payment of salaries of Archakas according to the cost of commodities and the income of the institutions.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** பல தேவாலயங்களில் அர்ச்சகர்களுக்கு, முன்பிருந்த முறைப்படி, தானியங்களாகவே வழங்கக்கூடிய நிலை இருந்தது. இப்பொழுது ரேஷன் காரணமாக, வெளியிடங்களிலிருந்து நெல் முதலிய தானியங்கள் போவதற்கு சில சிரமங்கள் காரணமாகவும், நெல் முதலிய தானியங்களை அந்தந்த இடங்களில் கொள்முதல் செய்வதன் காரணமாகவும், அர்ச்சகர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகவும் குறைந்த அளவுக்கே இருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் இவ்வளவாவது வருமான அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்ற நியதியை வகுத்து, இந்து அறநிலைய போர்டாரிலிருந்து தாக்கீது கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஊழியர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுவதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எவ்வளவு தூரம் அதைச் செய்ய முடியும் என்பது அந்தந்த ஸ்தாபனங்களின் வருவாயைப் பொருத்ததாக இருக்கிறது.

[4th August 1966

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** பெரிய தேவலாயங்களில் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய பாசுரங்கள் ஓதுகின்ற ஓதுவாமூர்த்திகளுக்குக் கொடுக்கின்ற சம்பளம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அதை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை காணுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசாங்கம் நேரடியாக வழிவகை காண முடியாது. ஆனால், அற நிலைய இலாக்காவினர் இதைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

ஸ்ரீரங்கம் தேவஸ்தானம்.

* 65 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தில் சம்பிரதாயத்திற்கு விரோதமாக நிர்வாக அதிகாரியால் டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

*துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய விதிமுறைகள்.*

* 66 கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மக்கள் கிளர்ச்சி செய்யும்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதுபற்றிய விதி முறைகளை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

**திரு. செ. மாதவன்:** இந்த விதிமுறைகளை மாற்றுவதற்கு புதிய தொகுப்பு ஒன்றைச் சென்னையிலுள்ள கமிஷனர் வெளியிட்டது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? வெளியிடுவதற்கு முன்னால் அதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறப்பட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கமிஷனர் அவர்கள், தன்னுடைய அனுபவத்தையொட்டி, சொந்த அபிப்பிராயத்தைத் தான் தெரிவித்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய நிமித்தம் இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றபோது, முதல் தடவையாகப் பயமுறுத்துவதற்காகச் சுடப்படுகிற முறையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? அல்லது, எடுத்த எடுப்பிலேயே கொல்லுவதற்கு என்ற முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?



4th August 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த விவரங்களையெல்லாம் அதிகமாக எடுத்துக் கூறுவதற்கில்லை. ஆனால், எடுத்த எடுப்பிலேயே கொல்லுவது என்ற நிமித்தம் அடியோடு கிடையாது.

**திரு. செ. மாதவன்:** துப்பாக்கியிலிருந்து வெளிவருகிற குண்டுகள் ஒன்றும் பயன்படாமல் போகக் கூடாது, ஒவ்வொரு குண்டுக்கும் ஒரு பிணம் வரவேண்டும் என்ற கருத்தைக் கமிஷனர் தெரிவித்தது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கமிஷனர் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அதை அரசாங்கம் ஆராய வேண்டிய நிமித்தம் இல்லை. ஏனென்றால், அது அவருடைய சொந்தக் கருத்து.

*Police excesses.*

* 67 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have received any petition from a member of the Assembly on 2nd February 1966 explaining police excesses in Velliankundram and Sakkudi villages in Madurai taluk; and

(b) if so, the action taken on it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

**திரு. செ. மாதவன்:** இதுபற்றி உள்துறை இலாகா செயலாளருக்கு மனு அனுப்பப்பட்டது. அந்த மனு பரிசீலனை செய்யப்பட்டதா? விசாரணை செய்யப்பட்டதா? அந்த மனுவின் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசாங்கத்தினிடம் தகவல் இல்லை என்று சொன்னேன். ஆனால், விசாரணை நடத்தப்பட்டது. விதிப்படி நடத்த வேண்டிய விசாரணை நடத்தப்பட்டு, அஸிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் பேரில் செய்யப்பட்ட புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.

**திரு. செ. மாதவன்:** உள்துறை இலாக்காச் செயலாளரிடம் நேராகவே கொண்டு சென்று கொடுக்கப்பட்டது. விசாரணை நடத்தியபோது, அங்கே உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை விசாரித்தார்களா? கொடிக் கம்பம் ஒடிக்கப்பட்டது என்பதாவது அந்த விசாரணையிலிருந்து புலப்பட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விசாரிக்கப்பட்டது என்று சொன்னேன். இந்தச் சம்பவங்களைப் பற்றியெல்லாம் விசாரிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி, அசிஸ்டென்ட் சூப்பரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் பேரில் செய்யப்பட்ட புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று ஏற்பட்டது என்றுதான் சொல்வேன்.

[4th August 1966

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் புகார் சம்பந்தமாக விசாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை இந்தச் சபை முன் வைக்கலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

*Scheme for production of steel at Doddampatti.*

* 68 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any scheme has been envisaged for the production of high speed steel and other alloy steels in private sector, with the collaboration of an American Company at Doddampatti in Salem district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) In August 1961, Messrs. All Steel Industries Corporation, Limited, have been granted a licence for the establishment of a factory at Doddampatti in Salem district for the manufacture of the following items with the collaboration of Messrs. Latrobe Steel Company of U.S.A.

| | | |
|---|---|---|
| Tool Steels .. .. | 7,000 | tonnes per annum. |
| Constructional Steels .. | 12,500 | Do. |
| Other alloy Steels excluding stainless steel. | 17,600 | Do. |
| Alloy Steel Castings .. | 12,900 | Do. |

திரு. வை. சங்கரன் : இந்தத் தொழிற்சாலையில் எப்பொழுது உற்பத்தி தொடங்கப்படும்? அமெரிக்கன் கொலாபரேஷனுடைய அளவு எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திட்டம் தான் தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். மொத்தமாக 'ஃபிக்ஸெட் அஸெட்ஸ்' ஒரு கோடி ரூபாய்க்கு இருக்கும். 'ஃபாரின் கொலாபரேஷன்' உடன் இதைத் தொடங்குவதாக உத்தேசம்.

***Aluminium plant in Periakulam***

* 69 Q.—SRI V. SANKARAN. Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have proposed to set up an aluminium plant in Periakulam in Madurai district utilising the extensive Bauxite deposits located in the Kodai and Palani Hills; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

**(b) Does not arise.**



4th August 1966]

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே, கொடைக்கானல் மலையிலும், பழனி மலையிலும் பாக்ஸைட் டெபாஸிட்ஸ் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவற்றை எப்பொழுது எடுத்துப் பயன் படுத்தி அலுமினியம் உற்பத்தி செய்வதாக சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது எவ்வளவு கிடைக்கும் என்பதெல்லாம் ஆராயப்பட்டு வருகிறது. 1967-ம் ஆண்டு தொடக்கத்தில்தான் எவ்வளவு கிடைக்கும் என்று தெரியும். அதற்குப் பிறகு எத்தகைய தொழிற்சாலையை அமைக்க முடியும் என்று பரிசிலனை எடுத்துக் கொள்ளப்படும்.

*Fertilizer Plan near Madras.*

* 70 Q.—SRI M. KALYANASUNDARAM : } Will the
SRI V. SANKARAN : }
Hon. the Chief Minister be pelased to state the details of the proposal for starting **a Fertiliser Plant near Madras?**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government of India have prposed to set up a fertilizer factory in the public sector as an adjunct to the petroleum refinery near Manali, with **the colloboration of the American International Oil Company.**

திரு. வை. சங்கரன் : அமெரிக்கன் கொலாபரேஷனின் அளவு என்ன ? அந்த தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படுவதாக இருக்கிறது ? அந்தத் தொழிற்சாலையின் 'கபாசிடி' என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government **of India have decided to set up a petroleum refinery with a capacity of 2.5 tonnes of crude petroleum at Manali. In the refinery complex, a fertiliser project with an annual capacity of 2,00,000** tonnes of nitrogen to produce mostly complex fertilisers will **also be set up among others.**

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் உர வகைகள் நமது ராஜ்யத்திற்கே பயன்படுமா? விலை நிர்ணயிக்கும் உரிமை யாருக்கு இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் நம் மாநிலத்திற்கே பயன்படும் என்று சொல்ல முடியாது. "ஆல்-இண்டியா ஃபர்ட்டிலைஸர் பூல்" இலிருந்து பல மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விலை எப்படி இருக்கும் என்பது பற்றிய விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதர ராஜ்யங்களுக்குப் போவதைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. இதில் அமெரிக்கர்கள் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இங்கு உற்பத்தி செய்யும் உர வகைகளுக்கு அவர்கள் இஷ்டப்படி விலை நிர்ணயிக்கலாம், அவர்கள் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும், வெளி நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி

[4th August 1966

செய்யலாம் என்ற வகையில் ஒப்பந்தத்தின் ஷரத்து ஒன்று இருக்கிறது என்பது உண்மையா? அப்படியிருந்தால், அதை எப்படி நமது ராஜ்யத்திலே ஏற்றுக்கொண்டார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அத்தகைய தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை.

**Mr. SPEAKER:** Question No. 71 is postponed at the request of the Government.

ஹரிஜன நல இலாகாவில் பணி புரியும் துணை சேவக்குகள்

*** 72 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன இலாகாவில் சென்ற ஆண்டு வரை எத்தனை டிப்டி சேவக்குகள் பணியாற்றி வந்தனர், ஜில்லாவாரியாக?

(இ) அவர்களில் எத்தனை பேர் இப்போது வேலை செய்து வருகின்றனர்?

(உ) அவர்களுக்கு இப்போது என்ன பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது?

(எ) அவர்களின் அலுவல் விவரம் என்ன?

(ஐ) ஹோட்டல்களில் தீண்டாமை பாராட்டப்படுவதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறதா?

(ஒ) இல்லையெனில், அவர்களுக்கு அந்த அதிகாரம் வழங்க உத்தேசமுண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்** (அ) முதல் (ஒ) வரை: சபைமுன் விவர அறிக்கை[*] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** இந்தக் குழுவிற்கு அவகாசம் இருப்பதன் காரணமாக, நிலங்களுக்குரிய ஏ.பி. லிஸ்ட் என்பதைத் தயாரிக்கக்கூடிய வேலையை இந்தக் குழுவிற்கு ஒப்படைப்பது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** பிரசாரத்திற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலையை அவர்கள் சரியாகச் செய்ய வேண்டும். அவர்களுக்கு இதர வேலைகளைக் கொடுத்தால் சரியாகச் செய்யமாட்டார்கள். கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற வேலையை அரிசன நல இலாக்கா சம்பந்தப்பட்ட அன்பர்களும் மற்றவர்களும் பார்க்கக் கூடும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** இவ் விலாகாவில் பணி செய்கின்ற டெபுடி சேவக்குகளுக்கு மாதம் எவ்வளவு சம்பளம். கொடுக்கப்படுகிறது? அவர்களுக்கு ஏதேனும் விசேஷ அலவன்ஸ், கிராக்கிப்படி கொடுக்கப்படுகிறதா என்று அறியலாமா?

* 441–442-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது



4th August 1966]

**கனம் திரு. பூ. கக்கன்:** முன்னால் எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட்டதோ அதுவேதான் இப்போதும் கொடுக்கப்படுகிறது. விசேஷமாக ஒன்றும் கொடுக்கவில்லை.

**திரு. சோ. ஆறுமுகம்:** டெபுடி சேவக்குகள் எந்தத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** ஹரிஜன சேவையில் எவ்வளவு தூரம் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்று பார்க்க வேண்டும். நன்றாகப் பாடத் தெரியுமா என்றும் பார்க்க வேண்டும். பிரசாரம் செய்வதற்குப் பாட்டும் அவசியமாக இருக்கிறது.

*** 73 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன நல இலாகாவில் பணி புரியும் டிப்டி சேவக்குகளின் தற்போதைய சம்பளம், படித்தொகை என்ன?

(இ) அவைகளை உயர்த்தும் உத்தேசமுண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) சம்பளம்—மாதம் ரூ. 80 (இது நிலைச் சம்பளமாகும்).

அகவிலைப்படி—இவர்களுக்கு இல்லை.

பயணப்படி—வெளியூர்களில் உள்ளவர்களுக்கு, தமிழ்நாடு பயணப்படி விதிகளுக்கிணங்க பயணப்படி அனுமதிக்கப்படுகிறது. சென்னை மாநகரில் உள்ளவர்களுக்கு வண்டிச் செலவிற்காக மாதம் ரூ. 16 தரப்படுகிறது.

(இ) இல்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** தற்போதைய ஊதியத்தைப் பெற்றுக் கொண்டே கூட இத்தகைய ஊழியர்கள் தங்கள் வேலைகளுக்கு இடைஞ்சல் இல்லாத அளவுக்கு முன்னால் விதித்திருந்த பணிகளைச் செய்ய முடியும் என்பதாக சம்பந்தப்பட்ட ஜில்லா ஹரிஜன இலாக்கா அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அத்தகைய பணிகளையும் அவர்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

Mr. SPEAKER: It is a hypothetical question.

**திரு. சா. கணேசன்:** இந்த டெபுடி சேவக்குகளுக்குக் கல்வி அடிப்படையில் குறைந்த பட்ச தகுதி இன்னவாவது இருக்க வேண்டுமென்று வரையறை செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்த வரையறை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** பொதுவாக எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டுமென்று இருக்கிறது. சில சமயங்களில் பிரசாரத்தில் நல்ல திறமை உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு விதி விலக்குக் கொடுக்கவும் கொடுக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : எல்லாச் சர்க்கார் ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி கொடுக்கும்போது ஹரிஜன இலாக்காவில் பணியாற்றுகிற டெபுடி சேவக்குகளுக்கு மட்டும் கிராக்கிப்படி இல்லை, பிரயாணப்படி இல்லை என்று இல்லை இல்லை என்று சொல்லக் காரணம் என்ன? விலைவாசி உயர்வு அவர்களை மட்டும் பாதிக்கவில்லையா? ஆகவே உடனடியாக அவர்களுக்கும் கிராக்கிப்படி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் சேவா உணர்ச்சியின் அடிப்படையில் வந்துள்ளவர்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் அரசாங்கத்தின் முழு நேர ஊழியர்களா? அவர்களுக்கு மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு உள்ளதைப் போல ஒழுங்கு முறை விதிகள் பொருந்துமா?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் அரசாங்க முழு நேர ஊழியர்கள்தான். அவர்களும் அரசாங்க ஊழியர்களின் ஒழுங்கு முறை விதிகள் பொருந்தும்.

### ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கு விடுதி

* 74 கேள்வி—திரு. ம. கமலநாதன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கான தங்கும் விடுதி புதிதாகக் கட்டும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Reclamation of arid seashore lands*

* 75 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to reclaim arid seashore lands in the State and bring them under cultivation; and

(b) if so, the details thereof ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய கடற்கரை மாவட்டங்களின் கரையோரப் பகுதிகளை ஆராய்வதற்காகத் தனிப் பணியாளர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. இத் தனிப் பணியாளர்கள், இக் கரையோரப் பகுதிகள் நெடுகிலும் வேளாண்மைக்குப் பயன்படாமல் கிடக்கும் நிலப் பகுதிகளில் மண் வள ஆய்வு உட்பட விரிவான ஆய்வுகள் நடத்தி மேற்படி நிலங்களைச் சாகுபடிக்கேற்றவையாகச் செய்வதற்குரிய தக்க ஒழுங்கு நடவடிக்கைகளுடன் வரை படங்கள், மதிப்பீடுகள் இவற்றையும் தயாரிப்பார்கள்.



திரு. வை. சங்கரன் : இதனால் எவ்வளவு ஏக்கரா சாகுபடிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? அவற்றில் என்ன என்ன பயிரிடலாம் என்று யோசிக்கப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போதுதான் அங்கே போய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகுதான் எதுவும் சொல்ல முடியும்.

### *Destruction of flying in Thinnaiyampatti*

* 76 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that control measures taken for elimination of flying foxes (a kind of bat) in Thinnaiyampatti village near Keeranur in Tiruchirappalli district had to be suspended due to the sentimental objection of the villagers thereat; and

(b) if so, the details thereof ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை தாலூகா, குன்றாண்டார் கோயில் வட்டாரம், திண்ணைத் திரயம்பட்டி கிராமத்தில் ஐயனார் கோவிலிலுள்ள சில ஆலமரங்களில் வாழும் வெளவால்கள் அனைத்தையும் ஒழிப்பதற்காக புது டில்லி, பயிர்ப் பாதுகாப்பு நெறியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த வெளவால் ஒழிப்புக்கான தொழில் நுட்ப அதிகாரி ஏற்பாடுகள் செய்தார். ஆனால் அக் கிராமவாசிகள் அவற்றின் ஒழிப்பை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்தார்கள். வெளவால்களை அறவே ஒழிப்பது அவர்களின் அற உணர்வுக்கு எதிராக உள்ளதாகக் கூறினார்கள். வெளவால்கள் கொல்லப்பட்டால் கிராமத்திலுள்ள சில குழந்தைகள், ஆடு, மாடுகள் முதலியன இறக்க நேரிடும், என்று தாங்கள் நம்புவதாக அவர்கள் தெரிவித்தனர். அவைகள் கொல்லப் படுவதற்கு முன் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக யிருப்பதாகவும் அவர்கள் கூறினர். இவ்வாறு அவர்கள் இதைக் கடுமையாக எதிர்த்ததால் கருதியிருந்த இந்த வெளவால் ஒழிப்பு வேலை நிறுத்தப்பட்டது.

திரு. சா. கணேசன் : இந்த வெளவால்களை ஒழிக்க வேண்டுமென்ற முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? அவற்றினால் பயிர் முதலானவற்றுக்குச் சேதம் வந்ததா? அல்லது மக்களுக்கும், விவசாயிகளுக்கும், தீமைகள் உண்டாயிற்றா? பொதுமக்களுக்கு சுகாதார முறையில் தீமைகள் உண்டாயிற்றா? எந்த எந்தக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை அழிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. பயிர்களை அழிப்பதாக யாராவது பெட்டிஷன் போட்டிருப்பார்கள். அதன்பேரில் நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

[4th August 1966

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** இந்த வௌவால்களின் பெரும் பகுதி ஆலயங்களில் புகுந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஆலயங்களில் துர்நாற்றம் அடிக்கிறது. அவற்றை அங்கிருந்து அழிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கோயில்களில் இருக்கிற சிப்பந்திகள் இப்போதே அவற்றை விரட்டி வருகின்றனர். ஆலயங்களைச் சுத்த மாக வைத்துக் கொள்ளவேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் கருத்தும்.

**கனம் சபாநாயகர் :** ஜீவகாருண்யம் குறுக்கே நிற்குமோ என்று சந்தேகம்.

வீடூர் நீர்த்தேக்கம்.

***77 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடூர் நீர்த்தேக்கத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் ?

(இ) அத் தொழிலாளர்களில் சிலருக்குப் பஞ்சப்படி கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) ஆமெனில், அதன் காரணம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) 15.

(இ) ஆம். அரசாங்கத்தைச் சேராத, வேலை நிதி ஊதியம் (work charged establishment) பெறும் தொழிலாளர்களில் மேஸ்திரியைத் தவிர மற்றத் தொழிலாளர்கள் யாருக்கும் அகவிலைப் படி பெறுவதற்கு உரிமையில்லை.

(உ) அரசாங்கத்தைச் சேராத, வேலை நிதி ஊதியம் பெறும் தொழிலாளர்கள், சம்பள விகிதங்களிலோ படிப்படியாகவோ சம்பளம் பெறுவதில்லை. அகவிலைப்படி முதலிய அனைத்தும் அடங்கிய குறிப்பிட்ட சம்பள வீதங்களே அவர்களுக்கு வழங்கப் படுகின்றன.

**திரு. ஆ. தங்கவேலு :** தலைவர் அவர்களே, வீடூர் நீர்த் தேக்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 60 ரூபாய் தான் சம்பளம் பெறுகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தில் தொடர்ந்து ஐந்தாறு ஆண்டுகளாகப் பணி புரிந்து வருகிறார்கள். இவ்வளவு குறைந்த ஊதியத்தை வைத்துக் கொண்டு அவர்களால் எப்படிக் காலம் தள்ள முடியும் ?

**கனம் சபாநாயகர் :** உபகேள்விகள் கேட்பதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் இப்படி நீண்ட பிரசங்கமாகச் செய்துகொண்டு போனால் எப்படிக் கேள்விகளை முடிக்க முடியும் ? கேள்வியாகப் போடுங்கள். பேசிக்கொண்டே போகக் கூடாது.



4th August 1966]

**திரு. ஆ. தங்கவேலு :** மேஸ்திரிகளைத் தவிர மற்ற தொழிலாளர்கள் யாரும் அகவிலைப்படி பெறுவதற்கு உரிமையில்லை என்றார்கள். இருக்கக்கூடிய நிலையை உத்தேசித்து, அரசாங்கம் இதை மீண்டும் பரிசீலனை செய்து எல்லாத் தொழிலாளர்களுக்கும் அகவிலைப்படி வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** வீடூர் நீர்த் தேக்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் இல்லை. இதே நிலையில் இருக்கும் மற்றவர்களுடைய நிலைமையையும் கூட அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டுதான் இருக்கிறது.

***78 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடூர் நீர்த்தேக்கத்தின் கீழுள்ள வீடூர், சிறுவை ஆயக் கட்டுகளுக்கு 10 சதவிகிதம் அதிகப்படி வரி விதித்து 3 ஆண்டு களுக்குச் சேர்த்து வரி கட்டும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படுவதை ஒட்டி, வீடூர் நீர்ப்பாசனக் குழுத்தலைவர் அவர்களால் 27—1—1966-ல் கனம் உணவு அமைச்சர் அவர்களிடம் மனு ஒன்று கொடுக்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) ஆம்.

(இ) அந்த வேண்டுகோளை அரசாங்கம் பரிசீலனை செய்தது. வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு, தமிழ் நாடு 1963-ம் ஆண்டு கூடுதல் நிலவரி கூடுதல் பாசனத் தீர்வைச் சட்டத்தின் கீழ், கூடுதல் நிலவரியும், கூடுதல் பாசனத் தீர்வையும் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதென ஏற்கெனவே முடிவு செய்ததை விரைந்து செயல்படுத்துவதே போதுமானது என்று அரசாங்கம் கருதியது. மேற்படிச் சட்டம் வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்குப் பொருந்துவதிலிருந்து விலக்களித்து அறிவிப்பு வெளியிடப்படும்வரை, மேற்படிச் சட்டத்தின் கீழ் கூடுதல் நிலவரியும், கூடுதல் பாசனத் தீர்வையும் வசூலிப்பதை நிறுத்தி வைக்கும்படி தென் ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்பட்டார். வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மேற்படி சட்டத்திலிருந்து விலக்களித்து அரசாங்கம் இப்போது அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, இந்த வீடூர் 9-00 a.m.
நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டில் பலன் அடைந்தவர்கள் தீர்வை கட்டுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால், பலன் அடையாமலே இருக்கக்கூடியவர்களுக்கு, தண்ணீர் பாயாமல் உள்ள நிலங்களுக்குத் தீர்வையை நிறுத்தி வைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரைக்கும் அப்படிப் பலன்

[4th August 1966

அடையாதவர்களைக் கசக்கிப் பிழிந்து வசூல் செய்ததைத் திருப்பிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியெடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நான் சொன்ன விவரப்படி வசூல் செய்வது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதைப்பற்றி விவரங்கள் கொடுத்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆ. தங்கவேலு : இந்த விலக்கு அளிக்கப்படுவது எந்தத் தேதியிலிருந்து கொடுக்கப்படும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

### மணிமுத்தாறு அபிவிருத்தி வரி

* 79 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மணிமுத்தாறு அபிவிருத்தி வரி விதிக்கத் திட்டமிருக்கிறதா ?

(இ) எந்த அடிப்படையில் விதிக்க உத்தேசிக்கப்படுகிறது ?

(உ) வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று அந்த ஜில்லா சட்டசபை மெம்பர்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலிருந்தும் முறையீடுகள் வந்திருக் கின்றனவா ?

(எ) அவற்றின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The betterment tax is levied according to the provisions of the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955, as amended by Act 32 of 1963. According to the provisions contained in the Act, the entire ayacut under the Tambraparani delta and also the ayacut lands under Manimuthar Main Canal in Ambasamudram, Tirunelveli, Nanguneri, Srivaikuntam and Tiruchendur taluks are classified as improved old ayacut. The rate of contribution per acre will be Rs. 50 collectable in ten annual instalments of Rs. 5 per acre.

(*c*) & (*d*) Yes. The Member was already informed that the collection of betterment tax has not been started and that the question of postponement of betterment tax does not therefore arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அமைச்சர் அவர்கள் முன்பு அளித்த பதிலைப் பற்றித்தான் இப்பொழுது தெரிவித்தார்கள். ஆனால் இந்த மாதத்தில் பெட்டர்மெண்ட் டாக்ஸ் வசூல் செய்வதற்கு



4th August 1966]

ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ? சென்ற ஆண்டு பஞ்சநிலை, இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலை, தண்ணீர்த் தட்டுப்பாடு இவற்றையெல்லாம் மனத்திலே கொண்டேனும் குறைந்தபட்சம் ஒரு ஆண்டு காலத்திற்கு வரி விதிப்பதைத் தள்ளி வைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால். இந்த வருஷம் திருநெல்வேலி ஜில்லாவில் வறட்சி என்று சொல்வது பொருத்தமில்லை, ஒரு சில இடங்களைத் தவிர.

### தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பயிர்கள்

* 80 கேள்வி—திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கனம் உணவு அமைச்சர் அவர்கள் சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நெற் பயிரின் நிலைமையை நேரில் காணச் சுற்றுப்பிரயாணம் செய்தது உண்மையா ?

(இ) ஆமெனில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலவரி வஜா செய்ய மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) தகுதியுள்ள விஷயங்களில் வருவாய்த்துறை வாரியநிலை ஆணைகளின் கீழ் பருவகாலத் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. தீர்வை ஜாஸ்திப் பகுதிகளில் போதிய தண்ணீர் சப்ளை இல்லாமல் தாளடிப் பருவத்தில் பயிர்கள் சாவியாகிப் போனதால், எப்போ தேனும் ஒருமுறை பாசனம் தேவைப்படுகிற வேர்க்கடலை, எள் போன்ற புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. அந்தப் பகுதி களில் தண்ணீர்த் தீர்வை விதித்து வாங்கப்படமாட்டாது.

கீழ்க்கண்ட கூடுதலான சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன:—

(1) பதிவான இருபோக நன்செய் நிலங்கள் :

| | |
|---|---|
| (*a*) விளைச்சல் நான்கணாவாகவும் அதற்குக் குறைவாகவும் இருந்தால். | இரண்டாம் போகப் பயிர்க் கட்டணம் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| (*b*) விளைச்சல் நான்கணாவுக்கு மேல், ஆறணாவுக்கு மேற்படாமல் (ஆறணாவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால். | இரண்டாம் போகப் பயிர்க் கட்டணத்தில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |

(2) பதிவான ஒரு போக நன்செய் நிலங்கள் :

| | |
|---|---|
| (*a*) விளைச்சல் நான்கணாவாகவும் அதற்குக் குறைவாகவுமிருந் தால். | தண்ணீர்த் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (b) விளைச்சல் நான்கணுவுக்கு மேல், ஆறணுவுக்கு மேற்படாமல் (ஆறணுவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால். | தண்ணீர்த் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தியில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |

(3) பதிவான புன்செய் நிலங்கள் :

| | |
|---|---|
| (a) விளைச்சல் நான்கணுவாகவும் அதற்குக் குறைவாகவுமிருந்தால். | தண்ணீர்த் தீர்வை முழுவதும் தள்ளுபடி செய்யப்படும். |
| (b) விளைச்சல் நான்கணுவுக்கு மேல், ஆறணுவுக்கு மேற்படாமல் (ஆறணுவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால். | தண்ணீர்த் தீர்வையில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |

ஒரு சர்வே எண் அல்லது சப்-டிவிஷன் சம்பந்தமாக, வருவாய்த் துறை வாரிய நிலை ஆணையின் கீழாவது அரசாங்கம் வெளியிட்டுள்ள எந்தச் சிறப்பாணைகளின் கீழாவது நிலவரி முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், தமிழ்நாடு 1965-ம் ஆண்டு நிலவரி—தண்ணீர்த் தீர்வை சர்சார்ஜ் சட்டத்தின் கீழ் சர்சார்ஜ் முழுவதும் 1375-ம் பசலியில் தள்ளுபடி செய்யப்படும். மற்ற எல்லா விஷயங்களிலும் 1375-ம் பசலிக்கான சர்சார்ஜை அரசாங்கம் 10 சதவிகிதத்திற்குக் குறைத்து, எஞ்சியுள்ள 15 சதவிகிதத்தைத் தள்ளுபடி செய்துள்ளது.

திரு. கோ. சி. மணி: தலைவரவர்களே, சென்ற முறை இந்த மன்றத்தில் இதே பிரச்னையைப்பற்றிக் கேட்ட கேள்விக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பாசன வசதியில்லாமல் தஞ்சை மாவட்டத்தில் தரிசுபட்ட நிலங்கள் 22,550 ஏக்கர் என்று சொன்னார்கள். கும்பகோணம் தாலுகாவில் குறுவைச் சாகுபடியில் தரிசு இல்லை என்று சொன்னார்கள். குறுவையில் தரிசு ஏராளம் இருக்கிறது என்று சொல்லப்பட்டபொழுது அவர்கள் அதைப்பற்றி மறு பரிசீலனை செய்வதாக உறுதி தந்தார்கள். அதுபற்றிய விவரங்கள் சொல்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா: அதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

### நிலவரி வஜா

* 81 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965–66-ல், பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிலத் தீர்வை வஜா செய்ய அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எந்தெந்த மாவட்டங்களில் ?



கனம் திரு. வெ. ராமையா: (அ) ஆம்.

(இ) தர்மபுரி, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை, மானுமதுரை தாலுகாக்களில் வரிவஜா செய்யப்பட்டாலும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் பழைய பாக்கிகளை வசூல் செய்கிறார்கள். இந்த ஆண்டு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறபோது பழைய பாக்கிகளை வசூலிப்பதற்கு கெடுபிடி, ஜப்தி போன்றவற்றையெல்லாம் செய்கிறார்கள். ஆகவே பழைய பாக்கிகளை இப்பொழுது வசூல் செய்யாமல் இருப்பதற்கு முயற்சியெடுப்பார்களா ?

MR. SPEAKER: The hon. Member may put a separate question regarding arrears.

### *Groundnut crop*

* 82 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state:

(a) whether it is a fact that groundnut crop in Madurai and Ramanathapuram districts have been badly affected by drought conditions; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) In Ramanathapuram district, in Fasli 1375, the groundnut crops were badly affected only in Srivilliputhur taluk and Manamadurai Sub-taluk due to drought conditions. The yield was 2 annas and below.

In Madurai district also the groundnut crops were affected due to drought conditions. The yield was 20 per cent to 50 per cent of the normal yield in most parts of the district except in Madurai Division, where the yield was 50 per cent to 70 per cent.

திரு. வை. சங்கரன்: இம்மாதிரி விளைச்சல் இல்லாத நிலையில் சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா: இது எல்லாம் புன்செய் சாகுபடி அதற்கு போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் பிரகாரம் என்ன என்ன கொடுக்க முடியுமோ அதைக் கொடுப்பார்கள்.

### கிராம ரிக்கார்டுகளைக் கட்டுவதற்கு கித்தான்

* 83 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் நடந்து வருகின்ற ஜமாபந்திக் கூட்டத்தின்போது மட்டும் கிராம ரிக்கார்டுகள் பூராவும் கித்தான் சாக்கில் கட்டி தூக்கிக்கொண்டு வருவதற்கு விசேஷ காரணங்கள் ஏதேனும் உண்டா ?

(இ) இல்லை என்றால், தாலூக்கா அலுவலகங்களிலும் கலெக்டர் அலுவலகங்களிலும், இதேமாதிரி கித்தானைப் பயன் படுத்தும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) இல்லை.

(இ) வினா எழாது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர்களே, குறிப்பாக நம் தமிழகத்தில் இது இன்னும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. ஜமாபந்தி ரிக்கார்டுகளையெல்லாம் கித்தானிலே கட்டிக்கொண்டு போகிறார்கள். குறிப்பாக மதுரையிலே இம் மாதிரிச் செய்கிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களிலே இந்த நிலைமையில் காணோம். தென் ஆர்க்காடு ஜில்லாவிலே கயிற்றிலே கட்டிக் கொண்டு போகிறார்கள். கித்தானிலே கட்டிக்கொண்டு போனால் தீட்டு ஒட்டாமல் இருக்கும், துணியிலே கட்டிக்கொண்டு போனால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்று அங்கேயுள்ள பிரமுகர்கள் எல்லாம் சொன்னார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் தான் நான் இல்லை என்று சொன்னேன்.

**திரு. அ. ரா. ராமசாமி :** இந்த ஜமாபந்தி முறையையே எடுத்து விட்டு தணிக்கை போன்ற முறையை ஏற்படுத்துவார்களா ?

**கனம் சபாநாயகர் :** இந்தக் கேள்வி கித்தானைப்பற்றியதுதான். The hon. Member is raising the question of " Jamabandi " itself.

### ஊமங்கலம் கிராம மணியம் தற்காலிக வேலை நீக்கம்

* 84 கேள்வி—திரு. நா. இராசாங்கம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் ஊமங்கலம் கிராம இசும் மணியம், நிலவரியிலும், பஞ்சாயத்து வரியிலும் நிலுவை நின்ற, மற்றும் கையாடல் காரணங்களுக்காக சஸ்பெண்ட் செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர் மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

(உ) அவர் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கிறாரா ?

(எ) ஆம் எனில், அவரிடமிருந்து, அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகை முழுவதும் வசூலாகி விட்டதா, எவ்வளவு ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) நிலவரி, மற்றும் கடன் நிலுவைகளை விறுவிறுப்பாக வசூல் செய்யாதது காரணமாக கிராம மணியம் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். கையாடல் காரணங்களுக்காக அல்ல.





(இ) ஆறு மாத தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

(உ) ஆம். தற்காலிக வேலை நீக்க காலம் முடிந்த பின்னர் 26—2—1966-ல் அவர் வேலையில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப் பட்டார்.

(எ) அவரிடமிருந்து அரசாங்கத்திற்குத் தொகை எதுவும் சேரவேண்டியதில்லை.

**திரு. நா. இராசாங்கம் :** தலைவர்களே, இந்த மணியக்காரர் சர்க்காருக்குச் சேரவேண்டிய தொகையைக் கட்டிய பிறகு மறுபடியும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா அல்லது கட்டவேண்டும் என்று சொல்லி வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப் பட்டாரா ?

**கனம் திரு. வெ. ராமையா :** நான் பதிலில் அவர் கையாடல் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, அவர் திருப்பிக் கட்டவேண்டிய நிலைமை இல்லை.

### *Food articles without valid permits*

* 85 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that consignments of more than five hundred bags of wheat without valid permit were seized by the Vigilance Cell of the C.I.D. Police at the Coimbatore Railway Goods Shed; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) A consignment of 561 bags of indigenous wheat booked from Northern States without valid permit, was seized by the Vigilance Cell (C.I.D.) of Police at Coimbatore Railway goods yard on 16th December 1965 since the transport of wheat and its products in the statutory rationed area of Coimbatore with effect from 1st December without valid permit is an offence under Section 5 of the Madras Rationing Order 1965.

**திரு. வை. சங்கரன் :** இது யார் யாருக்கு அனுப்பப்பட்டது ? யார் யார் இந்த 'அஃபென்ஸ்' புரியக் காரணமாக இருந்தார்கள் ? அவர்களைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

* 86 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that more than 1,300 bags of toor dhall without permit were sezied by the C.I.D. in the Coimbatore Railway Goods Shed ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Municipal Town of Coimbatore being a rationed area and as the toor dhall has been declared as a rationed article, the consignments of toor dhall moved without permits were seized at Coimbatore. On a representation from the Merchants Association, the Government relaxed the restriction on the movement of toor dhall, and the toor dhall which was seized for want of permit, was released to the Merchants.

**திரு. வை. சங்கரன் :** சட்டத்திற்கு விரோதமாக இந்த 'அஃபென்ஸ்' புரிந்தவர்கள் யார் யார்? அவர்களைக் கண்டு பிடித்து தண்டனை கொடுக்கப்பட்டதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இதிலே தண்டனை கொடுக்கக் கூடிய நிலைமை எதுவும் இல்லை. டூர் டால் போக்குவரத்தைப் பொருத்தவரை தடை விதிக்க வேண்டாமென்று மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டது. அதன் பேரில் பறிமுதல் செய்யப்பட்ட துவரம் பருப்பு அவர்களிடமே திருப்பிக் கொடுக் கப்பட்டு விட்டது.

### தமிழ் நாடு கூட்டுறவு பாங்க்

*** 87 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) State Co-operative Bank டைரக்டர்கள் தேர்தல் சம்பந்தமான விதிகளில், 1965 நவம்பரில் கூட்டுறவு ரிஜிஸ்திரார் மாறுதல் செய்து உத்தரவிட்டாரா?

(இ) அந்த உத்தரவு 1965 டிசம்பரில் மாற்றப்பட்டுள்ளதா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தனிப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கைக்கும் சங்க உறுப்பினர் எண்ணிக்கைக்கும் உள்ள விதாச்சாரத்தைக் குறைத்து கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பிறப்பித்த ஆணையை அரசாங்கம் பரிசீலித்தது. மேற்சொன்ன விகிதாச்சாரம் இதுவரை இருந்தது போல் 2:15 ஆகவே தொடர்ந்து இருந்துவர வேண்டுமென்று அரசாங்கம் கருதியதால், கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் ஆணையை அவ்வண்ணமே மாற்றியமைத்தது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சார், இந்த ஸ்டேட் கோவாப்பரேடிவ் பாங்கு டைரக்டாக வருகிறவர்கள் மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்ட பாங்கிலும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்கில் 110 பேர் உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 110 பேருக்கு இரண்டு பிரதிநிதிகள் எந்தக் காரணத்தால் கொடுக்கப்பட்டது என்று அறியலாமா?



**கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார் :** நூற்றென்பது பேர்தான், 110 அல்ல. 109 பேருக்கு 2 பிரதிநிதிகள் கொடுக்கக் கூடாது என்று இல்லை. இன்டிவிஜுவல் மெம்பர்களை எவ்வளவுக்கெவ்வளவு குறைப்பது நல்லது என்று யோசித்து முடிவு செய்யப்பட்டது. முன்பு கோவாப்பரேட்டிவ் பாங்குக்கு 7, 8 பிரதிநிதிகள் கொடுத்திருந்தார்கள். ரிஜிஸ்ட்ரார் 1 என்று போட வேண்டுமென்றதைச் சர்க்கார் இரண்டு பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்ற முறையில் உத்தரவிடப்பட்டது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் 109 பேருக்கு ஒரு பிரதிநிதி இருந்தால் போதும் என்று உத்தரவு பிறப்பித்தார். ஆனால், அரசாங்கம் அந்த உத்தரவை மாற்றி 2 பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த பாங்கின் தலைவர் கனகசபை பிள்ளை காங்கிரஸ்காரர் என்பதால் அப்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார் :** அந்த மாதிரிக் காரணம் எதுவும் இல்லை.

### *Central Study Team on Textile Industry*

* 88. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Central Study Team on the working of Textile Commissioner's Organisation visited the State and elicited the views on the problem of the textile industry including handlooms ; and

(b) if so, the views that were placed before it, by the Government ?

THE HON. SRI N. NALLASENAPATHI SAKKARAI MANRADIAR : (a) Yes.

(b) As the Committee has not yet published its report, it may not be proper to divulge the views placed before it by the Director of Handlooms on behalf of the Government.

**திரு. வை. சங்கரன் :** அவர்கள் சர்க்காருடைய கருத்துக்களை மட்டும் தெரிந்து கொண்டார்களா அல்லது தனியாக உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சென்று அவர்களிடமிருந்தும் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் சம்பந்தமான பிரச்சினைகளைப்பற்றித் தெரிந்து கொண்டார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார் :** அவர்கள் சில விஷயங்கள் வேண்டுமென்று கேட்டார்கள் . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் கேட்பது, அவர்கள் கவர்ன்மெண்டை மட்டும்தான் கேட்டார்களா அல்லது வேறு யாரையாவதும் கேட்டார்களா என்பது.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார் :** அந்த விவரம் இல்லை.

[4th August 1966

திரு. வை. சங்கரன் : அவர்கள் என்னென்ன விஷயங்களைப்பற்றி ஆராய இங்கு வந்தார்கள் ?

THE HON. SRI N. NALLASENAPATHI SAKKARAI MANRADIAR :

'(i) Delegation of powers to the Director of Handlooms to issue permits for change of location and/or transfer of powerlooms from one person to another within the State; and

(ii) since the Director of Handlooms as State Textile Authority has been charged with the responsibility of working of statutory controls over mill-made cloth, the Enforcement Inspectors of the Regional Office of the Textile Commissioner may either be attached to the State Directorate or the Regional Office of the Textile Commissioner . . .'

இதுபோன்ற சில விஷயங்கள்.

## Handloom Study Team

* 89 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether a Handloom Study Team appointed by the Union Government is visiting the various centres in the State; and

(b) if so, the nature and scope of its functions ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சக்கரை மன்றாடியார் :

(அ) கைத்தறித் தொழிலாளர்களின் ஊதியம் குறித்த பல்வேறு சிக்கல்களை ஆராயவும், அவர்களுக்காக ஊதிய போர்டு அமைக்க வேண்டுமா என்பதுபற்றி யோசிக்கவும் ஆய்வுக் குழு ஒன்றை இந்திய அரசாங்கம் நியமித்துள்ளது. இந்த ஆய்வுக் குழு ஏற்கனவே நமது மாநிலத்திற்கு வருகை தந்துள்ளது.

(இ) கைத்தறித் தொழிலில் நிலவிவரும் ஊதிய விதங்களின் அமைப்பைக் குறித்து இக் குழு ஆராயும்.

திரு. வை. சங்கரன் : இந்தக் குழுவானது எந்த அளவுக்கு வேலையை முடித்து யார் யாரைச் சந்தித்துக் கருத்துக்களைத் தெரிந்து கொண்டது ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The main work of the Study Group is to look into the various problems connected with the wages of handloom workers. The Study Group visited the Madras State on the 7th and 8th of February 1966. The Study Group interviewed some of the weavers, office-bearers of Weavers' Co-operatives and some of the Master Weavers in and around Madras City, Salem and Kancheepuram. Particulars required by the Study Group for collection of basic data have been furnished to the Study Group. The Study Group has to submit its report to the Government of India in about two months.



4th August 1966]

## கைத்தறித் துணிகள் இறக்குமதித் தடை

* 90 கேள்வி.— திரு. து. ப. அழகமுத்து :
திரு. வை. சங்கரன் : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தின் கைத்தறித் துணிகள் சிலோனில் இறக்குமதி செய்வது இலங்கை சர்க்காரால் தடை செய்யப் பட்டுள்ளது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆமெனில், பாதிக்கப்படும் கைத்தறித் தொழிலுக்கு மாற்றுத் திட்டம் ஏதேனும் உருவாக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சக்கரை மன்றாடியார் : (அ) 1966 ஜூலையிலிருந்து இலங்கையில் கைத்தறித் துணிகள் இறக்குமதியாவதை இலங்கை அரசாங்கம் தடை செய்யலாமென வெளிவந்த சில பத்திரிகை அறிக்கைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தன. ஆயினும், இச் செய்திக் குறிப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்க அறிக்கை எதுவும் வரவில்லை.

(இ) இது குறித்து அதிகாரபூர்வமான தகவல் இல்லாதபோது, இதன் விளைவாக ஏற்படும் நிலைமையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி நினைப்பதற்கு இது தருணமல்ல.

திரு. வை. சங்கரன் : இந்த ஒரு செய்திக்கு ஆதாரம் இருக்கிறதா என்று நம்முடைய அரசாங்கம் தெரிந்து கொண்டதா ? நம்முடைய ராஜ்யத்தில் இருந்து சிலோனுக்கு ஏராளமாகக் கைத்தறித் துணிகள் செல்லுவதால் இந்தச் செய்திக்கு ஆதாரம் இருக்கிறதா என்று தெரிந்து கொண்டார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சக்கரை மன்றாடியார் : முக்கிய கேள்விக்குப் பதில் சொன்னேன். கைத்தறித் துணியை இலங்கைக்கு அனுப்புவதில் பாதிக்கப்படுகிற நிலைமை ஒன்றும் இல்லை. சர்க்காரிடம் குறிப்பாக அதிகாரபூர்வமான தகவல் ஒன்றும் இல்லை.

திரு. எஸ். முருகையன் : இந்தியத் துணிகளை இலங்கையில் இறக்குமதி செய்யக் கூடாது என்ற செய்தி வந்தவுடன் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதை மாவட்ட கூட்டுறவு பாங்க் நிறுத்தி விட்டதா ? உடனடியாகப் பண உதவி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சக்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இலங்கையில் கைத்தறித் துணிகள் இறக்குமதி செய்யக் கூடாது என்பது பற்றிய அதிகாரபூர்வமான தகவல் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

[4th August 1966

அந்த அதிகாரபூர்வமான தகவலை இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்க்கிறார்களா அல்லது இந்திய அரசு தூதுவர் அலுவலகத்தில் இருந்து எதிர்பார்க்கிறார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார்:** ஒரு குழுவை அனுப்பி என்ன நிலை என்று தெரிந்து கொள்ளலாம் என்ற முடிவில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது.

MR. SPEAKER: We cannot get any intimation from the Ceylon Government direct. It must come through the Central Government.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதுபற்றிய உண்மை நிலை என்ன என்பதை இந்திய தூதராலயம் மூலம் அறிய முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார்:** தெரிந்து கொள்ளவேண்டுமென்றுதான் முயற்சி.

### *Handloom Weavers' Co-operative Societies*

* 91. *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Handloom Weavers' Co-operative Societies that have claimed rebate in Tiruttani taluk, Chingleput district for the year 1964–65;

(*b*) the number of societies among them that were granted rebate and the number disallowed rebate; and

(*c*) the reasons for the disallowance ?

THE HON. SRI N. NALLASENAPATHI SAKKARAI MANRADIAR: (*a*) Twenty-six societies claimed rebate.

(*b*) (i) Thirteen were granted rebate.

(ii) Five were disallowed rebate. Eight are under investigation.

(*c*) The societies did not satisfy the conditions governing the grant of rebate.

### மீன் வலைகள்.

* 92 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்ய மீனவர்களின் நைலான் நூல் வருடாந்திரத் தேவை அளவென்ன ?

(இ) அத் தேவை எவ்விதம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன்:** (அ) 1,00,000 (ஒரு லட்சம்) கிலோ கிராம்.



4th August 1966]

(இ) மீனளத் துறை, 50,000 கிலோ கிராம் நைலான் நூல் வாங்கி மீனவர்களுக்கு வழங்குகின்றது. எஞ்சிய 50,000 கிலோ கிராம் நைலான் நூலை மீனவர்கள் நேரடியாக அல்லது தங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் "மெஸர்ஸ் கார்வார் நைலான்" போன்ற உள்நாட்டு நிறுவனங்களில் வாங்கிக் கொள்கின்றனர்; அல்லது உலர்ந்த மீன், உறைய வைத்து பதப்படுத்திய இறால், பெரிய இறால், பதப்படுத்தி டப்பிகளில் அடைக்கப்படும் இறால்கள், சுறா மீன்கள் முதலியவற்றை மீன் ஏற்றுமதி செய்வோர் சிலர் பெற்ற இறக்குமதி உரிமங்கள் மீது ஜப்பானிலிருந்தும், ஹாலந்திலிருந்தும் நைலான் நூல் இறக்குமதி செய்யப்படுகிறது.

* 93 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மீன் வலைக்கு சப்ளை செய்யும் பருத்தி நூலுக்கு சப்சிடி வழங்கும் திட்டமிருக்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன்:** ஆம், மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கழகங்களின் மூலம் மீனவர்களுக்கு வலைகள் பின்னுவதற்காக வழங்கப்படுகிற பருத்தி நூலின் கிரயத்தில் 25 சத விகிதத்தை அரசாங்கம் உதவித் தொகையாக வழங்குகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** நேரடியாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டபோது நைலான் நூலுக்கு இருந்த விலைக்கும், கார்வார் நூலுக்கும், ஏற்றுமதி செய்யப்பட்டு விசேஷமாக இன்சென்டிவ் கொடுத்து இறக்குமதி செய்யப்படுகிற நூலுக்கும் விலை வித்தியாசம் இருக்கிறது. அதற்குரிய காரணம் என்ன ? இந்த வித்தியாசத்தைத் தணிக்க அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன்:** விலையில் வித்தியாசம் இருக்கிறது. அதைத் தணிப்பதற்கு நைலான் நூல் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வெளிநாட்டிலிருந்து ரா மெட்டீரியல்ஸ் தருவிப்பதற்காக 400 டன்னுக்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியிருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** மத்திய அரசு இப்போது விசேஷமாக 400 டன்னுக்கு அனுமதி வழங்கியிருந்தாலும் இந்த ராஜ்ய மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு இப்போது பல துறைகளிலிருந்தும் கிடைக்கக் கூடிய நைலான் நூல் போதும் என்று கருதுகிறதா ? அல்லது மேற்கொண்டும் பெறுவதற்கு என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன்:** அவ்வப்போது இவையெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

[4th August 1966

## 'ஓங்கல்' ஒழிப்பு

*94 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மீன் வலைகளுக்கு சேதம் விளைவிக்கும் 'ஓங்கல்' என்ற கடல் வாழ் ஜந்துக்களை ஒழிப்பதற்குச் சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. கோ. பூவராகன்: டால்பின் (Dolphin) என வழங்கப் படும் கடல் விலங்கான 'ஓங்கல்' பாலூட்டி வளர்க்கும் (mammal) மீன் இனமாகும். இது தூத்துக்குடி கடலில் காணப்படுகிறது. மீன் இதன் உணவாகும். மீன் பிடிக்கும் வலைகளை இது சேதப் படுத்துகிறது. இதனை ஒழிப்பது பற்றி மாநில மீனளத் துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: மஹாராஷ்டிர அரசாங்கம் பம்பாய் கடற்கரையில் இதுபோன்ற சிரமங்களை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது என்ற தகவல் நம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா? அப்படியானால், அது பற்றி ஆராய்ந்திருக்கிறதா? அல்லது விசேஷ அதிகாரி யாரை யாவது அனுப்பியாவது தீர்க்கமாக விவரங்களை அறிந்து காலா காலத்தில் இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: மஹாராஷ்டிர அரசாங்கம் என்ன செய்கிறார்கள் என்ற தகவல் இல்லை. நாம் இதை ஒழிக்க என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று இந்தத் துறையில் முயற்சி எடுத்து வருகிறோம். இதுவரையில் இரண்டு மீன்கள்தான் பிடிபட்டிருக்கின்றன. பிடிபட்டால் அவற்றை எவ்வாறு பயன் படுத்துவது, அதிலிருந்து மீன் எண்ணெய் ஏதாவது தயாரிக்க முடியுமா என்றெல்லாம் நம் ஆராய்ச்சி நிலையத்தில் நம் நிறுவனத் தில் உள்ள அதிகாரிகள் பரிசீலித்து வருகிறார்கள்.

திரு. வை. சங்கரன்: ஓங்கல் என்ற இந்த மீனின் உருவ அமைப்பு எவ்வாறு இருக்கும்? சேதம் விளைவிக்கும் அதன் உறுப்பு எவ்வாறு இருக்கும் என்று அறியலாமா?

கனம் திரு. கோ. பூவராகன்: அதன் படத்தை வேண்டுமானால் அங்கத்தினர் அவர்களுக்கு அனுப்பி பார்க்கச் சொல்லலாம். அதன் உறுப்புக்களைப் பார்க்கவேண்டுமென்று சொன்னால் எப்போ தாவது ஒரு தடவை, இரு தடவை ஒரு ஆண்டில் கிடைக்கிறது. இப்போதே சொல்லி வைத்து கனம் அங்கத்தினர் பார்வைக்கு ஏற்பாடு செய்யலாம்.



4th August 1966]

## *Development of Kotagiri*

*95. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to develop Kotagiri as a Tourist Centre ; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஆம். கோத்தகிரியை உல்லாசப் பிரயாணத்திற்கு ஏற்ற இடமாக அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) இதற்கான வேலைத் திட்ட விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

## ஆசிரியர்கள் மாற்றம்

*96 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஒரு கோட்டத்திலுள்ள (Revenue Division) யூனியன்களில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களை அவர்களது சொந்த யூனிய னுக்கு மாற்றம் தரும் அதிகாரம் அக்கோட்ட R.D.O. அவர்க ளுக்குக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையி லுள்ளதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை, ஐயா.

திரு. இரா. நாராயணன்: ஒரு கோட்டத்தில் பத்து பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளன. அந்தப் பத்து பஞ்சாயத்து யூனியன்களி லுள்ள ஆசிரியர்களை அந்தக் கோட்ட ரெவன்யூ டிவிஷனல் ஆபீஸரே மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தால் சௌகரியமாக இருக்கும். ஜில்லாவாரியாக ஏற்படுத்துவதற்கு காலதாமதம் ஆகிறது. இனிமேலாவது அதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இப்போது அந்த அதிகாரம் ஜில்லா கலெக்டரிடம் இருக்கிறது. திருப்தியான அளவில் அது நடந்து வருவதால் எந்த விதமான மாற்றமும் செய்ய உத்தேசிக்க வில்லை.

## ஆசிரியர்களுக்கு வீடுகள்

*97 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பஞ்சாயத்து பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உண்டா?

(இ) ஆமெனில் எப்பொழுதிலிருந்து அமல்படுத்தப்படும்?

[4th August 1966

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) & (இ) மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. இப்பொழுது அவசர நிலைமையினால் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் இல்லை.

**திரு. சோ. ஆறுமுகம் :** ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒன்றிரண்டு ஆசிரியர்களுக்கான விடுதிகள் தற்சமயம் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் பத்து பதினைந்து ஆசிரியர்கள் விடுதிகளாவது கட்டுவதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப்பற்றித்தான் குறிப்பிட்டேன். நான்காவது திட்டத்தில் ஒரு ப்ளாக்கிற்கு, திருப்தியான அளவிற்கு, சற்றேறக் குறைய பத்து வீடு அளவில் கட்டி முடிக்கக் கூடிய திட்டம் இருக்கிறது. அந்த அளவில்தான் 1966–67-ல் கிட்டத்தட்ட 75 க்வார்ட்டர்ஸ் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

### பெரியகோட்டை—மடப்புரம் சாலை

* 98 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை தாலூகாவில் பெரியகோட்டையிலிருந்து, மடப்புரம் வரை சாலை அமைப்பது எந்நிலையில் உள்ளது ?

(இ) அதன் விபரம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) அவ்வாறான செயற்குறிப்பு ஏதுமில்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Municipal Central bus stand at Tiruchirappalli*

* 99 *Q.*—Sri M. KALYANASUNDARAM } Sri V. SANKARAN } Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to question No. 481 on 31st March 1964—

(*a*) the present stage of the proposal to construct a Municipal Central bus stand at Tiruchirappalli; and

(*b*) when the proposal will be finalised ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) & (இ) திருச்சியில் மத்திய பேருந்து நிலையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ரெயில்வே நிலத்தின் மதிப்பு நிர்ணயிப்பது பற்றி மாவட்ட கலெக்டருக்கும், தென் பிராந்திய ரெயில்வே பொது மேலாளருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.



4th August 1966]

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இவ்வளவு பெரிய நகரத்தில் இன்னும் ஒரு பஸ் ஸ்டாண்ட் வசதி கூட இல்லாமல் இருப்பது அங்குள்ள மக்களுக்குக் கஷ்டத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிற காரணத்தினால் நம் அமைச்சர் அவர்கள், அதுவும் ரெயில்வே அமைச்சர் அவர்களிடம் செல்வாக்குள்ள நமது முதல் அமைச்சர் அவர்கள், அவர்களது செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த நிலத்தைச் சீக்கிரம் முனிசிபாலிட்டிக்குக் கொடுக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கெனவே டிபன்ஸ் டிப்பார்ட்மென்ட், ரெயில்வே டிப்பார்ட்மென்ட்டுக்கு அந்த நிலத்தை மாறுதல் செய்ய காலதாமதம் ஏற்பட்டதைக் கனம் அங்கத்தினர் அறிவார்கள். கடைசியாக விலைக்குத் தர ஒப்புக்கொண்டு விட்டார்கள். விலைக்குத் தருவதில் சதுர அடிக்கு ஒரு ரூபாய் என்று கலெக்டர் நிர்ணயித்தார்கள். அவர்கள் இரண்டு ரூபாய் கேட்கிறார்கள். அதில் சீக்கிரமாக முடிவு எடுக்கப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** விலையைப்பற்றி எப்படி வேண்டுமானாலும் நிர்ணயித்துக் கொள்ளலாம். இன்னொரு நாட்டுக்கு நாம் கொடுக்கவில்லை. ஒரு ரூபாயாக இருந்தாலும் சரி, இரண்டு ரூபாயாக இருந்தாலும் சரி, முதலில் நிலத்தை ஒப்படைத்து விடட்டும் முனிசிப்பாலிட்டியிடம். அப்புறம் விலையை எப்படி பைசல் செய்கிறார்களோ அதைப் பெற்றுக்கொள்ளட்டும். ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அங்கத்தினர் அவர்கள் கருத்தைக் கலெக்டரிடம் தெரியப்படுத்தி துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### அரக்கோணம் நகரசபைக்குச் சொந்தமான நிலம்

* 100 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபைக்குச் சொந்தமான சர்வே நெ. 180-ல் அமைந்துள்ள புறம்போக்கு நிலத்தை அரக்கோணம் நகரசபை மெம்பர் ஒருவர் சொந்தமாக்கிக் கொண்டது பற்றி 10—1—1966-ல் வடார்க்காடு மாவட்டக் கலெக்டருக்கு புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) இது குறித்து முடிவு செய்யப்படுகிற வரையில், இந்த நிலத்தில் மேலும் கட்டடங்கள் கட்டும் வேலையை நிறுத்திவைக்கும்படி, அரக்கோணம் நகரசபைக் கமிஷனருக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதாக வட ஆற்காடு மாவட்டக் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

[4th August 1966

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்த நிலம் புறம்போக்கு நிலம் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது. வீட்டோடு சேர்த்து சுவர் கட்டிக் கொண்டார்கள் என்று அங்குள்ள நகரசபை உறுப்பினர் ஒருவர் கூட ரிப்போர்ட் செய்தார், சரியான விசாரணை செய்யப்படவில்லை. அமைச்சர் அவர்கள் நேரடியாக இதை விசாரித்து அந்தப் புறம்போக்கு நிலம் சர்க்காருக்குச் சேர ஆவன செய்வார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அது புறம்போக்கு நிலம் அல்ல. முன்பிருந்த பஞ்சாயத்து போர்ட் விலைக்கு வாங்கியது. ஆகவே யார் வந்து ஆக்கிரமிப்பு செய்தாலும் விட்டுவிட முடியாது. ஐந்து பேர்கள் என்க்ரோச் செய்திருக்கிறார்கள். ஒருவர் மனு வந்தது. கலெக்டர் ஏற்கனவே விசாரணை நடத்தியிருக்கிறார்கள். தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. தா. சின்னசாமி : தலைவர் அவர்களே, அரிசனங்கள் குடியிருக்கும்படியான வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்கள் வேண்டும் என்று கேட்டிருந்தும்.

**கனம் சபாநாயகர் :** இந்தக் கேள்வி அரக்கோணம் முனிசிபாலிட்டியைப் பற்றியது.

கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II—CALLING ATTENTION TO NON-LETTING OUT OF WATER FROM METTUR RESERVOIR

**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சபாநாயகர் அவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாமையால் குறுவைச் சாகுபடி சம்பந்தமாகத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நிலவும் இடர்பாடான நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, the normal opening date of the Mettur Reservoir is 12th June, provided the storage and level on that day are 20,000 M. cft. and 53.38 feet respectively. The storage and level of the Mettur Reservoir on the 12th June this year were 8,364 M. cft. and 32.06 feet respectively. As the available storage was inadequate and as the South-west monsoon had not set in till then, the reservoir could not be opened for irrigation. The position was explained to the Delta ryots by a press note, dated 7th June 1966. It was also stated therein that the position would continue to be watched, and water for irrigation would be released no sooner than adequate storage is built.

The storage position of the Mettur Reservoir and its opening for irrigation were subsequently reviewed at frequent intervals by the Government. Even in the first fortnight of July, there was a



4th August 1966] [Sri V. Ramaiah]

deficit of 66 per cent of rainfall at Mercara during the current South-west monsoon period compared to normal. It was considered that the reservoir may be opened as soon as the monsoon sets in actively at Mercara and there are prospects of continuous flow of 25,000 cusecs per day into the Mettur Reservoir. There was a fairly satisfactory spell of rainfall in Mercara in the second fortnight of July, and flows adequate enough for release to start cultivation were anticipated. The Director of Agriculture also reported that most of the Delta farmers are keen on raising Kuruvai paddy this year, even if water reached the Delta by 25th July. In view of the improvement in the inflows into the Mettur Reservoir indicated at the time and anticipating intensification of the monsoon in Mercara and other catchment areas, the reservoir was opened for irrigation at 6 p.m. on the 21st July 1966.

As a measure of incentive to the farmers to maximise cultivation and production of Kuruvai, the Government have announced that a bonus of Rs. 3 per quintal of paddy shall be given to all grains delivered for procurement out of the forthcoming Kuruvai crop in Cauvery Delta in the districts of Thanjavur, Tiruchirappalli and South Arcot.

The storage position is under constant review by the Government, and irrigation regulation is being done carefully with the available storage and inflows to supply the optimum necessary for the cultivation operations, consistently, with an eye on avoiding wastage. The concerned departments have also been advised to be vigilant to implement regulations similar to those adopted in the last two years of subnormal monsoon conditions, should it be necessary.

## III.—ANNOUNCEMENT.

### THE MADRAS MOTOR VEHICLES (TAXATION OF PASSENGERS AND GOODS) AMENDMENT BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the President has given his sanction under Article 304 of the Constitution for the introduction in the Madras Legislative Assembly of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill, 1966.

I have also to announce to the House that the Governor has given his recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill, 1966.

## IV.—GOVERNMENT BILLS.

### THE MADRAS MOTOR VEHICLES (TAXATION OF PASSENGERS AND GOODS) AMENDMENT BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill, 1966.

[4th August 1966

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## V.—PRESENTATION OF REPORT.

### REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE AUDIT REPORT OF THE MADRAS STATE HOUSING BOARD FOR 1961–62.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி போர்டின் 1961-62-ம் ஆண்டுக்கான கணக்கு குறித்து செய்த தணிக்கை அறிக்கையின் மீது பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை வைக்கிறேன்.

## VI.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY.

MR. SPEAKER : Now, the hon. Member, Sri K. A. Mathialagan, will speak. Every hon. Member has to cut short his speech, as a large number of hon. Members are to speak to-day.

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்பு எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இன்றைய மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து நானும் சில வார்த்தைகள் சொல்ல முன் வந்துள்ளேன். கனம் பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் இயங்கும் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவது இது முதல் தடவை அல்ல. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏதோ சம்பிரதாயத்திற்காக, எதிர்கட்சிகளுக்கு இருக்கின்ற ஒரு ஆயுதமாக இந்த உரிமை இருப்பதால் அதை உபயோகிக்கிற வகையில் அதைப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்திருக்கிறார்கள் என்று ஆளும் கட்சிக்காரர்கள் கருதுவார்களேயானால் அது அவர்கள் தங்களைத் தாங்கள் ஏமாற்றிக்கொள்கின்ற கருத்துத் தான். இந்த மந்திரிசபை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே தமிழ்நாட்டு மக்களுடைய பெரு நம்பிக்கையை இழந்து விட்டது. ஏற்கனவே இந்த மன்றத்தில் வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலேயே அது நன்றாகப் புலனாகி விட்டது. இந்த மன்றத்திற்குள் இருக்கின்ற பிரதிநிதிகளுக்கு மந்திரிசபையை தோற்கடிப்பதற்கு வேண்டிய வாய்ப்பு இல்லாமல் போனாலும், தமிழ்நாட்டு மக்கள் நெடுங்காலமாகவே மிகவும் வேதனை தரத்தக்க ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.



4th August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

இன்றைக்கு இந்த விவாதத்தில் கலந்து கொள்கின்ற நேரத்தில் நான் பணிவோடு, கனம் சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக சொல்லிக் கொள்வேன், கனம் முதலமைச்சர் அவர்கள் மீது தனிப்பட்ட முறையில் எந்தவிதமான குரோதமோ அல்லது விரோதமோ அல்லது எந்தவிதமான மனமாச்சரியமோ எனக்கோ எங்கள் கட்சிக்காரர்களுக்கோ கிடையாது, அத்தகைய குறுகிய மனோபாவத்தில் நாங்கள் யாரும் ஈடுபடவில்லை. முக்கியமாக, நாங்கள் சொல்ல விரும்புவது, முதல் அமைச்சர் வகிக்கின்ற பாத்திரத்தை சரியாக நிர்வகிக்கவில்லை, தாறுமாறாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நாசத்தின் விளிம்புக்கு இந்த நாட்டை இழுத்துக் கொண்டு போகிறார்கள். இதன் காரணமாகத்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறதே தவிர ஏதோ வெறுப்பு-பழியுணர்விற்காக இந்தத் தீர்மானம் வரவில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் மிக மனவேதனையுடன்தான் சொல்லுகிறேன். இதைப்பற்றிப் பேசுகின்ற நேரம் எனக்கு வேடிக்கையாகவோ, அல்லது மகிழ்ச்சிகரமாகவோ இருக்கக்கூடிய நேரம் கூட இல்லை, துக்ககரமான நிலைமையில் தான் நான் இருந்துகொண்டிருக்கிறேன். எனது தந்தையார் ஆறு நாட்களுக்கு முன்னால் காலமாகிவிட்டார். நானும் என்னுடைய குடும்பமும் துக்கத்தில் மூழ்கியிருக்கிற நேரம் இது. இருந்த போதிலும், எனது எஜமானர்களாகிய ஆயிரம் விளக்கு தொகுதி மக்களுக்கு,—இந்த தமிழ்நாட்டிலுள்ள 3½ கோடி மக்களுக்கு—எந்த காரணங்களுக்காக இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறேனோ, எதற்காக என்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறேனோ அந்தப் புனிதமான கடமையைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தான் இதில் கலந்துகொள்கிறேன். எனது கடமையை நிறைவேற்றவேண்டும், அதைச் செயலாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் எனது சொந்த சுக துக்கங்களைவிடவும் இது பெரிய விஷயம் என்று கருதித்தான் இதில் நான் பேச முன்வந்துள்ளேன். இன்றையதினம் நமது முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பொறுப்பை சரியான முறையில் அமல் நடத்தினார்களா ? எங்கு பார்த்தாலும், அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் இவற்றிற்கெல்லாம் அடிமைப்பட்டு அதிகாரத்தை நடத்துகின்ற அளவுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் வந்து விட்டார்கள் என்பதைத் தான் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக இந்த மந்திரிசபை மீது எட்டு குற்றச்சாட்டுகளைச் சாட்டினார்கள், அது மட்டுமல்ல, இவர்கள் மீது இருக்கின்ற குற்றச்சாட்டுகள் எண்ணில்லாத குற்றச்சாட்டுகள், எழுத்தில் அடங்காத குற்றச்சாட்டுகள், பரிகாரமே தேட முடியாத அளவுக்கு இருக்கின்ற குற்றச்சாட்டுகள், இதற்கு பிராயச்சித்தம் தேடக்கூடிய அளவில் மூன்று வழிகள் இருக்கின்றன. இது பிழைக்காத நோயாளியாக மாறியிருக்கிற மாதிரி சபையாக இருக்கிறது. இவ்வளவு நாட்களாகச் செய்திருக்கிற பாபத்திற்குப் பிராயச்சித்தமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதற்கு முன்னாலேயே ராஜிநாமா செய்து

தமிழ்நாட்டு மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்—இது ஒரு வழி. ஆனால் கடைசி வரையில் அதைச் செய்யப் போவதில்லை. இரண்டாவது வழி ஒன்று இருக்கிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, ஜனநாயகத்திற்காகவும், தமிழ்நாட்டில் இருக்கிற 3½ கோடி மக்களுக்காகவும், எதிரிலே இருக்கிற உறுப்பினர்களும் நாவலரோடு சேர்ந்து வாக்களித்து இந்த மந்திரிசபையை நீக்குவது—இது இரண்டாவது வழி. இதுவும் நடைபெறக் கூடியது அல்ல. எதிரே இருக்கிறவர்கள் இந்த மந்திரி சபையிடமிருந்து என்னென்ன நன்மைகளைப் பெற்றிருக்கிறார்களோ? மூன்றாவது வழி, வருகிற 7-8 மாதங்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாட்டு மக்கள் தமிழ்நாட்டு ஓட்டுச்சாவடியில் நிறைவேற்றப் போகிறார்கள். அதற்கு முன்னதாகவே தேர்தலுக்கு உத்தரவு போடக் கூடிய நிலை இருக்குமானால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் முழு ஆதரவு தருகிறார்கள் என்பதைப் பிரகடனப்படுத்தி விடுவார்கள் என்று மிகப் பணிவோடு சொல்லிக்கொள்ளுகிறேன். இந்த மந்திரி சபையினுடைய கோளாறுகள் கொள்கை ரீதியாக மட்டும் ஏற்பட்டவை அல்ல. பல்வேறு காரியங்களில் தவறியிருக்கிறார்கள். ஒரு கெட்ட அரசாங்கம், திறமையற்ற அரசாங்கம், லாயக்கற்ற அரசாங்கம், மக்களுக்குத் துரோகம் இழைக்கிற அரசாங்கம்: இத்தனைக்கும் இலக்கணமாக இருக்கிறது இந்த அரசாங்கம். நான் இதனைச் சொல்லும்போது அலங்கார வார்த்தையாகச் சொல்லுகிறேன் என்று கருத வேண்டாம். இந்த அரசாங்கம் சேதாரம், செயல் திறமையின்மை, லஞ்ச ஊழல், வேண்டியவர்களுக்கு வேலை கொடுத்தல், கட்சி நலன்களுக்காக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், சொந்தக்காரர்களை அதிகாரத்தில் நியமித்தல், வேறு கட்சிக்காரர்களுக்கு மறுப்பது, நாட்டில் பொருளாதாரத்தைத் தவறான திசையில் செலுத்துவது, ஏழை எளியவர்களுக்குத் தவறு இழைப்பது என்ற குற்றச்சாட்டுகளிலிருந்து அரசாங்கம் தப்பிக்க முடியாது. இதைச் சொன்னால் ஏதோ மேலோட்டமாகச் சொல்லுகிறேன் என்று கருதலாம். இதை எடுத்துக் காட்டுவதற்காகச் சில சம்பவங்களை மட்டும் இங்கே நடமாட விடுகிறேன். என்னென்ன நிர்வாகச் சீர்கேடுகள், என்னென்ன ஊழல்கள், என்னென்ன ஒழுங்கீனங்கள், என்னென்ன சேதாரங்கள் என்று சில சம்பவங்களை மட்டும் கோடிட்டுக் கொண்டு சொல்லுகிறேன்; அதற்கு மேல் இந்த மன்றமே முடிவு கட்டட்டும். ஒன்று, இரண்டு என்று சில விவரங்களை மட்டும் இந்த மன்றத்தின் முன் வைக்க முயலுகிறேன்.

நம்முடைய அரசியல் சட்டத்திலே, 46-வது அதிகாரத்தில் ஒரு அரசாங்கத்தினுடைய கடமையை மிகத் தெளிவாக நெறிமுறைக் கொள்கையிலே வரையறுத்திருக்கிறார்கள். பிற்பட்ட மக்களுக்கு கல்வி, பொருளாதார முன்னேற்றம் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்திலே—

"The State shall promote with special care the educational and economic interests of the weaker sections of the people, and, in particular, of the Scheduled Castes and the Scheduled Tribes, and shall protect them from social injustice and all forms of exploita-





என்று நம்முடைய விதிமுறையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனை இன்னும் நல்ல வகையிலே அறிவுறுத்தும் வகையில் நம் மாநில சர்க்கார் கல்வி நிலையங்கள், வேறு தொழில் கல்லூரிகள் எல்லாவற்றுக்கும் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்—ஜி.ஓ. நெ. 1247—எஜுகேஷன், 15—7—1955. இந்த ஜி.ஓ.விலே—

"The Government have directed that 16 per cent of the seats in educational institutions be reserved for candidates belonging to Scheduled Castes, Scheduled Tribes and 25 per cent of the seats be reserved for candidates belonging to other Backward Classes listed in the Madras Educational Rules. They have also directed that the reservations will apply to all class of institutions like Arts and Professional Colleges, Technical Institutions, Secondary and Training Schools, etc., under public management and under aided managements and that the reservation of seats as required above shall be a condition for aid to the Institution."

என்று இருக்கிறது. 10 ஆண்டுகளாக நடைமுறையிலும் இருந்து வந்திருக்கிறது. சமீபத்திலே இங்கு நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பில் இருக்கிற சட்டக் கல்லூரியில் மாலை நேர சட்டக் கல்லூரி ஆரம்பித்திருக்கிறார்கள். உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் மாலை நேரத்தில் வக்கில் வேலைக்குப் படிக்க கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்திலும் இருக்கிறது. ஜி.ஓ.-வும் இருக்கிறது. இந்தக் கல்லூரிக்கு 874 பேர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள். இந்த 874 பேர்களிலே, இந்த ஜி.ஓ.-படி, சட்டப்படி ஆதித்திராவிட மக்களுக்கு 32 இடங்களை ஒதுக்கியிருக்க வேண்டும். 16 சதவிகிதம் ஒதுக்கவேண்டும் என்பது விதிமுறை. 25 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கியிருக்க வேண்டும். இதற்கெல்லாம் மாறாக, முறைக்கு மாறாக, பாரபட்சமாக, உயர் ஜாதிக்காரர்களுக்குச் சாதகமாக 199 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். முறைகேடாக இருக்கிறது என்று நான் சொல்லுவதற்குக் காரணம், இதன்படி ஆதித்திராவிட மாணவர்களுக்கு 32 இடங்களை ஒதுக்கியிருக்க வேண்டும். சுப்பராமன் என்ற மாணவர் ஆதித்திராவிட மாணவர், போலீஸ் அமைச்சர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ரெயில்வே இலாகாவில் ஆடிட் டிபார்ட்மெண்ட்டில் வேலை பார்ப்பவர். அவர் விண்ணப்பித்தார். இன்றைய தினம் ஹரிஜன மக்கள் 18-20 பேர்கள் வக்கீல் வேலையில் இருப்பார்கள்—அவ்வளவுதான். 16 சதவிகிதம் மாணவர்களுக்குக்கூட கொடுக்காமல் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இதைப் போல இன்னும் பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி விதிகளுக்கு நேர்மாறாகச் செய்யப்பட்டிருக்கிறது. எங்கே? விலைடக் கொடுக்கட்டும். 32 பேர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களா? ஹைக் கோர்ட் ஜட்ஜ் ஆக விரும்பிக்கொண்டிருக்கும் திரு. ரங்கராஜன் தலைவராக இருந்து நிர்வாகம் செய்த லட்சணம் இந்த நிலையில் இருக்கிறது. கோபித்துக்கொள்ளுகிறார்களே. 16 சதவிகிதம் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன். இதே மாதிரிதான் மெடிகல் காலேஜ் பற்றிச் சொன்னார்கள்

அடுத்த தேர்தலில் தங்களுக்கு டிக்கெட் கிடைக்கிறதோ, இல்லையோ என்ற பயத்தினால் இந்த அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த அரசாங்கம் இதுவரையிலே இந்த வுட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் பாட்டில்களைப் பற்றி என்ன செய்தது? நடவடிக்கை எடுத்தது என்ன? சொல்ல முடியுமா? இது எவ்வளவு முறைகேடானது? ஒரிசா சர்க்கார் இதனுடைய விற்பனையைத் தடை செய்ய முயற்சித்திருக்கிறார்கள். எவ்வளவு கொலைபாதகச் செயல் நடந்திருக்கிறது? எவ்வளவு 'மர்டர்ஸ் செயல்', எவ்வளவு தவறான நிலைமைகள்?

இதே மாதிரியாகத் தான் பல அப்பாயிண்டுமெண்டுகள் விஷயத்திலும். அறைத்த மாவையே அறைக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அறைக்கத்தான் வேண்டியிருக்கிறது மாவை. ஊழல்கள் இல்லையா? முறைகேடுகள் இல்லையா? பாரபட்சம் இல்லையா? இதே மன்றத்தில் நான் முன்பே சொல்லியிருக்கிறேன். முதல் அமைச்சர் தேர்தல் வழக்கில் வக்கீலாக இருந்த திரு. வி. பி. ராமனை பப்ளிக் பிராஸிக்யூட்டராக ஏற்கனவே நியமித்தார். திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அட்வகேட்-ஜெனரல் இடத்திற்கு அனுப்பப்பட்டார். திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் நீதிபதியாகிற நேரத்தில் 'என்னுடைய விருப்பத்திற்கு மாறாக என்னை அட்வகேட் ஜெனராலாகப் போட்டார்கள்' என்று சொல்லியிருக்கிறார். அப்படித்தான் அந்த நியமனம் வந்திருக்கிறது. திரு. மோகன் குமாரமங்கலம் என்ற ஒரு பெரிய உயர்ந்த வக்கீல் அட்வகேட்-ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் என்னுடைய தலைசிறந்த நண்பரும் கூட. அவருடைய திறமையைப் பற்றிக்கூட நான் சொல்ல வரவில்லை. அப்பாயிண்டுமெண்டைப் பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள்? 'திறமை மட்டுமல்ல, எங்களுக்கு நம்பிக்கையும் வேண்டும்' என்று சொன்னார்கள். நேற்று வரையில் விரோதமான கட்சியைச் சேர்ந்த ஒருவரிடத்தில் அவ்வளவு நம்பிக்கை எப்படி பிறந்தது திடீரென்று? எப்படி நம்பிக்கை வந்தது அரசாங்கத்திற்கு? நான் அரசியல் லஞ்சம் 'பொலிடிகல் கரெப்ஷன்' என்று சொன்னேன். போன வருஷம் திருமதி விஜயலட்சுமியைக் கெடுத்துவிட்டீர்கள், திரு. ராதாகிருஷ்ணனைச் சேர்த்துக்கொண்டீர்கள். முன்பு எங்கள் கட்சியைச் சார்ந்திருந்த திரு. வி. பி. ராமனை சேர்த்துக்கொண்டீர்கள். இதெல்லாம் முறைதானா? இதெல்லாம் பொலிடிகல் பொல்யூஷன் இல்லாமல் வேறு என்ன என்று சொல்ல முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அங்கத்தினர் அவர்கள் உருக்கமாகப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நான் குறுக்கிட விரும்பவில்லை. இருந்தாலும், மன்னிக்கவேண்டும். 'ஒரு பெண்மணியைக் கெடுத்துவிட்டீர்கள்' என்று சொல்வது நல்லதல்ல.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அவர்களுடைய அரசியல் வாழ்க்கையைக் கெடுத்து விட்டதாகத்தான் நான் சொன்னேன். அது தான் அப்படி உள்ளே நுழைந்திருக்கிறது. அவர்கள் கற்பனை அந்த அளவுக்குப் போகவேண்டியதில்லை. நான் அப்படிக் கருதவில்லை. நான் அப்படிச் சொல்ல மாட்டேன். அப்படியிருந்தால் அவர்கள்





மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சகோதரி அவர்களையும், மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு மூன்று மெம்பர்கள் தான் இவ்வளவு நாட்கள் போட்டுக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது நான்காவது மெம்பராக திரு. அப்பண்டாராஜாவைப் போட்டிருக்கிறார்கள். அவர்களுடைய டிபார்ட்மெண்டில் அவர் இருந்தார். சர்வீஸ் கமிஷன் மெம்பர்களை கவர்னர் அபாயிண்டு செய்கிறார் என்று சொல்வார்கள். ஏன் இது நடந்திருக்கிறது? எப்படி வந்திருக்கிறது? துஷ்பிரயோகம் தான். துஷ்பிரயோகத்தினாலே தான் நடக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்களுடைய மருமகன் ஆர்.டி.ஓ.வாக ஆகியிருக்கிறார். போன வருஷம் ஸேல்ஸ் டாக்ஸ் ஆபீசர். இப்பொழுது அவருக்கு ஆர்.டி.ஓ. வேலை ஆகியிருக்கிறது. சொல்லட்டுமே, இல்லையென்று. நிலைமை அப்படி இருக்கிறது. அவருடைய இன்னொரு மருமகன் கூட எச்.ஆர்.ஈ. டிபார்ட்மெண்டில் சாதாரணமாக எக்ஸிக்யூடிவ் ஆபீசராக இருந்தார். அவர் 7, 8 வருஷங்களுக்கு முன்பு எக்ஸிக்யூடிவ் ஆபீசராக இந்த அறநிலையப் பாதுகாப்பு இலாகாவில் சேர்ந்தார். இப்பொழுது அவருடைய நிலை என்ன? அவர் இப்பொழுது அஸிஸ்டெண்டு கமிஷனர். அவர் பெயர் ஆதிமூலம் என்று கருதுகிறேன். இப்பொழுது அவர் அஸிஸ்டெண்டு கமிஷனர், பிறகு டெப்யூட்டி கமிஷனர், இப்படி நிலைமை போய்க் கொண்டே இருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விவரம் என்னவென்று தெரியவில்லை. ஆதிமூலம் அஸிஸ்டெண்டு கமிஷனர் என்று சொன்னார். விஷயம் என்னவென்று சொல்லவேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அவர் சாதாரணமாக எக்ஸிக்யூடிவ் ஆபீசராக இருந்தார். அவருக்கும் திடீரென்று உத்தியோகம் உயருகிறது. இதற்கெல்லாம் விவரம் கூறவேண்டும் என்று தேவையில்லை. தெரியாமல் இல்லை. இல்லையென்றால் மறுக்கட்டும். தலை வணங்குகிறேன். நியாயத்திற்கு விரோதமாக நடக்கிறது, அது முறை தானா? உத்தியோக உயர்வில் இரட்டை மண்டலம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அஸிஸ்டெண்டு கமிஷனர், டெப்யூடி கமிஷனர் என்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார். அப்படி பிரமோஷன் கொடுக்கப்பட்டதா?

**திரு. கே. ஏ. மதியழகன்:** அதற்கு வேலை நடந்துகொண்டிருக்கிறது. முன்பு திரு. வி. பி. ராமன் அவர்களைப் பற்றிக்கூட எச்சரிக்கையாகச் சொன்னேன். அதனால் அதுவரை நின்றது. சாதாரணமாக எக்ஸிக்யூடிவ் ஆபீசராக இருந்தவர் அஸிஸ்டெண்டு கமிஷனராக ஆகியிருக்கிறார். அதற்கெல்லாம் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்களுடைய மருமகனாக இருக்க வேண்டும் என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

அதே மாதிரித்தான் திரு. ஜோர்த்தனம் என்பவரைப் போட்டிருக்கிறார்கள், டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் என்று. வைத்திய இலாகாவிலே கதவு பூட்டிக்கிடக்கிறது. மூன்று மாத காலமாக, குமாரி மாக்காயரும் அங்கு இல்லை. எல்லாம் தூக்கத்

[திரு. கே. ஏ. மதியழகன்] [4th August 1966

தர்பார் போல நடக்கிறது. சிவகாமி சபதம் போல மூன்று மாதமாக மெடிகல் டைரக்டர் ஆபீஸ் சாத்திக் கிடக்கிறது. இப்படிப்பட்ட கோளாறுகள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டத்தான் இதையெல்லாம் எடுத்துச் சொல்கிறேன்.

செய்தித் துறை அமைச்சரைக் கேட்கிறேன். அங்கே பெரும் ஒழுங்கீனங்கள், முறைகேடான காரியங்கள், ஒரு நல்ல அரசாங்கத்திற்கு லாயக்கற்ற காரியங்கள் நடந்திருக்கின்றன. 14 பேர்களை மாவட்ட பப்ளிசிடி ஆபீசர்களாகப் போட்டிருக்கிறார்கள். தங்கள் இஷ்டம் போலப் போட்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சம்பளம் ரூ. 300 முதல் 600 வரை. சர்வீஸ் கமிஷன் நியமனம் கிடையாது. போட்டிருக்கிறார்கள். பெயர்களைப் படிக்கிறேன், சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கேளுங்கள். நாகபூஷணம் என்பவரை வேலூரில் போட்டிருக்கிறார்கள். பிறகு மதுரையில் ராதாகிருஷ்ணன் என்பவரைப் போட்டிருக்கிறார்கள். வீரப்பன் திருச்சியில். வைகுண்டம் தஞ்சாவூரிலே. ராஜாமாணிக்கம் என்பவர் திருநெல்வேலியில். ஜோஷுவா டேனியல் என்பவர் நாகர்கோவிலில். ஹரிகிருஷ்ணன் சேலத்தில்; இன்னும், காந்திதாசன் காஞ்சிபுரத்தில். குமாரசுவாமி மதுரையில். நாமதேவன் சென்னையில். ராமசாமி கோவையில். ஐயாக்கண்ணு ராமநாதபுரத்தில். ராஜாராம் தர்மபுரியில். இப்படிப் போட்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் கெஜடட் போஸ்டுகள், சர்வீஸ் கமிஷன் கிடையாது, இவர்களெல்லாம் யார்? கட்சிக்காரர்களும், வேண்டியவர்களும் தான். இந்த ஐயாக்கண்ணு என்பவர், எங்கள் கட்சி உறுப்பினர் வெங்கல் மணியால் பெரம்பலூரில் தோற்கடிக்கப்பட்டவர். காங்கிரஸ் கட்சிக்காரர். இந்த ராதாகிருஷ்ணன் என்பவர் என்னுடைய கல்லூரித் தோழர். காங்கிரஸ் கட்சியிலே தொண்டாற்றுகிறவர். பாராளும் மன்றத் தேர்தலில் தோற்றவர்; காங்கிரஸ் கட்சிக்காரர்; இவருக்கு ரூ. 400 சம்பளத்தில் கெஜடட் உத்தியோகம். கனம் கக்கன் அவர்களுக்குத் தெரியும். நாகப்பட்டணம் தொகுதியில் திரு. ஐயாக்கண்ணு ஏற்கனவே ஒரு தடவை போட்டியிட்டார்கள், ஆதித்திராவிட வாலிபர். அரசியலில் இருந்தால் ஏதாவது மாறிவிடப் போகிறார் என்று, ஒரு உத்தியோகத்தில் போட்டுவை என்றுகூட செய்திருப்பார்கள். காந்திதாசன் என்பவர் காமராஜருக்கு உறவினர். அவர்களையும் இப்படிப்பட்ட உத்தியோகத்தில் போட்டிருக்கிறார்கள். கிராஜுவேட்டுக்குக் குறைவாக இருக்கக்கூடாது என்று இருக்கிறது இந்த உத்தியோகத்திற்கு. ஆனால், இதில் இரண்டு பேர்கள் கிராஜுவேட்டுகள் அல்லர். இருந்தும் அவர்களையும் போட்டு இருக்கிறார்கள். கோயம்புத்தூரில் காளியப்பா என்பவரை செய்தித் துறை அதிகாரியாக, அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் டூரிஸம் என்று போட்டிருக்கிறார்கள். இது என்ன சாதாரண உத்தியோகமா? இங்கே குமாஸ்தாக்கள், பியூன்களைக் குறைக்கிறார்கள். ஆனால், இவர் அஸிஸ்டெண்ட் செக்ரடரி அளவில் போடப்பட்டிருக்கிறார். இவர் யார்? காங்கிரஸ் கட்சித் தொண்டர். காங்கிரசிலே வேலை செய்கிறவர். இதெல்லாம் பாரபட்சம் இல்லாமல் செய்யப்பட்டனவா? இதெல்லாம் 'நெபாடிஸம்' இல்லையா? (மணியடிக்கப்பட்டது).



4th August 1966]

SRI K. A. MATHIALAGAN I have taken twenty minutes. I request that I may be given ten minutes more. We will cut out one speaker from the list of speakers on the opposition side.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : May I suggest to you, Sir, if you will not mistake me, that you may kindly show some indulgence to the hon. Member ?

**திரு. கே. ஏ. மதியழகன் :** என்ன சொல்லுகிறீர்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒன்றும் வித்தியாசமாகச் சொல்லவில்லை. உங்களுக்குச் சாதகமாகத்தான் சொல்லுகிறேன்.

SRI K. A. MATHIALAGAN : It is very kind of you. Thank you, Sir.

அதே மாதிரி நாட்டுக் காரியங்களிலும் நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உடைமைக்கு, உயிருக்கு பாதுகாப்பு இருக்கிறதா இவர்களுடைய அரசியல்? ஐ.ஜி. ஆபீசுக்கு எதிலேயே மெயில் பத்திரிகை ஆசிரியர் பெண்ணின் சங்கிலியைத் திருடிக் கொண்டு போனார்கள். உடைமைக்கு பாதுகாப்பு இல்லை. ஐ.ஜி. ஆபீஸ் உள்ளே போய்ச் சொன்னால், மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் சொல்லுங்கள் என்கிறார்கள். இவர்கள் மைலாப்பூர் போவதற்குள் அவன் மகாபலிபுரம் ஓடி விட்டான். பத்திரிகையில் தலையங்கம் வந்தது. அங்கே பக்கத்தில் என்ன நடந்தாலும் ஐ.ஜி. ஆபீஸ்காரர்கள் கவனிக்க மாட்டார்கள் போலும். சட்டம் இருக்கிறதா? அமைதி இருக்கிறதா? என்ன சொல்லுகிறார்கள்?

' Editor's daughter ' losses a chain, Mail's standard goes down the drain '.

இப்படி ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் ஒரு போர்டில் எழுதியிருந்தார்கள். இப்படி போலீஸ்காரர்கள் சொல்லுவதா? சட்டம், ஒழுங்கு இருக்கிறதா?

அதேபோலத்தான் மாதவரத்திலும், பாலில் 20 சதவிகிதம் தண்ணீர் கலக்கிறார்கள். திண்டிவனத்தில் சமீபத்தில் ஒரு தோழர், ஆறுமுகம் என்பவர் இரண்டு படி பாலில் அரைப்படி தண்ணீர் கலந்தார் என்று தண்டனைக்குள்ளாகியிருக்கிறார். இங்கே பஃபலோ மில்கில் இவர்கள் கலக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 'டோன்ட்' மில்க் என்றால் தண்ணீர் கலக்க வேண்டும். அசல் பாலில் கலந்தால் குற்றம். மாதவரத்தில் தண்ணீர் கலப்பது 'டோன்ட் மில்க்'. ஆகவே, அது வேறு விஷயம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** மாதவரத்தில் செய்தால் அது டோன்ட் மில்க், ஆறுமுகம் செய்தால் அது கலப்படப் பால். இதற்கெல்லாம் யாரைத் தண்டிப்பது? அதே போலத்தான் ஏரியா கமிட்டிகளிலும். நேற்று சொன்னார்கள். மலேசியா தமிழ் மாநாட்டிற்குப் போனவர்கள் பற்றி. யார் யார் போனார்கள்? "ஸ்ரீ. பக்தவத்சலம்,

ஸ்ரீ. கார்த்திகேயன், ஸ்ரீ. ஞானசம்பந்தன், இன்னும், பேராசிரியர் ஆறுமுக முதலியார், ஸ்ரீ. பி. டி. ராஜன், திருமதி ராஜன், ஸ்ரீ. வி. எஸ். தியாகராஜ முதலியார், ஸ்ரீ. பழனியப்ப முதலியார், ஸ்ரீ. என். டி. சுந்தரவடிவேலு, ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன்" இப்படி பலபேர்கள். இவர்களையெல்லாம் பார்த்தால் இது என்ன தொண்டை மண்டல துளுவ வேளாளர்களாகப் போனார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பெயரை மட்டும் சொல்லிவிட்டு, "touch and go" என்று பேசினால் சரியாகாது. சரோஜினி வரதப்பன் என்னுடைய பெண்தான். ஆனால், அவருக்காக அரசாங்கத்தில் ஒரு பைசாக்கூடச் செலவழிக்கவில்லை. பிரயாணச் செலவெல்லாம் ரீஜினல் கமிட்டி போட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** எப்படியாவது உடல் நலத்தைப் பார்த்துக் கொண்டால் சரி.

அடுத்தபடியாக கடலூரில் கோவில் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அதில் யார் யார் இருக்கிறார்கள்? திரு. சிவசுப்பிரமணியம். எம். எல். ஏ. சரி, இருக்கட்டும். அடுத்து, திரு என். ஜங்கல் ரெட்டியார், மேல்சபை அங்கத்தினர், எம். எல். சி. அதன் பிறகு, எஸ். கருப்பையா, காங்கிரஸ் ஒர்க்கர். இந்த விபரங்களை மேசையில் வைக்கப்பட்ட பேப்பரிலிருந்து சொல்லுகிறேன்.

"In exercise of the powers conferred by sub-section (1) of section 16 of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959), the Governor of Madras hereby appoints the following persons as members of the Area Committee, Cuddalore :—

(1) Sri S. Sivasubramaniam, M.L.A., Omankulam, Chidambaram taluk.

(2) Sri N. Jangal Reddiar, M.L.C., Modaiyur village, Gingee taluk, South Arcot district.

(3) Sri S. Karuppiah, Congress Worker, Tittagudi, South Arcot district."

இதே மாதிரித்தான், மதுரையிலும், சிதம்பர முதலியார் இருக்கிறார். அதேபோல கள்ளழகர் கோவிலில் அருணாசல முதலியார் இருக்கிறார். அங்கே 'பக்தவத்சலம் ஹால்' என்று ஒன்றும் கட்டியிருக்கிறார்கள். அதற்கு செலவான பணம் முறையாக நிதியிலிருந்து செலவழிக்கப் படவில்லை. இப்படி ஆலயங்களெல்லாம் பிரசாரத்திற்கு உபயோகப்படுகின்றன. இலங்கையிலே புத்த பிட்சுக்கள் போலும், வேறு நாடுகளில் கிறிஸ்தவ மதக்கோயில்கள் போலும் இங்கேயும் ஆலயங்கள் அரசியலுக்கு அரங்கமாகப் போய்விட்டன.

அதே மாதிரி தொழில் துறையிலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குப் பர்மிட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியுமா? சேலத்தில் அலுமினிய தொழிற்சாலையை பெரிய மில் முதலாளி கோவை திரு. பி. ஆர். ராமகிருஷ்ணனுக்குக் 





கொடுத்திருக்கிறார்கள். சேஷசாயி பேப்பர் கம்பெனிக்குக் கொடுத்தார்கள். 300 பேர்கள் அப்ளிகேஷன்கள் போட்டார்கள், நூற்பு ஆலைகளுக்கு. 13 பேர்களுக்குத்தான் லைசென்ஸுகள் கொடுத்தார்கள். பட்டியலைப் படிக்கிறேன். கேளுங்கள். இதிலே பாரபட்சம் கிடையாது, முறைகேடான காரியம் இல்லை என்று சொல்லட்டும். 300 பேர்கள் மனுப் போட்டிருக்கிறார்கள். கைத்தறியாளர்களுக்காவது லைசென்ஸ் கொடுத்திருக்கலாம். அல்லது அரசாங்கமே கூட நடத்தியிருக்கலாம். தேசிய மயமாக்கப் போகிறோம், ஜனநாயக சோஷலிசம் என்று எல்லாம் பேசிக்கொண்டு, 13 பேர்களுக்கு லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். திரு. பி. ராஜகோபால் நாயுடு, எம்.எல்.ஏ. குடியாத்தம்) அவர்களுக்கு ஆரணியில் நூற்பு ஆலை வைக்க லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். திரு. பி. எஸ். ரங்கசாமி (பனைமரத்துப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா) என்பவருக்கு செஞ்சியில் நூற்பு ஆலை வைப்பதற்கு லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் காரியதரிசிகளில் ஒருவர். அவர் கோயமுத்தூரைச் சேர்ந்தவர். திருமதி குழந்தையம்மாள் அவர்கள் ஊருக்குப் பக்கத்து கிராமத்துக்காரர். அவருக்குச் செஞ்சியிலே மில் வைப்பதற்கு லைசன்ஸ் கொடுக்கப்படுகிறது. அடுத்து ஹரிராம் சேட் என்பவர். அவர் முக்கூடலைச் சேர்ந்தவர். முக்கூடல், கனம் சபாநாயகர் அவர்களுடைய ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறது. அவருக்கு ஆலங்குளத்தில் மில் வைக்க லைசன்ஸ் தரப்பட்டிருக்கிறது. திரு. ஆர். ஸ்ரீனிவாசன் என்பவருக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் ஆத்தூரைச் சேர்ந்தவர். அவருடைய இடம் நாசரத்பேட்டைக்கு எதிரில் இருக்கிறது. அவர் யார் என்று தெரியவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நாசரத்பேட்டைக்கும் ஆத்தூருக்கும் நாற்பது நாற்பத்தைந்து மைல் இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அதுவும் உள்ளே நுழைந்தால் டி.டி.கே.-யில் வந்து முடியும். விருதுநகரை அடுத்த சூலக்கரையில் உள்ள பழனியாண்டவர் டெக்ஸ்டைல்ஸுக்கு ஒரு லைசன்ஸ் தரப்பட்டிருக்கிறது. எங்கள் ஊரைச் சேர்ந்த திருமதி பார்வதி அர்ஜுனன், எம்.எல்.ஏ. அவர்களுக்கு அரியலூரில் ஒரு மில் வைக்க லைசன்ஸ் தரப்பட்டிருக்கிறது. 12,000 ஸ்பிண்டில்கள் உள்ள மில்லுக்கு லைசன்ஸ் தரப்படுகிறது. பாவம்! அவர்களுக்கு ஏராளமாக சொத்து இருக்கிறது. அதைப் பலருக்கும் விநியோகித்தால் கூட சொத்துக் குறையாது. அப்படியிருக்கும்போது பர்மிட் கொடுத்து அவர்களையே கெடுக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். விபரீதமான பொருளில் சொல்லவில்லை. அவர்கள் புனிதமான வாழ்க்கையையும் பொதுவான காரியங்கள் செய்யும் தன்மையையும் இவர்கள் கெடுக்கிறார்கள் என்று கொள்ள வேண்டும். அடுத்து, திரு. ஏ. மாரியப்பன், சேலம் முன்னாள் எம்.எல்.ஏ. அவர் வீரபாண்டி தொகுதியில் திரு. ஆறுமுகம் அவர்களால் தோற்கடிக்கப்பட்டவர். அவருக்கு ஓசூரில் மில் வைக்க ஒரு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு. தாமஸ் என்பவருக்கு கன்னியாகுமரியில் உள்ள தக்கலையில் மில் வைக்க

[திரு. கே. ஏ. மதியழகன்] [4th August 1966

லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் திரு. காமராஜ் அவர்களுக்கு நெருங்கியவர்கள். இப்படி 13 பேர்களுக்கு மில்கள்வைக்க லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே பாரபட்சம் இல்லை என்று இந்த ஆட்சியினரால் நிரூபித்துவிட முடியுமா? அருள்கூர்ந்து சொல்லட்டும்.

பொருளாதார நிலைமையைக் குறித்து திருமதி குழந்தையம்மாள் அவர்கள் வீராவேசமாகச் சொன்னார்கள். அவர்கள் வளர்த்தார்கள். அது தெரியும். ஆனால், மக்கள் வளம் பெருகியதா? கட்சியை துஷ்பிரயோகம் செய்தார்கள். இல்லை என்று சொல்ல முடியுமா? மூன்று வருஷங்களுக்கு முன்பு அவர்கள் இருந்த நிலைமை தெரியும். ஸ்ப்ரேயர், ஐ.ஓ.சி. ஏஜன்சி . . .

MR. SPEAKER : The hon. Member should not refer to persolaties.

SRI K. A. MATHIALAGAN : It is not a question of personalities. பல்வேறு பர்மிட் கொடுத்ததைத் தெளிவாகச் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : What ever it is, the hon. Member need not refer to individual members.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அவரவர்கள் தங்கள் தங்களுடைய பொருளாதாரக் கணக்கை ஸப்மிட் செய்யட்டும் என்று திரு. மாதவன் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதை ஏன் இந்த அரசு செய்யக்கூடாது? ஜனநாயகத்தைக் குழி பறிக்கிற காரியம் செய்வதற்குத்தான் இந்த அரசாங்கத்தைப் பயன்படுத்துகிறார்களே தவிர, ஏழை எளியவர்களுக்கு, உணவு கொடுக்கக்கூடிய சாதாரண கடமையைக்கூடச் செய்ய முன்வரவில்லை. புதிது புதிதாகச் சட்டங்கள் போடுகிறார்கள். பொது செக்யூரிடி ஆக்ட் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தமிழகத்தைக் கடந்த ஆண்டு இரத்தத் தடாகம் ஆக்கியதைக் குறித்து விசாரிப்பதற்கு விசாரணைக் குழு போட்டார்கள். அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார்களா? நிரபராதி மக்களைச் சுட்டுத் தள்ளினார்களே, அதைப்பற்றி விசாரணை செய்வதற்குக் குழு போட்டார்கள். அது என்ன ஆயிற்று? போலீஸ்காரர்கள் குழந்தைகளைச் சுட்டுத் தள்ளி, வெறித்தனமாக நடந்தார்கள். வெறித்தனமான பெரிய அடக்குமுறை வெறியாட்டம் தாண்டவம் ஆடியது. அதற்கெல்லாம் என்ன செய்தார்கள்? இன்றைக்குப் புதிதாகச் சட்டம் வேண்டும் என்கிறார்கள். ஹிட்லரைப் போல், முசோலினியைப் போல, மக்களை நசித்து, ரத்தக் காடாக செய்து விடவேண்டுமா? இந்த நாட்டு மக்களுக்கு எதிராக, அரசியல் சட்டத்திற்கு எதிரான சதியிலே முதல் அமைச்சர் சட்டம் வேண்டும் என்கிறார். பொதுத் தேர்தல் வருகிற சமயத்தில் துப்பாக்கி மூலமாகவும், அடக்குமுறை மூலமாகவும் இந்த நாட்டு மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமையைச் செலுத்த முடியாத அளவிற்குத் தடுத்து நிறுத்த சட்டம் கொண்டுவரப்போவதாகச் சொல்லப்படுகிறது. இன்று நாட்டிலே ஏழை / எளியவர்கள்,



4th August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

பாட்டாளி மக்கள், மக்கள் மன்றம் இந்த ஆட்சிக்கு எதிராகவும், முதல் அமைச்சருக்கு எதிராகவும் கருத்தைத் தெரிவித்து விட்டார்கள். இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இங்கே நிறைவேறாமல் போனாலும், மூன்றரை கோடி மக்களும் இந்த ஆட்சிக்கு எதிராக தங்களுடைய எதிர்ப்பை ஏற்கனவே தெரிவித்துவிட்டார்கள். அதைக் கூடிய சீக்கிரம் பிரகடனப் படுத்திவிடுவார்கள் என்று கூறி, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** கனம் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்தச் சபையில் பிரேரேபித்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் மிகக் கூர்ந்து நோக்கி வந்தேன். அதைப் பிரேரேபித்த கனம் எதிர்க் கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள், தங்களுக்கே உரித்தான உயர்ந்த, கண்ணியமான பாஷையில், தங்களுடைய பிரசங்கத்தை நிகழ்த்தியதைக் குறித்து உண்மையிலேயே நாம் அவரைப் பாராட்ட வேண்டும். ஏனென்றால், அநேக நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் பிரேரேபிக்கப்பட்டு, அந்தத் தீர்மானங்களின் மீது நிகழ்த்தப்பட்ட பல பிரசங்கங்களை நான் கேட்டிருக்கிறேன்; நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால், கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே நேற்று நிகழ்த்தியதைப் போன்ற இவ்வளவு கண்ணியமான முறையில் அமைந்த ஒரு பிரசங்கத்தை நான் இதுவரைக் கேட்டதில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டுமானால், அதற்கு ஒரு அடிப்படையான காரணம் இருக்கவேண்டும். முதன் முதலில் இதுபற்றிய செய்தியை நான் பத்திரிக்கையில் பார்த்தேன். இந்த மன்றத்தின் அங்கத்தினர், எதிர்க்கட்சி நண்பர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். நான் மிக்க ஆச்சரியம் அடைந்தேன். 1964-ஆம் வருஷம், இந்தச் சபையில் இதே மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தது. அப்பொழுது ஏராளமான பெரிய பிரசங்கங்கள் பேசித் தீர்க்கப்பட்டன. அதன் பின்னர், மறுபடியும் அதே கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருகிறது என்று சொன்னால், ஏதோ பெரிய சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன, பெரிய ஊழல்கள் நடைபெற்றுவிட்டன, 'கரப்ஷன்', 'நெபாடிஸம்' ஏதோ இந்த மந்திரிசபையில் சிலர் செய்துவிட்டார்கள், அதைத் தெரிந்துதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறார்கள் என்று உண்மையிலேயே அச்சம் அடைந்தேன். ஆனால், நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்ட பிறகு, அதுவும் மிகவும் கண்ணியமான பிரசங்கத்தைக் கேட்ட பிறகு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எந்த ஒரு காரணமும், எந்த ஒரு அவசியமும் இல்லை என்பதை யாரும் தெரிந்துகொள்ள முடிகிறது.

நேற்றைய்தினம் என்னுடைய நண்பர் ஒருவரிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது, அந்தப் பிரசங்கத்தைப் பத்திரிக்கையில் பார்த்தார். அவர் சொன்னார்—"நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [4th August 1966

வரப்போகிறது என்று சொன்னார்களே, ஏதோ பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, ஆகையால்தான் எதிர்க்கட்சியினர் எல்லோரும் சேர்ந்து—அதிலும் இந்தச் சபையில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து—நம்பிக்கையில்லாத் 'தீர்மானம்' கொண்டு வந்திருக்கிறார்களோ என்று நினைத்தேன். ஆனால், பிரசங்கங்களைப் பார்த்தபோது, சாதாரண பட்ஜெட் பிரசங்கங்களாகத்தான் இருக்கின்றனவே தவிர, புது 'பாயிண்ட்' ஒன்றும் இல்லையே. இதற்காக ஒரு நம்பிக்கையில்லாத் 'தீர்மானம்' வேண்டுமா?" என்று அரசியல் அதிகம் தெரிந்த நண்பர் ஒருவர் என்னைக் கேட்டார். அவருக்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரே பதில்தான் நான் சொன்னேன். சமீபத்தில் தேர்தல் வரப்போகிறது என்று உங்களுக்குத் தெரியும். எல்லோரும் தேர்தலைப் பற்றியே நினைக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்த மட்டில், அதாவது காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த மட்டில், தேர்தல் எங்களுக்குச் சகஜமாகிவிட்டது. தேர்தல் வரும்போது வரட்டும், அப்பொழுது பார்த்துக் கொள்ளுவோம் என்று நிதானமாகத்தான் இருப்போம். எதிர்க் கட்சியினருக்கு இப்போதே தேர்தல் ஜுரம் ஏற்பட்டுவிட்டது. தேர்தல் ஜுரம் காரணமாக 'பொலிடிகல் ஸ்டண்ட்' என்று சொல்லுவார்களே, அந்த மாதிரி இந்த சந்தர்ப்பத்திலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதுவும் நாட்டிலே ரூபாய் மதிப்பைக் குறைத்தார்கள். அதனால் விலைவாசி ஏறிவிட்டது, இதை ஒரு சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, சில பிரசங்கங்கள் செய்து, எதிர்க்கட்சிகளை ஒன்று சேர்க்கும் சூழ்நிலையை உருவாக்கி, அதன் மூலம் ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்ற ஒரே நம்பிக்கையில் இந்தத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்களே தவிர, ஏதாவது ஒரு ஸப்ஸ்டன்ஸ் இருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றும் இல்லை. அது மட்டுமல்ல. ரூபாய் மதிப்புக் குறைப்பால் நாட்டில் விலைவாசி ஏறிவிட்டது, ரூபாய் மதிப்பைக் குறைத்ததைத் தவறு என்று எதிர் தரப்பிலிருந்து பேசப்பட்டது. எதிர்த் தரப்பிலுள்ள கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். ரூபாய் மதிப்பைக் குறைத்தது தவறு என்று காங்கிரஸ் தலைவரே கூடச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாட்டிலே பத்திரிகையிலே ஏதேதோ வருகிறது. ஆனால், அதற்கு என்ன பொருத்தம்? யார் பேசினார்கள்? ஆதாரம் இல்லாத செய்தியை எடுத்துக் கொண்டு கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். அதை நேற்றே மறுத்தோம். ஆனால் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். இந்த நாட்டிலே ரூபாய் மதிப்பைக் குறைப்பதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும், எவ்வளவு துணிச்சலான காரியத்தை இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் செய்திருக்கிறது என்பதை முதலில் எதிர்க் கட்சிக்காரர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். ரூபாய் மதிப்பைக் குறைப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டாலும், பலவிதமான அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டாலும், நல்லது கெட்டது என்ன என்ன ஏற்படும், சாதக பாதகம் என்ன என்ன என்பதையெல்லாம்



4th August 1966] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

தெரிந்தும், தேர்தல் வரக்கூடிய சந்தர்ப்பத்தில் ஒரு காரியம் செய்வது என்று சொன்னால், எவ்வளவு துணிச்சல் காங்கிரஸ் மந்திரிசபைக்கு இருக்கவேண்டும் என்பதை எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, எல்லா எதிர்க்கட்சிகளும், கொள்கை இல்லாத கட்சியும் கூட, ஒன்று சேர்ந்துகொண்டு காங்கிரஸை எதிர்ப்பதற்கு முனைந்திருக்கும் இந்த தேர்தல் நேரத்தில், ரூபாய் மதிப்பைக் குறைப்பது என்கிற காரியத்தைக் காங்கிரஸ் மந்திரிசபை செய்கிறது என்றால், அவர்களுக்குத் தேசத்தின் நலன்தான் பெரிது, கட்சி கூட அவ்வளவு முக்கியம் அல்ல, தேர்தல் அவ்வளவு முக்கியம் அல்ல என்பதைத்தான் இது காட்டுகிறது.

தேசத்திற்கு ஜனநாயக முறையைக் கொடுத்திருக்கிறோம். பொருளாதார முன்னேற்றம் வேண்டும் என்பதற்காக துணிச்சலான காரியங்களை இந்த அரசாங்கம் மேற்கொண்டது. அதற்காக இந்த நாட்டில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் இந்த அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும்.

அதைவிட்டு விலைவாசிகள் உயர்ந்துபோகும், உயர்ந்துபோகும் என்று சொல்லிக்கொண்டே வந்தார்கள். பத்திரிகைகளும் எழுதின. நீங்கள் ரொம்ப ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். ரூபாய் மதிப்பைக் குறைத்தவுடன் விலைவாசிகள் ஏறவில்லை. ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள், பத்திரிகைகள் எல்லாம் விலைவாசி ஏறிவிடும், ஏறிவிடும் என்று சொல்வதைக் கேட்ட வியாபாரிகள், கள்ள மார்க்கெட்காரர்கள் 'விலைவாசியை உயர்த்தவேண்டும் போல் இருக்கிறது' என்று உயர்த்தினார்கள். இல்லை என்றால் இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிற காய்கறிகள் கூட விலை ஏறுவானேன்? இவை விலை ஏறுவதற்கு அவசியமே இல்லை; இருந்தும் விலை ஏறியிருக்கின்றன என்றால் அதற்குக் காரணம் எதிர்க்கட்சிக்காரர்கள்தான் என்று சொல்ல விரும்புகிறேன். (திரு. மி. கலியாணசுந்தரம் : உங்களைப் ப்ளானிங் கமிஷனில்தான் போடவேண்டும்!)

திரு. கலியாணசுந்தரம் மந்திரி சபை அமைத்தால் எனக்கு மந்திரி பதவி கொடுக்கமாட்டார்கள். ப்ளானிங் கமிஷனில் சில எக்ஸ்பர்ட்டுகளைப் போட்டாகவேண்டும் அல்லவா? அதற்காவது போடுவார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு)

ஆக, இன்றைக்கு உள்நாட்டுப் பண்டங்களின் விலைகள் கூட ஏறியிருப்பதற்குக் காரணம் ரூபாய் மதிப்பைக் குறைத்தது காரணம் அல்ல. எதிர்க்கட்சிக்காரர்கள் செய்த தூண்டுதல்களின் காரணமாகத்தான் விலைகள் ஏறிவிட்டன.

அடுத்து, திரு. மதியழகன் அவர்கள் ஆவேசமாகப் பேசினார்கள். அவர்கள் குறிப்பிட்ட எல்லாவற்றையும் எடுத்துச் சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லை. அவர்களுக்கு முதல் மந்திரி அவர்களே சிபார்சு செய்து நேரம் வாங்கிக் கொடுத்தார்கள். (சிரிப்பு).

மலேசியாவில் நடந்த தமிழ் மகாநாட்டுக்கு முதல் அமைச்சரின் பெண்ணையும் ஒரு பிரதிநிதியாக அனுப்பியது பற்றிக் குறிப்

பிட்டார்கள். அது மிகவும் அன்ச்சாரிடபிள் ரிமார்க், நாற்பது, முப்பது பிரதிநிதிகள் அனுப்பப்பட்டபோது அவர்களையும் ஒரு பிரதிநிதியாக அனுப்பியது ஒரு குற்றச்சாட்டா? ஓரளவுக்கு எதிர்க்கட்சித் தலைவரைப்போல கௌரவமான முறையில் இருந்திருக்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நம் பார்லிமெண்டரி சங்கத்தின் பிரதிநிதியாக லண்டனுக்கு அனுப்பவில்லையா? அதுவும் ஏக பிரதிநிதியாக அனுப்பினார்களே? நாற்பது ஐம்பது பேர்களுடன் ஒருவரை, அதுவும் தமிழ் மகாநாட்டுக்கு அனுப்பியது ஒரு பெரிய குற்றமா? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. நெடுஞ்செழியன் அவர்களை லண்டனுக்கு அனுப்பினார்களே, ஏக பிரதிநிதியாக அனுப்பினார்களே, அதை ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு என்ன அவசியம் இருக்கிறது? எப்படியோ எதிர்க்கட்சிக்காரர்கள், கம்யூனிஸ்டு கட்சி—அதில் இடதுசாரி, வலதுசாரி,—சுதந்திராக் கட்சி, டி.எம்.கே. கட்சி—இப்படி நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து எப்படியாவது வரப்போகிற தேர்தலில் காங்கிரஸைத் தோற்கடிக்கவேண்டும் என்பதுதான் திட்டம். தேர்தலில் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் அவ்வளவுதான். சித்தாந்த அடிப்படையில் அவர்கள் ஒன்று சேரவில்லை. கொள்கை உடன்பாடு கூட இல்லை. தேர்தல் வரப்போகிறது என்றவுடன் ஏற்பட்ட தேர்தல் ஜுரம். காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தலைப் பற்றிக் கவலையில்லை.

1948-ஆம் வருடம் இந்தியா, பாகிஸ்தான் பிரிவினை வந்தது. அதனால் எத்தனையோ குழப்பங்கள் ஏற்பட்டன. அந்தக் கஷ்ட காலத்திலும் சமாளித்தோம். காங்கிரஸ் வெற்றி பெற்றது. 1962-இல் நம்முடைய நாட்டின் ஜனநாயகத்தைக் குலைப்பதற்கு கம்யூனிஸ்ட் சீனா படையெடுத்தது. அதனால் எத்தனையோ கஷ்டங்கள் ஏற்பட்டன. அந்தச் சூழ்நிலையையும் எதிர்க்கட்சிக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளப் பார்த்தார்கள். அந்தத் தேர்தலிலும் வெற்றி பெற்றோம். இன்றைக்கு வெளிநாடுகளில் இந்தியாவுக்கும், இந்திய ஜனநாயக அமைப்புக்கும், ஜனநாயகம் இங்கே வேரூன்ற பாடுபட்டு வருகிற காங்கிரஸ் கட்சிக்கும் எவ்வளவு மதிப்பு, கௌரவம் இருக்கிறது என்பதை கனம் எதிர்க்கட்சித் தலைவர் லண்டனுக்குச் சென்று வந்தார்களே, உணர்ந்து கொள்ளவில்லையா? உலகநாடுகளில் எல்லாம் நமக்குள்ள பெருமைகளை அவர்கள் உணர்ந்துதான் வந்திருப்பார்கள். ஆனால், இப்போது கட்சி நலனை உத்தேசித்து ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். நாம் முன்பு ராணுவத்திற்காக 400 கோடி செலவிட்டுவந்தோம். சீன, பாகிஸ்தான் படையெடுப்பினால் இன்றைக்கு ஆயிரம் கோடிக்குமேல் செலவு செய்கிறோம். இதனால் நமக்குள்ள கஷ்டம் எவ்வளவு தெரியுமா? இயற்கை வேறு பொய்த்து அதனால் பலவித கஷ்டங்களை அனுபவித்து வருகிறோம். இதையெல்லாம் எதிர்க்கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயல்கிறார்கள். சாதாரணமாக நான் ஒரு



உதாரணம் சொல்வேன். யாரும் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஜனங்களுக்கு எத்தனை கஷ்டம் வந்தாலும், கள்ள மார்க்கெட்காரர்கள் வருந்தமாட்டார்கள். எப்படியாவது அந்தக் கஷ்ட நிலையிலும் கூட தங்களுடைய சொந்த லாபத்தையே பெருக்கிக்கொள்ளப் பார்ப்பார்கள். எதிர்க்கட்சிகளின் செயல்கள் அப்படித்தான் இருக்கின்றன. மக்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்யவும், அவர்களுக்கு நல்லது செய்யவுமே காங்கிரஸ் கட்சி பாடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மக்கள் நன்றாக உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

நேற்று நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பிரேரித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது என்ன குறிப்பிட்டார்கள்? விவசாயிகளுக்கு, மக்களுக்கு கூட்டுறவு முறையில் கடன் வழங்க, போதுமான வசதிகளைச் செய்ய இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்றார்கள். ஆனால், அதே கட்சியைச் சேர்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது "கூட்டுறவுத் துறையை எடுத்துவிடுங்கள், தேர்தலில் உங்களால் ஜெயிக்க முடியுமா? தர்மபுரித் தேர்தலில் அதை வைத்துத்தானே ஜெயித்தீர்கள்?" என்றார்கள். ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சி, இன்னொருவர் திராவிடக் கட்சி என்பது கூட இல்லை. இரண்டு பேரும் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். இருந்தும் ஒருவர் கூட்டுறவுத் துறையை விஸ்தரிக்கவேண்டும் என்கிறார். இன்னொருவர் எடுத்துவிடவேண்டும் என்றால் என்ன பொருள்? அவர்களுக்குள்ளேயே கருத்து ஒருமைப்பாடு இல்லை. காரணம், அவர்களிடம் உண்மையான கருத்துக்கள் இல்லை. குற்றம் சாட்டவேண்டும் என்பதற்காக அவரவர்கள் இஷ்டம்போல் பேசுகிறார்கள்.

நண்பர் மதியழகன் அவர்கள் முதல் அமைச்சரின் திறமையை ஒத்துக்கொள்கிறேன் என்கிறார்கள். ஆனால், மந்திரி சபையில் உள்ளவர்கள் தான் தவறு செய்கிறார்கள் என்றார்கள். புலவர் கோவிந்தன் அவர்கள் 'முதல் அமைச்சர் திறமைசாலி. ஆனால் தைரியம் இல்லாதவர்' என்றார்கள். நமது முதல் அமைச்சர் அவர்களா தைரியம் இல்லாதவர்கள்? 1964-ஆம் ஆண்டிலே இந்தி என்ற பெயரைச் சொல்லி, நாட்டிலே உள்நாட்டுப் புரட்சியே வந்துவிட்டதோ என்று ஜனங்கள் மிரளும்படியாக எதிர்க்கட்சிக்காரர்கள் செய்தார்களே, முதல் அமைச்சர் அவர்கள் தைரியத்தை இழந்துவிட்டார்களா? நாட்டிலே ஏற்பட்ட அராஜகச் செயல்களுக்கு அஞ்சி காங்கிரஸ் கட்சியின் உள்ளே இருந்தவர்களே அஞ்சினார்களே, சில மந்திரிகள் ராஜீநாமாச் செய்ய முன்வந்தார்களே?

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: On a point of information, Sir ராஜீநாமாச் செய்ய முன்வந்த அமைச்சர்கள் யார் யார்?

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: Please do not disturb me நான் சொல்வதை நான் சொல்கிறேன். 'ஐயோ, நீங்களும் ராஜீநாமாச் செய்துவிடுங்கள்' என்று சொன்னார்களே, முதல் அமைச்சர் அவர்கள் பயந்தார்களா? நாட்டிலே ஜனநாயகத்தை

அழிக்க, எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு, குழப்பத்தை விளைவித்த போதிலும் தைரிய புருஷராக நின்று நாட்டிலே மீண்டும் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டியவர் நமது முதல் அமைச்சர் அவர்கள். (பலத்த ஆரவாரம்) ஐயாயிரம் பேர்களாகத் திரண்டு வந்தார்களே, நான்கு போலீஸ்காரர்களை வைத்துக் கொண்டு சமாளித்திருக்க முடியுமா? வருவது வரட்டும் என்று உறுதியாக நின்று அதனைச் சமாளித்த தைரிய புருஷர் நமது முதல் அமைச்சர் அவர்கள். தைரியம் இல்லாத ஒருவராக இருந்தால் இன்று பதவியில் இருந்திருக்க முடியுமா? அவரைப் போய் தைரியம் இல்லை என்கிறார்களே, அவரா தைரியம் அற்றவர்? எவ்வளவு தைரியமாக நின்று நமது முதல் அமைச்சர் அவர்கள் நம்முடைய பிரச்சினைகளை எல்லாம் சமாளித்து வந்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாதா?

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவரவர்களே, ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன் . . .

SRI R. V. SWAMINATHAN: Sir, I am not yielding. Unless a point of order is raised, I am not going to yield.

(புலவர் கா. கோவிந்தன் மறுபடியும் எழுந்தார்.)

**கனம் சபாநாயகர்:** அவர் சொல்வது கிளியராகத்தான் இருக்கிறது. அவர் சொல்வதை இல்லையென்று சொல்லவேண்டுமானால், பின்னால் சொல்லுங்கள்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** அடுத்த குற்றச்சாட்டாக அவர்கள் விவசாயத்திற்கு நல்லபடியாக எதுவும் செய்யவில்லை என்று சொன்னார்கள். இந்த தேசத்திலும் சரி, இந்த மாகாணத்திலும் சரி, பிளானிங் கமிஷனிலும் சரி, விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, கோடிக்கணக்கான ரூபாய்கள் விவசாய முன்னேற்றத்திற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நிதானத்தோடு யோசித்துப் பார்க்கவேண்டும். நிதானம் இழந்து யோசித்துப்பார்க்காமல் பேசவேண்டுமானால், எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். இந்த நாட்டிலும், இந்த மாகாணத்திலும் விவசாயத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பணம் வேறு எந்த நாட்டிலும் கொடுத்தது இல்லை. விவசாய முன்னேற்றத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை தவறு—செய்யலாம், எந்தக் கட்சியில் உள்ளவர்களும் தவறு செய்யலாம்—ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். பல வருஷங்கள் கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் விவசாய மந்திரியாக இருந்து இருக்கிறார்கள். அது உங்களுக்கெல்லாம் தெரியும். நீங்கள் பழைய ஏடுகளையெல்லாம் புரட்டிப்பார்க்கவேண்டும். அப்படிப்புரட்டிப் பார்த்தால், அவர் என்ன செய்திருக்கிறார் என்பது தெரியும். ஆத்திரத்தில் பேசிவிடலாம். நான்கூட முன்னால் இந்த சட்டசபையில் இருந்திருக்கிறேன். அப்பொழுது இந்த நாட்டினுடைய விவசாய முன்னேற்றத்திற்காக, இந்த நாட்டினுடைய விவசாயிகளுக்காக அவர்கள் செய்துள்ள நன்மைகளுக்காக திரு. பக்தவத்சலம்





அவர்களுக்கு அவர்கள் எல்லாம் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு விவசாயக்குடிமகனும் அவருக்கு ஒரு சிலைசெய்து வைக்கவேண்டும். ஆகவே, விவசாயத்தைப் பெருக்குவதற்கு கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார்கள். அவர் முதல்மந்திரி என்ற காரணத்திற்காக அல்ல, விவசாய மந்திரி என்ற காரணத்திற்காக இந்த நாட்டு விவசாய மக்கள் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். முன்பு விவசாயிகளுக்காக எவ்வளவு நன்மைகள் செய்யப்பட்டன, இப்பொழுது எவ்வளவு நன்மைகள் செய்யப்படுகின்றன, முன்பு எவ்வளவு உற்பத்தி செய்தோம், இப்பொழுது எவ்வளவு உற்பத்தி செய்கிறோம் என்பதையெல்லாம், புள்ளிவிவரத்தைப் பார்த்தால் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைப் பார்க்க முடியும்.

ஒரு நண்பர் சொன்னார், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு கான்ஸ்டிட்யூஷனில் சொல்லப்பட்டிருப்பதைக்கூட இந்த அரசாங்கம் கொடுக்கவில்லை என்று. அவர் தனிப்பட்ட கேஸ்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவற்றைப்பற்றி நான் சொல்லவில்லை. ஆனால், இந்த அரசாங்கம் பிற்பட்ட வகுப்பினருக்கு எவ்வளவோ செய்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. 1948-வது வருஷம் என்று நினைக்கிறேன். அப்பொழுது இந்தச் சட்டசபையிலே பிற்பட்ட வகுப்பினருக்கு நன்மைகள் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. காங்கிரஸ்காரர்கள்தான் இதற்காகக் கிளர்ச்சி செய்தார்கள், பிற்பட்ட வகுப்பினருக்கு நன்மைகள் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அப்பொழுது திரு. கோபால் ரெட்டி அவர்கள் தான் பைனான்ஸ் மினிஸ்டராக இருந்தார்கள். அவர்களும் இதற்காக அப்பொழுது என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு திடீரென்று பிற்பட்டவர்களின் நன்மைக்காக என்று ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இதைத்தவிர, ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கும் தனியாக ஒதுக்கப்பட்டது. அதற்காக உடனடியாக ஒரு கமிட்டிபோட்டு என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். அப்பொழுது பிற்பட்ட வகுப்பிலுள்ள ஏழை மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம் என்று யோசனை தெரிவித்தோம். அதேமாதிரி அந்த ஒரு லட்சம் ரூபாயும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புக்காகக் கொடுக்கப்பட்டது. 1947-48-லே ஒரு லட்சம் ரூபாய் இந்த ஸ்காலர்ஷிப்புக்காகக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது ஒரு கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்படுகிறது. யோசித்துப் பார்க்கவேண்டும், ஒரு லட்சம் எங்கே, ஒரு கோடி எங்கே? அதை யோசித்துப் பார்க்காமல் பிற்பட்ட வகுப்பினருக்கு ஒன்றும் செய்யவில்லை, செய்யவில்லை என்று சொல்வது நியாயமா, தர்மமா என்று கேட்க விரும்புகிறேன். அதிகமாகச் செய்யவேண்டுமென்று வேண்டுமானால் கேட்கலாம். அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று நான்கூடக் கேட்கிறேன், நானும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்தான். ஆனால், ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது தர்மமா என்று பார்க்கவேண்டும்.

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [4th August 1966

இப்பொழுது இவர்கள் கொடுத்துள்ள குற்றச்சாட்டுக்களைப் பார்க்கும்பொழுது நம்பிக்கை இல்லாமல் இருப்பதற்குக் காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் சொன்னார்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் இல்லாமலேயே ராஜினாமாச் செய்துவிடுங்கள் என்று. ஆனால் நான் ஒன்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எந்த விதக் காரணமும் இல்லாத காரணத்தால் அதைக் கொடுத்து அவர்களுக்கு ஒரு கெட்டபெயர் வரவேண்டாம். ஆகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இர. பொன்னப்ப நாடார்:** கனம் தலைவரவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவரால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில கருத்துக்கள் கூறுவதற்கு நான் முற்படுகிறேன். அவர்கள் எட்டுக் குற்றச்சாட்டுக்களை இங்கே பட்டியலாகத் தொகுத்துப் பிரசங்கம் நிகழ்த்தினார்கள். அவர்கள் அதிலே அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பது விலைவாசி அதிகமாக ஆகியிருக்கிறது என்பதுதான். அதற்கு மேற்கோளாக மார்ச் மாதத்திலிருந்து உள்ள வாழ்க்கைப் புள்ளிவிவரத்தைச் சான்றாகக் கூறினார்கள். மார்ச் மாதத்திலிருந்து ஜூன் முடிய 59 பாயிண்ட் புள்ளி விவரத்தில் கூடுதலாக வந்திருக்கின்ற காரணத்தால், விலைவாசி அதிகமாகியிருக்கிறது என்று கூறினார்கள். விலைவாசி கொஞ்சம் ஏறியிருக்கிறது, இல்லையென்று யாரும் மறுக்கவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதன்முதலாக, அதை விளக்குவதற்கு நான் விரும்புகிறேன். திட்டமிட்ட பொருளாதாரத்திலே, வளர்ச்சியடைகின்ற சமுதாயத்திலே விலைவாசி சாதாரணமாக உயருவது வழக்கமாக இருக்கிறது. மூன்று திட்டங்கள் காரணமாக மக்கள் கையில் வருவாய் பெருகியிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. மிக அதிகமாக மக்கள் கையில் பணப்புழக்கம், வாங்கும்சக்தி இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து அதுவும் ஒரு காரணம் என்பதையும் எடுத்துக்கொள்ளவேண்டும் அடுத்ததாக 1962-லேயும், அதற்குப் பிற்பாடும் நம்மீது வெளிநாட்டார்கள் படையெடுத்ததின் காரணமாகப் பாதுகாப்புச் செலவு அதிகமாகிவிடக் கூடிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பாதுகாப்புக்கு அரசாங்கத்திலிருந்து அதிகப்பணம் ஒதுக்கவேண்டியிருந்ததால், அரசாங்கத்திற்குச் செலவு அதிகரித்தது. அரசாங்கச் செலவு அதிகரித்தது என்று சொன்னால் மக்கள் கையில் பணம் வந்திருக்கிறது. "One man's expenditure is another man's income" என்ற அந்த அடிப்படையிலே பாதுகாப்புக்கு பணம் செலவழிக்கப்பட்டது என்று சொன்னால், அது மக்களுக்கு வரக்கூடிய நிலையிலே ஒரு சகஜமான சூழ்நிலை இருந்ததின் காரணமாகப் பணம் அதிகமாக வந்துவிட்டது. பணவீக்கம் வந்துவிடுமோ என்ற பொருளாதார நிபுணர்கள் பயப்படக்கூடிய நிலையிலே இருந்தது. ரூபாயின் மதிப்புக் குறைவை ஏற்றுக்கொண்டதின் காரணங்களைப்பற்றியும், ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டது சரியா, இல்லையா என்பதைப்பற்றியும், பொருளாதார நிபுணர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் உண்மையைத்



4th August 1966] [திரு. இர. பொன்னப்ப நாடார்]

துருவித்துருவி ஆராய்ந்து பார்க்கும்பொழுது, ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதற்குப் பிறகுகூட விலைவாசி 1 சத விகிதம் ஏறியிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டாலும், பெரும் அளவிலே ஏறவில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். மேல்நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வது நல்லமுறையில் உற்சாகப்படுத்தப்படவேண்டுமென்ற காரணத்தால் அரசாங்கம் இந்த முடிவை கைக்கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பே இதைக் கைக்கொள்ள வேண்டுமா என்று ஆராய்ந்து இப்பொழுது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. பாராளுமன்றத்திலே இதைப் பற்றி வெளியிடவில்லை, மக்களுக்கு இதைப்பற்றி வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டுகளை மத்திய பாராளுமன்றத்தில் உள்ளவர்களும், பல தலைவர்களும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆனால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏக காலத்தில் பாராளுமன்றத்திலும், சட்டசபையிலும் கொண்டுவருவதற்குக் காரணம் என்னவென்றால், 1967-ஆம் ஆண்டுத் தேர்தலிலே காங்கிரஸை முறியடிக்க வேண்டுமென்பதுதான். அதற்காகத்தான் மேற்கோள்கள், சான்றுகள் இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி இந்தப் புகார்களை எடுத்துச்சொல்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் அதிகமாக விலைவாசி ஏறுவதைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்கூறினார்கள். நாம் நிதானமாக இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 13 கோடி ரூபாய் உணவுதானியக் கொள்முதலுக்கு ஒதுக்கப்படும் என்று துணைமதிப்பீட்டின்கீழே காட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சென்னையிலே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபொழுது மந்திரிகள் தஞ்சாவூர், இன்னும் ஏனைய இடங்களுக்கும் விரைந்துசென்று, சென்னையிலே இருக்கும் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் கொண்டுவரவேண்டுமென்பதற்காக என்னென்ன முயற்சிகள் செய்தார்கள் என்பதை இந்தச் சட்டசபை உறுப்பினர்கள் பலரும் உணர்ந்திருப்பார்கள். ஒரு பீதி மனப்பான்மை ஏற்பட்டபோது நம்முடைய அரசாங்கம் தகுந்த முறையில் குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்கும் அரசாங்கம் காலாகாலத்தில் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதற்காக எப்போதும் நன்றியும், பாராட்டுதலும் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். பஞ்சப் பிரதேசங்களில் என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதற்கு ஒரு பட்டியலே இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் விரிவாக எடுத்துச் சொல்ல . வேண்டிய தேவை இல்லை என்று கருதுகிறேன். முன்பு, உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரை நான்கு ராஜ்யங்கள் கொண்ட மண்டலத்தில் ஒரு பகுதியாக நம்முடைய ராஜ்யம் இருந்தது. தமிழ் நாடு தனி மண்டலமாகப் பிரிக்கப்படுவதற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நாம் அறிந்திருக்கிறோம். உணவு தானியங்களைப் பொறுத்தவரை நமது ராஜ்யமானது மார்ஜினல் சர்ப்ளஸ் ஸ்டேட் என்று கூறியிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற ஏனைய சமஸ்தானங்களுக்கும், உதாரணமாகக் கேரள ராஜ்யத்திற்கு அங்கு மக்கள் அவதிப் பட்டுக் கொண்டிருந்த

[திரு. இரா. பொன்னப்ப நாடார்] [4th August 1966

நேரத்தில், இன்னல் பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் இந்த அரசாங்கத்தார் தாராளமாக அரிசியை அனுப்பி வைத்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவ்வாறு அண்டையில் இருக்கும் சமஸ்தானங்களுக்கும் காலாகாலத்தில் அனுப்பிய பெருமையும், நல்ல மனப்பான்மையும் இந்த அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுக் கொள்முதலைப் பற்றிப் பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டன. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் உணவுக் கட்டுப்பாடு தேவையில்லை, டீ-கண்டிரோல் அவசியம் என்ற கருத்தைக் கூறுகிறார்கள். டி.எம்.கே. கட்சியினர் கட்டுப்பாடு வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி மாற்று ஆலோசனை கூறுவார்கள் என்று எதிர்பார்த்தேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், விலைவாசி ஏறிக் கொண்டே இருக்கிறது; தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறினார்கள். ஸ்டாச்சுடரி ரேஷன் வேண்டுமென்று கூறுகிறார்களா அல்லது சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகின்ற டீ-கண்டிரோல் வேண்டுமென்று சொல்லுகிறார்களா என்பதைப் பற்றிய ஆணித்தரமான கருத்தை இந்தச் சபையின் முன் வைக்கவில்லை.

வியாபாரிகளும் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு இங்கு எடுத்துக் கூறப்பட்டது. குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள் மலிந்துவிட்டன என்ற குற்றச்சாட்டு பரவலாக இங்கு பலராலும் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் கூட்டுறவு முறையிலே மத்தியக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக சிறு சிறு கூட்டுறவு அடிப்படையில் கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டிவ்ஸ் ஏற்படுத்தி உணவு தானியங்களையும் அத்தியாவசியப் பண்டங்களையும் விநியோகம் செய்ய அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். முன்னாள் டைரக்டர் ஆப் ஹாண்ட் லூம்ஸ் ஆக இருந்தது உயர் திரு. மகாதேவன் அவர்களை ஸ்பெஷல் ஆபீசராகப் போட்டு அதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள உணவுப் பற்றாக்குறைக்கும், விலைவாசி உயர்வுக்கும் பலவிதமான காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக, பருவமழை தவறியதன் காரணத்தால் விலைவாசி ஏறிற்று என்பதையும் ஒரு காரணமாக எடுத்துக் கூற வேண்டும். தென் மேற்குப் பருவமழை தவறி பவர் கட் ஏற்பட்டது. அதன் காரணமாக விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் மின்சாரம் கிடைக்காத காரணத்தால் ஓரளவு உற்பத்தியைப் பாதித்தது. விலைவாசி ஏறுவதற்கு டீ-வால்யூவேஷனை ஒரு காரணமாகச் சொன்னாலும் அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எல்லாம் இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும்



4th August 1966] [திரு. இரா. பொன்னப்ப நாடார்]

இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை கிடைக்க அரசாங்கம் போனஸ் என்ற முறையில் ஆவன செய்திருக்கிறது. குறிப்பாக, கிணறு வெட்டுவதற்காக மானியங்களும், உதவிகளும் செய்ய அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1961-62-ல் இந்த அரசாங்கம் கிணறு வெட்டுவதற்கு 56 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருந்தது; 1966-67-ல் 300 லட்சம் ரூபாய் கிணறு வெட்டுவதற்காக மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக இந்தச் செலவை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் உணவு உற்பத்தியைப் பாதிக்கிற முறையிலே கரும்பைச் சாகுபடி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸை அனுசரித்து உணவுக் கட்டுப்பாடுச் சட்டங்களை எல்லாம் செய்தார்கள். அதை இப்போது மாற்றி எஸென்ஷியல் காமாடிட்டீஸ் சப்ளைஸ் ஆக்டின் கீழ் விதிகளைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டப்படி ஒருவன் தன்னுடைய நிலத்திலே கரும்பைச் சாகுபடி செய்வதன் உரிமையைச் சட்ட பூர்வமாகப் பறிக்க முடியாது. சட்ட பூர்வமாக அந்த மாதிரித் தடை செய்வதற்கு இப்போது நெருக்கடி நிலைமை இல்லாத காரணத்தால் இதிலே நிர்ப்பந்தப் படுத்துவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. கரும்பு சாகுபடி செய்தால்தான் சீனி ஆலை சரியானபடி இயங்கும். கரும்பு சாகுபடியால் பற்றாக்குறையாக உள்ள சீனி மக்களுக்குக் கிடைக்கிறது. பணம் கொடுக்கக்கூடிய பொருள் அது. கரும்புச் சாகுபடி இவ்வாறு உதவியாக இருக்கிறது என்ற காரணத்தால் அதுவும் தேவை என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழகச் சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நாட்டிலே விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்கின்றன என்ற குற்றச்சாட்டை ஆளுங் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் கூட மறுப்பதாகத் தெரியவில்லை. ஏறியிருக்கிற விலைவாசிக்கேற்ப நாட்டு மக்களின் ஊதியம் பெருகியிருக்கிறது என்று பரவலாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய புத்தகத்தைத் துருவிப் படித்தவன் நான். அதிலே நான் ஒன்றைப் பார்த்தேன். ‘நாட்டில் பொதுவாக தேசிய வருமானம் பெருகியிருக்கிறதென்றாலும் ஏழை, நடுத்தர மக்களின் வருமானம் பெருகவில்லை ; அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை’ என்று முதலமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களே அதை ஒத்துக் கொள்கிறார்கள். தேசிய வருமானம் பெருகி

[திரு. ப. உ. சண்முகம்] [4th August 1966

யிருக்கிறது, ஆனால் ஏழை நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்ற உண்மையை கனம் முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அது எதைக் காட்டுகிறது? விலைவாசி ஏறுகிற அளவுக்குப் பாதிக்கப்படுகிற மக்களுக்கு ஊதியம் இல்லையென்று சொன்னால் அது யாருடைய குற்றம் என்பதை இந்த மன்றத்தில் எழுப்ப விரும்புகிறேன். ஏறி இருக்கிற விலைவாசிகளால் பாதிக்கப் படுகிறவர்கள் ஏழை நடுத்தர மக்கள் என்பதை இந்த அரசாங்கம் மறந்துவிட்டது என்ற குற்றச் சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். ஏழை நடுத்தர மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி இல்லை; அவர்கள் பரவலாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டை இந்த அமைச்சரவை மீது சாட்ட விரும்புகிறேன். விலைவாசி ஏறியிருக்கிறது என்பதற்கு நான் ஒரு நிகழ்ச்சியைச் சொன்னால் மந்திரியவர்கள் வருத்தப்படமாட்டார்கள் என்று நினைக்கிறேன். உயர் திரு. கனம் கக்கன் அவர்களுடைய துணைவியார் 'நாட்டில் இருக்கும் விலைவாசி ஏற்றத்தால் நானும் பாதிக்கப்பட்டிருக்கிறேன்' என்று ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியதாகப் படித்தேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** முந்தாநாளா பேசியது? எப்போது நடந்த கூட்டத்தில் பேசப்பட்டது? அதைச் சொல்வதற்கு இதுதானா சந்தர்ப்பம்?

**திரு. ப. உ. சண்முகம் :** உண்மையைச் சொல்வதற்கு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டால் அதிலே தவறு இல்லை.

**கனம் சபாநாயகர் :** காய்கறி விலை ஏறிவிட்டது என்று சொன்னார்கள்.

**திரு. ப. உ. சண்முகம் :** 'என்னைக் காட்டிக் கொடுக்க வேண்டாம்' என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் விட்டு விடத் தயாராக இருக்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எப்போதும் உண்மையைக் கண்டு பயப்படுகிறவன் அல்ல நான். பொருத்தமாகச் சொல்ல வேண்டும்; இடம், பொருள் பார்த்துச் சொல்ல வேண்டும். 'நீ இல்லையென்றால் உன் பாட்டன் செய்திருப்பான்' என்ற முறையில் பேசக் கூடாது.

**திரு. ப. உ. சண்முகம் :** தேனாம்பேட்டையில் டி. டி. கே. அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசியதைத்தான் குறிப்பிட்டேன். இப்போது சொல்ல வேண்டாமென்று சொன்னால் அதை நான் குறிப்பிட வேண்டிய இடத்தில் கூறிக் கொள்கிறேன்.

விலைவாசி ஏற்றத்தால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை இந்த அமைச்சரவை ஒத்துக் கொண்டே தீரவேண்டும். சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றிலிருந்து அமைச்சரவை தப்பித்துக் கொள்ள முடியாது. கடந்த வாரம் நான் ஒரு சி.ஐ.டி. இன்ஸ்பெக்டரோடு பேசிக் கொண்டிருந்தேன். ஏன் அவருடன் பேசிக் கொண்டிருந்தேன் என்பதைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, 'வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து நெல்லும் அரிசியும் கோவை மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் கள்ளத்தனமாகப் போகிறது; வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு மூட்டை அரிசி 80 ரூபாய் என்றால் சேலத்தில் அதன் விலை 150 ரூபாய்; கோவையில் அதன் விலை 200 ரூபாய்' என்று சொன்னார்கள். சொன்னவர் சி.ஐ.டி. அதிகாரி; இப்படிப்பட்ட பயங்கரமானதொரு நிலை ஏன் ஏற்பட்டிருக்கிறது? இதே மன்றத்தில் அரிசி லிட்டர் ஒன்றுக்கு $1\frac{3}{4}$ ரூபாய்க்கு விற்கிறது என்று திரு. நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கவில்லை. 'அதற்கு ஏதாவது பரிகாரம் தேடுகிறேன்' என்று கூடச் சொல்லவில்லை. ஒரு லிட்டர் அரிசி ஒன்றேமுக்கால் ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று இந்த மன்றத்தில் ஒரு மன்ற அங்கத்தினர் குறிப்பிடுகிறார். அதை முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கவில்லை. அதற்கு என்ன பரிகாரம் தேடப்பட்டிருக்கிறது என்றால் இதுவரை ஒரு பரிகாரமும் தேடவில்லை என்ற குற்றச்சாட்டிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. பயங்கரமான இந்த நிலையை அரசாங்கம் ஒத்துக் கொண்டேயாக வேண்டும்.



4th August 1966] [திரு. ப. உ. சண்முகம்]

உணவு அமைச்சர் அவர்களிடம் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். போலீஸ் இலாக்காவிடம் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்குள்ளே போகிற அரிசியாக இருந்தால் அதைத் தடுக்க வேண்டாம், இன்னொரு மாவட்டத்திற்குப் போவதாக இருந்தால் தடுங்கள் என்று சி.ஐ.டி.-க்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ராஜாத் தோப்பு என்ற ஊர், அது வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஊர். அங்கு பச்சைமுத்து கவுண்டர் என்பவர் ஆறு மூட்டை நெல்லை இரட்டை மாட்டு வண்டியில் வைத்துக் கொண்டுபோக, சரவணன் என்ற ஸி.ஐ.டி. அதிகாரி அவரைத் தடுத்து நிறுத்தி எங்கே கொண்டு போகிறாய் என்று கேட்டார். திருவண்ணாமலைக்குப் போகிறேன் என்று அவர் சொன்னார். இருந்தும் அவரைப் பிடித்து, வண்டிக்காரனுக்கும் அவர்களுக்கும் தகராறு நடந்தது என்று சொல்லி பிடிவாதமாகப் பிடித்து இழுத்துச் சென்று அவை தென் ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து வந்ததாக எழுதி உள்ளே தள்ளிவிட்டார்கள். விற்ற பணத்தைக் கட்டி விட்டார்கள். சப்-ஜெயிலில் நிரபராதிகள் 12 நாட்கள் இருந்து விட்டு ஹைகோர்ட்டிலிருந்து விடுதலை பெற்றார்கள். மூன்று நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவம். இதை நான் குறிப்பிடக் காரணம், நிரபராதிகள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அதே நேரத்தில் கள்ளக்கடத்தல்காரர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து நெல்லைக் கொண்டு செல்கிறார்கள். அப்படிக் கொண்டு செல்லக் காரணம் என்ன? கள்ள மார்க்கட் இருக்கிறது. தமிழ் நாட்டில் உணவுப் பற்றாக்குறை இல்லை, ஆனால், ஒரு சில மாவட்டங்களில் இருக்கிறது. அவர்களும் திராவிடர்கள்தானே, ஏன் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொல்வார்கள். கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. தமிழ் நாட்டில் பசியும், பட்டினியுமாக வைத்துக் கொண்டிருப்பது நியாயமா? இங்கு பற்றாக்குறை இல்லை என்று சொல்கிறார் முதல் அமைச்சர் அவர்கள், மாவட்டங்கள் சிலவற்றில் பற்றாக்குறை இருப்பதினால்

தான் கள்ளக்கடத்தல்காரர்கள் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குக் கொண்டு போகிறார்கள். அவர்களைப் பிடித்து வழக்கு போட இந்த அரசு தவறிவிட்டது என்ற குற்றச் சாட்டைச் சுமத்துகிறேன்.

ஹரிஜன நல இலாக்காப் பற்றி ஒரு செய்தி. சுவையானதொரு செய்தி. துரிஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியன் என்று ஒரு யூனியன் இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற சம்பவம் இது. இதை நான் குறிப்பிடக் காரணம், அந்த ரிக்கார்டுகளைப் பார்த்து விட்டு வந்து சொல்கிறேன். ஹரிசன நல இலாக்கா கொடுக்கின்ற மான்யத்தைக் கொண்டு வீடு கட்டும் காலம் அது. அங்கு ஒரு காங்கிரஸ்காரர் சேர்மனாக இருந்தார். பூதமங்கலம் என்ற இடத்தில் 12 வீடுகள் கட்ட வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். சர்க்காரும் அனுமதி அளித்தது. வீடு கட்ட காண்ட்ராக்ட்டுக்கு விட்டார்கள். கட்டிவிட்டதாக பில்களும் தயாரிக்கப்பட்டன. கட்டி முடித்தாகிவிட்டது என்று திறப்பு விழாவிற்கும் ஏற்பாடு செய்தார்கள். அழைப்பிதழ் அச்சடிக்கப் பட்டு யாரோ ஒருவர் திறப்பதாகவும் போட்டார்கள். அதுவும் முடிந்து விட்டது. ஒரு வருடத்திற்குப் பிறகு போய்ப் பார்க்கிறேன், அங்கு ஒரு வீடு கூடக் கிடையாது. கட்டவே இல்லை. இது பகிரங்கமான குற்றச்சாட்டு. அதுபற்றி அரசாங்கத்திற்குப் பல மனுக்களும் அனுப்பியாகிவிட்டது. ஆனால், நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. வீடே கட்டவில்லை. இந்த அக்கிரமம் உண்டா? 12 வீடுகள் கட்டியாகிவிட்டது என்று பைனல் பில்லும் போட்டுப் பணம் வாங்கியாகிவிட்டது. அந்த அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள்? இப்படிப்பட்ட அக்கிரமம் இந்த ஆட்சியில்தான் நடைபெற முடியும். யார், யார் குடித்தனம் போனார்கள் என்று பட்டியல் எழுதி வைத்தார்கள். இன்று வேண்டுமானாலும் ரிக்கார்டை எடுத்துப் பார்க்கலாம். இது நடைபெற்றது இந்த ஆட்சியில்தான். உள்துறை அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இவ்விதம் நடைபெற்றது ஹரிஜன மக்களுக்குச் செய்த பச்சைத் துரோகமாகும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கத்தினர் அவர்கள் தொகுதியில் இந்தச் சம்பவம் நடந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அன்றே சொல்லியிருந்தால் தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கலாம்.

**திரு. ப. உ. சண்முகம் :** உள்துறை அமைச்சர் அவர்கள் அவசரப்படுகிறார்கள். அது என் தொகுதி அல்ல. தொகுதி யாருடையதாக இருந்தாலும் கவலையில்லை. இப்படி ஒரு பயங்கரமான சம்பவம் நடந்திருக்கிறது. பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்தே மனு அனுப்பப்பட்டிருக்கிறது. அது என் பார்வைக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. ஒரு இலாக்காவிற்கு ஒரு மனு அனுப்பினால் அது அமைச்சர் அவர்களின் மேற்பார்வைக்குப் போகும் என்றுதான் அனுப்பப்படுகிறது. அதைப்பற்றி இலாக்காவிடம் கேளுங்கள். இப்போது இதுகுறித்து விசாரணை நடத்துவார்களா?



கோவை மாவட்டத்தைப் பற்றிய ஒரு செய்தி. ஹ்யூம் பைப்ஸ் 19 லட்சம் ரூபாய்க்குத் திருட்டுப் போயிருக்கிறது. திருடியவர் காங்கிரஸ்காரர். வழக்குப் போடாமல் விட்டு வைத்திருக்கிறார்கள். காரணம் என்ன? இப்படிப்பட்ட பயங்கரமான நிலை ஏற்படலாமா? அது மட்டுமல்ல. கவர்னர் உரை மீது பேசும்போது குறிப்பிட்டேன். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் பச்சை மோசடி நடைபெற்றது. என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள்? பங்குப் பணத்திற்கு ஷேர் பாண்ட் கூட கொடுக்கவில்லை. ஒழுங்காக பணம் கட்டவில்லை. கொடுத்திருக்கிற காண்ட்ராக்ட் டெண்டரில் மோசடி நடைபெற்றிருக்கிறது. என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள்? ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கூட்டுறவு இலாக்கா மோசடி என்று சொன்னால் கொஞ்சநஞ்சமல்ல; அங்கு நடைபெற்றிருக்கிறது. ஒருவர் பண மோசடி செய்தார். வழக்கு மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள். அந்த ஆளை ஏன் வழக்குமன்றத்தில் நிறுத்தினார்கள் என்பதன் காரணத்தைக் குறித்து நான் விவாதிக்கவில்லை. அவர் எனக்கு இடைத் தேர்தலில் வேலை செய்தவராக இருக்கலாம். அவரைக் குற்றவாளியாக நீதி மன்றத்தில் நிறுத்திவிட்டு அவர் குற்றவாளியல்ல என்று நீதி மன்றம் முடிவு செய்வதற்கு முன்பே அதே ஆளைக் கூட்டுறவு இலாக்கா, தாலுக்கா மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு நியமிக்கிறது. அவர் குற்றவாளியல்ல என்றால் ஏன் அவர் மீது வழக்குப் போட்டார்கள்? அவர் அயோக்கியன் என்றால் ஏன் அவரைத் தாலுக்கா மார்க்கெட்டிங் சொஸைட்டியில் நியமிக்கிறார்கள்? இதற்குப் பதில் சொல்ல வேண்டும். குற்றவாளி என்று ஒருவரை நீதிமன்றத்தில் நிறுத்துகிறார்கள், அப்படி நிறுத்திய அவரைத் தாலுக்கா மார்க்கெட்டிங் சொஸைட்டியில் கொண்டுபோய் போடுகிறீர்கள். அந்த ஆளை சந்தேகிப்பதா, அந்த இலாக்காவை சந்தேகிப்பதா? இப்படிப்பட்ட மோசடிகள் நடைபெறலாமா? கருமார் சொஸைட்டியில் 18,300 ரூபாய் எடுத்துப் போய் 37 நாட்கள் மோசடி செய்ததற்காக வழக்குப் போடலாமா என்பதுபற்றிக் கேட்டபோது ஏ.பி.பி. நம்பர் 1, கலியாணசுந்தரம், வேலூர் வழக்குப் போடலாம் என்று கூறினார். பின்னர் அதை ஏ.பி.பி. நம்பர் 2-க்கு அனுப்பி அவரிடம் பேப்பர் வருகிறது. அந்த நேரத்தில் திரு. மஜீத் திருவண்ணாமலைக்கு வந்திருந்தார்கள். இரண்டையும் முடிச்சுப் போடுகிறேன் என்று கருத வேண்டாம். டி.ஆர்.ஓ. திருவண்ணாமலை அவரைப் பார்க்க வந்திருந்தார்கள். அவரைத் தனியாகக் கூப்பிட்டுப் பேசி, ஏ.பி.பி. நம்பர் 2-ஐக் கூப்பிட்டு வழக்குப் போட வேண்டாமென்று சொல்லவில்லையா, இல்லை என்று அவர்கள் மறுக்கலாம்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஆதாரம் இல்லாமல் இம்மாதிரி குற்றச்சாட்டு சொல்வது பொருத்தமல்ல. நிரூபிக்கவேண்டும்.

**திரு. ப. உ. சண்முகம் :** போட்டோ பிடித்தா வைத்திருக்க முடியும்? உண்மையா, இல்லையா? ஏ.பி.பி. 2 வழக்குப் போடுவதற்கில்லை என்று எழுதினார்.

[4th August 1966

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்த இலாக்காவிற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. இந்த விஷயம் அவர் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

**திரு. ப. உ. சண்முகம் :** டி.ஆர்.ஓ.ஐக் கூப்பிட்டு அவர் ஏ.பி.பி. 2-வை மிரட்டி வழக்கு இல்லை என்று எழுதினாரா இல்லையா? அப்போது திருவண்ணாமலை டெப்டி ரிஜிஸ்ட்ராராக இருந்தவர்; சொன்னதைக் கேட்காததால் தந்தி கொடுத்து அவரை மாற்றி விட்டார்கள். அவரை இராமநாதபுரத்திற்கு மாற்றி விட்டார்கள். அவர், ஏ.பி.பி. நம்பர் 1 கொடுத்ததை நம்புகிறேன், நம்பர் 2-இன் ஒப்பினியனை நம்பவில்லை' என்று எழுதினார். வழக்கு இல்லாமல் செய்து விட்டார்கள். 18,300 ரூபாயை வைத்துக் கொண்டு 37 நாட்கள் மோசடி நடந்திருக்கிறது. 1,900 ரூபாய் பிண்ணாக்கு வாங்க எடுத்துபோய் 22 நாட்கள் பணத்தை வைத்துக் கொண்டிருந்ததற்காக அவருக்குத் தண்டனை ஆறு மாதம். காரணம் இடைத் தேர்தலில் அவர் என்னோடு இருந்தவர் 37 நாட்கள் 18,300 ரூபாயை வைத்திருந்தாரே அவர் இடைத் தேர்தலில் என்னை எதிர்த்தவர். அவர் காங்கிரஸ்காரர், விட்டிருக்கிறார்கள். இந்த மோசடி நடைபெறவில்லை என்று சொல்ல முடியுமா? இப்படியிருக்கிற அரசாங்கத்தின் மீது நாட்டு .. மக்களுக்கு எப்படி நம்பிக்கை பிறக்கும்? சேலம் உருக்காலை அமையவில்லை, விலைவாசி கட்டுப்படுத்தப்படவில்லை, வரிப்பளு குறையவில்லை, இப்படிப்பட்ட அரசாங்கத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய சர்க்கார் மீது நம்பிக்கையில்லை என்று கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை எதிர்க்கிறேன். அது மட்டுமல்ல, இந்தத் தீர்மானம் அவசியமற்றது என்றும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டில் காங்கிரஸ் கட்சி கடந்த மூன்று தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறது. இதை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ளவர்கள் முதலில் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். சுதந்திரம் அடைந்த பிறகு கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும் ஏதோ விலைவாசி உயர்ந்திருந்தாலும், வேறு எந்தத் துறையிலும் சர்க்கார் எப்படிச் சென்றிருந்தாலும் சர்க்காரின் பேரில் நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். நான்காவது தேர்தல் வரவிருக்கிறது. அதையும் நடத்தப் போகிறோம். அதிலும் நாங்கள்தான் வரப்போகிறோம். இப்போது மட்டுமல்ல, இன்னும் 30 ஆண்டு காலத்திற்கு நாங்கள் தான் வரப் போகிறோம். நான்காவது பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க இப்படிப்பட்ட நிலைமை வருகிறது. இது ஒரு தேர்தல் ஸ்டண்ட் என்று எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று சொல்வதற்கில்லை. சர்க்கார் மீது நம்பிக்கையில்லை என்று போட்டிருக்கக்கூடிய இத் தீர்மானத்தில் சர்க்கார் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லக்கூடிய அளவில் ...



4th August 1966] [திரு. ஜே. மாதா கவுடர்]

ஒன்று கூட இல்லை. ஆகவே இது வெறும் தேர்தல் ஸ்டண்ட், இதை நாம் பல முறை பார்த்துவிட்டோம். இதே மன்றத்தில் நாம் பார்த்திருக்கிறோம். ஆரம்பத்தில் விலைவாசிப் போராட்டம் என்று சொன்னார்கள். இப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம், இப்படி பல ஸ்டண்ட்கள். 1962-வது வருஷத்திற்கு முன்பு விலைவாசிப் போராட்டம் என்று போராட்டத்தை நடத்தி அரை நாள், ஒரு நாள் ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தார்கள். மக்களிடத்தில் எப்படியாவது நாங்களும் ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தவர்கள் என்று சொல்லி வோட்டு வாங்க வேண்டும். சுதந்திரப் போராட்ட காலத்தில் எப்படிக் காங்கிரஸ்காரர்கள் ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தார்களோ அதே போன்று நாமும் எந்தக் காரணத்திற்காகவாவது ஜெயிலுக்குப் போய்விட்டு வர வேண்டும் என்ற நினைப்பில் இப்படி ஏதாவது விலைவாசிப் போராட்டத்தை நடத்த முன் வருகிறார்கள். . . .

**திரு. மு. கருணாநிதி :** 1962-வது வருடத்திய தேர்தல் முடிந்து நாங்கள் 50 எம்.எல்.ஏ.க்கள் இங்கு வந்த பின்னால்தான் விலைவாசிப் போராட்டம் நடந்தது என்பதைக் கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தேர்தலுக்கு முன்பும் பல போராட்டங்கள் நடத்தினார்கள். திரு. மதியழகன் அவர்கள் ஜெயிலில் இருந்ததை நானே போய்ப் பார்த்திருக்கிறேன். எப்படியாவது நாமும் ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தாலாவது, இந்த நாட்டில் இருக்கின்ற மக்கள் வோட்டு அளிக்க மாட்டார்களா என்று எண்ணுகிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் ஜெயிலுக்குப் போனார்கள் என்றால், இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக ஜெயிலுக்குப் போனார்கள், அவர்களை நாட்டு மக்கள் நம்புகிறார்கள். அதே போன்றுதான் இவர்களும் ஏதாவது போராட்டம் நடத்தப் பார்க்கிறார்கள். உங்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் நடத்துகின்ற போராட்டங்களை எல்லாம் பார்த்து மக்கள் நம்பிவிட மாட்டார்கள், நீங்கள் செய்த காரியங்களை எல்லாம் மக்கள் மறந்துவிட மாட்டார்கள். . .

**கனம் சபாநாயகர் :** நான் ஒன்றும் செய்யவில்லையே! அவர்கள் செய்ததைச் சொல்லுங்கள் . . .

**திரு. ஜே. மாதா கவுடர் :** அவர்கள் செய்ததைத்தான் சொல்லுகிறேன். இவர்கள் தர்மபுரி தேர்தலில் என்ன நினைத்தார்கள். எப்படியாவது தர்மபுரி தேர்தலில் நாம் ஜெயித்துவிட்டால், மக்களிடம் போய், 'பாருங்கள் காங்கிரஸ் ஆட்சி செய்த கொடூரத்திற்கு எதிராக தர்மபுரி மக்கள் வாக்களித்து விட்டார்கள். ஆகவே நீங்களும் 1967 தேர்தலில் எங்களுக்கே வோட்டு போடுங்கள் என்று சொல்லலாம் என்று நினைத்து, தர்மபுரி தேர்தலில் குட்டிக்கரணம் போட்டுப் பார்த்தார்கள், முடியவில்லை. அதற்குப் பிறகு இப்படிப்பட்ட தீர்மானம் கொண்டு வருவதற்கு என்ன அவசியம் இருக்கிறது?

[4th August 1966

**திரு. எஸ். முருகையன் :** திருவண்ணாமலையில் என்ன நடந்தது என்பதையும் கொஞ்சம் சொல்லுங்களேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** எப்படியாவது போராட்டம் என்கிற பாம்பை மக்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் இவர்கள். அந்தப் பாம்பு செத்த பாம்பாக இருக்கிறது. அந்த செத்த பாம்பை கழுத்தில் சுற்றிப் போட்டுக் கொண்டு இருக்கின்ற முறையில்தான் இப்போது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. இதை யெல்லாம் பார்த்து மக்கள் நிச்சயமாக ஏமாற மாட்டார்கள் என்பதை உங்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1967 தேர்தலில் அவர்களுக்குத் தகுந்த பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். விலைவாசி உயர்வைப்பற்றி இல்லாததை யெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற திறமை நண்பர் கல்யாணசுந்தரம் அவர்களுக்கு இருக்கிறது. இன்றைக்கு அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிற காரணத்தினாலோ என்னவோ, அதிலும் எல்லோரும் சேர்ந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். விலைவாசி உயர்வு பற்றிய புள்ளி விவரங்களை எல்லாம் சொல்லிக் கொடுக்கின்ற வாத்தியார் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள். இல்லாத புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்து இந்த மன்றத்தில் அதைப் பெரிதாக எடுத்துக்காட்டி, சர்க்காரிலும் குழப்பத்தை ஏற்படுத்தி, மக்களிடத்திலும் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடியவர். இன்றைக்கு இவர்களும் அவரைப்பற்றி விலைவாசி உயர்ந்துவிட்டது என்று சொல்லி நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று கொடுத்திருக்கிறார்கள். நேற்றுப் பேசிய கனம் புலவர் கோவிந்தன் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிப் பேசினார்கள். கூட்டுறவு இயக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள், இதன் காரணமாக காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் ஜெயித்துவிடுவார்கள். கூட்டுறவு இயக்கத்தை விட்டுவிட்டுத் தேர்தலில் நின்று பார்க்கட்டும். அப்போது பார்க்கலாம் என்று இந்த மன்றத்தில் சவால் விட்டார்கள். ஒரு குறிப்பை மட்டும் இச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்டம் வேறு விதமாக இருக்கலாம். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக் கூடியவர்கள் எல்லாம் என்னை எதிர்த்தவர்கள். சென்ட்ரல் பாங்க் பிரசிடெண்ட், மார்க்கெட்டிங் சொஸைட்டி பிரஸிடென்ட், இவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் அல்ல. கழிந்த சபையில் அங்கத்தினராக இருந்தவர், கடந்த தேர்தலில் என்னை எதிர்த்தவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கிறார்கள். லான்ட் மார்ட்கேஜ் பாங்கில் இருப்பவர்களும் காங்கிரஸ்காரர்கள் அல்ல. இத்தனை பேர்களும் என்னை எதிர்த்தவர்கள்தான். நானும் கூட்டுறவு இயக்கத்திலில்லை. ஒன்றை நான் கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனது தொகுதியில் கூட்டுறவு இயக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் யாரும் இல்லை, தைரியம் இருந்தால் என்னுடைய தொகுதியில் வந்து என்னோடு போட்டி போடட்டும். அவருடைய ஜாமீன்



4th August 1966] [திரு. ஜே. மாதா கவுடர்]

தொகையைச் சர்க்காருக்குச் சேர்த்துவிடுகிறேன் . . . (குறுக்கீடு).

**கனம் சபாநாயகர் :** அவர் தொகுதிக்குப் போட்டியிட உங்களைக் கூப்பிடுகிறார்கள் . . .

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஏதோ கூட்டுறவு இயக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆதலால் தேர்தலில் ஜெயித்து விடுவார்கள் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். அதற்காகத்தான் சொல்லுகிறேன். எங்கள் பகுதியில் இருக்கின்ற கூட்டுறவு இயக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் யாரும் இல்லை. ஆகவே அந்த இடத்தில் வந்து போட்டியிடுங்கள் என்று தான் சொல்லுகிறேன். அப்படித் தோற்றுப் போனால் ஜாமீன் தொகை 250 ரூபாயையும் சர்க்காருக்கு நிச்சயமாகச் சேர்த்து விடுகிறேன். அதற்குத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஏதோ சட்டசபையில் மட்டும் சொல்லிவிடுவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. கூட்டுறவு இயக்கத்தில் யார், யார் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் இருக்கிறார்கள். ஏதோ கூட்டுறவு இயக்கத்தை யெல்லாம் காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுத்து விட்டார்கள், ஜீவரத்தினம் அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். தேர்தல் நெருங்க நெருங்க எப்படியாவது இந்த நாட்டு மக்களை ஏமாற்றி விட வேண்டும் என்று பார்க்கிறார்கள். இவர்களுக்கு அந்தப் பக்கம் இருப்பதற்கு ஆசையில்லை, இந்தப் பக்கம் வர வேண்டும் என்று ஆசை, அதற்கு இங்கே என்ன செய்வது? இந்த நாட்டிலுள்ள மகா ஜனங்கள் அல்லவா விரும்ப வேண்டும். ஜனநாயகம் அப்படியல்லவா இருக்கிறது, அதைப் புரிந்து கொள்ள வேண்டாமா, நாட்டிலுள்ள மமக்கள் தீர்மானிக்கும் வரையிலும் நீங்கள் அந்தப் பக்கம் தான் இருக்க முடியும்.

நகரசபைகளைக் கலைத்துவிட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது. அருப்புக்கோட்டை, திருநெல்வேலி போன்ற இடங்களிலுள்ள நகரசபைகளைக் கலைத்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் இருப்பதால் கலைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். திருநெல்வேலியை எடுத்துக் கொண்டால், அதனுடைய தலைவர் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல, இண்டிபெண்டென்ட்டாக—சுயேச்சையாக இருந்தவர். இவர்களுடைய ஆதரவினால் நகரசபைத் தலைவராக வந்தார். திராவிட முன்னேற்றக் கழகம் அவரைத் தாங்கிக் கொண்டிருந்ததால் நகரசபைத் தலைவராக வந்துவிட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் இருக்கின்ற நகரசபைகளைக் கலைத்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இவ்விதமாக அரசாங்கம் அழித்துக் கொண்டிருக்கிறது என்று உண்மைக்குப் புறம்பாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இதற்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டால், எத்தனையோ இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதேபோன்று காங்கிரஸ்காரர்

களும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் காங்கிரஸ்காரர்கள் தலைவராக இருக்கக் கூடிய பஞ்சாயத்து யூனியன்களைச் சர்க்கார் கலைக்கவில்லையா? சேடப்பட்டி பஞ்சாயத்து யூனியனைக் கலைக்கவில்லையா? இதனுடைய தலைவர் தீவிர காங்கிரஸ்வாதி. எருமைப்பட்டி பஞ்சாயத்து யூனியன் தலைவர் மாஜி ஜில்லா போர்ட் தலைவர், மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர். அப்படியிருந்தும் அந்தப் பஞ்சாயத்து யூனியனைக் கலைத்து விடவில்லையா? பஞ்சாயத்து யூனியனை சரியாக நடத்த முடியவில்லை என்று வரும்போது அதில் காங்கிரஸ்காரர்கள் என்றோ தி.மு.க.-காரர்கள் என்றோ பாகுபாடு செய்வதில்லை. நன்றாக நடைபெறுகிறதா இல்லையா என்பது தான் முக்கியம். இதற்காக காங்கிரஸ்காரர்கள் இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியனைக் கலைத்துவிட்டார்களே என்று நாங்கள் சொல்லப் போவதில்லை. நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை யென்றால், நகரசபையைக் கலைத்துவிடுகிறார்கள். இந்தை வைத்துக்கொண்டு மக்களிடத்தில் போய் 'பார்த்தீர்களா வேண்டுமென்றே—தி.மு.க.-காரர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக, அரசாங்கம் நகரசபையைக் கலைத்து விட்டது' என்று சொல்லுகிறார்கள். அப்படி யென்றால் கூவம் நாற்றம் அடிக்கும் அளவுக்கு இருக்கக்கூடிய சென்னை கார்ப்பரேஷனைக் கலைத்திருக்க முடியாதா? அதற்கான சட்டத்தை இந்தச் சர்க்கார் இயற்றி இருக்கிறது. அவ்விதம் ஒன்றும் செய்வதில்லை. மக்களுக்கு நன்மை செய்யாத நகரசபையை வைத்திருப்பதைவிட கலைத்துவிடுவதே மேல் என்ற நோக்கம் தான் அரசாங்கத்திற்கு இருக்கிறதே தவிர எதிர்க் கட்சிக் காரர்களை அழித்துவிட வேண்டும் என்ற நோக்கம் சிறிதும் கிடையாது. ஆனால் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு என்ன எண்ணம் என்றால், எப்படியாவது இந்த நாட்டில் பஞ்சம் வர வேண்டும் என்பது தான். இது கம்யூனிஸ்டுகாரர்களுடைய நோக்கம். எப்படியாவது பஞ்சம் வந்துவிட்டால் அதன் பிறகு எப்படியாவது தங்கள் ஆட்சியை ஸ்தாபிக்க முடியும் என்பது தான். இப்போது தி.மு.க.-காரர்களும் பஞ்சம் வர வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டினிச் சாவு வர வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாவை முன் வைத்து ஓட்டு வாங்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் நமது முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் என்னென்ன முறையில் உற்பத்தி செய்ய முடியுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது கூட 2,000 கிணறுகளுக்குப் பணம் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி யெல்லாம் செய்கிறார்களே, பஞ்சத்தைத் தீர்த்துவிட்டால் வேறு கதி இல்லையே என்ற எண்ணம். எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டினியில் யார் செத்தால் என்ன? சாவை வைத்து ஓட்டு வாங்க வேண்டும். இதற்கெல்லாம் மக்கள் ஏமாந்து விட மாட்டார்கள் . . . (மணி அடிக்கப் பட்டது).





* **திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் எதிர்க் கட்சியினர் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழு மனத்தோடு எதிர்க்கிறேன். இந்தத் தீர்மானம் தேர்தலுக்காகக் கொண்டு வந்திருக்கிற தீர்மானமே தவிர இது நம்பிக்கையில்லாத் தீர்மானம் அல்ல என்று நான் கருதுகிறேன். வெளியிலே இருக்கிற சில நண்பர்கள், அரசியல் சம்பந்தமில்லாத நண்பர்கள், இதைப் பேப்பரில் படிக்கும்போது பார்த்துவிட்டு, இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் பற்றிக் கேவலமாகச் சொல்கிறார்கள். 'நம்பிக்கை யில்லாத் தீர்மானம் என்று சொல்லுவது வியப்பாக இருக்கிறது; அரசாங்கம் என்ன தவறி விட்டது; நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றால் பெரிய காரியத்தைச் செய்யத் தவறி விட்டால், அல்லது பெரிய குற்றத்தைச் செய்து விட்டால், அல்லது முதல் அமைச்சர் அவர்கள் ஏதோ குற்றத்தைச் செய்து விட்டார்கள் என்றால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வர வேண்டுமே தவிர, சாதாரணமாக வரக் கூடாது; கூறப்பட்டிருக்கிற எட்டுக் காரணங்களும் அவசியம் இல்லாத காரணங்களாக இருக்கின்றன' என்று சொன்னார்கள். அதோடு சென்ற இரண்டு நாட்களாகக் கவனிக்கும்போது எதிர்க்கட்சியினர் பட்ஜெட் உரையில் பேசுவது போல, மேடையில் பேசுவது போல பேசுகிறார்களே தவிர, எந்தக் குற்றமும் சாட்டவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய முதல் அமைச்சரைப் பற்றிச் சொல்லி விட்டுப் பிறகு சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம் முதல் அமைச்சர் அவர்கள் முதல் அமைச்சராகமட்டுமல்லாமல், 15-20 ஆண்டுகளாக அமைச்சராகவும் இருந்திருக்கிறார். காலாகாலத்தில் செய்ய வேண்டிய காரியங்களைக் காலாகாலத்தில் செய்யக் கூடியவர். எந்தக் காரியத்தையும் சமாளிக்கும் ஆற்றல் உள்ளவர் என்று சொல்லாமல் இருக்க முடியாது. இதை எதிர்க் கட்சியினரும் ஒத்துக்கொள்ளுவார்கள். சென்ற ஆண்டு இந்தி எதிர்ப்பின் போது வேறு யாராவது முதல் அமைச்சராக இருந்தால் விட்டுவிட்டுப் போயிருப்பார்கள். நெருக்கடியை நல்ல முறையில் சமாளித்து, எதிர்க்கட்சித் தூண்டுதலாக இருந்தாலும் பொறுத்துக் கொண்டு காரியங்களைச் செய்து வேறு ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே கல்லூரிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்—வைத்தியக் கல்லூரிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் மற்ற ராஜ்யங்களைக் காட்டிலும் நம் ராஜ்யத்தில் கல்லூரிகளிலே சேர்ப்பதிலே பாகுபாடு இல்லாமல் செய்கிறார்கள். கமிட்டி வைத்து செய்கிறார்கள். முன்பெல்லாம் அமைச்சர்களுக்குச் சில இடங்கள் இருக்கும். வேண்டியவர்களுக்குக் கொடுப்பார்கள். இப்போது அமைச்சர்களுக்கு ஒரு ஸ்தானம் கூட இல்லாமல் பொதுக் கமிட்டி வைத்துச் செய்கிறார்கள். சென்ற ஆண்டு முதல் வைத்தியக் கல்லூரி மட்டுமல்ல, என்ஜினீயரிங் கல்லூரியிலும் நியாயமான அடிப்படையில்

[திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்] [4th August 1966

கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் தனக்குச் சொந்தத்திற்காக எந்தக் காரியமும் செய்வ தில்லை. அவர் செய்திருக்கிற நல்ல காரியங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

கல்வித் துறையில் வருஷத்துக்கு ஆரம்பப் பள்ளிகளில் 1,000 அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் வருஷத்திற்கு 200 அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரி களில் வருஷத்திற்கு 15-16 அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றியெல்லாம் எதிர்க்கட்சியினர் சிந்திக்க வேண்டும். கனம் அங்கத்தினர் மாதா கவுடர் அவர்கள் சொன்னது போல, நான் மட்டும் சொல்லவில்லை, எந்தக் கட்சியிலும் இல்லாதவர்கள் சொல்லுகிறார்கள், மூன்று நாட்கள் விவாதம் வைத்துக் கொண்டு அரசியலில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லுவதாக தேர்தல் பிரசாரமாக இருக்கிறது.

சில நாட்களுக்கு முன் கனம் அங்கத்தினர் நல்லசிவம் கூட ஒரு பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். ஈரோடு பகுதியில் வரட்சி ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எங்கள் ஜில்லாவிலேயே ஈரோடு, பவானி, கோபிச்செட்டிப்பாளையம் பகுதிகள் நல்ல நன்செய் பூமிகள் இருக்கக் கூடிய பகுதி. சென்ற மாதத்தில் கோயம்பத்தூர் ஜில்லாவிலே தாராபுரம், உடுமலைப்பேட்டை தாலூக்காகளில் வரட்சி இருந்தது. நான் கூட திரு. நல்லசிவம் பகுதியிலிருந்து என்னுடைய மாடுகளுக்கு மூன்று லாரி புல் வாங்கி வந்தேன். பேப்பரில் நல்லசிவம் வெளியேற்றப்பட்டார் என்று வந்தால் நல்லசிவம் நமக்காகத் தியாகம் செய்தார் என்று அங்குள்ள மக்கள் நினைப்பார்கள் என்ற முறையில் தான் செய்தார். இங்கே கோயம்புத்தூர் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். திரு. நல்லசிவம் அவர்கள் சொல்லுவதைப் பற்றிக் கேட்கலாம். கலெக்டர் அவர்களும் சுற்றுப் பிரயாணம் வந்து வரட்சி நிலையைப் பார்த்தார். திருப்பூர் பகுதியில் வரட்சி இல்லை என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஈரோடு பகுதியில் கீழ்பவானி, மேல் பவானி எல்லாம் பாய்கின்றன. தேர்தல் பிரசாரமாகத் தான் செய்கிறார்களே தவிர, இது உண்மையாக மக்களுக்குச் செய்கிற சேவை இல்லை என்று நான் வன்மையாகக் கண்டித்துச் சொல்லு கிறேன்.

இன்றையதினம் நகரசபை பற்றிச் சொன்னார்கள். நெல்லை நகர சபையைக் கலைத்து விட்டதால் ஒன்றும் முழுகிவிடவில்லை. கேரளாவில் மந்திரி சபையையே கலைத்து விட்டதால் காரியம் நடக்காமல் இல்லை. திருநெல்வேலி, அருப்புக்கோட்டை நகர சபைகளைக் கலைத்து விட்டது ஒன்றும் பெரிய குற்றச்சாட்டல்ல. நெல்லை நகர சபையின் நிர்வாகம் சரியாக இல்லை என்று சேம்பர் கூட—நகரசபை சம்மேளனம் கூட—ஒத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் பார்க்கும்போது இன்றைய தினம் சென்னை கார்ப்பரேஷன் பற்றி பேப்பரில் பார்த்தேன். லஞ்ச ஊழல்கள், வேண்டியவர்களுக்குச் சலுகைகளைச் செய்கிறார்கள் என்றெல்லாம் பத்திரிகையில் கூடப் படித்தேன். சென்னை கார்ப்பரேஷன் விவகாரம் மத்திய சர்க்கார் வரையில் போயிருக்கிறது—அவ்வளவு



4th August 1966] [திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்]

தூரம் போயிருக்கிறது. பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். தங்களிடம் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லாமல் ஆளும் கட்சியை குறை சொல்லுகிறார்கள். இதையெல்லாம் மேடையில் சொல்லிக் கொள்ளலாம். மக்கள் பேப்பர் படிக்கிறார்கள். மக்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

உணவுப் பிரச்னை பற்றிச் சொன்னார்கள். விலைக் கட்டுப்பாடு கொண்டு வந்து விலைகளைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். பால் முதல் நெய் வரையில் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். இல்லை யென்றால் அரிசி மூட்டை 250 ரூபாய்க்கு விற்கும். சர்க்காரை குறை கூறுவதை விட விவசாயத்தின் அடிப்படையைப் பார்க்க வேண்டும். விவசாயி வாங்கக் கூடிய பண்டங்களின் விலையெல்லாம் உயர்ந்திருக்கிறது. மாட்டுத் தீனி 25 ரூபாய்க்கு வாங்கியது இன்றையதினம் 250 ரூபாய்க்கு வாங்கவேண்டியிருக்கிறது. பருத்திக்கொட்டை விலையும் உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் யோசிக்கவேண்டும். குற்றம் சொல்லும்போது அனாவசியமாகச் சொல்லக்கூடாது. நகரசபை, கல்லூரி எல்லாம் சிறு விஷயங்கள். பெரிய காரியமாக திரு. மதியழகன் எடுத்துச் சொல்லும்போது தவறு நடந்துவிட்டதாக ஆவேசமாகப் பேசினார்கள். அப்படிப் பேசாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது கனம் முதல் அமைச்சரை எடுத்துக் கொண்டால் எதையும் தனக்காகச் செய்யக் கூடியவர் அல்ல; மிக நன்றாகச் செயலாற்றக் கூடியவர். ஏதாவது தவறு ஏற்பட்டால் மந்திரிசபை மட்டுமல்ல. அத்தனை காங்கிரஸ் அங்கத்தினர்களும் ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்காக எனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற் குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மந்திரிசபை மீது கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி இங்கே பலர் குறிப்பிட்டார்கள். விலைவாசி உயரவில்லை என்று யாரேனும் சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன். விலைவாசி ஏற்றத்தால் மக்கள் எல்லோரும் அகதிகளாக மாறுகிற நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. அதை கொஞ்சம்கூட இந்த அரசாங்கம் கவனிக்காமல் இருப்பதனாலே இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்று கூறுகிறோம். விவசாய அபிவிருத்தி ஏராளமாகச் செய் திருக்கிறோம் என்று கூறினார்கள். அம்மையார் அவர்கள் கூட பேசும்போது எத்தனையோ வகையான கடன்களை விவசாயி களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். விவசாயி கள் கடன்காரர்களாக ஆகியிருக்கிறார்களே தவிர, விவசாயிகள் மேம்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையை யாரும் சொல்ல முடியாது. விவசாயிகளுக்கு மெயினாக என்ன வேண்டுமோ அது இல்லை. விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி மிக மிக அவசியம். எங்கள் பகுதியைப் போன்ற பிற்பட்ட கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே

[4th August 1966

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

விவசாயிகளுக்கு தண்ணீர் மிக மிக அவசியம். இதற்கு ஏதாவது அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. இந்த மன்றத்தில் இதுபற்றி எத்தனையோ தடவை எடுத்துக்கூறியிருக்கிறோம். எல்லா நதிகளையும் தேசியமயமாக்கவேண்டும். எங்கு எங்கே லெவல் கிடைக்கிறதோ அங்கெல்லாம் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எத்தனையோ தடவை சொல்லியும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யத் தவறிவிட்டது இந்த அரசாங்கம். ஆகவே, இந்த அரசாங்கத்தின் பேரில் நம்பிக்கை இல்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும் தேவகோட்டை என்ற இடத்தில் ஒரு கோட்டாட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர் மீது உள்ள குற்றச்சாட்டுகளை கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களைப் பார்த்து நேரிடையாகச் சொன்னேன். அவர் அதைச் சரியாகக் கூட கேட்கவில்லை. முதல் அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறினேன். முதல் அமைச்சர் அவர்கள் உடனடியாக அவர்களை மாற்றினார்கள். அவர்களுக்குப் பதிலாக அங்கே ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸரைப் போட்டார்கள். போட்ட உடனேயே அங்கு இருக்கிற காங்கிரஸ்காரர்கள் 10, 12 பேர்கள் படை எடுத்தார்கள் சென்னைக்கு. உடனே அந்த ஆர்டர் மாற்றப்பட்டுவிட்டது. அந்த ஊழல் செய்த அதிகாரி இப்பொழுது அங்கேயே இருக்கிறார். இது நியாயமா என்று நான் கேட்கிறேன். நிர்வாகத்தில் இவ்வளவு மோசமான நிலை இருந்தால், இந்த நாட்டிலே நல்ல நிலை நிலவ முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். இரண்டு தடவைகள் மாற்றப்பட்ட அந்த அதிகாரியை திரும்பவும் அங்கேயே போட்டிருக்கிறார்கள். அங்கு இருக்கிறவர்கள் 'ரெவின்யூ அமைச்சர் அவர்களைப் பார்த்து உடனே ஆர்டரை திருப்பிவிட்டோம்' என்று கூறுகிறார்கள். இந்த மாதிரி ஒரு நிலை நாட்டில் இருக்கலாமா? எத்தனையோ ஊழல்களுக்கு ஆளாகியிருப்பவரே அங்கே திருப்பி போடப்பட்டிருக்கிறார். நிர்வாகம் இவ்வளவு சீர்கேடான நிலைமையில் இருப்பதினால், நாங்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறுகிறோம்.

எனது தொகுதியில் ஏராளமான கையாடல்கள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள்தான். ரெவின்யூ அமைச்சர் அவர்களின் தலையீட்டின் காரணமாக பல பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்கிறேன். ஒரு கிராம முன்சீப் ரசீது புஸ்தகத்தையே புதிதாக அச்சடித்து, பணத்தை கையாடினார் என்ற குற்றச்சாட்டு. அதற்கு வேண்டிய ரெகார்டுகளெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முன்பிருந்த ஆர்.டி.ஓ. அவரை சஸ்பெண்டு செய்து வைத்திருந்தார். இப்பொழுது இருக்கிற ஆர்.டி.ஓ. அவரைத் திரும்பவும் வேலைக்கு



4th August 1966]

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

எடுத்துக்கொண்டு, அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கவில்லை. இப்படி எத்தனையோ குற்றச்சாட்டுகள். ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். எங்கேயாவது காங்கிரஸுக்கு அனுகூலம் இல்லாத கிராம முன்சீப், கர்ணம் இருந்தார்களேயானால் அவர்கள் மீது தப்புத் தவறான இரண்டு பெட்டிஷன்களை வாங்கிக்கொண்டு, உடனே அவர்களை சஸ்பெண்டு பண்ணிவிடுகிறார்கள். புதியதாக ரசீது புத்தகம் அடித்து பணம் கையாடல் செய்தவரை இந்த அரசாங்கம் வேலைக்குச் சேர்த்துக் கொண்டு வைத்துக்கொண்டிருக்கிறது. இது நியாயமா? இது தர்மமா? இம்மாதிரி ஒரு ஆட்சி இருக்கலாமா? எப்படி இருக்கிறது என்று நன்றாக யோசித்துப் பாருங்கள். அரசாங்கத்தின் மீது சரியான குற்றச்சாட்டுகள் கூறவில்லை என்று சொல்கிறார்கள். நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள் கூறின ஒரே குற்றச்சாட்டு போதாதா? அரசாங்கம் ராஜிநாமா செய்வதற்குப் போதுமான காரணம் அது இல்லையா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? அதற்குத் தகுந்த பதில் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே தங்கக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தீர்கள். என்ன ஆயிற்று உங்களுடைய நிலை?

**கனம் சபாநாயகர்:** 'அவர்களுடைய நிலை', 'கொண்டு வந்தார்கள்' என்று சொல்லுங்கள். ஏன் 'நீங்கள்', 'நீங்கள்' என்று நேரடியாகப் பேசுகிறீர்கள்? அந்தப் பக்கத்திலும் சரி, இந்தப் பக்கத்திலும் சரி சிலர் அப்படிப் பேசுகிறார்கள். 'கொண்டு வந்தார்கள்' என்று பேசுங்கள்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** அவர்கள் தங்கக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தார்கள். நிலைமை என்ன ஆயிற்று? விலை அதிகமாயிற்று. தங்கம் கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. வேறு ஒன்றும் நன்மை ஏற்படவில்லை. அரசாங்கம் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவந்தது. என்ன ஆயிற்று? எங்கு பார்த்தாலும் மது மயமாக ஆகியிருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம். ஜபர்தஸ்துக்காக இந்தத் திட்டங்களையெல்லாம் ஏன் அரசாங்கம் வைத்துக்கொள்வேண்டும்?

**கனம் திரு. பூ. கக்கன்:** கள்ளுக்கடை, சாராயக்கடைகளையெல்லாம் திறந்துவிடவேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்களா? அது தான் கனம் அங்கத்தினர் அவர்களுடைய அபிப்பிராயமா?

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** எதைச் செய்தாலும் சரியாகச் செய்யவேண்டும். மக்களைக் கஷ்டப்படுத்தி, கோடிக்கணக்கான ரூபாய் வரிப்பணமாக வசூல் செய்து, ஏன் அப்படி நஷ்டப்படவேண்டும்? அமல் நடத்தினால் சரியாக அமல் நடத்தவேண்டும். கள் எங்கும் கிடைக்கிறது. ஒன்று அதைத் தடுத்து, சட்டத்தை ஒழுங்காக அமல் நடத்தவேண்டும் அல்லது வருகிற வருமானத்தை வரப்படுத்தவேண்டும். இரண்டும் இல்லையென்றால் என்ன பிரயோசனம்?

[4th August 1966

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

கோவாபரேஷனைப் பற்றி பேசுகிறார்கள். கோவாபரேடிவ் துறையில் மோசம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னால் முழுப் பூசணிக்காயை சோற்றில் அமுக்குகிற மாதிரி அல்லவா இருக்கிறது இது. ப்ளாட்பாரத்தில் கோவாபரேடிவ் துறையைப்பற்றி பேசுகிறார்கள் . . .

**திரு. எஸ். ராமசாமி நாயுடு**: முழுப் பூசணிக்காயையும் நாங்கள் சாப்பிடுகிற சோற்றில் அமுக்க முடியாது.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்**: அதை அமுக்குகிற ஆள்கள்—பெரும் பெருச்சாளிகள்—இருக்கிறார்கள், பழைய ஆள்கள் இருக்கிறார்கள், அவர்கள் முழுப் பூசணிக்காயைக் கூட சோற்றில் மறைப்பார்கள். அதைத்தான் சொல்கிறேன். கோவாபரேடிவ் என்பது கூட்டுக் கொள்ளை. முழுப் பூசணிக்காயை சோற்றில் அமுக்குகிற மாதிரிதான் இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியுமா, முடியாது. இதையெல்லாம் மூடி மறைக்க ஒருகாலும் முடியாது. ஆகவே, இந்த மந்திரிசபை மீது நம்பிக்கையில்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Speaker, Sir, I rise to oppose the Motion of No-Confidence moved by the hon. Leader of the Opposition against the Hon. Chief Minister and his colleagues. Sir, it is a fact which cannot be contradicted that if at all there is any one Ministry in our whole country which is considered to be most efficient and the State being well-administered, it is the Madras Ministry and the Madras State. This is a statement made not by me but by the various leaders in different walks of life not only in our country but abroad. This Ministry has done remarkable work during the last three Five-Year Plan periods in every field of administration and they have achieved a tremendous success. So, when the No-Confidence Motion was announced, I thought that this Ministry should have done such acts of commission and omission that would have caused a great calamity and greatly inconvenienced the people. But now I find that the charges given by the hon. Leader of the Opposition are absolutely trivial and not at all serious as to warrant the moving of a No-Confidence Motion.

Now, let me come to the charge relating to the failure of the Government to keep down the prices of commodities particularly foodstuffs. Sir, our State is a marginally surplus State. We have to help the neighbouring State of Kerala and also take the help of another neighbouring State of Andhra Pradesh. There has been a successive failure of monsoons, with the result that the production of foodgrains has been affected to a very considerable extent. This failure of monsoon was not only in our State but it was prevalent in almost all the other States in our country. This failure of monsoon has made the marginally surplus State into a deficit State and even the large surplus States have been completely



4th August 1966] [Sri K. S. G. Haja Sheriff]

affected. Such being the case, naturally the law of supply and demand began to operate. If the supply is less than the demand, there will be fluctuations in prices. So, to avoid all these things and avoid inconvenience to the people, the Government have resorted to the import of foodgrains from overseas. The steamers have been rushed to every port and the imported foodgrains have been distributed not only to towns and cities but also to the remotest corners of the villages so that the people may not be inconvenienced. But what has happened? Did the Opposition give co-operation to the Government? Instead of giving co-operation to the Government, they sponsored strikes in the Madras Port which had resulted in the consumers' foodstuffs not being moved for nearly ten days. Mr. Speaker, Sir, I make a serious charge against the Opposition, particularly the Communist-led Opposition for having fomented this strike on the plea that the wages are not adequate. Thousands of uneducated workers who are working there are receiving a salary ranging between Rs. 250 to 300 per month. I am not saying anything damaging against these workers but I am only pointing out that a worker who works for only five or six hours get a salary of not less than Rs. 250 per month. But he was misled to join the strike at a time when the country was in dire need of foodstuffs. Can we call this a National Party or can we call them as people who have got the interests of the people at heart or can we call these people who had shown such a callousness in a matter affecting the lives of the millions of our people as having no conscience? About half a dozen steamers were in 11-30 a.m.
the harbour to discharge foodgrains and fertilisers. There were some steamers also waiting for loading iron ore for taking it to far-off countries. If the steamers are operated speedily the country will earn more foreign exchange, if the steamers are delayed the country will have to pay heavily through foreign exchange. Instead of helping the Government to see that loading and unloading is done in a most efficient manner, they organised a strike with the result that the port was completely affected for about a week. One can imagine the great loss which the country has suffered by payment of foreign exchange on these vessels. The strike has also created much confusion in trade and commerce. If the Opposition really want to help the people to overcome their difficulties and make their lives happy, I appeal to them to co-operate with the Government.

Another charge that is levelled against the Government is their failure to make satisfactory arrangements for admission in schools and colleges, particulary in technical colleges and more particularly in the medical colleges. Where exactly have the Government failed? We have increased the number of medical colleges and the number of seats. Compared to what the position was ten years ago, there are at present more number of colleges and more number of seats. The Opposition cannot say that the Government have failed in their duty by not providing more colleges and more seats. Year after year the demand for admission is becoming more and more,

and this results in some difficulties. Only people who are in the actual know of things will realise the difficulties.

Another charge is that the Government have not made Tamil as the medium of instruction. I know more details about it. In colleges, more boys prefer to go to English medium than to Tamil medium. I had the painful experience of being charged that boys were compelled or coerced to study through the Tamil medium. Every parent whose boy was put in the Tamil medium afterwards came and worried the Principal or the committee members to transfer his boy to the English medium. Even those who have struggled for the development of Tamil and taken up the cause of Tamil education come to the Principal and say : 'For Heaven's sake, please change my boy to the English medium'. I used to ask them why they were anxious that their children should study in the English medium when they themselves were agitating for the introduction of Tamil medium, one parent told me :

"இதெல்லாம் ஊருக்கு, சார். இது நம்ம சொந்தப் பிள்ளை விஷயம். ஊருக்கு பிரசாரம் வேறு, சொந்தக் காரியம் வேறு" என்று.

I am telling this in a very frank manner. Let the Members of the Opposition understand what the exact feeling is. Let them not bring this no-confidence motion simply because there is a general election ahead. If they have got sufficient reasons to prove that the Government have failed in their duty, that the Government have not created favourable conditions for economic improvement then I can understand their charging the Government. But in the conditions prevailing to-day, if the Opposition brings forward this motion, the people will give the reply. The previous *modus operandi* was to take up some issues, agitate, court arrest and after release go round the State parading that they have come out victoriously. Unfortunately there are no such issues to-day to which they can cling. So they thought that this was the best and perhaps the only opportunity to move this no-confidence motion on these trivial matters. A charge was also made that the agriculturists were made more and more debtors. I am not an agriculturist. I am a very humble merchant. I know from facts and figures to what extent the Government have created favourable conditions for more production. I hope the hon. Members of the Opposition will read the note circulated during the budget session on வேளாண்மை துறை மானியங்கள் 1966-67-ம் ஆண்டு கோரிக்கை. There they have printed a statement containing facts and figures for a period of about fifteen years relating to the extent of cultivation and the yield. Take the extent of cultivation and quantity of production of each commodity about fifteen years ago and compare them with the present position. You will find that there has been a considerable increase. If there is a general failure of monsoon and therefore lesser production, who can be held responsible for that ? They can only hold God responsible for that. Have they



got any suggestion to bring rain in this State ? I hope they will make research to give us suggestions in this matter.

If we take the general improvement effected by our Ministry on the economic side, we should not only congratulate them but also express our fullest confidence in their doing their work in future in a very efficient manner. I do not think any other State has created so many industries in the private sector, public sector and State sector as the Madras Government have created. Again I would like to bring to the notice of the Members two pamphlets published by the Madras Government 'Industrial Development in Madras State 1965-66' and a very small note on 'Industrial Development in Madras State'. They explain to what extent our State has benefited by the actions of the Ministry. Simply because there is some delay in bringing out the Salem iron ore, a charge is being made. It is going to be an investment of Rs. 100 crores. Before making the investment, a very careful and serious study has to be made to see whether the investment will be economical and will be beneficial to the State and to the particular region. All these things have to be considered before embarking upon the project. All these things take time. One of the grounds for bringing forward this no-confidence motion is delay in regard to that project. I am sure that want of confidence is only with the Opposition and not with the Government.

I feel that the Madras Government have done a tremendous work and they deserve to be congratulated and I only hope that our Friends in the Opposition will make out points with facts and figures and not oppose simply because they should oppose. Thank you, Sir.

*திரு. எம். எஸ். மணி: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் எங்கள் கட்சித் தலைவர் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒட்டி நானும் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு 18 ஆண்டுகாலமாக ஆட்சி நடத்திய பிறகு, அரிசி கேட்டால் புத்தகத்தைக் காட்டுகிறார்கள். புத்தகத்தைக் காட்டினால் பசி தீருமா, வயிறு நிறையுமா ?

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

திட்டங்களைக் காட்டுகிறார்கள். ஆளியார் திட்டம், பாலாறு திட்டம், பரம்பிக்குளம் திட்டம், குந்தா திட்டம், கொடகனாறு திட்டம் என்று போட்டீர்களே பின் கூப்பன் அரிசி திட்டம் ஏன் ? இதை அமைச்சரவை எண்ணிப்பார்க்கவேண்டும். இன்னும் கூப்பன் அரிசி வாங்கும் நிலைதான் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் ஏழு அவுன்ஸ் அரிசிக்கு மேல் வேண்டும் என்று கேட்டார்கள். நான் கேட்பது இந்த ஏழு அவுன்ஸையும் ஒழுங்காகக் கொடுக்கிறார்களா என்பது தான். பதினைந்து மூட்டை வேண்டிய வியாபாரிக்கு 10 மூட்டையே கொடுத்தால், அவர் பாதிப்பேருக்கு அரிசி கொடுத்து விட்டபிறகு மற்றவர்களுக்கு இல்லை என்கிறார். அப்படிப்பட்ட

நிலைமை திருச்சியில் இருக்கிறது. இதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரிசிக்கு கூப்பன், அஸ்காவிற்கு கூப்பன், ரவாவிற்கு கூப்பன், மைதாவிற்கு கூப்பன், மண்ணெண்ணெய்க்கு கூப்பன், இப்படி எதை எடுத்தாலும் கூப்பன் தான். இப்படிப்பட்ட நிலை இருக்கலாமா? முன்பெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். காலையிலே எழுந்ததும், பெண்கள் தன்னுடைய பையனை சீவி முடித்துச் சிங்காரித்து, பொட்டிட்டு, பூச்சூட்டி, கையில் புத்தகம் சிலேட்டு கொடுத்து, "பள்ளிக்கூடம் போய் வாடா, மகனே!" என்று வழியனுப்பி அவன் பின்னழகைப் பார்ப்பாள். இப்பொழுது என்ன நடக்கிறது? காலையில் தாய்மார்கள் எழுந்ததும், பொட்டிட்டு, பூச்சூட்டி, கையில் கூப்பனைக் கொடுத்து, "அரிசிக்குப் போய் வாடா மகனே!" என்று சொல்ல, பையன் போய் அரிசி கிடைக்காமல் திரும்பி வருகிறான். மாலையில் சீமை எண்ணெய்க்குப் பையனை அனுப்பி வைக்கிறாள் அந்தத் தாய். இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் சொன்னால், அது குற்றமா? எனவேதான், இப்படிப்பட்ட நிலை இருந்துகொண்டிருக்கிற காரணத்தால், இந்த ஆட்சி ராஜினாமா செய்யவேண்டும் என்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல. உற்பத்திக்கு வசதி செய்து கொடுக்கிறோம் என்று அரசு சொல்லிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், உணவு உற்பத்திக்காக ஒரு நாற்பது ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் கொடுக்காத காரணத்தால் திருச்சியில் ஒருவர் உண்ணாவிரதம் ஆரம்பிக்கிறேன் என்று சொல்லும் நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம்.

எதைச் சொன்னாலும் இவர்கள் கேட்பதில்லை. தங்களுக்கும் தெரிவதில்லை, சொல்வதையும் கேட்பதில்லை என்ற நிலை இருக்கிறது. இந்தியப் பிரதம மந்திரி ஒன்று குறிப்பிட்டிருக்கிறார். "செலவைச் சிக்கனமாகச் செய்ய வேண்டும், ஆகவே, சிறிய காரைத்தான் நான் பயன்படுத்துகிறேன்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்களும் பின்பற்றவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இங்கிருக்கும் ஷெட்டைப் பார்த்தால், பெரிய பெரிய கார்கள் இருக்கும் நிலைமைதான் இருக்கிறது. எனவே, இந்தியப் பிரதம மந்திரியின் பேச்சைக்கூட கேட்காத போது, நான் சொல்லியா இவர்கள் கேட்கப்போகிறார்கள் என்ற ஒரு எண்ணம்தான் எனக்கு இருக்கிறது.

அது மட்டுமல்ல. இந்த ஆட்சியிலே காங்கிரஸ் கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க் கட்சிக்கு ஒரு நீதி என்று இருக்கிறது. இரவு பத்து மணிக்கு மேல் யாரும் கூட்டம் நடத்தக் கூடாது என்று இருக்கிறது. நான் கேட்டும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், காங்கிரஸ்காரர்கள் இரவு 12 மணி வரையில் கூட்டம் போட்டு நடத்துகிறார்கள். காங்கிரஸ் கட்சியினர் நடத்தும் கலை நிகழ்ச்சிகள் இரவு ஒரு மணி வரையில்கூட நடப்பதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால், எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், "ரெஃப்யூஸ்டு" என்று எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. எங்கள் மாநாட்டை பத்து மணிக்கு மேல் நடத்தக்





கூடாது என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகும் நடத்துவேன் என்று சொன்ன பிறகு, மாநாடு முடிகிறபோது இரவு 12 மணிக்கு, 12-ந் தேதி எங்களுக்கு உத்தரவு வருகிறது. இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டாமா? இப்படிப்பட்ட மந்திரி சபை மீது எங்களுக்கு எப்படி நம்பிக்கை இருக்கும்?

நெல்லை நகராட்சியில் ஏதோ தகராறு நடந்துவிட்டது என்று அதைக் கலைக்கச் சொல்லியிருக்கிறார்கள். காரணம் என்ன? நெல்லையில் திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் கிடையாது. மேல்சபை உறுப்பினர்களும் கிடையாது. பாராளுமன்ற உறுப்பினர்களும் கிடையாது. ஆனால், நெல்லை நகராட்சி மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கையில் இருக்கிறது என்ற ஒரே ஆத்திரத்தில் இன்றையதினம் அதைக் கலைத்திருக்கிறார்கள். அப்படிக் கலைத்தவர்கள் மற்றவற்றையும் எண்ணிப் பார்க்கவேண்டும். நேற்றையதினம் தூத்துக்குடியில் செருப்பு வீச்சு நடந்திருக்கிறது. மதுரையில் செருப்பு வீச்சு நடந்திருக்கிறது. அங்கே உள்ளவர்களுக்குள்ளே எப்படிப் பங்கு போட்டுக்கொள்ளலாம் என்ற தகராறு ஏற்பட்டிருக்கிறதே, அந்த நகர மன்றங்களையெல்லாம் இதுவரையிலும் கலைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று இந்த அமைச்சரவை இங்கே கூறமுடியுமா?

அது மட்டுமல்ல, ஆளும் கட்சியினர் தங்களுடைய கட்சிக்காரர்களுக்குச் சலுகை அளிக்கிறார்கள். நகராட்சி மன்றம் பொருட்காட்சி நடத்த அதற்கு அனுமதி கிடையாது. ஆனால், திருச்சியில் தனியார் ஒருவர் பொருட்காட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த அரசாங்கம் அதற்கு இனாமாக 40 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது என்று அறிகிறேன். அது மட்டும் அல்ல, விளம்பர இலாக்கா, மற்ற இலாக்காக்களும் அங்கே பங்கெடுத்துக்கொள்ளுவதற்காக நாற்பதாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறது. காரணம், அவர் ஒரு காங்கிரஸ்காரர். அது மட்டும் அல்ல. அவர் மேலும் ஒரு தந்திரத்தைக் கையாண்டிருக்கிறார். மாநாட்டு நுழைவு வாசலுக்கு என்ன பெயரிட்டிருக்கிறார் தெரியுமா? "காமராஜ் நுழைவு வாசல்" என்று பெயரிட்டிருக்கிறார். அந்தக் கலையரங்கிற்கு என்ன பெயர் வைத்திருக்கிறார். "பக்தவத்சலம் கலையரங்கம்" என்று பெயரிட்டிருக்கிறார். இப்படி அமைச்சர்களுக்கு ஐஸ் வைத்துத் தங்களுடைய காரியங்களைப் பல பேர் இன்றையதினம் சாதித்துக்கொள்ளுகிறார்கள். இதைத்தான் பார்க்கிறோம்.

நிர்வாகத் திறமையாவது சர்க்காருக்கு இருக்கிறதா, நாணயமாகச் சரக்குக் கொள்முதல் செய்கிறார்களா என்று பார்த்தால் வேதனைப்பட வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. இங்கே உணவுப் பஞ்சம் என்று சொல்லி, உத்தரப் பிரதேசத்தில் போய் உருளைக் கிழங்கு கொள்முதல் செய்திருக்கிறார்கள். எவ்வளவு உருளைக் கிழங்கு? ஆயிரம் டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள். நீலகிரியில் நமக்கு ஏராளமாக உருளைக் கிழங்கு கிடைக்கிறது.

ஆனால், உத்தரப் பிரதேசத்திலிருந்து ஆயிரம் டன் வாங்கி வந்தார்கள். திருச்சிக்கு அதில் 100 டன் அனுப்பினார்கள். கலெக்டர் பெருமையாகச் சொன்னார், "உருளைக் கிழங்கு வந்திருக்கிறது, எல்லோருக்கும் விநியோகம் செய்யுங்கள்" என்று நாமும் நம்பிக்கொண்டிருந்தோம். மூன்று நாட்கள் கழித்து உருளைக் கிழங்கு வந்தது. ரயில்வே வாகனிலிருந்து அவற்றை இறக்க ரயில்வே ஊழியர்கள் மறுத்தார்கள். அதற்குப் பிறகு சென்று பார்க்கிறபோது, அதிலே ஏற்பட்ட நாற்றத்தின் காரணமாக நாங்கள் இறக்க முடியாது என்று தொழிலாளர்கள் தகராறு செய்தார்கள் என்று தெரியவந்தது. ஒரு வழியாக அதை இறக்கியாயிற்று. நாங்கள் சென்று பார்த்தபோது, அது உருளைக் கிழங்காக இல்லை, தயிர் வடையாக இருந்தது. (சிரிப்பு). அவ்வளவு கொள கொளத்துப் போயிருந்தது. அதைப் போய் நாம் பர்ச்சேஸ் செய்யலாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு பெண் கடைக்குப் போனால் நல்ல சாமானாக, அழுகல் இல்லாத சாமானைப் பார்த்து வாங்கக் கூடிய திறமை பெற்றிருக்கிறார்கள். அந்தத் திறமையைக்கூட நம்முடைய சர்க்கார் இன்றையதினம் பெறவில்லையென்றால் இந்த சர்க்கார் மீது எப்படி நம்பிக்கை இருக்கமுடியும்? அது மட்டுமல்ல. அந்த உருளைக் கிழங்கை விற்றதில் எவ்வளவு நட்டம் காட்டியிருக்கிறார்கள்? அதில் நட்டம் வந்திருக்கிறதே என்று கேட்டால் "கடலைப் பருப்பில் லாபம் வந்திருக்கிறது" என்கிறார்கள். நாற்பது சதவிகிதம் பஞ்சாபிலிருந்து வாங்கிய கடலைப் பருப்பு வியாபாரத்தில் லாபம் வந்திருக்கிறது. அந்த லாபம் உருளைக்கிழங்கு வியாபார நஷ்டத்தை அட்ஜஸ்டு செய்து விடுகிறது என்று சொல்கிறார்கள். என்ன வியாபாரம் இது? அரசாங்கமே 40 சதவிகிதம் லாபம் வைத்து வியாபாரம் செய்தால், தனியார் அதைவிட அதிகமாக லாபம் வைக்க யாரைக் கேட்கவேண்டும்? இப்படித்தான் விலை ஏறுகிறது. விலை ஏற்றத்திற்கு உடந்தையாக இருக்கும் இந்த சர்க்கார்மீது எப்படி நம்பிக்கை இருக்கமுடியும்?

அடுத்து, ஆடு வாங்கிய கதையைப் பார்ப்போம். நேரம் இல்லாத காரணத்தால் அதிகம் சொல்ல முடியவில்லை. திருவண்ணாமலையில் ஆடு செத்தது பற்றிச் சொன்னார்கள். ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு என்று ஒன்றுதான் இன்று உயிரோடு இருக்கிறது. நாம் ஊட்டியில் ஆட்டுப் பண்ணை வைத்திருக்கிறோம். அங்கே என்ன நிலைமை? அங்கும் இதே நிலைமைதான். ஆடு செத்துக்கொண்டே வருகிறது. அதற்குப் பிறகு, வடக்கு மாநிலத்திலிருந்து எக்ஸ்பர்ட் டாக்டர்கள் வந்து பார்க்கின்றபோது, அவர்கள் புதுமையான கருத்தைச் சொன்னார்கள். வடக்கே அந்த ஆடுகளை மேய்க்கிறபோது, இலையிலே சில புழுக்கள் பூச்சிகள் இருக்குமே, அவை ஆடுகளின் வயிற்றிலே சென்று, கோடிக்கணக்கான பாக்டீரியா கிருமிகளாகப் பெருகி, அந்தக் கிருமிகள் ஆடு இலையைத் தின்றவுடனே அதை மசிய வைத்து ஆட்டுக்கு ஆகாரமாக ஆக்குகிறது. அங்கே பிழைத்துக்கொண்டது. இங்கே நம்முடைய நாட்டில் இலைகளைத் தின்றால் அந்தக் கிருமிகளால் இலைகளை மசிய வைக்க முடியவில்லை, அதனால் ஆடுகள் இறந்து





விடுகின்றன என்று சொல்லப்படுகிறது. வடக்கே இருக்கும் சீதோஷ்ண நிலை வேறு, இங்கே இருக்கும் சீதோஷ்ண நிலை வேறு. இங்கு வரவழைக்கப்பட்ட ஆடுகள் அந்தக் கிருமிகளைச் சமாளிக்க முடியாத நிலையில், இவர்கள் மண்ணைக் கொடுக்க, அதுவே கட்டியாகி, ஆடுகள் செத்துக்கொண்டிருப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. இதை யோசிக்க வேண்டாமா? இந்த நிலையில் எப்படி ஆடுகள் வளர முடியும் என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா? இப்படிப்பட்ட ஏராளமான நட்டங்களைச் சொல்ல முடியும்.

பசி பசி என்று வரிசையாகக் க்யூவில் நிற்கிறார்களே, சற்று வாழைப்பழத்தையாவது சாப்பிடலாம் என்றால், வாழைப் பழத்தையும் இத்தாலி நாட்டுக்கு அனுப்புகிறார்கள். அதுவும் ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், அதுவும் சரியில்லை. அங்கே அவர்களுக்கு வாழைப்பழம் வேண்டுமென்றால், நாம் இங்கிருந்து வாழைக்காயாக அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் அங்கு இறங்கும்போது அவை பழுத்திருக்கும். அப்படிச் செய்யாமல் இவர்கள் வாழைப் பழத்தையே அனுப்பிவிட்டார்கள். அங்கே போய்ப் பார்க்கின்றபோது அவ்வளவும் பஞ்சாமிர்தமாக இருக்கிறது. அதற்குப் பிறகு, அதை இத்தாலியில் அவர்கள் எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். இருபத்தையாயிரம் ரூபாய்க்குத்தான் எடுத்துக்கொள்வேன் என்றார்கள். கப்பலிலிருந்து இறக்க முடியாத அளவிற்கு, அதற்கு டெமரேஜ் கேட்டார்கள். இந்திய சர்க்காருக்குச் சொன்னதற்குப் பிறகு, இந்திய சர்க்கார் அந்த நாட்டுக் கூலி ஆட்களை விட்டு சமுத்திரத்தில் கொட்டச் சொன்னது. அதற்கு லட்ச ரூபாய் செலவு. இந்த வகையில் நாலரை லட்ச ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வருமானம் 25 ஆயிரம் ரூபாய். இப்படி இங்கே உணவுப் பண்டத்தை மக்களுக்குக் கொடுக்காமல் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு, அதன் காரணமாக எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளி? இப்படிப்பட்ட ஆட்சியை எப்படி நீடித்து வைக்கமுடியும்?

அடுத்து, மீன் பண்ணை என்று சொல்லுகிறார்கள். மீன் பண்ணையில் தண்ணீர் இருக்கிறது, மீனைக் காணோம். பல பண்ணைகளில் பார்க்கும்போது தவளை இருக்கிறது. இன்னும் சில பண்ணைகளில் பார்க்கிறபோது, மாடு படுத்திருக்கிறது. இந்த அரசாங்கம் அதை வளர்க்கட்டும். அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. அதே நேரத்தில், மனிதனை வளர்க்கவேண்டாமா? அதற்கான நல்ல திட்டத்தைப் போட வேண்டாமா? கோழிக்கு ஏர்-கண்டிஷன் ரூம் கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், மதுரையில் இருக்கும் பெரிய ஆஸ்பத்திரியில் உள்ள ஆபரேஷன் தியேட்டர் ஏர்-கண்டிஷன் செய்யப்படவில்லை. திருச்சியில் கோழிக்கு ஏர்-கண்டிஷன். அதை நான் குறை சொல்லவில்லை. மனிதனுக்கு ஆபரேஷன் தியேட்டருக்கு ஏர்-கண்டிஷன் இல்லை. மனிதனையும் பார்க்கவேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

மரம் நடு விழா. அதிலும் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களுக்கும் பி.டபிள்யூ.டி. அமைச்சருக்கும் என்ன தகராறோ எனக்குத் தெரியாது. பி.டபிள்யூ.டி. இலாகாவினர் மரம் நடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனிலே மரம் நடுகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் எலெக்ட்ரிஸிட்டி போர்டார் வெட்டிக் கொண்டே போகிறார்கள். ஒருவர் வளர்க்கிறார், மற்றவர் வெட்டிக்கொண்டே இருக்கிறார். ஆகவே, இதைக் கவனிக்க வேண்டாமா? இதற்காக எவ்வளவு செலவு? ஆகவேதான், இப்படிப்பட்ட ஆட்சியை நாம் ஆட்சிபீடத்திலிருந்து இறக்கவேண்டும் என்று சொல்லுகிறோம்.

இந்தப் பதினெட்டு ஆண்டு ஆட்சியில் வரி குறைந்ததா என்றால், இல்லை. விலைகள் இறங்கியதா என்றால், இல்லை. லஞ்சம் ஒழிந்ததா என்றால், இல்லை. விவசாயிகளின் வருமானம் பெருகிற்று என்றால், இல்லை. உழுபவனுக்கு ஊதியம் உயர்ந்ததா என்றால், இல்லை. ஜனநாயகம் காப்பாற்றப்பட்டதா என்றால், அதுவும் இல்லை. சோஷலிசம் வளர்ந்ததா என்றால், இல்லை. மது ஒழிந்ததா என்றால், இல்லை. சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வந்ததா என்றால், இல்லை. எனவே, "இந்த ஆட்சியின்மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி, அமர்கிறேன்.

திரு. கே. பி. பழனி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து, இந்த அமைச்சரவையை ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று இந்திய நாடு முழுவதையும் பார்க்கிற நேரத்தில் அமைதியாக அரசாங்கத்தை நடத்திச் செல்வதிலும், அபிவிருத்தி வேலையிலும் முன்னணியில் இருக்கக்கூடிய நம்முடைய தமிழக அரசின் நல்ல பெயருக்கு ஊறு செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய எங்கள் கட்சியைச் சார்ந்த பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அம்சங்களைப் பார்க்கிற நேரத்திலும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற கருத்துக்களைப் பார்க்கின்ற நோத்திலும், வர இருக்கின்ற தேர்தலை இதயத்தில் வைத்து இங்கே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கே நாங்கள் வரவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

குறிப்பாக, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மொழிப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, அகவிலை போன்ற முக்கியமான பிரச்சினைகளைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளில் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு என்று திட்டவட்டமான, தெளிவான கொள்கை இருக்கிறதா என்பதை நாம் முதலில் சிந்தித்துப் பார்க்கக்





கடமைப்பட்டிருக்கிறோம். மொழிப் பிரச்சினையைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தச் சட்ட மன்றத்தில் மட்டும் அல்ல, மக்கள் மன்றங்களிலும், மகாநாடுகளிலும் நாள் தோறும் பேசிக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம். இந்த மொழிக் கொள்கையில் காங்கிரஸ் இயக்கமானது கடந்த பத்து ஆண்டுகளாகவே எவ்வளவு திட்டவட்டமான ஒரு கொள்கையை வகுத்து கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் மொழிப் பிரச்சினையில் அவர்கள் எவ்வாறு மாறுபட்டு வருகிறார்கள் என்பதையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம்.

1957-ஆம் ஆண்டிற்கு முன்பு அவர்களுடைய முதல் மொழிக் கொள்கை என்னவென்று கேட்டால் 'எந்த ரூபத்திலும் இந்தியை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இந்தியை விடமாட்டோம்' என்பதுதான்.

அவர்களுடைய இரண்டாவது மொழிக் கொள்கை ஒரு மாற்றம் உடைய கொள்கையாக விளைந்தது. 11—3—1953-ல் இதே சட்ட மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் திரு. அண்ணாதுரை இருந்த நேரத்தில் 'இந்தி மொழி, ஆங்கில மொழி ஆகிய இரு மொழிகளும் இணைப்பு மொழிகளாக இருப்பது' என்பதை ஏற்றுக்கொண்டு இந்த மன்றத்தில் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு மூன்றாவது முறையாக மாற்றம் ஏற்பட்டது 5—9—1960-இல். இதே சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள், இருக்கின்ற மொழிகளில் ஒன்றோ, பல மொழிகளோ ஆட்சிமொழியாக ஆவதற்குத் தகுதி ஏற்படும் வரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றார்கள். இது மூன்றாவது முறை ஏற்பட்ட கொள்கை மாற்றமாகும்.

அடுத்து, நான்காவது முறையாக மொழிக்கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது 29—4—1963 இல். அன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் பேசிய திரு. அண்ணாதுரை அவர்கள் 'ஆங்கிலம் மட்டும் என்றென்றும் மத்திய ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்' என்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

அடுத்து, 1963-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திராவிட முன்னேற்றக் கழக பொதுக் கழகத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சொல்கிறது, 'பதினான்கு தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக இருக்கவேண்டும்' என்பதாக. இப்படி இந்த மொழிக் கொள்கையில் கடந்த பத்து ஆண்டு காலத்தில் ஐந்து வகையான மாற்றத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்கிறபோது நம்மால் நிச்சயமாக உணர்ந்துகொள்ள முடியும், அவர்களுக்குத் திட்டவட்டமான மொழிக் கொள்கை இல்லை என்று.

இன்று அவர்களைப் பொறுத்தவரையில் மாணவர்கள் மத்தியிலும், மாணவர்களின் மகாநாடுகளில் பேசுகின்ற நேரத்திலும் 'இந்தி மொழி கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது. தமிழ்மொழி அழிக்கப்படுகிறது. இதற்கு இடம் கொடுக்காதீர்கள்' என்ற கருத்துப்பட பேசுகின்றார்கள்.

அதே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாத்துரை அவர்கள் ராஜ்ய மன்றத்தில் ஆற்றிய உரையில் 'திரு. பாஜ்பாய் போன்றவர்கள் பேசுகின்ற சுத்த இந்தியை ஏற்றுக் கொள்கிறேன். போற்றுகிறேன். அதே நேரத்தில் கலப்பட இந்தியை எதிர்க்கிறேன்' என்று சொல்கிறார். அவர்களுடைய மொழிக் கொள்கை இப்படிக் காலத்திற்குக் காலம் மாறி வருகிறது, இடத்திற்கு இடம் மாறி வருகிறது என்பதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் 1957-ஆம் ஆண்டு தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய அமைச்சரவை கேர் கமிஷனிடம் எட்டு அம்ச யாதாஸ்தைக் கொடுத்தது, இன்றைக்கும் அதே கருத்தைக்கொண்டு தான் காங்கிரஸ் இயக்கமானது செயல் பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையில் பாரதப் பிரதமர் 'இந்திரா காந்தி' அம்மையார் அவர்கள் உறுதியோடு இதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். நமது மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள் முன்பு கொடுத்த வாக்குறுதிப்படி, லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி, இந்தி பேசாத பகுதியில் உள்ள மக்கள் இந்தியை பொதுமொழியாக ஏற்றுக்கொள்கிற வரை ஆங்கிலம் தொடர்ந்து இணைப்பு மொழியாக இருக்கும் என்பதை வலியுறுத்தி இருக்கிறார்கள். எனவே, திராவிட முன்னேற்றக் கட்சி அன்பர்களுடைய மொழிக்கொள்கை காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் மாறிக் கொண்டு வருகிறது என்பது மட்டும் அல்ல, அரசியலுக்கு இந்த ஒன்றையே பயன்படுத்திக்கொள்ளவேண்டிய நிலைக்கு ஆளாகி விட்டார்களே என்று நாம் அனுதாபப்படும் நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இரண்டாவது முக்கிய பிரச்சினை உணவுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்களும் இருக்கின்ற நிலையை ஏற்றுக்கொள்கிறோம். அதைச் சமாளிக்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த உணவுப் பிரச்சினையைப் பற்றி, இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பண்டப் பற்றுக்குறையைப் பற்றி சமாளிப்பதற்கு திட்டவட்டமான யோசனைகள் சொல்வார்களேயானால், அவர்களைப் பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்று சொல்ல முடியும். அதற்கு மாறாக அவர்களுடைய பொறுப்புள்ள தலைவர்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள். "1967 வரை உணவுப் பஞ்சம் நீடித்தால் நிச்சயமாக நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்வோம்", என்பது தான். அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமரவேண்டும் என்பதற்காக





உணவுப் பஞ்சம், பற்றுக்குறை நீடித்தாக வேண்டும், அதை வளர்த்தாக வேண்டும் என்பதுதான் அவர்கள் ஆசை என்பது நன்கு தெரிகிறது. இதே சபையில் உழவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவில்லை என்ற கருத்தை தேர்தலை இதயத்தில் வைத்து விவசாயப் பெருங்குடி மக்களின் நல்மதிப்பைப் பெறவேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தில் குறித்திருக்கிறார்கள். நிச்சயமாக அவர்களுக்கு உங்கள் வாயிலாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த தேர்தலில் ஒரு ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுப்போம் என்று சொன்னார்கள் அல்லவா? அப்போது 'மூட்டை என்ன விலைக்கு வெளியில் விற்கிறது' என்ற அறிவு நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இருந்தது. ஆகவே இவர்கள் 10-50 a.m.
வெற்றி பெறவில்லை. வருகிற தேர்தலிலும் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து முக்கியமாகச் சில அங்கத்தினர்கள் பேசிய நேரத்தில் 'நாம் அன்னிய நாட்டில் இருந்து ஏராளமாகக் கடன் வாங்கி நம் நாட்டையே அடகு வைத்துவிட்டோம்' என்ற கருத்துப்படச் சொன்னார்கள். இது குறித்து ஒருசில புள்ளிவிவரங்களை யாதாஸ்தாகக் கொடுக்க ஆசைப்படுகிறேன். கடந்த பதினைந்தாண்டுக் கணக்கை எடுத்துப் பார்க்கிற நேரத்தில் 1951-ஆவது ஆண்டு முதல் 1965-ஆவது ஆண்டு வரை நம்முடைய இந்திய அரசாங்கம் உள் நாட்டில் இருந்து, மக்களிடத்தில் இருந்து பெற்ற வரி, மற்ற வாய்ப்புக்கள் வாயிலாகப் பெற்ற மொத்த முதலீடு பதினெட்டாயிரத்து, நூற்றுப் பத்துக் கோடியாகும். இந்த பதினெட்டாயிரத்து நூற்றுப் பத்துக் கோடி முதலீடாக தொழில் நிறுவனங்களுக்குச் சென்றிருக்கிறது. அதே நேரத்தில் நாம் வாங்கிய அந்நிய கடன் 3,698.2 கோடியாகும். இவைகளைப் பார்க்கின்ற நேரத்தில், நம் தொழில் நிறுவனங்களில் நம்முடைய மூலதனத்தில் 20.3 சத விகிதம் தான் அன்னியக் கடனாக வைத்திருக்கிறோம். அதே நேரத்தில் இந்த நாட்டின் மக்களுக்கு அடிப்படை ஜீவாதாரமான தொழில்களாக நாம் என்ன என்ன ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பிலாய் உருக்காலை, ராஞ்சி கனரக இயந்திரத் தொழிற்சாலை, ஹரித்துவார் மின்சார தொழிற்சாலை, நெய்வேலி அனல் மின்சாரத் தொழிற்சாலை, நந்தம்பாக்கம் அறுவை சிகிச்சை கருவி உற்பத்தித் தொழிற்சாலை, மைசூர் நீர்விசைத் திட்டம் குந்தா திட்டம், துர்க்காபூர் எஃகுத் தொழிற்சாலை, ரூர்க்கேலா தொழிற்சாலை, ராஜஸ்தான் கால்வாய்த் திட்டம்--இப்படிப் பலவகையான திட்டங்களைப் போட்டிருக்கிறோம். இவை எல்லாவற்றுக்குமாக நாம் கடனைப் பெற்றிருப்பது நம்முடைய மொத்த முதலீட்டில் 20.3 சத விகிதம் தான் என்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[Mr. Speaker in the Chair.]

மற்றொரு முக்கியமான செய்தி, அவர்களால் வலியுறுத்தப்பட்ட செய்தி--இன்று நமது பொருளாதார அறிஞருடைய சிந்தனையில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கக் கூடிய அது மத்திய அரசாங்கம் அண்மையில் ரூபாயினுடைய மதிப்பைக் குறைத்தது ஆகும்.

[திரு. கே. பி. பழனி] [4th August 1966

அது குறித்து நாடே மூழ்கிவிட்டது போல எதிர்க்கட்சிக்காரர்கள் பேசிக்கொண்டு வருகிற நேரத்தில், அதுபற்றி ஒருசில விளக்கங்
12-00 noon. களைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு நாடு தன்னுடைய பொருளாதார வளர்ச்சிக்காக, முன்னேற்றத்திற்காக இந்த அளவுக்கு ரூபாய் நாணயத்தின் மதிப்பைக் குறைப்பது என்பது இந்திய நாட்டில் மட்டும் ஏற்பட்ட ஒன்று அல்லது உலக நாடுகளில் ஏற்படுகின்ற சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிபற்றி ஊன்றிப் படித்தவர்கள் இதை உணர்ந்திருக்கக்கூடும். பிரிட்டன் நாட்டில் இதுவரை மூன்று முறைகள் அந்நாட்டு நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. 1931-ம் ஆண்டு 1939-ம் ஆண்டு. 1949-ம் ஆண்டு, ஆக இந்த மூன்று ஆண்டுகளில் மூன்று முறைகள் அந்த நாட்டினுடைய நாணய மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் அமெரிக்காவில் 1933-ம் ஆண்டு அதனுடைய நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. 1958 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் அந்த நாட்டினுடைய நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டது. அதேபோல் ரஷ்யா, ஜெர்மனி, யூகோஸ்லேவியா, கனடா, அர்ஜன்டைனா, பிரேஸில், இஸ்ரேல்; கிரீஸ்; துருக்கி ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்குள்ளாக, அந்தந்த நாட்டு நாணய மதிப்பு குறைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் இறக்குமதியைக் குறைப்பதற்கும், செய்யக்கூடிய ஒரு சாதாரணமான நிகழ்ச்சிதான் இது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பல இடங்களில் முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை, அதுபற்றி விவாதிக்கப்படவில்லை, இது மிகப் பெரிய தேசியப் பிரச்சினையாயிற்றே என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் கூறுகின்றார்கள். உலக நாடுகளின் பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டால், இது பட்ஜெட் சீக்ரட், அதாவது வரவுசெலவுத் திட்டத்தின் ரகசியத்தைப்போலவே இது காக்கப்பட்டு வருகின்றது. இங்கிலாந்து நாட்டில் அந்த நாட்டினுடைய நாணய மதிப்புக் குறைக்கப்பட்டபோது முதல்நாள் இரவு பாராளுமன்றத்தில் உறுதியளித்திருக்கிறார்கள் நாணயத்தின் மதிப்பு குறைக்கப்படமாட்டாது என்று. அடுத்த நாள் காலையில் 6 மணிக்கு பத்திரிகைகளும், வானொலியும் இங்கிலாந்து நாட்டினுடைய நிதி அமைச்சர் அந்த நாட்டு நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவித்திருக்கிறார் என்று அறிவித்தன, என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, இது நிதிநிலை அறிக்கையின் ரகசியத்தைப் போல பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் 1948-49-ம் ஆண்டில் இறக்குமதியானது 643.8 கோடி ரூபாய்க்குச் செய்துவந்தோம். ஏற்றுமதியானது 458.7 கோடி ரூபாய்க்குச் செய்து வந்தோம். இதன் மூலம் 1948-49-ம் ஆண்டில் ஏற்பட்ட குறைவு 185.1 கோடி ரூபாய். ஆனால் 1964-65-ஆம் ஆண்டு கணக்கைப் பார்க்கிற



4th August 1966] [திரு. கே. பி. பழனி]

பொழுது, இறக்குமதி 1,296 கோடி ஆகவும், ஏற்றுமதியானது 447 கோடியாகவும், இரண்டிற்கும் இடையே உள்ள 800 கோடியை சரிகட்டுவதற்கு, அட்ஜஸ்ட்மென்ட் செய்வதற்கு ஒரு தீர்க்கமான செயலாகவும், சிறப்பான செயலாகவும் இருப்பதுதான் இந்த ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பு என்பது என்பதைச் சொல்லிக்கொண்டு, மக்கள் மத்தியிலே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னால், அதற்காக எதிர்க்கட்சிகள் எப்படியும் பேசிக்கொண்டுவரலாம், நம்பிக்கையில்லாத் தீர்மான ரூபத்திலே ஏதாவது சொல்லிக் கொண்டு வரலாம், ஆனால் நாட்டு மக்களின் நம்பிக்கையும், நல்வாழ்த்தும் நிச்சயமாக எங்களுக்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* SRI A. KUNJAN NADAR : Mr. Speaker, Sir, I rise to support the No-Confidence Motion moved by the hon. the Leader of the Opposition. At the same time, I am almost inclined to bring in another No-Confidence Motion against the hon. the Leader of the Opposition because in his long list of charges against the Government he has deliberately omitted us, the Kanyakumari people. We are treated by this Government as aliens in an alien land. We are almost a Stateless people in the Madras State. We do not feel that the Government exist for us. No-Confidence is a very mild word to express our feelings. I may state that I have no political motive or axe to grind because I do not belong to any political party nor have I decided to stand for any election hereafter. But I have not decided about it; I may stand (laughter). Anyhow, there is absolutely no political motive.

Sir, our only problem is the problem of our educated unemployed in the Kanyakumari district. We are a highly educated district. So far as education is concerned, we have gone even beyond the Fourth Plan target. At the same time, what we see is that we are denied jobs. There is almost a direction given by this Government to all the Departments not to give jobs to the Kanyakumari people. Lately, there is a tendency to squeeze out a few persons employed here and there by framing false charges against them. Also, in the matter of selection for the teachers training course, for the nurses and for the M.B.B.S. Course or the Engineering Course, we are deliberately ignored. Sir, I do not say that all that this Government have done is against our country or people but judging from the ultimate results of 20 years of Congress Rule—I am not against any Minister or Ministers but on the other hand, I have got the greatest respect for some Ministers—what we see is that the country is facing a thorough demoralisation in all spheres—the administrative sphere, the industrial sphere and even in the domestic sphere. Who is responsible for this state of affairs? Even the relationship between the father and son and that of the husband and wife has changed because of very faulty and wrong theories which have been projected before the public by this Government. I tell all these things for my hon. Friends sitting on the other side to think over.

[Sri A. Kunjan Nadar] [4th August 1966

Now, there is a wave of communalism. Recently many communal parties have sprung up. I know that many hon. Friends here have condemned the communal parties. Who is responsible for this? Our Government are patronising certain people and certain communities. Communalism breeds communalism. Communalism can only excite communalism. The ruling party is responsible for this communalism.

Sir, there is a written order in the Transport Department, that the Madras Unit should not emply people belonging to the Kanyakumari district. This matter has been pursued by all our Kanyakumari friends including the Congresswallahs. We led deputations and made representations to the Ministers several times. When I raised this matter before this House some time ago, the Hon. Minister Mr. Venkataraman quoted certain percentage statistics regarding the employment of the Kanyakumari people. Sir, I honestly ask the Hon. the Chief Minister one question. Are the Government prepared to apply that percentage principle to the Chingleput district? Sir, in the Kerala State, while the Congress Government were functioning there, they had introduced the principle of communal representation. But here in Madras I see that the Government are for some privileged communities alone and that is the reason why there are communalism and communal parties in this State. The Government is reduced to the level of a huge Joint Stock Company to be exploited by certain privileged communities. The Government have not got rid of communalism even after 20 years of Congress Rule. I say, let the Government give all communities equal opportunities and their due share. Sir, you can—by ' you ' I do not mean the Speaker, I mean the Government—fool some people for all time and all people for some time, but you cannot fool all people for all time.

MR. SPEAKER : The word ' you ' refers to the Chair. The hon. Member can say ' The Government '. The ' third person ' should be used.

SRI A. KUNJAN NADAR : It is a quotation. It is a general thing applicable to all.

As long as there are castes and communities, you have to face facts and do justice to all communities. That is what I am going to say. Newton's Third Law of Motion says that action and reaction are always equal and opposite. Your actions will have an equal and opposite reaction.

Regarding the Transport Department, some conductors were selected some two months back. About fifty or sixty persons turned up for interview. Eighteen candidates were selected in the final list. The matter went up to the Director. He struck off the names of two persons from the list because they do not belong to our State. One of them is a Nair from Malabar and the other is one belonging to Kanyakumari. I challenge the Government to appoint an impartial commission. I am prepared to prove my allegation. You are deliberately discriminating us and we also are



4th August 1966] [Sri A. Kunjan Nadar]

not going to leave you. We have come to Madras State for justice. We have fought for justice with the Travencore-Cochin Government for about ten years. We have suffered, we have paid very heavily in terms of fire and flood. We have come here for justice. We are determined to get justice from the Madras Government. This reminds me of an old Malayalam proverb. Fearing injustice from the Travancore-Cochin State Government, we ran to Madras. In our original place there was war only during day time. But here there is warfare during night also with lighted torches.

I now come to appointments. It is ten years since we merged with Madras. During these ten years, not even one single person from Kanyakumari has been appointed in group I and II. I challenge the Government to deny this fact.

MR. SPEAKER : The hon. Member's time is up.

SRI A. KUNJAN NADAR : I may be allowed a few more minutes.

MR. SPEAKER : The hon. Member can take two more minutes.

SRI A. KUNJAN NADAR : I cannot persuade myself to believe that our educated young men from Kanyakumari are inefficient and they cannot compete with other people in competitive tests, etc. The whole thing started from 1956. Some officers came there from Madras State. They wanted our peons and clerks to wash their clothes and the clothes of their wives. Those people refused. The Madras officers passed against the Kanyakumari people the judgment : 'You are impertinent and inefficient fellows.'

Another thing is that they wanted to be called 'Dorais'. The Kanyakumari people refused. They were asked for an explanation. One gentleman gave the explanation " We do not call you ' Dorai ' because the word denotes a white man. It is a word indicating slavery. We are now a free nation. We do not want to perpetuate slavery. Another reason why we refuse to call you ' Dorai ' is" (The bell was rung).

* திரு. அ. சிதம்பரநாத நாடார் : சார், நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மந்திரிசபையின் மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறங்களில் ஒரு பழமொழி உண்டு. "முருங்கையை முறித்து வள; குழந்தையை அடித்து வள", என்று. அந்தப் பழமொழியை சரியான முறையில் நமது சர்க்கார் அனுசரிக்காத காரணத்தால்தான், நமது மந்திரி சபைக்கு இன்றைக்கு ஆபத்து வந்திருக்கிறது. எதிர்க்கட்சி நண்பர்களை அடிக்க வேண்டிய இடத்தில் அடித்து, மிதிக்க வேண்டிய இடத்தில் மிதித்து, கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்காததால் அவர்களுக்கு எப்படி புத்தி வரும்? அந்த முறையில் மந்திரிசபை

நடந்து கொள்ளாததால்தான் இப்போது நமக்கு ஆபத்து வந்திருக்கிறது. ஆனால் நமது மந்திரிசபை வருத்தப்பட எந்த விதமான சந்தர்ப்பமும் கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு என்ன தேவை என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டில் குழப்பம் இல்லை; தீப்பிடித்து விடவில்லை. ஆனால் பொதுத் தேர்தல் வந்து விட்டது. 1967 பொதுத் தேர்தலைக் கண்டு எதிர்க்கட்சி நண்பர்கள் பயப்படுகிறார்கள் என்று சகோதரி பேசும்போது சொன்னார்கள். நான் அதை விட ஒரு படி கூடச் சொல்வேன். "பொதுமக்களை போற்றும் படலம்" என்று. ஆனால் பொதுமக்கள் ஏமாற மாட்டார்கள். தருமபுரி இடைத் தேர்தலில் நீங்கள் கண்ட 'வெற்றி' யை நாங்கள் அறிவோம். இந்தியை எதிர்த்துப் போராட்டம் எப்படி வந்தது? அதற்குப் பொறுப்பு யார்? நீத்த உயிர்கள் யாரால் போயிற்று? மாணவர்கள் என்ன செய்தார்கள்? நீங்கள் என்ன செய்தீர்கள்?

**கனம் சபாநாயகர்:** 'அவர்கள்' என்று சொல்லுங்கள். 'நீங்கள்' என்று சொல்லக்கூடாது. The 'third person' should be used.

**திரு. அ. சிதம்பரநாத நாடார்:** எனது தி.மு.க. தோழர்களுக்கு மேடைகளில் ஒரு பேச்சு உண்டு, நாங்கள் ஐந்தருவி என்று. இது தென் பகுதியைச் சார்ந்த மக்களுக்கு நன்கு தெரிந்த சம்பிரதாயம். கம்யூனிஸ்ட் இடது சாரி, வலது சாரி, தி.மு.கே., சுதந்திராக் கட்சி, முஸ்லீம் லீக் எல்லாம் சேர்ந்து ஐந்தருவி என்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும், ஐந்தருவியில் குளித்தால், சோப்பைப் போட்டு குளிப்பதற்கு முன் தண்ணீர் நின்றுவிடும். இவர்கள் ஆட்சிக்கு வந்தால், எந்த நிலையில் இருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. சோப்பை போட்டுக் கொண்டு அதைக் கழுவுவதற்கு முன் தண்ணீர் நின்று விட்டால் எந்த நிலை இருக்குமோ, அந்த நிலைதான் வரும் இவர்கள் ஆட்சிக்கு வந்து விட்டால் என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் ஊரில் இவர்களைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் பணக்காரர்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் காங்கிரஸ்காரர்கள் தான் பணக்காரர்கள் என்று சொல்கிறார்கள். எனக்கும் ஒரு எளிய குடும்பம் உண்டு. ஒரு வீடும் இருக்கிறது. சிறிது நிலமும் இருக்கிறது. நான் சுமார் 20 ஆண்டுகளாக அசெம்பிளி அங்கத்தினராக இருந்து வருகிறேன். திருவிதாங்கூர் சட்டசபையில் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். திருவிதாங்கூர்-கொச்சி சட்டசபையில் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். இங்கு வந்தும் பத்தாண்டுகள் ஆகிவிட்டது. நான் கண்டது ஒன்றுமே கிடையாது. மக்கள் தொண்டைதவிர. ஆனால் எதிர்க்கட்சி அங்கத்தினர்களை பாருங்கள். ஒரு கார், பத்து பங்களாக்கள், இவையெல்லாம் இருக்கின்றன. ஒரு முழு கையில்லாதவன் ஒரு விரல் இல்லாதவனை பரிகாசிப்பது போல் இருக்கிறது தி.மு.க. அங்கத்தினர்களின் நிலை. திருநெல்வேலி நகராட்சி கலைக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். ஏன் கலைத்தார்கள் என்பது பற்றி நீலகிரி மெம்பர்





அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். எங்கள் மந்திரி சபை சென்னை கார்ப்பரேஷன் மாதிரியா நாறுகிறது. கார்ப்பரேஷன் நாற்றத்தைப் போல் எங்கள் மந்திரிசபை நாறவில்லை. உங்கள் நகராட்சிதான் நாறுகிறது. எங்கள் மந்திரிசபை நாறுகிறது என்று நீங்கள்தான் சொல்கிறீர்களே தவிர, வேறு யாரும் கூறவில்லை. திரு. சண்முகம் அவர்கள் அழகாக கூறினார்கள். அதிகாரிகள் செய்யும் குற்றத்திற்கு மந்திரிகள் என்ன செய்வார்கள். Ministers are not omnipotent or omnipresent நாட்டில் பலதும் நடப்பதில் சில தெரியாமல் இருக்கலாம். ஜனப்பிரதிநிதியாக இருக்கின்றவர்கள் அதைப்பற்றி அறிந்தவுடன் அதை சர்க்காருக்கு சமர்ப்பிக்கவேண்டும். "இந்த இடத்தில் இன்ன காரியம் நடக்கிறது, அதை பொது மக்கள் விரும்பவில்லை, சர்க்கார் சரியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று கூற வேண்டும். திருவண்ணாமலைக்கு மஜீத் அவர்கள் வந்திருந்த போது ஏ.பி.பி. 2-ஐக் கூப்பிட்டு சொன்னதாக சொன்னார்கள். அப்படி யாராவது சொல்வார்களா? நிச்சயமாக சொல்ல மாட்டார்கள். சொல்லியிருந்தாலும் அதை நிச்சயமாகச் சொல்ல மாட்டார்கள் யாரும். எங்கள் தி.மு.க. மந்திரிசபை வந்தால், "ரூபாய்க்கு மூன்று படி அரிசி தருவோம்" என்று சொல்கிறார்கள் அது வரப் போவதில்லை, அப்படிப்பட்ட ஒரு அபாயகரமான நிலை மக்கள் காணப் போவதும் இல்லை. இது உறுதி. இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நீங்கள் கொண்டு வரக் கூடாது. அப்படி வந்தால், அது உங்களுக்குத்தான் அவமானம்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் இந்த அமைச்சரவை மீது எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து நான் இங்கு பேசலாம் என்று இருக்கிறேன். எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற குறுகிய காலத்தில் என்னுடைய வார்த்தைகளைக் கூறி முடித்து விடலாம் என்று கருதுகிறேன். இந்த மந்திரிசபையை பதவியில் இருந்து விலக்கவேண்டுமென்று நாங்கள் இரண்டாவது முறையாக இத்தகைய தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். தேர்தல் வருவதற்கு முன்பாக இப்படி கொடுத்து விட்டார்களே, கொஞ்ச நாள் பொறுத்திருந்தால் வேறு யாராவது அதைச் செய்து விடுவார்களே என்று கூட என் அருமை நண்பர்கள் பலர், காங்கிரஸ் நண்பர்கள் பேசலாம். இந்த அரசாங்கம் என்ன அரசாங்கம், இவர்களுக்கு என்ன லாயக்கு இருக்கிறது மந்திரி சபையில் தொடர்ந்து இருப்பதற்கு என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

நேற்றைய தினம் பண்ருட்டியில் உள்ள மண்டல காங்கிரஸ் கமிட்டியினர் மந்திரிகளுக்கும், எல்லா அங்கத்தினர்களுக்கும், ஒரு பை, பாக்கட் ஒன்று அனுப்பியிருக்கிறார்கள். அந்த அம்மோனியாவில் கால் பங்கு மணல் இருக்கிறது. இது சர்க்கார் கொடுப்பது. அதிலேயே கால் பங்கு மணலாக இருக்கிறது என்று, மண்டல காங்கிரஸ் கமிட்டியினர் கூடச் சொல்கிறார்கள் இந்த

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th August 1966

மந்திரி சபைமீது நம்பிக்கையில்லை என்று எது ஒழுங்காக இருக்கிறது? அம்மோனியாவில் அடல்ட்ரேஷன், அரிசியில் அடல்ட்ரேஷன், புளியில் அடல்ட்ரேஷன், எல்லாவற்றிலும் அடல்ட்ரேஷன்தான். டோன்ட் மில்க் தருவதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். மதறாசில் பால் கிடைக்கவில்லை. ஆகவே, தண்ணீரைக் கல என்று மெயினையே டைவர்ட் செய்து விடுவார்கள் போலிருக்கிறது மாதவரத்திற்கு. கொடுப்பது தண்ணீர் கலந்த பால். அது ஃபுட் அடல்ட்ரேஷன் இல்லையா? பத்து சேர் பாலில் ஒரு சேர் தண்ணீர் கலந்து விட்டால் அவனுக்கு ஆறு மாத ஜெயில் தண்டனை. எல்லாவற்றிலும் அடல்ட்ரேஷன். கலப்பட சர்க்காராகத்தான் இது இருக்கிறது.

நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை, தென் ஆற்காடு ஜில்லாவில், என் தொகுதியில் அரிசி இரண்டு ரூபாய் நான்கணா என்று விற்கிறது. இரண்டு ரூபாய் இரண்டணாவிற்கு பண்ருட்டி, நெல்லிக்குப்பத்தில் விற்கப்படுகிறதே என்று கேட்டால் நாங்கள் என்ன செய்வது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். செஞ்சியில் இருந்து எடுத்து வந்து தருகிறோம் என்றால் அதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஒரு டிஸ்ட்ரிக்டிலிருந்து இன்னொரு டிஸ்ட்ரிக்டுக்குப் போகக் கூடாது, ஆனால் ஒரு டிஸ்ட்ரிக்டில், ஒரு தாலூகாவில் இருந்து இன்னொரு தாலூகாவிற்குப் போகலாம். விலை ஏறிக் கொண்டேயிருக்கிறது. கோவையில் மூன்று ரூபாயிலிருந்து நான்கு ரூபாய்க்கு போயிருக்கிறது. சேலத்தில் 2½ ரூபாயில் இருந்து மூன்று ரூபாய்க்கு போயிருக்கிறது. எப்படி விவசாயிகளும், மற்றவர்களும் வாழ முடியும்? திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள். கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய குடும்பம் ஒன்றுக்கு 2 ரூபாய் வருமானம் வருகிறது என்றால் அதை வைத்துக்கொண்டு அவர்கள் அரிசி வாங்கமுடியுமா, புளி வாங்க முடியுமா, எப்படி அவர்கள் சாப்பிட முடியும். விலைவாசி ஏறிப் போயிருக்கிறது என்றால், இட்டிலி இளைத்துப் போயிருக்கிறது என்றால் நாங்கள் என்ன பண்ணுவது என்கிறார்கள். சாம்பாரில் தண்ணீர் அதிகமாக இருக்கிறது என்றால் நாங்கள் என்ன பண்ணுவது என்கிறார்கள், பூரியின் விலை 30 பைசாவாக இருக்கிறது என்றால் நாங்கள் என்ன பண்ணுவது என்று சொல்கிறார்கள். பின் எதைச் செய்ய நீங்கள் இருக்கிறீர்கள்? சம்பளம் வாங்கவா, ஊர்வலம் போவதற்காகத்தானா? எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட், 1955 என்று ஒரு சட்டத்தைப் போட்டு வைத்திருக்கிறோம் அல்லவா? எதற்காக அது இருக்கிறது? ஹோட்டல் முதலாளிகளின் காலில் விழுந்து, 'ஐயா, ஐயா, விலையைக் குறையுங்கள்' என்று கேட்பதற்காகவா, சட்டம் இருக்கிறது? எத்தனை லைசென்ஸ்களை கான்ஸல் செய்திருக்கிறீர்கள்? எத்தனை கள்ளக்கடத்தல்காரர்களை பிடித்திருக்கிறீர்கள்? காங்கிரஸ் அரசாங்கம் நீடிக்கிற வரையில் இந்த நாட்டுக்கு விமோசனமே கிடையாது. பஞ்சாபில் கவர்னர் வந்தார். என்ன நடக்கிறது அங்கே? கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகளை, ஒரு நகரத்தில் பத்து வியாபாரிகளைக்



4th August 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கைகளில் விலங்கைப் போட்டு நடுத்தெருவில் அழைத்துச் செல்லும்போது மற்றவர்கள் கொள்ளை லாபம் அடிப்பதில், பதுக்கலில் ஈடுபடுவார்களா? இந்த அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை.

சேலம் ஜில்லாவில் ஸ்டீல் ப்ளான்ட் வைக்கிறார்களாம், வைக்கிறார்களாம், 25 ஆண்டுகளாக வைக்கிறார்களாம். ஒரு வருடமும் இந்த ஒப்பாரி நின்றது கிடையாது. சட்டசபையில் இதே ஒப்பாரியாகத்தான் இருக்கிறது. நூறு கோடியில் போட்டு விடலாம் என்று சொன்னார்கள். இப்போது டீவால்யுவேஷன் வந்த பிறகு அது 150 கோடி ஆகிவிடும். திரு. வெங்கட்டராமன் அவர்கள் சுலபமாகச் சொல்லிவிடலாம் மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை என்றால் நாங்களே செய்து விடுவோம் என்று. *** இந்த மாநில அரசாங்கத்தின் நிதி நிலை அதற்கு போதுமானதாகவா இருக்கிறது? இவ்விதம் அமைச்சர்கள் பொறுப்பற்ற நிலையில் பேசிவிடுகிறார்கள். சேலத்தில் இரும்பு ஆலையை அமைப்பதற்கு மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்திச் சொல்வதற்கு தகுதியில்லாதவர்கள், அதைப் பற்றி சொல்வதற்கு நாதி இல்லாதவர்கள், ஏன் இந்த மந்திரி பீடங்களை அலங்கரிக்க வேண்டும்? இவர்களால் செய்ய முடியவில்லை என்றால் விட்டு விட்டு வெளியே வந்து விடவேண்டும். இப்போதுள்ள நிலைமை என்ன? டீவால்யுவேஷன் ஏற்பட்ட பிறகு 100 கோடிக்கு இருந்தும் 150 கோடிக்கு போய்விட்டது. இதை சொல்லும் போது இதற்காகத் தான் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் ரஷ்யா, ஜெர்மன் போன்ற நாடுகளுக்குப் போயிருக்கிறார், அவர் போயிருப்பது காங்கிரஸ் தலைவர் காமராஜரோடு. ஆனால் 12-30 p.m.
இவரும் போகின்ற இடங்களில் இரும்பு ஆலை ஏற்படுத்துவதைப் பற்றி ஆராய்ந்துவிட்டு வருவார் என்று இவர்கள் சொல்லக்கூடும். இதே மாதிரி சட்டசபையிலும், தமிழ்நாட்டிலுள்ள மக்களிடத்திலும் சொல்லி, இருக்கின்ற கவனத்தை வேறு திசையில் திருப்பி விடுகிறார்களே தவிர, இவர்கள் செய்வது எந்த நியாயத்தைச் சேர்ந்தது? இந்த முறையில்தான் அமைச்சர்கள் செயலாற்றுகின்றார்கள். இந்தி போராட்டம் நடந்தது. சிவில் அட்மினிஸ்ட்ரேஷனே ஃபெயிலாகி, மிலிட்டரி அட்மினிஸ்ட்ரேஷன் வந்தது. இங்குள்ள மந்திரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? மத்திய சர்க்காரிலுள்ள ஒன்றிரண்டு மந்திரிகள் ராஜீநாமா செய்தார்களே தவிர, இங்கேயுள்ள மந்திரிகள் வெளியே வரவில்லையே, வெளியே வந்தால் திரும்ப இடம் கிடைக்காது என்ற பயம் இவர்களுக்கு * தங்கள் இடத்தை நன்றாக போல்ட் போட்டு இறுக்கி வைத்துக்கொண்டார்கள். அன்றைக்கு ஏதோ சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்கள். இதுவரையிலும் நிரந்தரமான ஏதாவது சட்டம் உண்டா? நூறு, இருநூறு பேர்கள் இறந்தார்கள். இத்தனைக்கும் பிறகு சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறவர்கள் ஏன் இதை முன்னாலேயே சொல்லவில்லை? இந்த அமைச்சர்களால் செத்தவர்களுடைய உயிரை திரும்ப கொடுக்க முடியுமா? செத்துப்போன பிள்ளைகளை இழந்த தகப்பனுக்கு கொடுக்க முடியுமா? மாண்டு போனவர்களை

*** Expunged as ordered by the Chair.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th August 1966

மீண்டும் கொண்டு வந்து நிறுத்த முடியுமா? இந்த வகையில் இந்தச் சபை செயலற்ற தன்மையில்தான் இருந்துகொண்டிருக்கிறது என்றால், மீண்டும் இவர்கள் பதவியில் நீடிப்பது கொஞ்சமும் நியாயம் அல்ல.

இவர்கள் எதைச் செய்தார்கள். மருத்துவக் கல்லூரி அட்மிஷனைப் பொறுத்த வரையில், முன்னால் 500 பேர்களுக்கு இடம் இருந்த காலத்தில் 6,000 பேர்கள் அப்ளிகேஷன் போட்டார்கள். அப்போதெல்லாம் இல்லாத அளவுக்கு இப்போது 1,000 இடங்கள் இருந்தும் 4,000 மாணவர்கள் தான் மனு செய்திருக்கிறார்கள். ஆனால், என்ன நடந்தது? லஞ்சம் கொடுத்தால்தான் இடம் கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டது. இல்லை என்று மறுக்க முடியுமா? பார்வேர்ட் என்றால் 3,000 ரூபாய் லஞ்சம். பார்வேர்ட் என்றால் 5,000 ரூபாய் லஞ்சம் பெறுகிறார்கள். இதை மறுக்க முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர், 3,000 ரூபாய் லஞ்சம் பெறுகிறார்கள், 5,000 ரூபாய் லஞ்சம் பெறுகிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். லஞ்சம் வாங்குகிறார்கள் என்றால், அதை ப்ரூவ் பண்ணுவதற்குத் தயாராக இருக்கிறார்களா?

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, இதை நான் ப்ரூவ் பண்ணுவதற்குத் தயாராக இருக்கிறேன். இப்போது வேண்டுமானாலும் சொல்லுகிறேன்.. நமது உள்துறை அமைச்சர் அவர்களின் உறவினர், சுப்பையா என்ற அதிகாரி. அவரிடத்தில் ராதாகிருஷ்ணன் என்ற மாணவனை 'பண்ருட்டி பஞ்சாயத்து யூனியன் சேர்மன் ரங்கநாதன் என்பவர் அழைத்துச் சென்றிருக்கிறார். இந்த மாணவனுக்குக் கடைசி வரையில் இன்டர்வியூ கார்டு வரவில்லை. இன்டர்வியூ கார்டு வந்தபிறகு, சுப்பையா அவர்களைக் கண்டு பேசியிருக்கிறார்கள். அவர் ஜனார்த்தனம் அவர்களோடு பேசி 3,000 ரூபாய் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு இந்த அதிகாரி கியாரண்டியை டெலிபோன் மூலமாக கூறியிருக்கிறார். இவ்விதம் 3,000 ரூபாய் கேட்கவில்லை என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

(எதிர்க்கட்சி பக்கத்திலிருந்தும், பார்வையாளர்கள் காலரியிலிருந்தும் கை தட்டல் கேட்டது.)

MR. SPEAKER: All the persons who are siting in the Visitors' Galleries must keep quiet. Otherwise, they must get out.

(காலரியைப்பார்த்து) அங்கேயிருந்துகொண்டு கைதட்டக் கூடாது அதையெல்லாம் வெளியில் போய் பார்த்துக்கொள்ளவேண்டும். இங்கே பேசாமல் இருந்துகொண்டு பார்க்கலாம். இல்லையென்றால் வெளியில் போய்விடவேண்டும். This is not a public meeting. All must keep quiet.



4th August 1966]

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: ஸார், கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு ஸ்பெஸிபிக் சார்ஜை சொல்லியிருக்கிறார்கள். அதாவது குறிப்பிட்ட ஆபீஸர் 3,000 ரூபாய் கேட்டதாக சொல்லியிருக்கிறார். இதை அவர் எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் ப்ரூவ் செய்யவேண்டும். ஆகவே, இதற்காக ஒரு விசாரணை செய்ய வேண்டும்.

கனம் சபாநாயகர்: சரி, இதைப்பற்றி சபை எப்படி முடிவு எடுக்க முடியும் என்பதைச் சொல்லுங்கள்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: நான் ஒரு மோஷன் கொண்டு வருகிறேன். I move—

'That the specific charge referred to by the hon. Member may be referred for enquiry.'

He must prove it.

MR. SPEAKER: Let the hon. Member please tell me, to whom it must be referred. What is the procedure to be adopted ?

SRI R. V. SWAMINATHAN: I cannot quote the relevant rule unless I have got the rules with me. But I can say that if an hon. Member makes a specific charge of corruption, he has to take responsibility and prove it. So, the Hon. Speaker may refer the matter to the C. I. D. or the Privileges Committee.

SRI K. A. MATHIALAGAN rose.

கனம் சபாநாயகர்: நான்தான் அதைப்பற்றி யோசிக்கொண்டு இருக்கிறேன். சபை இதை எப்படி கவனிக்கவேண்டும் என்பதைத் தான் நாம் இப்போது கவனித்துக்கொண்டிருக்கிறோம்.

(சில அங்கத்தினர்கள் எழுந்திருந்தனர்).

எல்லோரும் பேசிக்கொண்டிருந்தால் நான் எப்படி பேசுவது?

Let the hon. Members please wait.

SRI R. V. SWAMINATHAN: There is no procedure . . .

SRI K. T. KOSALRAM: This matter can be referred to the appropriate authority by the Government.

MR. SPEAKER: Yes, the Government can do that.

SRI K. A. MATHIALAGAN rose . . .

MR. SPEAKER: Now, I want to know the procedure.

இங்கே சபையில் அங்கத்தினர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றிருந்தால், நாளைக்கு ஸ்பீக்கர் 500 ரூபாய் வாங்கினார் என்று சொன்னால், அதை நான் எங்கே போய் சொல்வது? யாரைப் பற்றியும் சொல்லிவிடலாம். ஆனால் அதற்குள்ள பொறுப்பை ஏற்றுக்கொண்டு பேசவேண்டும். அதோடு இதைப்பற்றி யார் விசாரிப்பது என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

[4th August 1966

*திரு. மீ. கலியாணசுந்தரம்:* இந்த சபையிலே கனம் அங்கத்தினர் அவர்கள், அவர்கள் குறிப்பிட்டதற்கு, நிரூபிக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார். குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இங்கே சொல்லி விட்டதால் மெய் என்றும் ஆகிவிடாது. அதற்காக பொய் என்று அர்த்தம் அல்ல. இதை எப்படி ருசு பண்ண முடியும்? ருசு பண்ண வேண்டும் என்றால் விசாரணை இருக்க வேண்டும். விசாரணை செய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தால், நிரூபிக்க வாய்ப்பு ஏற்படும். அரசாங்கம் பகிரங்க விசாரணை நடத்துவதற்கு முன் வரவேண்டும். இந்தச் சபை அதற்குரிய முறையில் கேட்டுக் கொள்வதற்கும் உரிமை இருக்கிறது. இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் எதிர்க் கட்சியினர் மட்டுமல்ல, காங்கிரஸ் அங்கத்தினர்களும் விசாரணை வேண்டும் என்று கோருகிறார்கள். ஆகவே, இந்தச் சபையிலிருந்தே ஒரு கமிட்டியை அமைத்து விசாரணை செய்யலாம். இதற்காக ஒரு பொறுக்குக் குழுவை அமைத்து விசாரணை செய்வது நியாயமாக இருக்கும்.

(இந்தச் சமயத்தில் கனம் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் சபைக்குள் வந்தார்கள்).

*திரு. ஆர். வி. சுவாமிநாதன்:* கனம் முதலமைச்சர் அவர்கள் வந்து விட்டார்கள். அவர்களுக்கும் இதைத் தெரிவிக்க வேண்டும்.

*கனம் சபாநாயகர்:* அதை நானே சொல்லிவிடுகிறேன்.

SRI V. KRISHNAMOORTHY: Sir, can I continue my speech?

MR. SPEAKER: Unless I ask the hon. Member to speak, he cannot continue his speech.

Now, the hon. Member Sri V. Krishnamoorthy, makes an allegation that a Government official here has arranged or received Rs. 3,000 for getting admission in the Medical College. He has specifically mentioned the name of the candidate and the officer who received or arranged that money and he is prepared to prove it. Now, what is the procedure to be adopted by this House or by the Speaker?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, so far as the Government are concerned, if a specific allegation is made here by an hon. Member, the Government will take it up and examine it. The Government will cause an enquiry to be made and take such action as they deem fit against the officer concerned.

MR. SPEAKER: Is that right?

SRI M. KALYANASUNDARAM: Sir, so far as the Opposition is concerned, it will be satisfied. It is only the hon. Member, Sri R. V. Swaminathan, who has raised the matter.

SRI R. V. SWAMINATHAN: Sir, I have got full confidence in the Hon. Chief Minister and I am satisfied with the reply given by him.



4th August 1966]

MR. SPEAKER: That is right. Now, has the hon. Member, Sri Krishnamoorthy got any other points to make.

SRI V. KRISHNAMOORTHY: Sir, there are many other instances.

MR. SPEAKER: Let the hon. Member refer to other instances.

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:* ஆகவே, இந்த அரசாங்கம், மருத்துவக் கல்லூரி விஷயத்தில் தவறாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை இன்னும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி நன்றாக விசாரணை செய்து தெரிந்து கொள்ளவேண்டுமென்றால், எத்தனை பேர்களுக்கு இவர்கள் இண்டர்வியூ கார்டு அனுப்பினார்கள். செலக்ஷன் நடந்த பிறகு எத்தனை பேர்களுக்கு இண்டர்வியூ கார்டு அனுப்பினார்கள். என்ன காரணத்திற்காக இப்படி அனுப்பினார்கள். இதைப்பற்றியெல்லாம் விவரங்களைத் தந்தால், இந்த விஷயத்தில் எத்தனை லட்சம் ரூபாய் லஞ்சமாக வாங்கப்பட்டது என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும். இதில் ஒரு கண்டிஷன் என்னவென்றால், இதைப்பற்றிய விவரங்களை எல்லாம் 'கான்ஃபிடன்ஷியலாக' வைத்து, யாருடைய அப்ளிகேஷன்கள் எல்லாம் ரிஜக்ட் செய்யப்பட்டதோ, அவர்களை எல்லாம் நாம் வரவழைக்கவேண்டும். பணத்தைக் கொடுத்து விட்டு இடம் கிடைக்காமல், திரும்பி வாங்கிக்கொண்டு போனவர்களையும் வரவழைத்துக் கேட்கவேண்டும். 500 இடங்கள் இருந்தபோது 6,000 அப்ளிகேஷன்கள் வந்தபோது நடைபெறாத கொடுமை 1,000 இடங்கள் இருந்தும், அதற்காக 4,000 அப்ளிகேஷன்கள் வந்திருக்கும் போது நடைபெற்றிருக்கிறது என்பதை நான் மிக்க மன வேதனையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கே செல்லுகிறது இந்தப் பணங்கள்? ரூ. 3,000 பிற்பட்ட வகுப்பினரிடமிருந்து செல்லுகிறது என்றால், 'பி', 'பி ப்ளஸ்'-க்கு இடம் கிடைக்கிறது; பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த 'எ', 'எ ப்ளஸ்' வாங்கியவருக்கு இடம் கிடைக்கவில்லை என்றால் லஞ்சம் இல்லாமல் வேறு என்ன அர்த்தம்? அந்தப் பணம் எங்கே போகிறது? பத்து லட்சத்தோடு பதினொரு லட்சமாக, இருபது லட்சமாகச் சேர்ந்துவிடுகிறதா? எங்கே போகிறது? இதற்கு இந்த அமைச்சரவை முழுப் பொறுப்பு ஏற்கவேண்டும். இதைப்பற்றித் தீர விசாரிக்க வேண்டுமென்றால், ரிஜக்ட் செய்யப்பட்ட எல்லா மாணவர்களையும் அழைக்க வேண்டும். அந்த மாணவர்களின் பெற்றோர்களையும் அழைக்கவேண்டும். அவர்கள் எல்லோருடைய வாக்குமூலங்களையும் ரெக்கார்டு செய்ய வேண்டும். ரெக்கார்டு செய்துவிட்டு பிறகு அவர்கள் மீது பழி வாங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, லஞ்சப் புகார் கூறியதால் சட்ட மன்ற உறுப்பினர் என்ன வேதனையை அனுபவிக்கிறார் என்று பத்திரிகையைப் பார்த்தால் தெரியும். போலீஸ் இலாகா லஞ்சம் வாங்கிக்கொண்டு ஸப்ரெஸ் செய்துவிட்டார்கள். நான் செய்த பாவம், அதைப் பற்றி விசாரணை செய்யவேண்டும் என்ற மனுவை கனம் முதல்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th August 1966

அமைச்சர் அவர்களுடைய கையில் கொடுத்த காரணத்தினால் 20 தடவைகள் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில் ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. வேறு எங்கும் நீதி தேடமுடியவில்லை என்றாலும் அங்கு நீதி கிடைத்திருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட லெட்டர், எம்.எல்.ஏ. என்டார்ஸ்மென்ட் செய்து கொடுத்தது போல அதன் மீது சீஃப் மினிஸ்டரும் தானே என்டார்ஸ்மென்ட் செய்திருக்கிறார்? அவர் மட்டும் பொறுப்பாளி இல்லாமல் போய் விடுவாரா? இந்த நிலைமையில் இந்தக் காரணங்களினாலே இந்த மந்திரி சபை 'காப்டெட் கவர்ன்மென்ட் என்றுதான் சொல்ல வேண்டும். மெடிகல் காலேஜ் அட்மிஷனை பொறுத்தவரையில் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லுவேன், இந்த அரசாங்கம் . . . . . (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. எஸ். ராமசாமி நாயுடு:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல செந்தமிழிலே அஷ்டப் பிரபந்தம் பாடினார்கள். அதிலே சொற்செறிவு இருந்தாலும் பொருட்செறிவு இல்லை. இப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்குக் காரணம் என்ன என்று இன்று சொல்லும் இந்தக் காரணங்களெல்லாம் தாற்காலிகமாக, வியாஜமாகச் சொல்லப்படும் காரணங்களே தவிர உண்மையான காரணங்கள் இல்லை என்பதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம். காங்கிரசானது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு நாட்டில் ஆட்சி செய்துவரும் நேரத்தில் பின்னால் ஆட்சி செய்ய வருகிறவர்களுக்கு ஏதாவது ஆட்சியில் புது மாதிரியாக ஒன்றைச் செய்ய ஒரு இடம் விட்டு வைக்கிறதா என்றால் இல்லை. ஆட்சியிலே மக்களுக்குச் செய்யவேண்டிய நலனிலே எந்தத் துறையிலானாலும், எல்லா விஷயங்களிலும், பூரணமாக அறிந்து, செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் காங்கிரஸ் சர்க்காரானது செய்து வருகிறதாகையாலே, ஒருகால் எதிர்பாராது இன்னொரு மாற்றுக் கட்சிக்காரர்கள் அரசாட்சிக்கு வந்தாலும் காங்கிரஸ் செய்த காரியங்களை வைத்துக்கொண்டுதான் மேற்கொண்டு அரசியல் நடத்த வேண்டுமே தவிர, புதிதாக ஒன்று செய்தோம் என்று சொல்லுவதற்கு இடம் இல்லாமல் போய்விடுமே என்ற அச்சத்தாலும், காங்கிரசானது இன்னும் பதவியில் இருந்தால், சிந்தித்து விட்டுப் போன காரியங்களைச் செய்து விட்டால் பிறகு ஒன்றும் இல்லாமல் போய்விடுமே என்ற அச்சத்தாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சபையின் முன்னால் வைத்துப் பலவாறு பேசிக்கொண்டிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் பள்ளிகள், பள்ளிகளுக்குக் கட்டடங்கள், ஏழை மாணவர்களுக்குச் சாப்பாடு, எல்லோருக்கும் புத்தகங்கள், சிலேட்டுகள், ஐந்து மைல்களுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என்ற முறையில் கனம் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் பத்து மைல்களுக்கு ஒரு கல்லூரி வைக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். 100-க்கு 90 பேர்களுக்கு இலவசமாகக் கொடுத்து பள்ளிகளையெல்லாம் நிரப்பிவிட்டார்கள்.



4th August 1966] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

விவசாயத் துறையிலே எடுத்துக்கொண்டால் சொல்லவேண்டியதில்லை. காட்டாறுகளிலும், நல்லாறுகளிலும் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கிப் பாசன வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். தண்ணீர் இல்லை, அதனால் பாசன வசதி குறைவாக இருக்கிறது. "நதியின் பிழையன்று நறும்புனலின்மையற்றே" என்ற பாட்டைத் தமிழ் படித்தவர்கள் அறிவார்கள். தண்ணீர் இல்லாதது நதியின் குற்றம் இல்லை. அக்காலப் பாண்டியன் மாதிரி மேகங்களைப் பிடித்து வந்து மழையைப் பொழிய வைப்பதற்குள்ள ஆற்றல் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இருந்து கருமேகங்களைப் பிடித்து வந்து மழையைப் பொழிய வைத்தால் நாடு செழிக்கும். அதற்கு வழி இல்லை. அது மட்டுமல்லாமல் காங்கிரஸ் சர்க்காரானது செய்துவரும் காரியங்களானது, போடும் திட்டங்களானது மிக மிக அதிகமாக இருக்கின்றன. காங்கிரசானது சமீப காலத்திலே நம் தலைவர், காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களும், நம் சர்க்காரும் யோசனை செய்து அக்காலத்தில் கிரேக்க தேசத்தில் ஸ்பார்ட்டன் ராஜாங்கம் குழந்தைகளை வளர்த்தது போல, 5 முதல் 15 வரையில் உள்ள குழந்தைகள் சர்க்கார் பொறுப்பில் இருக்க வேண்டும், அவர்களுக்கு வேண்டிய ஆடை-அணி, ஊட்ட-போஷகங்களைச் சர்க்கார் கொடுக்கும் என்று திட்டமிட்டார்கள். அந்தத் திட்டமானது எதிர்க்கட்சியினருக்கு ஒரு பெரும் சதித் திட்டமாகத் தோன்றுகிறது. அந்தத் திட்டத்தையும் சீக்கிரமாக நிறைவேற்றிவிட்டால் அப்பால் செய்வதற்கு ஒன்றும் இல்லாமல் போய் விடுமே என்று ஓரே பயம் கவ்விக்கொண்டிருக்கிறது. நல்ல முறையில் அரசாங்கத்தை நடத்தி வருவதால் காங்கிரஸானது மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. சமீபத்திலே நடந்த அரசியல் மகாநாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகமானது 13 வயதை அடைந்து விட்டது, ஆகையாலே இன்றைக்கு மேஜராகி விட்டது, மேஜரான பையனிடம் பெட்டிச் சாவியைக் கொடுத்துவிட வேண்டும் என்றெல்லாம் பல பேர்கள் பேசியதைப் பத்திரிகையில் பார்த்தேன், நேரில் கேட்கக் கிடைக்கவில்லை. வாஸ்தவம்தான்; மேஜர் ஆகும்போது பெற்ற தகப்பனிடமிருந்து, கார்டியனிடமிருந்து பெட்டிச் சாவியைப் பெற்றுக்கொள்ள, பொறுப்பைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவனாக நடந்துகொண்டிருக்கிறானா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சின்ன வயதில் ஆடிய ஆட்டத்தையும், பாடிய பாட்டையும் பார்த்துத்தான் பெற்றோர்கள் பொறுப்பை ஒப்படைப்பார்கள். சிறு வயதில் ஆடிய ஆட்டத்தைத் தெரிந்த சிலர், அவர்களுக்கு ராஜ்யம் வந்து விட்டால், பணப் பொறுப்பு வந்துவிட்டால் நாமும் அடையலாம் என்று, பல பேர்கள் ஆதரிக்கிறார்கள் என்று சொன்னால், அந்தக் காரணத்திற்காகப் பொறுப்பை ஒப்படைப்பது ஒருகாலும் முடியாத காரியம் என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். ஆகவே, மேஜர் ஆகிவிட்ட மாத்திரத்தில் தகுதியும் வந்துவிடாது. எதையும் சிந்தித்துப் பார்த்துத்தான் மேஜரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படுமே தவிர, மேஜர் ஆகிவிட்ட காரணத்தினால் மட்டும் ஒப்படைக்கப்பட மாட்டாது . . . . (மணி அடிக்கப்பட்டது).

திரு. கே. டி. கோசல்ராம்: கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் கனம் நெடுஞ்செழியன் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசினார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது என்று சொன்னவுடனே உண்மையிலேயே ஏதோ பெரிய விஷயங்களைக் கண்டுபிடித்து அதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். பின்னால், எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கிறது என்று காட்டிக்கொள்ளத்தான் கொண்டுவருகிறார்கள் என்பதைத் தீர்மானத்தைப் படித்தபிறகு புரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் என்ன நினைத்தார்களோ, ஏதோ தேர்தல் வருகிறது. இப்போது பட்ஜெட் ஸெஷன் இல்லை, பட்ஜெட் ஸெஷனுக்கு முன்னாலேயே எலெக்ஷனை ஃபேஸ் பண்ணவேண்டியிருக்கிறது. பட்ஜெட்டிலே பேசுவதைப் போலப் பேசலாம் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அதே அட்வான்டேஜை காங்கிரஸ்காரர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள் என்று அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எதைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார்களோ அது அவர்களைவிட காங்கிரஸ் சர்க்காருக்கும் அதிகப் பலன் அளித்திருக்கிறது என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

மற்றொன்று கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இப்போது சொன்னார்கள். அது யார், என்ன என்பதற்குப் போகவில்லை. டாக்டர் ஜனார்த்தனம், டி.எம்.கே. என்பவருக்கு டெலிஃபோன் மூலம் பேசிப் பணம் கொடுத்தார் என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில், கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய பதிலில் அறிய விரும்புகிறேன், ஜனார்த்தனம் அவர்கள் கமிட்டியில் அங்கத்தினராக இல்லை. கமிட்டியில் அங்கத்தினர் அல்லாத பொறுப்புள்ள மாகாண அதிகாரி மீது குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அவருக்கும் கமிட்டிக்கும் தொடர்பு இருக்கிறதா? ஒரு மாகாண அதிகாரியின் மீது ஒரு மட்டமான குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்களே? அரசாங்கம் அதை ஸ்பஷ்டமாக, நன்றாக, தெளிவாக விசாரித்து, நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் அந்த அதிகாரியைக் கண்டிக்கவேண்டும். இல்லையென்றால், இம்மாதிரி பொறுப்பு இல்லாத தன்மையில் என் போன்ற அங்கத்தினர் பேசுவது தவறு என்று நான் ஒத்துக்கொள்வது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அங்கத்தினர்களுக்குத் தண்டனை கொடுப்பது எலக்டரேட் தான். வேறு யார் தண்டனை கொடுப்பது? மக்கள்தான் தண்டனை கொடுக்க வேண்டும். தண்டனைக்கு வேறு இடமில்லை. தண்டனையை அங்குதான் தேர்தலில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

நான் வேறு ஒரு விஷயத்தைப்பற்றி சொல்வதாக நினைத்தேன். அதைச் சொல்லாமல் இருக்கிறேன். நான் ஒன்றிரண்டு விஷயத்தில் தலையிட்டேன். முதல் மந்திரி அவர்களைப் பார்த்தேன்.





எஜுகேஷன் செகரடரி அவர்களைப் பார்த்தேன். அந்த அப்ளிகேஷன் பாரத்தில் 'ஐ ஸோ அண்டு ஸோ டெக்லார் . . .' என்று இருக்கிறது. நான், இன்னார் உறுதியாகச் சொல்கிறேன், மேலே கண்ட விஷயங்கள் உண்மை என்று கூறுகிறேன் என்று கையெழுத்திடவேண்டும். மேலே 'ஐ ஸோ அண்டு ஸோ கோசல்ராம்' என்பது பில்அப் பண்ணவில்லை. இதனால் அப்ளிகேஷன் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இது மாதிரி ஒரு ஸ்காவெஞ்சர் டாட்டர், இன்னொரு நண்பர் எனக்கு வேண்டிய நண்பர் இதைப்பற்றிச் சொன்னார்கள். ஆகவே, இங்கே வந்து அதைப்பற்றிச் சொன்னேன். இம்மாதிரி ஸ்மால் டிபெக்ட்ஸ்க்காக அப்ளிகேஷன்களை ரிஜெக்ட் பண்ணக்கூடாது, ஒரு இடத்தில் பெயர் எழுதவில்லை என்றால் அதற்காக ரிஜெக்ட் செய்யக்கூடாது, என்று சொன்னேன். இது மாதிரி 150 அப்ளிகேஷன்கள் இருந்தன. இப்படி இருக்கும் பொழுது இது ரொம்பத் தவறு, ஒரு ஸ்காவெஞ்சர் டாட்டர் அப்ளிகேஷனை இதற்காக ரிஜெக்ட் செய்யக்கூடாது என்று எடுத்துச் சொன்னேன். இந்த மாதிரி பாரத்தில் ஒரு இடத்தில் பில்அப் பண்ணவில்லை என்பதற்காக, ஸ்மால் டிபெக்ட்ஸ்க்காக அப்ளிகேஷனை ரிஜெக்ட் பண்ணக்கூடாது என்று சர்க்கார் உத்தரவிட வேண்டும், அவர்களையும் இண்டர்வியூக்கு அழைக்க வேண்டும் என்று முதல் மந்திரி அவர்களிடம் பார்த்துச் சொன்னேன், காரியதரிசியிடமும் பார்த்துச் சொன்னேன். எனக்குத் தெரியும். உடனே அரசாங்கம் மெமோ அனுப்பினார்கள். இம்மாதிரி ஸ்மால் டிபெக்ட்ஸ்க்காக அப்ளிகேஷன்களைத் தள்ளிவிடக்கூடாது என்று உத்தரவு அனுப்பினார்கள். எனக்குத் தெரிந்த விஷயம் இது. நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொன்னாரே, அதற்காக நான் இதைச் சொல்லிக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். 150 அப்ளிகேஷன்கள் சம்பந்தப்பட்டவரையில் நான் சொன்னபிறகு மறுபடியும் இண்டர்வியூவுக்கு கார்டு அனுப்பியிருக்கிறார்கள். நான் சொன்னது இரண்டு பேர்களைப்பற்றி. பின்னால் இந்த 150 பேர்களுக்கும் இண்டர்வியூ கார்டு வந்திருக்கிறது என்பது எனக்குத் தெரிந்த உண்மை என்பதை இந்தச் சபை முன்பு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

ரயிலில் போகிறவர்கள் ரயில் பெட்டிக்குள் உட்கார்ந்து கொண்டே 'ரயிலே ஓடு, ரயிலே ஓடு' என்று சொல்லிக்கொண்டு தான் சொல்லிக்கொண்டிருப்பதால்தான் ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லுகிற மாதிரித்தான் இவர்கள் பேசுவது இருக்கிறது. அந்த ரயிலை என்ஜின் இழுக்கிறது, ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது. உள்ளே உட்கார்ந்திருக்கிற ஆள் 'ரயிலே ஓடு ஓடு' என்று சொல்வதினாலா ரயில் ஓடுகிறது? அந்த மாதிரி சேலம் பிராஜக்ட் சம்பந்தமாகப் பரிசீலனை செய்வதற்கு நமது எதிர்க்கட்சித் தலைவர் கனம் திரு. நெடுஞ்செழியன், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள், நான் ஆகியோர்கள் கொண்ட ஒரு கமிட்டி போடப்பட்டது. அரசாங்கம் எவ்வளவு சிரத்தையாக இருந்து வேலை செய்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் துருவித் துருவிப் பார்த்தோம்.

[திரு. கே. டி. கோசல்ராம்] [4th August 1966

1960-ம் வருஷத்தில் எடுக்கப்பட்ட ஸ்கீம் இது. வெஸ்டு ஜெர்மனியிலிருந்து நிபுணர்கள் வந்தார்கள், சோதனை செய்தார்கள். சோதனை செய்ததற்குப் பிறகு ரிப்போர்ட்டை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினார்கள். தஸ்தூர் கம்பெனி பின்னால் ரிப்போர்ட் அனுப்பியது. காலம் சென்ற நமது பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்களும், திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்களும் அப்பொழுதிருந்த நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் அவர்களும் இது எடுத்துக்கொள்ளப்படவேண்டிய திட்டம் என்று முடிவு செய்தார்கள். அரசாங்கம் இதற்காக 24,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யத் தொடங்கியது அல்லது நோடிபிகேஷன் செய்தார்கள். அந்த வேலையை 1964-ல் செய்தார்கள். 1965-ம் வருஷத்தில் ஜப்பான் நிபுணர்கள் வந்தார்கள். நமது எதிர்க்கட்சி அங்கத்தினர்களுடைய பழைய திராவிட நாட்டுக் கொள்கைப்படி திராவிட நாட்டின் ஒரு பகுதியான ஆந்திராவைச் சேர்ந்த திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் அந்த இலாகாவுக்கு வந்தார். திராவிட நாடாகிய என்னுடைய பகுதிக்கு வேண்டும் என்று அவர் சொன்னார். நாம் நமது பகுதிக்கு வேண்டும் என்று சொன்னோம். அதிலே நாங்கள் துருவித் துருவிப் பார்த்தோம். இங்கே திரு. கலியாணசுந்தரம் அவர்கள் இருக்கிறார்கள். திரு. நெடுஞ்செழியன் அவர்கள் இப்பொழுது இங்கு இல்லை. பிற அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். நான், திரு. நெடுஞ்செழியன் அவர்கள், திரு. கலியாணசுந்தரம் அவர்கள், காலம் சென்ற திரு. முருகப்ப செட்டியார் அவர்கள் எல்லோரும் சேர்ந்து இந்த அரசாங்கம் என்னவெல்லாம் செய்திருக்கிறது என்று துருவிப் பார்த்தோம். ஜப்பான் நிபுணர்கள் வந்தார்கள். அவர்களுக்கு பல பார்ட்டிகள் கொடுத்தோம். மெமோராண்டம் கொடுத்தோம். அரசாங்கக் காரியதரிசி எங்களுக்கு வேண்டிய புள்ளிவிவரங்களையெல்லாம், டீடைல்ஸ் கொடுத்தார். அத்தனை விவரங்களும் எங்களுக்குக் கிடைத்தன. அதிலே நான் கண்டுகொண்ட உண்மை என்னவென்றால், அரசாங்கம் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது, எவ்வளவோ துரிதமாக எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் இதில் கலந்துகொண்டார்கள், தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களும் கலந்துகொண்டார்கள் என்பதையெல்லாம் பார்த்தோம். கடைசியாக நண்பர் திரு. சஞ்சீவி ரெட்டி, திராவிட நாட்டின் ஒரு பகுதியில் இருக்கிற திரு. சஞ்சீவி ரெட்டி, அவர்கள் வந்தபிறகு, நமக்குக் கிட்டாதோ என்ற சந்தேகம் வந்தது. அதன் பேரில் நாங்கள் சாலஞ்சு செய்தோம். முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் அவர்களும், தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களும் நாங்களே இதற்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சாலஞ்சு செய்தார்கள். இதை விடமாட்டோம் என்று சொன்னார்கள். கடைசியாகத் தமிழகத்திலுள்ள பெரும் தலைவர்கள் அத்தனை பேர்களும் சேர்ந்து இரும்பு ஆலை இங்கு கொண்டுவரப்போவது நிச்சயம் என்று முடிவு கட்டி, அதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து, இன்னும் ஒரு வருஷத்திற்குள் அங்கே



4th August 1966] [திரு. கே. டி. கோசல்ராம்]

வேலை ஆரம்பிக்கப்போகிறார்கள். இதையெல்லாம் தெரிந்துகொண்டு, 'நான் சொன்னதினால்தான் ரயில் ஓடுகிறது' என்று நண்பர்களே, நீங்கள் நினைக்கிறீர்களே அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ரயில் போய்க்கொண்டுதான் இருக்கிறது. திரு. பக்தவத்சலத்தின் ரயிலை நிறுத்த முடியாது. ரயில் போய்க்கொண்டுதான் இருக்கும். சேலம் உருக்கு ஆலை வந்தே தீரும். ஆனால் நீங்கள் சொன்னதினால் மட்டும் வந்துவிடப்போவதில்லை. அதைத் தேர்தலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ள முடியாது. புள்ளி விவரங்கள் இருக்கின்றன. புள்ளிவிவரங்களை மக்கள் மத்தியிலே தருவதற்கு முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

'டீவால்யுவேஷன்' பற்றிச் சொன்னார்கள் எனக்கு எதிர்க்கட்சியினரின் கொள்கை புரியவில்லை. இந்த நாட்டின் பிரதம மந்திரி 'இந்தத் தேசம்தான் எனக்குப் பெரியது, கட்சி பெரியது அல்ல' என்று சொல்லியிருப்பது சபை அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். கட்சியிலுள்ளவர்கள், என் போன்றவர்கள், சொல்லலாம், இதை இப்பொழுது கொண்டுவந்திருக்கவேண்டியதில்லை, தேர்தலுக்குப் பின்னால் கொண்டுவந்திருக்கலாம் என்று நினைத்த காங்கிரஸ்காரர்களும் உண்டு. நினைக்கிறவர்கள் உண்டு. இல்லை என்று சொல்லவில்லை. ஒத்துக்கொள்கிறேன். 'டீவால்யுவேஷன்' பற்றி எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மக்களிடையே பேசுகிறார்கள், அவர்கள் மனதைக் குழப்பிவிடுகிறார்கள். ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டது, ரூபாயின் மதிப்பு 50 பைசே, 60 பைசே ஆகிவிட்டது என்று பேசப்படுகிறது. இதனால் மக்கள் குழப்பம் அடைகிறார்கள். அதெல்லாம் அன்னிய நாட்டுக்கு நமது நாட்டுக்கு இல்லை. பணத்திற்கு மரியாதை போய்விட்டது என்றெல்லாம் பேசி மக்களிடையே குழப்பமான நிலைமையை உண்டுபண்ணுகிறார்கள். இது நாட்டுக்கு நல்லதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய நாட்டில் ரூபாயின் மதிப்புக் குறையவில்லை. அன்னிய நாட்டுச் செலாவணிதான் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உள்நாட்டில் எந்தவிதமான பாதிப்பும் கிடையாது. ஒரு ரூபாய். ஒரு ரூபாய் தான், ரூ. 5, ரூபாய் 5 தான். 'டி-மானிடைஸேஷன்', இல்லை, 'டீவால்யுவேஷன்' தான் பண்ணியிருக்கிறார்கள். பாரின் எக்ஸேஞ்சுக்காகப் பண்ணியிருக்கிறோம். இதைப்பற்றித் தவறுதலாக எடுத்துக் கூறி நாட்டு மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள் எதிர்க்கட்சியினர். தேசத்தின் நலம்தான் முக்கியம். கட்சியின் நலம் முக்கியமல்ல, டீவால்யுவேஷன் செய்ததால் எலக்ஷனில் ஜெயிக்காதபோதிலும் பரவாயில்லை என்று நாட்டின் பிரதம மந்திரி அவர்களே கூறியிருக்கிறார்கள்.

இதற்குச் சப்பைக்கட்டுக் கட்டுகிற மாதிரி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெயரிலுள்ள இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு திரு. சா. கணேசன் அவர்களும், திரு கலியாணசுந்தரம் அவர்களும் எழுந்திருந்தார்கள். இந்த மூன்று பேர்களுக்கும் என்ன ஒற்றுமை இருக்கிறது என்று

கேட்கிறேன். அமெரிக்காவின் செல்வாக்கு இதிலே கிடையாது என்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார் சுதந்திராக் கட்சித் தலைவர். நான் கூட தனிப்பட்ட முறையில் சொல்வேன், அமெரிக்கச் செல்வாக்கு இண்டைரக்டாக வருகிறது என்று சொல்வேன். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் நிச்சயம் அமெரிக்காவுக்கு அடிமையாகப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். டிவால்யுவேஷன் பற்றி ஒரு பெரிய குற்றச்சாட்டை வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் போகவேண்டும் என்று சொல்கிறார்களே. தேசம்தான் எனக்குப் பெரியது, கட்சி எனக்குப் பெரியது இல்லை என்று பிரதம மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு மக்களிடத்திலே இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லிக்கொள்ள முடியும், தைரியம் இருக்கிறது. அந்த தைரியத்தை வைத்துத்தான் தேசம்தான் பெரியது, தேச மக்களின் நலம்தான் பெரியது என்று சொல்லுகிறோம். இந்த ஏற்பாட்டை 'எக்ஸ்ப்ளாயிட்' பண்ணுவது அரசியல் கட்சிகளின் இயல்பு. யாரும் இதை விடமாட்டார்கள். ஒன்றுமே இல்லாமல் செய்யும்பொழுது, கொஞ்சம் கிடைத்தால் விடுவார்களா? என்ன வந்தாலும் அவர்களுக்கு ஒன்றுமே கிடையாது. நேரடியாகத் தங்கள் கட்சிக்கு என்ன கொள்கை என்று திராவிட முன்னேற்றக்
1.00 p.m. கழகத்தினர் சொல்லவே மாட்டார்கள். காரிகாரிகளாக இவற்றையெல்லாம் செய்யவில்லை அரசாங்கம் என்று சொல்லி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்தால், அது அவசியம் தான். அம்மாதிரிச் செய்து அட்மினிஸ்டிரேஷனை டோன் அப் பண்ணவேண்டுவது அவசியம் தான். அதற்காகத்தான் எதிர்க்கட்சி இருக்கிறது. அதைச் செய்யவில்லை என்றால் எதிர்க் கட்சிக்கு அவசியம் இல்லை. பஞ்சாபில் நடந்த மாதிரி நடக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களா? அங்கே யோக்கியதை இல்லாததனால், கவர்னர் ஆட்சி வந்தது. ரகஸ்யமாக கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் கனம் முதல் அமைச்சரிடம் அல்லது உள்துறை அமைச்சரிடம் அல்லது உணவு அமைச்சரிடம் சென்று, இந்த ஊரில் இன்னார் சேர்த்து வைத்துக்கொண்டு கொள்ளை அடிக்கிறான் என்று சொல்லி, அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையா? கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி தைரியமாகச் சொன்னார்கள், சரியோ தப்போ அது வேறு விஷயம், ஏதோ சமாசாரத்தைச் சொன்னார்கள். அம்மாதிரி யாராவது அமைச்சர்களிடம் இந்த இடத்தில் ஹோர்டு பண்ணிவைத்திருக்கிறார்கள், இந்த இடத்தில் கல்லைச் சேர்க்கிறார்கள். மண்ணைச் சேர்க்கிறார்கள் என்று விவரம் கொடுத்தார்களா? ஏதோ அப்படிக் குறிப்பிட்ட சமாசாரத்தைச் சொல்லி, அமைச்சர்கள் சும்மா இருந்து விட்டார்களா? ஏதோ புழுதியைக் கிளப்பி விடலாம் என்று செய்வது சரியாகாது. அதற்கு அர்த்தமே இல்லை. நண்பர் திரு. கலியாணசுந்தரம், இந்த மாதிரி சர்க்கார் வேண்டும் என்று சொல்லுகிறார். நாங்கள் டெமாக்ரடிக் அடிப்படையில் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். சுதந்திராக் கட்சி எல்லாவற்றையும் கட்டு அவிழ்த்து விட்டு விடவேண்டும் என்கிறார்கள். இவர்களுக்கு என்ன கொள்கை இருக்கிறது? சுதந்திராக் கட்சியோடு போக,



கம்யூனிஸ்டோடு போக இவர்களுக்கு என்ன இருக்கிறது? டெமாக்ரடிக் சர்க்கார் என்றால், அபோசிஷன் இல்லாமல் இயங்கமுடியாது. டெமாக்ரஸி ஃபங்க்ஷன் பண்ண வேண்டும் என்றால், சரியான அபோசிஷன் வேண்டும். இங்கிலாந்தில், லேபர் பார்ட்டி இருக்கிறது; கன்சர்வேடிவ் பார்ட்டி இருக்கிறது. அவர்கள் "This is my scheme, this is my policy" இதை "carry out" செய்யவேண்டும் என்கிறார்கள். ஆட்டு மயிரை மட்டும் விற்றுக் கொண்டிருந்தால், ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் வந்துவிடுமா? அதைச் சர்க்கார் கொள்கையாகக் கொள்ள முடியுமா? ஆகவே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது என்றால், ஸப்ஸ்டான்ஷியலாகச் சொல்லுவதற்கு, என்ன செய்ய வேண்டும் என்று மாற்றலாகச் சொன்னால் பொதுமக்கள் புரிந்து கொள்ளுவார்கள். அப்படி ஒன்றையும் காணோமே. வெள்ளைக்காரன் இருந்த காலத்திலே, ஜஸ்டிஸ் பார்ட்டி இருந்தது. இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூதாதையார் கட்சி, அந்தக் கட்சி அதிகாரத்தில் இருந்தது. வெள்ளைக்காரத் துரை இருந்தார்கள். நண்பர் திரு. குஞ்சன் நாடார் குறிப்பிட்டது போல, துரைகள் இருந்தார்கள். அவர்களை எதிர்த்து எங்களுக்கு ஓட்டுப் போட்டார்களா இல்லையா? அதிகாரத்திற்குப் பயந்து கொண்டா ஓட்டுப் போடாமல் இருந்தார்கள். ஆகவே, அதிகாரத்திற்குப் பயந்து கொண்டு யாரும் இருக்கமாட்டார்கள். அந்த வித ட்ரெடிஷன் கிடையாது. அதிகாரத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் என்று சொல்ல வேண்டும். கொள்கையற்ற நீங்கள் ஒழுங்காக எதைச் செய்வீர்கள்? நண்பர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் சொன்னது போல, நெஞ்சுரம் படைத்த முதல் அமைச்சருடைய சர்க்காருக்கு விரோதமாகச் செயல்படுவதன் மூலம் பெருத்த பிரயோசனம் அடைந்துவிட முடியாது என்று சொல்லி, என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து, என் பேச்சைத் தொடங்குகிறேன். கடந்த 18 ஆண்டுக் காலமாகக் கலப்படப் பொருளாதாரத்தை ஆதரித்து, நாடு சீரடைந்து விட்டது, நாட்டின் நன்மையே முக்கியம், கட்சியின் நன்மையல்ல என்று பிரதமர் சொல்லிவிட்டார்கள் என்றெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அதுவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஒரு ஆதாரம் ஆகும். 18 ஆண்டுக் கால ஆட்சிக்குப் பிறகு நாட்டின் நிலைமை கெட்டு நாணய மதிப்பைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்திருக்கிறது. இதைப் பகிரங்கமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆட்சி செய்ய லாயக்கற்றவர்கள் என்பதற்கு இந்த ஒரு ஆதாரமே போதும். கடன் அதிகமாக வாங்கவில்லையென்றால், அதிகமாகக் கடன் கிடைக்கவில்லை. வெளிநாட்டவர்கள் முதலீடு செய்யப் பயப்படுகிறார்கள். ஆகவே நாணயத்தின் மதிப்பை குறைக்கிறோம் என்கிறார்கள். அவ்விதம், நீங்கள் இல்லை, காங்கிரஸ் தலைமை இடம் எடுத்துக் கூறியதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாட்டுக்கு நாடு போய் பிச்சை எடுக்கும் நிலையில் இருக்கிறீர்கள். தலைவர்

அவர்களே, நாட்டில் இத்தனையும் நடந்தபிறகு, ஆட்சியில் இருப்பவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரக் கூடாது என்கிறார்கள்.

எதிர்க் கட்சிக்குக் கொள்கையில்லை என்று சொன்னார்கள். ஆளும் கட்சி நாட்டு மக்களுக்குக் கொடுத்த உறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. 1967-ல் எதிர்க்கட்சி தன் நல்ல கொள்கைகளைக் கொண்டுவந்துவிடுமோ என்று ஆளும் கட்சி நினைக்கின்றது. அவர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை என்கிற குற்றச்சாட்டைத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். எதிர்க்கட்சியை அடக்க வேண்டும், ஒடுக்க வேண்டும், மிதிக்க வேண்டும் என்பதே அவர்கள் கொள்கை, அதை நன்றாக, தான் மந்திரியாக இருந்த அனுபவத்தை வைத்து கனம் அங்கத்தினர் திரு. சிதம்பரநாத நாடார் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி, பாராட்டுத் தெரிவிக்கிறேன். அடித்து, மிதித்து, அடக்கு முறையால் ஒடுக்கலாம் என்று காங்கிரஸ் கட்சி நினைக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள் கனம் அங்கத்தினர் திரு. சிதம்பரநாத நாடார். அவர்களுக்கு நன்றி. நம்முடைய கனம் முதல் அமைச்சருடைய கொள்கை நமக்கு நன்றாகத் தெரியும். டெல்லிக்குப் போனார்கள். அங்கே என்ன செய்தார்கள்? இன்றைக்கு இருக்கும் சட்டங்களெல்லாம் போதாது, வெள்ளைக்காரன் காலத்தில் போட்ட சட்டங்கள், கிரிமினல் திருத்தச் சட்டம் முதலிய சட்டங்களெல்லாம் போதாது, பாதுகாப்புச் சட்டமும் போதாது. ஆகவே, புதிதாக, சட்டங்களை உருவாக்கவேண்டும், சென்னை மாநிலத்தில் நிறைவேற்ற எனக்கு அதிகாரம் தர வேண்டும் என்று கேட்ட அதிகார ஆசையை கனம் அங்கத்தினர் திரு. சிதம்பரநாத நாடார் எடுத்துக் காட்டினார்கள். நன்றி. எதற்காக அந்த அதிகாரம் தேவை? எதிர்க் கட்சியை ஒடுக்கத்தானே? அல்லது மக்களுக்குத் துரோகம் செய்பவர்களைக் கண்டு பிடிக்கவா இந்த அதிகாரம் பயன்படும்? அப்படிக் கேட்டிருந்தால் சந்தோஷமாகக் கொடுக்கலாம். கள்ள மார்க்கெட்டுக்காரர்களை முச்சந்தியில் நிறுத்திக் கடுமையான நடவடிக்கை எடுக்கப் போகிறார்களா அந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு? நம் அமைச்சரிடம் அரிசி விலை ஏறிவிட்டது, இட்டிலி விலையை ஓட்டலில் ஏற்றிவிட்டார்கள் என்றால், என்ன சொல்லுகிறார்கள்? நான் கடை திறப்பேன் என்கிறார்கள். அரிசி எதற்கு, வாழைப் பழத்தில் சத்து இருக்கிறது என்று நிபுணர் சொன்னார் என்கிறார்கள். எந்தப்பொருளின் விலையை இவர்களால் குறைக்க முடிந்தது? அமைச்சர் வியாபாரிகள் தலைமையில் பேசுகிறார்கள்.

வியாபாரிகள் சங்கத் தலைவர் என்ன சொல்லுகிறார்? முதல் அமைச்சரை வைத்துக் கொண்டே சொல்லுகிறார், தேர்தல் வருகிறது, தேர்தலிலே நாங்கள் ஈடுபடுவோம், மக்களுடைய ஆதரவு பெறுவோம் என்கிறார். அவருக்கு முதல் அமைச்சர் என்ன பரிசு கொடுக்கிறார்? ஒரு நினைவு மலர் பரிசு கொடுக்கிறார். பதுக்கல்காரர்களைச் சொன்னால், மார்ஜினல் சர்ப்ளஸ் என்கிறார்கள். விநியோக முறையால்தான் நாட்டில் உணவுப் பஞ்சம் என்கிறார்கள். இந்த வியாபாரிகள் சங்கத்திற்கு முதல் அமைச்சர் நினைவு





மலர் பரிசு கொடுக்கிறார். யார் பதுக்கல் செய்கிறார்கள், யார் தவறு செய்கிறார்கள் என்று கண்டு பிடித்துத் தண்டனை கொடுக்க மனமே வரவில்லை. சென்னை அரசாங்கம்தான் ஊழல் இல்லாத அரசாங்கம் என்று பாராட்டுப் பெற்றதாக இங்கே சொன்னார்கள் காங்கிரஸ் கட்சியினுடைய முக்கிய தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், "சென்னை அரசாங்கமும் ஊழல் நிறைந்த அரசாங்கம்தான்" என்று . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைக் கனம் அங்கத்தினர் அவர்கள் நேரில் பார்த்துப் பேசிக் கொண்டாரா? 'ஊழல் நிறைந்த அரசாங்கம் சென்னை' என்று திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சொன்னார் என்றால், அது எப்படிக் கனம் அங்கத்தினருக்குத் தெரியும்? கனம் அங்கத்தினர் பொறுப்போடு சொல்லுகிறாரா? பொறுப்போடு இதைச் சொல்லுவதாகச் சொன்னால், அதற்குமேலே நான் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளுவேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதை மறுபடியும் திருப்பிச் சொல்லவேண்டும் என்று நான் அவரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. செ. மாதவன்:** பொறுப்போடுதான் நான் சொல்லுகிறேன். எங்களுடைய நாவலர் அவர்கள் சந்தித்துப் பேசியதற்குப் பின்னால், இந்த ஆட்சி குறைபாடுள்ளது என்று எடுத்துச் சொல்லியதற்குப் பின்னால்தான் சொல்லியிருக்கிறார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** "சென்னை அரசாங்கம் ஊழல் நிறைந்த அரசாங்கம்" என்று கனம் நாவலர் அவர்களிடமோ அல்லது கனம் அங்கத்தினர் அவர்களிடமோ அல்லது வேறு யாரிடமோ சென்னையில் அவர்கள் சொன்னார்கள் என்று இப்பொழுது மீண்டும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதை அவர்கள் பொறுப்போடு சொல்வதாகச் சொன்னால், நான் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களையே கேட்க முடியும். திரு. மொரார்ஜி தேசாய் அவ்வாறு சொன்னதாகக் கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். அவ்வாறு சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் பேசவேண்டும் என்றால், இன்னொரு பெரியவருடைய பெயரை இப்படி உபயோகித்துப் பேசுவது நேர்மையில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைப் பத்திரிகை நிருபர்கள் கண்டு, "மற்ற மாநிலங்களைவிட இந்த மாநில நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது என்று கூறுகிறார்களே, தங்களுடைய கருத்து என்ன?" என்று கேட்டபோது, "என்னிடத்தில் பல தரப்புகளிலிருந்து வந்து கூறப்பட்டிருக்கிற சாட்சியங்களிலிருந்து, இது குறைபாடே அற்ற அரசாங்கம் என்று சொல்லுவதற்கில்லை, இங்கும் குறைபாடுகள் இருக்கின்றன" என்ற கருத்தைத் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் வெளியிட்டதாகச் செய்தித் தாள்களில் வந்திருக்கின்றன.

[4th August 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "ஊழல் நிறைந்த அரசாங்கம்" என்று அவர் எங்கே சொன்னார்கள்?

**திரு. செ. மாதவன் :** "ஊழல்கள்" என்பதற்குப் பதிலாகக் "குறைபாடுகள்" என்று ஒத்துக்கொண்டால் சரி.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "ஊழல் நிறைந்த அரசாங்கம்" என்று திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சொன்னதாகக் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அதைத் தான் நான் ஆட்சேபிக்கிறேன். அவ்வாறு அவர் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. இப்பொழுதும் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அதை ஊர்ஜிதப்படுத்தவில்லை.

**திரு. செ. மாதவன் :** "குறைபாடுள்ள அரசாங்கம்" என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டால், அதற்காக நன்றி. இது குறைபாடுள்ள அரசாங்கம், ஆகவே, பதவியில் இருப்பதற்கு லாயக்கற்றது என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பேசத் தெரியாமல் பேசுவதில் பிரயோஜனம் இல்லை. இது வெட்கப்பட வேண்டிய விஷயம். முதலிலே, குற்றச்சாட்டு என்று சொல்லுவது. பெரியவருடைய வார்த்தையாகச் சொல்லுவது. அதற்குப் பிறகு ஏதாவது சொல்லுவது. "ஊழல்" என்று சொல்லுவது. "திறமையற்றது" என்று சொல்லுவது. இப்படி ஏதாவது சொல்லிக்கொண்டே போனால் என்ன அர்த்தம்? கனம் அங்கத்தினர் பெரிய வழக்கறிஞர் ரொம்பத் திறமையானவர் என்று நினைத்தேன். இப்பொழுது திறமை தெரிந்துவிட்டது.

**திரு. செ. மாதவன் :** "ஊழல் நிறைந்த அரசாங்கம்" என்ற குற்றச்சாட்டை ஒத்துக்கொள்ளாவிட்டாலும், திரு. மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டபடி "குறைபாடுள்ள அரசாங்கம்" என்பதை முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்களா? அப்படிப் பட்ட குறைபாடுள்ள ஆட்சியை நீக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

நாணய மாற்றுக் குறைப்பைப்பற்றி இங்கே பேசினார்கள். சென்ற பட்ஜெட் தொடர்க் கூட்டத்திலும், அதற்கு முன்னால் நடைபெற்ற கூட்டத்திலும், நாணயத்தின் மாற்றுக் குறைந்துவிட்டது, ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டது என்று இங்கே கருத்துச் சொல்லும்போது, முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் சிரித்தார்கள். அன்றைக்குச் சிரித்த சிரிப்பு இன்றைக்கு என்ன ஆனது? தொழில் அமைச்சர் அவர்கள் அதே கருத்தில் இருக்கிறார்கள். நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது சரியல்ல என்கிறார். ஆனால், அதற்கு மாறாக முதல் அமைச்சர் அவர்கள் நாணய மதிப்பைக் குறைத்தது சரி என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அன்று சிரித்தார்கள்; மறுத்தார்கள். நாணய மதிப்பு இன்று நாட்டில் குறையவில்லையா? ஏன் அப்படிப்பட்ட குழப்பம் ஏற்படுகிறது இந்த நாட்டில் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.



4th August 1966] [திரு. செ. மாதவன்]

கள்ளச் சந்தை வியாபாரத்தைத் தடுக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? கள்ளச் சந்தை இல்லை என்று சொல்லவில்லை. இருக்கிறது என்றால், என்ன விடை அளித்தார்கள்? இதை நன்றாக விளக்கவில்லை. சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்ததுதான் காங்கிரஸ் கட்சியினுடைய லட்சணம். தனிப்பட்ட அரசியல் கட்சிக்காகத் தனிப்பட்ட அரசியல் கட்சியைச் சார்ந்த சில பேர்களுக்காக இந்த நாட்டினுடைய அரசாங்கம் செயல் படுத்தப்படுகிறது. ஆகவே, இது ஊழல் நிறைந்த அரசாங்கம் என்பது என்னுடைய அடுத்த குற்றச்சாட்டு ஆகும்.

மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷனிலே இந்த அமைச்சரவை தலையிடவில்லையா? இங்கே கேட்ட கேள்விக்கு ஒரு சமயம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம், வழக்குப் போட்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். எத்தனை ஆண்டுக் காலம் ஆனது? இதுவரை அந்த வழக்கு என்ன ஆனது? மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் மிக மிக முக்கிய அதிகாரி வேலை நீக்கம் செய்யப் பட்டார். அவர் மீது இதுவரை எந்த வழக்கும் போடவில்லை? யாருடைய தலையீட்டினால் வழக்குப் போடவில்லை? இந்தச் சட்ட மன்றத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. "ஊழல் இருக்கிறது, நடவடிக்கை எடுக்கிறோம்" என்று ஐந்தாண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டது. இன்னும் நடவடிக்கை எடுக்காததற்கு யார் பொறுப்பு? ஊழல் நடைபெறவில்லையா? ரிட்டன் டெஸ்ட்-டில் 92-வது ராங்கில் இருந்த ஒருவரை 'ஓரல் டெஸ்ட்-டில் 3-வது ராங்கில் வைத்து, டெபுடி கலெக்டர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறார். மறுக்க முடியுமா? மறுக்க வேண்டுமானால், அந்த லிஸ்டை மேசையின் மீது கொண்டுவந்து வைக்க முடியுமா? அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் தயாரா? பப்ளிக் சர்விஸ் கமிஷனிலே எவ்வளவு பெரிய ஊழல் நடைபெற்றிருக்கிறது? ஒரு செக்ரடரி சஸ்பெண்டு பண்ணப்பட்டார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒரு இலாகாவினுடைய சூபரின்டென்டென்ட் சஸ்பெண்டு செய்யப்பட்டார். மீண்டும் வேலைக்குச் சேர்க்கப் பட்டார். அவர் மீது என்ன வழக்குப் போடப்பட்டது? இங்கே ஆட்சியிலே உள்ளவர்கள் அங்கே தலையிடுகிறார்கள். குறிப்பாகச் சொல்லுகிறேன். ஒரு குறிப்பிட்ட நபருக்கு வேலை கொடுப்பதற்காக ஒரு சட்டத்தையே மாற்றியமைக்க மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷன் முன் வந்தது. 50 சத விகிதம் வந்தால்தான் இன்டர்வ்யூவுக்கு வரலாம் என்று இருந்ததை 42 சதவிகிதம் என்று குறைத்து இருக்கிறார்கள். எப்படிச் சட்டம் திடீர் திடீர் என்று மாறுகிறது? யாருக்கோ வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காக ரிட்டன் டெஸ்ட் பேப்பரை யார் திருத்துகிறார்களோ அவர்களிடத்தில் சொல்லி மார்க் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. இது உண்மையில்லை என்று மறுக்கவேண்டுமானால், அத்தனை லிஸ்டையும் கொண்டுவாருங்கள். ரிட்டன் டெஸ்டில் மார்க் குறைவு என்பதற்காக ஓரல் டெஸ்டில் மார்க் கொடுக்க முடியுமா? இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்க வேண்டாமா? ஆட்சிதானே

பொறுப்பு? யாரோ அதிகாரி செய்துவிடுகிறார் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளுவதற்கில்லை, முழுக்க முழுக்க இந்த ஆட்சி தான் பொறுப்பு என்பதை நான் எடுத்துக் காண்பிக்க விரும்பு கிறேன்.

நகராட்சிக் கலைப்பைப்பற்றி எடுத்துக்கொள்வோம். மாநகராட்சிச் சட்டம், மாவட்ட நகராட்சிச் சட்டம் ஆகியவை இருக்கின்றன. அந்தச் சட்டங்களில் 'ஸுபர்ஸீடு' செய்வதற்கு முன்னால் கடைப் பிடிக்க வேண்டிய முறைகள்பற்றி எத்தனையோ ப்ரொவிஷன்ஸ் இருக்கின்றன. அந்த ப்ரொவிஷன்களை இந்த சர்க்கார் பயன்படுத்தியிருக்கிறதா? திருத்துவதற்கு உரிமை உண்டு. திருத்துவதற்கு முயன்றதா? "கூட்டம் போடவில்லை, ஆகவே கலைக்கின்றோம்" என்று சொல்லலாமா? ஒரு பொறுப்புள்ள சர்க்கார், ஜனநாயக ஆட்சியை விரும்பும் சர்க்கார் ஜனநாயக முறைக்கு முரணாகப் போகலாமா? சட்டத்திலே கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தினார்களா? சாதாரணமாக, கூட்டம் போடவில்லை என்றால், அதற்குக் கலைப்பது தானா நடவடிக்கை? தூத்துக்குடி நகராட்சியிலே குழப்பம் நடந்தது. மோசடி செய்து விட்டு, இரண்டு நீதி மன்றங்களிலும் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு, ஓராண்டு தண்டனை கூடப் பெற்ற ஒருவர் ரெவினியூ அமைச்சர் பக்கத்தில் உலாத்துகிறார்; உள்துறை அமைச்சருடைய காரில் சுற்றுலா வருகிறார். அந்தப் பஞ்சாயத்து யூனியன் கலைக்கப்படவில்லை. ஏதோ சில பஞ்சாயத்து யூனியன்கள் கலைக்கப்படவில்லையா? என்று கேட்டார்கள். அதற்குக் காரணம் என்ன? எருமைப்பட்டியில் காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே மோதல். இரு காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளேயே மோதல். எந்தக் காங்கிரஸ்காரருக்கு இந்த அமைச்சரவையில் செல்வாக்கு இருக்கிறதோ அவர் அதைக் கலைக்கச் செய்தார். ஜனநாயக முறைப்படி கலைக்கவில்லை. மதுரை நகராட்சியில் நடந்ததென்ன?" சொந்த புத்தியும் கிடையாது, சொல் புத்தியும் கிடையாது" என்று அம்மையார் கனம் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். யாருக்குச் சொந்த புத்தி கிடையாது? நெல்லை மாநகராட்சி அங்கத்தினர்களுக்கா? மதுரை நகராட்சியில் செருப்பு வீசி விளையாடிய காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கா? பெண் அங்கத்தினர் என்பதால் மறந்துவிட்டார் என்று நம்புகிறேன். நடக்கவில்லையா? தூத்துக்குடி நகராட்சியில் அத்தனை பேர்களும் காங்கிரஸ் கட்சியினுடைய ஆளுகைக்கு உட்பட்டவர்கள். அங்கே என்ன நடந்தது? செயலற்ற தன்மை அங்கே உருவாகவில்லையா? அது ஏன் கலைக்கப்படவில்லை? அதற்காக என்ன நடவடிக்கை எடுத்தது இந்த அரசு? ஸ்தல ஸ்தாபன அமைச்சர் நெல்லையில் இருக்கிறார், அவருடைய விருப்பு வெறுப்பு ஒருகால் அதற்குக் காரணம் என்று சொல்ல முடியும் அல்லவா? சேலம் நகர சபையைப்பற்றி ஒரு ரிபோர்ட் வந்தது, முதலமைச்சருக்கு. அதிலும் பல குற்றச்சாட்டுகள் சொல்லு கிறார்கள். நெல்லை நகராட்சி எந்தக் குற்றச்சாட்டுகளுக்காகக் கலைக்கப்பட்டதோ, அதே குற்றச்சாட்டுகளை சேலம் நகராட்சியைப்





பொருத்தும் கூறியிருக்கிறார்கள். சேலம் நகராட்சியைப் பொறுத்து என்ன நடவடிக்கை எடுத்தார்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கப் பயப்படுகிறார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு ஆகும்.

பாளையங்கோட்டை நகரசபையில் யார் ஊழல் செய்தது? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருடைய பெயர் அங்கேயுள்ள ஆடிட் ரிபோர்ட்டில் வருகிறது. மறுக்க முடிந்ததா? அங்கே நடவடிக்கை எடுக்கவில்லை. இல்லை என்று சொல்ல முடியுமா?

இன்னொரு பஞ்சாயத்து யூனியனுடைய ரிகார்டுகளைச் சரி செய்தார்கள். கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. அது இராமநாதபுரம் மாவட்டத்தில். அது அப்படியே இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியுமா?

காளையரர்கோயில் யூனியனில் கூட்டங்கள் நடக்கவில்லை. ஸ்தம்பித்துப் போய்விட்டது. ஆசிரியர்களுக்குச் சம்பளம் இல்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர் இருக்கிறார், ஆகவே நடவடிக்கை எடுக்க வில்லை. ஏன் இந்த நிலைமை? இந்தப் பாகுபாட்டு நிலைமையைத் தான் நாங்கள் கண்டிக்கிறோம். ஆகவே, அதிகாரத்தை சொந்தக் கட்சி நலன்களுக்காக துஷ்பிரயோகம் செய்கிறது. இங்கேயுள்ள எதிர்க்கட்சிகளை ஒடுக்குகிறது இந்த ஆட்சி, இந்த ஆட்சியை நடத்தும் கனம் பக்தவத்சலம் மீது நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்று கூறி அமர்கிறேன்.

*திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன். சென்ற தடவை 1964-ம் வருஷத்திலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தது. எதிர்க்கட்சியினர் முக்கியமாகச் சுட்டிக்காட்டிய விஷயங் களில், உணவுப் பொருள்களுக்காக க்யூ வரிசையில் நின்று கஷ்டப் படவேண்டிய நிலைமையைத்தான் முழுக்க முழுக்க அவர்களுடைய பேச்சிலே கேட்க முடிந்தது. இன்னும் அத்தகைய க்யூ வரிசைக்குப் பதில் லட்சக்கணக்கான குழந்தைகள் பள்ளி அட்மிஷனுக்கும் மதிய உணவு பெறும் வரிசையையும்தான் பார்க்கிறோம். சுதந்திராக் கட்சித் தலைவர் ஸ்ரீமான் சா. கணேசன் அவர்கள் சென்ற முறை பேசியபோது நம்முடைய முதல் அமைச்சருக்கும் மந்திரி சபைக்கும் ஒரு நல்ல அத்தாட்சி கொடுத்திருக்கிறார். நாகரிகமாகவும், பண்பாட்டுடனும் எதிர்க் கட்சியினரிடத்தில் சுமுகமான முறையில் நடந்துகொள்ளக்கூடியவர் என்ற நற்சாட்சிப் பத்திரத்தை சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். இன்றையதினம் கொடுத்திருக்கக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அதெல்லாம் புறம்பானதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். கீரியும் பாம்பும் போல, புலியும் ஆடும் போல, கொள்கை வித்தியாசம் உள்ளவர்கள் எல்லோரும் கூட, ஒன்று சேர்ந்துகொண்டு குழப்ப நிலையை உண்டுபண்ண வேண்டும்

என்பதைத் தவிர, இதற்கு அடிப்படையாக வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் உற்சாக மிகுதியாலோ என்னவோ ஒன்று தெரிவித்தார்கள். முன்பு கேரளத்தை ஆட்சி செய்த திரு. நம்பூதிரிபாத் அவர்களுடைய ஆட்சியே கூட விரும்பத்தக்கது என்ற முறையில் சாக்கோடு சாக்காகச் சொல்லிவிட்டார்கள். அவருடைய பெரும் தலைவர், "கம்யூனிஸ்டுக் கட்சியானது இந்தத் தேசத்தின் முதல் எதிரி" என்று சுட்டிய உபதேசத்தை அவர் அறவே மறந்துவிட்டார் என்றே நான் நினைக்கிறேன். இன்றையதினம் தைரியமாக நம்பூதிரிபாத் அவர்கள் தலைமையில் ராஜ்ய அரசாங்கம் அமைய வேண்டும் என்று சுதந்திராக் கட்சியின் சார்பாக இந்த மன்றத்தில் அவர் தெளிவாகச் சொல்வதற்குத் தைரியம் இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். அத்தகைய அளவிற்கு அன்றைய தினம் 1964-ம் ஆண்டிலே மற்ற பண்டங்களின் விலையைவிட உணவுப் பண்டங்களின் விலை ஏறியிருக்கிறது என்பதாகச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் இன்றைக்குச் சுட்டிக்காட்டப்படுவது கடந்த மூன்று மாத காலத்திற்குள் மற்ற பண்டங்களின் விலையேற்றத்தை விட உணவுப் பண்டங்களின் விலையேற்றம் குறைவாக இருக்கிறது என்பதுதான். இதில் இருந்து என்ன தெரிகிறது? நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு தகுந்த மாதிரி தான் பொருள்களின் விலையேற்றமும் இருக்கும். இதை மற்ற முன்னேற்றம் அடைந்த நாடுகளில் உள்ள விலையேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். மற்ற எல்லா முன்னேற்றம் அடைந்த நாடுகளிலுமே விலையேறித்தான் இருக்கிறது. ஆயினும் இங்கே சர்வ ஜாக்ரதையாக அரசாங்கம் நடந்துகொண்டு வருகிற காரணத்தினால்தான் உணவுப் பண்டங்களின் விலை ஏறுதவாறு ஓரளவு தடுத்து நிறுத்தி வைக்க முடிந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இயற்கையை மனிதன் தன்னுடைய ஆற்றலினாலே முற்றிலும் கட்டுப்படுத்த முடியாது. இயற்கை மனிதனை வெற்றி கொள்கிறது என்பதைப் பார்க்கிறோம். திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு லட்சம் ஏக்கராவுக்கு மேல் பருவ மழை பொய்த்த காரணத்தினால் விளைவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இயற்கையும் நம்மைச் சோதிக்கின்றது. இத்தகைய நிலைமை ராஜ்யம் முழுமைக்கும், தேச முழுமைக்குமே பொதுவானது. கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் இங்கே இருக்கிறார். விஞ்ஞான வளர்ச்சியின் அற்புத சாதனையினால் சந்திரனையே எட்டிப் பிடித்து விட்டோம் என்கிற ருஷ்ய நாட்டிலேயே இன்றைக்கு உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. அவர்களுடைய நாட்டுக்கு ஓர் ஆண்டுக்கான உணவுத் தேவை 12 கோடி டன். இன்றைய வரை நாற்பது, ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகிற அவர்களால் தங்களுடைய நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளக் கூடியது 9 கோடி டன் தான். பாக்கியுள்ள 3 கோடி டன்னை அவர்கள் கனடா போன்ற இதர நாடுகளிடம் கையேந்தித்தான் பெறவேண்டியதாக இருக்கிறது. பிற நாட்டில்



இருந்து பெற்றுக்கொண்டு போய்த்தான் தங்கள் நாட்டு மக்களுடைய பசியைப் போக்கவேண்டியதாக இருக்கிறது. தாது வருஷப் பஞ்சத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பெங்கால் பாமின் நம்முடைய நினைவைவிட்டு அகன்று இருக்காது. ஆனால் இன்றைக்கு ஒரு மனிதன் கூடப் பஞ்சத்தால் இறந்துபடாது காப்பாற்ற இந்த ராஜ்ய அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்காகப் பெருமையோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய கஷ்டத்தை மிகத் தைரியமாகச் சமாளித்து, நம்முடைய வாட்சிகரமான நிலைமையைச் சமாளித்திருக்கிறோம்.

அடுத்து, நகரசபைகளைக் கலைத்திருப்பதுபற்றிச் சொன்னார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக கனம் மாதவன் போன்றவர்கள் எல்லோரும், திருநெல்வேலி நகரசபையைக் கலைத்தது தவறு என்பதாகக் குறிப்பிடவில்லை. அங்கே ஒழுங்கீனம் இல்லை என்பதாக வாதாடவில்லை. அதுபோல இன்னும் பல நகரசபைகளிலும் ஒழுங்கீனங்கள் இருக்கின்றனவே, அவற்றை எல்லாம் ஏன் கலைக்கவில்லை என்பதாகத்தான் கேட்டார்கள். அதுபோல ஒழுங்குக் குறைவாக உள்ள நகரசபைகளை ஏன் விட்டுவிட்டீர்கள் என்று கேட்டார்கள். "நாங்கள் தவறாக நடந்துகொள்ளவில்லை. பொறுப்பற்ற ஒழுங்கீனங்கள் எதுவும் அங்கே நடைபெறவில்லை. எதற்காக அதைக் கலைத்தீர்கள்?" என்று கேட்க யாருக்கேனும் தைரியம் இருந்ததா என்று கேட்கிறேன். திருநெல்வேலி நகரசபையைக் கலைத்ததைப் பழித்தவர்கள் கூட, சேலத்திலே ஊழல் இல்லையா, காளையார் கோயிலில் ஊழல் இல்லையா, பாளையங் கோட்டையில் ஊழல் இல்லையா, அவை எல்லாவற்றையும் கலைத்தீர்களா என்றுதான் கேட்கிறார்கள். ஊழல் மலிந்து கிடக்கும் நகரசபைகளில் சென்னை கார்ப்பரேஷனும் விலக்கல்ல. நாளைய தினம் அவற்றைக் கலைக்கும் நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொண்டாலும் எடுத்துக்கொள்ளலாம். ஊழல் மலிந்துள்ள வேறு சில நகரசபைகள் கலைக்கப்படாமல் இருப்பதன் காரணமாக, ஊழல் மலிந்து கிடந்த ஒரு நகரசபையைக் கலைத்தது தவறாக ஆகிவிடாது. இப்படி ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து மிரட்டலாம் என்று எதிர்க்கட்சிக் காரர்கள் நினைக்கலாம். ஊழல் மலிந்து கிடக்கும் மற்ற நகரசபைகளைக் கலைக்கக்கூடாது என்பதற்காக இப்படி மிரட்டுகிறார்களா என்று தெரியவில்லை. இந்த மிரட்டல்களுக்கு அரசாங்கம் அஞ்சாது. தொழில் கல்லூரி அட்மிஷன்களைப்பற்றிச் சொன்னார்கள். நான் எதிர்தரப்பில் உள்ள தலைவர்கள் உட்பட எல்லோரையும் கேட்கிறேன். அவர்கள் தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லட்டும். அவர்கள் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமாக யாருக்குமே சிபார்சுக்குப் போகவில்லை என்று சொல்ல முடியுமா? தங்களுக்கு வேண்டியவர்கள் யாருக்குமே யாரையுமே அணுகவில்லை என்று உறுதியோடு சொல்லத் தயாராய் இருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். இன்றைய தினம் அரசாங்கம் மாணவர்கள் எந்த எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [4th August 1966

படவேண்டும் என்பதற்கு திட்டவட்டமான கொள்கையையே வகுத்திருக்கிறது. மார்க் மட்டும் அல்ல, எடை, உயரம் மற்ற தகுதிகள் ஆகிய எல்லாவற்றையும் பார்த்துத் தேர்ந்தெடுக்க வழி வகை வைத்திருக்கிறது. இந்த முறையிலும் ஊழல் நடைபெறுகிறது என்றால் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்கிறேன். இனி எதிர்காலத்தில் மார்க் ஒன்றை மட்டும் பார்த்து செலெக்ஷன் கொடுத்தால் போதும் என்றால் சொல்லட்டும். மார்க்குகளை மட்டும் பார்த்து அட்மிஷன் கொடுப்பதற்கு 3 கிளார்க்குகள் இருந்தால் போதும். அட்மிஷன் இந்த முறையில் இருந்தால் போதும் என்று சுட்டிக்காட்ட அவர்கள் தயாரா?

மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் இந்தி அவசியம் இல்லை என்பதாகத் தி.மு.க.-வினர் சொல்லுகின்றனர். சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் தி.மு.க.-வுடன் சேர்ந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குத் துணை நிற்பவர். இன்றைய தினம் சுதந்திராக் கட்சியின் பெருந்தலைவராக இருக்கக் கூடியவர் நாளைக்கே வெளியில் அதுபோல அறிவிப்பாரா? சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் இங்கே குறிப்பிட்ட கருத்தை வெளியில் அவருடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்களே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்களா -என்று கேட்கிறேன். குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டுவது போல எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டே போகலாம் என்பது சரியல்ல. காலத்திற்குக் காலம் ஒரு கொள்கை, இடத்திற்கு இடம் ஒரு கொள்கை என்றால் எந்தக் கொள்கையை அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள் என்று அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இடம் மாறுபடுகிற போது கொள்கை மாறுபடுகிறது. நேரம் மாறுபடுகிறபோது கொள்கை மாறுபடுகிறது. இந்தப் போக்கு நாட்டிற்கே நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியைப் பொருத்த வரையில் எந்த விதமான இடைஞ்சலும் இல்லை. சட்டம் வருவதற்கு முன்பே இந்தியும், ஆங்கிலமும் இணைப்பு மொழியாகத் தான் இருந்து கொண்டிருக்கின்றன. சட்டமாக வருவதற்கு தாமதங்கள் இருக்கலாம். அது வேறு விஷயம். இந்தி பேசாத பகுதியில் உள்ள மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலமும் இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்தும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தகுந்த வாய்ப்பு அளிக்கவில்லையா? ஏன் அளிக்கவில்லை? இன்றைக்கு ஏராளமான குழந்தைகள் தமிழையே தங்கள் பயிற்சி மொழியாகக் கல்லூரி களிலே எடுத்துக் கொண்டிருப்பதற்கு அரசாங்கத்தின் கொள்கை தான் காரணம். நமது அரசாங்கத்தின் திறனுக்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு. சென்ற வருஷம் மழை குறைவு ஏற்பட்டது. ஐம்பது சதவிகிதம் மழை குறைவு. தண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டது. இருந்தும் விளைவுக் குறைவை 10 சதவிகித அளவுக்கே மிக சாதுர்யமாக, புத்திசாலித்தனமாகக் குறைத்திருக்கிறார்கள் என்றால் அதற்காக அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும்.



4th August 1966]

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, தாங்கள் எனக்குப் பேச பத்து நிமிஷம் தருவதாகச் சொன்னீர்கள். நான் முன்பே பத்து நிமிஷம் வேண்டும் என்று கேட்டேன்.

MR. SPEAKER: The House will sit for another ten minutes. The hon. Member can speak for ten minutes.

திரு. க. ர. நல்லசிவம்: தாங்க்யூ சார். இன்றையதினம் மதிப்பிற்குரிய திரு. நெடுஞ்செழியன் அவர்கள் எட்டு காரணங்கள் சொல்லி இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னார்கள். எட்டு காரணங்கள் வேண்டியது இல்லை. ஒரே ஒரு காரணம் போதுமானது. 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதர்க்கு எல்லாம்'. இது ஒன்றுதான் அடிப்படைக் கொள்கை. இங்கு வாழும் மனிதர்களுக்கு எல்லாம் சோறு இருக்கிறதா என்று இந்த அமைச்சரவையைக் கேட்கிறேன். மனச்சாட்சிப்படி சொல்லட்டும். மூன்று மாதங்களுக்கு வேண்டிய உணவு கையில் இருக்கிறதா? இந்த ராஜ்யத்தில் உள்ள நகரப் பகுதி மக்களுக்கும் உணவு அளிக்கக் கையில் போதுமான ஸ்டாக் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். உண்மையில் கிடையாது.

என்னைப்பற்றி அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்களுக்கு நாட்டின் நிலைமை தெரியும். இன்றுள்ள நிலையில் இன்னும் ஒரு மாதத்திற்குள் கிராமங்களின் நிலை என்ன ஆகப்போகிறது என்றே தெரியவில்லை. குறுவை எப்போது வரப்போகிறதோ, எவ்வளவு வரப்போகிறதோ? சில நாட்களுக்கு முன் தான் காவேரியிலேயே தண்ணீர் வந்திருக்கிறது. உண்மையில் இன்றைய தினம் கிராமப் பகுதிகள் ஒரு பயங்கரமான நிலையை எதிர்நோக்கி இருக்கின்றன. நகரப் பகுதியில் உள்ள ஜனங்களுக்கே குறிப்பிட்ட அளவு அரிசி கொடுக்க கையில் ஸ்டாக் இல்லை என்பதாக சிவில் சப்ளைஸ் கமிஷனர் அறிவிக்கிறார். உடனே இரண்டு நாள் கழித்து போதுமான தானியம் இருக்கிறது என்கிறார். உண்மை நிலை என்ன என்றே புரியவில்லை. அழுத்தந்திருத்தமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த ராஜ்யத்தில் உள்ள மக்களுக்கு வரும் மாதங்களில் உணவு தானியம் அளிப்பது என்றால் கையில் போதுமான ஸ்டாக் இருக்கிறதா? நகரப் பகுதிகள் மட்டும் அல்ல, கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் குடும்பக் கார்டு அடிப்படையில் அரிசி கொடுக்கத் திட்டவட்டமான ஏற்பாடுகள் ஏதேனும் இந்த அரசாங்கத்தினிடம் இருக்கிறதா? கிராமப்பகுதியில் இன்றைய தினமே அரிசி கிடையாது. அதிகாரிகளைப் போய்க் கேட்டால் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள்?. 'சர்க்காரிடத்தில் போய்ச் சொல்லுங்கள். அவர்கள் தானியம் கொடுத்தால் நியாயவிலைக் கடைகள் மூலம் நாங்கள் விநியோகிக்கிறோம் என்கிறார்கள்.

நாங்கள் அப்பொழுதே சொன்னோம். கிராம மக்களுடைய தேவையை விட்டுவிட்டுக் கொள்முதல் செய்யுங்கள் என்பதாக. அப்போது கிராமத்தில் கொஞ்சம் கூடத் தானியம் தங்காதவாறு கொள்முதல் செய்துவிட்டார்கள். சென்ற ஆண்டும் விளைச்சல் கிடையாது. அதற்குப் பின்னும் விளைவு கிடையாது. உணவுப்

பொருள்களுக்கு அங்கே எந்தவிதமான வழியும் கிடையாது. மாட்டுத் தீவனத்திற்குக் கூட வழியில்லை. நகர்ப்புறங்களில் கட்டாய ரேஷன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. குடும்பக் கார்டு வைத்துக் கொடுக்கப்படுகிறது. ஆனால் கிராமப் பகுதிகளுக்கு எந்த அடிப்படையில் கொடுக்கப்போகிறார்கள்? வந்த பஞ்சம் மீண்டும் வந்தே தீரும், அப்படி வரவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? ஆகவே, இந்த நேரத்தில் நீங்கள் சரியான 1-30 p.m. நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால் நாட்டிலே பஞ்சம் வந்தே தீரும், மக்கள் பட்டினியால் சாகத்தான் சாவார்கள். நான் இப்படியெல்லாம் சொல்வது ஸ்டண்ட் அல்ல, ஸ்டண்ட் செய்துதான் நான் மக்களிடத்திலே வோட்டு வாங்க வேண்டும் என்பதில்லை, அந்தத் தேவையே இல்லை, நான் ஒழுங்காக வேலை செய்தால் அவர்கள் எனக்கு வோட்டுக் கொடுப்பார்கள். இந்த ஆட்சி கடந்த 20 ஆண்டு காலமாக ஆண்டு கொண்டிருக்கிறது. இருபது ஆண்டுகளாக ஆட்சி செலுத்தியும்கூட,

"கஞ்சி குடிப்பதற்கில்லார், அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமில்லார்,
பஞ்சமோ பஞ்சமென்றே நிதம்
பரதவித்தே உயிர் துடிதுடித்தே"

என்ற மாதிரி மக்கள் கஷ்டப்படுகின்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கின்றது. மக்கள் பொறுமையாக இருக்கிறார்கள். ஆனால் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே மக்கள் திரண்டெழுந்து உங்களை எதிர்க்க ஆரம்பித்தால் நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த தடவை டி.எம்.கே. வரலாம், வராமல் போகலாம். நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை, ஆனால் காங்கிரஸ் மீண்டும் வந்துவிட்டால், இதே கொடுங்கோல் ஆட்சி மீண்டும் வந்தால் இந்த நாட்டிலே ஜனநாயகம் இருக்குமா, இருக்காதா என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கு ஒரு பயங்கரமான நிலைமை ஏற்பட்டுவிடும். அமைச்சர்களுடைய பெருந்தன்மையைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இங்கே இருக்கின்ற உணவு அமைச்சர் அவர்களிடம் ஒரு விவசாயி ஸ்டே கொடுக்க வேண்டுமென்று கேட்டு மூன்று தடவைகள், ஒரு தடவைக்கு 50 ரூபாய் வீதம், 50, 100, 150 என்று மூன்று தடவைகள் செலவு செய்து அமைச்சரைப் பார்த்துக் கேட்டும்கூட, அவருக்கு எந்த விதமான பதிலும் கிடையாது. நாட்டு மக்களிடத்திலே போய், கண்ணியம் கிடையாது, கட்டுப்பாடு கிடையாது என்று சொல்கிறீர்கள், ஆனால் நீங்கள் எப்படியிருக்கிறீர்கள். எங்கே கண்ணியம், கட்டுப்பாடு, கலாச்சாரம் எல்லாம்? நீங்கள்தான் எல்லாவற்றையும் நாசமாக்கிக்கொண்டிருக்கிறீர்கள். எனக்கு ஒரு தகவல் வந்தது. ஒரு பத்து வயதுப் பையன், ஒரு பெண்ணுக்கு காதல் கடிதம் எழுதியிருக்கிறான் என்று. இப்படியா நிலைமை இருப்பது? மருத்துவக் கல்லூரி, எஞ்ஜினியரிங் கல்லூரி பற்றியெல்லாம் சொன்னார்கள்.





அவர்கள் படித்துவிட்டு வந்தால் உடனே உங்களால் வேலை கொடுக்க முடியுமா? உண்மையிலேயே உங்களுக்கெல்லாம் தேசபக்தி என்பது கிடையாது. உங்களிடத்திலே. . . .

**கனம் சபாநாயகர்:** 'உங்களுக்கு' என்ற வார்த்தையை அவர்களுக்கு என்று திருத்திச் சொல்லுங்கள். எப்பொழுதும் அப்படியே சொல்லுகிறீர்கள். இனிமேல் நான் ஒவ்வொரு தடவையும் பார்த்து இதைப்பற்றிச் சொல்லிக்கொண்டே இருப்பேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** உங்களுக்கு நான் ஒன்று கடைசியாகச் சொல்ல விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** இன்னும் 'உங்களுக்கு' என்றே சொல்லுகின்றீர்களே.

**திரு. க. ர. நல்லசிவம்:** ஆகவே, அமைச்சர்கள் இந்தப் போக்கிலே போய்க்கொண்டிருந்தால் இந்த நாட்டிலே ஜனநாயகம் நிற்காது, அராஜகம்தான் வரும். உணவுத் துறையைப் பொறுத்த வரையில் முன்னால் வேறு அமைச்சர் இருந்தபோதாவது நிலைமை ஒரு மாதிரியாக வந்தது. ஆனால் அந்த அமைச்சர் மாறி இப்பொழுது வேறு அமைச்சர் வந்த பிறகு உணவு நிலைமை மோசமாகிவிட்டது. இந்த உணவு அமைச்சர் உடனே ராஜினாமாச் செய்யவேண்டும். பஞ்சத்தைத் தீர்க்க முடியாத சர்க்கார், நாட்டு மக்களுக்குச் சோறு போட முடியாத சர்க்கார், மக்கள் வயிற்றுக்குச் சோறு போடமுடியாத சர்க்கார் ராஜினாமாச் செய்யவேண்டும். நீங்கள் எல்லாம் ராஜினாமாச் செய்துவிட்டு வெளியே போக வேண்டும். ஆகவே நான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The house will now adjourn and meet again 1-34 p.m.
at 8-30 a.m. to-morrow.

The house then adjourned.

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

88. *Notification issued with G.O. Ms. No.* 331, *Rural Development and Local Administration, dated the* 16*th February* 1966 *making an amendment to the rules relating to the payment of travelling allowance to the Pleaders engaged by the Municipal Councils published with the late Local Self Government Department Notification No.* 1583, *at pages* 527-528 *of Part I-A of the Fort St. George Gazette, dated the* 29*th November* 1927, *as subsequently amended. [Laid on the Table of the House under section* 304 *(d) of the Madras District Municipalities Act,* 1920 *(Madras Act V of* 1920)*]*

* 89. *Audit Report on the Annual Accounts of the Madras State Electricity Board for the year 1964–65 and the Balance Sheet as on 31st March 1965. [Laid on the Table of the House* under section 69 (5) *of the Electricity (Supply) Act*, 1948 (*Central Act LIV of* 1948) ]

## B. Reports, Notifications and other papers.

* 16. *Report of the Committee on Public Accounts on the Audit Reports on the Accounts of the Madras State Electricity Board for the years* 1958–59 to 1961–62.

* 17. *Report of the Committee on Estimates on the Madras Record Office (Second Report).*

18. *Report of the Committee on Public Accounts on the Audit Report on the Accounts of the Madras State Housing Board for the year* 1961–62.

---

***Laid on the Table of the House on 3rd August 1966.**



## இணைப்பு

**[334-ம் பக்கத்திலுள்ள 72-ம் எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வி யின் பதிலைக் காண்க.]**

(அ) & (இ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | சென்ற ஆண்டுவரை அதாவது 31–3–65 வரையில் ஹரிஜன நலத்துறையில் பணியாற்றிக்கொண்டிருந்த துணை சேவக்குகளின் எண்ணிக்கை மாவட்டவாரியாக. | அவர்களில் (2-ம் பத்தி) தற்பொழுது பணியாற்றிக்கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 வட ஆர்க்காடு .. .. | 9 | 2 |
| 2 தென் ஆர்க்காடு .. .. | 7 | 3 |
| 3 செங்கற்பட்டு .. .. | 7 | 2 |
| 4 திருச்சிராப்பள்ளி .. .. | 8 | 2 |
| 5 திருநெல்வேலி .. .. | 7 | 3 |
| 6 சேலம் .. .. | 10 | 3 |
| 7 கோயம்புத்தூர் .. .. | 9 | 3 |
| 8 நீலகிரி .. .. | 3 | 1 |
| 9 மதுரை .. .. | 8 | 3 |
| 10 இராமநாதபுரம் .. .. | 9 | .. |
| 11 தஞ்சாவூர் .. .. | 11 | 3 |
| 12 கன்னியாகுமரி .. | 4 | 2 |
| 13 சென்னைமாநகர் .. .. | 2 | 1 |

(உ) துணை சேவக்குகள், இசைக்குழு.

(எ) ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள துணை சேவக்குகளும் பாடகியும் அந்த மாவட்டத்தின் மாவட்ட நல அதிகாரி நிச்சயிக்கும் நிகழ்ச்சி நிரலின்படி அந்த மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து தீண்டாமையை அகற்றுவதற்கும், சாதி இந்துக்களின் மனப்போக்கை மாற்றுவதற்கும் தங்கள் இசை நிகழ்ச்சிகளின் மூலம் பிரசாரம் செய்யவேண்டும்.

(ஐ) ஹோட்டல்களிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் தீண்டாமை பின்பற்றப்பட்டால் அவற்றின்மீது நடவடிக்கை எடுக்க தற்போதைய இசைக்குழு துணை சேவக்குகளுக்கு அதிகாரம் இல்லை. தீண்டாமை பாராட்டப்படுவதை துணை சேவக்குகள் கவனித்தால், அதன்மீது அந்தந்த மாவட்ட நல அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக, அவற்றை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

(ஒ) இல்லை.

[4th August 1966

(*a*) & (*b*).—The particulars are furnished below:—

| Serial number and name of the district. | Number of Deputy Sevaks who were working in the Harijan Welfare Department upto last year i.e. upto 31st March 1965 district wise. | The number of persons among those in column (2) who are now working. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 North Arcot .. | 9 | 2 |
| 2 South Arcot .. | 7 | 3 |
| 3 Chingleput .. | 7 | 2 |
| 4 Tiruchirappalli .. | 8 | 2 |
| 5 Tirunelveli .. | 7 | 3 |
| 6 Salem .. | 10 | 3 |
| 7 Coimbatore .. | 9 | 3 |
| 8 The Nilgiris .. | 3 | 1 |
| 9 Madurai .. | 8 | 3 |
| 10 Ramanathapuram | 9 | .. |
| 11 Thanjavur .. | 11 | 3 |
| 12 Kanyakumari .. | 4 | 2 |
| 13 Madras City .. | 2 | 1 |

(*c*) Deputy Sevaks, Music Party.

(*d*) The Deputy Sevaks and the Songstress in each district have to tour the district according to the programme fixed by the District Welfare Officer of the district and make propaganda by means of musical performances for the removal of untouchability and to change the outlook of the Caste-Hindus by their propaganda.

(*e*) The present Deputy Sevaks of the Music Parties, have no powers to take action on the practices of untouchability practised in hotels and restaurants, but they should report cases relating to untouchability noticed by them to the District Welfare Officers concerned for action.

(*f*) No.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 5th August 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டம்

*101 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் மீடியம் புரோகிராம் எவால்யூவேஷன் கமிட்டி (Tamil Medium Programme Evaluation Committee) என்று ஒன்று நியமிக்கப்பட்டதா?

(இ) அதன் வேலைகள் என்னென்ன? வேலைகள் பூர்த்தியாகி விட்டனவா?

(உ) ஆமெனில், அதன் அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) ஆம்.

(இ) தமிழ்மொழி வாயிலாக இம்மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் பயிற்சி அளிப்பதில் ஏற்படும் கல்வி மேம்பாட்டை மதிப்பீட்டுக்காகவும் ஆங்கிலத்தின் மூலம் பயிற்சி அளிப்பதையும் தமிழ் மொழி வாயிலாகப் பயிற்சி அளிப்பதையும் ஒப்பிட்டு ஆராயவும் தமிழ்ப்பயிற்சி மொழித் திட்ட மதிப்பீட்டுக்குழு (The Programme Evaluation Committee) ஒன்று அமைக்கப்பட்டது.

(உ) அரசாங்கம் இக்குழுவின் அறிக்கையைப் பரிசீலித்து வருகிறது. அந்த அறிக்கை கூடிய விரைவில் சபை முன் வைக்கப்படும்.

**திரு. து. ப. அழகமுத்து:** இது எப்போது முதல் அமலுக்குக் கொண்டுவரப்படும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பல விஷயங்கள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் எல்லா புகுமுக வகுப்புகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

**திரு. செ. மாதவன்:** தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு ஏற்படும் சங்கடங்களைப்பற்றி இந்தக் கமிட்டியால் ஆராயப்பட்டதா? ஆங்கிலத்தில் படிப்பதற்கு ஏன் முன் வருகிறார்கள் என்பதைப் பரிசீலித்ததா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த அறிக்கையை இந்தச் சபைமுன் வைக்கும்போது அவர்கள் என்னென்ன கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

**திரு. வை. சங்கரன்:** அரசாங்கத்தின் இறுதி லட்சியம், கல்லூரி மட்டத்திலே தமிழைப் பயிற்சி மொழியாக வைக்க வேண்டுமென்பதா? அந்த லட்சியத்தை ஒட்டித்தான் இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசாங்கத்தின் இறுதி லட்சியம் இதுதான். தமிழ்ப் பயிற்சி மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படும்.

*102 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் தமிழும் போதனா மொழி ஆக்கப்படும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விவரமென்ன?

(இ) எந்த ஆண்டு முதல் அது அமலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*): The Government have issued orders to introduce Tamil medium in Pre-University course in one Section in Humanities in all the Government Arts Colleges in this State with effect from 1966-67.

**திரு. செ. மாதவன்:** எல்லாக் கல்லூரிகளிலும் கலைப் பாடம் மட்டும் எடுக்கும் மாணவர்களுக்குத் தான் தமிழ் பயிற்சி மொழியாக வைக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா? அல்லது, விஞ்ஞானப் பாடங்களிலும் தமிழ் மூலம் போதிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது பல்கலைக்கழகம் அங்கீகாரம் அளித்திருப்பது கலைப்பாடங்களுக்கு மட்டும்தான். விஞ்ஞானப் பாடங்களைப் படிப்பதற்குப் போதிய தமிழ் நூல்கள் வேண்டியிருக்கின்றன.

**திரு. சா. கணேசன்:** விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் பயிற்றுவிப்பதற்கு விஞ்ஞானக் கலைச் சொற்களை 'இன்டர்நேஷனல் டெர்ம்ஸ்', அதாவது சர்வதேச சொற்களைக் கையாள்வது பயனுடையதாகவும் இருக்கும், சுலபமாகவும் இருக்கும், வாய்ப்புள்ளதாகவும் இருக்கும். ஆகவே, அதன்படி செய்ய உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தக் கருத்துப்படிதான் கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** நான் உதகைக் கலைக் கல்லூரியில் இந்த ஆண்டு தேர்வுக் குழு அங்கத்தினராக இருந்தேன். 300 மார்க்குகள்—நல்ல மார்க்குகள் வாங்கியவர்களைத்தான் சைன்ஸ் க்ரூப்பில் சேர்த்துக் கொண்டார்கள். குறைந்த மார்க்கு





வாங்கியவர்களைக் கட்டாயப்படுத்தித் தான் தமிழிலே ஒரு சில மாணவர்களைச் சேர்த்திருக்கிறோம். ஆகையால், அரசாங்கம் இந்தக் கொள்கையை விட்டு, கல்லூரியில் தொடர்ந்து ஆங்கிலத்தையே பயிற்சி மொழியாக எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக்கொள்வதற்கு மாணவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்று கூறுவதற்கு இடமில்லை. ஆங்கிலத்திலும் படிக்கலாம், தமிழிலும் படிக்கலாம். மாணவர்களுக்கு எது பிடிக்கிறதோ அதை எடுத்துக்கொள்ளலாம். இறுதி லட்சியம் தமிழைப் பயிற்சி மொழியாக்குவது என்பதை முன்பே குறிப்பிட்டேன். ஆகையால், இப்போது மாணவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அதைக் கைவிடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இறுதி லட்சியம் தமிழைப் பயிற்சி மொழியாக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆங்கிலத்தையும் பயிற்சி மொழியாக வைத்துவிட்டு, ஆங்கிலம் படித்தவர்கள் உயர்தரப் படிப்பு படிக்க முடியும், உயர்ந்த உத்தியோகத்திற்குப் போக முடியும் என்ற வாய்ப்புகளையும் வைத்துவிட்டு, தமிழைப் பயிற்சி மொழியாக வைத்திருக்கிறோம், வந்து சேருங்கள் என்றால் எப்படி மாணவர்கள் தமிழில் படிக்க வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** உயர்படிப்பிற்கு வெளி நாட்டிற்குப் போகவேண்டும் என்பதற்கெல்லாம் தமிழில் மட்டும் படிக்கவேண்டுமென்று சொல்லமுடியாது. ரஷ்யாவில் கூட இந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது. உயர்தர உத்தியோகத்திற்கு யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தமிழைப் பரிட்சை மொழியாக ஆக்க ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் சர்விஸ் கமிஷன் பரிட்சையை முற்றிலும் தமிழிலே எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மொழிகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ் மொழியிலே படிப்பதற்கு மேலும் மேலும் ஊக்கத்துடன் மாணவர்கள் முன்வருவார்கள் என்பதிலே எனக்கு ஐயம் இல்லை.

*103 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken and arrangements made by this Government for making Tamil also as a medium in the Examinations to be conducted by the U.P.S.C.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: During the Chief Ministers' Conference held at Delhi on 23rd and 24th February 1965, the importance of ensuring equality of opportunity in the Union Public Service Commission Examination as enjoined by the Constitution as between people belonging to different parts of the country was emphasised. It was also urged that every regional language should be admitted as one of the alternative media for the combined All-India Public Services Examinations. The whole

question is now being examined by the Government of India in consultation with the Union Public Service Commission. No decision has so far been communicated to this Government.

**திரு. வை. சங்கரன்:** அந்தக் காலத்திலேயே இதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியில்லாவிட்டாலும்கூட நமது அரசாங்கம் இதை விரைவிலே கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்துவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டும். இதில் தாமதம் இருக்கிறது என்று சொல்வதற்கு இடம் இல்லை.

*நெல்லையில் அரசாங்கத் தமிழ்க் கல்லூரி*

* 104 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரையில் சர்வகலாசாலை வருவதையொட்டி மதுரை, இராமநாதபுரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களுக்கு நடு நாயகமாக விளங்கும் நெல்லையிலே அரசாங்கத் தமிழ்க் கல்லூரி ஒன்றும், தமிழ்ப் புலவர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் வருகிற கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்க, அரசினர் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no such proposal now.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** இந்த ராஜ்யம் முழுமையிலும் உள்ள தேவாலயங்கள், அறநிலையங்களினுடைய நிதி வசதி பெற்று ஏதாவது ஒரு பிரதான இடத்தில் திருநெல்வேலி அல்லது பெரிய தேவாலயங்களுக்குப் பக்கத்தில் ஒரு தமிழ்க் கல்லூரியை வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆலயங்களுக்குப் பக்கத்தில் சில கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்க் கல்லூரி அங்கு ஏன் இருக்கவேண்டும், அதன் லட்சியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. தமிழர்கள் எந்தெந்த வகையில் பயன் அடைய முடியுமோ, அந்த முறையிலே கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

*Government Arts College, Ootacamund*

* 105 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the construction work of the Biology Block in the Government Arts College, Ootacamund, has been suspended in view of the emergency?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No. The work in question was ordered to be suspended because the allotment made for the work for 1965–66 was fully utilised. Permission has since been accorded to proceed with the work.



**திரு. ஜே. மாதா கவுடர்:** அந்தக் கட்டடத்தை இந்த ஆண்டு முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா. போதிய அளவு பணம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மறுபடியும் அந்த வேலை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று முன்பே கூறினேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** அங்கு மூன்று கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு ஒரு கட்டடம் கட்டப்பட்டு அதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் திறந்திருக்கிறார்கள். இரண்டாவது கட்டடமும் திறக்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறது. மூன்றாவது கட்டடத்தையும் நெருக்கடி நிலைமை என்று பாராமல் உடனடியாகக் கட்டி முடிக்க உத்தரவிடப்படுமா? அங்கு 1,200 மாணவர்களுக்கு மேல் சேர்ந்திருக்கிற காரணத்தால் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதையும் உடனடியாகக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பண நெருக்கடி நிலையைப் பொருட்படுத்தாது கூடியவரையில் நிதி ஒதுக்கி கட்டடங்கள் கட்டப்பட்டுதான் வருகின்றன. முதலில் நீலகிரியில் அரசினர் கல்லூரி அமைக்கப்பட்டபோது நீலகிரி மக்கள் ஒரு தொகை நன்கொடை அளிப்பதாகச் சொன்னார்கள் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதிலே ஒரு சிறிய பகுதிதான் வந்திருக்கிறது. அரசாங்கம் பொதுவாக எல்லா இடங்களிலும் கல்லூரிகளை அமைப்பதற்கு நிதி உதவி செய்து வந்தாலும், மக்கள் என்ன உதவி செய்வதாகக் கூறினார்களோ அந்த அளவுக்காகிலும் நிதி உதவியைப் பெற்றுக் கொடுப்பதில் கனம் அங்கத்தினர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டால் நலம்.

*Shift system in Colleges*

* 106 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have proposed to introduce shift system in select colleges in each district of the State, for coping up with the applications for admission to P.U.C.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

**திரு. வை. சங்கரன்:** ஷிப்ட் முறையை வைப்பதன் மூலமாக இருக்கின்ற கட்டடத்திலேயே அதிகப் பணச் செலவு இல்லாமல், கூடுதல் ஆசிரியர் தேவை இல்லாமல் நடத்தக்கூடிய அளவுக்கு அனுகூலமான திட்டமாக இருக்கும்போது அரசாங்கம் இதை வேண்டாமென்று கூறக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இருக்கின்ற கட்டடம் போதும் என்றாலும் இருக்கின்ற ஆசிரியர்களை வைத்தே இரண்டு ஷிப்ட் நடத்த முடியாது. பகல் காலத்தில் மாணவர்கள் வருவதிலேயே பல கோளாறுகள் இருக்கின்றன; இரவில் வரச் சொன்னால் மேலும் சிரமந்தான். மேலும் தற்போது அவ்வளவு நெருக்கடியும் இல்லை. இந்த ஆண்டிலே புதிதாக 14 கல்லூரிகள் ஆரம்பிக்கப்

[5th August 1966

பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் பி.யு.சி. வகுப்பில் மொத்தத்தில் 1,500 ஸ்தானங்கள் காலியாக இருந்தன. ஆகவே, ஷிப்ட் முறையைப் பற்றித் தத்துவ ரீதியாகப் பேசுவதில் பயன் இல்லை. ஷிப்ட் முறை அவசியமில்லை. அதை நிறைவேற்றுவதில் சிரமம் இருக்கிறது என்று முன்பே கூறினேன்.

*Industrial congestion around City*

* 107 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the measures the Government have proposed to adopt for preventing further industrial congestion around Madras and regulating the future growth of industries in the City's suburbs according to a set pattern?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

**திரு. வை. சங்கரன் :** சென்னை நகரிலே நெரிசலைத் தவிர்க்கும் வகையில் வெளியே தள்ளி தொழிற்சாலைகளை அமைக்க தொழில் அதிபர்கள் முன் வந்தால் அவர்களுக்குத் தனியாக ஏதேனும் அனுகூலங்கள் கொடுக்கப்படுகின்றனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வேண்டிய வசதிகள் அளிக்கப் படுகின்றன. அதற்கு மேல் ஒன்றும் அவசியம் இல்லை.

**விவசாயக் கருவிகள் உற்பத்தி**

* 108 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு உதவியாக உள்ள தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் வகுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) : The following departmental units are already functioning in Thanjavur district :—

(1) *Brassware Unit, Kumbakonam* : Manufacturing dusters, sprayers, inter-cultivators and similar agriculture implements.

(2) *General Purpose Engineering Workshop, Mayuram* : Manufacturing among other things, inter-cultivators, bund formers, gundakas.

(3) *Carpentry and Blacksmithy Unit, Mannargudy* : Manufacturing among other things, bund formers, inter-cultivators, Gundakas, Wet land buttlars.

(4) *Model Foundry Industrial Estate, Thanjavur* : Manufacturing among other things, Mould Board ploughs, Melur ploughs, etc.

---

a Printed as Appendix I on pages 585-586.



5th August 1966]

The Agro-Industries Corporation, which has been set up recently will consider the question of starting such of those production units as are necessary in Thanjavur district as well as in other districts.

**மரைன் டீசல் இயந்திரத் தொழிற்சாலை**

* 109 கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் முதல் அமைச்சர் 7—3—1966-ல் குறியிடாக் கேள்வி எண் 1-க்கு அளித்த பதிலை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை அருகில் எண்ணூரில் படகு டீசல் இயந்திரத் தயாரிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is reason to believe that the Government of India have decided not to set up the Marine Diesel Engine Factory in Madras State. No official communication has, however, been received from them.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, முன்பு இந்தச் சட்ட மன்றத்திலே தொழிலமைச்சர் அவர்கள், இந்தத் தொழிற்சாலை தமிழ் நாட்டில் நிச்சயமாக ஆரம்பிக்கப்படும். அதற்கு மத்திய சர்க்கார் பணம் ஒதுக்கியிருக்கிறது என்று கூறினார்கள். இப்போது அது கைவிடப்படுவதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பணம் ஒதுக்கியிருப்பதாகக் கூறியதாக நினைவு இல்லை. அப்போது இந்தத் தொழிற்சாலைக்கான இடம் கேட்டார்கள். அந்த இடத்தை மத்திய அரசிலிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சர் வந்து பார்த்தார். அந்தத் தொழிற் சாலை இங்கு ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ஆராய்ந்து இதை வேறு இடத்தில் அமைப்பது நலம் என்று மத்திய அரசாங்கம் கருதுவதாகத் தோன்றுகிறது. இது வரை இறுதியான முடிவு ஒன்றும் தெரியவில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** நம்முடைய ராஜ்யத்தில் வேறு ஏதேனும் இடங்களில் இந்தத் தொழிற்சாலையை அமைக்கப் பரிசீலனை செய்யப்பட்ட விவரம் இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றிய தகவல் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இது பற்றி முன்பு ஒரு முறை சட்ட சபையில் கேட்டபோது அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், இதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது, நிச்சயமாக இந்தத் தொழிற்சாலை இங்கே நிறுவப்படும் என்று கூறினார்கள். இப்போது இது மாறுவதற்குக் காரணம் என்ன ? ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் விலை கொடுத்து வாங்கப்பட்ட நிலமா அல்லது அரசாங்கத்தின் நிலமா ?

[5th August 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளும்போது இந்த நிலம் அதற்காக ஒதுக்கப்படலாம் என்ற முறையில் இடம் காட்டப்பட்டது. இதோ தகுதியான நிலம் இருக்கிறது என்று காட்டப்பட்டது. பிறகு இதை மத்திய அரசாங்கம் வேறு இடத்தில் வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது. இங்கே வைக்கலாம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தமிழகம் கடலோரப் பகுதி நிரம்பிய பிரதேசம் என்ற காரணத்தால், மீன் பிடிக்க வசதியாக இருக்கிறது என்ற காரணத்தால் தமிழகத்திலே இந்தத் தொழிற் சாலையை அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தக் கருத்தை இந்த அரசு தெரிவித்திருக்கிறது.

### அரசாங்கத் தொழில் பட்டறை, வேலூர்

*** 110 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூர் நகரத்தில் உள்ள அரசாங்கத் தொழில் பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி முடிய கட்டில், பீரோ முதலிய பர்னிச்சர் எவ்வளவு மதிப்புள்ள சாமான்கள் தயாரிக்கப்பட்டன ?

(இ) மேற்படி ஆண்டில் அதன் லாப நஷ்டக் கணக்கு என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) வேலூரிலுள்ள பொது நோக்குப் பொறியியல் பட்டறையைப்பற்றி கனம் உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அவ்வாறாயின் இப்பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி வரையில் ரூ. 13,55,378 மதிப்புள்ள கட்டில், அலமாரி போன்ற சாமான்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) இப்பட்டறையின் மூலம் 1—1—1965 முதற்கொண்டு 30—1—1966 வரை ரூ. 2.49 லட்சம் லாபம் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

### ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் கூட்டுறவு நூற்பாலை

*** 111 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்க சர்க்கார் அனுமதி அளித்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், எப்போது அனுமதி வழங்கப்பட்டது?



5th August 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. A co-operative spinning mill is at present functioning in Srivilliputhur.

(b) The licence for starting the mill was issued on 24th January 1959.

**திரு. பி. முருகையன் :** இந்தக் கூட்டுறவு நூற்பாலை நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறதா ? எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் ? அதன் தலைவர் யார் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

### *Cultivable land along Rail-track*

* 112 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Southern Railways have handed over cultivable lands along the Rail track to the Government for growing more food; and

(b) if so, the conditions thereunder and the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) அடியிற்கண்ட நிபந்தனைகளை விதித்துள்ளனர்—

(1) ரயில்வே நிர்வாகத்தைச் சேர்ந்த தரிசு நிலங்கள் அனைத்தின் குத்தகைக் கால அளவு முதற்கண் மூன்றாண்டுக் கால அளவாக நிச்சயிக்கப்பட வேண்டும். குத்தகைக்காரர் அந்நிலங்களைத் தக்கவாறு பயன்படுத்தியிருந்தால், அந்நிலங்கள் அக்குத்தகைக்காரருக்கே அதே நிபந்தனைகளின் அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படலாம்.

(2) ஐந்தாண்டுக் கால அளவுக்கும் அதற்கு மேற்பட்ட கால அளவுக்கும் தொடர்ந்து விளைவிக்கப்பட்டுவரும் நிலங்கள் அனைத்தும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட வேண்டும்; இக்குத்தகை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(3) நிலங்களிலிருந்து பெறப்படும் குத்தகைத் தொகையில் 95 சதவிகிதத் தொகை ரயில்வே நிர்வாகத்திற்கும் எஞ்சிய 5 சதவிகிதத் தொகை, அந்த நிலங்களை நிர்வகித்ததற்காக மாநில அரசாங்கத்திற்கும் வரவு வைக்கப்பட வேண்டும்.

(4) ரயில்வே நிர்வாகம் இந்த நிலத்தை எச்சமயத்திலும் இழப்பீடு கொடுக்காமலே மீண்டும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அப்படிச் செய்வதால் முடிவுறாமல் நிற்கும் குத்தகைக் கால அளவுக்கான விகிதாசார குத்தகைத் தொகையை குத்தகைக் காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டால் போதும்.

**திரு. வை. சங்கரன் :** இம்மாதிரி எந்த அளவுக்கு நிலம் நம்முடைய அரசாங்கத்திற்கு இதன் மூலம் கிடைக்க இருக்கிறது? இதிலே குத்தகைக்கு விடுவதற்குப் பூரண உரிமை இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : எவ்வளவு நிலம் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. முதலில் சொன்னபடி மூன்று வருஷத்திற்குக் குத்தகைக்கு விடுகிறார்கள். நன்றாக விவசாயம் செய்தால் மேலும் இரண்டு வருஷத்திற்கு விடுகிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தில் குத்தகைக்கு சாகுபடி செய்யக் கூடியவர்கள் அப்புறப்படுத்தப்படக் கூடாது என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்த நிலத்தைக் குத்தகைக்கு விடுகிற வரையில் அந்த சாகுபடி விவசாயிகளை வருடாவருடம் புதுப்பித்து அவர்களை அப்புறப்படுத்தாமல், அவர்கள் தவறு செய்யாத வரையில் அந்த இடத்திலேயே தொடர்ந்து அவர்களை சாகுபடிக்கு விட்டு வைக்க—ரெயில்வே நிர்வாகத்திற்கு இப்போது எடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை—அரசாங்கம் ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவிடுவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : முதலில் பார்க்கிறார்கள், மூன்று ஆண்டுகளுக்கு விடுகிறார்கள். (அப்போது நன்றாக வேலை செய்கிறார்களா இல்லையா என்பது தெரியும். நன்றாக வேலை செய்தால் அவர்களுக்குத்தான் அநேகமாக உதவி செய்வார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : ஒரு ஷரத்து, வருடம் ஒன்றுக்கு ஏலத்தில் விடவேண்டுமென்று இருக்கிறது. ஏலத்தில் விட்டால் இவர்கள் போய் எடுப்பது சாத்தியமல்ல. அதிகமாகக் கொடுக்கிறேன் என்று போட்டி ஏற்பட்டால் சாகுபடி விவசாயி நிலத்தை இழக்கும் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. லால்குடி தாலூகாவில் ரெயில்வே ஓரமாக உள்ள பகுதியை எடுத்து பின் அதிகாரிகளிடம் சொல்லித் தடுத்து வைத்து இப்படித் தகராறு ஏற்படுகிறது. மாநிலம் பூராவும் இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. உழவர்களின் கோரிக்கை நியாயமானது. இதைப் பரிசீலனை செய்து அரசாங்கம் ஜில்லா அதிகாரிகளுக்கு யோசனை கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் எழுந்தார்.**

MR. SPEAKER : It is only a request and not a question. நீங்கள் அப்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார், அதைப் பரிசீலனை செய்யுங்கள், அவ்வளவுதான்.

### *ரெங்கராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம்*

**113 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) சென்னை ரெங்கராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தார் தாங்கள் விலை பேசிய நிலம் மாநில வீட்டுவசதி போர்டால் ஆர்ஜிதம் செய்யப்படுவதை ஆட்சேபித்து 1961-ல் விண்ணப்பம் செய்துகொண்டனரா ?*

*(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?*





**கனம் திரு. பூ. கக்கன்** : (அ) ஆம்.

(இ) ரெங்கராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் 18—12—1961 தேதியிட்ட அதன் கடிதத்தில் கண்டுள்ளபடி கோடம்பாக்கத்தில் சங்கம் வாங்குவதற்காக விலை பேசிய 53/1, 54/2, 84, 85/1, 85/2 சர்வே எண் நிலங்களை மாநில வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்வதினின்றும் நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இந்த வேண்டுகோளை மாநில வீட்டு வசதி போர்டின் தலைவர் நகர அமைப்புத் துறை இணை நெறியாளருடன் கலந்து ஆலோசித்தார். கோடம்பாக்கம்-புதூர் (பாகம்-2) வீட்டு வசதித் திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்படுவதினின்றும் இந்த நிலங்களுக்கு விலக்கு அளிக்க முடியாதென்றும், நிலம் வழங்குவது குறித்த விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவிப்பு வெளியிடப்படும்போது அப்பகுதியில் மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்குமாறு வேண்டி சங்கம் மாநில வீட்டுவசதி வாரியத்தின் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாமென்றும், சங்கத்திற்கு மாநில வீட்டு வசதி போர்டு தலைவர் தெரிவித்துள்ளார். சங்கத்திடமிருந்து இது குறித்து விண்ணப்பம் வந்தால் அதனை மாநில வீட்டு வசதி போர்டு முறைப்படி ஆலோசிக்கும்.

**திரு. து. ப. அழகமுத்து** : இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தார் தாங்கள் விலை பேசி அட்வான்ஸ் கொடுத்த நிலத்தை வீட்டுவசதி போர்டார் கேட்பது சரியல்ல என்று சர்க்காருக்கு விண்ணப்பித்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இன்னும் அவர்களுக்குப் பதில் கொடுக்கவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள், விண்ணப்பித்துக் கொண்டால் பரிசீலிக்கப்படும் என்று கூறுகிறார். இதில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : ஏற்கனவே பதில் கொடுத்திருக்கிறார்கள். என்ன விண்ணப்பித்தார்கள் என்று சொன்னால்—ஹௌசிங் போர்டிலிருந்து வீடுகள் கட்டும்போது அதில் சைட்ஸ் வேண்டுமென்று கேட்டால் அது சம்பந்தமாக உதவி செய்யலாம் என்பதுதான்.

### *விவசாய நிலங்களை வீடுகட்டு மனைகளாக்கத் தடை*

**114 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*சென்னை மாநகரிலும் மற்றும் பெரிய முனிசிபல் நகரங்களைச் சுற்றியுமுள்ள விவசாய நிலங்கள், வீட்டு மனைகளாக்கப்பட்டு விற்கப்படுவதைத் தடை செய்யும் வகையில் அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் யாவை ?*

**கனம் திரு. பூ. கக்கன்** : தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறை 1964 ஏப்ரல் 3-ம் தேதியன்று வெளியிட்ட 1949-ம் எண் அரசாங்க ஆணையில், வீடு கட்டுவதற்காகவும், வேளாண்மை

[5th August 1966

அல்லாத பிற காரியங்களுக்காகவும் நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வழக்கம் தவிர்க்கப்படவேண்டும் என்றும், நன்செய் நில ஆர்ஜிதம் தவிர்க்க முடியாதவிடத்து, ஒவ்வொரு விஷயத்திலும் அரசாங்கத்தின் திட்டவட்டமான அனுமதியைப் பெறவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. கலெக்டர்களும், மாநில வீட்டு வசதி வாரியத்தின் தலைவரும் கூடிய வரையில் இந்த ஆணைகளை அனுசரித்து நடக்கின்றனர். புன்செய் நிலங்களும் நெடுங்காலமாகத் தரிசாகக் கிடக்கும் நிலங்களுமே கூடிய வரையில் வீட்டு வசதித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சென்னையைச் சுற்றிலும் கிட்டத்தட்ட ஸ்ரீபெரும்புதூர் வரை இப்படிப்பட்ட நன்செய் நிலங்கள் இருக்கின்றன. அவை வீட்டு மனைகளாக்கப்பட்டு பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கு, அவர்கள் எல்லாவற்றையும் விற்று வீடு கட்டுகிற நிலையில் தடுக்கப்படுமா? அல்லது இப்படி விளம்பரம் செய்யப்பட்டு விற்பனைக்கு வரும் என்று அறிவிக்கும்போது இவைகள் எல்லாம் தடுக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** வீடு கட்ட எடுக்க வேண்டுமென்று சொன்னால்—

(1) whether the lands are situated within the municipal limits;

(2) whether the lands are wet lands and if so, the extent of such wet lands and the crop or crops raised thereon; and

(3) the number of pattadars affected by the acquisition.

இதையெல்லாம் கேட்டுக் கலெக்டர் அபிப்பிராயத்தைத் தெரிந்த பின்தான் செய்கிறார்கள். அரசாங்கம் 1965-ல் ஒரு முடிவு எடுத்திருக்கிறது. விவசாய நிலங்களைப் பாதிக்கக் கூடிய முறையில் விவசாய நிலங்களை வீடுகள் கட்ட எடுத்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அமைச்சர் அவர்கள் தருகிற தகவல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும், எப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற வகையில் அமைந்திருக்கிறது. தனிப்பட்டவர்கள் நன்செய் நிலங்களை வாங்கி அவற்றை மனைகளாக ஆக்கி விற்கிற முறையில் சென்னையிலிருந்து கிட்டத்தட்ட நாற்பது மைல் வரை நான்கு பக்கங்களிலும் இன்றைய தினம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதைத் தடுக்கிற வகையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.



5th August 1966]

**திரு. முனு ஆதி :** நன்செய் நிலங்களை வீடு கட்டும் மனைகளாக மாற்றக் கூடாது என்று மாநிலம் பூராவும் ஒரு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கூடுமான வரையில் ஹௌசிங் போர்டார் எடுக்கவில்லை. நன்செய் நிலங்களை அப்படி எடுப்பது நல்லதல்ல, உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அரசாங்க எண்ணம் நல்ல எண்ணம் தான், நன்செய் நிலங்களை வீடு கட்டும் மனைகளாக மாற்றக் கூடாது என்பது. அதனால் நஷ்டம் அடைபவர்கள் அரசாங்கமும், பொது மக்களும்தான். அரசாங்கத் திட்டத்தின் கீழ் நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களின்மேல் அந்த நிலச் சொந்தக்காரர்கள் கூட அல்ல, ஸ்பெக்குலேட்டர்ஸ்—எல்லா ஜில்லாக்களிலும் இப்படி இருக்கிறது—பணத்தைப் போட்டு அவற்றை மனைகளாகப் பிரித்து அதிகமான விலைக்குக் கொடுப்பதினால் அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரதேசங்களில் விதிகளைத் தளர்த்தி அரசாங்கமே 'பல்க் அக்விசிஷன்', பெருமளவிற்கு நில ஆர்ஜிதம் செய்யக் கூடிய முறையில் வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் நன்செய் புன்செய் என்ற வித்தியாசம் இல்லாமல் நகரத்தின் விஸ்தரிப்புத் தேவையை முன்னிட்டு நில ஆர்ஜிதம் செய்வதற்குள்ள யோசனையை அதிகாரிகளுக்கு வழங்குவார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** உணவு உற்பத்தி கெட்டுவிடக் கூடாது. அதுதான் முக்கிய நோக்கம். தனிப்பட்டவர்கள் தங்கள் தங்கள் நிலங்களை நகரத்தின் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அதிகமான விலைக்கு விற்று விடுகிறார்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்கும் வந்திருக்கிறது. அவர்கள் விற்றுவிடுகிறார்களே, அதை ஹௌசிங் போர்டு எடுக்கலாமா என்று யோசனை செய்தோம். எதற்கும் பரிசீலனை செய்துதான் பதில் தெரிவிக்கவேண்டும்.

### விவசாயப் பள்ளி மாணவர்கள்

***115 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள விவசாயப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் தொகை என்ன, மாவட்டவாரியாக?

(இ) அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் என்னென்ன?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) : A statement[a] is placed on the table of the House.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கும் சேர்ந்து ஒரு பள்ளி இருக்கிறது. அப்படியில்லாமல் மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கும் தனித்தனியாக பள்ளி வைக்க முயற்சி எடுக்கப்படுமா?

---

[a] Printed as Appendix II on pages 586–587.

[5th August 1966

**கனம் திரு. பூ. கக்கன் :** இராமநாதபுரம் ஜில்லாவில், பரமக்குடியில் ஒரு விவசாய ஸ்கூல் இருக்கிறது. மதுரை ஜில்லாவில் விவசாய ஸ்கூல் இல்லை. சமீபத்தில் அக்ரிகல்சரல் காலேஜில் தற்காலிகமாக ஒரு ஸ்கூல் ஆரம்பித்திருக்கிறோம்.

**திரு. சா. கணேசன் :** அமைச்சர் அவர்கள் மதுரைக்கும், இராமநாதபுரத்திற்குமாக அதை அமைக்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் மேசை மீது வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையின் ஏழாவது எண்ணிற்கு நேராக காண்பிக்கப்பட்டிருப்பது—பரமக்குடிக்கு நேரே "பள்ளிகள் எந்த மாவட்டங்களுக்குப் பயன் படுகின்றன" என்ற தலைப்பின்கீழ் 'இராமநாதபுரம், மதுரை' என்றும், மாணவர்களின் எண்ணிக்கையின்கீழ் '20' என்ற விவரமும் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, மதுரைக்கு வேறு, இராமநாதபுரத்திற்கு வேறு என்று தனிப் பள்ளி உள்ளது என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அது விவசாய ஸ்கூல். மதுரையில் விவசாய ஸ்கூல் கிடையாது. விதைப் பண்ணைகள் இருக்கிற இடத்தில் அதை ஆரம்பிக்கிறோம். மதுரையையொட்டி பரமக்குடி இருக்கிறது. ஆகவே, அங்குள்ள பையன்கள் அந்த ஸ்கூலில் சேரலாம் என்று போட்டிருக்கிறார்கள். இப்போது தனியாக ஸ்கூல் வைக்கப்படுகிறது.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, இது போன்ற விவசாயப் பள்ளிகளில் படித்துப் பயிற்சி பெற்ற பல மாணவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவர்களுக்கு வேலை கொடுக்க ஏதாவது உத்தரவாதம் அளிக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த விவசாயப் பள்ளிகளை ஏற்படுத்தியதன் காரணமே, விவசாயக் குடும்பத்தில் பிறந்த வாலிபர்கள், மாணவர்கள் பயின்று தங்கள் தங்கள் நிலங்களில் இன்னும் அதிகமாகப் பாடுபட்டு அங்கே அதிகமாக உற்பத்தியைச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு தான் இவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு சிலர் வேலையை விரும்பினாலும் வேலை கொடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

*தென்னாற்காடு மாவட்டத்தில் பொதுப் பாசன கிணறுகள்*

*** 116 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் பொதுப் பாசனக் கிணறுகள் வெட்டப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) பயனடைவோர் பேணி வரும் பொதுப் பாசனக் கிணறுகளை கனம் உறுப்பினர் குறிக்கின்றார் எனக் கருதுகிறேன். ஆம் எனில், அத்தகைய கிணறுகள் தோண்டப்படவில்லை. எனினும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட ஊற்று நீர்க் கிணறுகளும், சி. முட்லூர் கிராமத்தில் ஆற்று நீர் இறைக்கும் திட்டத்தின் கீழ்த் தோண்டப்பட்ட ஒரு கிணறும், பொதுப் பாசனக் கிணறுகளின் நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றன.



5th August 1966]

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, பொதுக் கிணறு, இதற்கு முன்பு சில அங்கத்தினர்கள் கூட 'கம்யூனிட்டி வெல்' என்று அறிமுகப்படுத்தினார்கள், வெட்டுவது பெரிய விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்குமா? அல்லது சிறு விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பொதுக் கிணறு வெட்டினால் அதைச் சுற்றி நிலங்கள் யார் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் சாதகம் அடைவார்கள்.

*Banana and Fruit Research Stations*

*** 117 Q.—Sri V. SANKARAN :** Will the Hon. the Minister for Home be pleased to state :

(a) Whether there is any proposal to set up new Banana Research Stations and Fruit Research Stations in the State; and

(b) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Committee on Agricultural production*

*** 118 Q.—Sri V. SANKARAN :** Will the Hon. the Minister for Home be pleased to state :

(a) the particulars of recommendations made by the Committee on Agricultural production under the Chairmanship of Sri S. Viswanathan, Member, Board of Revenue; and

(b) the decisions so far taken thereon?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) வேளாண்மை உற்பத்திக் குழு 161 பரிவுரைகள் செய்துள்ளது. அக் குழுவின் அறிக்கை நகல்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கையில் 257—299 பக்கங்களில் இப்பரிவுரைகளின் சுருக்கம் ஒன்று தரப்பட்டுள்ளது. இதுவரை 29 பரிவுரைகளின் மேல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இது மேற்படி சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய பரிவுரைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** சார், அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள பரிவுரைகளில் முக்கியமானவற்றைக் குறிப்பிட முடியுமா?

[5th August 1966

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கம் முக்கியமாக 29 பரிவுரைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவைகள்—

Sinking of 1,000 wells in Orthanad area of Thanjavur district under New Well Subsidy Scheme.

Enhancement of loan limit to Rs. 5,000 for all districts under New Well Subsidy Scheme.

Restriction of grant of loan to one well per ryot under New Well Subsidy Scheme.

Last date for receipt of applications for loans under New Well Subsidy Scheme to be fixed as 30th December of each financial year instead of 30th September.

Revision of period allowed for completion of well under New Well Subsidy Scheme from 18 to 30 months.

Commencement of recovery of loan under New Well Subsidy Scheme after one year from the completion of the well and period of recovery to be fixed as ten years for a loan of Rs. 3,000 and fifteen years for a loan of Rs. 5,000.

Stocking of detonators and explosives required for deepening of wells and blasting operation to be treated as departmental work, labour being provided by farmers.

இப்படி இன்னும் ஏற்றுக் கொண்டுள்ள பரிவுரைகள் இருக்கின்றன. மொத்தம் 29 பரிவுரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகள் பூராவையும் படிக்கவேண்டுமா ?

**கனம் சபாநாயகர் :** முக்கியமானவற்றைச் சொன்னால் போதும். ஒரு பெரிய ஸ்டேட்மென்ட்டையே படிக்க முடியுமா என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்படி விவசாயிகளுக்கு நன்மை ஏற்படக்கூடிய பல பரிவுரைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

*Procurement of paddy*

* 119. *Q.*—SRI S. MADHAVAN : }
SRI K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether the Government have taken steps to procure paddy from the agriculturists in Ramanathapuram district; and

(*b*) if so, the principles followed in fixing levy per acre?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Collector of Ramanathapuram has adopted three broad classifications in the district namely—(i) Project area, (ii) Vaigai River fed area and (iii) other areas and has fixed different rates of levy for these three classifications subject to the following principles :—

"In respect of Srivilliputhur taluk and Rajapalayam taluk, no levy will be imposed on shavi cases and procurement will be made from holdings where yields are justifiable."



5th August 1966]

In respect of cases, where yields are low, procurement will be made where there is marketable surplus :—

2. The rates of levy fixed for Ramanathapuram district for procurement during 1966 are as follows :—

*One acre and below* : No levy.

*Between 1 and 5 acres* : 6 bags per acre in the project area, 4 bags per acre in the Vaigai River Fed area and 2 bags per acre in other areas.

*Between 5 and 10 acres* : 8 bags per acre in the project area, 5 bags per acre in the Vaigai River Fed area and 3 bags per acre in other areas.

*Between 10 and 15 acres* : 9 bags per acre in the project area, 6 bags per acre in Vaigai River Fed area and 4 bags per acre in other areas.

*Above 15 acres* : Ten bags per acre in project area, 7 bags per acre in the Vaigai Fed area and 5 bags per acre in other areas.

*திரு. செ. மாதவன் :* தலைவர் அவர்களே, மார்க்கெட்டபிள் சர்ப்ளஸைத் தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் அறிவித்தது. ஆனால் ஏக்கருக்கு இத்தனை மூட்டை என்று கலெக்டர் நிர்மானித்துவிட்டு, விளைந்ததா, விளையவில்லையா, இரண்டு ஏக்கர் உள்ளவருக்குப் போதுமா, போதாதா என்று கூடப் பாராமல் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று சொல்லுகிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் என்று சொல்லும்போது திட்டவட்டமாக எவ்வளவு என்று நிபுணர்கள் முடிவு செய்யாத காரணத்தினால், மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பூராவும் இல்லாமல் ஒரு பாகம் மட்டும் வாங்க லெவி முறை அமலில் இருக்கிறது.

*திரு. சா. கணேசன் :* இந்த லெவி முறையை அமலுக்குக் கொண்டு வருவதில் சில தாலூக்காக்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டது. திருப்பத்தூர், திருவாடானை போன்ற முழுக்க முழுக்க மானாவாரிப் பிராந்தியமாகவும், கிட்டத்தட்ட நன்செய்த் தரம் புன்செய் ஆகவும் இருக்கிற பகுதிகளில் இந்த விதி விலக்கு அளிக்கப்படாமல் இருக்கிறதா ? அல்லது விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா ? அளிக்கப்படாவிட்டால் அளிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த ஸ்டேட்மென்ட்டைப் பார்த்தால் இந்த வருஷம் இருந்த நிலையைத் தான் நான் சொன்னேன். ஸ்ரீவில்லிபுத்தூர் ஏரியாவில் கட்டாயப்படுத்தாதன் காரணம் அங்கு பருவமழை இல்லாததுதான். இராமநாதபுரம் ஜில்லாவில் திருப்பத்தூர், சிவகங்கைத் தாலூக்காக்களில் போதுமான மழை இருந்து நல்ல விளைச்சல் இருந்தது.

[5th August 1966

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், அரசாங்கம் ஏக்கருக்கு 8 மூட்டை கட்டாயக் கொள்முதலில் வாங்குகிறது. இந்த ஆண்டு வைகைப் பாசனப் பகுதி பஞ்சமாகப் போய்விட்டது. இராமநாதபுரம் ஜில்லா பற்றி அமைச்சருக்குத் தெரியும். ஒரு வருஷம் விளைந்ததை மூன்று வருஷங்களுக்கு வைத்துக் கொள்ளுவார்கள். கொள்முதல் உத்தரவு வந்தவுடன் கலெக்டரும், தாசில்தாரும் டைரக்ட் செய்து கட்டாயப்படுத்தி வசூல் செய்கிறார்கள். அதனால் பஞ்சம் ஏற்படுகிறது. . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கேள்வி போடுகிறாரா? அல்லது பிரசங்கம் செய்கிறாரா? பிரசங்கம் செய்துவிட்டு ஒரு கேள்வி போடுவதா? இராமநாதபுரம் ஜில்லாவில் பஞ்சமாக இருப்பதால் அங்கு கொள்முதல் இன்றி விட்டு விடுவார்களா என்று

(பதில் இல்லை.)

*120 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்ட கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியிலிருந்து 1964 ஜூலையிலிருந்து 1965 மார்ச்சு 31-ம் தேதி வரையில் சர்க்கார் கொள்முதல் செய்த அரிசி எவ்வளவு டன்கள்?

(இ) இக் கொள்முதல் மூலம் அரசாங்கத்துக்கோ அல்லது கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டிக்கோ நஷ்டம் ஏற்பட்டது உண்மையா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 1964 ஜூலை முதல் 1965 மார்ச் 31 வரை வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு சப்ளை—விற்பனைச் சங்கத்திடமிருந்து அரசாங்கம் 169.2 டன் அரிசி கொள்முதல் செய்தது.

(இ) ஆம்.

(உ) வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு சப்ளை—விற்பனைச் சங்கத்திற்கு இதனால் ரூ. 4,780 நஷ்டம் ஏற்பட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த நஷ்டம் எதனால் ஏற்பட்டது என்று அந்த அதிகாரிகளை அரசாங்கம் கேட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : விசாரித்ததில் அந்த வருஷம் அதிகமாகக் குறுவை நெல், அரிசி வாங்க வேண்டிய நிலை இருந்தது, மொத்த டிரான்ஸாக்ஷனில் இந்த நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.



5th August 1966]

*121 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நெல் விலையை உயர்த்த உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMIAH : No.

திரு. செ. மாதவன் : நெல் விலையை மட்டும் அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டிய மற்ற பொருள்களின் விலையை நிர்ணயிக்கவில்லை. 1947-48-ல் தமிழக அரசாங்கம் செய்ததுபோல நெல் விலைக்கு சப்சிடி கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

*122 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரக்கோணம் தாலூக்காவில் பனப்பாக்கம், தக்கோலம், நெமிலி, புதுகேசாவரம் ஆகிய ஊர்களில் நெல் கொள்முதல் செய்ய எஸ். ஜே. ராமசாமி, எம்.எல்.ஏ. அவர்களிடமிருந்து 7—12—1965 அன்று கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) உறுப்பினர் குறிப்பிட்ட கிராமங்களில் கிடைக்கும் நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்பட்டார். இந்த நான்கு கிராமங்களிலும் 7—12—1965 வரை 491.5 குவிண்டால் நெல் கொள்முதல் செய்யப்பட்டதென்றும் 7—12—1365-லிருந்து 26—3—1966 வரை 7,011.75 குவிண்டால் நெல் கொள்முதல் செய்யப்பட்டதென்றும் மொத்தம் 7,503.25 குவிண்டால் நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்றும் கலெக்டர் அறிவித்துள்ளார்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தக் கேள்வி போட்டே ஏறக்குறைய ஒரு வருடம் ஆகிறது. அப்பொழுதிருந்தே மழை பெய்த காலத்தில் நெல் கொள்முதல் செய்வதற்கு ஆள் இல்லாமல் இருந்தது. இந்தக் குறையை இனிமேலாவது சர்க்கார் நிவர்த்திப் பார்களா?

கனம் சபாநாயகர் : எப்படி ஒரு வருஷமாகும்? கனம் அங்கத்தினர் கோரிக்கை அனுப்பியிருப்பதாகச் சொல்வது 7—12—1965-ல் தானே?

[5th August 1966

திரு. எஸ். ஜே. ராமசாமி : நான் டிசம்பரில் அனுப்பினேன்.

கனம் சபாநாயகர் : அப்பொழுது எப்படி ஒரு வருஷமாகும்? கனம் அங்கத்தினர் குறிப்பிட்டிருக்கிற டேட்டை வைத்துத்தானே சொல்கிறேன்.

(பதில் இல்லை.)

*123 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலூக்காவிலிருந்து 1965 நவம்பர் முதல் 1966 ஜனவரி 29-ம் தேதிவரை விவசாயிகளிடமிருந்து எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

(இ) என்னென்ன ரகங்கள் கொள்முதல் ஆயின?

(உ) எந்தெந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) வடார்க்காடு மாவட்டம் அரக்கோணம் தாலூகாவிலிருந்து 1965 நவம்பர் முதல் 1966 ஜனவரி 29-ம் தேதி வரை 3,550.581 டன் நெல்லும் 40,389 டன் அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டது.

(இ) கிச்சடி சம்பா, வயக் கொண்டான், செங்கற்பட்டு சிறுமணி முதலிய ரகங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

(உ) கொள்முதல் செய்யப்பட்ட நெல்லும் அரிசியும் கேரளா, கோயம்புத்தூர், சென்னை நகரம் முதலிய இடங்களுக்கு அனுப்பப்பட்டது.

*124 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் நெல், அரிசிக் கொள்முதல் செய்ய எந்தெந்த மாவட்டங்களில் உணவு கார்ப்பரேஷன் அனுமதிக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI V. RAMAIAH : During October-November 1965, the Food Corporation of India procured paddy in Tiruchirappalli district. From January 1966, the Corporation has been procuring paddy in Kunnathur, Maduramangalam and Kadambathur firkas in Chingleput district. The Corporation has now been permitted to procure paddy as Government agent throughout the State.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த உணவு வர்த்தகக் கார்ப்பரேஷனை வடஆற்காடு மாவட்டத்திற்கு விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கக்கூடியது எந்த ஜில்லாவிலும் வாங்கலாம், கவர்ன்மெண்டு ஏஜெண்டாக.



5th August 1966]

திரு. மா. தண்டாயுதபாணி : தஞ்சை ஜில்லாவில் உணவுக் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்த நெல், அரிசி அளவு எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபற்றி விவரம் இல்லை. தனியாகக் கேள்வி வேண்டும்.

*125 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

லெவி கொள்முதல் அளவு நிர்ணயிப்பது தாலூகா அடிப்படையிலா? அல்லது வேறு எந்த அடிப்படையில்?

THE HON. SRI V. RAMAIAH : Generally speaking, the rate of levy represents the marketable surplus in the yield on an acre of land, arrived at after allowing the reasonable requirements of the farmer.

In 1964, when the necessity for building up a buffer stock arose, the Government fixed the following low rates of levy :—

| | |
|---|---|
| Up to 1 acre ... ... ... | Nil. |
| 2 to 5 acres ... ... ... | 2 bags per acre. |
| 6 to 10 acres ... ... ... | 3 bags. |
| 11 to 15 acres ... ... ... | 5 or 6 bags. |
| Above 15 acres ... ... | 8 bags per acre. |

However, as the soil fertility and yield differed in the districts and that these conditions also varied between irrigated and irrigated areas within the district, the Collectors were given full discretion to vary the rates of levy to suit the local conditions. The Collectors have accordingly fixed varying rates of levy in each district with reference to the conditions prevailing in the district. This year, as it has been felt more necessary to build up buffer stocks the rates of levy adopted are higher than the guide line low levy fixed in 1964. However, with a view to avoid hardship to small producers, the Government have issued specific instructions to the Collectors high-lighting the following points :—

(i) No levy need be collected from holdings of one acre and less;

(ii) in the case of small holders, particulary those owning two to three acres entire marketable surplus need not be collected and the levy alone need be collected ;

(iii) no differentiation need be made from acre to acre on the basis of yield and procurement should be made at the uniform rate of levy alone for low yields; and

(iv) efforts should be to procure the entire surplus from large producers by utilising the powers of requisitioning, if necessary.

SRI M. S. SELVARAJAN : Sir, is it not a fact that the bonus scheme has been introduced in respect of the paddy collected over and above the levy fixed? Also, are the Government aware that the bonus amount has not yet been distributed in many places and if so, the reasons therefor?

[5th August 1966

THE HON. SRI V. RAMAIAH : Bonus is being given to those who give paddy over and above the levy rate and in some districts the payment has already been made. In the case of other districts, it might take some time to collect statistics regarding it.

** 126 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*லெவிக்கு தானியங்கள் கொள்முதல் செய்வது அளவை முறையிலா ? நிறுவை முறையிலா ?*

THE HON. SRI V. RAMIAH : The procurement of foodgrains is by weight only.

SRI M. S. SELVARAJAN : Sir, are the Government aware that difficulties have been experienced in some places due to non-availability of weights at the time of procurement of foodgrains and if so, what steps have been taken for remedying them?

THE HON. SRI V. RAMAIAH : I do not think that there is any major complaint on that matter. But if there are any local grievances I think the Collectors or the District Supply Officers should be in a position to set them right.

** 127 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) கோவை மாவட்டத்தில், அம் மாவட்ட சேமிப்பு அதிகாரி* (District Supply Officer) *உள்பட ஆறு சர்க்கார் அதிகாரிகளுக்கு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அத்துமீறி தனிநபர் ஒருவர் வீட்டிலிருந்து நெல் கைப்பற்றியது குறித்து சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தண்டனை ஏதேனும் வழங்கப்பட்டதா ?*

*(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?*

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) A complaint was filed by Sri Karuppa Moopan of Madhippanoor against the Taluk Supply Officer and five others for offences under sections 448 and 380, Indian Penal Code (house trespass and theft). The Sub-Magistrate of Perundurai who tried the case found these officials guilty of the offence and pronounced his judgment on 6th April 1966, convicting and sentencing the officials to pay a fine of Rs. 50 each under each count, in default to six weeks rigorous imprisonment each and imprisonment till the rising of the Court. The District Supply Officer was not involved in this case. An appeal has however been preferred against the judgment of the Sub-Magistrate in the Court of Subdivisional Magistrate, Erode

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஒரு விவசாயியினுடைய வீட்டில் அத்துமீறி, அந்த விவசாயினுடைய அனுமதி இல்லாமல் உள்ளே அந்த அதிகாரிகள் சென்றூர்கள். நீதிமன்றத்தில் அந்த விவசாயினுடைய வீட்டில் நெல்லை திருடியதாகக் குற்றம் கண்டு பிடித்திருக்கிறூர்கள். அதன் பேரில் அதிகாரிகள் அப்பீல் செய்திருப்பதாக*



5th August 1966] *[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]*

*அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். அந்த விவசாயினுடைய அனுமதி இல்லாமல் ஏன் சென்றூர்கள், அல்லது அந்த விவசாயினுடைய அனுமதி இல்லாமல் எப்படிச் சென்றூர்கள் என்று டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் அந்த அதிகாரிகள் பேரில் அரசாங்கம் எடுத்ததா ? இதைப் போல செய்யக் கூடாது என்று மாநிலத்திலுள்ள பிற அதிகாரிகளுக்கும் இந்த அரசாங்கம் இதற்குப் பிறகு ஏதேனும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறதா ?*

*கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த விஷயம் இப்பொழுது கோர்ட்டில் இருக்கிறது. முடிவு தெரிந்ததற்குப் பிறகு மற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.*

** 128 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீக்கழ்ண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதி நடந்த வடவேலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில், நவரை கார் கொள்முதல் செய்வதை அரசாங்கம் நிறுத்திவிடும்படி, அரக்கோணம் தொகுதி சட்டசபை உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டனவா ?*

*(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?*

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

* 129 Q.—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any petition has recently been received by the Government against the Tahsildar, Supply Officer and other Government servants in procuring paddy by compulsion from the small landholders in Polur taluk, North Arcot district; and

(b) if so, the action taken thereon.

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

*திரு. கி. இரா. சம்பந்தம் : வடார்க்காடு ஜில்லாவில் எந்த முறையான லெவி அமைக்கப்பட்டிருக்கிறது ? அந்த லெவி அமைக்கப்பட்ட முறையைப்பற்றி நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.*

*கனம் சபாநாயகர் : இப்பொழுது தான் அமைச்சர் அவர்கள் சொன்ஞர்களே, இவ்வளவு நேரம் படித்தார்களே, ஸ்டேட் பூராவுக்கும் என்னவென்று.*

*(பதில் இல்லை.)*

*Tuticorin Harbour Project*

* 130 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any modification has been proposed to the detailed Project Report on the Tuticorin Harbour Project prepared by the Chief Engineer and Administrator of the said Project; and

(b) if so, the details thereof?

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தின் தலைமைப் பொறியாளர்—நிர்வாகி தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்காகத் தயாரித்த திட்ட விவர அறிக்கையில் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு செய்யக் கருதியுள்ள முக்கிய மாறுதல்கள் பின்வருவனவற்றிற்குச் சம்பந்தமுடையவையென்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.*

*(1) ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கப்பல்களை நிறுத்துவதற்கு இப் பெரிய துறைமுகத்தில் வசதிகள் செய்து தருதல் ;*

*(2) ஐந்து கப்பல் துறைகளில் இரண்டின் வடிவமைப்பை பெரிய மரக்கலங்கள் வருவதற்கேற்பவும் அவை 35 அடி நீரில் அமிழ்ந்திருக்கும் வகையில் பின்னர் இவற்றை ஆழப்படுத்தும் வகையிலும் அமைத்தல்.*

*திரு. வை. சங்கரன் : இந்த மாறுதலோடு இந்தத் தூத்துக்குடி துறைமுக பிராஜக்ட் எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று சொல்ல முடியுமா ?*

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்த மாறுதல் யோசனையையும் வைத்து, மொத்த வேலைகளோடு சேர்த்து இதையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.*

*திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த விரிவான திட்டத்தோடு சேர்ந்து, தூத்துக்குடியின் அருகாமையிலுள்ள புன்னைகாயல் போன்ற சிறிய துறைமுகங்களையும் சீர்படுத்தி, அதில் சிறிய கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சுவதற்குரிய வகையில் சீர்படுத்துவதற்கான திட்டம் இதோடு சேர்க்கப்பட்டிருக்கிறதா, இல்லையென்றால் இதையும் சேர்ப்பதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா ?*

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இது சென்ட்ரல் கவர்ன்மென்ட்டைப் பொறுத்ததல்ல. சென்னை சர்க்கார் செய்ய வேண்டிய வேலைகள், அதாவது மைனர் போர்ட்ஸ் என்பதின் கீழ் வரும். இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் இதைப் பற்றிய எல்லா விவரங்களையும் கொடுக்கலாம்.*

### காதி இலாகா உற்பத்தி செய்த நூல்

**131 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) 1964-65-ல் காதி இலாகாவால் உற்பத்தி செய்யப்பட்ட நூல் நம்பர் வாரியாக எத்தனை கெஜம் ?*

*(இ) அதற்காக உபயோகிக்கப்பட்ட பஞ்சு ரோல்கள் ரகவாரியாக எத்தனை பேல்கள் ?*

**கனம் திரு ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

| | மெட்ரிக் சிட்டங்கள். லட்சம் |
|---|---|
| (அ) (1) முரட்டு ரகம் : ஆங்கில நெம்பர் 12-லிருந்து 18 வரை (அதாவது) மெட்ரிக் நெம்பர் 20-லிருந்து 30 வரை. | 55·00 |



| | மெட்ரிக் சிட்டங்கள் லட்சம். |
|---|---|
| (2) நடுத்தர ரகம் : ஆங்கில நெம்பர் 19-லிருந்து 24 வரை (அதாவது) மெட்ரிக் நெம்பர் 31-லிருந்து 41 வரை. | 121·88 |
| (3) உயர்ந்த ரகமும் மிக உயர்ந்த ரகமும் : ஆங்கில நெம்பர் 25-ம் அதற்கு மேலும் (அதாவது) மெட்ரிக் நெம்பர் 42-ம் அதற்கு மேலும். (ஒரு சிட்டம் 1,000 மீட்டர்கள்) | 44·00 |

| | கிலோ கிராம்கள். |
|---|---|
| (இ) நெட்டிழைப் பருத்தி .. .. .. | 4,35,707·060 |
| சிற்றிழைப் பருத்தி .. .. .. | 2,48,021·299 |

### பதநீர் பற்றிய செய்திப் படம்

**132 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) இந்த ஆண்டில், காதி இலாகாவினால் பதநீர் அருந்துவதைப்பற்றி பிரசாரம் செய்ய செய்திப் படம் ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளதா ?*

*(இ) ஆம் எனில், அந்தப் படம் தயாரிக்க எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டுள்ளது ?*

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) சென்னை மாநில கதர் கிராம கைத்தொழில் போர்டினால் இந்த ஆண்டில் பதனீர் பிரசாரம் செய்ய செய்திப் படம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. ஆனால், சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் 1964-65-ல் "குறைவற்ற செல்வம்—பதனீர்" என்று செய்திப் படம் ஒன்று தயாரித்துள்ளது. இதற்கான செலவுத் தொகை ரூபாய் 17,221.52.*

*திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தச் செய்திப் படத்தினால் சர்க்காருக்கு ஏற்பட்ட செலவைப்பற்றிச் சொன்னார்கள், இவ்வளவு செலவு செய்த படத்தின் மூலமாக ஏதாவது லாபம் ஏற்பட்டதா ?*

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தச் செய்திப் படத்தை தயாரிப்பதற்கான செலவை இதற்குள்ள பெடரேஷன் கொடுத்திருக்கிறார்கள். அவ்விதம்தான் செய்திப் படம் தயாரிக்கப்பட்டது . . .*

*கனம் சபாநாயகர் : லாபம் ஏதாவது உண்டா என்று கேட்கிறார்கள்.*

*கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தப் படத்தைப் பார்த்து, அதிலுள்ள முறைகளைப் பின்பற்றி நல்ல முறையில் பதனீர் தயாரிக்கின்ற முறைகளைத் தெரிந்து கொள்ளலாம். அது தான் லாபம்.*

[5th August 1966

### கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கையாடல்

* 133 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் 1963 ஜனவரி முதல் 1965 டிசம்பர் முடிய எத்தனை கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கையாடல் சம்பந்தமான விசாரணைகள் நடத்தப்பட்டன—மாவட்டவாரியாக ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : District-wise particulars of the co-operative credit societies in which enquiries connected with misappropriation of funds were conducted during January 1963 to December 1965 are as follows :—

| *Name of the district.* | *Number of societies.* |
|---|---|
| 1. Madras ... ... ... ... ... | 5 |
| 2. Chingleput ... ... ... ... | 17 |
| 3. North Arcot ... ... ... ... | 21 |
| 4. South Arcot ... ... ... ... | 14 |
| 5. Thanjavur ... ... ... ... ... | 30 |
| 6. Tiruchirappalli ... ... ... ... | 22 |
| 7. Salem ... ... ... ... ... | 14 |
| 8. Dharmapuri ... ... ... ... | 2 |
| 9. Coimbatore ... ... ... ... | 14 |
| 10. Madurai ... ... ... ... ... | 6 |
| 11. Ramanathapuram ... ... ... | 23 |
| 12. Tirunelveli ... ... ... ... | 11 |
| 13. Kanyakumari ... ... ... ... | 8 |
| 14. Nilgiris ... ... ... ... ... | 4 |
| Total ... | 191 |

### *Pay and allowances of amins*

* 134 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have proposed to increase the pay scale, dearness and travelling alowances of Court amins to be on a par with those of readers?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No.

**திரு. வை. சங்கரன் :** இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமீனுக்களிடமிருந்து ஏதாவது முறையீடு வந்திருக்கிறதா ?

**கனம் சபாநாயகர் :** அது தான் இல்லையென்று சொல்லுகிறார்களே, அதற்குப் பின்னால் என்ன கேள்வி போடுகிறீர்கள் ?

### மீன் படகுகள்

* 135 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமரங்கள், வள்ளங்கள் எவ்வளவு ?



5th August 1966]

(இ) கட்டுமரம் கட்டுவதற்கு என்னென்ன மரங்கள் உபயோகிக்கப்படுகின்றன?

(உ) கட்டுமரத்திற்குத் தேவையான அலிபீஸ்யா மரம் வேண்டிய அளவு கிடைப்பதில்லை என்ற தகவல் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

(எ) தேவையான அளவு அல்பீஸ்யா மரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) இம் மாநிலத்தில் ஏறக்குறைய 23,000 கட்டு மரங்களும், 5,000 வள்ளங்களும் உள்ளன.

(இ) இம் மாநிலத்தில் உள்ள மீனவர்கள், கட்டுமரங்களைக் கட்ட மலைவேம்பு, வாகை போன்ற மரங்களின் கட்டைகளைப் பயன்படுத்துகின்றனர்.

(உ) இல்லை; சேலம், கோவை மாவட்டங்களிலுள்ள காடுகளிலும், கேரளத்திலுள்ள காடுகளிலும் வாகை மரம் கிடைக்கின்றது. இவற்றை மீனவர்கள் இவ்விடங்களிலிருந்து சாதாரணமாக வாணிக முறையில் பெறுகின்றனர்.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஸார், கட்டுமரங்கள் கட்டுவதற்கான தேவைப்படுகிற மரங்கள் இலங்கையிலிருந்து வந்து கொண்டு இருந்தன. இப்போது அதற்குத் தடை இருப்பதாகத் தெரிகிறது. இதைப் பற்றியுள்ள விவரங்களை அரசாங்கம் பரிசீலனை செய்துள்ளதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** உண்மையில் முன்னால் இலங்கையிலிருந்து மரங்கள் வந்து கொண்டிருந்தன. இப்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், கட்டுமரங்கள் கட்டுவதற்கான மரங்களைப் பெறுவதில் சங்கடம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

* 136 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் 1965-66-ல் எத்தனை இயந்திரப் படகுகள் தயாரிக்கப்பட்டுள்ளன ?

(இ) 1966-67-ல் எத்தனை தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) 1965-66-ல் 30 அடி நீளமுள்ள 108 படகுகளும், 32 அடி நீளமுள்ள 35 படகுகளும் கட்டப்பட்டன.

(இ) 1966-67-ல் 30 அடி நீளமுள்ள 100 படகுகளும், 32 அடி நீளமுள்ள 40 படகுகளும், 36 அடி நீளமுள்ள 10 படகுகளும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கட்டப்பட்ட படகுகள் முழுமையும் விநியோகிக்கப்பட்டு விட்டதா ? பாக்கி ஏதேனும் இருக்கிறது என்றால் இதுவரை விநியோகிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** கட்டப்பட்ட பாடுகள் எல்லாம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. விநியோகிக்கப்படாமல் ஒன்றும் இல்லை.

*Chinnangudi-Akkur Mukkuttu Road*

*137 Q.—SRI K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) whether any representation has been made by the Chinnangudi fishermen in Mayuram taluk about the metalling of Chinnangudi to Akkur-Mukkuttu road connecting many villages viz., Kalamanallur, Kidangal and so on; and

(b) if so, the action taken thereon?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) ஆக்கூர் முக்கூட்டிலிருந்து கிடங்கல், கலமநல்லூர், வழியாகச் சின்னக் குடிக்குச் செல்லும் சுமார் 4 மைல் நீளமுள்ள சாலையை அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலை இப்போது நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** அந்த ரோடுகளுக்கிடையே இருக்கின்ற வடிகால்களுக்குப் பாலம் கட்டபட வேண்டியிருக்கிறது. அதையும் இதோடு தொடர்ந்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ரோடு வேலையோடு சேர்ந்தது தான்.

**உப்பனாற்றின் மீது பாலம்**

* 138 **கேள்வி.—திரு. நா. இராசாங்கம் :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கூடலூர் தாலூகா கடலோரப் பகுதியிலுள்ள உப்பனாற்றின் மீது பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பமாகும் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) & (இ) இவ்வேலை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. இராசாங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, உப்பனாற்றில் பாலம் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன. இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேலை போட்டியின் காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறதா, அல்லது சர்க்காருடைய ஏற்பாட்டினால் நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** போட்டியின் காரணமாக எந்த வேலையும் நிறுத்தப்படவில்லை. மத்திய சர்க்காரிடத்தில் மொத்த ரோடு வேலைக்காக ரூ. 25 லட்சம் கேட்டிருந்தோம். அதற்கு





5 லட்சம் தான் கொடுத்தார்கள். இந்த வேலையைப் பொறுத்த வரையில் 8 லட்சம் தேவைப்படுகிறது. அதனால்தான் தற்காலிகமாக இந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**பஞ்சாயத்து யூனியன் ஜீப்கள்**

* 139 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஜீப் வண்டிகளுக்கு ஆகும் பெட்ரோல் செலவு, ரிப்பேர் செலவு ஆகியவைகளைச் சர்க்கார் நேரடியாகக் கொடுக்கிறதா ?

(இ) ஆமெனில், 1964-65-ம் ஆண்டுக்கு ஒவ்வொரு யூனியனுக்கும் பெட்ரோல், ரிப்பேர் ஆகியவைகளுக்குத் தனித்தனியே எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) 1964-65-ம் ஆண்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள மோட்டார் வாகனங்களுக்கு வாங்கப்பட்ட பெட்ரோல், ரிப்பேர் செலவினங்களின் விவரப்பட்டியல் [a] இத்துடன் இணைக்கப்பட்டு சட்டசபையின் மேசையின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது.

* 140 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-65-ல் தமிழகத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் ஜீப் கார்களுக்கு பெட்ரோலுக்காக செலவழித்தத் தொகை எவ்வளவு ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** 1964-65-ம் ஆண்டில் பஞ்சாயத்து யூனியனிலுள்ள மோட்டார் வாகனங்களுக்குப் பெட்ரோல் வாங்கிய வகையில் செலவு 12,18,982 ரூபாய்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 125 கியாலன் பெட்ரோல் தான் உபயோகப்படுத்தப்படலாம் என்று ஒரு முறை வைத்திருக்கிறார்கள். இதிலும் எமர்ஜென்சியைப் பொறுத்து 50 காலன் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்விதம் உத்தரவு போட்டிருந்தும் செங்கற்பட்டு ஜில்லா, ஸ்ரீ பெரும்புதூர் பஞ்சாயத்து யூனியனில் 6,000 ரூபாய் பெட்ரோலுக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் கிணற்றுக்கடவு என்ற யூனியனில் 10 ஆயிரம் ரூபாய் பெட்ரோல் செலவு செய்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. ஒருவேளை ஜில்லாக் கலெக்டர் அவர்களிடமிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தோ,

a 588–596-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[5th August 1966

அனுமதி பெற்று சர்க்கார் காரியங்களுக்காக, 'டீவியேட்' செய்து செலவு செய்திருக்கக்கூடும் என்றுதான் யூகிக்கிறேன். சரியான விவரங்கள் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துச் சொல்லலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்படுகின்ற ஜீப்கள் அமைச்சர்கள் போன்ற காலத்தில் நாள் கணக்கில் அங்கங்கே சுற்றி அலைவதால், கொடுக்கப்படுகிற பெட்ரோல் தீர்ந்து விடுகிறது. பின்னால் யூனியன் வேலைகளுக்குப் பெட்ரோல் இல்லாமல் வருத்தப்படவேண்டியிருக்கிறது. ஆகவே, அமைச்சர்கள் வரும்போது, செலவு செய்கின்ற பெட்ரோலை அவர்கள் தனிப்பட்ட முறையில் செலவு செய்து கொள்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி உத்தேசம் ஒன்றும் இல்லை.

**திரு. செ. மாதவன் :** அரசாங்க ஜீப்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று மத்திய சர்க்கார் கூறியிருப்பதை இந்தச் சர்க்கார் பின்பற்றியதா ? அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய மத்திய சர்க்காரின் யோசனைகளை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ததா? அண்மையில் பொதுத் தேர்தல் வருகின்ற நேரத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஜீப்களை எல்லாம் வாபஸ் பெறுவதற்கு ஏதேனும் யோசனை இருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே பிளாக் ஏரியாக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஜீப்களைப் பிற காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கனவே 325 லிட்டர் உபயோகித்துக் கொள்ளலாம் என்றிருந்ததை 300 லிட்டர்தான் உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று குறைத்து உத்தரவு போடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் சேர்மனோ அல்லது அதிகாரிகளோ வெளிகாரியங்களுக்குக் காரியாலய ஜீப்களை எடுத்துச் செல்லக் கூடாது என்று ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கு மேல் எலெக்ஷன் வருவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் ஜீப்களை எந்த அளவுக்கு ஜில்லாக்களில் உபயோகித்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி மத்திய சர்க்காரின் யோசனைப்படி —ஜீப்களைத் தனிப்பட்ட முறையில் உபயோகித்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவு போடுவதற்கும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி சீக்கிரமாக சர்க்கார் உத்தரவு வெளியிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-30 a.m. **திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், சில பஞ்சாயத்து யூனியன் ஜீப்புகள் மிகவும் அதிகமாகப் பெட்ரோலைச் செலவழித்து இருக்கின்றன. இன்னும் சில ஜீப்புக்கள் ரூ. 5,000 வரை செலவு செய்து பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன—ஒரு ஜீப்பின் விலையே இருக்கும்



5th August 1966]

போலிருக்கிறது. ஏன் அந்த முறையில் செலவுகள் ஆயின என்று கேட்டதற்கு, கனம் அமைச்சர் அதைப் பற்றித் தனியாகத் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கலாம என்று சொன்னார்கள். இந்த அறிக்கை மேசைமேல் வைக்கத் தயாரித்திருக்கிறார்கள், அப்பொழுதே இதைக் கவனித்திருக்கலாம். அவ்விதம் அவ்வப் பொழுது பரிசீலனை செய்யப்படுகிறதா என்கிற ஒரு விஷயத்தை யாவது இளமை துடிப்புள்ள மந்திரியிடமிருந்து அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒரே சமயத்தில் ஜீப்கள் எல்லா பிளாக்குகளுக்கும் கொடுக்கப்படவில்லை. மூன்று, நான்கு ஸ்டேஜ்களாகப் பிரித்து கொடுக்கப்பட்டன. ஏற்கனவே பழசாக இருந்து, நோயுற்று இருந்தால், அதிகப் பெட்ரோல் சாப்பிடும் என்பதுதான் காரணமாக இருக்கலாம்.

**MR. SPEAKER :** Questions are over.

**[*Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO CRISIS IN HANDLOOM INDUSTRY.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார், இம்மாநிலத்தில் துணி இருப்புகள் தேங்கிக் கிடப்பதினால் கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள இடர்பாடான நிலையும், அதனால் நெசவாளர்கள் பெருமளவில் வேலையிழந்துள்ளதும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, the Handloom Industry in the State has been passing through difficult times during the last few months, mainly owing to the accumulation of stocks. Some of the major factors responsible for this accumulation are the decline in the export of Bleeding Madras and other varieties of handloom cloth, the rise in the prices of yarn and consequential increase in the cost of production of handloom cloth and the lower purchasing power of the consumers.

The export of Bleeding Madras to U.S.A., which was flourishing till the first half of 1965 came to a standstill thereafter because of various factors, viz., the over-selling by exporters, change of fashion of overseas buyers, etc. In January 1966 there was an accumulation of Bleeding Madras to the extent of 2 to 3 million yards in the market. The Government of India sent a delegation under the leadership of our Minister for Industries, to the United States of America and East European Countries in May 1966 to explore the possibilities of expanding the export of Bleeding Madras. Based on the recommendation of the delegation, the Government of India have laid down a revised export policy on the following lines :—

(1) The quota system and all other export incentive schemes have been abolished; and

அனுமதி பெற்று சர்க்கார் காரியங்களுக்காக, 'டீவியேட்' செய்து செலவு செய்திருக்கக்கூடும் என்றுதான் யூகிக்கிறேன். சரியான விவரங்கள் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துச் சொல்லலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்படுகின்ற ஜீப்கள் அமைச்சர்கள் போன்ற காலத்தில் நாள் கணக்கில் அங்கங்கே சுற்றி அலைவதால், கொடுக்கப்படுகிற பெட்ரோல் தீர்ந்து விடுகிறது. பின்னால் யூனியன் வேலைகளுக்குப் பெட்ரோல் இல்லாமல் வருத்தப்படவேண்டியிருக்கிறது. ஆகவே, அமைச்சர்கள் வரும்போது, செலவு செய்கின்ற பெட்ரோலை அவர்கள் தனிப்பட்ட முறையில் செலவு செய்து கொள்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி உத்தேசம் ஒன்றும் இல்லை.

**திரு. செ. மாதவன் :** அரசாங்க ஜீப்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று மத்திய சர்க்கார் கூறியிருப்பதை இந்தச் சர்க்கார் பின்பற்றியதா ? அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய மத்திய சர்க்காரின் யோசனைகளை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ததா? அண்மையில் பொதுத் தேர்தல் வருகின்ற நேரத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஜீப்களை எல்லாம் வாபஸ் பெறுவதற்கு ஏதேனும் யோசனை இருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே பிளாக் ஏரியாக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஜீப்களைப் பிற காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கனவே 325 லிட்டர் உபயோகித்துக் கொள்ளலாம் என்றிருந்ததை 300 லிட்டர்தான் உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று குறைத்து உத்தரவு போடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் சேர்மனோ அல்லது அதிகாரிகளோ வெளிகாரியங்களுக்குக் காரியாலய ஜீப்களை எடுத்துச் செல்லக் கூடாது என்று ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கு மேல் எலெக்ஷன் வருவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் ஜீப்களை எந்த அளவுக்கு ஜில்லாக்களில் உபயோகித்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி மத்திய சர்க்காரின் யோசனைப்படி —ஜீப்களைத் தனிப்பட்ட முறையில் உபயோகித்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவு போடுவதற்கும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி சீக்கிரமாக சர்க்கார் உத்தரவு வெளியிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

9–30 a.m. **திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், சில பஞ்சாயத்து யூனியன் ஜீப்புகள் மிகவும் அதிகமாகப் பெட்ரோலைச் செலவழித்து இருக்கின்றன. இன்னும் சில ஜீப்புக்கள் ரூ. 5,000 வரை செலவு செய்து பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன—ஒரு ஜீப்பின் விலையே இருக்கும்





போலிருக்கிறது. ஏன் அந்த முறையில் செலவுகள் ஆயின என்று கேட்டதற்கு, கனம் அமைச்சர் அதைப் பற்றித் தனியாகத் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கலாம என்று சொன்னார்கள். இந்த அறிக்கை மேசைமேல் வைக்கத் தயாரித்திருக்கிறார்கள், அப்பொழுதே இதைக் கவனித்திருக்கலாம். அவ்விதம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்படுகிறதா என்கிற ஒரு விஷயத்தை யாவது இளமை துடிப்புள்ள மந்திரியிடமிருந்து அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒரே சமயத்தில் ஜீப்கள் எல்லா பிளாக்குகளுக்கும் கொடுக்கப்படவில்லை. மூன்று, நான்கு ஸ்டேஜ்களாகப் பிரித்து கொடுக்கப்பட்டன. ஏற்கனவே பழசாக இருந்து, நோயுற்று இருந்தால், அதிகப் பெட்ரோல் சாப்பிடும் என்பதுதான் காரணமாக இருக்கலாம்.

**Mr. SPEAKER :** Questions are over.

**[*Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO CRISIS IN HANDLOOM INDUSTRY.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார், இம்மாநிலத்தில் துணி இருப்புகள் தேங்கிக் கிடப்பதினால் கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள இடர்பாடான நிலையும், அதனால் நெசவாளர்கள் பெருமளவில் வேலையிழந்துள்ளதும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, the Handloom Industry in the State has been passing through difficult times during the last few months, mainly owing to the accumulation of stocks. Some of the major factors responsible for this accumulation are the decline in the export of Bleeding Madras and other varieties of handloom cloth, the rise in the prices of yarn and consequential increase in the cost of production of handloom cloth and the lower purchasing power of the consumers.

The export of Bleeding Madras to U.S.A., which was flourishing till the first half of 1965 came to a standstill thereafter because of various factors, viz., the over-selling by exporters, change of fashion of overseas buyers, etc. In January 1966 there was an accumulation of Bleeding Madras to the extent of 2 to 3 million yards in the market. The Government of India sent a delegation under the leadership of our Minister for Industries, to the United States of America and East European Countries in May 1966 to explore the possibilities of expanding the export of Bleeding Madras. Based on the recommendation of the delegation, the Government of India have laid down a revised export policy on the following lines :—

(1) The quota system and all other export incentive schemes have been abolished; and

[5th August 1966

அனுமதி பெற்று சர்க்கார் காரியங்களுக்காக, 'டீவியேட்' செய்து செலவு செய்திருக்கக்கூடும் என்றுதான் யூகிக்கிறேன். சரியான விவரங்கள் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துச் சொல்லலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்படுகின்ற ஜீப்கள் அமைச்சர்கள் போன்ற காலத்தில் நாள் கணக்கில் அங்கங்கே சுற்றி அலைவதால், கொடுக்கப்படுகிற பெட்ரோல் தீர்ந்து விடுகிறது. பின்னால் யூனியன் வேலைகளுக்குப் பெட்ரோல் இல்லாமல் வருத்தப்படவேண்டியிருக்கிறது. ஆகவே, அமைச்சர்கள் வரும்போது, செலவு செய்கின்ற பெட்ரோலை அவர்கள் தனிப்பட்ட முறையில் செலவு செய்து கொள்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி உத்தேசம் ஒன்றும் இல்லை.

**திரு. செ. மாதவன் :** அரசாங்க ஜீப்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று மத்திய சர்க்கார் கூறியிருப்பதை இந்தச் சர்க்கார் பின்பற்றியதா ? அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய மத்திய சர்க்காரின் யோசனைகளை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ததா? அண்மையில் பொதுத் தேர்தல் வருகின்ற நேரத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஜீப்களை எல்லாம் வாபஸ் பெறுவதற்கு ஏதேனும் யோசனை இருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே பிளாக் ஏரியாக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஜீப்களைப் பிற காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கனவே 325 லிட்டர் உபயோகித்துக் கொள்ளலாம் என்றிருந்ததை 300 லிட்டர்தான் உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று குறைத்து உத்தரவு போடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் சேர்மனோ அல்லது அதிகாரிகளோ வெளிகாரியங்களுக்குக் காரியாலய ஜீப்களை எடுத்துச் செல்லக் கூடாது என்று ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கு மேல் எலெக்ஷன் வருவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் ஜீப்களை எந்த அளவுக்கு ஜில்லாக்களில் உபயோகித்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி மத்திய சர்க்காரின் யோசனைப்படி —ஜீப்களைத் தனிப்பட்ட முறையில் உபயோகித்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவு போடுவதற்கும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி சீக்கிரமாக சர்க்கார் உத்தரவு வெளியிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

30 n. **திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், சில பஞ்சாயத்து யூனியன் ஜீப்புகள் மிகவும் அதிகமாகப் பெட்ரோலைச் செலவழித்து இருக்கின்றன. இன்னும் சில ஜீப்புக்கள் ரூ. 5,000 வரை செலவு செய்து பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன—ஒரு ஜீப்பின் விலையே இருக்கும்



5th August 1966]

போலிருக்கிறது. ஏன் அந்த முறையில் செலவுகள் ஆயின என்று கேட்டதற்கு, கனம் அமைச்சர் அதைப் பற்றித் தனியாகத் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கலாம என்று சொன்னார்கள். இந்த அறிக்கை மேசைமேல் வைக்கத் தயாரித்திருக்கிறார்கள், அப்பொழுதே இதைக் கவனித்திருக்கலாம். அவ்விதம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்படுகிறதா என்கிற ஒரு விஷயத்தை யாவது இளமை துடிப்புள்ள மந்திரியிடமிருந்து அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒரே சமயத்தில் ஜீப்கள் எல்லா பிளாக்குகளுக்கும் கொடுக்கப்படவில்லை. மூன்று, நான்கு ஸ்டேஜ்களாகப் பிரித்து கொடுக்கப்பட்டன. ஏற்கனவே பழசாக இருந்து, நோயுற்று இருந்தால், அதிகப் பெட்ரோல் சாப்பிடும் என்பதுதான் காரணமாக இருக்கலாம்.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO CRISIS IN HANDLOOM INDUSTRY.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார், இம்மாநிலத்தில் துணி இருப்புகள் தேங்கிக் கிடப்பதினால் கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள இடர்பாடான நிலையும், அதனால் நெசவாளர்கள் பெருமளவில் வேலையிழந்துள்ளதும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, the Handloom Industry in the State has been passing through difficult times during the last few months, mainly owing to the accumulation of stocks. Some of the major factors responsible for this accumulation are the decline in the export of Bleeding Madras and other varieties of handloom cloth, the rise in the prices of yarn and consequential increase in the cost of production of handloom cloth and the lower purchasing power of the consumers.

The export of Bleeding Madras to U.S.A., which was flourishing till the first half of 1965 came to a standstill thereafter because of various factors, viz., the over-selling by exporters, change of fashion of overseas buyers, etc. In January 1966 there was an accumulation of Bleeding Madras to the extent of 2 to 3 million yards in the market. The Government of India sent a delegation under the leadership of our Minister for Industries, to the United States of America and East European Countries in May 1966 to explore the possibilities of expanding the export of Bleeding Madras. Based on the recommendation of the delegation, the Government of India have laid down a revised export policy on the following lines :—

(1) The quota system and all other export incentive schemes have been abolished; and

[Sri N. Nallasenapathi Sarkarai Manradiar] [5th August 1966

(2) the floor and ceiling prices for Bleeding Madras have been removed.

It is expected that the new measures will improve the situation considerably.

Lunghi, kerchief and other varities of handloom cloth are being exported to Middle East, Malaysia and East Asian countries. There is a slump in the export of these materials also, and the Government are thinking of ways and means to improve the situation.

The value of stock of handloom cloth with the apex and primary societies in April 1965 was of the order of Rs. 4·20 crores. The Government sanctioned in May 1965 a temporary advance of Rs. 50 lakhs to the State Handloom Society for the purpose of increased procurement of handloom cloth from the primary weavers' co-operative societies. Again, in October 1965, when the stock position became bad, the Government sanctioned another temporary advance of Rs. 50 lakhs for the same purpose. The stock of handloom cloth with the primary societies as on 31st May 1966 was of the value of Rs. 217·09 lakhs, and the stock with the State Handloom Society on that date was Rs. 160.47 lakhs. The stock is said to have accumulated further, and the Government are watching the situation.

In spite of this depression, it cannot be said that there has been a large scale unemployment of weavers in the State. Weavers employed in the production of Bleeding Madras, etc., where there is heavy accumulation of stocks, have been switching over to the production of other varieties of cloth which were in greater demand. Moreover, the Government have taken all possible steps to help the weavers' societies, through the liberalised scheme of rebate. The handloom weavers outside the co-operative sector have also been receiving liberal financial help from the Handloom Finance Corporation and there was no large scale unemployment among them also.

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS PRIVATE EDUCATIONAL INSTITUTIONS (REGULATION) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Private Educational Institutions (Regulation) Bill, 1966.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Private Educational Institutions (Regulation) Bill, 1966."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, Iintroduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.



## IV.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY—*cont.*

MR. SPEAKER : To-day also a large number of hon. Members want to speak. But I can call upon only five or six hon. Members more to speak, if they can finish their speeches exactly within five minutes. Then I will call upon the hon. Deputy Leader of the Opposition, the hon. Member, Sri Kalyanasundaram and the Hon. Chief Minister and they will take about three or four hours.

திரு. மு. கருணாநிதி : கனம் அவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளின் சார்பில் எங்கள் கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் 'இந்த மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை' என்று கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளும் கட்சி சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து, இங்கே பேசிய நண்பர்கள் அத்தனைபேரும் "இவ்வளவுதானா குற்றச் சாட்டுகள், இந்தக் குற்றச் சாட்டுக்களுக்குத்தானா நம்பிக்கையில்லாத் தீர்மானம்" என்று இரண்டு நாளாகப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசியதைப் பார்க்கிற நேரத்திலே உள்ளபடியே எனக்கு வருத்தம் ஏற்படவில்லை. அவர்களே மிக்க வருத்தத்தோடு குறிப்பிடுகிறார்கள் என்றும், "ஏராளமான குற்றங்கள் இருக்கின்றனவே, அவற்றையெல்லாம் ஏன் எடுத்துச் சொல்லவில்லை" என்ற தோரணையில், "இவைகள்தானா? இவைகள்தானா?" என்று தாங்கள் அடக்கிவைத்திருக்கும் பெருமூச்சை வெளிவிட்டார்கள் என்றும் எண்ணிக் கொண்டேன் (சிரிப்பு). காங்கிரஸ் கட்சியிலே அங்கம் வகிக்கும் அநேகருக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று மனதார எண்ணம் இருந்தாலும் கூட, கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி, அதன் காரணமாக, வெளிப்படையாகக் காட்டமுடியாமல் தவிக்கிறார்கள் என்பது நன்று வெளிப்படுத்தப்பட்டது. அதற்கு மிக, மிக எடுத்துக்காட்டாக, காங்கிரஸ் தலைவரின் தேர்தல் கடவுளாக இருக்கும் பெரியார் ராமசாமி அவர்களே, இந்த மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்று 10-5-1966-ம் நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று சொல்லி, துக்க நாள் கொண்டாடிவிட்டு, மறுநாளே காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கொண்ட கூட்டத்தில் பேசினார்கள். அதிலிருந்தே புரிந்துவிட்டது. அந்தத் துக்க நாளை காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களே, காங்கிரஸ் கட்சிக்காரர்களே, மறைமுகமாக ஆதரித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாம். பெரியார் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய மந்திரிசபையைப் பற்றித் துக்க நாள் கொண்டாட வேண்டும் என்று அறிக்கைவிட்ட நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார். "காங்கிரசின் பேரில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு, வரும் தேர்தலில் காங்கிரஸ் தோற்க வேண்டும் என்பதற்காகப் பக்தவத்சலம் பல காரியங்களைச் செய்கிறார்" என்று பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே காங்கிரசை வாழவைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பெரியார் அவர்கள் அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அதற்காக அவர்கள் பின்னால் இன்றையதினம் காங்கிரசிலே

[திரு. மு. கருணாநிதி] [5th August 1966

இருக்கும் பலர் போய்க்கொண்டிருக்கிற நேரத்தில், காங்கிரஸ் வரும் தேர்தலில் தோற்கடிக்கப்படவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு முதல் அமைச்சர் பக்தவத்சலம் இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார் என்று பெரியார் அவர்கள் கூறிவிட்ட பிறகு, உள்ளபடியே உண்மையான காங்கிரஸ்காரர்களுக்கு இந்த மந்திரிசபை மீது நம்பிக்கை இருக்குமா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு விடவில்லை பெரியார் அவர்கள். துக்க தினத் தீர்மானமாக ஒரு வாசகம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். காமராஜ் முதலமைச்சர் பதவியை விட்டு விலகி, தமது இடத்தில் பக்தவத்சலத்தை முதலமைச்சராக வைத்துவிட்டுப் போனது மாபெரும்—அதற்கு மேல் நா வரவில்லை—அவர்கள் சொல்வார்கள் இவர்கள் கேட்டுக்கொள்ளுவார்கள் என்றாலும்—அவர் சொன்னார், 'மாபெரும் முட்டாள்தனமாகும்' என்று. பெரியார் அவர்கள் தன்னுடைய பத்திரிகை மூலமாகவும், வேறு ஏடுகள் மூலமாகவும், துக்க தினத்தில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, பெரியார் அவர்களே, காங்கிரசுக்குத் தேர்தல் நோக்திலே தீவிரமாக வேலை செய்யக்கூடிய பெரியார் அவர்களே, இந்த மந்திரிசபையின் மீது நம்பிக்கை இல்லை, துக்கதினமாகக் கொண்டாட வேண்டும், இந்த ஆட்சி அகற்றப்பட்டே தீரவேண்டும் என்று காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள். "அவர்கள் நாத்திகப் பெரியார், ஆகவே இப்படிப் பேசினார்" என்று வாதிக்கக்கூடும். காங்கிரஸ் பிரசாரத்திற்காக திரு. காமராஜ் அவர்களாலும், மற்றவர்களாலும் தயாரிக்கப்பட்ட ஆஸ்திகப் பழமான திரு. கிருபானந்த வாரியார் அவர்களும், இந்தக் காங்கிரஸ் ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்று அண்மைக் காலமாகப் பேசிக்கொண்டு வருகிறார். ஆக, இங்கே அமர்ந்திருக்கிற எதிர்க்கட்சிகள் மாத்திரமல்லாமல், வெளியிலே இருக்கிற, காங்கிரஸை ஆதரிக்கக்கூடியவர்களும் கூட, இந்த ஆட்சி அகற்றப்படவேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக, வெகு அக்கறையோடு இன்றையதினம் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முக்கியமாக, ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசிக் கொண்டு வருகிற இந்த அரசு, ஜனநாயகத்தின் முக்கிய இலட்சணமாகவுள்ள எதிர்க்கட்சிகளுக்குத் தரப்படவேண்டிய மதிப்பையும் மரியாதையையும் அளிக்கின்றதா என்ற கேள்வியை நான் இந்த மன்றத்திலே எடுத்துரைக்க விரும்புகிறேன். உடனே, சில நண்பர்கள் கேட்கலாம், "நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை இங்கிலாந்திற்கு அனுப்பவில்லையா?" என்று. அவரை இங்கிலாந்திற்கு அனுப்பியதையோ அல்லது என்னை மலேயாவிற்கு அனுப்பாமல் தடை செய்ததையோ வைத்துக்கொண்டு ஜனநாயகத்தை எடை போட்டுவிட முடியாது. இங்கிலாந்திற்குச் சென்று சுற்றிப் பார்த்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே கூட, அங்கே எதிர்க்கட்சிகள் எப்படி நடத்தப்படுகின்றன, இங்கே எதிர்க்கட்சி எப்படி நடத்தப்படுகிறது



5th August 1966] [திரு. மு. கருணாநிதி]

என்று மிக்க வேதனையோடு அப்போதே குறிப்பிட்டிருக்கிறார் என்பதையும் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

ஜனநாயகம் செயல்படவில்லை என்பதற்கு இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் பல்வேறு உதாரணங்களை எடுத்துச் சொன்னார்கள். தொகுதிகளிலே வெற்றி பெற்றிருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள், ஆங்காங்கு அமைக்கப்படுகின்ற கல்லூரிக் குழுக்களிலே கூட இடம் பெற முடியவில்லை என்ற சோகச் செய்திகள் இங்கே எடுத்துக்காட்டப்பட்டன. என்னைப் பொறுத்தவரையில், தஞ்சாவூரில் மக்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நான், அங்கே இருக்கின்ற கல்லூரிக் குழுவிலே இணைக்கப்படாமல், திருவையாறுச் சட்ட மன்ற உறுப்பினர், காங்கிரஸ்காரர் என்ற காரணத்தால், அந்தக் கல்லூரிக் குழுவிலே இணைக்கப்பட்டிருக்கிறார்.

ஜனநாயகத்தில், எதிர்க்கட்சிகள் அமைதியான முறையில், ஆர்ப்பாட்டம் செய்யலாம், கிளர்ச்சிகள் நடத்தலாம், கறுப்புக் கொடி காட்டுவது போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடலாம் என்று உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஜனநாயக உரிமையைக் கேரளத்தில் இருக்கின்ற அரசு கடைபிடித்திருக்கிறது. இந்தியாவின் மதிப்பிற்குரிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கேரளத்திற்கு வந்த நேரத்தில், அங்கே கறுப்புக் கொடி காட்டிய கம்யூனிஸ்டுத் தோழர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. ஆனால், அவர்கள் இங்கே வருவதற்கு முன்பாகவே, தமிழ்நாட்டில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சி மெம்பர்கள் ஏறத்தாழ 1,400 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்திரா காந்தி அவர்களே கூட, தமிழ்நாட்டுக்கு வந்த பிறகு சொன்னார்கள், "இவர்களையெல்லாம் கைது செய்திருக்கத் தேவையில்லை, கேரளத்தில் விட்டுவிட்டதைப் போலவே இங்கும் விட்டு விட்டிருக்கலாம்" என்ற கருத்தைப் பிரதமர் அவர்களே கூட குறிப்பிட்டார்கள். ஆகவே, கறுப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியில் இந்தியாவின் பிரதமருக்கும், நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்குமே கூட இப்படிப்பட்ட கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. ஆளும் கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சி கறுப்புக் கொடி காட்டினால் இப்படியெல்லாம் அடக்கு முறையைப் பயன்படுத்துவது உண்டு. ஆனால், எதிர்க்கட்சிக்கு ஆளும் கட்சி கறுப்புக் கொடி காட்டுகிறது. நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நான் மிகவும் உயர்வு செலுத்துகிற, அன்பு செலுத்துகிற, மதிப்பு செலுத்துகிற கைத்தறி நெசவாளர்களைப்பற்றி ஏதோ ஒன்றைச் சொன்னேன் என்று கற்பனையாகக் கயிறு திரிக்கப்பட்டு, அந்த வகையிலே எல்லா இடங்களிலும் காங்கிரஸ்காரர்கள் கறுப்புக்கொடி காட்டினார்கள். அந்த நிகழ்ச்சிகளிலே ஒன்றாக, மதுரை மாவட்டத்தில் நான் சுற்றுப் பயணம் செய்தபோது, சின்னாளப்பட்டியிலே உள்ள காங்கிரஸ்காரர்கள் கறுப்புக் கொடி காட்டுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டார்கள். மாலை ஏழு மணிக்குக் கறுப்புக் கொடி என்றால், காலை 9 மணிக்கு திண்டுக்கல் டிராவலர்ஸ் பங்களாவில் நான் தங்கியிருந்தபோது போலீஸ் அதிகாரி லாங்கிட்ன் என்பவர் என்னைச் சந்தித்து,

[திரு. மு. கருணாநிதி] [5th August 1966

"இன்று கறுப்புக் கொடி காட்டுகிறார்கள், நாங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம். அவர்கள் எங்களைப் பாதுகாப்பு கேட்கிறார்கள்" என்று சொன்னார்கள். அவர்களுக்கு இவர்கள் பாதுகாப்பு அளிக்கிறார்களாம். அது மாத்திரம் அல்ல என்னிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்; "அவர்கள் கறுப்புக் கொடி காட்டுகின்ற இடம் பார்த்து நீங்கள் வரவேண்டும்; வேறு வழியாக வந்து விடக்கூடாது" என்று அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களிடத்தில் சொன்னேன்—"இப்படிப்பட்ட எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்து நாங்கள் பழக்கப்பட்டவர்கள் தான், ஆகவே, அந்த வழியாகவே வருகிறேன்" என்று சொல்லி, குறிப்பிட்ட நேரத்தில் அந்த வழியாகச் சென்றேன். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ஆளுங்கட்சிக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சி கருப்புக் கொடி காட்டுகிறதென்றால், அவர்களில் 1,400 பேர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதே நேரத்தில், எதிர்க்கட்சிக்கு ஆளுங் கட்சிக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டுகிறார்கள். அவர்கள் கைது செய்யப்படவில்லை; அது அடக்கப்படவில்லை. ஒரு சமயம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லலாம்—இவர்கள் 1,400 பேர்கள்; ஆகவே, கைது செய்தேன். அவர்கள் 40, 50 பேர்கள் தானே? ஆகவே, கைது செய்யவில்லை என்று குறிப்பிடலாம். ஆனால், எங்களுக்குள்ள மகிழ்ச்சியெல்லாம், இப்போதே ஆளுங்கட்சியினர் தயாராகிக் கொள்ளுகிறார்கள் கறுப்புக் கொடி காட்ட என்பது தான். இவர்கள் ஆளும் கட்சியாக வருவார்கள்; நாம் அப்போது கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்பதற்கு இப்போதே ஒத்திகைப் பார்த்துக் கொள்ளுகிறார்களோ, என்னவோ நாங்கள் அதையெல்லாம் இன்றையதினம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிறோம்.

ஜனநாயகம் இந்த ஆட்சியிலே பேணிப் பாதுகாக்கப்படவில்லை, கொலை செய்யப்படுகிறது என்பதற்கு, அருப்புக்கோட்டை, நெல்லை நகர மன்றங்கள் கலைக்கப்பட்டதை மன்றத்திலே பேசிய தலைவரும், மற்றவர்களும் வெகு விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நீதி மன்றத்தின் முன் இருக்கின்ற காரணத்தால், நெல்லை, அருப்புக் கோட்டை பற்றிய விவரங்களுக்கு நான் செல்ல விரும்பவில்லை. தலைவர் அவர்கள், இங்கே வேறு பல நகரசபைகளைப்பற்றிப் பல எடுத்துக்காட்டுகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மேற்கொண்டு பல விவரங்களை அந்த நகரசபைகளைப்பற்றி இந்த மன்றத்தின் முன் வைத்து, ஜனநாயகம் நெல்லை நகர மன்றத்தைப் பொறுத்தும், அருப்புக்கோட்டை நகர மன்றத்தைப் பொறுத்தும் செயல்படுத்தப்பட்டிருக்கிறதே, அதுதான் எங்களுடைய ஜனநாயகப் பாணி என்று அமைச்சரவை கூறுமேயானால், அந்த ஜனநாயகப் பாணி நான் இங்கே எடுத்துக்காட்டுகின்ற இந்த நகர மன்றங்களைப் பொறுத்தவரையில் ஏன் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதை இங்கே நான் வெகு தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இராணிப்பேட்டை நகர சபையை எடுத்துக்கொள்ளுவோம். அதில் ஒரு காண்ட்ராக்ட் விடப்பட்டது. பொதுவாக, ரூ. 1,500-க்கு மேற்பட்ட காண்டிராக்டர்கள் எல்லாவற்றிற்கும் டெண்டர் மூலம் விடப்படவேண்டும், ஸீல் போட்ட டெண்டர்கள் தருவிக்கப்பட வேண்டும். 12,000 ரூபாய் காண்டிராக்ட். இந்த 12,000 ரூபாய் காண்டிராக்ட் ஒருவருக்கே தரப்பட்டிருக்கிறது. அப்படி ஒருவருக்கே தந்தால், சந்தேகப்படுவார்கள் அல்லவா? ஸீல் போட்ட டெண்டர்கள் கொடுக்க வேண்டும் என்றால், வேறு பலரும் அந்தக் காண்டிராக்டுக்குப் போட்டா போட்டியாக வரக் கூடும் என்ற பயத்தின் காரணமாக, ஒரே ஆளுக்கு ஒரே கட்டடத்தை பல பகுதிகளாகப் பிரித்துகொடுத்தார்கள். ஒ கடைக்கு ரூ. 1,750. அதே கட்டடத்தில் இன்னொரு ஒ கடை கட்ட ரூ. 1,750; அதே கட்டடத்தில் இன்னொரு ஒ கடை கட்ட ரூ. 1,500. இன்னொரு ஒ கடை கட்ட ரூ. 1,500; இன்னொரு கடை கட்ட ரூ 1,500; அதே கட்டடத்தில் ஸ்டால்கள் கட்ட ரூ. 750 இரண்டு ஓட்டல்கள் கட்ட ரூ. 1,750; இரண்டு ஸ்டால்கள் கட்ட ரூ. 1,500; என்ற முறையில் இப்படி மாற்றப்பட்ட, வகா கான் என்ற காண்டிராக்டருக்கு ஏறத்தாழ ரூ. 12,000-க்கு காண்டிராக்ட் விடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல மோசடிகள் இராணிப்பேட்டை நகர மன்றத்தில் நடைபெற்றன என்ற காரணத்திற்காக, ஆறு நகர மன்ற உறுப்பினர்கள் கூடி 28-12-1964 அன்று ஒரு தீர்மானத்தைப் போட்டு அதை அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் எழுதப்பட்ட மினிட் புக் அங்கே கிழித்து எறியப்பட்டது. அது சம்பந்தமாக சர்க்காருக்கு அந்த ஆறு உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதினார்கள். சர்க்காரிடமிருந்து கமிஷனருக்கு விளக்கம் கேட்டு கடிதம் போயிற்று. அதற்குக் கமிஷனர் எழுதினார், 15-ந் தேதி அன்று, 28-ம் தேதிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று அவர்கள் கேட்ட விஷயம் மினிட் புக்கிலே இருக்கிறது. பிறகு 30-ந் தேதியன்று, அதுபற்றி பிரச்சினை சபையிலே பேசப்பட்டிருக்கிறது. "இவ்வளவும் சொல்லிவிட்டு, நான் மொத்தமாகச் சொல்லுகிறேன் நான் அந்தச் சபையிலே நுழைகிற நேரத்தில் அந்த நகரசபை 'பெல்மல் கண்டிஷன்' இல், அதாவது மிகக் குழப்பமான நிலையில் இருந்தது" என்று கமிஷனர் அவர்கள் சர்க்காருக்குப் பதில் எழுதியிருக்கிறார். 10-5-1965 அன்று அந்தப் பதில் எழுதப்பட்டிருக்கிறது. "நான் நுழைகிற நேரத்தில் அந்த நகரசபை குழப்பமான நிலையில் இருந்தது" என்று கமிஷனர் எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மோசடிகள் நடைபெற்ற பிறகும், இந்த ஜனநாயகப் பாணி ஏன் இராணிப்பேட்டை நகராட்சி மன்றத்தை தொடவில்லை? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நேற்றையதினம் கனம் உறுப்பினர் திருமதி குழந்தையம்மாள் பேசுகிற நேரத்தில், "திருநெல்வேலி நகரசபை உறுப்பினர்களுக்குச் சொல் புத்தியும் கிடையாது, சொந்த புத்தியும் கிடையாது" என்று சொன்னார்கள். 'சொற்புத்தியும் கிடையாது, சொந்த புத்தியும் கிடையாது' என்று சொன்ன பிறகு, வேறு எங்கெங்கே இருக்கிறது என்று தேடிப்பார்த்தேன். சேலத்தில் காங்கிரஸ் கட்சியின் நகரசபை நடந்துகொண்டிருக்கிறது. அந்த நகரசபையில் ஒரு தீர்மானம் போட்டார்கள். நகரசபைத் தலைவர் ராம கிருஷ்ணன் படத்தை திறந்து வைப்பது என்றும், அவர் பேரிலே ஒரு மன்றத்தை ஏற்படுத்துவது என்றும் தீர்மானம் போட்டார்கள்.

[திரு. மு. கருணாநிதி] [5th August 1966

அப்போதே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. மெய்யப்பன் என்பவர் எடுத்துக் காட்டினார்கள். அரசாங்கம் 1792 என்னுள்ள ஜி.ஓ. போட்டிருக்கிறது. அந்த ஜி.ஓ. 13-8-1963-இல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜி.ஓ-ப்படி ஒரு தலைவருடைய படத்தை அவருடைய காலத்திலேயே திறந்து வைப்பது என்பது கூடாது. ஒரு தலைவருடைய படத்தை அவருக்குப் பின்னே வருகிற தலைவர் காலத்தில் வேண்டுமானால், திறந்து வைக்கலாம், என்று எடுத்துச் சொன்னார்கள். சேர்மென் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். இப்போதைக்கு வேண்டுமானால் அவர் பெயராலே மன்றத்தை வைக்கலாம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஒரு திருத்தப் பிரேரணை கொடுத்தார்கள். அந்தத் திருத்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. அந்தத் திருத்தப் பிரேரணையில் லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடைய படத்தைத் திறந்து வைக்கலாம் என்றுதான் கோரப்பட்டது. அதைத் தோற்கடித்துவிட்டார்கள். நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். அதைத் தோற்கடித்துவிட்டு நகரசபைத் தலைவர் படத்தைத் திறந்து வைக்கவேண்டுமென்று காங்கிரஸ்காரர் தர்மலிங்கம் அவர்கள் கொடுத்திருந்த தீர்மானத்தையே மறுபடியும் எடுத்துக்கொண்டு சபையில் 19 வோட்டுகளில் வெற்றிபெறச் செய்து நிறைவேற்றி யிருக்கிறார்கள். முதலிலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழரின் ஆட்சேபணையை சேர்மென் ஏற்றுக் கொண்டார்கள். இருந்தும் மறுபடியும் நகரசபைத் தலைவரின் படத்தைத் திறந்து வைப்பது என்ற பழைய தீர்மானத்தையே எடுத்துக் கொண்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்பொழுது சொல்லுங்கள் யாருக்குச் சொந்த புத்தியும் இல்லை, சொற்புத்தியும் இல்லை என்று சொற்புத்தியைக் கூடக் கேட்காமல் காரியங்களைச் செய்தார்கள் என்றால் அதற்கு என்ன காரணம்? 'இங்கு இருப்பது காங்கிரஸ் கட்சியின் நகரசபை. ஆகவே ஆபத்து வராது' என்பதைத் தவிர வேறு என்ன காரணம்?

நெல்லை நகரசபையினர் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜைக் கேட்காமல் ஒரு ஆளை நியமித்ததுதான் குற்றம். அது சரியா, இல்லையா என்கிற பிரச்னைக்குப் போகவில்லை. அது நீதி மன்றத்தில் இருக்கிற விஷயம். ஆனால் இந்தச் செய்தி மே மாதம் 29-ஆம் தேதி பத்திரிகையில் வந்தது. கும்பகோணம் நகரசபையில் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜைக் கேட்காமல் 32 பேர்களை நியமித்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், 'ஒருவரை நியமித்தால்தான் குற்றம். முப்பத்திரண்டு பேர்களை நியமித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நகரசபை இருக்கலாம்' என்று குறிப்பிடலாம். எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜைக் கலக்காமல் 32 பேர்களை வேலைக்கு அமர்த்தி அதற்குப் பிறகு, கமிஷனர் அவர்கள், 'நீங்கள் எல்லாம் வேலையிழக்க வேண்டும்' என்று உத்தரவு பிறப்பித்து, அதற்குப் பிறகு அப்பாயின்ட்மெண்டுக் கமிட்டியில் வைத்து 'இனி அவர்கள் எங்கே வேலைக்குப் போக முடியும்? அவர்களுக்கு வயதாகிவிட்டது—வயதானவர்களையும் கூட நியமித்திருக்கிறார்கள்—ஆகவே, இந்த நிலைமையே நீடிக்க வேண்டும்' என்பதாக அரசாங்கத்திற்கு மனுப் போட்டிருக்கிறார்கள். இந்தச் செய்தியும் பத்திரிகையில் வந்திருக்கிறது.



h August 1966] [திரு. மு. கருணாநிதி]

அதுமாத்திரம் அல்ல. திருநெல்வேலிக்குச் சொல்லப்பட்ட
ாரணங்கள் தூத்துக்குடியிலும் நடைபெற்றுக் கொண்டிருக்
ின்றன. இன்றைக்குக்கூட விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள
'வண்டும் என்பதாக 98 குறிப்புக்கள் ஜூன் 30-ம் தேதி வைக்கப்
ட்டன. அவற்றில் 48 தான் சாச்சைக்கு வந்தன. அதற்கு
தடவை ஓட்டெடுப்பு நடந்தது, தலைவர் கட்சிக்கு 15 ஓட்டும்,
ிர்க்கட்சிக்கு 16 ஓட்டும் கிடைத்தன. இப்படி 9 முறை தலைவர்
ட்சித் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. ஒன்பது தடவையும்
லைவர் கட்சிக்கு 15 ஓட்டுதான். எதிர்க்கட்சிக்கு 16 ஓட்டும்
கிடைத்தன. அதற்குப் பிறகு கூட்டத்தை ஒத்தி வைக்கவேண்டு
மென எதிர்க்கட்சி உறுப்பினர் கொண்டு வந்தத் தீர்மானத்திற்கு
16 ஓட்டும், நடத்த வேண்டுமென்ற தலைவர் கட்சிக்கு 15 ஓட்டும்
கிடைத்தது. இருந்தும், போலிஸ் பாதுகாப்புடன் கூட்டம் நடத்
தப்பட்டது ஏன்? இரண்டு நாளைக்கு முன்பு தலைவர் இல்லை.
துணைத் தலைவர் இல்லை. உறுப்பினர் தலைமையில் தகராறு—பாதுகா
பட்டாபிஷேகம் வரையில் தூத்துக்குடி நகரசபையின் நிலைமை
போய்க்கொண்டிருக்கிறது.

அடுத்து, நெல்லைக்குப் பக்கத்தில் 3 ஆவது மைலில் இருப்பது
நான் சிறை வைக்கப்பட்டிருந்த பாளையங்கோட்டை அந்தப்
பாளையங்கோட்டை நகர சபை எந்த லட்சணத்தில் இருக்கிறது?
அதனுடைய ஆடிட் கணக்கை எடுத்துப் பார்த்தால் தெரியும்.
1963-64-வது ஆண்டுக்கான அந்த நகராட்சிக் கணக்கை ஆடிட்
செய்தபோது பல ஆட்சேபங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.
பயணச் செலவு முன் பணத்தில் கணக்குச் சரிசெய்யப்படாதது,
733 ரூபாய். அதில் தலைவர் மகாராஜன் பிள்ளை மாத்திரம் 4-7-1962-ல்
200 ரூபாய், 14-7-1963-இல் 150 ரூபாய் கணக்குத் தரவேண்டும்.
ஆடிட் நடந்த 3 மாத கால அளவும் அந்தக் கணக்குத் தரப்பட
வில்லை. இன்னும் நகராட்சியில் தொலைபேசி இருக்கிறது. அதைப்
பொறுத்தவரையில் ஜனநாயக சோஷலிசம் சரியான முறையில்
பின்பற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். பாளையங்
கோட்டை நகரசபைக்குச் சொந்தமான தொலைபேசியில் நிறைய
டிரங்க்கால் போடப்பட்டிருக்கின்றன. டிரங்க்கால் கட்டணம்
ஆடிட் செய்யப்படும்வரை உரியவர்களிடமிருந்து பெறப்பட
வில்லை. நகர சபைச் சேர்மன் பெயரில் டிரங்க்கால் புக் செய்யப்
பட்டிருக்கிறது. ப்யூன் பெயரில் புக் செய்யப்பட்டிருக்கிறது.
பட்லர் பெயரில் செய்யப்பட்டிருக்கிறது. மானேஜர் பெயரில் செய்
யப்பட்டிருக்கிறது. அத்தனை பேர்களும் டிரங்க்கால் போட்டிருக்
கிறார்கள். அது மாத்திரம் அல்ல. அந்தத் தொலைபேசி மூலம்
டிரங்க்கால் போட்டதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்
தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பெயரில் இன்னும்
160 ரூபாய் பாக்கி இருப்பதாக அந்த ஆடிட் ரிப்போர்ட்டிலேயே
சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிற
பாளையங்கோட்டை நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டதா? அங்கே
நடப்பது காங்கிரஸ் கட்சி நகர சபை. அந்தப் பக்கம் இந்தக்
காங்கிரஸ் அரசின் பார்வை செல்லாமல், அருப்புக்கோட்டைக்கும்
நெல்லைக்கும் ஓடுவானேன் என்பதை நாம் இந்த நேரத்தில்

[திரு. மு. கருணாநிதி] [5th August 1966

தெரிந்து கொள்ள முடியும். இப்படி ஜனநாயகத்திற்கு முரணாக நடைபெற்று வருகிற காரியங்களில் இன்னும் இரண்டு காரியங்களை இந்தத் தலைப்பில் எடுத்துச் சொல்ல நினைக்கிறேன்.

தேர்தலில் உதய சூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சினிமா ஸ்லைடு போடப்பட்டது—இவர்கள் மாட்டுச் சின்னத்திற்கு ஓட்டு போடுங்கள் என்பதற்கு இரண்டாயிரம் அடிக்கே படம் எடுத்தார்கள். அதில் யார் யாரை எப்படிக் கிண்டல் செய்யவேண்டும் என்பதாக—என்னைக்கூட ஓர் உருவகப்படுத்தி கிண்டல் செய்து படம் எடுத்தார்கள். ஆனால் ஒரு ஸ்லைட்—அறிஞர் அண்ணாவின் உதய சூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்பதாகத் தயாரித்து திருப்பூர் சினிமாத் தியேட்டர் ஒன்றிலே ஓடியது. அந்தப் பகுதி தாசில்தார் அவசரம் அவசரமாக ஓடி, அந்த சினிமா ஸ்லைடைப் பறிமுதல் செய்து, அந்த சினிமா ஸ்லைடைப் போடக் கூடாது என்று தடுத்தார்கள். சினிமா ஸ்லைடு ஒன்றுக்குத்தானா இந்தத் தடை ? சென்னையிலே திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைக்க இந்திய குடியரசுத் தலைவர் வந்திருந்தார்கள். இதையொட்டி பல விழாக்களிலே அவர் பங்கெடுத்துக் கொண்டார்கள் எல்லாம் படமாக எடுக்கப்பட்டன. ஆனால் அந்த படத்திலே இந்திய குடியரசுத் தலைவர் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்த காட்சி வெட்டப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் காட்சி மாத்திரம் சினிமாப் படமாக வரவில்லை. காரணம் என்ன ? சென்னை மாநகராட்சி திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்திருந்தது. ஆகவே, அந்த விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவரோடுகூட சென்னை மாநகராட்சித் தலைவர் மைனர் மோஸஸ் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் படத்தைக் காட்டினால் 'குடியரசுத் தலைவருக்குப் பக்கத்தில் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த திரு. மோஸஸ் இருக்கிறார், பார், பார்' என மக்கள் சுட்டிப் பேசிக் கொள்ள முடியும் என்றே விடப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினரை விடவேண்டும் என்பதற்காக திருவள்ளுவர் சிலையும்கூட விடப்பட்டுவிட்டது. இதிலிருந்தே ஜனநாயக முறை எப்படிக் கையாளப்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கலாம்.

நாவலர் அவர்கள் 'இந்த அரசு உணவு நிலையைச் சீராக்கவும், விவசாய வசதிகளைச் செய்து கொடுக்கவும் தவறிவிட்டது' என்ற கருத்தை இந்தச் சபைமுன் வைத்த நேரத்தில் அதனை மறுத்து அருமைச் சகோதரி குழந்தையம்மாள் அவர்கள் மிக ஆவேசமாகப் பேசினார்கள். 'விவசாயிகள் வசதி பெறவில்லை என்று நீலிக் கண்ணீர் வடிக்காதீர்கள். 'விவசாயிகள் தேர்தலில் உங்களை தலை குனிய வைப்பார்கள்' என்று சவால் விட்டார்கள். கனம் அம்மையார் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் கோயம்பத்தூரைச் சார்ந்த ஓர் உறுப்பினர் இதே மன்றத்தில் பேசிய பேச்சை படித்துக்காட்ட விரும்புகிறேன்.

"விவசாயப் பெருங்குடி மக்களின் கஷ்டங்களை எடுத்துச் சொன்னால் இந்தச் சபையே அனுதாபப்படும் என்று சொல்லலாம். அங்கு அதிகமான அளவில் விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மிக இன்றியமையாதது தண்ணீர். இவர்களுக்கு



5th August 1966] [திரு. மு. கருணாநிதி]

விவசாயம் செய்வதற்கு எந்தவிதத்தில் தண்ணீர் கிடைக்கும் என்பதை நான் சொல்லக் கூடிய நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். காலை ஐந்து மணியிலிருந்தே பள்ளிக்கூடத்திற்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் எல்லாம் தலையில் பானையை வைத்துக் கொண்டு குடி தண்ணீருக்காக மணிக்கணக்காகக் காத்து நிற்க வேண்டும். பல கிராமங்களில் பிப்ரவரி மாதத்தில் இருந்தே குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது. குடி தண்ணீருக்கே இந்த நிலைமை என்றால், விவசாயத்திற்குத் தண்ணீர் எங்கே கிடைக்கும்.

விவசாயத்திற்கு உதவியாக பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி நாம் செலவு செய்து வருகிறோம். இதற்காக பல எஞ்சினியர்களை எல்லாம் வைத்திருக்கிறோம். ஆனால் வேலை எவ்வாறு நடைபெறுகிறது என்று பார்த்தால், ஒவ்வொரு ஆண்டும் சில குளம் குட்டைகளை எடுத்து அதற்காக எஸ்டிமேட் போட்டு போர்ட் ஆபீசுக்கு அனுப்புகிறார்கள். இவ்விதம் அனுப்பி ஆறு மாதங்களுக்குப் பின்னால் அல்லது ஒரு வருடத்திற்குப் பின்னால் திரும்பி கோயம்புத்தூருக்கே வந்துவிடுகிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் எஸ்டிமேட் போடுவதும், போர்ட் ஆபீசுக்கு அனுப்புவதும், திருப்பி அனுப்பப்படுவதும் தான் நடந்து கொண்டிருக்கிறது என்றால் எப்படி விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆக, ஏழு ஆண்டுகளாக இவ்விதமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறதே தவிர, வறண்ட பிரதேசமாக இருக்கக் கூடிய என் பகுதிகளுக்கு எந்தவிதமான வசதியும் கிடைக்கவில்லை.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் அதிகப்படியான அளவில் பருத்தி விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பருத்திச் சாகுபடியில் ஏற்படுகின்ற புழு பூச்சிகளை அடியோடு ஒழிப்பதற்காக நம்முடைய விவசாய இலாகா என்ன செய்திருக்கிறார்கள் என்பதை கேட்க விரும்புகிறேன். பருத்தியில் புழு விழுந்துவிட்டால், இதைப்பற்றி உடனே அதிகாரிகளுக்குத் தெரிவித்தவுடன் 24 மணி நேரத்திற்குள்ளாக 3 ஜீப்புகள் வருகின்றன. அதற்கு அடுத்த நாள் 2 ஜீப்புகள் வருகின்றன. கடைசியில் ஒருவருமே வரமாட்டார்கள். இதற்காகக் கொடுக்கப்படும் மருந்தை கலக்கிப் பார்க்கும்போது அதில் உள்ள 100 புழுக்களும் மேலே மிதந்து வந்துவிடுகின்றன. நாற்று விடும்போது இந்தப் புழு விழுந்துவிட்டால், இதற்காக ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் வரை கடன் வாங்கி செலவு செய்தவைகள் எல்லாம் வீணாகிவிடுகிறது. பின்னால் 6 மாதங்களுக்கு இதற்கான வட்டியைக் கூட கொடுக்க முடியாமல் விவசாயிகள் திணறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு சொஸைடி மூலமாக பால் வாங்குகிறார்கள். அங்கே வாங்கப்படுகிற விலைக்கும் டவுனில் விற்கப்படுகிற விலைக்கும் பார்த்தால் 18 நயா பைசா வித்தியாசம் இருக்கிறது. விவசாயிகளுடைய ரத்தத்தைப் பிழிந்து குறைந்த விலைக்கு அவர்களிடமிருந்து பாலை வாங்கிக்

[திரு. மு. கருணாநிதி]. [5th August 1966

10-00 a.m. கொண்டு வந்து, நகரத்தில் இருக்கிறவர்களுக்காவது நல்ல பால் கிடைக்கிறதா என்றால் தண்ணீர்பால் தான் அவர்களுக்குக் கிடைக்கிறது. விவசாயிகள் சாபத்திற்கு ஆளாகக் கூடாது. இப்படிப் பேசியவர் அதே திருமதி குழந்தையம்மாள் அவர்கள்தான், இதே மன்றத்தில் 1964-லே பேசியிருக்கிறார்கள். நேற்றைய தினம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விவசாயிகளுக்குப் போதுமான நன்மைகள் செய்யப்படவில்லை, அவர்களுடைய குறைகள் கவனிக்கப்படவில்லை என்று இங்கே பேசியதும் அந்த அம்மையார் அவர்கள், அப்படிச் சொன்னால் நீங்கள் எல்லாம் விவசாய மக்கள் முன் தலைகுனிந்து நிற்கவேண்டும், அவர்கள் உங்களுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

விவசாயிகளுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதுபற்றி பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் ராஜபாளையத்தில் 3-7-1966-ம் தேதி நடந்த வியாபாரிகள் சங்கத்தில் "நமது நாட்டில் விவசாயத் துறையிலானாலும் சரி; தொழில் வளர்ச்சித் துறையிலானாலும் சரி; தன்னிறைவுபெறும அளவுகூட முன்னேறவில்லை" என்றும் "நாட்டின் நிர்வாகம் சரியாக இல்லை, வருடக் கணக்கில் முடிவுபெறாத 'ஃபைல்' களும் இருக்கின்றன" என்றும் கூறியிருக்கிறார்.

தென்காசியில் காங்கிரஸ் கட்சி ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகமல்ல, சுதந்திராக் கட்சியல்ல, கம்யூனிஸ்ட் கட்சியல்ல, சோஷலிஸ்ட் கட்சியல்ல, காங்கிரஸ் கட்சியே போட்டு அனுப்பியிருக்கிறது. "தென்காசி தாலுக்காவில் மக்கள் வேலைவாய்ப்பின்றி பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். உணவு தானிய ரேஷன் கடைகளில் போதிய உணவு தானியமிருந்தாலும், அதை வாங்க மக்களிடம் பணவசதி இல்லை" என்ற அளவில் ஜூலை 6-ஆம் தேதி ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். கனம் உள்துறை அமைச்சர் சொல்லலாம், பணம் குவிந்து கிடக்கிறது; டார்லின் ஷர்ட் எல்லாம் போடுகிறார்கள். காரிலே போகிறார்கள்; கருணாநிதி காரிலே போகிறார்; அண்ணாதுரை காரில் போகிறார்; நெடுஞ்செழியன் காரில் போகிறார்; மதியழகன் காரில் போகிறார் பார்த்தீர்களா என்று எல்லாம் கூறுவார்கள். ஆனால் நிலைமை எப்படியிருக்கிறது என்றால் அங்கேயிருக்கின்ற தென்காசி தாலூக்கா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ரத்தினசாமி நாடார் "உணவுதானிய ரேஷன் கடைகளில் போதிய உணவு தானியமிருந்தாலும் அதை வாங்க மக்களிடம் பணவசதி இல்லை. பெரும்பாலோர் பட்டினி கிடக்கிறார்கள். உடனடியாக அந்தக் கிராமங்களில் கஞ்சித்தொட்டி திறந்து பசிப்பிணியைப் போக்கவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது" என்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார். அதைச் செய்யப்போகிறார்களோ, இல்லையோ. கஞ்சித்தொட்டி காங்கிரஸ் என்று சொன்னால் அதை வரவேற்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது.

இவ்வளவு ஏன்? நடுநிலைமையில் இருக்கின்ற மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள் குருவிக்குளம் யூனியனைச் சேர்ந்த உமையத்தலைவன்பட்டி விழாவில் பேசுகின்றபோது "சர்க்காரில் மாடு



5th August 1966] [திரு. மு. கருணாநிதி]

பிடிக்க, கிணறு வெட்ட, கடன் வாங்குவதில் பாதிக்கு மேல் செலவாகிறது, பல இடங்களில் நல்லமுறையில் நடைபெறவில்லை, விவசாயிகள் வாழவில்லை, நன்மையடைய முடியவில்லை, இந்த நிலை மாறவேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் அளவில் இந்த நிலைமை மாறவேண்டும் என்றுதான் சொல்லமுடியும். நாம் இந்த ஆட்சி மாறவேண்டும் என்று சொல்லமுடியும். ஆனால் அவர்கள் நிலைமையில் அவர்கள் அப்படித்தான் கூறவேண்டும்.

சோழநாடு சோறுடைத்து என்று சொல்வார்கள். தஞ்சையை நெற்களஞ்சியம் என்று சொல்வார்கள். நெற்களஞ்சியமான தஞ்சை பஞ்சத்திலே அடிபட்டுக் கிடக்கிறது. மாயூரத்தில் ரேஷன் கார்டு முறை இருந்து வருகிறது, அதுபற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே பற்றாக்குறையில்லை, உணவு நிலைமையை நாங்கள் சமாளிக்கவில்லையா என்றெல்லாம் கேட்பார்கள். எங்கே சமாளித்தார்கள்? பட்டினி கிடந்து செத்தாலும் சாவோம், மானத்தை இழக்க மாட்டோம் என்று அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் கூறிய ஐந்தாவது நாளே மானத்தை இழக்க மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்காவுக்கு மடிப்பிச்சை எடுக்கப் போனாரே! இந்திய மக்களை நான் பட்டினி போடமாட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன் தான் கூறியிருக்கிறார், திருமதி இந்திரா காந்தி அவர்களோ அல்லது நம்முடைய முதலமைச்சர் அவர்களோ சொல்லவேண்டியதை அமெரிக்க ஜனாதிபதி சொல்லியிருக்கின்றார். அதேபோல் அமெரிக்கத் தூதர் திரு. செஸ்டர் பௌல்ஸ் அமெரிக்காவில் 14 பேர்களுக்கு ஒரு விவசாயி இந்திய மக்களுக்காக வேலை செய்துகொண்டிருக்கிறார் என்றும், கேரள மாநில அளவைப்போல் உள்ள ஒரு மாகாணம் அமெரிக்காவில் இந்தியாவுக்காக உணவு உற்பத்தி செய்கிறது என்றும் கூறியிருக்கிறார். ஏன் இந்த நிலைமை? மாயூரத்தில் நியாயவிலைக் கடைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு வார்டுக்கு 5 மூட்டை வீதம் கொடுக்கப்படுகின்றது. ஒரு குடும்பத்திற்கு ஒரு லிட்டர்தான் ஒரு நாளைக்குக் கொடுக்கப்படுகிறது, அந்தக் குடும்பத்தில் நான்கு பேர்கள் இருந்தாலும் சரி, இரண்டு பேர்கள் இருந்தாலும் சரி ஒரு லிட்டர்தான் கொடுக்கப்படுகிறது. சோஷலிசம் அல்லவா? இதை வாங்கிக்கொண்டு அங்கிருக்கின்ற மக்கள் படுகின்ற அவதியை நானே கண்ணாலே கண்டேன். ஒரு வார்டுக்கு ஐந்து மூட்டைகள்தான் கொடுக்கப்படுகின்றன. அந்த வார்டு 500 பேர்களைக் கொண்ட வார்டாக இருக்கலாம், அல்லது இரட்டை மெம்பர் தொகுதியாகக் கூட இருக்கலாம், எப்படியிருந்தாலும் கொடுக்கப்படுவது ஐந்து மூட்டைகள்தான். ஏன் இப்படிக் குறைத்துக் கொடுக்கிறீர்கள் என்று கேட்டால், அவர்கள் எங்களுக்கு உத்தரவு இப்படித்தான் என்று சொல்கிறார்கள். ஆனால் ஜனநாயக சோஷலிசம் செயல்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

உணவு நிலை இவ்வாறு இருக்கிறது, கல்வி நிலை எவ்வாறு இருக்கிறது? மருத்துவக் கல்லூரிபற்றியெல்லாம் நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். என்னுடைய தொகுதியிலே நடந்த ஒரு நிகழ்ச்சி. என் தொகுதியைச் சேர்ந்த குமாரி பீனாபால் இன்டக்ரேட்டட்

எம்.பி., பி.எஸ். சேருவதற்குக் கோரி ஒரு விண்ணப்பம் செய்தார். மனு எண். : 2080. 1966 ஜூனிலே விண்ணப்பம் செய்திருக்கிறார். அவர் முதல் வகுப்பிலே தேறியிருக்கின்றார். ரசாயனம் D+ இயற்கை விஞ்ஞானம் A+ பௌதீகம் B+ வாங்கியிருக்கிறார். சரபோஜி கல்லூரியிலே என்.ஸி.ஸி. மாணவி. அவருக்கு இடம் கிடைக்கவில்லை. இப்படிப் பலபேர்களுக்கு A+A பெற்றவர்களுக்கும்கூட கிடைக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒருவர் C, C+ தான் பெற்றிருக்கிறார். பி.யூ.சி-யில் இரண்டாம் முறையில் தேறியவர். அவருக்கு இண்டர்வ்யூ கூட கொடுக்கப்படமாட்டாது. ஆனால், அவருக்கு இடம் கிடைத்திருக்கிறது. அவர் பெயர் அருணாசலம். அவர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரல்ல, நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். காரணம் அவர் பழைய எம்.பி.யின் மகன். 'நிரூபிப்பாயா? என்று கேட்பார்கள். அப்படியென்றால், ஒவ்வொரு ஆண்டும் மருத்துவப் படிப்புக்குச் சேர்க்கப்பட்டவர்களின் பட்டியலை இந்த மன்றத்திலே வையுங்கள். யார், யார், எந்தந்தெந்தக் காரணங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், யார், யார் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று பார்ப்போம். ஆகவே, அதை மாசுமறுவற்ற தன்மையிலே இந்த மன்றத்திற்குக் கொடுங்கள். அதைவிட்டுவிட்டு, 'நிரூபிப்பாயா?' என்று கேட்டால் மாத்திரம் போதாது. நிரூபிப்பதற்கு எந்தவிதமான வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்காத எதிர்க்கட்சி என்ற காரணத்தாலே, குற்றங்கள் எல்லாம் குற்றங்கள் அல்ல என்று ஆகிவிட முடியாது. குற்றங்கள் குற்றங்கள்தான். C+ பெற்ற மாணவனுக்குக்கூட, பி.யூ.சி-யில் முதல்முறை தோல்வியுற்று இரண்டாம் முறை தேறியவருக்குக்கூட இடம் கிடைத்திருக்கிறது என்றால் புகை இருக்கிறது. ஆகவே நெருப்பு இருக்கத்தான் செய்யும். இதைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அதிகாரங்கள் துர்விநியோகப்படுத்தப்படுகின்றன என்ற இந்தக் காரணமும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

அரசு வேறு, கட்சி வேறு. ஆனால், கட்சி நலனோடு காரியங்கள் நடத்தப்படுகின்றன. கீழ்வேளூர் என்ற ஊரில் தேர்தல்பற்றி ஒரு நோட்டீஸ் அச்சடித்து இருக்கிறார்கள். அதிலே காந்தி படம், தேசிய கொடி, இரண்டு பக்கங்களிலும் அசோகச் சக்கரம், இப்படி இருப்பதால் காங்கிரஸ் கட்சிதான் சர்க்கார் கட்சி என்று நினைத்துக்கொண்டு, சர்க்காரே வோட்டுக் கேட்கிறார்கள் என்று பயப்படுகின்ற அளவுக்கு அரசு, கட்சி என்ற வேறுபாடு இல்லாத அளவில் நிலைமைகள் ஏற்படுகின்றன.

கல்விப் பணி மனைகளில் அரசியலே நுழைதல் கூடாது என்பது முதலமைச்சர் அவர்களுடைய அருமையான வாதம் ஆகும். ஆனால் அதே சமயத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜுக்கு இதுவரை காங்கிரஸ் எம்.எல்.சி. யாக இருந்த வித்வான் முத்துக்கண்ணப்பன் அவர்களை பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கேட்காமல்கூட நேரடியாகவே நியமனம் செய்திருக்கிறார்கள். அவர் இப்பொழுதும்





காங்கிரஸ் உறுப்பினர்தான். அரசியல், கல்வி ஸ்தாபனங்களுக்குள் நுழையக்கூடாது என்ற முதலமைச்சர் அவர்களுடைய வாதம் இந்த நியமனத்தின் மூலம் பொடிப்பொடியாக்கப்பட்டுவிட்டது.

மந்திரிகள் எதையும் செய்யலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு கூறவிரும்புகிறேன். எதையும் செய்யலாம் என்ற அந்தக் காரியத்தில்கூட அமைச்சர்களுக்குள்ளே ஒற்றுமை கிடையாது. கவர்ன்மெண்ட் பிரஸ்களை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் வைக்க வேண்டுமென்றிருந்தது. ஆனால் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை சென்னை, திருச்சி என்ற அளவோடு நிறுத்திக் கொண்டார்கள். தென்னாற்காட்டிற்கு ஒரு அரசாங்க அச்சகம் நிறுவப்படுகிறது. தென்னாற்காடு என்றால் கடலூரில்தான் நிறுவப்படும் என்று கருதப்பட்டது. ஆனால், அந்த ஊர் மந்திரியினுடைய ஊர் அல்லவே, அந்தப் பாவத்தைச் செய்யவில்லையே, ஆகவே விருத்தாசலம் என்ற பெரிய நகரத்தில் நிறுவுகிறார்கள். பத்து, பதினைந்து லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுக் கட்டப்படுகின்ற பெரிய நிறுவனம் அது. ஏற்கனவே அங்கே இருக்கிற ஓட்டை உடைசல் பிரஸ்களுக்குக்கூட இப்பொழுது வேலை கிடைக்கவில்லை. திரு. பூவராகன் கெட்டிக்காரர், ஆகையால் முதலமைச்சர் அவர்களைக் கொண்டே 'நீங்களே திறந்துவையுங்கள்' என்று சொல்லியிருக்கிறார் . . .

**கனம் திரு. கோ. பூவராகன்** : பதினைந்து, பதினாறு லட்சம் செலவில்லை. . ஏற்கனவே பட்ஜெட்டில் மூன்று இடங்களில் வைக்க வேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேலத்திலே ஒன்றும், திருச்சியிலே ஒன்றும், தென் ஆற்காடு ஜில்லாவிலே ஒன்றும் வைக்கப்பட்டது. சென்னையில் மவுண்ட்ரோடிலே மொத்தமாக இருந்த அச்சகத்தைப் பிரித்து 4, 5 இடங்களிலே வைக்கவேண்டுமென்று இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்தின் அடிப்படையிலேதான் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி** : ஆகவேதான் பத்து லட்சமோ, பதினைந்து லட்சமோ என்று குறிப்பாகச் சொன்னேன். திருச்சி மாவட்டத்திலே திருச்சியிலே வைக்கப்பட்டிருக்கிறது; சேலம் மாவட்டத்திலே சேலத்திலே வைக்கப்பட்டிருக்கிறது; தென்னாற்காடு மாவட்டத்திலே மட்டும் விருத்தாசலத்திலே வைக்கப்படுவானேன் என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, வேறு அல்ல. அந்தப் பிரஸ்ஸை வைப்பதற்கு ஒதுக்கிய இடம் இருக்கிறதே அது, தேர்தலிலே மிகவும் பயன்படக்கூடிய ஒருவரிடம் இருந்து, அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, இப்போதே அச்சாரமாக அந்த இடத்தை அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் அதிகாரம் இந்த வகையில் துர்ப்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்.

ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்குக்கு மாநிலம் முழுவதிலிருந்தும் மொத்தம் 15 டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதிலே 13 பேர் 11 மாவட்டங்களில் இருந்து 10,000 உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஸ்டேட். கோவாப்பரேடிவ்

பாங்கு டைரக்டர்களாக வருகிறார்கள். மிச்சம் இரண்டு பேர்கள் பதின்மூன்று பேரைப் பத்தாயிரம் பேர் தேர்ந்தெடுக்க வேண்டும்; அதே சமயத்தில் மிச்சமிருக்கும் இரண்டு உறுப்பினர்கள் 109 தனிப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி 10,000 பேரால் 13 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிற அதே நேரத்தில் 109 பேரால் இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவது முறையல்ல என்று கருதி, கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் ஒரு உத்தரவு போட்டார்கள். 1965 நவம்பர் மாதத்தில் கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அவர்கள், ‘இரண்டு பேர் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டாம்; ஒருவர் போதும்’ என்று ஒரு உத்தரவு போட்டார். வழக்கமாக இருக்கின்ற அந்த இரண்டு பிரதிநிதிகளிலே ஒருவர் காங்கிரஸ்காரர்; இன்னொருவர் முக்கால் காங்கிரஸ்காரர், திரு. காமராஜர் அவர்களுடைய நிழலாக இருப்பவர். இந்த இரண்டு பேர்களுந்தான் அந்த இரண்டு இடத்திற்கு வரப் போகிறார்கள். ரிஜிஸ்ட்ரார் அவர்கள் உத்தரவு வந்ததும் அந்த இரண்டு பேரும் யாரைப் போய்ப் பார்த்தார்களோ, யார் யாரைக் கேட்டார்களோ தெரியவில்லை. கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் நவம்பரில் உத்தரவு போடுகிறார். டிசம்பரில் அதே உத்தரவு திரும்பப் பெறப்பட்டு ‘இல்லை, இல்லை, இரண்டு பேர்கள் இருக்கவேண்டும்’ என்ற அளவுக்கு உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. இவ்வாறு நிர்வாகத்தில் கட்சி தலையிடுகிறது; கட்சியின் தலைமை குறுக்கிடுகிறது. இதற்கு இன்னும் பல ஆதாரங்களைச் சொல்ல முடியும். சேலம், ஆத்தூர், அவனாசி போன்ற இடங்களில் வர்த்தக நிலையங்களில் சோதனை நடைபெற்று, இன்னும் பெரிய புள்ளிகள் தாக்கப்படுவார்கள் என்ற நிலை ஏற்பட்டவுடன் விற்பனை வரிச் சோதனையே நிறுத்தப்படவில்லையா? இது அதிகாரத் துஷ்பிரயோகம் அல்லவா? அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் இந்த மந்திரிசபையின் மீது நம்பிக்கை இல்லை என்பதை அழுத்தத் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். . . . . .

நாங்கள் மந்திரிகளின் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துக்கொள்வது ஒரு புறம் இருக்க, மந்திரிகள் ஒருவருக்கொருவர் நம்புகிறார்களா என்றால் அவர்களுக்குள்ளாகவே நம்பிக்கையின்மை இருக்கிறது. ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பைக் குறிப்பிட்டு கனம் திரு. பக்த்வத்சலம் அவர்கள் என்ன சொன்னார்கள்? ‘மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள் கிடைக்கவும், விலைவாசி ஏறுவதைத் தடுக்கவும் பயன்படும்; இதனால் மக்களுக்குப் பாதகம் ஏற்படாது’ என்று மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனே கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் என்ன சொன்னார்கள்? திரு. வெங்கட்டராமன் அவர்களும் ஒரு அமைச்சர் தான். ‘ரூபாய் மதிப்பைக் குறைப்பது அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் புத்திசாலித்தனமான முடிவு அல்ல’ என்று கூறியிருக்கிறார். அவர் கொஞ்சம் நாகரிகமாகப் பேசக்கூடியவா... பெரியாரைப் போல் வார்த்தைகளைப் பயன்படுத்தமாட்டார்; ‘புத்திசாலித்தனமான முடிவு அல்ல’ என்று கூறியிருக்கிறார். ‘சாதகங்களைவிடப் பாதகமே அதிகம்’ என்று கூறியிருக்கிறார். மந்திரிகளுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் நம்பிக்கை கிடையாது.





இதே திரு. வெங்கட்டராமன் அவர்களைப்பற்றி ஒரு ஏடு தாறுமாறாக எழுதிற்று; எவ்வளவோ குற்றச்சாட்டுகளைக் கொட்டிக் காட்டிற்று. அதே ஏட்டில் ஐந்து வாரங்களுக்குப் பிறகு கனம் முதலமைச்சர் அவர்களுடைய அழகான பேட்டி இரண்டு பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது என்றால், அது மந்திரிகளுக்கிடையேயே ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லையென்பதைத் தானே காட்டுகிறது. ஒருவருக்கொருவர் மட்டுமல்ல, அவர்களுக்குள்ளே நம்பிக்கை இல்லை.

திரு. பூவராகன் அவர்கள் சிறை இலாகா மந்திரி; மீன் இலாகா மந்திரியும் கூட. மீன் இலாகா மந்திரி படகுகள் கட்டுவதற்காகக் கட்டைகள் வாங்குகிறார்; மிச்சமிருக்கும் கட்டைகளை ஏலம் விடுகிறார். அதை ஒருவர் 20 ரூபாய்க்கு ஏலத்திற்கு எடுக்கிறார்; அவ்வாறு அந்தக் கட்டைகளை ஏலத்திற்கு எடுத்தவர் அதை அப்படியே சிறைச்சாலைக்கு விறகாகக் கொடுக்கிறார். ரூபாய் 20-க்கு ஏலத்திற்கு எடுத்து சிறைச்சாலைக்கு 80 ரூபாய்க்குக் கொடுக்கிறார். இந்த மந்திரிசபையிலே ஒரு மந்திரி இன்னொரு மந்திரியை நம்பவில்லை; ஒரே மந்திரி தன்னையே நம்பவில்லை. இவ்வாறு 20 ரூபாய்க்கு விற்ற அதே கட்டைகளை 80 ரூபாய்க்குச் சிறைச்சாலைக்காக வாங்குகிறார்.

நாவலர் அவர்கள் ஆட்சி மொழிபற்றிக் கூறினார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, ‘சட்டம் வந்தால் ஏற்றுக் கொள்வீர்களா?’ என்று கேட்டார். பிறக்கப் போவது, பிள்ளையா? பெண்ணா? இரண்டுமில்லையா? பெறுவீர்களா—தெரியவில்லை. மாதம் பத்து முடிந்து பல மாதமாகிறது. மாட்டைத் தண்ணீரில் போட்டுக் கொண்டா விலை பேசுவது? சட்டம் வந்தால் ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டார்கள். சட்டத்திலே எது வரப் போகிறது?

இதே முதலமைச்சர் அவர்கள், இந்த நாடு ரணகளமான நேரத்தில், பிணங்கள் விழுந்த நேரத்தில், மாணவர்களுடைய மார்புகள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நேரத்தில், பிஞ்சுக் குழந்தைகள் துப்பாக்கி ரவைகளால் பிய்த்து எறியப்பட்ட நேரத்தில், என்ன பேசினார்கள்? “ஆங்கிலமும் இந்தியும் நிரந்தர ஆட்சி மொழிகளாக இருக்கலாம்” என்று பேசினார். இவ்வாறு கூறிவிட்டு, “இந்த என்னுடைய யோசனையைக் கல்கத்தாவில் பேசிய மத்திய அமைச்சர் திரு. சி. எஸ். வரவேற்றுள்ளார்” என்று முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார். நீங்கள் கொண்டு வருகிற ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்திலே இந்தக் கருத்து இடம் பெறுமா? முதலமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்லியே தீர வேண்டும். ஆனால் இது சட்டத்திலே இடம் பெறாது என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகவேதான் இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லையென்று சொல்லுகிறோம் நாங்கள்.

இதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். டில்லிக்குச் சென்ற முதலமைச்சர் அவர்கள், மத்திய சர்விஸ் கமிஷன் தேர்வில் இந்தி கட்டாயத் தேர்வை ஒப்புக்கொண்டு

வந்திருக்கிறார்கள். இவர்கள் மீது எப்படி நம்பிக்கை வைப்பது? சென்ற ஆண்டு போராட்டம் ஏற்பட்ட நேரத்தில், ரத்தச் சகதியில் தமிழக மக்கள் வீசி எறியப்பட்ட நேரத்தில், 'இந்தியும் ஆங்கிலமும் நிரந்தரமாக ஆட்சி மொழியாக இருப்பதை விரும்புகிறேன். இந்தக் கருத்தை, கல்கத்தாவில் பேசிய திரு. சி. எஸ். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று மகிழ்ச்சிப் புன்னகையோடு தெரிவித்தார். ஆனால் இப்போதோ மத்திய சர்விஸ் கமிஷன் பரீட்சையில் இந்தியைக் கட்டாயப் பாடமாக ஏற்றுக் கொண்டு திரும்பியிருக்கிறார்கள். எப்படி இவர்களை நம்ப முடியும் ?

"விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதில் நாம் தோற்று விட்டோம் என்று நாங்கள் அல்ல, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். "மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாகத் தேசீய வருமானம் கணிசமாக உயர்ந்திருக்கிறது ; ஆனால் அபிவிருத்தித் திட்டங்களின் பலன்கள் சாதாரண ஏழை மக்களுக்குக் கிடைக்கவில்லை" என்று திரு. காமராஜர் பேசியிருக்கிறார்.

இந்தப் பலன்கள் சாதாரண ஏழை மக்களுக்குக் கிடைக்காத காரணத்தால்தான் ஜூலை மாதம் 29-ம் தேதி இந்த உலகத்தில் இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. உலகம் என்று நான் சொல்லக் காரணம், இந்தியாவின் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் ரஷ்யாவிலே சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். ரஷ்யாவுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்குப் போகட்டும், ஜப்பானுக்குச் செல்லட்டும். அவர் வெளி நாடுகளிலே வெற்றி உலா வருகிறார் என்றால், ஒரு தமிழனுக்குக் கிடைக்கிற பெருமையைக் கண்டு நாங்கள் மன மகிழ்வு அடைகிறோம். அவர் அங்கு ஒரு விவசாயப் பண்ணையைப் பார்வையிட்ட நேரத்தில் ஒரு விவசாயப் பெண் 'எங்கள் நாட்டைப் போல் உங்கள் நாட்டிலும் பெண்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா?' என்று கேட்டார்கள். 'எங்கள் நாட்டில் பெண்களுக்குப் பெருமையளிக்கிறோம்; அதன் காரணமாகத்தான் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருக்கிறார்கள்" என்று திரு. காமராஜர் கூறியிருக்கிறார். இவ்வாறு பெண்ணுக்குப் பெருமையளிக்கும் துணைக் கண்டத்தில், குறிப்பாகத் தமிழகத்தில் வறுமை இல்லை, வாட்டம் இல்லை, தற்கொலைச் சாவுகள் என்று கூறப்படுவனவெல்லாம் கற்பனைக் கதைகள் என்று ஆளும் கட்சியினர் பேசுகிறார்கள். இந்தத் தமிழ் மண்ணில், குரோம்பேட்டையில் தங்கவேலு நாயகருடைய மனைவி பாஞ்சாலம்மா, மகன் இன்பவடிவேல் ; சக்தி வடிவேல், மகள் அமுதவல்லி ; கனகவல்லி—இவர்கள் பிழைப்புக்கு வழி இல்லாமல் இருந்த சைக்கிளை விற்று, கடைசியாக வேறு வழி இல்லாமல், வறுமை மேலிட்டு, வாட்டம் தேங்கிய விழியோடு, பாஞ்சாலம்மா மூன்று குழந்தைகளுடன் ரயில்வே கேட்டுக்கு அருகில் வந்து ஒளிந்து நின்று, ரயில் வருகின்ற நேரத்தில் எட்டு வயது இன்ப வடிவேல், ஐந்து வயது நிரம்பிய அமுதவல்லி,





சின்னஞ்சிறு குழந்தை கனகவல்லி ஆகியோருடன் தண்டவாளத்தை நோக்கிப் பாய்ந்தவுடன் அவர்கள் சில்லி சில்லியாகப் பிய்த்தெறியப்பட்டனர். கைகள் கால்கள் சின்னாபின்னம் செய்யப்பட்டன. வாழவேண்டுமென்று கணவன் கரம்பிடித்தவள், தன்னுடைய குழந்தைகள் எதிர்காலத்தில் ஏற்றம் பெறவேண்டுமென்று கொஞ்சி மகிழ்ந்தவள், தன்னுடைய வயிற்றிலே சுமந்து பெற்ற ரத்தினங்களைத் தானே ரயிலடியில் தள்ளி தானும் விழுந்து இறந்திருக்கிறாள். ஒரு பையனுடைய மூளை மட்டும் தனியாகச் சிதறிக் கிடந்ததாம். ஒருவேளை அவள் அதை ஆட்சியாளர்களுக்காக விட்டுப் போயிருப்பாள்.

இப்படிப்பட்ட அக்கிரமங்கள் இந்தப் பதினெட்டாண்டுக் காலத்தில் நடைபெற்றிருக்கின்றன. புள்ளிவிவரங்களைக் காட்டிப் பயன் இல்லை, திட்டங்களை வைத்துப் பயன் இல்லை, அணைக்கட்டுகளைக் காட்டிப் பயன் இல்லை. ஏழை மக்களின் முகத்தைக் காட்டுங்கள், அதில் புன்சிரிப்பு இருக்கிறதா? ஏழைகள் சொல்கிறார்கள், அவர்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்று. அதைத்தான் நாங்கள் எதிரொலிக்கிறோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

* டாக்டர் பா. நடராஜன் : கனம் சபாநாயகர் அவர்களே, எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் முற்றிலும் வரவேற்கிறேன். எதிர் கட்சித் தலைவர்கள் இம்மாதிரி தீர்மானங்களைக் கொண்டு வருவது அவர்களுடைய உரிமை. அது ஜனநாயகத்தின் தர்மம். அவர்கள் அவர்களது குறைகளை, குறைபாடுகள் என்று அவர்கள் கருதுவதை, எடுத்துச் சொல்வதற்காகத்தான் சட்டசபை என்று வைத்திருக்கிறோம், எதிர்க்கட்சி என்று வைத்திருக்கிறோம். ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கு இது ஒரு சவால். அவை உண்மையில் குறைபாடுகளா இல்லையா என்பதை இது விளக்கிவிடும். இப்படி விளக்கிவிடுவது நமக்கு நல்லது. பிறகு இவற்றையெல்லாம் மறைத்து வைத்துக்கொண்டு, நாம் பதில் சொல்லாத நிலையில் தேர்தல் சமயத்தில் மக்களிடம் சென்று இல்லாததையும், பொல்லாததையும், நல்லதையும், கெட்டதையும் வைத்துப் பிரசாரம் செய்வதற்கு இடமில்லாமல் இப்படி ஒரு தீர்மானம் வருவதால், இதை நான் வரவேற்கிறேன். நமக்கு இது நல்லதொரு சந்தர்ப்பம். நம்மிடையே கோழைகளாக இருக்கிறவர்களுக்கும், அச்சமுடையவர்களுக்கும் இது ஒரு சவாலாகும். மற்போர் செய்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பாகும். நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் நம் நரம்புகளுக்கு நல்லதொரு ஊக்கத்தை ஊட்டியிருக்கிறார்கள். அவர்களது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினால் அவர்கள் நமக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டியிருக்கிறார்கள். அவர்களது பிரசாரத்தைக் கேட்டு ஆளும் கட்சியின் பிரசாரக் குறைவைக் கண்டு, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சிலர் தேர்தலில் என்னவாகுமோ என்று நினைப்பவர்களுக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு புது வேகத்தை, நம்பிக்கையை

[டாக்டர் பா. நடராஜன்] [5th August 1966

ஊட்டுகிறது. அவர்கள் இத் தீர்மானத்தால் நமக்கு துணை செய்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

அவர்கள் ஆழமாக இல்லாத பல தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி அவை ஆழமுடையதாகயிருந்தால், ஒரு குற்றச்சாட்டுச் சொன்னாலே போதும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில். ஒன்றாக இருந்தால் பயன் இல்லை என்று எட்டுக் குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கிறார்கள். அத்தீர்மானத்தில் வேகம் இல்லாததால் வரிசைக்கிரமப்படுத்தியாவது வேகத்தைக் காட்டலாம் என்ற நம்பிக்கையில் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆழமாக இல்லாவிட்டாலும் நீளமாக வைத்திருக்கிறார்கள். எதிர்கட்சியினர் பேசும்போது ஆத்திரமாகப் பேசினார்கள். எப்போது நியாயம் இல்லையோ அப்போது ஆத்திரத்தால்தான் அதை மறைக்கவேண்டியிருக்கும். அதை ஈடு செய்ய ஆத்திரப்படவேண்டியதுதான். ஆகவே, அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் கூறியிருக்கும் குற்றச்சாட்டுகளில் ஏதாவது சாரம் இருக்கிறதா? நம் மனச்சாட்சிக்கு அவை குற்றங்களா என்று பார்த்து, குற்றமாக இருந்தால் அதைத் திருத்திக் கொள்வதற்கும், அப்படியில்லாவிட்டால் நம் கட்சியின் நியாயத்தை உலகிற்குத் தெரியப்படுத்தவும் இது ஒரு அருமையான வாய்ப்பு. ராமாயணம், பாரதம் இவற்றிலிருந்து பிரம்மாஸ்திரம், நாராயணாஸ்திரம் போன்றவை இருந்தாக அறிகிறோம். அந்த அஸ்திரங்களை விட்டால் பின்னர் வேறு எந்த அஸ்திரமும் போடக் கூடாது. அந்த முறையில் அவை வேகமாக இருக்கவேண்டும். அந்த அஸ்திரங்களைப் பிரயோகித்து அவை எதிரிகளைத் தாக்கத் தவறி விட்டால், போட்டவர்களையே அது விழுங்கிவிடும். அப்படியிருக்க வேண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம். வள்ளுவர் கூட அந்தக் காலத்தில் இதைப்பற்றி யோசித்துக் கூறியிருக்கிறார்:

> "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொ லின்மை யறிந்து".

இத்தீர்மானத்தை வாபஸ் வாங்கவேண்டுமென்று திரு. சுவாமிநாதன் அவர்கள், அவர்கள்பால் உள்ள கருணையால் கூறினார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. எதிரிகளாகவே போர் அணி வகுத்து வருகிறார்கள். எட்டுக் கருவிகளோடு புறப்பட்டிருக்கிறார்கள். வில், அம்பு, கத்தி, கடாரி, வேல், வாள் போன்றவற்றை வைத்துக் கொண்டு தப்பட்டை அடித்து, கொம்பு ஊதி முக்கூட்டுப் படையாகத் திரண்டு வருகிறார்கள். அப்படி வருபவர்களை நாம் ஏன் தடுக்கவேண்டும்? போர் செய்யட்டும், பார்ப்போம். மக்கள் அது பற்றி முடிவு செய்வார்கள் என்ற முறையில் அதை வரவேற்கிறேன்.

அவர்கள் சாட்டியிருக்கும் எட்டுக் குற்றச்சாட்டுகளில் முதலில் கூறியிருப்பது, விலைவாசியேற்றத்தைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் தவறி விட்டது என்பதாகும். இதுபற்றிச் சொல்லப் போனால் இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆகும். கனம் சபா



5th August 1966] [டாக்டர் பா. நடராஜன்]

நாயகர் அவர்கள் அவ்வளவு நேரம் தரப்போகிறார்களா? விலைவாசிப் பிரச்னைபற்றிப் பலமுறை இங்கு விவாதித்திருக்கிறோம். விலைவாசி ஏற்றம் எப்படி வந்தது? இரண்டு யுத்தங்கள் ஏற்பட்டன; சைனாவோடும், பாகிஸ்தானோடும் யுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. மூன்று ஆண்டுகளாக மழை இல்லை. வறட்சி ஏற்பட்டுவிட்டது. உணவுப் பொருள்களில் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. இவற்றினால் எல்லாம் விலைவாசி ஏறிப்போய் விட்டது. விலைவாசி மேலும் ஏறும். சேலம் உருக்காலையை ஏன் அமைத்துத் தரவில்லை என்று கேட்கிறார்கள். அதற்கு எங்கே பணம் இருக்கிறது? பணம் வேண்டுமானால் நாம் அதிகமாக வரி போட வேண்டும். நம் சேமிப்பை அதிகரித்துக் கொள்ளவேண்டும். நம் தேவைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் நோட் அடிக்க வேண்டியதுதான். சேலம் உருக்காலை வேண்டுமென்று ஒரு பக்கத்தில் சொல்கிறார்கள். மறுபக்கத்தில், "வரி போடுகிறார்கள், வரி போடுகிறார்கள், விலைவாசி ஏறுகிறது" என்று சொல்கிறார்கள். நாம் விலைவாசியை ஏற்றிக் கொண்டிருக்கிறோமா? பெரிய திட்டங்கள் போடுகிறோம். "கடன் வாங்குகிறார்கள், கடன் வாங்குகிறார்கள்" என்று சொல்கிறார்கள். அப்படி வாங்கவேண்டுமென்ற ஆசையாலா செய்கிறோம்? நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நம் நாட்டில் இருந்து வந்திருக்கிற வறுமையை ஒழிக்க பதினெட்டு ஆண்டுகளாக முயன்று கொண்டிருக்கிறோம். ஓரளவு நாம் முன்னேறிக்கொண்டும் இருக்கிறோம். பெரிய பெரிய திட்டங்களைப் போட்டுத்தான் நாம் வெற்றி கண்டிருக்கிறோம். இப்போது தேசிய வருமானத்தில் 10 சத விகிதம் சேமிப்பு இருக்கிறது. 20 சத விகிதம் தேசிய வருமானச் சேமிப்பு வரும் காலத்தில்தான் ஒரு நாடு வளர்ச்சி அடையக் கூடும். உழைப்பு, கடும் உழைப்பு, சேமிப்பு, தியாகம், கட்டுப்பாடு இவை இருந்தால்தான் நாட்டில் வறுமை ஒழிந்து, பொருளாதார சுபிட்சம் வருமே தவிர "வரி போடுகிறார்களே, வரி போடுகிறார்களே" என்று சொல்லிக் கொண்டு போனால், "விலை ஏறுகிறது, விலை ஏறுகிறது" என்று சொல்லிக்கொண்டு போனால் ஒரு நாளும் நாம் பொருளாதார சுதந்திரம் அடையப் போவதில்லை. எதிர்க்கட்சிகளுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. "பார், பார் பஞ்சாபைப் பார்" "தர்மவீரரின் தர்பாரைப் பார்", "நம்பூதிரிப்பாட்டைப் பார்" என்று கூறுகிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாதா? கட்டுப்படுத்தலாம். ஆனால் ஜனநாயகம் என்பது பயத்தாலும் நயத்தாலும் ஆளும் முறை.

> "கடிதோச்சி மெல்ல எறிக, நெடிதாக்கம்
> நீங்காமை வேண்டு பவர்".

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். சர்வாதிகார மனப்பான்மையினால்தான் "பஞ்சாபைப் பார், பஞ்சாபைப் பார்" என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஜனநாயக மனப்பான்மை இல்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப் போய்கொண்டிருந்தால் விரைவில் ஜனநாயகம் கலைந்து சர்வாதிகார ஆட்சி ஏற்படத் துணை செய்கிறார்கள் என்ற பழிக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் ஆளாவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அவர்கள் சொல்லியிருப்பது . . .

10-30 a.m. 'failure of the Government to improve the food position in the State and to give fillip to agriculture by providing adequate facilities and impetus to the agriculturists'.

விவசாயிகளுக்குப் போதுமான அளவு கடன் கொடுக்கவில்லை கூட்டுறவுச் சங்கங்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. 1951-ல் இந்த மாநிலத்தோடு ஆந்திரா, மலபார் எல்லாம் சேர்ந்திருந்தபோது எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டது என்கின்ற புள்ளிவிவரத்தைக் கூட்டுறவு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அப்போது 7 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். இன்று தமிழ்நாடு தனியாக இருக்கின்ற இந்த நிலையில், 49 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. நிலைமை இப்படியிருக்க, விவசாயிகளுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? கிணறுகள் ஒன்றும் வெட்டிக் கொடுக்கவில்லையா? பம்பு செட்டுகள் ஏற்படுத்திக் கொடுக்கவில்லையா? ஏதோ இவற்றை எல்லாம் அமல் நடத்துவதில் சிறிது காலதாமதம் ஆகலாம், இதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானமா? நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது என்று சொன்னால், மந்திரிகள் ஏதாவது தவறுகள் செய்திருக்க வேண்டும் அல்லது மந்திரிகள் ஏதாவது முறைதவறி நடந்திருக்க வேண்டும், அப்படி ஒன்றும் இல்லையே இங்கு. ஏதோ கிணறு வெட்டுவதற்கு ஒரு மாத காலம் ஆகலாம், இரண்டு மாத காலம் ஆகலாம், லோன் கொடுப்பதற்குச் சிறிது கால தாமதமாகலாம். இதற்கெல்லாம் நாம் இருக்கிறோம், அங்கங்கே இருக்கின்ற அதிகாரிகளிடத்தில் சொன்னால் சீக்கிரமாக நடத்திக்கொடுப்பார்கள். நாம் மக்களுடைய தேவையை நிறைவேற்றிக் கொடுப்பதற்காகத்தானே இருக்கிறோம். அப்படிச் செய்தால்தானே நம் தொகுதி மக்களோடு தொடர்பு கொண்டிருக்க முடியும். ஆகவே, இதில் பெரிய தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து. . . . .

'failure of the Government to make satisfactory arrangements for the selection of candidates to the technical courses especially the Medical Courses',

என்பது. இதில் சென்னையில் மட்டும் தேர்தல் வைத்தார்கள், மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மற்ற இடங்களிலும் ஏன் வைக்கக்கூடாது? ஏன் திருச்சிராப்பள்ளியில் வைக்கவில்லை? ஏன் மதுரையில் வைக்கவில்லை என்று கேட்கிறார்கள். என்ஜினியரிங் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அப்படிப் பல இடங்களில் வைத்திருந்தார்களே, ஏன் இதற்கும் வைத்திருக்கக் கூடாது என்பதுதான். இதற்காக மந்திரிசபை மாறவேண்டிய நிலை, இந்த மந்திரிசபை போய் வேறு மந்திரிசபை வந்தால் உடனடியாக இப்படி வைத்துவிடப் போவதில்லை. ஏன் சென்னையில் மட்டும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள் என்றால், மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டியில் இருந்தவர்கள் எல்லாம் மருத்துவ நிபுணர்கள், இவர்கள் ஒவ்வொருவரும்,





பெரும் ஆஸ்பத்திரிகளில் தலைவராக இருக்கக்கூடியவர்கள். இவர்களுடைய நேரடிக் கண்ணோட்டத்தில் பெரும் ஆஸ்பத்திரிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்டவர்கள் ஒரு மாத காலம் வெளியூர்களில் சுற்றினால் இங்குள்ள வேலைகள் எல்லாம் தயங்கிக் (முடங்கி) கிடக்கவேண்டிய நிலை ஏற்படும். இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் வரவேண்டாம் என்று கருதித்தான் சென்னையில் மட்டும் மருத்துவ மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் அலுவலை அமைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள் என்று நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்களோ எனக்குத் தெரியாது. மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதற்காக இவர்கள் ஊரெல்லாம் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்வது தவறு. டெல்லிக்குச் சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் போகிறார்கள், ரயில்வே சர்வீஸ் கமிஷன் தேர்தல் நடந்தால் அப்போது டெல்லிக்குப் போகிறார்கள். இதற்காக அந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்வதா? மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால், மனுச் செய்து கொண்ட மாணவர்கள் இங்கு வருகிறார்கள். அவர்களைப் பார்த்துச் சோதனை செய்து தேர்ந்தெடுக்கிறார்கள். இதில் தவறு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்.

இதில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நேற்றைய தினம் கனம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதைக் கேட்க வருத்தமாக இருந்தது. ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கியிருப்பதாக அதிகாரியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இவர்கள் அதிகாரியைப் பற்றிச் சொல்லும்போது, இந்தச் சபையில் இடம் பெறாத அந்த அதிகாரி இங்கு அதற்குப் பதில் சொல்வதற்கான வாய்ப்பு இல்லை. அதிகாரிகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், விஜிலென்ஸ் கமிஷன் வைத்திருக்கிறோம். அவர்களிடத்தில் சொல்லலாம். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட இடங்களில் அதிகாரிகளைப்பற்றித் தாக்கிப் பேசும்போது அவர்கள் கோழைகளாக ஆகிவிடுகிறார்கள். அமைச்சர்கள் மிருதிக்கள் சென்றால் மேலே எடுத்துக்கூற ஆற்றல் அற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். இதனால் யாருக்கு நஷ்டம் என்றால், எதிர்க்கட்சிக்கு. ஆளும் கட்சியைவிட எதிர்க்கட்சிக்குத்தான் இதனால் நஷ்டம். அதிகாரிகளைப்பற்றி மந்திரிகளிடத்தில் சொல்லி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். நாம் இன்றைக்கு 18 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்டு வருகிறோம் என்று சொன்னால், நமக்கு அடிப்படையாக இருந்தது, நம்முடைய அதிகார வர்க்கம். அது உறுதியாக இருந்தது, 'லா அன்ட் ஆர்டர்'-ஐக் காப்பாற்றியது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அடுத்து எஃகு ஆலையைப்பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் முன்பே சொல்லிவிட்டேன். அது வந்தால் என்ன, வராவிட்டால் உங்களுக்கு என்ன? "உங்களுக்கு" என்றால் கனம் சபாநாயகர் அவர்களைக் குறிப்பிடவில்லை, எதிர்க்கட்சிகளைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்கள் பெரிய தொழில்கள், பெரும் திட்டங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். பெரும் திட்டங்கள்

[டாக்டர் பா. நடராஜன்] [5th August 1966

வரும்போது அந்த இடங்களில் கூலி ஏறும், விலைவாசி ஏறும், அப்படிப்பட்ட நிலை வந்தால், "உருக்காலை வந்துவிட்டது, விலைவாசி அதிகமாக ஏறிவிட்டது" என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். இன்னும் நான்காவது திட்டம் பிறக்கவே இல்லை. நகல் கட்டத்தில்தான் இருக்கிறது. குழந்தை கர்ப்பத்தில் இருக்கும்போதே, குழந்தை பிறக்கவில்லையே, பிறக்கவில்லையே என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அப்படி வேண்டும் என்றால் 'ஸிஸைரின்' தான் செய்யவேண்டும். மருத்துவக் கல்லூரி அட்மிஷன் விஷயத்தில் ஊழல்கள் நடந்திருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். நான் சொல்வது என்னவென்றால், இதற்கு எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்கள் என்று மட்டுமல்ல, எல்லா எம்.எல்.ஏ.-க்களுக்கும் பொறுப்பு உண்டு என்றுதான் சொல்லுகிறேன். எம்.எல்.ஏ. என்றிருந்தால், அவர்கள் தொகுதியிலிருந்து பத்துப் பேர்கள் வருகிறார்கள், எப்படியாவது மருத்துவக் கல்லூரிக்கு இடம் வாங்கிக் கொடுங்கள் என்று வருகிறார்கள், நாமும் சீட்டுக் கொடுக்கிறோம், இதை இல்லையென்று சொல்ல முடியாது. இப்படிக் கொடுத்தாலும் அதில் இரண்டு பேர்களுக்கு இடம் கிடைக்கிறது, கிடைத்தவர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள், சிலர் வேண்டுமென்றால் வேறு விதமாகச் சொல்லக்கூடும், எம்.எல்.ஏ.-க்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தேன், அவர் மந்திரிக்கு ரூபாய் கொடுக்க வேண்டாமா, கமிட்டி மெம்பருக்குக் கொடுக்க வேண்டாமா என்றெல்லாம் சொல்லலாம். இப்படிப்பட்ட அபாண்டமான பழியைப் பொறுக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஜனநாயகத்தில் வோட்டுகளை வாங்கித்தான் வரவேண்டியதிருப்பதால், இன்றைய நிலையில் இப்படியெல்லாம் சொல்லத்தான் செய்வார்கள். இதற்காக நம்மிடம் வருகின்றவர்களிடம் "என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்று திருப்பி அனுப்ப முடியுமா? அப்படிச் சொன்னால், "இதற்காகவா உங்களை எம்.எல்.ஏ.-வாக அனுப்பினோம்?" என்று கேட்பார்கள். எந்தக் கட்சி எம்.எல்.ஏ.-க்களாக இருந்தாலும் இதுதான் நிலைமை. ஜனநாயகத்தில் இது தவிர்க்க முடியாத நிலைமை. இதற்கு நம்மை நாமே ஓரளவுக்குக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, அதிகாரிகளைக் குறை கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, நகர மன்றங்களைக் கலைத்ததைக் குறிப்பிட்டு நம்பர் 6-என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். இந்த விஷயம் ஸப்ஜுடிஸ்ஸாக இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி அதிகமாக நான் பேசவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இதில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மந்திரி ஒரு தவறு செய்து விட்டார், அதாவது அருப்புக்கோட்டை, திருநெல்வேலி நகரசபைகளைக் கலைப்பதற்கு முன்னால், சென்னை கார்ப்பரேஷனைக் கலைத்திருக்கவேண்டும். . . . (ஆளும் கட்சிப் பக்கத்திலிருந்து ஆரவாரம்.) நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், கார்ப்பரேஷன் ஆட்சி எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டுமென்று தான். எங்கள் வீட்டின் முன்னால் வந்து பாருங்கள். ஸ்பர் டாங்க் ரோட் நம்பர் 1-ல் இருக்கிறது, எதிரிலே குப்பைகள் அப்படியே



5th August 1966] [டாக்டர் பா. நடராஜன்]

குவிக்கப்பட்டுக் கிடக்கின்றன, முன்னால் ஒரு பப்ளிக் கக்கூஸ், அதையும் குப்பையைக் கொட்டி பிளாக் செய்து வைத்திருப்பதால், பக்கத்திலுள்ள இடங்களை எல்லாம் அசுத்தப்படுத்துகிறார்கள். இந்த லட்சணத்தில் அருகில் சத்தியமூர்த்தி பார்க் வேறு இருக்கிறது. பாதையிலேயே வரட்டி தட்டும் தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது. பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்றும் அங்கே இருக்கிறது. இத்தனை சுகந்த வாசனைகளுக்கிடையில்தான் இந்தப் பள்ளிக்கூடம் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த இலட்சணத்தில் கார்பரேஷன் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது சென்னை நகரத்தில். மற்றப்படி. கலைக்கப்பட்ட நகரசபைகள் சம்பந்தமான விவரங்கள் ஸப்ஜுடிஸ்ஸாக இருப்பதால் நான் கருத்தாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

இன்னொரு குற்றச்சாட்டாகச் சொல்லியிருப்பது, இந்தி மொழி விஷயம். இன்னும் இதைப்பற்றிப் பேசிப்பேசிச் சலைக்கவில்லை. "சட்டம் வந்தாலும் அதை எதிர்த்துக்கொண்டுதான் இருப்போம்" என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லுகிறார்கள். அப்படியென்றால் சட்டம் வருவதைப்பற்றி இவர்கள் ஏன் கவலைப்படவேண்டும் என்று தெரியவில்லை. "சட்டம் வந்தால் அதை எதிர்ப்போம்" என்றால், சட்டம் வந்தாலும், வரவில்லை என்றாலும் இவர்கள் அதைப்பற்றி ஏன் அக்கறை கொள்ளவேண்டும்?

போகத்தில் எட்டு மந்திரிகள் இருக்கிறார்கள் என்று நினைத்துத்தான் எட்டுக் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எட்டுத் திசைகளிலும் இருந்து பாணம் விடுவதாக அவர்கள் நினைப்பாக இருக்கலாம். ஜோஸ்யத்தைப் பார்த்து எட்டு என்பது 'லக்கி' நம்பர் என்று நினைத்துத்தான் இப்படி எட்டு விஷயங்களைச் சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது (சிரிப்பு). எங்களைப் பொறுத்தவரையில் இது வருகிற தேர்தலின் வெற்றிக்கு அஷ்டபந்தனம் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். மொழி விஷயத்தில் அதற்குரிய சட்டம் வரும், சட்டம் வந்த பிறகு அது வேண்டியதில்லை என்று வேண்டுமானால் சொல்லட்டும். அது பின்னால் பார்க்கவேண்டிய விஷயம்.

அடுத்தபடியாக, தமிழைக் கல்லூரிகளில் போதனை மொழியாகக் கட்டாயமாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இதற்காக அரசாங்கம் உத்தரவாதத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கத் தவறிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். சிறப்பாக எங்கள் நாகர்கோவில் பகுதியை எடுத்துக்கொண்டால், தமிழ் மீடியத்தை அதிகமான மாணவர்கள் எடுத்திருக்கிறார்கள். ஆனால், ஒரு விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும். தமிழ் மீடியத்தை எடுத்துப் படிக்கின்ற பையன், படித்து முடிந்த பின்னால், வடநாட்டில் எங்கேயாவது போய் வேலை பார்க்க முடியுமா என்று பார்க்கவேண்டும். தமிழ் மீடியத்தில்தான் பையன் படிக்கவேண்டுமென்று சொன்னால், பின்னால் அதன் மூலம் அவனுடைய வாழ்க்கை சின்னபின்னப் படுத்தப்படுமானால், அதற்கு யார் பொறுப்பு ஏற்க முடியும்?

[டாக்டர் பா. நடராஜன்] [5th August 1966

ஆகவேதான் அரசாங்கம் தமிழ் மீடியம் என்பதைத் தங்கள் விருப்பப்படி மாணவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று வைத் திருக்கிறார்கள். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் மீடியத்தில் 50 மாணவர்களுக்குத்தான் சேர்த்திருக்கிறார்கள். இன்னும் அதிகமாக மாணவர்கள் சேர வேண்டும் என்றும், தமிழ்ப் பற்றுள்ள எதிர்க் கட்சித் தலைவர்கள், அங்கத்தினர்கள் இவர்கள் எல்லாம் மாணவர் களிடத்தில் சென்று, தமிழ் மீடியத்தில் சேருங்கள், சேருங்கள் என்று அவர்களோடு சேர்ந்து சொல்ல வேண்டும். அப்படியில்லா மல் இதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

கடைசியாக, ஒரு நிமிஷத்தில் ஒரு சிறு கதை சொல்லுகிறேன்

. . .

கனம் சபாநாயகர் : ஒரு நிமிஷக் கதையா?

டாக்டர் பா. நடராஜன் : ஒரு காலத்தில், புராணக் காலத்தில், ஒரு பிரளயம் வந்தது. அப்படி வந்தபோது, எல்லா உயிர்களும் அழியும் நிலையில் இருந்தது. நோவா என்பவர் ஒவ்வொரு உயிரி லும் ஒரு ஜோடியை ஒரு பேழையில் அடைத்துத் தண்ணீரில் மிதக்கவிட வேண்டுமென்று அவற்றைச் சேர்த்துக் கொண்டிருந் தார். அப்போது ஒட்டக இனம் மட்டும் மூன்று ஒட்டகங்களாக வந்தன. அப்போது நோவா, 'நீங்கள் ஏன் மூன்று பேர்களாக வந்தீர்கள்? இரண்டு பேர்களைத்தானே சேர்க்கலாம்?' என்று கேட்டார். அதற்கு ஒரு ஒட்டகம் சொன்னது: 'நான் என்ன ஒட்டகம் தெரியுமா? ஊசியின் காதுக்குள்ளே ஒட்டகம் போனாலும் பணக்காரர்கள் சொர்க்கத்திற்குப் போக முடியாது என்று சொன்ன ஒட்டகம்' என்றது. அடுத்து இன்னொரு ஒட்டகத்தைப் பார்த்து, 'நீ என்ன ஒட்டகம்?' என்று நோவா கேட்டபோது, அது 'ஒட்டகத்திற்கு இடம் கொடுத்தால் எப்படி என்ற கதை இருக்கிறதே, அந்த ஒட்டகம் நான்' என்று சொல்லியது. மூன்று வது ஒட்டகத்தைப் பார்த்து 'நீ என்ன ஒட்டகம்?' என்று கேட்டார். அப்போது அது 'பாலைவனக் கப்பல்' என்று சொல்லுவார்களே, அந்த ஒட்டகம் தான்' என்று சொல்லியது. 'மூன்று பேர்களும் இலக்கியப் புகழ் பெற்றவர்களாக இருக்கிறீர் கள். 'இலக்கியத்தில் மரபாக இருக்க நீங்கள் மூன்று பேர்களும் கூட்டாக ஏறிப் போங்கள்' என்று நோவா சொன்னமாதிரி இந்த முக்கூட்டு அணியும் அதன் தீர்மானமும் இருக்கிறது. இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி முடித்துக்கொள் கிறேன்.

MR. SPEAKER : The hon. Member Sri Chiranjeevulu Naidu will speak. He should take only five minutes.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I would like to say a few words on the no-confidence motion which has become a routine subject for discussion before this House.

Regarding soaring prices, it is a matter with which people are very much concerned. Consumers are finding it difficult to purchase essential commodities and it is the duty of the Government



5th August 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

to see to it that they get them at reasonable prices. As a producer I say that I feel jubilant when I sell groundnut at the rate of seventy rupees and I feel bitter when I purchase groundnut cake at forty-five rupees. Similar is the case with regard to edible oils and other commodities. The soaring prices are being attacked even by the producer, who is selling his raw commodity at a higher price, whenever he has to purchase paying a very high price for the converted commodity. We are thinking that Government is responsible for this. Government is responsible so far as imported commodities are concerned. So far as the commodities which are produced within the country and which are purchased by the ryots are concerned we should co-operate with the Government in controlling their prices.

Regarding assistance, much assistance is being given to agriculturists. But there may not be timely assistance. But I see that Government have been giving assistance both in cash and kind. In intensive agricultural development areas, fertiliser is given. When we are in off-season, we sell it to merchants. When we want it, we are forced to pay a higher rate. It is with co-operation that we will be able to carry on with the things that are available. Assistance has been given to agriculturists. But there may be defects in implementation for which the Government alone are not responsible.

Regarding supersession of municipal councils, I am not in favour of supersession of institutions unless there are grave charges. So also no-confidence motion should not be moved unless the Council of Ministers had committed such grave mistakes as are beyond rectification or as could not be tolerated. I do not see any mistakes of a grave nature committed by the Council of Ministers.

Regarding language policy, sufficient discussion has taken place in this House and I am sure the State Government will try to satisfy the feelings of the people of the South. I hope the Central Government will give careful consideration to the matter and enact legislation. There is enough time. I am sure the Central Government will take all steps to safeguard the interests of the South.

Regarding the general complaint that the Ministers show favouritism and nepotism, I most respectfully submit that they have got a conscience. We are aware of ministries in several other States where such allegations are made. Our Ministers have got a reputation for character, honestly and ingegrity. Whenever an appointment is made to a high position, we try to find out to which community the officer belongs and to which community the particular Minister concerned belongs. We try to connect relationship by sound. I would like to remind the hon. Members that when Sri S. K. Dey was appointed, doubts were entertained as to whether he was a foreigner and Shri Jawaharlal Nehru had to clarify that he was a Bengalee. We have to see the realities and see how far the Ministers are responsible for the acts complained of.

[Sri C. Chiranjeevulu Naidu] [5th August 1966

Our Government has got a history, has got a national outlook and has made sacrifices for the cause of the nation. When an interpretation regarding Ramayana discourses conducted by certain persons was asked, the Hon. Chief Minister said that there was no provision in the Indian Penal Code under which action could be taken against those who offended the religious sentiments of other people. I am very much worried about demoralisation setting in among the younger generation. Is it not the duty of the Government to prevent such things? I am sure that the Ministry under the leadership of the Hon. Chief Minister, who has got a history and tradition and who hails from a family which has got reputation and character, will be able to deliver the goods to this State and the Nation. I am sure the State Government and the Central Government will deliver the goods and strive towards the upliftment of the State and the country as a whole. Thank you, Sir.

**திரு. முனு. ஆதி:** மதிப்புக்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆரம்பிக்கிறேன். இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லுவதற்கு எனக்கு முன்னாலே பேசிய பல எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சொன்னதைப் போல நானும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாதவரம் பால் பண்ணை ஏற்கனவே நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்று அமைச்சரால் சொல்லப்பட்டது. இதில் 12 கூலர்களைச் சென்னையில் வைக்க ரூ. 2,87,000-க்கு வாங்கிய யந்திரங்கள் துருப்பிடித்துப் போகும் அளவுக்கு, இயங்கும் அளவுக்கு இல்லாமல் தேங்கிக் கிடக்கின்றன. ஏன் அப்படி இருக்கிறது என்றால், வைக்க இடம் இல்லை, அக்காமடேஷன் இல்லை என்ற இந்தக் காரணத்தினால் 12 கூலர்கள், ரூ. 2,87,000 மதிப்புள்ள யந்திரங்கள் பாழாகப் போகின்றன என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும்போது, இப்படிப்பட்ட நிர்வாக ஊழலைக் கண்டிக்காமல் இருக்க முடியாது.

இதே போல, கல்வி இலாகாவில் நடந்திருக்கிற பிரச்னை. வெளி நாடுகள், ஸ்வீடனிலிருந்து, ஆஸ்ட்ரேலியாவிலிருந்து, வெள்ளைப் பேப்பர் ஏழைக் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்களை அச்சிட்டு இலவசமாகக் கொடுப்பதற்காக ரூ. 54 லட்சத்திற்குப் பேப்பர் வந்தது. ரூ. 21 லட்சம் மதிப்புள்ள பேப்பரில் அச்சிட்டு அதை ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகத் தராமல் விலைக்கு விற்கப்பட்டது. முப்பத்தி மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள மிகுதிப் பேப்பர் எங்கே இருக்கிறது என்று தணிக்கை அதிகாரிகள் கேட்டு சொந்தத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டதா என்றால், பயன்படுத்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு வெளி நாட்டவர் கொடுத்த காகிதங்களை அச்சிட்டு விலைக்கு விற்றிருக்கிறார்கள் என்றால் வெளி நாட்டவர்கள் இந்த அரசாங்கத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



5th August 1966] [திரு. முனு. ஆதி]

அதே போன்று திருநெல்வேலியில் ஹரிஜன மக்களுக்காக 20 வீடுகள் 15,000 ரூபாய் மதிப்புள்ள வீடுகள் கட்டப்பட்டன. அவைகளுள் 10-12 வீடுகள் இடிந்து விழுந்து விட்டன. கலெக்டர் அவர்கள் டிவிஷனல் என்ஜினியரை அழைத்துக் காட்டி விழுந்ததற்கான காரணத்தைக் கேட்கும்போது, 'சிமெண்ட் கலப்படம் சரியில்லை, அதனால் தான் விழுந்துவிட்டன' என்று சொன்னார். இதற்கு மாற்று யோசனை என்ன, மாற்று மார்க்கம் என்ன என்று கேட்டபோது, 'மேலும் ரூ. 22,000 ஒதுக்கினால் கட்டடத்தைக் கட்டித் தரலாம்' என்று டிவிஷனல் என்ஜினியர் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட ஊழல்கள் தணிக்கை அறிக்கை மூலமாகப் பார்க்கும்போது ஆயிரக் கணக்கான ஊழல்களானது ரூ. 9,24,00,000 அளவுக்கு ஆட்சேபக் குறிப்புகள் இருக்கின்றன. எங்கே பணம் போயிற்று? இப்படி இருக்கும்போது எங்கே நம்பிக்கை இருக்கும் என்று கேட்கிறேன். இதே மன்றத்தில் 23-3-1966-ல் புளியமங்கலம் பஞ்சாயத்து தலைவர் திரு. அம்பிகாபதி என்பவரின் ஊழல் பற்றி பேசியிருக்கிறேன். நடவடிக்கை எடுக்கப்பட்டது. கலெக்டர் அவர்கள் 11-6-1966 தேதியில் பரிசீலனை செய்து ஐ.பி.சி. 175 பிரிவுப்படி கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிறகு, திரு. காமராஜ் அவர்கள் சொல்லியதாலும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைப் பாராட்டிப் பேசியதாலும், ஆர்.டி.ஓ. அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் அவர்களை அப்படியே விட்டுவிட்டார்கள்.

அதே போன்று வேலூரில் திராவிட முன்னேற்றக் கழக மகாநாடு நடந்தது. மூவி லைசென்ஸ் போலீஸ் சூபரின்டெண்டெண்டு கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார். ..-..-1966-ல் காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. எல்லா காங்கிரஸ்காரர்களும் ஒரு பஸ்ஸில் ஏறி கொண்டு, உட்கார்ந்து கொண்டு, ஒலிபெருக்கி வைத்துக் கொண்டு எங்களைத் தாக்கியே பேசிக்கொண்டு போனார்கள். போலீஸ்காரர்கள் தலையிடவில்லை. போலீஸ் சூபரின்டெண்டெண்டு எங்களுக்கு லைசென்ஸ் கொடுக்கவில்லை, அவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்.

137549

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கழகத் தோழர் ஆலந்தூர் பாலன் கல்லடிபட்டு தகராறு நடந்திருக்கிறது. வீடு புகுந்து அடித்திருக்கிறார்கள். எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் செங்கற்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஊழியர் கூட்டம் நடந்திருக்கிறது. கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடைவெளி இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஜனநாயகத்தை பாதிக்கக்கூடிய வகையில் நடந்துகொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் ஊழியர் கூட்டம் திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் செங்கற்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ராமசுவாமி முதலியார் நடத்தியிருக்கிறார்கள். திரு. ஓ. வி. அளகேசனும் கலந்து கொண்டிருக்கிறார். மக்கள் என்ன நினைப்பார்கள்? பஞ்சாயத்து யூனியனுக்கும், காங்கிரசுக்கும் வேறுபாடில்லை என்று தானே நினைப்பார்கள் . . . (மணி அடிக்கப்பட்டது).

[5th August 1966

*** திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்தச் சபை முன்பு வைக்கலாம் என்று ஆசைப்படுகிறேன். குறிப்பாக, இந்த சர்க்கார் பிற்பட்ட மக்களுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்து, அவர்களை இந்த நாட்டில் மற்ற சமூகத்தினரைப்போல் சரிநிகர் சமமாக வாழ வைக்கவில்லை என்பதைப் பற்றி அழுத்தம் திருத்தமாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக உழைப்பாளர் பொது நலக் கட்சி அதன் முக்கியத்துவத்தைத்தான் எடுத்துக்கொண்டு, இன்றைக்கு சர்க்காரோடு போராடிக்கொண்டு வருகிறது. காங்கிரஸ்காரர்கள் 18 ஆண்டுகாலமாக நாட்டை ஆண்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட 60 சத விகிதம், பிற்பட்ட மக்களும், 20 சத விகிதம் ஆதிதிராவிட மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் உத்தியோகத் துறையிலும் சரி, மந்திரி சபையிலும் சரி, பெருவாரியாக இருந்து மக்களுக்கு சேவை செய்யக் கூடிய ஒரு நிலைமையில் இருந்தபோதிலும் கூட, குறிப்பாக முற்போக்கு இனத்தினர்தான் இந்த நாட்டில் உள்ள எல்லாவிதமான வசதிகளையும் அடைந்து கொண்டிருக்கிறார்கள். பிற்பட்ட மக்களுக்கு நியாயமாகவும், உரிமையோடும் கிடைக்க வேண்டிய வசதிகள் கிடைக்காமல் இருந்துகொண்டிருக்கிற நிலைமை தான் இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் சமீபத்தில் சலவைத் தொழிலாளர்கள் மகாநாடு திரு. காமராசர் அவர்களின் முன்னிலையில் வெகு விமரிசையாக நடந்தது. கிட்டத்தட்ட 30,000 பேர்கள் கூடினார்கள். குறிப்பாக செங்கோட்டையிலும், கன்யாகுமரியிலும் இவர்கள் ஷெட்யூல்டு வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இங்கேயும் ஷெட்யூல்டு வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று இப்பொழுது மாத்திரமல்ல, 1956-லிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவ்வப்பொழுது சொன்னபொழுது திரு. காமராஜர் அவர்களும் 'இது கவனிக்கப்படும்' என்று சொன்னார்கள். இப்பொழுது 1966-ல் 10 வருஷங்கள் சென்றும், அதே சமாதானம் தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். 'கவனிக்கப்படும், நானும் சிபார்சு செய்கிறேன்' என்ற அதே அடிப்படையில் தான் நிலைமை இருக்கிறது. நமக்கெல்லாம் தெரியும். ஏதோ ஒருவருக்கு திரு. எத்திராஜ் அவர்களுக்கு எம்.எல்.சி. பதவி கொடுத்துவிட்டு, அத்தனை பேர்களையும், சலவைத் தொழிலாளர்களையும், பிற்பட்ட மக்களை பயன்படுத்திக்கொள்கிற நிலைமை இருந்து வருகிறது. அவர்களுக்கு ரூ. 50 இஸ்திரி பெட்டி வாங்குவதற்குக் கடன் கொடுக்கிறார்கள். அதையும் சிறுகச் சிறுக வசூல் செய்யக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. இந்த நாட்டிலுள்ள அத்தனை பிற்பட்ட மக்களும் வஞ்சிக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு நடை பிணங்களாக இந்த நாட்டில் வாழ்கிறார்கள்.

அதே நேரத்தில் நிர்வாகத் துறையில் எடுத்துக் கொண்டால், வைத்தியக் கல்லூரி மாணவர் தேர்வுக் குழுத் தலைவர் திரு. பி. எம். சுந்தரவதன முதலியார், என்ஜினியரிங் கல்லூரி மாணவர் தேர்வுக் குழுத் தலைவர் திரு. முத்தையா முதலியார், கால்நடை வைத்தியக் கல்லூரி மாணவர் தேர்வுக் குழுத் தலைவர் திரு. முருகேச முதலி



5th August 1966] [திரு. கி. இரா. சம்பந்தம்]

யார், விவசாயக் கல்லூரி மாணவர் தேர்வுக் குழு தலைவர் திரு. ஏ. கே. சுப்பையா முதலியார், கல்வி இலாகா தலைமை டைரக்டர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு முதலியார், தமிழ் நாடு மின்சார போர்ட் தலைவர் திரு. அப்பாதுரை முதலியார், மடாலய இலாகா ஆணையாளர் திரு. சாரங்கபாணி முதலியார், தமிழ்நாடு இறக்குமதி ஏற்றுமதி கண்ட்ரோலர் திரு. சபாநாயக முதலியார், தமிழ்நாடு ரெவின்யூ இலாகா காரியதரிசி திரு. கார்த்திகேய முதலியார், கைத்தறி டைரக்டர் திரு. மகாதேவ முதலியார், சர்வகலாசாலை துணை வேந்தர் திரு. ஏ. லட்சமணசுவாமி முதலியார், செங்கற்பட்டு மாவட்ட லைப்ரரி தலைவர் திரு. புருஷோத்தம முதலியார், மாகாண லைப்ரரி தலைவர் திரு. சுப்பாராய முதலியார், செங்கற்பட்டு மத்திய கோஆப்பரேடிவ் பாங்கு தலைவர் திரு. எல்லப்ப முதலியார், தமிழ் நாடு கூட்டுறவு யூனியன் நிர்வாகஸ்தர் திரு. நடேச முதலியார், தமிழ் நாடு கைத்தறி நெசவாளர்கள் சங்கத் தலைவர் திரு. நாச்சிமுத்து முதலியார், மத்திய அடமான பாங்கு தலைவர் திரு. என். எஸ். ராமலிங்க முதலியார், செங்கற்பட்டு மாவட்ட கோஆபரேட்டிவ் சொசைட்டித் தலைவர் திரு. ராமகிருஷ்ண முதலியார், செங்கற்பட்டு மாவட்ட மார்கெட்டிங் சொசைட்டி தலைவர் திரு. முத்து முதலியார். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். (மணி அடிக்கப்பட்டது.)

*** திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மான நாடகத்தின் கடைசி நாள் இது. நம்முடைய சட்டமன்றத்தில் மட்டுமல்ல. அடுத்த வருடம் தேர்தல் வருடம். ஆகவே, டெல்லி பாராளுமன்றத்திலும், பல மாகாணங்களின் சட்டமன்றங்களிலும் அவர்கள் முன்கூட்டியே இதற்கெல்லாம் ஏற்பாடு செய்து வகுத்துக் கொண்ட திட்டம் இது. அது எங்கும் சரிவர நடத்தப்பட்டு வருகிறது. சோஷலிஸ்ட் கட்சி இந்த நாட்டிலே 19 கட்சிகள் இருக்கின்றன. இன்னும் எவ்வளவு இருக்குமோ என்னவோ ஞாபகத்தில் எழுதிப்பார்த்ததில் 19 வருகிறது. தமிழ் நாட்டிலே சம்யுக்த சோஷலிஸ்டு கட்சி உறுப்பினர் அவர்கள் தான் எடுத்துக்கொண்ட பாத்திரத்தை நன்றாக நடித்து வெற்றி பெற்று விட்டார். டெல்லியில் திரு. லோகியா அவர்கள் எப்படிச் செய்தாரோ அதைத் தொடர்ந்து இவரும் இங்கே செய்தார் என்பது நன்றாகத் தெரிகிறது. அவர்கள் ஒரு சாபத்தைக் கூட நேற்று கொடுத்தார்கள். அது தான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. 'இந்நாட்டில் எப்படி எப்படியெல்லாம் ஏற்படப்போகிறதோ, நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்' என்று சொன்னார்கள். லெனின் அவர்கள் ரஷ்யாவில் சார் அரசாட்சி மாற வேண்டும் என்று பேசிக்கொண்டு வருகிறபொழுது ஒரு பெரிய எழுத்தாளர், அறிஞர் என்று அந்த நாட்டில் சொல்லப்படுபவர் திரு. பாலியோலக் அதைக் கேலி செய்து கொண்டு வந்ததாக ஒரு புத்தகத்தில் படித்தேன்; தலைக்கிறுக்கு. சில சமயம் பைத்தியக்காரனின் பிதற்றல் ரசமாயிருக்கும் என்று எழுதியிருக்கிறார். புரட்சியில் லெனின் வெற்றி பெற்ற பிறகு அவர் பிரான்சுக்குப் போய் விடுகிறார். அவர் அங்கிருந்து என்ன எழுதினார் என்றால் 'அழு, என் புண்ய பூமியே அழு; நீ இருட்டில் புகுகின்றாய்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [5th August 1966

நீ சாவாய்' அப்படிச் சொன்னார். அந்த மாதிரி சொன்னார் சோஷலிஸ்டு கட்சி உறுப்பினர் இந்த சட்ட மன்றத்தில். ரஷ்யா சாகவில்லை, ரஷ்யா சந்திர மண்டலத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது.

என் மீது மட்டுமல்ல, ஸ்தாபனத்தின் மீது குறை சொன்னார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பாளையங்கோட்டை நகர சபைக்கும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கும் ஒரு தொடர்பு என்று சொன்னார். தொலை பேசி எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை. நான் சவால் விடுகிறேன். அங்கு போய், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மூலம் தான் அந்த பாக்கி ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் கொடுக்க முடியுமா? அந்த மாதிரி ஆதாரங்களுடன் பாக்கியை கட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ஆடிட்டர் சொல்லி பிரயோசனமில்லை. ஆடிட்டருக்கு பதில் சொல்லவேண்டியவர்கள் நிர்வாகத்தினர். கமிஷனர் அவர்கள் சொல்ல வேண்டும். ஆடிட்டர் / ஆட்சேபணை கிளப்புகிறார்கள். எந்த வகையில் பாக்கி ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டியவர்கள் நிர்வாகிகள். பிரயாணிகள் தங்கும் விடுதி அது. அங்கே இருக்கிறது தொலை பேசி. அவர்கள் நினைப்பது, பேசுகிற பேச்சு தோரணை இவைகளைப் பார்த்தால் ஏதோ அந்தக் காரியாலயத்தில் இருக்கக்கூடிய தொலை பேசியை உபயோகப்படுத்திக்கொண்டு இருப்பது போல் பேசுகிறார்களே.
11-00 a.m. அங்கே விடுதியில் எட்டு பேர்கள் இறங்க வசதி இருக்கிறது. 1963 ஏப்ரல்-மே இரண்டு மாதங்களுடைய வரவு செலவுக் கணக்கு எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். நான் வரவழைத்து வைத்திருக்கிறேன். அந்தக் கணக்குப்படி. டெலிபோனுக்கும், டி.பி.-க்கும், மொத்தமாக ரூ. 500-க்கும் அதிகமாகத் தொகை கொடுத்துக் கணக்குத் தீர்க்கப்பட்டிருக்கிறது. எட்டு பேர்கள் தங்கும் இடத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்தான் டெலிபோனை உபயோகித்தார் என்கிற விவரத்தைக் சபைக்குக் கொடுத்திருக்க வேண்டும். பாக்கிகள் ஏற்பட்டு இருக்கலாம். அதற்காக காங்கிரஸ் கமிட்டி தலைவர் இருந்தார் என்று குறிப்பிடுவது சரியாகாது. தொகைகள் கொடுக்காமல் இல்லை.

இன்னொன்றும் சொல்லுகிறேன். எதிர்க்கட்சியின் உப தலைவர் ரூ. 160-க்கும் அதிகமாக பாக்கியிருப்பதாக ஆடிட்டரால் குறிப்பிடப் பட்டிருக்கிறது என்றும், அது தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பாக்கி என்றும் குறிப்பிட்டார்கள். என்னிடம் தகவல் வந்திருக்கிறது, உள்ளூர் டிரங்க் கால். மற்றவைகளுக்கு பாக்கி ரூபாய் 52.80 என்று. அப்படியே தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தொலை பேசியில் பேசியிருந்து, அந்தத் தொகை பாக்கியாக இருந்தாலும், குடி மூழ்கிப் போனது என்ன? அங்கே பலர் இறங்குகிறார்கள் . . . .

Sri K. A. MATHIALAGAN : Sir, one minute.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** அரை நிமிஷம் கூடக் கொடுக்க முடியாது. கண்டிப்பாக முடியாது, தலைவர் சொன்னால் ஒழிய.



5th August 1966]

Sri K. A. MATHIALAGN : On a point of order, Sir.

Mr. SPEAKER : No point of order. Let the hon. Member resume his seat.

(Many hon. Members belonging to the Opposition rose in their seats on points of order.)

Mr. SPEAKER : So many hon. Members getting up and shouting is not a point of order. Let them please resume their seats.

Sri S. MADHAVAN : Sir, on a point of order.

Mr. SPEAKER : Let the hon. Member please sit down.

So many hon. Members getting up and shouting is not a point of order. Therefore, there does not arise any point of order.

Sri K. A. MATHIALAGAN : On a point of order, Sir.

Mr. SPEAKER : Let the hon. Member please resume his seat. Let there be order first and then the hon. Member can raise the point of order.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இது சம்பந்தமாக உண்மைக்கு மாறான விஷயங்களை அங்கத்தினர் சொல்லுகிறார்கள். திரு. நடேச நாடார் என்கிற அஸிஸ்டெண்ட் எக்ஸாமினர் ஆஃப் லோகல் பண்ட் அகௌண்ட்ஸ் இங்கே தன் ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி ரூபாய் 160 பாக்கி, திரு. கிருஷ்ணசாமி நாயுடு, டி.என்.ஸி.ஸி. பிரசிடெண்ட் கட்ட வேண்டும். It is highly irregular என்று குறிப்பிட்டிருக்கும் இந்த தஸ்தாவேஜை இந்த மன்றத்தில் தாக்கல் செய்கிறேன் (ஒரு பேப்பரைக் கொடுக்க வந்தார்).

Mr. SPEAKER : It is not a point of order and I am not prepared to receive it.

Sri K. A. MATHIALAGAN : Sir, he is presenting misleading facts to the House.

Mr. SPEAKER : I decide that it is not a point of order.

Let the hon. Member, Sri Krishnaswami Naidu, continue his speech.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** கனம் சபாநாயகர் அவர்களே, கமிஷனர் ஆபீசிலே தேடி எடுக்கப்பட்ட பழைய காகிதங்கள் என்னிடம் இதோ இருக்கின்றன . . .

**கனம் சபாநாயகர் :** அதெல்லாம் வேண்டியதில்லை. அங்கத்தினர் பதிலைமட்டும் சொன்னால் போதும்.

(Some noise was heard in the House)

Mr. SPEAKER : If hon. Members make noise, it is highly irregular.

[5th August 1966

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :* ஆகவே, இவர்கள் குறிப்பிட்ட தொகைகள் நீக்கப்பட்டிருக்கலாம், அல்லது பாக்கியாகவும் இருக்கலாம். பாக்கியே இருந்தாலும் குடி முழுகிப் போவது என்ன? ஏதோ இந்தசந்தர்ப்பத்திலே புழுதியைத் தூற்றிவிடுகிறார்கள். கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு ஆலைக்கு லைசென்ஸ் கொடுத்தது பற்றிக் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டார்கள். . .

SRI K. A. MATHIALAGAN : Sir, I am raising another point of order. Can I raise a point of order or not ? Have I got the right to raise it or not ?

MR. SPEAKER : But I am not allowing the hon. Member to raise the point of order.

(Some voices : We have got every right to raise points of order.)

SRI S. MADHAVAN : According to the Rules, I am entitled to raise the point of order.

MR. SPEAKER : I am not allowing any hon. Member to disturb the House.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :* தலைவர் அவர்களே, இப்பொழுது தேர்தல் சமயம். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் ஏதாவது தூற்றி விடுவது என்று சொல்கிறார்கள். பத்திரிகைகளும், பொது மக்களும் அவரவர்களுக்கு தோன்றிய வகையில் கற்பனை செய்து கொள்ளட்டும் என்றுதான் செய்கிறார்கள்.

SRI S. MADHAVAN : On a point of order, Sir.

SRI K. A. MATHIALAGAN : On a point of order, Sir.

SRI K. S. MANI : On a point of order, Sir.

MR. SPEAKER : Only with the permission of the Speaker, an hon. Member can raise a point of order.

SRI S. MADHAVAN : Sir, I want your permission. The hon. Member (Sri R. Krishnaswami Naidu) has mentioned my name. I have not put that question.

MR. SPEAKER : சரி. ஒரு பெயரைச் சொன்ன உடனேயே பாயின்ட் ஆப் ஆர்டரை ரெய்ஸ் பண்ண முடியாது.

If the hon. Members are really sincere in their desire to raise a point of order, first there should be perfect silence in the House according to the Rules. That is the first point of order which every one, any democrat, any sincere M.L.A. must keep up, then get the permission of the Speaker and then put the question

SRI P. U. SHANMUGHAM : Sir, how are we to get your permission ?



5th August 1966]

MR. SPEAKER : Some of you must shout ? Is that the way to get the permission of the Speaker?

SRI P. U. SHANMUGHAM : Kindly excuse us, Sir.

SRI V. KRISHNAMOORTHY : We are really obeying the Chair.

Now, I want to raise a point of order. I raised it first.

MR. SPEAKER : The hon. Member has not raised it first. The hon. Member, Sri Mathialagan has raised it first.

*திரு. இரா. நெடுஞ்செழியன் :* கனம் அவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பும் உரிமை அங்கத்தினர்களுக்கு உண்டு; அவற்றின் மேல் தீர்ப்புக் கொடுக்கும் உரிமை சபாநாயகர் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, யாராவது ஒரு அங்கத்தினருக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : There are also precedents that if any hon. Member raises a point of order unnecessarily, the Speaker can stop it.

SRI K. A. MATHIALAGAN : How can the Hon. Speaker presuppose that it is unnecessary ?

**கனம் சபாநாயகர் :** அதைப்பற்றி ரூல்ஸ் கமிட்டியிலே டிஸ்கஸ் பண்ணலாம்.

SRI M. KALYANASUNDARAM : Sir, may I make a submission ? I am not raising a point of order.

கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சில அங்கத்தினர்களைக் குறிப்பிட்டால், அப்படிப் பட்ட மெம்பர்களுக்கு பின்னால் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சொல்ல சந்தர்ப்பம் கொடுக்கலாம்.

MR. SPEAKER : That is right. That I have done several times. Why this hubbub ?

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :* கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் சொன்னது போல, பெயர்களைச் சொல்லி நான் பதிலுக்கு குற்றம் சாட்டவில்லை.

MR. SPEAKER : The hon. Member should not make the personal allegation and he also should not be carried away by emotion and go on dilating on that point. Time is already over.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :* என்னுடைய டயத்தைக் கெடுத்து விட்டார்கள். இந்த எதிர்க் கட்சிகள் வரப்போகிற தேர்தலை மனதில் வைத்து, முன் கூட்டியே ஒவ்வொருவர் மீதும் குறிப்பிட்ட குற்றங்கள் இருப்பதாகக் கூறினால், அதன் மூலமாக பொதுமக்களுடைய கருத்தில் அவர்கள் மீது அதிருப்தி ஏற்படும் என்கிற தோரணையில் இப்பொழுது செயல் பட ஆரம்பித்திருக்கிறார்கள்.

எந்த வகையிலும் லட்சியம், கொள்கை, திட்டம் ஒன்றும் இல்லாமல், இவர்கள் காங்கிரஸ் கட்சியை எதிர்க்க வருகிறார்கள். பத்தொன்பது ஆண்டு காலத்துக்குப் பிறகும் இன்னும் ஒரு எதிர்க் கட்சியை உருவாக்க இயலாத இவர்கள் காங்கிரஸ் ஆட்சிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு லட்சியமும், ஒரு கொள்கையும், ஒரு திட்டமும் இல்லாத இவர்கள் கடந்த காலத்தில் செயல் பட்டு வந்ததும் நமக்குத் தெரியும்; இப்பொழுது செயல் படுவதும் தெரியும்; இவர்கள் சட்ட சபையில் செயல் படுகிற விதமும் தெரியும்; இப்பொழுது இரண்டு மூன்று நாட்களாக இவர்கள் நடந்துகொள்ளும் விதத்தையும் யோசிக்கும் போது காங்கிரஸுக்குப் பதிலாக இவர்கள் அரசாட்சிக்கு வருவார்கள் என்ற அறிகுறி எதுவும் இல்லை என்பதைச் சொல்லி முடிக்கிறேன்.

SRI V. KRISHNAMOORTHY : I want to raise a point of order. I am seeking your Honour's permission.

MR. SPEAKER : The hon. Member, Sri Karunanithi, will now make his personal explanation.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை நகர சபை டி.பி. யிலிருந்து டிரங்க் கால்கள் போட்டு—அது பங்களாவிலிருந்து போட்டதோ ஆபீசிலிருந்து போட்டதோ—அந்த கால்களுக்கு, அங்கே உள்ள ப்யூன்கள், மானேஜர் பட்லர் இவர்களெல்லாம் ஒவ்வொரு தொகை தரவேண்டும் என்றும், அதில் திரு. கிருஷ்ணசாமி நாயுடு, பிரசிடெண்ட். டி.என்.ஸி.ஸி, போட்டிருக்கும் கால்களுக்கு மொத்தம் ரூபாய் 160.80 கட்டவேண்டும் என்றும் போட்டிருக்கிறது. தணிக்கை செய்த ஆடிட்டர் திரு. பத்மநாபன் என்பவர் இதைக் கொடுத்திருக்கிறார். அவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். அதிலே திரு. நடேச நாடார், அஸிஸ்டெண்ட் எக்ஸாமினர், அவர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இப்பொழுது உத்தமர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்குக் களங்கம் ஏற்படக்கூடாதே இந்தக் கணக்கை வைத்துக் கொண்டிருப்பதால் என்ற கவலையோடு நகர சபையைக் கலைக்க வேண்டாமா என்று கேட்டேன். அதைக் கவனிக்க வேண்டும் என்று இதையும் கொடுக்கிறேன். (ஒரு ரிப்போர்ட் கொடுக்கப்பட்டது.)

(திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு தன் இடத்தில் எழுந்தார்கள்.)

கனம் சபாநாயகர் : பதில் ஒன்றும் வேண்டாம்.

* திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழு மூச்சோடு எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் நான் பேச ஆசைப் படுகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த எதிர்க் கட்சியினர், உண்மையிலேயே கொள்கை அளவில் நாங்கள் தவறு செய்துவிட்டோம், அரசாங்கத்தினுடைய கொள்கை தவறு என்று சுட்டிக்காட்டினால் பரவாயில்லை. இங்கே கொடுத்திருக்கிற தீர்மானங்களைப் பார்த்தால், சத்தில்லாத தீர்மானங்களாகத்தான்,





சத்து இல்லாத எண்ணிக்கைகளாகத்தான் இருக்கின்றன. அதற்கு மேல், பேசுகின்றவர்கள் என்ன பேசினார்கள் என்று பார்த்தால், தீர்மானத்தில் கொடுக்கப்பட்ட விஷயங்களைக் கூடப் பேசாமல், பைப் திருட்டுப் போய் விட்டது, அந்த நகரசபையில் அது போயிற்று, இங்கே ஒரு போலீஸ்காரர் கேஸ் எடுக்கவில்லை, ஆபீசர் அதைச் செய்யவில்லை என்று இப்படியாகத்தான் சொன்னார்கள். "ட்ரிவியல் அட்மினிஸ்ட்ரேடிவ் மாட்டர்" என்று சொல்லக்கூடிய வகையில், நிர்வாகத்தில் அங்கங்கே நடக்கக்கூடிய சிறு சிறு தவறுகளை எல்லாம் அக்கப்போராகப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே அவர்கள் எவ்வளவு நம்பிக்கைக்கு உகந்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர்கள் சொன்னது போல, தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில், அவர்களுடைய ஆத்திரத்தை வெளியிடும் வகையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுவதும் மிக மிக வரவேற்கத்தக்கதே. காரணம், அவர்களுடைய ஸ்டீமை, ஆவியை விட்டு விட்டால், மக்கள் மத்தியில் போகும்போது, இந்த ஆவி, இந்தச் சத்து கூட இல்லாமல் போய்விடும் என்பதை அவர்களே வெகு சீக்கிரத்தில் புரிந்துகொள்ளுவார்கள். அது மட்டுமல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த எதிர்க்கட்சியினருக்கு நம்மைக் காட்டிலும் நிர்வாகத் திறமை இருக்குமானால், உண்மையிலேயே நாம் ஓரளவு அவர்களுடைய வாதத்தைப்பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இவர்களுக்கு இருக்கின்ற ஒரு சிறு இடங்களிலே நிர்வாகம் செய்கின்ற திறமையைப் பார்த்தால், அந்தோ, பரிதாபம், இவர்களுக்கு இந்தத் தீர்மானம் கொண்டுவருவதற்குக் கூட திராணி இருக்கிறதா என்று உண்மையிலேயே வருத்தப்படக் கூடிய நிலைதான் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, நான் சென்னை நகரசபையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நகரசபை நரகசபையாகக் காட்சியளிக்கிறது. பொழுது விடிந்து மாலை முடிவதற்குள்ளே எத்தனை திருட்டுகள்? எத்தனை ஊழல்கள்? நமக்குத் தெரியவில்லையா, ஊழல்களாக உருக்கொண்டிருக்கிறது சென்னை நகரசபை. காலையில் செய்தித்தாளைத் திறந்தால், அங்கே வைக்கோல் திருட்டுப் போயிற்று, இங்கே கார் திருட்டுப் போயிற்று, அங்கே டயர் திருட்டுப் போயிற்று, இங்கே லாரி திருட்டுப் போயிற்று, அங்கே எலெக்ட்ரிக் வயர் திருட்டுப் போயிற்று என்று செய்திகள் வெளிவருவதைப் பார்க்கும்போது, இந்த எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கக் கூட லாயக்குள்ளதா என்று கேட்கத் தோன்றுகிறது. இந்த அரசாங்கம் நெல்லை நகரசபையைக் கலைத்ததைக் காட்டிலும், முதலில் சென்னை நகரசபையைக் கலைத்திருந்தால் உண்மையிலேயே சென்னை நகரத்தில் உள்ள இருபது லட்சம் மக்களும் இந்த அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தியிருப்பார்கள். கிண்டிக்கு அருகில் இருக்கும் ஒரு ஆஸ்பத்திரியில் கம்பவுண்டர் கொடுத்த மருந்தில் விஷம் இருந்த காரணத்தால், அதைக் குடித்த மூன்று பேர் மயங்கி விழுந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அளவிலே அடித்தளத்திற்குக்

கீழே போயிருக்கும் நிர்வாகத்தை நடத்தும் கட்சி நம்மைப் பார்த்து, நிர்வாகத்தில் தவறிவிட்டது என்று சொல்லுகிறார்கள் என்றால், அவர்களை உண்மையிலேயே மக்கள் எப்படி எடை போடுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதற்கு மேலாக அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், அங்கே திருட்டுப் போயிற்று, இங்கே திருட்டுப் போயிற்று என்கிறார்கள். வரவு செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்படுகிற பணம் லட்சக்கணக்கான ரூபாய் பாழ்படுத்தப்பட்டது என்றால், அது உடனே அக்கவுண்டன்ட்-ஜெனரலுடைய கவனத்திற்குப் போகிறது. அங்கிருந்து பொதுக் கணக்குக் கமிட்டிக்கு வருகிறது. அந்தப் பொதுக் கணக்குக் கமிட்டிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள்தான் நான்கு ஐந்து ஆண்டுகளாகத் தலைவராக இருந்து வருகிறார்கள். அப்படி நிர்வாகத்தில் ஊழல் பகிரங்கமாக நடத்தப்படுமானால், அவராகவே, உடனே இங்கே கொண்டுவந்து பொதுக்கணக்குக் கமிட்டிக்கு அனுப்பியிருக்கலாம். பொதுக் கணக்குக் கமிட்டியின் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்களுடைய கட்சி அங்கத்தினர்கள் இருக்கும்போது, அந்த நிர்வாக ஊழலை சரிவரக் கவனிக்கத் தவறிவிட்டதென்றால், அது அவருடைய திறமைக் குறைவைக் காட்டுகிறதே தவிர, எங்களுடைய திறமைக் குறைவைக் காட்டவில்லை என்று மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொதுக் கணக்குக் கமிட்டி என்று வைத்து, ஜனநாயக சம்பிரதாயப்படி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதற்குத் தலைமை வகிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அமைக்கப்பட்டிருக்கும்போது, அங்கே இருக்கின்ற அவர்கள் எங்கே தவறு நடக்கிறது என்றாலும் அதைத் திருத்த வேண்டும். தவறு நடந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் அமைந்திருக்கிறோமே தவிர, தவறுகளை மறைத்து வைத்துக் கொண்டு நிர்வாகத்தை ஊழலோடு நடத்தவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. அப்படியிருக்கும்போது, அவர்களுடைய தலைவரிடம் சொல்லி, நிர்வாகக் குறைவுகளை நேர்மைப் படுத்தக்கூடிய வழி இல்லை என்றால், அதை வைத்துக்கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேசக்கூடிய அளவுக்கு வருகிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் எப்படிக் கொண்டுவருவது என்கிற அரசியல் பாடமே கூட அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரசியல் அரிச்சுவடிப் பயிற்சிக் கூட இல்லை யென்றால் எங்கேயிருந்து பெரிய நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியும்?

அடுத்தபடியாக, எங்களைப் பார்த்து, “உங்கள் ஆட்சியில் பஞ்சம் பட்டினி இருக்கிறது” என்று சொல்கிறார்கள். ஆங்கிலேயர்கள் நூறு ஆண்டு ஆட்சியில் முப்பது முறை பஞ்சம் வந்தது. மூன்றரை கோடி மக்கள் மாண்டார்கள். இக்கனமிக் ஹிஸ்டரி ஆப் இண்டியாவைப் புரட்டிப் பார்க்கட்டும். இந்தியாவின் பொருளாதாரச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கட்டும். மூன்றரை கோடி மக்கள் மாண்டதைக்கூட எதிர்த்துப் பேசுவதற்கு மூச்சு இல்லாத இவர்கள், முதுகெலும்பு இல்லாத இவர்கள், மூன்று





பேர்கள் எங்கோ செத்துவிட்டார்கள் என்று முக்கால் மணி நேரம் பேசுகின்றார்கள். அடுத்தடுத்து அந்நியர் ஆக்கிரமிப்பு மூன்று ஆண்டு பருவ மழை குறைவு. மக்கள் உற்பத்தி ஆண்டுக்கு ஒரு கோடி டன் அதிகரித்துக் கொண்டேபோகிறது. இத்தனையையும் வைத்துக் கொண்டு நாங்கள் இவ்வளவு சமாளித்து 17 ஆண்டு சரித்திரத்தில் பஞ்சமே வராமல் தடுத்திருக்கிறோம், அது ஒன்றே போதும் மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைப்பதற்கு என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்.) நாங்கள் கஞ்சித் தொட்டி வைத்தால் இவர்கள் வந்தால் கழுநீர்த் தொட்டி வைப்பார்கள். எவ்வளவோ கஷ்டப்பட்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி, பல கோடி ரூபாய் செலவழித்து, விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு இருக்கிறோம். பெரிய வளர்ந்த நாடு ரஷ்ய நாடு. அதுவே கனடாவிலிருந்து கோதுமை கடன் வாங்குகிறது. அமெரிக்காவிலிருந்து கோதுமை வாங்குகிறது. அப்படியிருக்க பெரிய பேச்சாக இவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களைப் பூர்த்தி செய்துவிட்ட பெரிய சோஷலிச நாடு, பெரிய வல்லரசு; அது தங்களுடைய நாட்டு மக்களுக்கு கனடாவிலிருந்து கோதுமை கடன் வாங்குகிறது. அப்படியிருக்க, நம் நாட்டில் பஞ்சத்தைத் தடுப்பதற்கு, பட்டினியைத் தடுப்பதற்கு, ஒரு இந்தியனும் சாகக்கூடாது என்ற காரணத்திற்காக, அக்கறை எடுத்துக்கொண்டு கோடிக்கணக்காகப் பணத்தைச் செலவிட்டு, முழு மூச்சோடு வேலை செய்துகொண்டிருக்கும்போது, எங்களுக்கு ஆதரவுதான் தரவில்லையென்றாலும், அபாண்டமாகச் சொல்லாமலாவது இருக்க வேண்டாமா? அல்லது உண்மையையாவது மறைத்துப் பேசாமல் இருக்க வேண்டாமா? இப்படிப் பேசுகிறவர்களை, எவ்வளவு நல்லவர்கள், எவ்வளவு நல்ல மனச்சாட்சி இவர்களுக்கு இருக்கிறது, எவ்வளவு நீதி இவர்களுக்கு இருக்கிறது என்பதை மக்கள் அண்மையில் முடிவு கட்டிவிடுவார்கள். அந்த முடிவை 1967-இல் பார்க்கத்தான் போகிறார்கள். நிர்வாகத்தைப்பற்றி அங்கே தவறு, இங்கே தவறு என்று குறை கூறுவதைப் பார்க்கச் சிரிப்பு வருகிறது. என்னுடைய சகோதரி திருமதி குழந்தையம்மாள் பேசியதை கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அழகாகப் படித்துக் காட்டினார்கள். நான் கேட்கிறேன்—இவர்கள் 18 ஆண்டுகளில் கடைப்பிடித்த கொள்கைகளில் எத்தனை பல்டி போட்டிருக்கிறார்கள்? அதைப் புரட்டிப் பார்ப்பதுதானே? 1964-இல் அம்மையார் அப்படி பேசிவிட்டார், இன்றைக்கு இப்படிப் பேசிவிட்டார் என்கிறார்களே, இவர்களுடைய 18 ஆண்டுக் காலத்தில் கடைப்பிடித்த லட்சியம் என்ன ஆயிற்று? அவர்கள் பரப்பிக்கொண்டிருந்த கொள்கை இன்றைக்கு எப்படி மாறியிருக்கிறது? இவர்களுடைய கொள்கையை, மூச்சுக் காற்றாகக் கொண்டிருந்த பிரச்சினையைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு, 18 ஆண்டுகளில் 18 பல்டிகள் போட்டுவிட்டு, 1964-இல் அப்படிப் பேசிவிட்டார்கள், இன்றைக்கு இப்படிப் பேசிவிட்டார்கள் என்று இதற்காக ஒரு

பேச்சு, இதற்காக ஒரு கைதட்டல். அவர்கள் கொண்டுவந்திருப்பது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அல்ல, அது நையாண்டித் தீர்மானம் தான் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்.)

அடுத்தபடியாக வரும்போது, அதிகாரிகளைப்பற்றிப் பேசினார்கள். சென்ற சட்டசபையில் உறுப்பினராக இருந்த, இதே எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. அன்பழகன் அவர்கள் அப்படித்தான் திரு. ராஜரத்ன முதலியார் என்கிற அதிகாரியைப்பற்றி அவதூறு சொன்னார்கள். உடனே, அதற்கென்று நீதிபதி திரு. பி. என் ராமசாமி அவர்களை நியமித்து அதுபற்றி விசாரிக்கச் சொல்லியது அரசாங்கம். திரு. அன்பழகன் அவர்களுக்கு நோட்டீஸ் போயிற்று. நல்ல முதுகெலும்பு படைத்தவராயின் டி.பி.டபிள்யூ (1) ஆகச் சென்று, அந்த அதிகாரியைப்பற்றிச் சொன்ன குற்றச்சாட்டுகளை 'ப்ரூவ்' பண்ணியிருக்கவேண்டும். நோட்டீஸ் போனால், வீட்டில் ஒளிந்துகொண்டு, வரமாட்டேன் என்று சொன்ன முதுகெலும்பு அற்றவரைக் கொண்டுள்ள கட்சியினர் மீண்டும் மீண்டும் இங்கே அதிகாரிகளைக் குறித்து . . .

**திரு. மு. கருணாநிதி:** கனம் சபாநாயகர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். திரு. அன்பழகன் ஒளிந்துகொண்டார்கள் என்றெல்லாம் சபையிலே பேசுவது ஒழுங்கல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**கனம் சபாநாயகர்:** திரு. அன்பழகன் அவர்கள் இங்கே இல்லை.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** திரு. அன்பழகன் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே இருந்தபோது, அவரையே கேட்டு, "நான் வீட்டிலேயே இருந்தேன், எனக்குத் தெரியாது" என்று அவரே சொல்லியிருக்கிறார். சட்டசபை நடவடிக்கைகளில் அது பதிவாயிருக்கிறது. கனம் திரு. கருணாநிதி அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? இப்படி எந்த அதிகாரி மீதாவது யார் அவதூறு சொன்னாலும், அதை அவர் நிரூபிக்கவேண்டும். எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மீது அவதூறு சொன்ன திரு. ஃபெரோஸ் காந்தி அவர்கள், திரு. கிருஷ்ணமாச்சாரி அவர்களுக்கு எதிராகவேகூட சாட்டி சொல்லவில்லையா? அப்படி இருக்கும்போது, ஒரு எம்.எல்.ஏ-வாக இருக்கக்கூடிய ஒருவர், பஸார் ரூமர்ஸை வைத்துக் கொண்டு, காற்று வாக்கிலே சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளை இங்கே பேசிவிட்டு, எடு பிடி என்று ஓடிப்போவது என்றால் என்ன அர்த்தம்? ஆந்திர சட்டசபையில் . . .

(கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்களும், கனம் உறுப்பினர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களும், மற்றும் கனம் உறுப்பினர்கள் சிலரும் ஒரே சமயத்தில் எழுந்திருந்தார்கள்.)

**திரு. கே. ஏ. மதியழகன்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார்.

**கனம் சபாநாயகர்:** கனம் உறுப்பினர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறேன் என்கிறார். கனம்





எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் எழுந்து நிற்கிறார். எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்திருந்தால், நான் யாரைக் கூப்பிடுவது?

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஒரு பிரச்சினை என்றால் அப்படித்தான் எழுந்திருப்பார்கள்.

**கனம் சபாநாயகர்:** அத்தனை பேர்களும் ஒரே சமயத்தில் எழுந்திருந்தால் என்ன செய்வது?

**திரு. கே. ஏ. மதியழகன்:** இது பெரிய தப்பு என்று சொல்லுகிறீர்களா?

**கனம் சபாநாயகர்:** கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கனம் உறுப்பினர் திரு. மதியழகனுக்குப் பக்கத்தில்தான் நிற்கிறார். யாராவது ஒருவர் உட்கார வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** சகோதரி திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுகிற நேரத்தில், "திரு. அன்பழகன் அவர்கள் பேசும்போது பஸார் மொழியிலே பேசினார்கள்" என்று குறிப்பிட்டார்கள். எம்.எல்.ஏ. ஒருவர் பொதுவாக பஸார் மொழியிலே . . .

**கனம் சபாநாயகர்:** "பஸார் ரூமர்ஸ்-ஐ வைத்துக்கொண்டு", அதாவது "பஸார் வதந்திகளை வைத்துக்கொண்டு" என்ற பொருளில் கனம் உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசினார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** திருமதி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டது போல், திரு. அன்பழகன் அம்மாதிரி வார்த்தைகளை இங்கே சொல்லவில்லை. சாட்சி சொல்லுவதற்கு திரு. அன்பழகன் அவர்கள் வாராததற்கான காரணத்தை இந்த மன்றத்தில் அவரே சொன்னதாக திருமதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். திரு. அன்பழகன் அப்படிக் காரணம் சொன்னதாக திரு. அம்மையார் அவர்கள் சொன்னது உண்மைக்கு மாறானது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. T. KOSALRAM : On a point of order, Sir. Always some Members are raising point of order without any point.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் அம்மையார் அவர்கள், "பஸாரிலே பேசுகிற மாதிரி இந்த மன்றத்தில் வந்து பேசிக்கொண்டிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்கள். அது அங்கத்தினர்களை இழிவுபடுத்துவதோடு கூட, அங்கத்தினர்கள் பேசுகின்ற இந்த மன்றத்திற்கே இழுக்குத் தேடித் தரப்படுகிற அர்த்தத்தைத் தருகிற ஒன்றாகும் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** "பஸார் ரூமர்ஸ்"-ஐ வைத்துக்கொண்டு பேசுவதாகச் சொன்னார்கள்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : I am entitled to a personal explanation.

கனம் தலைவர் அவர்களே, பஸாரிலே பேசுகின்ற ஆதாரமற்ற செய்திகளை, வீதிகளிலே பேசப்படுகின்ற பேச்சுக்களை, காற்றுவாக்கிலே சொல்லப்படுகிறவற்றை இங்கே வந்து பேசுவதுதான் தவறு என்று சொன்னேன். அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டால் நான் என்ன செய்வது? நான் சொன்னதில் எந்தவிதத் தவறும் கிடையாது.

**கனம் சபாநாயகர்:** இதுவரைக்கும் பார்த்தால் எந்தவிதமான தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் நிறையப் பேசியிருக்கிறார்கள். ஆளும் தரப்பில் இருந்தும் சிலர் பேசுவார்கள். அவர்கள் பேசுவதை, இவர்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்ததைப்போல, ஆளும் தரப்பில் இருந்து பேசுகின்றவர்களுடைய பேச்சுக்களையும் எதிர்தரப்பில் உள்ளவர்கள் அமைதியாகக் கேட்கவேண்டும். இன்னும் ஒரு மணி நேரம் அமைதியாக, கூச்சல் எழுப்பாமல் இருக்கக் கூடாதா? (திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள், கூச்சல் என்ற சொல்லை உபயோகப்படுத்தலாமா என்று குறுக்கிட்டார்) ஏன் சொல்லக் கூடாது? இப்போது இங்கே கூச்சல் போடவில்லையா? நான் ஒப்பனைக் சொல்வதில் என்ன தவறு? சபாநாயகருக்கு மட்டும் வாயைப் பூட்டி வைத்திருக்கிறார்களா? நான் இங்குள்ள எல்லோருக்கும் சொல்கிறேன். பேசுகின்றவர்களை பேச விடுங்கள். அவரவர்கள் அவரவர்களுடைய கருத்தை இங்கே தெரிவிக்க குறுக்கிடு இருக்கக் கூடாது. தவறாகப் பேசினால் தலைவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தாங்கள்தான் கெட்டிக்காரர் என்கிறமாதிரி குறுக்கிட ஆரம்பித்தால் என்ன செய்வது? முதலில் நமக்கு அவகாசம் இல்லை. சபை நடவடிக்கை ஒழுங்காக நடைபெற வேண்டும். ஆகவே, ஒரு அங்கத்தினர் பேசும்போது மற்றவர்கள் விணைக் குறுக்கிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள். அவர்களுக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் தரப்படும்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** அந்த நிலையில் இப்படி அதிகாரிகள் மீது எந்த அங்கத்தினராவது அவதூறுகளை எழுப்பினால் அதை நிரூபிக்கவும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அப்படியின்றி வீணை அவதூறுகளை சொல்லி விட்டுப்போவதனால் பயன் இல்லை. பொறுப்பற்ற வகையில் தவறான செய்திகளைப் பரப்புவது அவர்களுக்கும் நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல. குறைகள் இருந்தால் அவற்றை நிவர்த்திக்கவேண்டும் என்பதாகச் சட்டசபையில் வந்து அதை எடுத்துச் சொல்லாம. அதை விட்டு தவறான செய்திகளை, குற்றச்சாட்டுகளை பொறுப்பற்ற முறையில் இங்கே வந்து எடுத்துச் சொல்வதோடு, மக்கள் மத்தியிலும் பரவச் செய்வது, வீணை குழப்பத்தை ஏற்படுத்துவது எதிர்க்கட்சிகளுக்கே நல்லதல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் . . . . (மணியடிக்கப்பட்டது).

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே . . .

திரு. அ. பெ. தர்மலிங்கம் எழுந்தார்.





**கனம் சபாநாயகர்:** இன்னும் பேசப் பெயர் கொடுத்துள்ள அங்கத்தினர்கள் 15 பேர்கள் இருக்கிறார்கள். நான் எல்லோரையும் பேச அழைப்பது என்பது குறிப்பிட்ட நேரத்தில் முடியாத காரியமாகும். இப்போது திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து நான் பேசுகின்றேன். என்னோடு சேர்த்து இதுவரை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து பேசியிருக்கக்கூடியவர்கள் 16 பேர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்தும் 16 பேர்கள் பேசியிருக்கிறார்கள், முதல் அமைச்சரைத் தவிர. இனிதான் முதல் அமைச்சர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு பதில் அளிக்க இருக்கிறார்கள். ஆக இதுவரைக்கும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிப்பவர்களுக்கும், எதிர்ப்பவர்களுக்கும் சமமான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகப் பாராட்டுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு இணங்கினார்களே, அதற்காகவும் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(கனம் உதவிசபாநாயகர் தலைமை)

முதலில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இதை தேர்தல் ஸ்டண்ட் என்றும், வெறும் அரசியல் நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றும் நையாண்டியாகக் கூடச் சொன்னார்கள். (திரு. ஆர். வி. சுவாமிநாதன் குறுக்கிடு) சொல்வதற்கு உரிமை உண்டு. நையாண்டி செய்தார்கள், நையாண்டி தீர்மானம் என்று கூடக் கூறினார்கள். நம்முடைய சட்டசபைச் சம்பிரதாயத்தில் எதிர்க்கட்சி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதும், அதன் மீது பேசப்படுகிற விஷயங்களை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் பரிசிலனை செய்ய மறுப்பதும், உண்மை இருக்குமானால் அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதும்தான் நல்ல மரபு. அந்த நோக்கத்தோடுதான் இன்றையதினம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பல குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் எடுத்து நிரூபிப்பது என்றால் அதற்கு போதுமான வாய்ப்புகள் எதிர்க்கட்சியினர்களுக்குக் கிடையாது. ஆளும் கட்சியினர்களுக்கு அவற்றை நன்றாகப் பரிசிலனை செய்வதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. உண்மை என்று கண்டவற்றின் மீது நடவடிக்கை எடுக்கவும் வசதிகள் இருக்கின்றன. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அங்கங்கே கேட்ட தகவல்களை இங்கே வந்து சொல்கிறார்கள். அந்தக் கருத்து தப்பாக இருந்தால் அவை தப்பானவை என்று எடுத்து மறுப்பதற்குரிய வாய்ப்பு ஆளும் கட்சியினர்களுக்குத்தான் இருக்கிறது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இந்த சட்ட மன்றத்தில் மட்டும் கொண்டு வரப்படவில்லை. பார்லிமெண்டிலும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்றைக்குத்தான் அதுவும் முடிவு அடைந்திருக்கிறது. இதர மாநிலச் சட்டசபையில் பார்லிமெண்டில் நடந்ததுபோல நடக்க

விடாமல் இதைச் சமாளித்திருக்கிறார்கள். இந்த நிலைக்கு நிர்ப்பந்தப்படுத்தாமல் முதலிலேயே விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட நம் பாராட்டக் கூடியதுதான்.

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஏன் வந்திருக்கிறது என்பதை ஆளும் கட்சியினர் யோசித்துப் பார்க்கவேண்டும். நாங்கள் எடுத்துக் கூறுவது குறைவாக இருக்கலாம். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டவர்கள் அவர்கள். கடந்த பதினைந்து, பதினாறு வருடங்களாக ஏகபோகமாகத் தொடர்ந்து அதிகாரத்தில் அவர்கள் இருந்து வருகிறபோது நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டுள்ளதைப் போன்ற நெருக்கடி ஏன் ஏற்பட்டிருக்கிறது? இரண்டு முறை படையெடுப்பு ஏற்பட்டது என்றால் அது சமீபத்தில்தான். அதற்கும் கூட நாட்டு மக்கள் தாங்களாகவே முன் வந்து எல்லாவிதமான ஆதரவுகளையும் தந்திருக்கிறார்கள். கேட்ட வரியைக் கொடுத்திருக்கிறார்கள். நன்கொடைகளாக வேறு கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது இந்த அரசாங்கம் நாட்டு மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் ஏன் போயிற்று? அப்படி இருக்கிறபோது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஏன் கொண்டு வரக்கூடாது? நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தது தவறு என்று ஆளும் கட்சியினர் நினைக்கலாம். ஆனால் பார்லிமெண்டில் கொண்டு வந்தார்களே, அதைப் பற்றி வெளியில் உள்ள மக்கள் யாரும் தவறாக நினைக்கவில்லையே. எதிர்கட்சியினர் சிறுபான்மையாக இருப்பதனால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோற்றுப் போகலாம். அது வேறு விஷயம். மக்களுடைய அபிப்பிராயத்தை இந்தச் சபையில் பிரதிபலிக்கச் செய்யத்தானே எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. இன்றைக்கு இந்தச் சபையில் எதிர்க்கட்சியினர் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் அதைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் கோபப்படாமல் கொஞ்சம் பொறுமையாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். வெறும் போலீஸ் ரிப்போர்ட்டை மட்டும் நம்பிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. அவர்கள் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிக்க மாட்டார்கள். நிரபராதிகளைத்தான் குற்றவாளியாக்குவார்கள். உண்மையான தகவல்களைச் சேகரித்துக் கொடுக்கமாட்டார்கள். தவறான தகவல்களைத்தான் சேகரித்துக் கொடுப்பார்கள். இது பின்னால் நான் சொல்லக் கூடியவற்றில் இருந்தும் தெரியும். அமைச்சர் அவையில் உள்ளவர்கள் அத்தனைபேர்களையும் கூட மதித்து நடந்துகொள்ள மாட்டார்கள். தங்கள் இலாக்காவுக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் யாரோ அவர் சொன்னதையே எடுத்துக்கொண்டு போவார்கள். அவர்கள் தருகிற தகவல்களையே வைத்துக்கொண்டு போய்விடாமல் அமைச்சரவை உண்மையை ஆராய்ந்து தகுந்த முடிவுக்கு வரவேண்டும்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இந்தச் சபையில் கொண்டு வருவது ரொம்ப நிதானமான நடவடிக்கை. மற்ற மற்ற மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். நம் மாநிலத்தில் எப்படி நடக்கிறது, வங்காள மாநிலத்





தில் என்ன நடக்கிறது என்று பார்த்தால் இங்குள்ள எதிர்க்கட்சிகள் ரொம்ப நிதானமாக நடவடிக்கைகளில்தான் இறங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். எதிர்க்கட்சியினர்களால் ஒரு லட்சம், இரண்டு லட்சம் பேர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம், கதவடைப்பு என்பதாக எல்லாம் நடத்த முடியாதா? மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இந்த மாநில எதிர்க்கட்சிகள் எல்லாம் சட்டபூர்வமான ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் நடந்துகொண்டு வருகின்றன. அந்த அடிப்படையில்தான் நம்பிக்கை இல்லாத் 11-30 a.m. தீர்மானத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு உறுப்பினர் ஜனநாயகத்திலே விலைவாசியை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்று கேட்டார்கள்-பொருளாதார நிபுணர் என்று நினைக்கிறேன்—அவர்கள் பேசும் பொழுது நான் இங்கே இல்லை, அவர்கள் பேசியதை ஒலிபெருக்கி மூலம் நான் வேறு இடத்திலிருந்து கேட்டேன்; அவர்கள் ஜனநாயகத்திலே விலைவாசியை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்று கேட்டார்கள் . . .

**டாக்டர் பா. நடராஜன்:** நான் அப்படிச் சொல்லவில்லை. பயத்தினாலும் நயத்தினாலும்தான் அதைச் செய்யவேண்டும். வெறும் மிரட்டலினால் அதைச் செய்யவேண்டுமென்று நினைத்தால் பிறகு அது ஜனநாயக ஆட்சியாக இருக்காது, கொடுங்கோலாட்சியாகி விடும் என்றுதான் சொன்னேன்.

**திரு. மி. கலியாணசுந்தரம்:** புலியினிடத்திலும், ஓநாயினிடத்திலும் நயத்தினாலே எப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்? ஓநாயினிடமிருந்து ஆட்டைக் காப்பாற்றவேண்டுமானால் ஓநாயை மிரட்டித்தான் விரட்டவேண்டும். 95 பேர்களைக் காப்பாற்றுவதற்காக 5 பேர்களின் மேல் நடவடிக்கை எடுத்துத்தான் ஆகவேண்டும். 95 சத விகிதத்தினரை 5 சத விகிதத்தினருக்காக சிறையாக்கலாமா? அதுவா ஜனநாயகம்? அது ஜனநாயகத்திற்கு விரோதமானது. கொள்ளை லாபம் அடிக்கக்கூடியவர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகள் இவர்களுக்கெல்லாம் உதவி செய்கிற மாதிரி இவர்களுடன் இணைந்து இருப்பதால்தான், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும், நெருக்கடியான நிலையைச் சமாளித்தோம் என்று கூறியும், பட்டினிச் சாவும், ரயிலிலே விழுந்து சாவதும், பொருளாதார நெருக்கடி, பிறகு சட்டமன்றத்தில் நெருக்கடி, பாராளுமன்றத்தில் நெருக்கடி என்றெல்லாம் ஏற்படுகின்றன. இது ஏன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு ரஷ்யா நாடு கனடாவிலிருந்து கோதுமை இறக்குமதி செய்கிறது என்று ரஷ்யாவை இந்தச் சபையில் ஏன் இழுக்கவேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. இங்கே 48 கோடி மக்கள் இருக்கிறோம், 8½ லட்சம் டன்தான் உற்பத்தி செய்கிறோம். அங்கே இருபது கோடி மக்கள் இருக்கிறார்கள், அவர்கள் 12½ லட்சம் டன் உற்பத்தி செய்கிறார்கள். நாம் அரிசி சாப்பிடுகிறோம். அதற்கு தொட்டுக்கொள்ள அப்பளம் அல்லது ஏதாவது வடகம் போன்றவற்றை வைத்துக்கொள்கிறோம். இன்னும் கஞ்சி சாப்பிடுகிறவர்களுக்கு மிளகாய் அல்லது வெங்காயம் இருந்தால் போதும். பெரும்பாலும் அப்படித்தான் சாப்பிடுகிறார்கள். ஆனால்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th August 1966

அங்கே ரஷ்ய நாட்டில் அவர்கள் பன்றி இறைச்சி அல்லது மாட்டு இறைச்சியைச் சாப்பிடுகிறார்கள். அதற்காக அவர்கள் பன்றிக்கு, மாட்டுக்கு எல்லாம் கோதுமை உணவாகப் போடவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் அவர்கள் கோதுமையை வாங்குகிறார்கள். ஆகவே நாம் நம்முடைய குறைபாடுகளை மறைப்பதற்காக உலகத்திலே நமக்கு இருக்கும் ஒரே ஒரு நண்பனைக் கேவலமாகப் பேச வேண்டாம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன் . . .

**டாக்டர் பா. நடராஜன் :** Production problem has not been solved. நாற்பது ஆண்டுகளுக்குப்பிறகும், அவர்கள் நாற்பது ஆண்டுகளாக ட்ரை பண்ணியும், இன்னும் டிஃபிக்கல்டி இருக்கிறது என்பதைத்தான் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அதற்காக கனடாவிலேயிருந்து இறக்குமதி செய்கிறார்கள் என்றெல்லாம் சொல்லவேண்டாம். அவர்கள் விவரம் தெரிந்துகொள்வதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், சார்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அவரைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அம்மையார் அவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொன்னேன். இதில் அவர்கள் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷனுக்கு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். நம்முடைய உணவுப் பிரச்னையை நாம்தான் தீர்க்க முடியும், ரஷ்யாவும் தீர்க்க முடியாது, அமெரிக்காவும் தீர்க்க முடியாது, வேறு எந்த நாடும் தீர்க்க முடியாது, நாம்தான் தீர்த்துக்கொள்ளவேண்டும். நம்முடைய நாட்டிலேதான் மிகவும் கடுமையாக உழைக்கக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். கடுமையாக உழைக்கக்கூடிய, எளிமையாக இருக்கக்கூடிய விவசாயிகள் இருக்கக்கூடிய இந்த நாட்டில் அவர்களை வைத்துக்கொண்டு சரியாகச் செய்யாமல் அரசாங்கம் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் தன்னுடைய கொள்கையைப் பரிசீலனை செய்வதற்கு முற்படாமல், தான் செய்தது எல்லாம் சரியென்று சொல்வதற்கு நியாயம் இல்லை. இதுவரை பேசியவர்கள் தனிப்பட்ட அமைச்சர்கள் யாரைப்பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். கனம் முதலமைச்சர் அவர்களுடைய மனம் புண்பட்டுவிடாது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்தவர்களும் அவர்களுடைய தியாகம், திறமை, உருக்குப்போன்ற உள்ளம் இவற்றை எல்லாம் எடுத்துச் சொல்லி 'அப்படிப்பட்ட இவர்கள் மேல் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு என்ன தைரியம் வந்தது உங்களுக்கு?' என்று பேசினார்கள். ரொம்ப நியாயம். ஆனால் அப்படிச் சொல்கிற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் என்ன செய்து இருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்காமல் முதலமைச்சர் அவர்களையும், உள்துறை அமைச்சர் அவர்களையும் காட்டி, கட்சியைவிட நாடு தான் எங்களுக்குப் பெரிது என்று பேசுவது . . .



5th August 1966]

**திரு. கே. டி. கோசல்ராம் :** மந்திரிசபை மீதுதான் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்கள், அங்கத்தினர்கள் மேல் அல்ல.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றால் காங்கிரஸ் மந்திரிசபைமீது என்றால் அத்தனை பேர்களும் என்றுதான் அர்த்தம்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** எதிர்க்கட்சித் தலைவர் அப்படிக் கொடுக்கவில்லை.

**திரு மீ. கலியாணசுந்தரம் :** மந்திரிசபை என்றால் மந்திரிசபை மட்டும்தான் என்று அர்த்தம் அல்ல காங்கிரஸ் கட்சியினுடைய 18 ஆண்டுக்கால கொள்கையே இதன் மூலம் தாக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்கொண்டால்தான் அது அவர்களுக்கு நல்லது. அப்படியில்லாமல் முதலமைச்சர்தான் பொறுப்பு அமைச்சர் ராமையாதான் பொறுப்பு என்று சொல்லி அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கக்கூடாது. எல்லோரும்தான் பொறுப்பு . . . 11-40 a.m.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** அப்படியானால் தேர்ந்தெடுத்த மக்கள்மீது நம்பிக்கையில்லை என்று சொல்கிறாரா?

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அது தேர்தலில்தான் தெரியும். தேர்தலில் அவர்கள் 46 லட்சம் வாக்குகள் பெற்று 130 பேர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் ப்ரப்போர்ஷனேட் ரெப்ரசன்டேஷனாக இருந்தால், சரியான ஜனநாயக முறையில் தேர்தல் நடந்தால் அவர்கள் 96 பேர்கள்தான் வந்து உட்கார்ந்திருப்பார்கள். என் பின்னால் இன்னும் 16 பேர்கள் உட்கார்ந்திருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்னும் இரண்டு ஸ்தானங்கள் அதிகமாக வந்து இருக்கலாம். ஆளுங்கட்சிக்கு 46 சதவிதம் வந்திருப்பதால் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய 96 ஸ்தானங்கள் போக மீதி எப்படி வந்தது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேர்தல் கோளாறு காரணமா? மெஜாரிட்டி ஸ்தானங்கள் பெற்று ஆளுங் கட்சி ஆட்சி நடத்தினால் குழப்பம் இருக்காதா? 1962 தேர்தல் காலத்தில் மெஜாரிட்டி மக்களுடைய தேர்தல் இல்லை என்பதை தன்னடக்கத்தோடு எல்லோரும் உணர்ந்தால் அது ஜனநாயகத்திற்கும் நல்லது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறேன், இதைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களுக்கு. இந்த மந்திரிசபையை அமைக்கும்பொழுது அனுபவத்தின் முதன்மை, இளமையின் துடிப்பு நிறைந்த மந்திரிசபையாக இது இருக்கும் என்று எல்லாம் சொல்லி இது எல்லாவற்றையும் சாதிக்கும் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த மந்திரிசபை டில்லி மந்திரி சபையை மீறி ஒன்றும் செய்துவிடமுடியாது. இயந்திரத்தின் ஒரு அமைப்பு 'a cog in the wheel' என்று சொல்வார்களே, அதுபோன்றுதான் இது. ஒரு இயந்திரம்போன்ற அமைப்பிலே இது ஒரு பல் தான். இந்த மந்திரிசபை எப்படி நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். கட்சிதான் பெரிது என்று நினைக்கிறார்கள். தகுதி இருக்கிறதா, திறம் இருக்கிறதா என்று பார்த்து அவர்களே தாங்களாகவே விலகிக்கொள்ளக்

கூடாதா? அவர்கள் என்ன, என்ன தியாகம் செய்திருக்கிறார்கள்? முதலில் உட்கார்ந்திருக்கிற இரண்டு பேர்களைத் தவிர, அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், ஆகிய மூன்று பேரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் என்ன தியாகம் செய்திருக்கிறார்கள், அவர்களைத் தவிர வேறு யாருக்கு அருகதை இருக்கிறது?

கனம் மன்றாடியார் அவர்கள் ராஜா மாதிரி இருப்பவர்; கம்பீரமான தோற்றம் உள்ளவர்; அவரைக் கொண்டு வந்து மந்திரியாகப் போட்டுச் சிரமப்படுத்தியிருக்க வேண்டாம். அவரே, 'வம்பு வேண்டாம்; காங்கிரசுக்கு வேண்டுமானால் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்' என்று சொல்லி இதை விட்டிருக்கலாம். வேறு ஒருவருக்கு இதைக் கொடுத்திருக்கலாம். இப்படித்தான் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கோயம்புத்தூர் வேளாளர் குடும்பத்தில் பிறந்தார் என்பதைத் தவிர வேறு என்ன தகுதி அவருக்கு இருக்கிறது? மந்திரி சபை எப்படி அமைந்திருக்க வேண்டுமென்பதைப் பற்றி மனம் விட்டுப் பேசுகிறேன். இதிலே யாரும் வருத்தப்படுவதற்கில்லை. இப்படி ஒவ்வொன்றுக்கும் ஜாதியைக் காட்டினால் என்ன பொருள்? ஐந்து வருஷம் ஆகியும் எந்த ஒரு விஷயத்தையும் தெளிவாகச் சொல்ல, படித்துப் பேசப் பழகியிருக்கிறார்களா? அவர்களிடம் நான் எதற்கும் தனிப்பட்ட முறையில் போகவில்லை. அவர்களும் எனக்கு எதையும் மறுக்கவில்லை. நாடு பெரிது என்ற கவலை இருந்தால் அந்த மந்திரி சபை எப்படி இருக்க வேண்டும்? சில மந்திரிகள் வீட்டிலிருந்து கொண்டே அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். சிலர் மந்திரிகளின் பக்கத்தில் இருந்து கொண்டே அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். அதிகாரிகளைப் பயப்படச் செய்து காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கும் வரை ஆட்சியில் நம்பிக்கை ஏற்பட முடியுமா? திரு. கோசல்ராம் நான் சொல்வதை மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்தமாதிரி நடக்கிறதா இல்லையா?

எந்தக் கமிட்டியாக இருந்தாலும் ஆளுங்கட்சியினரைத்தான் போடுகிறார்கள் என்று சிலர் சொன்னார்கள். அவ்வாறு போடாமல் இருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளவேண்டும். எதிர்க்கட்சிகளுக்கு தயவு செய்து வேண்டவே வேண்டாம். அதிகாரிகளாக இருந்து நடக்கிற ஒரு சில கமிட்டிகள் ஒழுங்காக நடக்கின்றன. எஞ்சினியரிங் கல்லூரிக்குத் தேர்வைப் பொருத்தவரை கடந்த இரண்டு, மூன்று வருஷங்களாக எந்தவிதமான புகாரும் வரவில்லை. வைத்தியக் கல்லூரிக்கான தேர்வைப் பொருத்தவரை மட்டும் என் இந்தமாதிரிப் புகார் வரவேண்டும்? இந்த முறை மட்டுமல்ல, போன முறையும் வந்தது; அதற்கு முன்பும் வந்தது. நான்-அபிஷியல் மெம்பர் இருவரை விலக்கியாயிற்று. இப்போது அபிஷியலைப் போட்டிருக்கிறார்கள். அவர் டாக்டராகப் பழகிவிட்ட காரணத்தால், வைத்தியம் செய்து நோயாளிகளோடு அனுபவம் ஏற்பட்ட காரணத்தால் இப்படி ஏற்படுகிறதா? நிறைய 'டவுட்ஸ்' இருக்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்களிடம் நான் புகார் கொடுத்திருக்கிறேன். பப்ளிக்காக இங்கே சொல்லிவிட்டால் ஆதாரமில்லாமல் போய்விடும். சில குடும்பங்களுக்கு



நிறைய 'டவுட்கள்' இருக்கிறார்கள். அவர்கள் கன்னிமாரா ஹோட்டலில்தான் தங்குகிறார்கள். அவர்கள் பணமா அது? ஊரார் பணந்தானே! அவர்களுக்குப் பணம் கொடுத்தும் அவர்கள் ஏமாற்றினார்களா அல்லது இவர்கள் பணம் கொடுத்ததாகச் சொல்லி ஏமாற்றுகிறார்களா? இரண்டும் இருக்கலாம். பொது வாழ்வில் இந்த நிலை நீடித்தால், இந்தக் கட்சி போய் இன்னொரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பெரும் அபாயம் இருக்கிறது. யார் பெயரை வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக் கொள்ள முடியாது. பலாப்பழத்தைச் சுற்றித்தான் ஈ மொய்க்கும். அமைச்சர்கள் பெயர், அதிகாரிகள் பெயர், செல்வாக்குள்ள எம்.எல்.ஏ-க்கள் ஆகியோருடைய பெயரைப் பயன்படுத்துவார்கள். இதிலே சர்க்கார் கவனம் செலுத்த வேண்டியது ரொம்ப அவசியம்.

இந்த அரசாங்கத்தை, அட்மிஷனுக்காக அலைந்த பெற்றோர்கள் யாரும் நிச்சயமாக வாழ்த்தமாட்டார்கள். வைத்தியக் கல்லூரியானாலும் சரி, ஆர்ட்ஸ் காலேஜ் அட்மிஷனானாலும் சரி, அட்மிஷனுக்காக அலைந்தவர்கள் இந்தச் சர்க்காரை வாழ்த்தமாட்டார்கள். இந்தமாதிரி அட்மிஷன் கமிட்டிகளில் எதிர்க்கட்சிக்கு இடமே வேண்டாம். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி போன்றவற்றில் எதிர்க்கட்சியினர் இடம் பெறலாமே தவிர, இவற்றில் எல்லாம் வேண்டவே வேண்டாம். ஆர்ட்ஸ் காலேஜ் அட்மிஷனுக்கே சிபாரிசு, செல்வாக்கு, பணம் தேவையாக இருக்கிறது. பணம் கொடுத்தும் அட்மிஷன் கிடைக்கவில்லை என்ற புகாரும் இருக்கிறது. சேலம் கலைக் கல்லூரியில் கமிட்டி எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டது? அங்கு 343 மார்க் வாங்கிய ஒரு மாணவனுக்கு அட்மிஷன் கிடைக்கவில்லை. அவனிடம் ஒரு தரகன் 200 ரூபாய் கேட்டிருக்கிறான். 200 ரூபாய் பணம் கொடுக்க வேண்டாம், ஒரு வருஷம் பாழானாலும் பரவாயில்லை என்று சொல்லி அவனை காஞ்சிபுரத்தில் கொண்டு வந்து சேர்த்தேன். யார் அவ்வாறு பணம் கேட்டான் என்பதை வேண்டுமானாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். அந்தத் தேர்வுக் குழுவிலே இருக்கக்கூடிய மெம்பர்கள் யார் யார்? அந்தத் தேர்வைப் பற்றியே தனியாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இதுதானா காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தும் முறை? இவர்களாலா காங்கிரஸ் கட்சி வளர்ந்து விடப் போகிறது? முன்பு காங்கிரஸ் எப்படி வளர்ச்சியடைந்தது? தியாகத்தால் செல்வாக்குப் பெற்ற காங்கிரஸ் இருந்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. அந்தக் காங்கிரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்க மாட்டேன். இப்போது காங்கிரசுக்கு பண்பு போய் விட்டது. காங்கிரசில் சேர்ந்தால் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாகலாம், மந்திரியாகலாம் என்று ஒரு கூட்டம் கதர்ச் சொக்காயைப் போட்டுக் கொண்டு உலாவிக் கொண்டிருக்கிறது. இடித்துக் கூறக்கூடிய 'நாங்கள்தான் உண்மையானவர்கள் என்பதை கனம் முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். நான் உள்ளதை உள்ளபடிச் சொல்லுகிறேன்.

இந்து ரிலிஜியஸ் என்டோமென்ட் ஏரியாக் கமிட்டி பட்டியலை எடுங்கள். திரு. சம்பந்தம் அவர்கள் ஏதோ ஒரு முதலியார் பட்டியலைப் பற்றிச் சொன்னார்கள். முதலியார், ஐயர், முக்குலத்தோர்,

வேளாளர், கவுண்டர் என்ற விஷயத்திற்கே நான் போகவில்லை. ஐயராயிருந்தாலும், முதலியாராயிருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும் எல்லோரும் இந்த நாட்டில் பிறந்தவர்கள்தான். அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் எந்த முதலியாருக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது? பணக்கார முதலியாருக்குத்தான் வசதி இருக்கிறது; ஏழை முதலியாருக்கு எங்கே இருக்கிறது? வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியாரை வேண்டுமானால் உணவு உற்பத்தியைப் பெருக்க கமிட்டியிலே சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் காங்கிரசில் ஏழைக் குடியானவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள் இல்லையா? ஆகவே, முதலியார்களைப் போடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை விட, ஏழை முதலியாரை விட்டு விட்டு நிலப் பிரபுக்களைப் போடுகிறார்கள் என்றுதான் குற்றஞ்சாட்ட வேண்டும். தேர்தலுக்கு ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று தருகிற முதலியார்களைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இதிலே ஐயரா, முதலியாரா என்ற பிரச்சினை இல்லை. தகுதி, திறமை இருக்கிறதா என்றுதான் பார்க்கவேண்டும். அதுதான் என்னுடைய அபிப்பிராயம். மதுரை மீனாட்சி கோவிலில் நடந்த முதலியார் சண்டையைப் பற்றி இந்தச் சபையிலே கூறியிருக்கிறேன். அதிலே அடிக்கிறவரும் முதலியார்தான்; பாதிக்கப்படுபவரும் முதலியார்தான். பாதிக்கப்பட்டவர் ஏழை முதலியார். இப்படி இருந்தால் எப்படி நிர்வாகம் செம்மையாக இருக்கும்? ஆளுங்கட்சிக்கு இது நன்மை பயக்குமா? இவர்கள் எல்லாம் ஆளுங்கட்சிக்குத் துணைவர்களா? ஆளுங்கட்சியை தன் சுய நலத்திறகாகப் பயன்படுத்திக் கொள்கிறவர்களால் எப்படி அந்தக் கட்சிக்கு நன்மை ஏற்பட முடியும்? ஏதோ பழைய தம்பிரான்கள் காலத்திலாவது ஏதோ சம்பிரதாயத்திற்காகவாவது பெரிய புராணம் படிப்பார்கள்; சமய நூல்களைப் படிப்பார்கள். ஆனால் இந்தப் புதுத் தம்பிரான்கள் கதர்ச் சொக்காயைப் போட்டுக் கொண்டு, விபூதியையும் குங்குமத்தையும் வைத்துக் கொண்டு எதற்காகச் சுற்றி அலைகிறார்கள். டிரஸ்டியாக ஆவதற்காக இப்படிப் புதுப்படை தயாராகிக் கொண்டிருக்கிறது. உருக்காலையைத் தேசியமயமாக்க வேண்டும், ரசாயனத் தொழிற்சாலையைத் தேசியமயமாக்க வேண்டும் என்று சொன்னால், விபூதி தயாரிப்பதையும், பஞ்சாமிர்தம் தயாரிப்பதையும் அரசாங்கம் எடுத்து நடத்தப் போகிறது என்று சொல்கிறார்கள். இவ்வாறு கட்சிப் பிரசாரத்திற்காக செல்வாக்கு பயன்படுத்தப்படுகிறது. இதையெல்லாம் பார்த்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? இதையெல்லாம் பார்த்துக் கொண்டு எதிர்க்கட்சியினராகிய நாங்கள் பேசாமல் இருந்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? நாங்கள் பேசாமல் இருந்தால் எதிர்க்கட்சிகளைப் பற்றி மக்கள் மட்டமாக நினைப்பார்கள் என்பது உண்மை. ஸ்பெஷல் பிராஞ்சுக்கு இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பற்றிய ரெக்கார்டுகளைக் கொடுத்திருக்கிறேன்.

நான் சொல்லக்கூடிய குற்றச்சாட்டுக்கள் எல்லாம் நல்லெண்ணத்தோடு, அரசியல் சீர் அடையவேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். தனிப்பட்ட மந்திரிகள் பற்றியல்ல, ஆளும் கட்சி கையாண்டு வந்திருக்கிற கொள்கைகளைப்பற்றித்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.



அடுத்தபடியாக, கூட்டுறவு இலாகா, அறநிலைய பாதுகாப்பு இலாகா போன்ற அரசாங்கச் செல்வாக்கின் கீழ் இருப்பவையெல்லாம் தனி காங்கிரஸ் எஸ்டேட்ஸ். காங்கிரஸுக்கு செல்வாக்கு தேடவேண்டுமென்றால், காங்கிரஸ் கட்சிக்கு வருமானம் வேண்டுமென்றால் மக்களிடம் அதை வசூல் செய்து கொள்ளட்டும், மந்திரிகள் போய் வசூல் செய்வதில் கூட எனக்கு ஆட்சேபனையில்லை. இளமைத் துடிப்புள்ள மந்திரி வசூல் செய்தார். ஆனால் அப்படிச் செல்லும்போது போலீஸோடு செல்லவேண்டாம். அப்படிச் செல்வதின் மூலமாவது மக்களுடன் தொடர்பு ஏற்படட்டும். ஆனால் போலீஸை கூட்டிக் கொண்டு செல்லவேண்டாம். இப்போது புதிதாக போலீஸ்காரர்களுக்கு கதர் உடை போட்டு அழைத்துக் கொண்டு போகிறார்களாம். அப்படி அழைத்துக் கொண்டு போகாதீர்கள். அப்படி அவர்கள் கதர் உடை போட்டுச் செல்லும்போது காங்கிரஸ்காரர் போல் இருக்கிறார்கள். இந்திரா காந்தி அவர்கள் வந்த சமயத்தில் நடந்த சம்பவத்தைப் பற்றி பிற்பாடு கூறுகிறேன். பாதுகாப்பு வேண்டுமென்றால் காங்கிரஸ் தொண்டர்கள் போகட்டும். அப்படி என்ன ஜனங்கள் பயித்தியக்காரத்தனமாக அடிக்கவா வந்து விட்டார்கள்? தொழிற்சாலைகள் வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். லைசென்ஸ் வேண்டுமானால் அதற்காக வாங்கிக் கொள்ளட்டும். ஆனால் அவற்றை காங்கிரஸ் கமிட்டியின் பெயரில் வைக்கட்டும். அதனால் கட்சி பயன் அடையட்டும். அது நியாயமான உரிமை. அதற்கு எதிர்க்கட்சிகள் போட்டி போடத் தயாராயில்லை. கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை, நூற்பாலை இவை ஆரம்பிக்கப்படுகிறபோது காங்கிரஸ் கட்சியில் அல்லாதவர் யாராவது அதற்கு சீஃப் ப்ரமோட்டராக இருந்தால் மாற்றிவிடுவது நியாயமா? ஒருவருக்கு நான்கு மில்கள் இருக்கும்போது அவரை சீஃப் பிரமோட்டராகப் போடலாமா? கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்கள் இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு மில்லில்தான் அவர் இருக்கிறார். அவரைப் போல் இருப்பவர்களைப் பற்றிக்கூட ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நான்கு மில்கள் வைத்துக் கொண்டிருப்பவரை சீஃப் ப்ரமோட்டராகப் போடுவது என்றால் கூட்டுறவு இயக்கம் சீர்படுமா? பெரிய முதலாளிகளையும், செல்வந்தர்களையும் கட்டுப்படுத்துவதற்குத்தான் கூட்டுறவு இயக்கம். கூட்டுறவில் பெரிய முதலாளிகள், பெரிய நிலச்சொந்தக்காரர்கள் புகுந்து கொண்டிருப்பது நியாயமா? இந்த இலாகாக்களை எல்லாம் காங்கிரஸ் எஸ்டேட்டுகளாக மாற்றிவிட்டார்கள். காங்கிரஸ் அங்கத்தினர்கள் மறுத்துப் பேசாமல் இருக்கலாம். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களின் மனதில் நாட்டின் நலன் பற்றி அக்கறை இருந்தால் இத்தகைய ஒழுங்கீனமான காரியங்களுக்காக சட்டசபைக்கு வரக்கூடாது, அப்பேர்ப்பட்டவர்களை சட்டசபைக்கு அனுப்பவும் கூடாது. விடுதலைப் போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் உயர்ந்த ஜாதி, பங்கு எடுத்துக் கொள்ளாதவர்கள் தாழ்ந்த ஜாதி என்று நினைக்கக் கூடாது. இன்றைய வாலிபர்களுக்கு அன்று வாய்ப்பு இல்லை. கட்சிக்கும் தேசத்திற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் பண்பாடு இருக்கவேண்டும். ஆகவே, ஒருவர் எம்.எல்.ஏ. ஆக வந்த பிறகு தனிப்பட்ட தொழில் செய்யக்கூடாது என்பது என் அபிப்பிராயம்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th August 1966

அப்போதுதான் சோஷலிஸத்தில் நம்பிக்கை ஏற்படும். எம்.எல்.ஏ. ஆக வந்த பிறகு புதிது புதிதாக தொழில்கள் நடத்தினால், எம்.எல்.ஏ.-ஆக வந்து விட்டார்கள், ஆகவே இதெல்லாம் நடக்கிறது என்று சபையிலுள்ள எல்லோர் பெயரிலும் நம்பிக்கை இல்லாமல் போய்விடும். அவர்கள் கட்சியினருக்கு நான் புத்திமதி சொல்வதாக நினைக்கவேண்டாம், கண்டிததுத்தான் சொல்லுகிறேன்.

டீவால்யுவேஷன் பற்றி முதல் அமைச்சர் அவர்களுக்கு அபார நம்பிக்கை. அது நன்மை பயக்கும் என்று சொன்னார்கள். ஆனால், அது நன்மை பயக்கத் தவறியவுடன் செய்யவேண்டிய நடவடிக்கைகளைச் செய்யவில்லை என்கிறார்கள். தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைக்கவேண்டும், உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கக்கூடாது, கூலி உயர்வு, பஞ்சப்படி உயர்வு, சம்பள உயர்வு இவற்றைக் குறைத்து விட்டால் பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்று கூறுகிறார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கு மேலிடத்தில் செல்வாக்குண்டு. பிரதம மந்திரி, நிதியமைச்சர் எல்லோரும் இவர்களுக்கு அதிக கௌரவம் கொடுக்கிறார்கள் என்று அறிய சந்தோஷப்படுகிறேன். அதைப் பயன்படுத்தி எதைச் செய்யவேண்டும்? நமது ரூபாயின் மதிப்பை மட்டும் குறைத்து விட்டு டாலரின் மதிப்பைக் குறைக்காமல், அது பற்றி பேசாமல் இப்படிச் செய்தது முட்டாள்தனம் என்று சொல்லவேண்டும். இந்த ரூபாய் மதிப்புக்குறைவின் காரணமாக இரண்டு பவுண்ட்ஸ் கொடுத்து ஒரு டாலர் பெற்றது போக இப்போது மூன்று பவுண்ட்ஸ் கொடுத்தால்தான் ஒரு டாலர் பெற முடியும். ஆக, நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நமக்கு ரா மெட்டீரியல்ஸ் பற்றாக்குறை இருக்கிறது, இறக்குமதியில் கோளாறு இருக்கிறது. நமக்கு வரும் தொகை அதிகமாக இருக்கலாம், ஆனால் வரும் பொருள்களின் அளவு குறையும். ஆக, இந்த ரூபாய் மதிப்புக் குறைவின் காரணமாக நாட்டுக்கு நன்மை என்று கருதவேண்டாம். இது இல்லாவிட்டால் வேறு வழி இல்லை என்று நினைக்கவேண்டாம். இதற்கு மாற்று வழி இருக்கிறது. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த சபையிலும், பாராளுமன்றத்திலும் என் கட்சி எடுத்துச் சொல்லியிருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளாமல் இந்தப் பிரச்னையைத் தீர்க்கமுடியாது. விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் முடியாது. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை அரசாங்கம் ஏற்று நடத்துவதின் மூலம், பாங்குகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வதின்மூலம் இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். அதோடு வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி இவற்றை சமமாக பங்கிடவும் முடியும். ஏற்றுமதி லைசென்ஸை பயன்படுத்தி எவ்வளவு பேர்கள் என்னென்ன செய்தார்கள் என்பதைப்பற்றி நான் சொல்ல முடியும். தனிப்பட்டவர்கள் கையில் இவை இருப்பதினால்தான் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. அவர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் போகும்போது பிற நாட்டு விருந்தினர்களாகப் போவதினால் தெரியவில்லையோ என்னவோ.



5th August 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பஞ்சாலை நெருக்கடி, கைத்தறி நெருக்கடி பற்றி கூட்டுறவு அமைச்சர் அவர்கள் காலையில் கூறினார்கள். ஒவ்வொரு துறையிலும் நெருக்கடி, உற்பத்திக் குறைவு, வேலையில்லாத் திண்டாட்டம் இவை அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆகவே அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று கூறும்போது நம்பிக்கை இருக்கிறது என்று கூற முடியுமா?

நிலச்சீர்திருத்தம்பற்றி குறிப்பிட்டார்கள். விவசாயிகளுக்கு கொடுக்கக் கூடிய ஆக்கம், ஊக்கம் பற்றி இங்கு சிலர் குறிப்பிட்டார்கள். இந்தத் தீர்மானத்தை எதிர்க்கவேண்டுமென்பதற்காக பல விஷயங்கள்பற்றிக் குறிப்பிட்டார்கள். உண்மையான விவசாயி யார்? 300 ஏக்கர், 2,000 ஏக்கர், 3,000 ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருப்பவர்களா விவசாயிகள்? விவசாய உற்பத்தியைப் பெருக்க போடப்பட்ட கமிட்டியில் 500 ஏக்கருக்கு குறைந்தவர்கள் யாரையும் போடவில்லை. எப்படி இருப்பவர்கள் விவசாயிகள்? ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் வைத்துக்கொண்டு தானாகவே பாடுபடுவேன் அல்லது அதுவும் இல்லாது கூலிக்காகப் பாடுபடுபவன்தான் விவசாயி. இன்றைய 12-00 noon
தினம் விவசாயிகளின், கைத்தறி நெசவாளர்களின், சுருட்டுத் தொழிலாளர்களின், பீடித்தொழிலாளர்களின் நிலை என்ன? நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்து ஐந்தாண்டுகள் ஆகின்றன. எவ்வளவு மிச்ச நிலம் கிடைத்தது? அன்றே எச்சரித்தோம், இதன் மூலம் எந்தவித நன்மையும் இருக்காது என்று. விவசாய உற்பத்தியைச் சீர்குலைக்கும் விதத்தில்தான் சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. உழைப்பவனுக்கு நிலம் கொடுத்து விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய திட்டத்தை வைத்து உற்பத்தியைப் பெருக்கலாம். ஆனால் அதற்கான சட்டம் இல்லை. இப்போதுள்ள சட்டங்களினால் ஹைகோர்ட்டில் ஐயாயிரம் கேஸ்களும், முன்சீப் கோர்ட்டில் கேஸ்களாக வக்கீல்களுக்கு பணம் கொடுப்பதுதான் மிச்சம். இனாம் சட்டத்திற்கும் அதே கதிதான் வந்தது. இப்படியானால் எப்படி உற்பத்தியைப் பெருக்கமுடியும்? உழைக்கக்கூடிய விவசாயிகளை நம்பவேண்டும். இந்த நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வந்ததினால் முதல் அமைச்சர் அவர்கள் இந்த இடத்திலிருந்து விலகி விடுவார் என்றோ அல்லது ராஜிநாமா செய்து விடுவார் என்றோ எதிர்பார்க்கவில்லை. எங்கள் விமர்சனத்தை எல்லாம் தயவு செய்து காது கொடுத்து கேட்டு அதற்குப் பரிகாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் நம் நாட்டில் எப்படி நடந்து கொள்கிறது என்பதற்கு பல உதாரணங்கள் கூறினார்கள். என்னைக் கைது செய்ததைக் கூட கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவிப்பதற்கு காலதாமதம் ஆனது ஏதோ தற்காலிகமாக ஏற்பட்ட நிகழ்ச்சி அல்ல. என்னை கைது செய்ததை வேறு விதமாக செய்தியைக் கொண்டு வரவேண்டும் என்று போலீசார் முயற்சித்துப் பார்த்தார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. சேலத்தில் நான் இருந்தபோது கைது செய்ததாக ரிக்கார்ட் செய்யவேண்டும் என்று நினைத்தார்கள். ' நான் சேலம் போலீஸாருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு சேலத்திலிருந்து திருச்சி வந்துவிட்டதால், பழியை அவர்கள் மீது

[திரு. மி. கலியாணசுந்தரம்] [5th August 1966

போட்டு விடலாம் என்று திருச்சி போலீசார் முயற்சி செய்து அதற்கான ரிக்கார்ட்களை தயார் செய்தார்கள், முடியவில்லை. அது மட்டுமல்ல. போலீஸார் பத்திரிகை நிருபர்களை அழைத்து 'கலியாணசுந்தரம் கறுப்புக்கொடியை பிடித்துக் கொண்டு காந்தி சிலையின் பக்கத்தில் வந்தார்' என்று போடக்கூடாது என்று சொன்னது உண்மைதானா இல்லையா என்று கேட்கிறேன். இது தான் நீங்கள் காப்பாற்றுகிற ஜனநாயகமா? கறுப்புக்கொடி காட்டுகிறேன். அது குற்றம் என்றால் அதை மக்களிடத்தில் அம்பலப்படுத்துவதுதானே முறை? அதற்கு என் பயப்படுகிறீர்கள். கட்சி ஆபீஸில் 10, 15 போலீஸார் மப்டியில் வந்திருந்து கொண்டு ஆபீஸையே இயங்க முடியாமல் தடுக்கிறார்கள். வேண்டுமென்றால் சட்டப்படி எதை வேண்டுமென்றாலும் செய்யுங்கள், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் சட்டவிரோதமான காரியங்களில் ஏன் ஈடுபடுகிறார்கள். இதைப்போலவே பரமேஸ்வர மேனன் என்று போலீஸ் டெப்யூடி கமிஷனர் இப்போது சென்னையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். யாரை வேண்டுமென்றாலும் பிடித்து அடிப்பதுதான் அவர்களுடைய வேலை. இவருடைய சர்வீஸை பார்த்தால், உதகமண்டலத்தில் ஷேக் அப்துல்லா அவர்களுக்கு பாதுகாப்புகள் போட்டிருந்தும், அவற்றைக் கடந்து, பிரஸ் ரிப்போர்ட்டர் போய்ப் பார்த்தார். அந்த அளவுக்கு இவர் அங்கே கோட்டை விட்டவர், இப்போது சென்னை நகருக்கு வந்திருக்கிறார். வெளிநாட்டு நிருபர் ஒருவர் பாதுகாவலையும் கடந்து ஷேக் அப்துல்லா அவர்களைப் போய் பார்க்கின்ற அளவுக்கு கோட்டைவிட்டார் இவர். இப்படிப்பட்ட ஒரு கையாலாகாத அதிகாரி, இப்போது எங்கள் கட்சியிலுள்ள சிறந்த ஊழியர்கள் சிலர்—நமது முதலமைச்சர் அவர்களுக்கும் அவர்களை நன்றாகத் தெரியும்—'பிளிட்ஸ்' என்ற பத்திரிகையில் ரூபாயின் மதிப்பை குறைத்தது குறித்து கத்தியால் குத்துவது போன்று போட்டிருந்த கார்ட்டூன் படத்தை எடுத்து, தனியாக அச்சடித்து கொடுத்தார்கள் என்பதற்காக அச்சகத்தின் உரிமையாளரை பிடித்து, உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை அடித்திருக்கிறார் இந்த போலீஸ் அதிகாரி, இந்த திறமைசாலிதான் இன்றையதினம் போலீஸ் டெப்யூடி கமிஷனாக இருக்கிறார். நேற்றையதினம் நான் ஏ.ஜி. (அக்கௌன்டன்ட் ஜெனரல்) ஆபீஸ்-க்கு சென்றிருந்த போது கேட்டேன், அவர்களுக்குள் தொழில் தகராறு நடந்திருக்கிறது என்று சொல்லி போலீஸ் போயிருக்கிறது. என்ன அவசியத்திற்காக இவ்விதம் போகவேண்டும்? எங்கு தொழில் தகராறு நடந்தாலும் உடனே போலீஸ் போய்விடுகிறது. எவ்வளவோ திருடுகள் போகின்றன. பெண்கள் பட்டப்பகலில் கற்பழிக்கப்படுகிறார்கள். இதையெல்லாம் விசாரிக்க இந்த போலீஸார் எங்கே போனார்கள்? அம்மையார் அவர்கள் கார்ப்பரேஷனில் ஊழல்கள் நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஊழல்களை கண்டுபிடிப்பதுதானே. இங்குள்ள போலீஸ் கார்ப்பரேஷன் கையிலா இருக்கிறது? நாளுக்கு நாள் எத்தனையோ கொள்ளைகள் நடக்கின்றன, அவற்றையெல்லாம் கண்டுபிடிப்பது தானே. போலீஸ் எங்கே போகிறது? நாயைத்தான் அனுப்புகிறார்கள், நாயைத்தான் இவர்கள் நம்புகிறார்களே தவிர மனிதனை நம்புவது இல்லை. அது மட்டுமா,



5th August 1966] [திரு. மி. கலியாணசுந்தரம்]

பத்திரிகைகளின் மீது எந்தவிதமான காரணமும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கிறார்கள். சென்னையிலுள்ள மெயில் பத்திரிகை அன்றையதினம் நாங்களும், அன்பழகன் அவர்களும் போலீஸ் மீது குற்றங்களை சாட்டினோம் என்பதற்காக கண்டித்து எழுதியது. அதே 'மெயில்' பத்திரிகை பின்னால் போலீஸ் நடவடிக்கைகளை கண்டித்து எழுதியதற்காக போலீஸ் கமிஷனர் கூட்டக்கூடிய கூட்டத்திற்கு (கான்ஃபரன்ஸ்-க்கு) 'மெயில்' பத்திரிகை நிருபரை அழைப்பதில்லை. அது மட்டுமல்ல. போலீஸ் செய்வது சரி, 'Police on do no wrong' என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்தது. போலீஸார் தவறாகவே நடந்து கொள்ள மாட்டார்கள் என்ற உறுதியான நம்பிக்கையை கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம். இந்த நிலையில் இப்போதுள்ள அதிகாரம் போதாது, இன்னும் அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள். மற்ற ராஜ்யங்களிலுள்ள முதலமைச்சர்கள், எங்களுக்கு ஸ்டீல் ஆலை வேண்டும், அரிசி போதாது, இன்னும் அதிகம் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கும்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் சென்று, இப்போதுள்ள அதிகாரங்கள் போதாது, இன்னும் அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். இருக்கிற சட்டத்தை வைத்துக்கொண்டு உங்களால் சமாளிக்க முடியவில்லையா? நேர்மாறாக நாட்டில் இருக்கின்ற நிலைமை என்ன? விலைவாசி விஷம் போல் உயர்ந்து கொண்டிருக்கிறது, கத்திரிக்காய் ஒன்று எத்தனை அணா என்று கேட்கவேண்டியிருக்கிறது, ஒரு அணாவுக்கு எத்தனை நிலக்கடலை என்று கேட்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கட்டுப் படுத்துவதற்குப்பதிலாக, போலீஸையும், அடக்குமுறைச் சட்டங்களையும் வைத்துக்கொண்டு இந்த நாட்டை ஆண்டுவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தால், நிச்சயமாக ஜனங்கள் வேறு முடிவுக்கு வருவார்கள் என்பதை கூறிக்கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மூன்று நாட்களாக, இந்த அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப் பட்டது. நான் முதலிலேயே கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சிகளுக்கு இருக்கின்ற உரிமை, மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் கொண்டு வருவது, இவ்விதம் தீர்மானம் கொண்டு வந்து மந்திரிசபையின் மீது குற்றச்சாட்டுகள் சாட்டுவது, அதை நிரூபிக்கப் பார்ப்பது, அதற்கான ஆதாரங்களை எடுத்துச்சொல்லி வாதாடுவது, இந்த அமைச்சரவை நீங்க வேண்டும் என்று கோருவது இதெல்லாம் ஜனநாயகத்தில் முக்கியமாக இருக்கின்ற உரிமைகள். அப்படித் தீர்மானம் கொண்டு வரும் போது, அது நிறைவேற்றப்படுமா என்பதைக் கருதாமல், கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல், இந்த தீர்மானத்தை நிறைவேற்ற முடியுமா முடியாதா என்ற சூழ்நிலை தெரிந்திருந்தாலும், இம்மாதிரி தீர்மானத்தை கொண்டு வருவது இயற்கை தான். இது எதிர்க்கட்சிகளுக்கு இருக்கின்ற முக்கியமான உரிமை. அந்த உரிமையை உபயோகிக்கும் வகையில் தான் இந்த தீர்மானம் இங்கு வந்து மூன்று நாட்களாக விவாதம் நடை

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

பெற்றது என்று நான் கூற விரும்புகிறேன். சாதாரணமாக எந்த சட்டமன்றத்திலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால் மிகுந்த பரபரப்பு ஏற்படும். கசப்பு, உஷ்ணம் இவை எல்லாம் இருக்கும். ஒருவருக்கொருவர் தாக்கிப் பேசுவது, தங்களைத் தாங்கியும் பேசிக்கொள்வது, இதெல்லாம் வருவது உண்டு. அப்படி நேரடியாக பேசும் போது கோபம் வருவது சகஜம். ஆகவே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படும்போது, காரசாரமான பேச்சு ஏற்படுவது இதுவரையில் கண்டதுதான், கண்டது மட்டுமல்ல, எதிர்பார்க்கக்கூடியதும் ஆகும். இதை பற்றி நான் குறை கூற மாட்டேன். மொத்தத்தில் மூன்று நாட்களிலும் நடைபெற்ற விவாதம் உயர்ந்த ரகமாகவே இருந்தது என்று என்னுடைய மகிழ்ச்சியையும் திருப்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொஞ்ச நேரத்திற்கு முன்பாக சற்றுக்காரசாரம் ஏற்பட்டது என்றால், இது கூட இல்லாமல் எப்படியிருக்கும்? டிபேட்-க்கு அது கூட அழகுதான். என்னைப்பொறுத்தவரையில், ராத்திரி அதிகமாக தூக்கம் வரவில்லை என்றால், இங்கே வரும்போது தூக்கம் வந்துவிடும். இன்றைக்கு அதை தவிர்க்க முடிந்தது. இப்படி ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவதை அடியோடு தவிர்த்துவிட முடியாது. இப்போதுகூட அதிகமாகத் தாக்கிபேசிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. என்னைக்கேட்டால் மூன்று நாட்களையும் சேர்ந்து பார்த்தால், ஆளும் கட்சினர் பக்கம் இன்னும் அதிகமாக தாக்கப்பட்டிருக்கவேண்டும். மந்திரிசபை, இப்படிப்பட்ட தீர்மானம் விவாதிக்கப்படும்போது, எதிர்கட்சிகளினால் இன்னும் தாக்கப்படும். அந்த வகையில் ஒன்றும் இல்லை. இதற்காக தாக்கியே பேசிக்கொண்டிருக்கவேண்டும் என்று நான் சொல்வதாக எடுத்துக்கொள்ளவேண்டாம். எதிர்க்கட்சித் தலைவர்கள் நான் சொல்வதை புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அதிலும் முக்கியம் என்னவென்றால் இருப்பதை விட்டுவிட்டு இல்லாததை எல்லாம் எடுத்துக்கூறுவதுதான் விசேஷம். இல்லாததை எல்லாம் எடுத்து, இருப்பதாக சொல்லவேண்டும். அது தான் எதிர்கட்சிகளுக்கு இருக்கின்ற உரிமை. ஆகவே, இன்னும் பலமாக தாக்கப்பட்டிருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கை. மொதத்தில் விவாதம் உயர்ந்த தன்மையில் நடைபெற்றது என்ற திருப்தியை இந்த சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், எனக்கு ஒரு ஏமாற்றம். அதையும் நான் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இங்கு இரண்டு கனம் எதிர்கட்சித் தலைவர்கள் வீற்றிருக்கிறார்கள். ஒருவர் கனம் எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மற்றொருவர் எதிர்கட்சி செயலாளர் அவர்கள். இந்த இரண்டு பேர்களிடமிருந்தும் தாக்குதலை நான் அதிகமாக எதிர்பார்த்தேன். அவர்களிடமிருந்து நான் சாதாரணமாக எதிர்பார்த்தது வரவில்லையே என்ற ஏமாற்றம் தான் அது. அதிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இவர்கள் பேசுவது என்றால், மிகவும் காரசாரமாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன். அதுவரையில் ஏமாற்றம் தான். காரியங்கள்



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

நல்லதாக இருந்தாலும், நாம் எதிர்பார்த்தபடி வரவில்லை என்றால் அது ஏமாற்றம் தான். அதனால் அவர்களுடைய ஆற்றலிலும், திறமையிலும் எனக்குள்ள நம்பிக்கை சிறிதும் குறையவில்லை. எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அவர்களாலும் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை. எவ்வளவோ பேச வேண்டும் என்று விரும்பியிருப்பார்கள். கனம் மதியழகன் அவர்கள் ஆத்திரமாகவும், உருக்கமாகவும், ஆவேசத்தோடும் பேசக்கூடியவர், அப்படியிருந்தும் நான் எதிர்பார்த்த அளவுக்கு அவரால் கூட பேச முடியவில்லையே என்று தான் நான் உணர்ந்தேன்.

இப்போது தீர்மானம் நிறைவேற்றப்படப் போகிறதா என்ன? நான் சொல்லக்கூடாது. தீர்மானம் நிறைவேற்றப்படாது என்று நான் எப்படிச் சொல்லுவது? அப்படிச் சொல்லுவது மன்றத்தின் உரிமையை பாதிப்பதாக ஆகும். நான் அத்தகைய குற்றம் செய்ய மாட்டேன். எதிர்கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள்; இது நிறைவேற்றப்படப் போகிறது என்று கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் சொன்னார்கள்; 'இவர்கள் ராஜீனமா செய்துவிடலாமே, தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே' என்று சொன்னார்கள். காருண்ய மனத்தோடு சொன்னார்கள்; உண்மையில் நான் அப்படித் தான் கொள்ளுகிறேன். என்னதான் காரசாரமாகப் பேசினாலும் அவருக்கு என்னிடத்தில் ஒரு அன்பு உண்டு . . . (சிரிப்பு). இப்போதே ராஜீனமா செய்துவிட்டால் நல்லதே என்று கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் கூறினார்கள். என்னைப் பற்றி எவ்வளவு தவறுதலாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நினைத்தாலும், எனக்குக் கொஞ்சம் இரக்கம் இல்லாமல் இல்லை. ஏதோ கூறுகிறார்கள், ஏமாற்றம் அடைகிறார்கள், நமக்குக் கிடைக்கவில்லையே என்று நினைக்கிறார்கள், நம்மால் ஆனதைச் செய்வோமே என்ற எண்ணம் இல்லாமல் இல்லை. இந்தத் தீர்மானத்தை ஓட்டுக்கு விடுகிற வரையில் காத்திராமல் நாங்களே ராஜீனமா செய்துவிடுகிறோம் என்று சொல்லலாம். என்னைப் பொறுத்த வரையில் நான் சொல்லுவதற்குத் தயங்கியிருக்க மாட்டேன். ஆனால், ராஜீனமா செய்தால் என்ன ஆகிறது 'உன் பேரில் தவறு, நீ தவறு செய்கிறாய் வேறு யாராவது வரட்டும், உங்கள் கட்சியிலிருந்தே வேறு யாராவது வரட்டும்' என்றால் தயங்காமல், மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருப்பேன். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோருவதெல்லாம் காங்கிரஸ் கட்சியே மந்திரி சபையிலிருந்து விலகவேண்டும் என்பதுதான். ஆனால், காங்கிரஸ் கட்சியின் சார்பாகவே அத்தகைய இரக்கம் இல்லாமல் இல்லை; சரி ராஜீனமா செய்து விடுகிறேன் என்றால் என்ன ஆவது? எத்தகைய ஆட்சி நடைபெறக் கூடும்? எத்தகைய நிலையில் எதிர்க் கட்சிகள் இயங்குகின்றன? என்பதையெல்லாம் சிந்திக்கும்போது, என்னதான் இரக்க மனம் இருந்தாலும் அவ்வாறு, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்க முடியாத நிலைமை இருக்கிறது; அதைக் கண்டு கலங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் தான் இந்த விவாதங்களில், 32 பேர்கள் பேசிய போதிலும், இருக்கிற நேரத்தில் எல்லாவற்றுக்கும் ஒன்றொன்றாக எடுத்து

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

பதில் கூற அவகாசம் இல்லை என்றாலும், குறிப்பாகச் சில சமாதானங்கள், சில விளக்கங்கள், சில விடைகள் அளிக்க நான் முற்படுகிறேன்.

பொதுவாகக் குற்றச்சாட்டுகள் இருந்தன. நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலேயே குற்றச்சாட்டுகள் இருந்தன. பொதுவாக ஊழல், லஞ்சம் என்ற ஒரு குற்றச்சாட்டைச் சில கனம் உறுப்பினர்கள் சொன்னார்கள். அது அவர்கள் சொன்னது சரி. சொல்லுவதற்கு உரிமை உள்ளவர்கள் பொதுவாகவும் சொல்லலாம், குறிப்பாகவும் சொல்லலாம். ஆனால் அதற்கு மேற்கோள்—ஒரு பழமொழி சொல்லுவார்கள், ஒரு விபரீதப் பேர்வழி வேத சாஸ்திரத்திலிருந்து மேற்கோள் காட்டியது போல என்று சொல்லுவார்கள்—அந்த மாதிரி மொரார்ஜி தேசாய் சொன்னார், கிருபானந்தவாரி சொன்னார், பெரியார் ராமசாமி நாயக்கர் சொன்னார், குழந்தையம்மாள் சொன்னார்—இது எதற்கு? அவர்கள் என்ன சொன்னார்கள்? அவர்கள் சொன்னால் அது என்னைக் கட்டுப்படுத்துகிறதா? மந்திரி சபையைக் கட்டுப்படுத்துகிறதா? எந்த வகையில் சொன்னார்கள்? எதைப்பற்றிச் சொன்னார்கள்? வறுமையைப் பற்றி நானும் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். நாளைக்கும் சொல்லுவேன். வறுமை வாட்டிக்கொண்டிருக்கிறது என்று சொல்லுவேன். சுதந்திரம் பெற்று 19 ஆண்டுகள் ஆகியும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு நிறைவேற்றி ஆட்சியை நடத்திக்கொண்டு வந்தபோதிலும் மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்றாலும் வறுமை வாட்டிக்கொண்டிருக்கிறது என்று ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லுகிறேன்; இன்னும் போதிய உணவு இல்லை என்று சொல்லுகிறேன்; வாழ்க்கைச் செலவு அதிகமாக ஆகியிருக்கிறது என்று நானேதான், சொல்லுகிறேன்; அவதிகள் மக்களுக்கு இருக்கின்றன என்று நானே சொல்லுகிறேன்; மக்களுடைய தேவைகள் பூர்த்தி ஆகவில்லை என்று நானே சொல்லுகிறேன். இதற்கு அவர் சொல்லுகிறார், இவர் சொல்லுகிறார் என்று சொல்ல வேண்டியதில்லை. அவர் சொல்லுகிறார், மொரார்ஜி தேசாய் சொல்லுகிறார் என்று சொல்லாததைத் சொல்லி மேற்கோள் சொல்லுவதை விட்டுவிட்டுத் தங்கள் அபிப்பிராயமாகத் தெரிவிப்பது நல்லது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் கல்லூரியில் படித்த காலத்தில் ஒரு பேராசிரியர் சொல்லுவார். 'எதற்காக லோ அண்ட் லோ என்று சொல்லுகிறாய்? நீ ஏற்றுக்கொள்ளுவதாக இருந்தால் சொல்லு' என்று. 'ஒவ்வொன்றுக்கும் ஏன் ஒரு சரித்திர ஆசிரியர் பெயரைச் சொல்லுகிறாய்?' என்று நான் படித்த காலத்தில் பேராசிரியர் சொன்னது அப்படியே பதிந்திருக்கிறது. அதைத்தான் கனம் உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** பெரியார் அவர்கள் பக்தவத்சலம் ஆட்சி ஒழிய வேண்டும் என்று துக்கநாள் கொண்டாடியபோது எந்தக் காங்கிரஸ்காரரும் மறுப்புத் தெரிவித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அதைப் பற்றி நவசக்தி பத்திரிகையில் ஒரு



5th August 1966] [திரு. மு. கருணாநிதி]

தலையங்கம் கூட எழுதவில்லை. இதெல்லாம் பெரியார் கூற்றை காங்கிரஸ்காரர்களே மறைமுகமாக வரவேற்கிறார்கள் என்று தானே அர்த்தம் என்று கூற விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பெரியார் சொன்னதாக இருந்தாலும், காங்கிரஸ்காரர்கள் மறுக்காமல் இருந்தாலும், அதைப் பற்றி எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு என்ன கவலை? பெரியார் அவர்களிடம் அவருக்கு மதிப்பு இருக்கலாம். அதை வேண்டுமானால் வைத்துக்கொண்டு சொல்லலாமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இப்போது அவரவர்கள் சொந்தக் கருத்துக்களைச் சொல்லலாமே என்று தான் சொன்னேன். அப்படிச் சொல்லும்போதும் தவறுதலாகச் சொல்லுவதால் என்ன பயன்? கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் 'ஊழல் மிகுந்த அரசாங்கம் என்று மொரார்ஜி தேசாய் சொன்னார்' என்று அவரைப் பிடித்து இழுப்பானேன்? எங்கே சொன்னார்கள் என்று கேட்டால், 'திறமை இல்லை என்று சொன்னார்' என்று சொன்னால், இப்படியே மாற்றிக்கொண்டு போனால் என்ன பிரயோஜனம்? அவர்களே சொல்லுவதாக இருந்தால் சொல்லலாம், இல்லை என்றால் மேற்கோள் காட்டுவதால் பயன் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேற்கோள் காட்டப் புகும்போது என்ன சொன்னார்கள், எந்தச் சமயத்தில் சொன்னார்கள், எப்படிச் சொன்னார்கள் என்று சொல்லாமல், 'கிருபானந்தவாரி காங்கிரஸ் ஆட்சி ஒழியவேண்டும் என்று சொன்னார்' என்று சொல்லுவதால் நிலைமையைச் சரியாக விளக்குவதாகாது.

கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எப்போதும் காரசாரமாகப் பேசுவது அவர் வழக்கம்; அவர்கள் அவ்வாறுதான் பேசினார்கள். நான்கூட கொஞ்ச நேரம் இங்கே இல்லை; மருத்துவக் கல்லூரி, வேறு சில கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப் பட்டதைப் பற்றி பல கனம் உறுப்பினர்கள் பேசினார்கள், கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் கலியாண சுந்தரம் அவர்களும் பேசினார்கள்; அதைப் பற்றிப் பின்னால் தெரிந்த வரையில் விளக்க விரும்புகிறேன். உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொதுவாக, லஞ்சம் வாங்கினார்கள், லஞ்சம் நடமாடியது, லஞ்சம் வாங்கிக்கொண்டு மாணவர்கள் சேர்க்கப் பட்டார்கள் என்று சொன்னால் பொதுவாகச் சொல்லுவது; அம்மாதிரி பொதுவான குற்றச் சாட்டுக்கள் கூறினார். ஆனால் அதை ருசுப்பிக்க வேண்டுமென்று, நிரூபிக்கவேண்டுமென்று என்னுடைய மதிப்புக்குரிய சக அமைச்சர் கனம் கக்கன் அவர்கள் கூறியபோது, 'இதோ நிரூபிக்கிறேன்' என்று கூறி ஒரு அதிகாரியின் பெயரையும் குறிப்பிட்டார்—இரண்டு அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டார். அப்போதுதான் நான் இதை விசாரிக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு முன்பு விவாதம் நடந்தது. இதை இங்கேயே ஒரு கமிட்டி போட்டு விசாரிக்க வேண்டுமென்று கனம் உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் கூறினார்கள் என்று நினைக்கிறேன். கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், விசாரிப்பதாக இருந்தால்—4,000 பேர்களில் 3,000 பேர்களுக்கு இடம்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

கிடைக்கவில்லை—இடம் கிடைக்காத 3,000 பேர்களுடைய லிஸ்டைக் கொடுக்கவேண்டும், அவர்களை கொண்டு வரவேண்டும், விசாரிக்க வேண்டும்—இந்த முறையில் தான் அவர்கள் கூறும் விசாரணை . . .

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அவர்கள் வாங்கிய மார்க்குகள் என்ன என்று பார்க்கலாமே.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்களின் கூற்று. அது இருக்கட்டும். 3,000 பேர்களுடைய லிஸ்ட் வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது நான் தங்களிடத்தில் கூறியது இதைப் பற்றி நான் விசாரிக்கிறேன் என்பதாகும். நான் உடனே பிரதம காரியதரிசி அவர்களை இதைப் பற்றி உடனடியாக இன்றைக்கு எவ்வளவு தூரம் சொல்ல முடியுமோ—மேலும் விசாரிக்கலாம்—விவாதத்திற்கு விடை அளிக்க வேண்டிய நிமித்தம் இருப்பதால் உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று சொன்னேன். அவர்கள் விசாரித்தார்கள். நானும் விசாரித்தேன். அவர்கள் குறிப்பிட்டது இரண்டு அதிகாரிகளின் பெயரை. ஒன்று திரு. சுப்பையா, ஐ.ஏ.எஸ். அவர்கள் அமைச்சர் கனம் கக்கன் அவர்களுடைய உறவினர் அவர் என்று சொன்னார்கள். அது கூட பத்திரிகையில் வந்திருக்கிறது. உறவினர் என்று சொன்னது, என்ன, ஏது என்று தெரியவில்லை. மற்றொரு அதிகாரி டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் இப்பொழுது அவர் டி.எம்.எஸ். வேலையையும் பார்த்துக்கொண்டிருக்கிறார், டாக்டர் ஜனார்த்தனம் அவர்கள். இரண்டு பேர்களையும் குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் பேசிய பேச்சின் ரிப்போர்ட்டை வாங்கிப்படித்தேன், நான் இங்கே அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது இல்லாத காரணத்தினால். ஒரு மாணவனுக்கு இண்டர்வியூ கார்டு வரவில்லை, அதற்குப் பின் வந்தது. அவர்களுக்காக ஜனார்த்தனம் அவர்களிடம் சுப்பையா அவர்கள் பேசி ரூ. 3,000 கேட்டார். பண்ருட்டி பஞ்சாயத்து யூனியன் சேர்மன் மூலமாகக் கேட்டார் என்று இப்பொழுது வந்திருக்கிறது. கேட்டார் என்றால், கொடுத்தாரா, எப்படி கொடுத்தார் என்று அதில் இல்லை. 'கேட்டார், இதை நான் நிரூபிக்க முடியும்' என்று அவர்கள் சொன்னார்கள். நான் இரண்டு பேர்களையும் கேட்டேன். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. டாக்டர் ஜனார்த்தனம் அவர்கள் டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன். அவர் எப்படி இதிலே சம்பந்தப்பட்டார்? அப்பொழுது கேட்டபொழுது முதலில் எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. அதற்கப்புறம் இதை விசாரித்தேன். நடைமுறையையும் விசாரித்தேன். டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனுக்கு இந்த செலக்ஷனில் எப்பொழுது சம்பந்தம் ஏற்படுகிறது என்று சொன்னால் செலக்ஷன் கமிட்டி ஆராய்ந்து, இண்டர்வ்யூ செய்து பட்டியலை தயாரிக்கிறார்கள். அதற்கப்புறம் நேரடியாக செலக்ஷன் கமிட்டியினர் இந்த பட்டியலை அரசாங்கத்தினிடம் ஒப்புவிக்கிறார்கள், அதாவது தேர்ந்தெடுக்கப் படுகிற மாணவர்களின் லிஸ்டை. அந்த லிஸ்டை அளிக்கின்ற வரையில் டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனுக்கு ஒன்றும் தெரியாது. அவருக்கு ஒன்றும் தெரியாது என்று நேற்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

அதற்கப்புறம் அரசாங்கம் இதை ஏற்றுக்கொண்ட பிறகு டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனுக்கு இந்த லிஸ்டு போகிறது. டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனிடம் இவர்களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் அந்த அந்த கல்லூரிகளில் சேர்க்கப்படுவதற்கு அதற்கு மேலே நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள். நேற்று என்னிடம் சொன்னார் 'அதுவரையில் எனக்கு ஒன்றும் சம்பந்தம் இல்லை, எனக்கு ஒன்றும் தெரியாது' என்று சொன்னார். திரு. சுப்பையா அவர்களையும் கேட்டேன். அம்மாதிரி ஒன்றுமே நடை பெறவில்லை என்று சொன்னார். டாக்டர் ஜனார்த்தனம் அவர்களையே கேட்டேன் 'திரு. சுப்பையா அவர்கள் உங்களோடு ஏதாவது பேசினார்களா?' என்று. 'நான் அவரைச் சந்திக்கவில்லை, பேசவில்லை' என்று சொன்னார். 'எனக்கு திரு. சுப்பையா அவர்களைத் தெரியும் அதற்கு முன்னமே தெரியும், இதில் என்னிடம் ஒன்றும் வரவில்லை, நான் அவர்களை சந்திக்கவில்லை' என்று சொன்னார். மேலும் டாக்டர் ஜனார்த்தனம் அவர்களைக் கேட்டு நடைமுறை என்ன என்று தெரிந்து கொண்டேன். அவர் செலக்ஷன் கமிட்டி மெம்பர் இல்லை. அவர் டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன். இந்தக் கமிட்டியின் தலைவரைக் கேட்டேன். என்ன 'ப்ரொஸீஜர்' என்று அவரையே கேட்டேன். அவரைச் சந்தித்துப் பேசினேன். இந்தக் கமிட்டி மாணவர்களை தேர்ந்தெடுத்து லிஸ்டு தயாரித்த பிறகு, அரசாங்கத்திற்கு அவர்களே நேரில் கொண்டு வந்து கொடுக்கிறார். அப்பொழுது கூட டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனிடம் கொடுப்பதில்லை. டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனுக்குத் தெரியாது. அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மறுபடியும் லிஸ்டு டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனுக்கு வருகிறது. 'அதுவரைக்கும் எனக்கும் ஒன்றும் தெரியாது' என்று அவர் சொன்னார். 'சுப்பையா அவர்கள் என்னிடம் ஒன்றும் பேசவில்லை' என்றும் சொன்னார். ஸ்பீச்சைப் பார்த்தாலும், ஏதோ கேட்டார் என்று இருக்கிறதே தவிர, கொடுத்தாரா, என்ன ஆயிற்று என்று அது தெரியவில்லை. நான் அதிகாரிகளை விசாரித்ததிலிருந்து இது ஆதாரமற்றது என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

ஆனால், இது எப்படி ஏற்பட்டது என்பதையும் நான் தெரிந்து கொண்டேன். திரு. சுப்பையா அவர்கள் தென்னாற்காடு ஜில்லா கலெக்டராக இருந்தார்கள். அவர்கள் மீது கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு குறை இருப்பதற்கு இடம் இருக்கிறது. என்னவென்றால் கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி டாக்ஸி வாங்குவதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். டாக்ஸிக்கு என்று ஒரு ஃபியட் காரை அரசாங்கம் அவர்களுக்கு அலாட் செய்தது. ஆனால் அந்த விதியின்படி அதை டாக்ஸியாக ஓட்ட வேண்டும். அது டாக்ஸியாக ரிஜிஸ்டராக வேண்டும். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு தான் விற்கலாம். விற்றாலும் இன்னொரு டாக்ஸிக் காரருக்குத் தான் விற்கலாம். விதியின்படி ஐந்து வருஷங்களுக்கு டாக்ஸியாகப் பயன் படுத்த வேண்டும். நான் இதுபற்றி கேள்விப்பட்டேன். ஆனால், அதை டாக்ஸியாக ரிஜிஸ்டர் பண்ணவில்லை. இருந்தாலும், சென்னையில் காராக உபயோகப் படுத்திக்கொண்டிருக்கிறார் . . .

[5th August 1966

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மேலும் பேசுவதற்கு முன்பாக டாக்ஸியாக ரிஜிஸ்டர் செய்யவில்லை என்பது உண்மை அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். டாக்ஸியாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டது உண்மை. அதாவது தென்னாற்காடு டிஸ்டிரிக்டுக்கு மட்டும் தான் பெர்மிட் கொடுத்திருந்தார்கள். சென்னைக்கு எடுத்து வந்து விட்டேன் என்ற காரணத்திற்காக ஆர்.டி.ஏ. அவர்கள் பெர்மிட்டை கான்சல் செய்து விட்டார்கள். மீண்டும் சென்னையிலே டாக்ஸியாக ஓட பெர்மிட் வாங்கி சென்னையிலே ஓடிக்கொண்டிருக்கிறது. இதற்காக ஒரு 'மோடிவ்' கற்பித்து, அதற்காக நான் அதிகாரியின் பேரில் குற்றம் சொல்லுவது போல் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டு போகிறார். பஞ்சாப் முதலமைச்சர் கெய்ரான் அவர்கள் பிள்ளைகளை . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் சொல்லவேண்டியதை கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். 'கான்ஸல்' செய்துவிட்டார்கள் ஆர்.டி. ஏ. என்று சொன்னார்கள். சுப்பையா அவர்கள் தான் அப்பொழுது கலெக்டர், அவர் தான் ஆர். டி. ஏ. சென்னைக்கு டாக்ஸியைக் கொண்டு வந்தது தவறு. சென்னைக்குக் கொண்டுவரக்கூடாது. அதையும் கனம் உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; தவறு என்று சொல்லி, அதைக் கான்ஸல் செய்தார்கள். என்னிடம் இருக்கிற தகவல் என்னவென்றால் அதை டாக்ஸியாக வைத்துக்கொள்ள வில்லை, ஆகையினால் இன்னொரு டாக்ஸிக் காரருக்கு அதை விலைக்கு விற்றுவிடவேண்டும் என்று அந்த இலாகா உத்தரவு போட்டிருப்பதாகவும், அதன் பேரில் அப்பெலட் டிரிபியூனலுக்கு அப்பீல் செய்து, அப்பீல் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும், அப்பீல் எடுத்துக்கொள்ளப்படவில்லை, ஆகவே விற்றுவிடுங்கள் என்று அந்த இலாகா சொன்னதாகவும், கனம் உறுப்பினர் அவர்கள் இன்னும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப் போவதாகச் சொல்லிக்கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. இம்மாதிரி தகராறு இருக்கிறது. தகராறு இன்னும் தீரவில்லை. நான் சொல்ல வந்ததை கனம் உறுப்பினர் அவர்களே சொல்லி விட்டார்கள். ஏதோ தகராறு இருக்கிறது. மனஸ்தாபம் இருக்கிறது. இப்பொழுது இந்தக் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. என் வரையில் விசாரித்ததில் இந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இல்லை என்று ஏற்பட்டது.

Sri K. A. MATHIALAGAN rose.

Mr. DEPUTY SPEAKER : Is it on a point of order ?

Sri K. A. MATHIALAGAN : I am not raising a point of order. I want a clarification. The Hon. Chief Minister has yielded.

Mr. DEPUTY SPEAKER : What is the point which the hon. Member wishes to represent ?



5th August 1966]

Sri K. A. MATHIALAGAN : I want a clarification.

Mr. DEPUTY SPEAKER : Yes. The hon. Member can raise the point.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் இது பற்றி. இதைப் பொறுப்பாக விசாரிக்கவேண்டியது அவசியம்.

Mr. DEPUTY SPEAKER : Let the hon. Member come to the point.

Sri K. A. MATHIALAGAN : I will come to the point. Please permit me to say what I want to say.

இதை மிகப் பொறுப்பாக விசாரிக்க வேண்டும். அதிகாரிகள் பேரிலும் மாசு வரக்கூடாது. எம். எல். ஏ. அவர்கள் பேரிலும் வரக்கூடாது. உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறார்கள். நீதிபதியைக் கொண்டு இதை விசாரணை செய்யவேண்டும். இது நிரூபிக்கப்படா விட்டால் உறுப்பினர் அவர்கள் ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறார்கள். இல்லாவிட்டால், முதல் மந்திரி அவர்கள் ராஜிநாமா செய்வதற்குத் தயாரா என்று அவர்கள் சார்பில் நான் கேட்கிறேன். இதை நிரூபிக்க முடியாவிட்டால் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறார்கள். அப்படியில்லையென்றால் முதல் மந்திரி அவர்கள் ராஜிநாமா செய்யத் தயாரா? ஒரு ஹைகோர்ட்டு நீதிபதியை வைத்து விசாரணை செய்து, தீர்ப்பு கேட்கவேண்டும். அப்படியில்லாமல் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார்கள். . .

Let him take the challenge.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உறுப்பினர் அவர்கள் தமிழில் பேசினாலும், ஆங்கிலத்தில் பேசினாலும், எவ்வளவு உரக்கப் பேசினாலும், இவ்வளவும் 'இர்ரெலவேண்டு'. அதை நான் நோட்டீஸ் பண்ணப்போவதில்லை. மேற்கொண்டு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டுமே தவிர, இதுமாதிரி பேசிக் கொண்டே போனால், அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியதில்லை. அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமோ அம்மாதிரி எடுத்துக்கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதைச் செய்துகொள்ளலாம்.

Sri V. KRISHNAMOORTHY : On a point of personal explanation.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'பெர்ஸனல் எக்ஸ்பளனேஷன்" கடைசியில் சொல்லலாம்.

Mr. DEPUTY SPEAKER : I will give an opportunity to the hon. Member after the Chief Minister finishes his reply.

[5th August 1966

SRI V. KRISHNAMOORTHY : The Hon. Chief Minister is yielding. Let me explain.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** Even on a point of personal explanation பேச்சு முடிந்த பிறகு ஒரு மெம்பர் சொல்லலாமே தவிர, நடுவிலே குறுக்கிடுவது இல்லை.

SRI V. KRISHNAMOORTHY rose.

MR. DEPUTY SPEAKER : I will give an opportunity to the hon. Member after the Chief Minister finishes his reply.

12-30 p.m. **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மருத்துவ கல்லூரி பற்றிச் சொன்னார்கள். அதற்கு விதிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு 4,000 பேர்கள் மனுப் போட்டிருந்தார்கள். புதிதாகப் பல கல்லூரிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. அதனால் 1,000 சீட்டுகளுக்கு வசதி இருக்கிறது. நாலாயிரம் மனுக்களில், 3,000 பேர்களை எடுக்க முடியாது. இன்னும் கூட டிக்ரி ஹோல்டர்களுக்கு என்று இண்டர்வ்யூ நடப்பதாகத் தெரிந்து கொண்டேன். அதற்கு எல்லாம் செலக்ஷன் கமிட்டி போட்டு, அவர்கள் மார்க்குகளை வைத்துக்கொண்டு, நேராக இண்டர்வ்யூ செய்கிறது. அந்த இண்டர்வ்யூவிலே கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதைப் பொறுத்தும், வேறு என்.ஸி.ஸி. போன்ற பயிற்சிகளுக்காக, எல்லாவற்றிற்கும் 75 மார்க்குகள் கொடுக்கலாம் என்று இருக்கிறது. இதுவே, முன்பு 150 மார்க்காக இருந்தது. அது அதிகம் என்று சொல்லி, 150 மார்க்கை எடுத்துவிட்டு, அதை 75 ஆக வைக்கப் பட்டது. நேற்று செலக்ஷன் கமிட்டி சேர்மனையே விசாரித்தேன். அவர்கள் இதில் எதுவும் தவறு இல்லை என்று சொல்லுகிறார்கள். சிலர் 75 மார்க்கும் வாங்கி, எடுக்கப்படுகிறார்கள், சிலர் விடுபடுகிறார்கள் என்று சொன்னார்.

இதிலே இன்னொரு கருத்தும் இருக்கிறது. அது இனி யோசிக்க வேண்டிய விஷயம். உறுப்பினர்கள் கூட இப்பொழுதல்ல பின்னால் தங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். இண்டர்வ்யூவே வேண்டாம், இதற்கு மார்க்கே வேண்டாம், கண்ணை மூடிக் கொண்டு, ஷெடூல்ட் காஸ்டுக்கு இவ்வளவு, பாக்வர்டுக்கு இவ்வளவு, மற்றவர்களுக்கு இவ்வளவு என்று மார்க்குப்படி ஸ்தானங்களைக் கொடுத்துத் தேர்ந்தெடுக்கலாம். உறுப்பினர்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால், அப்படிப் பட்ட கருத்தைத் தெரிவித்தால், அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளும் வகையில் பரிசீலித்துப் பார்க்கலாம். இம்மாதிரிப் புகார்கள் வருகின்றன என்பதால் சொல்லுகிறேன். அதை வருகிற புதிய மந்திரிசபை யோசிக்கலாம். இனி வரப் போகின்ற, அடுத்த ஆண்டில் புதிதாக அமைகின்ற மந்திரி சபை சிந்தித்து செய்யலாம்.

மற்றொன்று, சட்டக் கல்லூரியைப் பொறுத்தது. அதைப் பற்றி கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் கூறினார்கள். "ஈவ்னிங் கிளாஸ்" பற்றியும் சொன்னார்கள். அது இந்த ஆண்டில்தான் புதிதாக ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது. 100 பேர்கள்



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

எடுப்பது என்று முதலில் தீர்மானிக்கப் பட்டது. இது உத்தியோகத்தில் இருப்பவர்களுக்காக, ஏற்கனவே எம்ப்ளாய்மெண்டில் இருப்பவர்களுக்கு என்று ஆரம்பிக்கப் பட்டது. உத்தியோகம் இல்லாமல் இருப்பவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும். 100 பேர்கள் என்று முதலில் போட்டதை 200 பேர்களாக்க வேண்டும் என்று பின்னால் முடிவு செய்யப் பட்டது. மனுக்கள் ஏராளமாக வந்தன. ஒரு ஸ்தானத்தைக் காலியாக வைக்க வேண்டும் என்று ஹைகோர்ட் உத்தரவு போட்டிருந்தது. ஆக 199 ஸ்தானங்களுக்கு எடுக்கப்பட்டது. இதில் ஜாதி வாரியாக, வகுப்பு வாரியாக, தாழ்த்தப் பட்டோர், பிற்பட்டவர்கள் என்கிற விதி ஒன்றும் இல்லை. இருந்தாலும் கூட, ஹரிஜனங்களிலே 5 பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் குறிப்பிட்ட சுப்பிரமணியன் எடுக்கப்படவில்லை. நிலைமை இதுதான். அதிலே தவறுதல் நடந்துவிட்டதாகக் கூறுவதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

நேற்றுப் பேசிய கனம் உறுப்பினர், திருவண்ணாமலையைச் சேர்ந்த திரு. ஷண்முகம் அவர்கள் ஏதோ ஹரிஜனங்களுக்கு—பூதமங்கலத்திலே—வீடே கட்டவில்லை. வீடுகள் கட்டியதாகக் கணக்கு காட்டப்பட்டது, அடியோடு ஒன்றுமே இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். இதோ ரிப்போர்ட் இருக்கிறது. அதைப் படித்து விடுகிறேன். டைம் ஆனால் கூடப் படிக்கிறேன்.

Twelve houses were sanctioned for the benefit of the Harijans of Bhoodamangalam village. On 6th July 1963 a sum of Rs. 9,000, being subsidy for the twelve houses, was placed at the disposal of the Block Development Officer, Thurinjapuram, for executing the work. Another sum of Rs. 2,400 was sanctioned as a loan on 7th November 1963 towards the share of contribution of beneficiaries at the rate of Rs. 200 each. The Block Development Officer, Thurinjapuram, entrusted the work to Sri Ranganatha Chettiar, the then President of Bhoodamangalam Panchayat. The Block Development Officer, Thurinjapuram, reported on 6th June 1965 that the work had been completed.

I inspected the housing colony to-day (4—8—1966) and enquired the beneficiaries. They have stated that all the twelve houses were constructed and handed over to them in the year 1961. The statement obtained from them is enclosed.

பெர்ஸனல் இன்ஸ்பெக்ஷன் செய்து அதிகாரி கொடுத்திருக்கும் ரிப்போர்ட் இது. அதன் கீழே இன்ஸ்பெக்ஷன் நோட்ஸ் இருக்கிறது. அதன் பிறகு லே-அவுட் இதெல்லாம் இருக்கின்றன. பேர் போட்ட ஸ்டேட்மெண்ட்ஸ் இருக்கின்றன. "1964-ம் வருடத்தில் இந்த 12 வீடுகளையும் கட்டி எங்களுக்கு ஒப்படைத்தார்கள். கீழ்க் கண்ட 12 நபர்களுக்கு 12 வீடுகளும் ஒப்புவிக்கப் பட்டன" என்று எழுதிக் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதற்கப்புறம் ப்ளான் இவையெல்லாம் இருக்கின்றது. நேற்று கனம்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

கக்கள் அவர்கள் விசாரித்து கொடுக்கச் சொன்னது இது. இதுதான் எங்களிடம் இருக்கும் தகவல். (குறுக்கீடு) நேற்று இருந்தது; இன்றைக்கு இருக்குமோ என்னவோ தெரியாது!

கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அருணாசலம் என்கிற ஒருவரை மருத்துவ கல்லூரியில், இண்டர்வ்யூ பெறுவதற்கு தகுதியான மார்க்குகள் இன்றி, குறைந்த மார்க்கே வாங்கியிருந்தாலும், அவருக்கு இண்டர்வ்யூ கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அது சம்மந்தமான ரிப்போர்ட்டையும் படிக்கிறேன்:

N. Arunachalam belongs to Ramanathapuram district. He has secured more than the minimum required. He has obtained *B plus* and *C plus* in the relevant subjects. He was interviewed by the Committee and selected on merits.

SRI K. A. MATHIALAGAN : How many attempts ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : 'அட்டெம்ட்ஸ்'-ஐப் பார்ப்பதில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : 'பாக்வர்டா' அல்லது 'பார்வர்டா'?

**திரு. கே. ஏ. மதியழகன்** : செட்டியார், நாட்டுக்கோட்டைச் செட்டியார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : செட்டியாரெல்லாம் ஃபார்வர்டா? எப்படியானாலும், விதிப்படி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

**திரு. மு. கருணாநிதி** : அவர் விதிப்படியா? (சிரிப்பு)

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அனுசரிக்கப் பட்டுவருகிற விதிப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

மற்றொரு குற்றச் சாட்டு, தமிழ்ப் பேராசிரியராக கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜில் திரு. முத்துக்கண்ணப்பரை நியமித்தது பற்றியது. அவர் யுனிவர்சிடியிலே எம்.ஏ. படித்தவர்; தமிழில் ரிஸர்ச்சும் செய்திருக்கிறார். முன்னே ஆசிரியராக இருந்திருக்கிறார்; ஆராய்ச்சியும் செய்திருக்கிறார். யுனிவர்சிடி- லெக்சரராக ஏற்றுக் கொள்ளப் பட்டு, ஸ்காலராக இருந்திருக்கிறார். விதிப்படி, ஒரு வருஷ காண்டிராக்டில் அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். வேண்டியவர்கள் என்று ஒன்றும் இல்லை. விதிக்கு மாறாக ஒன்றும் செய்யவில்லை. கட்சியைச் சேர்ந்தவர்கள் என்கிறார்கள். அப்படி முன்னால் இருந்தார். அவரும் மோஸ்ட் பாக்வர்ட் கம்யூனிடியைச் சேர்ந்தவர். (குறுக்கீடு: காங்கிரஸ்காரர் அவர்) அப்படியில்லை. கதர் அணிந்து கொள்கிறார். தமிழிலே ஆசிரியராக இருந்து, கதர் கட்டிக் கொள்கிறார் என்று . . .

**திரு. மு. கருணாநிதி** : கல்லூரிகளில் அரசியல் நுழையக் கூடாது என்று கனம் முதல் அமைச்சர் கொள்கையாக வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்பவும் காங்கிரஸ் உறுப்பினராக இருக்கும் ஒருவரை ப்ரொபசராக நியமித்திருப்பது ஏன்?



5th August 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கல்லூரிகளில் அரசியல் நுழையக்கூடாது என்று வற்புறுத்துகிறேன், கண்டிப்பாகச் சொல்கிறேன். அவர் காங்கிரஸில் முன்னே இருந்திருக்கலாம். இப்பொழுது காங்கிரஸ் அங்கத்தினர் இல்லை. இப்பொழுது சர்க்கார் உத்தியோகஸ்தர். ஆகவே, அரசியல் கட்சியில் அங்கத்தினராக இருக்க முடியாது. அது எந்த அரசியலாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆனாலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆனாலும் சரி, எந்த ஸ்தாபனத்திலும் யாரும் அங்கம் வகிக்க முடியாது. தவறுதல் நடந்திருந்தால், அது யாராக இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிதாக ஒரு குற்றச்சாட்டு, நிலைமையை உணர்ந்து கொள்ளாமல் சொன்னார்கள். கனம் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் அவர்களும் அதைக் குறிப்பிட்டார்கள். நான் ஏதோ எனக்கு அதிகாரம் போதாது என்றும், எனக்கு மேலும் அதிகாரம் வேண்டும் என்றும் மத்திய சர்க்காரைக் கேட்டதாகச் சொன்னார்கள். அதிகாரத்தை வைத்து யாரையும் தண்டிக்கவேண்டும் என்பதல்ல. மக்களைப் பாதுகாப்பதற்குத்தான் அதிகாரம் கேட்பது. எந்தச் சட்டமாக இருந்தாலும், குற்றம் செய்பவர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள்; குற்றம் செய்யாதவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள். குற்றம் செய்பவர்கள் ஒருவர் இருவர் இருந்தாலும், அதைத் தவிர்க்கவேண்டும். அதற்காகச் சட்டம் வேண்டும். ஒருவர் இருவர்தானே என்று சட்டம் செய்யாவிட்டால், குற்றத்தைத் தடுக்க முடியாமற்போய்விடும்; அவர்களுக்குத் தண்டனை அளிக்க முடியாமல்போய்விடும். அதனால், மேலும் மேலும் குற்றம் பரவக்கூடும். குற்றம் பரவாமல் தடுப்பதற்காகத்தான் சட்டம் செய்யப்படுகிறது. இதுதான் சட்டத்தினுடைய தத்துவம்.

சிற்சில சம்பவங்களை நாம் நம் மாநிலத்திலும் பார்த்திருக்கிறோம். மற்ற மாநிலங்களிலும் பார்த்திருக்கிறோம். திடீரென்று கொந்தளிப்பு ஏற்படுகிறது; பலாத்காரம் ஏற்படுகிறது; குழப்பம் ஏற்படுகிறது; மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அம்மாதிரி சம்பவங்கள் இந்த மாநிலத்திலே நடந்தன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தன. அம்மாதிரி சமயங்களில் மக்களைப் பாதுகாக்க வேண்டும். அதுதான் அரசாங்கத்தின் முக்கியமான கடமை. அந்த வகையிலே தான், சில சம்பவங்களை எவ்வாறு தவிர்ப்பது என்ற வகையிலே தான் நாம் ஆராய்கிறோம்; சட்டம் செய்கிறோம். இருக்கிற சட்டம் போதாது என்றால், புதிதாகச் சட்டம் செய்கிறோம்; அல்லது இருக்கும் சட்டத்திலே மாற்றம் செய்கின்றோம்.

பாதுகாப்புச் சட்டம் இருந்தாலும், அதை தேசப் பாதுகாப்புக்கு மட்டும் பிரயோகிக்கவேண்டுமே தவிர, எங்கெங்கே நெருக்கடி ஏற்படுகிறதோ அங்கே மட்டும் பிரயோகிக்கவேண்டுமே தவிர, மற்ற இடங்களில் பிரயோகிக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. மாநில அரசாங்கங்கள் எல்லாம் அதை ஏற்றுக் கொண்டன. ஏற்றுக்கொண்ட அந்த நிலையில், ஒரு விபரீதமான

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

சம்பவம், மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய சம்பவம் ஏற்பட்டது என்றால், அதைத் தவிர்ப்பதற்குச் சட்டம் இருக்கிறதா? சட்டம் இல்லை என்றால், என்ன செய்வது? தவறான முறையில் அடக்கு முறையை அதிகமாக உபயோகப்படுத்தவும் கூடாது. யார் தவறான முறையில் குழப்பங்களை ஏற்படுத்துகிறார்களோ, யார் விபரீதங்களை ஏற்படுத்துகிறார்களோ, அவர்கள் மீது மட்டும் நாம் தவிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்; தண்டனைக்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு என்ன சட்டம் இருக்கிறது என்று பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும்போது, இப்பொழுது இருக்கும் சட்டங்கள் போதுமா என்று யோசிக்கின்றோம். கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்ட "பப்ளிக் ஸெக்யூரிடி" சட்டம் என்பது மூன்று நான்கு மாநிலங்களில் இன்றைக்கு அமுலில் இருக்கிறது. மேற்கு வங்காளத்தில் "GoondasAct என்று ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றத் தயாராயில்லை. பப்ளிக் ஸெக்யூரிடி சட்டத்தை மத்திய அரசாங்கமே செய்யட்டும் என்று தான் நாங்கள் சொன்னோம். இந்தச் சட்டத்தைச் செய்வதற்கு அவசியம் இருக்கிறது. சிற்சில இடங்களில் வேண்டியிருக்கும். அடக்கு முறையைப் பிரயோகிக்காமல், டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா சட்டத்திற்கு அவசியம் இல்லாமல், இதைச் சமாளிக்கவேண்டும் என்றால், மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றால் இந்தச் சட்டத்திற்கு அவசியம் இருக்கிறது. அந்தச் சட்டம் சில மாநிலங்களில் இருக்கிறது. இந்தியா பூராவுக்கும் பொருந்தும் வகையில், இந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் பார்லிமெண்டில் கொண்டுவந்தால் நலம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது பார்லிமெண்டில் அதிக வேலை இருக்கிறது, மாநிலங்களே அந்தச் சட்டத்தைச் செய்து விடலாம், எந்த எந்த மாநிலத்தில் அந்தச் சட்டம் இல்லையோ அந்த மாநிலங்கள் அந்தச் சட்டத்தைச் செய்துவிடலாம் என்று சொன்னார்கள். இதுதான் இன்றைக்கு உள்ள நிலைமை; வேறு ஒன்றும் இல்லை. பத்திரிகையில் ஏதோ வந்ததை வைத்துக் கொண்டு, எனக்கு அதிகாரம் போதவில்லை, மேலும் அதிகாரம் வேண்டும், எதேச்சாதிகாரம் வேண்டும் என்று நான் கேட்பதாக எதிர்க்கட்சியினர் ஏதேதோ பேசலாம். ஆனால், நிலைமை இதுதான். இது ஒன்றும் அப்படிப் பிரமாதம் இல்லை. நான் ஒன்றும் தவறாகச் செய்துவிடமாட்டேன். அதிகாரப் பித்துக் கொண்டு, அதிகாரத்தைப் பெற நான் வகை தேடவில்லை. நான் எது செய்வதாக இருந்தாலும், மக்களின் நலன்களையொட்டித்தான் கவனம் செலுத்துவேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள். "'இங்கே அரிசி இல்லை, அதனால் பஞ்சம் வரும், பட்டினி வரும், பட்டினிச் சாவு வரும்'" என்று வசை புராணம் மாதிரி பாடிவிட்டுப் போய்விட்டார். அப்படி ஒன்றும் இல்லை. அதற்கெல்லாம் ஒன்றும் இடமே இல்லை. அரிசி இருக்கிறது. சென்ற ஆண்டிலே நமக்கு உரிய மழை சரியாக இல்லை. தமிழ்நாட்டிலே 60 சத



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

விகிதம் தான் மழை பெய்தது. உண்மையிலேயே ஒரு விபரீதமான நிலைதான் இருந்தது. நாற்பது சத விகிதம் மழை குறைந்தது, சென்ற ஆண்டில், மொத்தமாகப் பார்த்தால். சில இடங்களில் அடியோடு மழை இல்லை. அப்படிப்பட்ட சில இடங்களில் நிவாரண வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் அத்தகைய நிவாரண வேலைகள் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறோம். இன்னும் மழை பெய்யவில்லை. எப்படியோ விவசாயிகள் சிறிய வகையில் ஒத்துழைத்தார்கள். இருக்கும் தண்ணீர் அவ்வளவையும் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களிடத்தில் உயர்ந்த பண்பாடும் ஊக்கமும் கட்டுப்பாடும் இருக்கின்றன. அதைக்குறித்து நான் பெருமைப்படுகிறேன். அதற்காக விவசாயிகளை நான் பாராட்டுகின்றேன். எப்படியோ கஷ்டப்பட்டு விவசாயம் செய்கிறார்கள். விவசாயம் செய்வது அத்தனையையும் கொள்முதல் செய்வதில்லை, ஓரளவுதான் கொள்முதல் செய்கிறோம். இருபது சத விகிதம் அளவிற்குத்தான் கொள்முதல் செய்கிறோம். மற்றதெல்லாம் தானே நடமாடட்டும் என்று விட்டுவிடுகிறோம். 'ஹோல்ஸேல் கண்ட்ரோல்' கிடையாது. "மார்க்கெடபிள் ஸர்ப்ளஸை"த்தான் கொள்முதல் செய்கிறோம். விவசாயிகள் எவ்வளவு விற்கக்கூடுமோ அதைத்தான் கொள்முதல் செய்கிறோம். அதிலே ஒரு கண்டிப்பு இருக்கிறது, மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது என்று உறுப்பினர்கள் சிலர் நினைத்துக் குறிப்பிட்டார்கள். தொல்லை ஒன்றும் இல்லை. நியாயமான விலைக்கு மேல் விற்கக் கூடாது; அப்படி விற்றால் குற்றம். அந்த விலைக்கு எங்களிடம் கொடுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். சில மாவட்டங்களில் தேவைக்கு மேல் உற்பத்தி ஆகிறது. அதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்ற முறையில் கொள்முதல் சீராக நடக்கிறது. நமது மாநிலத்தில் டார்ஜெட்டில் 90 சத விகிதத்திற்கு மேல் கொள்முதல் ஆயிற்று. வேறு மாநிலங்களை நான் குறிப்பிடவிரும்பவில்லையென்றாலும், வேறு மாநிலங்களில் அம்மாதிரி நடந்தது என்று சொல்லுவதற்கில்லை. கேரளத்தில் அம்மாதிரி நடக்கவில்லை. இங்கே அதிகமாக ஆகிற அளவிற்கு அங்கே "ப்ரொக்யூர்மெண்ட்" ஆகவில்லை. இங்கே நாம் சீரிய முறையில் "ப்ரொக்யூர்மெண்ட்" செய்தோம். இதில் எல்லோருக்கும் ஒரு 'டிஸிப்ளின்' இருக்கவேண்டும் என்று நான் தான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். நமக்கு மிச்சம் இருக்கிறது என்றால், அதைக் கொடுக்கத்தான் வேண்டும். குறுவையில் ஒரு லட்சம் டன் கொடுத்தோம். (திரு. பி. கலியாணசுந்தரம்: அவர்கள் சொல்வது வேறு) பாலக்காட்டிலிருந்து கோயமுத்தூருக்கு வருகிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரத்திற்குப் போகிறது என்று அங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். பெரிய அணைக்கட்டிலே கூட, லீக்கேஜைப் பார்க்கலாம். நல்ல முறையில் போட்டிருந்தாலும் தண்ணீர் 'லீக்' ஆகிக்கொண்டிருக்கும். அதனால் அந்த அணைக்கட்டே உடைந்துபோய்விட்டது என்று சொல்ல முடியாது. அது ஒரு பெரிய 'லீக்கேஜ்' என்று சொல்ல முடியாது. டன்னலில் கூட லீக்கேஜ் இருக்கும் அம்மாதிரித்தான் உணவுத் தானியத்தைப் பொறுத்தும் அங்கும் இங்கும் கொஞ்சம்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

லீக்கேஜ் இருக்கும். பெரிய 'ஹோர்டிங்' 'ஸ்மக்ளிங்' இருக்கிறது என்று சொல்ல முடியாது. தப்புப் பண்ணுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இல்லை. கனம் உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் சொல்லும்போது, ஏதோ ஓரிடத்தில் செய்கிறார்கள், இன்னொரு இடத்தில் செய்யவில்லை என்று சொன்னார்கள். அப்படியெல்லாம் சொல்லிவிடலாம். ஆனால், இங்கிருக்கும் தகவல் வேறு. யார் யார் தவறு செய்கிறார்கள், யார் யார் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விதிக்கு விரோதமாகத் தானியங்களை எடுத்துக்கொண்டு செல்லுகிறார்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். அதற்கென்று தனிப் போலீஸ் பிரிவு இருக்கிறது. Anti-smuggling squad இருக்கிறது அவர்கள் சும்மா இல்லை. ஒவ்வொன்றும் பத்திரிகையில் வராது. பத்திரிகையில் போட்டோ வரும் அளவிற்கு இந்த மாநிலத்தில் பெரிய புள்ளிகள் இல்லை. இல்லாத புள்ளியை இருக்கிறது என்று சொல்ல முடியுமா? பஞ்சாபில் போட்டோ வந்தது. இங்கே போட்டோ ஒன்றும் இல்லையே என்று சொல்லமுடியாது, அங்கு நிலைமை வேறு. பஞ்சாபை நான் குறை சொல்ல மாட்டேன். இந்த மாநிலத்தில் அத்தகைய பெரிய புள்ளி இருந்தால், அவர்கள் மீது நமக்கு தாட்சண்யம் ஒன்றும் இல்லை. யாராயிருந்தாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்கமாட்டோம். பஞ்சாபில் இப்பொழுது இருக்கும் கவர்னர் அங்கே என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறாரோ, அதே நடவடிக்கையை நானும் இங்கே எடுத்துக்கொள்ளத் தயார்தான். அதற்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுத்துக் கொண்டு தான் வருகிறோம். இந்த மாநிலத்தில் அதிகமாக 'ஹார்டிங்' இருக்கிறது, 'ஸ்மக்ளிங்' இருக்கிறது என்று சொல்ல முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்கள், மாயவரம் பிரச்னையைப்பற்றிக் குறிப்பிட்டு அங்கே அரிசி கொஞ்சம் கொஞ்சம்தான் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். நிலைமை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். காவிரியில் தண்ணீர் வரவில்லை. ஜூன் 10-ந் தேதியிலிருந்து திறக்கவில்லை. ஜூலை 20-ந் தேதிக்கு மேலேதானே திறந்தோம்? ஒரு மாதம் தண்ணீர் இல்லையென்றால், குறுவை என்ன ஆகுமோ என்று விவசாயிகளுக்கு ஒரு அச்சம் ஏற்பட்டது. ஆகையால், இருப்பதைப் பூட்டி வைத்துவிட்டார்கள். அதனால் அரிசி வெளியிலே வரவில்லை. எங்கெங்கு அவசியம் இருக்கிறதோ அங்கு கொடுக்கிறோம். கூட்டுறவு ஸ்தாபனம் மூலமாகக் கொடுக்கிறோம். "ஸ்டாசுடரி ரேஷனிங்" சென்னையிலும் கோயமுத்தூரிலும் இருக்கிறது. மற்ற இடங்களில் 'இன்பார்மல் ரேஷனிங்'-இல் கொடுக்கிறோம். நீலகிரி, கன்னியாகுமரி, கோயமுத்தூர் போன்ற மாவட்டங்களில் பரிபூரணமாகக் கொடுக்கிறோம். இராமநாதபுரத்தில் அதிகமாகக் கொடுக்கிறோம்; கொடுத்துக்கொண்டு வருகிறோம். அம்மாதிரி மாயவரத்திலும் கட்டுப்பாடு வந்தது அப்படிக் கொடுக்கிற போது கொஞ்சம் அரிசி குறைந்திருக்கலாம். பற்றாக் குறை வந்துவிட்டது என்பது இல்லை.



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

விவசாயிகள் கவலையோடு, மிகுந்த அக்கறையோடு விவசாயம் செய்கிறார்கள். முக்கியமாக, தஞ்சை, சிதம்பரம், திருச்சிராப்பள்ளியிலுள்ள விவசாயிகள், காவிரி டெல்டா ஏரியாவில் உள்ள விவசாயிகள், காவிரியை எதிர்பார்த்து விவசாயம் செய்கிறவர்கள். குறுவை சாகுபடி செய்யக்கூடியவர்கள் ஏ.டி.டி. 27 ரகத்தை விளைவிக்கிறார்கள். ஏ.டி.டி. 27 நல்ல ரகம். அதிகமாக உற்பத்தி ஆகக்கூடியது. நேற்றுமாலை ஒரு கிராமத்திற்குப் போய்ப் பார்த்தேன். இங்கிருந்து இருபது மைலுக்கு அப்பாலுள்ள ஒரு கிராமத்திற்கு விவசாயிகள் பெருமையோடு என்னை அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தார்கள். இன்னும் பத்து நாட்களில் ஏ.டி.டி. 27 ரக நெற்பயிர் அறுவடைக்கு வரும். நன்றாக விளைந்து வந்திருக்கிறது. முன்பு இருபது வந்தது இப்பொழுது முப்பது வரும் என்று சொல்லுகிறார்கள். செங்கற்பட்டு விவசாயிகள் அவ்வாறு செய்திருக்கிறார்கள். பெரிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றும் இல்லை. மின்சார சக்தியையும் கிணற்றையும் வைத்துக் கொண்டு பயிரிடுகிறார்கள். அவர்கள் பெருமையோடு என்னை அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினார்கள். ஏ.டி.டி. 27 என்னும் நெல் ரகம் மிகச் சிறந்தது. ஆந்திராவில்கூட இந்த ரகத்தை விரும்பி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பர்மாவிலும் கேட்கிறார்கள். இதை நம்முடைய விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்த முன்வந்திருக்கிறார்கள்.

இரண்டு லட்சம் ஏக்கராவில் குறுவை ஏ.டி.டி. 27 போடுவது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. மற்ற உதவிகள் எல்லாம் அளிக்கப்பட்டு வந்தன. தண்ணீர் வரவில்லை. விவசாயிகளுக்கும் கவலை ஏற்பட்டது. நமக்கும் கவலை ஏற்பட்டது. போனமாதம் 21-ம் தேதிதான் மேட்டூர் டாம் திறந்துவிடப் பட்டது. இப்போது விவசாயிகள் எல்லாம் குறுவை சாகுபடி செய்ய முன் வந்திருக்கிறார்கள். ஏ.டி.டி. 27 சாகுபடி செய்ய முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையோடும் இருக்கிறார்கள்.

இப்படி திடீரென்று நீர்ப்பாசன வசதிகள் பாதிக்கப்படுகின்ற போது இனி நாம் என்ன செய்யவேண்டும் என்பது ஒரு பிரச்னை. குறுகிய காலத்தில் நீர்ப்பாசன திட்டம் ஒன்றை வகுத்தாக வேண்டும். ஆகவேதான் "க்ராஷ் ப்ரோக்ராம்" என்று தயாரித்திருக்கிறோம். அமோக விளைச்சல் திட்டம் என்ற அடிப்படையில் சாகுபடிக்கு வேண்டிய விதை, அதற்கு வேண்டிய உரம், பூச்சி மருந்து, கடன் வசதிகள் இவைகள் எல்லாம் எப்படிக் கொடுக்கப்பட்டு வருகின்றனவோ அதேமாதிரி சீக்கிரத்தில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த வகையில் கிணறுகள் தான் கைகண்ட பலனை நமக்கு உடனடியாக அளிக்கின்றன. விவசாயத்திற்குப் போதுமான கிணறுகளை அமைக்க நாம் முயற்சி செய்கிறோம். இதற்கு மத்திய அரசாங்கமும் ஓரளவு உதவி அளித்தார்கள். அந்தப் பணத்தைப் பகிர்ந்து மாவட்டங்களுக்குக் கொடுத்தோம். மேலும் பணம் வேண்டும், அது போதாது என்று கலெக்டர்கள் கோரினார்கள். நாம் நம்முடைய அங்கீகரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து, நாம் போட்டுள்ள திட்டங்கள் எல்லாம் முக்கியமானவைகள்தான், இருந்தும் சில சில திட்டங்களின்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

மொத்தத்தொகையைக் குறைத்து, ஐந்து லட்சம், பத்து லட்சம் என்பதாக இரண்டு கோடி மிச்சப்படுத்தி, அதை மீண்டும் கலெக்டர்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிறோம். அதோடு மத்திய அரசாங்கமும் இந்தத் திட்டத்தை நாம் நல்லமுறையில் செயலாற்றுவதற்குக் கணிசமான அளவு உதவி செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

நம்முடைய திட்டங்களினால் கணிசமான அளவு உற்பத்தி பெருகிக்கொண்டுதான் வருகின்றது. பெருகவில்லை, அப்படியே இருக்கிறது என்று சொல்ல முடியாது. 1951-52-இல் இருந்து 1965 வரைக்கும் பார்த்தால் 19 லட்சம் டன் உணவு தானியம் பெருகி இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்படுகிறபோது நமக்குப் பற்றாக்குறை தான் இருந்தது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். மேலும் நிறைவேற்றப் பார்க்கிறோம். இயற்கை தவறினாலும், பருவ மழை தவறினாலும் அதை எல்லாம் நாம் சமாளித்து வருகிறோம் என்றால் அதற்குக் காரணம் நம்முடைய திட்டங்களினால் ஓரளவு நம் நாட்டிலேயே உற்பத்தி பெருகியிருப்பதுதான். விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதோடு கூட, விவசாய மக்களுடைய பொருளாதார நிலையையும் உயர்த்துவதற்கு இந்த அரசாங்கம் தக்க கவனம் செலுத்தி செயல்பட்டுக்கொண்டுதான் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் விலைவாசியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். விலை வாசி உயர்வைத் தடுக்க இந்த அரசாங்கம் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஒரு குற்றச் சாட்டாகும். விலைவாசி உயர்வு தொடர்ந்து இருந்து வருகிற பிரச்னை. குற்றச் சாட்டும் தொடர்ந்து இருந்து வருகிறது. அரசாங்கமும் தொடர்ந்து நிலைமையை விளக்கிக்கொண்டுதான் வருகிறது. அரசாங்கம் சும்மா இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னே "ப்ளானிங் கமிஷன்" நிபுணர்கள் கூடி கூடி விலைவாசி ஏற்றத்தைப் பற்றி ஆராய்ந்தார்கள். முடிவில் விலைவாசி ஏற்றத்திற்கு அந்த நிபுணர்கள் பல காரணங்களை எடுத்துக் காட்டினார்கள். ஒரு காரணம், இரண்டு காரணம் மட்டும் அல்ல. விலைவாசி உயர்வுக்குப் பற்றாக்குறை மட்டும் காரணம் அல்ல. Inflation வருமான உயர்வு, மக்களுடைய வாங்கும் சக்தி உயர்வு ஆகிய எல்லாமாகச் சேர்ந்து விலைவாசி உயர்வை ஏற்படுத்துகின்றன.

நான் ஏதோ சம்பிரதாயத்திற்காகச் சொல்கிறேன், ஆறுதலுக்காகச் சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. உலகத்தில் உள்ள பலநாடுகளில் இந்த விலைவாசி உயர்வுப் பிரச்னை இருக்கின்றது. சில நாட்களுக்கு முன்பு நான் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தேன். அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டு இருந்தது. ஒரு பக்கத்தில் அமெரிக்க நாட்டு விவசாய மக்கள் "தங்களுடைய கோதுமைக்குத் தகுந்த விலை உயர்வைக் கொடுக்க வில்லை" என்பதாக திரு. ஜான்சன் மீது குறை சொல்கிறார்கள். மற்றொரு பக்கத்தில் வாங்கிச் சாப்பிடுகிற மக்கள் கோதுமைக்கு விலையை ஏற்றிக்கொண்டு போவதாகக் குறை சொல்கிறார்கள்.



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ருஷ்ய நாட்டைப் பொறுத்த வரையிலும் கூட விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அங்குகூட விலை ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. நான் சில ஆண்டுகளுக்கு முன்னால் அங்கே போயிருந்தபோது, அந்த நாட்டில் நம்முடைய தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் என்னிடம் குறிப்பிட்டார்கள். 'ஒருமாதத்திற்கு முன் வேண்டிய சாமான்களுக்கு இன்டென்ட் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இன்டென்ட் கொடுத்த சாமான்கள்தான் கட்டுப்படுத்தப்பட்ட நியாயமான விலைக்குக் கிடைக்கிறது. மற்றவற்றை எல்லாம் அதிக விலை கொடுத்தே வாங்குகிறோம்' என்று சொன்னார்கள். அங்கும் விலைவாசிகள் ஏறுகின்றன. தவிர்க்க முடியவில்லை. அதனால் விலையேற்றம் அப்படியே இருக்கட்டும் என்பது அல்ல. விலைவாசியைக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவற்றை எல்லாம் எடுத்துக்கொண்டுதான் வருகிறது. மொத்தத்தில் பார்த்தால், அத்தியாவசியப் பண்டங்களைப் பற்றி மட்டும் சொல்கிறேன், இன்றையதினம் மற்ற மாநிலங்களில் உள்ள விலைகளோடு நம் மாநில விலைகளை ஒப்பிட்டு பார்த்தால், பரவாயில்லை என்றுதான் சொல்லத் தோன்றும். அதற்காக விலை ஏறவில்லை என்று நான் சொல்லவில்லை. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்தில் அதிகமாக விலை ஏறவில்லை என்றுதான் சொல்வேன். இதுபற்றிய புள்ளிவிவரங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். இதில் முக்கியமாக அரிசியைப் பொறுத்தவரையில் எட்டு லட்சம் டன் வாங்கி வைத்திருக்கிறோம். அரிசிக்கு நாம் நிர்ணயித்திருக்கிற விலையை விட சில இடங்களில் "ஓப்பன் மார்க்கெட்டில்" குறைவாக இருக்கிறது. காரணம் நாம் மார்க்கெட் பூராவும் வாங்கிவிடவில்லை. ஹோல்சேல் டிரேடை நாஷனலைஸ் செய்யவில்லை. மார்க்கெட்டில் சர்ப்ளஸைத்தான் நாம் நிர்ணயித்துள்ள நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து விநியோகித்துக்கொண்டு வருகிறோம். ஸ்டாசுடரி ரேஷன் மதுரையிலும், சென்னையிலும் இருக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் இன்ஃபார்மல் ரேஷன் தான் இருக்கிறது.

அதன்காரணமாக நாம கொள்முதல் செய்ததுபோக பாக்கியுள்ள தானியங்கள் ஓப்பன் மார்க்கெட்டுக்கு வருகின்றன. அதிலும்கூட ஒவ்வொர் இடத்திற்கு ஒவ்வொர் விலை இருக்கிறது. திருச்சியில் உள்ள விலையைக் காட்டிலும் கரூரில் விலை அதிகமாக இருக்கிறது. காரணம் அங்கே பர்ச்சேசிங் பவர் இருக்கிறது. இங்குள்ள விலையைவிட புதுக்கோட்டையில் குறைவாக இருக்கிறது. புதுக்கோட்டையில் விலை குறைவாக இருக்கிறது என்றால் அதற்காக அந்தப் பகுதி அமைச்சரைக் குறை சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) இருந்தாலும் எவ்வளவு தூரம் நாம் நம் கையில் உள்ள ஸ்டாக்கை வைத்து, ஓப்பன் மார்க்கெட்டில் விலை உயராமல் கட்டுப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்திவருகிறோம்.

இதேமாதிரியாக நம்முடைய நாட்டில் மற்ற புன்செய் தானியங்களிலும் பற்றாக்குறை இருக்கிறது. மில்லெட், ராகி போன்றவற்றின் விலையையும் நிர்ணயித்திருக்கிறோம். நம்முடைய தமிழ்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

நாட்டிலும் மில்லெட் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாவது மட்டும் அல்ல, வேறு எந்த மாநிலங்களில் இருந்தாலும், குறிப்பாக மத்தியப் பிரதேசம், பஞ்சாப் அல்லது ராஜஸ்தான் முதலிய பிராந்தியங்களுக்கும் போய், மூலதனம் போட்டு வாங்கி விநியோகம் செய்துகொண்டு வருகிறோம். அந்த அளவுக்கு விலை ஓரளவு குறைந்திருக்கிறது. அதேமாதிரி, கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலையும் ஏறிக் கொண்டு போவதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. முன்பு கடலை ஏற்றுமதியாகிக்கொண்டிருந்தது. அதைக்கூட நிறுத்த ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். பத்தாயிரம் டன் கடலை வாங்கி, அதை எண்ணெய் ஆக்கி விநியோகிக்கலாம். இதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யலாம். எல்லோரும் நம்மிடத்தில் தான் வாங்க வேண்டுமென்று சொல்வதில்லை. அந்த மாதிரி கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது.

இது அல்லாமல் தொழிலாளர்களுக்கு "கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்ஸ்" என்று தனித்தனியாக ஆங்காங்கே வைக்கப்பட்டு வருகிறது. சென்ற வாரத்தில் டெல்லியில் நடந்த தொழிலாளர்கள் மகாநாட்டிலே கூறப்பட்டது, இண்டஸ்ட்ரியல் எஸ்டாபிளிஷ் மென்ட்ஸ் வைத்துள்ள கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் ஸ்டோர்கள் அகில இந்திய சராசரி 65 சத விகிதம்தான்; ஆனால் தமிழ் நாட்டில் மட்டும் 85 சத விகிதம் அமைக்கப்பட்டிருக்கிறது: தொழிலாளர்கள் கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்களில் மட்டும் மாதத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. நான் தொழிலாளர் களின் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் ஆகியவர்களிடம் 'நீங்கள் தொழிலாளர்கள் கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்களை இன்னும் விரிவாக்க வேண்டும், நாங்கள் இன்னும் உங்களுக்கு நியாயமான விலைக்குப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்கிறோம்; நீங்கள் அவை நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும்" என்று சொல்லியிருக் கிறேன்.

அதேமாதிரி சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சென்னை நகரத்தில் 6 கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆறு போதாது. எந்த அளவுக்கு இதற்கு உபகாரம் அளிக்கக் கூடுமோ, வசதியைப் பெருக்கிக்கொடுக்கக் கூடுமோ அந்த அளவுக்குச் செய்து வருகிறோம். இந்த கன்ஸ்யூமர்ஸ் சொஸைடிகளுக்கு "சென்டிரல் பர்ச்சேசிங் மெஷினரி" வேண்டும். எந்தப் பருவத்தில், எந்த இடத்தில், எந்த எந்தச் சாமான்களை வாங்குவது மலிவாக இருக்கும் என்று பார்த்து வாங்கி இந்த சொஸைடி களுக்கு விநியோகிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்களுக்கு ஒரு பெடரேஷன் இங்கே 31-ம் தேதி அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறெல்லாம் பல நடவடிக்கைகள் எடுத்து, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த நாம் கவனம் செலுத்தி வருகிறோம். ஜுலை 15-ம் தேதி சென்னை நகரத்தில் மாதர்களுக் சென்று பத்து "கஸ்யூமர்ஸ் சொஸைடி" அமைக்கப்பட்டிருக் கின்றன. மாதர்களே இவற்றை நடத்த ஏற்றுக்கொண்டிருக்



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

கிறார்கள். இன்னும் பெரிய அளவில் வட சென்னையில் ஒன்றும், 1-( p.n
தென் சென்னையில் ஒன்றும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. அதற்கு மேல் மத்திய அரசாங்கமும் உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறது. கோயம்பத்தூர், சேலம், மதுரை, திருச்சி போன்ற தலைநகரங்களில் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதோடு நிற்காமல், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், ஒவ்வொரு தாலூகா தலைநகரிலும், ஒவ்வொரு பிளாக்கின் தலை நகரிலும் வைப்பது என்பதுதான் அரசாங்கத்தினுடைய திட்டம். அந்த வகையிலேதான் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். விலைவாசி ஏறுவதைக் கவனிக்காமல் இல்லை, ஏறட்டும் என்று பார்த்துக் கொண்டிருக்கவில்லை, ஏறட்டும் என்று செயலற்ற வர்களாக இல்லை, கவனம் செலுத்தி ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப் பட்டு வருகிறது, இன்னும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மதியழகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டுச் சொன்னார்கள். ஏதோ கேட்டதைச் சொன்னார்கள்; அதை அப்படியே டச் பண்ணிவிட்டு விட்டுவிட்டார்கள். "வட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர்" பற்றிச் சொன்னார்கள். ஒரிஸ்ஸாவில் அது அடல்ட் ரேடெட் என்று தள்ளப்பட்டு விட்டது. ஆனால் இங்கே ஏதோ யாருக்கோ லாபம் ஏற்படுவதற்கு நாம் வைத்திருக்கிற மாதிரிச் சொன்னார்கள். நான் அதை விசாரித்துத்தான் சொல் கிறேன். ஒரிஸ்ஸாவிலே அதைப் பரிசோதனை செய்து பார்த்த நிபுணர்கள் அதில் அடல்ட்ரேஷன் இருக்கிறது என்று சொன் னார்கள், அதனால் அங்கே தள்ளப்பட்டது. ஆனால் இங்கே பரிசோதனை செய்து பார்த்த நிபுணர்கள் அடல்ட்ரேஷன் இல்லை என்று சொன்னார்கள். இதில் தாட்சண்யம் ஏதுமில்லை. அப்படி யிருந்தால், அடல்ட்ரேடெட்-ஆக இருந்தால் பார்த்துக்கொண் டிருக்கமாட்டோம். இன்னும் சொல்லப்போனால் அடல்ட்ரேஷன் செய்தவர்கள்மீது கடுமையான நடவடிக்கை நாம் எடுத்துக்கொண் டிருக்கிறோம் என்றுதான் சொல்கிறார்கள். ஏனென்றால் இது வாழ்க்கையைப்பற்றியது, ஆபத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதாலே இதிலே தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு தான் வருகிறோம்.

கூட்டுறவு ஸ்தாபனங்களைப்பற்றி கனம் உறுப்பினர் சண்முகம் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எப்பொழுதும் இதைப்பற்றிச் சொல்லுவார்கள். ஏதாவது குற்றங்கள் இருந்தால் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். காங்கிரஸ்காரர், கட்சிக் காரர் என்று யாரும் பார்ப்பது இல்லை; யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம். கோர்ட்டுக்குக் கூடப் போகிறோம். கூட்டுறவு என்பது மக்களுடைய இயக்கம். விலைவாசி ஏறுகிறது என்றால் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு அதிகமாகப் பயன்படுகிறது என்று சொன்னேன். ஆகவே, இந்த இயக்கத்தில் "ஊழல்கள்", "ஊழல்கள்" என்று அதிகமாக மிகைப்படுத்திச் சொன்னால் அதனால் அந்த இயக்கமே போய்விடும். எந்த இயக்கத்திலும் தவறுகள் இருக்கும். ஏதோ ஒரு பாங்கிலே

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

இரண்டு டைரக்டர்கள் போட்டதுபற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு பாலிட்டிக்ஸ் என்னைப் பொறுத்தமட்டில் அதிகமாகத் தெரியாது. எலெக்ஷன் என்று சொல்லி நாமினேஷன் தேதி எல்லாம் போட்டாகிவிட்டது. அதற்கு அப்புறம் இரண்டு டைரக்டர்கள் என்பதை ஒரு டைரக்டர் என்று ரிஜிஸ்திரார் ஆக்கினார். அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. நாமினேஷனுக்கு முன்னால் இரண்டு இருந்ததை அதற்குப் பிறகு ஒன்று என்று மாற்றினால் அது irregular. ஆகவே, இரண்டாகப் போடவேண்டும். இதுபற்றிப் பின்னால் வேண்டுமானால் "ஆன் மெரிட்ஸ்" நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று ரிஜிஸ்திராருக்கு நான் தெரிவித்தேன். அதற்குப் பிறகு தான் இரண்டு ஆக்கப்பட்டது, வேறு ஒன்றுமில்லை.

பப்ளிக் சர்விஸ் கமிஷனில் நான்காவது மெம்பர் ஏன் போட்டோம் என்று கேட்டார்கள். கனம் உறுப்பினர் திரு. கே. ஆர் சம்பந்தம் அவர்கள் ஒரு முதலியார் ஜாபிதாவைப் படித்தார். அவர்களுடைய ஜாதியில் கூட முதலியார்கள் இருக்கிறார்கள். அவர் இனத்தவரைச் சேர்ந்தவர்களில் கூட முதலியார்கள் இருக்கிறார்கள். சட்டமன்றத் தலைவர் திரு. மாணிக்கவேலு அவர்களுடைய மாமனார் பரத்வாஜ முதலியார். ஆகவே, ஜாதி உணர்ச்சியை இப்படிப் பேசி அவர்கள்தான் கிளப்புகிறார்கள். நான் இதை வேடிக்கையாகத்தான் சொன்னேன். மோஸ்ட் பாக்வர்டிலேகூட 'முதலியார்' இருக்கிறது. அவர் மோஸ்ட் பாக்வர்டைப்பற்றியெல்லாம் பேசுகின்றார். என்னிடம் ஒருவர் சொன்னார். திரு. கே. ஆர். சம்பந்தம் அவர்களுடைய ஊரிலே ஒருவர் மோஸ்ட் பாக்வர்டு சமூகத்தைச் சேர்ந்தவர் சம்பந்தம் என்ற பெயருடன் இருந்தார். அவரை, "நீ என் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறாய்; ஓடு" என்று அவரைத் துரத்தியதாகச் சொன்னார்கள். ஜாதி அபிமானம் இருந்தால் அதுவே தப்பு; அப்படியிருக்கும்பொழுது ஜாதி வெறுப்பு அதை விடப் பெரிய தப்பு. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. முதலியார் என்பதற்கு வேறு ஒன்றுகூடச் சொல்வார்கள். அதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை.

பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே நான்காவது அங்கத்தினரை ஏன் போட்டோம்? கார்ப்பரேஷன் போன்றவற்றின் வேலைகள் எல்லாம் இப்பொழுது சேர்ந்திருக்கிறது. வேலை அதிகமாகிவிட்டது. எந்த அரசாங்கம் ஒரு ஹரிஜனை இம்மாதிரிக் கமிஷன் தலைமைப் பதவியில் இதற்குமுன் அமர்த்தியிருக்கிறது? அதற்கு ஒரு ஹரிஜனைப் போட்டிருக்கிறோம். அவர் சிறந்தவராக இருந்தார், நேர்மையானவராக இருந்தார், ஹரிஜனாக இருந்தார், ஆகையால் அவரைப் போட்டோம். ஒருவர் கத்தோலிக்; இன்னொருவர் Backward சமூகத்தைச் சேர்ந்தவர், ஆக மூன்று பேர்களையும் நேர்மையானவர்கள் என்று போட்டோம். அது போதாது இன்னொருவர் வேண்டுமென்று போடப்பட்டது. சர்வீஸிலே இருப்பவராகப் பார்த்துப் போடலாம் என்று பார்த்தோம். அனுபவம், வயது இவற்றைப் பார்த்துத் தான் ரிஜிஸ்திரார் ஆஃப் கோவாப்பரேடிவ் சொஸைட்டீஸ் ஆக இருந்தவரைப் போட்டோம். காங்கிரஸ்காரர்களை ஏன்



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

போட்டீர்கள் என்று கேட்கிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு யோக்கியதை இல்லை என்று கருதுகிறார்களா? எப்படிப் போட்டாலும் தப்பாக இருக்கிறது. யாரோ ஒருவர், சிறந்தவர், முக்கியமானவர் ஜைன் கம்யூனிட்டி. அவரைப் போட்டால் தப்பா? திரு. முத்துக்கண்ணப்பன், இப்பொழுது காங்கிரஸில் இல்லை, அவரைப் போட்டது தப்பா? திரு. மோகன் குமாரமங்கலம் இருக்கிறார்; அவரைப் போட்டால் அதுவும் தப்பா? யாரைப்போட்டாலும் தப்பா? திரு. மதியழகன்தான் எனக்கு guidance கொடுக்கவேண்டும். நமக்கு கட்சி என்பது இதில் கிடையாது. அட்வகேட் ஜெனரல் உத்தியோகத்திற்குப் போடுவது என்றால் அவருடைய நேர்மையிலே, திறமையிலே அரசாங்கத்திற்கு நம்பிக்கை இருக்கவேண்டும். இரண்டும் இருக்கிறதா என்று பார்த்துத்தான் போடுகிறோம். இந்த மாநிலத்திலே இருக்கிற உயர்நீதிமன்றத்திலே மட்டுமல்ல, எங்கெங்கேயோ இருக்கின்ற உயர்நீதி மன்றங்கள் எல்லாம் இதைப் பாராட்டுகிறார்கள். ஆனால், கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களுக்கு நான் போட்டது தப்பு. காரணம் அது நான் போட்டது என்றால் அவருக்கு தப்பு. அவருக்கு என்ன சமாதானம் சொன்னாலும் அவர் அதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதையே திரும்பத் திரும்பக் குற்றஞ்சாட்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

தொழில் ஸ்தாபனங்கள் மூடப்பட்டன, வேலையிழக்கப்பட்டது என்று சொன்னார்கள். நூல் தேக்கம், பருத்தி கிடைக்காதது, பவர் கட், துணி விலை போகமுடியாதது, கிரெடிட் ஸ்க்வீஸ், இவை போன்ற பல காரணங்களினால் 13 மில்கள் மூடப்பட்டன. இது பற்றி அதற்கு முன்னாலேயே கவனம் செலுத்தப்பட்டது. தொழிலாளர்களைக் கூப்பிட்டுப் பேசி, தொழிலதிபர்களைக் கூப்பிட்டுப் பேசி, இதற்காக ஒரு நிபுணர் கமிட்டி போட்டுக் கேட்டோம். கடன் கொடுத்து உதவவேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை, பாங்கில் வேண்டுமானால் கடன்கொடுக்க ஏற்பாடு செய்கிறோம், எங்களிடம் பணம் இல்லை, பாங்கில் கடன்கொடுக்க கியாரண்டி கொடுக்கிறோம் என்று சொன்னோம். தொழிலதிபர்களுக்கு ஏன் கடன் கொடுத்தீர்கள் என்று கனம் கலியாணசுந்தரம் அவர்கள் கேட்கலாம். அவர்கள்மீது என்ன அனுதாபம் என்று கேட்கலாம். பி.எஸ். அண்ட் டபிள்யூ. மில்லைக்கூட மூடிவிட்டார்கள். ஏராளமான பேர்கள் வேலையிழந்துவிட்டார்கள். வேறு யாராவது அதை நடத்துங்கள் என்றால், பாங்கில் பணம் இல்லை, ஆகையால் நடத்த யாரும் முன்வரவில்லை. நஷ்டம் வந்துவிடும் என்று போய்விட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தொழிலாளர்கள்தான் என்னிடம் முதன் முதலில் இதை வந்து சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வந்து என்னிடம் பேசுகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி அவர்கள்தான் முதலில் என்னிடம் வந்து சொன்னார்கள்.

அந்தத் தொழிலாளர்கள் ஒரு யோசனையைச் சொன்னார்கள். எங்களுக்கு பிராவிடென்ட் பண்ட் சேர்ந்திருக்கிறது. அதிலே 100 ரூபாயைக் கொடுக்கிறோம். அதை முதலாக வைத்துக்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

கொள்ளுங்கள். பின்னல் அதை வாங்கிக் கொள்ளுகிறேம் என்று சொன்னர்கள். அந்தமாதிரி ஒத்துழைப்பைத் தொழிலாளர்கள் கொடுத்தார்கள். அவர்களிடமிருந்து 100 ரூபாய் வாங்கி, வேறு பங்குகளுக்கும் ஏற்பாடு செய்து அந்த மில் திறக்கப்பட்டது. அது இன்றைக்கு லாபகரமாக ஓடுகிறது. பதின்மூன்று மில்களில் 9 மில்களைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அவை ஓடிக் கொண்டிருக்கின்றன. மீதியுள்ள நான்கு மில்களில் கூட, நிபுணர் கமிட்டி போய் ஏற்பாடு செய்து இரண்டு மில்கள் ஓடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டைப் பொருத்த வரை கொஞ்சம் மோசமான நிலைமையில் இருக்கின்றன. அதற்குக் கொஞ்சம் அதிகமான பணம் வேண்டும். அவற்றைப் பற்றியும் தொடர்ந்து லேபர் கமிஷனர் அவர்கள் கவனம் செலுத்திக் கொண்டு வருகிருர்கள்.

மதுரையிலே நடந்த சம்பவம் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஏதோ சிறிய சம்பவம். அதற்காக எல்லாக் கட்சியும் சேர்ந்து யுனைடெட் கமிட்டி வைத்து 12,000 பேரிலே 8,000 பேரை வேலையிலிருந்து நிறுத்தி விட்டார்கள். என்னுடைய கவனத்திற்கு வந்து எல்லோருடனும் கலந்து பேசி கடைசியில் ஒரு ஒப்பந்தம் வந்தது. அதற்கு எல்லாக் கட்சியினரும் ஒப்புக் கொண்டார்கள். தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் ஒப்புக் கொண்டார்கள். கூடுமானவரை லேபர் கமிஷன் என்ற இயந்திரம் சிராகக் கவனம் செலுத்தி வருகிறது. என்னுடைய தலையீடு எப்போது வேண்டுமோ அப்போது நானும் தலையிட்டு பிரச்னையைத் தீர்த்து வைக்க முயலுகிறேன். பி. அண்டு சி. மில்லில் தகராறு வந்தது. ஒரு மாதிரி செட்டில் பண்ணினேம். சில சமயங்களில் தொழிற்சங்கங்களினிடையே உள்ள போட்டாப் போட்டியின் காரணமாக சங்கடங்கள் வருகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இதில் எல்லாம் அரசாங்கம் அப்போதைக்கப் போது கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது.

சேலம் உருக்காலை ஆரம்பிப்பது பற்றிய பிரச்சினை பத்தாண்டு களுக்கு மேலாக அப்படியே இருக்கிறது என்று சொன்னர்கள். அதை நான் கொண்டு வருவது என்றல் எங்கிருந்து கொண்டு வருவது? ஜெர்மனியில் இருந்து கொண்டு வருவதா? ஃபாரின் எக்ஸ்சேஞ்சுக்கு வழி செய்து அப்படிக் கொண்டு வந்து விட முடியுமானல் கொண்டு வந்து விடலாம். டில்லியிலிருந்து கொண்டு வந்து விட முடியுமா? பம்பாயிலிருந்து கொண்டு வந்து விட முடியுமா? திரு. கோசல்ராம் அவர்கள் ரொம்பப் பாண்டித்தியம் பெற்றவர்கள். அதைப் பற்றிய விவரங்களை எல்லாம் பேசினர்கள். நெய்வேலி கரியையும், சேலம் 'ஓரை'யும் கொண்டு ஆரம்பிக்கப் பட வேண்டிய திட்டம். அதற்கு நிபுணத்துவம் வேண்டி யிருக்கிறது. வெறுமனே ஆர்டர் போட்டு விட்டால் தொழிற் சாலை வந்து விட முடியாது. "There shall be a Salem Steel Plant" என்று ஆர்டர் போட்டு விட்டால் போதுமா? அதை நிறைவேற்ற வேண்டும். கனம் அங்கத்தினர் கோசல்ராம் சொன்னது போல் அது லாபகரமாக இருக்கவேண்டும். கஷ்டம் வரக்கூடாது. பொக்காரோவில் இருந்து இப்போது புகார் வந்து



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

கொண்டிருக்கிறது. இதைப் பற்றி ஆராய்வதற்காக ஸ்பெஷல் ஆபீசர் போட்டோம். ஜெர்மனிக்கு அனுப்பினேம். தஸ்தூர் கம்பெனியார் வந்து பார்த்தார்கள். ஜப்பானையும் கேட்டோம். இதை எவ்வளவு தூரம் செய்வது, எப்படிச் செய்வது என்பது தொடர்ந்து கவனத்தில் இருக்கிறதே தவிர, தவக்கம் ஒன்றும் இல்லை. ஆனல் போட்டாப் போட்டி இருக்கிறது. தூத்துக்குடி யிலும் ஸ்டீல் பிளாண்ட் வைக்க இடம் இருந்தால், அவர்கள் சேலத்தில் எதற்கு, எங்கள் ஜில்லாவில் ஆரம்பிக்க வேண்டுமென்று எவ்வாறு சொல்வார்களோ அதே போன்று வைசாக்கிலே இதை வைக்கவேண்டுமென்று கேட்கிருர்கள். நம்மைப் பொருத்தவரை யாருக்குக் கொடுத்தாலும் எங்களுக்கும் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேம். நமக்கு யாரிடமும் போட்டி இல்லை. அவர்கள் கேட்பதைக் கொடுங்கள், எங்களுக்கும் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேம். இதைப் பற்றி நான் மத்திய அரசாங்கத்திடம் சொன்னேன். பிரதம மந்திரி அவர்களிடமும் சொன்னேன். இதைப் பொருத்து இப்போது புதிய கட்டம் பிறந்திருக் கிறது. பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். இதைப் பற்றிப் பார்லிமெண்டில் கேள்வி கேட்டபோது 'நாங்கள் சிபாரிசு செய்து விட்டோம் பிளானிங் கமிஷனுக்கு' என்று கூறியிருக்கிருர்கள். அது ஒரு கட்டம். பிளானிங் கமிஷன் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இன்னும் விரிவான முடிவு ஒன்றும் எடுக்க வில்லை. டாக்டர் நடராஜன் அவர்கள் பேசினர்கள். எவ்வளவு பணம் இருக்கிறது, "அடிஷனல் ரிசோர்சஸ்" தேவையா, சிறிய பிளானு, பெரிய பிளானு என்பதெல்லாம் இன்னும் முடிவு செய்யப் படாமலே இருக்கின்றன. இது அரித்மெடிக்தான். நான்கும் மூன்றும் ஏழாகுமே தவிர எட்டாகாது. சேலம் ஸ்டீல் பிளாண்ட் நிச்சயமாக வரும் என்றே சொல்கிறேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இன்னொரு குற்றச்சாட்டு மொழியைப் பற்றியது. இந்தி மொழி பற்றிச் சட்டம் வரலாம் என்பது ஒன்று. அஃபிஷியல் லாங்வேஜ் சட்டப்படி சரியானபடி நிறைவேற்றப்படவில்லை என்பது மற்றொன்று. அஃபிஷியல் லாங்வேஜைப் பொருத்தவரை முன்பே சட்டம் செய்திருக்கிறேம். சட்டப்படி வேகமாக நிறை வேற்றி வருகிறேம். பிரத்தியேகமாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சரிய முறையில், தவறுதலுக்கு இடம் கொடுக்காத முறையில் வேகமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறேம்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வைப் பொருத்தவரை முன்பே சொன்னேன். நம்முடைய மெட்ராஸ் சர்விஸ் கமிஷன் தேர்வைப் பொருத்தவரை இப்போதே தமிழில் பேப்பர் இருக் கிறது. தமிழோடு கூட ஆங்கிலத்திலும் ஒரு பேப்பர் இருக்கும்— கம்பல்சரி பேப்பர். யு.பி.எஸ்.சி. தேர்வுகளைப் பொருத்தவரை நம்முடைய மாணவர்கள் தமிழில் படிக்கும்போது அங்கே ஆங்கிலத்தில் எழுத வேண்டுமென்றல் சிரமமாக இருக்கும் என்ற காரணத்தால், இடைஞ்சல் எற்படும் என்ற காரணத்தால், 14 மொழிகளிலும் தேர்வு நடக்க வேண்டுமென்று முதன் முதலாகக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள்தான் காரியக் கமிட்டி கூட்டத்தில் 'லீட்' கொடுத்தார்கள். அதைக் காரியக்

கமிட்டி ஏற்றுக் கொண்டது. அப்போது பிரதமராக இருந்தவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இப்போது இருக்கும் பிரதம மந்திரியவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அகில இந்திய சர்விசுகளுக்குப் போகக் கூடிய ஐ.ஏ.எஸ். போன்ற பரிட்சைகளை எழுத வேண்டுமானால் இந்தியும் தெரிந்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் மெட்ராசிலேயே இருக்கலாம் என்றால் தமிழும் ஆங்கிலமும் மட்டும் படித்தால் போதுமானது. மற்றப்படி யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுகளுக்கும் தமிழில் எழுத வழி செய்யப்பட்டிருக்கிறது. அதோடு அதிலே ஆங்கிலமும் இருக்கும். அதிலே கம்பல்சரியாக ஒரு பேப்பர். கம்பல்ஷன் என்று சொன்னால் இதுதான் கம்பல்ஷன். யூனியன் சர்விஸ் வேண்டாமென்று சொன்னால் கம்பல்ஷன் எதுவும் இல்லை. நமது காங்கிரஸ் தலைவர் சொன்னதைக் காரியக் கமிட்டி ஏற்றுக் கொண்டது. அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது. இதுதான் நிலைமை.

இப்போது சட்டம் செய்வதைப் பற்றிச் சொன்னார்கள். இதைப் பற்றி எவ்வளவோ முறை விளக்கியிருக்கிறேன். சட்டம் செய்வது என்பதுதான் பிரச்சினையா? இந்தியை அடியோடு புறக்கணிக்க முடியாது. நான் சொன்னதைப் பற்றித் திரு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்பே சொன்னேன். ஆங்கிலமும், இந்தியும் நிரந்தரமாக இருக்கலாம் என்று சொன்னேன். ஆனால் அதை மற்ற மாநிலங்கள் ஒப்புக் கொள்ளவேண்டாமா? எல்லோரும் சேர்ந்து கடைசியில் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் எவ்வளவு காலம் விரும்புகிறார்களோ—இப்போதுள்ள தீர்ப்புப்படி ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் விட்டோ இருக்கிறது—அதுவரையில் இந்தியோடு கூட ஆங்கிலமும் இருக்கும். அதுதான் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிற கொள்கை. அதற்குத்தான் சட்டம் செய்ய வேண்டும். சட்டத்தைச் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பார்லிமெண்டில் அதைச் செய்வதற்கு எப்போதும் வரலாம். ஏன் தாமதம், அச்சட்டத்தைக் கூடச் செய்யவில்லையே என்று கேட்டால், இப்போது அது அமலுக்கு வந்திருந்தால் எப்படி நடக்குமோ அது தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அதில் மாறுதல் இருந்தால் அதற்கு இந்த அரசாங்கம் இடம் கொடுக்காது; மத்திய சர்க்காரும் அவ்வாறு செய்யாது. அச்சட்டத்தை நிறைவேற்றிய பிறகு எவ்வாறு நடக்குமோ அதுதான் நடக்கிறது. அதை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில்தான் நடைபெறுகிறது. தேர்தல் பிரசாரத்திற்கென்றால் அது வேறு விஷயம். தமிழுக்கு ஆபத்து, இந்தி வந்து விட்டது, இந்தி திணிக்கப்படுகிறது என்று சொல்வது வேறு. மன்றத்தில் விவகாரம்தானே பேசுகிறோம். அந்தச் சட்டப்படிதான் நடக்கிறது. அச்சட்டத்தை நிறைவேற்றுவது அவர்கள் சௌகரியம். அதனால் நமக்குப் பாதகம் இல்லை. இதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. காங்கிரஸ் கட்சியின் கொள்கையும் இதுதான். இதைத்தான் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைத்தான் பார்லிமெண்ட் சட்டமாக்கும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டு மக்களின் நன்மையையொட்டி என்ன செய்யவேண்டுமோ அந்த வகையில்தான் இப்போது கவனம்





செலுத்தப்பட்டு வருகிறது. இதில் செய்யவேண்டியதை இந்த அரசாங்கம் செய்யத் தவறி விட்டது என்று சொல்வதற்கு கொஞ்சம் கூட இடமில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் பயிற்சி மொழியாவது பற்றிப் பலர் கருத்துக்கள் தெரிவித்தார்கள். இதற்கு முன்பெல்லாம் பட்டப்படிப்பிற்கு மட்டும் இருந்தது. முன்பு புகுமுக வகுப்பில் ஆங்கிலத்தில்தான் படிப்பு. அது இரண்டும் கெட்டான்தனமாக இருந்தது. அங்கு படித்துவிட்டு அதுவும் புரிவதில்லை, பி.ஏ.-யிலும் போய் கஷ்டப்பட வேண்டும். சீராக நடத்தவேண்டுமென்று இந்த ஆண்டு இரண்டு பல்கலைக் கழகங்களுக்கும் சொன்னேன். அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். சர்க்கார் கல்லூரிகளில் மட்டுமல்ல, மற்றக் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் "Humanities" ஒரு வகுப்பு குறைந்த பட்சம் 80, 90 பேர்கள் தமிழில் இருக்கவேண்டுமென்று போட்டோம். போட்டது மட்டுமல்ல. முன்பெல்லாம் 2,3, 10, 15 என்று கணக்கு கொடுப்பேன், கொடுத்திருக்கிறேன். இருக்கிற கணக்கைத் தான் கொடுக்கமுடியும். இப்போது 2,700 மாணவர்கள், 600 மாணவிகள் இன்று புகுமுக வகுப்பில் தமிழைப் பாடமொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் இந்த சர்க்கார் இதில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது, இதில் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யார் மறுக்கமுடியும்? எதிர்க்கட்சியினர் வேண்டுமானால் மறுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், மக்கள் இதை உணருவார்கள். தமிழில் ஆர்வம் உள்ளவர்கள் இதைப் புரிந்து கொள்வார்கள். இன்று உருப்படியான வகையில் இந்த அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுத்துக் கொண்டது. இதுவரையில் இல்லாத ஒரு நடவடிக்கை. அந்த நடவடிக்கையின் பயனாக ஒரு ருசி ஏற்பட்டிருக்கிறது. மருந்து கொடுப்பதற்குக் கூட கொஞ்சம் கொஞ்சமாகத் தேனோடு கொடுத்துத்தானே பழகவேண்டும். பிறகு தானாகவே சாப்பிடுவார்கள். இன்று 2,700 மாணவர்கள், 600 மாணவிகள் புகுமுக வகுப்பில் தமிழைப் பாடமொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

பின்னர், நான்காவது திட்டத்தில் இந்த அரசாங்கம் உரியதைப் பெறுவதற்குத் தவறி விட்டது என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். நான் புள்ளிவிவரங்கள் கொடுக்கமுடியும். அப்படிச் செய்தால் அது நமக்கே சங்கடத்தை விளைவிக்கும். இதை மற்ற மாநிலத்தவர் பார்த்தால், தமிழ் நாட்டுக்கு அதிகமாகக் கொடுத்து விட்டார்கள், எங்களுக்குக் கொடுக்கவில்லையே என்று சொல்வார்கள். யாராவது என்னிடம் வந்து கேட்டால் சொல்வதற்கு நான் தயாராயிருக்கிறேன். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, மொத்த வருமானத்தில் மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று பார்த்தால் நமக்கு குறை இல்லை. "டீவால்யுவேஷனினால்" ஏதாவது போய் விட்டதா என்றால் அப்படிப் போவதற்கு அவர்களே ஈடுசெய்து கொள்கிறார்கள். அதனால் விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்த டீவால்யுவேஷன் விஷயத்தில்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

எனக்கும் தொழில் அமைச்சர் அவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று. டிவால்யுவேஷனுக்கு அவசியமா இல்லையா அல்லது அப்படிச் செய்வதா இல்லையா என்றால், செய்ததற்குப் பிறகு செய்வதா இல்லையா என்று என்ன பேச்சு? காங்கிரஸ்காரர்களிடமும் மந்திரிசபையிலும் இதற்கு முன்பே பல அபிப்பிராயங்கள் உண்டு. அதுதான் ஜனநாயகம். டிவால்யுவேஷன் வந்த பிறகு எப்படி நிலைமையைச் சமாளிப்பது என்று பார்க்கவேண்டும். அதை எந்த நோக்கத்தோடு செய்தார்கள் என்பதை விளக்குவது அரசாங்கத்தை நடத்துகிறவர்களின் பொறுப்பு. எதிர்க்கட்சியினர் வேண்டுமானால் வேறுவிதத்தில் பேசலாம். இதனால் ஊர் கெட்டுவிட்டது என்று சொல்லலாம். அரசாங்கம் பல நிபுணர்களைக் கலந்துதான் டிவால்யுவேஷன் செய்தார்கள். அப்படிச் செய்திருக்கலாம், செய்யாமலிருக்கலாம். ஆனால் செய்ததற்குப் பிறகு எதிர்க்கட்சி எப்படி வேண்டுமானாலும் பேசலாமே தவிர, நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பதுதான் அரசாங்கத்தின் பிரச்னை.

திரு. மு. கருணாநிதி: தொழில் அமைச்சர் அவர்கள் நாணய மதிப்புக் குறைவு ஏற்பட்ட பிறகு அதுபற்றி பேசியிருக்கிறார்கள், இது புத்திசாலித்தனமாகாது என்று. அவர் எதிர்க்கட்சிக்காரரா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுதான் ஜனநாயகம் என்று சொன்னேன். அவர்களுக்குத் தெரிந்ததை அவர்கள் பேசலாம். அதை நான் குறை கூறவில்லை.

கனம் சுதந்திரா கட்சி உறுப்பினர் திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் ஆர்.டி.ஓ. மாற்றப்படாததைப் பற்றிச் சொன்னார்கள். அதிகாரிகளிடம் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ளக் கூடாது; அங்கத்தினர்கள் கூட எடுத்துக் கொள்ளக்கூடாது. குறிப்பாக ஏதாவது தவறு இருந்தால் அதைச் சொல்ல அவர்கள் கடமைப்பட்டவர்கள்; நானும் அதைக் கேட்டு யாராகயிருந்தாலும் சரி, நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். குறிப்பாக ஒரு குறிப்பிட்ட அதிகாரி மீது குறிப்பாக தவறு இருந்து சொன்னால் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். நான் சொன்னதைச் செய்யவில்லை, ஆகவே, மாற்று என்றால், ஏன் மாற்றவில்லை என்று கேட்கும்போது சந்தேகம் வருகிறது. குறிப்பாக ஏதாவது தவறு இருந்தால் சரி; நான் எதையும் யார் சொன்னாலும் விசாரிக்கிறேன், விசாரித்து மாற்றுவதற்கு வேண்டிய இடத்தில் மாற்றுகிறோம். இல்லாத இடத்தில் நிறுத்தி வைக்கிறோம். அது அவர்கள் சொன்னார்கள், இவர்கள் சொன்னார்கள் என்றில்லை; யார் சொன்னாலும் யார் சொல்லவில்லை என்றாலும் சரி. ஆனால், அங்கத்தினர் குறிப்பிட்ட அதிகாரி மீது அதிகமான அக்கறை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நகரமன்றங்கள். வழக்கு கோர்ட்டில் இருக்கிறது. வழக்கு கோர்ட்டில் இருக்கிறது என்று சொன்ன பிறகும் பேசினார்கள். ஆனால் நான் அப்படிப் பேசமுடியாது. ஒன்றே



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒன்று சொல்ல விரும்புகிறேன். அந்த முனிசிபாலிட்டி என்னவாயிற்று, இந்த முனிசிபாலிட்டி என்னவாயிற்று என்றால் எந்த முனிசிபாலிட்டியாக இருந்தாலும் பரவாயில்லை. ஒரு முனிசிபாலிட்டியில் தவறு நடந்தால் அதன்பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றால் அதற்கு யார் தலைவர், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் அதற்குத் தலைவர், என்று பார்ப்பதில்லை. ஆனால் தி.மு.க. வாக இருந்தால் ஒன்றுமே செய்யக்கூடாது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. திருமதி அனந்தநாயகி அவர்கள் கூட என் மீது குற்றஞ்சாட்டினார்கள். எதிர்கட்சியினர் குற்றம்சாட்டுவது போதாது என்று அவரும் குற்றஞ்சாட்டுகிறார்கள். முதலிலே சென்னை மாநகராட்சி மன்றத்தைத்தான் எடுத்துக் கொண்டிருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அது அவர்கள் குற்றச்சாட்டு. அதுதான் எங்கள் ஜனநாயகம். அதற்கும் சமாதானம் சொல்கிறேன். அந்தக் குற்றத்தையும் என் பேரில் சாட்ட முடியாது. நாம் எந்த நகரமன்றங்களின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதானாலும், அதற்குரிய நிலை ஏற்பட்டிருந்தால் எடுக்கிறோம். அதற்காக நாம் சட்டம் செய்திருக்கிறோம். இந்த மன்றமே அதற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. கட்சி ரீதியில் போவது என்றால் அவர்கள் சொன்னது சரியாக இருக்கலாம். ஆனால் நான் கட்சி ரீதியில் போகவில்லை. அப்படிப் போயிருந்தால் அம்மையாரின் நிலையை ஒத்துக்கொண்டிருப்பேன். கட்சி ரீதியாகப் போயிருந்தால் முதலில் கார்ப்பரேஷனை எடுத்திருப்போம். ஆனால், கட்சி ரீதியாகப் போவது கிடையாது. என் கருத்தை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நன்கு உணரக்கூடும்.

பஞ்சாயத்து யூனியன்களைப் பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ்காரர் தலைவர்களாக இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்களான எருமைப்பட்டி, சேடப்பட்டி கலைக்கப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியினர் செய்தால் பாதுகாப்பு கூடாது, எதிர்கட்சி செய்தால் பாதுகாப்பு வேண்டும் என்றால், நாங்கள் என்ன செய்தாலும் அதை நீங்கள் பார்க்கக்கூடாது, இல்லாவிடில் கோர்ட்டுக்குப் போய்விடுகிறோம் என்றால் அது நியாயமில்லை. இன்று இத்தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்றால் மக்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் மக்கள்தான் தீர்ப்பு கொடுக்கப் போகிறார்கள் பெப்ரவரியில். மக்கள் தீர்ப்பு எப்படியும் இருக்கிறது. அந்தத் தீர்ப்பில் எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. நீங்கள் என்ன சொன்னாலும், பத்திரிகைகளில் என்னதான் வந்தாலும் மக்கள் நிலைமையை நன்கு உணர்ந்து கொள்வார்கள். யாரிடம் நம்பிக்கை இருக்கிறது, எத்தகைய அரசாங்கம் வேண்டும், எந்தக் கட்சி வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் சொன்னக் கருத்துக்கள் பிற்போக்கான அபிப்பிராயமாக இருக்கிறது. 'ஏன் ரயில்வேக்கு எலக்ட்ரிசிட்டியை கொடுக்கிறீர்கள்?' என்றால் இது என்ன முற்போக்கு கருத்தைக் காட்டுகிறது என்று தெரியவில்லை. மின்சாரம் வழங்குவதைப் பொறுத்தவரை, இவ்வளவு தட்டுவந்தும், "ஸ்டாகர்"

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1966

1-30 p.m தான் பண்ணினோமே தவிர யாருக்கும் மின்சாரத்தை குறைக்கவில்லை. மின்சாரத் தட்டு இருந்த எட்டு மாத காலத்திலும் யாருக்கும் குறைவில்லாமல் தான் பார்த்துக் கொண்டோம். ரயில்வேயைப் பொறுத்தவரையில் இன்னும் நாம் மின்சாரம் கொடுக்கவேண்டும். 'நிலவரி' வைத்து ஓட்டுவது தானே?' என்று கேட்டார்கள். 'கோல்-க்கு எங்கே போவது? முக்கியமாக 'கோல்'-ஐ நாம் மிச்சப்படுத்தவேண்டும். இங்கே 'கோல்' கிடையாது. மேலும், மேலும், மின்சார ரயிலைக் காண்டு வர வேண்டும் என்று நாம் பாடு பட்டுக்கொண்டிருக்கிறோம். எனக்கு இருக்கின்ற அச்சம் என்னவென்றால், அங்கே இருக்கின்றவர்கள், "என்ன, உங்கள் சட்டசபையில் எலக்ட்ரிக் ரயில் வேண்டாம் என்று சொல்லுகிறார்களே" என்று—எலக்ட்ரிபேகஷேன் ஆஃப் தி ரயில்வேஸ் அதிகமாக வேண்டும் என்று கேட்கும்போது இதை ஒரு சாக்கா எடுத்துக் கொள்ளப் போகிறார்களோ என்று தான் எனக்குப் பயம்.

மற்றபடி ஏதோ கொலை பாதகம் என்று சொல்லப்பட்டது. வாயளவில் எதையாவது சொல்லிவிடுவது. அதற்காக நான் வருத்தப்படவில்லை. (குறுக்கீடு) ஆம், கொலைகார சர்க்கார் என்றும் சொல்லப்பட்டது, எனக்கு தைரியம் இல்லை என்றும் சொன்னார்கள். எனக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு தைரியம் இருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சி எதிர்பார்க்கின்ற தைரியம் என்னிடத்தில் இல்லை. எனக்கு இருக்கின்ற தைரியத்தை வைத்துக்கொண்டு தான் காரியங்களை நடத்திக்கொண்டு வருகிறேன். இன்று, நேற்று ஏற்பட்டதல்ல, பல ஆண்டு காலமாக அடிமைப்பட்டிருந்த நம் நாட்டு மக்கள் விடுதலை பெறவேண்டும், விடுதலை பெற்று வறுமை நீங்கி, இன்புற்று வாழவேண்டும் என்று நாம் பாடுபட்டு வந்தோம், இப்போது பாடுபட்டு வருகிறோம். ஆகவே, இதில் அச்சப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தாட்சண்யப்படுவதற்கும் ஒன்றும் இல்லை. ஆனால், எதிர்க்கட்சி எதிர்பார்க்கின்ற தைரியம் இல்லை என்று எதிர்க்கட்சிகள் சொல்வார்கள் என்றால் இதை நான் பாராட்டுதல் என்றே எடுத்துக்கொள்கிறேன்.

மற்றபடி, "டீவால்யுவேஷன்" வந்ததின் காரணமாக விலைகள் எல்லாம் ஏறி விட்டன என்று சொன்னார்கள். முக்கியமாக இறக்குமதியை நாம் குறைக்கவேண்டும். ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். முக்கியமான பொருட்களுக்கு, அத்தியாவசியமான பொருட்களுக்கு விலை ஏறுமானால் அதற்கு மத்திய சர்க்கார் "ஸப்ஸிடி" கொடுத்து உதவி செய்யலாம் என்று சொல்லியிருக்கிறது. முக்கியமாகச் சில இயந்திரங்களை நாம் இறக்குமதி செய்தாக வேண்டியிருக்கிறது. இறக்குமதியை நாம் அறவே நிறுத்திவிடவும் முடியாது. முக்கியமாக நாம் எக்ஸ்போர்ட்டை அதிகப்படுத்தவேண்டும். கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், அமெரிக்க டாலர்களைப் பெருக்கிக் கொள்கிறோம், அதைக் குறைக்கவேண்டும், என்று சொன்னார்கள். அது வேறு விஷயம். அதையும் நாம் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறோம். முக்கியமாக நாம் அதிகமாக ஏற்றுமதி செய்கிறோம் என்றால், அதற்கு டீவால்யுவேஷன் சாதகமே தவிர பாதகம் அல்ல. ஒரு நாட்டில் முக்கியமாக கையாளப்படக்கூடியது இறக்குமதியைக் குறைப்பது



5th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ஏற்றுமதியை அதிகப்படுத்துவது என்பது தான். ஸ்விடன் நாட்டில் எக்ஸ்போட்டை அதிகப்படுத்துவதற்கென்று, அரசாங்க ஸ்தானம் 'Sweden Manufacturers' Organization' என்ற ஒரு பெரிய ஸ்தாபனமே இருக்கிறது. அரசாங்கத்தின் ஒரு அங்கமாகவே அது விளங்குகிறது. ஆகவே ஏற்றுமதியை அதிகப் படுத்துவதற்கு தூண்டுகோலாக இருக்கின்ற வகையில் தான் டீவால்யுவேஷன் அமைந்திருக்கிறது. ஆனாலும் இந்த நிலைமையை ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும் என்பதை மத்திய அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது. இந்த அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது. எந்த அளவுக்கு சிக்கனத்தை கையாள்வது, இருந்தாலும் எப்படி மக்களுடைய அத்தியாவசியமான தேவைகளை கொடுக்கச் செய்வது என்பதில் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். அந்த வகையில் டீவால்யுவேஷன் ஏற்பட்டதின் காரணமாக இந்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முடியுமோ அந்தந்த நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறது, நிலைமைகளையும் கவனித்துக்கொண்டு வருகிறது என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த அரசாங்கம் உத்யோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில் தங்கள் ஆட்களையே நியமிக்கின்றார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. இவை ஒவ்வொன்றுக்கும் என்னால் பதில் சொல்ல முடியும். ஆனால் ஒன்று, ஆட்சியும் கட்சியும் ஒன்றாகத் தான் இருக்கிறது என்பது தான் பொதுவான குற்றச்சாட்டு. கட்சிதான் அரசாங்கத்தை நடத்துகிறது. நல்ல காரியத்தை ஆட்சி செய்யும்போது, அந்தப் பெயர் கட்சிக்குத்தான் வருகிறது. எவ்வளவு தான் கட்சிச் சார்பற்ற முறையில் செய்தாலும் அந்தப் பெயர் கட்சிக்குத்தான் வருகிறது. அந்த முறையில் ஆட்சி பல செயல்களை நடத்திக் கொண்டு தான் வருகிறது. அதன் காரணமாக இன்றைக்கு மக்களுடைய வாழ்க்கைத்தரம் ஓரளவுக்கு உயர்ந்திருக்கிறது. மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்று யாராலும் கூற முடியாது. ஆனால், இன்னும் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. இல்லையென்று யாரும் சொல்லவில்லை. நமக்கு மட்டும் அல்ல அந்த நிலைமை. உலக ஜனத்தொகையில் பாதிப் பேர்களுக்குமேல் உணவு இல்லாமல் தான் இருக்கிறார்கள். ஆனால் இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமை என்ன? மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்னால் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்ன என்று ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாட்டில் எவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் உணராமல் இருக்க முடியாது. ஆகவே, அவ்வாறு வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்றால், இவையெல்லாம் நடைபெறுவது காங்கிரஸ் ஆட்சியில் என்பது உணரப் படுகிறது. ஆட்சியைப் பொறுத்தவரையில் கட்சி சார்பற்ற வகையில் தான் நடக்கிறது. இருந்தாலும் இந்தப் பெருமை ஆளுகின்ற கட்சிக்குத்தான் போய்ச் சேரும். அது ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாதது. அதற்கு வருத்தப்பட்டும் பயன் இல்லை. நான் இன்னும் அதிக நேரம் பேச விரும்பவில்லை. நேரம் ஒன்றரை மணிக்கு மேல் ஆகிறது.

"கவர்ன்மென்ட் பிரஸை"-ப்பற்றி சொன்னார்கள். இது பெரிய காரியம் என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. சிறிய காரியம்தான். இதில் விருத்தாச்சலத்தில் வைத்துக் கொள்வதில் என்ன தப்பு? சர்க்கார் வேலைகள் பரவலாக இருக்கவேண்டும் என்ற முறையில் தான் அங்கங்கே கவர்ன்மென்ட் பிரஸ்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த முறையில் அங்கும் அச்சு ஆபீசை வைத்திருக்கிறோம். இதைக் கடலூரில் வைத்தால் என்ன என்று கேட்டார்கள். கடலூரில் வைத்தால் என் இன்னொரு இடத்தில் வைக்கவில்லை என்று கேட்பார்கள். விருத்தாசலம் திரு. பூவராகன் அவர்களுடைய இடமாக இருக்கிறது என்பதற்காக என் விருந்தாசலத்தை நாண்டிக்கவேண்டும் என்று தெரியவில்லை . . .

திரு. மு. கருணாநிதி : விருத்தாசலத்தில் இந்த அச்சகம் வைக்கப்பட்டுள்ள இடம் காமாட்சி அம்மன் பஸ் சர்வீஸ் நடத்துகின்றவருடைய இடம். அவர் ஒரு காங்கிரஸ்காரர், அவருடைய இந்த இடத்திற்கு 600 ரூபாய் வாடகை இருந்ததை 1,000 1,500 என்ற அளவுக்கு அதிகப்படுத்தி வாடகைக்கு எடுத்து, அந்த இடத்தில் இந்த அச்சகத்தை ஏற்படுத்துவானேன் என்று தான் கேட்டேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யாரோ ஒருவருடைய இடம் என்பதற்காக அதை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதல்ல. அதற்காக அதிகப்படியான வாடகை கொடுக்கவேண்டியிருந்தால் கொடுக்கக்கூடாது என்பதல்ல. ஆனால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு இதைச் சொல்வதற்கு உரிமையிருக்கிறது. இப்படிப்பட்ட காரணங்களுக்காக அச்சாபீஸ் வைப்பது தப்பு என்று சொல்வது சரியல்ல என்று தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

மேலும், ஏதோ அமெரிக்க உதவியை நாம் எதிர்பார்க்கின்றோம், வேறு நாடுகளையும் கேட்டுப் பெறவேண்டும் என்று சொல்லப்பட்டது. சமீபத்தில் ரஷ்யப் பிரதமர் மிஸ்டர் கோஸிஜன் புதிதாக தேர்ந்தெடுக்கப்படுவாரோ என்று சந்தேகம் கூட இருந்தது. பின்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் முதன்முதலில் இந்தியாவைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறார். எதற்கும் நம்முடைய சுயமரியாதையை விட்டுக் கொடுத்துவிட்டு இன்னொரு நாட்டினுடைய உதவியை நாம் பெற முன்வரமாட்டோம். அந்த அடிப்படையில் தான் நம்முடைய ஒப்பற்ற தலைவர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் 'நான்-அலைன்மென்ட் பாலிஸி'—'கூட்டுச் சேராக் கொள்கை'யை ஏற்படுத்தினர். யாராக இருந்தாலும், நாம் சுயமரியாதையோடு நடந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் 'கூட்டுச் சேராக் கொள்கையை' கடைப்பிடித்து வைத்திருக்கிறோம். ஆகவே, சுயமரியாதையை விட்டுக்கொடுக்காமல் கூட்டுச் சேருவதை யாரும் தவறாக நினைத்துக்கொள்ள முடியாது. எங்களுக்கு இருக்கின்ற கூட்டு. இங்கே ஏற்பட்டிருக்கின்ற கூட்டு போன்றதல்ல. இந்த அரசாங்கம் பிறநாடுகளிலிருந்து உதவியை





நாடுகிறது என்றால், அதை உடனே தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்றைக்கு உலகத்தில் இருக்கின்ற நாடுகள் பலவும் ஒன்றுக்கொன்று உதவியை நாடிக் கொண்டு தான் இருக்கின்றன. ரஷ்யாவை எடுத்துக்கொண்டாலும் இன்றைக்கும் கனடாவிலிருந்து கோதுமை வாங்குகிறது. அதை நாம் குறைவாக எடுத்துக்கொள்ள முடியுமா? ஆகவே, அமெரிக்காவிலிருந்து வாங்கக்கூடாது. ரஷ்யாவிலிருந்து தான் வாங்கவேண்டும் என்பதல்ல நமது கொள்கை. ரஷ்யாவை எடுத்துக் கொண்டால், ரஷ்யாவுக்கும் இந்த நாட்டுக்கும் நீண்டகால நல்லுறவு இருக்கிறது. அதே போன்று தான் அமெரிக்காவுடனும் நல்லுறவு இருக்கிறது. இன்றைக்கு அமெரிக்காவையும் ரஷ்யாவையும் எடுத்துக்கொண்டாலும் கூட, நல்ல 'அலையன்ஸ்' இருக்கிறது. இருக்கின்ற நிலையை அனுபவபூர்வமாக உணர்ந்து நாம் நடந்து கொள்கின்றோம். நம் நாட்டிலுள்ள மக்களின் திறமை, நம் நாட்டிலுள்ள மக்களின் போக்கு, நம் நாட்டின் கொள்கைகள் இவற்றையெல்லாம் அவர்களும் பாராட்டுகின்றார்கள். அந்த முறையில் இன்றைக்கு காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களை வெளி நாட்டிலுள்ளவர்கள் அழைத்திருக்கிறார்கள். ரஷ்யாவுக்கு அழைத்தார்கள். செக்கோஸ்லேவேக்கியாவுக்கு அழைத்தார்கள். கிழக்கு ஜெர்மனிக்கு அழைத்தார்கள். அமெரிக்காவும் வருந்தி வருந்தி அழைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். இதற்காக மற்றவர்கள் வருத்தப்பட்டு பிரயோசனம் இல்லை. இந்த உயர்ந்த நிலைக்கு பங்கம் இல்லாமல் மக்களுடைய குறைகளை நீக்கி, மக்கள் இன்புற்று வாழும் நிலையை ஏற்படுத்துவதற்குப் பாடுபடுவதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். தேர்தல் வருகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தேர்தலையொட்டிக் கொண்டு வந்தார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பயன்படும். எங்கள் கட்சிக்கும் பயன்படும். இப்போது நடைபெற்ற விவாதம் எங்கள் கட்சிக்கும் பயன்படும். இன்னும் காங்கிரஸ் கட்சிக்குப் பொறுப்பு இருக்கிறது. இப்போது இருக்கும் நிலையில் காங்கிரஸ் கட்சிதான் பொறுப்பேற்று நடத்த வேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அந்த நிலையில் தான் பணியாற்றுகிறோம். மக்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சியினர் எவ்வளவு தான் குற்றச்சாட்டுகளைச் சாட்டினாலும், வெளியிலும் எவ்வளவு தான் குற்றச்சாட்டுகளைச் சாட்டினாலும், மக்கள் காங்கிரஸ் கட்சியைத் தொடர்ந்து ஆதரிப்பார்கள்; இங்கே இருக்கிற எதிர்க் கட்சிக்கு நம்பிக்கை இல்லை என்றாலும், நாட்டிலே உள்ள மக்களுக்கு பரிபூர்ண நம்பிக்கை உண்டு என்று இன்றைக்கு நான் நிச்சயமாக உணர்கிறேன்; இதை நாட்டு மக்கள் அடுத்த பொதுத் தேர்தலிலே நிரூபிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதியின்பேரில் ஒரு சிறு விளக்கம் சொல்லிவிட்டு முடிக்கலாம் என்று நினைக்கிறேன். நான் பேசிய பேச்சில் பூதமங்கலம் ஹரிஜனக்

காலனி பற்றிக் கூறினேன். அதைப் பற்றி விளக்கமாகச் சொல்லு வதற்கு இருந்தேன். நேரம் இல்லாத காரணத்தினால் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை . . .

**கனம் சபாநாயகர் :** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ப. உ. சண்முகம் :** 1964-ம் ஆண்டே கட்டி முடிக்கப்பட்ட தாக ரெக்கார்டு இருக்கிறது. அழைப்பிதழ்கள் கூட இருக்கின்றன. 1965-ம் ஆண்டு டி.டி.வி. மீட்டிங்கில் சட்ட மன்ற உறுப்பினர் முருகையன் அவர்கள் கேட்டார். அப்போதும் கட்டி முடிக்க வில்லை. 1966-ம் ஆண்டு இப்போதும் பாதியில் இருக்கிறது. யாரும் குடி போகவில்லை. ஆதாரபூர்வமாக இருக்கிறது. நாளை மறுநாள், ஞாயிற்றுக்கிழமை, சட்டமன்றத்திலிருந்து ஒரு குழுவை அனுப்பினால் நானே காட்டுகிறேன். அதற்குப் பிறகு அவர்கள் சொல்லும் எந்த முடிவுக்கும் நான் தயாராக இருக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதையும் நான் கவனிக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்ஸனல் க்ளாரிஃபிகேஷன், ஸார் . . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அதை அப்புறம் கேட்க லாமே? ஒருவர் ஒருவராகக் கேட்டுக்கொண்டிருந்தால் நேரம் ஆகி விடும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்கள் ஈவினிங் காலேஜ் சம்பந்தமாக ஜீ.ஓ. அனுசரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஹரிஜனங்களுக்கு 16 சதவிகிதம் பாக்வேர்ட் க்ளாஸ் 25 சதவிகிதம் என்று போட் டிருக்கிறோம். சட்டக் கல்லூரி ஆரம்பித்திருக்கிற நேரத்தில் இந்த உத்தரவுகளை மீறி நான்கு ஹரிஜனங்கள் தான் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள். மொத்தத்தில் 32 பேர்கள் வரவேண்டும். அப்படி சட்ட விரோதமான காரியம் சட்டக் கல்லூரியில் வரக் கூடாது. 800 பேர் களில் பிற்பட்ட மக்களும், ஹரிஜனங்களும் 4–5 பேர்கள் தான் இருப்பார்கள். அவர்களையும் சேர்த்துக்கொள்ளும் முறையில் லிஸ்டை மீண்டும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கேள்வி நேரத்தில் கேள்வி கேட்டால் சொல்லலாம். விதி ஒன்றும் இல்லை, இப்போதே ஐந்து பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் முன்பே சொன்னேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்பிளனேஷன், ஸார். . .

MR. SPEAKER : No point of explanation.

SRI V. KRISHNAMOORTHY : I may be allowed to make my personal explanation.

MR. SPEAKER : No explanation whatsoever.





SRI V. KRISHNAMOORTHY : Sir, I have been promised by Mr. Deputy Speaker to be allowed to make my personal explanation after the reply of the Hon. the Chief Minister.

SRI K. A. MATHIALAGAN : Yes, Sir.

MR. SPEAKER : Yes.

SRI R. V. SWAMINATHAN : Sir, on a point of order. Is this a Budget debate or No-confidence Motion ? நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால் அவர்கள் பேசுவார்கள், பதில் சொல்லுவார்கள். அதை விட்டு பட்ஜெட் டிபேட்டில் கேட்கிற மாதிரி பர்ஸனல் எக்ஸ்பளனேஷன் எல்லாம் இப்போது தான் முதல் தடவையாகப் பார்க்கிறேன். ரைட் ஆஃப் ரிப்ளை இருக்கக் கூடியவர்களிடம் சொல்லவேண்டுமே தவிர ஒவ்வொரு வரும் எழுந்து கேட்பதற்கு இது பட்ஜெட் டிபேட் அல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

SRI V. KRISHNAMOORTHY : Sir, I have been promised by Mr. Deputy Speaker to be allowed to make my personal explanation as soon as to the Hon. Chief Minister finished his speech.

MR. SPEAKER : There is no second round debate. If an hon. Member raises a new point by making an insinuation, the Hon. Chief Minister has to give his reply to it.

SRI V. KRISHNAMOORTHY : I will not refer to any new point.

MR. SPEAKER : Yes, the hon. Member can make his personal explanation in such a way as not to refer to any new point.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், பேசுகிற சமயத்தில் நேற் றைய தினம் நான் கூறிய ஒரு பெரிய குற்றச்சாட்டுக்கு ஆதார பூர்வமாக விசாரணை நடத்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். அதற்கு மாறாக ஏதோ நம்முடைய அமைச்சர் திரு. கக்கன் அவர் களுடைய உறவினர் திரு. சுப்பையா அவர்கள் பேரில் வேண்டு மென்றே வீணாகப் புகார் கிளப்பியதாகவும், ஆதாரம் இல்லை என்றும் சொன்னார்கள். நேற்றைய தினம் கூறியது முக்கியமான குற்றச்சாட்டு கமிட்டியிலே இருக்கிறவர்களுக்குச் சொல்லு வதற்காக மத்தியில் இருக்கிறவர்கள் ரூபாய் கேட்டார்கள், வாங்கிக் கொடுப்பதற்கு திரு. சுப்பையா காரண்டி செய்தார்கள். என்னுடைய குற்றச்சாட்டுக்கு சாட்சியமாக, விட்னெஸாக திரு. சுப்பையா அவர்களைச் சொன்னேனே தவிர வேறு இல்லை. இப்போதே சொல்லுகிறேன், முதல் அமைச்சர் அவர்கள் நீதிபதி விசாரணை வைக்கவேண்டும். அதிலே நான் நிரூபிக்கவில்லை என்றால் என்னுடைய சட்ட மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன். நிரூபித்து விட்டால் முதல் அமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டாம். ஏனென்றால் அது போனால் திரும்பி வராது. மீதியுள்ள மந்திரி களில் யாராவது ராஜினாமா செய்வார்களா?

[5th August 1966

**கனம் சபாநாயகர்:** போதும், உங்கள் எக்ஸ்ப்ளனேஷன் முடிந்து விட்டது. இப்பேது' ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லையே. ராஜினாமா ஒன்றுதான் புதிது. இப்போது கனம் எதிர்க்கட்சித் தலைவர் பதிலளிக்கலாம்.

SRI K. R. SAMBANDAM rose.

MR. SPEAKER : No. I am not going to allow any more hon. Member to make personal explanation.

SRI T. L. SASIVARNA THEVAR rose.

MR. SPEAKER : I am not going to allow it.

(SRI T. L. SASIVARNA THEVAR was still standing.)

MR. SPEAKER : The hon. the Leader of the Opposition will now speak. I have no time to allow other hon. Members to speak.

(SRI T. L. SASIVARNA THEVAR was still standing.)

MR. SPEAKER : The hon. Member cannot compel me to act according to his wishes. I have already called the hon. Leader of the Opposition to speak. Let the hon. Member resume his seat.

(திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும் திரு. டி. எல். சசிவர்ண தேவர் அவர்களும் நின்றுகொண்டிருந்தனர்.)

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இரண்டு பேரும் நின்றுகொண்டிருந்தால் என்ன செய்வது?

**திரு. மு. கருணாநிதி:** கனம் அங்கத்தினர் உட்கார மாட்டேன் என்கிறாரே.

**கனம் சபாநாயகர்:** இப்போது கனம அங்கத்தினர் எதும் கேட்க முடியாது. ரூல்படி தான் நடக்க வேண்டும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் நின்ற போது அலவ் செய்தீர்களே.

**கனம் சபாநாயகர்:** இப்போது கனம் அங்கத்தினர் எப்படிப் பேசினாரோ அப்படித் தான் அவரும் பேசினார்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே இந்த மன்றம் சுமுகமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. கனம் உறுப்பினருக்கு விவாதத்தின் போது பேச வாய்ப்பில்லை. அவர்கள் விளக்கம் மட்டும் கேட்பதற்கு அனுமதி அளிக்கலாம்.

MR. SPEAKER : I am not going to allow it. Nobody can compel me like that. If the Speaker bows down, there is no Speaker at all.

SRI T. L. SASIVARNA THEVAR : I will sit down but must be allowed to speak.

(திரு. டி. எல். சசிவர்ண தேவர் நின்று கொண்டே இருந்தார்)



5th August 1966]

MR. SPEAKER : That is not the point. The hon. Member is defying the order of the Speaker.

(Then the hon Member, Sri Sasivarna Thevar resumed his seat.)

MR. SPEAKER : I will also sit down.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நன்றாக இருக்காது.

**கனம் சபாநாயகர்:** விவாதம் முடிந்து பதில் அளித்த பிறகு ஒவ்வொருவராகப் பேசி அதற்கு பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

Personal explanation can be made only with regard to the points raised in the reply of the Hon. Chief Minister and it is not as if any explanation can be made.

**திரு. முனு. ஆதி:** கனம் உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் பர்மிஷன் இல்லாமல் பேசினார்களே எப்படி அலவ் செய்தீர்கள்? எங்களை மட்டும் உட்காரச் சொல்லுகிறீர்களே?

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் உறுப்பினர் அவர்கள் விளக்கம் மட்டும் கூற விரும்புவதால் . . . .

MR. SPEAKER : I have got the greatest respect for all the Leaders of Parties including the hon. the Leader of the Opposition but nobody can compel me.

**திரு. டி. எல். சசிவர்ணத்தேவர்:** தயவு செய்து நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேளுங்கள்.

Let the Hon. Speaker please hear me.

MR. SPEAKER : I am not going to hear the hon. Member. கனம் அங்கத்தினர் கட்டாயப்படுத்திக் கேட்கக்கூடாது. தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. டி. எல். சசிவர்ணத்தேவர்:** நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள்.

MR. SPEAKER : Has the hon. the Leader of the Opposition got anything to say by way of reply ?

SRI V. R. NEDUNCHEZHIYAN rose.

SRI T. L. SASIVARNA THEVAR also rose.

MR. SPEAKER: Suppose the Speaker's ruling is wrong. The hon. Member can bring a No-Confidence Motion against the Speaker or take any action according to the rules. Now, the Speaker's ruling should be obeyed, and the hon. Member should not create trouble.

SRI T. L. SASIVARNA THEVAR : Sir, I am not creating trouble. I want to say something to the Hon. Speaker. நான் உட்கார்ந்தால் பேச அனுமதிக்கிறீர்களா?

MR. SPEAKER : No, what is the meaning in the hon. Member saying so ?

*திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :* நான் சொல்வதைக் கேட்காத வரைக்கும் உட்கார மாட்டேன். சபையில் யாரும் பேசக்கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு அதிகாரம் கிடையாது.

*கனம் சபாநாயகர் :* கனம் அங்கத்தினர் அவர்களுக்கு சான்ஸ் வரும்பொழுது பேசலாம்.

*திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :* நான் சொல்லவேண்டியதைக் கூடச் சொல்ல அனுமதிக்க மாட்டீர்களா ?

MR. SPEAKER : I am not permitting the hon. Member to speak. Let him please resume his seat.

SRI T. L. SASIVARNA THEVAR : Afterwards you please permit me to speak.

MR. SPEAKER : I cannot promise. I am not allowing him to speak now. Let the hon Member please take his seat. After the hon. Leader of the Opposition finishes his speech, if the hon. Member has got anything to say, I will consider his request, then.

*திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :* நான் பேசுவதை அனுமதிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

*கனம் சபாநாயகர் :* காரணம் என்னவென்று இப்பொழுது கேட்கக் கூடாது. சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து, அப்புறம் பேசும்பொழுது காரணம் சொல்வேன்.

Sri T. L. Sasivarna Thevar then resumed his seat.

*திரு. இரா. நெடுஞ்செழியன் :* மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சர் அவையின் மீது நான் கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஒட்டி மன்ற உறுப்பினர்களில் எதிர்க் கட்சியினர் ஆதரவு அளித்தும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்த்தும் சென்ற மூன்று நாட்களாக கருத்துக்களை பரிமாறிக்கொண்டு வந்திருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தது போல, இந்த மன்றம் மற்றவர்களும் கண்டு மதிக்கத் தக்க அளவுக்கு நடைபெற வேண்டும் என்பதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அத்தனை பேர்களும் உன்னிப்பாக அந்தக் கருத்தை மேற்கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த வாய்ப்பிலே முதல் முதலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்பதற்கான அத்தகைய வாய்ப்புகளையும் தாங்கள் அருள் கூர்ந்து அளிக்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்தில் சென்ற மூன்று நாட்களாக நடைபெற்ற விவாதத்தை இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை பேர்களும் கவனித்துக்கொண்டிருக்கிறோம், நாடும் கவனித்துக் கொண்டிருக்கிறது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதே தேவை





இல்லை என்ற கருத்தின் அடிப்படையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள். சரியான காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்ற கருத்தையும் எடுத்துத் தெரிவித்தார்கள். உள்ளபடியே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான காரணங்களைக் கூட சொல்லாமலேயே, அமைச்சர் அவையின் மீது நம்பிக்கை இல்லை என்ற அளவோடு நிறுத்தி, அந்த வகையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு, நிறைவேற்றுவதற்குக் கூட உரிமை இருக்கிறது. இருந்தாலும் கூட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுகிற அத்தகைய நிலையில், இந்த மன்றம் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளும் என்ற முடிவுக்கு வந்துவிடவில்லை, அந்த முடிவை ஒட்டிய அளவில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை. இங்கே இருக்கிற உறுப்பினர் எண்ணிக்கையின் வலுவின் பேரில் தான் முடிவு ஏற்படும் என்பதை ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் உணர்ந்திருக்கிறார்கள், மற்றவர்களுக்கும் இந்த நிலை தெரியும். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்த நிலையில் தான் கொண்டுவருகிறோம் என்பதை இதைக் கொண்டு வரும் பொழுதே உணர்த்திக் காட்டினேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியதுபோல், உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை மன்றத்தின் முன் எடுத்துவைப்பதற்கும், அமைச்சர் அவையின் மீது இருக்கும் குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கும், அமைச்சர் அவை செய்யத் தவறியதைச் சுட்டிக் காட்டுவதற்கும், செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டு விட்டது என்று எடுத்துக்காட்டுவதற்கும் பொது மக்களின் சார்பாக எதிர்க் கட்சியினர் புரியக்கூடிய கடமைகளில் ஒன்று என்ற அந்த அடிப்படையில் தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்தார்கள் என்றாலும், கனம் உறுப்பினர் டாக்டர் நடராசன் அவர்கள்—தீர்மானத்தை வோட்டுக்கு விடும் பொழுது அதை ஆதரிக்கிறாரோ இல்லையோ--ஆனால் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற தன்மையை வரவேற்கிற அளவுக்கு டாக்டர் நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் கூறிக்கொண்டு வருகிறபொழுது, தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில் கூறுகிறார்கள் என்று நினைக்கின்ற அளவுக்கு, அவர் இந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற காரணத்தினாலோ என்னவோ அந்த வகையிலே சொன்னார். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில் இல்லாமல் எதிர்க்கும் வகையில் முடிக்கிறபொழுது முடித்தாலும், ஆரம்பிக்கிற வகையில் பார்த்தால், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் கருத்துக்களுக்கு ஆக்கம் தரும் வகையிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பொறுத்த வரையிலும் கூட, 8 மந்திரிகள் என்ற எண்ணிக்கையைக் கூட நான் போடவில்லை. அதற்கான தெளிபொருள் விளக்கத்தையும் கனம் உறுப்பினர் தந்தார்கள். எட்டு மந்திரிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் 8 குற்றச் சாட்டுகள் என்று சொல்லி அந்த வகையில் ஒரு தெளிபொருள்

விளக்கம் தந்தார்கள் டாக்டர் நடராசன் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தால், அதில் கூறப்பட்டிருக்கிற காரணங்களை ஏற்றுக்கொண்டு, அதற்குப் பிறகு அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்க்கின்ற அளவுக்கு எந்த மன்றத்திலும், எங்கும் ஏற்படுவதில்லை. குற்றச்சாட்டுக்களை அப்படியே முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த மன்றத்திலே அமைச்சர் அவையின் மீது, இந்த ஆட்சியின் மீது குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சியினர் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நான் சொல்லியிருக்கிற கருத்துக்களைத் தவிர வேறு பல குற்றச்சாட்டுகளையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாங்கள் அமைச்சர் அவையின் மீது குற்றச்சாட்டுகளை எடுத்துரைத்தோம், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு சமாதானம் கூறி, குற்றச்சாட்டுகளுக்கு ஏற்ற பதிலை பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்களா என்றால், இல்லை. குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்லாத வகையிலே, எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டி குறைகளை எடுத்துச் சொல்லியும், ஆளும் கட்சியினர் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியும் இப்படித்தான் விவாதம் நடந்திருக்கிறது. வாதி பிரதிவாதிகள் பேரில் குற்றம் சொல்லி, பிரதிவாதி வாதிகள் பேரில் குற்றம் சொல்லி அந்த முறையில் தான் தங்கள் தங்களுடைய கருத்துக்களை உறுப்பினர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். இரண்டு கருத்துக்களையும் கேட்டுக்கொண்டு தீர்ப்பு அளிக்கின்ற நிலைமையில் அல்ல. குற்றம் சாட்டிய இருசாரார்களும் சேர்ந்தே தீர்ப்பு அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தீர்ப்பு அளிக்கிற பொழுது, கருத்துக்களின் தாரதம்யத்தை நல்ல முறையில் ஆராய்ந்து, ஒரு நீதிபதி போன்று இருந்து, தீர்ப்பை வழங்குகிற நிலைமையும் இல்லை, தீர்ப்பு பெறுகிற நிலைமையும் இல்லை இரண்டு தரப்பிலும் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறோம். இரண்டு சாரும் சேர்ந்து தீர்ப்பு அளிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிற பொழுது, எண்ணிக்கையின் வலுவில் வெற்றி பெறக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர, நீதியின் தன்மையில் வெற்றி பெறக்கூடிய நிலைமை இல்லை. (டாக்டர் ப. நடராஜன்: ஜனநாயகத்தில் எண்ணிக்கையே நீதி.) இருக்கிற நிலைமை தவறானது, புறம்பானது என்று நான் சொல்லவரவில்லை. இங்கே குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன என்பதற்கான புள்ளிவிவரங்களை எடுத்துக் கூறியிருக்கிறோம். விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதற்கான காரண காரிய புள்ளிவிவரங்கள் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. விலைவாசி ஏறவில்லை எந்த வகையிலும் என்று சொல்வதற்கில்லை. அதை யாரும் மறுக்க இயலாது. சென்ற நான்கு மாதங்களில் 59 புள்ளி அளவுக்கு விலைவாசி ஏறியிருக்கிறது. ரூபாயின் மதிப்பு குறைந்த பிறகு ஒரு மாதத்தில் 32 புள்ளி அளவுக்கு விலை வாசி ஏறியிருக்கிறது. ரூபாயின் மதிப்புக் குறைவினால் எந்த அளவுக்கு விலைவாசி ஏறியிருக்கிறது என்பதற்



கான காரண காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிறோம். பொதுப் படையாகக் குற்றம் சாட்டினால், தனித் தனியாக சுட்டிக்காட்டப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. தனித் தனியாக ஆங்காங்குள்ள குறைபாடுகளையும், ஊழல்களையும், மற்றவைகளையும் சுட்டிக் காட்டினால், அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துச் சொல்கிறார்கள், எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லவில்லை என்ற அளவுக்கு அந்தவகையில் பதிலும் எடுத்துச் சொல்லப்படுகிறது. 2-00 p.m. நாட்டிலே நடக்கின்ற அத்தனை குறைபாடுகளையும், ஊழல்களையும், முறைகேடுகளையும் எடுத்துச் சொல்ல, அத்தகைய வாய்ப்பு, நேரம் இல்லை. ஆனால் குறைபாடுகள், மற்றவைகள் கண்ணுக்குத் தெரியும் அளவுக்கு, நாம் உணர்கிற அளவுக்கு எடுத்து வைக்கிறோம். அந்த வகையில் நமக்குப் பிடிபடாமல் இருக்கும் குற்றங்கள், ஊழல்கள் பல இருக்கின்றன என்பதை அத்தனை பேர்களும் உணர்வார்கள், ஒப்புக்கொள்வார்கள். வரவு செலவுத் திட்டத்தில் எடுத்துச் சொன்னவை பல. ஆனால் இப்பொழுது நாங்கள் குறிப்பிடுவது, மித மிஞ்சிய அளவுக்கு விலைவாசிகள் ஏறியிருக்கின்றன என்பது ஒன்று. டாக்டர் நடராசன் அவர்கள் 'வளருகின்ற பொருளாதாரத்தின் அடிப்படையில் திட்டங்கள் போடும் போது, புதிய வரிகள் விதிக்கும் போது, வாங்கும் திறன் அதிகரிக்கும் போது, விலைகள் ஏறும்' என்று சொல்கிற பொருளாதாரக் கொள்கையை நான் மறுக்கவில்லை. ஆனால், அது நியாயமான அடிப்படையில் ஏறவேண்டிய அளவுக்கு விலைகள் ஏறியிருக்கின்றனவா என்பதுதான் பிரச்னை. 1939-க்கும் 1966-க்கும் இடையிலே, விலைகள் ஏறியிருக்கின்றன. ஏறவில்லை என்று யாரும் சொல்லமுடியாது. ஆனால், அதே விலையில் இருக்கவேண்டும் என்று, அந்த வாதத்தின் அடிப்படையில் கருத்துக்களை எடுத்து வைக்கவில்லை. ஆனால், நியாயமான அளவுக்கு இல்லாமல், மிதமிஞ்சிய அளவில், காரணம் இல்லாத வகையில் ஏறிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, காரணத்தைக் காட்டாமல், பல வியாபாரிகள், பதுக்கல் காரணமாகவும், கொள்ளை லாபம் அடிக்கும் வகையில், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், ரூபாயின் மதிப்பைக் குறைக்கவும் வேண்டிய அத்தகைய அளவுக்கு ஏறிக்கொண்டு இருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்த தனிப்பட்ட மனிதனால் முடியாது. முழு வலிமை பொருந்திய அரசுதான் முயற்சி எடுக்க வேண்டும். அரசினால் முயற்சி எடுக்கப்பட்டால், விலை வாசிகள் குறைக்கப்படும். அந்த நேரத்தில்தான் பஞ்சாப் சூழ்நிலையை எடுத்துக் காட்டினோம். கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூட தன்னுடைய பதிலில் கூறினார்கள். விலைவாசிகள் உள்ளபடியே ஏறவில்லை; நியாயமான அளவில், ஒரே அளவில் இருக்கிறது என்று எடுத்துக் கூறினார்கள். ரூபாயின் மதிப்புக் குறைப்புக்கும், விலைவாசி ஏற்றத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் எடுத்துக் காட்டினார்கள். ஆனால், அன்றாட பொருளாதாரத்தை எடுத்துப் பார்க்கிறபோது, செய்தித்தாள்களைப் பார்க்கிறபோது, பத்திரிகைகளைப் பார்த்தாலும், ரூபாயின் மதிப்பைக் குறைத்ததன் காரணமாக அரசாங்கம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முன்வராததால் முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்காததால், எந்தெந்த வகையில் விலைகள் ஏறிக்கொண்டிருக்கின்றன என்று பொருளாதார இதழ்களில் கண்டு கொண்டிருக்கிறோம். எங்கள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th August 1966

குற்றச் சாட்டுகளை மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் கொண்டு வரவில்லை. எண்ணிக்கை பலத்தில் தோற்கடிக்கப் படுகிற நிலையை மறுக்கவில்லை. ஆனால் எங்கள் கருத்துக்களையும், ஆளும் கட்சி கருத்துக்களையும் எண்ணிப் பார்க்கும் மக்கள் மன்றம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்தக் காரணத்தினால், விவாதிக்கப்படும் கருத்துக்கள் நிச்சயம் எண்ணப்படும். கனம் முதல் அமைச்சரவர்கள் இதை உணர வேண்டும். பொதுத் தேர்தலை மனத்தில் வைத்துக்கொண்டு, இதை ஒரு தேர்தல் 'ஸ்டண்ட்' ஆக கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். 'ஸ்டண்ட்' என்பதற்கு அகராதியில் 'பகட்டு வித்தை' என்றிருக்கிறது அந்த அடிப்படையில் கொண்டு வரவில்லை, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை. கருத்துக்கள் விவாதிக்கப்பட்டு, வாய்ப்புகள் அளிக்கப்பட்டு, மக்கள் தீர்ப்பு அளிக்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதுதான் கருத்து. ஆகவே, இதில் வித்தையும் இல்லை, பகட்டும் இல்லை. அந்த இரண்டும் சட்ட மன்றத்திற்குள்ளே வரவழியில்லை; இடம் கொடுக்க யாரும் தயாராக இல்லை. அந்த வகையில் வந்திருக்கின்ற தீர்மானம், பொதுத் தேர்தலுக்குப் பயன்படும் என்றால், பொதுத் தேர்தலை உள்ளடக்கி, பொதுத் தேர்தலை எண்ணித்தான் இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று ஆளும் கட்சி கூறுவதிலிருந்து இந்தக் குற்றச் சாட்டுக்கள் எவ்வளவு வலிவு உள்ளவைகளாக அமைந்திருக்கின்றன. அந்த அளவுக்கு ஆளும் கட்சிக்கு அச்சத்தைத் தந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. தேர்தலுக்குப் பயன் படுத்துவார்கள் என்று எடுத்துச் சொல்லுகிறார்கள். நிச்சயமாக தேர்தலுக்குப் பயன்படுத்தத்தான் போகிறோம் (எதிர்க் கட்சி ஆரவாரம்). இந்த மன்றத்திலே மட்டுமல்ல, அத்தகைய குற்றச்சாட்டுகளை பொதுமக்கள் மன்றத்திலே எடுத்து வைக்கப் போகிறோம். ஆளும் கட்சியும் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களைச் சொல்லப் போகிறார்கள். தீர்ப்பு அளிக்கும் மக்கள் மன்றம்; அந்தத் தீர்ப்பு எந்த அளவுக்குப் போகிறது என்றால், மெள்ள மெள்ள எதிர்க் கட்சிக்கு ஆதரவு கிடைக்கும் அளவுக்குப் போகிற்து. அரசாங்கத்தின் ஆதிக்கமும் செல்வாக்கும், வலிவும் மற்ற பலவும் முறையற்ற வழிகளில், அத்து மீறிப்போகாமல் நியாயமான அடிப்படையில், நேர்மையான அடிப்படையில், முதல் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் நடவடிக்கைகள் மேற்கொண்டால், ஜனநாயக வழியில் தேர்தலை வகுத்துத்தந்தால், ஜனநாயகம் குறிப்பிடுகிற கருத்து அடிப்படையில், நடந்தால், மக்கள் மன்றம் தீர்ப்பு மிக நல்ல முறையில் அமையும் என்கிற உறுதி எங்களுக்கு உண்டு; அரசியல் விழிப் புணர்ச்சி ஏற்பட ஏற்பட, எதிர்க் கட்சி வளர்ந்துவரும் வரலாற்றைப் பார்க்கிறோம். அதை அரசாங்கம் தடுத்து நிறுத்தி வருகிறது என்பதையும் காணலாம்.

கருத்துக்கள் சொல்லப்பட்டதிலிருந்து குற்றம் இல்லை என்று சொல்வதற்கில்லை. அவற்றைப் பார்த்து மக்கள் மன்றம் எப்படி ஆட்சி நடக்கிறது, ஜனநாயகத்தில் வழங்கப்பட்ட உரிமைகள் எப்படிப் பயன்பட்டு வருகின்றன என்று மக்கள் மன்றம் அறிந்து கொள்ள இங்கே விவாதிக்கப்படும் கருத்துக்கள் மிகவும் பயன் படும்.



5th August 1966] [திரு. இரா நெடுஞ்செழியன்]

மற்றொன்று, ஆளும் கட்சி எடுத்துச் சொன்னார்கள், இவர்களிடம் அடிப்படைக் கொள்கையில்லை, ஒற்றுமையில்லாத கட்சிகள் ஒன்று சேர்ந்து நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று. அத்தனை கட்சிகளும் இங்கே, திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, கம்யூனிஸ்ட், ஃபார்வர்ட் ப்ளாக், சோஷலிஸ்ட் ஆக அத்தனை பேருக்கும் 'எதிர்க் கட்சிகள்' என்று தான் பெயர். அந்த அடிப்படையில் அத்தனைபேரும் சேர்ந்து இருக்கிற எதிர்க் கட்சிகள் என்ற பெயர் அடிப்படையில் இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமை இருக்க வேண்டிய அவசியம் இல்லை; அது மட்டுமல்ல, கருத்து வேறுபாடுகள் இல்லவே இல்லை என்றும் சொல்லவில்லை. கருத்து வேறுபாடு, கொள்கை, குறிக்கோள் வேறுபாடுகள் இருந்தும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறோம். இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று காரணங்களைச் சொல்லுகிறோம். அரசியல் கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. தனித்தனிப் பெயரில் இங்கே உட்கார்ந்து இருக்கிறோம். தனித்தனியாக இயங்குகிறோம்; இல்லையென்றால், தனிக்கொடி தனித் தலைவர்கள் இருக்க மாட்டார்கள். இருந்தாலும் ஒன்றாகச் சேர்கிறார்கள். ஒரு உதாரணத்தின் மூலமாகச் சொன்னால் அது தெளிவுபடும். நம் கையை எடுத்துக் கொண்டால், ஐந்து விரல்கள் இருக்கின்றன; அவை தனித்தனியாக இருக்கின்றன, கட்சிகள் இருப்பது போல. சிலபல வேலைகளைச் செய்ய, பணிகளைப் பொறுத்து, சேர வேண்டிய அளவுக்குச் சேர்ந்தும், தனியாக இயங்கவேண்டிய அளவில் தனியாகவும் இருக்கின்றன. பேனாவைப் பிடித்து எழுதவேண்டுமானால், மூன்று விரல்கள் ஒன்று சேர்கின்றன; நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் திருநீறு பூச வேண்டும் என்றால், மூன்று விரல்கள் ஒன்றாகச் சேர்கின்றன; அவரே குங்குமப் பொட்டு இட்டுக்கொள்ள ஒரு விரல் பயன்படுகிறது (சிரிப்பு). (கனம் திரு. எம். பக்தவத்சலம்: "குத்த ஐந்து விரலும்!".) மக்களுக்கு காங்கிரசிலிருந்து பாதுகாப்புத் தருகிறோம் என்று சொல்லும்போது ஐந்து விரல்களும் ஒன்றாகச் சேர்கின்றன. அக்கிரமத்தை அடக்கவும், அறைவதற்கும் ஐந்தும் சேரும். ஆக ஐந்து விரல்களும் ஒன்றாகச் சேரவும் செய்யும், தனித் தனியாக நிற்கவும் செய்யும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர ஒன்றாகச் சேர்ந்திருக்கிறோம். ஆகவே, கருத்துக்கள் ஒன்றுபட்டுத்தான் சேரவேண்டும் என்கிற அவசியம் இல்லை. நியாயம் என்ற அடிப்படையில் சேரலாம்.

மற்றொரு குற்றச்சாட்டு கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ண மூர்த்தி இங்கே சொன்னார்கள். 'குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமா' என்று கனம் உள்துறை அமைச்சர் கேட்க, 'நிரூபிக்கிறேன், வாய்ப்புத் தரப்படுமானால்' என்று கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ண மூர்த்தி சொன்னார்கள். அதை ஒட்டி, கனம் முதல் அமைச்சர் 'விசாரிக்கிறேன்' என்று சொல்லி, விசாரணை நடைபெற்று இருக்கிறது. நடைபெற்று இருக்கிறது என்றால், குறிப்பிட்ட அதிகாரிகளைக் கேட்டார்கள், அவர்கள் 'அப்படி ஒன்றும் நடைபெறவில்லை' என்று சொன்னார்கள். ஆகவே, குற்றச் சாட்டிற்கு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th August 1966

ஆதாரம் இருக்கவில்லை என்று கனம் முதல் அமைச்சர் கூறுகிறார்கள். இது விசாரணை முடிந்த ஒன்றாக ஆகிவிடுமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 'நிரூபிக்க முடியும், இல்லையென்றால் சட்ட மன்றப் பதவியை ராஜினாமா செய்கிறேன்' என்று சவால் விட்டு குற்றம் சாட்டுகிறார்கள். குற்றம் சாட்டியவரையும், சாட்சிகளையும் வைத்து, கனம் முதல் அமைச்சரே நீதிபதியாக இருந்து தீர்ப்பு அளித்தாலும் அளிக்கலாம். எப்படி அவர்களுக்கு ஆதாரம் இல்லை என்று சொல்லுகிறார்கள்? குற்றம் சாட்டியவர்களை வரவழைத்து, சாட்சிகளை வரவழைத்து விசாரித்து முடிவு செய்வதுதான் நியாயமாக இருக்கமுடியும். ஒரு நீதிபதியைப் போட்டோ, அல்லது அரசாங்க உயர்தர அதிகாரியைப் போட்டோ, அல்லது கனம் சபாநாயகர் அவர்களோ யாரோ ஒருவரை நியமித்து விசாரிப்பதுதான் முறையாக இருக்கும். கனம் சபாநாயகர் அவர்களும் சிறந்த வழக்கறிஞர், நீதிபதியாகத் தகுதி படைத்து இருக்கிறார்கள், ஆகவே, அவர்களே விசாரிக்கலாம். இரு சாராரையும் விசாரித்துக் கேட்டறியாமல் ஒரு பிரச்சினையில் எப்படித் தீர்வு காண முடியும்? முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன முடிவே முடிவாகாது. கனம் உறுப்பினர் திரு. கருஷ்ணமூர்த்தி அவர்கள் தெரிவித்ததற்கிணங்க அந்த வகையிலே விசாரித்து முடிவு காண வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாட்டிலே பல லஞ்ச ஊழல்கள், மற்றவைகள் அறவே நடைபெறவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால், அரசாங்கத்தில் இருக்கும் அதிகாரிகள் அத்தனை பேருமே லஞ்ச ஊழல் செய்கிறார்கள் என்று நாங்கள் சொல்ல வரவில்லை. நியாயமானவர்கள் நீதியானவர்கள், நேர்மையானவர்கள் எல்லா நிலையிலும் எல்லாத் தரத்திலும் உண்டு. நாங்கள் சாட்டுகிற குற்றச் சாட்டுகள் எல்லாம் லஞ்ச ஊழல், மற்றவை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகின்றதா இல்லையா என்பதை விவாதத்தின் மூலம் முடிவு கட்ட முடியாவிட்டாலும், அவரவர்கள் உணர்ந்துகொள்ளும் நிலைமையில் நன்றாக அறிந்துகொள்ள முடியும். அதற்குக் காரணம் என்ன? லஞ்சம், மற்றும் வேறு பல ஊழல்கள் செய்தாலும் கூட, அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கான முறைகளிலே பல பொந்துகளில் புகுந்துகொள்ளக்கூடிய வாய்ப்புகள் பல வகையில் ஏற்படுகின்றன. ஊழல்கள் நடைபெற்று, பலவற்றை நிரூபிக்கும் அத்தகைய நேரத்தில், சாதாரணமாக பொது மக்கள் போலீசைப் பற்றியும் வேறு பல அதிகாரிகளைப்பற்றியும் மற்றவர்களைப்பற்றியும், கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றியும் காட்டப்படுகிற குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்து வழக்கு என்று விசாரிக்கிறபோது, அதற்கான முறைகள் வரும்போது, ஏதாவது ஒரு சிறு கருத்தின் அடிப்படையிலே அவர்கள் மறைந்துகொள்ள வழிவகை இருக்கிறது. புகுந்துகொள்ளுவதற்கு, மறைந்துகொள்ளுவதற்கு, நிழலிலே தங்கிக்கொள்ளுவதற்கு, இவைகளெல்லாம் செய்துவிடப் பல இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களைப் பார்த்து, அப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் புகாத அளவிற்கு, சட்டப்படி நடவடிக்கை எடுத்தால் குற்றம் செய்கிறவனை நேராகச் சென்று தாக்கும் அளவுக்கு இருக்கும் சந்து பொந்துகளை



5th August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அடைத்து நேர்மையாகச் செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. அதைச் செய்யாமல் இருப்பதால் ஒருவர் மற்றவரைப் பார்த்து, லஞ்ச ஊழல் போன்றவற்றைச் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. லஞ்சம் வாங்குகிறவர்களும், கொடுக்கிறவர்களும் அந்தச் சந்துபொந்துகளில் புகுந்துகொள்வதற்கான வழிவகை ஏற்படுகிறது; சட்டத்தின் பிடியில் அகப்படாமல் மிகத் திறமையாகத் தப்பித்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதில் இருக்கும் குறைபாடுகளை அரசாங்கம் தான் கண்டுபிடித்து, அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தான் எடுக்கவேண்டும். அப்படி எடுப்பதன் மூலமாக ஊழல்களைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறோமே தவிர, நியாயமாக நடக்கும் அதிகாரிகள் யாருமே கிடையாது, நீதிக்குப் புறம்பாகவே அதிகாரிகள் நடக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக்கூட நாங்கள் கூற வரவில்லை. ஆங்காங்கு நடைபெறுகிற ஊழலை ஒருவர் மற்றொருவரைப் பார்த்து, இத்தகைய ஊழல்கள் பரவும் அளவிற்கு எடுத்துக்காட்டாக அமையும் காரணத்தால், அதை மிக வலியுறுத்திச் சொல்லுகிறோம். அதை அரசாங்கம் தான் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கம் அதைச் செய்யத் தவறிய காரணத்தால், மற்றவர்கள் மேற்கொண்டும் மேற்கொண்டும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டு, ஊழல்கள் வளர்ந்துகொண்டு போகும் நிலைமை இருக்கிறது.

ஊழல் நிலைமையை எதிர்க் கட்சித் தலைவரே ஆராய்ந்து முடிவு செய்யலாமே என்று கனம் உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே அவர்களும் உறுப்பினராக இருக்கிறார்கள். நான் திறமையானவன், அறிவுடையவன், ஆற்றல் உடையவன் என்ற நிலைமையிலே கூட அந்தக் கமிட்டியின் தலைவராக நான் ஆக்கப்படவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் பொதுக்கணக்குக் குழுவினுடைய தலைவராக இருக்கவேண்டும் என்ற அந்த நியாயமான நல்ல ஜனநாயக நியதிப்படி நான் அதனுடைய தலைவனாக இருக்கிறேன். ஆகவே, அந்தப் பொதுக் கணக்குக் குழுவில் எல்லாக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நான் சொல்வேன், அதனுடைய தலைவராக இருக்கும் நான்கு ஆண்டுக் காலத்தில், ஆளும் கட்சியினருக்கும் எதிர்க் கட்சியினருக்கும் கருத்து வேறுபாடு வராமலே நான் அத்தனை பேர்களும் பிரச்சினைகளைப் பொருத்து, பொதுக் கணக்குக் குழுவில் மிக நல்ல முறையில் நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு ஊழல்களையும் பற்றி சொல்லும்போது ஊழல் என்றவுடனேயே, நானே பார்த்து, பொதுக் கணக்குக் குழுவை கூப்பிட்டு, விசாரித்துத் தீர்ப்பு அளிக்க உரிமை இதற்கு இருக்கிறதா என்றால், இல்லை. தணிக்கை அதிகாரிகள் கண்டு பிடித்து, எது எது குற்றம் என்று அவர்கள் எங்களிடம் கொடுக்கிறார்களோ, அதை வைத்துக்கொண்டு நாங்கள் பார்க்க வேண்டும். தணிக்கை அதிகாரி கண்களுக்கும் காதுகளுக்கும் கருத்துக்களுக்கும் படாமல் அங்கேயே விடப்பட்டவை என்ன என்னவோ. அதற்குப் பிறகு, அவர்களுடைய கருத்துக்கு வந்து அவர்களாகப் பார்த்துத் தள்ளினவை எவ்வளவோ.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th August 1966

அதற்குப் பிறகு இங்கே வந்து சொன்னபிறகு, அந்தக் கருத்துக்கள் அடிப் படையில் மட்டும் விசாரித்து, அதிலே நாங்கள் தீர்ப்பு வழங்கும் அளவில்தான் நிலைமை இருக்கிறது. அவர்கள் எதை எதைத் தவறு என்று சுட்டிக்காட்டுகிறார்களோ, அந்த அளவிற்கு அதிகாரிகள் வந்து பதில் சொல்லுகிறார்கள். நாங்கள் தீர்ப்பு வழங்குகிறோம். கனம் அம்மையார் அவர்களுக்குத் தெரியும். மற்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். நான்கு ஐந்து ஆண்டுகளாக, என்ன என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும், இதிலே குறைபாடு இருக்கிறது, இதிலே குற்றம் நடைபெற்றிருக்கிறது, இந்த அதிகாரி தவறு செய்திருப்பதாகக் காணப்படுகிறார் என்று குறிப்பிடுகிறோம். இந்தக் குற்றத்திற்கு யார் பொறுப்பு என்று அரசாங்கம்தான் கண்டுபிடிக்கவேண்டும். ஆண்டுதோறும் எல்லோரும் சேர்ந்து, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, ஏகமனதாகத் தீர்மானங்கள் போட்டு சிபார்சுகள் செய்தாலும் கூட, அவைகளில் முக்கால் பகுதி சிபார்சுகள் இன்னும் பரிசிலனையிலேயே இருக்கின்றன. ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்; குறிப்பிட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, அந்த அதிகாரிக்கு ஆண்டுக்கு ஆண்டு ப்ரமோஷன் ஆகிக்கொண்டே போகிறது. நடவடிக்கை மட்டும் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இது இன்ஜினியர் ஒருவரைப் பொறுத்த வரையிலும் இருக்கும் பிரச்சினை. இப்படிப் பல பிரச்சினைகளுக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடியுங்கள். பொறுப்பு—ரெஸ்பான்ஸிபிலிடி—யார் என்று கண்டுபிடித்து தண்டனை கொடுங்கள் என்று தான் சொல்லுகிறோம். பொதுக் கணக்குக் குழு, இன்னார் இன்ன இன்ன தவறு செய்திருக்கிறார்கள் என்ற அளவுக்குத்தான் சொல்ல முடியுமே தவிர, அரசாங்கம்தான் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கிறது. அமைச்சர்கள் பார்த்து நடவடிக்கை எடுக்கலாம். பரிசீலனையில் வைத்தாலும் வைக்கலாம். அந்தப் பரிசீலனை ஆகாமல் போனாலும் போகலாம். அப்படிப் பார்க்கும்போது, நான்கு ஆண்டு காலத்தில் பொதுக் கணக்குக் குழு சிபார்சு செய்திருக்கிறவைகளில், கட்சி வேறுபாடு இல்லை. ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற வேறுபாடு இல்லை. நான் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் என்ற முறையில் சொல்லுகிறேன். எல்லோரும் ஒத்துழைத்து அத்தனை பேரும் ஏகமனதாக நிறைவேற்றுகின்றோம். அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு இன்னும் பதில் வரவில்லை. அப்படிப்பட்டவைகளை இந்த அரசாங்கம் நிச்சயமாக உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுத்து இருக்குமேயானால், இப்படிப்பட்ட குறைபாடுகள் வர வழிவகை ஏற்படாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சேலம் இரும்புத் தொழிற்சாலையைப்பற்றித் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறோம். வாக்களித்துக் கிட்டத்தட்ட 16, 17 ஆண்டு ஆகின்றன. அதற்குப் பிறகு வாக்களித்த உருக்குத் தொழிற்சாலைகள் மற்ற இடங்களில் வந்துவிட்டன. போக்காரோவில் 660 கோடி ரூபாய் அளவிலே திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது 500 கோடி, 400 கோடி 200 கோடி ரூபாய் என்ற அளவிலே பெரிய உருக்குத் தொழிற்சாலைகள் ஆங்காங்கே வருகின்றன, ஆனால்,



5th August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சேலத்தில், 16, 17 ஆண்டுகளாக இரும்புத் தொழிற்சாலை வரும் வரும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் ஒருவர், கத்தறிக்காயா? வெண்டைக்காயா? உடனே வாங்கிக் கொண்டு வந்துவிடுவதற்கு? என்று கேட்டார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களே கூட குறிப்பிட்டார்கள், "எங்கேயாவது இருந்தால் இரும்பை எடுத்துக்கொண்டு வரலாம்" என்று. 15 ஆண்டுகளாக சேலம் இரும்புத் தொழிற்சாலையை உருவாக்கலாம், அங்கே இரும்பு இருக்கிறது, அங்கே இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்கான வசதி இருக்கிறது, திட்டத்தை நிறைவேற்றலாம், 50 கோடி செலவில் ஒரு திட்டம் இருக்கிறது என்று சொன்னவர்கள் நீங்கள் தான். அதன் பிறகு 100 கோடி ஆகும் என்று சொன்னவர்களும் நீங்கள் தான். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரும் என்று சொன்னவர்களும் நீங்கள் தான். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எப்படியும் வந்துவிடும், என்று சொன்னவர்களும் இந்த ஆட்சி தான். அதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டோம் என்ற அறிக்கையைச் சுட்டிக்காட்டினீர்கள். அதைத்தான் செய்யுங்கள் என்று சொல்லுகிறோம். மேற்கு ஜெர்மனியிலிருந்து அறிஞர்கள் வந்து ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று சொன்னவர்களும் நீங்கள் தான். இதைப்பற்றி ஆராய்வதற்கு ஸ்விடன் நாட்டுக்கும் வேறு பல நாடுகளுக்கும் இன்ஜினியர்கள் சென்றிருக்கிறார்கள் என்று சொன்னவர்களும் நீங்கள் தான். ஜப்பானியக் குழு வைத்து ஆராய்ந்திருக்கிறோம் என்று சொன்னவர்களும் நீங்கள் தான். வந்த அறிக்கையையும் பரிசிலனை செய்து கொண்டிருப்பதாகச் சொன்னவர்களும் நீங்கள்தான். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது. . (திரு. ஆர். பி. சுவாமிநாதன்: வரப் போகிறது வரப்போகிறது. வரப்போகிறது என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களும் நீங்கள் தான். நான் கேட்கிறேன்—வரப்போகிறது, வரப்போகிறது என்று சொல்லிக்கொண்டே ஒரு ஜனநாயக ஆட்சியில் எவ்வளவு காலத்திற்கு இருக்கப்போகிறீர்கள்? (எதிர்க் கட்சித் தரப்பில் ஆரவாரம்) வரப்போகிறது என்கிறார்களோ, வருமா என்று அறிக்கையைப் பார்த்தால், ஆபத்து வருமோ என்ற சூழ்நிலை வந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையோடு விசாகப்பட்டினப் பிரச்சினையையும், ஹாஸ்பெட் பிரச்சினையையும் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. அவைகளையெல்லாம் நினைப்பதற்கு முன்னால் உருவாக்கப்பட்ட ஒன்று சேலம் இரும்புத் தொழிற்சாலை. இதிலே ஏன் கடுமையாக நடவடிக்கை இந்த ஆட்சி எடுக்கவில்லை என்பதைத் தான் குற்றச் சாட்டாக நாங்கள் சொல்லுகிறோம். நீங்கள் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவில்லை, சேலம் இரும்பு தொழிற்சாலையைக் கொண்டுவருவோம் என்று வாக்களித்த இந்த ஆட்சி அதை நிறைவேற்றவில்லை, தவறிவிட்டது என்ற அளவிற்குத்தான் சுட்டிக்காட்டுகிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. கத்தறிக்காய், முருங்கைக்காய் கொண்டுவருவோம் என்று நீங்கள் தான் சொன்னீர்கள். கத்தறிக்காயை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வாங்குவோம், முருங்கைக்காயை மூன்றாவது திட்டத்தில் வாங்கி வந்துவிடுவோம் என்று சொன்னீர்கள். இரண்டாவது

திட்டத்திலும், மூன்றாவது திட்டத்திலும் ஏன் வாங்கவில்லை என்று தாங்கள் கேட்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. நீங்கள் சொன்ன கருத்துக்களை வைத்துக்கொண்டுதான், நாங்கள் கேட்கிறோம். இல்லாவிட்டால், எங்கே இரும்பு இருக்கிறது என்று கண்டுபிடித்து சொல்வதற்கு நிபுணர்களா நாங்கள்? இரும்பில் எவ்வளவுசத்து இருக்கிறது, இரும்பை எப்படி உருக்குவது, நிலக்கரியை எப்படி பயன்படுத்துவது என்று நீங்கள் சொல்லுகிற விவரங்களை வைத்துக்கொண்டு, அதில் இருக்கிற நியாய அநியாயத்தைப் பார்த்து, சாத்தியம், சாத்தியம் அற்றதைப் பார்த்து, நீங்கள் கொடுத்த விவரங்களை வைத்துத்தான் கேட்கிறோம். வரும் வரும் என்று சொல்கிறீர்களே, வராமல் போகின்ற சூழ்நிலை வந்துவிட்டால் என்ன செய்வது? என்று தான் கேட்கிறோம். எப்படியும் வந்துவிடும் என்று சொல்லுகிறீர்கள். மற்றவர்கள் வலியுறுத்தி அங்கங்கே பெறுகிற அளவிற்கு இவர்கள் ஏன் வலியுறுத்திப் பெற வில்லை? பெரிய பெரிய தொழிற்சாலைகள் அங்கெல்லாம் வரும்போது, இங்கே இன்னும் சிறிய தொழிற்சாலை கூட வர முடியாத சூழ்நிலை இருப்பானேன்? என்று தான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

கனம் அவைத் தலைவர் அவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் உறுப்பினர்கள் எல்லோரையும் இந்த அவைக்கு வரவழைப்பதற்கும், நீண்ட நேரம் கேட்டுக்கொண்டிருக்கிற அந்த அளவுக்குமாவது பயன் அளிக்கக்கூடியதாக அமைந்திருக்கிறதே என்று மகிழ்கிறேன். கடைசியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடிக்கிறேன்.

ஒரு உறுப்பினர் கூறினார். மற்ற, மற்ற நகராட்சி மன்றங்களிலும் ஊழல் இருக்கின்றனவே, கலைக்கப்பட்ட நகராட்சி மன்றம் எந்த முறையில் நியாயமாக நடந்து வந்தது என்பதைப் பற்றி எதிர்க்கட்சியினர் எங்கே குறிப்பிட்டார்கள் என்று கேட்டார்கள். அந்த நகரசபையைப் பொறுத்த வழக்கு, வழக்கு மன்றத்தில் இருப்பதால், அதைப்பற்றி விவரங்களை நாங்கள் எடுத்துச் சொல்லாமல் விட்டோம். அது நியாயமா, இல்லையா என்கிற பிரச்னை வழக்கு மன்றத்திற்கு விடப்பட்டிருக்கிறது. எந்த எந்தக் குறைகளைச் சொல்லி—சிறு சிறு குறைகளை எடுத்துக் காட்டி இந்த நகரசபையைக் கலைத்தார்களோ, அதைவிட பயங்கரமான குற்றச்சாட்டுகள் வேறு பல நகரசபைகளிலும் இருக்கின்றனவே, அவற்றை ஏன் கலைக்கவில்லை என்பதாகப் பார்த்துத்தான், எதிர்க்கட்சிகள் அமர்ந்திருக்கிற நகரசபைகளைக் கலைப்பது ஒன்றுதான் இந்த அரசின் அடிப்படைக் கொள்கை என்பதை ஓரளவுக்கு ஊகித்துக்கொண்டு குற்றம் சாட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். காரணம் அந்த நகரசபையைக் கலைத்ததற்கான காரணங்கள் மிக மிகச் சாதாரணமானவை. அதைவிடப் பல மடங்கு பயங்கரமான குற்றங்களைச் செய்துவருகிற நகரசபைகளையும், அவற்றை இந்த அரசாங்கம் கலைக்காமல் இருப்பதையும் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எடுத்துக்காட்டினார்கள். ஆளும் கட்சியினர் எங்களுடைய வாதத்தில் உள்ள உண்மையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மக்கள் மன்றம் சிந்தித்துப் பார்த்து நியாயம்





வழங்கும். கலைக்கத்தான் கலைத்தார்களே, அதுவும் எத்தனை ஆண்டுக்குக் கலைத்திருக்கிறார்கள்? இரண்டாண்டு காலத்திற்குள் மீட்டும் தேர்தலே இல்லாதவாறு கலைப்பதற்கு என்ன இடம் இருக்கிறது? மூன்று மாத காலத்திற்குள் பார்லிமெண்டிற்குத் தேர்தல் நடைபெறுகிறது, சட்ட மன்றத்திற்கு இடைத்தேர்தல் நடைபெற்றுவிடுகிறது. அந்த நகரசபையில் ஊழல் இருந்தது, அதற்காகக் கலைத்தோம் என்றால்—அடுத்த மூன்று மாதத்தில் அதற்கான தேர்தலை நடத்தி மீட்டும் அங்கே நகரசபைச் செயல்பாட்டு வழிவகை செய்தால், ஓரளவு புரிந்துகொள்ள முடியும். இரண்டாண்டு காலத்திற்கு அந்த நகரசபையைக் கலைத்து அதிகாரத்தை ஆணையாளரிடம் ஒப்படைத்து விட்டார்கள் என்றால், அதிலிருந்து அவர்களுடைய உள்நோக்கம் எப்படி இருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ள முடிகிறது. ஆளும் கட்சியினர் நினைத்தால் எந்தச் சிறிய காரணத்தை வேண்டுமானாலும் காட்டி, எதிர்க்கட்சிகள் அமைந்திருக்கக்கூடிய நகரசபைகளைக் கலைத்துவிடலாம் என்பது சரியான ஜனநாயகப் பண்பாகாது. சென்னை மாநகராட்சியில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன, ஏன் கலைக்கக்கூடாது என்றால்—அங்கே ஊழல் மலிந்து இருப்பதானால், அதைக் கலைப்பதைப் பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆட்சேபணை இல்லை. சென்னை மாநகராட்சி மட்டும் அல்ல, எந்த எந்த நகராட்சி மன்றங்களில் ஊழல்கள் மலிந்து மடக்கின்றனவோ அவற்றைக் கலைப்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்புத் தெரிவிக்காது. ஆனால், இன்றையதினம் அப்படி இன்றி ஒரு சில நகராட்சி மன்றங்கள் மட்டும் கலைக்கப்படுகின்றன என்றால், அதற்கு முழுக்க முழுக்க அமைச்சர்கள் தான் காரணம். ஒரு நகரசபை என்றால் அதில் உள்ள ஊழல்கள் அனைத்துக்கும் அதன் உறுப்பினர்கள் பொறுப்பாளி அல்ல. இன்றைய தினம் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற கமிஷனர்கள் எவ்வெவற்றுக்குப் பொறுப்பாளிகள், ரெவின்யூ ஆபீசர்கள் எவ்வெவற்றுக்குப் பொறுப்பாளிகள், ஹெல்த் ஆபீசர்கள் எவ்வெவற்றுக்குப் பொறுப்பாளிகள் என்பதைக் கண்டு பிடித்து உறுப்பினர்கள் மீது தவறு இருந்தால், நடவடிக்கை எடுத்துக்கொள்ளட்டும், அதுபோல சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தவறு இருந்தால் அரசாங்கம் தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகள் செய்கி தவறுகளுக்கு எல்லாம் உறுப்பினர்களைக் குற்றம்சாட்டுவது முறை அல்ல. கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியில் தவறான மருந்தைக் கொடுத்ததனால் சிலர் இறந்தார்கள் என்றால், நகரசபை உறுப்பினர்கள் எந்த வகையில் பொறுப்பாளியாக முடியும், அங்கே உள்ள அரசாங்க மருத்துவர் தான் பொறுப்பாளி, அந்த வட்டத்துக் கவுன்சிலருக்கு அவரை மேற்பார்வை செய்ய அதிகாரம் உண்டா? மேயருக்குத் தான் அந்த அதிகாரம் உண்டா? அதிகாரிகள் செய்கிற தவறுகளுக்கு அரசாங்கம் அவர்களைத் தண்டிக்க வேண்டும். நகராட்சி மன்றங்கள் நிறைவேற்றுகிற காரியங்களில் தவறு இருந்தால், உறுப்பினர்களைச் சாட்டலாம். முதல் அமைச்சர் அவர்கள் எந்த எந்தத் தவறுகளுக்கு யார் பொறுப்பாளி என்பதைக் கண்டறியட்டும். உறுப்பினர்களால் தவறு இழைக்கப்படுகிறது என்றால், எந்த நகரசபையை வேண்டு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th August 1966

மாறனும் கலைக்கட்டும். அதை ஆட்சேபிக்கவில்லை. சென்னை நகரில் கூவம் நாறுகிறது என்றால், நகரசபை உறுப்பினர்கள் எவ்வாறு பொறுப்பாளியாவார்கள். இரண்டு கரைகளைப் பொறுத்தவரையில் தான் நகரசபையின் பொறுப்பில் வரும். நடுவிலே போகிற ஆறு அரசாங்க பி.டபிள்யூ.டி-ஐச் சேர்ந்தது. நகரசபை என்ன செய்ய முடியும்? அதற்கும் ஒரு பத்து கோடி ரூபாயில் ஒரு திட்டம் தயாரித்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றினால் நாற்றம் அகற்றப்படும். அதற்கும் அனுமதி அளிக்காது, மாநகராட்சி உறுப்பினர்களைக் குறை சொல்லி என்ன பிரயோசனம்? அதிகாரிகள் தவறு செய்தால் அதிகாரிகள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுங்கள். அதைவிட்டு ஒரு உள்நோக்கத்தோடு அமைச்சர்கள் செயல் படுவது தான் சரியல்ல என்றுதான் சுட்டிக் காட்டினேன். வேறு எந்த வகையிலும் இல்லை.

எனது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பொருத்தவரையில் இந்த மன்றத்தின் தீர்ப்பு எப்படி இருந்தாலும் பொதுமக்கள் மன்றம் நல்ல தீர்ப்பு வழங்கும் என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தை இந்தச் சபை முன்ப வைத்திருக்கிறோம் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற மூன்று தினங்களாக இந்தச் சபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்று வருகிறது. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எல்லா எதிர்க்கட்சியினரும் சேர்ந்துக் கொண்டு வந்திருக்கிறோம். பார்வேட் ப்ளாக் கட்சியின் சார்பாக நாங்கள் இங்கே மூன்று பேர் அங்கம் வகிக்கிறோம். அந்தக் கட்சியின் சார்பாக நான் பேசவேண்டும் என்ற கருத்தைத் தங்களுக்குத் தெரிவித்தேன். இன்றைக்கு மேலும் எழுத்து மூலமாகவும் கொடுத்தேன். துரதிருஷ்ட வசமாக தாங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டோ எனக்குப் பேச அனுமதி அளிக்கவில்லை. அதைக் கேட்பதற்காக சிறிது நேரம் முன்பாக நான் எழுந்து நின்றேனே தவிர, தங்களுடைய உத்தரவை மறுத்து அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பார்வேட் ப்ளாக் கட்சியின் சார்பாக நான் பேச தங்கள் அனுமதியைக் கேட்டும் தாங்கள் அனுமதி தராததற்காக என் மனம் வருந்துகிறது. நான் பேச ஏன் அனுமதி கொடுக்கவில்லை என்பதற்கான காரணத்தைத் தாங்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டு, என் வருத்தத்தைத் தெரிவித்துக்ொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் திரு. சசிவர்ணதேவர் அவர்கள் கேள்வியில் மூன்று பாயிண்டுகள் இருக்கின்றன.

முதலாவதாக, ஓர் அங்கத்தினர் பேச அழைக்கப்படாததற்கு சபாநாயகர் அந்த அங்கத்தினருக்கு எக்ஸ்ப்ளனேஷன் எதுவும் கொடுக்கவேண்டுமென்பது சட்டசபை விதிகளில் இல்லை 'ஏன் நான் பேச அழைக்கப்படவில்லை? என்பதாக அந்த அங்கத்தினர் சபாநாயகரை விளக்கம் கோர முடியாது.



5th August 1966] [கனம் சபாநாயகர்]

இரண்டாவதாக, இந்தத் தீர்மானத்தில் முதல் அமைச்சர் பேசிய பிறகு வேறு யாரும் பேச முடியாது. அதற்கு பதில் சொல்வதற்கு மூவருக்கு—அதாவது மூவர் ஆப் தி மோஷனுக்கு—மட்டும் தான் உரிமை உண்டு.

மூன்றாவதாக இன்றையதினம் கனம் அங்கத்தினர் திரு. சசிவர்ணதேவர் மட்டும் அல்ல, பேசப் பெயர் கொடுத்திருந்த வேறு ஏழெட்டு அங்கத்தினர்களும் பேச அழைக்கப்படவில்லை.

So many hon. Members including the Whip of the D.M.K. Party and the hon. Member Sri Cheemaichamy and some hon. Members of the Congress Party who gave their names yesterday have been left out. In fact, the hon. Member, Sri Dharmalingam got angry with me.

Sri A. P. DHARMALINGAM : No, Sir.

Mr. SPEAKER : I know it. Now the hon. Member is smiling.

ஆகவே, திரு. சசிவர்ண தேவரை மட்டும் பேச அனுமதிக்கவில்லை என்று சொல்வதற்கில்லை.

மேலும், இந்தச் சபை சம்பந்தப்பட்டவரை பார்வேட் ப்ளாக் என்பதாக ஒரு கட்சியை ரெகக்னைஸ் பண்ணவில்லை. இம்மாதிரி விஷயங்களில் தனியாக என்னுடைய அறைக்கு வந்து கனம் அங்கத்தினர் கேட்டிருந்தால், விளக்கிச் சொல்லியிருக்கலாம். ஓட்டு எடுக்கிற நேரத்தில் 'அதற்கு என்ன காரணம் என்பதற்குப் பதில் சொல்லித்தான் தீர வேண்டும்' என்று கேட்பது நியாயம் இல்லை. 'அப்படிக் கேட்கக் கூடாது' என்று சபாநாயகர் சொல்வதே தப்பு என்று குறிப்பிடுவது இருக்கிறதே, அதுவும் நியாயம் இல்லை.

**திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் :** கனம் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் நாங்கள் மூன்று பேர் பார்வேட் ப்ளாக் கட்சியின் சார்பாக இயங்கி வருகிறோம். அதைக் தங்களுக்கும் தெரிவித்திருக்கிறோம்.

**கனம் சபாநாயகர் :** நான் அதைத்தான் முன்பு சொன்னேன். சட்டமன்றத்தில் பார்வேட் ப்ளாக் கட்சி என்பதாக ஒரு கட்சி அங்கீகரிக்கப்படவில்லை. முதலில் எல்லோரும் சேர்ந்து சுதந்திராக் கட்சியின் பெயரில் பெயர் கொடுத்திருந்தார்கள். அப்புறம் கனம் அங்கத்தினர் தன்னை பார்வேட் ப்ளாக் என்று தனியாக அங்கிகரிக்கும்படி லெட்டர் எழுதிக் கொடுத்தார்கள். திரு. மூக்கையா தேவர் அவர்களும் தனியாக எழுதிக்கொடுத்தார்கள். அதுபற்றி ஒன்றுமே செய்யவில்லை. இந்தப் பிரச்னையை நம்மால் தீர்க்க முடியாது என்று பேசாமல் வைத்துவிட்டேன். ஆக, யாரும் என் மீது குறை சொல்ல முடியாது. எனக்கு யாரும் வேண்டும், வேண்டாம் என்பது கிடையாது. யாரையும் தனிப்பட்ட முறையில் பேச அனுமதிக்கக் கூடாது என்ற எண்ணமே எனக்குக் கிடையாது. இவ்வளவு பேர்கள் பேசியிருக்கிறபோது திரு. தேவர்

[கனம் சபாநாயகர்] [5th August 1966

அவர்கள் பேசக் கூடாது என்பதற்கு எனக்கு ஒரு காரணமும் இல்லை. இவ்வளவு பேர்கள் பேசியிருக்கிறபோது, திரு. தேவர் அவர்களும் பேசினால் உலகம் மூழ்கிவிடவா போகிறது?

கடைசியாக எல்லோருக்கும் ஒரு வேண்டுகோள். வரப்போகிற தேர்தலுக்குள் இன்னும் ஒரு கூட்டம் நடைபெறுமோ என்னவோ? நாம் 4½ வருஷங்களாக இங்கே இருக்கிறோம். சட்டசபை விதிகளையாவது நாம் பாக்கியுள்ள காலத்திற்குள்ளாகவாவது நன்றாகக் தெரிந்துகொண்டுவிடவேண்டும். வரப்போகிற தேர்தலில் யார் வந்தாலும் பரவாயில்லை. விதிகளை நன்றாகத் தெரிந்துகொண்டு அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்ற பயம் நமக்கு இருக்கவேண்டும். இல்லை என்றால் ஜனநாயக முறைக்கே நாம் லாயக்கற்றவர்கள் என்று வெளியில் உள்ள ஜனங்கள் நம்மைப் பற்றி குறைவாக நினைத்துக்கொள்வார்கள். அதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நான் including the Speaker —சபாநாயகரையும் உள்ளிட்டுச் சொல்கிறேன். யாராக இருந்தாலும் சட்டசபை விதிகளுக்குட்பட்டு நடந்து கொள்ளவேண்டும். ஒருவேளை சபாநாயகர் தப்பாகவே ஒரு தீர்ப்புக் கொடுத்தாலும் கூட உடனேயே எழுந்து அதை 'டிபை' defy பண்ணுவதும் நியாயம் இல்லை. இது போல நாம் பரஸ்பரம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

Now I will put the No-Confidence Motion moved by the hon. the Leader of the Opposition to the vote of the House.

2-30 p.m. The question is—

"கீழ்க்கண்ட காரணங்களையும் வேறு சில காரணங்களையும் ஒட்டி கனம் எம். பக்தவத்சலம் அவர்களின் தலைமையின்கீழ் இயங்குகிற அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கை இழந்துவிட்டது என்பதை இந்தப் பேரவை தெரிவித்துக் கொள்கிறது :—

(1) இந்த அரசாங்கம், பொதுவாக எல்லாப் பண்டங்களின்—குறிப்பாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற இன்றியமையாத பண்டங்களின் மிதமிஞ்சிய விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறி விட்டது ;

(2) இந்த அரசாங்கம் இந்த மாநிலத்தில் உணவு நிலைமையைச் சீராக்கவும், விவசாயத்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்கவும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தரவும் தவறிவிட்டது ;

(3) இந்த அரசாங்கம் தொழில் நுட்பக் கல்வித் துறைகளுக்கு, குறிப்பாக மருத்துவக் கல்வித் துறைக்கு மாணவ-மாணவியரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செம்மையான முறையில் செய்யத் தவறிவிட்டது.

(4) இந்த அரசாங்கம் கோயம்புத்தூரில் மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்யவும், சென்ற சில திங்களாக வேலையின்றித் தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்களின் துயரத்தைத் துடைக்கவும் தவறிவிட்டது ;



5th August 1966] [கனம் சபாநாயகர்]

(5) இந்த அரசாங்கம் சேலம் எஃகு (உருக்கு) தொழிற்சாலை நிறுவுவது பற்றி பலமுறை மீண்டும் மீண்டும் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கத் தவறிவிட்டது ;

(6) இந்த அரசாங்கம் நகராட்சிகளில் காங்கிரசல்லாத பிற கட்சிகளின் செல்வாக்கை ஒடுக்கும் வகையில், சில நகராட்சி மன்றங்களைக் கலைத்து, தனது அதிகாரத்தை முறை தவறிப் பயன் படுத்தியுள்ளது ;

(7) இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழக மக்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த உணர்ச்சிகளை, 1965 சனவரி-பிப்ரவரி திங்கள்களில் பலரின் உயிரிழப்பு ஏற்படும் அளவுக்கு இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடந்தும், இந்த அரசாங்கம் உணரத் தவறி விட்டது ; அதுமட்டுமல்லாமல் இந்தியத் தலைமை அமைச்சர்களும், தமிழக முதலமைச்சரும் பல தடவைகளில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும், அவற்றின் அடிப்படையில் சட்டத் திருத்தத்தை இந்திய அரசு கொண்டுவர ஏற்பாடு செய்யாமலும் தவறி அதன் மூலம் தமிழக மக்களுக்கு இந்த அரசாங்கம் துரோகம் இழைத்துவிட்டது ;

(8) இந்த அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாக ஆக்கவும், தமிழ் வகுப்புகளில் சேர மாணவர்களுக்குத் தனிச் சலுகைகளும், வசதிகளும் அளிக்கவும் 1956-ம் ஆண்டின் ஆட்சி மொழிச் சட்டத்தை செம்மையாகவும், விரைவாகவும் நடைமுறைக்குக் கொண்டுவரவும், தமிழை மாநிலத்தின் ஆட்சிமொழியாகப் பரவலான முறையில் நடைமுறைப்படுத்தவும் தவறிவிட்டது."

The motion was put and declared lost.

A poll was demanded and the House divided thus :—

**Ayes.**

Sri V. R. Nedunchezhiyan.
Sri M. Karunanithi.
Sri K. A. Mathialagan.
Sri Saw. Ganesan.
Sri T. L. Sasivarna Thevar.
Sri M. Kalyanasundaram.
Sri A. P. Dharmalingam.
Sri S. S. Rajendran.
Sri Rama. Arangannal.
Sri V. S. S. Mani.
Sri M. Rajangam.
Sri Kanchi Manimozhiar.
Sri KR. RM. Kariamanicka Ambalam.
Sri A. Perumal.
Sri K. Cheemaichamy.
Sri N. Rajangam.
Sri V. Arunachalam.
Sri K. S. Mani.
Sri N. Chinnamunisamy Chetty.

[5th August 1966

*Ayes*—cont.

Sri S. Madhavan.
Sri T. P. Alagamuthu.
Sri S. Mani.
Sri A. Thiagarajan.
Sri P. Murugaiyan.
Sri A. Duraiyarasan.
Sri V. R. Periannan.
Sri P. V. Sriramulu.
Sri M. Kamalanathan.
Sri C. G. Viswanathan.
Sri S. Muthulingam.
Pulavar K. Govindan.
Sri C. V. Velappan.
Sri C. Manickam.
Sri T. Chinnasamy.
Sri M. R. Krishnamurthy.
Sri A. Thangavelu.
Sri K. R. Sambandam
Sri Munu Adhi.
Sri S. Murugaiyan.
Sri P. U. Shanmugam.
Srimathi Jagadambal Velayudham.
Sri M. S. Mani.
Sri K. Thirupathy.
Sri M. P. Vadivelu.
Sri R. Nallamuthu.
Sri N. P. Sengottuvelu.
Sri S. Arumugam.
Sri M. V. Karivengadam.
Sri A. G. Balakrishnan.
Sri R. Narayanan.
Sri S. Ramaswamy.
Sri V. Krishnamoorthy.
Sri K. R. Munirathnam.
Sri R. Abdul Khaleel.
Sri S. J. Ramasamy.
Sri R. Sampangi.

*Noes.*

Sri K. Parthasarathy.
Sri S. Chinnayyan.
Sri M. Alagiriswamy.
Sri C. M. Ambikapathi.
Sri L. Anandan.
Sri S. Angamuthu Naicker.
Sri K. S. Ardhanareeswara Gounder
Sri P. Appavoo.
Sri A. Appavoo Thevar.
Sri A. Arumugam.
Sri R. S. Arumugam.



5th August 1966]

*Noes*—cont.

Sri V. S. Arunachalam.
Sri A. B. Balagan.
Sri A. M. P. S. Balagangadharan.
Sri V. Bashyam Reddi.
Sri M. Chelliah.
Sri G. E. Chinnadurai.
Sri S. Chinna Karuppa Thevar.
The Hon. Sri M. Bhaktavatsalam.
The Hon. Sri P. Kakkan.
The Hon. Sri V. Ramaiah.
Sri P. Ramachandran.
Sri R. Krishnaswamy Naidu.
Sri A. S. Dakshinamoorthy Gounder.
Sri M. Dhandayuthapani.
Sri A. Doraiswamy.
Sri N. Ekambara Mudaliar.
Sri V. Ellama Naidu.
Sri T. P. Elumalai.
Sri G. Gomathisankara Dikshidar.
Sri K. Gopala Gounder.
Sri R. Govindarajulu Naidu.
Sri K. S. G. Haja Shriff.
Sri P. Jayaraj.
Sri R. Jeevarathnam.
Sri T. Kadambavana Sundaram.
Sri T. M. Kaliannan.
Sri T. Karcha Gowder.
Sri S. V. Natesa Mudaliar.
Sri C. Kothandarama Bagavathar.
Sri K. M.Krishnaswami.
Sri R. Krishnaswamy Gopalar.
Sri M. Kulandaiswamy Gounder.
Sri N. Mahalingam.
Sri T. Manavalan.
Sri K. Marappa Gounder.
Sri M. Maruthanayagam Pillai.
Sri J. Matha Gowder.
Sri V. A. Muthiah.
Sri M. P. Muthukaruppannaswami Gounder.
Sri P. K. Muthuvelappa Gounder.
Sri T. M. Nallaswamy.
Sri S. Nanjunda Row.
The Hon. Sri N. Nallasenapathi Sarkarai Manradiar
The Hon. Sri G. Bhuvarahan.
The Hon. Sri S. M. A. Majid.
Srimathi T. N. Anandanayaki.
Srimathi A. Suares.
Srimathi C. Kolandai Ammal.
Srimathi P. K. R. Lakshmikantham.
Srimathi A. S. Ponnammal.

[5th August 1966

*Noes*—cont.

Srimathi A. Krishnaveni.
Srimathi Lakshminarasamma.
Srimathi Rajathi Kunchithapatham.
Srimathi Parvathi Arjunan.
Srimathi N. K. Ranganayaki.
Kumari D. Sulochana.
Sri K. Narayanaswamy Pillai.
Sri G. Narayanaswamy Naidu.
Sri K. S. Nataraja Gounder.
Sri N. Duraipandian.
Sri K. P. Palanisamy.
Sri K. N. Palaniswami Gounder.
Sri G. D. Perumal Raju.
Sri R. Ponnappa Nadar.
Sri K. Ponniah.
Sri A. M. Ponrangam.
Sri S. Ponnusamy.
Sri R. Rajagopalaswamy Naicker
Sri B. Rajagopal Naidu.
Sri P. Rajagopal.
Sri G. Rajaram.
Sri A. Ramachandra Rayar.
Sri N. Ramachandra Reddy.
Sri A. L. Ramakrishna Naidu.
Sri N. S. Ramalingam.
Sri S. Ramalingam.
Sri V. Ramanathan.
Sri A. R. Ramasami.
Sri S. Ramasamy Naidu.
Sri N. Ramaswamy Udayar.
Sri A. Rathnavel Gounder.
Sri R. Rangaswamy.
Sri S. Sadasivam.
Sri B. Parameswaran.
Sri R. V. Swaminathan.
Sri K. T. Kosalram.
Sri Dr. B. Natarajan.
Sri A. P. C. Veerabahu.
Sri S. Sangili.
Sri D. N. Vadivel.
Sri V. Sankaran.
Sri P. R. Srineevasa Padayachi.
Sri M. S. Selvarajan.
Sri A. Senapathi Gounder.
Sri R. Sengaliappan.
Sri N. Shanmuga Sundaram.
Sri SV. SM. Sivaraman Ambalam.
Sri S. Sivasubramaniam.
Sri N. Soundarapandian.
Sri O. Sreenivasa Reddiar.



5th August 1966]

*Noes*—cont.

Sri C. Srinivasan.
Sri At. A. P. Soundravel Servai.
Sri A. R. Subbiah Mudaliar.
Sri R. Subramaniam.
Sri K. S. Subramania Gounder.
Sri N. Subramaniam Chettiar.
Sri N. S. Sundararajan.
Sri K. B. Palani.
Sri T. S. Swaminatha Odayar.
Sri R. Thangavelu.
Sri M. D. Thiagaraja Pillai.
Sri K. Thiruvengadam.
Sri P. Urkavalan.
Sri T. B. Kesava Reddi.
Sri G. Venkataraman.
Sri O. Venkatasubba Reddy.
Sri N. V. Venugopalakrishnasami.
Sri M. William.
Sri A. Chidambaranatha Nadar.

Ayes : 56 ; Noes : 130 ; Neutral : Nil.

The motion was lost.

2-42 p.m.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory Rules and Orders.

* 90. *Notification issued with G.O. Ms. No. 997, Rural Development and Local Administration, dated the 19th April 1966 declaring the Ayyankoilpatti, hamlet of Ganguwarpatti village in the Periyakulam taluk of Madurai district as Gramdhan village under the Madras Bhoodhan Yagna Act, 1958. [Laid on the Table of the House under Section 28 (3) of the Madras Bhoodhan Yagna Act, 1958 (Madras Act XV of 1958.)]*

91. *Notification issued with Roc. No. 78425/64-F5, dated the 19th January 1966, declaring that the provisions of the Madras District Municipalities Act, 1920, relating to building regulations specified in the schedule of the notification and the rules framed thereunders shall be extended to be in force in the entire area of the Velacheri Town Panchayat in Chingleput district with effect from 1st February 1966. [Laid on the Table of the House under Section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.)]*

[5th August 1966

## B. Reports Notifications and Other Papers.

† 19. *The Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco Validation) Bill*, 1966 (*L.A. Bill No.* 9 *of* 1966).

† 20. *The Madras Urban Land Tax Bill*, 1966 (*L.A. Bill No.* 10 *of* 1966.)

† 21. *The Madras Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill*, 1966 (*L.A. Bill No.* 11 *of* 1966).

* Laid on the Table of the House on 4th August 1966.
† Despatched to Members on 3rd August 1966.



5th August 1966]

### APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 107 at page 448.]

The measures taken by the State Government to prevent industrial congestions around Madras City are as follows :—

1. Whenever application for licences for setting up new Industries under the Industries Development Regulation Act, come up, the parties are advised to put up as far as possible in the mofussil and in underdeveloped areas.

2. Industrial Estate numbering 22 have so far been set up all over the State and common facilities like Tool Rooms, Foundries and Forge Shops, have been set up by the Department in these Industrial Estates. Except for two Industrial Estates, all others are distributed in the mofussil.

3. While recommending setting up of spinning mills in the private sector, it is ensured that every district gets one or more licences.

4. The Electricity grid or net work connecting all important towns and villages in the mofussil is existing and this is further being encouraged; so that power is more available at all places for running the Industries.

5. The thermal surcharge on industrial consumption of power in and around Madras, has in a way induced many of the industries to be away from the thermal belt.

6. The loans under the State Aid Act by the Industries Department are mostly concentrated in the mofussil areas and action is being taken to disburse as much of loan as possible to entrepreneurs in mofussil area.

7. Departmental units like Foundries, General Purpose Engineering Workshops, Model Carpentry and Blacksmith Units and other Common Facility Service Centres have been and are being set up in large numbers in backward and rural areas.

சென்னை நகரைச் சுற்றிலும் தொழிற்சாலைகளின் நெரிசலைத் தடுக்க அரசாங்கம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

1. தொழில் வளர்ச்சி ஒழுங்கு முறைச் சட்டத்தின்கீழ்ப் புதிய தொழில்களைத் துவக்குவதற்கான உரிமங்களுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளப்படும்போது, கூடியவரையில் வெளியூர்களிலும் மேம்பாடடையாத பகுதிகளிலும் தொழில் பிரிவுகளை நிறுவும்படி விண்ணப்பதாரருக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

2. இதுவரையில் இம் மாநிலத்தில் 22 தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன. இத்தொழிற் பேட்டைகளில் கருவிப் பட்டறைகள், வார்ப்படசாலைகள், அச்சுப் பட்டறைகள் போன்ற பொது வசதி நிலையங்களை தொழில் துறையினர் ஏற்படுத்தியுள்ளனர். இரண்டு தொழிற்பேட்டைகள் நீங்கலாக, ஏனைய தொழிற் பேட்டைகள் வெளியூர்களில் பரவலாக அமைந்துள்ளன.

[5th August 1966

3. தனியார் துறையில் நூற்பாலைகள் நிறுவுவது குறித்து பரிவுரை செய்கையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் உரிமம் அல்லது அதற்கு மேற்பட்ட உரிமங்கள் கட்டாயம் கிடைக்கும் படிப் பார்த்துக்கொள்ளப்படுகிறது.

4. வெளியூர்களில் உள்ள முக்கிய நகர்கள், கிராமங்கள் அனைத்தையும் இணைக்கிற மின்சார இணைப்புகள் ஏற்கெனவே உள்ளன. தொழில்களை நடத்துவதற்காக எல்லா இடங்களிலும் மின்சாரம் கிடைப்பது வசதியாக இருக்கும்பொருட்டு மேலும் பல இடங்களிலும் இணைப்பு ஏற்படுத்துவது மேற்கொண்டும் ஊக்குவிக்கப்படுகிறது.

5. சென்னையிலும் அதைச் சுற்றியும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின்மீது அனல் மின்சார மேல்வரி விதிக்கப்படுகிறது. பல தொழில்கள் அனல் மின்சாரப் பகுதிக்கு வெளியிலேயே நிறுவப்பட இது ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது.

6. தொழில்களுக்கு அரசாங்க உதவிச் சட்டத்தின்கீழ் தொழில்துறை வழங்கும் கடன்கள் பெரும்பாலும் வெளியூர்ப் பகுதிகளில் வழங்கப்படுகின்றன. மேலும், வெளியூர்ப் பகுதிகளில் உள்ள தொழிலதிபர்களுக்கு இயன்ற அளவு அதிகக் கடன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7. வார்ப்படசாலைகள், பொதுக் காரியப் பொறியியல் பட்டறைகள் மாதிரி தச்சு வேலை கருமார் வேலைப் பிரிவுகள் ஏனைய பொது வசதிப் பணி நிலையங்கள் போன்ற பல தொழில் துறைப் பிரிவுகள் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. மேலும் அத்தகைய பகுதிகளில் அப் பிரிவுகள் நிறுவப்பட்டும் வருகின்றன.

## APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 115 at page 455]

(*a*) The number of students admitted in each agricultural school during the year 1965-66 was 20 and the strength in various schools during the year was as follows :—

| *Location of school.* | *Districts served by the school.* | *Number of students.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Katpadi | North Arcot | 20 |
| 2 Kakuppam | South Arcot | 20 |
| 3 Conjeevaram | Chingleput | 20 |
| 4 Paparapatty | Salem and Dharmapuri | 20 |
| 5 Tiruvarankulam | Tiruchirappalli | 19 |
| 6 Sakkottai | Thanjavur | 19 |
| 7 Paramakudi | Ramanathapuram and Madurai | 20 |
| 8 Karaiyiruppu | Tirunelveli | 20 |
| 9 Mulucode | Kanyakumari | 20 |
| 10 Bhavanisagar | Coimbatore | 19 |
| 11 Ootacamund | Nilgiris | 18 |



5th August 1966]

(*b*) The concessions granted to the students are as follows :—

The students are paid a stipend of Rs. 40 per month in Ootacamund and Rs. 35 per month in other places. Besides this stipend, they are given a sum of Rs. 5 per month as pocket expenses. They are provided rent-free accommodation and utensils required for running their messes. Library and reading room facilities are provided to the students in each school. For recreation, the students are provided with games articles in the schools. During the course of training, they will be taken on tour to the various places of agricultural interest in the District Research Stations. Livestock Farms, Milk Colony, Poultry Farms and Sewage Farms situated all over the State for studying the development of Agriculture and Animal Husbandry at the cost of the Government not exceeding Rs. 90 per student. No tuition-fee is charged for the course of training which is one year starting from July every year.

(அ) 1965-66-ல் ஒவ்வொரு வேளாண்மைப் பள்ளியிலும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 20; ஆனால் ஒவ்வொரு பள்ளியிலும் இப்போதுள்ள மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| பள்ளி இருக்கும் இடம். | பள்ளிகள் எந்த மாவட்டங்களுக்குப் பயன்படுகின்றன என்பது. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 காட்பாடி | வட ஆர்க்காடு | 20 |
| 2 காகுப்பம் | தென் ஆர்க்காடு | 20 |
| 3 காஞ்சிபுரம் | செங்கற்பட்டு | 20 |
| 4 பாப்பாரப்பட்டி | சேலம், தர்மபுரி | 20 |
| 5 திருவரங்குளம் | திருச்சிராப்பள்ளி | 19 |
| 6 சாக்கோட்டை | தஞ்சாவூர் | 19 |
| 7 பரமக்குடி | இராமநாதபுரம், மதுரை | 20 |
| 8 கரையிருப்பு | திருநெல்வேலி | 20 |
| 9 முழுக்கோடு | கன்னியாகுமரி | 20 |
| 10 பவானி சாகர் | கோயம்புத்தூர் | 19 |
| 11 உதகமண்டலம் | நீலகிரி | 18 |

(இ) மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன :—

உதகமண்டலத்தில் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பயிற்சி
உதவிச் சம்பளமாக ரூ. 40-ம், பிற இடங்களில் ரூ. 35-ம் வழங்கப்படுகிறது.
இது மட்டுமின்றி சில்லரைச் செலவுகளுக்காக அவர்களுக்கு மாதம்
ஒன்றுக்கு ரூ. 5 அளிக்கப்படுகின்றது. அவர்களுக்கு இலவச இடவசதி
யும், உணவகம் நடத்துவதற்குத் தேவையான பாத்திரங்களும் வழங்கப்
படுகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களுக்கென நூல் நிலையங்
களும் படிப்பகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு விளையாடு
வதற்கு விளையாட்டுக் கருவிகளும் பள்ளிகளிலேயே வசதி செய்யப்பட்டுள்ளன.
வேளாண்மை, விலங்கின வளர்ப்பு இவற்றின் வளர்ச்சியைப்பற்றி
தெரிந்து கொள்வதற்காக, நமது மாநிலம் எங்கும் உள்ள மாவட்ட
ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண்மை நிறுவனங்கள், ஆட்டுப்பண்ணைகள்,
மாட்டுப் பண்ணைகள், பால் காலனி, கோழிப்பண்ணைகள், கழிவு நீர்
அகற்றும் பண்ணைகள், வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு
மாணவர்கள் சுற்றுலாவில் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதற்காக
ஒவ்வொரு மாணவருக்கும் அரசாங்கம் ரூ. 90-க்கு மேற்படாமல் செலவு
செய்கின்றது. இப்பயிற்சிக்காகச் சம்பளம் எதுவும் வாங்கப்படுவதில்லை.
பயிற்சிக் காலம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்திலிருந்து தொடங்கி
ஓர் ஆண்டாகும்.

[5th August 1966

APPENDIX III.

[*Vide* Answer to Starred Question No. 139 at page 471]

STATEMENT SHOWING THE EXPENDITURE INCURRED ON THE CONSUMPTION OF PETROL AND REPAIR CHARGES INCURRED TO THE JEEPS AVAILABLE IN THE PANCHAYAT UNIONS DURING THE YEAR 1964-65.

| *Serial number and name of the Panchayat Union.* (1) | *Expenditure on the consumption of petrol.* (2) RS. | P. | *Expenditure on repairs.* (3) RS. | P. |
|---|---|---|---|---|
| *North Arcot district.* | | | | |
| 1 Arkonam .. .. .. .. | 4,554 | 62 | 802 | 64 |
| 2 Nemili .. .. .. .. | 6,487 | 44 | 51 | 85 |
| 3 Kaveripakkam .. .. .. | 1,138 | 26 | 426 | 90 |
| 4 Walajapet .. .. .. | 6,428 | 83 | 1,405 | 39 |
| 5 Sholingur .. .. .. | 3,771 | 66 | 1,895 | 46 |
| 6 Arcot .. .. .. .. | 2,845 | 07 | 1,658 | 16 |
| 7 Timiri .. .. .. .. | 4,267 | 71 | 1,506 | 17 |
| 8 Katpadi .. .. .. .. | 2,522 | 79 | 627 | 63 |
| 9 K. V. Kuppam .. .. .. | 3,548 | 56 | 428 | 80 |
| 10 Pernambut .. .. .. | 2,920 | 35 | 1,464 | 12 |
| 11 Gudiyatham .. .. .. | 3,868 | 07 | 1,564 | 89 |
| 12 Tirupattur .. .. .. | 4,286 | 05 | 503 | 40 |
| 13 Alangayam .. .. .. | 3,392 | 05 | 878 | 01 |
| 14 Natrampalli .. .. .. | 3,614 | 80 | 1,020 | 75 |
| 15 Kandili .. .. .. .. | 2,078 | 40 | 222 | 80 |
| 16 Vellore .. .. .. .. | 3,562 | 93 | 449 | 66 |
| 17 Kaniyambadi .. .. .. | 3,740 | 93 | 654 | 26 |
| 18 Anaicut .. .. .. .. | 3,954 | 89 | 1,921 | 05 |
| 19 Madanur .. .. .. | 4,566 | 51 | 1,740 | 53 |
| 20 Arni .. .. .. | 2,199 | 55 | 1,168 | 63 |
| 21 Kasthambadi .. .. .. | 5,291 | 84 | 2,253 | 42 |
| 22 Anakkavur .. .. .. | 5,068 | 11 | 2,348 | 43 |
| 23 Cheyyar .. .. .. .. | 3,495 | 19 | 1,933 | 00 |
| 24 Vembakkam .. .. .. | 2,264 | 20 | 254 | 90 |
| 25 Wandiwash .. .. .. | 3,976 | 28 | 1,376 | 34 |
| 26 Thellar .. .. .. .. | 4,154 | 12 | 1,651 | 40 |
| 27 Peranamallur .. .. .. | 3,110 | 18 | 2,255 | 54 |
| 28 Polur .. .. .. .. | 2,949 | 55 | 2,547 | 33 |
| 29 Chetput .. .. .. .. | 3,305 | 25 | 1,315 | 08 |
| 30 Kalasapakkam .. .. | 4,013 | 54 | 924 | 60 |
| 31 Chengam.. .. .. .. | 2,640 | 28 | 1,274 | 44 |
| 32 Pudupalayam .. .. .. | 4,743 | 04 | 1,167 | 26 |
| 33 Thandarampattu .. .. | 3,850 | 89 | 1,356 | 99 |
| 34 Tiruvannamalai .. .. | 3,873 | 05 | 537 | 20 |
| 35 Kizhpennathur .. .. .. | 909 | 14 | 335 | 69 |
| 36 Thurijapuram .. .. .. | 4,452 | 39 | 969 | 54 |
| *South Arcot district.* | | | | |
| 37 Gingee .. .. .. .. | 3,486 | 47 | 620 | 62 |
| 38 Melamalayanur .. .. .. | 3,590 | 51 | 2,661 | 54 |
| 39 Vallam .. .. .. .. | 4,205 | 60 | 1,431 | 06 |
| 40 Olakkur .. .. .. .. | 4,597 | 82 | 2,021 | 54 |
| 41 Markanam .. .. .. | 2,510 | 90 | 3,481 | 04 |
| 42 Mayilam .. .. .. | 2,923 | 52 | 2,195 | 21 |
| 43 Vanur .. .. .. .. | 3,101 | 17 | 629 | 57 |



5th August 1966]

| *Serial number and name of the Panchayat Union.* (1) | *Expenditure on the consumption of petrol.* (2) RS. | P. | *Expenditure on repairs.* (3) RS. | P. |
|---|---|---|---|---|
| *South Arcot district—cont.* | | | | |
| 44 Kanai .. .. .. .. | 2,879 | 17 | 1,104 | 80 |
| 45 Vikkiravandi .. .. .. | 3,531 | 69 | 891 | 07 |
| 46 Kandamangalam .. .. | 3,849 | 43 | 1,057 | 00 |
| 47 Koliyanur .. .. .. | 4,498 | 32 | 698 | 60 |
| 48 Tirunavalur .. .. .. | 3,855 | 18 | 1,253 | 87 |
| 49 Ulundurpettai .. .. .. | 3,181 | 24 | 2,015 | 55 |
| 50 Tiruvennainallur .. .. | 3,293 | 16 | 1,087 | 44 |
| 51 Muhaiyur .. .. .. | 5,085 | 98 | 2,488 | 55 |
| 52 Tirukoilur .. .. .. | 3,610 | 90 | 394 | 62 |
| 53 Kallakurichi .. .. .. | 3,720 | 75 | 2,414 | 83 |
| 54 Sankarapuram .. .. .. | 4,363 | 50 | 2,456 | 93 |
| 55 Rishivandiyam .. .. .. | 3,657 | 81 | 1,879 | 56 |
| 56 Chinnasalem .. .. .. | 3,649 | 33 | 1,133 | 25 |
| 57 Thyagadurgam .. .. .. | 2,631 | 98 | 1,962 | 40 |
| 58 Vridhachalam .. .. .. | 3,479 | 44 | 2,293 | 00 |
| 59 Mangalur .. .. .. | 3,745 | 75 | 1,172 | 91 |
| 60 Nallur .. .. .. .. | 2,575 | 69 | 2,080 | 61 |
| 61 Kammapuram .. .. .. | 3,210 | 65 | 1,926 | 19 |
| 62 Cuddalore .. .. .. | 3,800 | 14 | 1,046 | 55 |
| 63 Nellikuppam .. .. .. | 2,585 | 11 | 676 | 25 |
| 64 Kurinjipadi .. .. .. | 2,710 | 24 | 1,167 | 29 |
| 65 Panruti .. .. .. .. | 4,588 | 36 | 1,607 | 80 |
| 66 Orathur (Keerapalayam) .. | 4,324 | 40 | 1,809 | 75 |
| 67 Melbuvanagiri .. .. | 3,276 | 81 | 1,690 | 62 |
| 68 Parangipettai .. .. .. | 3,920 | 61 | 723 | 29 |
| 69 Komarakshi .. .. .. | 4,616 | 89 | 1,257 | 14 |
| 70 Kattumannarkoil .. .. | 3,851 | 21 | 1,676 | 87 |
| *Chingleput district.* | | | | |
| 71 Sholavaram .. .. .. | 2,067 | 72 | 561 | 92 |
| 72 Minjur .. .. .. .. | 1,834 | 39 | .. | |
| 73 Gummidipoondi.. .. .. | 4,132 | 10 | 1,494 | 15 |
| 74 Tiruvellore .. .. .. | 4,405 | 77 | 4,436 | 63 |
| 75 Poondi .. .. .. .. | 4,758 | 38 | 908 | 69 |
| 76 Uthukkottai .. .. .. | 2,048 | 53 | 2,840 | 52 |
| 77 Kadambathur .. .. .. | 2,317 | 00 | 62 | 50 |
| 78 Tiruvalangadu .. .. .. | 2,382 | 14 | 2,440 | 25 |
| 79 Ramakrishnarajupet .. .. | 2,028 | 47 | 1,981 | 03 |
| 80 Tiruttani .. .. .. | 2,138 | 57 | 732 | 65 |
| 81 Pallipet .. .. .. .. | 1,487 | 86 | .. | |
| 82 Kunnathur .. .. .. | 4,472 | 50 | 4,614 | 85 |
| 83 Poonamallee .. .. .. | 2,744 | 12 | 392 | 06 |
| 84 Sriperumbudur .. .. .. | 6,222 | 88 | 141 | 96 |
| 85 Madavaram .. .. .. | 2,469 | 88 | 964 | 24 |
| 86 St. Thomas Mount .. .. | 3,477 | 99 | 2,258 | 98 |
| 87 Villivakkam .. .. .. | 2,697 | 91 | 68 | 52 |
| 88 Kattangolathur .. .. | 3,941 | 37 | 1,073 | 84 |
| 89 Tirukazhikundram .. .. | 2,120 | 13 | 7,895 | 67 |

| Serial number and name of the Panchayat Union. (1) | Expenditure on the consumption of petrol. (2) RS. | P. | Expenditure on repairs. (3) RS. | P. |
|---|---|---|---|---|
| *Chingleput district*—cont. | | | | |
| 90 Tiruporur .. .. .. | 2,669 | 52 | 37 | 25 |
| 91 Kancheepuram .. .. .. | 3,155 | 48 | 180 | 07 |
| 92 Walajabad .. .. .. | 2,209 | 08 | 487 | 40 |
| 93 Uthiramerur .. .. .. | 2,906 | 22 | 3,194 | 94 |
| 94 Madurantakam .. .. .. | 3,499 | 09 | 4,608 | 19 |
| 95 Chithamur .. .. .. | 2,618 | 58 | 1,200 | 69 |
| 96 Acharapakkam .. .. .. | 2,758 | 44 | 2,818 | 57 |
| 97 Lathur .. .. .. .. | 2,735 | 33 | 937 | 20 |
| *Coimbatore district.* | | | | |
| 98 Bhavani .. .. .. .. | 3,476 | 05 | 1,586 | 64 |
| 99 Ammapettai .. .. .. | 3,046 | 56 | 1,718 | 58 |
| 100 Andiyur .. .. .. .. | 1,674 | 86 | 471 | 90 |
| 101 Gobichettipalayam .. .. | 3,576 | 66 | 1,864 | 04 |
| 102 Thuckanaickenpalayam .. | 2,484 | 40 | 1,866 | 40 |
| 103 Sathyamangalam .. .. | 2,955 | 76 | 426 | 73 |
| 104 Bhavanisagar .. .. .. | 2,182 | 07 | 986 | 50 |
| 105 Thalavadi .. .. .. | 4,567 | 98 | 2,242 | 21 |
| 106 Nambiyur .. .. .. | 2,755 | 63 | 1,438 | 68 |
| 107 Erode .. .. .. .. | 2,044 | 79 | 2,033 | 73 |
| 108 Kodumudi .. .. .. | 2,197 | 44 | 895 | 33 |
| 109 Modakurichi .. .. .. | 2,104 | 55 | 489 | 47 |
| 110 Perundurai I .. .. .. | 2,223 | 93 | 1,790 | 17 |
| 111 Perundurai II .. .. .. | 2,784 | 09 | 1,156 | 40 |
| 112 Uthukuli .. .. .. | 1,567 | 66 | 1,430 | 67 |
| 113 Dharapuram .. .. .. | 2,107 | 24 | 566 | 24 |
| 114 Kangayam .. .. .. | 3,665 | 20 | 968 | 50 |
| 115 Kundadam .. .. .. | 3,983 | 18 | 996 | 07 |
| 116 Mulanur .. .. .. .. | 2,713 | 87 | 1,861 | 34 |
| 117 Vellakoil .. .. .. | 3,286 | 84 | 344 | 63 |
| 118 Sulur .. .. .. .. | 2,590 | 84 | 2,330 | 96 |
| 119 Palladam .. .. .. | 1,877 | 03 | 1,872 | 71 |
| 120 Tiruppur .. .. .. | 3,590 | 83 | 3,337 | 29 |
| 121 Lakshminaickenpalayam .. | 2,720 | 17 | 1,561 | 41 |
| 122 Pongalur .. .. .. | 2,562 | 40 | 3427 | 79 |
| 123 Avanashi .. .. .. | 4,096 | 67 | 849 | 43 |
| 124 Karamadai .. .. .. | 2,457 | 08 | 2,132 | 26 |
| 125 Annur .. .. .. .. | 3,443 | 53 | 3,123 | 90 |
| 126 Sarkarsamakulam .. .. | 3,073 | 27 | 1,892 | 42 |
| 127 Singanallur .. .. .. | 2,234 | 77 | 1,863 | 35 |
| 128 Thondamuthur .. .. | 4,124 | 64 | 1,698 | 94 |
| 129 Perianaickanpalayam .. .. | 3,555 | 36 | 2,281 | 36 |
| 130 Perur .. .. .. .. | 3,501 | 39 | 1,155 | 88 |
| 131 Madukarai .. .. .. | 4,809 | 82 | 2,445 | 41 |
| 132 Kinathukadavu .. .. | 10,175 | 12 | 1,063 | 24 |
| 133 Anamalai .. .. .. | 3,060 | 21 | 1,233 | 06 |
| 134 Pollachi .. .. .. .. | 3,689 | 40 | 4,486 | 27 |
| 135 Gudimangalam .. .. | 4,919 | 56 | 1,106 | 90 |
| *Coimbatore district*—cont. | | | | |
| 136 Madathukulam .. .. | 3,305 | 58 | 805 | 07 |
| 137 Udumalpet .. .. .. | 4,232 | 77 | 2,562 | 90 |
| 138 Valparai .. .. .. .. | No jeep was supplied then. | | | |
| *Dharmapuri district.* | | | | |
| 139 Hosur .. .. .. .. | 3,264 | 39 | 333 | 87 |
| 140 Shoolagiri .. .. .. | 2,396 | 34 | 461 | 05 |
| 141 Thalli .. .. .. | 2,627 | 11 | 93 | 57 |
| 142 Kelamangalam .. .. .. | 2,287 | 42 | 1,225 | 13 |
| 143 Veppanapalli .. .. .. | 2,984 | 59 | 417 | 70 |
| 144 Krishnagiri .. .. .. | 2,602 | 43 | 320 | 10 |
| 145 Uthanagiri .. .. .. | 2,470 | 26 | 107 | 62 |
| 146 Bargur .. .. .. | 2,561 | 45 | 673 | 04 |
| 147 Kaveripattinam .. .. | 3,047 | 02 | 152 | 10 |
| 148 Harur .. .. .. .. | 4,985 | 69 | 625 | 19 |
| 149 Morapur .. .. .. .. | 3,845 | 31 | Nil. | |
| 150 Pappireddipatti .. .. | 2,295 | 11 | Nil. | |
| 151 Dharmapuri .. .. .. | 3,382 | 29 | 559 | 19 |
| 152 Palacode .. .. .. | 3,104 | 46 | 338 | 14 |
| 153 Nallampalle .. .. .. | 3,581 | 01 | 225 | 10 |
| 154 Pennagaram .. .. .. | 2,452 | 37 | 27 | 10 |
| *Kanyakumari district.* | | | | |
| 155 Munichira .. .. .. | 2,638 | 93 | 767 | 98 |
| 156 Melpuram .. .. .. | 2,368 | 91 | 1,748 | 23 |
| 157 Killiyur .. .. .. | 2,296 | 45 | 1,170 | 52 |
| 158 Thalakulam (Kuruthancode).. | 2,670 | 13 | 931 | 31 |
| 159 Thuckalay .. .. .. | 3,058 | 35 | 1,631 | 32 |
| 160 Thiruvattar .. .. .. | 3,360 | 20 | 1,775 | 06 |
| 161 Thovala .. .. .. | 3,054 | 58 | 1,026 | 70 |
| 162 Agastheeswaram .. .. | 3,973 | 66 | 828 | 21 |
| 163 Rajakkamangalam .. .. | 4,693 | 49 | 2,978 | 17 |
| *Nilgiris district.* | | | | |
| 164 Gudalur .. .. .. | 3,676 | 31 | 1,624 | 88 |
| 165 Ootacamund .. .. .. | 4,111 | 30 | 384 | 57 |
| 166 Coonoor .. .. .. | 5,023 | 03 | 823 | 67 |
| 167 Kotagiri .. .. .. | 3,499 | 75 | 1,290 | 17 |
| *Madurai district.* | | | | |
| 168 Dindigul .. .. .. | 2,935 | 34 | 1,186 | 72 |
| 169 Athur I .. .. .. | 4,210 | 12 | 2,729 | 02 |
| 170 Athur II (Reddiar Chatram).. | 4,036 | 19 | 1,073 | 57 |
| 171 Vedasendur .. .. .. | 4,982 | 34 | 1,198 | 88 |

| Serial number and name of the Panchayat Union. (1) | Expenditure on the consumption of petrol. (2) RS. P. | Expenditure on repairs. (3) RS. P. |
|---|---|---|
| *Madurai district*—cont. | | |
| 172 Sanarpatti | 3,529 93 | 508 19 |
| 173 Palayam | 4,003 73 | 1,034 44 |
| 174 Vadamadurai | 2,649 28 | 49 12 |
| 175 Palani | 2,931 39 | 554 26 |
| 176 Oddanchatram | 2,452 21 | 880 68 |
| 177 Thoppampatti | 2,409 04 | 300 18 |
| 178 Kodaikanal | 4,891 60 | 295 55 |
| 179 Vadugapatti | 2,667 48 | 1,181 60 |
| 180 Cumbum | 1,654 48 | 2,615 70 |
| 181 Uthamapalayam | 4,136 04 | 904 83 |
| 182 Chinnamonur | 2,075 47 | 383 25 |
| 183 Theni | 2,899 42 | 1,590 89 |
| 184 Bodinaickanur | 3,710 86 | 5,208 73 |
| 185 Andipatti | 3,363 22 | 596 64 |
| 186 Vadipatti | 2,961 95 | 495 75 |
| 187 Alanganallur | 774 42 | 1,246 07 |
| 188 Batlagundu | 2,690 73 | 1,380 44 |
| 189 Nilakottai | 4,350 38 | 1,510 93 |
| 190 Melur I (North) | 2,824 42 | 462 59 |
| 191 Melur II (South) | 2,747 99 | 2,644 83 |
| 192 Natham | 2,017 43 | 473 65 |
| 193 Madurai East | 3,581 90 | 1,279 61 |
| 194 Madurai West | 2,798 00 | 1,112 00 |
| 195 Tirupparankundram | 3,745 00 | 1,981 00 |
| 196 Chellampatti | 2,306 01 | 935 17 |
| 197 Sedapatti | 2,177 16 | Nil. |
| 198 Usilampatti | 2,553 00 | 2,623 00 |
| 199 T. Kallupatti | 2,647 88 | 1,882 22 |
| 200 Thirumangalam | 2,897 24 | 2,860 55 |
| 201 Kallikudi | 1,836 45 | 982 19 |
| 202 Kallal | 2,056 26 | 1,189 53 |
| 203 Singampunari | 3,265 90 | 1,944 10 |
| 204 Sakkottai | 2,960 22 | 4,277 33 |
| 205 Thiruppathur | 3,115 07 | 1,674 05 |
| 206 Sivaganga | 3,876 00 | 839 56 |
| *Ramanathapuram district.* | | |
| 207 Kalayarkoil | 3,408 91 | 129 35 |
| 208 Manamadurai | 2,017 15 | 1,490 16 |
| 209 Tiruppuvanam | 6,173 10 | 447 03 |
| 210 Thiruvadanai | 4,816 10 | 2,990 35 |
| 211 Devakottai | 3,853 47 | 1,041 90 |
| 212 Kannangudi | 4,199 69 | 2,460 84 |
| 213 Rajasingamangalam | 4,228 29 | 3,052 74 |
| 214 Paramakudi | 2,045 68 | 920 38 |
| 215 Bogalur | 1,985 57 | 1,215 68 |
| 216 Illayangudi | 2,141 97 | 409 81 |
| 217 Mudukulathur | 2,817 56 | 1,604 39 |



| Serial number and name of the Panchayat Union. (1) | Expenditure on the consumption of petrol. (2) RS. P. | Expenditure on repairs. (3) RS. P. |
|---|---|---|
| *Ramanathapuram district*—cont. | | |
| 218 Kadaladi | 2,007 25 | 3,149 58 |
| 219 Kamudi | 3,435 52 | 1,666 49 |
| 220 Mandapam | 4,425 23 | 1,934 04 |
| 221 Tiruppullani | 2,828 58 | 790 08 |
| 222 Ramanathapuram | 2,271 73 | 1,713 22 |
| 223 Thiruchuzhi | 3,354 42 | 435 67 |
| 224 Aruppukottai | 2,452 80 | 3,197 75 |
| 225 Narikudi | 2,909 32 | 1,114 03 |
| 226 Kariapatti | 3,523 00 | 819 53 |
| 227 Vembakottai | 2,345 41 | 2,851 10 |
| 228 Sathur | 2,841 48 | 1,175 21 |
| 229 Virudhunagar | 3,210 45 | 461 31 |
| 230 Sivakasi | 4,802 08 | 1,947 30 |
| 231 Watrap | 3,551 88 | 433 41 |
| 232 Rajapalayam | 2,565 85 | 3,186 72 |
| 233 Srivilliputhur | 3,985 22 | 892 68 |
| *Salem district.* | | |
| 234 Kulathur | 5,061 89 | 7 62 |
| 235 Nangavalli | 3,511 94 | 324 50 |
| 236 Taramangalam | 3,155 87 | 100 75 |
| 237 Kadayampatti | 2,650 48 | 78 90 |
| 238 Omalur | 2,204 29 | 652 04 |
| 239 Mecheri | 2,409 44 | 143 49 |
| 240 Yercaud | 2,507 97 | 148 73 |
| 241 Vazhapadi | 3,728 10 | 204 07 |
| 242 Veerapandi | 3,087 81 | 565 30 |
| 243 Karipatti | 287 79 | 163 06 |
| 244 Panamarathupatti | 888 28 | 148 57 |
| 245 Salem | 3,529 74 | 155 00 |
| 246 Sankari | 4,119 92 | 58 05 |
| 247 Edapadi | 4,582 29 | 1,020 26 |
| 248 Konganapuram | 4,539 00 | 39 12 |
| 249 Magudanjavadi | 1,947 35 | 707 96 |
| 250 Tiruchengode | 2,843 50 | 640 56 |
| 251 Pallipalayam | 2,225 56 | 128 62 |
| 252 Elachipalayam | 3,783 79 | 346 84 |
| 253 Mallasamudram | 2,797 84 | .. |
| 254 Rasipuram | 2,557 11 | 1,039 01 |
| 255 Vennandur | 2,985 03 | 533 40 |
| 256 Namagiripet | 3,879 50 | 719 91 |
| 257 Thalaivasal | 4,864 50 | 11 00 |
| 258 Athur | 3,026 05 | 44 00 |
| 259 Gangavalli | 3,396 45 | 1,007 50 |
| 260 Peddunaickanpalayam | 3,407 65 | 978 29 |
| 261 Namakkal | 3,583 58 | 159 12 |
| 262 Mohanur | 2,844 52 | 659 70 |
| 263 Paramathi | 7,411 17 | 253 25 |

[5th August 1966

| *Serial number and name of the Panchayat Union.* (1) | *Expenditure on the consumption of petrol.* (2) RS. | P. | *Expenditure on repairs.* (3) RS. | P. |
|---|---|---|---|---|
| *Salem district*—cont. | | | | |
| 264 Kapilamalai .. .. .. | 2,109 | 85 | 211 | 12 |
| 265 Sendamangalam .. .. | 2,539 | 83 | 734 | 51 |
| 266 Erumaipatti .. .. .. | 3,222 | 92 | 222 | 40 |
| 267 Puduchatram .. .. .. | 2,918 | 47 | 1,098 | 03 |
| 268 Kollihills .. .. .. | 2,455 | 70 | 261 | 36 |
| *Thanjavur district.* | | | | |
| 269 Sirkali .. .. .. .. | 2,034 | 72 | 1,053 | 20 |
| 270 Anaikaranchatram .. .. | 3,542 | 17 | 1,057 | 05 |
| 271 Mayuram .. .. .. | 555 | 78 | 437 | 49 |
| 272 Kuttalam .. .. .. | 2,427 | 20 | 209 | 05 |
| 273 Sembanarkoil .. .. .. | 2,727 | 30 | 1,407 | 58 |
| 274 Tiruppanandal .. .. .. | 4,914 | 85 | .. | |
| 275 Kumbakonam .. .. .. | 5,024 | 41 | 2,014 | 93 |
| 276 Tiruvidamarudur .. .. | 3,934 | 13 | 1,104 | 01 |
| 277 Nannilam .. .. .. | 3,794 | 86 | 1,332 | 86 |
| 278 Kodavasal .. .. .. | 5,877 | 51 | 2,227 | 92 |
| 279 Thirumarugal .. .. .. | 3,695 | 82 | 111 | 43 |
| 280 Koradacheri .. .. .. | 3,145 | 35 | 1,362 | 17 |
| 281 Papanasam .. .. .. | 2,670 | 18 | 477 | 10 |
| 282 Ammapettai .. .. .. | 3,143 | 48 | 168 | 00 |
| 283 Valangaiman .. .. .. | 3,438 | 86 | 152 | 03 |
| 284 Thanjavur .. .. .. | 3,203 | 80 | 1,488 | 52 |
| 285 Budalur .. .. .. | 4,820 | 35 | 430 | 20 |
| 286 Thiruvaiyaru .. .. .. | 2,590 | 03 | 2 074 | 40 |
| 287 Orthanad .. .. .. | 3,827 | 08 | 213 | 61 |
| 288 Thiruvonam .. .. .. | 3,241 | 73 | 303 | 72 |
| 289 Mannargudi .. .. .. | 4,547 | 90 | 373 | 41 |
| 290 Needamangalam .. .. | 2,590 | 00 | 102 | 36 |
| 291 Kottur .. .. .. .. | 4,900 | 55 | 2,433 | 38 |
| 292 Nagapattinam .. .. | 2,941 | 61 | 152 | 82 |
| 293 Kizhvelur (Kilvelur) .. .. | 3,879 | 83 | 449 | 25 |
| 294 Thiruvarur .. .. | 2,851 | 32 | 105 | 74 |
| 295 Muthupettai .. .. .. | 3,085 | 89 | 401 | 82 |
| 296 Thiruthuraipoondi .. .. | 2,378 | 59 | 46 | 46 |
| 297 Thalainayar .. .. .. | 4,147 | 25 | 3,026 | 84 |
| 298 Vedaranyam .. .. .. | 3,155 | 86 | 410 | 05 |
| 299 Pattukottai .. .. .. | 1,867 | 21 | 1,498 | 74 |
| 300 Madukkur .. .. .. | 3,054 | 74 | 320 | 62 |
| 301 Peraurani .. .. .. | 3,771 | 52 | 1,786 | 68 |
| 302 Sethubhavachatram .. .. | 3,061 | 99 | 130 | 68 |
| 303 Arantangi .. .. .. | 2,358 | 78 | 2,259 | 23 |
| 304 Avadayarkoil .. .. .. | 2,754 | 05 | 165 | 32 |
| *Tiruchirappalli district.* | | | | |
| 305 Veppanthattai .. .. .. | 2,614 | 14 | 2,336 | 31 |
| 306 Alathur .. .. .. | 3,454 | 05 | 2,605 | 23 |



5th August 1966]

| *Serial number and name of the Panchayat Union.* (1) | *Expenditure on the consumption of petrol.* (2) RS. | P. | *Expenditure on repairs.* (3) RS. | P. |
|---|---|---|---|---|
| *Tiruchirappalli district*—cont. | | | | |
| 307 Perambalur .. .. .. | 3,145 | 02 | 1,990 | 75 |
| 308 Varagur (Veppur) .. .. | 2,974 | 43 | 416 | 89 |
| 309 Jayangondam .. .. .. | 3,041 | 00 | 2,615 | 00 |
| 310 Sendurai .. .. .. | 2,196 | 68 | 150 | 37 |
| 311 Thirumanur .. .. .. | 2,661 | 64 | 4,507 | 56 |
| 312 T. Pozhur .. .. .. | 4,032 | 00 | 349 | 03 |
| 313 Andimadam .. .. .. | 2,943 | 75 | 3,133 | 95 |
| 314 Ariyalur .. .. .. | 3,328 | 65 | 1,885 | 80 |
| 315 Pullambadi .. .. .. | 2,282 | 55 | 346 | 12 |
| 316 Manachanallur .. .. .. | 2,488 | 10 | 1,459 | 12 |
| 317 Lalgudi .. .. .. | 3,845 | 65 | 1,496 | 09 |
| 318 Musiri .. .. .. | 3,532 | 79 | 2,233 | 24 |
| 319 Thottiam .. .. .. | 2,759 | 88 | 3,020 | 55 |
| 320 Thathayangarpettai .. .. | 4,518 | 16 | 1,910 | 77 |
| 321 Thuraiyur .. .. .. | 4,490 | 85 | 5,208 | 62 |
| 322 Uppiliapuram .. .. .. | 3,344 | 50 | 757 | 84 |
| 323 Aravakurichi .. .. .. | 3,435 | 12 | 1,225 | 64 |
| 324 Karur .. .. .. .. | 3,331 | 34 | 1,430 | 86 |
| 325 Krishnarajapuram .. .. | 4,545 | 56 | 2,484 | 47 |
| 326 Kulithalai .. .. .. | 2,880 | 50 | 1,535 | 30 |
| 327 Manapparai .. .. .. | 2,906 | 03 | 2,268 | 13 |
| 328 Marungapuri .. .. .. | 2,957 | 48 | 1,573 | 43 |
| 329 Vaiyampatti .. .. .. | 2,719 | 09 | 2,193 | 51 |
| 330 Manigandam .. .. .. | 3,543 | 03 | 711 | 04 |
| 331 Srirangam .. .. .. | 2,947 | 88 | 2,043 | 21 |
| 332 Tiruvarambur .. .. .. | 4,698 | 38 | 1,823 | 06 |
| 333 Keeranur .. .. .. | 2,427 | 00 | 392 | 59 |
| 334 Annavasal .. .. .. | 2,330 | 99 | 822 | 15 |
| 335 Viralimalai .. .. .. | 4,509 | 60 | 1,119 | 66 |
| 336 Tiruvarangulam .. .. | 2,924 | 96 | 1,322 | 62 |
| 337 Tandoni .. .. .. | 4,360 | 81 | 550 | 43 |
| 338 K. Paramathi .. .. .. | 929 | 90 | 2,915 | 38 |
| 339 Kadavur .. .. .. | 3,379 | 03 | 2,043 | 78 |
| 340 Karambakudi .. .. .. | 2,533 | 65 | 1,067 | 33 |
| 341 Arimalam .. .. .. | 2,830 | 54 | 1,994 | 00 |
| 342 Ponnamaravathy .. .. | 2,760 | 78 | 1,202 | 21 |
| 343 Thirumayam .. .. .. | 2,370 | 95 | 1,308 | 59 |
| *Tirunelveli district.* | | | | |
| 344 Sankarankoil .. .. .. | 3,228 | 08 | 916 | 60 |
| 345 Kuruvikulam .. .. .. | 2,823 | 81 | 2,888 | 24 |
| 346 Melaneelithanallur .. .. | 1,639 | 68 | 887 | 81 |
| 347 Vasudevanallur .. .. | 3,766 | 10 | 2,996 | 30 |
| 348 Kovilpatti .. .. .. | 4,021 | 43 | 2,264 | 08 |
| 349 Kayattar .. .. .. | 5,722 | 32 | 2,629 | 28 |
| 350 Vilathikulam .. .. .. | 3,974 | 98 | 968 | 62 |
| 351 Pudur .. .. .. .. | 2,452 | 09 | 1,646 | 28 |
| 352 Ottapidaram .. .. .. | 3,510 | 09 | 3,031 | 23 |

[5th August 1966

| Serial number and name of the Panchayat Union. | Expenditure on the consumption of petrol. | | Expenditure on repairs. | |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | |
| | RS. | P. | RS. | P. |
| *Tirunelveli district*—cont. | | | | |
| 353 Srivaikuntam .. .. .. | 3,537 | 14 | 1,512 | 76 |
| 354 Karungulam .. .. .. | 3,357 | 44 | 3,042 | 19 |
| 355 Tuticorin .. .. .. | 3,530 | 44 | 2,176 | 12 |
| 356 Palayamkottai .. .. .. | 1,891 | 30 | 2,611 | 61 |
| 357 Manur .. .. .. .. | 1,831 | 62 | 4,946 | 11 |
| 358 Kadayanallur .. .. .. | 2,793 | 36 | 3,317 | 53 |
| 359 Tenkasi .. .. .. .. | 2,457 | 63 | 2,913 | 28 |
| 360 Alangulam .. .. .. | 3,921 | 25 | 4,515 | 58 |
| 361 Ambasamudram .. .. | 3,466 | 15 | 2,142 | 37 |
| 362 Kadayam .. .. .. | 3,590 | 60 | 2,985 | 89 |
| 363 Pappagudi .. .. .. | 2,463 | 25 | 1,487 | 30 |
| 364 Cheranmahadevi .. .. | 3,268 | 24 | 2,137 | 75 |
| 365 Nanguneri .. .. .. | 5,579 | 58 | 2,543 | 71 |
| 366 Kalakad .. .. .. | 3,749 | 63 | 1,998 | 68 |
| 367 Radhapuram .. .. .. | 2,065 | 22 | 2,080 | 30 |
| 368 Valliyur .. .. .. | 3,436 | 85 | 4,356 | 75 |
| 369 Sathangulam .. .. .. | 3,811 | 04 | 3,451 | 14 |
| 370 Uthangudi .. .. .. | 3,455 | 18 | 2,458 | 37 |
| 371 Tiruchendur .. .. .. | 2,533 | 52 | 2,040 | 89 |
| 372 Azhwar Thirunagari .. .. | 3,801 | 22 | 2,331 | 64 |
| 373 Shencottah .. .. .. | 2,667 | 52 | 1,913 | 70 |
| 374 Pavoorchatram .. .. | 3,931 | 25 | 2,053 | 44 |
| | 12,18,982 | 83 | 5,17,602 | 38 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Saturday, 6th August 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

#### *Pension*

* 141 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of pension cases pending disposal, for more than a year;

(*b*) the reasons for the delay; and

(*c*) whether there is any proposal to evolve methods for speedy disposal of pending cases?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 282 pension cases were pending disposal for more than a year in December, 1965.

(*b*) Delays in finalisation of pension cases are attributable to one or more of the following reasons :—

(i) Belated confirmation and delays in fixation of pay.

(ii) Non-finalisation of disciplinary action pending against the Government servants even after their retirement due to various causes.

(iii) Delay in verification of past services in respect of personnel transferred from other States.

(iv) Belated application from families of deceased Government servants without full data and non-production of legal heirship certificate, etc.

(v) Non-regularisation of certain periods of service.

(*c*) The Government are considering a scheme for imparting training to the subordinate staff dealing with pension cases in the subordinate offices, for the expeditious disposal of pension cases.

*திரு. வை. சங்கரன் :* இருநூறு கேஸ்களுக்கு மேலே பாக்கி இருப்பதாக, ஒரு வருஷமாக முடிவு அடையாமல் இருப்பதாகக் கூறினார்கள். பாக்கிப் பென்ஷன் காலாகாலத்தில் தரப்படாததால் அந்த ஏக்கத்தினால் அவர்களுடைய வாழ்நாள் கூட சீக்கிரம் முடிவு

அடைந்துவிடுகிறது. ஆகையால், குறைந்தது மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாவது அவற்றை எல்லாம் முடிவு செய்வதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூடியவரை சீக்கிரம் பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டிற்குமேல் தாமதம் ஆனது 282 கேஸ்கள் தான். ஆயிரக் கணக்கான கேஸ்கள் ஒரு ஆண்டிற்கு முன்னமேயே முடிவு செய்யப்பட்டுவிட்டன. தாமதம் ஆனதற்குக் காரணம் தெரிவித்தேன். அரசாங்கம் இதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. இதைக் கவனிக்கின்ற அலுவலர்களுக்கு விசேஷ பயிற்சி அளிப்பதற்கு உத்தேசம் இருக்கிறது என்று முன்பு சொன்னேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** ஓய்வு பெறுகின்றவர்கள் யார், யார் என்று முன்கூட்டியே தெரியும். ஓய்வு பெறுகின்றவர்களுக்கு 6 மாதம் அல்லது ஒரு வருஷத்திற்கு முன் கூட்டியே பென்ஷன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் எண்ணுகிறதா? அப்படியானால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஓய்வு பெறுவதற்கு முன்னமேயேதான் நடவடிக்கை 'எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் 20 ரூபாயாவது பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று ஏப்ரல் மாதத்திலிருந்தே அமலில் இருப்பதாக இதில் இருக்கிறது. ஆனால் இதுவரையில் அப்படி வழங்கப்படவில்லை என்று தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன? அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்காக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இது அடுத்த கேள்வியைச் சேர்ந்தது. இப்போதே விடை அளிக்கிறேன். அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அதன்படி பென்ஷன் அளிக்கப்பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** அடுத்த கேள்வியின் பதிலையும் இப்பொழுதே சொல்லிவிடுங்கள்.

* 142 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the basis under which pension of retired teachers is calculated; and

(*b*) whether it will be based on the entries made in the Service Registers of the teachers?





THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Pension is calculated on the basis of the length of qualifying service. Pension for each completed year of service is calculated at 1/120 of average emoluments drawn during the last three years of service subject to a maximum of 30/120 of average emoluments and the maximum is further limited to Rs. 60 per mensem in the case of L.T. or B.T. Assistants and similar categories and Rs. 75 per mensem in the case of Headmasters of Secondary Schools. This is also subject to a minimum of Rs. 20 per mensem.

(*b*) Yes.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மத்திய சர்க்காரிலே ஊழியர்கள் சர்விசிலே இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி கொடுக்கிறார்களே, அந்த மாதிரி நமது சென்னை அரசாங்கமும் சர்விசில் இருக்கும் ஊழியர் இறந்தால் அவர் குடும்பத்திற்குப் பென்ஷன் கொடுக்கும் திட்டம் ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகையோருக்கும் உதவி அளிக்க அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

## ஆசிரியர் சேம நிதி

* 143 கேள்வி.—திரு. எல். ஆனந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மான்ய பள்ளிகளில் பணி புரிந்து பின்னர் வேறு நிர்வாகத்திற்குச் சென்றுவிட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்களுக்கு, தற்பொழுது கட்டிவரும் Provident Fund -ல் முன்பு செலுத்தப்பட்ட Teachers' Provident Fund தொகையை மாற்றாமல் இருக்கிறது?

(இ) அதற்கான காரணம் என்ன?

(உ) தற்பொழுது மாற்றும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

* 144 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there is delay in disbursing to the teachers, on their retirement, the amount, standing to their credit in the Teachers' Provident Fund together with the Government contribution; and

(*b*) if so, the steps taken to avoid the delay?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : It is possible that there are a few cases of delay. Expeditious action is always taken to settle the Provident Fund accounts of teachers. Necessary instructions to the Inspecting Officers have been issued in this regard.

[6th August 1966

திரு. வை. சங்கரன் : பொதுவாக அவர்கள் ரிடையர் ஆனவுடன் வீடு வாங்க அல்லது தங்கள் பெண்களுக்குத் திருமணம் செய்ய பிராவிடண்ட் நிதி பணத்தைப் பயன்படுத்த விரும்புவார்களாதலால் அந்தப் பணத்தை ரிடையர் ஆகி ஒருசில மாதங்களுக்குள் கொடுப்பதற்கு வழி வகை செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரிடையர் ஆன பிறகு மட்டுமல்ல, ரிடையர் ஆவதற்கு முன்னாலேயே வீடு கட்டுவது, திருமணம் செய்வது முதலானவற்றுக்கு பிராவிடண்ட் பண்டிலிருந்து பணம் கொடுக்கப்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : அவர்களுக்கு ஓய்வுப் பணத்தைக் கொடுப்பதற்கு காலதாமதம் இருப்பதோடு கொடுக்கக்கூடிய பணத்திலேயே 100 ரூபாய், 200 ரூபாய் என்று பிடித்துக் கொள்கிறார்கள். அதைப் பற்றிக் கேட்டால் ஆடிட் அப்ஜக்ஷன் வருமா என்று பார்த்துத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இவ்வாறு பணத்தைப் பிடித்துக் கொள்ளாமல் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொடுக்க வேண்டிய பணத்தை அனாவசியமாகப் பிடித்துக் கொள்வதில்லை. தகராறு எதுவும் இல்லையென்றால் முழுப் பணம் கொடுக்கப்படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : இங்கு வேலை செய்பவர்கள் வேலையிலிருக்கும்போது இறந்து அவருடைய வாரிசுதார் இறந்த பிறகு கூட பணம் போய்ச் சேருவதில்லை. இதனால் குடும்பமே கெட்டுவிடக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இதை உடனடியாகக் கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது.

* 145 Q.—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal before the Government to put in its share of contribution for Teachers' Provident Fund proportionately to any extent that a teacher is remitting?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The contribution of teachers to the Provident Fund is limited to six per cent of their pay. Formerly the managements were contributing a sum equal to half the contribution of the subscriber and Government an equal amount. The Government have since decided to pay the managements' share of contribution also to the teachers. The Government contribution and the managements' share will be paid by the Government to the teachers in a lumpsum at the time of their retirement or at the time the T.P.F. accounts are closed. This order came into force from 1st April 1964 in respect of Aided Secondary School teachers and from 1st June 1965 in respect of Aided Elementary School teachers.



6th August 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் தற்போது நிர்ணயித்திருக்கக்கூடிய அளவை விட அதிகமாகக் கொடுப்பதற்குத் தூண்டுதலாக அமையும் வகையில் எவ்வளவுக் கெவ்வளவு அவர்கள் அதிகமாகக் கொடுக்கமுடியுமோ அதைக் கொடுக்கும் வகையில் அந்த விகிதாசாரத்தை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

* 146 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have proposed to extend any new concessions to teachers for the withdrawal from their Provident Fund accounts; and

(b) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) : Orders have been issued recently permitting—

(1) the part-final withdrawal for the education of the subscriber's sons or daughters in or outside India subject to certain conditions and for the marriage of subscriber's sons and daughters and, if he has no daughter, of any other female relation dependent on him; and

(2) for the final or part-final withdrawal for house building or for purchasing a house site.

திரு. வை. சங்கரன் : வைத்தியச் செலவுக்கு வேண்டுமென்றால் பிராவிடண்ட் பண்டிலிருந்து கொடுக்க வழி செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வைத்தியச் செலவுக்கு மொத்தமாக அவ்வளவு பணம் வேண்டியிருக்காது. அப்படி ஏதாவது வேண்டுமென்றால் அந்த ஆசிரியர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கட்ட நிலம்

* 147 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, திருச்சிற்றம்பலம் கூட்டுரோடில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி கட்டுவதற்கு 10 எக்கர் நிலம் கோரி, மேற்படி நிலம் வாங்கிக் கொடுக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Sri A. V. Naryanswami Naidu of Irumbai came forward to donate ten acres of land for the school.

(b) The Director of Secondary Education is examining the offer.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இப்போதுள்ள பயிற்சிப் பள்ளி ஆபத்தான கட்டடத்தில், பழைய கட்டடத்தில் இருக்கிறது. தற்போது அந்தப் பள்ளிக்கூடம் சவுக்குத் தோப்புக்குள் பாதுகாப்பு இல்லாத நிலையில் இருக்கிறது. இடம் காணாது ஷெட் போட்டு வைத்திருக்கிறார்கள். இப்போது அதற்காகக் கொடுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலம் ரோட்டின் மேல் இருக்கிறது. அந்தப் பத்து ஏக்கர் நிலத்திலே கட்டடம் கட்ட வழி செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தானமாகக் கொடுத்ததைப் பாராட்டுகிறேன். அதை ஏற்றுக் கொள்வதில் சிக்கல் இல்லை. தானம் கொடுத்தவர் தன்னுடைய பெயரை வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார். ஒரு ஸ்தாபனத்தைப் பொறுத்தவரை அதற்கு ஆகும் செலவில் பாதித் தொகையை ஒருவர் ஏற்றுக் கொண்டால் தான் அவருடைய பெயரை வைக்கலாம் என்ற கொள்கை அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதிலே, அந்த மாதிரிப் பாதித் தொகை அளவு வராது. டைரக்டர் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அவர் தன்னுடைய பெயரை வைக்கவேண்டுமென்று விரும்புவதாகச் சொன்னார்கள். அப்படி பெயர் வைக்கவேண்டாமென்று சொன்னால் எந்த முறையை வகுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெயர் வைக்க வேண்டாமென்று சொன்னால். 10 ஏக்கரோ, 5 ஏக்கரோ கொடுப்பதை ஏற்றுக் கொள்வார்கள். அதற்கு மேல் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு நிதி திரட்ட வேண்டும்.

**ஆரம்ப ஆசிரியர்கள் சம்பளம்**

* 148 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரம்ப ஆசிரியர்களுக்கு, அடிப்படைச் சம்பளம் ரூ. 120 ஆக நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. இரா. நாராயணன் : பண்டங்களின் விலைவாசி ஏறுவதால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் போதாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு அதிகக் குழந்தைகளும் பிறந்து விடுகின்றன. ஆகவே, அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அடிப்படைச் சம்பளம் ஓரளவு உயர்த்தப்பட்டிருக்கிறது. விலைவாசி உயருவதற்கு ஏற்ற வகையில்



தவறாமல் ஆசிரியர்களுக்கு, ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல் தனிப்பட்ட பள்ளி ஆசிரியர்களுக்கும் அப்போதைக்கப்போது பஞ்சப்படி உயர்த்தப்பட்டு வருகிறது.

**ஆதாரப் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு உதவிப்பணம்**

* 149 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிக்கு ஜூனியர் பேசிக் படிப்பவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதை நிறுத்த சமீபத்தில் அரசாங்கம் உத்தரவிட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ஆ. தங்கவேலு : சென்ற ஆண்டு ஜூனியர் பேசிக் படிப்பவர்களுக்கு உதவித் தொகை நிறுத்தப்பட்டு, பிறகு கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு அந்த உதவித் தொகை கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஹையர் கிரேடு டிரெய்னிங் எதுவரை இருக்கிறதோ அது வரை கொடுக்கப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை 18 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், கிராம சேவக் பயிற்சி பெறுபவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இரண்டு பேரும் எஸ்.எஸ்.எல்.சி. தான். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது வேறு பயிற்சி. அது வேறு பயிற்சி. எந்தெந்தப் பயிற்சிக்கு எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து உதவித் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

* 150 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representation was received from the students of the Basic Training School, Aralvoimozhi in Kanyakumari district regarding stoppage of stipend;

(*b*) if so, the reasons for stopping the stipend in the middle; and

(*c*) whether any decision has been taken to restore the grant of stipend?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The payment of stipend was not stopped.

(*c*) Does not arise.

[6th August 1966

*Concessions to children of evacuees*

*** 151 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the facilities and concessions offered to the children of Burma and Ceylon Evacuees respectively for admission to Polytechnics and Industrial Training Institutes in the State?**

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement is placed on the table of the House.

**திரு. வை. சங்கரன் :** இவர்களுக்காக ஐ.டி.ஐ.-ல் 5 சத விகிதம் சீட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்டைபண்ட் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், ஒவ்வொரு பாலிடெக்னிக்கிலும் அவர்களுக்காக ஒரு சீட்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதிலே எது எதற்கு எப்படி உதவி அளிக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

*தனியார் பஸ் உரிமம்*

*** 152 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964, 1965 ஆகிய ஆண்டுகளில் தனியார் பஸ் பர்மிட் உரிமைகள் மாற்றம் அனுமதிக்கப்பட்டனவா ?

(இ) ஆமெனில், மாவட்டவாரியாக எத்தனை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A statement [b] is placed on the table of the House.

**திரு. து. ப. அழகமுத்து :** இவ்வாறு பஸ் பர்மிட்டை மாற்றுவதன் மூலமாக நல்ல லாபத்தை பஸ் முதலாளிகள் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, இவ்வாறு மாற்றுவதை அனுமதிப்பதில்லை என்பதைச் சர்க்கார் கொள்கையாக அறிவித்தார்கள். அப்படி இருக்கும்போது அந்த முறை இன்னும் தொடர்ந்து நடைபெறக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு அரசாங்கம் எடுத்துக் கொண்ட முடிவில் ஒன்றும் முரண்பாடு இல்லை. இதெல்லாம் அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு எந்தச் சமயத்திலே இது அனுமதிக்கப்பட வேண்டுமோ அந்தச் சமயத்தில் அனுமதிக்கப்படுகிறது. எந்தச் சமயத்தில் அனுமதி மறுக்கப்பட வேண்டுமோ அப்போது மறுக்கப்படுகிறது.

---

**[a] Printed as Appendix I on pages 129-130**

**[b] Printed as Appendix II on page 131.**



6th August 1966]

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இது சம்பந்தமாக அரசாங்கத்தின் தெளிவான கொள்கை என்ன என்று அறிய விரும்புகிறேன். பஸ் வண்டி தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருக்க முடியுமே தவிர பஸ் ரூட்டையே சொந்தமாக்கிக் கொள்ளக்கூடாது. பர்மிட் கண்டிஷன்படியே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும். அப்படி இருக்கும்போது பஸ் ரூட்டை சொந்தச் சொத்து போல் விற்று பெருத்த லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்களால் பஸ்ஸை ஓட்ட முடியவில்லை என்றால் அதை அரசாங்கத்திற்குச் சரண்டர் செய்ய வேண்டுமென்று உத்தரவிடுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதிலே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்திருக்கிறது. இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. பொதுவாக அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது கலெக்டர்களோடு விவாதிக்கப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் உத்தரவாகப் போடுவதற்கில்லை.

*** 153 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டிசம்பர் 1965-ல், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் எத்தனை பஸ் ரூட்டுகளுக்கு பர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன ?

(இ) டிசம்பர் 1965-ல் மேற்கண்ட ரூட்டுகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(உ) அந்த விண்ணப்பங்களுள், தள்ளப்பட்டவை எத்தனை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) During December 1965, permits were granted for 15 bus routes in South Arcot district.

(*b*) 183 applicants put in a total of 435 applications for grant of permits for the 15 bus routes.

(*c*) 420 applications were rejected.

**திரு. நா. இராசாங்கம் :** தென் ஆர்க்காடு மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் நடந்த பஸ் ரூட் செலக்ஷன் மட்டுமல்ல, 12 ஆண்டுகளாக விருத்தாசலம் தாலுகாவில் கள்ளகொண்டானில் சிற்றம்பலம், தம்புசாமி என்பவர்கள் விண்ணப்பித்தும் 12 ஆண்டுகளாக அது தள்ளப்பட்டு வருகிறது. ஹரிஜனங்களுக்குச் செய்யும் சலுகைகளில் இதையும் ஒன்றாகக் கொண்டு அவர்களை ஊக்குவிப்பது என்றால், இந்த 12 ஆண்டு காலதாமதம் ஆகுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதுபற்றி தனிக்கேள்வி கேட்டால் நிலைமையை விளக்கலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** 15 பஸ் ரூட்கள் என்று சொன்னார்கள். குறிப்பிட்ட எண் அளவு அப்ளிகேஷன் வந்ததாகவும் சொன்னார்கள். அதில் ஆதிதிராவிடர்களில் எத்தனை பேர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனி கேள்வி வேண்டும்.

பெருமுக்கல் அருகில் பஸ் விபத்து

* 154 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 23—1—1966 பகல் மரக்காணத்திலிருந்து திண்டிவனம் நோக்கி வந்துகொண்டிருந்த பிரயாணி பஸ் ஒன்று பெருமுக்கல் ஏரியில் கவிழ்ந்தது உண்மையா?

(இ) ஆமெனில், காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. On 28th January 1966, a passenger bus proceeding from Marakanam to Tindivanam, dashed against the iron railings on the laked bund of the Perumukkal lake and fell into the lake;

(b) The accident was considered to be due to the sudden breakage of the front right side main rod spring at the forward anchor bed of the bus.

திரு. ஆ. தங்கவேலு : இந்த பஸ் கவிழ்ந்ததால் ஆபத்து ஏற்பட்ட பிரயாணிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா? எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 2,500 ரூபாய் நஷ்ட ஈடு கோரப்பட்டிருக்கிறது. அது முடிவாகவில்லை. இன்ஷூரன்ஸ் கம்பெனியில் இருந்து பஸ் சொந்தக்காரருக்கு 5,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஏரிக்கரைக்கு மேல் போகிற பஸ் ரோட்டில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த ரோடை வேறுவிதமாகத் திருப்பி விடுவதற்கு வாய்ப்பு வசதியில்லை. அது குறித்து பரிசீலிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

*Sub-Inspectors of Police.*

* 155 Q.—SRI V. SANKARAN :<br>SRI A. THANGAVELU : } : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of Police Stations not having Sub-Inspectors to man them, in each of the three Police ranges in the State respectively; and

(b) the time expected to take, to provide the same?

THE HON. SRI P. KAKKAN : (a) There is no Police Station in this State without a Sub-Inspector.

(b) Does not arise.





திரு. செ. மாதவன் : சப் இன்ஸ்பெக்டர்கள் பொதுவாக நம் மாநிலத்தில் தேவைக்குக் குறைவாக இருக்கிறார்கள் என்பது உண்மையா? அதை டி.ஐ.ஜி. அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

கனம் திரு. பூ. கக்கன் : மேலும் மேலும் சப் இன்ஸ்பெக்டர்களை ரெக்ரூட் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஆகவே, இனி மேல் ரெக்ரூட்டட் சப்-இன்ஸ்பெக்டர்கள் இல்லை என்ற குறை இருக்காது.

* 156 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை ஆஃப் டூட்டி எடுத்துக்கொள்ளலாம் என்ற விதியிருக்கிறதா?

(இ) ஆமெனில், அவ்வாறு வாரத்திற்கு ஓர்முறை எடுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் அவர்களுக்கு பிரத்தியேக ரெமுனரேஷன் கொடுக்கப்படுகிறதா?

(உ) ஆமெனில் எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : போலீஸ்காரர்களுக்கு எப்போதுமே வாரத்திற்கு ஒரு முறை ஆஃப் ட்யூட்டி என்று இருக்கிறது. அது சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். ஆஃப் ட்யூட்டியில் வேலை செய்கிற அன்று சர்க்காரிலிருந்து கொடுக்கப்படுகிற டி.ஏ. க்ளெயிம் செய்கிறார்கள். க்ளெயிம் செய்கிற படி அவர்களுக்கு கிரமப்படி கிடைக்க வேண்டியதாகும். ஆகவே, அப்படி வேலை செய்கிற தினங்களில் அந்த டி.ஏ. யோடு, ஆஃப் ட்யூட்டி க்ளெயிம் செய்யக் கூடாது என்றால் அதற்கான ரெம்யூனரேஷனையும் சேர்த்து க்ளெயிம் செய்யலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : 1953-ல் பரிசீலனை செய்து கான்ஸ்டேபிள்ஸ், ஹெட் கான்ஸ்டேபிள்ஸ் இவர்களுக்குத்தான் ஆஃப் ட்யூட்டி கொடுக்கவேண்டும், சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இல்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

வானூர், மரக்காணம் யூனியன்களுக்கிடையிலுள்ள கழுவெளி

* 157 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள வானூர் யூனியனுக்கும், மரக்காணம் யூனியனுக்கும் மத்தியிலுள்ள கழுவெளியின் விஸ்தீரணம் என்ன?

[6th August 19

(இ) அதில் விவசாயத்திற்கு லாயக்காக உள்ள நில
எவ்வளவு ?

(உ) அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த எடுத்துக்கொண்
நடவடிக்கை என்ன ?

(எ) அதில் இதுவரை விவசாயத்திற்குப் பட்டா செய்
கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) 8,759.03 ஏக்கர்.

(இ) 302.51 ஏக்கர்.

(உ) இந்த 302.51 ஏக்கர் பரப்பளவு முன்னமேயே ஜிவோஜம
சுவாதீனத்தில் இருக்கிறது.

(எ) 96.03 ஏக்கர்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அந்த கழுவெளியில் உள்ள மிச்ச நிலங்களை பாண்டிச்சேரிக்கு சொந்தமான அரவிந்த கோஷ் ஆசிரமத்திற்கு கூட்டு ஸ்தாபனத்திற்காக நூறு ஆண்டு அடமானத்திற்காக கேட்டிருப்பதாக கலெக்டர் அவர்களுக்கு மனுக் கொடுத்திருப்பதாக அறிகிறோம். அது பரிசிலனையில் இருப்பதாக அறிகிறோம். எங்களுக்குள்ள கவலையெல்லாம் . . . .

**கனம் சபாநாயகர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அப்படி அடமானம் செய்து கொடுக்க இருப்பதாகத் தெரிகிறது. அதைத் தடுக்க என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நான் கொடுத்த விவரத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

### தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள களர் நிலம்

* 158 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் களர் நிலம் இருக்கிறது ?

(இ) அவைகளை உயர் நிலமாக்க விவசாயத்துறையினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) சுமார் 45 சதவீத நிலங்கள் பல்வேறு நிலைமைகளில் உவர் ஏறியும், களர்பூத்தும் உள்ளன. இந் நிலங்களில் 2 சதவீதம் (சுமார் 12 ஆயிரம் ஏக்கர்) பயிர் செய்வதற்கு முற்றிலும் உதவாதபடி உவரும், களரும் பாய்ந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

(இ) உவராகவும், களராகவும், சதுப்பாகவும் உள்ள நிலப் பகுதிகளை மீட்பதில் குடியானவர்களுக்கு ஆர்வமூட்டுவதற்காக, மண்ணைப் பயன்படுத்துவதற்கான களிக்கல் (Gypsum)



6th August 1966]

போன்ற பொருள்களை ரயிலில் ஏற்றிக் செல்வதற்குச் சலுகை அளிப்பது, மண் வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் மூலம் மண் பரிசோதனை செய்துதர உதவி புரிவது, நில வரியையும் தண்ணீர்த் தீர்வையையும் தள்ளுபடி செய்வது போன்ற சலுகைகளை நமது அரசாங்கமும், இந்திய அரசும் அளித்துள்ளன.

**திரு. ஆ. தங்கவேலு :** ஒவ்வொரு தாலுகாவிலும் எவ்வளவு உயர்நிலமாக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒவ்வொரு தாலுகாவிலும் என்று இல்லை. கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், திண்டிவனம் தாலுகாக்களில் அதிகமாக்கி இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

### தீ விபத்துகள்

* 159 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 ஜனவரி முதல், மார்ச்சு 31 முடிய தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் எத்தனை தீ விபத்துகள் ஏற்பட்டன ?

(இ) அவைகளினால் ஏற்பட்ட ஆட்சேதம், பொருட்சேதம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) During January 1966 to March, 1966 there were 62 fire accidents in Dharmapuri district and 60 fire accidents in North Arcot district.

(*b*) Five persons lost their lives and the loss of property was estimated at about Rs. 4,33,873.

* 160 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தீயினால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள புறம்போக்குகளில் உள்ள பனை மரங்களைத் தேவைக்கேற்ற அளவு வெட்டிக்கொள்ள அனுமதிக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இதற்கு முன்பு தீயால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்குத் தேவைப்படுகிற, குறைந்தது நாலைந்து பனை மரங்கள், புறம்போக்கு மரங்களை வெட்டிக் கொள்ள அனுமதித்தார்கள். இப்போது தீயால் பாதிக்கப்படுகிற அரிசனங்களுக்கு 30 ரூபாயும், துணி வாங்க 10 ரூபாயும் கொடுக்கிறார்கள். இந்த 30 ரூபாயில் ஒரு மரம்கூட இப்போது வாங்க முடியாது. இதை எந்தக் கணக்கில் வைத்துக் கொடுக்கிறார்கள் ?

[6th August 1966

கனம் திரு. வெ. ராமையா: முன்பிருந்த நிலை எனக்குத் தெரியாது. இப்போது உடனடியாக அவர்களுக்கு 30 ரூபாயும் துணி வாங்கிக்கொள்ள 10 ரூபாயும் கொடுக்கிறோம், உதவியாக அதோடு இல்லாமல், அவர்கள் வீடு கட்டிக்கொள்ள அல்லது குடிசை போட்டுக்கொள்ள 1,000 ரூபாய் வரையில் கடன் கொடுக்க இப்போது திட்டமுண்டு.

*Sub-way opposite Central Station*

* 161 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) when the proposed sub-way opposite Central Station across Poonamalle High Road is to be taken up for execution; and

(*b*) the details and nature of the construction proposed?

The Hon. Sri V. RAMAIAH: Attention is invited to the paper [a] placed on the table of the House.

திரு. வை. சங்கரன்: ரௌண்ட் டானாவில் கட்டப்பட்டு வருகிற சப்வேயில் கார்ப்பரேஷன் பைப் லைன்களை மாற்றியமைக்காததால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

கனம் சபாநாயகர்: இது சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ளதைப் பற்றியது. நீங்கள் ரௌண்ட் டானாவிற்குப் போனால் அமைச்சர் எப்படி பதிலளிக்க முடியும்?

பொன்மலை அருகிலுள்ள புறச்சாலை

* 162 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள காவிரிப் பாலத்தின் இருபுறமும் பொன்மலை ரயில்வே ஓவர் பிரிட்ஜிலிருந்து கொள்ளிடம் பாலம்வரை (by pass) புறச்சாலைக்குத் தார் போடப்பட்டதா?

(இ) ஆமெனில் எத்தனை முறை போடப்பட்டது?

(உ) ஒவ்வொரு முறையும் ஆன செலவு எவ்வளவு?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) & (*c*) The by pass roads were black topped once in 1963 and an expenditure of Rs. 1,29,842 was incurred on the work.

திரு. து. ப. அழகமுத்து: இந்த பை பாஸ் ரோட்஼ுக்கு இரண்டு தடவை தார் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒருமுறைதான் தார் போடப்பட்டதாகக் கூறுகிறார்கள். இதில் எது உண்மை?

[a] Printed as Appendix III on page 182.



6th August 1966]

கனம் திரு. வெ. ராமையா: 1963-ல் தார் போட்டு அதை முதல் தடவையாகப் பூர்த்தி செய்தார்கள். பிறகு மெயின்டினன்ஸ் காக ஏதாவது செய்திருப்பார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்தச் சாலையில், எத்தனை தரம் தார் போட்டும் பயனில்லை. சீக்கிரமாக மறுபடியும் மோசமடைந்து விடுகிறது. இந்த ரோடில் சைக்கிள்களிலோ அல்லது கார்களிலோ போவதற்குச் சாத்தியமில்லாமல் நகரத்திற்குள் நுழைந்துதான் போகவேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தப் பக்கத்தில் போயிருக்கும்போது அதைப் பார்த்திருப்பார்கள். ஆகவே, இதை நல்ல முறையில் பழுது பார்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? 9-00 a.m.

கனம் திரு. வெ. ராமையா: திருச்சிக்குப் போகும்போது நானும் பார்த்திருக்கிறேன். அந்தப் பக்கம் நிறைய நீர் நிற்கக் கூடிய இடமாக இருப்பதால், சீக்கிரம் பழுதடைந்துவிடுகிறது. இப்போது நல்ல முறையில் மெயின்டெய்ன் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது போய்ப் பார்த்தால் முன்பு இருந்தது போல் அல்லாமல் நல்லமுறையில் பழுதுபார்த்திருப்பதைப் பார்க்கலாம்.

*Widening of bridges near Basin Bridge*

* 163 *Q.*—Sri A. RAGHAVA REDDI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is a proposal to widen the three narrow bridges near the Basin Bridge; and

(*b*) if so, when it will be implemented?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) Government have accorded adminstrative sanction for the three works. The works will be taken up for execution as soon as tenders are finalised by the Chief Engineer (Highways and Rural Works).

*Prohibition of movement of paddy*

* 164 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have prohibited the movement of paddy even from place to place within a taluk especially in Thirupathur taluk, Ramanathapuram district; and

(*b*) if so, whether the Government have provided marketing facilities for the agriculturists to sell their paddy?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise. Apart from this, the Government have provided marketing facilities for the agriculturists to sell their paddy because Government are prepared to purchase whatever paddy is offered at maximum price.

[6th August 1966

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போதும் கட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. சர்க்கார் தவறாகப் பதில் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். திருப்பத்தூர் தாலூகாவுக்குள்ளேயே ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குக் கூடப் போக முடியாத நிலை இருக்கிறது. காரணம் சட்டத்தில் 'Attempt is also an offence' என்றிருக்கிறது. இதைப் பயன்படுத்தி அதிகாரிகள் தடைசெய்து வருகிறார்கள். ஆகவே, இந்த உத்தரவை மாற்றுவதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் தவறாகப் பதில் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படியொன்றுமில்லை. அங்கு இருக்கக்கூடிய கலெக்டர் அவர்கள் கொடுத்திருக்கின்ற தகவல்களை வைத்துக்கொண்டுதான் பதில் சொல்லுகிறேன். 'movement within the district' என்ற அளவில் restrict பண்ணுகிறார்கள். ஆகவே இதில் தவறு ஒன்றுமில்லை.

திரு. சா. கணேசன் : திருப்பத்தூர் தாலூகாவில் ஒரு எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு 35 மைல் தூரம் இருக்கிறது. இந்த எல்லைகளுக்கு இடையில் இருக்கின்ற இடங்களுக்குள்ளேயே நெல் போகப்பட்டது என்று பிடிக்கப்பட்டு அநேக வழக்குகள். கோர்ட்டுகளுக்குப் போய் அங்கே சென்ற மாதம்கூட தண்டனை கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி ஜில்லாவுக்குள்ளே அல்லது தாலூகாவுக்குள்ளே உணவு தானியங்கள் கொண்டுபோனார்கள் என்பதற்காகப் பிடிக்கப்பட்டுப் போடப்பட்டிருக்கும் எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்கவேண்டும் என்று அரசாங்கம் அறிவிப்பு அல்லது அட்வைஸ் பண்ண முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் நடக்கும் சமயத்தில் கொள்முதல் வெற்றிகரமாக நடக்கவேண்டும் என்பதற்காக அங்கங்கு இருக்கின்ற நிலைமைக்கு ஏற்ப கலெக்டர் அவர்கள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள். ஆகவே, அரசாங்கம் இதில் தலையிட்டு வியாஜ்யத்தில் இருக்கும் வழக்குகளை எல்லாம் வாபஸ் செய்ய வேண்டும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*165 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) சாப்பாட்டிற்காகத் தலைச்சுமையில், சைக்கிளில் ஜில்லாவின் எல்லைக்குள் உணவு தானியங்களை எடுத்துச் செல்வதற்குக் கொள்முதல் அதிகாரிகள் தடை செய்கிறதாகப் புகார்கள் சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், அவைமீது சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?



6th August 1966]

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், ஜில்லாவுக்குள் தலைச்சுமையில் கொண்டுபோகப்படும் உணவு தானியங்களைத் தடை செய்யக்கூடாது என்று ஜில்லா அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா ? தலைச்சுமையில் கொண்டுபோகும் அளவுக்கு சைக்கிள்களிலும் கொண்டு போகலாம் என்று இதன் மூலம் எடுத்துக்கொள்ளலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தலைச்சுமையிலும், சைக்கிள்களிலும் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குத்தான் கொண்டு போகலாம். அரிசி 10 லிட்டர் அளவுக்கும், மற்றத் தானியங்கள் 10 கிலோ கிராம் அளவுக்கும் கொண்டு போகலாம் என்றிருக்கிறது. அதற்கு மேல் கொண்டுபோகவேண்டும் என்றால் பெர்மிஷன் வாங்கவேண்டும்.

*166 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குத் தங்கள் சொந்தத் தேவைக்கு நெல், அரிசி எடுத்துச் செல்வதற்கு கெஜட்டெட் ஆபீசர்களும் பெர்மிட் பெறவேண்டுமா ?

(இ) ஆமெனில், அதற்கான பெர்மிட் யாரிடமிருந்து பெற வேண்டும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The permits may be obtained from the Revenue or Civil Supplies authorities not lower in rank than that of a Deputy Tahsildar having jurisdiction over area in which the land is situated.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கெஜட்டெட் அதிகாரிகள் தங்கள் சொந்த நெல்லை வெளியிடங்களிலிருந்து கொண்டு வருவதற்குத் தங்களைவிடக் குறைந்த அந்தஸ்துள்ள அதிகாரிகளிடத்தில் போய் பெர்மிஷன் வாங்குவதற்குத் தயக்கம் கொள்கிறார்கள். ஆகவே, இவர்கள் தேவையான தங்களுடைய தானியத்தைக் கொண்டு வருவதற்குத் தங்களைப் போன்ற அதிகாரியிடமிருந்து பெர்மிஷன் வாங்குவதற்கு வழிவகை ஏதேனும் செய்ய முடியுமா ? இல்லையென்றால் அதில் என்ன கஷ்டமிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதில் அந்தஸ்து குறைந்த அதிகாரி, உயர்வான அதிகாரி என்று எடுத்துக்கொள்ள முடியாது. யார் யாரிடத்தில் எந்தெந்த ஜூரிஸ்டிக்ஷனிலுள்ளவர்கள் பெர்மிஷன் வாங்கவேண்டும் என்றிருக்கிறதோ, அதன்படி கண்டிப்பாக பெர்மிஷன் வாங்கித்தான் ஆகவேண்டும்.

[6th August 1966

*** 167 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடி தாலூகா பங்கீட்டு அதிகாரி, தாசில்தார் ஆகியோர்கள் நியமிக்கும் சர்க்கார் கொள்முதல் ஏஜண்டுகள் கொள்முதல் செய்யும் நெல்லை, திருவோணம், அம்மானிப்பட்டு செக்போஸ்ட்டுகள் வழியாக எடுத்துச்செல்ல தஞ்சை மாவட்ட அதிகாரிகள் அனுமதிப்பதில்லை என்பது அண்மையில் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஏறக்குறைய ஆறு ரெவின்யூ கிராமங்கள் காவேரிப் பாசனத்தினால் விளையக்கூடியவையாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலிருந்து புதுக்கோட்டை, ஆலங்குடி பகுதிகளுக்கு நெல் கொண்டுபோகவேண்டும் என்றால், தஞ்சை மாவட்டத்திலேயே இரண்டு செக்போஸ்ட்டுகள் இருக்கின்றன. அதைத் தாண்டித்தான் வரவேண்டும். இது கனம் உணவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே இப்படிப்பட்ட இடங்களில் உள்ள நிலையைப் போக்க இரண்டு மாவட்டக் கலெக்டர்களையும் ஒன்றாக ஆலோசனை செய்து, பெர்மிட்களுடன் நெல் கொண்டு செல்ல அனுமதி கொடுப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** வெளியிடங்களிலிருந்து உற்பத்தி செய்கின்றவர்கள், தங்கள் தானியங்களைக் கொண்டுவருவதற்கு அங்கங்கு இருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகள். அல்லது சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் இவர்களிடமிருந்து பெர்மிஷன் வாங்கிக் கொள்ளலாம். ஆனால், இதை வைத்துக்கொண்டு வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கவேண்டியிருப்பதால்தான் செக்போஸ்ட்டுகள் வைக்கவேண்டியிருக்கிறது.

**திரு. பி. முருகையன் :** இந்த இடங்களிலிருக்கின்ற தாலூகா அதிகாரிகள் பெர்மிட் கொடுத்தாலும், அடுத்த தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கின்ற அதிகாரிகள் அதை அனுமதிக்க மறுக்கிறார்கள். வேறு இடங்களுக்குக் கொண்டுபோகின்றவர்களைத் தடுப்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், சர்க்கார் அனுமதிபெற்ற வியாபாரிகளும், விவசாயிகளும் தங்கள் சொந்த தானியங்களை பெர்மிஷனோடு கொண்டுவந்தாலும் தடைசெய்வதை தடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா .** இதைப்பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குத்தான் கொண்டுபோகக்கூடாது, அந்த ஜில்லாவுக்குள் கொண்டு போகலாம் என்று மதுரை, இராமநாதபுரம்



6th August 1966]

கலெக்டர்கள் அறிக்கையும் விட்டார்கள். ஆனால், இப்போது அங்குள்ள அதிகாரிகள் தானியங்கள் ஜில்லாவுக்குள்ளே கொண்டு போனாலும் பிடிக்கிறார்கள். இதனால் ஜனங்கள் மிகவும் பீதி அடைந்திருக்கிறார்கள். இதற்கு ஏதாவது பரிகாரம் ஏற்படுத்துவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இது ஆலங்குடியைப்பற்றிய கேள்வி. ஜில்லாவுக்குள் கொண்டுபோகலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கொள்முதல் நடைபெறுகிற நேரத்தில் சரியாகக் கொள்முதல் நடைபெறுவதற்காக ஜில்லாவுக்குள்ளேயும் தானியங்கள் நடமாட்டத்தை அவ்வப்போது இருக்கின்ற சூழ்நிலைகளுக்கு ஏற்ப அதிகாரிகள் தடை செய்வார்கள்.

## K.— ஆடூர் கண்ணங்குடிச் சாலை அபிவிருத்தி

*** 168 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா K- ஆடூர் கிராமத்திற்கும், கண்ணங்குடிக்கும் நடுவில் இருக்கும் ஹைவேஸ் ரோடை சீர் செய்ய வேண்டி அரசாங்கத்திற்கு அண்மையில் மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) : A representation from the Chairman, K-Adur Panchayat, for metalling a portion of the Ponneri taluk bund road, which connects K-Adur and Kannankudi, was received in January 1965. It was found not possible to take up the work for want of funds.

## *Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act.*

* 169 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have received any representation from certain members of the Legislative Assembly on 1st February 1966 regarding the jurisdiction of Civil Courts to decide the correctness or otherwise of the classification of lands as Government assessed waste under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) After careful examination of the representation the Government came to the conclusion that it was not necessary to amend the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, in the manner suggested by the M.L.As. The members have been already informed of this decision.

[6th August 1966

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் இந்த மன்றத்தில் வந்தபோது, அதிலுள்ள குறைகளை மாவட்டங்களில் இருக்கின்ற கலெக்டர்கள் கவனித்து, ரயத்துக்களுக்கும் பட்டா கொடுப்பார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் இப்போது போடப்பட்டிருக்கும் உத்தரவின்படி லாண்ட் ஓனர்களுக்கு மட்டும்தான் பட்டா கொடுக்க முடியும், ரயத்துக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ரயத்துக்களுக்கும் பட்டா கொடுக்கின்ற அளவில் இந்த உத்தரவை மாற்றுவதற்குச் சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா : அந்த உத்தரவின் விவரங்கள் இப்போது என்னிடமில்லை. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் விரிவாக எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

* 170 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representations were received by the Government from the inam ryots of Navalok village, North Arcot district for notifying the village under Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act; and

(*b*) the details of the action taken by the authorities?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The matter is under consideration of the Government.

### கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

* 171 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் : திரு. ஆ. தங்கவேலு : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவு மொத்த உற்பத்தி விற்பனைச் சங்கத்தில் நடைபெற்றுவரும் ஊழல்கள்பற்றி அதன் அங்கத்தினர் பலர் கையொப்பமிட்டுப் புகார் ஏதேனும் அண்மையில் அனுப்பியிருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) An enquiry is in progress.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, கடையநல்லூர் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பல முறை புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது இதன்பேரில் விசாரணை நடைபெற்று வருவதாக



6th August 1966]

அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சீக்கிரமாக விசாரணை நடத்தி, உடனடியாக முடிவு எடுப்பதற்கு ஏதாவது வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்காக ஸ்பெஷல் ஸ்டாஃப் போட்டிருக்கிறார்கள். விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் விசாரணை நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், 15-8-1966-க்குள் ரிப்ளை தரவேண்டும் என்று அவர்களுக்கு 'ஷோ காஸ்' நோட்டீசும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த சொஸைட்டியின்மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன, அதனுடைய நிர்வாகத்தினர் யார் என்று அறியலாமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் இங்கு இல்லை. ஆனால் 13 சொஸைட்டிகளுக்கும் 'ஷோ-காஸ்' நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இதிலிருந்து நீக்கக் கூடாது என்று கேட்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகத்தான் கேள்வி போடவேண்டும்.

### மத்தியக் கூட்டுறவுப் பாங்கியில் குளிர்ப்பதனச் சாதனம்

* 172 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள மத்திய கூட்டுறவுப் பாங்கியில் குளு குளு சாதனம் (air conditioning apparatus) அமைத்ததற்கு அரசாங்க அனுமதி பெறப்பட்டுள்ளதா?

(இ) மற்ற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுப் பாங்கிகளிலும் இம்மாதிரிச் சாதனங்கள் அமைக்க அனுமதி பெறக் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) இல்லை. தங்களுடைய கட்டடங்களில் குளிர்ப்பதனச் சாதனங்களை (air-conditioning units) அமைப்பதற்குச் செலவு செய்ய மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்குகள் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை.

### *Multimetal ore deposits*

* 173 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any deposits of Gypsum have been discovered in the taluks of Pollachi, Palladam and Udumalpet of Coimbatore district; and

(*b*) if so, the estimated extent of the said deposits?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** (அ) & (இ) ஆம். கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பல்லடம் வட்டங்களில் களிக்கல் ( Gypsum ) படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பொள்ளாச்சி, பல்லடம் சாலைக்குக் கிழக்கேயுள்ள பகுதிகளில் இக்களிக்கல் படிவங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. அடுத்துள்ள பல்லடம், உடுமலைப்பேட்டை வட்டங்களிலும் இக்களிக்கல் படிவங்கள் ஆங்காங்கே திட்டு திட்டாகக் காணப்படுகின்றன. பல்லடம் பகுதியில் ஏறக்குறைய 56,000 டன் களிக்கல் படிவங்கள் கிடைக்கும் எனவும், பொள்ளாச்சி வட்டத்தில் ஏறக்குறைய 28,000 டன் களிக்கல் படிவங்கள் இருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் கிடைக்கும் களிக்கல் கொண்டு போர்ட்லண்டு சிமிட்டி, உரங்கள், பாரிஸ் உறை மாவு ( Plaster of Paris ) போன்ற பொருள்களைத் தயாரிக்கலாம்.

**திரு. வை. சங்கரன்:** இதைப் பயன்படுத்தி ஏதாவது சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா? அப்படி என்றால், அதன் கபாசிட்டி என்ன இருக்கும்?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இப்போதுதான் ப்ரிலிமினரி வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. பிறகுதான் இதைப்பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும்.

* 174 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether and multimetal ore deposits including iron, nickel, and copper have been found, in Mangamalai area in Kanyakumari district; and

(*b*) if so, whether any survey has been made to estimate the quantity of the respective metals available thereof?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** (அ) & (இ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் அருமல்லூர் அருகில் மாங்காமலைப் பகுதியில் சல்பைடு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, 1965 ஜனவரி-மே மாதங்களில் இந்தியப் புவியியல் ஆராய்ச்சியினரால் விரிவாகப் புலனாய்வு செய்யப்பட்டது. இக் கனி வகைகள் இங்கு இருப்பதாக இப்புலனாய்வின்மூலம் தெரிய வந்தது. இன்னும் கனிமூலப் பொருளின் தன்மை, அது எவ்வளவு ஆழம் தொடர்ந்து உள்ளது ஆகியவற்றை ஆராய்ந்தறியும் வேலையை மாநிலப் புவியியல் ஆராய்ச்சிக் கிளை மேற்கொண்டுள்ளது. வேலை நடந்தேறி வருகிறது.

**திரு. வை. சங்கரன்:** சார், சமீபத்திலே மாமன்டூர் பகுதியில் இந்தமாதிரி இருந்தபோது ஜப்பானியரைக் கொண்டு ஆராய்ந்த மாதிரி அவர்களைக்கொண்டே அதையும் ஆராய ஏற்பாடு செய்யப்படுமா?





**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** அந்த விவரங்கள் இப்போது இங்கு இல்லை.

### *Striking of oil at Nagercoil*

* 175 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact oil has been struck in two wells near the State Bank Building at Nagercoil;

(*b*) if so, whether any analysis of the samples was made; and

(*c*) the results thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

### தேசீய கீதம்

* 176 கேள்வி.—**திரு. ம. கமலநாதன்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபைக் கூட்டங்களின் இறுதியில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என மதுரை நகரசபை அண்மையில் ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றி உள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) நகரமன்றக் கூட்டங்களின் இறுதியில் தேசிய கீதம் பாடுவது உசிதமல்ல என்று சர்க்கார் நகரமன்றத்திற்குத் தெரிவித்துள்ளது.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, அப்படி இருக்கிற போது சினிமாக் காட்சிகள் முடிவுறும்போது கட்டாயமாகத் தேசிய கீதம் பாடப்படவேண்டும், அதைக் கேட்டுத்தான் வெளியேற வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பானேன்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** நகர மன்றங்கள் ருட்டின் மாட்டர்சுக்காகக் கூடுகிறார்கள். சட்ட மன்றங்களிலே, பாராளு மன்றத்திலே, மேல் சபையிலே எல்லாம் நிகழ்ச்சிகளுக்காகக் கூடுகிறார்கள். பொது மக்கள் கூடும் இடங்களில் மக்களுக்குத் தேசிய உணர்வை ஏற்படுத்துவதற்காக, மக்களுடைய பண்பாட்டுக்காகக் கொண்டுவருவதை ஒப்பிடுவது முறையல்ல.

[6th August 1966

## பஞ்சாயத்து யூனியன்களில் தாய், சேய் நல விடுதிகள்

* 177 கேள்வி—திரு. சோ. ஆறுமுகம்: கனம் நல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை தாய், சேய் நல விடுதிகள் இன்றுவரை இயங்கி வருகின்றன?

(இ) அவற்றில் முறையே அரசினர் கட்டடங்களிலும் மற்றக் கட்டடங்களிலும் இயங்கிவருபவை எத்தனை?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சபைமுன் விவர அறிக்கை a யொன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இதுபோல மருத்துவ மனைகள் பல வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. போதிய வசதி இல்லாததால் கிராமப்புறங்களில் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது. ஆகையால் மருத்துவ மனைகளுக்காக நிதியை ஒதுக்கிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தகுந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே கிராம மக்கள் அபிலாஷையுடன், ஆர்வத்துடன் வாடகைக் கட்டடங்கள் கொடுக்கிறார்கள். அதில் வைத்து நடத்தவேண்டுமென்று சொல்லி முன்வந்தால் அங்கே வைக்கப்படுகிறது. திட்ட அடிப்படையில் பொருளாதாரம் எவ்வளவு இடம் கொடுக்கிறதோ, அதற்குத் தக்கபடி சன்னஞ்சன்னமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன்.

### கோரக்கேணி பஞ்சாயத்து

* 178 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் நல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கோரக்கேணி பஞ்சாயத்தில் இருந்து பொன்னம்பூண்டியைத் தனிப் பஞ்சாயத்தாகப் பிரிக்கக் கோரி, பஞ்சாயத்துத் தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

(உ) நீண்டநாள் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) முதல் (உ) வரை. கோரக்கேணி பஞ்சாயத்து 10-6-1966-ம் தேதி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் பஞ்சாயத்தைப் பிரிப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

a 138–154-ம் பக்கத்தில் நாலாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



6th August 1966]

ஆனால், பஞ்சாயத்தைப் பிரிப்பதற்கான திட்டம் அரசினருக்கு இன்னும் வந்து சேரவில்லை. மாவட்ட அளவில் இவ்விஷயம் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்பே இரண்டு கிராமங்களையும் தனிப் பஞ்சாயத்தாக பிரிக்கவேண்டும் என்று தீர்மானம் செய்து சர்க்கார் அளவுக்கு பேப்பர் வந்துவிட்டது. தேர்தல் நடந்து முடிந்து விடட்டும், பிறகு ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் வேறு கருத்தைச் சொன்னார்களே, பொன்னம்பூண்டியிலிருந்து இன்னும் மெம்பர்களே தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கோரக்கேணி பஞ்சாயத்தில் ஜுன் 1966-ல் தான் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. தீர்மானம் கலெக்டருக்குப் போயிருக்கிறது. சர்க்காருக்கு வந்தாலும் பொதுத் தேர்தலுக்கு முன் மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

### *Srirangam Municipality*

* 179 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to merge Srirangam Municipality with Tiruchirappalli Municipality?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இதைப்போல் யோசனை எதுவும் இல்லை.

திரு. வை. சங்கரன்: சார், ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டிக்குச் செலவு ரூ. 5 லட்சத்துக்கு மேல் ஆகிறது, அதற்கு வேண்டிய வருவாய் இல்லை என்று அறிகிறேன். திருச்சி மாநகர் திட்டம் தயாரிக்கும்போது இதையும் சேர்த்துத் தயாரித்தால் அனுகூலமாக இருக்கும் என்று அம்மாதிரிச் செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: வருமானம் ரூ. 7,43,000 அளவுக்கு இருக்கிறது. 42,000 ஜனத்தொகை இருக்கிறது. தன்னுடைய நிர்வாகத்தைச் சீராக அமைத்துக்கொள்ளும் அளவில் நிர்வாகம் நன்றாக இருக்கிறது என்று இன்ஸ்பெக்டர்கள் அவ்வப்போது தகவல் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பிரச்னைக்கு இடமில்லை.

திரு. ந. சுப்பிரமணியம் செட்டியார்: சபாநாயகர் அவர்களே, முனிசிபாலிட்டியால் எந்தவித வசதியும் செய்துகொள்ள முடியவில்லை. அங்கு ஒரு பெரிய கோவில் இருக்கிறது, தேவஸ்தானம் இருக்கிறது. வருஷம் பூராவும் திருவிழா இருக்கிறது. சுகாதாரத்திற்காகச் செலவு செய்யக்கூட முடியவில்லை. கார்ப்பரேஷன் ஆக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தப் பிரச்னையைப்பற்றி கனம் முதல் அமைச்சர் முனிசிபல் பில்டிங் திறக்க வந்தபோது

[6th August 1966

சொன்னேன். கைலாச நகர் போன்றவற்றையெல்லாம் சேர்த்து கார்ப்பரேஷனுகச் செய்வார்களா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : இப்போது இருக்கும் முறையில் சிறு யூனிட்டாக இருந்தால்தான் மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்பதை அங்கத்தினர் ஏற்றுக்கொள்ளுவார்கள் என நினைக்கிறேன். அவர்கள் சொல்லுவதுபோல் எவ்விதப் பிரச்னையும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அவ்வித அபிப்பிராயம் சர்க்காரிடம் இல்லை.

### தேர்தல்களில் பணி புரிந்தவர்களுக்குப் பயணப்படி

*180 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்** :
**திரு. செ. மாதவன்** : } கனம் நல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் நமது ராஜ்யத்தில் நடைபெற்ற பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களில் பணியாற்றிய சிப்பந்திகள், ஆசிரியர்கள், உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அவர்களுக்குரிய போக்குவரத்துப் பயணப்படி கொடுக்கப்பட்டு விட்டதா ?

(இ) இல்லையெனில் காரணமென்ன ?

(உ) பாக்கியிருந்தால் மார்ச் மாத முடிவிற்குள்ளாக பூரணமாகக் கொடுத்து முடித்துவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : (அ) & (இ) கன்னியாகுமரி, நீலகிரி, இராமநாதபுரம், வட ஆற்காடு, கோயம்புத்தூர் (பொள்ளாச்சி கோட்டம் தவிர), செங்கற்பட்டு (பொன்னேரி வட்டம் தவிர) மாவட்டங்களில் 1965-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் நடைபெற்ற பஞ்சாயத்துப் பொதுத் தேர்தலில் வாக்கெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட அனைவருக்கும் சேரவேண்டிய பிரயாணப்படித் தொகையை நிர்ணயித்துக் கொடுக்கப்பட்டது.

இதர மாவட்டங்களிலிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) விரைவாகப் பிராயணப்படித் தொகையை நிர்ணயித்து வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அரசினர் தக்க ஆணை பிறப்பித்துள்ளனர்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : ஸார், நான் சுட்டிக் காட்டிய மார்ச் மாதம் கடந்த மார்ச் மாதம். தேர்தல் நடந்து ஒரு வருஷம் ஆகியும், சாதாரண பயணப்படியை முடிவு செய்து கொடுக்க இவ்வளவு காலதாமதம் ஏற்படுவது நியாயம்தானு? ஒன்றிரண்டு மாதங்கள் என்று ஒரு காலவரையறையைக் குறிப்பிட்டு முடிவு செய்து கொடுக்க அவசர நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?



6th August 1966]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : ஏற்கனவே கனம் அங்கத்தினர்களே ஒன்றிரண்டு தனிப்பட்ட பிரச்னைகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதன்மீது நடவடிக்கைகளை எடுத்து அவைகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்காக கனம் அங்கத்தினர் சர்க்காரைப் பாராட்டுவார் என்று நினைக்கிறேன். குறிப்பிட்ட மாவட்டங்களில் எல்லாவிதப் பிரச்னைகளும் செட்டில் செய்யப்பட்டுவிட்டன. ஒரு சில ஜில்லாக்களில் என்ன காரணத்தினுலோ டிலே இருக்கிறது; அக்கவுண்டன்ட்-ஜெனரல் ப்ரீ-ஆடிட்டுக்குக் கூட கட்டுப்படாமல் சீக்கிரம் செட்டில் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேம். குறிப்பிட்ட தேதிக்குள் செய்ய வேண்டுமென்று சொல்லுவதை விட சீக்கிரமாகக் கால தாமதம் இல்லாமல் செய்யவேண்டுமென்று தாக்கீது அனுப்ப முயற்சிக்கிறேம்.

**திரு. செ. மாதவன்** : சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஆனுல் கீழே உள்ள அதிகாரிகள் அறிக்கை அனுப்புவதிலே தாமதம் ஏற்படுகிறது, அதனுல் காலதாமதம் ஏற்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தெரிவித்தார்கள். கலெக்டர் அவர்கள்தான் உத்தரவிடுகிருர்கள், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் யார் யார் போக வேண்டுமென்று. சாதாரணமாக ஆசிரியர்கள் தான் அனுப்பப்படுகிருர்கள். ஆகவே கலெக்டர் உடனே பயணப் படியை நிர்ணயம் செய்து கொடுக்கவேண்டியதுதானே? அதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : என்னென்ன காரணங்கள் என்பது பற்றி தகவல் இல்லை. கீழ்மட்ட அளவிலே காலதாமதத்திற்கு என்னென்ன காரணங்கள் என்பதை தகவல் தெரிந்து சொல்கிறேன்.

### ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம், மதுரை

*181 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கம் 8-4-1965-ல் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் ஏதேனும் சமர்ப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) : A memorandum containing a request for the sanction of a minimum pension of Rs. 20 per mensem to teachers and other requests was submitted to the Chief Minister. A minimum pension of Rs. 20 has since been sanctioned with effect from April 1966 payable in May 1966. The other requests are not admissible.

[6th August 1966

**புலவர் கா. கோவிந்தன் :** ஆசிரியர்களுக்கு ரூபாய் 20-க்குக் குறைந்த அளவில் பென்ஷன் இருக்கக்கூடாது, குறைந்தது ரூபாய் 20 அளவுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் இப்பொழுதே பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ரூபாய் 20-க்கும் குறைந்த பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு ரூபாய் 20 பென்ஷன் கொடுக்கப்படும் என்று அகௌண்டெண்டு-ஜெனரல் சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், அவர்கள் அந்தமாதிரி பென்ஷன் வாங்க முடியும். இப்படிச் செய்தால் இது எளிதிலே முடிந்துவிடும். இதற்கு அரசாங்கம் வழிவகை செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறுவது எனக்கு சரியாகப் புரியவில்லை. அவர்களுக்கு குறைந்தபட்சமாக பென்ஷன் ரூபாய் 20 இருக்கவேண்டும், முதியோர்களுக்கு உதவி ரூபாய் 20 கொடுக்கிறோம், அந்த அடிப்படையில் ரூபாய் 5, 6, 10 பென்ஷன் வாங்கிக்கொண்டிருப்பவர்களுக்கும் ரூபாய் 20-க்கு பென்ஷன் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஏப்ரல் மாதத்திலிருந்து கொடுக்கப்பட்டு வரும்.

### கல்வித்துறை அதிகாரிகளின் சம்பளம்

* 182 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜில்லா கல்வி அதிகாரிகள், ஸ்பெஷல் கல்வி அதிகாரிகள் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள், பெண்கள் பள்ளிகளின் இன்ஸ்பெக்ட்ரஸ்கள், சீனியர், ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்குக் கூடுதல் சம்பளமும், பிரயாணப் படியும் கொடுப்பதற்குத் திட்டமிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இல்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** பாடசாலைகளிலே பரீட்சாதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் பெறுகிற சம்பளம் அங்கே பணி செய்கிற தலைமை ஆசிரியர்கள், நீண்ட காலமாக பணிபுரிந்து வருகிறவர்களுடைய சம்பளத்தைவிட குறைந்த அளவுக்கு இருக்கின்ற நிலைமை இருக்கிறதா ? அத்தகைய பரீட்சாதிகாரிகளுடைய விசேஷ நிலைமையைக் கருதி, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை மாற்றி அமைக்கவோ அல்லது விசேஷ மான்யம் வழங்குவதற்கோ அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அம்மாதிரி உத்தேசம் இப்பொழுது இல்லை என்றுதான் சொன்னேன்.

### *Grant to Municipal High Schools*

* 183 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal before the Government to increase its annual grant to Municipal High Schools in the State; and



6th August 1966]

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is under examination.

**திரு. வை. சங்கரன் :** குறிப்பாக சில முனிசிபாலிட்டிகள் தாங்களே கல்விக்காக பூராவும் செலவழித்து இந்தப் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இவ்வளவு வேண்டும், இவ்வளவு தேவை என்பதைத் தெரிந்து, அரசாங்கம் சீக்கிரம் இந்த மான்யத்தை அளிக்க நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதெல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

### திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி

* 184 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 பிப்ரவரி 12, 13 ஆகிய தேதிகளில் திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Rs. 5,856.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டபொழுது விவசாயக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. அதற்கான செலவு எவ்வளவு என்று கூறமுடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை.

### *Unsold books with Bureau of Tamil Publications*

* 185 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the value of the books in Tamil including translations and original works lying unsold with the Bureau of Tamil Publications set up by the Government of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The value of the books in Tamil including those released on 14th April 1966 in stock with the Bureau of Tamil Publications, is Rs. 10,02,745.50.

**திரு. சா. கணேசன் :** இம்மாதிரி அறிவியல் நூல்களை அச்சிட்டதும் முழுவதும் விற்றுவிட முடியாது என்பதும், பல வருஷங்களும் தொடர்ந்து படித்து வரும் மாணவர்களால் வாங்கப்பெற வேண்டிய காரணம் இருப்பதினாலே இவைகளை விற்பதற்குக் கால தாமதம் ஆகும் என்பதையும் கருதி, இத்தகைய வெளியீடுகளில்

போடப்படுகிற முதல் விரயமாகிறது என்ற கருத்துக்கொள்ளாமல், தொடர்ந்து இம்மாதிரி நல்ல வெளியீடுகள் வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு இம்மாதிரி நூல்கள் 1,000 பிரதிகள்தான் போடப்பட்டன. இப்பொழுது 2,000 பிரதிகள் போடுவது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

### *Tenants of Sundaraperumal Koil*

* 186 *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representation has been sent to Government on 21st February 1966 against their mirasdas, by tenants of Sundaraperumal Koil, Kumbakonam taluk, Thanjavur district, to the effect that they are unlawfully compelled to leave the Inam lands; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Only an unsigned petition was received from the villagers of Sundaraperumal Koil village stating that they are not able to apply for ryotwari patta for the lands cultivated by them for the reason that the village officers and the Revenue Inspector are being influenced by the inamdar.

(*b*) The petition was forwarded to the Assistant Settlement Officer, Thanjavur. It is reported that statutory enquiry for grant of patta in respect of Sundaraperumal Koil Vadapathi Padugai inam estate taken over by the Government will be taken up by the Assistant Settlement Officer after the survey records are received and that the representations of the villagers will be considered by him at the time of statutory enquiry either on application or suo moto as provided for under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).

**திரு. கி. இரா. சம்பந்தம் :** அங்கே அந்த மிராசுதார் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் தலைவராக இருப்பதன் காரணமாக சாகுபடி செய்யக்கூடியவர்களை சாகுபடி கூட செய்ய முடியாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்களுக்கும், ஜில்லா அதிகாரிகளுக்கும் மனுக்கள் கொடுக்கப்பட்டன. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை பற்றி தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** பட்டா வழங்குவது சம்பந்தமான கேள்வி இது . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினருடைய கேள்வி என்ன வென்று சொல்லவேண்டும். மொத்தமாக, "பெட்டிஷன் வந்திருக்கிறது, அதைப்பற்றி அமைச்சர் என்ன சொல்கிறார்கள்?" என்று கேட்கக்கூடாது. கேள்வியைக் குறிப்பாகவும், தெளிவாகவும் போடவேண்டும்.



**திரு. கி. இரா. சம்பந்தம் :** அந்த விவசாயிகள் சாகுபடி செய்ய முடியாதபடி, வாழை போட முடியாதபடி, கரும்பை அங்கே சாகுபடி செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அந்த பெட்டிஷனில் எழுதப்பட்டிருக்கிறது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

**கனம் திரு. வெ. ராமையா :** எனக்கு வந்திருக்கக்கூடிய முக்கியமான கேள்வி பட்டா வழங்குவது சம்பந்தமானது. அதைப் பரிசீலனை செய்து பார்த்து பதில் சொல்லியிருக்கிறேன். இதிலே யாரும் குறுக்கே நிற்க முடியாது. விவசாயிகள் பட்டாவுக்கு மனுக்கள் போட்டால், சட்டத்தின் அடிப்படையில் பட்டா வழங்குவதற்கு வேண்டிய என்கொயரி நடக்கும் என்று சொல்லியிருக்கிறேன். மற்றபடி தனியாகக் கேள்வி போட்டால், பார்த்துச் சொல்கிறேன்.

### ஆலங்குடியில் அரிசி ஆலை

* 187 *கேள்வி.*—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியில் புதிதாகக் கட்டவிருக்கும் அரசாங்க மருத்துவமனைக் கட்டடத்திற்கு மிக அருகில் ரைஸ் மில் போடுவதைத் தடை செய்ய வேண்டுமென்று அண்மையில் பொதுமக்களிடமிருந்து மகஜர் ஒன்று வந்ததா?

(இ) ஆமெனில், அதற்குமேல் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The matter is under consideration in consultation with the District Revenue Officer, Tiruchirappalli.

**திரு. பி. முருகையன் :** அந்த மருத்துவமனைக்கு அருகாமையில் ரைஸ் மில் ஏற்பட்டால், அங்கிருக்கிற நோயாளிகளுக்கும், வேலை செய்கிறவர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படும் என்று மாவட்ட மருத்துவ அதிகாரியும், மற்ற மாவட்ட தலைமை அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஒட்டி அங்கே ரைஸ் மில் வைப்பதற்கு அனுமதி கொடுக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

**கனம் திரு. வெ. ராமையா :** ஒரு குறிப்பிட்ட ரைஸ் மில்லுக்கு எங்கேனும் லைசென்ஸ் வழங்கவேண்டும் என்றால் அதுபற்றி பல அதிகாரிகள் பரிசீலனை செய்து சிபார்சு செய்யவேண்டும். அது நடந்துகொண்டிருக்கிறபொழுது இதுபோன்ற ஆட்சேபணை மனு வந்திருக்கிறது. இதையும் டி.ஆர்.ஓ. பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

[6th August 1966

## பர்மா தமிழர்கள் அந்தமான் தீவில் குடியேற்றம்

*188 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் 3-11-1965-ல் கேள்வி எண் 254-க்கு அளித்த பதிலை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பர்மா தமிழர்களை அந்தமான் தீவில் குடியேற்றும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH: The matter is under correspondence with the Government of India.

திரு. கரு. சீமைச்சாமி: முன்பே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது இப்பொழுது பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னால், எவ்வளவு நாள் ஆகும்? பர்மா அகதிகளின் பிரச்னை வெகு முக்கியமான பிரச்னை, ரோடில் பல பேர்கள் உணவு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கருதி உடனே இவர்களை குடியேற்றுவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்யும்?

கனம் திரு. வெ. ராமையா: உடனே நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் ஒன்றும் தடை கிடையாது. மத்திய அரசாங்கம் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் இவர்களைக் குடியேற்றுவதற்கு ஒன்றும் தடை விதிக்கவில்லை. இங்கு வந்திருக்கக்கூடிய பர்மா ரிபாட்ரியேட்களில் எத்தனை பேர்கள் அங்கே போக விரும்புகிறார்கள் என்று ஒவ்வொரு மாவட்ட கலெக்டரையும் கேட்டபொழுது, மார்ச்சு மாதம் வரைக்கும் வந்த விவரப்படி 11 குடும்பங்கள் போகத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால், மறுபடியும் பத்திரிகை விளம்பரம், மற்ற முறைகளின் மூலம் இப்பொழுது நமக்கு தகவல் வந்திருக்கிறபடி 140 குடும்பங்கள் அங்கே போவதற்கு தயாராக இருக்கிறார்கள். இதற்கு வேண்டிய நடவடிக்கையை மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதில் நான் பார்த்தவரையில் இருக்கக்கூடிய சிக்கல் அங்கே இருக்கக் கூடிய தீவுகளில் குடியேறினால் தங்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்குமோ, இதெல்லாம் புது இடம், மேலும் தங்களுக்கு கஷ்டம் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் அவர்கள் அங்கே போக தயங்குகிறார்கள். மத்திய அரசாங்கத்தைக் கேட்டு, இந்த ராஜ்யத்தின் விசேஷ அதிகாரிகளோ, மற்றவர்களோ அங்கு போய்ப் பார்த்து, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய சூழ்நிலையைப் பார்த்து, மேலும் நடவடிக்கை எடுக்கக்கூடும்.

9.30 a.m. திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு குடும்பங்களை அனுப்ப வாய்ப்பு இருக்கிறது? அங்கே சென்று குடியேறுகிறவர்களுக்கு இந்திய அரசும், இந்த அரசும் என்னென்ன உதவிகள் செய்யும் என்றும் அறியலாமா ?



6th August 1966]

கனம் திரு. வெ. ராமையா: கிட்டத்தட்ட 250 குடும்பங்கள் போக முடியும். இப்பொழுது அவர்கள் போனவுடனே ஒரு தீவில் மராமத்து வேலைகள் நடக்கின்றன, அதிலே எடுத்துக் கொள்ள முடியும். அதன் பிறகு அவர்களுக்கு நிலமும் கொடுக்கிறார்கள். பின்னால் ரப்பர் ப்ளான்டேஷன் வேலையும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. உடனடியாக ஆறுமாதத்திற்கு அவர்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்கள் கொடுக்கிறார்கள்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: பர்மா அகதிகளுக்கு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்துப் பழக்கம் கிடையாது. நெல் விவசாயம் செய்துதான் பழக்கம், பர்மாவிலிருந்து வந்திருக்கும் அகதிகளுக்கு. பர்மா அகதிகள், சிலோனிலிருந்து வருகிறவர்கள் போல அல்ல. ஆகவே, ஒவ்வொருவருக்கும் தகுந்த அளவுக்கு நிலம் ஒதுக்கிக் கொடுத்து விவசாயம் செய்ய ஏற்பாடு இருக்கிறதா மத்திய சர்க்கார் கொள்கையில் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: மத்திய சர்க்கார் விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்கள் தேவை என்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால் சிலர் ரப்பர் தோட்டத்திலும் வேலை செய்யலாம். அப்படிச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், பர்மா தமிழர்கள் போல, இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களுக்கும் இப்படி தீவுகளுக்குச் செல்ல வேண்டும் என்றால் வழிவகை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா: அதையும் மத்திய சர்க்கார் பரிசீலனை செய்கிறது.

## வாரச் சந்தைகள்

*189 கேள்வி.—திரு. ம. கமலநாதன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனியார் வாரச் சந்தைகளை, பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்று நடத்த வழிவகை செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அரசினரிடம் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. எந்த ஊராட்சி ஒன்றியமு மன்றமாவது தனியார் வாரச் சந்தைகளை எடுத்து நடத்த உத்தேசித்துள்ளதா என்ற தகவல் சேகரிக்கப்படுகிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, தற்போது ஜமீன் இனும் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. பற்றாக்குறையான வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருமானம் வர வழியாக இருக்கும் என்று இந்த யோசனையைச் சொன்னேன். கனம் அமைச்சர் 'இல்லை' என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையில் அவர்களுடைய வருமானத்தில் 15 சத விகிதம் வரியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. சரியான கணக்குக் கொடுக்காததால், வரி

வசூல் சிரமமாக இருக்கிறது. ஆகவே, சந்தைகளை ஏலம் விட்டு 15 சத விகிதம் லைசென்ஸ் தொகையைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களுக்கு வருமானம் வரவேண்டும் என்று சொல்லியிருக்கும் யோசனை நல்லதுதான். ஆனால், தனியார் நடத்தும் சந்தைகளை மாற்றப் போனால், வழக்கு மன்றங்களில் வழக்கு போட்டு, அப்படிப் பல கேசுகள் இருப்பதும், சிக்கல் இருப்பதும் தெரியும். அம்மாதிரி பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் வாரச் சந்தைகளை எடுத்து நடத்துகிறோம் என்று தீர்மானம் போட்டு ஜில்லா கலெக்டருக்கு அனுப்பினால், எந்த அளவு நில ஆர்ஜிதம் செய்து, அந்த உரிமையைக் கொடுக்கலாம் என்று பரிசீலனை செய்து கூடுமான வரை உதவி செய்ய முயற்சி செய்யலாம்.

### பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர்கள்

*** 190 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர்கள் எவருக்காவது அண்மையில் சிறைதண்டனை கொடுக்கப்பட்டதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இல்லை.

**திரு. பி. முருகையன் :** சார், சில பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களிலே, ஒரு சில கூட்டுமன்றத் தலைவர்களுக்கு கோர்ட்டிலே தண்டனை விதிக்கப்பட்டிருந்தும், தண்டனை பெற்றவர்கள் பதவியில் இருக்கக்கூடாது என்று சட்ட விதிகள் இருந்தும் தொடர்ந்து தலைவராக இருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்? அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லுகிறார்களே, அது எப்படி என்று அறியலாமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கேள்வியில் "அண்மையில்" என்றிருந்ததால், 'இல்லை' என்று பதிலளித்தேன். அப்படி தண்டனை அடைந்தவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது பதவியில் இல்லை. ஆனால், அம்மாதிரி தண்டனை பெற்றவர்கள் பதவியில் இருக்கக் கூடாது என்று தடை இல்லை. அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன, அங்கத்தினருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்தில் பதவி வகிப்பவர்கள், பஞ்சாயத்தில் ஊழல்கள் செய்தார்கள் என்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றால், பதவியிலிருந்து நீக்கப்படுகிறார்கள். ஆனால் தனிப்பட்ட முறையில் தண்டனை அடைந்திருந்தால் பதவியில் நீடித்து வைக்காமல் இருக்க ஏதாவது வழிவகை இருக்கிறதா?



**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இன்றைக்குள்ள பஞ்சாயத்து சட்டத்திலே அதற்கான வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அது பற்றி எழுதியனுப்பினால், திருத்தம் செய்ய யோசிக்கலாம்.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTIONS.

### 1. FASTING OF WORKERS IN THE ELECTRICAL GOODS MANUFACTURING COMPANIES AT SALEM AND ERODE.

**திரு. து. ப. அழகமுத்து :** கனம் அவைத் தலைவர் அவர்களே, சேலம், ஈரோடு மின்சாரக் கம்பெனித் தொழிலாளர்கள் பஞ்சப்படி, சம்பள உயர்வு வேண்டும் என்று 17-5-1966 முதல் உண்ணாவிரதம் இருந்தும், ஸ்ட்ரைக் செய்தும் வருகிறார்கள். ஆனால், இந்த நியாயமான கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதம் செய்கிறார்கள். இந்த நிலைமை நீடிப்பதால், தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதில் சர்க்கார் தலையிட்டு, ஏதாவது வழிவகை செய்ய வேண்டும் என்று, அந்த நிலைபற்றி விவாதிக்க இந்த சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதற்காக நான் ஒத்திவைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இதிலே இருக்கும் விஷயம் முக்கியமானது. முதலாளிகள் கம்பெனி அட்ஜூடிகேஷன் வேண்டும் என்று கேட்டார்கள். அரசாங்கமும் நீதிபதி தீர்ப்புக்கு விட்டது. முடியும் தருவாயில், நீதிபதி காலவரையறை இல்லாமல் ஒத்திப் போட்டுவிட்டார். பணச் செலவு எவ்வளவு என்று தெரிய வேண்டும் என்று கேட்டு, தீர்ப்பை ஒத்திப் போட்டுவிட்டார். அதனால் பரிகாரம் காணமுடியாத சங்கடமான நிலைமையை ஏற்படுத்திவிட்டார். இதற்கு ஒரே பரிகாரம், அந்த நீதிபதியை மாற்றுவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அப்படி மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும், இது முக்கியமான பிரச்னை. கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து கொண்டு வந்திருப்பது ரொம்ப நியாயமானது. கனம் முதல் அமைச்சர் ஏதாவது சொல்வதற்கு இருந்தால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறுகின்ற நிலையில் கூட இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்பது தான் என் அபிப்பிராயம். அதற்கென்று ஒரு இயந்திரம் இருக்கிறது. அந்த இயந்திரம் சரியாக இயங்கவில்லை என்றால், அது வேறு விஷயம். ஸ்ட்ரைக், உண்ணாவிரதம் இருப்பது எல்லாம் கூட எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், லேபர் கமிஷனரைச்

கூப்பிட்டு என்ன செய்யமுடியும் என்று பார்க்கலாம். நீதிபதி விஷயம் அவர்களுக்கு (திரு. கலியாணசுந்தரத்திற்கு) தெரியும், அவர்களிடம் சொல்லியிருக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** இம்மாதிரி விஷயங்களில் விவரம் அறிந்து கொள்ள வேண்டுமானால் ஒரு 'ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டின்' கொடுத்திருக்கலாம். அப்போது அதன் மீது இரண்டு, மூன்று உபகேள்விகளாவது போடலாம். அதை விட்டு அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுத்தால், அது 'ரூல் அவுட்' ஆகிவிடுகிறது.

I rule this motion out of order.

## 2. FIRE ACCIDENTS IN TINDIVANAM.

**திரு. ஆ. தங்கவேலு :** கனம் சபாநாயகர் அவர்களே, திண்டிவனம் நகரம் ஒன்றாவது, இரண்டாவது வார்டுகளில், 28-7-1966 முதல் 4-8-1966 வரை திடீர் திடீர் என்று இங்குமங்கும் ஆக பல தடவை தீ விபத்து ஏற்பட்டு பல வீடுகள் தீக்கிரையாகி விட்டன. 4-8-1966-ம் தேதி மட்டும் 4 தடவை தீ விபத்து ஏற்பட்டு, பாமர ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எந்த நேரத்தில் தங்கள் வீடுகள் தீ விபத்துக்குள்ளாகுமோ என்ற பீதியால் தங்கள் வீடுகளைக் காலி செய்துவிட்டு சாமான்களை வெளியிடங்களில் போட்டு காவல் புரிந்து வருகின்றனர். அவர்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. நகர மக்கள் மிகவும் பீதிக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைப்பற்றி விவாதிக்க இச்சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோரி நான் இத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** குறவியா, ஏவலா? ஏது என்று சொல்லவில்லையே? (சிரிப்பு)

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே. Fire accident என்றால், அது ஒரு occurrence தான் அவசரப் பிரேரபணைக்கான வாசகத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. தீ விபத்து என்றால், அது ஒரு occurrence தான் என்று சொல்லி, அதற்காக இந்தச் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து, அரசாங்கம் பதில் சொல்லவேண்டும் என்று கோருவதற்கில்லை. திண்டிவனத்தில் மாத்திரமல்ல, மற்ற கிராமங்களிலும் இதுபோன்ற நிலைமை ஏற்படலாம். கூடியவரையில் நகரங்களில் Fire Service Stations வைத்திருக்கிறோம். எங்கெங்கே அமைக்கப்படுகின்றன என்கிற விவரம் அப்போதைக்கப்போது வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இந்த ஆண்டில் திண்டிவனத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் வைக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த ஆண்டு பட்ஜெட்டில் அது இடம் பெற்றிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை. இதெல்லாம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு



வருகிற விஷயம் ஆகும். குறிப்பாக, அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அரசாங்கம் கவனிக்கும். இது அவசரப் பிரேரபணைக்கு உரியதல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : I rule the adjournment motion out of order.

## III.—ALLEGED MISREPORTING IN THE "INDIAN EXPRESS".

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நான் பேசுகின்ற சமயத்தில் குறிப்பிட்ட ஒரு விஷயம், என்னுடைய பேச்சை பிரசுரித்துள்ள "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் மிகவும் தவறான கருத்தைத் தரும் வகையில் வந்திருக்கிறது. வேண்டுமென்று அவர்கள் எழுதியதாக நான் கருதவில்லை. ஏதோ தவறு ஏற்பட்டிருக்கலாம். அந்தத் தவறைத் திருத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இதைக் குறிப்பிடுகிறேன். இல்லாவிட்டால் உரிமைப் பிரச்சினையாகக் கூட நான் கொண்டுவந்திருப்பேன். அந்தத் தவறைத் திருத்த வேண்டும் என்பதற்காகத்தான் விளக்கம் கூற நான் விரும்புகிறேன். அதிலே எப்படி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்றால் "He said care should be taken to see that there was no corruption in allocation of seats in professional colleges. There were complaints about selection of candidates for the medical course but not for the engineering course." என்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது வரைக்கும் சரியாக நான் சொன்னபடி இருக்கிறது. அடுத்து, 'He wondered if this was due to the non-official element in the Selection Committee' என்று இருக்கிறது. நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. உத்தியோகப் பற்றற்றவர்கள் வைத்தியக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இருப்பது தான் காரணமோ என்று நான் ஆச்சரியப்பட்டேன் என்ற வகையில் இதில் கூறப்படுகிறது. அது அல்ல நான் கூறியது. இன்று காலையில் மறுபடியும் பார்த்தேன். மற்ற கனம் அங்கத்தினர்களுக்குக் கூட ஞாபகம் இருக்கும். நான் கூறியது என்ன? "முன்பு உத்தியோகப் பற்றற்றவர்களைக் கொண்டு அமைந்த நேரத்தில் புகார் வந்து, ஒருவர் அந்தக் கமிட்டியில் கூடக் கலந்துகொள்ளக்கூடாது என்று தடுக்கப்பட்டார். அதன் பிறகு உத்தியோகஸ்தர்கள் அதிகமாக நியமிக்கப்பட்டார்கள். அப்படியிருந்தும் புகார் அதிகமாக வருகிறது" என்ற கருத்தில் கூறினேன். உத்தியோகப் பற்றற்றவர் ஒரே ஒருவர்தான் இருக்கிறார். அவரை நான் குறிப்பிடவில்லை என்று தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உத்தியோகஸ்தராக இருப்பவர் டாக்டராக இருக்கக்கூடிய காரணத்தால், டாக்டர்கள் சொந்தமாகப் பணம் வாங்கிக்கொண்டு கூட வைத்தியம் செய்யலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அம்மாதிரி நிகழ்கிறதோ அல்லது இடையில் சிலர் புகுந்துகொண்டு, இவர் பெயரை உபயோகித்துப் பணம் வாங்குகிறார்களோ என்ற புகார்கள் நிறைய இருக்கின்றன, விசாரிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் நான் நேற்று கூறினேன். தயவு

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [6th August 1966

செய்து அந்தப் பத்திரிகையில் சரியான முறையில் பிரசுரிக்க வேண்டும் என்று நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலையில் அந்தப் பத்திரிகையில் வந்த ரிப்போர்ட்டைப் படித்தபோது, இப்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் என்ன குறிப்பிட்டார்களோ அதுதான் என் மனத்திலும் பட்டது. நேற்று கனம் உறுப்பினர் அவர்கள் உத்தியோகப்பற்றற்றவர்கள் மீது புகார் கூறவில்லை என்று சொன்னார்கள். அதை அந்தப் பத்திரிகையில் தவறாகப் போட்டிருக்கிறார்கள். அந்தத் தவறை அந்தப் பத்திரிகை திருத்திக் கொள்ளும் என்றுதான் நான் நம்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை அதற்குத் திருத்தம் வெளியிடவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## IV.—CALLING ATTENTION TO SCARCITY OF NON-JUDICIAL STAMPS.

**திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பத்திரப் பதிவுக்கான குறைந்த கட்டண விகிதங்களில் உள்ள முத்திரைத் தாள்கள் கிடைக்காமல் வேறு மாவட்டங்களுக்குச் சென்று வாங்கிவரவேண்டிய நெருக்கடியான நிலையில் பொதுமக்கள் கஷ்டப்படுகின்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன்.

THE HON. SRI V. RAMAIAH : Sir, for some time past, there has been short supply of non-judicial stamps in the State. The scarcity became acute since March last. The Director of Treasuries and Accounts has stated that the position regarding the stock of stamps is satisfactory only in the districts of Madurai, the Nilgiris and North Arcot and that scarcity is experienced in the remaining districts. It is reported that there is widespread scarcity of the non-judicial stamps of the value of Rs. 100 and less.

It was brought to the notice of the Government in October last that there was shortage of stamps (judicial and non-judicial) of various denominations in almost all the treasuries in this State. As against the large indent of stamp papers sent by the Treasury Officers it was reported that only meagre supplies were being received and that too under limited denominations. As numerous complaints were being received from the public about the non-availability of stamps in the treasuries, the Controller of Stamps at Nasik was requested to look into the matter and to see that indents pending in his office were fully met without further delay and see that the public do not suffer. The Controller of Stamps stated that the supplies of non-judicial



6th August 1966] [Sri V. Ramaiah]

stamps are actually being rationed to all the treasuries and sub-treasuries in the country due to the precarious position of foreign exchange required for importing the paper for printing these stamps. The Director of Treasuries and Accounts, Madras was deputed to Nasik to study the situation and he discussed the matter on 20th July 1966 with the Controller of Stamps, Nasik, and made arrangements for air lifting of non-judicial stamps to the value of Rs. 21,40,000 which was available then with the Controller. Against the indent for 1964-65 and 1965-66 the Controller of Stamps, Nasik, has yet to make supplies worth Rs. 1.43 crores and Rs. 12.95 crores respectively.

The Director of Treasuries and Accounts, Madras, has suggested that the sunlit-off set white printing paper now being used for printing of stamps in Jammu and Kashmir and also in Burma may be used for the purpose in the place of imported foreign paper. The matter has been taken up with the Government of India and also by the Chief Minister with the Union Finance Minister to initiate immediate action for the release of the necessary amount of foreign exchange and also to explore the possibility of utilising the indigenous make paper for printing these stamps.

## V.—PRESENTATION OF REPORT.

### REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டுக்கான இந்த மாநிலக் கணக்குகள் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் நான் வைக்கிறேன்.

## VI.—POINT OF ORDER.

### RECOGNITION OF FORWARD BLOCK PARTY.

**கனம் சபாநாயகர் :** கனம் உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் தலைவர் அவர்களே . .

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஃபார்வேர்டு ப்ளாக் கட்சியின் சார்பாக என்னைப் பேச அனுமதிக்கவில்லை என்ற புகாரைக் கிளப்பிய நேரத்தில், தாங்கள் "ஃபார்வேர்டு ப்ளாக் என்ற கட்சி ஒப்புக்கொள்ளப்பட்ட கட்சியாக சட்டசபையில் இல்லை" என்று குறிப்பிட்டீர்கள்.

**கனம் சபாநாயகர் :** சட்டசபையில் அந்தக் கட்சி 'ரெகக்னைஸ்' பண்ணப்படவில்லை. It has not been recognised inside the

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** அப்படிச் சொன்னீர்கள். சட்ட சபை உறுப்பினர்களுக்காக ஒரு 'டயரி' வெளியிட்டிருக்கிறீர்கள். மற்ற அரசாங்க இலாக்கா வெளியிட்டதல்ல, அசெம்பிளி டிப்பார்ட்மென்ட் இதை வெளியிட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதிலே 'Strength of Parties in the Madras Legislative Assembly' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தலைப்பில், காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, கம்யூனிஸ்ட் பார்ட்டி என்று குறிப்பிட்டுக்கொண்டு வந்து, கடைசியாக Independents (Ind.) including one Socialist (Soc.) and one Tamil Nad Forward Block Party' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்று வகையினரும் ஒன்ருகப் போடப்பட்டிருக்கிருர்கள். இந்த டயரி 1965-ம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** அந்தத் தலைப்பில் மேலும் என்ன இருக்கிறது ?

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** சுதந்திரா பார்ட்டியில் 8 என்று போட்டிருக்கிருர்கள். கம்யூனிஸ்டு பார்ட்டியில் இரண்டு பேர்கள் என்று போட்டிருக்கிருர்கள். "Independents (Ind.) including one Samyuktha Socialist (Soc.) and one Tamil Nad Forward Block Party and one Toilers' Commonweal Party" என்றும் போட்டிருக்கிருர்கள். மூன்று பார்ட்டிகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அதில் சேர்ந்திருக்கிறது. ஒரே பார்ட்டியாக இருந்தால் ரெகக்னைஸ் பண்ணவில்லை என்று சொல்லலாம். மூன்று பார்ட்டிகள் ஒரே வரிசையில் அச்சிடப்பட்டிருக்கின்றன. கவுன்சில் சம்பந்தப்பட்ட விவரத்தில், "இண்டியன் யூனியன் முஸ்லிம் லீக்" என்ற பெயரில் ஒரே ஒரு அங்கத்தினரைக் கொண்ட ஒரு பார்ட்டி கூட அதிலே போடப்பட்டிருக்கிறது. சேர்த்துப் போட்டிருந்தும், ஃபார்வேர்டு ப்ளாக்கை ரெகக்னைஸ்டு பார்ட்டியாக ஒத்துக்கொள்ளவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

**கனம் சபாநாயகர் :** இப்பொழுது கனம் அங்கத்தினர் ஒத்துக்கொள்ளுகிருர்களா இல்லையா என்ற பிரச்சினை எழவில்லை. The hon. Member should resume his seat. He can talk again if he wants.

The hon. Member says that he represents the Forward Block. He was along with the Swatantra Party. Then he wrote that he must be considered as separate from that Party. I got a letter from another member that he must be considered separate. There was even a request to me that only leaders of recognised parties must be allowed to sit on the front Opposition Bench. I have not revealed all those things, because I thought it was unnecessary, and that once a seat had been allotted to him, I did not like to disturb him till the end. As a matter of right he cannot claim: 'I am the leader of a party, I must be given the same treatment as other party leaders.' I have not settled that. Has the hon. Member received any reply to his letter?

SRI T. L. SASIVARNA THEVAR : I have received a letter.

[6th August 1966

MR. SPEAKER: Nothing is lost even if it is moved now.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இம்மாதிரியே கூட ஒரு ஏற்பாடு செய்து கொள்ளலாம். கட் மோஷன்களை எல்லாம் மூவ் செய்யச் சொல்லிவிட்டு அதன்பிறகு விவாதத்தை நடத்தி ஓட்டுக்கு விட்டுவிடலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சிகள் இதுபற்றி தங்களுக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராய் இல்லை. இப்போது முதல் அமைச்சர் அவர்கள் நாசூக்காக இப்படியே வைத்துக்கொள்ளலாம் என்பார்கள். அப்புறம் விவாதம் வெட்டுப் பிரேரணையை ஒட்டியதாகவே இருக்கவேண்டும், பொதுத்தன்மையில் பேசக்கூடாது என்பார்கள். ஆகவே, ஜெனரல் டிஸ்கஷன்தான் முதலில் நடைபெறவேண்டும். அப்புறம் கட்மோஷன்களை மூவ் செய்யலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நாசூக்காக ஒன்றும் சொல்லவில்லை. தாங்கள் தெரிவித்தால் சொன்னேன். நான் சொல்வதை எல்லாம் குற்றமாகவும் தவறாகவுமே திரு. கலியாணசுந்தரம் எடுத்துக்கொள்கிறார்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** முதலில் பொதுவிவாதம் நடைபெறவேண்டும் என்பது முறையாக இருப்பதனால் வழக்கப்படி பொதுவிவாதமே நடைபெறட்டும். அப்புறம் வெட்டுப்பிரேரணைகளை எடுத்துக்கொள்ளலாம்.

MR. SPEAKER: How long is the discussion on the Supplementary Statement of Expenditure to take place?

SRI M. KALYANASUNDARAM: My suggestion is that we can have general discussion for one hour and the discussion on the cut motions for another one hour. இரண்டும் சேர்ந்து இரண்டு மணி நேரம் இதற்கு எடுத்துக் கொள்ளலாம்.

MR. SPEAKER: So, two hours are required. Then, I will put the Supplementary Demands for Grants to the vote of the House at 12 Noon to-day.

Now, the hon. Member, Sri Balakrishnan will continue his speech.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் தலைவர் அவர்களே, இந்த 23 பகுதிகளிலும், நான் குறிப்பாக விலைவாசி பற்றிய பிரச்னை, தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய பிரச்னை— இவைகளைப் பற்றிமட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்.

இன்றைக்கு இந்த முதல் துணை மானியக் கோரிக்கையில் ஹரிஜனங்கள், பிற்பட்ட இனத்தவர்கள் ஆகியவர்களுக்கு வீட்டு மனை வழங்க நிதி ஒதுக்கப்படுகிறது. ஏற்கனவே நமது அமைச்சர் அவர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே



6th August 1966] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட இனத்தவர்களுக்கும் மட்டும் வீட்டு மனை வழங்க 15 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அத்தனையும் முடியாவிட்டாலும் இந்த ஆண்டுக்கு அதில் 25 லட்ச ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இந்த 25 லட்ச ரூபாய் காணாது. அரசாங்கத்தில் ஏற்கனவே அறிவித்தபடி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளேயே அந்தப் பிரச்னையைச் சமாளிக்க ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட இனத்தவர்களுக்கும் குடி இருப்பு மனை வழங்குவதற்காக 15 கோடி ரூபாயும் ஒதுக்கப்படவேண்டும் என்பதை நாங்களும் வற்புறுத்தினோம். அதைச் செய்யத் தவறிவிட்டது அரசாங்கம். பதினைந்து கோடி ரூபாய் ஒதுக்கிச் செலவிட வேண்டிய இடத்திலே—வீடு இல்லாத எல்லா ஏழைகளுக்குமாக 25 லட்சம் என்று ஒதுக்கியிருப்பது போதவே போதாது. இந்த 25 லட்சம் ரூபாயைப் பிரித்துக்கொடுத்தால் மாவட்டத்திற்கு இரண்டு லட்சம் கூட வராது. இந்தத் தொகை போதவே போதாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக நடப்பு ஆண்டில் விவசாயத்திற்காகக் கிணறு வெட்டுவதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது, ஆற்று நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகள், இல்லாத பகுதிகள் ஆகிய எல்லா வற்றுக்குமாக ஒதுக்கப்படுகிறது. பொதுவாக ஆற்று நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் இதற்குத் தேவை இருந்தாலும், இதற்கு முதன்மையாக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது, ஆற்று நீர்ப்பாசன வசதியற்ற, வானூர் தொகுதியைப் போலுள்ள, ஏரிகளை மட்டும் நம்பி இருக்கக்கூடிய பகுதிகளுக்குத்தான். இந்தப் பகுதிகளுக்கு இந்தக் கடனை வெகு விரைவில் கொடுத்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். ஒரு புதிய கிணறுக்கு இரண்டாயிரம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்படுகிறது. இது போதாது. அதிகமாகத் தேவைப்பட்டால் ஐந்தாயிரம் ரூபாய் வரைக்கும் கொடுக்கலாம் என்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இந்த ஐந்தாயிரம் ரூபாய் கடனை வாங்குவது என்றால் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. எத்தனையோ இடர்பாடுகள் குறுக்கிடும். கூட்டுப்பட்டா, அவர்களுடைய சொத்தின் மதிப்பு என்று இப்படி எல்லாம் இருக்கக்கூடிய இடர்பாடுகளை அரசாங்கம் கொஞ்சம் தளர்த்திக்கொடுக்க வேண்டும் என்பதாக நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிக் கடன் கொடுக்கிற நேரத்தில் உண்மையில் யாரிடம் பணம் இல்லையோ, யாருக்கு கிணறு தேவைப்படுகிறதோ, அவருக்குக் கொடுக்கவும் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். பணம் உள்ளவர்களுக்கே கொடுப்பதில் பயன் இல்லை. எனது பகுதியைச் சேர்ந்த வானூர் பிர்க்காவில் ஒரு பரந்த வெளி கழுவெளி இருக்கிறது. நிலம் இல்லாத ஏழைகள் அதை விவசாயத்திற்காகத் தங்களுக்குப் பிரித்துப் பட்டா செய்து தரவேண்டும் என்று கேட்டார்கள். அதைப்பற்றியும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். வேண்டியவர்களாகப் பார்த்து ஒரு சிலருக்குப் பட்டா செய்து கொடுத்தார்கள், மற்றவர்கள்

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [6th August 1966

பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டும் கூட உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக பாண்டிச்சேரியில் உள்ள அரவிந்தகோஷ் ஆஸ்ரமத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு அந்த கழுவெளி நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இல்லாவிட்டாலும் நூறு வருஷத்திற்கு லீசுக்குத் தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அதை ரெவின்யூ அதிகாரிகள் அத்தனை பேரும் ஆதரிப்பதாகவும் தெரிகிறது. 'அந்த நிலம் சும்மாத் தானே இருக்கிறது; அவர்களுக்குக் கொடுக்கலாம்' என்று ஆதரிப்பதாகத் தெரிகிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் மிகவும் கோபமாக இருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் சார்பாக நான் சொல்கிறேன். அவர்கள் என்னிடத்தில் வந்து முறையிட்டுக் கொள்கிறார்கள். பாண்டிச்சேரி அரசாங்கத்தார் அந்தப் பகுதியில் அரவிந்தகோஷ் ஆஸ்ரமக்காரர்கள் எவ்வித நிலமும் வாங்கக் கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நம்முடைய அரசாங்கத்தில் மட்டும் ஏன் அரவிந்தகோஷ் ஆஸ்ரமக்காரர்களுக்கு பட்டா செய்து நிலத்தைக் கொடுக்கவும், தனியார்களிடமிருந்து நம் பகுதியில் கிரயத்திற்கு
10-00 a.m. நிலங்களை வாங்குவதற்கும் அனுமதிக்கவேண்டும் என்பதற்குத் தக்க பதில் சொல்ல வேண்டும். இல்லையென்றால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பொங்கி எழுகிறார்கள். அவர்கள் நேரடியாக வந்து அமைச்சர்களிடத்தில் சொல்ல முடியவில்லை. என்னிடத்தில் வந்து முறையிடுகிறார்கள். நான் அசெம்பிளிக்குப் போகிறேன். அங்கே இதைப்பற்றி வற்புறுத்துகிறேன் என்று சொல்லிவிட்டு வந்த காரணத்தால் நான் இந்த மன்றத்திலே இதை வற்புறுத்துகின்றேன். தயவுசெய்து இதைப் பரிசீலனைசெய்து பயிரிடக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு, நிலம் இல்லாத விவசாயிகளுக்கு அந்த கழுவெளி நிலங்களைப் பட்டாச் செய்து கொடுத்தால் அவர்களுக்கு எல்லாம் நன்மையாக இருக்கும். அப்படியில்லாமல் பெரும் பணக்காரர்கள், இந்த சர்க்காரையே விலைக்கு வாங்கிவிடக் கூடிய அளவில் இருக்கும் அரவிந்தகோஷ் ஆஸ்ரமத்திற்கு நமது நிலத்தைக் கொடுக்கிறீர்களே இது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். உணவு உற்பத்தி என்ற தலைப்பின்கீழே நமது சர்க்கார் மத்திய சர்க்காரின் உத்திரவின்மேல் அந்த ஆஸ்ரமத்திற்கு 8½ லட்சம் ரூபாய் கடன் கொடுத்து இருக்கிறது. ஒரு சாதாரண விவசாயிக்கு 2 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்துவிட்டால் உடனே ஆயிரத்தெட்டு கணக்குகள் கேட்கிறார்கள்; கிணறு வெட்டினரா இல்லையா, கிணறுக்குப் பயன்படுத்தினரா அல்லது மகனுடைய கல்யாணத்திற்குப் போயிற்று, மாடு வாங்கப் போயிற்று அல்லது தேர்தலுக்குப் போயிற்று அந்தப் பணம் என்றெல்லாம் கணக்குப் பார்க்கிற இந்த சர்க்கார், 8½ லட்சம் ரூபாய் வரையில் அந்த அரவிந்தகோஷ் ஆஸ்ரமத்திற்குக் கொடுத்திருக்கிறார்களே, அவர்கள் என்ன கணக்குக் கொடுத்திருக்கிறார்கள், எத்தனை லட்சம் டன் உணவு உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்பதைப் பரிசீலனை



6th August 1966] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

செய்து பார்த்தார்களா? ஆகவே, இதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழைகளுக்கு விவசாயம் செய்வதற்கும், பூச்சி மருந்து வாங்குவதற்கும், விதைகள் வாங்குவதற்கும், மாடுகள் வாங்குவதற்கும் கடன் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்தக் கடன்களை வைத்து மாடு வாங்கமுடிகிறதோ என்றால் இல்லை. மாடு வாங்குவதற்கு வாங்கிய பணம் ஆடு வாங்கத்தான் பயன்படுகிறது. அந்தப் பணத்தில் ஆடு தான் வாங்கமுடிகிறதே தவிர மாடு வாங்க முடியவில்லை. இதையெல்லாம் அந்த ஏழை விவசாயிகள் மிகுந்த மனவேதனையோடு சோகக் கதைகளாகச் சொல்கிறார்கள்; இதை நாங்களும் கண்ணால் பார்க்கிறோம். ஆகவே, இந்தக் கடன்களையெல்லாம் வேண்டிய காலத்தில் அவர்களுக்கு உடனடியாகக் கொடுத்து அவர்களுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இதிலே ஒரு முக்கியமான சமாச்சாரம் சொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்கள் சம்பளத்தை உயர்த்தியதற்காகவும், படியை உயர்த்தியதற்காகவும் அதற்கு ரூ. 21 லட்சம் கேட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி இங்கே நான் சென்ற தடவை பேசும்போது உள்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு யோசனை செய்துகொண்டு இருக்கிறோம், அப்பொழுது படிகளையும், தினப்படிகளையும் உயர்த்துவதற்கும் வழிவகை செய்வோம் என்று சொன்னார்கள். அரசாங்கத்திலிருந்து உத்திரவு சென்ற பிறகு நான் அங்கே போலீஸ்காரர்களைக் கேட்டபொழுது அவர்கள் ஏற்றின பணம் ஐந்து ரூபாய் வரும் என்று சொன்னார்கள். ஏற்றின பணம் ஐந்து ரூபாய் தான்; அதுவும் 20 வருஷம், 25 வருஷம் வேலைசெய்து பென்ஷன் வாங்கும் தருவாயிலுள்ள போலீஸ்காரர்களுக்குப் பயன்படாத பணமாக இருக்கிறது. புதிதாக உத்தியோகத்திலே வந்து சேருகிற புதுப் போலீஸ்காரர்களுக்குத்தான் அது லாபகரமாக இருக்கிறதே தவிர சர்வீஸ் பண்ணியவர்களுக்கு அதனால் எந்தவிதமான பயனும் இல்லை. ஆகவே, தயவுசெய்து இதை மறுபரிசீலனை செய்தாவது இப்பொழுது இருக்கிற விலைவாசிகளின்படி—சம்பளம் வாங்கும் எல்லோரும் லிட்டர் அரிசிதான் வாங்கி சாப்பிடுகிறார்கள். கூடுதலாக வாங்குகிறவர்களும் குறைவாக வாங்குகிறவர்களும் எல்லோரும் லிட்டர் அரிசிதான் வாங்குகிறார்கள்; வாங்கவும் வேண்டும்; அதனால்தான்—எல்லோருக்கும் உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்றோம். உயர்த்தப்பட்ட பணம் பழைய போலீஸ்காரர்களுக்கும், புதிய போலீஸ்காரர்களுக்கும் சர்வீஸ்காரர்களுக்கும் உயர்த்தப்படவேண்டும் என்ற அளவிலே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அதே நோக்கில் என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே போலீஸ்காரர்கள் கோர்ட்டுக்கு வாருவதற்கு முன்பே இலாகாவிலே சஸ்பெண்டு செய்யப்பட்டு 3, 4 வருஷம் வரையிலும் அரைச் சம்பளம் கொடுக்கப்படுகிறது; ஒரு சிலருக்கு அப்படிக் கொடுக்கப்படுகிறது. ஒரு சிலருக்கு வேலையில்லாமல் இருக்கிறது. திண்டிவனத்தில் ஒரு

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவருக்கு முழுச் சம்பளமும் கொடுத்துவருகிறார்கள். ஆனால் அவருக்கு அங்கே வேலையே இல்லை. ஏன் என்று கேட்டால், 'எந்த ஸ்டேஷனுக்குப் போக வேண்டுமென்று சொல்லவில்லை, சம்பளம் கொடுக்கிறார்கள், வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன், வேலை இல்லை என்று சொல்லி பேப்பர் படித்துக்கொண்டிருக்கிறேன், என்று சொல்கிறார். சி.ஐ.டி. கிரைம் பிராஞ்சிலே கேஸ்கள் 'பென்டிங் இன்வெஸ்டிகேஷன்' என்று எத்தனையோ ஆண்டுகளாக முடிவடையாமல் இருக்கின்றன. பல ஆண்டுகள் கழித்து முடிவுகள் வருகின்றன, பிறகு கோர்ட்டுகளில் முடிவு செய்யப்படுகின்றன. கோர்ட்டிலே சம்பளத்திலே பாதி கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியே 7, 8 வருஷங்களுக்குச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறது. இதனால் அரசாங்கத்திற்குத்தானே நஷ்டம் ஏற்படுகிறது? ஆகவே கேஸ் போட்டால் சார்ஜ் ஷீட் கொடுத்து உடனே விசாரித்து உண்டோ, இல்லையோ என்று முடிவு செய்கிற அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியில்லாமல், 7, 8 வருஷ சம்பளத்தைக் கொடுக்கவேண்டுமென்று சொல்வது (மணியடிக்கப்பட்டது) சரியல்ல, அதை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவரவர்களே, முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற துணை மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சிச் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளையொட்டி நான் ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் துணை மானிய அறிக்கையிலே 1961-62-லே ரூ. 56 லட்சம் கிணறுகள் வெட்டுவதற்கு மாநில அரசால் வழங்கப்பட்டது என்றும் 1966-67-லே ரூ. 302 லட்சம் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் கூட, உண்மையிலேயே விவசாயிகளுக்கு ஒதுக்கவேண்டிய அளவுக்கு மாநில அரசு பல்வேறு திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை.

இந்த மாமன்றத்திலே அணைகள் கட்டவேண்டும், நீர்த் தேக்கங்கள் கட்டவேண்டும், சிறிய பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்று எல்லாம் எதிர்க்கட்சித் தரப்பினர்களாலும், ஆளுங்கட்சித் தரப்பினர்களாலும் சொல்லப்படுகின்ற நேரத்திலே எல்லாம் இருக்கின்ற நீர்நிலைகளெல்லாம் பயன்படுத்தப்பட்டு விட்டன என்று ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்கள் அவ்வப்பொழுது கூறுகிறார்கள். அதே சந்தர்ப்பத்திலே சர்க்காருடைய அறிக்கையிலே பார்க்கின்ற நேரத்தில், ஏறக்குறைய முப்பதாயிரம் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் தமிழகத்திலே இருக்கின்றன, அவற்றிலே கடந்த 18, 19 ஆண்டுகளாக எத்தனை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் 2,750 திட்டங்கள்





தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; இன்னும் நிறைவேற்றப்படவேண்டிய நிலையில் இருக்கின்ற திட்டங்கள் 22,250 திட்டங்கள் இருக்கின்றன. 5 அல்லது 6 சதவீதத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன இந்த ஆட்சியிலே. இந்த நாட்டிலே உள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படவேண்டும் என்றால் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனைத் திட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கு 200 ஆண்டுகளாவது ஆகும். இந்தத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதற்குத் தகுந்த முறையில் பணம் ஒதுக்கவில்லை; விவசாயத்திற்கு வேண்டிய போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை. இப்பொழுது கூடுதலாக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அது போதுமானதாக இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில அரசு ஊழியர்களின் அகவிலைப் படிக்கும், மத்திய அரசு ஊழியர்களின் அகவிலைப்படிக்கும், அதேபோல் அவர்கள் வாங்கும் சம்பளத்திற்கும், இவர்கள் வாங்கும் சம்பளத்திற்கும் இடையே ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்பது சுட்டிக்காட்டப்பட்ட நேரத்திலே இந்த அரசாங்கம் போகபோகச் செய்யும் என்று சொன்னார்கள். மாநில அரசு ஊழியர்களின் அகவிலைப்படி, மத்திய அரசு ஊழியர்களின் அகவிலைப்படியின் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது என்றாலும்கூட மாநில அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கும், மத்திய அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. இரண்டும் ஒரே அளவில் இல்லை. எல்லோருக்கும் ஒரே படிப்புத்தான், ஒரே தகுதிதான், ஒரே வேலைநேரம்தான்; இருந்தாலும்கூட மாநில அரசு ஊழியர்களுடைய சம்பளம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அந்த அளவுக்கு அவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்த வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே ஏறக்குறைய நமது மாநில அரசு 82 லட்சம் ரூபாய் வட்டி கொடுப்பதற்காகக் கோரப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்கிற அதே நேரத்தில் நம்முடைய நாட்டிலே அதிகமாகக் கடன் வாங்கிய பணத்தை ஒழுங்காகச் செலவு செய்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. இதே மன்றத்திலே நான் ஒரு கேள்வியை எழுப்பியபொழுது சேலம் மாவட்டத்தில் பழத்தோட்டங்களுக்குச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு, வருமானம் எவ்வளவு என்று கேட்ட நேரத்தில், செலவு 5 லட்சம் ரூபாய் என்றும் வருமானம் 2,000 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பழத் தோட்டங்களுக்காக எடுக்கப்பட்ட நிலத்திற்கு மதிப்பாகவே சர்க்கார் 5 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறது. இதிலிருந்து ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கிற வருமானம் 2,000 ரூபாய்தான். ஐந்து சதவிகிதம், 9 சதவிகிதம் என்று பொதுமக்களிடத்தில் இருந்து, பெரிய பணக்காரர்களிடத்திலிருந்து கடன் வாங்கி இந்த விதமாக

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [6th August 1966

முதலீடு செய்கிறோம் என்றால் இதிலே, .1 அல்லது .01 அளவுக்குக் கூட வட்டி தருவதாக இல்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சர்க்காரைப் பொருத்த வரையிலே கடன் வாங்குவதிலே இருக்கிற அக்கறை வாங்கிய கடனைப் பயன்படுத்துவதிலே இல்லை; ஊதாரித்தனமாகச் செலவழிக்கப்படுகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்டத்திலே சின்னாறு நீர்த் தேக்கத் திட்டத்தைப் பற்றி இந்த மாமன்றத்திலே பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலத் திட்டமாகச் சேர்க்கப்பட்டு திட்டக் கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பப்பட்டிருக்கும் திட்டம் சிறிய திட்டமாக அமையும் என்ற எண்ணம் தோன்றுகிறது. இப்படி அது ஒரு சிறு திட்டமாக இருந்தால் திட்டமே இல்லாத நிலைமையில் போய்விடும். ஒரு மாதத்திற்கு முன்னாலே சின்னாற்றிலே வெள்ளம் வந்தது. அந்த ஆற்று நீரிலிருந்து அங்கிருந்த ஐந்தாறு ஏரிகள் இரண்டொரு நாட்களில் நிரம்பி மீதியுள்ள தண்ணீர் வியமாக ஓடிற்று. குறைந்தது ஒரு வருஷத்தில் மூன்று நான்கு முறை மழை பெய்து அந்த ஆற்றில் வெள்ளம் வருகிறது. அதிலே ஒரு தேக்கம் கட்ட வேண்டுமென்று சொல்லும்போது, அது காவிரியின் கிளை நதி என்று கூறி மைசூர் அரசாங்கம் ஆட்சேபம் செய்த காரணத்தால் அதற்குத் தக்க சமாதானம் சொல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது).

**திரு. டி. கார்ச்சா கவுடர்** : மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது மாநிலத்திலே எந்த அளவுக்கு அபிவிருத்திகள் ஏற்பட்டுக் கொண்டிக்கின்றன என்பதற்கு இந்த மாதிரி துணை மானியக் கோரிக்கைகளே சான்றாகும்.

இந்தச் சமயத்திலே நான் வேளாண்மையைப் பற்றிச் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நேற்றுப் பேசிய கனம் அங்கத்தினர் பேசியது போல் இந்த மாநிலம் ஆந்திரம், கேரளம், தமிழகம் மூன்றும் இணைந்த மாநிலமாக இருந்தபோது விவசாயிகளுக்கு 7 கோடி ரூபாய் அளவிலே கடன் கொடுத்தோம். இன்று அந்த நிலை மாறி தனியாகப் பிரிந்து சிறிய மாநிலமாக ஆன பிறகு கூட 49 கோடி ரூபாயை விவசாயிகளின் நன்மைக்காக, விவசாய அபிவிருத்திக்காகக் கடன் கொடுத்து வருகிறோம். இந்த ஒரு பெரிய நிலையை யாரும் மறந்து விட முடியாது. எதிர்க்கட்சியிலுள்ளவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் கூட விவசாயிகளுக்கு அதிகமாகக் கடன்களைக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தலைவர் அண்ணாதுரை அவர்கள், பம்பாயிலுள்ள 'கரன்ட்' பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். அதை நான் படித்தேன். 'தமிழ் நாட்டிலே விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது; அதை அவர்



6th August 1966] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

கள் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தாமல் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார்கள். உடனே, அந்தப் பத்திரிகை நிருபர், 'நீங்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டிருக்கிறார். 'நாங்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன்களை நிறுத்தி விடுவோம்' என்று அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒரு நிலையிலே . .

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தச் சந்தர்ப்பத்திலே குறுக்கிடுவதற்காகப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். அவர்கள், 'நாங்கள் விவசாயிகளுக்குக் கடனாகத் தரமாட்டோம்; பொருளாகத் தருவோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த வாக்கியத்தை விட்டு விட்டு முதல் வாக்கியத்தை மட்டும் கூறுவது பொருத்தமானதல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** துணை மானியத்தின் மீது விவாதம் நடக்கிறது. நீங்கள் 'பம்பாய்' க்குப் போய் அங்கிருந்து 'கரண்டு' க்குப் போய் விட்டீர்களே? உங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து நிமிஷத்திலே மூன்று நிமிஷம் ஆகிவிட்டது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரை உருளைக் கிழங்கு ஒன்றுதான் முக்கியமான விவசாயம், இந்த விவசாயத்தைப் பொறுத்து உள்ள கஷ்டங்களைப் பற்றி அடிக்கடி ரெவின்யூ போர்டுக்கும் அமைச்சர் அவர்களிடத்திலும் வந்து சொல்லி அலையக் கூடிய அவல நிலை இருக்கிறது. எட்டு லட்சம் டன் அம்மோனியா சல்ஃபேட் வேண்டுமென்று ரெவின்யூ போர்டைக் கேட்டோம்; ஆனால் இரண்டு லட்சம் டன் தான் கிடைத்திருக்கிறது. 'கேட்டது முழுவதும் கொடுக்க முடியாது; கேட்டதில் 25 சதவிகிதந்தான் கொடுக்க முடியும்' என்று சொல்லுகிறார்கள். நீலகிரி ஜில்லாவில் ஒரே ஒரு பயிர் உருளைக் கிழங்குதான். இப்போது மழையின்மை காரணமாக இந்தப் பயிர் லேட் பிளைட் என்ற நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அம்மோனியா சல்ஃபேட் கிடைக்காமல் அவதிப்படுகிற காரணத்தால் அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு உடனடியாக தேவையான அம்மோனியா சல்ஃபேட்டை உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் மார்க்கெட்டிங் சொசைட்டிக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உணவுப் பிரச்னையைப் பொருத்தவரை, எங்கள் ஜில்லாவில் அரிசி ஸ்டாக் இன்னும் ஒரு வாரத்திற்குக் கூடப் போதுமானதாக இல்லையென்பதைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். கலெக்டர் அவர்களிடம் இது பற்றிக் கூறினோம். இரண்டு நாட்களுக்கு முன்னால் சிவில் சப்ளைஸ் அதிகாரியைப் பார்த்துச் சொன்னோம். அவர்கள், 'தஞ்சாவூர் எம்.எல்.ஏ.-க்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு தஞ்சையில் இருந்து அரிசியை வெளியே கொண்டு செல்லக்கூடாது என்று இடைஞ்சல் செய்து கொண்டிருக்கிறார்கள்' என்று கூறினார்கள். தஞ்சையிலிருந்து எங்கள் ஜில்லாவுக்கு எடுத்துச் செல்ல

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [6th August 1966

'கோட்டா' இருக்கிறது. ஆனால் எடுத்துச் செல்ல முடியாத அவல நிலையில் இருக்கிறோம். இன்னும் ஒரு வாரத்திற்குத்தான் ஸ்டாக் இருக்கிறது. ஆகவே, தஞ்சையில் இருந்தோ வட ஆற்காட்டில் இருந்தோ எங்களுடைய ஊருக்கு அரிசி போய்ச் சேருவதற்குச் சர்க்கார் வசதி செய்யவேண்டும். அங்கு அரிசி ரேஷன் கூட 250 கிராம் அளவுக்குக் குறைக்கப்பட்டு விட்டது. பிளான்டேஷன் ஏரியாவில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும், காப்பித் தோட்டத் தொழிலாளர்களும் இருக்கின்ற அந்தப் பகுதியில் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. இதையும் அரசாங்கம் கவனித்து பழைய மாதிரி அவர்களுக்கு ரேஷன் வழங்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உத்திரப் பிரதேசத்தில் இருந்து உருளைக்கிழங்கை வாங்கி இந்த மாநிலத்திலுள்ள மக்களுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்ற ப்ரோபோசல் சென்ற கூட்டம் நடக்கும்போது வந்தது. நீலகிரியில் நிறைய உருளைக் கிழங்கு இருக்கிறது. இந்த மாநில மக்களுக்கு மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய அளவிலும் இருக்கிறது. எவ்வளவு உருளைக் கிழங்கு வேண்டுமானாலும் நாங்கள் கொடுக்கிறோம் 'என்று அரசாங்கத்திற்குச் சொன்னோம். சென்ற கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள், 'நீலகிரி விவசாயிகளுக்கு எந்த வித பாதகமும் ஏற்படாது; உ.பி. யில் இருந்து குறைந்த விலையில் வாங்கிக் கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் உ.பி. உருளைக் கிழங்கு தமிழ்நாட்டில் நாற்றம் எடுத்த செய்தியை அறிவோம். அந்த நிலையிலே அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லும் அதிகாரிகளைச் சற்று கட்டுப்படுத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹில் அலவன்ஸைப் பொறுத்தவரை, சர்க்கார் ஊழியர்களுக்கு 800 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறும் கெஜட்டட் ஆபீசர்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்று கூறியிருக்கிறார்கள். அங்கு ஏறக்குறைய நாலைந்து பேர்கள்தான் ரூ. 800-க்கு மேல் சம்பளம் வாங்கும் கெஜட்டட் அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கும் கொடுப்பதால் அரசாங்கத்திற்கு பெரிய ஃபைனான்ஷியல் டிஃபிக்கல்டீஸ் ஒன்றும் வந்து விடாது. நான் அறிந்த வரையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு அனுகூலமாக இருக்கிறார்கள். நான் சென்று கேட்டேன். நான் போய் உடனடியாகச் செய்கிறேன், பார்க்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். இங்கிருக்கும் நிதி இலாகா காரியதரிசி எது எதையோ செய்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதில்லை என்று செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த நிலையை மாற்றி அந்த நாலைந்து பேர்களுக்கு—அவர்கள் நல்லவிதமாக வேலை செய்கிறார்கள்—ஊக்கம் கொடுக்கவேண்டிய அளவில் அவர்களுக்கும், அவர்களுக்கும் குளிர், காற்று, மழை போன்றிருக்கும் நிலை இருப்பதால்—இந்த ஐந்து பேர்களுக்கும் மனம் இரங்கிக் கொடுத்துவிட்டால் என்ன நஷ்டமாகிவிடும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).



th August 1966]

* திரு. வி. எஸ். எஸ். மணி : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த 1966-67 துணை மதிப்பீட்டின் பேரில் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கல்வி மானியத்திற்காக 11½ லட்சம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. இந்த 11½ லட்சம் ரூபாயில் மதுரை பல்கலைக்கழகத்திற்காக 7 லட்சம் ரூபாய் நடைமுறைச் செலவிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் அது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மதுரைப் பல்கலைக்கழகம் ஓங்கி வளர்ந்து சென்னை பல்கலைக் கழகத்தை விஞ்சிவிட வேண்டுமென்ற அவா உடையவன் நான். அண்மையில் எம்.எஸ்ஸி. ( M.Sc. ) தேர்வுக்காக மாணவர்களைப் பொறுக்கி எடுக்கும் முறையில் சில கோளாறுகள் ஏற்பட்டன. பெரிய அமளி. பத்திரிகைகளில் நித்தம் நித்தம் கடிதங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. "இந்து" பத்திரிகையில் நீண்ட தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. பர்ஸனல் இண்டர்வ்யூவிற்காக மாணவர்களை அழைப்பது அவசியம் இல்லாதது. அப்படி அழைப்பதால் விருப்பு, வெறுப்பு, சிபார்சு, செல்வாக்கு இவையெல்லாம் தாண்டவமாடுகின்றன. பின்தங்கிய வகுப்பினருக்கு இடங்கள் ஒதுக்கவேண்டியது அவசியந்தான். ஆனால் ஒதுக்கப்பட்ட அந்த ஸ்தானங்களுக்கு முதல் மார்க் யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு இடம் கொடுக்காமல் இரண்டாவது மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கொடுப்பது நியாயமற்ற காரியமாகும். சென்னை பல்கலைக் கழகம் நீண்ட நாட்களாக எந்தவிதமான புகாரும் இல்லாமல் எம்.எஸ்ஸி.-க்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு சமுகமான நிலை இருக்கிறது. புதிதாக வந்த மதுரை பல்கலைக் கழகத்தில் இந்த விதமான ஒரு கோளாறு ஏன் ஏற்பட வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. அடுத்தபடியாக, நேரடி இன்டர்வ்யூ இருக்கிறது. மாணவர்களை அனாவசியமாக அழைத்து, அவர்களிடம் நீ என்ன ஜாதி, எந்த ஊர் என்று கேட்பதால் அவர்களுக்கு மனம் புண்படுகிறது. அவர்களிடம் அவர்களின் அறிவுத் திறமையைச் சோதிக்கும் அளவிற்குக் கேள்விகள் கேட்டால் ஒரு வகையில் பொருத்தமாக இருக்கும். ஆனால் அந்த நிலை இல்லை இந்தத் தேர்வில். ஆகவே இதில் அரசாங்கம் சரியானதொரு கொள்கையைக் கடைபிடிக்கவேண்டும். சர்வகலாசாலை ஒரு அட்டானமஸ் பாடி, தனி அதிகாரம் பெற்ற ஒரு ஸ்தாபனம், என்றாலும் அரசுக்கு ஆலோசனை கூறும் உரிமை இருக்கிறது. ஆகவே, சரியான ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, வேளாண்மை. அதி தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் பயிர்வாரி கடன்கள் கொடுக்கப்படுகின்றன. உரம், மருந்துகள், விதைகள் போன்றவையும் ரொக்கமாகவும் கடனாகவும் கொடுக்கப்படுகின்றன. இந்த உதவிகளைப் பார்க்கும்போது ரொக்கமாகக் கடன் கொடுக்கக்கூடிய உதவி ஒன்றுதான் உண்மையில் விவசாயிகளுக்கு பயனுடையதாக இருக்கிறதே தவிர மற்ற எதுவும் பயன் அளிக்கக்கூடியதாக இல்லை. மருந்துகள், உரங்கள் இவற்றில் வீரியம், சத்து இல்லை. நீண்ட காலமாகத் தேங்கிக்

[திரு. வி. எஸ். எஸ். மணி] [6th August 1966

கிடந்தவை, வெளி மார்க்கெட்டில் விலை போகாத மருந்துகள், உரங்கள் இவை கடன் மூலம் விவசாயிகளுக்குத் திணிக்கப் படுகிறது. விவசாயிகளுக்கு அவசியமாகத் தேவைப் படுகிற அம்மோனியம் சல்ஃபேட் கிடைப்பதில்லை; யூரியா கிடைப்பதில்லை; சூப்பர் பாஸ்ஃபேட் கிடைப்பதில்லை. இவை எல்லாம் வெளி மார்க்கெட்டில் கள்ள மார்க்கட் விலைக்கு தாராளமாகக் கிடைக்கிறது, நியாயமான விலைக்குக் கிடைப்பதில்லை. கூட்டுறவு சொஸைட்டிகளின் மூலம் விநியோகிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, அந்த சொஸைட்டி நிர்வாகிகள் விவசாயிகள் அல்லாதவர்களுக்கு அதை கூடுதல் விலைக்கு விற்று விட்டு விவசாயிகள் கேட்டால் இல்லை என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. அரசாங்கம் கடனாகக் கொடுக்கக் கூடிய இந்த உரங்கள் எல்லாம் தேர்தல் நிதிக்காக, காங்கிரஸ் தேர்தல் நிதிக்காக, நிதி கொடுக்கிற கம்பெனிகள் இருக்கிறதே அவர்கள்தான் இதைத் தயார் செய்கிறார்கள். வேறு யாருக்கும் அனுமதி கொடுப்பதில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்க நாம் தீட்டியுள்ள திட்டங்கள் பல உண்டு. உணவு உற்பத்தி திட்டம், நவீன சாகுபடித் திட்டம், தீவிர சாகுபடித் திட்டம், அதி தீவிர சாகுபடித் திட்டம், தீவிர துனிகர சர்குபடித் திட்டம் என்றெல்லாம் இருந்தும் கிடைத்த பலன் என்ன? சீமைக் கருவேல மரங்கள் தான் அதிகமாக வளர்ந்து பயிரை நாசனம் செய்கிறது. காரணம், அரசாங்கத்தின் கொள்கை, நடைமுறையில் சரியாக இல்லை. நவீன சாகுபடித் திட்டத்தின் கீழ் ரஷ்யாவிலிருந்து 20,000 டிராக்டர்கள் வந்திருக்கின்றன. அவை தூங்குகின்றன. அவை துரு பிடித்திருக்கின்றன. அவற்றிற்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. மேலூரில் கலப்பைகள் செய்கிறார்கள். அவற்றிற்கும் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. கொழு முனை கிடைப்பதில்லை. ஆகவே உணவு உற்பத்தியைப் பெருக்க எல்லாம் செய்கிறோம் என்று சொல்வது சரியல்ல.

அடுத்தபடியாக, டூரிங் சினிமாக்களுக்கு மின்சாரத்திற்கு டெப்பாஸிட் கட்டச் சொல்கிறார்கள். அந்த சினிமா நடத்துவதின் காலவரம்பு தீர்ந்தவுடன் அந்த டெப்பாஸிட்டை உடனே வாபீஸ் கொடுப்பதில்லை. அதைத்திரும்பிக் கொடுக்க இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இதையெல்லாம் எலெக்ட்ரிசிட்டி டிபார்ட்மென்ட் சரிசெய்யவேண்டும். பம்ப் செட்ஸுக்குள்ள மின்சாரக் கட்டணத் தொகையை அதிகமாக நிர்ணயித்து வசூல் செய்கிறார்கள். அதையும் உடனடியாக ரீஃபண்ட் செய்வதில்லை. இவற்றை யெல்லாம் பார்த்துச் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

SRI M. WILLIAM: Mr. Speaker, Sir, in supporting the Supplementary Demands, I wish to place certain facts before the House Provision for very good purposes has been made in the Supplementary Demands. There is provision for acquiring house-sites and assigning them to the economically backward section of the community. Out of 15 crores of rupees set apart in the Fourth Five-Year Plan, only 25 lakhs of rupees seems to havt been set apart this year. This amount is too meagre. The amount should be increased at least to 50 lakhs or 1 crore.



6th August 1966] [Sri M. William]

There is provision for a free training school for Harijans and Scheduled Tribes. Only one Centre is mentioned and that is in Madras City. But that is not at all accessible to the students coming from the different districts. Another Centre also may be opened somewhere in Madurai or Tirunelveli District.

With regard to augmentation of food production, importance is given to well sinking programmes. One important scheme has been completed in the Kanyakumari district and that is the Neyyar Left Irrigation Scheme. The scheme has been completed at a cost of Rs. 92 lakhs. The expected yield has not yet been achieved. Out of the 7,000 acres which have to be brought under cultivation, only 650 acres have been brought under cultivation. The reason for not bringing under cultivation the remaining 6,650 acres is lack of branch channels and field bothies.

Unless particular attention is paid to the construction of field 10 a.m.
bothies and branch channels, the sum of Rs. 92 lakhs invested on this scheme is a mere waste. Besides, water facilities are not given to 2,000 acres in the existing ayacut and water facilities are given to 1,000 acres only. That aspect of the matter also should be looked into.

Then, there are no proper sluices. The existing sluices are in a bad condition with the result that there is always soil erosion in the branch channels in the Chittar-Pattanamkal area. So much so, to attend to this work, a special Sub-division has to be established at Kuzhithurai. The existing Sub-division is overburdened with the work relating to the Public Works Department, Irrigation work and other works connected with the Pechiparai and Perunchani dams. So, a Special Division has to be located at Kuzhithurai and that Division can attend to left channel works immediately. Otherwise, the sum of Rs. 92 lakhs invested is a mere waste.

Then, coming to the other needs of the district, there is an Industrial Estate at Marthandam and there is provision for running 11 units there. But only three units are functioning. The people there are so poor that they have not yet started other new units. So, the concerned Department itself should start some units, as that will give some work to the people in that area. About five acres of land have been acquird for starting a General Purposes Engineering Workshop there. But that land is lying fallow and no step has been taken to start the Workshop in that place.

Then, another problem which is agitating the minds of the people is the position of the graduate teachers. Seventy five or eighty teachers have been down-graded and they have submitted a memorandum to the Government and it is under the consideration of the Hon. Chief Minister and the Secretary to Government, Education Department. This is an urgent problem and we pray that justice may be done to the teachers by looking into their problem and redressing their grievances. With these words, I conclude my speech.

* **திரு. கரு. சீமைச்சாமி:** கனம் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற துணை மான்யக் கோரிக்கையின் மீது நான் என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையில் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவிடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, நான்காவது ஐந்தாண்டு திட்டம் இன்னும் வரையறுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இந்த அறிக்கையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் வீடுகட்டிக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கின்ற போது, நான்காவது ஐந்தாண்டு திட்டம் உண்மையிலேயே நடக்குமா என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இதைத்தான் பல பெரியார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் 15 கோடி ரூபாய் வீடுகட்டித் தருவதற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லுவது. ஏழை மக்களை இந்த சர்க்கார் ஏமாற்றக்கூடிய செயலாகும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், உணவு உற்பத்தி, விவசாய உற்பத்தி என்று பேசுகிறார்கள். இதற்காகத் திட்டத்தை நீட்டுகிறார்கள். ஆனால் இந்த காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும். அதிலும் தேர்தல் நடந்து நாலரை ஆண்டுகள் ஆகியும் உணவு உற்பத்திபெருகியிருக்கிறதா என்பதை நாம் பார்க்கவேண்டும். உணவுப்பிரச்னை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவதையும் உணவு தான்யங்களை வாங்குவதற்காக மக்கள் மணிக் கணக்காக, நாட்கள் கணக்காக கடைகளில் க்யூ வரிசையில் நின்று கொண்டிருப்பதையும்தான் நம்மால் பார்க்க முடிகிறது. உண்மையில் இந்த ஆட்சியின் கீழ் விவசாயிகள் நசுக்கப்படுகிறார்கள். சர்க்கார் போடுகின்ற சட்டதிட்டங்களின் காரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களை, நினைத்த இடத்திற்கு கொண்டு போக முடியாதவாறு தடை செய்கிறது இந்த சர்க்கார் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். தொழிலை நடத்துவதற்கு வேண்டிய பொருட்களின் மீது இருக்கின்ற விலையை யாரும் கட்டுப்படுத்தவில்லை. அப்படியிருக்கும்போது, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு மட்டும் விலையை நிர்ணயிப்பது என்ன நியாயம்? இவ்விதம் அரசாங்கம் விவசாயிகளுக்குப் பாதகம் தான் செய்து வருகிறது. உணவு உற்பத்தி செய்தால், அதை ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்குக் கொண்டு போவதற்கு அனுமதி இருக்க வேண்டும். அப்படியில்லாமல், எதற்கும் கண்ட்ரோல் கொண்டுவந்தால் நிச்சயமாக விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட பொருட்களின் மீது இருக்கிற கண்ட்ரோல்களை எடுத்துவிட வேண்டும். சிமெண்டுக்குக் கண்ட்ரோல் இருந்ததை ரத்து செய்தோம். இப்போது சிமெண்ட் கிடைக்கவில்லையா? நல்ல முறையில் சிமெண்ட் தருகிறோம் என்று வியாபாரிகள் முன்வருகிறார்கள்.



ஆகவே, உற்பத்தி செய்கிற பொருட்களின் மீது எந்தவிதமான தடையும் இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும், இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமான விஷயத்தைக் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எதிர்க் கட்சிக்காரர்கள் தொகுதியில் காங்கிரஸ்காரர்கள் கூட்டங்கள் போடுகிறார்கள். அப்படிக் காங்கிரஸ் கூட்டங்கள் நடைபெறுகின்றபோது என்ன பேசுகிறார்கள் என்றால், "எதிர் கட்சிகளுக்கு ஓட்டுப் போட்டால், உங்களுக்கு எந்த விதமான நன்மையும் நடக்காது, எதிர்க் கட்சிகளுக்கு ஓட்டுப் போட்டால் முதுகுளத்தூரில் நடந்ததுபோல்தான் நடக்கும்" என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன், 'முதுகுளத்தூரில் சுட்டது மாதிரி இனியும் சுடப் போகிறீர்களா?' என்று. திருநெல்வேலி நகரசபைக் கலைத்தோம், அருப்புக் கோட்டை நகரசபையைக் கலைத்தோம். அதே போன்று, 1967 தேர்தலில் எதிர்க் கட்சிகள் ஜெயித்துக் கூட்டாட்சி ஏற்பட்டாலும், நாங்கள் இப்போது நகரசபைகளைக் கலைத்தது போல், கலைத்து விடுவோம் என்று பேசுகிறார்கள். இதையெல்லாம் அமைச்சர்களுடைய தலைமையில் தான் பேசுகிறார்கள். இதை நான் நிரூபிக்க முடியுமா என்று கேட்டால், எதிர்க்கட்சி கட்சிகளுடைய கூட்டங்களுக்கு எப்படி ஸி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்களை அனுப்பி எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன பேசுகிறார்கள் என்று எழுதிவரச்சொல்லுகிறீர்களோ, அதே போன்று காங்கிரஸ் கூட்டங்களுக்கு ஸி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்களை அனுப்பி அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை எழுதிவரச்சொல்லுங்கள். அப்போது தான் நான் சொல்வது சரியாக விளங்கும். இன்றைய தினம் காங்கிரஸ் ஆட்சியில் என்ன நடக்கிறது? இந்த சட்டமன்றத்தின் உறுப்பினர் திரு. மூக்கையாத் தேவர் உயிருக்கே ஆபத்து வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 17—7—66-ல் செல்லம்பட்டி, சங்கம்பட்டி பொதுகூட்டத்திற்கு மூக்கையாத் தேவர் அவர்கள் ஜீப்பில் போய்க்கொண்டிருந்தபோது, மது அருந்திய காங்கிரஸ்காரர்கள் ஜீப்பில் கல்லை எறிகிறார்கள். இத்தகைய செயல்களை போலீசாரும் தடுத்து நிறுத்துவதில்லை. அவர்களிடத்தில் கேட்டால், நாங்கள் என்ன செய்வது, காங்கிரஸ் கட்சி அல்லவா ஆட்சி நடக்கிறது, இது மட்டுமல்ல, இன்னும் உங்கள் மீது எவ்வளவோ நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கும் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் எல்லாம் நடந்து கொண்டிருப்பதாக எனக்கு மனுக்கள் வந்திருக்கின்றன. அவற்றை நான் கடைசியில் முதலமைச்சர் அவர்கள் கையில் கொடுப்பதற்காக வைத்திருக்கிறேன். அதே போன்று தான் கனம் கரியமாணிக்க அம்பலம் அவர்கள் தொகுதியிலும் செய்கிறார்கள். இது தான் ஜனநாயகமா, இது தான் ஜனநாயக சோஷலிசமா என்று கேட்கிறேன். நாங்கள் கூட்டங்களில் பேசும்போது, நீங்கள் அமைச்சர்களை தாக்கிப் பேசக்கூடாது, காமராஜ் அவர்களை தாக்கிப் பேசக் கூடாது, அப்படி இனிமேல் பேசினால் நாங்கள் உங்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று பெரிய போலீஸ்

[திரு. கரு. சீமைச்சாமி] [6th August 1966

அதிகாரிகள் பயப்படுத்துகிறார்கள். அது மட்டுமா, பல இடங்களில் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்களில் தான் காங்கிரஸ் கமிட்டி கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று நிச்சயமாக சொல்ல முடியும். அது மட்டுமல்ல, இந்த மன்றத்தில் உறுப்பினர் திரு. மூக்கையாத் தேவர் அவர்களை, மதுரையில் பார்வர்டு பிளாக் கட்சி ஆபீஸில் இருக்கும் போது, காங்கிரஸ்காரர்களால் தூண்டிவிடப்பட்டு ஒரு ரவுடி கத்தியால் குத்த வந்தான். அவனை பிடிப்பதற்காக சிலர் விரட்டினார்கள். இப்போது குத்த வந்ததற்கு எந்தவிதமான வழக்கும் போடாமல் விரட்டியவர்கள் மீது கேஸ் போட்டிருக்கிறார்கள். இப்படி ஆட்சி நடந்து கொண்டிருந்தால் உங்கள் மீது என்ன சொல்வது என்று தெரியவில்லை. இது தான் காங்கிரஸ் ஜனநாயக ஆட்சியில் நடக்கும் என்று சொல்ல வேண்டுமா? தேர்தல் நெருங்க, நெருங்க நீங்கள் .

**கனம் சபாநாயகர் :** 'நீங்கள்' 'நீங்கள்' என்றால் யாரைப்பற்றிச் சொல்லுகிறீர்கள்?

**திரு. கரு. சீமைச்சாமி :** காங்கிரஸ் ஆட்சியைத்தான் சொல்லுகிறேன். கனம் சபாநாயகர் அவர்களைச் சொல்லவில்லை. . .

(**திரு. சா. கணேசன் :** எல்லோரும் அப்படித்தான் பேசுகிறார்கள்.)

**கனம் சபாநாயகர் :** எல்லோரும் அப்படித்தான் பேசுகிறார்கள் என்பதற்காக அது சரியன்று ஆகிவிடாது. சர்க்காரைப்பற்றிச் சொல்லும்போது, 'நீங்கள், நீங்கள்' என்று சொல்லக்கூடாது . . . .

**திரு. கரு. சீமைச்சாமி :** இன்னும் கனம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு முக்கியமான விஷயத்தை கொண்டு வர விரும்புகிறேன். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் போர் நடந்துகொண்டிருந்த சமயம். இந்த நிலைமையில் இந்தியாவுக்கு துரோகம் செய்யக்கூடிய முறையில் காரியங்களை செய்யக்கூடிய சில தேசத் துரோகிகள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். அகில இந்திய தலைவர் காமராஜர் இந்தியா படம் அச்சிட்டு, அதில் இருக்கும் மாவட்டத்தில் இருக்கிறார்கள். காஷ்மீர், பாகிஸ்தான் பகுதிகளையும் சேர்த்து அச்சிட்டு பாகிஸ்தானுக்கும் மஞ்சள் கலர் கொடுத்து, காஷ்மீருக்கும் மஞ்சள் கலர் கொடுத்து அதையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இதை அச்சிட்டவர் இராமநாதபுரம் ஜில்லாவில் காமராஜ் அவருடைய மாவட்டத்தில் உள்ளவர்தான். சிவகாசியில், அவர் வைத்திருக்கும் லித்தோ பிரஸில் அச்சடித்தது தான் இது. ராஜஸ்தானில் இது பிடிபட்டது. அங்கிருந்து சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஸி.ஐ.டி. வந்து விசாரிக்கிறபொழுது சிவகாசியிலுள்ள நேஷனல் லித்தோ பிரஸ்-காரர் தான் இதை வெளியிட்டார் என்பதை அறிந்து அதன் சொந்தக்காரர் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டாரே தவிர கேஸ் ரெஜிஸ்டர் செய்யப்படவில்லை. இதில் பெரியவர்கள் தலையிட்டதின் காரணமாக கேஸ் போடப்படவில்லை. முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கேஸ் போடுவதற்கு தயாராகத்தான் இருந்தார்கள். ஆனால் கருடனுக்கு பயந்து பாம்பு சிவபெருமானின் கழுத்தைச் சுற்றிக்கொண்டது போல், லித்தோ பிரஸ் உரிமையாளர் இதற்கு பயந்து யாருடைய கழுத்தை போய்ச் சுற்றிக்கொண்டார்களோ தெரியவில்லை. இது தேசத்துரோகச் செயல் இல்லையா, காஷ்மீரை காப்பாற்றவேண்டும் என்று இந்தியா சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பாகிஸ்தானையும் காஷ்மீரையும் ஒன்று சேர்த்து படத்தை அச்சடித்து கொடுத்த இந்த தேசத்துரோகச் செயலுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? அச்சடித்தவர் கைது செய்யப்பட்டார். ஆனால் கேஸ் எடுக்கப்படவில்லை. அடித்தவன் மேல் கேஸ் இல்லை. விற்றவன் மேல் கேஸ் இருக்கிறது. ஏதோ தெரியாமல் அச்சடித்துவிட்டதாக இன்றைக்கு சமாதானம் சொல்லக்கூடும். இன்றைக்கும் அந்தப் படம் சீஃப் செக்ரட்டரி ரூமில் இருக்கிறது. இப்போது சென்னை போலீஸ் கமிஷனர் ரூமில் இருக்கிறது. அந்த ப்ளாக்குகளை இங்கே கொண்டு வந்தார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் தைரியசாலி என்று சொல்லுகிறார்களே நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை? இதைக் காட்டிலும் வேறு தேசத்துரோகச் செயல் வேண்டுமா? நடவடிக்கை எடுக்காதன் காரணம் என்ன? இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா? சிவகாசியிலிருந்து எடுக்கப்பட்ட படம் சட்ட மன்றத்தில் அங்கத்தினர்கள் பார்வைக்காக வைக்கப்படுமா? இதைப் பற்றி பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும். தேசத்தைக் காப்பாற்ற அத்தனை பேர்களும் ஒன்று சேர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது இத்தகைய துரோகச் செயலில் ஈடுபட்டவர்கள், லித்தோ ப்ரெஸை மூடிவிட்டு டில்லிக்குச் சென்று அங்கே ஒளிந்துகொண்டிருந்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட துரோகிகள் நாட்டிலே இருந்தால் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிடுவார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

வீரசோழத்தில் கட்டாயக் கொள் முதல் அதிகாரி ஒரு முஸ்லீம் வீட்டிற்குச் செல்லுகிறார். அவர் ஒரு ஆஸ்த்மா பேர்வழி. கொள் முதல் அதிகாரியோடு போலீஸாரும் உள்ளே செல்லுகிறார்கள். அங்கு ஏறியவுடன் அந்த நபரின் உயிர் போய்விட்டது. விவசாயம் செய்து நெல்லை வீட்டில் வைக்கக் கூடாதா? அது என்ன கள்ளத் தங்கமா? அவர் என்ன கடத்தல் வியாபாரியா? விவசாயிகள் என்ன திருடர்களா? விவசாயிகள் என்ன பதுக்கல்காரர்களா? விவசாயிகள் என்ன கடத்தல்காரர்களா? விவசாயிகள் பயிர் செய்த நெல்லை வைத்துக்கொள்ளக் கூடாதா? முஸ்லீம் விவசாயி கொலை செய்யப்பட்டிருக்கிறார். அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற துணை மான்யக் கோரிக்கைகளை ஆதரிக்கிறேன்.

இப்போது ஏறக்குறைய ரூ. 20,72,00,000-க்கு உப மான்யம் கோரப்பட்டிருக்கிறது. கோருகிற தொகையும் பல்வேறு நல்ல அம்சங்களுக்குச் செலவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

[திரு. எம். எஸ். செல்வராஜன்][6th August 1966

எனக்கு முன்னே பேசிய நண்பர் அவர்கள் குறிப்பிட்டபடி ஏழைகளுக்கு மனை வழங்க ரூ. 25 லட்சம்—ரூ. 25 லட்சம் மட்டுமல்ல ஏற்கனவே பல கோடி செலவிடப்படுவதற்குத் திட்டமிடப்பட்டு அதிகமாக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கண் இருந்தாலும் ஒத்துக்கொள்ளும் மனம் இல்லை. நாட்டிலே, சமீப காலத்தில் கூட சுமார் 2,500 ஏழைகளுக்கு திருநெல்வேலி ஜில்லாவில் இலவசமாக மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு ஜில்லாக்களிலும் அத்தகைய நல்ல காரியம் நடந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

உப மான்யக் கோரிக்கையில் ரூ. 302 லட்சம் புதிய கிணறுகள் வெட்டுவதற்காகக் கோரப்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இன்றைய தினம் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு விசேஷ நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதாகும். அங்கே ஒரு லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருக்கிற அட்வான்ஸ் கார் கார்கால பயிர். சில ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் தவிர, மற்ற எல்லா நிலங்களிலும் விளைவு நிச்சயமாக ஏற்படும் என்ற நிலைமை இப்போது இல்லை. இன்று இருக்கும் இயற்கை நிலை, தண்ணீர் நிலை இப்படி இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க என்னென்ன முறையில் பரிகாரம் காண முடியும் என்று அமைச்சர் அவர்கள் உடனடியாக யோசனை செய்யவேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கு சென்று, அதிகாரிகளோடு கலந்து, எந்தெந்த இடத்தில் கிணறுகள் போட்டு அல்லது பவர் ட்ரில்ஸ் போட்டு, தண்ணீர் கஷ்டத்தைத் தீர்த்து விளைவுக்கு உதவ முடியும் என்று அவசரமாகப் பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போல, தஞ்சையில் இருக்கிற குறுகிய காலப் பயிருக்கு க்விண்டாலுக்கு மூன்று ரூபாய் போனஸ் கொடுக்க வழி செய்திருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லா முழுவதிலும் குறுகிய காலப் பயிர் ஓரளவு விளையக் கூடிய இடம் உண்டு. அந்தப் பயிர்களுக்கும் போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

அரசாங்கம் பின்பற்றும் தானியத்தைக் கொள்முதல் செய்யும் திட்டத்திலே ஸ்டேட் பாங்கின் உதவி கோரப்பட்டிருப்பது சந்தோஷத்திற்குரியது. சர்க்கார் மட்டுமல்லாமல் தனியார் கூட்டுறவு ஸ்தாபனம் எல்லோரும் சேர்ந்து கொள்முதல் செய்வது நல்ல திட்டம். ரைஸ் மில்லிலிருந்து 68 சதவிகிதம் எடையில் அரிசி இருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் ஈரமாக இருக்கும்போதே, உடனடியாக அடித்துக் கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. எடையுடன் அளவிலும் கூட இந்த அளவுக்கு அரிசி வரவேண்டுமென்று நிர்ணயம் செய்தால் தகுந்த பரிகாரம் காண முடியும் என்று கருதுகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில், கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குக் கூட கோரிக்கை வந்தது, 1,220 பேர்கள் ஆசிரியர் பயிற்சி பெற முன் வந்தார்கள். ஆனால் 40—45 பேர்கள் தான் தேர்ந்தெடுக்கப்



6th August 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

பட்டார்கள். உடனடியாக 20 சதவிகிதம் அளவுக்குச் சர்க்கார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் அதிகமாகச் சேர்க்க இடவசதி செய்ய முடியுமா என்று யோசிக்கலாம்.

திருநெல்வேலி ஜில்லாவில் பல வருஷங்களுக்கு முன்பாகவே முறைஞ்சிப் பட்டியில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பதாக இருந்த பள்ளி ஆரம்பிக்கப்படவில்லை. அதையும் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யலாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போல திருநெல்வேலி ஜில்லாவில், அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது இன்னும் வருவதற்கு ஏற்பாடு செய்யவில்லை என்று சொன்னாலும் கூட, மணிமுத்தாறு அபிவிருத்தித் தீர்வை வசூலிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள், நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது வருஷ மத்தி. பஞ்சம், வரட்சி ஏற்பட்டிருக்கிற காலத்தில் துரிதப்படுத்தும் நிலை இல்லாது, ஒரு வருஷ காலமாகிலும் தள்ளிப் போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தண்ணீர் கண்டத் தீர்வைக்கு உட்பட்ட நிலங்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு தாம்பரபரணி கால்வாயில் மேலே உள்ள 7—8 கால்வாய்களை புனரமைக்கும் ஏற்பாடு இருக்கிறது. அதற்கு இந்த வரட்சி காலத்தில் வேலைகளை பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்தால் கண்டத் தீர்வைக்கு உட்பட்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு தன் தீர்வையாக நிலத் தீர்வை வசூலிக்க வசதி செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

குலசேகரப்பட்டினம் துறைமுகத்திற்காகப் பணம் செலவிட ஒதுக்கீடு இருந்தும், ஆரம்ப பூர்வாங்க வேலைகூட நடக்கவில்லை. புன்னக்காயல் துறைமுகத்திற்குப் பூர்வாங்க வேலை நடத்த, ஏதாவது பணம் ஒதுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். அதைப் பற்றியும் யோசிக்கலாம்.

திருநெல்வேலி ஜில்லாவிலே சில பிளாக்குகளில் மனித சக்தியை உபயோகப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வரட்சி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இன்னும் சில பகுதிகளுக்கு—குறிப்பாக திருச்செந்தூர் தாலுகாவில் பசி, பட்டினி, பஞ்ச நிலைமை உணரப் படுகிறது; அத்தகைய நிலைமை நீங்குவதற்காக அளவுக்கு அந்தத் திட்டத்தை திருச்செந்தூர் தாலுக்காவில் இன்னும் சில பிளாக்குகளுக்கு நீடித்து மனித சக்தியைப் பயன்படுத்த விரைவில் ஏற்பாடு செய்யவேண்டும்.

கிராமப் பகுதிகளில் இருக்கக் கூடியவர்களுக்கு அரிசி வாரத்திற்கு 1,000 கிராம் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அது முன்பு 1,200 கிராமாக இருந்தது; இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. கடலோரப் பகுதி மீனவர்களுக்கு மற்ற நகர்ப்புற இடங்களில் இருப்பது போல இந்தப் பங்கீடெல்லாம் ஏற்பாடு செய்யப்படும் என்று சர்க்கார் திட்டம் இருந்தாலும் முறையாக அமலில் இல்லை. காலாகாலத்தில் கிராமப்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [6th August 1966

பகுதிகளுக்குக் கூடுதலாகக் கிடைக்க அவசரமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதைப் போலவே நாசரேத் பகுதியில் பாலிடெக்னிக் கொடுத்து எடுத்து விட்டார்கள். நிலமும் கட்டடமும் பல லட்சம் பெறுமானம் உள்ளது சும்மா இருக்கிறது. ஏதேனும் உபயோகப் படும்படி காலாகாலத்தில் முடிவு செய்யவேண்டும். அதைத் திரும்பக் கொடுக்கவேண்டும் அல்லது வேறு கல்லூரிகளுக்குப் பயன்படுத்த உதவவேண்டும். அதோடு சர்க்கார் தரப்பில் ஜூனியர் பாலிடெக்னிக் அல்லது விமென்ஸ் பாலிடெக்னிக் வைக்க உபயோககரமாக இருக்கும் என்று எத்தனையோ கோரிக்கைகள் வந்திருக்கின்றன. திருநெல்வேலி என்ஜினீயரிங் கல்லூரி அந்தப் பகுதியில் இருக்க இந்த கட்டடம் பயன்படுமா என்று ஆலோசிக்க வேண்டும் என்று பலகாலமாகக் கோரிக்கை இருக்கிறது. அதையும் பரிசீலிக்கலாம்.

காயல்பட்டணம் குடிதண்ணீர்த் திட்டத்தில் விடப்பட்ட குக்கிராமங்கள் தெருக்கள் இருக்கின்றன. அதையெல்லாம் பஞ்சாயத்து நிதி நிலையிலிருந்து செய்ய முடியாது. இரண்டு பகுதிகளாகப் பிரித்து வைத்து, விடப்பட்ட பகுதிகளுக்குத் திட்டத்தை உடனடியாக விஸ்தரிக்க உதவவேண்டும். சர்க்கார் இதைப் பரிசீலனை செய்ய குழு நியமித்தார்கள், இது வரையில் வேலை தொடங்கவில்லை. விடப்பட்ட இடங்களுக்குக் தண்ணீர் வசதி செய்ய அதிகாரிகளை முடுக்கிவிட்டு காலாகாலத்தில் வேலை செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு, உப மான்யக் கோரிக்கைகளில் ரூ. 7½ லட்சம் உலகப் பொருட்காட்சிக்கு. தொழில் துறைப் பொருட்காட்சிக்கு நல்ல காரியத்திற்கு ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன் . . .
(மணி அடிக்கப்பட்டது)

* திரு. தா. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், நேற்றும், அதற்கு முன் தினமும் நடைபெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்திலே, அந்தத் தீர்மானம் தேர்தலுக்காகக் கொண்டுவரப்பட்ட ஸ்டன்ட் என்று ஆளும் கட்சியினர் கூறினார்கள். ஆனால் இன்றைய தினம் கொடுக்கப்பட்டுள்ள துணை மான்யக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விஷயங்கள் தேர்தலைக் கருதித்தான் செய்யப்பட்டிருக்கின்றன என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜன ஏழை மாணவியருக்கு பாவாடை, சட்டை முதலியவை கொடுக்கப் போகிறோம், அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலம் இல்லாத ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொள்ள நிலம் கொடுப்பதற்காக ரூ. 25 லட்சம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவு பெறுவதற்கு முன்னாலேயே கொடுக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளைக் கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால் இவைகளெல்லாம் தேர்தலுக்காகச் செய்யப்படுகின்றன என்று நான் கூறினால், ஏன் ஆளும் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள் என்பது



6th August 1966] [திரு. து. ப. அழகமுத்து]

தெரியவில்லை. நாங்கள் செய்கிறபொழுது அதைத் தேர்தல் பிரசாரம் என்று சொல்கிறார்கள். அவர்கள் செய்கிறபொழுது மாத்திரம் ஏதோ ஏழை மக்களுக்காக செய்யப்படுகிறது என்று கூறுவதிலே என்ன பொருள் இருக்க முடியும் என்பதை நான் முதன் முதலாக கேட்க விரும்புகிறேன்.

துணை மானியக் கோரிக்கையில் பல இனங்களுக்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. மைலோ, வேர்க்கடலை போன்ற பொருள்களை வாங்கி அதன் மூலம் விலை ஏற்றம் ஏற்படாமல் தடைசெய்வதற்காக நிதி ஒதுக்கம் கேட்டிருக்கிறார்கள். இந்த உணவுப் பொருள்கள் வாங்குவதன் மூலம் என்ன விலை கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் இது வரையில் ஒன்றும் கட்டுப்பாடு செய்யப்படவில்லை. டிவால்யுவேஷன் செய்தவுடனேயே மறுநாள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்த பேட்டியில், 'உணவு பொருள்கள் விலை ஏறாமல் இருப்பதற்காக நாங்கள் அதிகாரிகளை கவனிக்கும்படி சொல்லியிருக்கிறோம்' என்று கூறியிருக்கிறார். அதிகாரிகள் இதுவரையில் விலை ஏறுவதைத் தான் கவனித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, விலை ஏறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை.

உணவுப் பொருள்கள் கிடைப்பதில்லை. கெடுபிடி நெல் கொள்முதல் காரணமாக அரிசி பற்றாக்குறை கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நேற்று முன்தினம் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் விலை ஏற்றத்தைப் பற்றி குறிப்பிடுகிறபொழுது கரூரில் விலை அதிகமாகவும், புதுக்கோட்டையில் கொஞ்சம் விலை கம்மியாகவும் இருக்கிறது என்று கூறினார்களே ஒழிய, விலை ஏறாமல் நாங்கள் தடுத்திருக்கிறோம் என்று கூறுவதற்கு அவரால் முடியவில்லை. இன்றையதினம் நகர்ப்புறங்களில் 7 அவுன்ஸ் ரேஷன் அரிசி கொடுக்கிறார்கள். கிராமப் புறங்களில் மக்கள் நிலை என்ன? விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்தார்கள். அதுவும் மிகவும் வற்புறுத்தி கொள்முதல் செய்தார்கள். அமைச்சர் அவர்களை இங்கே கேட்டபொழுது 'நாங்கள் மார்க்கெட்டபிள் சர்பிளஸைத் தான் கொள்முதல் செய்கிறோம்' என்று கூறுகிறார்கள். ஆனால் அங்கே நடப்பது வேறு விதமாக இருக்கிறது. கட்டாயப்படுத்தி கொள்முதல் செய்யப்படுவதினால், உணவு அதிகமாக உற்பத்தி ஆகிற பகுதிகளில் உள்ள விவசாயிகள் கூட தங்களுடைய சொந்த உணவுக்கே வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது மற்ற பொது மக்களுக்கு அரிசி எப்படி கொடுக்க முடியும்? ரூ. 2, 2¼, 2½ இப்படி ஏழை மக்கள் கொடுத்து வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்கும் கிடைப்பதற்கு அரிசி இல்லாமல் இருக்கிறது. சர்க்காருக்கு தைரியம் இருந்தால் எல்லோருக்கும் ஸ்டாட்டுடரி ரேஷன் கொண்டு வரலாம். அப்படிச் செய்தால் எல்லோருக்கும் உணவு கொடுப்பதற்கு வழி இல்லை என்று தெரிந்திருக்கிற காரணத்தினால், அதற்கு தயங்குகிறார்கள். எப்படி

பொருளாதாரத்தில், கலப்பட பொருளாதாரமாக வைத்திருக்கிறார்களோ, அதேபோல எல்லா முறையிலும் கலப்படத்தை வைத்திருக்கிறார்கள். நகர்புறத்தில் இருப்பவர்களுக்கு ரேஷன் இருக்கிறது, கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு ரேஷன் இல்லை. இப்படி எல்லா வகையிலும் முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் கிராமப்புற மக்கள் இந்த சர்க்காரால் கைவிடப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து, மத்திய சர்க்கார் நாணய மதிப்பை குறைத்ததின் காரணமாக செலவு இனங்களில் நிர்வாகச் செலவில் 3 சதவிகிதம், முதலீட்டுச் செலவில் 5 சதவிகிதம், கட்டடம் போன்றவைகளுக்காகச் செலவிடுவதில் 15 சதவிகிதம் குறைக்கவேண்டும் என்ற உத்தரவை எல்லா மாநில சர்க்கார்களுக்கும் அனுப்பியிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், நம்முடைய அமைச்சர் அவை செலவைக் குறைத்திருக்கிறதா என்றால், கூட்டித் தான் இருக்கிறது. விளம்பர இலாகாவிற்கு அதிகமான அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். ஏனென்றால், இன்றையதினம் விளம்பர வேலை அதிகமாகக் கூடி இருப்பதாகக் கூறுகிறார்கள். என்ன விளம்பரம் தேவை இருக்கிறது. இந்த சர்க்கார் நன்மை செய்தால், மக்கள் தானகவே உணர்கிறார்கள்; இதற்காக கீழே இருப்பவர்களுக்கெல்லாம் கெஸெடெட் ராங்க் கொடுத்து, பல புது பதவிகளை உற்பத்தி செய்து அவர்களை அந்தப் பதவிகளில் நியமிக்க வேண்டிய அவசியம் என்ன? இது தான் சிக்கனம் செய்வதா? தங்களுக்கு வேண்டியவர்கள் என்பதற்காக வேலை கொடுப்பது, அதற்காக இலாகாவைப் பெருக்கியிருப்பது தேவையற்றது என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அரசாங்கம் திட்டங்களுக்கு முதலீடுகள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் போல தொழில்களுக்கும் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நான் என்னுடைய தொகுதியில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடவேண்டாம் என்று கருதினேன். இருந்தாலும் குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதால் நான் குறிப்பிடுகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு ஆண்டுக்குமுன் கண்டசாரி சர்க்கரை ஆலைக்கு துறையூரில் அடிக்கல் நாட்டினார்கள். சிறு கைத்தொழில் இலாகாவுக்கு கடனுக்கு மனுப் போட்டார்கள். ரூ. 4 லட்சம் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட அந்த கண்டசாரி சர்க்கரை தொழிற்சாலைக்காக, அதற்கு கிட்டத்தட்ட ரூபாய் ஒரு லட்சம் ஷேர் காப்பிட்டல் பணம் வசூல்செய்துவிட்டு, பாக்கி உள்ள ரூபாய்க்கு கடன் மனு கொடுத்தார்கள். அந்த மனு பரிசீலிக்கப்பட்டு, சிறு கைத்தொழில் இலாகாவிலிருந்து கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அந்த சர்க்கரை ஆலையை நடத்துவதற்கு பயிற்சியாளர்களைக் கூட பயிற்சி பெறுவதற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால் கடன் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். ஏனென்றால், இது சிறு கைத்தொழில் இனத்தில் வராது, மத்தியரகத் தொழில் இனத்தில் வரும், ஆகவே அதிலே கேட்டுக்கொள்ள





வேண்டும் என்று சிறு கைத்தொழில் இலாகாவினர் கூறுகிறார்கள். மீடியம் இன்டஸ்டிரீஸ் இலாகாவிலே இதைப்பற்றி தாங்கள் எப்படி பரிசீலிப்பது என்று கூறுகிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த ஒரு தொழில் இப்படி திரிசங்கு சொர்க்கத்தில் நின்றுகொண்டிருக்கிறது. அதே சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் அந்தப் பகுதியிலே ஒரு பெரிய சர்க்கரை ஆலையை நிறுவப்போகிறோம் என்று சொல்லி, அதற்காக விவசாயிகளையெல்லாம் கூட்டிவைத்து, இதே கனம் முதல் அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு மீட்டிங் நடத்தினார்கள். இதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று முதலமைச்சர் கூறுகிறார். ஒன்றுக்கு ஒன்று முரணான நிலையில் நடவடிக்கைகள் நடந்து கொண்டு போகின்றன. கனம் முதல் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட காரியம் என்பதற்காக இதை நான் சொல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைத்தேன், நிலைமை சொல்லக்கூடிய அளவிலே இருக்கிறது.

இந்த முறையில் தான் இன்றையதினம் நிர்வாகம் விளம்பரத்திற்காகவும் வோட்டு வேட்டைக்காகவும் செய்யப்படுகிறதே தவிர உண்மையான நிலைமைகளை கருதி செய்யப்படவில்லை என்று இந்த துணைமான்யக் கோரிக்கை விவாதத்தின் போது பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த சமயத்தில் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் துணைமான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். சேலம் ஜில்லாவிலே ஏற்காட்டில் இருக்கிற மலை ஜாதி மக்களுக்கு, 10 வருஷம், 15 வருஷம், 20 வருஷமாக விவசாயம் செய்துவருகிற விவசாய மக்களுக்கு நிலங்களுக்கு பட்டா இல்லாமல் குறைபாடு இருக்கிறது. அரிசன மக்கள், அருந்ததிய மக்கள், மலைசாதி மக்கள் இவர்களுக்கெல்லாம் ஏர் ஓட்டுவதற்கு மாடு இல்லாமல், விவசாய இலாகாவில் இலவசமாக மாடு கேட்டால், பட்டா இல்லாத நிலங்களுக்கு மாடு தருவதில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அதோடுகூட கிணறு வெட்டுவதற்கு ரூ. 1,500 மான்யம் கொடுக்கிறார்கள். அதைப் போய்க் கேட்டால் பட்டா இல்லாத நிலங்களுக்கு கிணறு வெட்டுவதற்கு மான்யம் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த மக்களுக்கு உடனடியாக அந்த நிலங்களுக்கு பட்டா செய்து கொடுத்தால், அவர்களுக்கு கிணறு வெட்டுவதற்கும், மாடுகள் வாங்குவதற்கும் நல்ல வசதியாக இருக்கும் என்று சபாநாயகர் அவர்கள் மூலம் வணக்கத்துடன் கூறிக்கொள்கிறேன்.

அதோடு கூட நிலம் இல்லாத மக்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்று முன்பே கூட இரண்டு தரம் கேட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் காரையாம்பட்டியில், டேனிஷ்பேட்டை பக்கத்தில் கிராமத்தில் இருக்கக்கூடிய மலைசாதி மக்களுக்கு, அரிசன மக்களுக்கு, இவர்களுக்கெல்லாம், 4 எக்கர், 5 எக்கர் நிலம் பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இது

[திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்] [6th August 1966

பாரஸ்ட் நிலம். அதுபற்றி நமது அமைச்சர் திரு. கக்கன் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் வந்து பார்த்துச் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு அது ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அதோடுகூட பனைமரத்துப்பட்டி தொகுதியில் முனிசிபாலிடிக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. இதைக்கூட நிலம் இல்லாத அரிசன மக்களுக்கு, மலைசாதி மக்களுக்கு, பட்டா செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பட்டிக்காடாக இருப்பதினால் எந்த வசதியும் இல்லாமல் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் விவசாயம் நடத்துவார்கள். அதையும் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு கனம் சபாநாயகர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

11-00 மு.ப. *திரு. இராம. அரங்கண்ணல்: கனம் தலைவர் அவர்களே, சுமார் 21 கோடி ரூபாய்க்கு துணை மானியம் கோரப் பட்டிருக்கிறது. இந்த விவாதத்தின் மூலம் பல்தரப்பட்ட கருத்துக்களையும் சொல்லக் கூடிய வாய்ப்பு, அடிக்கடி துணை மானியங்கள் இந்த மன்றத்தின் முன் வருவதன் மூலம் கிடைத்து வருகின்றது. இந்த ரூ. 21 கோடி துணைமானியக் கோரிக்கையில் பெரிய இனமாக சொல்லப் பட்டிருக்கிறது கொள்முதல் செலவுக்காக ரிசர்வ் பாங்கிலிருந்து கடனாக ரூ. 13 கோடி வாங்கி, பின்னால் கொள் முதல் மூலமாக சரிபடுத்தப்படப் போகின்றது என்று சொல்லப் பட்டிருக்கிற இனம். ஆனால் ரிசர்வ் பாங்கிலிருந்து பெறும் கடன் தொகைக்கு கொடுக்கப் படுகின்ற வட்டியும், ரூ. 84 லட்சமும் இந்தத் துணைமானியக் கோரிக்கையில் கோரப் பட்டிருக்கிறது. ரிசர்வ் பாங்கிலிருந்து பெறுகின்ற தொகைக்கு நாம் கொடுக்க வேண்டிய வட்டி 7½ சதவிகிதம். அதைக் கணக்குப் பார்த்தால், கிட்டத் தட்ட ரூ. 13 கோடிக்கு, ஒரு கோடிக்கு மேல் வட்டி கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவ்வளவு வட்டி கொடுத்து வாங்கும் தொகையைக் கொண்டு, நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற பசியைப் போக்க காரியங்களைச் செய்ய, இந்தப் பணம் செலவழிக்கப்படும் என்று கருதுகிறேன். ஆனால், அப்படிக் கருதுகின்ற நேரத்தில், இன்றைய தினம் நம் தமிழ் நாட்டைப் பொருத்தவரையில், தஞ்சை, திருச்சி முதலிய மாவட்டங்களில் குறுவை சாகுபடி கெட்டிருப்பதாக அறிகிறோம். அப்படி குறுவை சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் க்விண்டாலுக்கு ரூ. 5 போனஸ் தரப்போகிறோம். இன்னும் பல சலுகைகள் கொடுக்கப் போகிறோம் என்றும், சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்திலே, அடுத்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் தமிழ் நாட்டுக்குத் தேவையான அரிசி ஸ்டாக் இருக்கிறதா, அதிலும் வளமாக இருக்கும் மாவட்டங்களை நம்பி வாழும் நகர மக்களுக்கு அரிசி கிடைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா என்பவற்றிற்கான விளக்கங்கள் தெரியாத



6th August 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

காரணத்தால், ஒரு அச்சமும், பீதியும் உருவாகி இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

விலைவாசிப் பிரச்சினையைப் பொருத்த மட்டில், கனம் முதல் அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நகரத்தில் கூட்டுறவுத் துறையில் இரண்டு கடைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், அப்படி ஆரம்பிக்கும் முயற்சியைத் தொடர்ந்து செய்கிறோமா என்று பார்க்க வேண்டும். இன்றைய தினம் உள்ள பெரிய சீர்பாடு உற்பத்தியைப் பொறுத்த அளவில் கூட அதிகமாக வாதங்களுக்கு இடம் இல்லை. ஆனால், உற்பத்தியை பங்கீடு செய்வதில், டிஸ்ட்ரிப்யூஷனை அமல் நடத்துவதில் பலதரப்பட்ட கோளாறுகள் இருக்கின்றன. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், உணவுப் பண்டங்களை அத்தியாவசியப் பொருள்களை வினியோகிப்பதில், சில்லரை வியாபாரிகள், பெரிய வியாபாரிகள் இவர்களை நம்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். கூட்டுறவுத் துறைவாயிலாக பல கடைகள் திறக்க முடியாத அளவில் இருக்கிறோம் என்பதையும் நினைப்பூட்ட விரும்புகிறேன். அப்படித் திறக்கப்பட்டாலும், அந்தக் காரியங்கள் அவசரத்தில் செய்யப்படும் காரியங்களாகவே இருக்கின்றன. பிறகு கேட்பாரற்றுப் போகின்றன. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், மூன்று ஆண்டுகளுக்கு முன் விறகுப் பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது நியாய விலைக் கடைகள் திறக்கப் பட்டன. சர்க்கார் டெபோக்கள் திறக்கப்பட்டன. சென்னை நகரத்தில் சர்க்காரே விறகுக் கடைகளைத் திறந்தார்கள். ஆனால் அந்தக் கடைகள் இப்பொழுது எங்கே இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். இப்பொழுது அந்தக் கடைகள் இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்தக் கடைகள் திறக்கப் பட்டிருந்த காலத்தில் யாரும் வாங்குவார் இல்லை. அதனால் அந்தக் கடைகள் இப்பொழுது இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்:** வாங்குவார் இல்லை என்று சொல்லுகிறார்கள். வாங்குவார் அற்றுப் போய்விட்டது என்பதற்கும், விறகுக் கடைகள் யார் யார் நடத்துகிறார்கள், ஏன் சர்க்கார் கடைகள் இல்லை, என்கிற விளக்கங்களைப் பற்றிப் பேச வேண்டும் என்றால், அதிக நேரம் ஆகிவிடும். செய்கின்றவை நல்ல காரியங்கள் ஆனாலும், அவற்றைத் தொடர்ந்து செய்தால் தான் மக்களுக்குப் பலன் கிடைக்கும். இப்பொழுது சர்க்காரிலே கடைகள் திறக்கப்படுகின்றன; மாதர்களைக் கொண்டு கடைகள் நடத்துவது முதலிய முயற்சிகள், மக்களுக்கு நல்ல பொருள்கள் கிடைக்கவேண்டும் என்று செய்பவை துரிதமாகச் செய்யப் படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்திலே, இப்பொழுது, அடிக்கடி முழக்கங்கள் போடுவது வழக்கமாகிவிட்டது. 10 ஆண்டு காலத்தில் எல்லோருக்கும் வீடு கட்டப் போகிறோம் என்கிற முழக்கத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எழுப்பியிருக்கிறது. முழக்கத்தை வரவேற்கிறேன். ஆனால், பத்தாண்டு காலத்தில் எப்படி எல்லோருக்கும் வீடுகள்

[திரு. இராம. அரங்கண்ணல்] [6th August 1966

கட்டப் போகிறார்கள் என்று நமக்கு அச்சமாக இருக்கிறது. சென்னை மாநகரத்திலே 20 லட்சம் பேர்கள் இருக்கிறோம். ஆனால் இங்கே ஒன்றரை லட்சம் வீடுகள் கூட இல்லை. சென்னை மாநகரத்தில் நாலரை லட்சம் வீடுகள் இருந்தால்தான், வீட்டுக்கு 5, 6 பேர்கள் என்று கணக்கு வைத்தால் கூட, சரியாக இருக்கும். இன்றைக்கு நாலரை லட்சம் வீடுகள் கட்ட சென்னை மாநகரம் நிலத்தைப் பெற்றிருக்கிறதா என்றால், இல்லை. சுற்றுப்புறக் கிராமங்கள் பலராலே, பலவிதமாக பிரிக்கப்பட்டு, மனைக் கட்டுகளாக பிரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. நாமும், ஸ்டேட் ஹவுசிங் போர்டு, சிடி ஹவுசிங் யூனிட் இவற்றின் மூலம் வீடுகளைக் கட்டிவருகிறோம் என்றாலும், 10 ஆண்டு காலத்தில் எப்படி முழுவதும் சாதிப்போம்? இன்றைக்கு 4,000 வீடுகளைக் கூட கட்டி வழங்க அவர்களால் முடியவில்லை. முழக்கந்தான் பெரிதாக இருக்கின்றது. எந்த அளவுக்கு திட்டங்களை நிறைவேற்றப் போகிறோம் என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

இன்னொன்று. சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று, மத்திய அரசும் நம்முடைய மாநில அரசும் பெருத்த முயற்சிகளில் ஈடு பட்டிருக்கின்றன. இதுவும் பெரும் முழக்கங்களாகத்தான் இருக்கின்றன. கோரப்பட்டிருக்கின்ற துணைமானியக் கோரிக்கையில், செய்தி விளம்பரத் துறை பங்கு கொண்டிருக்கிறது. இந்தச் செய்தித் துறையே வேண்டாம் என்ற கருத்து இருப்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். அந்தத் துறையிலே அசிஸ்டென்ட் பப்ளிகேஷன் ஆபீசர் என்றும், அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் டூரிசம் என்றும் இரண்டு புதிய பதவிகளை 'க்ரியேட்' செய்திருக்கிறார்கள். அந்தச் செலவிற்காக ரூ. 18,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அசிஸ்டென்ட் பப்ளிகேஷன் ஆபீசர் எதற்காக? வேலைகள் செய்தித் துறையில் குவிந்துவிட்டனவா? ஆம், தேர்தல் வருகிறது, தேர்தலை ஒட்டி இந்தச் செய்தித் துறையை இன்றைய தினம் பயன் படுத்தவேண்டும் என்கிற ஆசை அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது போலும். ஏராளமான நூல்களை குறைந்த விலை என்று சொல்லும் அளவுக்கு வெளியிட்டு, நூல்கள் விநியோகிக்கப்பட ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு இருப்பதை நான் அறிவேன். அந்தக் காரியத்தைச் செய்ய இந்த அசிஸ்டென்ட் பப்ளிகேஷன் ஆபீசரா அல்லது, ஏராளமான வேலைகள் குவிந்துவிட்டனவா? எதற்காக இந்தப் பதவி என்று புரியவில்லை. அடுத்து அசிஸ்டன்ட் டைரக்டர் ஆப் டூரிசம் என்ன டூரிசத்தைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதும் புரியவில்லை. இருக்கின்ற அதிகாரிகளே டூரிசத்தையும் பார்க்காமல், அதற்காக இரண்டு பதவிகள் ஏற்படுத்தப் படவேண்டுமா? அதுவும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பார்வைக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறதா என்பதற்கும் விளக்கமும் கொடுக்கவில்லை.

அடுத்தபடியாக, தஞ்சையில் வடிகால் புலன் ஆய்விற்காக என்று தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது. முக்கியமான காரியம் தான். ஆனால், இந்த வடிகால் புலன் ஆய்வு எப்பொழுது எடுக்கப்படும் என்று தெரியவில்லை. அதுமட்டுமன்றி, இயங்கி



6th August 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

வருகின்ற நல்ல எஞ்ஜினியர்களைக் கொண்டு, சிவில், நீர்ப்பாசனத் துறையில் நல்ல இலாகாவை வைத்திருக்கும் நம் மாநிலத்தில், இந்த புலன் ஆய்வுக்காக தனியாகச் சிலரை எடுத்து, அவர்களுக்கு வேலைகொடுக்க வேண்டும் என்கிற அவசியம் என்ன என்று புரியவில்லை. இம்மாதிரிச் செய்வது இரண்டு இலாகாக்களுக்கும் சிக்கலை உண்டாக்குமே ஒழிய, காரிய சாத்தியம் என்று தோன்றவில்லை.

அதே போல், பழைய காவிரி சங்கமுகப்பகுதிப் பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவது சம்பந்தமாக இரண்டாவது நவீனப்படுத்தும் பகுதி (செகண்டு மாடர்னைசேஷன் டிவிஷன்) ஒன்றை வைப்பதற்காக 1 லட்சம் 65 ஆயிரம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. இது தனிப் பிரிவா அல்லது முன்பு இருக்கிற வடிகால் புலனாய்வோடு சேர்ந்திருக்குமா என்று புரியவில்லை.

அடுத்து, சென்னை மாநகரத்தில் இருக்கிற நடைபாதை வாசிகளுக்கும், பக்கிங்காம் கால்வாய், கூவம் ஆறு இவற்றின் கரைகளை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளவர்களுக்கும் பல்வேறு சேரி ஒழிப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் விளைவாக வீடிழக்கும் சேரி வாழ்வோர்களுக்கு வசிப்பதற்கான இடமளிக்கும் பொருட்டு 330 கொட்டகைகள் போடுவதற்காக ரூ. 15,64,000 கோரப்பட்டிருக்கிறது. கொட்டகைகள் போடுவதற்காக என்று சொல்லி, 330 கொட்டகைகள் மட்டும் சென்னை மாநகரத்தில் போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சென்னை மாநகரத்தில் கிட்டத்தட்ட 560-க்கு மேற்பட்ட குடிசைவாழ்ப் பகுதிகள் இருக்கின்றன. 560 குடிசைவாழ்ப் பகுதிகளில் 330 பகுதிகளை எடுத்து, அங்கே கொட்டகைகளைப் போட்டு, தாற்காலிகமாக அந்த மக்களை வைத்து, வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டமும் நிறைவேற்றப்படப் போகிறதா, எதற்காக இந்தத் தொகை கோரப்படுகிறது என்று புரியவில்லை . . . . (மணி அடிக்கப்பட்டது).

* திரு. மா. தண்டாயுதபாணி: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்தத் துணைமானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்கள் ஒரு சிலவற்றைக் கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், வடிகால் பாசனத்தைப் பரிசீலனை செய்து, அதைச் சரி செய்வதற்குத் தனியாக ஒரு டிவிஷன் அமைக்கப்படுகிறது. தஞ்சையில் பாசன வசதி சிறப்புப் பெற்றிருக்கிறது என்றாலும், அதற்குப் பாதகம் அளிக்கக்கூடிய அளவிற்கு வடிகால் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வடிகால் சரிவர அமையாத காரணத்தால், விவசாயிகள் சரியான பலனை அடைய முடியாத நிலை ஏற்பட்டது. அதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அந்த வடிகால் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இப்பொழுது அதற்காக டிவிஷன் ஆரம்பிப்பதற்கு அனுமதி அளித்திருப்பது உண்மையிலேயே பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

அதுபோன்று, பாசனக் கால்களை டெல்டாப் பகுதியில் சரி செய்வதற்காகப் பன்னிரண்டு கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு, அதைப் பரிசீலனை செய்வதற்குத் தனியாக இலாக்கா அமைக்கப் பட்டிருக்கிறது. டெல்டாப் பகுதி என்று கூறும்போது, தஞ்சை ஜில்லாவில் இருக்கும் 15 லட்சம் ஏக்கரில் 12 லட்சம் ஏக்கர் பழைய டெல்டாப் பிரதேசத்தில் இருக்கிறது. புதிதாகப் பாசனம் செய்யப்பட்ட பகுதி பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, அறந்தாங்கி தாலுக்காக்கள் ஆகும். புதிய பாசன வசதி பெற்ற பகுதியிலே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது என்று நெடு நாளாகக் கோரிக்கை இருக்கிறது அந்தப் பகுதிகளுக்கு, தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும் நிலங்களுக்கு நல்ல முறை யில் பரிசீலனை செய்து சீராகத் தண்ணீர் கிடைக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டும்.

உணவுப் பங்கீடு முறையைப் பார்ப்போம். கடந்த ஆண்டு ஜூன் 12-ந் தேதி மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது. ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் பத்தாந் தேதிக்குள் குறுவை மகசூல் கிடைத்துவிடும் என்ற நிலை இருந்தது. ஆனால், அதற்கு மாறாக, நமக்கு இயற்கை பாதகம் செய்த காரணத்தால் மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாததால், இந்த ஆண்டு ஜூலை 21-ம் தேதி தான் தண்ணீர் விடப்பட்டது. இப்பொழுது நாற்று விடப்பட்டிருக் கிறது. ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர் 15 ந் தேதி தான் குறுவை மகசூல் கிடைக்கும். ஆனால், தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், கடந்த ஆண்டு இருந்த நிலையை மனத்தில் கொண்டு, செப்டம்பர் 15-ந் தேதி வரையில் மக்களுக்குத் தேவை யான உணவு விவசாயிகளிடத்தில் இருக்கிறது. ஆனால், அதற்கு மாறாக, இந்த ஆண்டு காலம் கடந்து தண்ணீர் திறந்துவிடப் பட்டது. தஞ்சை ஜில்லாவிற்குத் தேவையான உணவு அங்கே இல்லை. எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் அவர்கள் கூடக் கூறினார்கள். நீலகிரி மாவட்டத்திற்குப் போட்டிருந்த அலாட்மென்ட்டை தஞ்சை ஜில்லாவில் உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் கலெக்டரிடத்தில் எடுத்துக்கூறி, அங்கிருந்து பிற மாவட்டங்களுக்கு அனுப்பக் கூடாது என்று தடை செய்துவிட்டார்கள், அதை எடுக்கவேண்டும் என்று கூறினார்கள். பிற மாவட்டங்களுக்கு அரிசி கொடுக்கக்கூடாது என்ற நிலைமை தஞ்சை ஜில்லாவில் இல்லை. ஆனால், தஞ்சை ஜில்லா விற்குத் தேவையான அளவு உணவு இருக்கிறதா? என்று கலெக்டரைக் கேட்ட நேரத்தில், "25 ஆயிரம் டன் தான் அரிசி இருக்கிறது" என்று கூறுகிறார்கள். தஞ்சை ஜில்லாவில் இருக்கும் ஸ்டாக் எத்தனை மாதக் காலம் வரும் என்றால், ஆகஸ்டு முடிய, செப்டம்பர் 15-ந் தேதி வரையில் தான் விநியோகிக்க நம்மிடம் இருக்கும் ஸ்டாக் போதுமானதாக இருக்கிறது. . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் அரசாங்கத்தின் கையில் இருக்கும் ஸ்டாக்கைப் பற்றி மட்டும் கனம் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். விவசாயி





களிடத்தில் இருப்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். விவசாயிகளிடமும் விற்கக்கூடியது இருக்கிறது. எல்லாம் சேர்த்துப் பார்க்கவேண்டுமேயொழிய, அனாவசியமாகப் பீதியை உண்டுபண்ண வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

**திரு. மா. தண்டாயுதபாணி:** தலைவர் அவர்களே, விவசாயிக ளிடத்தில் இருக்கின்ற உணவுத் தானியத்தை இல்லை என்று கூற வில்லை. ஆனால், சர்க்கார், விவசாயிகளை ஊக்குவிக்கிற முறையில், போனஸ் திட்டத்தைக் கொண்டுவந்து, ஒரு ஏக்கருக்கு இத்தனை என்று கொடுத்துவிட்டு, அதற்குமேல் உபரியாகக் கொடுத்தால், 54 கிலோக்ராம் கொண்ட மூட்டையொன்றுக்கு ரூ. 1.14 போனஸாகக் கொடுப்போம் என்று அரசாங்கம் ஊக்கம் அளிக்கும் போனஸ் திட்டத்தைக் கொண்டுவந்த காரணத்தால், கிட்டத்தட்ட உபரி யாக இருந்த நெல்லையெல்லாம் போட்டுவிட்டார்கள் என்றுதான் கூறுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** காவிரியில் குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் வராத நேரத்தில் சில பேருக்கு அச்சம் இருந்தது. அதனால், விற்கக்கூடியதையும் விற்காமல் வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது காவிரியில் தண்ணீர் வந்து விட்டது. குறுவை சாகுபடி நல்ல முறையில் வருகிறது. இது வரைக்கும் வைத்துக்கொண்டிருந்தவர்கள் இப்பொழுது தாராள மாக விற்கவேண்டும் என்பதில் கனம் அங்கத்தினர் அவர்கள் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. மா. தண்டாயுதபாணி:** விவசாயிகளிடத்தில் உபரியாக இருக்குமானால், நெல்லை ப்ரொக்யூர் செய்து, அந்த ஜில்லாவில் இருக்கும் விவசாயிகளுக்குக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அதைப் பதுக்கி வைத்திருந்து, அதிகமான விலைக்கு அடுத்த மாவட்டங்களுக்கு விற்கவேண்டும் என்ற நிலை தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இல்லை. கடந்த ஆண்டு லெவி முறை வைத்துக்கொண்டு, மாவட்டம் மாவட்டமாக வசூல் செய்தது போல் வசூல் செய்யக்கூடிய நிலை தஞ்சை மாவட்டத்தில் சென்ற ஆண்டு இல்லை. விவசாயிகள் தங்களிடம் இருக்கும் உபரி நெல்லை, சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு போட்டு விட்டனர். முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இன்னும் அதிகமாக நெல் இருக்குமானால், அதையும் ப்ரொக்யூர் செய்து, தஞ்சை ஜில்லாவில் நகரப் பகுதி மக்களுக்கும் உணவுத் தட்டுப் பாடு இல்லாத வகையில் அதைப் பங்கீடு செய்து கொடுத்தால், அதை நான் வரவேற்கிறேன் (மணி அடிக்கப்பட்டது).

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தகுதி மிக்கத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியத்தில் விவசாயத்திற்காக அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தாலுங்கூட, அரசாங்கத்தின் விவசாயத் திட்டத்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [6th August 1966

தின்படி போடப்பட்டிருக்கிற திட்டங்கள் நிறைவேற்றப் படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, விவசாயத்திற்காக அதிகமாகக் கடன் வழங்கப் படுகிறது; உரம் வகைகள் வழங்கப்படுகின்றன என்று சொன்னாலுங்கூட, அது முறைப்படி வழங்கப்படவில்லை என்பதையும், அதே நேரத்தில், அதில் இருக்கும் முறைகேடான காரியங்களால் அது பெரும்பாலும் பாதிக்கப்படுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, எல்லோருமே பேசுவது, விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொன்னாலுங்கூட, விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் விவசாயிகளுக்குப் போய்ச் சேருவது கிடையாது என்பது மட்டுமல்ல, முறையாகப் போய்ச் சேருவதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, வேளாண்மைத் துறையில் விவசாயிகள் உர உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின்படி கொளிஞ்சி விதை, ஆவாரை விதை கொடுப்பதற்காக ஏறத்தாழ ஒவ்வொரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்கும் மூவாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூவாயிரம் ரூபாயைக் கொண்டு இந்த விதைகளைத் தெளிக்காமல் தெளித்ததாகக் கணக்குக் காட்டுகிறார்களே தவிர, எங்கே உரம் உற்பத்தி பெருக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஏட்டளவில் காட்டப்படுகிறதே தவிர, செயல் அளவில் இல்லை என்பதை நானே நிரூபித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். நானே ஒரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தின் தலைவர் என்ற முறையில் சொல்கிறேன். எங்களுடைய பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் மூவாயிரம் ரூபாய் எப்படிச் செலவு ஆயிற்று என்று பார்த்தபோது, பல விவசாயிகளிடத்தில் கொடுக்கப்பட்டதாக எழுதி, அதற்குப் பிறகு கணக்குக்கு வந்து, சர்க்கார் கொடுக்க வேண்டிய ஸப்ஸிடியைச் சரி செய்வதற்காக இது செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். "என்ன ஐயா இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டபோது, நம்முடைய கூட்டு மன்றத்தில் மாத்திரமல்ல, பொதுவாக மாநிலத்திலே உள்ள எல்லாக் கூட்டு மன்றங்களிலும் கணக்கை இப்படித்தான் சரி செய்வது என்று சொன்னார்கள். அந்த அதிகாரியை நீங்கள் ஸஸ்பெண்டு செய்யவேண்டும் என்று மாவட்ட அதிகாரிக்குத் தெரிவித்திருக்கிறேன்.

அதைப்போலவே, கம்போஸ்ட் உரம் தயார் செய்வது பற்றியும் கூறவேண்டும். சரியாக எங்குமே இந்தத் திட்டம் நடைபெறவில்லை. அதற்காகக் கொடுக்கப்படும் பணத்தை விவசாய உற்பத்திக்குச் செலவிட்டு உற்பத்தியைப் பெருக்கினால் நலமாக இருக்கும்.

விவசாய மானியத்தில் இரண்டு கோடி ரூபாய் கிணறு வெட்டும் மிக வரவேற்கத்தக்கது மட்டுமல்ல, இன்னும் அதிகமாகத்



6th August 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

தொகையை இதற்கு ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம், இப்போது கொடுக்கப்படுகிற பணம் கிணறு வெட்டத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, வெட்டப்பட்ட கிணறுகளுக்குத் தண்ணீர் இறைப்பதற்கான பம்ப் செட்டுகள் வாங்கிப் பொருத்துவதற்குப் பயன்படாது. வெட்டிய கிணறுகளுக்கு இன்னும் பம்ப் செட் வைத்துத் தண்ணீர் இறைக்க முடியாத நிலை இருக்கும் இந்த நேரத்தில், புதிதாகக் கிணறு வெட்டினால், அந்த விவசாயிகள் பம்ப் செட் வாங்க என்ன செய்ய முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திருச்சி மாவட்டத்தில் வெட்டப்பட்ட கிணறுகளின் மூலம் ஐம்பதாயிரம் ஏக்கர் முன்பே சாகுபடியாகி இருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** எங்களுடைய கூட்டு மன்றப் பகுதியில் அதிகமான அளவில் விவசாயம் செய்து வந்திருக்கிறோம். ஆனால், வெட்டப்பட்ட கிணறுகளுக்குப் பம்ப் செட்கள் வாங்கக் கடன் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். அந்தக் கடனையும் அரசாங்கம் வழங்க முன்வர வேண்டும். ஐயாயிரம் ரூபாய் வரையில் கிணறு வெட்டக் கடன் கொடுக்கலாம் என்ற வரம்பு இருக்கிறது. இதை நிர்ணயிக்க ஆர்.டி.ஓ. அவர்கள்தான் தகுந்த அதிகாரி என்று நிர்ணயித்திருப்பதை மாற்றி, கூட்டு மன்றக் கமிஷனருக்கே அந்த அதிகாரத்தைக் கொடுத்தால், விரைவில் விவசாயிகளுக்குப் பணத்தை வழங்க வழிவகை ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே விவசாயத் துறையில் இப்போது போன் கலப்பை என்பதாகக் கொடுக்கப்படுகிறது. அந்தக் கலப்பையைப் பாதி விலையில் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். கலப்பை விலை 3 ரூபாய் இருக்கும். கழி முதலியவைகள் போட்டால், ஒரு 4 ரூபாய் கூட ஆகலாம். ஆக மொத்தம் 7 ரூபாய்க்கு மேல் போக அவசியம் இல்லை. இருந்தும் பதினாரை ரூபாய் சொச்சத்திற்கு விலை போட்டு விவசாயிகள் எட்டேகால் ரூபாய் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். இதைப்பற்றி விவசாயிகள் மிகவும் ஏளனமாகப் பேசுகிறார்கள்.

வண்டிக்கு வேண்டிய பட்டை கொடுக்க அரசாங்கம் முன் வர வேண்டும். வண்டிகளுக்குப் பட்டை இல்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே வண்டிப்பட்டை கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அதைப்போலவே வீடு கட்டும் திட்டம். பிற்பட்ட இனத்தவர்களுக்கும் வீட்டு மனை வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஏற்கனவே ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்து வைத்திருக்கிறார்கள். வசப்படுத்திய நிலங்கள், நஞ்சை நிலங்கள் கூட. இன்றையதினம் வீடுகள் அங்கே கட்டப்படாமல் தரிசாகக் கிடக்கின்றன. அதைப்போல விட்டுவிடாமல் நிலத்தை ஆர்ஜிதம் செய்த கையுடனேயே அங்கே வீடுகள் கட்டவும் வழிவகை செய்தாக வேண்டும்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [6th August 1966

பிற்பட்ட சமூகத்திற்கு மாத்திரம் அல்ல ஹரிஜனங்களுக்கும் குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். அப்படி நிறைவேற்றப்படுவதில்லை. எங்கள் பஞ்சாயத்து கூட்டு மன்றத்தை எடுத்துக்கொண்டால், மகிழம்பாடி என்கிற கிராமம் இருக்கிறது. அங்கே குடியானவர்கள் தெருவில் சர்க்கார் செலவில் பாதுகாப்புக் குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அதே ஊர் ஹரிஜனச் சேரியில் குடிதண்ணீர் வசதி அளிக்கப்படவில்லை. ஹரிஜனச் சேரிக்கும் அந்தப் பாதுகாப்புத் தண்ணீர் மேல்நிலைத் தொட்டியில் இருந்து குடிதண்ணீர் வசதி அளிக்க ஒரு திட்டம் போட்டு அதைத் தீர்மானமாகவும் நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தைக் கலெக்டர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அந்த வேலையைத் துவங்கச் சாமான்களை எல்லாம் வரவழைத்தார்கள். வேலை துவங்கப்படுகிற நேரத்தில் அரசாங்கத்தில் இருந்து தடை உத்தரவு வந்துவிட்டது. ஓர் ஆண்டு காலம் ஆகியும்கூட இன்னும் அந்தத் தடை உத்தரவு நீக்கப்படவில்லை. கனம் அமைச்சர் அவர்களிடத்திலும் வந்து சொன்னோம். இன்னமும் உத்தரவு வழங்கப்படவில்லை. நீங்கள் ஏன் தடை உத்தரவு போட்டீர்கள் என்பதாக ஸ்தல ஸ்தாபன அமைச்சரிடம் கேட்டதற்கு, 'நான் ஆஸ்பத்திரியில் இருந்தபோது, கனம் பூவராகன் அவர்கள் அந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அது விஷயம் எனக்குத் தெரியாது' என்கிறார்கள். அதிகாரிகளிடத்தில் சென்று இந்தத் தடை உத்தரவு ஏன் போடப்பட்டது என்று கேட்டால், 'எங்களுக்கே தெரியாது. அமைச்சர் அவர்கள் அத்தகைய உத்தரவைப் போட்டுவிட்டார்கள்' என்கிறார்கள். உடனடியாக அந்தத் தடை உத்தரவை நீக்கி, ஹரிஜனச் சேரிக்குப் பாதுகாப்புக் குடிதண்ணீர் வசதியை அளிக்கும் திட்டத்தை நிறைவேற்ற முன் வரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே நடக்க இருக்கிற எக்சிபிஷனுக்காக, பொருட்காட்சிக்காக துணை மானியக் கோரிக்கையில் தொகை கேட்டிருக்கிறார்கள். உண்மையில் இது தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. அதற்கு ஆகும் செலவு பல லட்ச ரூபாய்களாக இருந்தாலும், பொருட்காட்சி நடைபெற இருக்கும் இடத்திற்கு மனிதர்களும், வாகனங்களும் சென்று வருவதற்காகச் சாலை அமைக்கும் வேலைகளுக்காகவும், பாலம் கட்டும் வேலைகளுக்காகவும் பி.டபிள்யூ.டி. நெடுஞ்சாலைத் துறைக்கு 19½ லட்சம் ரூபாய் கோரியிருக்கிறார்கள். அதே நேரத்தில் சாலைகளை மேன்நிலைப் படுத்துவதற்காகக் கார்ப்பரேஷனுக்குப் பாதி மானியமாகவும், பாதிக் கடனாகவும் வழங்க 13½ லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். பாதிக் கடனாகச் சென்னை நகர கார்ப்பரேஷனுக்கு வழங்க இருக்கிற தொகையையும் சேர்த்து, முழுவதையும் மானியமாகவே வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்போலவே இந்தப் பொருட்காட்சி சாலைகளில் இருந்து வருகிற லாபத்தில் நம் சர்க்காருக்கு ஏதாவது ஒரு பகுதி கொடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



6th August 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அதேபோல தமிழ்நாடு தொழில் முதலீடு கார்ப்பரேஷனுக்கு ரூ. 75 லட்சம் கடனாக வழங்க நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களுக்கு அவர்கள் நமக்கு டிவிடெண்டாகத் தரவேண்டிய தொகை 15 லட்சம் வரும். அந்த 15 லட்சம் ரூபாயையும் இப்போது இந்த 75 லட்ச ரூபாயில் கழித்துக்கொண்டு பாக்கி 60 லட்சத்தைத் தரப் போகிறார்களா ? அல்லது இந்த 75 லட்சத்தையுமே தந்துவிடப் போகிறார்களா ? என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே போலீஸ் தலைப்பின்கீழ் மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போலீசாருக்கு அதிகப்படியான ஊதியம் கொடுப்பது பற்றியோ, இதர வசதிகள் அளிப்பதைப்பற்றியோ நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்களுக்கு எத்தகைய சலுகைக் கொடுத்தாலும் நான் வரவேற்கத் தயாராய் இருக்கிறேன். ஆனால் போலீசாரிடம் உள்ள குறைபாடுகளையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் திருமதி ஜகதம்பாள் வேலாயுதம் அவர்கள் 8—4—66-ல் சென்னையில் இருந்து புறப்பட்டு ரயில் மூலமாகச் சிதம்பரத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ரெயில்வே நிலையத்தில் இரவு தங்கியவர்கள் விடியற்காலையில் பஸ் இருக்கிறது என்பதற்காக காலை நான்கு மணி பஸ்ஸைப் பிடிக்க பஸ் ஸ்டாண்டுக்கு விடியற்காலை 3½ மணிக்கு சென்றிருக்கிறார்கள். பஸ் ஸ்டாண்டில் இருந்த அவரை—அங்கே இருந்த நார்த்தார்க்காடு போலீஸ் கான்ஸ்டபிள்—1299—(எஸ். ஏ. 1299) என்பவர் 'நீங்கள் இங்கே தங்கக் கூடாது' என்று குறுக்கிட்டிருக்கிறார்கள். 'நான் சட்ட மன்ற உறுப்பினர். பஸ்ஸுக்காக தங்கியிருக்கிறேன்' என்று குறிப்பிட்டும், 'சட்ட சபை உறுப்பினராக இருந்தால் என்ன ? யாராக இருந்தால் என்ன ?' எனக் கேவலமாகப் பேசி, கையைப் பிடித்து இழுத்துத் தள்ளியிருக்கிறார். இப்படிக் கேவலமாகப் பேசியது மாத்திரம் அல்ல, வேதனை தாங்கக்க அளவில் நடந்து கொண்டிருக்கிறார். இதையும் விசாரிக்க வேண்டும். இப்படிப்பட்ட தவறுகளைப் போலீஸ் இலாகாவினர் செய்யாதவாறு, அவர்கள் நல்ல முறையில் செயலாற்ற அரசாங்கம் கண்காணிப்புடன் இருக்க வேண்டும். . . (மணியடிக்கப்பட்டது)

**திரு. கோ. நாராயணசாமி நாயுடு :** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்பு வைக்கப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் பேச விரும்புகிறேன்.

எங்கள் ஜில்லா சம்பந்தப்பட்டவரை, சமீபத்தில் இன்பார்மேஷன் கொண்டு வந்ததன் காரணமாக நேற்றையதினம் எங்கள் ஊர் பெயரைக் கூட எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதிலே சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

*[திரு. கோ. நாராயணசாமி நாயுடு]* [6th August 1966

மாயவரத்தில் சமீபத்தில் தான் அடையாள குடும்ப கார்டுகள் வழங்கப்பட்டன. வாரத்திற்கு ஒரு மூட்டை ஒரு கடையில் விநியோகம் ஆயிற்று என்றால், திடீரென்று நான்கு மூட்டை, ஐந்து மூட்டை என்று செலவாக ஆரம்பித்தது. அதற்குக் காரணம் என்ன, திடீரென்று இப்படி ஏன் அதிகம் செலவாகிறது என்பதைப் பற்றி ஆராய்ந்தோம். மாயவரம் நகர சபையைப் பொறுத்த வரையில் இரட்டை மெம்பர் தொகுதி என்று இருக்கிறது. நகர சபைக்கு இரட்டை மெம்பர் தொகுதியாக இருப்பதனால், இரண்டு பங்கு வோட்டர்கள் இருக்கிறார்கள் என்பதாக இரண்டு பங்கு கார்டுகள் வழங்கிவிட்டார்கள். இரட்டை மெம்பர் தொகுதி என்பதனால் அங்கே வோட்டர்கள் இரண்டு பங்கு என்பதில்லை. சாதாரணத் தொகுதியில் இருப்பதைவிட நூறு, இருநூறு வோட்டர்கள் அதிகமாக இருக்கலாம். நாங்கள் அச்சடித்திருந்த கார்டுகளை டி.எஸ்.ஓ. வாங்கி வரச் சொன்னதாக வாங்கிப்போய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு கார்டு, மூன்று கார்டுகள் என்று வழங்கிவிட்டார்கள். அதன் காரணமாக ஒரு குழப்பமே ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு டி.எஸ்.ஓ. விடம் போய் விசாரித்து—டி.எஸ்.ஓ. கையெழுத்துப்போட்டுள்ள கார்டுகள்தான் செல்லும் என்று உத்தரவு போட்டு, அவர் கையெழுத்துப் போடாமல் ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்த மூன்று கார்டு நான்கு கார்டு ஆகியவைகளை வாங்கிக் கிழித்தெறிந்தோம். இப்போதுதான் நிலைமை சீர்திருந்தி வருகிறது. எதிர்க் கட்சியினர் நகரசபைகளில் சென்று—குடும்பக் கார்டுகளை வாங்கி டி.எஸ்.ஓ. கிழித்தெறிகிறார் என்பதாக அவர் தவறு செய்துவிட்டதைப்போல, அங்கேயும் பேசி குழப்பத்தை உண்டு பண்ணி வருகிறார்கள். ஐந்து பேர்களுக்குக் குறைந்திருந்தால் ஒரு லிட்டர், ஐந்து பேர்களுக்கு மேல் இருந்தால் 2 லிட்டர் என்பதாகத்தான் அங்கே அரிசி வழங்கப்பட்டு வருகிறதே தவிர, சராசரியாக எல்லோருக்கும் ஒரு லிட்டர் தான் என்ற அடிப்படையில் வழங்கப்படவில்லை. எங்கள் பகுதி கிராமங்களிலும் ஓரளவு அரிசி கிடைக்கும்படியாகச் செய்து வருகிறோம். இப்போது காவேரியில் தண்ணீர் வந்துவிட்டது. விவசாய வேலைகளும் தொடங்கிவிட்டன. ஆகவே நல்ல மிராசுதார்கள் கூலிக்கு நெல்லையே கொடுக்கவும் ஆரம்பித்துவிடுவார்கள். முன்பு இருந்த பரபரப்பு அடங்கி, இப்போதே அரிசி விற்பனை எல்லாக் கடைகளிலும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. ஏழெட்டு மூட்டைகள் செலவாகிக் கொண்டிருந்த கடைகளில், மூன்று நான்கு மூட்டைகளுக்கு இறங்கியிருக்கிறது. இன்னும் வருங்காலத்திலும் இதுபோன்ற சங்கடங்கள் வருவதற்கில்லை. மழை, போக்குவரத்து சரியாக இருந்து, நெல்விளைவும் நன்றாக அமைந்து அறுவடையும் வந்துவிட்டால், மறுபடியும் தஞ்சாவூர் ஜில்லாவில், இந்தத் தொந்தரவு உண்டாகாத நிலைமை ஏற்படும் என்று நினைக்கிறேன். சர்க்கார் கூட ஏ.டி.டி. 27 ரக நெல்லையே உபயோகிக்கச் சொல்லி வருகிறார்கள். தண்ணீர் இப்போதுதான் வந்திருக்கிறது. கிணறு இருந்து பம்பு செட்டு போட்டு, முன்கூட்டியே நாற்றுவிட்டவர்கள் வேண்டுமானால், அதைச் சாகுபடி செய்துவிடலாம். ஓரளவு ஐப்பசி 15 தேதிக்குள்



6th August 1966] *[திரு. கோ. நாராயணசாமி நாயுடு]*

அறுவடை செய்யக்கூடிய நிலைமை இருந்தால்தான், அறுத்த நெல் வீட்டுக்கு வந்துசேரும். அதற்குப் பிறகு மழை ஆரம்பித்துவிடும். போக்குவரத்து பாதிக்கப்பட்டுவிடும். அறுவடை சமயத்தில் ஒரு தூற்றல் போட்டால் கூடக் குறுவை நெல் பாதிக்கப்பட்டுவிடும். ஆகவேதான் ஏ.டி.டி. 27-ஐ விட இன்னும் குறைவான காலத்தில் அறுவடை செய்யக்கூடிய தூயமல்லி, கல்சர் போன்ற ரக விதைகளை—இவ்வாண்டு காலம் தாழ்த்தி காவேரியில் தண்ணீர் வந்திருப்பதனால், கொஞ்சம் வெள்ளாமை குறைவாக இருந்தாலும் பாவாயில்லை என்பதாக—எங்களைச் சேர்ந்தவர்களைச் சாகுபடி செய்யச் சொல்லியிருக்கிறோம். காரணம், மழைக்கு முன் அறுவடை ஆகிவிடவேண்டும்.

அடுத்து, எங்கள் பகுதியில் நிலத்திலிருந்து விவசாயிகளை வெளியேற்றக் கூடாது என்பதற்குப் பல சட்டங்கள் வந்திருக்கின்றன. விவசாயிகளைப் பழைய பாக்கிக்காக நிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டாம் என்றே சட்டம் வந்திருக்கிறது. ஆனால் இந்தச் சட்டங்கள் எதுவும் திருவிழுந்தூர் படி அளக்கும் பெருமாள் தேவாலயத்திற்குச் சொந்தமான நிலங்களுக்குச் செல்லாது போல் இருக்கிறது. அந்தப் பொருமாள் உலகுக்கு எல்லாம் படி அளக்கிறவர் தாம்தான் என்பதை உலகுக்கு அறிவிப்பவரைப்போல தலையில் படியை வைத்துக்கொண்டே படுத்திருக்கிறார். உலகத்தினரின் பட்டினி, பசியை தாம் நீக்கி அவர்களை வாழவைக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக அவர் படியைத் தலையில் வைத்துப் படுத்திருந்தாலும், அந்தத் தேவஸ்தானத்து நிலங்களைச் சாகுபடி செய்து வருகிறவர்களுக்குப் படி அளக்கவில்லை. பாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். யார் யார் செல்வாக்கானவர்களோ, முனிசிபாலிடி கவுன்சில் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்களை உள்ளே புகுத்திவிட்டு 40 ஹரிஜனங்களை நிலத்தில் இருந்து அப்புறப்படுத்தி இருக்கிறார்கள். இதை நான் பல தடவைகள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதை மந்திரி அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது நிலம் கொடுக்கப்பட்டிருக்கின்ற 11-30
அவ்வளவு பேரும் நிலத்தை ஏற்கனவே பார்க்காதவர்கள்தான். a.m.
ஏதோ கொஞ்சம் நிலம் அவர்கள் தாயார் பேரிலோ அல்லது தகப்பனார் பேரிலோ வைத்திருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு இப்பொழுது அவர்கள் இதை சுவாதீனம் செய்துவிட வேண்டுமென்று பகீரத பிரயத்தனம் செய்துகொண்டிருக்கின்றார்கள். இதுவரை அங்கே யாரும் சென்று உழ முடியாதபடி தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பழைய விவசாயிகளிடமிருந்து நிலத்தை வாங்கி புது விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பது அல்ல நம்முடைய திட்டம். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நேற்று ஒரு செய்தி சொன்னார்கள். கோயம்புத்தூரில் மில்காரர்கள் மில்லை மூடிவிட்டதன் காரணமாகச் சர்க்காருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த மில்லிற்குக் கடன் கொடுத்து அந்த மில்லை மறுபடியும் இயங்கச் செய்திருக்

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [6th August 1966

கிறார்கள். இதேமாதிரி, இந்தக் கோயில்களுக்கும் ஏன் செய்யக் கூடாது? பாரம்பரியமாக விவசாயம் செய்துகொண்டு இருக்கின்றவர்களுடைய கடனை ஏற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக அவர்கள் கைக்கு எது எது வருகிறதோ, அதைப் பெற்றுக்கொண்டு அல்லது ஜப்தி செய்வதன் மூலமோ, அந்த பாக்கியை வசூல் செய்து கொள்ளலாம் என்ற முறையில் இரண்டு வழிகளிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம். இதுவரை அங்கே விவசாயம் செய்துவந்தவர்களுக்கு நிலம் இல்லாமல் போவதைத் தடுக்க வேண்டும். ஆயிரம் ஆயிரமாக அந்த விவசாயிகள் அந்தக் கோவிலுக்குச் சம்பாதித்துக் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கிற டிரஸ்டிகள் எல்லாம் ஏதோ வில்லுவண்டியில் போவார்கள் வருவார்கள் அவ்வளவுதான். நான் இதைப்பற்றி முன்பேயே சொல்லியிருக்கிறேன். அரச மரத்தடியில் இருக்கின்ற பிள்ளையார் கோவிலுக்கு டிரஸ்டியாக யாரும் வரமாட்டார்கள். சொத்தில்லாத கோயில்களுக்கு டிரஸ்டிகளாக யாரும் வரமாட்டார்கள். ஆனால் சொத்துள்ள கோயில்களாக இருந்தால், அந்தக் கோயில்களுக்கு டிரஸ்டிகளாக வருவதற்காக பரம பக்தர்போல் பேசி, விபூதி பூசிக்கொண்டு டிரஸ்டிகளாக வந்துவிடுவார்கள். எத்தனையோ கோயில்கள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் இப்படியில்லை. இந்தக் கோயிலில் மாத்திரம்தான் இப்படி நேர்ந்திருக்கிறது. குழிக்கு மூன்று ரூபாய் விதம் பெற்றுக்கொண்டு அந்த பள்ளிகொண்ட பெருமாள், ரங்கநாதசாமி கோயில் நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த நிலத்தையே பார்க்காதவர்கள், அந்த நிலம் அப்படிப்பட்டவர்களுக்கு யாருக்கோ ஒருவருக்கு, சாயபுக்கோ, ஜைன மதத்தைச் சேர்ந்தவருக்கோ கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன இது, அவர்களுக்கு மாத்திரம் இந்தக் கடவுள் நிலத்தைத் திடீரென்று எப்படிக் கொடுக்கிறார். அவர்களின் மேல் இந்தக் கடவுளுக்கு எப்படி அவ்வளவு அக்கறை வந்தது என்று பார்த்தால், இடையிலே இருக்கின்ற இந்த டிரஸ்டிகள் குழிக்கு மூன்று ரூபாய் பெற்றுக் கொண்டு, அதிலே ஒரு ரூபாயை பழைய கடனைத் தீர்ப்பதற்குக் கொடுப்பதுபோல் சொல்லி, இடையிலே ஒரு கார்டியன்போல் இருந்து நிலத்தைக் கொடுக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இப்படி பரம்பரையாக அங்கே விவசாயம் செய்து கொடுத்தவர்களுக்கு, பள்ளிகொண்ட பெருமாள் ரங்கநாதசாமிக்கு கோபுரம் கட்டியவர்கள், வாகனம் செய்தவர்கள், வர்ணம் பூசியவர்கள் இவர்களுக்கு எல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. ஆனால் நிலத்தையே பார்க்காதவர்கள், அந்தக் கோயிலைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குப் பயன்படுத்திக்கொண்டுவருகின்ற நிலைமை மாறவேண்டுமென்பதையும், அதை உடனடியாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீடு, பட்ஜெட் ஆரம்பித்து நான்கு மாதங்களுக்குள்ளாகவே கொண்டுவரப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று வருஷங்களாகவே பார்த்தால் ஜூலை மாதத்திலே துணை மதிப்பீடு,



6th August 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கொடுக்கக் கூடிய கோரிக்கைகள் வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிப் பொறுப்பை எடுத்துக்கொண்டதற்குப் பிறகு இப்படி வருவதற்கு காரணம் அவருடைய சுறுசுறுப்பு ஆகவும் இருக்கலாம், அல்லது அந்த நிதி இலாகாவினுடைய சுறுசுறுப்பாகவும் இருக்கலாம். நான்கு மாதங்களுக்குள்ளாகவே என்ன இனங்களில் என்ன என்ன அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது, எந்த எந்த இனங்களில் மிச்சம் செய்யலாம் என்று, அதை நான் தவறாகச் சொல்லவில்லை, குறையாகச் சொல்லவில்லை, அவ்வளவு சீக்கிரமாக இவ்வளவு அதிகமானத் தொகைக்கு துணை மதிப்பீடு வருவதால் அதற்கு அதிகமான நேரம் ஒதுக்கி விவாதிக்கவேண்டும். இன்னும் சம்பிரதாயங்களிலே மாறுதல்கள் ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முன்பு 40 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் இருக்கிற காலத்திலே 2 அல்லது 3 கோடி ரூபாய்க்குத்தான் ஆகஸ்டு அல்லது செப்டம்பரில் துணை மதிப்பீடு வரும். ஆனால் இப்பொழுது 160 கோடி ரூபாய்க்கும் அதிகமாக பட்ஜெட் இருக்கிற காலத்தில் 17 அல்லது 20 கோடி ரூபாய்க்கு ஆகஸ்டு மாதத்திலே துணை மதிப்பீடு வரக்கூடிய காரணத்தாலே, விவாதத்திற்கு அதிகமான நேரம் ஒதுக்க வேண்டுமென்றும், சம்பிரதாயங்களில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் இருக்கக்கூடிய கோரிக்கைகளில் முக்கியமானவை பற்றி, சில கொள்கை சம்பந்தமானவைபற்றிச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் கேட்டிருக்கக்கூடியது விளம்பர இலாகா, பயண இலாகா இவற்றிற்கு. இவற்றில் எல்லாம் ஏன் அதிகமான உத்தியோகங்களைச் சிருஷ்டித்து இருக்கிறார்கள்? நேற்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றி விவாதித்த பொழுதுகூட, அரசியல் காரணங்களுக்காக உத்தியோகங்களில் சலுகைக் காட்டப்பட்டது என்று குறை சொல்லப்பட்டது. இப்பொழுது கோரிக்கைகளில் அதிகமான உத்தியோகங்கள் ஏற்படுத்தி அதிகமான உத்தியோகஸ்தர்கள் நியமித்திருப்பதற்குக் காரணம் என்ன? மற்ற எல்லாத் துறைகளிலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று சொல்லி, 15 சத விகிதம் சிக்கனம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டு, மற்றத் துறைகளிலே உள்ள கடைநிலை ஊழியர்களையும், மற்றவர்களையும் குறைக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதேபோல் அதிகாரிகள் சுற்றுப்பயணங்களைக் குறைக்கவேண்டும், கார்கள் உபயோகப்படுத்துவதைக் குறைக்க வேண்டும், ஜீப்கள், உபயோகப்படுவதைக் குறைக்க வேண்டும் என்று எல்லாம் சொல்லி, அந்த முறைகள் கையாளப்படுகின்ற காலத்தில், பிரதம மந்திரி பெரிய காரை உபயோகித்தால் செலவாகும், ஆகையால் சிறிய காரை உபயோகித்துக்கொள்ளலாம் என்று சொல்லி சிறிய காரை உபயோகித்துக்கொண்டு மற்றவர்கள் எல்லாம் பின்பற்றவேண்டுமென்ற முறையில் உதாரணமாக இருக்கக்கூடிய காலத்தில், இந்த உத்தியோகங்களை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த இலாகாவினால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? இது தோற்றுவிக்கப்பட்டு, வேறு வகையிலும் இது இயங்குகின்ற

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [6th August 1966

முறையிலும் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது? இதற்காகத்தனியாகக்கூட விவாதம் நடத்தினால் அது பயனளிக்கும். ஆகவே இந்த இலாகா பயன்படுத்தப்படுகிற முறையைப் பார்த்தாலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற நபர்களைப் பார்த்தாலும் சரி, இந்த இலாகாவினால் என்ன பலன் ஏற்படுகின்றது என்பதைப்பற்றியும், இது அவசியம் இல்லை என்பதைப்பற்றியும் சொல்லி இதன்மேல் நம்பிக்கையில்லை என்று கொண்டுவரலாம், ஆனால் மெஜாரிட்டி இருப்பதால், அவர்கள் எப்படியும் நிறைவேற்றிக்கொள்வார்கள். அப்படி உத்தியோகங்கள் சிருஷ்டிக்கப்பட்டாலும், இந்த இலாகாவில் உள்ளவர்களுக்கு ப்ரமோஷன் கொடுத்தால், அவர்களாவது பயன் பெறுவார்கள். அல்லது புதிதாக நியமனம் செய்ய வேண்டுமென்றால் சர்வீஸ் கமிஷன் மூலம் எடுத்திருக்கலாம். ப்ரமோஷன் கொடுக்கப் போவது இல்லையென்றால், நேரடியாக எடுக்க வேண்டுமென்றால், சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுக்கவேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். அது சம்பள உயர்வா அல்லது எழுத்து மூலம் சம்பள உயர்வா என்று தெரியவில்லை. ஏனென்றால் அது காகிதத்தில்தான் இருக்குமென்று நினைக்கிறேன். சம்பளத்தின் ஆரம்பம் 65-லிருந்து 70-ஆகவும், 85-லிருந்து 90 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சர்வீஸிலே இருக்கக்கூடியவர்கள் பயன்பெற வேண்டுமானால், இப்பொழுது அவர்கள் வாங்குகின்ற சம்பளத்திற்கு மேல் ஏதாவது உயர்த்திக்கொடுத்தால் தான், அது அவர்களுக்குப் பயன் அளிக்கும். இப்பொழுது உயர்த்தியிருப்பது இனிமேல் புதிதாக உத்தியோகத்தில் சேரக்கூடியவர்களுக்குத்தான் பயனுள்ளதாக இருக்கும். ஐந்து ரூபாய் கூடுதலாக இருக்கும். ஹெட்கான்ஸ்டபிளாக ப்ரமோஷன் பெற்றவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, சம்பளத்தை உயர்த்துவது என்றால், எல்லோருக்கும் பயனிருக்கக்கூடிய வகையிலே உயர்த்தியிருக்கவேண்டும். அதிலும் இவர்களுக்கு மட்டும் ஏன் கொடுக்கவேண்டும்? போலீஸ்காரர்களுக்குக் கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணையில்லை. அவர்களைப்போல் இருக்கக்கூடிய ஜெயில் வார்டர், இன்னும் கடைநிலை ஊழியர்கள் இருக்கிறார்கள், இவர்களுக்கு எல்லாம் உயர்த்திக் கொடுத்திருக்க வேண்டும் அல்லவா? ஒரு கிரேடில் உள்ளவர்கள் எல்லோருக்கும் சேர்த்துத்தான் உயர்த்தியிருக்க வேண்டும். 65-1-70 என்ற கிரேடில் உள்ளவர்களுக்கு எல்லாம் 70-1-75 என்றுதான் உயர்த்தியிருக்கவேண்டும். இன்னும் ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு 85-2-105 என்று இருந்ததை 90-2-110 என்று உயர்த்தியிருக்கிறார்கள். ஏன் அவர்களுக்கு மட்டும் உயர்த்தவேண்டும்? மற்றவர்களுக்கு ஏன் உயர்த்தப்படவில்லை? இப்படிப் போலீஸ்காரர்களுக்கு மட்டும் உயர்த்தியிருப்பதால், அது போலீஸ்காரர்களையும், மற்றவர்களையும் பாகுபாடு செய்வதற்குத்தான் பயன்படுமே தவிர, ஏதோ போலீஸ்காரர்களுடைய கஷ்டத்தைப்பார்த்து அவர்களுக்குக் கொடுத்த சலுகையாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



6th August 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

போலீஸ்காரர்கள் அதிகமாகத் தாக்குவதற்கும், துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள் என்பதற்கும் அல்லது எங்களையெல்லாம் சிறையில் வைத்ததற்காகவும் நன்றியாகத்தான் இதை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ் ஆட்சி மொழிக் கமிஷனுக்காக நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள். தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை இயற்றி பத்து வருஷ காலம் ஆகிறது. மத்திய சர்வீஸ் கமிஷனில் செய்யக்கூடியது ஒரு புறம் இருக்கட்டும். நம்முடைய சட்ட சபையில் மசோதா வந்தவுடனே, அதைத் தமிழில் மொழி பெயர்த்து அனுப்புவதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது? இன்னும் ஆங்கிலத்திலேதான் வர இருக்கிறது. தற்போது ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்கள் திருத்தங்கள் கொடுக்கவோ, தெளிவாகப் பேசவோ வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. மசோதாக்கள் மீது விவாதம் நடக்கிற சமயத்தில் ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்களுக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், முழு நேரத்தையும் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் புரிந்து கொண்டு தமிழிலே பேசிவிட முடிகிறது. ஆகவே, உடனுக்குடன் மசோதாக்களை தமிழில் மொழி பெயர்த்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைச் செய்யவேண்டுமென்றால், அதற்கான சொற்களைத் தயாரிக்கவேண்டும். ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள இந்த ஆட்சி மொழிச் சட்டத்தின்மீது அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மிகவும் மோசமாக இருக்கிறது. இப்போது கடிதங்கள் எழுதினால் தமிழில் பதில் வருகிறது; ஆனால் விதிகள் எல்லாம் ஆங்கிலத்திலேதான் இருக்கிறது. இதில் எல்லாம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த வேலை தற்போது மிகவும் மந்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் இந்தத் துணை மானியத்திலே ஒதுக்கீடு கேட்டிருக்கும் விஷயங்களைப் பற்றி மட்டுந்தான் பேசுகிறேன். விவசாயத் துறை ஒன்று முக்கியமானது. இதிலே பூச்சி மருந்துக்கும், உர விநியோகத்திற்கும் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தப் பூச்சி மருந்துகளை வாங்குவதில் இருக்கக்கூடிய ஒரு சம்பவம் என்னுடைய கவனத்திற்கு வந்தது. அதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். 1965-66-க்கு ஒரு பூச்சிக் கொல்லி மருந்து பேயர்ஸ் கம்பெனியிடமிருந்து வாங்க முடிவு செய்யப்பட்டது. ஒரு லட்சம் லிட்டர் வாங்க வேண்டும். அந்த பேயர்ஸ் கம்பெனி ஒரு லிட்டருக்கு ரூ. 29.80 கொட்டேஷன் கொடுத்த பேயர்ஸ் கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு மொத்தம் ரூ. 29,80,000 ரூபாய் செலவாகும். ஆனால் அதே மருந்தை மற்றக் கம்பெனிகள் லிட்டருக்கு ரூ. 26.40-க்குக் கொடுக்க முன் வந்திருக்கின்றனர். கிட்டத்தட்ட ஒரு லிட்டருக்கு ரூ. 3.40 குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். குறைவாகக் கொட்டேஷன் கொடுத்தவர்களுக்கு ஆர்டர் கொடுக்காமல், பேயர்ஸ் கம்பெனிக்குக் கொடுத்ததன் காரணமாக மொத்தத்தில் ரூ. 3,40,000 அதிகச்

*[திரு. மீ. கலியாணசுந்தரம்]* [6th August 1966

செலவாகும். இந்த மருந்து சப்சிடியாக பஞ்சாயத்து மூலம் கொடுக்கப்படக் கூடியது. இந்தப் பூச்சிக் கொல்லி மருந்தின் பெயரைச் சுருக்கமாக 'பாரமார்' என்று சொல்வார்கள். இவ்வளவு அதிக விலை கொடுத்து அந்தக் கம்பெனியிடமிருந்து வாங்குவதற்கு என்ன காரணம்? என்பதை விசாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உர வகைகளை விநியோகம் செய்வதைப் பொறுத்தவரை இரண்டு மூன்று சாம்பிள்களை அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கிறேன். (The hon. Member then placed some packets before the Minister.) அம்மோனியம் பாஸ்பேட்டோடு மண்ணைக் கலந்து கூட விற்கிறார்கள். எந்த இடத்தில் என்பதைப் பற்றியெல்லாம் அச்சடித்துக் கொடுத்திருப்பதை விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் ரகசியமாக வைத்து விசாரிக்கவேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் கலப்படம் செய்யப்பட்டு ஆந்திர ராஜ்யத்திற்கும், கேரள ராஜ்யத்திற்கும் போகிறது. இவ்வாறு கலப்படம் செய்பவர்களுக்கு எதற்காக அனுமதி கொடுக்கவேண்டும்? முன்பு பெரிய கம்பெனிகள் இந்த உரத்தைக் கொடுத்து வந்தார்கள். இப்போது ஒவ்வொருவரும் ஒரு லேபிளைப் போட்டுக் கொண்டு இந்த மாதிரி உரத்தில் கலப்படம் செய்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I would like to know the position regarding the exhibition of articles within the Assembly.

SRI M. KALYANASUNDARAM : I am presenting it.

MR. SPEAKER : The hon. Member can present it to the Minister in his Chamber. Suppose some Member brings in a buffalo or a cow for exhibition!

SRI M. KALYANASUNDARAM : Suppose a person has been tortured by the Police. If that subject is under discussion, I think it is perfectly legitimate to exhibit him.

MR. SPEAKER : If it is harmless, it is all right. I think in the Lok Sabha also. . . .

SRI M. KALYANASUNDARAM : The Hon. Speaker can trust us. We are not such irresponsible members as to exhibit reptiles, etc.

MR. SPEAKER : The hon. Member cannot guarantee that all are responsible. I am referring only to the rule. The rule is that nobody should exhibit any article unless it is previously brought to the notice of the Speaker and he is satisfied that there is no harm in exhibiting it.

SRI M. KALYANASUNDARAM : In future, I shall take the permission of the Speaker.

MR. SPEAKER : That is right.



6th August 1966]

SRI M. KALYANASUNDARAM : Now, I take it that I have the Speaker's permission.

MR. SPEAKER : I do not know what is inside.

SRI M. KALYANASUNDARAM : The packets contain only samples of mixture; they are harmless.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்தைப் புலப்படுத்தி அதற்குரிய திருத்தங்களை, ஒழுங்குகளை, செய்ய முன்வரவேண்டுமென்று உங்கள் மூலமாக ஆளும் கணத்தவரை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதிலே பல துறைகள் இருக்கின்றன. நேரமின்மையால் சில இன்றியமையாத் துறைகளைப் பற்றி மட்டும் தொட்டுக்காட்டி முடிக்கிறேன்.

கடன் செலவுகள் என்ற தலைப்பின் கீழ் 84 லட்சம் ரூபாய்க்குக் கோரிக்கைக் கோரப்பட்டிருக்கிறது. காரணம், வட்டிக்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த வட்டிக்காக என்று மீண்டும் கோரிக்கைகளைப் புரட்டிப் பார்ப்போமானால், இறுதியிலே அது வருகிறது. எண்பத்தினாலு லட்சம் ரூபாய் எந்த வட்டிக்காக என்று சொல்லும்போது, 15 கோடி ரூபாய் கடன் ஸ்டேட் பாங்கில் இருந்து வாங்குவதற்கு 7½ சதமானம் விதம் மூன்று மாதங்களுக்கு ஒரு தரமாகக் கொடுக்கப்பட வேண்டியதாக இருக்கப் போகிற வட்டிக்காக என்று கூறப்பட்டிருக்கிறது. இறுதிப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தோமானால் 13 கோடி ரூபாய் கடன் இந்த ஆண்டிலே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியிருப்பதற்காக வாங்கப்படுகிற கடன் என்று இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது 13 கோடி ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு, இப்போதும் பின்னும் வரக்கூடிய வட்டிகளுக்கும் சேர்த்து 15 கோடி ரூபாய் ஸ்டேட் பாங்கில் இருந்து வாங்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு வாங்கிய முறையிலும் வட்டி விகிதம் 7½ சதமாக இருக்கிறது. அந்த 7½ சதத்தையும் மூன்று மாதத்திற்கு ஒருதரமாகக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. பெரும்பாலும் பாங்குகளானாலும் சரி, 'மணி லெண்டர்'-களானாலும் சரி, ஆறு மாதத்திற்கு ஒரு தரந்தான் வட்டி கட்ட வேண்டுமென்று காணப்படும். ஆகவே, இந்த நிலை ஆட்சிக்குப் பொருந்துமா, நம்முடைய சக்திக்குக் கட்டுமா என்பதையும் சிந்திக்க வேண்டும். இந்த முறை தவறு. இந்த முறை நீடிக்கப்படாது. இப்போது மெஜாரிடியில் தீர்மானம் செய்து விட்டாலும், இந்த மாதிரியான நிலைமை மீண்டும் தொடருவதற்கான இடம் இல்லாத நிலைமையில் ஆட்சி செயல்பட வேண்டும்; கணிக்க வேண்டும்; அறுக வேண்டும் என்று கூறி இந்த விஷயத்தை இத்தோடு நிறுத்துகிறேன்.

இனி செய்தி விளம்பரத் துறை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக ரூ. 48,000 கோரிக்கை காணப்படுகிறது. அதிகாரிகளுடைய சம்பள வகைக்காக 20,400 ரூபாய். பணியாளர்களுக்கான சம்பளம் 11,200 ரூபாய்; அவர்களுக்குரிய படி 12,300; சில்லரை செலவுகள் 4,000 ரூபாய். திரும்பத் திரும்ப ஆட்சி

[திரு. சா. கணேசன்] [6th August 1966

அதிகாரிகளின், உத்தியோகஸ்தர்களின் தொகையை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே போகும் நிலையே அன்றி வேறு ஒன்றையும் காண முடியவில்லை. இப்படி ஆட்சி, அதிகாரிகளின் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டே போகுமானால், மனிதர்களின் சுதந்திரமும், அவர்களுடைய வாழ்வும் முழுக்க முழுக்கப் பாதிக்கப்படும். இயல்பான, நெறியான வாழ்வு பாதிக்கப்படும் என்று சொல்லிவிட்டு மேலே செல்லுகிறேன்.

இனி, கல்விக்காக ரூ. 11,45,800 துணை மான்யக் கோரிக்கையாகக் கோரப்பட்டிருக்கிறது. கல்விக்காகச் செலவழிப்பதுபற்றி யாரும் குறை சொல்லவில்லை. ஆனால் அப்படிச் செலவழிப்பதைச் செம்மையாகச் செலவழிக்கவேண்டும். எதற்காக நாம் கொடுக்கிறோமோ, அது அதற்காகவே. போய்ச் சேரவேண்டும். இதை மனத்திலே கொள்ளவேண்டும். அங்கும் இங்குமாகச் சிறு சிறு ஊழல்கள் எங்கும் இருக்கும். அது இயல்பு தான் என்பதை நானும் உணருகிறேன். அதைப் பெரிதுபடுத்தவும் நான் விரும்பவில்லை. அதற்காக ஆட்சியில் இருப்பவர்கள் சிறு சிறு ஊழல்கள் இருந்தால் பரவாயில்லை என்று தட்டிக் கழித்துக் கொண்டு போவது, கண்காணிக்காமல் போவது முறையும் அல்ல, நெறியும் அல்ல என்பதைப் புலப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். நேற்று முன் தினங்கள் எல்லாம் பேசிய அங்கத்தினர்கள் பல துறைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள், அவற்றில் ஏற்பட்ட குறைகள் அல்லது தவறுகளைப் பற்றியெல்லாம். இதிலிருந்து பல தவறுகள் நடந்திருப்பதை நாம் நன்குணருகிறோம். எனவே ஆள்வோர் தலையாய கடமை "நாம் சந்தேகத்திற்கு இடம் இல்லாதவர்களாக வாழ்கிறோம் அதற்கு வகை செய்திருக்கிறோம்" என்று மக்கள் உணரும்படிச் செய்யவேண்டும். காந்தி அடிகள் அடிக்கடி கூறுவார்கள், "யோக்கியனாக இருப்பதுமட்டும் போதாது, யோக்கியனாக இருப்பதை மக்கள் நம்பும்படி பகிரங்கமாகவும் வாழவேண்டு" மென்று சொல்வார்கள். அந்த நெறியை ஆட்சி கடைபிடிக்கவேண்டும். மெடிக்கல் காலேஜ் அல்லது என்ஜினியரிங் காலேஜ் போன்று இன்ன கல்விக் கூடங்களில் சேரவேண்டி ஏராளமான விண்ணப்பங்கள் வந்து அவற்றுள் ஒரு பகுதியையே தேர்ந்தெடுக்கக்கூடிய நிர்ப்பந்தமுள்ள இடங்களில் எல்லாம் வந்த விண்ணப்பதாரரின் பெயர், அவருக்குள்ள சலுகை, அவர் ஜாதி அல்லது இனம் இவற்றையெல்லாம் குறிப்பிட்டு ஜில்லாவாரியாக அந்த லிஸ்டை அடித்து அவர்களில் எவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் காட்டி, அந்தந்த ஜில்லா அலுவலகத்தில், அதோடு அந்தந்த யூனிவர்ஸிட்டி ஏரியாவில், அந்த லிஸ்டை தொங்கப் போட்டு விட்டால், தவறு செய்யவும் யாரும் முன்வரமாட்டார்கள். தவறு செய்யவும் வழியிராது. இதை நான் ஊகத்தில் பேசவில்லை. பத்தாண்டுகளுக்கு முன்வரை காரைக்குடி என்ஜினியரிங் காலேஜ் போன்ற கல்லூரிகளில் இதே முறையை அனுஷ்டித்தோம். தொகை உதவியவர்கள், நன்கொடை உதவியவர்கள், அதற்காக உழைக்கிறவர்கள் இவர்களுக்காக 20 சத விகிதம் ஒதுக்கி வைத்துவிட்டு 80 சத விகிதம் மெரிட் என்கிறோமே, தகுதி, தகுதிக்காக



6th August 1966] [திரு. சா. கணேசன்]

மட்டுமே ஒதுக்கி அந்த 80 சத விகிதம் வந்த அப்ளிகேஷன் லிஸ்ட் முழுவதையும் மதிப்பெண் வரிசையில் போட்டு அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களின் கீழ் ஒரு சிவப்புக் கோடு போட்டு இதற்கு மேல் உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், அதற்குக் கீழே உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று குறிப்பிடுவோம். இந்த மாதிரிச் செய்வது ஆட்சியின் நேர்மைக்கும், ஒழுங்கிற்கும் செவ்விய வழியாக இருக்குமென்பதைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும் முன்பணங்களும்' என்ற தலைப்பு இருக்கிறது. இதில் முன்பணம் என்பது எனக்குப் பிடிக்கவில்லை. அச்சாரம் என்பதுதான் சரி. அட்வான்ஸ் என்றால் பணமாக மட்டும் கொடுப்பதில்லை. தானியம் போன்று வேறு எதுவும் முன்னதாகவே கொடுக்கலாம். நன்றியையும் கூடத்தான் 'அட்வான்ஸ்' ஆகக் கொடுக்கிறோம். அதன் கீழ் ரூ. 3,94,06,000 கோரப்பட்டிருக்கிறது. அதில் குடியானவர்களுக்குக் கொடுக்கப்படுகிற அச்சாரம் 50 லட்சம் ரூபாய். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் குடியானவர்களுக்கு அச்சாரம் கொடுக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை இரண்டு கோடி ரூபாய். இதை வரவேற்கிறேன். இந்தத் தொகையைக் கணக்கில் கண்டு மட்டும் நாம் திருப்தி அடைந்துவிட முடியாது. விவசாயிகள், குடியானவர்கள் இந்தத் தொகையைப் பெறுவதற்கு அவர்கள் படுகிற பாடும், அதற்குச் செலவழிகிற செலவும், இறுதியில் அவர்கள் கையில் என்ன வந்து சேர்கிறது என்பதையும் கவனிக்கிறபோது மிக மிக வருத்தமாக இருக்கிறது. 'தோட்டத்திற் பாதி கிணறு' என்ற ஒரு பழமொழி உண்டு. அதே மாதிரி கடன் வாங்குகிறபோது கடன் வாங்குவதற்காக அவர்கள் இழக்கிற தொகை பல்வேறு துறைகளில், பல்வேறு நிலைகளில், பல்வேறு முறைகளில் முறையற்ற நெறியில் போகிற பணம் கிட்டத்தட்ட பாதியாவது இருக்கும் என்பதைப் பல தொகுதி அங்கத்தினர்கள் ஆங்காங்கு நிகழ்கிற நிகழ்ச்சிகளிலிருந்து மனப்பூர்வமாக ஒப்புக் கொள்வார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அதோடு வரியை விவசாயிகள் மீது எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவிற்கு சுமத்தி விட்டு, அவர்களுக்குக் கடன் கொடுக்கிறோம் என்றால் அது வெறும் கண்துடைப்பு. உண்மையில் அவர்களுக்கு நாம் உதவி செய்கிறோம் என்றால் இந்த இரண்டு கோடி கடன் வேண்டாம். வரியை எடுத்துவிடுங்கள். உணவை உற்பத்தி செய்கிறவர்களுக்கு வரியே இல்லை என்று பெயர் அளவிற்கு பிடிபாடு இருக்கும் பொருட்டுத்தான் ஓரளவு வரி என்று போட்டால் உணவுப் பஞ்சம் அரை நிமிடத்தில் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

போலீசுக்கு ஊதியம் உயர்த்தியிருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை அவரும் மறுக்கவில்லை, நானும் மறுக்க இல்லை. எல்லா ஊழியர்களுக்கும் அது கிட்டப் பெறவேண்டும். அதே காலத்தில் அடிப்படை ஊழியனாக இருக்கிற விவசாயிக்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 100 ரூபாயாவது வருகிறதா என்பதைக் கண்காணிக்கவேண்டும். போலீசாருக்கு 100 அல்லது

120 ரூபாய் என்று கொடுப்பது நியாயம், அதை மறுக்கவில்லை. அதே நேரத்தில் உணவைத் தருகிற ஒப்பற்ற பாட்டாளி மகனாகிய விவசாயிக்கு மாதம் குறைந்த அளவு 80 ரூபாயாவது வருமானம் வரக் கூடிய நிலையை அமைக்க வழி வகுக்கவேண்டும்.

எலெக்ட்ரிசிட்டி பற்றிச் சொன்ன கருத்தில், கனம் முதல் அமைச்சர் அவர்கள் போக்குவரத்தின் இன்றியமையாமை பற்றிக் குறிப்பிட்டு அது அவசியம் என்று கருத்து தெரிவித்தார்கள். போக்குவரத்தை நிறுத்திவிடவேண்டுமென்று சொல்லவில்லை. எலெக்ட்ரிசிடி இருந்தால்தான் ரெயில் ஓடும் என்றில்லை. நிலக்கரியைக் கொண்டும் ஓட்டலாம். அப்படித்தான் இவ்வளவு வருடங்களாக ஓடிக்கொண்டு இருந்தது. (குறுக்கீடு) உணவை விட வண்டி ஓட்டுவது முக்கியமில்லை. ஆங்காங்கே உற்பத்தி செய்து அவனவன் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாம், கட்டை வண்டியில் போட்டுக் கொண்டு போகலாம். ரெயிலில்தான் போகவேண்டுமென்ற அவசியமில்லை. ரெயில் வண்டியை ஓட்டுவதற்குச் செலவழிக்கப்படுகிற கரண்டை பம்ப் செட்ஸ்க்காகக் கொடுத்து தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து பாசனத்தை அதிகப்படுத்தி அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முயற்சிப்பது தான் அரசாங்கத்தின் தலையாய கடமை என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். அதை மீண்டும் ஆளும் கணத்தவரின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுக்காகப் பலவகைக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. மேலும் மேலும் கடன் கூடிக்கொண்டே துறையில் ஆண்டு தோறும் மேலும் மேலும் அரசாங்கம் கடனாகவோ அல்லது பங்குத் தொகையாகவோ அல்லது உதவிவோ அல்லது பங்குத் தொகையாகவோ அல்லது உதவியாகவோ எந்தப் பெயரில் கொடுத்தாலும் கூடிக்கொண்டே போகிறது. அவை திரும்ப வருவதன் மூலம்தான் குறைய முடியும். ரைட் ஆஃப் செய்வதன்மூலம் குறைவது பற்றிப் பேசவில்லை. ஆனால், அப்படிக் காணப்படவில்லை. கூட்டுறவு நில அடைமான பாங்குக்கு இந்த ஆண்டு 5 லட்சம் ரூபாய் பங்குத் தொகை, மார்க்கட்டிங் சொசைட்டீஸ் இரண்டுக்கு 1½ லட்சம் ரூபாய், ஒரு சர்க்கரை ஆலைக்கு 2½ லட்சம் ரூபாய் என்று கொடுத்துக்கொண்டே போகிறோம். இதற்கு நேரடியாக சர்க்கார் வரியைக் கூட்ட வேண்டும்; அல்லது ஸ்டேட் பாங்கில் போய்க் கடன் வாங்க வேண்டும். சர்க்கார் கடன் வாங்கி இன்னொருவருக்குக் கடன் கொடுத்து அவர்களும் பொறுப்பில்லாதவர்களாக இருக்கிறார்கள். கூட்டுறவு சொஸைட்டி டைரக்டர்களுக்கு பொறுப்பில்லை, உரிமை இருக்கிறது. லாபம் வந்தால் அதை அனுபவிக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது, அதிகாரம் செய்ய உரிமை இருக்கிறது. நஷ்டம் வந்தால் அதைச் சரிக்கட்ட வேண்டும், அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்ற பொறுப்பு கோவாப்பரேஷன் முறையில் இருக்கிற டைரக்டர்களுக்குக் கிடையாது. இறுதியாக அது வரி கொடுப்பவர்களின் தலையில் வந்து விழுகிறது. அதாவது சர்க்காரின் பணம் நஷ்டமாகிறது.



ஆகவே இந்த மாதிரி நிலையில் முழுக்க முழுக்க கூட்டுறவு சொஸைட்டியில் டைரக்டர்களாக வருகிறவர்களுக்குப் பொறுப்பு உண்டு என்று விதி செய்யவேண்டும். தவறு நடந்தாலும் சரி, நஷ்டம் ஏற்பட்டாலும் சரி, அதிலே நிர்வாகம் செய்கிறவர்கள் அதற்குக் கட்டுப்படவேண்டும். இப்போது தண்டனையிலிருந்து பலர் தப்பித்துக் கொண்டு போகிறார்கள், சட்டம் அல்லது வக்கீலின் திறமை காரணமாக. அது போதாது. எந்த ஸ்டோரில் அல்லது சொஸைட்டியில் வருகிற நஷ்டமாக இருந்தாலும் சரி, வரவேண்டிய லாபம் இழக்கப்பட்டாலும் சரி, அதை ஏற்றுப் பகிர்ந்து நஷ்ட ஈட்டைக் கொடுக்க உரியவர்கள்தான் டைரக்டர்களாக வரலாம், பொறுப்பு உடையவர்கள்தான் உரிமை பெறலாம் என்ற நிலையை எல்லாம் நாம் உண்டாக்கவேண்டும். இந்த மாதிரியான கருத்துக்களை உங்கள் மூலம், சபாநாயகர் அவர்களே, கனம் ஆளும் கணத்தவர்களுக்குச் சமர்ப்பித்துக்கொண்டு, நேரமின்மையால் இதோடு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று வரையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது. அப்போது கனம் அங்கத்தினர்கள் சிலருக்கு அதில் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படாமல் போய் விட்டது. ஆகவே, இன்று அந்த வாய்ப்பு ஒரு சிலருக்குக் கிடைத்தது. அந்த வகையில்தான் சிலர் இந்த உபமான்யக் கோரிக்கையைப் பற்றிப் பேசும்போது—கனம் சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் எப்போதும் ஆவேசத்தோடு பேசுகிறவர்கள்—அவர்கள் ஆவேசத்தோடு மட்டுமல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுகிற மாதிரி நினைத்துக்கொண்டு போலீஸ் அட்டூழியங்கள், அது, இது என்றெல்லாம் பேசினார்கள். உபமான்யக் கோரிக்கைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

MR. SPEAKER : He is young.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர் இளைஞர். துடிப்புள்ள 12-00 noon.
வர்—அவர் சுதந்திராக் கட்சியில் இருந்தாலும் மிக விறுவிறுப்பாக இருக்கிறார். (குறுக்கீடு) கடன் வாங்குவதைப்பற்றி கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கனம் கல்யாணசுந்தரம் அவர்களும் சொன்னார்கள். இப்போதே இந்த உபமான்யத்தைக் கொண்டு வந்துவிட்டார்களே என்று. இதைப் பார்க்கின்றபோது, என்ன இது பெரிய அக்கிரமமாக இருக்கிறது, இப்போது தான் இந்த அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டு, அதிலும் 188 கோடிக்கு அனுமதி வாங்கிவிட்டு, இப்போது திரும்பவும் இந்த நான்கு மாதத்திற்குள்ளாக 21 கோடிக்கு மான்யங்களை கேட்கிறார்களே என்று சிலர் நினைக்கலாம். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. இதில் குறிப்பிட்டிருக்கும் கடன் என்ன என்பதைப் பற்றிப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். பதினைந்து கோடி கடன் என்றால் அதை நாம் ஸ்டேட் பாங்கில்தான் வாங்குகிறோம். ஸ்டேட் டிரேடிங் நடத்த வேண்டும் என்றால் பணம்

[திரு. எம். பக்தவத்சலம்] [6th August 1966

வேண்டும். அதற்குத்தான் பாங்கியிலிருந்து கடன் வாங்குகிறோம். இதன் மூலம் தான்யங்களைக் கொள்முதல் செய்கிறோம். கொள்முதல் செய்து தேவைப்படும்போது விநியோகம் செய்கிறோம். எந்த சமயத்தில் எந்த இடத்தில் விநியோகம் செய்யவேண்டுமோ அங்கு விநியோகம் செய்கிறோம். இதில் பீதி அடைய வேண்டிய அவசியமில்லை.

ஏதோ தஞ்சாவூரில் அரிசி இல்லை, நீலகிரியில் ஒரு வாரத்திற்குத் தான் போதுமான அரிசி இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். எங்கிருந்து இந்தக் கணக்குகளைக் கேட்டுச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இதைக் கவனித்துக் கொள்வதற்கு சிவில் சப்ளை இலாகா இருக்கிறது. அதற்கு வேண்டிய பொறுப்புக்கள் இருக்கின்றன. அதே போன்று இந்த அரசாங்கத்திற்கும் வேண்டிய பொறுப்பு இருக்கிறது. எங்கெங்கு எவ்வப்போது வேண்டும், எப்போது தேவைப்படும் என்பதைக் கவனித்துக்கொண்டு இருக்கிறோம். ஏதோ தஞ்சாவூருக்கு மட்டும் தான் கொடுக்கிறார்கள், நீலகிரிக்கு இல்லை என்றெல்லாம் சொல்வது சரியல்ல. இந்த சமயத்தில் எல்லோருக்கும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சிவில் சப்ளை இலாகாவினர் நன்றாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மறுபடியும் அறுவடை ஆகின்ற வரையிலும், கவனித்துக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் சில பயிர்கள் அறுவடையாகக் கூடும். இன்னும் 10, 15 நாட்களில் கூட அறுவடை ஆகலாம். செங்கற்பட்டு ஜில்லாவில் சில இடங்களில் ஏ.டி.டி. 27 நல்ல விளைச்சல் கண்டிருக்கிறது. நான் நேற்றும் சொன்னேன். வேறு சில குறுகிய காலப் பயிர்களும் சீக்கிரமாகவே அறுவடையாகும். ஆகவே இதைப்பற்றி யாரும் பீதி அடைய வேண்டிய அவசியமில்லை, யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொதுவாக தான்யங்களைக் கொள்முதல் செய்யவேண்டியிருக்கிறது. கொள் முதல் செய்து பின்னால் விற்கிறோம். கொள் முதல் செய்கிறோம் என்றால், விவசாயிகளிடம் இருக்கின்ற சர்ப்ளஸ்ஸைத் தான் கொள் முதல் செய்கிறோம். ஏதோ வீடுகளில் புகுந்து நெல்லை எடுக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். அவ்விதம் ஒன்றும் செய்வதில்லை. இங்கு அதைப்பற்றி என்ன சொன்னாலும் உண்மையில் என்ன நடக்கிறது என்பது விவசாயிகளுக்கு நன்றாகத் தெரியும். ப்ரொக்யூர்மென்ட் என்றால்—நான் எப்போதும் தெரிவிப்பது போல்—'ப்ரொக்யூர்மென்ட் வித்அவுட் டியர்ஸ்'—என்ற முறையில் தான் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இங்கு நல்லதொரு கட்டுப்பாடு இருக்கிறது, நாணயம் இருக்கிறது, பொறுப்பு இருக்கிறது. வேளாண்மை என்றால் நாம் மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருப்பதல்ல, மற்றவர்களும் சாப்பிட வேண்டும் என்ற முறையில்தான் விவசாயிகள் தங்கள் அவசியத்திற்குப் போக மீதியுள்ளதை சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள். மிகவும் திருப்தியோடுதான் கொடுக்கிறார்கள். அப்படியல்லாமல் ஏதோ வீட்டிற்குள் புகுந்து விதைக்கு வைத்திருக்கும் நெல்லையோ, அல்லது தேவைக்கு வைத்திருக்கும் நெல்லையோ கொள்முதல் செய்வதில்லை.



6th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ஆகவே, இந்த சர்க்கார் அக்கிரமமாகக் கொள்முதல் செய்கிறது, கட்டாயப் படுத்திக் கொள்முதல் செய்கிறது என்று சொல்வது முற்றிலும் தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விதம் கொள்முதல் செய்ய வேண்டும் என்றால் பணம் வேண்டும். முதலில் ரெவின்யூ-விலிருந்து இதை நடத்திக்கொண்டிருந்தோம். முன்னால் இருந்த ஓவர் டிராப்ட் ஒன்றும் இப்போது கிடையாது. இதைப்பற்றி முன்னாலேயே ரிசர்வ் பாங்கியில் சொல்லியிருந்தோம், ஸ்டேட் பாங்கியில் சொல்லியிருந்தோம். அதற்கு 15 கோடி அனுமதித்திருந்தார்கள். அதில் நாம் 13 கோடி அளவுக்குத்தான் வாங்கினோம். இன்னும் இரண்டு கோடிக்கு வாங்கலாம். ஆனால், இதை நெல் விற்பனையாகும்போது திருப்பிக்கொடுக்கிறோம். வாங்கும்போது பெர்மிஷன் வேண்டியிருப்பது போல் திருப்பிக் கொடுக்கும்போதும் பெர்மிஷன் வேண்டும். கொள்முதல் செய்த தான்யங்களை விற்கும்போது, அதிலிருந்து கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு திருப்பிக்கொடுக்கிறோம். வட்டி கொடுக்கிறோம் என்றால் வட்டி கொடுக்க வேண்டியது தான். அதைத் தவிர்க்க முடியாது. இது தான் நிலைமை. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் இந்த நிலைமையை நன்றாக உணர்ந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். முன்னால் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கிறோம். அவ்வளவு தானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறதே என்றால், நாம் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது; அதற்குப் பணம் வேண்டும். அதற்காகப் பணம் வாங்குகிறோம்; அதற்காக வட்டியும் கொடுக்கத் தான் வேண்டும்; அதைத் தவிர்ப்பதற்கில்லை.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை உடனடியாகச் செய்து முடிக்கவேண்டிய சில திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நேற்று நான் விளக்கியதுபோல சில முக்கியமான அம்சங்களுக்காக வேண்டிய நிதியை வரவு செலவுத் திட்டத்திலிருந்து கொடுக்கவேண்டும் என்றால் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியே போதாது தான். இருந்தாலும் உடனடியாக கைகண்ட பலனை அளிக்கும் திட்டங்கள், கிணறுகளைத் தோண்டுவதன் மூலமாக உடனடியாகப் பலன் ஏற்படக் கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட திட்டங்களுக்காக நிறைய உதவி வேண்டும் என்று கலெக்டர்கள் எழுதுகிறார்கள், இதன் மூலம் நல்ல பலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சொல்லுகிறார்கள், இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்ற காரணத்தால் தான், வேறு இனங்களில் மிச்சப்படுத்திக் கொள்ளலாம் என்ற அளவில் இரண்டு கோடி ஒதுக்கிக் கொடுக்கிறோம். இந்த இரண்டு கோடியைப் பகிர்ந்து எல்லா ஜில்லாக் கலெக்டர்களுக்கும் கொடுக்கிறோம். இது போதாது, மேற்கொண்டும் கொடுக்கவேண்டும் என்பதற்காக நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். அதன் மூலமாகவும் நிதி உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த வகையில் தான் இதைக் கொடுக்க நாம் முற்பட்டிருக்கிறோம்.

போலீஸைப் பொறுத்தவரையில், இப்போது நாம் ஓரளவுக்குத் தான் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறோம். அதிலும் முக்கியமாக

[திரு. எம். பக்தவத்சலம்] [6th August 1966

சம்பள விகிதத்தைத் தான் உயர்த்தியிருக்கிறோம். அதிலும் கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல், உடனடியாக எல்லோருக்கும் ஐந்து ரூபாய் கிடைக்கச் செய்தால் நல்லதுதான். அப்படியென்றால் இன்னும் அதிகம் செலவாகும். இப்போது கேட்டிருப்பதை விட இன்னும் அதிகம் கேட்கவேண்டும். நிரந்தரமான சம்பள விகிதம் இருக்கவேண்டியது முக்கியம். புதிதாக நல்ல தரமானவர்கள் இந்தத் துறைக்கு வரவேண்டும், அதற்கு இது உபயோகமாக இருக்கவேண்டும் என்று நினைத்துத்தான் இவ்விதம் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதையேதான் முன்பு வரவு செலவுத் திட்டத்தின்போது, நமது உள்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். போலீஸ்-க்கு மட்டும் என்ன, அவர்கள் மக்களை அடிப்பதற்குக் கொடுக்கப்படுகின்றதா என்று கேட்கப்பட்டது. அடிப்பது மட்டும் போலீஸ் வேலை அல்ல, அணைத்துக் கொள்கின்ற வேலையும் இருக்கிறது அவர்களுக்கு. போலீஸ் வேலை என்பது மற்ற வேலைகளைப் போன்றது அல்ல. தங்கள் உயிரையும் பார்க்காது, தங்களுக்கு வருகின்ற ஆபத்துக்களையும் பொருட்படுத்தாது, இராப்பகலாக வேலை செய்கின்றார்கள். அப்படி வேலை செய்கின்றவர்களை ஏதாவது பேசி விடுவது நல்லதல்ல. அப்படி ஏதாவது பேசவேண்டும் என்றால், எங்களைப் பேசுங்கள். போலீசாரைப் பேசவேண்டாம். எங்களிடம் கோபம் இருக்கும் என்றால் அதற்காக அவர்களைப் பேசவேண்டாம். சாதாரணமாக, மனைவிக்கு கணவன் பேரில் கோபம் இருந்தால், குழந்தையைப் போட்டு அடிப்பாள். அந்த முறையில் போலீசைப்பற்றிப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் சீமைச்சாமி அவர்கள் பேசினார்கள். இதற்காகவா போலீஸ் இருக்கிறது ? என்றெல்லாம் கேட்டார்கள். ஏதாவது எஃபக்ட் இருக்கவேண்டும் என்பதற்காக இப்படிப் பேசிக்கொள்ளலாம். அவர்களுக்கும் வீடு பற்றாக்குறை இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும். இதற்காக மத்திய அரசாங்கம் நிதி தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் செய்கின்ற வேலையை விட போலீஸார் செய்கின்ற வேலை மிகவும் கஷ்டமானது. அவர்களுக்குக் கூடிய வரைக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று நாம் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். இன்னும் இது போன்ற பல உதவிகளைச் செய்து வருகிறோம். எல்லாருக்கும் இந்தப் பலன் கிடைக்குமா என்று கேட்டார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** போலீசாருக்கு சம்பள விகிதத்தை அதிகப்படுத்தினதை நான் ஆட்சேபிக்கவில்லை. புதிதாக வருகிறவர்களுக்கு மட்டும் தானே இதனுடைய பலன் கிடைக்கும்? ஆகவே, எல்லோருக்கும் வெயிட்டேஜ் அடிப்படையில் பலன் கிடைக்க வழி செய்யப்படுமா என்பதைத்தான் நான் கேட்டேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதன்படி பிரமோஷன் கிடைக்கும்போது, எல்லோருக்கும் இதிலுள்ள பலன் கிடைக்கும். எத்தனை சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்க முடியும் என்றுதான் நாம் பார்க்கின்றோம். அவ்விதம் கொடுப்பதில் எந்த



6th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

விதமான தவறும் இல்லை. அந்த முறையில் இந்த அரசாங்கம் அவ்வப்போது கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று. விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிச் சொன்னார்கள். ஏன் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறீர்கள், கடன் கொடுப்பதை நிறுத்திவிட்டு வரியை எடுத்துவிட்டால் போதுமே என்று சொன்னார்கள். கடன் கொடுக்காவிட்டால், எப்படி விவசாயம் செய்ய முடியும்? கோடிக்கணக்கில் முதல் போட்டு தொழில் நடத்துகிறவர்கள் கூட, மூலதனத்தில் முக்கால் பாகம் கடன் வாங்கித்தான் நடத்துகிறார்கள். கடன் கொடுக்காமல் விவசாயம் நல்ல முறையில் நடத்த முடியுமா என்று கேட்கிறேன். விவசாயத்தையும் நல்ல முறையில் செய்யவேண்டும், நன்றாக விளைந்தால் வரியும் கொடுக்கவேண்டும் என்ற முறையில் தான் விவசாயிகள் கடன் பெறுகிறார்கள். நல்ல முறையில் விவசாயம் செய்கிறார்கள், தாங்களும் வரி கொடுக்கவேண்டும் என்ற முறையில் வரி கொடுக்கிறார்கள். ஆறில் ஒரு பங்கு வரியாக அரசாங்கத்திற்குக் கொடுப்பது தங்கள் கடமை என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆறில் ஒரு பங்கு கொடுப்பது மக்களின் கடமை என்பது பழைய காலத்திலிருந்து வந்திருக்கிறது. அதைப்பற்றி அவர்களுக்கு (கனம் சுதந்திராக் கட்சித் தலைவர்) என்னைவிட நன்றாகத் தெரியும். அதைப்பற்றி நன்றாகப் படித்தவர்கள். அந்த முறையில் ஆறில் ஒரு பங்கை அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்கிறார்கள். (குறுக்கீடு) ஆறில் ஒரு பங்குக்கு மேலே கொடுக்கவில்லை என்பதை என்னால் காட்ட முடியும். ஆகவே, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது மிகவும் முக்கியம். வேண்டுமென்றால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற பணம் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை, குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கவில்லை, ப்ராம்ப்டாகப்போய்ச் சேரவில்லை என்று சொன்னால், அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். இப்படிப்பட்ட கடன்கள் கொடுப்பதில் கூட்டுறவு சங்கங்கள் ஈடுபட்டிருக்கின்றன. கூட்டுறவு ஸ்தாபனங்கள் அவர்களுடைய பாங்குகளின் மூலமாக இதற்கான கடனைப் பெறுகிறார்கள். அதை வாங்கி விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் மிகவும் தேவையானது, அவசியமானதும் கூட என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரிதான் மின்சாரம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். முக்கியமாக விவசாயத்திற்குக் கிடைக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமையில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதைக் கொஞ்சம்கூடக் குறைக்கவில்லை. இதிலே நாம் சிக்கனத்தைக் கையாண்டு கொண்டுதான் இருக்கிறோம். கூடிய வரையில் நிர்வாகச் செலவைக் குறைக்கவேண்டும், மற்ற செலவைக் குறைக்க வேண்டும் என்று பார்க்கிறோம். புதிதாகத் திட்டங்களை எடுத்துக் கொள்ளும்போது, புதிதாக நியமனம் செய்யவேண்டிய அவசியம்

வரும்போது, ஏன் எக்ஸ்பான்ஷன் ஆகிறது என்று கேட்பது சரியல்ல. முக்கியமாகப் பலர் குறிப்பிட்டுச் சொன்னது செய்தி இலாகா, டூரிஸ்ட் இலாகா. அதுவும் ரொம்ப முக்கியமானது தான். வளர்ச்சி அடையும்போது, திட்டங்கள் நிறைவேற்றப் படும்போது அதுவும் முக்கியமானது தான். ஆனால், சந்தேகம் இருப்பது சகஜம் தான். யாரைப் போடப் போகிறார்களோ, யாராவது வேண்டியவர்களைப் போடுவார்களோ என்று சந்தேகம் இருக்கலாம். வேண்டாதவர்களைப் போட மாட்டார்கள்—அது நிச்சயம்தான்.

இன்றொன்று, நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேர்தலையொட்டி வந்தது என்றால், உடனே எல்லாம் தேர்தல்தான். தேர்தல் இருக்கிறது—யார் அதை மறுக்க முடியும்? தேர்தல் வரப் போகிறது—யார் அதை மறுக்க முடியும்? எல்லோரும் போட்டி போடப் போகிறார்கள் என்றால் அதை யார் மறுக்க முடியும்? எல்லாம் தேர்தலுக்காகச் செய்கிறார்கள் என்றால் ஓரளவு ஆளும் கட்சிக்குப் பலன் ஏற்படத்தான் செய்யும். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டினாலும் சரி, வீடு இடிந்து போனாலும் சரி—வீடே கட்டாமல் கணக்கு எழுதிவிட்டார்கள் என்று நேற்று சொன்னார்கள்; அதிகாரிகளிடமிருந்து வந்த ரிப்போர்ட்டைப் படித்தபோது, கட்டி முடிக்கப்படவில்லை, பாதியில் இருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே எனக்கு ஃபோட்டோவே வந்திருக்கிறது; இதோ அந்தக் குறிப்பிட்ட வீடுகளின் ஃபோட்டோவே இருக்கிறது. இதோ இங்கே இருக்கிறது; கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமே கொடுக்கிறேன். (ஃபோட்டோவை திரு. இரா. நெடுஞ்செழியனிடம் கொடுத்தார்) அந்த வீடுகள் தான்; ஃபோட்டோவே வந்திருக்கிறது. அது மாதிரி ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதில் எந்த அளவுக்குக் கட்டமுடியுமோ கட்டிக் கொடுக்கிறோம். அதற்கு மேலும் மனையை வாங்கிக் கொடுக்கலாம் என்பது திட்டம். கூடிய விரைவில் வாங்கிக் கொடுப்போம் என்றால், எப்போது கொடுப்பார்கள், எத்தனை வருஷங்களில் கொடுப்பார்கள்? என்று கேட்கலாம்; முடியாது என்று சொல்ல எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது. அவதிப்படும் மக்களுக்கு நிவாரணம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஹரிஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும், வீடு இல்லையே, நிலம் இல்லையே, இருப்பதற்கு நிழல் இல்லையே என்று அவதிப்படுகிறவர்களுக்கும் மனை வழங்க நிதி ஒதுக்குகிறோம். இந்த வருஷமே இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று ஆரம்பித்து நடத்திக்கொண்டு வருகிறோம். கலெக்டருக்கெல்லாம் பகிர்ந்து கொடுத்திருக்கிறோம். தேர்தல் வருகிறதே என்றால், அதற்கு நான் என்ன செய்வது? அரசாங்கம் கட்சி அரசாங்கம் தான். காங்கிரசில் 4 அணா போட்டவர்களுக்கா மனை வழங்குகிறோம்? நானே பார்த்தேன் நான்கைந்து ஜில்லாக்களிலே. எவ்வளவோ ஆர்வத்தோடு பெண்மணிகள், ஆண்கள் வயோதிகர்கள், இளைஞர்கள் எல்லோரும் நமக்குப் பட்டா வருகிறது என்று வருகிறார்கள். காங்கிரஸ் கட்சியைப் பார்த்தா கொடுக்கிறோம்?





கையெழுத்து வாங்கிக்கொண்டா கொடுக்கிறோம்? இந்த அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கம்தான். மற்றவர்கள் நினைக்கிறார்கள் என்றால் நான் என்ன செய்வது? ஜனங்கள் நினைக்கலாம். நல்ல காரியம் செய்தால் காங்கிரசுக்குத் தான் போகிறது நல்ல பெயர். கெட்ட காரியம் செய்தால் காங்கிரசுக்குத்தான் கெட்ட பெயர். காங்கிரசுக்கு நல்ல பெயர் என்றால் அது நாட்டுக்கு நல்லது, மக்களுக்கு நல்லது. கடைசியில் பார்த்தால் எதிர்க் கட்சிக்கும் நல்லது. நாங்களெல்லாம் இதையெல்லாம் சொன்னதால்தான் வந்தது என்று சொல்லலாம். தவறுதல் செய்தால் தவறு செய்கிறார்கள் என்று சொல்லலாம். உபமான்யம் கொண்டு வருகிறோம் என்றால் அப்போதைக்கப்போது செய்துவிடலாம் என்று செய்கிறோம். ஒரு மாதம் தள்ளிப் போட்டுக் கூட செய்யலாம். ரூ. 21 கோடி என்றால், எல்லாம் அட்ஜெஸ்ட்மென்ட்தானே. புதிதாக வரும் இனங்கள் 2-3 தானே இருக்கின்றன.

அதே மாதிரி, லாங்வேஜ் கமிஷன் பற்றிக் கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். லாங்வேஜ் கமிஷன் மத்திய அரசாங்கத்தில்தான் இருந்தது. அவர்கள் தான் க்ளாஸரி தயார் செய்கிறார்கள். நம் அரசாங்கத்தில் ஒரு சிலரைப் போட்டுத் தயார் செய்துகொண்டிருந்தோம். ஸ்டேட்டிலும் ஒரு லாங்வேஜ் கமிஷன் இருக்கலாம் என்று சொல்லப்பட்டது. நாம் அஃபிஷியல் லாங்வேஜ் சட்டத்தை நிறைவேற்றுவது வேறு. அது வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. க்ளாஸரி சட்டச் சொற்கள், கலைச் சொற்கள் தயாரிக்க ஸ்டேட் லாங்வேஜ் கமிஷன் தனியாகப் போடுவது நல்லது என்று சென்ட்ரல் லாங்வேஜ் கமிஷனைச் சேர்ந்தவர்கள்—அதிலே சுப்ரீம் கோர்ட்டைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்—அவர்களெல்லாம் சொன்னார்கள். துரிதமாக நடத்துவதற்காகத்தான் கமிஷனைப் போட்டிருக்கிறோம். அதற்காக உபமான்யம் கோரப்பட்ட போதிலும் அது தமிழிலே நிர்வாகத்தை நடத்த, வேகமாக நடத்துவதற்காக, வருகிறது. இந்த மன்றத்திலும் மன்ற நடவடிக்கைகளைத் தமிழிலே துரிதமாக நடத்தக் கவனம் செலுத்தப் பட்டுத்தான் வருகிறது.

மற்றப்படி, .. பொதுவாக விலைவாசி பற்றியெல்லாம் சொன்னார்கள். விலைவாசிகளைப் பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்பது அல்ல—நானும் சொன்னேன். எப்படி வேண்டுமானாலும் பேசிக்கொண்டே போகலாம். அவரவர்கள் பேசலாம்; அவரவர்கள் கோணத்திலிருந்து பேசலாம். விலைவாசி உயர்வைத் தவிர்த்து மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். அப்படி எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளால் விலைவாசி கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது, அதை மறுப்பதற்கில்லை என்று தான் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, முன்பு குறிப்பிட்டதைத் தொடர்ந்து குறைகள் கூறப்பட்டன. சில யோசனைகளும் சொல்லப்பட்டன. குறைகள்

[திரு. எம். பக்தவத்சலம்] [6th August 1966

ஆதாரம் இருக்கிற குறைகளாக எனக்குத் தெரியவில்லை. ஆதாரம் இருந்தால் கவனிக்கப்படும். மற்றபடி சில யோசனைகள் சொன்னார்கள். அதெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற விஷயங்கள். முக்கியமாக நான் நேற்று கூறியது போல, விவசாயிகள் இப்போது பருவ மழை தவறிப் போய்த் தவித்துக்கொண்டிருந்த போதிலும், இன்னும் சில இடங்களில் பருவ மழை பெய்யாது இருக்கிற போதிலும், அரசாங்கத்தோடு அவர்கள் நல்ல முறையில் ஒத்துழைக்கிறார்கள், உதவிகளைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். விவசாய உற்பத்தி பாதிக்கப்படாமல் கிடைக்கும் என்று தான் எதிர்பார்க்கிறேன். அதை வைத்துக்கொண்டு நல்ல முறையில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். விலையைக் கட்டுப்படுத்துவதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்; அரசாங்கம் எடுத்துக்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

நீலகிரியைப் பற்றிக் குறைபட்டார்கள். நீலகிரியில் யாரும் அரிசி இல்லாமல் அவதிப்படும் நிலைமை இருக்காது. இருக்கும் இடத்திலிருந்து அங்கே அரிசி வரும். மற்ற பகுதிகளிலும் குறைவில்லாமல் கிடைக்க கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் இயக்கம் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பூச்சி மருந்து கம்பெனி பற்றிச் சொன்னார்கள்; மெஸர்ஸ் பெயர்ஸ் அண்ட் கம்பெனி சப்ளை செய்ததைப் பற்றிக் கூறினார்கள். போன வருஷத்தில் Messrs. Bharat Pulverising Mills Private Limited supplied Paramar 50 per cent. There was a certain complaint regarding the quality. இந்த வருஷத்தில் பாரமர் என்பது ரேட் காண்ட்ராக்டில் இல்லை. அதனால் தான் பாரமரை வாங்குவதாக இல்லை. மேற்கொண்டு ஏதாவது இருந்தால் அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

இதற்கு மேல், சபையின் நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இந்த உப மான்யக் கோரிக்கைகளை இந்த மன்றம் ஒப்புக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் பேசும் போது, இவ்வளவு அதிகமாக சப்ளிமெண்டரி டிமாண்ட்ஸ் என்று சொன்னபோது, அதற்கு முதலமைச்சர் அவர்கள், பூராவும் புது இனங்கள் இல்லை, ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாற்றக் கூடியது என்று சொன்னார்கள். நான் என்ன கூற விரும்பினேன் என்றால், நேரம் ஒதுக்குவது போதாமல் இருக்கிறது, அதை இனி கவனிக்க வேண்டும் என்பது தான். இப்போது கனம் முதல் அமைச்சருக்கே பதில் சொல்லுவதற்கு நேரம் போதவில்லை. நாங்கள் கட் மோஷன்ஸ் கொடுத்திருக்கிறோம்; அவற்றையெல்லாம் தனியாக மூவ் செய்யவில்லை. அவற்றையெல்லாம் அசெம்பளி இலாகாவிலிருந்து மற்ற சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பிப் பரிசீலிக்கும்படி எழுதவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



6th August 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது நோட்டீஸ் கொடுக்கப்பட்ட கட் மோஷன்கள் ஏற்கனவே இலாகாக்களுக்கு அனுப்பப்பட்டு, அந்தந்த இலாகாக்கள் அவைகளைப் பரிசீலனை செய்து எல்லாவற்றிற்கும் நிலைமைகளைக் கூட விளக்கியிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன்:** கனம் முதல் அமைச்சர் அவர்கள், நான் பேசும்பொழுது, ரூ. 15 கோடிக்கு, 13 கோடிக்கு உணவு தான்யங்கள் வாங்குவதற்காக உள்ள நிலை பின்னை திருப்பப் பெறும் என்று புரிந்து கொள்ளவில்லை என்பதுபோல குறிப்பிட்டார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி. இந்த அறிக்கையிலே காணப்படுகிற கடைசி பக்கத்தில், 26-வது பக்கத்தில் தெளிவுபடத் தான் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தைத் தான் நானும் தெரிவித்தேன். எங்களைப் புரியவிடாமல் இந்தப் பிரதிகள் இருக்கின்றன என்பதை நான் இப்பொழுது சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. முன்னால் உள்ள VII வது பக்கத்தில் ரூ. 5 லட்சம், 1½ லட்சம், 2½ லட்சம் அதாவது சீரியல் நெம்பர் 18, 19, 20-வது இனங்களைப் பொறுத்த வரையில் 20-வது பக்கத்தில் விளக்கம் காணவேண்டும் என்று இருக்கிறது. '20-ம் பக்கம் பார்க்க' என்று இருக்கிறது. 'Reference to pages in the Detailed Estimates below' என்று நான்காவது 'கால'த்தில் போட்டிருக்கிறது. 20-வது பக்கத்தைத் திருப்பிப் பார்த்தால், அங்கே ஒன்றும் இல்லை. கஷ்டப்பட்டு வேலை பார்த்தார்கள், அதிலே இப்படி வந்திருக்கிறது. சில நமக்குப் புரியாமலும் இருக்கலாம். ஆனால், எங்களைப் புரியவிடாமலும் இம்மாதிரி பிரதிகள் சப்ளை செய்யப்படுகின்றன என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

MR. SPEAKER: I will take up the cut motion when we come to Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.

Now, the Hon. Chief Minister will move the Demands.

## VIII.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR 1966-67

### *A. Expenditure on Revenue Account.*

### DEMAND NO. III—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES—ADMINISTRATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 35,700 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration.'

The Demand was put and carried and the Grant was made.

[6th August 1966

DEMAND NO. V—REGISTRATION DEPARTMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. V—Registration Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. VIII—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 48,000 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.'

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, 'செய்தித் துறையினரால் தரப்படும் விளம்பரங்கள் அனைத்தும் ஆளுங்கட்சியைச் சார்ந்த பத்திரிகைகளுக்கே கொடுக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி கண்டிக்க' என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட கட்மோஷனை நான் முன்மொழிகிறேன்.

' That the allotment of Rs. 48,000 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Re. 1.

The cut motion was put and lost.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XII—POLICE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 14,66,000 under Demand No. XII—Police.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XIII—EDUCATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 11,45,800 under Demand No. XIII—Education. '

The Demand was put and carried and the Grant was made.



6th August 1966]

DEMAND NO. XIV—MEDICAL.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 30,800 under Demand No. XIV—Medical.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XVI—AGRICULTURE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 2,00,200 under Demand No. XVI—Agriculture.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XVIII—ANIMAL HUSBANDRY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 81,560 under Demand No. XVIII—Animal Husbandry.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XIX—CO-OPERATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 29,400 under Demand No. XIX—Co-operation. '

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XX—INDUSTRIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 1,00,000 under Demand No. XX—Industries. '

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXIII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 1,00,000 under Demand No. XXIII—Community Development Projects, etc.'

The Demand was put and carried and the Grant was made.

[6th August 1966

DEMAND NO. XXIV—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 54,600 under Demand No. XXIV—Labour including Factories.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXV—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 26,30,200 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXVI—IRRIGATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand No. XXVI—Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,80,000 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXIX—PUBLIC WORKS—GRANTS-IN-AID.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. XXIX—Public Works—Grants-in-Aid.'

The Demand was put and carried and the Grant was made.



6th August 1966]

DEMAND NO. XXXIII—MISCELLANEOUS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 2,00,00,300 under Demand No. XXXIII—Miscellaneous.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXIV—STATIONERY AND PRINTING.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 32,100 under Demand No. XXXIV—Stationery and Printing.'

The Demand was put and carried and the Grant was made.

*B. Expenditure on Capital Account.* 12-3 p.m.

DEMAND NO. XLI—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 9,00,000 under Demand No. XLI—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XLIII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 18,57,600 under Demand No. XLIII—Capital Outlay on Public Works.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XLVIII—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading.'

The Demand was put and carried and the Grant was made.

[6th August 1966

*C. Expenditure on Loan Account.*

DEMAND NO. XLVIII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

' That the Government be granted a further sum not exceeding Rs. 3,94,08,000 under Demand No. XLVIII—Loans and Advances by the State Government.'

The Demand was put and carried and the Grant was made.

### IX.—ANNOUNCEMENT.

THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Appropriation (No. 3) Bill, 1966.

### X.—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I beg leave to introduce the Madras Appropriation (No. 3) Bill, 1966.

The motion was put and carried and leave was granted.

THE HON SRI. M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### XI.—DISCUSSION ON THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1966–67—*cont.*

***திரு. எஸ். முத்துலிங்கம்** : கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-க்கான மின்சாரக் கழக நிதிநிலை அறிக்கை மீது நான் சிலபல கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வந்தவாசி தொகுதியைச் சேர்ந்த பல கிராமங்களில் இதுவரைக்கும் மின்சாரம் வழங்காமலே, அவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கும் உடனடியாக மின்சாரம் வழங்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து, வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் அவசியமானது மின்சாரம்தான். என் தொகுதியைச் சேர்ந்த, கொண்டையாங்குப்பம், சீயாளம், ராமசமுத்திரம், நல்லூர், இளங்காடு போன்ற பல கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று அந்த கிராமத்து விவசாயிகள் இரண்டு வருஷகாலமாக அக்ரிமெண்ட் செய்ய வேண்டும் என்று, மின்சார இலாக்காவிற்கு அப்ளிகேஷன் செய்தும், இதுவரையில் அந்த கிராம விவசாயிகளுக்கு இன்னும் அக்ரிமெண்ட் செய்யப்படவில்லை. டிலே செய்துகொண்டிருக்



6th August 1966] [திரு. எஸ். முத்துலிங்கம்]

கிறார்கள். அப்படிப்பட்ட காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமானால், அரசாங்கம் உடனடியாக அவர்கள் அக்ரிமெண்ட் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சார இலாக்காவில் பணிபுரியும் என்.எம்.ஆர்.-கள், அந்த இலாகாவில் 6, 7, 8 வருஷங்களாக வேலை செய்தும், இன்னமும் நிரந்தரமாக்கப்படவில்லை. அதனால், அந்த இலாக்காவில் பணிபுரியும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு உடனடியாகச் சர்க்கார் அந்த இலாக்காவிலேயே நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, விவசாயிகள் பம்பு செட்டுகளைப் பொருத்திவிட்டு, சர்வீஸ் வாங்குவதற்கும், காரண்டி சர்ட்டிபிகேட் வாங்குவதற்கும், விவசாயிகள் இலாக்காவில் போய்க் கேட்டால், அவர்கள் பாரம் சரியானபடி இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படி பாரம் இல்லாமல் இருப்பது அந்த விவசாயிகள் முன்னேறுவதற்குத் தடையாக இருக்கிறது. ஆகவே, அந்த பாரம்கள் காலாகாலத்தில் கிடைக்க சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். எத்தனையோ விவசாயிகள் பம்புசெட்டுகளைப் பொருத்திவிட்டு, சர்வீஸ் கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இலாக்காவிற்கு சர்க்கார், துரிதமாக மேற்படி பம்பு செட்டுகள் பொருத்தியிருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக சர்வீஸ் கொடுக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகள் மின்சார பம்புசெட்டுகள் வைத்து விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அவர்களுக்கு அரசாங்கத்தில் கடன் உதவிகள் செய்கிறார்கள். அந்த கடன் உதவியைப் பெறுவதற்கு அந்தப் பகுதி விவசாய மக்கள் மின்சார போர்டாரிடமிருந்து ஒரு சர்ட்டிபிகேட் கொடுத்தால் தான் கடன் சாங்ஷன் செய்கிறார்கள். அந்த சர்ட்டிபிகேட்டை வாங்குவதற்கு காலதாமதம் ஆகிறது. அதைத் தவிர்க்க அந்த இலாக்காவினரைத் தூண்டி சர்க்கார் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, புறம்போக்கு நிலங்களில் அநேக விவசாயிகள் பல ஆண்டுகாலமாக அனுபவித்து விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த நிலங்களில் கிணறுகள் எடுத்து விவசாயம் செய்கிறார்கள். இருந்தும் போதிய வசதி இல்லாததால். அவர்கள் பம்பு செட்டுகள் பொருத்த வேண்டியிருக்கிறது. அந்தச் சந்தர்ப்பங்களில் மின்சார போர்டார், புறம்போக்கு கிணற்றுக்கு பம்பு செட்டு பொருத்தக் கூடாது என்கிறார்கள். அப்படிப் பொருத்தினால், சர்வீஸ் கொடுக்கமாட்டோம் என்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை உருவாக்குகிறார்கள். அதனால் அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார், புறம்போக்கு நிலங்களில் பம்பு செட்டுகள் பொருத்தியிருந்தாலும், நல்ல முறையிலே மின்சார இலாக்காவிடம் சொல்லி, சர்வீஸ் கொடுக்க

[திரு. எஸ். முத்துலிங்கம்] [6th August 1966

வேண்டும் என்று வற்புறுத்தி, அந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக கனம் சபாநாயகருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பெருமதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மின்சாரத் துறை அரசினருடைய சார்பில்லாமல் செயல்படுகின்ற காரணத்தினால், தனிக் கழகமாக இயங்குவதன் காரணத்தினால், மிகத் திறமையாக நடைபெறுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அனுபவம் மிக்க, ஆற்றல் படைத்த ஒரு தலைவரின் கீழ் அந்த இலாக்கா இயங்கி வருகிறது என்பதை நினைக்கும்போது, வேறு இலாக்காக்களையும் கூட, அப்படி அனுபவம் வாய்ந்தவர்களிடம் கொடுத்து பலன் அடையலாமா என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

பொதுவாகவே, மின்சாரத் துறை, தமிழகத்தைப் பொறுத்த வரையில், மிகச் சீரிய முறையில் இயங்கி வருகிறது என்றாலும் கூட, அதிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குக்கூடக் காரணம் யாராவது அமைச்சருடையவோ அல்லது அவர்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர்களுடையவோ ஆக்ஞையின் காரணமாக அப்படிப்பட்ட வேலைகள் தடைப்பட்டிருக்கின்றனவோ என்று நான் அஞ்சுகிறேன். காரணம், எங்களுடைய மாவட்டத்தைப் பொருத்த வரையில், அங்கே திருச்சி, ஸ்ரீரங்கம் எலெக்ட்ரிக் ஸப்ளை கம்பெனி என்கிற தனியார் துறை நிறுவனம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. தனியார் துறைக்கும் நம்முடைய துறைக்கும் ஏற்பட்டிருக்கிற போட்டியைத் தவிர்ப்பதற்காக நாங்கள் பெரிதும் முயற்சி செய்து அதன் காரணமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட இருந்த இடங்களையெல்லாம் கிராமங்களையெல்லாம், பகுதிகளையெல்லாம் எலெக்ட்ரிசிட்டி போர்டுக்கு எழுதி வாங்கிக் கொடுத்தோம். எழுதி வாங்கிக் கொண்ட எலெக்டிரிசிட்டி போர்டார் அவர்கள் அதை நல்ல முறையில் பரிசீலனை செய்து, பல ஊர்களுக்கு எப்படி மின்சாரம் வழங்க வேண்டும் என்பதை ஆராய்ந்து, ஆரம்ப வேலைகள் எல்லாம்கூடப் பூர்த்தி செய்தார்கள். பூர்த்தி செய்ததற்குப் பிறகு, பல வேலைத் திட்டங்களை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நாங்கள் வட்டார வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் மூலமாகவும் மற்றும் அரசாங்கத்தின் மூலமாகவும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பல ஊர்களை அவர்கள் சென்ற ஆண்டே பார்த்து, முடித்துத் தருவோம் என்ற உறுதிமொழியின் பேரில் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ, திடீர் என்று திருச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுகின்ற வேலைகள் தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. அதன் காரணமாக அந்தப் பகுதியில் ஆரம்பித்த வேலைகள் நின்றுபோய்விட்டன. அது மாத்திரமல்ல. விவசாயத்திற்காகக் கிணறுகளுக்குப் பம்ப் செட் வைத்துக்கொள்ள மின்



6th August 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

விசை தருவோம் என்று உறுதி அளித்ததன் காரணமாக, அங்கு பல ஏழை விவசாயிகள் கடன் வாங்கி, பம்பு செட் இன்ஜின்களை வாங்கி வைத்துக்கொண்டு இருந்தும், ஏறத்தாழ நான்கு ஆண்டுகளாக அங்கே இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்வேன். ஏனென்றால், எந்த ஊர் என்று கேட்பார்கள். அக்காளப்பட்டி, தேவிமங்கலம், கீழமங்கலம், மேவங்காளம் பகுதிகளுக்கு ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளாக முயற்சி செய்து, கடைசியில் சென்ற ஆண்டில் வேலைத் திட்டத்தை எடுத்துக்கொள்ளுகிறோம் என்று உறுதி அளிக்கப்பட்டு, இன்ஜின் எல்லாம் வாங்கி வைத்திருந்தும், அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டு கேட்கிறபோது, இன்னும் துணைப் பொறியாளர்கள் கிடைக்கவில்லை, இளம் பொறியாளர்கள் யாரும் கிடைக்கவில்லை, அதனால் வேலைத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம், சாமான்கள் எல்லாம் பட்டுக்கோட்டைப் பகுதிக்குச் சென்று அங்கே வேலை நடந்து முடிந்திருப்பதாக நான் அறிகிறேன். அது மட்டுமல்ல.

அண்மையில், நம்முடைய மின்சாரக் குழுத் தலைவர் அவர்களும் எங்களுடைய மாவட்டக் கலெக்டர் அவர்களும் அங்கே ஒரு கூட்டத்தைக் கூட்டி, அங்கே பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களையும், தொகுதி சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் அழைத்து, ஒரு கான்ஃபெரன்ஸ் நடத்தினார்கள். அது உண்மையிலேயே பயனுள்ள காரியமாக அமையும் என்று நாங்கள் எல்லோரும் கருதினோம். அந்தக் கூட்டம் கூட்டி, முடிவு எடுத்த தலைவர்கள் சில உறுதிப்பாடுகளை அளித்தார்கள். ஜனவரியில் முடித்துவிடுவோம், டிசம்பரில் முடித்துவிடுவோம், ஆகஸ்டில் முடித்துவிடுவோம் என்று சில வழிகளைக் குறிப்பிட்டு, அதற்கெல்லாம்கூட வேலைத் திட்டங்கள் ஆரம்பியுங்கள் என்று சொன்னார்கள். ஆரம்பிப்பதற்கு வேண்டிய எல்லா ஆரம்ப வேலைகளையும் முடித்தாய்விட்டது. இப்பொழுது கேட்கிறபோது, கம்பிகள் கொண்டு போக கம்பங்கள் இல்லை; கம்பிகள் இல்லை, போதிய சாமான்கள் கிடையாது என்கிறார்கள். அங்கிருக்கும் சாமான்கள் வேறு பகுதிக்கு அடிக்கடி மாற்றப்பட்டு வருகிறது என்பதை நான் நிரூபித்துக் காட்ட முடியும். மேல் பகுதிக்குக் கொடுக்காமல் மற்ற இடங்களுக்கு லைன் எடுத்துச் செல்ல முடியாது, ஏழு ஊர்களுக்கும் ஒன்றாகத்தான் கொடுக்க முடியும் என்கிறார்கள். ஒரு ஊருக்குக் கொடுக்காமல், மற்ற ஊர்களுக்குக் கொடுக்க முடியாது, அதனால் நிறுத்திவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். வெங்கடாசலபுரம் என்ற ஊருக்கு உடனடியாக மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யாததன் காரணமாக சம்பந்தப்பட்ட வேலை நின்றுவிட்டது. அந்த வேலை முடிந்தால் தான் அந்தப் பக்கத்தில் இருக்கும் மாங்குடி, கோமாகுடி, செம்பரை, தின்னியம், முள்ளால், கள்ளிக்குடி, ஆலங்குடி அரியூர், செங்காரயூர் ஆகிய அத்தனை ஊர்களுக்கும் கொடுக்க

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [6th August 1966

முடியும் என்கிறார்கள். ஒரு ஊருக்குப் போட்டால்தான், அதிலிருந்து வேலை துவங்க முடியும் என்கிறார்கள். அந்த ஒரு ஊரில் ஏதாவது காரணம் காட்டி நிறுத்திவிட்டால், அத்தனை ஊர்களிலும் நின்றுவிடுகின்றது. நகர்திருமங்கலம், மருதூர் ஆகிய ஊர்களுக்காகப் பணம் கட்டியாய்விட்டது. கேட்கும்போது, ஆரம்ப வேலை செய்யாமல் இடையில் செய்ய முடியாது என்று காரணம் காட்டி நிறுத்தி வைத்திருக்கிறார்கள். வந்தலைக்கூடலூர், கன்னாகுடி ஆகிய ஊர்களுக்கு மின்சாரம் கொண்டுபோக சாமான்கள் இல்லை என்று சொன்னார்கள். சாமான்கள் இருக்கிற இடத்தைக் காட்டினோம். இந்த இடத்தில் இருக்கும் சாமான்கள் அந்த ஊருக்குப் போயிருக்கின்றனவா என்றால், டால்மியா ஸ்டேஷனிலேயே இருக்கின்றன. கொண்டு போய்ச் சேர்க்க வண்டி இல்லை என்று சொன்னார்கள். நாங்கள் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம், லாரி வேண்டாம் என்று சொன்னோம். சில தினங்கள் ஆகும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நாங்களே விவசாயிகளை அழைத்துக் கொண்டு போய், வண்டிகளில் ஏற்றி வந்தலைக்கூடலூருக்குப் போய்ச் சேர்த்தும் கொளகுடிக்குப் போகவில்லை. ஆள் இல்லை, இங்கே இருக்கும் இன்ஜினியரை வேறு ஊருக்கு மாற்றிவிட்டார்கள். அந்தப் பகுதி இன்ஜினியர் இந்த ஊருக்கு வரவில்லை என்கிறார்கள். கடைசியாகக் கேட்கும்போது, அந்த இடத்தில் அதிகாரி கிடையாது, அதனால் நிற்கிறது என்று சொல்லுகிறார்கள். அங்கங்கே வாங்கிவைக்கப்பட்ட எலெக்ட்ரிக் பம்ப் செட்டுகள் அங்கங்கே கனெக்ஷன் கிடைக்காததால் சும்மா இருந்து கொண்டிருக்கின்றன.

ரெட்டிமாங்குடிக்கு முதலில் ஒரு பக்கத்திலிருந்து கொண்டு போவதற்கு எஸ்டிமேட் தயார் செய்து பிறகு இந்தப் பக்கத்திலிருந்து கொண்டுபோய்ச் சேர்ப்பது நலன் என்று கருதி அந்தப் பக்கத்தில் சேர்த்தார்கள் பிறகு, இன்னொரு பக்கத்திலிருந்து போனால்தான் இது சீக்கிரம் முடியும் என்றார்கள். பிறகு கன்னாக்குடியிலிருந்து குளக்குடி வழியாகக் கொண்டுவந்தால்தான் சேர்க்கமுடியும் என்கிறார்கள். மின்சாரம் அதிகமாக வீட்டுக்கு எரிக்கப்படுவதைவிட, விவசாயத்திற்கு அதிகம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லும் இந்த நேரத்தில், விவசாயிகளுக்கு உடனடியாக மின்சார வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, I would like to say a few words on the Annual Financial Statement of the Madras State Electricity Board. At the outset, I would like to express my gratitude to the Electricity Board for the extension of electricity to the Tiruttani taluk which was tagged on to Madras State about six years ago. A lot of extension of electricity and



6th August 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

other facilities have been provided for both the agricultural and the non-agricultural consumers and the Board deserves all encomiums and congratulations. Though the Board has been doing a lot of good work, its services have not been recognised in certain parts of the State. This is because the maximum amount of work turned out by the Construction Wing of the Board is not reflected in the Maintenance Wing. There are several shortfalls in the working of the Operation and Maintenance Wing and several small defects could not please the ryots or the people in the village and taluk levels, with the result that they say that the Electricity Board is not functioning properly. So, the small defects should be rectified by toning up the administration of the Maintenance Wing and also reorganising it. In certain divisions and circles, several engineers have been posted to supervise the work. Now soon after the construction work is finished, the transformers are energised and handed over to the Maintenance Wing for laying lines and also for giving connections to the agriculturists. But the Maintenance Wing is always complaining that they are running short of materials like poles, wires, etc. So, the Construction Wing should supply them enough number of poles, etc. Also, there is a lot of delay in getting the sanction of the Superintending Engineer by the Assistant Engineer. As a result of it, the agriculturists are finding it very difficult to get connections for electricity and so the procedure regarding giving connections and getting sanction from the Superintending Engineer should be simplified so that there may not be unnecessary confusion at that level to the detriment of the interests of the agriculturists.

Then, regarding meter reading and such small things also there is not proper reading and checking. This should be looked into. Deputy Chief Accountants are appointed at every level, but certain electricity bills are still to be cleared. In this connection, I suggest to the Government that instead of levying so many surcharges on electricity rates, the Government could charge a certain consolidated rate for a unit so that there may not be any confusion or inconvenience to the consumers of electricity.

Then, so far as the agriculturists are concerned, special consideration should be shown to them in giving electricity during daytime. If they are given electricity during night-time, they are not able to utilise it to the maximum advantage. The remaining villages in Tiruttani taluk must be provided with electrical extension. With these words, I conclude my speech. Thank you. Sir.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, மின்சாரக் குழுவின் வரவு செலவுக் கணக்கை ஐந்தாவது முறையாக இந்தச் சபை விவாதிக்கிறது. இந்தச் சபைக்கு இதுதான் கடைசி சந்தர்ப்பமாக இருக்கும். அடுத்த முறை இதைப்பற்றி விவாதிக்கிறபோது, தேர்தலுக்குப் பிறகு கூடும் புதிய சட்டசபைதான் விவாதிக்கக்கூடிய நிலை இருக்கும்.

இந்த ஐந்தாண்டுகளில் இந்தச் சபையில் பல சந்தர்ப்பங்களில் மின்சாரத் துறையைக் குறை கூறிப் பேசியதும் உண்டு; நல்ல

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [6th August 1966

காரியங்கள் செய்தபோது வாழ்த்தியதும் உண்டு. ஆனால், ஒரு நல்ல அம்சம் நான் பார்ப்பது என்னவென்றால், மின்சாரக் கழகத்தின் தலைவரும் மின்சாரக் குழுவினரும் இந்தச் சபையில் நடக்கக்கூடிய விமரிசனங்களை, மற்ற அமைச்சர்கள் காட்டும் அக்கறையைவிட அதிக அக்கறை காட்டி, அவற்றுக்குப் பதில்கள் தயார் செய்து அனுப்புகிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களுக்கு என்ன தெரியும் என்பதான அகங்காரம் ஒருசில துறையினருக்கு உண்டு. சட்டசபையினர் தெரிந்து சொன்னாலும், தெரியாமல் சொன்னாலும், இந்த இலாக்காவினர் எல்லாவற்றையும் எடுத்துப் பரிசீலனை செய்து அவற்றைப்பற்றி இந்தச் சபையிலேயே ஓர் அறிக்கை கொடுப்பது பாராட்டக்கூடிய அம்சம். இதற்காக நான் அந்த இலாக்கா அமைச்சரைப் பாராட்டவில்லை. அந்தத் துறையினரைப் பாராட்டுகிறேன். அமைச்சர்கள் குறுக்கிடாதிருந்தால் இந்தத் துறையினர் நல்லமுறையில் தான் காரியங்களைச் செய்வார்கள். அமைச்சர்களுக்கு அரசியல் வந்து பற்றிக் கொள்கிறது. அமைச்சர்களுடைய அரசியல் புகாமல் இருந்தால் எல்லாத் துறைகளுமே நன்றாகத்தான் விளங்கும்.

மின்சாரம் நமக்குப் பற்றாக்குறையாக இருந்து வருகிறது. புதுத் திட்டங்களைப் போடலாம். அப்போதும் கூட பற்றாக்குறையாக இருக்கக்கூடும். பற்றாக்குறையாக இருப்பது இத் துறையில் நம்முடைய வளர்ச்சிக்கு அடையாளமாகத்தான் நான் எடுத்துக் கொள்கிறேன். இன்னும் மின்சார உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக, கல்பாக்கம், ஹொகேனகல் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இன்னும் எரிபொருள்களைக் கொண்டு மின்சாரத்தைத் தயார் செய்வதும் அதிகரிக்க வேண்டும். அனல் மின்சார உற்பத்தி நிலையம் மாவட்டத்திற்கு ஒன்றாவது இருக்கவேண்டும். இப்போது சென்னையிலும் தூத்துக்குடியிலும் அனல் மின்சார நிலையம் அமைக்கப்பட இருக்கின்றன.

என் நண்பர் திரு. சா. கணேசன் அவர்கள் கூறியமாதிரி ரயிலுக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்தக் கூடாது என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. ரயில் வந்தவுடன் கட்டை வண்டியில் போவது எவ்வளவு பத்தாம் பசலியாக ஆகிவிட்டதோ அதுபோல மின்சாரம் வந்த பிறகு கரியைப் போட்டு ஓட்டுகிற நீராவி இயந்திர ரயில்கள் பத்தாம்பசலியாகி விட்டன. போக்குவரத்தைத் துரிதமாக்குகிற காலம் இது. மின்சாரத்தை வேண்டிய அளவு தயார் செய்து விவசாயத்திற்கும் பயன்படுத்த வேண்டும். தொழில்களுக்கும் பயன்படுத்த வேண்டும். போக்குவரத்துக்கும் பயன்படுத்த வேண்டும். ஆகவே, அரக்கோணம் ரயில் பாதையை மின்சார ரயில் பாதையாக மாற்றும் திட்டத்தை விட்டுவிடக் கூடாது. கும்மிடிப் பூண்டி ரயில்பாதையை மின்சாரப் பாதையாக மாற்றும் திட்டத்தை விட்டுவிடக் கூடாது. இன்னும் விழுப்புரத்தோடு நின்றுவிடக்கூடாது. திருச்சி வரையில் மின்சாரப் பாதையாக



6th August 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

விஸ்தரிக்கவேண்டும். இரட்டைப் பாதையாகப் போட வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். எனக்குத் தெரிந்த வரையில் ரயிலுக்குக் கரியைப்போட்டு நீராவியை உற்பத்தி செய்து ஓட்டுவதைவிட, கரியைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்து ரயிலை ஓட்டுவது லாபகரமாகக் கூட இருக்கும் என்று கருதுகிறேன். ஆரம்பச் செலவு வேண்டுமானால் அதிகமாக இருக்குமே தவிர மின்சாரத்தைக் கொண்டு ஓட்டுவது தான் சிக்கனமாகவும், துரிதமாகவும் அமையக் கூடியதாக இருக்கும். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்தியைத் தவிர விநியோக முறையில் இருக்கக் கூடிய கோளாறுகளையும் நாம் களைந்தாக வேண்டும். மின்சார விநியோகத்தைப் பொருத்தவரையில் விவசாயிகளிடத்தில் அதிருப்தி தான் இருக்கிறது. கிராமத்தில் போய் அதிகாரிகள் விசாரித்தால் நிச்சயமாக யாரும் பாராட்டமாட்டார்கள் என்பது உண்மை.

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை)

காரணம் என்னவென்றால் அங்குள்ள காலதாமதம் தான். மின்சார போர்டு பிரதம என்ஜினியர், தலைவர் இவர்களைச் சந்தித்து ஒரு விஷயத்தைச் சொன்னால் கூட ஐந்து நிமிஷத்தில் டெலிபோன் மூலமாகவே அதைச் செய்துவிடுவார்கள். ஆனால் கீழே உள்ளவர்களிடத்தில் அப்படி ஒரு காரியத்தைச் சீக்கிரமாகச் செய்ய முடிவதில்லை. நான் முன்பே இந்த விநியோக முறையைப் பற்றி நன்றாக ஆராய்வதற்காக ஒரு கமிட்டியைப் போட்டுக் கூடப் பரிசீலனை செய்யலாம் என்று சொன்னேன். அப்போது அதற்கு அவசியம் இல்லை என்று பதிலளித்துவிட்டார்கள். ஒரு கமிட்டியைப் போட்டுப் பரிசீலிக்காவிட்டாலும் விநியோக முறையில் ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலித்தாக வேண்டும். இன்றையதினம் ஒரு சர்விஸ் வாங்குவதற்கு விவசாயிகள் படுகிற கஷ்டம் சொல்ல முடியாது. தனியார் துறையில் கூட அவ்வளவு கஷ்டம் இல்லை என்று சொல்கிறேன். அதற்காக நான் தனியார் துறையை ஆதரிப்பதாகச் சொல்லக் கூடாது. இன்றையதினம் அவர்கள் அக்ரிமெண்டு பாரங்கள் எல்லாம் ப்ரின்ட் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டாம்ப் பேப்பர் எல்லாம் ஒட்டியே வைத்திருக்கிறார்கள். அதனால் கனெக்ஷனுக்கு எழுதிப் போட்டால் உடனே அக்ரிமெண்டில் கையெழுத்திட்டு கொடுத்துவிடுகிறார்கள். அதற்கான செலவை அந்த நேரத்தில் வாங்கிக் கொள்கிறார்கள். மின்சார போர்டாரும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது? அக்ரிமெண்டு பாரத்தை விவசாயிகளே அச்சிட்டுக் கொண்டு வர வேண்டும். ஒரு மாடல் காப்பி கூடக் கொடுப்பது கிடையாது. ஸ்டாம்ப் பேப்பர் அவர்களே வாங்கி வர வேண்டும். இதனால் எல்லாம் விவசாயிகளுக்கு ஏற்படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. தனியார் துறையில் கையாளப்படுகிற முறையை மின்சார போர்டாரும் கையாண்டால் சர்விஸ் வாங்கும் முறை சுலபமாக இருக்கும்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [6th August 1966

இன்னும் ஜாயின்ட் பட்டாவாக இருந்தால் தனியார் துறையில் யார் கையில் நிலத்தின் பொசெஷன் இருக்கிறதோ அவர்கள் கனெக்ஷன் வேண்டும் என்று கேட்டால் இப்போது கொடுத்து விடுகிறார்கள். மற்றவர் ஆட்சேபித்தாலும் கோர்ட்டுக்குப் போகச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் மின்சார போர்டைப் பொருத்த வரையிலும் ஜாயின்ட் பட்டாவாக இருந்தால் அதன் உரிமையாளர்கள் அத்தனைபேரும் சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்கிறார்கள். யாராவது ஒருவர் ஆட்சேபணை தெரிவித்தால் கனெக்ஷன் கொடுக்காமல் விட்டுவிடுகிறார்கள். ஏன் இப்படிச் செய்யவேண்டும்—நிலம் யாருடைய பொசஷனில் இருக்கிறதோ அவர் வேண்டுமென்றால் கனெக்ஷன் கொடுப்பதற்கு என்ன தடை? தனியார்களுக்கு உள்ள சட்டம் தானே இவர்களுக்கும் இருக்கிறது? அவர்களுக்கு அதுமாதிரி கனெக்ஷன் கொடுப்பதற்குச் சட்டம் இடமளிக்கிறபோது இவர்களுக்கும் இடம் கொடுக்காதா? ஆகவே வீணான காலதாமதத்தைத் தவிர்க்க யாரிடம் நிலம் இருக்கிறதோ அவர் கனெக்ஷன் வேண்டும் என்று கோருகிறபோது கனெக்ஷன் கொடுக்க மின்சார போர்டார் ஆலோசனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒயர்மென், கண்டிராக்டர்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். இப்போது மின்சார போர்டார் புது உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒயர்மென்கள் டிப்ளமா ஹோல்டர்களாக இருக்க வேண்டும், மெகர் போன்றவைகள் வாங்கி வைத்திருக்க வேண்டும் என்பதாக புது உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. இது எல்லாம் எலெக்ட்ரிசிடி போர்டு சீப் எலக்ட்ரிகல் என்ஜினியரைக் கலந்து செய்ய வேண்டிய விஷயம். இதுவரையில் கிராமங்களில் உள்ள விவசாயிகள் அனுபவம் உள்ள எலெக்ட்ரிஷியன்களைக் கொண்டே கூட இந்தக் காரியங்களைச் செய்து வந்தார்கள். வருடத்திற்கு ஒரு முறை அவர்கள் வருவார்கள், இவர்கள் தானியமாகவோ, பணமாகவோ சன்மானம் அளிப்பார்கள். அதற்கு வாரத்திற்கோ, மாதத்திற்கோ ஒருமுறை இவர்களுடைய மோட்டார்களை வந்து பார்த்து சர்விஸ் செய்து கொடுத்துவிட்டுப் போவார்கள். இனிமேல் டிப்ளமா ஹோல்டர்கள் தான் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும் என்ற சூழ்நிலை வந்தால் அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். பெரிய எலெக்ட்ரிகல் கண்டிராக்டர்களுக்கு இது அனுகூலமாக இருக்கலாம். ஆனால் சிறு சிறு விவசாயிகளுக்கு எல்லாம் தொந்தரவு. அதோடு தங்களுடைய சிறிய வீடுகளுக்கு ஒயர் செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு எல்லாம் கஷ்டம் ஏற்படும். ஆகவே இத் துறையில் பலகாலமாக அனுபவம் பெற்று தொழில் செய்து வருகிற எலெக்ட்ரிஷியன்களுக்கு எல்லாம் லைசென்சு கொடுக்க வேண்டும் என்பதாக நான் யோசனை கூறுகிறேன்.

அதோடு மின்சார இலாக்கா ஊழியர்களைப் பற்றி கனம் அமைச்சர் ராமையா அவர்கள் பாராட்டி எழுதி இருக்கிறார்கள் தம் பிரசங்கத்தில் ஊழியர்களுக்கும், மின்சார போர்டுக்கும்



6th August 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

சில நாட்களுக்கு முன்பாக அவ்வளவு நல்ல உறவு இல்லாமல் இருந்தது. இரு பக்கத்திலும் இப்போது ஒரு நல்லுறவு வளர்க்கப்பட்டு இருப்பதை நான் பாராட்டுகிறேன். இதிலே அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்கள் மட்டும் குறுக்கிடாமல் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மின்சார போர்டு, மின்சார போர்டு தொழிலாளர்களுடைய சங்கங்கள்—தங்களுடைய பிரச்சினையைப் பார்த்துக் கொள்வார்கள். இதில் அரசாங்கத்தின் குறுக்கீட்டுக்கோ, அமைச்சர் அவர்களின் குறுக்கீட்டுக்கோ அவசியம் இல்லை. மின்சார போர்டு ஊழியர்களுடைய கோரிக்கை மிகவும் முக்கியமானது. தங்களை தனியார் தொழில் நிறுவனங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களைப்போல வசதிகளைப் பெறும்படியாகச் செய்யவேண்டும் என்கிறார்கள். மத்திய அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் இன்றைய தினம் தனியார் தொழில் நிறுவனங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களைப்போலத்தான் கருதப்படுகிறார்கள். அதைப்போல அரசாங்க ஊழியர்களைப்போல் நடத்தப்படுவதோடு—தனியார் தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பெறுகின்ற சலுகைகளைப் பெற வழி செய்யவேண்டும் என்பதுதான் அவர்கள் கோரிக்கை. இதுபற்றி வழக்கு ஹைக்கோர்ட்டிற்கும் போயிற்று. ஹைக்கோர்ட்டார் தொழிற்சங்கங்களுடைய கோரிக்கைகளை அட்ஜூடிகேஷனுக்கு விடவேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். அப்படி தீர்ப்பு அளித்த பிறகும் மேலே வழக்கைக் கொண்டுபோவானேன்? இரண்டு ஆண்டுகளாக அது இருக்கிறது. அரசாங்கமே லிட்டிகேஷனை எதற்காக வளர்க்க வேண்டும்? மின்சார போர்டார் அரசாங்கத்தை அபிப்பிராயம் கேட்க வேண்டும் என்பதாக சட்டத்தில் இருக்கிறதா? அமைச்சரைக் கேட்டுக்கொண்டு தான் செய்யவேண்டும் என்பதாக இருக்கிறதா? அவர்களுடைய நிதி நிலைமை இடம் அளித்தால் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். அரசாங்கம் இதற்கு யார்? அமைச்சர் இதற்கு யார்? அமைச்சருடைய விஷமம் இல்லாமல் இருந்தால் மின்சார போர்டு, அதில் இருக்கக் கூடிய தொழிலாளர்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவர்களிடையே நல்ல உறவு நிலைமை நிச்சயமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். பொறுப்புடைய உணர்ந்தே 'விஷமம்' என்ற வார்த்தையைக் குறிப்பிடுகிறேன். தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம் நிறைய பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம். அவர்களுக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கீகரிக்கப்பட்ட அந்த ஸ்தாபனத்திற்குக் கொடுக்க வேண்டிய சலுகை கொடுக்கப்படவில்லை. அது என்ன ஜனநாயகம்? ஒரு ஸ்தாபனம் என்றால் அது தொழிற் சங்கம் எதுவுமே இல்லாமல் நடைபெற வேண்டும் என்பது ஒரு நல்ல ஜனநாயக அமைப்பாக முடியுமா? பொதுத்துறையிலே 1-00
நல்ல ஒரு தொழிற்சங்கத்தை வரவேற்று அதற்கு அங்கீகாரம் p.m.
கொடுத்து, அதோடு பேசி, அதற்கு பூரண சுதந்திரம் கொடுத்து இயங்கவிடாமல் அதற்குத் தடையாக இருப்பவர் யார்? அமைச்சர் தான். அமைச்சர் என்றால் துரதிருஷ்டவசமாக இங்கே கனம் திரு. ராமையா அவர்கள் இருக்கிறார்கள், அவரை நான்

சொல்லவில்லை. பதில் சொல்ல வேண்டியவர் திரு. வெங்கட்டராமன் அவர்கள்தான், ஆகவே அவரைத்தான் நான் சொல்கிறேன். கன்சல்டேட்டிவ் கமிட்டியில் ஒரு தொழிலாளர் பிரதிநிதி போட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே தொழிலாளர் பிரதிநிதியாக முன்பு கோபால் என்பவர் இருந்தார். அவரைப் பற்றி நான் முன்பு சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இருப்பவர் முனிரத்தினம் என்பவர். அவருக்கு அவர் வேலைசெய்கிற இடத்திலே கூட பத்துப்பேர்கள் ஆதரவு கொடுக்கமாட்டார்கள். எதற்காகத் தொழிலாளர் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை யோசிக்காமல் ஏதோ பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் அது வெறும் ஏமாற்றம் தான். பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறோம் என்றால் 60 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் கொடுத்ததாக வேண்டும். அவர் திறமையாகவும், சிக்கனத்தைக் கையாள்வதற்கு நல்ல பல அரிய யோசனைகளைச் சொல்லக்கூடியவராகவும், தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுகின்றவராகவும் கன்சல்டேட்டிவ் கமிட்டியில் இருக்க வேண்டும். தொழிலாளர்களிடத்திலே ஒத்துழைப்பைப் பெறுதவரைச் சேர்த்துக் கொண்டு அவருக்கு கன்சல்டேட்டிவ் கமிட்டியில் பிரதிநிதித்துவம் கொடுத்தால் அது உண்மையிலேயே தொழிலாளர்களுக்குக் கொடுத்த பிரதிநிதித்துவம் ஆகாது. கேலிக் கூத்தாக ஆகிவிடும். அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களுடைய அரசியல் குரோதங்களினால் தான் இவ்வாறு எல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கம் இதில் குறுக்கிடாமல் இருந்தால் நல்லது. நல்லதற்காக அரசாங்கம் குறுக்கிடலாம். எலக்ட்ரிசிடி போர்டாரும், இந்த மின்சாரத் தொழிலாளர் சம்மேளனமும் அடிக்கடி சந்தித்துப் பேசி, குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்:* கனம் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சாரக் கழகத்தின் 1966-67-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையும், 1965-66-ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையும் இந்த மன்றத்தின் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு மின்சாரக் கழகத்தினர் எப்படிப் பணியாற்றி வருகிறார்கள் என்பதைப்பற்றி இந்த மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மின்சாரக் கழகத்தினர் மிக அக்கறையோடும், ஆர்வத்தோடும் இந்த மாநிலத்தில் மின்சார நிலைமையைச் செம்மைப்படுத்தும் வேலையிலே ஆக்கம் காட்டி வருகிறார்கள் என்பதைப் பலரும் எடுத்துக்காட்டியது போலவே, நானும் மின்சாரக் கழகத் தலைவர், தலைமைப் பொறியாளர், மற்றுந் தொழிலாளர்களுக்கும் இன்னும் ஊக்கம் தருகின்ற வகையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். வேறு பல துறைகளைப்பற்றிய அறிக்கைகளை, கணக்குகளை இந்த மன்றத்திலே வைக்கும்பொழுது, திட்ட இலக்குகளைக்கூட எட்டிப் பார்க்காத அளவிலே தான்





அறிக்கைகள் வைக்கப்படுகின்றன. ஆனால் மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 960 மெகோவாட் அளவில் உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டமிட்டும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 1,070 மெகோவாட் உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையைப் பெற்றிருக்கிறோம் என்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இந்த மாநிலத்தினுடைய தேவையின் அளவு 2,000 மெகோவாட் ஆக இருக்கக் கூடுமென்று யூகிக்கப்படுகிறது. நாட்டினுடைய தேவைகளைப் பொறுத்தும், வேறு நிலைமைகளைப் பொறுத்தும் இந்தத் தேவையானது வளருகின்ற அளவிலேதான் இருக்குமே அல்லாது குறைகின்ற அளவிலே இருக்க உறுதியாக வழியில்லை. ஆகவே, 2,000 மெகோவாட்டிற்கு அதிகமான அளவிலேதான் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நாம் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று இருக்கிறோம். நம்முடைய மாநிலம் விவசாயத்தை நம்பி வாழுகின்ற மாநிலமாக அமைந்திருக்கின்றது. விவசாயத்தை நம்பி வாழுகின்ற மாநிலம் பொருளாதாரத் துறையிலே நீண்ட நல்ல பெரிய வளர்ச்சிகளைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் இருக்க முடியாது. தொழில் துறையில் முன்னேறினால் தான் பொருளாதார வளர்ச்சியைப் பெற முடியும். அதற்கு உறுதுணையாக இருக்கின்ற மின்சாரத்தை எந்த அளவுக்குப் பெருக்கி வைக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் வளர்ச்சியும் அமையும். இந்தியாவின் மற்ற மாநிலங்களில் எல்லாம் சதுர மைலுக்கு 330 அல்லது 340 பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் சதுர மைலுக்கு 650 பேர்கள் இருக்கின்றார்கள். ஆகவே இந்த மாநிலத்தினுடைய மக்களினுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்ற வகையில் அதற்கு அடிப்படையாக அமைந்திருக்கின்ற மின்சாரம் நமக்கு அதிகமாகக் கிடைக்கின்ற வாய்ப்புக் கூறுகள் அத்தனையும் பயன்படுத்த வேண்டும் என்பதற்கேற்ற வகையில் அதற்கு முயற்சியெடுத்துக் கொள்ளப்படுகின்ற நிலை பாராட்டுக்குரிய ஒன்று என்பதைப் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நீர்மின்சாரம் பெற வேண்டிய வாய்ப்புக்களை நாம் பெற்றிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒரே ஒரு கூறுபாட்டைப்பற்றி இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்படுவதும், அந்த ஒரு திட்டத்தைப் பற்றி அடிக்கடி இந்த மன்றத்திலே கேள்விகள் எழுப்பப்படுவதும், அதற்கு ஒரே ஒரு பதிலையே அடிக்கடி கூறிவருகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டம் தான் ஹொகனேக்கல் திட்டமாகும். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் நீர்மின்விசையின் மூலம் பெறுகின்ற அத்தகைய மின்சாரத்தை அதிகமாகப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கூறப்படுகின்றது. திரும்பத் திரும்ப இந்த மன்றத்தில் பல ஆண்டுக்காலமாக இதுபற்றி வற்புறுத்தப்பட்டும் இந்த மாநிலமும், மைசூர் மாநிலமும் சேர்ந்து செய்ய வேண்டிய முடிவு இது என்று சொல்லப்படுவதும், மைசூர் மாநிலத்தினுடைய முடிவு தெரிய வேண்டும் என்று எதிர்பார்ப்பதும்,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [6th August 1966

இந்திய அரசு இதில் தலையிட்டால் ஏதாவது முடிவு தெரியும் என்று சொல்லப் படுவதும், திட்டக் கமிஷன் ஏதாவது தரும் என்று எதிர் பார்க்கிறோம் என்ற சமாதானங்கள் மீண்டும் மீண்டும் பதில்களாகத் தரப்படுகின்றன என்ற அளவுக்குத்தான் இந்தத் திட்டம் இன்னும் அமைந்திருக்கின்றது. இந்தத் திட்டத்தின் மூலமாக இரண்டு மாநிலங்களும் பயன் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஒரு மாநிலம்தான் பயனடைய முடியும் என்பதல்ல. இரு மாநிலங்களுக்கும் எந்த அளவுக்கு உரிமை இருக்கிறதோ அந்த உரிமையின் அடிப்படையிலே பலன்களைப் பெற முடியும். அன்பின் அடிப்படையில் இத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகள் உடகார்ந்து பேசுவதின் மூலம் எந்த முடிவும் ஏற்பட வழியில்லை. இந்திய அமைச்சரோ அல்லது மாநிலங்களில் உள்ள அமைச்சரோ உட்கார்ந்து பேசித் தான் இதில் முடிவு செய்ய முடியும். அதிகாரிகளை அனுப்பினால், அதிகாரிகளிடத்திலே இந்த அரசு என்ன சொல்லி அனுப்பியிருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் அவர்கள் பேசிவிட்டுத் திரும்ப முடியுமே தவிர வேறு எதையும் அவர்கள் எடுத்துச் சொல்ல முடியாது. அதே போல அவர்களும் அதிகாரிகளை அனுப்பும் பொழுது, பேசும் பொழுது ஜாக்கிரதையாகப் பேசுங்கள், விட்டுக் கொடுக்காமல் பேசுங்கள், முடிந்தால் வெற்றியோடு திரும்பி வாருங்கள் என்று தான் சொல்லியனுப்புவார்கள். ஆகவே அதிகாரிகள் உட்கார்ந்து பேசுவதின் மூலமாக நல்லதொரு முடிவு ஏற்படும் என்று நம்புவதற்கு இல்லை. அமைச்சர்கள் உட்கார்ந்து பேசி, இரண்டு மாநிலங்களும் சேர்ந்து பலன்களைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த மன்றத்தில் இந்தப் பிரச்சினை அடிக்கடி எழுப்பப்படுகிறது. அந்த மன்றத்திலும் இந்தப் பிரச்னை எழுப்பப்படுகிறது. மைசூர் மாநில மன்றத்திலே அவர்கள் எங்களைக் கேட்காமல் எடுத்துவிட முடியாது, இந்திய அரசைக் கேட்காமல் எடுத்துவிட முடியாது என்றெல்லாம் அவர்கள் அங்கே கேட்கின்றவர்களுக்குப் பதில் கூறுகின்றார்கள். இந்த மன்றத்திலும் அடிக்கடி வாக்குறுதிகள் அளிக்கப்படும் நிலைதான் இருக்கின்றது. அமைச்சர் அவர்கள் நாங்கள் இதுபற்றிப் பேசினாலும்கூட, அதிகமாக இதைப்பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது, பேசினால் ஏதாவது கேடுகள் வரும் சொல்லியிருக்கிறார்கள். பலன்கள் எந்த மாநிலத்தின் உரிமைக்கும் புறம்பாக, நியாயத்திற்கு மாறுபாடாக இருக்காது, இரண்டு மாநிலங்களும் ஒன்றுக் கொன்று வற்புறுத்தி பலன்களை உரிமையின் அடிப்படையில் பெறுவதற்கான நிலைமைகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, அனல் மின்சாரம் நாம் மேலும் பெறமுடியும் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அணு மின்சாரத்தின் மூலமும் நாம் நமது மின்சார சக்தியைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று சொல்லப்படுகிறது. அனல் மின்சாரத்தின் அளவு நெய்வேலியிலே கிடைக்கின்ற நிலக்கரியின் அளவைப் பொறுத்துத்



6th August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தான் மேற்கொண்டு வளர்ந்து கொண்டு போகின்ற நிலைமை இருக்கும். இதிலே பிற மாநிலங்கள் கேட்டாலும்கூட, நிலக்கரியை அதிகமாகக் கொடுக்கின்ற நெய்வேலியின் வயிற்றிலிருந்து தான் அதிகமாக நிலக்கரி எடுக்கப்படுகிறது என்ற காரணத்தாலே அனல் மின்சாரம் அதிகமான அளவுக்குப் பெறுகின்ற அளவுக்கு நம்முடைய தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற தன்மையை நாம் பார்த்தல் வேண்டும். அனல் மின்சாரம் கிடைக்கக்கூடிய வேறு சாத்தியக் கூறுகள் ஒன்று எண்ணூரிலும், மற்றொன்று தூத்துக்குடியிலும் இருக்கின்றன.

தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தைப் பொருத்தவரை 250 மெகாவாட் வரையில் அது நிறைவேற்றும் என்று சொல்லப் படுகின்றது. ஆனால் அவற்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றனவா ? இன்றைய நிலையில் இங்கு வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கைகளையும் பதிலுரைகளையும் பார்க்கின்றபோது ஐயப்படக்கூடிய நிலைமையில்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் வரும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. வரக்கூடும் என்று எண்ணப்படுகிறது ; எடுத்துச் சொல்லப்படுகிறது. இதைப் பற்றியெல்லாம் மாநில அரசும் கவலைப்படுகிறது ; மாநில மக்களும் கவலைப்படுகிறார்கள். அதற்கான வாய்ப்பு இருக்கும்போது, ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலைமையில் இருந்து தளர்ந்து வருகிறது. அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் இந்த அனல் மின்சாரத் திட்டத்தைப் பற்றி ஒரு பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'Any further delay in the sanctioning of the scheme is likely to lead to the impression—may be wrong but unavoidable—that petty parochial considerations are standing in the way '.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதைப் புரிந்து கொள்ளுகிறோம். இதைப் பற்றி இந்த மன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் இந்த மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துவதற்கு உதவி புரியும் வகையில் இருக்கும் என்ற காரணத்தால் இதைப் பயன்படுத்தி மத்திய அரசை வற்புறுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மின் வழங்கும் நிறுவனங்களை மின்சார போர்டு எடுத்துக் கொள்வதன் மூலமாகத்தான் மின்சார போர்டு வழங்கும் மின்சாரத்தை அறவே வழங்க வாய்ப்பு ஏற்படும். பல பகுதிகளில் அவ்வாறு தனிப்பட்ட நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன என்றாலும், இன்னும் சில தனிப்பட்ட கம்பெனிகள் இருக்கும் பகுதிகளில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொருத்தமட்டில் தீவிரத் திட்டத்தைக் கொண்டு வந்து வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின்சாரம் வழங்கும் முறையில் 2,000 வடிமுனைக் குழாய்களுக்கு மேல் இருந்தும் 500 அளவுக்குத்தான் மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் கூட இதைப் பற்றி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [6th August 1966

வருத்தம் தெரிவிக்கக்கூடிய முறையில் ஒரு பொதுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட குறைபாடுகள் எல்லாம் இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் தமிழ்நாடு மின்சார போர்டார் தனிப்பட்ட நிறுவனங்களை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு இந்தப் பிரச்னை குறித்து கிளப்பப்பட் பதற்குப் பதிலுரை வழங்கப் பட்டிருப்பதில், "மின்சக்தி வழங்கும் நிறுவனங்களை எடுத்துக் கொள்வது பற்றி அரசாங்கம் யோசித்து வருகின்றது. திட்ட நிதி ஒதுக்கீடுகளுக்குட்பட்டு, தனியார் மின்சக்தி நிறுவனங்களைப் படிப்படியாக அரசாங்கம் மேற்கொள்வது குறித்து ஒரு திட்டம் தீட்ட எண்ணியுள்ளது" என்ற அளவிலேதான் காணப்படுகிறது. எண்ணம் பிறக்க வேண்டும்; பிறகு திட்டம் பிறக்க வேண்டும்; பிறகு அமலுக்குக் கொண்டு வர வேண்டும். அதற்குப் பிறகு நிதிநிலை இடம் தர வேண்டும். அவ்வாறு எடுத்துக் கொள்ளாத வரையில் இந்தக் குறைபாடுகள் எல்லாம் நீடித்திருப்பதற்குத்தான் வழிகள் இருக்கின்றன.

தமிழ்நாடு மின்சார போர்டு நல்ல முறையில் பணியாற்றி வந்தாலும் சிறு சிறு குறைபாடுகள் ஆங்காங்கே இருப்பதைப் பற்றிக் கனம் அங்கத்தினர்கள் பலரும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றைக் கவனித்துப் போக்குவதற்கான வழிகளையும் மின்சாரக் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டும்.

சேலம் உருக்காலை அமைப்பு சம்பந்தமாக 1964-ம் ஆண்டில் 22,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற அளவுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிற அளவில் வராத நிலையில் அது எப்போது ஆரம்பிக்கப் படும் என்பதில் ஐயப்பாடு இருக்கிறது. அந்தத் திட்டம் வரும் வரையில் அந்தப் பகுதியில் இருக்கும் 22,000 ஏக்கர் நிலத்தில் உள்ளவர்கள் விவசாயம் செய்யவோ வேறு தொழில் செய்யவோ வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உருக்குத் தொழிற்சாலை வரக்கூடிய நேரத்தில் சுலபமாக அகற்றக்கூடிய தொழில்களை நடத்துவதற்கும், விவசாயம் செய்வதற்கும் வசதி செய்து கொடுக்கவேண்டும். அங்கு தெரு விளக்குகள் கூடக் கொடுக்கப் படாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதிலே கவனம் செலுத்தி, அவர்களுக்கு மின்சாரம் வழங்கி, இரும்புத் தொழிற்சாலை ஏற்படும் நேரத்தில் சுலபமாக அகற்றப்படக்கூடிய தொழில்களாக ஆரம்பிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மின்சார ஒப்பந்தக்காரர்களைப் பொருத்தவரை 'பி' கிரேடு கண்டிராக்டர்களும் மற்றவர்களும் போடப்பட்டிருக்கிற புதிய நிபந்தனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கும் நிபந்தனைகளின்படியே அவர்கள் செம்மையாகப் பணியாற்ற முடியும், குறைபாடுகள் இருந்தால் நிவர்த்திப் பதற்கு மின்சாரக் குழுவிற்கும் வழி இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒரு ஒயர்மன் வைத்துக் கொள்ள வேண்டும், ஒரு சூப்பர்வைசர் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை போடப்பட்டிருக்



6th August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கிறது. அவர்களுடைய பொருளாதார நிலைக்கு ஒரு சூப்பர வைசரை வைத்துக் கொள்ளும் சூழ்நிலை இல்லை யென்று கூறுகிறார்கள். கடைசியில், ஏதாவது தவறு ஏற்பட்டாலும் அந்த சூப்பர்வைசர் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது என்றும், காண்டிராக்டரேதான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையுந்தான் இருக்கிறது. ஆகவே அவர்களுடைய பொருளாதார நிலையில் சூப்பர்வைசர்களை வைத்துக் கொள்ள முடியாத நிலை இருப்பதால் இதுபற்றிப் பரிசீலனை செய்து இந்த நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த நிபந்தனைகளின்படி சில பொருள்களை அவர்கள் கட்டாயமாக வாங்கத்தான் வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. 'டெஸ்டரை' அவர்கள் ஒவ்வொருவரும் வாங்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லாம் வாங்கும் அளவுக்கு அவர்களுடைய பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. தற்போது அவர்கள் அந்தப் பொருள்களைக் கடனாக வாங்கியோ அல்லது பல காண்டிராக்டர்கள் ஒன்றாகச் சேர்ந்து அவற்றை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நிலையோதான் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மின்சாரக் கழகத்தினரைப் பொருத்தவரை இருக்கும் குறைபாடுகளை—நான் பொதுக் கணக்குக் குழுவின் தலைவன் என்ற முறையில் கூறுகிறேன்—பரிசீலிக்கும் வாய்ப்புகள் ஏற்பட்டால் அதில் இருக்கும் குறைபாடுகளைப் போக்க வழி பிறக்கும். அதற்கு அவர்கள் முன் வரவேண்டும். அவற்றைச் செம்மைப் படுத்துவதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சில லைசென்ஸ்தாரர்கள் தனிக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட தொகையைப் போர்டாரிடம் ஒப்படைக்கவில்லை. அவர்களும் 1958-59-ம் ஆண்டுக் கணக்கில் அதைக் கொண்டு வரவில்லை என்ற குறை இருப்பதாகவும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அத் தொகை, 9,45,000 ரூபாய் அளவிற்கு வரும். அதையும் சீர் செய்து செம்மைப்படுத்த வேண்டும். இரண்டு டர்போ . ஆல்டர்னேட்டர் செட்களை நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு 1955-56-ல் வழங்கியதற்கு டிப்ரிஷியேடட் காஸ்டின் 12½ சத விகிதம் கட்டணமாக வசூலிக்க வேண்டுமென்ற நியதி மேற்கொள்ளப் பட்டது. டிப்ரிஷியேஷன் காஸ்டைப் பொறுத்தவரை போடுகிற கணக்கைப் போடாமல் இரண்டு ஆண்டுக் கணக்குகளில் அது காட்டப்படவில்லை என்ற குறை சொல்லப்பட்டிருக்கிறது. 1960-61-ல் அந்த செட்களை அந்தக் கார்ப்பரேஷனுக்கு விற்றுவிட்டதால் முன்னுள் கணக்குகளில் டிப்ரிஷியேஷன் சார்ஜைப் போட வேண்டிய அவசியமில்லை என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது. அவை 1960-61-ல் விற்கப்பட்டனவே தவிர 1958-59, 1959-60-ம் ஆண்டுக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் காட்டப்படக் கூடிய வகையில் கணக்குகளைச் செம்மைப்படுத்தி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [6th August 1966

யிருக்கவேண்டும். புறக்கணிக்கப்பட்ட பொருள்களை ஏலத்திற்கு விட்டதில் அந்த 19,395 ரூபாயை அந்த ஆண்டு ரெவின்யூக் கணக்கில் கொண்டு வரப்படவில்லை. இதையும் செம்மைபடுத்தியிருக்கவேண்டும். 1957-ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி போர்டு அமைக்கப்பட்டது. போர்டு அமைவதற்கு முன் இருந்த சொத்துக்களை போர்டுக்கு மாற்ற வேண்டுமென்று பல முறை வற்புறுத்தப்பட்டது. அதற்கு அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று பதில் வந்திருக்கிறது. சென்ற ஆண்டு கிளப்பப்பட்ட பிரச்னைக்கு பதில் சொல்லக் கூடிய வகையில், "முன்னாள் மின் சாரத் துறையின் மூலதனச் சொத்து மத்திய அரசிடமிருந்து அல்லது பொது மக்களிடமிருந்து தமிழ்நாடு அரசாங்கம் பெற்ற கடன்களிலிருந்து ஏற்படுத்தப்பட்டதாகும். கடன்களைத் திருப்பித் தருவதற்கு உறுதியளிப்பதுடன், இக் கடன்கள் மீதான வட்டியையும் இந்த அரசாங்கம் செலுத்திக் கொண்டு வருகிறது. இதனுடன் போர்டுக்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் மூலம் வருவாய் வருகிறது. மேலும், போர்டு அரசாங்கக் கடன்களை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டியதில்லை. எனவே போர்டு இக்கடன்கள் மீதான வட்டியை மட்டுமாவது மாநில அரசாங்கத்திற்குச் செலுத்துவது நியாயமாகும்" என்ற பதில் தரப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைத் தயாரிப்பது அரசாங்கம்தான். வேறு யாரிடமோ சொல்வது போன்று "இக்கடன்கள் மீதான வட்டியை மட்டுமாவது மாநில அரசாங்கத்திற்குச் செலுத்துவது நியாயமாகும்" என்று மன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் சொல்வது போல் அரசாங்கமே மன்ற அங்கத்தினர்களுக்குப் பதில் உரை தந்திருக்கிறது. வட்டியைச் செலுத்த வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம் அல்லது வட்டியை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டும். "வட்டியை மட்டுமாவது மாநில அரசாங்கத்திற்குச் செலுத்துவது நியாயமாகும்" என்று உறுப்பினர்கள் சொல்வது போல் மன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் சொல்கிறது. "வட்டியை மட்டுமாவது மாநில அரசாங்கத்திற்குச் செலுத்துவது நியாயமாகும்" என்று கூறப்பட்டிருப்பது எந்த அளவிற்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது? இறுதியாக, பொதுக் கணக்குக் குழு செய்திருக்கிற சிபார்சை இங்கு சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். மின்சார நஷ்டம் ஏற்படுகிறது பொறுத்து குறிப்புத் தரப்பட்டது. மின்சாரம் விரயமாவதையும், இலவசமாக மின்சாரம் வழங்குவதையும் ஒன்றாகச் சேர்த்து நஷ்டம் என்று காட்டப்படுகிறது. விரயமாவது ஒன்று, இலவசமாக வழங்குவது வேறு. இலவசமாக வழங்கப்படுகிற மின்சாரம் எவ்வளவு என்று கணக்கு எடுக்க முடிந்தால் விரயம் எவ்வளவு ஆகிறது, இலவசமாக எவ்வளவு வழங்கப்படுகிறது என்ற சரியான கணக்கைத் தெரிந்து கொள்ள முடியும். விரயத்தையும், இலவசமாக வழங்கப்படுதலையும் சேர்த்து நஷ்டம் என்று கணக்குத் தருவதால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அப்படிக் கணக்கு



6th August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

எடுக்கும் செலவு அதிகமானால் அந்தச் செலவைவிட இந்த நஷ்டத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்ற முடிவிற்கு வரமுடியும்.

'In order to minimise losses in transmission, both the commercial and the operation and maintenance wings should always be kept at a high level of efficiency and the staffing pattern may be streamlined at all levels through better organisation and effective supervision.'

என்று குறிப்பிட்டிருக்கிற கருத்தில் நாட்டம் செலுத்த வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் பல கனம் அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டு மின்சார போர்டின் பல்வேறு பிரச்னைகளுக்கு ஆலோசனைகள் சொன்னதோடு கூட அவரவர்கள் தொகுதியில் உள்ள தேவைகளையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் கூறிய கருத்துக்கள் அத்தனைக்கும் பதில் சொல்ல வேண்டுமென்று நான் முயற்சி எடுத்தால் வெகு நேரமாகும் என்பதற்காகத்தான் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு மின்சார போர்டு நிதிநிலை அறிக்கை விவாதம் நடக்கும்போது அப்போது சொன்ன ஆலோசனைகளை எல்லாம் தொகுத்து மின்சார போர்டார் பரிசீலனை செய்து அந்த ஆலோசனைக்குத் தக்க பதில்களை மறு ஆண்டு நிதிநிலை அறிக்கை பரிசீலனைக்கு முன்கூட்டியே கொடுக்க வேண்டுமென்று ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது என்னுடைய நேரடிப் பார்வையில் இருந்தபோது கொடுத்தேன். அதை ஏற்று இன்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பாராட்டக் கூடிய முறையில் கடந்த சில வருடங்களாக விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பு நிச்சயமாக அவர்களுக்குப் பெருத்த திருப்தியைத் தந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதேபோல் இந்த வருடம் கூட குறிப்பிட்ட அத்தனை கருத்துக்களுக்கும் நேரடியாக ஒவ்வொருவருடைய ஆலோசனைகளுக்கும் பதில் சொல்ல முடியாவிட்டாலும் மின்சார போர்டார் அவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி, வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. மொத்தமாக எழுப்பப்பட்ட இரண்டொரு பிரச்னைகளுக்கு மட்டும் சிறிது நேரம் எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற அங்கத்தினர்களும் தெர்மல் பவர் சம்பந்தமாக தங்கள் ஆலோசனைகளை வற்புறுத்திச் சொன்னார்கள். அதை நான் கேட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு பக்கத்தில் எனக்குச் சந்தோஷம். மற்றொரு பக்கத்தில் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் தெரிந்து கொள்வதிலும் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பொதுவான வளர்ச்சியில் நமக்கு எவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. அதை விரிவாக எல்லா அங்கத்தினர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பது என் ஆசை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, நான்காம்

[திரு. வெ. ராமைய்யா] [6th August 1966

ஐந்தாண்டுத் திட்டம் முடிகிறபோது இந்த ராஜ்யத்தின் தேவை 2,000 மெகா வாட்ஸாக இருக்கும் என்று நிர்ணயம் செய்திருப்பது அந்த அளவோடு நின்றுவிடாது இன்னும் உயரும் என்று சொன்னார்கள். அதே கருத்தைத்தான் திரு. கலியாண சுந்தரம் அவர்களும் சொன்னார்கள். அதாவது, மின்சாரத் தேவை எந்த ஒரு நாட்டிலும் பூர்த்தியான ஒரு கட்டத்தை அடையக் கூடாது என்று சொன்னார்கள். அதற்குத்தான் நாம் இன்றைய தினம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்த நாட்டில் 20, 25 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையை நாம் சற்றுக் கவனித்துப் பார்த்தால் பைக்காரவில் 20 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு இந்த ராஜ்யத்தில் அந்தத் திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்போது 20 மெகாவாட் சக்தியை நாம் பயன் படுத்த முடியாது. ஆகவே அத் திட்டத்தை கைவிட வேண்டுமென்று அன்று சட்டசபையில் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். 1929, 1930 இந்த வருடங்களில் நடைபெற்ற விவாதத்தை—அப்போதுள்ள கருத்துக்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்து, இரண்டு நாட்களுக்கு முன்பாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பழைய புத்தகத்தை வரவழைத்துப் பார்த்தேன். அப்போது பைக்காரவில் உற்பத்தி செய்யப்பட்ட 20 மெகாவாட் சக்தியைக் கூட எடுத்துக் கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது இன்று இருக்கிற சென்னை ராஜ்யம் போன்று இருக்கவில்லை, சென்னை ராஜதானியாக இருந்தது—சென்னை, கேரளம் ஆந்திரம் இவையெல்லாம் சேர்ந்திருந்தது. அப்போது பைக்காராவில் உற்பத்தி செய்யப்பட்ட 20 மெகாவாட் சக்தியை நம்மால் உபயோகப்படுத்திக் கொள்ள முடியாது என்று வாதாடியிருக்கிறார்கள். இப்போது மேல்சபைத் தலைவராக இருக்கும் தலைவர் அவர்களே இதைப்பற்றிக் குறிப்பிட்டு சொன்னார்கள். அப்போது சொன்னதை நானும் அறிந்திருக்கிறேன், அதாவது பைக்காராத் திட்டம் என்று சொன்னால் அது பைத்தியக்காரத் திட்டம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த நிலை மாறி கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கணக்கிட்டு குறிப்பிட்டது போல் இப்போதுள்ள 2,000 மெகாவாட் மின்சாரமே நமது தேவைக்குப் போதாது என்று சொல்கின்ற நிலைமைக்கு வந்திருக்கிறது.

மின்சாரப் பசி எப்போதும் ஒரு நாட்டில் தீரவே கூடாது. அதைத்தான் நம் நாட்டில் இன்றையதினம் பார்க்கிறோம். அந்த முறையில் நாம் போட்டிருக்கின்ற திட்டங்களைப் பார்த்தால், அதிகப்படுத்துவதற்கு எந்த அளவுக்கு முடியும் என்பது முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சாரப் பிரிவை சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் கணக்கிடக் கூடிய வகையில் நிலைமை இருந்து வந்தது. அந்த முறையில் அவர்களுக்கு இருந்த வந்த நிதி நிலைமைக்கேற்ப பல திட்டங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, மின்சாரப் பிரிவில் இருக்கக்கூடியவர்கள், என்சினியர்கள், நிபுணர்கள், வளர்ச்சி அடைந்த தேசத்தில் கூட, எந்த அளவுக்கு மின்சார வளர்ச்சி இருக்க



6th August 1966] [திரு. வெ. ராமைய்யா]

வேண்டும் என்று கணக்குப் போடுகிறார்கள் என்றால், பத்து வருடங்களுக்குள் மின்சாரத்தின் தேவை இரண்டு மடங்காக ஆக வேண்டும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரை, 10, 12 வருடங்களுக்குள், நான் முன்னால் குறிப்பிட்ட அளவுக்கும் அப்பால் சென்றிருக்கிறோம். அந்த முறையில் நாம் மின்சார உற்பத்தியில் வளர்ச்சி அடைந்திருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்தைப்பொறுத்தவரையில் 1958-59-ம் வருடங்களில் நாம் நிர்ணயம் செய்ததற்கும் மேலாக, நமக்குத் தேவைப்படும் மின்சாரத்தை உற்பத்தி செய்திருப்பது மட்டும் அல்ல, நிபுணர்கள் நிர்ணயிக்கின்ற உற்பத்தி விகிதம் கூடத் தவறு—அதற்கும் மேலாக வளர்ச்சி பெறவேண்டும்—என்கிற அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறோம். மின்சார வளர்ச்சியோடு சேர்ந்து, அதன் மூலமாக தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறோம், நம்முடைய ராஜ்யத்தில் முக்கியமாக விவசாயத் தொழிலிலும் பல திட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் பார்க்கும்போது, ஆரம்பத்தில் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை எப்படிக் கொடுக்க முடியும் என்று ஆராய்ந்து, அதற்குத் தகுந்த திட்டங்களுக்கு நாம் ப்ரையாரிடி கொடுத்து வந்தோம். அந்த முறையில் தான் நாம் நீர் மின்சாரத்தில் ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன ஏற்பட்டது என்றால் மின்சார உற்பத்தியின் பயனாக, ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இதன் காரணமாக தொடர்ந்து பவர் கிடைக்க வேண்டும்—அதாவது 'ஃபேர்ம் பவர் டிமாண்ட்' அதிகமாக இருந்து வந்தது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இல்லாத அளவுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த நிலைமை ஏற்பட்டது. அதோடு தொழிற்சாலைகளுக்கு மட்டுமல்ல, விவசாய உற்பத்திக்கும் மின்சாரம் வேண்டும். அதிலும் தொடர்ந்து கிடைக்க வேண்டும், 24 மணி நேரம், 12 மணி நேரம் தொடர்தாற் போல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'ஃபேர்ம் பவர் டிமாண்ட்' விவசாயத்திலும் வந்திருக்கிறது. அதற்காகத் தான் தெர்மல் பவர், ஹைட்ரோ பவர் இரண்டுக்கும் இருக்க வேண்டிய ரேஷியோவையும் மீறினால் கூடத் தவறில்லை என்ற அடிப்படையில் தாம் திட்டங்களைப் போட்டு இருக்கிறோம். தெர்மல் பவர் 40 சத விகிதம், ஹைட்ரோ பவர் 60 சத விகிதம் இருக்க வேண்டும் என்ற விகிதத்தைக்கூட மீறினால் தவறில்லை என்பது தான் என் அபிப்பிராயமும்.

தெர்மல் பவர் அதிகமாக இருக்க வேண்டும் என்று சொல்லும் போது, காஸ்ட் அதிகமாக ஆகிறது. இதற்காகும் செலவை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. நிலக்கரி கிடைப்பது போன்ற வசதிகளைப் பொறுத்து செலவு இருக்கும். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் சிறு தொழில்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும். அதே போன்று தேவைப்படுகின்ற அளவு விவசாயத்திற்கும் கொடுக்க வேண்டும். அந்த முறையில் தான் ஹைட்ரோ பவரையும், தெர்மல் பவரையும்—இரண்டையும் இணைத்து விவசாயிகளுக்கும் தொழிலுக்கும்

வேண்டிய மின்சாரத்தைக் குறைந்த செலவில் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ராஜ்யத்தில் அதிகமான அளவுக்கு தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன என்றால், இதர ராஜ்யங்களை விட நம் கையில் குறைந்த கட்டணத்தில் போதுமான அளவிற்கு மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தது தான் காரணம். அந்த முறையில் தான் நாம் மேலும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறோம். நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இனிமேல் பெரும் திட்டங்கள் நம்மிடம் இல்லை. குந்தா திட்டம் முடிந்ததற்குப் பிறகு பெரிய திட்டங்கள் நம் கையில் இல்லை. இதைத்தான் எனது அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த முறையில் பார்க்கும்போது, ஆரம்பத்தில் 20 மெகாவாட்ஸாக இருந்ததை 2,000 மெகா வாட் அளவுக்கு—நம்முடைய தேவைகளை எல்லாம் பார்த்து—உற்பத்தி செய்வதற்கு முடியும் என்று நாம் சொல்லுகிறோம் என்றால், இதற்கெல்லாம் காரணம் நாம் போட்ட பிரம்மாண்டமான திட்டங்களினால் தான் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. மேலும் நான்காவது திட்டத்தில் நம்முடைய குறிக்கோள் சரியான முறையில் நடைபெறவேண்டுமென்றால் இன்னும் அதிகமான அளவு உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு நாம் யார் யாரிடத்தில் வற்புறுத்திச் சொல்லவேண்டுமோ அவர்களிடத்தில் வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். பல கனம் அங்கத்தினர்கள் நினைப்பது எண்ணூர், தூத்துக்குடி இவைகளைப்பற்றி மத்திய அரசாங்கத்தினிடத்தில் பலமாக எடுத்துச் சொல்லவில்லையோ என்று சந்தேகப்படுகிறார்கள். இதனால் மத்திய சர்க்கார் நம்முடைய திட்டங்களைப் புறக்கணித்துவிடுவார்களோ என்ற நினைப்பு இருக்கக்கூடும், நம்முடைய தேவையைப் பற்றி மத்திய சர்க்கார் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். ஏதோ புள்ளிவிவரங்களைக் கொடுத்து, நியாயமில்லாத காரியத்திற்காக சண்டை போடுவதுபோல் அல்ல இது. நம்முடைய தேவையைப் பற்றி மத்திய சர்க்கார் நன்றாகவும் தெளிவாகவும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மின்சார உற்பத்தியை நிச்சயமாக அதிகப்படுத்த முடியும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் யாருக்கும் இருக்க வேண்டியதில்லை.

நம்முடைய டிமாண்டைப் பொறுத்த வரையில் நாம் உச்சக் கட்டத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் எண்ணூரில் தெர்மல் ஸ்டேஷன் நிறுவப்படும், அதைப்போலவே, பேஸின் பிரிட்ஜ்—எக்ஸ்டென்ஷன்—ஏற்படுத்தப்படும், அதைப் போன்று தூத்துக்குடித் திட்டமும் நடைபெறும். இதில் வேண்டுமென்றால், 150 மெகா வாட்டில் இருக்க வேண்டுமா அல்லது 250 மெகா வாட்டில் இருக்க வேண்டுமா என்பதில் சர்ச்சை இருக்கலாமே ஒழிய இந்த இடங்களில் எல்லாம் நிச்சயமாக தெர்மல் ஸ்டேஷன் வரும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் கிடையாது. இந்தச் சர்க்காருக்கும் சிறிதும் சந்தேகம் கிடையாது.





மத்திய அரசாங்கத்தின்கீழ் நடைபெறுகிற நெய்வேலி மின்சாரத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதிகமான உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்களும் கட்டாயமாக வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல அங்கத்தினர்கள் நினைப்பது என்னவென்றால், தெர்மல் பவர் ஸ்டேஷன் என்றால் ஏன் சில மாதங்களிலே வரவில்லை என்று அவர்களுக்குக் கோபம் வருகிறது. நாம் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். இன்னும் வரவில்லையே என்று வருத்தப்பட்டுக்கொள்கிறார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பேசும் போதும் இந்த அறிக்கையில் சொல்லியிருப்பதையே திரும்பவும் எடுத்துச் சொல்லி, ஏன் சீக்கிரம் வரவில்லை? எண்ணூரில் ஏன் வரவில்லை? தூத்துக்குடியில் ஏன் வரவில்லை? கல்பாக்கத்தில் ஏன் வரவில்லை? என்று கேட்டார்கள். தெர்மல் பவர் வரவேண்டும் என்று சொன்னால், யூனிட்டுகள் வேண்டும், இப்போது தான் முதன் முதலாக பாரத் எலக்ட்ரானிக்ஸில் 65 மெகா-வாட் திறன் கொண்ட யூனிட் தயாராகியிருக்கிறது. இது தான் இந்தியாவிலேயே முதன் முதலாகச் செய்கிறோம். 120, 125 மெகா வாட் யூனிட்டுகள் செக்கொஸ்லோவேக்கியா போன்ற நாடுகளிலிருந்து வரவேண்டியிருக்கின்றன. ஏதாவது இண்டஸ்ட்ரியலிஸ்டுகள் மின்சாரம் சீக்கிரம் வரவில்லையே என்று கோபப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏதோ கடையிலிருந்து தேங்காய்களை வாங்கி உடைப்பது போல், தெர்மல் ஸ்டேஷனை அமைத்துவிட முடியாது.

அணு சக்தியின் மூலம் மின்சார உற்பத்தி ஏற்படுவது என்றால், அதற்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. மின்சாரப் பிரிவினர் தான் இதை நிறைவேற்ற முடியும். அப்படிப்பட்ட சக்தியைப் பொறுத்த வரையில் நம்மிடத்தில் தேவைப்படுகிற அளவிற்கு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதை நாம் மட்டும் சொல்லவில்லை, இந்தியாவிலுள்ளவர்களும் சொல்லுகிறார்கள். நமக்கு மின்சாரத் துறையில் தேவைப்படுகின்ற என்ஜினியர்கள், வேண்டிய நிபுணர்கள் இன்று நம் கையில் இருப்பதால் தான் நாம் அதிக வெற்றி கண்டிருக்கிறோம். தெர்மல் பவரைப் பொறுத்த வரையில் நம் ராஜ்யத்திலுள்ள என்சினியர்கள், நிபுணர்கள் வெகு அற்புதமான செயல்களை நடத்துகிறார்கள். குந்தா போன்ற பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதில் நம்மிடத்தில் தகுந்த ஆட்கள் இருக்கிறார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. நமக்கு மட்டுமல்ல, மற்ற நாடுகளில் இருப்பவர்களுக்கும் சந்தேகம் இல்லை. சமீபத்தில் நடந்து முடிந்த மேட்டூர் டன்னல் ஸ்கீமைப் பார்க்கும் போது, ரஷ்யாவில் இருந்து வந்த நிபுணர்கள், இத் திட்டத்தில் செயல்பட்ட நமது என்ஜினியர்களை உறுதியாகப் பாராட்டியிருக்கிறார்கள். எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் பாராட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களோடு நாங்கள் வேலை செய்வதற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், அது நமக்கு மிகவும் பெருமை அளிக்கக் கூடியது என்று சொன்னால் அது மிகை அல்ல. அதே போன்று தான் செக்கோஸ்லோவேக்கியாவிலிருந்து வந்தவர்களும் பாராட்டி

இருக்கிறார்கள். இந்த நிலைமையில் இந்த ராஜ்யத்தினுடைய தேவையை உணர்ந்து இதை நாம் உரியவர்களிடத்தில் வற்புறுத்தி சொல்லிக் கொண்டிருக்கும்போது, ஒன்றுமே வரவில்லை, ஒன்றுமே நடக்கவில்லை, என்கிற அளவில், பிரச்னைகளை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் குறை கூறும்போது, அது அவர்களுக்கு மனவேதனை கொடுக்குமோ என்ற அச்சம் எனக்கு இல்லாமல் இல்லை. இருக்கின்ற விவரங்களை எல்லாம் தெரிந்து கொண்டு பேசும்போது தான் அவர்களுக்கு இன்னும் உற்சாகமாக இருக்கும். முக்கியமாக எதிர்க் கட்சியின் வரிசையில் இருக்கக்கூடிய கனம் கலியாண சுந்தரம் அவர்கள் இப்போது பேசிய பேச்சைக் கேட்கும்போது, நான்கைந்து வருடங்களுக்கு முன்னால் இதே விஷயத்தில் ஏற்பட்ட சர்ச்சைகள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. அவையெல்லாம் எந்த அளவுக்கு மாறியிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் முன்னால் மின்சார போர்டார் தெரிந்து கொள்ள வேண்டிய பிரச்னைகளைப் பற்றிச் சொன்ன கருத்துக்களும், மின்சார போர்டார் தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டியவைகளைப்பற்றி சொன்ன கருத்துக்களும் நிறைவேற்றப்பட்டிருக்கும் வகையில், இன்றைய தினம் அவர்கள் கோபம் இல்லாமல் சந்தோஷமாகப் பேசினது உண்மையிலே எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. 1957-58-ம் வருடம் என்று நினைக்கிறேன். 1959-ஆக இருக்கும். அந்த அளவுக்கு மின்சார போர்டாரின் பிரச்னைகளைப் புரிந்து கொண்டிருக்கிறோம்; மின்சார போர்டாரின் பல்வேறு கஷ்டங்களை உணர்ந்திருக்கிறோம். மின்சார போர்டைப் பொறுத்த வரையில் கடந்த 10 வருஷங்கள் கடினமான வருஷங்கள் என்று சொன்னால் மிகையில்லை. சரித்திரத்தில் இல்லாத வகையில் ப்ராஜெக்ட்ஸில் ஈடுபட வேண்டியிருந்தது. இருபது மெகா வாட் ராஜ்யத்தில் பயன்படுத்த முடியாது என்ற நினைப்பு மாறி 2,000 மெ.வா. வந்தாலும் போதாது என்று எதிர்க் கட்சியிலே சொல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் கணக்குப் போட்டுப் பார்த்தால் நமது தேவை உயர்ந்து கொண்டே போகும். என்ன சக்தி இருக்கிறது என்றால், சக்தியைப் பொறுத்த வரையில், மூலப் பொருள்களைப் பொறுத்த வரையில் நாம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறோம். மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமக்கு கஷ்டமாகத் தான் இருக்கும். இருந்தாலும் எல்லாவற்றையும் தீர்க்க முடியும் என்று உணருகிறோம்.

ஹொகேனக்கல் திட்டத்தைப் பொறுத்த வரையில் அது பிரம்மாண்டத் திட்டம். நமது ராஜ்ய மின்சார போர்டு இன்வெஸ்ட்டிகேஷன் செய்து ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். மைசூரைப் பொறுத்த வரையில் அவர்களும் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அவைகளில் எது சாத்தியம் என்று பரிசீலிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது. அதிகாரிகள் போகிறார்கள், பேசுகிறார்கள் என்றால், அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் நிபுணர்கள். பேசுகிற போதெல்லாம் அவர்களுக்குள் நுணுக்கமான விஷயங்கள்பற்றிப் பேசி சந்தேகமற்ற நிலை ஏற்படும் பட்சத்தில் மேல் மட்டத்தில்





பேசுவதற்குக் கஷ்டம் இருக்காது. இதெல்லாம் பேசித் தான் தீர்க்க வேண்டும். பிரச்னைகளை அணுகும்போது மின்சார உற்பத்தியை மட்டும் கவனித்தால் போதாது; இதோடு நீர்ப்பாசனமும் இணைந்திருக்கிறது. நாமும் ஜாக்கிரதையாக இருப்போம், மற்றவர்களும் ஜாக்கிரதையாக இருப்பார்கள். சில எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னார்கள், சில பிரச்னைகளைப் பற்றிச் சட்ட சபையில் கூறினாலேயே அதற்கு அபாயம் வந்துவிடும் என்று கூறுவார்கள் என்று சொன்னார்கள். சில சமயம் சட்ட சபையில் பேசுவது லாபமாகக் கூட இருக்கலாம். பேச்சுவார்த்தை சுமூகமாக நடத்துவதில் சட்ட சபையில் பேசினால் அந்தக் கருத்து லாபமாக இருந்தாலும் சொல்லாமல் இருப்பது நல்லது என்பது என்னுடைய கருத்து. ஹொகனேக்கலைப் பொறுத்த வரையில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு வருவது மைசூருக்கும் லாபம். இது பெரிய திட்டம். இந்தத் திட்டம் நடந்து முடிந்தால் இந்த ராஜ்யம் மட்டுமல்ல, மைசூர், ராஜ்யத்திற்கும் லாபம். தென் பிராந்திய மண்டல கவுன்ஸில் கூடும்போது கூட முதல் மந்திரிகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் வெற்றியாக முடிய வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, கனம் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்னை, மற்ற அங்கத்தினர்களும் எழுப்பிய பிரச்னை, கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தைப் பற்றியது. கல்பாக்கம் அணுமின்சார நிலையம் உருவாக வேண்டுமென்று ஒருசில வருஷங்களாக ஆலோசனை செய்துகொண்டிருக்கிறோம். அதிலே எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதை, அணுவைப் பற்றிய புத்தகங்களைக் கொஞ்சம் படித்துப் பார்த்தால், என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ள முடியும். அமைப்புகளை எப்படி அமைப்பது, எப்படி இயக்குவது என்பதிலே யெல்லாம் இன்னும் பரிபூரணமான முடிவுக்கு உலக நிபுணர்கள் கூட வரவில்லை. ஒவ்வொரு கட்டமும் இன்னும் ஆராய்ச்சி கட்டத்தில் தான் இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஒரு நிலையத்தை அமைத்த பிறகு, வேறு நிலையம் அமைக்கும்போது இம்ப்ரூவ்மெண்ட் அடையும் சூழ்நிலை இருக்கிறது. நமது நாட்டுக்கு ஒரு பெரிய சக்தி இருந்தது டாக்டர் பாபா மூலமாக. உலக விஞ்ஞானிகள் மத்தியில் அவருக்குச் செல்வாக்கு இருந்ததன் காரணமாக, தனிப்பட்ட முறையில் அவருக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்று பல உலக நாடுகள், அணு மின்சார உற்பத்தியில் தாங்களே ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். அந்த முறையில் பல திட்டங்களில் ஈடுபட்டு, சென்னை ராஜ்யமும் தன் தேவையை மத்திய அரசாங்கத்திற்கு முன் வைக்கும்போது, அப்போது இருந்த நினைப்பு என்ன? சென்னை ராஜ்யத்திலேயே ஒரு இடத்தில் அணு மின்சார நிலையத்தை வைத்தால், 400 மெ. வா-ஆக இருந்த போதிலும் அதைச் சென்னை ராஜ்யம் பயன்படுத்திக் கொள்ள முடியுமா? அணு மின்சார நிலையம் என்று சொன்னால், அது போட்டுத் தொடங்கியதிலிருந்து 400 மெ. வா. நிமிஷத்துக்கு நிமிஷம், வினாடிக்கு வினாடி, ஜெனரேட் பண்ணிக்

கொண்டே இருக்கும். தெர்மல் பவராக இருந்தால், ஹைட்ரோ பவராக இருந்தால் தேவைக்குத் தகுந்தபடி குறைத்துக் கொள்ளலாம்—ஷட்-டவுன் பண்ணிவிடலாம். 5-6 வருஷங்களுக்கு முன் 400 மெ. வா. சக்தியை உபயோகப்படுத்த முடியாத நிலை இருந்தது. அப்போது எல்லா ராஜ்யங்களுக்கும் மத்தியில் வைக்கலாமா என்று ஒரு வருஷம் சர்ச்சை இருந்தது. அணு மின்சார நிபுணர்கள் இங்கு வந்து பார்த்து மெட்ராஸில் வைக்கலாமா, ஹொகேனக்கலில் வைக்கலாமா, மலைப் பிராந்தியத்தில் வைக்கலாமா என்று இடம் தேர்ந்தெடுப்பதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தன. இப்போது சர்ச்சை எந்த நாட்டுப் பொருள்களை வைத்துக் கொண்டு செய்வது என்றெல்லாம் நிபுணர்கள் சர்ச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். நான் தெரிந்து கொண்டிருக்கிற வரையில், இன்றைக்கு இருக்கிற தேவையில் இந்த ராஜ்யம் அணு மின்சார நிலையத்திலிருந்து கிடைக்கக் கூடிய மின்சக்தியைப் பயன்படுத்த முடியும். லோடைப் பயன்படுத்துவதைப் பொறுத்த வரையில் சந்தேகமற்ற நிலையில் இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், மத்திய அரசாங்கத்தினுடைய இது சம்பந்தப்பட்ட தலைவர்கள் விசேஷமாக, டாக்டர் பாபாவுக்குப் பிறகு வந்திருக்கிற தலைவர்களும் இந்த நிலையத்தை எவ்வளவு விரைவிலே எடுத்து நடத்த வேண்டுமோ அதற்கான முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல அங்கத்தினர்கள் சொன்னார்கள், ஒரு மந்திரி வரும் என்று சொல்லுகிறார். இன்னொருவர் இன்னொன்று சொல்லுகிறார் என்று. அதற்கெல்லாம் பதில் சொல்லுவதற்கு முடியாது. அணு சக்தி பற்றி நேரடியாகப் பார்ப்பது ப்ரைம் மினிஸ்டர் தான் என்று நினைக்கிறேன்—இப்போது ஏதாவது மாறுதல் இருக்கிறதோ என்னவோ தெரியாது. அப்புறம் அட்டாமிக் கமிஷன் தலைவர் இருக்கிறார். மற்றவர்களுக்கு நிலைமை பூராவாகத் தெரியாது. மின்சாரம் என்று வந்தவுடனே, அட்டாமிக் பவர் ஸ்டேஷன் என்ன ஆயிற்று என்று மத்திய அரசாங்கத்தின் நீர் மின்சார அமைச்சரை திருபர்கள் கேட்பார்கள். அப்போது அவர்களுக்குத் தெரிந்ததை அவர்கள் சொல்லுவார்கள். அவர்களுக்குப் புள்ளிவிவரம் எல்லாம் தெரிந்திருக்காது. என்னைப் பொறுத்த வரையில் உறுதியாக 5-6 வருஷங்களாகச் சொல்லுவது, இந்தச் சர்ச்சையை ஏதோ ஒரு காரணத்தினால் நானே தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த நிலையும் வரும் என்பதில் ஐயமில்லை. கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள், திட்ட என்ஜினியர் ஒருவரைப் போட்டு விட்டால் போதுமா என்று கேட்டார்கள். ஒரு என்ஜினியரை சும்மா போட முடியுமா? நில ஆர்ஜிதம் செய்துவிட்டால் போதுமா என்று கேட்டார்கள். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், ஆலோசிக்கப்படுகிறது, அங்கீகரிக்கப்படுகிறது, பணம் கண்டுபிடிக்கப்படுகிறது என்று ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று. இந்தக் கட்டமெல்லாம் வந்தால் தானே வரமுடியும்? அவர்கள் சொன்னதைக் குறைபாடாகச் சொல்லவில்லை. இத்தனை சிரமங்கள் இருக்கின்றன. ஒன்றுமே இல்லாமல் நில ஆர்ஜிதத்திற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா?



திட்டத்திற்குத் தேவையான புள்ளிவிவரங்களைச் சேகரம் செய்ய நிபுணர்களை நியமனம் செய்திருக்கிறோம். இந்தக் கட்டத்தில் இருக்கும்போது இது வருவது மட்டுமல்ல, ராஜ்யத்தின் தேவை அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று மீண்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நான் சந்தோஷம் அடைகிறேன். அணு மின்சார நிலையம் வரும் என்பதை உறுதியாக நான் நம்புகிறேன். இந்த ராஜ்ய அரசாங்கம் உறுதியாக நம்புகிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் நமது ராஜ்ய முதல் அமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சரோடு தொடர்பு கொண்டு நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. இப்போது கூட ஸ்ரீமான் சாராபாய், அட்டாமிக் கமிஷன் தலைவர், பார்வையிட வந்திருக்கிறார். இதெல்லாம் நல்ல முறையில் நடக்கும், நலமாக முடியும் என்று நான் சபைக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு வேகமாக வளர்ந்து கொண்டு போகும்போது மின்சார போர்டுக்கு எத்தனையோ பிரச்னைகள். குறிப்பாக, கிராம மின்சார அபிவிருத்திப் பிரச்னையை எடுத்துக் கொண்டால், ஆரம்பத்தில் எப்போதும் பாராட்டுதல் கிடைத்தது. ஏனென்றால் கிராமப்புரங்களில் சோலை-சோலையாகக் கிராமங்கள் இருந்தன. அப்படி மின்சார விஸ்தரிப்பு செய்வதில் கஷ்டம் கிடையாது. என்ன ஸ்கீம் போட்டாலும் அதிலிருந்து ரிட்டர்ன்ஸ் உடனே கிடைக்கும். அந்த ஸ்கீம்ஸ் மூன்றாவது திட்டம் முடிகின்ற வரையில் கிடைத்தன. இப்போது என்னவென்றால் குக்கிராமங்களுக்குப் போகிறார்கள். ஒரு ஸ்கீம் உருவாக வேண்டுமென்றால், இருக்கக்கூடிய விதி முறையின்படி அந்தக் கிராமத்தில் 10 சத விகிதம் மின்சாரத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய சக்தி இருக்க வேண்டும். இதைக் கூட இப்பொழுது தளர்த்தி இருக்கிறார்கள். ஆகவே, ஒரு ஸ்கீம் உருவாகுவதில் கஷ்டங்கள் இருக்கின்றன.

கனம் அங்கத்தினர் திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் 7, 8 கிராமங்களுக்கு ஒன்று சேர்த்து ஒரு ஸ்கீம் உருவாக்க வேண்டும், அம்மாதிரி ஸ்கீம் உருவாகக்கூடிய அடிப்படையை மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். அதிலே லாபநஷ்டக் கணக்குப் பார்க்க வேண்டாம் என்று சட்டசபை முடிவுக்கு வந்துவிட்டால் ஆட்சேபனை இல்லை. அது ரொம்ப சிரமமான காரியம். சிறு, சிறு கிராமங்களுக்கு, மிகப் பின்தங்கிய கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் ஏராளமான கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் கிராமங்களில் ஏராளமாகத் தேவை இருக்கிறது. திரு. தர்மலிங்கம் அவர்கள் கிணறு தோண்டிய இடங்களிலெல்லாம் போதுமான மின்சார பம்பு செட்டுகள் கொடுக்காவிட்டால் எப்படி விவசாயம் செய்ய முடியும் என்று கேட்டார்கள். அவர்கள் ஊரில், தஞ்சாவூரில், காவேரி டெல்டாவில் தான் கிணறு தோண்டிவிட்டு மின்சார பம்பு செட்டுகள் அமைத்துக் கொடுக்காவிட்டால் என்ன செய்வது, இல்லாவிட்டால் காவேரித் தண்ணீர் வந்தால் போதும் என்று சொல்வார்கள். கிணறு தோண்டிவிட்டால், உடனே மின்சார பம்பு செட்டுகள் கொடுக்க வேண்டும் என்று ராஜ்யத்தில் உள்ள மற்ற ஜில்லா

[திரு. வெ. ராமையா] [6th August 1966

விவசாயிகள் நினைக்கமாட்டார்கள். இந்த இராஜ்யத்தில் 9 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. நாம் மின்சார பம்பு செட்டுகள் கொடுத்திருப்பது 2½ லட்சம் கிணறுகளுக்குத்தான். கோவை, சேலம் போன்ற ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் அப்படிச் சொல்லமாட்டார்கள். ராஜ்யத்தில் வேறு எந்த இடத்திலும், வேறு ஜில்லா விவசாயிகள் அப்படி நினைக்க மாட்டார்கள். காவேரி டெல்டாவிலிருந்து வரக்கூடிய விவசாயிகள் தான் இப்படிச் சொல்வார்கள். இதுவரைக்கும் காவேரி டெல்டாவில் உள்ள விவசாயிகள் பிறத்தியாருக்காகத் தான் விவசாயம் செய்வதாக நினைத்துக்கொண்டிருந்தார்கள், காவேரித் தண்ணீர் வந்தால் தான் விவசாயம் செய்யக்கூடிய சூழ் நிலை இருந்தது. ஆகவே, தான், கிராஷ் ப்ரோகிராம் சம்பந்தப்பட்ட மட்டில் தஞ்சாவூர் ஜில்லாவில் நாங்களே விவசாயிகளைத் தூண்ட வேண்டிய நிலைமை இருந்தது. சென்ற வருஷம் வரைக்கும்தான் அந்த நிலைமை. பில்டர் பாயிண்டு டியூப் வெல்ஸ் அமைத்து, பம்பு செட்டுகள் பொருத்தினால் நாங்கள் விவசாயம் செய்து பார்க்கிறோம் என்று சொன்னார்கள். இந்த வருஷம் டிமாண்டு வந்து விட்டது. இப்பொழுது அங்கு இருக்கக்கூடிய மிராசுதார்களுக்கு மின்சார சக்தியில் ரொம்ப மோகம் ஏற்பட்டிருக்கிறது. ஐந்து, ஆறு வருஷங்களாக மின்சார போர்டு நிதி நிலை அறிக்கையின் மீது விவாதத்தைப் பார்க்கிறபொழுது, தஞ்சாவூர் அங்கத்தினர்கள் இப்பொழுது நிறைய பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பெரிய புரட்சியே அங்கு நடந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். சாதாரணமாக மின்சார போர்டு நிதி நிலை அறிக்கை விவாதத்தின் போது, சேலம், கோயம்புத்தூர், வரண்ட பிரதேசமாகிய இராமநாதபுரம், திருச்சியில் இருக்கக்கூடிய சில வரண்ட பிரதேசங்கள் ஆகிய இடங்களிலிருந்து வரக்கூடிய அங்கத்தினர்கள்தான் அதிகம் பங்கு கொள்வார்கள். ஆனால், இந்த வருஷம் தலைவர் அவர்கள் உட்பட மற்றவர்களும் எங்கள் ஊருக்கு உடனே மின்சாரம் வரவில்லையே என்று கேட்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் அது ஒரு பெரிய வெற்றி என்றே கருதுகிறேன். தஞ்சாவூர் ஜில்லாவில் பரிபூரணமாக, ஏராளமாக மின்சார சக்தியைப் பரப்பிவிடும்பட்சத்தில், இந்த ராஜ்யத்தில் உணவுப் பிரச்னை நிச்சயம் இருக்காது என்று நான் திட்டவட்டமாகச் சொல்வேன். இந்த வருஷம் நான் கண்கூடாகப் பார்த்தேன். மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதற்கு 30 நாட்கள் தாமதமாயிற்று. சில இடங்களில் சென்ற வருஷம் முயற்சி செய்து, 500, 1,000 பம்பு செட்டுகள் வைத்திருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு முன்பே அந்த இடங்களில் நாற்று விட்டு, நாற்றுப் பிடுங்கி, நடவும் ஆகி, இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய நிலை இருக்கிறது. நாமும் இதுமாதிரி செய்யலாம் என்ற புதிய நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் இதுபற்றி மிகச் சொற்பமாக விசேஷ அக்கறை எடுத்துக் கொண்டால் போதும். உபமான்யக் கோரிக்கையில் ரூ. 2 கோடி ஒதுக்கியிருப்பது தஞ்சாவூருக்கு மட்டும் இல்லை. மற்றபடி திருச்சி ஜில்லா, மதுரை ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லா, கோவை ஜில்லா எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுப்பார்கள்.



6th August 1966] [திரு. வெ. ராமையா]

கிணறுகளுக்கு மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். மீதி இருக்கக்கூடிய கிணறுகளுக்கும் மின்சார வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையிலும் மின்சார போர்டின் மீது மட்டும் குறை சொல்வதில் லாபம் இல்லை என்பதைத்தான் நான் உணர்கிறேன். ஏனென்றால் அரசாங்கம் கிணறுகள் தோண்டுவதற்கு கடன் கொடுக்கும் பொழுது யார் கடன் கேட்டாலும் இருக்கக்கூடிய பணத்தை வைத்து, எங்கு பார்த்தாலும் பரவலாக கடன் கொடுக்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு வருஷமும் சுமார் 2,000 கிணறுகள் தோண்டுவதற்கு கடன் வழங்குகிறோம். தாலுகா வாரியாக, பிளாக்கு வாரியாக, 10, 5 என்று இப்படி கிணறுகள் தோண்டுவதற்கு பரவலாகக் கடன் கொடுக்கிறோம். எல்லா இடங்களுக்கும் மின்சாரக் கம்பி இழுத்துக்கொண்டு போவது என்பது நடக்காத காரியம். தஞ்சாவூரில் கிராஷ் ப்ரோகிராமை நிறைவேற்றுகிற பொழுது இந்தப் பிரச்னை தெரியவந்தது. ஒரு பக்கம் எங்கு பார்த்தாலும் பரவலாக கிணறுகள் தோண்டிவிடுகிறோம். ஆனால், கிணறுகள் இருக்கும் இடத்தில் மின்சார லைன் இருக்காது, மின்சார லைன் இருக்கும் இடத்தில் கிணறுகள் இருக்காது. ஆகவே, மின்சார போர்டினால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. இனிமேல் இந்தமாதிரி கிணறு தோண்டுவதற்குக் கடன் கொடுக்கக்கூடிய இலாக்காக்கள், ரெவின்யூ இலாகா விவசாய இலாகா ஆகியவைகளின் பிரதிநிதி, மின்சார போர்டின் பிரதிநிதி இவர்கள் மூன்று பேர்களும் ஜில்லா மட்டத்திலிருந்து ஒரு ஸ்கீம் போட்டு, இந்தெந்த இடங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்ய முடியும், இந்தெந்த இடங்களுக்கு மின்சாரம் போக வேண்டும், இந்தெந்த இடங்களுக்கு மின்சாரம் போக முடியாது என்று முடிவு செய்து, அந்த ஸ்கீமின் அடிப்படையில் கிணறு வெட்டுவதற்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தால், அம்மாதிரி செய்தால் லாபகரமாக இருக்குமா என்[பதை] நாங்கள் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். விரைவிலேயே இது விஷயமாக ஒரு முடிவுக்கு அரசாங்கம் வரும். அந்த அடிப்படையில் பார்த்தால், அதிக நஷ்டம் இல்லாமல், அதிகப் பணம் செலவழியாமல், சிறிய சிறிய ஸ்கீமாகப் போட்டால், கிராம விவசாயிகளுக்கு ஏராளமாக லாபம் உண்டு பண்ணலாம். அதிலே சந்தேகமே கிடையாது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் மின்சார போர்டும், அரசாங்கமும், மற்ற இலாகாக்களும் ஈடுபடுவார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்கள் மின்சாரத்தை ரயில்வேக்குப் பயன்படுத்துவதைப் பற்றி குறிப்பிட்டார்கள். சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைக் கேட்டு தயவுசெய்து அந்தத் திசையிலிருந்து திரும்பி விடக்கூடாது என்று எச்சரிக்கையாகச் சொன்ன கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறிய கருத்தை நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் முழுக்க ஒத்துக்கொண்டு, டிராக்ஷனுக்கு மின்சாரம் பயன்பட

[திரு. வெ. ராமைய்யா] [6th August 1966

வேண்டும் என்று அதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக நேரடியாக நிலக்கரியை பயன்படுத்தாமல், மின்சாரமாக கன்வெர்ட் செய்து கொடுத்தால் லாபகரமாக இருக்கும், அதே சமயத்தில் சிக்கனமாகவும் இருக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதில் ஒன்றும் சந்தேகமே கிடையாது.

கனம் அங்கத்தினர் அவர்கள் அமைச்சர் அவர்கள் தலையிடாமலே இருந்தால் எல்லாம் சரியாக நடக்கும் என்று பேசினார்கள். நல்லது கெட்டது என்பது "கம்பாரடிவ் டேர்ம்ஸ்" அதனாலே அமைச்சர்கள் தலையிடவேண்டும், எல்லாவற்றையும் தலையிலே தூக்கிப் போட்டுக்கொள்ளவேண்டும் என்பது அல்ல. வேலைகள் துரிதமாக நடைபெறவேண்டும். விசேஷமாக சட்டசபை அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபற்றி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டிய பொறுப்பு அமைச்சருக்கு உண்டு. பொதுமக்கள் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். அமைச்சர் தலையிடுவதற்குக் காரணம் பொதுமக்கள் தேவைகள் பூர்த்தியாவதற்கும், குறைகள் நிவர்த்தியாவதற்கும் அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு வேண்டும். ஆகவே, அந்த அடிப்படையில்தான் செய்கிறார்கள்.

ஹைகோர்ட்டில் ஃபுல் பெஞ்சில் ஒரு வியாச்சியம் இருக்கிறது. அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் குறுக்கிடுகிறார், ஏதோ அரசியல் விரோதக் குரோதங்கள் காரணமாகவோ என்னவோ என்று சொன்னார்கள். இதிலே டிரிப்யூனலுக்குப் போகலாம் என்று ஹைகோர்ட்டு தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலைக்கு மேலே ஒரு அப்பீல் நிலை இருக்கிறது. அப்பீலுக்குப் போவதில் என்ன அரசியல் குரோதம் இருக்கமுடியும் என்று புரியவில்லை. அப்பீல் செய்வதிலே காலதாமதம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நான்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பு நாங்கள் குறுக்கிட்டால்தான் சரிவர நடக்கும் என்ற ஒரு கட்டம் இருந்தது. இந்த அடிப்படை மாறிக்கொண்டிருக்கிறது. குரோத மனப்பான்மையில் எதையும் செய்ய வேண்டிய அவசியமே இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இப்பொழுது பார்க்கிறபொழுது நீங்கள்தான் காரணமோ என்னவோ என்ற சந்தேகம் இருக்கிறது.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இதிலே குரோதம் ஒன்றும் நிச்சயமாக இல்லை. முறையாக ஒரு முடிவு ஏற்பட்டவுடன் அப்படியே அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்பீலைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டியவற்றை சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம். அதற்குப் பிறகு இறுதி முடிவு ஏற்பட்டாலும் மின்சார போர்டும், அரசாங்கமும், யாரும் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

வைர்மேன் கன்டிராக்டர்களைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், மற்றவர்களும் அவர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். விசேஷமாக கம்யூனிஸ்டு



6th August 1966] [திரு. வெ. ராமைய்யா]

கட்சித் தலைவர் அவர்கள் டிப்ளோமா ஹோல்டர்களை இந்த வேலையில் ஈடுபடுத்தவேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதனால் கிராமப்புறத்தில் பஞ்சாயத்து போர்டுகளில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு கஷ்டம் வந்துவிடும் என்று சொன்ன அச்சகத்தைப்பற்றி கண்டிப்பாக மின்சாரக் குழுவினர் பரிசீலனை செய்யவேண்டும் என்று நானும் கேட்டுக்கொள்கிறேன். படித்தவர்கள் கிராமத்திற்குப் போனால் சிரமம் இல்லை. 2-02 p.m. போடும்போதே டிப்ளோமா ஹோல்டர்கள்தான் அதைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டால் அது சிரமமாகப் போய்விடும். விவசாயிகள் சிறு காரியத்திற்குக் கூட இவர்களை நாடிச் செல்ல வேண்டும் என்கிற நிலைமை உருவாகிவிடும். நமக்கு ஒரு அனுபவம் இருக்கிறது. கிராமப்புறத்து மக்கள் அப்படி ஒன்றும் தெரியாதவர்கள் இல்லை. இன்றைக்கு பல கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்பட்டிருக்கிறது. ஏதும் அதிகமாக உயிர்ச் சேதம் வந்து விட்டதாகச் சொல்வதற்கில்லை. உட்புற கிராமங்களில் இருக்கும் விவசாயிகள் படித்தவர்களை நாடிப் போய், அதன் மூலம் விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வகையில் விதிகள் மூலம் இவற்றைப் போடுவது அவ்வளவு நல்லதல்ல. இதிலெல்லாம் விதிவிலக்கு கொடுக்க வேண்டுமானால், கொடுக்க முயற்சி எடுக்க வேண்டும் என்கிற கருத்தை நானும் மின்சார போர்டாருக்கு வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் பல குற்றச்சாட்டுகள், கோரிக்கைகள் இருக்கின்றன. நேரமாகிவிட்டது. மணி இரண்டாகிவிட்டது. கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் ரொம்பப் பாராட்டிப் பேசினார்கள். மிக்க சந்தோஷம். நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல, இந்த வருஷமும், ஒவ்வொரு அங்கத்தினரும் சொன்ன கருத்துக்களையெல்லாம் தொகுத்து, தக்க பதில்களை எடுத்து வைத்து, அடுத்த ஆண்டு (குறுக்கீடு) இவரே வருவார், அல்லது வரும் புது அங்கத்தினர்கள் கற்றுக்கொள்ளும் அளவில், இதையெல்லாம் மின்சார போர்டார் செய்வார்கள் என்று சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

MR. CHAIRMAN (Sri M. Dhandayuthapani): The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 8th August 1966.

The House then adjourned.

## XII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*92. *Notification issued with G.O. Ms. No. 1977, Labour, dated the 28th April 1966 making an amendment to the Madras Industrial Disputes Rules, 1958, published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A-8258 of 1958, dated the 18th December 1958 at pages 1-25 of Part I of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 27th December 1958, the same having been previously published. [Laid on the Table of the House under section 38 (4) of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947).]*

*93. *Notification issued with G.O. Ms. No. 2294, Industries, Labour and Co-operation, dated the 24th May 1966 making an amendment to the Madras Industrial Disputes Rules, 1958, published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. 8258 of 1958, dated the 18th December 1958 at pages 1–25 of Part I of the* Fort St. George Gazette, *Extraordinary dated the 27th December 1958 as subsequently amended [Laid on the Table of the House under section 38 (4) of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947).]*

*94. *Notification issued with G.O. Ms. No. 1082, Revenue, dated the 1st April 1966 making an amendmtnt to Rule 31 of the Madras Agricultural Income-Tax Rules, 1955, published with the Revenue Department Notification, dated the 17th December 1955 at pages 649–665 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 21st December 1955, as subsequently amended. [Laid on the Table of the House under section 61 (3) of the Madras Agricultural Income-tax Act, 1955 (Madras Act V of 1955).]*

95. *Notification issued with G.O. Ms. No. 948, Health, dated the 27th May 1966 making an amendment to the rules relating to qualifications to the posts in the Engineering Establishment under Municipal Councils, published with the late Local Self-Government Department Notification No. 1579, dated 21st September 1932, at pages 1006 and 1007 of Part I-A of the* Fort St. George Gazette, *dated the 1st November 1932, as subsequently amended. [Laid on the Table of the House under section 301(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

96. *Notification issued with G.O. Ms. No. 1802, Home, dated the 1st June 1966, regarding the exemption from payment of tax leviable under the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 in respect of passengers, luggage or goods carried in certain vehicles belonging to the Andhra Pradesh State Road Transport Corporation, Hyderabad and plying on temporary permits between Madras and Tirupathy. [Laid on the Table of the House under section 16 (5) of the Madras Motor Vehicles (Taxation of passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952).]*

97. *Annual Report of the Madras Public Service Commission for the year 1964–65. [Laid on the Table of the House under clause (2) of Article 323 of the Constitution of India).]*

## B. Reports, Notifications and other papers.

† 22. *Annexure to the Madras Additional Assessment and Additional Water-cess (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 11 of 1966).*

---

* Laid on the Table of the House on 5th August 1966.

† Despatched to Members on 4th August 1966



## APPENDIX I

[*Vide* answer to Starred Question No. 151 at page 8.]

### I. *Industrial Training Institute.*

The following concessions have been made available to the Burma and Ceylon repatriates seeking admission in Industrial Training Institutes:—

(1) Five per cent of sanctioned seats in each Industrial Training Institute is reserved for Indian nationals returning from Burma and Ceylon.

(2) The prescribed minimum educational qualifications and age-limit are relaxed to the extent necessary.

(3) Exemption from appearing for the Aptitude Test which is conducted before admission is granted if the number of applicants is smaller than the number of seats reserved for them.

(4) A stipend of Rs. 45 each per mensem is awarded to them during the period of training, subject to the condition that the trainees concerned stay away from their parents and the parents are not in a position to meet the extra expenditure involved and their average monthly income does not exceed Rs. 400.

### II. *Polytechnics.*

With effect from 1964-65, one seat in each of the Government Polytechnics shown below is reserved for admission of bona fide Indian students migrating from Burma and Ceylon :—

*For Burma Repatriates at —*

(1) Central Polytechnic, Madras-20.
(2) Government Polytechnic, Coimbatore-14.
(3) Government Polytechnic, Vellore-2.
(4) Government Polytechnic, Nagercoil.
(5) Tamilnad Polytechnic, Madurai.

*For Ceylon Repatriates at —*

(1) Tamilnad Polytechnic, Madurai.
(2) Government Polytechnic, Nagercoil.
(3) Government Polytechnic, Tuticorin.

No financial assistance in the form of stipend or book allowance has been granted to the repatriate trainees admitted in the polytechnics.

## I. தொழில் பயிற்சி நிறுவனங்கள்.

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தாய்நாடு திரும்பியோருக்குத் தொழில் பயிற்சி நிறுவனங்களில் சேருவதற்கும் கீழ்க்கண்ட வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன:—

(1) தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களில் ஐந்து சதவீதம் பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தாய்நாடு திரும்பும் இந்தியருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) நிச்சயிக்கப்பட்ட குறைந்த அளவு கல்வித்தகுதிகளும், வயதுவரையறையும் அவசியமான அளவுக்குத் தளர்த்தப்படுகின்றன.

(3) விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அவர்களுக்காக ஒதுக்கியுள்ள இடங்களைவிடக் குறைவாக இருப்பின், சேர்ப்பதற்கு முன் நடத்தப்படும் தொழில் ஆர்வத்தேர்விலிருந்து (Aptitude Test) விலக்கு அளிக்கப்படுகின்றது.

(4) பயிற்சிக்கால அளவில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவிப்பணம் வழங்கப்படுகின்றது. ஆனால் அது கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டதாகும்:— பயிற்சி பெறுவோர் பெற்றோருடன் இல்லாமல் தொலைவில் தங்கிப் பயிற்சி பெறுபவராயிருக்க வேண்டும். அவர்களுடைய பெற்றோர் மேற்படி பயிற்சிக்காகும் கூடுதல் செலவைக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கவேண்டும். மேலும் அவர்களுடைய சராசரி மாத வருமானம் ரூ. 400-க்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

## II. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்.

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தாய்நாடு திரும்பும் இந்திய மாணவர்களுக்காக 1964–65 முதல் கீழ்க்கண்ட அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஓர் இடம் ஒதுக்கப்படுகிறது:—

**பர்மாவிலிருந்து தாய்நாடு திரும்புவோருக்காக —**

(1) மத்தியப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, சென்னை-20.

(2) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, கோயம்புத்தூர்-14.

(3) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, வேலூர்-2.

(4) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோயில்.

(5) தமிழ்நாடு பல்தொழில் பயிற்சிப்பள்ளி, மதுரை.

**இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்புவோருக்காக —**

(1) தமிழ்நாடு பல்தொழில் பயிற்சிப்பள்ளி, மதுரை.

(2) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோயில்.

(3) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, தூத்துக்குடி.

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்படுபவர்களுக்கு (பர்மா, இலங்கை அகதிகள்) பயிற்சி உதவிப் பணம் அல்லது புத்தகப்படி போன்ற நிதி உதவி எதுவும் வழங்கப்படவில்லை.



## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 152 at page 8.]

*Statement showing the number of permits of stage carriages transferred during the years 1964 and 1965.*

| | Name of the district. | 1964. | 1965. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | Chingleput .. | 10 | 15 |
| 2 | Coimbatore .. | 3 | .. |
| 3 | Dharmapuri .. | ... | 4 |
| 4 | Kanyakumari .. | 27 | 7 |
| 5 | Madras City .. | .. | .. |
| 6 | Madurai .. | 3 | 1 |
| 7 | North Arcot .. | 3 | 2 |
| 8 | The Nilgiris .. | 2 | .. |
| 9 | Ramanathapuram | 3 | 2 |
| 10 | Salem ... | 29 | 22 |
| 11 | South Arcot .. | .. | 23 |
| 12 | Thanjavur .. | .. | 13 |
| 13 | Tiruchirappalli .. | 10 | 3 |
| 14 | Tirunelveli .. | 12 | 24 |
| | Total .. | 102 | 116 |

**1964, 1965-ம் ஆண்டுகளில் மாற்றப்பட்ட பஸ் உரிமங்களின் எண்ணிக்கையைக் காட்டும் அறிக்கை.**

| | மாவட்டங்கள். | 1964. | 1965. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | செங்கற்பட்டு .. | 10 | 15 |
| 2 | கோயம்புத்தூர் .. | 3 | .. |
| 3 | தர்மபுரி .. | .. | 4 |
| 4 | கன்னியாகுமரி .. | 27 | 7 |
| 5 | சென்னைமாநகரம் .. | .. | .. |
| 6 | மதுரை .. .. | 3 | 1 |
| 7 | வட ஆர்க்காடு .. | 3 | 2 |
| 8 | நீலகிரி .. .. | 2 | .. |
| 9 | இராமநாதபுரம் .. | 3 | 2 |
| 10 | சேலம் .. .. | 29 | 22 |
| 11 | தென் ஆர்க்காடு .. | .. | 23 |
| 12 | தஞ்சாவூர் .. .. | .. | 13 |
| 13 | திருச்சிராப்பள்ளி .. | 10 | 3 |
| 14 | திருநெல்வேலி .. | 12 | 24 |
| | மொத்தம் .. | 102 | 116 |

APPENDIX III.

[*Vide* answer to Starred Question No. 161 at page 14.]

(*a*) The work has commenced.

(*b*) The proposed sub-way across Poonamallee High Road, opposite to Central Station, is intended for use by pedestrians to cross the road from the General Hospital side to the Central Station side and vice versa. The pedestrians will cross the road by this sub-way at about 14 feet below the existing road level.

The length of the tunnel portion of the proposed sub-way is 104 feet. A walkway of 16 feet width with a head room of 8 feet is being provided inside the tunnel. Pedestrian staircases of 8 feet width will be provided on either side of the ends of the tunnel so as to enable the pedestrians to enter the sub-way.

The retaining walls of the pedestrian staircases will be constructed with reinforced cement concrete. The tunnel portion of the sub-way is being made up of 8 inches thick R.C.C. Slab running continuously on all the four sides of the tunnel and these slabs will be supported by 30 inches thick frames kept at about 8 feet centre to centre. Special type of water proofing arrangements are also proposed with a view to keep the sub-way water tight.

The sub-way is proposed to be constructed in two halves. When one half of the sub-way is under execution, the vehicles will be allowed over the other half of the road.

(அ) வேலை தொடங்கப்பட்டுள்ளது.

(இ) சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையின் குறுக்கே கட்ட எண்ணியுள்ள சுரங்கப் பாதை ஜெனரல் ஆஸ்பத்திரி பக்கமிருந்து சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கம் கடந்து செல்பவர்களுக்கும், அவ்வாறே சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கமிருந்து ஜெனரல் ஆஸ்பத்திரி பக்கம் செல்பவர்களுக்கும் வசதியாய் இருக்கும். தற்போதைய சாலை மட்டத்திற்குச் சுமார் 14 அடிக்குக் கீழே சுரங்கப் பாதை வழியாக மக்கள் சாலையைக் கடந்து செல்வார்கள்.

சுரங்கப் பாதையில் குடைவரைப் பகுதி (Tunnel portion)-யின் நீளம் 104 அடி. குடைவரைக்குள் 8 அடி உயரத்திலும், 14 அடி அகலத்திலும் நடைபாதை அமைக்கப்படும். சுரங்கப் பாதையில் மக்கள் உட்புகுவது வசதியாய் இருப்பதற்காக, சுரங்கப் பாதையின் இரு முனைகளிலும் 8 அடி அகலமுள்ள படிக்கட்டுகள் அமைக்கப்படும்.

இப்படிக்கட்டுகளின் தாங்கு சுவர்கள் R.C.C. சிமெண்ட்-கான்க்ரீட்டால் கட்டப்படும். சுரங்கப் பாதையின் குடைவரைப் பகுதி 8 அங்குலம் கனமுள்ள R.C.C. பலகைகளால் நாற்புறமும் பதிக்கப்பட்டுத் தொடர்ச்சியாகச் செல்லும். மையத்துக்கு மையம் சுமார் 8 அடி தூரம் விட்டு அமைக்கப்படவிருக்கும் 30 அங்குல கனமுள்ள சட்டங்கள் இப்பலகைகளுக்கு ஆதாரமாக இருக்கும். சுரங்கப் பாதையில் தண்ணீர் தேங்கி நிற்காமல் செய்ய தனி ஏற்பாடுகள் செய்யப்படும்.

இச் சுரங்கப் பாதை வேலை இரு பாதிகளாக எடுத்துக்கொண்டு நிறைவேற்றப்படும். இச்சுரங்கப் பாதையை அமைக்கும் வேலை சாலையின் ஒரு பாதியில் நடக்கையில் சாலையின் மறு பாதியில் வண்டிகள் செல்ல அனுமதிக்கப்படும்.



APPENDIX IV.

[*Vide* answer to Starred Question No. 177 at page 24]

STATEMENT SHOWING THE PARTICULARS REGARDING THE NUMBER OF MATERNITY CENTRES AND OTHER DETAILS IN THE PANCHAYAT UNIONS IN EACH DISTRICT, AS ON 31ST DECEMBER 1965.

| Serial number and name of the district. | Total Centres in Panchayat Union in each district. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 North Arcot .. .. | 255 | 14 | 3 | 127 | 111 |
| 2 South Arcot .. .. | 221 | 13 | 7 | 68 | 133 |
| 3 Chingleput .. .. | 184 | 28 | 1 | 57 | 98 |
| 4 Coimbatore .. .. | 253 | 23 | 7 | 96 | 137 |
| 5 Dharmapuri .. .. | 99 | 18 | .. | 40 | 41 |
| 6 Kanyakumari .. .. | 82 | 2 | 4 | 54 | 22 |
| 7 The Nilgiris .. .. | 42 | 2 | 2 | 34 | 4 |
| 8 Madurai .. .. | 220 | 33 | 11 | 107 | 69 |
| 9 Ramanathapuram .. | 198 | 17 | 5 | 55 | 121 |
| 10 Salem .. .. .. | 173 | 12 | 1 | 93 | 67 |
| 11 Thanjavur .. .. | 257 | 27 | 4 | 77 | 149 |
| 12 Tiruchirappalli .. | 237 | 47 | 10 | 120 | 60 |
| 13 Tirunelveli .. .. | 205 | 23 | 5 | 130 | 47 |
| TOTAL .. | 2,426 | 259 | 60 | 1,048 | 1,059 |

STATEMENT SHOWING THE PARTICULARS REGARDING THE NUMBER OF MATERNITY CENTRES AND OTHER DETAILS IN EACH PANCHAYAT UNION (DISTRICT-WISE) AS ON 31ST DECEMBER 1965.

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| NORTH ARCOT DISTRICT. | | | | | |
| 1 Madanoor .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 2 Alangayam .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 3 Arcot .. .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 4 Katpadi .. .. | 7 | 1 | .. | 6 | .. |

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **NORTH ARCOT DISTRICT—*cont.*** | | | | | |
| 5 Vellore .. .. .. | 6 | 1 | .. | 5 | .. |
| 6 Nemili .. .. .. | 8 | 1 | .. | .. | 7 |
| 7 Anakkavur .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 8 Pudupalayam (6) .. | 4 | .. | .. | 4 | .. |
| 9 Gudiyatham .. .. | 9 | .. | .. | 9 | .. |
| 10 Pernamallur .. .. | 6 | 1 | .. | 4 | 1 |
| 11 Peranambut .. .. | 10 | 1 | .. | 9 | .. |
| 12 Walajahpet .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 13 Chengam .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 14 Thurinjapuram .. | 5 | .. | .. | .. | 5 |
| 15 Kalasapakkam.. .. | 7 | 1 | .. | .. | 6 |
| 16 Thellar .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 17 Arakonam .. .. | 5 | .. | 1 | 4 | .. |
| 18 Kilpennathur .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 19 Chetpet .. .. | 6 | 1 | .. | .. | 5 |
| 20 Polur .. .. | 11 | 3 | .. | 5 | 3 |
| 21 Sholinghur .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 22 Kavaripakkam .. | 9 | .. | .. | .. | 9 |
| 23 Vaniampadi .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 24 Kilvaithankuppam ... | 6 | .. | .. | 6 | .. |
| 25 Tirupathur .. .. | 10 | .. | 1 | 9 | .. |
| 26 Kandili .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 27 Vembakkam .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 28 Cheyyar .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 29 Arni .. .. .. | 6 | .. | 1 | .. | 5 |
| 30 Wandiwash .. .. | 8 | 2 | .. | 4 | 2 |
| 31 Kasthambadi .. | 6 | .. | .. | .. | 6 |
| 32 Timiri .. .. .. | 10 | .. | .. | 2 | 8 |
| 33 Tiruvannamalai .. | 7 | .. | .. | 1 | 6 |
| 34 Natrampalli .. .. | 5 | .. | .. | 5 | .. |
| 35 Thandrampattu .. | 8 | 1 | .. | 7 | .. |
| 36 Anaicut .. .. | 9 | 1 | .. | 7 | 1 |
| | 255 | 14 | 3 | 127 | 111 |
| **SOUTH ARCOT DISTRICT.** | | | | | |
| 1 Kanai .. .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 2 Vanur (9) .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 3 Tirukoilur .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 4 Melamalayanur .. | 7 | .. | 2 | .. | 5 |
| 5 Kallakurichi .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 6 Koliyanur .. .. | 5 | .. | .. | 5 | .. |
| 7 Thirunavalur (6) .. | 3 | 1 | .. | .. | 2 |



| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **SOUTH ARCOT DISTRICT—*cont.*** | | | | | |
| 8 Portonovo .. .. | 8 | 1 | .. | .. | 7 |
| 9 Mailam .. .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 10 Cuddalore .. .. | 9 | 3 | .. | .. | 6 |
| 11 Kandamangalam .. | 7 | .. | .. | 7 | .. |
| 12 Kattumannarkoil .. | 3 | .. | .. | .. | 3 |
| 13 Thiruvennainallur .. | 8 | .. | .. | .. | 8 |
| 14 Panruti .. .. | 6 | 1 | .. | .. | 5 |
| 15 Thittakudi (Mangalore) | 4 | .. | 1 | .. | 3 |
| 16 Olakkur .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 17 Vridhachalam .. .. | 9 | .. | .. | 2 | 7 |
| 18 Kurinjipadi .. .. | 8 | 1 | .. | 1 | 6 |
| 19 Keerapalayam .. | 5 | .. | .. | 2 | 3 |
| 20 Mel Bhuvanagiri .. | 7 | .. | .. | 1 | 5 |
| 21 Chinnasalem .. .. | 8 | .. | 4 | .. | 4 |
| 22 Thyagadurgam .. | 6 | 1 | .. | .. | 5 |
| 23 Ulundurpet .. .. | 3 | .. | .. | 3 | .. |
| 24 Nallur .. .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 25 Gingee .. .. .. | 4 | .. | .. | 2 | 2 |
| 26 Markanam .. .. | 9 | 1 | .. | 8 | .. |
| 27 Mugaiyur .. | 7 | 3 | .. | 2 | 2 |
| 28 T. Vallam (1by DHO). | 7 | .. | .. | .. | 7 |
| 29 Vikravandy .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 30 Sankarapuram .. | 8 | .. | .. | .. | 8 |
| 31 Rishivandiyam .. | 5 | .. | .. | 5 | .. |
| 32 Kammapuram .. | 6 | .. | .. | .. | 6 |
| 33 Nellikuppam .. .. | 10 | .. | .. | .. | 10 |
| 34 Kumaratchi .. .. | 3 | .. | .. | .. | 3 |
| 35 Kalrayan Hills .. | .. | .. | .. | .. | .. |
| | 221 | 13 | 7 | 68 | 133 |
| **CHINGLEPUT DISTRICT.** | | | | | |
| 1 Madhuranthakam .. | 9 | 1 | .. | 8 | .. |
| 2 Gummudipoondi .. | 6 | 1 | .. | 1 | 4 |
| 3 Sriperumbudur .. | 6 | 1 | .. | .. | 5 |
| 4 Tirupporur .. .. | 6 | .. | .. | 2 | 4 |
| 5 Minjur .. .. .. | 9 | 2 | .. | .. | 7 |
| 6 Madhavaram .. .. | 6 | 3 | .. | 3 | .. |
| 7 Poonamallee .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 8 Kadambathur .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 9 Tiruvellore .. .. | 6 | 2 | .. | 4 | .. |
| 10 Uthukottai .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 11 Kathankulathur .. | 7 | 3 | .. | 3 | 1 |
| 12 Ramakrishnarajupet .. | 5 | .. | .. | 5 | .. |

[6th August 1966

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **CHINGLEPUT DISTRICT—*cont.*** | | | | | |
| 13 Tiruttani .. .. | 5 | .. | .. | 1 | 4 |
| 14 Chittamur . .. | 6 | .. | .. | .. | 6 |
| 15 Poondi .. .. .. | 7 | 2 | .. | 4 | 1 |
| 16 St. Thomas Mount .. | 10 | 1 | .. | 4 | 5 |
| 17 Villivakkam .. | 10 | 2 | .. | 8 | .. |
| 18 Kunnathur .. .. | 8 | 1 | .. | 5 | 2 |
| 19 Thirukkalikundram .. | 8 | 3 | .. | .. | 5 |
| 20 Kancheepuram .. | 6 | 1 | .. | 2 | 3 |
| 21 Uthiramerur .. | 10 | .. | .. | .. | 10 |
| 22 Acharappakkam .. | 7 | .. | .. | .. | 7 |
| 23 Pallipet .. .. | 2 | .. | .. | .. | |
| 24 Thiruvalangadu .. | 6 | .. | .. | .. | |
| 25 Sholavaram .. .. | 5 | .. | 1 | .. | |
| 26 Walajabad .. .. | 10 | 5 | .. | .. | 5 |
| 27 Lathur .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| Total .. | 184 | 28 | 1 | 57 | 98 |
| **COIMBATORE DISTRICT.** | | | | | |
| 1 Vellakoil .. .. | 5 | 2 | .. | 1 | 2 |
| 2 Sathyamangalam .. | 5 | .. | .. | 3 | 2 |
| 3 Singanallur .. .. | .. | .. | .. | .. | .. |
| 4 Anthiyur .. .. | 7 | 1 | .. | 6 | .. |
| 5 Avanashi .. .. | 10 | 1 | .. | 9 | .. |
| 6 Sultanpet (Lakshminayakanpalayam). | 5 | .. | .. | .. | 5 |
| 7 Gudimangalam .. | 5 | .. | .. | .. | 5 |
| 8 Thondamuthur .. | 6 | .. | .. | .. | 6 |
| 9 Madukkarai .. .. | 7 | .. | .. | 3 | 4 |
| 10 Modakkurichi .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 11 Mulanur .. .. | 5 | .. | .. | 3 | 2 |
| 12 Perundurai .. .. | 8 | .. | 7 | 1 | .. |
| 13 Bhavani .. .. | 9 | 1 | .. | 1 | 7 |
| 14 Sankarasamakulam .. | 6 | .. | .. | 4 | 2 |
| 15 Bhavanisagar .. .. | 4 | 1 | .. | 1 | 2 |
| 16 Palladam .. .. | 5 | .. | .. | 3 | 2 |
| 17 Annur .. .. | 7 | 3 | .. | 1 | 2 |
| 18 Periyanayakanpalayam | 6 | .. | .. | 3 | 3 |
| 19 Udumalpet .. .. | 9 | 1 | .. | 1 | 7 |
| 20 Ammapet .. .. | 7 | 3 | .. | 2 | 2 |
| 21 Kangayam .. .. | 5 | 3 | .. | .. | 2 |
| 22 Kodimudi .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 23 Pollachi .. .. | 10 | 1 | .. | .. | 9 |



6th August 1966]

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **COIMBATORE DISTRICT—*cont.*** | | | | | |
| 24 Gobichettipalayam .. | 10 | .. | .. | .. | 10 |
| 25 Thalavadi .. .. | 3 | 1 | .. | 2 | .. |
| 26 Tiruppur .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 27 Thucanaickanpalayam | 4 | 1 | .. | .. | 3 |
| 28 Dharapuram .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 29 Erode .. .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 30 Kundadam .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 31 Kinathukadavu .. | 7 | .. | .. | 1 | 6 |
| 32 Sulur .. .. .. | 9 | .. | .. | 1 | 8 |
| 33 Pungalur .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 34 Mettupalayam .. | 8 | 1 | .. | 7 | .. |
| 35 Anamalai .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 36 Uthukuli .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 37 Madathukulam .. | 4 | .. | .. | 2 | 2 |
| 38 Nambiyur .. .. | 6 | .. | .. | 3 | 3 |
| 39 Perundurai (Chinnamalai) | 6 | 2 | .. | 1 | 3 |
| 40 Perur .. .. .. | 10 | 1 | .. | 9 | .. |
| 41 Valparai .. .. | 2 | .. | .. | 2 | .. |
| Total .. | 253 | 23 | 7 | 86 | 137 |
| **THANJAVUR DISTRICT.** | | | | | |
| 1 Sembanarkoil .. .. | 10 | 2 | .. | 1 | 7 |
| 2 Ammapet .. .. | 8 | .. | .. | 2 | 6 |
| 3 Kottur .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 4 Kuttalam .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 5 Thiruvidaimaruthur .. | 10 | 2 | .. | 8 | .. |
| 6 Tirupanandal .. .. | 7 | .. | 1 | 6 | .. |
| 7 Mannargudi .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 8 Kilvelur .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 9 Orathanad .. .. | 9 | .. | .. | 1 | 8 |
| 10 Thirumarugal .. .. | 6 | .. | .. | 2 | 4 |
| 11 Nannilam .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 12 Koradachery .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 13 Pattukkottai .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 14 Tiruvarur .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 15 Avadayarkoil .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 16 Papanasam .. .. | 10 | 3 | .. | 6 | 1 |
| 17 Arantangi .. .. | 10 | .. | .. | 1 | 9 |
| 18 Thiruvaiyaru .. .. | 8 | .. | .. | 1 | 7 |
| 19 Kumbakonam.. .. | 5 | .. | .. | 1 | 4 |
| 20 Madukkur .. .. | 1 | .. | .. | .. | 1 |
| 21 Thiruthuraipundi .. | 5 | .. | .. | 1 | 4 |

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **THANJAVUR DISTRICT—*cont.*** | | | | | |
| 22 Kudavasal .. .. | 4 | 1 | .. | .. | 3 |
| 23 Thanjavur .. .. | 10 | .. | .. | 8 | 2 |
| 24 Peravurani (7) .. | 6 | .. | .. | 6 | .. |
| 25 Needamangalam .. | 8 | .. | .. | 2 | 6 |
| 26 Thalignayar .. .. | 7 | 2 | .. | 1 | 4 |
| 27 Mayuram .. .. | 10 | 1 | .. | .. | 9 |
| 28 Valangiman .. .. | 6 | 3 | 3 | .. | .. |
| 29 Nagappattinam .. | 10 | .. | .. | .. | 10 |
| 30 Vedaranyam .. .. | 11 | 4 | .. | .. | 7 |
| 31 Budalur .. .. | 7 | 1 | .. | .. | 6 |
| 32 Anaickaranchatram. (Coleroon). | 9 | 1 | .. | .. | 8 |
| 33 Sirkali .. .. .. | 10 | 4 | .. | 6 | .. |
| 34 Muthupet .. .. | 6 | 2 | .. | 2 | 2 |
| 35 Sethubavachatram .. | 6 | .. | .. | 6 | .. |
| 36 Tiruvonam .. .. | 4 | 1 | .. | .. | 3 |
| Total .. | 257 | 27 | 4 | 77 | 149 |

TIRUCHIRAPPALLI DISTRICT.

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| 1 Aravakurichi .. .. | 6 | 6 | .. | .. | .. |
| 2 Kulithalai .. .. | 10 | 5 | .. | 5 | .. |
| 3 Thathiengarpet .. | 7 | 2 | .. | 5 | .. |
| 4 Lalgudi .. .. | 10 | 5 | .. | .. | 5 |
| 5 Ariyalur .. .. | 8 | 2 | .. | 2 | 4 |
| 6 Karambakudi .. | 5 | .. | .. | .. | 5 |
| 7 Kadavur .. .. | 5 | 1 | .. | 4 | .. |
| 8 Veppur (8) .. .. | 7 | 2 | .. | 3 | 2 |
| 9 Jayankondam .. | 7 | 1 | .. | 6 | .. |
| 10 Ponnamaravathy .. | 4 | .. | .. | 4 | .. |
| 11 Krishnarajapuram .. | 8 | 4 | .. | 1 | 3 |
| 12 Sendurai .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 13 Arimalam .. .. | 4 | .. | .. | 1 | 3 |
| 14 Manapparai .. .. | 7 | .. | .. | 5 | 2 |
| 15 Tiruvarankulam .. | 7 | 5 | .. | .. | 2 |
| 16 Andanallur( Srirangam). | 6 | .. | .. | 6 | .. |
| 17 Karur .. .. .. | 8 | .. | .. | 4 | 4 |
| 18 Manachanallur .. | 9 | .. | .. | 9 | .. |
| 19 Musiri .. .. .. | 6 | 3 | .. | .. | 3 |
| 20 Tirumayam .. .. | 5 | .. | .. | 2 | 3 |
| 21 Thanthoni .. .. | 7 | 1 | .. | 6 | .. |
| 22 Manikandam .. .. | 5 | 1 | .. | 4 | .. |
| 23 Viralimalai .. .. | 6 | .. | .. | 6 | .. |



| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **TIRUCHIRAPPALLI DISTRICT—*cont.*** | | | | | |
| 24 Perambalur .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 25 Pullambadi .. .. | 7 | .. | 1 | 5 | 1 |
| 26 Andimadam .. .. | 7 | .. | .. | 4 | 3 |
| 27 Marungapuri .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 28 Thuraiyur .. .. | 7 | .. | .. | 3 | 4 |
| 29 T. Payhur (Palur T) .. | 6 | .. | .. | 6 | .. |
| 30 K. Paramathi .. | 6 | .. | 1 | .. | 5 |
| 31 Kunnandarkoil (Keeranur). | 5 | 1 | .. | 2 | 2 |
| 32 Thottiam .. .. | 6 | .. | 2 | 4 | .. |
| 33 Uppiliapuram .. | 5 | .. | 2 | 3 | .. |
| 34 Veppanthatti .. | 4 | .. | 3 | 1 | .. |
| 35 Thirumanur .. .. | 3 | 3 | .. | .. | .. |
| 36 Vyampatti .. .. | 2 | .. | .. | .. | 2 |
| 37 Alathur .. .. | 3 | .. | .. | 3 | .. |
| 38 Thiruvarambur .. | 5 | 4 | .. | .. | 1 |
| 39 Annavasal .. .. | 6 | 1 | 1 | 4 | .. |
| Total .. | 237 | 47 | 10 | 120 | 60 |

TIRUNELVELI DISTRICT.

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| 1 Alwarthirunagari .. | 9 | .. | .. | 9 | .. |
| 2 Ottapidaram (9) .. | 8 | .. | .. | .. | 8 |
| 3 Nanguneri .. .. | 8 | 1 | .. | 7 | .. |
| 4 Sattankulam .. .. | 6 | 2 | .. | 4 | .. |
| 5 Koilpatti .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 6 Tenkasi .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 7 Kayathar .. .. | 5 | .. | .. | 5 | .. |
| 8 Kalakad .. .. | 7 | 1 | .. | 6 | .. |
| 9 Kurivikulam .. .. | 7 | 1 | .. | .. | 6 |
| 10 Sankarankoil .. .. | 4 | 2 | .. | 2 | .. |
| 11 Pavoorchatram (Kilpavoor). | 7 | .. | .. | 6 | 1 |
| 12 Pudur .. .. .. | 5 | 1 | .. | 3 | 1 |
| 13 Radhapuram .. .. | 10 | 2 | .. | 2 | 6 |
| 14 Valliyur .. .. | 4 | 2 | .. | 2 | .. |
| 15 Tiruchendur .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 16 Vasudevanallur .. | 6 | 1 | .. | 5 | .. |
| 17 Pappakudi .. .. | 5 | .. | .. | 4 | 1 |
| 18 Vilathikulam .. .. | 6 | .. | 1 | .. | 5 |
| 19 Srivaikuntam .. .. | 9 | .. | .. | 9 | .. |
| 20 Karungulam .. .. | 6 | .. | .. | 5 | 1 |
| 21 Melneelithanallur .. | 5 | 1 | .. | 4 | .. |
| 22 Manur .. .. .. | 7 | 3 | .. | 3 | 1 |

| Serial number and name of the Panchayat Union. | Total centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **TIRUNELVELI DISTRICT—*cont.*** | | | | | |
| 23 Tuticorin .. .. | 5 | 3 | 1 | 1 | .. |
| 24 Alangulam .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 25 Senkottah .. .. | 5 | .. | .. | 5 | .. |
| 26 Udangudi .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 27 Cheranmadevi .. | 8 | .. | 2 | 6 | .. |
| 28 Kadayam .. .. | 7 | 3 | .. | 4 | .. |
| 29 Ambasamudram .. | 9 | .. | .. | 9 | .. |
| 30 Kadayanallur .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 31 Palayamkottai .. | 8 | .. | 1 | .. | 7 |
| Total .. | 205 | 23 | 5 | 130 | 47 |

RAMANATHAPURAM DISTRICT.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 1 Rajapalayam .. .. | 9 | 4 | .. | .. | 5 |
| 2 Devakottai .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 3 Bogalur .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 4 Watrap .. .. | 8 | 1 | .. | .. | 7 |
| 5 Vembakottai .. .. | 7 | .. | 2 | 5 | .. |
| 6 Sivakasi .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 7 Narikudi .. .. | 6 | 1 | .. | .. | 5 |
| 8 Virudhunagar .. .. | 6 | .. | 1 | 5 | .. |
| 9 Sakkottai .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 10 Sivaganga .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 11 Mandapam .. .. | 3 | .. | .. | 3 | .. |
| 12 Arupukottai .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 13 Singampunari .. .. | 7 | 2 | .. | 1 | 4 |
| 14 Srivilliputhur .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 15 Sathur .. .. .. | 8 | 2 | .. | .. | 6 |
| 16 Kariapatti .. .. | 6 | .. | .. | 1 | 5 |
| 17 Mudukulathur .. | 6 | .. | .. | 6 | .. |
| 18 Kamuthi .. .. | 9 | .. | .. | .. | 9 |
| 19 Kadaladi .. .. | 9 | .. | .. | .. | 9 |
| 20 Paramakudi .. .. | 5 | .. | 1 | 4 | .. |
| 21 Ramanathapuram .. | 3 | .. | .. | .. | 3 |
| 22 Manamadurai .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 23 Kalayarkoil .. .. | 6 | 4 | .. | 2 | .. |
| 24 Tiruvadanai .. .. | 4 | .. | .. | 4 | .. |
| 25 Kannankudi .. .. | 4 | .. | .. | 1 | 3 |
| 26 Rajasinga Mangalam .. | 5 | .. | 1 | .. | 4 |
| 27 Kallal .. .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 28 Tiruppuvanam.. .. | 7 | .. | .. | .. | 7 |
| 29 Tiruchuli .. .. | 6 | 2 | .. | 4 | .. |



| Serial number and name of the Panchayat Union. | Total centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **RAMANATHAPURAM DISTRICT—*cont.*** | | | | | |
| 30 Tiruppulam .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 31 Tiruppathur .. .. | 5 | 1 | .. | .. | 4 |
| 32 Ilayankudi .. .. | 8 | .. | .. | 1 | 7 |
| Total .. | 198 | 17 | 5 | 55 | 121 |

SALEM DISTRICT.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 1 Kulathur .. .. | 4 | .. | .. | 4 | .. |
| 2 Nangavalli .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 3 Taramangalam .. | 4 | .. | .. | .. | 4 |
| 4 Kadayampatti .. | 5 | .. | 1 | 1 | 3 |
| 5 Omalur (9) .. .. | 8 | .. | .. | 4 | 4 |
| 6 Mecheri .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 7 Yercaud .. .. | 2 | 1 | .. | .. | 1 |
| 8 Varghapadi .. .. | 5 | 2 | .. | 3 | .. |
| 9 Veerapandi .. .. | 8 | 3 | .. | .. | 5 |
| 10 Karipatti .. .. | 8 | 1 | .. | .. | 7 |
| 11 Panaimarathupatti .. | 6 | .. | .. | 1 | 5 |
| 12 Salem .. .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 13 Sankari .. .. | 5 | .. | .. | 5 | .. |
| 14 Edapadi .. .. | 4 | .. | .. | 4 | .. |
| 15 Konganapuram .. | 3 | .. | .. | 3 | .. |
| 16 Magudanjavadi .. | 5 | .. | .. | 5 | .. |
| 17 Tiruchengodu .. .. | 5 | .. | .. | 2 | 3 |
| 18 Pallipalayam .. .. | 2 | 1 | .. | .. | 1 |
| 19 Elachipalayam .. | 5 | .. | .. | 5 | .. |
| 20 Mallasamudram .. | 2 | .. | .. | 2 | .. |
| 21 Rasipuram .. .. | 5 | 1 | .. | 3 | 1 |
| 22 Vennandur .. .. | 5 | .. | .. | 3 | 2 |
| 23 Namagiripet .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 24 Thalivasal (5) .. .. | 4 | .. | .. | 4 | .. |
| 25 Attur .. .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 26 Gangavalli .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 27 Peddinaickenpalayam | 6 | 1 | .. | .. | 5 |
| 28 Namakkal .. .. | 5 | 1 | .. | .. | 4 |
| 29 Mohanur .. .. | 4 | .. | .. | 4 | .. |
| 30 Paramathi .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 31 Kapilamalai .. .. | 5 | 1 | .. | 4 | .. |
| 32 Sendamangalam .. | 5 | .. | .. | 5 | .. |
| 33 Erumaipatti .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 34 Puduchatram .. | 4 | .. | .. | 4 | .. |
| 35 Kolli Hills .. .. | .. | .. | .. | .. | .. |
| Total .. | 173 | 12 | 1 | 93 | 67 |

| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **DHARMAPURI DISTRICT.** | | | | | |
| 1 Hosur .. .. .. | 5 | 1 | .. | 2 | 2 |
| 2 Shoolagiri .. .. | 7 | .. | .. | 2 | 5 |
| 3 Thali .. .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 4 Kelamangalam .. | 2 | .. | .. | 1 | 1 |
| 5 Veppanapalli .. .. | 3 | 2 | .. | .. | 1 |
| 6 Krishnagiri .. .. | 5 | .. | .. | 5 | .. |
| 7 Uthanagiri (10) .. | 6 | .. | .. | 3 | 3 |
| 8 Bargur .. .. | 9 | 8 | .. | .. | 1 |
| 9 Morapur .. .. | 8 | 1 | .. | 7 | .. |
| 10 Pappireddipatti .. | 4 | 1 | .. | 3 | .. |
| 11 Dharmapuri .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 12 Palacode (10) .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 13 Nallampallee .. .. | 4 | 1 | .. | 3 | .. |
| 14 Perinagaram .. .. | 9 | .. | .. | 8 | 1 |
| 15 Kaveripattinam .. | 10 | 4 | .. | .. | 6 |
| 16 Harur .. .. .. | 7 | .. | .. | .. | 7 |
| Total .. | 99 | 18 | .. | 40 | 41 |

| Serial number and name of the Panchayat Union. | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| **KANYAKUMARI DISTRICT.** | | | | | |
| 1 Agasteeswaram .. | 8 | .. | .. | 5 | 3 |
| 2 Munichirai .. .. | 10 | .. | 1 | 7 | 2 |
| 3 Rajakkamagalam .. | 8 | .. | 3 | .. | 5 |
| 4 Melpuram .. .. | 10 | 1 | .. | 9 | .. |
| 5 Killiyoor .. .. | 9 | 1 | .. | 8 | .. |
| 6 Kurunthencode .. | 10 | .. | .. | 10 | .. |
| 7 Thovala .. .. | 6 | .. | .. | 4 | 2 |
| 8 Thuckalay .. .. | 11 | .. | .. | 11 | .. |
| 9 Thiruvattur .. .. | 10 | .. | .. | .. | 10 |
| Total .. | 82 | 2 | 4 | 54 | 22 |
| **NILGIRIS DISTRICT.** | | | | | |
| 1 Gudalur .. .. | 11 | 1 | .. | 10 | .. |
| 2 Ootaeamund .. .. | 12 | 1 | .. | 9 | 2 |
| 3 Coonoor .. .. | 10 | .. | 2 | 8 | .. |
| 4 Kotagiri .. .. | 9 | .. | .. | 7 | 2 |
| Total .. | 42 | 2 | 2 | 34 | 4 |



| Serial number and name of the Panchayat Union. | Total Centres in Panchayat Union. | Centres working in Union building. | Centres working in Government building. | Centres functioning in rented building. | Centres functioning in rent-free building. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **MADURAI DISTRICT.** | | | | | |
| 1 Vadamadurai .. | 6 | .. | .. | 6 | .. |
| 2 Thoppampatti .. | 8 | 2 | .. | 6 | .. |
| 3 Vadipatti .. .. | 5 | 1 | .. | .. | 4 |
| 4 Vedasandur .. .. | 6 | .. | .. | 1 | 5 |
| 5 Sanarpatti .. .. | 4 | 2 | .. | 1 | 1 |
| 6 Cumbum .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 7 Tirupparankundram .. | 10 | .. | 3 | 7 | .. |
| 8 Batlagundu .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 9 Melur (South) .. | 6 | .. | 3 | 3 | .. |
| 10 Nilakottai .. .. | 9 | 3 | .. | 3 | 3 |
| 11 Palayam .. .. | 6 | 2 | .. | 1 | 3 |
| 12 Dindigul .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 13 Periyakulam (Vaduga-pathy). | 8 | .. | .. | 6 | 2 |
| 14 Athur II (Reddiar-Palayam). | 8 | 2 | .. | 6 | .. |
| 15 Madurai (East) .. | 8 | 1 | .. | 7 | .. |
| 16 Madurai (West) .. | 6 | 3 | .. | 3 | .. |
| 17 Melur (North) .. | 7 | .. | 4 | 2 | 1 |
| 18 Natham .. .. | 8 | 6 | .. | 2 | .. |
| 19 Thirumangalam .. | 8 | .. | .. | .. | 8 |
| 20 Kalligudi .. .. | 6 | .. | 1 | 5 | .. |
| 21 T.Kallupatti .. .. | 6 | 1 | .. | 5 | .. |
| 22 Sedapatti .. .. | 7 | 1 | .. | 6 | .. |
| 23 Usilampatti .. .. | 3 | .. | .. | .. | 3 |
| 24 Chellampatti .. .. | 6 | .. | .. | 1 | 5 |
| 25 Andipatti .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 26 Alanganallur .. .. | 7 | 3 | .. | 1 | 3 |
| 27 Athur I .. .. | 10 | 2 | .. | .. | 8 |
| 28 Kodaikanal .. .. | 3 | 1 | .. | .. | 2 |
| 29 Oddanchatram .. | 7 | .. | .. | 5 | 2 |
| 30 Theni .. | 7 | .. | .. | 5 | 2 |
| 31 Chinnamanur .. | 5 | .. | .. | 3 | 2 |
| 32 Uthamapalayam .. | 5 | 1 | .. | 2 | 2 |
| 33 Bodinaickanur .. | 3 | 2 | .. | .. | 1 |
| 34 Palani .. .. | 7 | .. | .. | 7 | .. |
| Total .. | 220 | 33 | 11 | 107 | 69 |

## ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள தாய்-சேய் நல விடுதிகளின் எண்ணிக்கைகளையும் மற்ற விவரங்களையும் 31—12—65 வரை காட்டும் விவர அறிக்கை.

| தொடரிலக்கம், மாவட்டத்தின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியன் கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (3) | அரசாங்க கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| 1 வட ஆர்க்காடு .. .. .. | 255 | 14 | 3 | 127 | 111 |
| 2 தென் ஆர்க்காடு .. .. .. | 221 | 13 | 7 | 68 | 133 |
| 3 செங்கற்பட்டு .. .. .. | 184 | 28 | 1 | 57 | 98 |
| 4 கோயம்புத்தூர் .. .. .. | 253 | 23 | 7 | 96 | 137 |
| 5 தர்மபுரி .. .. .. .. | 99 | 18 | .. | 40 | 41 |
| 6 கன்னியாகுமரி .. .. .. | 82 | 2 | 4 | 54 | 22 |
| 7 நீலகிரி .. .. .. .. | 42 | 2 | 2 | 34 | 4 |
| 8 மதுரை .. .. .. .. | 220 | 33 | 11 | 107 | 69 |
| 9 இராமநாதபுரம் .. .. .. | 198 | 17 | 5 | 55 | 121 |
| 10 சேலம் .. .. .. .. | 173 | 12 | 1 | 93 | 67 |
| 11 தஞ்சாவூர் .. .. .. | 257 | 27 | 4 | 77 | 149 |
| 12 திருச்சிராப்பள்ளி .. .. .. | 237 | 47 | 10 | 120 | 60 |
| 13 திருநெல்வேலி .. .. .. | 205 | 23 | 5 | 130 | 47 |
| மொத்தம் .. | 2,426 | 259 | 60 | 1,048 | 1,059 |

## மாவட்ட வாரியாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலுமுள்ள தாய்-சேய் நல விடுதிகளின் எண்ணிக்கையையும், மற்ற விவரங்களையும் 31—12—65 வரை காட்டும் விவர அறிக்கை.



| தொடரிலக்கம், பஞ்சாயத்து யூனியனின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியனின் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (3) | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| **வட ஆர்க்காடு மாவட்டம்** | | | | | |
| 1 மாதனூர் .. .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 2 ஆலங்காயம் .. .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 3 ஆர்க்காடு .. .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 4 காட்பாடி .. .. .. | 7 | 1 | .. | 6 | .. |
| **வட ஆர்க்காடு மாவட்டம்—தொடர்ச்சி.** | | | | | |
| 5 வேலூர் .. .. .. .. | 6 | 1 | .. | 5 | .. |
| 6 நெமிலி .. .. .. .. | 8 | 1 | .. | .. | 7 |
| 7 அனக்காவூர் .. .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 8 புதுப்பாளையம் (6) .. .. .. | 4 | .. | .. | 4 | .. |
| 9 குடியாத்தம் .. .. .. | 9 | .. | .. | 9 | .. |
| 10 பேரணமல்லூர் .. .. .. | 6 | 1 | .. | 4 | 1 |
| 11 பேரணம்பட்டு .. .. .. | 10 | 1 | .. | 9 | .. |
| 12 வாலாஜாபேட்டை .. .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 13 செங்கம் .. .. .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 14 துரிஞ்சாபுரம் .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 15 கலசப்பாக்கம் .. .. .. | 7 | 1 | .. | .. | 6 |
| 16 தெள்ளாறு .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 17 அரக்கோணம் .. .. .. | 5 | .. | 1 | 4 | .. |
| 18 கீழ்பெண்ணாத்தூர் .. .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 19 சேத்துப்பட்டு .. .. .. | 6 | 1 | .. | .. | 5 |
| 20 போளூர் .. .. .. .. | 11 | 3 | .. | 5 | 3 |
| 21 சோழ சிம்மபுரம் .. .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 22 காவேரிப்பாக்கம் .. .. .. | 9 | .. | .. | .. | 9 |
| 23 கணியம்பாடி .. .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 24 கீழ் வைத்தியன் குப்பம் .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 25 திருப்பத்தூர் .. .. .. | 10 | .. | 1 | 9 | .. |
| 26 கந்திலி .. .. .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 27 வெம்பாக்கம் .. .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 28 செய்யாறு .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 29 ஆரணி .. .. .. .. | 6 | .. | 1 | .. | 5 |
| 30 வந்தவாசி .. .. .. | 8 | 2 | .. | 4 | 2 |
| 31 கலஸ்தம்பாடி .. .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 32 திமிரி .. .. .. .. | 10 | .. | .. | 2 | 8 |
| 33 திருவண்ணாமலை .. .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 34 நாட்டரம்பள்ளி .. .. .. | 5 | .. | .. | 5 | .. |
| 35 தண்டராம்பட்டு .. .. .. | 8 | 1 | .. | 7 | .. |
| 36 அணைக்கட்டு .. .. .. | 9 | 1 | .. | 7 | 1 |
| மொத்தம் .. | 255 | 14 | 3 | 127 | 111 |

### தென் ஆர்க்காடு மாவட்டம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 1 காணை .. .. .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 2 வானூர் (9) .. .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 3 திருக்கோயிலூர் .. .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 4 மேல் மலையனூர் .. .. .. | 7 | .. | 2 | .. | 5 |
| 5 கள்ளக்குறிச்சி .. .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 6 கோலியனூர் .. .. .. | 5 | .. | .. | 5 | .. |

| தொழிலகம், பஞ்சாயத்து யூனியனின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியன் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (3) | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| **தென் ஆர்க்காடு மாவட்டம்—தொடர்ச்சி.** | | | | | |
| 7 திருநாவலூர் (6) | 3 | 1 | .. | .. | 2 |
| 8 பறங்கிப்பேட்டை | 8 | 1 | .. | .. | 7 |
| 9 மைலம் | 8 | .. | .. | 8 | .. |
| 10 கடலூர் | 9 | 3 | .. | .. | 6 |
| 11 கண்டமங்கலம் | 7 | .. | .. | 7 | .. |
| 12 காட்டுமன்னார்கோயில் | 3 | .. | .. | .. | 3 |
| 13 திருவெண்ணெய்நல்லூர் | 8 | .. | .. | .. | 8 |
| 14 பண்ருட்டி | 6 | 1 | .. | .. | 5 |
| 15 திட்டக்குடி (மங்களூர்) | 4 | .. | 1 | .. | 3 |
| 16 ஒலக்கூர் | 6 | .. | .. | 6 | .. |
| 17 விருத்தாசலம் | 9 | .. | .. | 2 | 7 |
| 18 குறிஞ்சிப்பாடி | 8 | 1 | .. | 1 | 6 |
| 19 கீரப்பாளையம் | 5 | .. | .. | 2 | 3 |
| 20 மேல்புவனகிரி | 7 | 1 | .. | 1 | 5 |
| 21 சின்னசேலம் | 8 | .. | 4 | .. | 4 |
| 22 தியாகதுர்க்கம் | 6 | 1 | .. | .. | 5 |
| 23 உளுந்தூர்பேட்டை | 3 | .. | .. | 3 | .. |
| 24 நல்லூர் | 8 | .. | .. | .. | 8 |
| 25 செஞ்சி | 4 | .. | .. | 2 | 2 |
| 26 மரக்காணம் | 9 | 1 | .. | 8 | .. |
| 27 முகையூர் | 7 | 3 | .. | 2 | 2 |
| 28 டி. வல்லம் (மாவட்டச் சுகாதார அதிகாரியால் 1) | 7 | .. | .. | .. | 7 |
| 29 விக்கிரவாண்டி | 5 | .. | .. | .. | 5 |
| 30 சங்கராபுரம் | 8 | .. | .. | .. | 8 |
| 31 ரிஷிவந்தியம் | 5 | .. | .. | 5 | .. |
| 32 கம்மாபுரம் | 6 | .. | .. | .. | 6 |
| 33 நெல்லிக்குப்பம் | 10 | .. | .. | .. | 10 |
| 34 குமராட்சி | 3 | .. | .. | .. | 3 |
| 35 கல்ராயன்மலை | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 221 | 13 | 7 | 68 | 133 |
| **செங்கற்பட்டு மாவட்டம்.** | | | | | |
| 1 மதுராந்தகம் | 9 | 1 | .. | 8 | .. |
| 2 கும்மிடிப்பூண்டி | 6 | 1 | .. | 1 | 4 |
| 3 ஸ்ரீபெரும்புதூர் | 6 | 1 | .. | .. | 5 |
| 4 திருப்போரூர் | 6 | .. | .. | 2 | 4 |
| 5 மீஞ்சூர் | 9 | 2 | .. | .. | 7 |
| 6 மாதவரம் | 6 | 3 | .. | 3 | .. |
| 7 பூவிருந்தவல்லி | 7 | .. | .. | 1 | 6 |
| 8 கடம்பத்தூர் | 6 | .. | .. | 6 | .. |



| தொழிலகம், பஞ்சாயத்து யூனியனின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியன் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (3) | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| **செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.** | | | | | |
| 9 திருவள்ளூர் | 6 | 2 | .. | 4 | .. |
| 10 ஊத்துக்கோட்டை | 6 | .. | .. | .. | 6 |
| 11 காட்டான்குளத்தூர் | 7 | 3 | .. | 3 | 1 |
| 12 இராமகிருஷ்ண ராஜபேட்டை | 5 | .. | .. | 5 | .. |
| 13 திருத்தணி | 5 | .. | .. | 1 | 4 |
| 14 சித்தாமூர் | 6 | .. | .. | .. | 6 |
| 15 பூண்டி | 7 | 2 | .. | 4 | 1 |
| 16 பறங்கிமலை | 10 | 1 | .. | 4 | 5 |
| 17 வில்லிவாக்கம் | 10 | 2 | .. | 8 | .. |
| 18 குன்றத்தூர் | 8 | 1 | .. | 5 | 2 |
| 19 திருக்கழுக்குன்றம் | 8 | 3 | .. | .. | 5 |
| 20 காஞ்சிபுரம் | 6 | 1 | .. | 2 | 3 |
| 21 உத்திரமேரூர் | 10 | .. | .. | .. | 10 |
| 22 அச்சரப்பாக்கம் | 7 | .. | .. | .. | 7 |
| 23 பள்ளிப்பட்டு | 2 | .. | .. | .. | 2 |
| 24 திருவாலங்காடு | 6 | .. | .. | .. | 6 |
| 25 சோழவரம் | 5 | .. | 1 | .. | 4 |
| 26 வாலாஜாபாத் | 10 | 5 | .. | .. | 5 |
| 27 லத்தூர் | 5 | .. | .. | .. | 5 |
| மொத்தம் .. | 184 | 28 | 1 | 57 | 98 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்.** | | | | | |
| 1 வெள்ளக்கோயில் | 5 | 2 | .. | 1 | 2 |
| 2 சத்தியமங்கலம் | 5 | .. | .. | 3 | 2 |
| 3 சிங்காநல்லூர் | .. | .. | .. | .. | .. |
| 4 அந்தியூர் | 7 | 1 | .. | 6 | .. |
| 5 அவனாசி | 10 | 1 | .. | 9 | .. |
| 6 சுல்தான்பேட்டை (லட்சுமி நாயக்கன்பாளையம்). | 5 | .. | .. | .. | 5 |
| 7 குடிமங்கலம் | 5 | .. | .. | .. | 5 |
| 8 தொண்டாமுத்தூர் | 6 | .. | .. | .. | 6 |
| 9 மதுக்கரை | 7 | .. | .. | 3 | 4 |
| 10 மொடக்குறிச்சி | 7 | .. | .. | .. | 7 |
| 11 மூலனூர் | 5 | .. | .. | 3 | 2 |
| 12 பெருந்துறை | 8 | .. | 7 | 1 | .. |
| 13 பவானி | 9 | 1 | .. | 1 | 7 |
| 14 சர்க்கார் சாமக்குளம் | 6 | .. | .. | 4 | 2 |
| 15 பவானிசாகர் | 4 | 1 | .. | 1 | .. |
| 16 பல்லடம் | 5 | .. | .. | 3 | 2 |
| 17 அன்னூர் | 7 | 3 | .. | 1 | 3 |
| 18 பெரியநாயக்கன் பாளையம் | 6 | .. | .. | 3 | 3 |

| தொடரிலக்கம், பஞ்சாயத்து யூனியனின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியன் கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (3) | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| **கோயம்புத்தூர் மாவட்டம்—தொடர்ச்சி.** | | | | | |
| 19 உடுமலைப்பேட்டை .. .. | 9 | 1 | .. | 1 | 7 |
| 20 அம்மாபேட்டை .. .. .. | 7 | 3 | .. | 2 | 2 |
| 21 காங்கேயம் .. .. .. | 5 | 3 | .. | .. | 2 |
| 22 கொடுமுடி .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 23 பொள்ளாச்சி .. .. .. | 10 | 1 | .. | .. | 9 |
| 24 கோபிசெட்டிபாளையம் .. .. | 10 | .. | .. | .. | 10 |
| 25 தலவாடி .. .. .. .. | 3 | 1 | .. | 2 | .. |
| 26 திருப்பூர் .. .. .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 27 தூக்கநாயக்கன்பாளையம் .. | 4 | 1 | .. | .. | 3 |
| 28 தாராபுரம் .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 29 ஈரோடு .. .. .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 30 குண்டடம் .. .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 31 கிணத்துக்கடவு .. .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 32 சூலூர் .. .. .. .. | 9 | .. | .. | 2 | 8 |
| 33 பொங்கலூர் .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 34 மேட்டுப்பாளையம் .. .. .. | 8 | 1 | .. | 7 | .. |
| 35 ஆனைமலை .. .. .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 36 ஊத்துக்குளி .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 37 மடத்துக்குளம் .. .. .. | 4 | .. | .. | 2 | 2 |
| 38 நம்பியூர் .. .. .. .. | 6 | .. | .. | 3 | 3 |
| 39 பெருந்துறை (சென்னை மலை) .. | 6 | 2 | .. | 1 | 3 |
| 40 பேரூர் .. .. .. .. | 10 | 1 | .. | 9 | .. |
| 41 வால்பாறை .. .. .. | 2 | .. | .. | 2 | .. |
| மொத்தம் .. | 253 | 23 | 7 | 86 | 137 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | | | | | |
| 1 செம்பொனார்கோயில் .. .. | 10 | 2 | .. | 1 | 7 |
| 2 அம்மாப்பேட்டை .. .. | 8 | .. | .. | 2 | 6 |
| 3 கொரட்டூர் .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 4 குத்தாலம் .. .. .. | 8 | .. | .. | 8 | .. |
| 5 திருவிடமருதூர் .. .. .. | 10 | 2 | .. | 8 | .. |
| 6 திருப்பனந்தாள் .. .. .. | 7 | .. | 1 | 6 | .. |
| 7 மன்னார்குடி .. .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 8 கீழ்வேளூர் .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 9 ஒரத்தநாடு .. .. .. | 9 | .. | .. | 1 | 8 |
| 10 திருமங்கலம் .. .. .. | 6 | .. | .. | 2 | 4 |
| 11 நன்னிலம் .. .. .. | 7 | .. | .. | 1 | 6 |
| 12 கொரடாச்சேரி .. .. .. | 6 | .. | .. | .. | 6 |
| 13 பட்டுக்கோட்டை .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 14 திருவாரூர் .. .. .. | 4 | .. | .. | .. | 4 |
| 15 ஆவுடையார் கோயில் .. .. | 4 | .. | .. | .. | 4 |



| தொடரிலக்கம், பஞ்சாயத்து யூனியனின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியன் கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (3) | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கி வரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.** | | | | | |
| 16 பாபநாசம் .. .. .. | 10 | 3 | .. | 6 | 1 |
| 17 அறந்தாங்கி .. .. .. | 10 | .. | .. | 1 | 9 |
| 18 திருவையம் .. .. .. | 8 | .. | .. | 1 | 7 |
| 19 கும்பகோணம் .. .. .. | 5 | .. | .. | .. | 4 |
| 20 மடக்கூர் .. .. .. .. | 1 | .. | .. | .. | 1 |
| 21 திருத்துறைப்பூண்டி .. .. | 5 | .. | .. | 1 | 4 |
| 22 குடவாசல் .. .. .. .. | 4 | 1 | .. | .. | 3 |
| 23 தஞ்சாவூர் .. .. .. .. | 10 | .. | .. | 8 | 2 |
| 24 போராவூரணி (7) .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 25 நீடாமங்கலம் .. .. .. | 8 | .. | .. | 2 | 6 |
| 26 தலைஞாயிறு .. .. .. | 7 | 2 | .. | 1 | 4 |
| 27 மாயூரம் .. .. .. .. | 10 | 1 | .. | .. | 9 |
| 28 வலங்கிமான் .. .. .. | 6 | 3 | 3 | .. | .. |
| 29 நாகப்பட்டினம் .. .. .. | 10 | .. | .. | .. | 10 |
| 30 வேதாரண்யம் .. .. .. | 11 | 4 | .. | .. | 7 |
| 31 பூதலூர் .. .. .. .. | 7 | 1 | .. | .. | 6 |
| 32 ஆனைக்காரன் சத்திரம் (கொள்ளிடம்) | 9 | 1 | .. | .. | 8 |
| 33 சீர்காழி .. .. .. .. | 10 | 4 | .. | 6 | .. |
| 34 முத்துப்பேட்டை .. .. .. | 6 | 2 | .. | 2 | 2 |
| 35 சேதுபாவா சத்திரம் .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 36 திருவோணம் .. .. .. | 4 | 1 | .. | .. | 3 |
| மொத்தம் .. | 257 | 27 | 4 | 77 | 149 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | | | | | |
| 1 அரவக்குறிச்சி .. .. .. | 6 | 6 | .. | .. | .. |
| 2 குளித்தலை .. .. .. | 10 | 5 | .. | 5 | .. |
| 3 தாத்தையங்கார் பேட்டை .. | 7 | 2 | .. | 5 | .. |
| 4 லால்குடி .. .. .. .. | 10 | 5 | .. | .. | 5 |
| 5 அரியலூர் .. .. .. .. | 8 | 2 | .. | 2 | 4 |
| 6 கரம்பக்குடி .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 7 கடலூர் .. .. .. .. | 5 | 1 | .. | 4 | .. |
| 8 வேப்பூர் (8) .. .. .. | 7 | 2 | .. | 3 | 2 |
| 9 ஜெயங்கொண்டான் .. .. | 7 | 1 | .. | 6 | .. |
| 10 பொன்னமராவதி .. .. | 4 | .. | .. | 4 | .. |
| 11 கிருஷ்ணராஜபுரம் .. .. | 8 | 4 | .. | 1 | 3 |
| 12 செந்துறை .. .. .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 13 அரிமலம் .. .. .. .. | 4 | .. | .. | 1 | 3 |
| 14 மணப்பாறை .. .. .. | 7 | .. | .. | 5 | 2 |
| 15 முசிறி .. .. .. .. | 6 | 3 | .. | .. | 3 |
| 16 திருவரங்குளம் .. .. .. | 7 | 5 | .. | .. | 2 |
| 17 அந்தநல்லூர் (ஸ்ரீரங்கம்) .. | 6 | .. | .. | 6 | .. |

| தொடரிலக்கம், பஞ்சாயத்து யூனியனின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியன் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (3) | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி.** | | | | | |
| 18 கரூர் | 8 | .. | .. | 4 | 4 |
| 19 மணச்சநல்லூர் | 9 | .. | .. | 9 | .. |
| 20 திருமான்யம் | 5 | .. | .. | 2 | 3 |
| 21 தாந்தோணி | 7 | 1 | .. | 6 | .. |
| 22 மணிகண்டம் | 5 | 1 | .. | 4 | .. |
| 23 விராலிமலை | 6 | .. | .. | 6 | .. |
| 24 பெரம்பலூர் | 6 | .. | .. | 6 | .. |
| 25 புள்ளம்பாடி | 7 | .. | 1 | 5 | 1 |
| 26 ஆண்டிமடம் | 7 | .. | .. | 4 | 3 |
| 27 மருங்காபுரி | 6 | .. | .. | .. | 6 |
| 28 துறையூர் | 7 | .. | .. | 3 | 4 |
| 29 டி. பழூர் (டி. பாலூர்) | 6 | .. | .. | 6 | .. |
| 30 கே. பரமத்தி | 6 | .. | 1 | .. | 5 |
| 31 குண்ணடார்கோயில் (கீரனூர்) | 5 | 1 | .. | 2 | 2 |
| 32 தொட்டியம் | 6 | .. | 2 | 4 | .. |
| 33 உப்பிலியாபுரம் | 5 | .. | 2 | 3 | .. |
| 34 வேப்பந்தட்டை | 4 | .. | 3 | 1 | .. |
| 35 திருமானூர் | 3 | 3 | .. | .. | .. |
| 36 வையம்பட்டி | 2 | .. | .. | .. | 2 |
| 37 ஆலத்தூர் | 3 | .. | .. | 3 | .. |
| 38 திருவெறும்பூர் | 5 | 4 | .. | .. | 1 |
| 39 அன்னவாசல் | 6 | 1 | 1 | 4 | .. |
| மொத்தம் .. | 237 | 47 | 10 | 120 | 60 |
| **திருநெல்வேலி மாவட்டம்.** | | | | | |
| 1 ஆழ்வார் திருநகரி | 9 | .. | .. | 9 | .. |
| 2 ஒட்டப்பிடாரம் (9) | 8 | .. | .. | .. | 8 |
| 3 நாங்குனேரி | 8 | 1 | .. | 7 | .. |
| 4 சாத்தான்குளம் | 6 | 2 | .. | 4 | .. |
| 5 கோயில்பட்டி | 7 | .. | .. | 1 | 6 |
| 6 தென்காசி | 6 | .. | .. | 6 | .. |
| 7 கயத்தாறு | 5 | .. | .. | 5 | .. |
| 8 களக்காடு | 7 | 1 | .. | 6 | .. |
| 9 குருவிக்குளம் | 7 | 1 | .. | .. | 6 |
| 10 சங்கரன்கோயில் | 4 | 2 | .. | 2 | .. |
| 11 பாலூர்சத்திரம் (கீழ்ப்பாலூர்) | 7 | .. | .. | 6 | 1 |
| 12 புதூர் | 5 | .. | .. | 3 | 1 |
| 13 இராதாபுரம் | 10 | 2 | .. | 2 | 6 |
| 14 வள்ளியூர் | 4 | 2 | .. | 2 | .. |
| 15 திருச்செந்தூர் | 7 | .. | .. | 7 | .. |
| 16 வாசுதேவநல்லூர் | 6 | 1 | .. | 5 | .. |



| தொடரிலக்கம், பஞ்சாயத்து யூனியனின் பெயர். (1) | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். (2) | யூனியன் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (3) | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (4) | வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (5) | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். (6) |
|---|---|---|---|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.** | | | | | |
| 17 பாப்பாகுடி | 5 | .. | .. | 4 | 1 |
| 18 விளாத்திகுளம் | 6 | .. | 1 | .. | 5 |
| 19 ஸ்ரீவைகுண்டம் | 9 | .. | .. | 9 | .. |
| 20 கருங்குளம் | 6 | .. | .. | 5 | 1 |
| 21 மேல்நீலிதநல்லூர் | 5 | 1 | .. | 4 | .. |
| 22 மானூர் | 7 | 3 | .. | 3 | 1 |
| 23 தூத்துக்குடி | 5 | 3 | 1 | 1 | .. |
| 24 ஆலங்குளம் | 7 | .. | .. | 7 | .. |
| 25 செங்கோட்டை | 5 | .. | .. | 5 | .. |
| 26 உடன்குடி | 4 | .. | .. | .. | 4 |
| 27 சேரன்மாதேவி | 8 | .. | 2 | 6 | .. |
| 28 கடையம் | 7 | 3 | .. | 4 | .. |
| 29 அம்பாசமுத்திரம் | 9 | .. | .. | 9 | .. |
| 30 கடையநல்லூர் | 8 | .. | .. | 8 | .. |
| 31 பாளையம்கோட்டை | 8 | .. | 1 | .. | 7 |
| மொத்தம் .. | 205 | 23 | 5 | 130 | 47 |
| **இராமநாதபுரம் மாவட்டம்.** | | | | | |
| 1 இராஜபாளையம் | 9 | 4 | .. | .. | 5 |
| 2 தேவகோட்டை | 5 | .. | .. | .. | 5 |
| 3 பொகளூர் | 7 | .. | .. | .. | 7 |
| 4 வத்திராயிருப்பு | 8 | 1 | .. | .. | 7 |
| 5 வெம்பக்கோட்டை | 7 | .. | 2 | 5 | .. |
| 6 சிவகாசி | 7 | .. | .. | .. | 7 |
| 7 நரிக்குடி | 6 | 1 | .. | .. | 5 |
| 8 விருதுநகர் | 6 | .. | 1 | 5 | .. |
| 9 சாக்கோட்டை | 6 | .. | .. | 6 | .. |
| 10 சிவகங்கை | 6 | .. | .. | .. | 6 |
| 11 மண்டபம் | 3 | .. | .. | 3 | .. |
| 12 அருப்புக்கோட்டை | 6 | .. | .. | .. | 6 |
| 13 சிங்கம்புணரி | 7 | 2 | .. | 1 | 4 |
| 14 ஸ்ரீவில்லிபுத்தூர் | 6 | .. | .. | 6 | .. |
| 15 சாத்தூர் | 8 | 2 | .. | .. | 6 |
| 16 கரையப்பட்டி | 6 | .. | .. | 1 | 5 |
| 17 முதுகுளத்தூர் | 6 | .. | .. | 6 | .. |
| 18 கமுதி | 9 | .. | .. | .. | 9 |
| 19 கடலாடி | 9 | .. | .. | .. | 9 |
| 20 பரமக்குடி | 5 | .. | 1 | 4 | .. |
| 21 இராமநாதபுரம் | 3 | .. | .. | .. | 3 |
| 22 மானாமதுரை | 6 | .. | .. | 6 | .. |
| 23 காளையார்கோவில் | 6 | 4 | .. | 2 | .. |

| தொடர் எண், பஞ்சாயத்து யூனியனின் பெயர். | பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலையங்கள். | யூனியன் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். | அரசாங்கக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். | வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். | வாடகையற்ற கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையங்கள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **நீலகிரி மாவட்டம்.** | | | | | |
| 1 கூடலூர் .. .. .. .. | 11 | 1 | .. | 10 | .. |
| 2 உதகமண்டலம் .. .. .. | 12 | 1 | .. | 9 | 2 |
| 3 குன்னூர் .. .. .. .. | 10 | .. | 2 | 8 | .. |
| 4 கோத்தகிரி .. .. .. | 9 | .. | .. | 7 | 2 |
| மொத்தம் .. | 42 | 2 | 2 | 34 | 4 |
| **மதுரை மாவட்டம்.** | | | | | |
| 1 வடமதுரை .. .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 2 தொப்பம்பட்டி .. .. .. | 8 | 2 | .. | 6 | .. |
| 3 வேடசந்தூர் .. .. .. | 6 | .. | .. | 1 | 5 |
| 4 வாடிப்பட்டி .. .. .. | 5 | 1 | .. | .. | 4 |
| 5 சாணூர்பட்டி .. .. .. | 4 | 2 | .. | 1 | 1 |
| 6 கம்பம் .. .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| 7 திருப்பரங்குன்றம் .. .. .. | 10 | .. | 3 | 7 | .. |
| 8 வத்தலக்குண்டு .. .. .. | 5 | .. | .. | .. | 5 |
| 9 மேலூர் (தெற்கு) .. .. | 6 | .. | 3 | 3 | .. |
| 10 நிலக்கோட்டை .. .. .. | 9 | 3 | .. | 3 | 3 |
| 11 பாளையம் .. .. .. .. | 6 | 2 | .. | 1 | 3 |
| 12 திண்டுக்கல் .. .. .. | 6 | .. | .. | 6 | .. |
| 13 பெரியகுளம் (வடகப்பட்டி) .. | 8 | .. | .. | 6 | 2 |
| 14 ஆத்தூர் (ரெட்டியார்பாளயம்) .. | 8 | 2 | .. | 6 | .. |
| 15 மதுரை (கிழக்கு) .. .. .. | 8 | 1 | .. | 7 | .. |
| 16 மதுரை (மேற்கு) .. .. .. | 6 | 3 | .. | 3 | .. |
| 17 மேலூர் (வடக்கு) .. .. .. | 7 | .. | 4 | 2 | 1 |
| 18 நத்தம் .. .. .. .. | 8 | 6 | .. | 2 | .. |
| 19 திருமங்கலம் .. .. .. | 8 | .. | .. | .. | 8 |
| 20 கள்ளிக்குடி .. .. .. | 6 | .. | 1 | 5 | .. |
| 21 டி. கல்லுப்பட்டி .. .. .. | 6 | 1 | .. | 5 | .. |
| 22 சேடப்பட்டி .. .. .. | 7 | 1 | .. | 6 | .. |
| 23 உசிலம்பட்டி .. .. .. | 3 | .. | .. | .. | 3 |
| 24 செல்லம்பட்டி .. .. .. | 6 | .. | .. | 1 | 5 |
| 25 ஆண்டிப்பட்டி .. .. .. | 7 | .. | .. | .. | 7 |
| 26 அலங்காநல்லூர் .. .. .. | 7 | 3 | .. | 1 | 3 |
| 27 ஆத்தூர் .. .. .. .. | 10 | 2 | .. | .. | 8 |
| 28 கோடைக்கானல் .. .. .. | 3 | 1 | .. | .. | 2 |
| 29 ஒட்டன்சத்திரம் .. .. .. | 7 | .. | .. | 5 | 2 |
| 30 தேனி .. .. .. .. | 7 | .. | .. | 5 | 2 |
| 31 சின்னமனூர் .. .. .. | 5 | .. | .. | 3 | 2 |
| 32 உத்தமபாளையம் .. .. .. | 5 | 1 | .. | 2 | 2 |
| 33 போடிநாயக்கனூர் .. .. | 3 | 2 | .. | .. | 1 |
| 34 பழனி .. .. .. .. | 7 | .. | .. | 7 | .. |
| மொத்தம் .. | 220 | 33 | 11 | 107 | 69 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Monday, 8th August 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*List of Jawans and families*

* 191 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a survey has been conducted districtwar to get a detailed list and addresses of the families of the Jawans; and

(*b*) if so, the types of help, assistance and concessions that have been proposed to be extended to the members of these families?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A survey has already been completed in most of the districts. Lists of Jawans and the addresses of their families are available in the Offices of the District Collectors and in the District Soldiers' Sailors' and Airmen's Boards;

(*b*) The nature of help, etc., rendered to the families of jawans are in brief, assigning lands, providing financial help, educational and medical concessions.

*திரு. வை. சங்கரன் :* ஒருசில இடங்களில் ஜவான்களுடைய குடும்பத்திற்கு அவ்வப்போது அங்கிருந்து சம்பளமோ, பணமோ வராமல் இருக்கிறது என்ற புகார்கள் வரும்போது, அது போன்ற புகார்களைப் பரிசீலித்து, பணம் வழங்கவில்லையென்றால் இந்த அரசாங்கத்திலிருந்து அட்வான்ஸ் மாதிரி அவர்களுக்குக் கொடுப்பதற்குத் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பாதிக்கப்பட்டவர்கள் கலெக்டருக்குத் தெரிவித்தால், அவர்கள் கவனித்து வேண்டியதைச் செய்வார்கள்.

**திரு. செ. மாதவன் :** இந்தப் புறம்போக்கு நிலங்களை அசைன்மென்ட் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது, மனுக்கள் கொடுத்தும் கூட. ரெகவரி ஆப் டெட்சைப்பற்றி வழக்குப் போடலாம் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

[8th August 1966

*திரு. டி. கார்ச்சா கவுடர் :* நீலகிரி ஜில்லாவில் பூமிகளைக் கொடுப்பதில் தடை இருக்கிறது. ராணுவத்தினர் குடும்பத்தினருக்கு 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலங்களைத் தடையில்லாமல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* தடை எந்தக் காரணத்திற்காக இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் நீக்க முடியும். ஸ்லோப் அதிகமாக இருந்தால், அதில் யாராக இருந்தாலும் பயிர் செய்வதற்கு விடுவதில்லை.

*திரு. வை. சங்கரன் :* இதிலே கொடுக்கப்படுகிற சலுகைகள் எல்லாம் ஆக்சுவலாக ராணுவத்தில் இருப்பவர்களுக்குத்தானா அல்லது எக்ஸ்-சர்விஸ்மென் குடும்பத்திற்கும் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* எக்ஸ்-சர்விஸ்மென் குடும்பத்தினருக்கும் ஓரளவு கொடுக்கப்பட்டு வருகிறது.

### *தங்கப்பத்திரத் திட்டம்*

** 192 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கச் சேமிப்புத் திட்டத்துக்குப் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தருமாறு எல்லா அறநிலையங்களுக்கும், ஆதீனங்களுக்கும் அறநிலையப் பாதுகாப்புக் குழுவினரால் அறிக்கை அனுப்பப்பட்டதா ?

(இ) அதன் விளைவாகக் கிடைத்த பலன் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Communications have been forwarded by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

(*b*) 1,07,427.624 grams of gold have so far been subscribed by the religious institutions.

### *Gold refinery project*

* 193 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to establish a gold refinery project in Guindy; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) With a view to make 14 carat gold available to small manufacturers, individual goldsmiths or artisans and Industrial Co-operative Societies for goldsmiths, an Industrial Co-operative Society has been organised at Madras to run a Gold Refinery. There are 82 members in the Society at present. It is located in a rented building at Guindy. A working capital loan of Rs. 3 lakhs



8th August 1966]

was sanctioned to the Society by the Government besides free services of staff of one Gazetted Officer, one Junior Analytical Chemist and one Manager-Accountant. The equipments required for the refinery have been purchased and installed.

*திரு. வை. சங்கரன் :* அவர்களிடமிருந்து 14 காரட் தங்கம் கிடைக்குமா ? அப்படியானால் எப்படிப்பட்டவர்களுக்கு அந்தத் தங்கம் வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* பழைய நகைகளை வாங்கி அதை முழுத் தங்கமாக மாற்றிப் பின்னால் 14 காரட் தங்கமாக மாற்றுவது. அதுதான் அந்த கோல்ட் ரிபைனரியில் கவனிக்கப்படுவது.

### *பொற்கொல்லர்கள்*

** 194 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொற்கொல்லர்களுக்குத் தொழில் செய்வதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில், முதலில் குறிப்பிட்ட தொழிலை மாற்றிக் கொள்வதற்கு எத்தனை பேர் மனுச் செய்திருக்கிறார்கள், மாவட்ட வாரியாக?

(இ) அவைகளின் மீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) A statement[a] is placed on the Table of the House.

*திரு. எம். எஸ். செல்வராஜன் :* பொற்கொல்லர்கள் ஒரு தொழிலுக்குக் கடன் பெற்று அதை வேறு வணிகத்திற்கு மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டால், அவர்கள் பெற்ற கடனைத் திரும்பக் கொடுத்து, பின்னால் மனுச் செய்து அதற்குப் பிறகு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்று தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அந்தக் கடனைத் திரும்பப் பெறுவது இல்லாமலேயே வேறு ஒரு தொழிலுக்கு மாற்றுவதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* திரும்பச் செலுத்தாமலேயே வேறு தொழிலுக்கு மாற்றுவதற்கு அனுமதிக்கும் விஷயம் ஆராயப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

### *பட்டாபிராமன் கமிட்டி அறிக்கை*

** 195 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Employees' State Insurance Scheme பற்றிய பட்டாபிராமன் கமிட்டியின் அறிக்கை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆமெனின், அதன் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?

---

[a] Printed as Appendix I on pages 867-875.

[8th August 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) the Employees' State Insurance Scheme Review Committee was set up by the Government of India. The Committee's report has been submitted to them.

(b) Does not arise, in view of answer to clause (a) of the question.

### இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகள்

* 196 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளவர்களை நடத்தும் முறைகள் பற்றிய விதிகளையும், அவர்களை விடுதலை செய்யலாமா என்று பரிசிலனை (review) செய்வது பற்றிய விதிகளையும் மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அது பற்றிய விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) All the persons detained under the Defence of India Rules have since been released from detention; and

(b) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : பாதுகாப்புச் சட்டப்படி பலர் கைது செய்யப்பட்டுள்ளார்களா ? கறுப்புக்கொடி காண்பிப்பது சட்டத்திற்கு விரோதமானதா ? சட்டப்படி செல்லத்தக்கதா ?

MR. SPEAKER : It is only an opinion. The Hon. Chief Minister need not answer the question.

### மது விலக்கு

* 197 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு மே மாதத்தில் கோவை மாவட்டத்தில் பவானி அருகில், போலீஸாரால் சாராயம் காய்ச்சும் கும்பல் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is *sub judice*.

திரு. செ. மாதவன் : இந்த நிகழ்ச்சியிலே போலிஸ்காரர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டதா? போலீஸார் செய்கையால் மக்களுக்கு ஏதாவது ஏற்பட்டதா ? இதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸார் தவறு செய்யவில்லை, தவறு செய்தவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது. இதைத் தவிர வேறு தகவல் கொடுக்கத் தயாராய் இல்லை.

### *Backward class students*

* 198 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to exempt



8th August 1966]

Backward Class students who have been awarded Government Scholarships from payment of tuition fees in both the Government and private Colleges?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

### *Southern Zonal Council*

* 199 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the nature of the work and the scope of the activities of the Southern Zonal Council: and

(b) whether any of its meetings was held after 1963?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The attention of the Honourable Member is invited to Part III of the States Reorganisation Act, 1956, which deals with the composition and functions of Zonal Councils formed under the said Act.

(b) After 1963, only one meeting, viz., ninth meeting of the Southern Zonal Council was held on the 11th and 12th May 1964 at Trivandrum.

திரு. வை. சங்கரன் : விதி முறைப்படி எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை இது கூடவேண்டுமென்று இருக்கிறது? அதன்படி கூட்டப்பட்டிருக்கிறதா ? அப்படிக்கூட்டப்படவில்லையானால் ஏன் சரியானபடி கூட்டிப் பூர்த்தி செய்யவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸோனல் கவுன்சிலினுடைய தலைவர் மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள். எப்போது இதற்கு அவசியம் இருக்கிறதோ, அப்போது கூட்டுகிறார்கள்.

### உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு

* 200 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதில் விசேஷ சலுகை காட்டுமாறு உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப் பட்டுள்ளதா ?

(இ) இல்லை எனில், அத்தகைய விசேஷ சலுகைகள் காட்டுமாறு வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government of India have accorded priority III for the physically handicapped for employment in Central Government establishments. This Government have extended the following concessions in favour of the physically handicapped :—

(1) Age relaxation by raising the upper age limit by 10 ʒears in respect of direct recruitment to posts which do not normally •equire physical qualifications and for posts which are required to be filled through the Madras Public Service Commission;

[8th August 1966

(2) The Employment departments have been requested to view the cases of physically handicapped persons with sympathy and consider them for all such vacancies for which their handicaps may not stand in the way.

(3) A Special Medical Board has been set up attached to the Special Employment Office for the physically handicapped for their medical examination.

**திரு. வை. சங்கரன் :** *டோராடூனில் பயிற்சி பெற்று வந்த, நம் ராஜ்யத்தைச் சேர்ந்த பல குருடர்கள் இருக்கிறார்கள். பல தொழில்களில் பயிற்சி பெற்று வந்த ஐந்தாறு குருடர்கள் இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அம்மாதிரி கேஸ்களைச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவர்களுக்கு வேலை வாங்கித் தருவதற்கான நடவடிக்கையை சர்க்கார் எடுக்குமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்று நான் குறிப்பிட்டேன். எல்லோருக்கும் வேலை கொடுக்கப்படுகிறதா என்றால், வேலை இருக்கவேண்டும். வேலை இருந்தால், கூடிய வரை அனுதாபத்தோடு, அங்கஹீனர்களுடைய நிலைமை பரிசீலிக்கப்பட்டு, அவர்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.*

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** *எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் விசேஷ முக்கியத்துவம் காட்டுவது நியாயம்தான். ஆனால் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து இப்படிப்பட்டவர்களை வயதிலே தளர்ச்சி ஏற்படுத்திக் கொடுத்து, முன் பாத்தியதை அளித்தாலும் கூட, எடுக்கவேண்டியவர்கள் மற்றவர்கள். ஆகவே, ஒவ்வொரு தொழில் ஸ்தாபனத்திலும் இத்தகையவர்களுக்கு இடம் கிடைக்கவேண்டும் என்றால், குறிப்பிட்ட பர்ஸென்டேஜ் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற அளவிற்குச் சட்டம் இயற்றப்பட வேண்டும். இத்தகைய யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *அவ்வாறு சட்டம் இயற்ற வேண்டும் என்று இந்த அரசாங்கம் கருதவில்லை. விகிதாசாரம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறுவதும் சாத்தியப்பட்டதல்ல. ஆனால், எவ்வளவு தூரம் இவர்கள் அனுதாபத்தோடு கருதப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட முடியும் என்பது கவனிக்கப்பட்டு வருகிறது. இதற்கென்று ஒரு ஆலோசனைக் குழு இருக்கிறது. இதில் தொழிலதிபர்களுடைய பிரதிநிதிகளைச் கலந்து அப்போதைக்கப்போது ஆலோசிக்கப்படுகிறது.*

**புலவர் கா. கோவிந்தன் :** *தலைவர் அவர்களே, சிறிது கால் ஊனமாக இருந்தாலும், அப்படிப்பட்டவர்களை ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள் என்று விதி முறை இருப்பதாக தெரிகிறது. அவர்கள் எப்படியாவது பள்ளி இறுதி நிலைப் படிப்பு படித்துவிட்டிருக்கிறார்கள். அத்தகையவர்களுக்கும் ஆசிரியர்*



8th August 1966]

*பயிற்சிக்கு இடம் கொடுத்தால் அவர்கள் ஆசிரியர்கள் ஆக வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட முறையில் விதிகளை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அங்கஹீனம் இருந்தால் மாணவர்கள் மதிக்க மாட்டார்கள் என்ற கருத்து இருக்கிறது. இருந்தாலும், குறைந்த அங்கஹீனங்களைப் பொருட்படுத்தக் கூடாது. அவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தால் வற்புறுத்தப்பட்டு வருகிறது.*

**திரு. து. ப. அழகமுத்து :** *நம்முடைய சட்டசபையின் எஸ்டிமேட் கமிட்டி இது சம்பந்தமாகச் சில சிபார்சுகளைச் செய்துள்ளது. அந்த சிபார்சுகள் எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.*

*Official Language (Legislative) Commission*

* 201 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer given to Question No. 107 on 5th February 1966, the extent of work carried out by the Official Language (Legislative) Commission till date and the time expected for the completion of the work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The State Official Language (Legislative) Commission was inaugurated on 19th February 1966. The Commission is now engaged in finalising the Glossary of Legal Terms which will be the basis for translation of laws into Tamil. The Commission has so far finalised 169 words in letter A. The first volume of the Glossary covering letters A to I, is expected to be completed by the end of this year. Besides the above work, the Commission has scrutinised the Hindi versions of certain Central Acts forwarded by the Central Official Language (Legislative) Commission. The terms of reference to the Commission are so wide that it is not possible at present to visualise the time for the completion of its work.

**திரு. செ. மாதவன் :** *தலைவர் அவர்களே, இந்த ஹிந்திச் சட்டங்களை மொழி பெயர்க்கும்போது, ஹிந்தி வார்த்தைகளையே போட வேண்டும் என்று இந்தச் சட்டக் கமிஷன் சொல்லியிருக்கிறதா ? நம்முடைய சர்க்கார், அதற்கும் தமிழ் வார்த்தைகளைப் போடலாம் என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறதா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** *அதற்கு எந்தச் சொல் போடுவது என்பதிலே, எந்தச் சொல்லை சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடுமோ அந்தச் சொல்லைப் போடுவது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகும். இதை மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளது.*

**திரு. வை. சங்கரன் :** *இந்த 'க்ளாஸரி ஒர்க்' தவிர வேறு என்ன முக்கியமான வேலை இக் கமிஷன் பொறுப்பில் இருக்கிறது ?*

[8th August 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த வேலையை முதலிலே செய்வார்கள். அதற்குப் பிறகு தான் மற்ற வேலை.

**திரு. செ. மாதவன் :** எளிதாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஹிந்தி சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது, அது தமிழ் மக்களுக்குப் புரிய வேண்டும். இந்தியா முழுவதும் சட்டச் சொற்கள் ஒரே மாதிரியாக அமைய வேண்டும் என்ற காரணத்தைக் காட்டி ஹிந்திச் சொற்களைப் பயன்படுத்தவேண்டும் என்ற கருத்து சொல்லப் பட்டிருக்கிறதா ? அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இரண்டையும் ஒன்றோடொன்று 'ரிகன்சைல்' பண்ணலாம். 'மாமூல்' என்கிற சொல் எல்லோருக்கும் புரிகிறது. அது தமிழ்ச் சொல் இல்லை என்பதற்காக அந்தச் சொல் வேண்டாம் என்று சொல்ல முடியாது. 'மாமூல்' போன்ற, புரியக்கூடிய அகில இந்திய வார்த்தையாக இருந்தால், அதை அப்படியே வைத்துக் கொள்ளலாம். அப்படியில்லாமல், வேறு ஒரு வார்த்தை அகில இந்திய வார்த்தையாக இருந்தாலும் அது புரியாதிருந்தால், அந்த வார்த்தை வேண்டாம் என்று தான் சொல்லுவோம். அப்படித்தான் பரிசீலனை செய்துகொண்டு வருகிறோம்.

### *Temple Executive Officers*

* 202 Q.—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that in some temples, the posts of Executive Officers are vacant; and

(b) if so, in how many temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) 84 temples.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** முதல் கிரேடு கோயில்களில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்படுவதற்கு பி.ஏ., பி.எல்., படிப்பு வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ரூ. 175 தான் சம்பளம் இருப்பதால், அந்தப் படிப்புப் படித்தவர்கள் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்த பிறகு, உடனே வேலையை விட்டுப் போய்விடுகிறார்கள். அதனால் அநேக தேவஸ்தானங்கள் நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் காலியாக இருக்கின்றன. சிறிய கோயில்களைப் பொறுத்தும் அநேக தேவஸ்தானங்கள் நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வதோடு கூட, காலியாக இருக்கும் இடங்களில் எல்லாம் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நிர்வாக அதிகாரிகளைப் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறது. தேர்ந்தெடுத்ததற்குப் பிறகு ஒரு சிலருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். பயிற்சி அளிக்கப்பட்டு



8th August 1966]

வருகிறது. இன்னும் வேண்டிய அளவுக்கு இந்த அதிகாரிகளைப் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மனுக் கோரித் தேர்ந்தெடுக்கும். அதெல்லாம் நடந்தால், காலி ஸ்தானங்கள் எல்லாம் பூர்த்தியாகும்.

* 203 Q.—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Executive Officer of Sri Renugadevi Amman Temple, Vijayapuram, Thanjavur district has not accounted for the temple funds to the extent of Rs. 20,000; and

(b) if so, the steps taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. The Executive Officer has to render accounts for the temple funds to the tune of Rs. 19,300 withdrawn by him from the Banks on several dates.

(b) Charges have been framed against the Executive Officer and he has been placed under suspension. A complaint has been filed before the District Superintendent of Police, Thanjavur and the matter is under investigation.

### *பிரதம மந்திரி சுற்றுப்பயணம்*

* 204 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் இந்தியப் பிரதம மந்திரி அவர்களின் இம்மாநில சுற்றுப் பயணத்தை ஒட்டி பொதுவுடைமைக் கட்சியினர் எத்தனை பேர் கைது செய்யப் பட்டனர் ?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 861 in all were taken into custody.

(b) The Communist Party (rightists) directed its members and sympathisers to stage Black-flag demonstrations before the Prime Minister on 3rd July 1966 during her visits to Tiruchirappalli and Madras City. There was also information that counter demonstrations were proposed to be staged. Government apprehended in the circumstances that anti-social elements might also take advantage of the situation and indulge in disturbance and breach of the peace. The Police had, therefore, to resort to arrests, to prevent any untoward incidents at the time of the Prime Minister's visit.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஜனநாயக நாட்டில் கறுப்புக் கொடி பிடிப்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும், அதைத் தடுப்பது தவறு, சென்னை அரசு கைது செய்தது தவறு என்பதைப் பிரதம அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

[8th August 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பிரதம மந்திரி அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர் புரிந்துகொள்ளவில்லை. பிரதம மந்திரி அவர்கள் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. ஜனநாயகத்தில் என்ன நடக்க வேண்டும், என்ன டெமான்ஸ்ட்ரேஷன் செய்வது, எதை அனுமதிப்பது என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியும்.

### விற்பனை வரி விலக்கு

* 205 கேள்வி.—திரு. ம. கமலநாதன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோதுமை, கோதுமைப் பண்டங்கள், பயறு, பருப்பு வகைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

* 206 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு உற்பத்தியைப் பெருக்க சலுகை தரும் வகையில், விவசாயிகளுக்கு உபயோகப்படும் கடலைப் பிண்ணாக்குக்கான விற்பனை வரியை எடுத்துவிட அல்லது குறைக்க, அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

### *Neyveli Fertiliser Project*

* 207 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) when the Neyveli Fertiliser Project is expected to start production;

(b) the cost involved thereof;

(c) the nature and extent of foreign aid and collaboration received therefor; and

(d) the capacity of the said Plant?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Urea Plant of the Neyveli Fertiliser Factory has already been commissioned.

(b) The total cost of this scheme is expected to be Rs. 36.19 crores.

(c) The total foreign exchange expenditure involved in the project is Rs. 17.98 crores. This was met partly from German Credits of DM 107 million, DM 82 million and DM 30 million.

(d) The full production capacity of the Fertiliser plant is 1,52,000 tonnes of urea per annum with a nitrogen content of 46 per cent.



8th August 1966]

**திரு. வை. சங்கரன்:** நெய்வேலி யூரியா உரத் தொழிற்சாலையில் பூரண அளவு உற்பத்தி தொடங்கிவிட்டதா? அதில் உற்பத்தியாகக் கூடிய உரம் அத்தனையும் 'ஸென்ட்ரல்பூல்'-இல் சேர்க்கப்பட்டு, பிறகு தான் நமக்கு ஒதுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இன்னும் பூரண உற்பத்தி ஏற்படவில்லை. உற்பத்தியெல்லாம் 'ஸென்ட்ரல் பூல்'-இல் தான் போகும். எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுப்பார்கள்.

### இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை

* 208 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் மெஷின் கருவிகள் செய்யும் தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாய், சமீபத்தில் ஜப்பானியத் தொழிற் குழுவினர் நமது ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தனர்?

(இ) அதன்பின், இந்த ராஜ்ய அரசாங்கத்துடன் கலந்து ஏதேனும் முடிவு எடுத்துள்ளனரா?

(உ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Japanese team inspected some areas near Madras, Ranipet, Madurai and Tiruchirappalli.

(b) & (c) The proposal was discussed by the Japanese team with the Madras State Industrial Development Corporation and as a result, the Japanese Machine Tool Trade Association has been asked to prepare a project report. The Madras State Industrial Development Corporation has also applied to the Government of India for the grant of an Industrial licence.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** மெஷின் கருவிகள் செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கு அடிப்படையான வசதிகள் என்ன என்ன தேவை? இந்தக் குழுவினர் மதுரைக்குத் தென் பக்கத்தில் இருக்கும் ஜில்லாக்களை ஏன் பரிசீலனை செய்யவில்லை?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். இப்பொழுது சென்னை, இராணிப்பேட்டை, மதுரை, திருச்சி ஆகிய இந்த நான்கு இடங்களில் பரிசீலனை செய்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இடம் இல்லை என்பதல்ல. நான்கு இடங்களில் பரிசீலனை செய்தார்கள். இப்பொழுது எங்கே கொடுப்பது என்பது முடிவு செய்யப்படவேண்டும்.

### போல்ட்ஸ், நட்ஸ் தொழிற்சாலை

* 209 கேள்வி.—திரு. நா. இராசாங்கம்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, வடலூர் ஆகிய இடங்களில் Bolts and nuts

[8th August 1966

தொழிற்சாலை அமைக்க கைத்தொழில் வர்த்தகத்துறை உதவி நெறியாளர் ஏதேனும் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறாரா ?

(இ) ஆம் எனில், மேற்கூறிய இடங்களில் எங்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) எப்போது அமைக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) No.

(b) & (c) Do not arise.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** சிறிய சிறிய தொழில்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம் என்று சொல்கிற நம் சர்க்கார் போல்ட், நட்டுக்குக் கூட வசதி இல்லை என்று சொல்கிறார்களே, என்ன காரணம் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போல்ட், நட்டுக்குக் கூட வசதி இல்லை என்று சொல்லவில்லை: இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி இருக்கிறேன்.

### இலங்கையில் இருந்து குடி பெயர்ந்தோர்

* 210 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த 12 ஆண்டுகளாக இலங்கையிலிருந்து வந்து வேலை கோரிப் பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் வேலை பெற்றிருப்பவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) According to the current practice, the Employment Exchanges neither identify the Ceylon repatriates separately at the time of registration nor maintain separate statistical data regarding them. As such only the following particulars are available :

1. Number of Ceylon repatriates on Live Registers of Employment Exchanges in the State on 1st April 1965 ... ... ... ... ... 40
2. Number of Ceylon repatriates registered during the period from 1st April 1965 to 31st March 1966 ... ... ... ... ... 134
3. Total number of Ceylon repatriates on the Live Registers of Employment Exchanges in the State as on 31st March 1966 ... ... ... 79

(b) 8 persons were placed in employment during the period from 1st April 1965 to 31st March 1966.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரங்களைப் பார்த்தால் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், வேலை பெற்றவர்களின்



8th August 1966]

எண்ணிக்கை மிகக் குறைவாகவும் இருப்பது தெரியும். இலங்கையில் இருந்து வந்திருக்கக்கூடியவர்களுக்கு வேலை அளிப்பதில் வயது வரம்புச் சலுகை அளிக்கப்படுகிறதா, கல்வி வரம்புச் சலுகை அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சலுகை இருக்கிறது. என்ன, என்ன இருக்கிறது என்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி வேண்டும்.

### அரிஜன மாணவர்களுக்குப் பயிற்சி

* 71 **கேள்வி.—திரு. வை. சங்கரன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளுக்குச் செல்லும் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அதற்கான பாடங்களைக் கற்பிக்கக் கல்வி நிலையங்களைத் தொடங்கும் திட்டம் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) சபை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வை. சங்கரன் :** பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சைக்குப் பயிற்சி அளிப்பதற்காக 30 பேர்களுக்குச் சென்னையிலும், திருச்சியிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த முப்பது பேர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் போசிரியர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இரண்டாவது கிரேட், மூன்றாவது கிரேடுக்கு யார் யார் தகுதி பெற்றிருக்கிறார்களோ அவர்கள் அப்ளை செய்து கொள்ளவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தருந்த பயிற்சி அளிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் இந்தப் பயிற்சி அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தற்சமயம் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் இவர்களுக்குப் பயிற்சி அளிப்பது தான் திட்டம்.

* 211 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Madras Government have submitted any scheme to the Union Government to set up a pre-examination centre in the State to train Scheduled Castes and Scheduled Tribes candidates for recruitment to the Indian Administrative and Police Services; and

(b) if so, the details thereof?

---

a Printed as Appendix II on pages 876–878.

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) இந்திய அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் ஆண்டு தோறும் நடத்தும் இந்திய நிர்வாகப் பணி/இந்திய போலீஸ் பணி போன்ற அனைத்திந்திய போட்டித் தேர்வுகளுக்கும் மத்திய அரசுப் பணிகளுக்கான பிற தேர்வுகளுக்கும் விண்ணப்பம் செய்து கொள்கிற ஹரிஜனங்கள், மலைச்சாதியினர் ஆகியோருக்குப் பயிற்சி யளிக்க இந்திய அரசின் ஆலோசனைப்படி, சென்னை மாநகரில் புகுமுகத் தேர்வுப் பயிற்சி நிலையம் (Pre-examination centre) ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. பயிற்சித் திட்டத்திற் கான செலவு முழுவதையும் ஏற்க இந்திய அரசு இசைந்துள்ளது. அறுபது மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய பயிற்சி நிலையம் ஒன்றை அவசியமான பணியாளர்களுடனும் பிற வசதிகளுடனும் துவக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இவ்வேலைத் திட்டத் திற்காகும் செலவு ரூ. 1,97,000 தொடர்ச் செலவு (Recurring) ரூ. 1,78,000. தொடராச் செலவு (Non-recurring) ரூ. 19,000 இப் பயிற்சி நிலையம் ஹரிஜன நலத்துறை நெறியாளரின் மேற் பார்வையில் செயல்படும்.

**திரு. வை. சங்கரன் :** இந்த 60 பேர்கள் எந்த எந்த அடிப்படை யில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? இவர்களுக்குப் பயிற்சி அளிப் பவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பரிட்சை எழுதுவ தற்கு எந்த எந்த தகுதிகள் வேண்டுமோ அவை இருப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இந்த சென்டரிலே பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களையும் ஏற்று அவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் உத்தேசம் உண்டா? அதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இது முதல் திட்டமாக நிறைவேற்றப்படு கிறது. மத்திய சர்க்கார் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் இவர்களைப் பொருத்த மட்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆலோசனை கூறி அதன்பேரில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இதில் 60 பேர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்று இருப்பதை ஒவ்வொரு ஜில்லாவாரியாக இவ்வளவு என்று நிர்ணயித்து அவர்களுக்கு டிரெயினிங் கொடுக்க வழிவகை செய்யப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பரிட்சை எழுதத் தகுதியுள்ளவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். ஜில்லா வாரியாக என்பது இல்லை.

**திரு. செ. மாதவன் :** இவை ரெகுலர் கல்லூரிகளைப் போல நடை பெறுமா? பார்ட்-டைம் கல்லூரிகளைப் போல நடைபெறுமா?



**கனம் திரு. பூ. கக்கன் :** பேராசிரியர் பெருமக்கள் பார்ட்-டைம் ஆக வந்துதான் கோச்சிங் கொடுப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*Death of cattle in Villupuram*

* 212 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether large number of cattle died due to a new type of disease during March 1966 in Villupuram taluk of South Arcot district; and

(b) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப்கள் வழங்கல்**

* 213 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) முனிசிபல் நகரம் போன்ற பெரிய நகரங்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப் கார் வழங்கத் திட்டமிடப் பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், எப்பொழுது வழங்கப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. தங்கவேலு :** திண்டிவனம் போன்ற நகரப் பகுதிகளில் மதுவிலக்கு வழக்குகள் கலகம் முதலியவை நடந்தால் உடனடியாக அங்கே போலீஸ் அதிகாரிகள் செல்வதற்கு வசதி இல்லை. சைக்கிளில் போகிறார்கள். அதற்குள் மறைக்கப்பட்டுவிடுகிறது. ஆகவே, முனிசிபல் நகரங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஜீப் கார்கள் வழங்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** முனிசிபல் நகரங்களுக்கு என்று இல்லை. ஒவ்வொரு சர்கிளுக்கும் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த சர்க்கிளில் தேவைப்பட்டால் கேட்டு வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மெட்ராஸ் ஸிட்டியைப் பொருத்தவரையில் தான் ஸ்டேஷன்களுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Police station at Salaigramum*

* 214 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the public and public representatives have made requests recently for the establishment of a police station at Salaigramam in Paramakudi taluk, Ramanathapuram district; and

(b) if so, whether such a station will be located there in the near future?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) ஆம்.

(இ) இதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

**திரு. செ. சீனிவாசன்:** போலீஸ் ஸ்டேஷன் ஓரிடத்தில் ஏற்படுத்துவதற்கு என்ன என்ன நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன என்று அறியலாமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்தப் பகுதியில் ஜாஸ்தி அமைதிக் குறைவாக இருந்தால், அடிக்கடி களவு போகிறது என்றால், அந்த இடங்களைப் பார்த்து ஏற்படுத்துகிறோம். இல்லாத இடங்கள் பக்கத்தில் உள்ள ஸ்டேஷன்களோடு இணைக்கப்படுகின்றன.

### திருச்சி கொதிகலன் தொழிற்சாலை

*215 கேள்வி.—திரு. ம. கமலநாதன்:
திரு. வை. சங்கரன்:
திரு. செ. மாதவன்:
} கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி கொதிகலன் தொழிற்சாலை சதி வழக்கில் இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) தற்போது மேற்படி வழக்கு எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI V. RAMAIAH: (a) 35.

(b) A criminal case has been registered in Thuvakudy Police station on 27th October 1965 and the investigations relating to this have not yet been completed.

**திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்த மோசடியில் எத்தனை ரூபாய் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது? இந்த கான்டிராக்ட் வொர்க்ஸ் சூப்பர்விஷன் மத்திய சர்க்கார் கையில் ஒப்படைக்கப்பட்டதா அல்லது நம்முடைய அரசாங்கத்தின் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததா? பொறுப்பு யார் கையில் இருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமையா:** இந்த வேலை மத்திய சர்க்காருக்காக ஸ்டேட் கவர்ன்மென்ட் பொறுப்பில் நிறைவேற்றப்பட்டு வந்தது. மொத்த நஷ்டம் எவ்வளவு என்று இப்போது சொல்வதற்கில்லை. இன்னும் அது இன்வெஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. வை. சங்கரன்:** இந்த மோசடி எப்போது நடந்ததாகச் சொல்லப்படுகிறது? எப்போது முதலாவதாக கண்டுபிடிக்கப்பட்டது?

**கனம் திரு. வெ. ராமையா:** அது தான் இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.



**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறவர்களில் அதிகாரிகள் எத்தனை பேர்? கன்டிராக்டர்கள் எத்தனை பேர்?

**கனம் திரு. வெ. ராமையா:** அதிகாரிகள் 16 பேர்கள். கன்டிராக்டர்கள் 19 பேர்கள்.

**திரு. எஸ். மணி:** தலைவர் அவர்களே, இன்னும் கைது செய்யப்பட வேண்டிய அதிகாரிகள் அங்கே நிறைய இருப்பதாக அந்த வட்டாரத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; பிடிபடாத நிலையில் இருக்கும் குற்றவாளிகளையும் பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** நான் ஆரம்பத்தில் சொன்னேன், பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது என்று. கனம் அங்கத்தினரிடம் ஏதாவது விவரம் இருந்தால் இன்வெஸ்டிகேஷன் போலீசாரிடம் கொடுக்கலாம். 9-00 a.m.

SRI S. MADHAVAN: Sir, under rule 40 of the Assembly Rules, I request that an half-hour debate be allowed on the subject matter of this question. A huge amount is involved. . .

MR. SPEAKER: The Hon. Minister has already replied that the matter is under investigation.

SRI S. MADHAVAN: The Hon. Minister cannot give any opinion. But he can give the facts, how much fraud has been committed, who are involved and so on.

MR. SPEAKER: There is no doubt about the rule, and the hon. Member can claim an half-hour debate. But, as the matter is under investigation, I do not think I can allow it now.

### விளை பொருள்கள் பேரில் வரி

*216 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களின் அடிப்படையில் வரி விதிக்கும் யோசனை ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

**கனம் திரு. வெ. ராமையா:** இல்லை.

### திங்கள் கிழமைகளில் உணவு விடுதிகள் அடைப்பு

*217 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:
திரு. மு. கருணாநிதி:
திரு. செ. மாதவன்:
திரு. கரு. சீமைச்சாமி:
} கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திங்கட்கிழமைதோறும் உணவு சாலைகள், சிற்றுண்டி சாலைகள், அனைத்தையும் மாலையில் மூடிவிடும்படி அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

[8th August 1966

(இ) ஆமெனில், அதன் காரணங்களென்ன?

(உ) அதனால் சென்னையில் மட்டும் மீதமேற்படும் தானியத்தின் அளவு எவ்வளவு?

(எ) இந்த உத்தரவிலிருந்து மருத்துவமனைகள், பள்ளி உணவு விடுதிகள் இவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Hotels and establishments are not permitted to serve any cereal items of food on Mondays.

(*b*) This has been done to conserve cereals, especially rice, which is in short supply in Madras State as well as the whole of the country.

(*c*) 130 tons of rice per month is being saved in Madras City.

(*d*) The orders do not apply to hospitals and hostels.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஸார், இத்தகைய விதிமுறைகளை மீறி நடந்ததாக ஹோட்டல்காரர்கள் யார் மீதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

**கனம் திரு. வெ. ராமையா :** அது போன்ற தகவல் என்னிடம் இல்லை.

**திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, ஒரு வாரத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு நேரம் இம்மாதிரி ஸெரீல்ஸ் சாப்பிடாமல் இருந்தால் இந்த உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடும் என்று அரசாங்கம் கருதுகிறதா? அப்படியானால் இந்த அரசாங்கத்தினுடைய செயலற்ற தன்மையை வெளிநாட்டிலே உள்ளவர்கள் பார்க்க மாட்டார்களா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** செயலற்ற தன்மை என்று சொல்லுகின்ற பிரச்சாரத்திற்கு இடம் இல்லை. நம்முடைய நாட்டிலே அரிசியைப் பொறுத்தவரையில் கொஞ்சம் பற்றுக்குறை இருக்கிறது. இப்படித் தடை விதித்தால் கொஞ்சம் லாபம் இருக்கும் என்ற அடிப்படையில் தான் இப்படிச் செய்யப்பட்டிருக்கின்றது. இதனால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று சொல்வதற்கு இல்லை.

**திரு. எம். எஸ். மணி :** இந்த மாதிரி திங்கட்கிழமைகள் எல்லாம் சாப்பிடாத காரணத்தால் எவ்வளவு உணவு தானியம் மிச்சப்பட்டிருக்கிறது என்று சொல்லமுடியுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** திங்கட்கிழமைகள் எல்லாம் என்று சொல்வது பொருத்தமில்லை. திங்கட்கிழமையில் மாலை நேரம் ஒரு நேரம்தான். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் என்னிடம் புள்ளிவிவரம் இருந்தது, கொடுத்தேன். மற்ற இடங்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள் என்னிடத்தில் இல்லை.



8th August 1966]

### கேரளாவுக்கு ஏற்றுமதியான அரிசி

*218 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :
திரு ஏ. குஞ்சன் நாடார் :
திரு வை. சங்கரன் :
} கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ம் ஆண்டு நவம்பர் முதல் இன்று வரை கேரளாவுக்கு ஏற்றுமதியான அரிசி என்ன விலைப்படி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது, மாவட்ட வாரியாக?

THE HON. SRI V. RAMAIAH : A statement * is placed on the Table of the House.

**திரு. வை. சங்கரன் :** இதிலே விலை கொடுத்திருக்கிறது. எவ்வளவு அளவு அரிசி போய் இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH : A quantity of 1,29,165 tons of rice was exported to Kerala from 1965 to 3rd May 1966 from various districts.

**புலவர் கா. கோவிந்தன் :** கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் அந்தந்த மாவட்டங்களின் தொகுப்பு விலை விதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விலை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இடையே எடுத்துக்கொண்டால் 7 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. தஞ்சாவூரில் 74 ரூபாய் என்றும் கன்னியாகுமரியில் 80.80 ரூபாய் என்றும் இருக்கிறது. இதே மாதிரி உயர்ந்த ரகம் புழுங்கலரிசி, பச்சரிசி நடுத்தர ரகம், புழுங்கலரிசி பச்சரிசி மட்ட ரகம், புழுங்கலரிசி பச்சரிசி எல்லா ரகங்களிலும் வித்தியாசம் இருக்கிறது. தொகுப்பு விலைகள் எப்படி நிர்ணயிக்கப்படுகின்றன? ஏன் இந்த வித்தியாசங்கள் ஏற்படுகின்றன?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** பூல் பிரைஸ் அந்த அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய நிலைமையைப் பொறுத்து, போக்குவரத்திலே உள்ள டிஸ்டன்ஸைப் பொறுத்து நிர்ணயிக்கப்படக்கூடிய விஷயம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்பொழுதும் தொடர்ந்து கேரளாவிற்கு நம்முடைய மாநிலத்திலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்பொழுது அனுப்புவதாகத் தகவல் ஒன்றும் இல்லை.

### உணவு தானியக் கட்டுப்பாடு

*219 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவுத் தானியங்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை நீக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால் எப்போது அமல் படுத்தப்படும்?

---

* Printed as Appendix III at page 879.

[8th August 1966

THE HON SRI V. RAMAIAH : (a) There is no proposal at present to lift control over the foodgrains, and

(b) Does not arise.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், தமிழ்நாட்டிலே உணவுப் பற்றாக்குறை இல்லை என்று முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பற்றாக்குறை இல்லாதபோது இந்தக் கட்டுப்பாடு எதற்கு? இந்தக் கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பற்றாக்குறை இல்லை என்று சொல்வது அரிசியைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்குத்தன்னிறைவு உள்ள மாநிலமாக இருக்கலாம். ஆனால், இந்திய நாட்டின் ஒரு பாகமாக நம்முடைய மாநிலம் இருக்கின்ற காரணத்தாலே இந்தியாவின் சூழ்நிலைக்குத் தகுந்தவாறுதான் பல நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கிறது.

## சோதனைச் சாவடிகள்

*220 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966 ஏப்ரல் மாதத்திலிருந்து எந்தெந்த மாவட்டங்களில் கொள்முதல் செக்போஸ்ட்டுகளை எடுத்துவிட முடிவு செய்யப்பட்டுள்ளது?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களிலும் ஏன் அதை எடுத்துவிட முடிவு செய்யவில்லை? சேலம், கோயம்புத்தூர் போன்ற இடங்களில் மட்டும்தான் எடுக்க வேண்டுமா? மற்ற மாவட்டங்களிலும் எடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நான் குறிப்பிட்ட மாவட்டங்களில் பருவ நிலை சரியில்லாமல், உற்பத்தியே பாதிக்கப்பட்டிருந்தது. தீவிரக் கொள்முதல் செய்வதற்கு பொருத்தமாக இல்லாததால் அங்கே தீவிரக் கொள்முதல் இல்லை. மற்ற மாவட்டங்களில் தீவிரக் கொள்முதல் ஒரு கட்டத்தில் நடந்தது. தீவிரக் கொள்முதல் நடத்தப்பட்டு தொடர்ந்து இப்பொழுது கொள்முதல் வேலை நடந்து வருகிறது.

**திரு. சா. கணேசன் :** இந்த செக்போஸ்ட்கள் பெரும்பாலும் உணவுப் போக்குவரத்தைத் தடைசெய்யாமல் அதை மீறுவதற்கும் ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்குமே உதவியாக இருக்கின்றன என்பது பகிரங்கமான விஷயம். ஆகவே, அதை எடுத்து விடுவதன் மூலம் ஒழுக்க ஈனங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யுமா இவ்வரசு என்று அறிய விரும்புகிறேன்.



8th August 1966]

**கனம் திரு. வெ. ராமைய்யா :** செக்போஸ்ட்களைப் பொறுத்த வரையில் தொடர்ந்து பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரி ஒழுங்கீனமாக நடக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் எந்தவிதமான கட்டுப்பாடு வைத்தாலும் கூட அதை மீறுவதற்குத்தான் முயற்சிப்பார்கள். ஆகவே, அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். செக்போஸ்ட்களை அமைப்பதால் நான் தெரிந்து கொண்டவரையில் தாராளமாய் உணவுத் தானியம் போவது தடைபடுகிறது. அதனால் இந்த ராஜ்யத்திற்கு லாபமாக இருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்த செக்போஸ்ட்களினால் நிறையப் பேர்கள் சம்பாதிக்கிறார்கள். இதிலே நிறை லஞ்சம் இருக்கிறது. இந்த செக்போஸ்ட்கள் நிறைய இருக்கின்றன. சென்னைக்கு வரும் வழியில் 5, 6 செக்போஸ்ட்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படியில்லாமல் ஒரு செக்போஸ்ட் வைப்பதற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** 5, 6 செக் போஸ்ட்கள் வைத்தே திருட்டுத் தனமாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது ஒரு செக் போஸ்ட் மட்டும் இருந்தால் அவர்களுக்கு இன்னும் சுலபமாக இருக்கும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்த உணவுத் தானியங்களை மாவட்டத்திற்கு மாவட்டம் தான் கொண்டு செல்லக்கூடாது என்று எஸன்ஷியல் கமாடிட்டீஸ் ஸப்ளைஸ் ஆக்ட் படி அமல் நடத்தப்பட வேண்டும். ஆனால், தாலூகாவிற்குத் தாலூகா கூட, பிர்க்காவிற்கு பிர்க்காகூட கொண்டு செல்லமுடியாத அளவுக்கு செக்போஸ்ட்கள் போடுகிறார்கள். ஆகவே, ஒரு ஜில்லாவிற்குள்ளேயே கொண்டு போவதற்கு தடையில்லாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இது அங்கங்கே இருக்கக்கூடிய மாவட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயம். ஆனால், எந்த எந்த மாவட்டங்களில் உணவு நெருக்கடியோ அல்லது தீவிரக் கொள்முதலோ இருக்கிறதோ அங்கேயெல்லாம் இண்ட்ரா-டிஸ்ட்ரிக்ட் மூவ்மெண்ட்டுக்குக்கூடத் தடை வைத்திருக்கிறார்கள்.

**திரு. ஆ. தங்கவேலு :** இரண்டு ஜில்லாக்கள் சேரும் எல்லையாக இருந்தால் அங்கே இரண்டு செக்போஸ்ட்டுகள் போடவேண்டிய அவசியம் இல்லை. ஒரு செக்போஸ்ட் போட்டால் போதாதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இதையும் தொடர்ந்து அதிகாரிகள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

## உணவுப் பங்கீட்டு அலுவலகம், மயிலாப்பூர்

*221 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலாப்பூரில் உணவு பங்கீட்டு அலுவலகம் துவக்கப்பட்டபோது இருந்த கட்டடத்துக்குக் கொடுக்கப்பட்ட வாடகை என்ன?

[8th August 1966

(இ) 1965-ஜனவரி முதல் புதிதாக மாற்றப்பட்டிருக்கிற கட்டடத்திற்கு கொடுக்கப்படுகிற வாடகைத் தொகை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Only one Office, viz., Circle Office, Mylapore was located in one small building at 176, Rama Krishna Mutt Road, Mylapore. The rent demanded by the owner is Rs. 500. The fair rent has not been fixed by the Public Works Department authorities. The Circle Office was closed down and a Government Ration Shop is now functioning there.

(b) The rent demanded by the owner for the new building at 961, Katchery Road, Mylapore, which houses three Circle Offices, a Zonal Office and a Government Ration Shop including the Circle Office at Mylapore is Rs. 1,850. The fair rent has not yet been fixed by the Public Works Department authorities.

**திரு. செ. மாதவன்:** 500 ரூபாய் வாடகை கேட்டதாய் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஃபேர் ரென்ட் ஃபிக்ஸ் செய்வதற்கு முன்னால், அதே வீட்டுக்கு, அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு முன்னால் குறைந்த வாடகைத்தான் இருந்தது என்று தெரிகிறது. அதற்கு முன்பு 200 ரூபாய் வாடகை இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே இதைப் பரிசீலனை செய்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** அவசர நிமித்தமாகச் சில ஏற்பாடுகளை சிவில் சப்ளைஸ் ஆபீசர்ஸ் செய்கிறார்கள். அவ்வாறு ஃபேர் ரென்ட் ஃபிக்ஸ் பண்ணவேண்டிய பொறுப்பு பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்டைப் பொறுத்தது. அவர்கள் வேண்டிய தகவல்களை வைத்துக்கொண்டு முடிவு செய்வார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து:** ஃபேர் ரென்ட் எந்த அடிப்படையில் ஃபிக்ஸ் செய்கிறார்கள்?

**கனம் திரு. வெ. ராமையா:** அதற்காக ஸ்பெஸிஃபிக் ரூல்ஸ் பி.டபிள்யூ.டி. யில் இருக்கின்றன.

*Sugar*

*222 *Q.*—SRI V. SANKARAN: Will the hon. the Minister for Food be pleased to state—

(a) whether any report has been received regarding accumulation of sugar stocks in the North Arcot Co-operative Sugar Mills at Ambur; and

(b) if so, the details thereof and the action proposed thereon?

**கனம் திரு. வெ. ராமையா:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சங்கரன்:** அமைச்சர் அவர்கள் இன்றைக்குள்ள நிலையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். நான் கேள்வி போட்ட நேரத்தில் இந்த மாதிரி முடங்கிக் கிடந்தது என்பது உண்மையா?

**கனம் திரு. வெ. ராமையா:** அன்றைக்கு இருந்த நிலைமைக்குத்தான் பதில் சொல்லியிருக்கிறேன்.



8th August 1966]

*223 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டில் சர்க்கரை மீது உள்ள கட்டுப்பாடுகளை நீக்க மத்திய அரசாங்கத்திடமிருந்து, மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனை ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில் இது சம்பந்தமாக மாநில அரசாங்கத்தின் கொள்கை என்ன?

**கனம் திரு. வெ. ராமையா:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** சர்க்கரைக் கண்டிரோலை எடுத்துவிட்டால் விலை குறைந்து விடும் என்ற நம்பிக்கை பொது ஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கிறது. அப்படி இருக்கும் போது அரசாங்கம் இதை ஏன் கட்டிக் கொண்டு அழ வேண்டும்?

**கனம் திரு. வெ. ராமையா:** தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**கனம் சபாநாயகர்:** உங்கள் கேள்வியை திருப்பிச் சொல்லுங்கள், சரியாகக் கேட்கவில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** இந்தச் சர்க்கரைக் கட்டுப்பாட்டை எடுத்து விட்டால் விலை குறையும் என்று பொது ஜனங்களும், என்னைப் போன்ற மெம்பர்களும் கருதுகிறார்கள். அப்படியிருக்கும் போது அரசாங்கம் எதற்காக இதைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும்?

**கனம் சபாநாயகர்:** கட்டிக் கொண்டு அழுகிறார்களா?

THE HON. Minister need not answer this question.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** இப்போது எல்லா ஆலைகளிலும் சர்க்கரை தேங்கி கிடக்கின்றன. குறிப்பாக, எங்கள் பகுதியில் முள்ளிப்பாளையத்தில் விவசாயிகள் ஆலைக்குக் கொடுக்கிற கரும்புக்கான பணத்தை சர்க்கரையை விற்றுத்தான் கொடுக்க முடியும்; 80,000 மூட்டைக்கு மேல் தேங்கிக் கிடக்கின்றன என்று சொல்லி விவசாயிகளுக்கான தொகை கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த கண்ட்ரோலை எடுத்துவிட்டால் பொதுமக்களுக்குத் தாராளமாகச் சர்க்கரை கிடைக்க வழி ஏற்படுவதோடு விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படும் என்பதை அரசாங்கம் உணருமா?

**கனம் திரு. வெ. ராமையா:** இதைப் பற்றிய விதி முறைகளைக் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்திருந்தால் இந்தக் கேள்வியை பார்லிமெண்டில்தான் போட்டிருக்கவேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** அடுத்த வருஷம் போடுகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** அப்படியானால் அடுத்த வருஷம் பதில் சொல்வார்கள்.

[8th August 1966

**கனம் சபாநாயகர் :** அப்படியானால், இரண்டு பேரும் அடுத்த வருஷம் பார்லிமெண்டுக்குப் போகிறீர்கள் ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அடுத்த வருஷம் பதில் 'சொல்வார்கள்' என்று தான் சொன்னேன்.

### புஞ்சை நிலங்களை நஞ்சையாக மாற்றம்

* 224 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டுள்ள புஞ்சை, ஒரு போக நஞ்சை நிலங்களை, நஞ்சை நிலங்களாக மாற்றி லோக்கலைஸ் செய்யும் திட்டம் எப்பொழுது பூர்த்தியாகும் ?

THE HON. SRI V. RAMAIAH : There is no such scheme. In all cases where dry lands are assessed to water cess and where the lands can be transferred to wet lands, the Collectors have got power to effect the change of classification.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் புஞ்சையாக இருந்து நஞ்சையாகப் பயிராகிக் கொண்டிருக்கிற நிலம் எவ்வளவு? தண்டத் தீர்வை விதிக்கப் பட்டுள்ளதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு? அமைச்சர் அவர்கள் கால்வாய்கள் புனரமைப்பு முடிந்தவுடன் லோகலைஸ் செய்யப்படும் என்ற உறுதிமொழி கொடுத்தார்கள். இவை எப்போது பூர்த்தி செய்யப்படும்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அந்த ஜில்லாவைப் பொறுத்த மட்டில் புள்ளிவிவரம் இல்லை.

In all cases where dry lands are assessed to water cess and where the lands can be transferred to wet lands, the Collectors have got the powers to effect the change of classification.

என்ற முறையில் அவர் கேட்கக்கூடிய தகவல்படி கலெக்டர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் பிசான காலத்தில் புஞ்சை நிலங்களில் பயிர் செய்யப்பட்டிருந்தால் இரண்டு ரேட் தண்ணீர்த் தீர்வை கட்ட வேண்டும். கார் காலத்திலும் அட்வான்ஸ் கார் காலத்திலும் ஒரு ரேட் தீர்வைத்தான். பிசான காலப் பயிருக்கும் கார்காலப் பயிரைப் போல ஒரு ரேட் தீர்வை வசூல் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்பெசிபிக்காக திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் ஒரு கேள்வியைப் போட்டால் பதில் சொல்ல முடியும்.



8th August 1966]

* 225 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுக்கா, புவனகிரி யூனியனைச் சேர்ந்த கொளக்குடி கிராமத்தில் நல்ல முறையில் நெல் விளையக்கூடிய பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை, புஞ்சை நிலங்களாக பாவித்து வரி விதிப்பதை நிறுத்தி, அதை நஞ்சை நிலங்களாக மாற்றுவது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இல்லை.

### குடி நீர்த் திட்டம்

* 226 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி நகரத்திற்கு, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து நீர் கொண்டு வரும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி இன்வெஸ்டிகேஷன் ஃபீஸ் எல்லாம் வசூலித்து வந்தார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் சொல்லுகிறார்கள். இதிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** 1963-ம் ஆண்டிலே இன்வெஸ்டிகேட் செய்யப்பட்டு அதற்குத் தொகை 16.50 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் 49,500 ரூபாய் மெயின்டினன்சுக்குச் செலவாகும் என்றும் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிறகு பஞ்சாயத்து கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்க இயலாது என்று தெரிவித்திருந்தார்கள். ஆகவே, இதைப் பஞ்சாயத்து முனிசிபாலிடியான பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கடைசி ஆண்டில் எடுத்துக் கொள்ளவேண்டாம், அடுத்த திட்டத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து இந்தத் திட்டத்திற்காக அரசாங்கத்தினிடம் கடன் கோரிற்று. அவர்கள் அந்தக் கடனை 100 ஆண்டு தவணைகளில் திருப்பிக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கம் 40 ஆண்டுகளில் திருப்பி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். அப்படியிருந்தும் காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பஞ்சாயத்தாக இருக்கும் போது 100 ஆண்டுத் தவணையிலேதான் கடன் கொடுக்கவேண்டுமென்றார்கள். முனிசிபாலிடியான பிறகு வேண்டுமென்றால் 40 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கலாம் என்றார்கள். ஆகவே, முனிசிபாலிடியான பிறகு கொடுக்கலாம் என்று உத்தேசம்.

[8th August 1966

*227 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் இலவச தண்ணீர் சப்ளை செய்யக்கூடாது என ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ராஜ்ய சர்க்கார் அண்மையில் கட்டளை இட்டிருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அதற்கான காரணங்கள் யாவை ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) ஆம் ; ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு பள்ளிக்கூடங்களுக்கும் மருத்துவ மனைகளுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் தண்ணீர் இலவசமாக விநியோகிக்கக்கூடாது என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான தல அதிகார நிறுவனங்களின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை. எனவே, நகராட்சியில், பொது மக்களுக்குக் குடிநீர் வர்த்தக அடிப்படையில் வழங்கப்பட்டாலும், நீர்வழங்கு வேலைத் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றிப் பேணிவருவதற்கும், அதே சமயத்தில் அவ்வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன்களுக்கான ஆண்டுத் தவணைத் தொகைகளைச் செலுத்துவதற்கும் இத்தல அதிகார நிறுவனங்களால் இயலவில்லை. ஆகவே, பள்ளிகள், மருத்துவமனைகள், அறநிலையங்கள் போன்றவற்றிற்கு இலவசமாக நீர்வழங்கி, அதனால் அவை தங்கள் வருவாயை இழக்க முடியாத நிலையிலுள்ளன. மேலும், அவ்வாறு இலவசமாக நீர் வழங்க வகை செய்யும் ஏற்பாடு அதுவும் நீர்வழங்குவது குறித்த துணைவிதிகளில் இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் தண்ணீர் பெற கட்டணம் செலுத்திப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இலவசக் கல்வி கொடுக்கும் நிலையில் அரசாங்கம் தண்ணீரையும் இலவசமாக கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அந்த அளவுக்கு அரசாங்கத்திடம் பணம் இல்லாத காரணத்தால்தான் ஓரளவு கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** மருத்துவ மனைக்கு இலவசத் தண்ணீர் கிடைக்காத காரணத்தால், காலையில் இரண்டு மணி நேரம், மாலையில் இரண்டு மணி நேரம் அளவுக்கே தண்ணீர் கொடுக்கப்படுவதால் சுகாதாரக் கேடான நிலைமை இருப்பதால் அரசாங்கம் இது பற்றிப் பரிசீலிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தண்ணீர் வழங்கப்படுகிற நேரம் இரண்டு மணி என்றாலும் தாராளமாக வழங்கப்படுகிறது.

*228 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to State—

(a) whether drinking water supply position in Ooty has become precarious; and

(b) if so, the action taken thereon[?



8th August 1966]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சங்கரன் :** நான் இக்கேள்வியை எழுப்பியபோது சுமார் மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு அப்போதுள்ள நிலை பற்றி கேட்டேன் . . . இப்போதுள்ள நிலை என்ன ?

**கனம் சபாநாயகர் :** உங்கள் பேரில் யாரும் குறை சொல்லவில்லை.

*229 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for the Public Health be pleased to state—

(a) whether the Government are aware that Tiruchengode and Sankari taluks are in the grip of a serious water famine and that drinking water is being sold there from 12 paise to 15 paise per pot; and

(b) if so, the measures proposed to relieve the said distress ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடசாலம் :** (அ) & (இ) சங்கரி, திருச்செங்கோடு தாலூகாக்களில் குடி நீர் தட்டுப்பாடு உள்ளது, கிராமங்களில் உள்ளவர்களுக்குக் குடி நீர் வசதி ஏற்படுத்துவதற்காக அங்குள்ள கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

திருச்செங்கோடு நகராட்சியிலும், சங்கரி நகரப் பஞ்சாயத்திலும் அவசியமான இடங்களில் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. தேவையானவர்களுக்கு லாரிகள் மூலமாகக் குடி நீர் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

**புலவர் கா. கோவிந்தன் :** திருச்செங்கோட்டில் பாராளுமன்ற இடைத்தேர்தல் நடந்தபோது அப்போது முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் குடிதண்ணீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ? தேர்தல் நேரத்தில் பொது மக்களை ஏமாற்றுவதற்காக நடத்தப்பட்ட அடிக்கல் நாட்டு விழாதானா என்பதுபற்றி விளக்குவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஏமாற்றுவதற்காக செய்யவில்லை. அங்குள்ளவர்களுக்கு குடிதண்ணீர் தாராளமாக வழங்கவேண்டுமென்றுதான் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அதன் எக்ஸ்பென்டிசர் அதிகப்படியான காரணத்தினால், சமீபத்தில் ஏற்பட்ட பல ஆக்கிரமிப்புகள் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. ஆறுமுகம் :** ஒவ்வொரு வருடமும் திருச்செங்கோடு சங்கரி பகுதியில் இந்த குடிதண்ணீர் பஞ்சம் இருந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே, காவேரி ஆற்றிலிருந்து திருச்செங்கோட்டுக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்று இருந்தது. அது என்னவாயிற்று? அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் இந்த குடிதண்ணீர் பஞ்சம் இருப்பதால் கிணறுகளை ஆழப்படுத்த ஏற்பாடு செய்வதாகச் சொல்லப்பட்டது. அதுபோல் இல்லை. சர்க்காரிடம்

[8th August 1966

மாவட்ட கலெக்டர் ரூபாய் கேட்டு எழுதியிருக்கிறார்கள். அவற்றை சீக்கிரத்தில் அடி ஆழப்படுத்த பணம் கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** திருச்செங்கோட்டில் தண்ணீர் சப்ளை செய்கிற திட்டத்தை நம் முன்னால் முதல் அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு ப்ளேனில் வந்து திருச்சியிலிருந்து திருச்செங்கோட்டிற்கு வந்து அடிக்கல் நாட்டி விட்டுச் சென்றார்கள். தேர்தல் நடக்கிற சமயமாதலால் ப்ளேனில் வருகிறார்கள். வேகமாக வருகிறார்கள், வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்தத் தேர்தலில் தோற்ற பிறகு எதற்காக இந்தத் திட்டத்தை மாற்றவேண்டும்? அதற்குப் பிறகு வேறு திட்டங்களை மேற்கொள்ளப்படவில்லையா? முதல் அமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டிவிட்டு, 18 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்து திட்டத்தை ஏற்ற பிறகு எதற்காக அதை ஒத்திவைக்கவேண்டுமென்பதை விளக்குவார்களா? ஒரு வேளை திருச்செங்கோடு தேர்தலில் தோற்றதுதான் காரணமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** திருச்செங்கோட்டில் ஏற்கனவே நான்கு கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, புதுக் கிணறுகளும் வெட்டப்பட்டு தண்ணீரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலுக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

*** 230 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா புளியங்குடி முனிசிபாலிட்டிக்கு சுகாதாரமான பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் சப்ளை செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் உத்தேச எஸ்டிமேட் தொகை என்ன?

(உ) எப்பொழுது, அவ்வேலை ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) to (*c*) : In March 1963 the Government have sanctioned the revised estimate amounting to Rs. 31.39 lakhs for a Composite Water Supply Scheme for Sankarankoil, Puliangudi, etc., Panchayats. The scheme is under execution.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** குடிதண்ணீர் வழங்குவதற்கு எந்தயிடத்தில் இருந்து தண்ணீர் எடுப்பதாக உத்தேசம் என்ற விவரத்தை அறிவிக்க முடியுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சங்கரன்கோவில், புளியங்குடி முனிசிபாலிட்டீஸ் தவிர முள்ளிக்குளம், நல்வன் கோட்டை, நகரம், மலயடிகுறிச்சி, வீரிருப்பு, கரிங்கபுரம் பஞ்சாயத்துக்களும் இந்த காம்போஸிட் வாட்டர் சப்ளை ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



8th August 1966]

*** 231 கேள்வி.—திரு. எம். எஸ் செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்துக்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் செய்யும் திட்டங்கள் எந்நிலையில் உள்ளன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அம்பாசமுத்திரம் பஞ்சாயத்திற்கு நீர்வழங்கும் திட்டத்திற்காக பொதுநலப் பொறியியல்—நகராட்சிப் பணிகள்துறை தலைமைப் பொறியாளரிடமிருந்து புலனாய்வு மதிப்பீடு Investigation Estimate எதிர்பார்க்கப்படுகிறது.

விக்கிரமசிங்கபுரத்திற்கு நீர் வழங்கும் திட்டத்திற்காக தலைமைப் பொறியாளர் முன்னோடிச் செயற்குறிப்புகளை out line proposals அனுப்பியுள்ளார். அச்செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இரண்டு பகுதிகளுக்கும் உத்தேசமான எஸ்டிமேட் எவ்வளவு? தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்ற நிலையைக் காரணமாக வைத்தாவது அவற்றிற்கு முன்பாத்தியதை வழங்கி இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த கம்பைன்ட் வாட்டர் சப்ளை ஸ்கீம் இன்ஸ்டால் செய்ய 31.93 லட்சம் ரூபாய் செலவாகும். விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்துக்கு 26.45 லட்சம் ரூபாய், செவந்திபுரம் பஞ்சாயத்துக்கு 5.48 லட்சம் ரூபாய் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது எஸ்டிமேட்டில்.

*** 232 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகராண்மைக் கழகம் 11-4-1966-ல் அடிக்கல் நாட்டிய, மேல்மட்ட குடிநீர் தேக்கத் தொட்டியின் மதிப்பீட்டுத் தொகை என்ன?

(இ) அதை எந்த இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) The estimated cost of the proposed Service Reservoir of 1,25,000 gallons capacity is Rs. 1,45,000.

(*b*) It is proposed to construct the Service Reservoir at the site of the old park near the junction of Mosur Road and Gandhi Road, according to the outline proposals. However, the exact site will be decided at the time of preparing detailed estimates.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்த எஸ்டிமேட்டில் அரக்கோணம் தண்ணீர் சப்ளை பிரச்னை பூராவாக தீர்க்கப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஓரளவு பூர்த்தி செய்வதற்காகத்தான் இந்த எஸ்டிமேட் போட்டிருக்கிறோம். நடைமுறையில் வரும்போதுதான் குறிப்பாகக் கூற முடியும்.

[8th August 1966

திரு. செ. மாதவன் : இதற்கு அடிக்கல் யாரால் நாட்டப்பட்டது? இதுவும் கைவிடப்படுமா அல்லது நிறைவேற்றப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நாட்டும்போது இன்விட்டேஷன் அனுப்பப்படும்.

* 233 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to the answer given to Question No. 465 on 29th March 1966—

(*a*) whether the construction of four additional reservoirs in Tiruchirappalli Municipal area for the supply of drinking water have been completed; and

(*b*) if so, the reasons for the delay in commissioning these reservoirs ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம். கட்டிடம் முடிவடைந்தது.

(இ) உறையூரில் (மாவட்டம் 1) உள்ள நீர்த்தேக்கம் 1965, பிப்ரவரியில், திருச்சிராப்பள்ளி நகராட்சியிடம் ஒப்படைக்கப் பட்டது; இதை இப்போது அந்த நகராட்சியே பேணி வருகிறது. கன்டோன்மெண்ட், பாலக்கரைப் பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றைப் பேணி வருவதற்கு மேற்கொள்ளுமாறு நகராட்சியைக் கேட்டுள்ளோம். உறையூரில் (மாவட்டம் - பி-யில்) உள்ள நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்கிற கிளை பம்பின் மெயின் போடும் பணி முடிந்த பிறகே இந்த நீர்த்தேக்கம் பயன்படும். 'மெயின் லையினின்' ஒரு பகுதி ரயில்பாதை வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. ரயில் பாதைக்குக் கீழே, ரயில்வே அதிகாரிகள் இப்போது குழாய்ப் பாலம் ஒன்றை அமைத்துள்ளனர். குழாய்கள் போடும் பணி நிறைவேறி வருகிறது. விரைவில் இப்பணி முடிவுறுமென எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. எம். எஸ். மணி: திருச்சியில் கட்டியுள்ள நீர்த்தேக்கங்களில் குறிப்பாக உறையூரில் கட்டியுள்ள நீர்த்தேக்கம் திறப்பு விழா செய்யப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகிறது. ஆனால் இதுவரை அங்கிருந்து தண்ணீர் சப்ளை செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரெயில்வே அத்தாரிட்டீஸ் ஒரு கல்வர்ட் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அது முடிந்த பிறகுதான் அத்துடன் இதைச் சேர்த்து நீர்த்தேக்கம் பயன்படும்.

* 234 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have proposed to implement any scheme for construction of the Mambazathurai Dam in Kalkulam Taluk for augmenting drinking water supply to Colachal and Padmanabhapuram Municipal areas; and

(*b*) if so, the details thereof?



8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) &(இ) குளச்சல், பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதிகளில் குடி-நீர் வசதியை அதிகப் படுத்துவதன் பொருட்டு, பரிசீலனை செய்யப்படவேண்டிய திட்டங்களில் மாம்பழத்துறை அணை கட்டும் திட்டமும் ஒன்றாகும். இத் திட்டத்தைப் புலனாய்வு செய்யும்பணி நிறைவேறி வருகின்றது. அது முடிவடைந்து, மேற்படி அணை கட்டுவதற்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவை அறிந்த பிறகுதான் தலைமைப் பொறியாளர் அவசியமான செயற்குறிப்புகளை அரசாங்கத்துக்கு அனுப்பி வைப்பார்.

* 235 *Q.*—Sri V. SANKARAN : Will the hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government propose to implement any scheme for providing protected water supply to the panchayats of Chittode, Masianur, Perunthurai, Chennimalai and Ramalingam T.B. Santorium in Coimbatore district from the river Cauvery; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) பெருந்துறைக்கும் சித்தோடு, நசியனூர் ஆகிய பஞ்சாயத்துக்களுடன் வழியிலுள்ள பிற பஞ்சாயத்துக்கள், மற்றும் பெருந்துறை இராமலிங்கம் காச நோய் நலம் பேண் மருத்துவமனை (Tuberculosis Sanatorium) ஆகிய வற்றிலும் நீர் வழங்கும் திட்டத்திற்காக தொடக்கச் செயற் குறிப்புக்கள் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, 9-30 a.m.
சித்தோடு, மசியனூர் முதலிய பிராந்தியங்களுக்கு காவேரி ஆற்றிலிருந்து நீர் வழங்கும்போது, பக்கத்திலுள்ள பிராமண பெரிய அக்கிரஹாரம், வீரப்பன் சத்திரம் என்ற இடங்களையும் இணைக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், இல்லை.

### டவுன் பிளானிங் திட்டம்

* 236 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் டவுன் பிளானிங் திட்டத்தின் கீழ் ஏதேனும் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், யார் யார் நிலம் எவ்வளவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இந்த கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத்தில் டவுன் பிளானிங் திட்டத்தின்கீழ் அயன் நஞ்சை நிலங்களில் அனேக ஏக்கர்களை சர்க்கார் எடுத்திருப்பதாக கெஸட்டில் நோட்டிஃபிக்கேஷனும் வந்திருக்கிறது. ஆனால், அப்படியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு என்ன காரணம் ?

[8th August 1966

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அக்வொயர் செய்து நோட்டிஃபிகேஷன் செய்கின்ற ஸ்டேஜில் இருந்தபோதுதான் இது நிறுத்தப்பட்டது. இப்போது அக்வொயர் செய்யவேண்டிய அவசியமில்லை. அக்வொயர் செய்கின்ற நேரத்தில் முனிசிபாலிட்டிகளுக்கு கொடுத்து பின்னால் அக்வொயர் செய்து கொள்ளலாம், இப்போது தேவையில்லை என்று முடிவு செய்திருப்பதால்தான் இல்லை என்று பதில் கூறினேன்.

### சினிமாக்களுக்கு அனுமதி

*237 **கேள்வி.—திரு. நா. இராசாங்கம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டூரிங் சினிமாக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுமதி (Licence,) வாங்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதேனும் விதி பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமல் நடத்தப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No. (b) Does not arise.

**திரு. செ. மாதவன் :** பெர்மனன்ட் தியேட்டர்களுக்கு நிரந்தரமாக லைசென்ஸ் கொடுப்பதுபோன்று, இப்படிப்பட்ட டூரிங் தியேட்டர்களுக்கு மட்டும் ஆறு மாதம், ஒரு வருடம் என்று கொடுக்கவேண்டிய அவசியமென்ன? இவற்றிற்கும் நிரந்தரமாக லைசென்ஸ் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், ஃபிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ் வந்திருந்து அவர்களுடைய கஷ்டங்களை எடுத்துக் கூறினார்கள். அப்போது டூரிங் சினிமாக்களுக்கு இரண்டு வருடங்களுக்கு அனுமதி கொடுக்கலாமா என்று கேட்டபோது, அவ்விதம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதியதால்தான் இதை ஓராண்டு என்று இப்போது போட்டிருக்கிறோம்.

### *Public Health Engineering Division*

*238 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the works proposed to be executed by the Public Health Engineering Division at Madurai?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A statement is placed on the Table of the House.

**திரு. வை. சங்கரன் :** குறிப்பாக இதில் மதுரை சப்ளைத் திட்டம் முதலாவதாக போட்டிருக்கிறது. இதில் முக்கியமாக பல மெயின்களை மாற்றவேண்டும். ஆகவே, இதிலிருக்கின்ற அவசரத்தையும் அவசியத்தையும் கருதி முதலாவதாக எடுத்துக்கொண்டு சீக்கிரமாக நிறைவேற்றி வைப்பதற்கு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

---

* Printed as Appendix IV on page 130.



8th August 1966]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதனுடைய அவசியத்தை உத்தேசித்துத்தான் தனியாக பப்ளிக் ஹெல்த் என்ஜினியரிங் ஸர்கிள் மதுரையில் வைக்கப்பட்டிருக்கிறது.

### *Mobile Court*

*239 *Q.*—SRI V. SANKARAN. Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have proposed to set up a mobile court for trying petty traffic offences in Madras City; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) & (இ) போக்குவரத்து குற்றங்களை மட்டும் விசாரணை செய்வதற்காக இயங்கும் போக்குவரத்து நீதி மன்றம் ஒன்றினை அரசாங்கம் அமைத்துள்ளது. இந்த இயங்கும் நீதிமன்றம் 18-6-1966 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. ஞாயிற்றுக் கிழமைகளும் அரசாங்க விடுமுறை நாட்களும் தவிர வாரத்தில் எல்லா நாட்களிலும் திட்ட முறைப்படிக் குறிப்பிட்ட இடங்களில் காலை 9 முதல் 11 மணி வரையிலும் மாலை 3-30 முதல் 5-30 மணி வரையிலும் இந்த நீதி மன்றம் பணியாற்றுகிறது. சென்னை, (போக்குவரத்து) போலீஸ் துணைக் கமிஷனர் தயாரித்துச் சென்னை மாநிலத் தலைமை மாஜிஸ்ட்ரேட் ஒப்புதல் அளிக்கும் வாரதிட்ட முறைப்படி இந்த நீதி மன்றம் செயல்படும். மாநிலத் தனிச் சிறப்பு மாஜிஸ்ட்ரேட் ( Special Honorary Presidency Magistrate. ) இந்த நீதி மன்றத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்று, தம்முன் கொண்டு வரப்படும் போக்குவரத்துக் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு தீர்ப்பு கூறுகிறார்.

**திரு. வை. சங்கரன் :** இந்த ஒரு அமைப்பை மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்தத் தகவல் இப்போது என்னிடமில்லை, தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

**திரு. எம். எஸ். மணி :** சார், சென்னையில் இந்த மொபைல் கோர்ட் எந்தெந்த இடங்களில் எந்தெந்த நேரத்தில் நிறுத்தப்படுகிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சார், அனேகமாக சென்னையில் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு அருகாமையில் 30 இடங்களில் நிறுத்தப்படுகிறது, அதற்கான லிஸ்ட் இருக்கிறது. மற்ற விவரங்கள் இல்லை. அதாவது தண்டையார்பேட்டை, ஹார்பர், நார்த் பீச், லா காலேஜ், கிரிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி, மூர் மார்கெட், வெப்பரி, பார்க் கொட்டர்ஸ், வியாசர்பாடி இப்படியாக 30 இடங்களில் நிறுத்தப்படுகிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இந்த நீதி விசாரணை போலீஸ் ஸ்டேஷன்களில் வைத்து நடத்துவதாக இருந்தால், சம்பந்தப்பட்ட குற்றவாளி, குற்றத்தை உண்மை என்று தான் ஒத்துக்

[8th August 1966

கொள்ளவேண்டுமே தவிர இல்லை என்று சொல்வதற்குரிய வாய்ப்பும் வசதியும் இருக்காது. ஆகவே போலீஸ் ஸ்டேஷன்களை தவிர்த்து வேறு இடங்களில் வைப்பதற்கு ஆலோசனை செய்யப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** போலீஸ் ஸ்டேஷன் என்றிருந்தாலும் சரியான முறையில் தான் விசாரிக்கப்படுகிறது.

*Japanese Experts Team*

* 240 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Japanese Experts Team which visited the multimineral mine site at Mamandur in South Arcot district has submitted it preliminary report; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.

(இ) கனிப் பொருள் படிவங்களின் தன்மை, அளவு ஆகியவற்றைப் பற்றி இந்தியப் புவியியல் ஆராய்ச்சி நிறுவனமும் மாநிலப் புவியியல் துறையினரும் கூறியுள்ளவற்றை ஜப்பானிய நிபுணர் குழு ஒப்புக்கொண்டுள்ளது. கனிப்பொருள் ஆய்வுப் பணியை தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அக்குழு பரிந்துரைத்துள்ளது.

**திரு. வை. சங்கரன் :** நம்முடைய ஆராய்ச்சி இலாகாவானது இதிலிருந்து என்னென்ன உலோகங்கள் கிடைக்கும், எந்த அளவுக்கு கிடைக்கும் என்று கண்டு பிடித்திருக்கிறார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** என்னிடத்தில் இருக்கின்ற தகவல்படி காப்பர் ஓர், ஸிங்க் ஓர், லெட் ஓர் கிடைக்கின்றன. காப்பர் ஓர் 63 சத விகிதம், லெட் ஓர் 2 சத விகிதம், ஸிங்க் ஓர் 2.73 சத விகிதம் என்ற அளவில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பொருட்கள் எவ்வளவு பரப்புக்கு கிடைக்கிறது ? இதிலிருந்து மொத்தம் எத்தனை டன்கள் கிடைக்கும், அதிலிருந்து தூய்மைப் படுத்தப்பட்ட உலோகங்கள் எந்த அளவுக்கு கிடைக்கும் என்பன போன்ற மதிப்பீட்டுக் கணக்கு ஏதேனும் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அப்படியென்றால் அதன் விவரங்கள் என்னென்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A deposit of one million tons is worth mining and considered to be in economic unit for mining. Mining can be done at the second stage at the rate of 250 tons per day. At this rate the reserve will last for ten years.

**திரு. சா. கணேசன் :** ஒரு நாளைக்கு இத்தனை டன் படிவம் பொருட்கள் அதாவது 'ஓர்ஸ்' கிடைக்கக்கூடும் என்ற கணக்கை தெரிவித்தார்கள். அதிலிருந்து சுத்தப்படுத்தப்பட்ட உலோகம்



8th August 1966]

எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பீட்டுக் கணக்கு சொல்கிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்தத் தகவல் இப்போது என்னிடமில்லை.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTIONS.

### (1) FIRE ACCIDENTS AND CRIMES IN USILAMPATTI.

MR. SPEAKER : Sri P. K. Mookiah Thevar has given notice of an adjournment motion.

**திரு. பி. கே. மூக்கையாத் தேவர் :** கனம் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் கண்மாய்கரையில் நேற்று பிற்பகல் ஒன்றரை மணிக்கு தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 20 கடைகளுக்கு பெருத்த சேதமும், நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. இது தற்செயலாக நடைபெற்ற சம்பவம் அல்ல. சென்ற சில வாரங்களாகவே உசிலம்பட்டி கிராமத்தில் தீ வைத்தல், எதிர்க்கட்சி கூட்டங்களை பலாத்காரமாகக் கலைத்தல், கல் எறிவது, பயங்கரமான ஆயுதங்கள் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாக்குதல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே இதைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. உசிலம்பட்டியில் ஒருசில மாதங்களுக்குள் 10 கொலைகள் நடந்திருக்கின்றன. இதுவரை ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்று டெப்புடி சூப்பிரன்டென்டென்ட் அவர்கள் கண்டுபிடித்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த விவரங்களையெல்லாம் நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். துரிதமாக நடவடிக்கை இல்லாத காரணத்தினால், இந்தச் சம்பவங்களால் பொது மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சபையை ஒத்தி வைத்து இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்கவேண்டும் என்பதற்காக ஒத்தி வைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே. கனம் உறுப்பினர் அவர்கள் விவரித்துள்ளதிலிருந்து இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவர்கள்—நாளைக்கு கடைசி நாள்—இந்தத் தொடர்க் கூட்டத்திலேயே. நாளைக்கு விடை அளிக்கக் கூடிய வகையிலே, ஒரு 'கால் அட்டென்ஷன்' நோட்டீஸ் கொடுத்தால், இப்பொழுதே எழுதிக் கொடுத்தால் எவ்வளவு தகவல் கிடைக்குமோ அவைகளைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம். ஆனால், இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member can given a 'Call Attention Notice' under Rule 41 of the Assembly Rules in regard to this matter. So, the motion is disallowed.

(2) IMPLICATION OF SUPREME COURT'S JUDGMENT *re*. PAYMENT OF BONUS ACT, 1964.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் போனஸ் சட்டத்தைப் பற்றி இந்தியத் தலைமை நீதி மன்றம் அண்மையில் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பின்படி 2-3 பிரிவுகள் செல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னையிலே நம் அரசாங்கத்திற்கு என்ன பங்கு இருக்கிறது என்பதை இங்கே விவரிக்கவேண்டும். இது மத்திய சர்க்கார் இயற்றிய சட்டம் என்றாலும், இந்த சப்ஜெக்ட், 'லேபர்' என்ற சப்ஜெக்ட், 'கன்கரன்ட் சப்ஜெக்ட்' ஆக இருப்பதால் இந்த சர்க்காருக்கும் பொறுப்பு இருக்கிறது. அதோடு கூட, மத்திய சர்க்கார் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப் பற்றி மாநில சர்க்கார்களின் அபிப்பிராயத்தைப் பற்றித் தெரிந்ததற்குப் பின்னால் இது பற்றியத் திருத்தங்கள் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். நம் மாநில சர்க்கார் இந்தத் தீர்ப்பைப் பரிசீலித்ததா, இந்தத் தீர்ப்பின் விளைவாகத் தொழிலாளர்களுக்கு என்ன என்ன பாதகங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி தொழிலாளர் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசி விவாதம் செய்ததா, அதில் சர்க்கார் கருத்து என்ன என்று சபை அறிந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் போனஸ் ஆக்ட்டைப் பற்றிய சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பைப் பற்றி கவனத்தை ஈர்க்க இந்தச் சபையை ஒத்தி வைத்து இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவதற்காக நான் ஒத்தி வைப்பு பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்புக் கொடுத்தார்கள். அதையொட்டி ஒரு அவசரப் பிரேரணை என்பது முறையானதல்ல. இந்த அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இப்போது சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் பேரில் என்ன செய்வது, தொழிலாளர்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிப்பது, சட்டத்தைமாற்ற வேண்டுமா என்பதெல்லாம், மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கம் ஆக இரண்டு அரசாங்கங்களின் பரிசீலனையில் இருக்கின்றன. இது எப்படியும் அவசரப் பிரேரணையாக விவாதிப்பதற்குரியது அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. So the motion is disallowed.

## III.—CALLING ATTENTION TO SCARCITY OF RICE IN THANJAVUR DISTRICT.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் அரிசி கிடைப்பது அரிதாய் உள்ளதும், அதனால் அரிசி





வாங்குவதற்கு மக்கள் அடையும் இன்னல்கள் பற்றியும், குறுவை அறுவடை செய்யும்வரையிலாவது மக்களுக்கு நியாயமான அளவிற்குச் சமமாகப் பங்கிட்டு வழங்குவதற்கு அதிக அளவில் நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், கனம் அங்கத்தினர் கார்ச்சா கவுடர் அவர்கள் உணவுப் பிரச்னை பற்றிக் குறிப்பிட்ட விஷயத்தில் மற்ற ஜில்லாக்களின் நிலைமைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, due to belated monsoon, water was let in for irrigation only from 21st July 1966 and it has reached Thanjavur district only in the last week of July, 1966. It is the tradition of this district to pay the wages in kind to the agricultural labourers and the need for distribution of paddy and rice by the Government agency would not be felt at least in rural areas. Due to the delay in the commencement of agricultural operations till the last week of July, 1966, the agricultural labourers were not able to get wages in kind and they looked to the Government for supply of rice. The mirasdars also conserved the stocks available with them apprehending that there would be failure of "kuruvai" crops. So, the position became difficult and the offtake rose to 3,711 tonnes in June, 1966 and to 5,456 tonnes in July, 1966 which had to be issued from the procured stocks. The maintenance of supplies in rural areas posed a problem. In order to discuss about this a special point session of the District Development Council was convened by the Collector on 22nd July, 1966 and the matter was discussed, in detail. Sri M. D. Thiagaraja Pillai also participated in the discussions. But on that date, the announcement of letting in water for irrigation was made. However, to hold the price line and to afford the rural public to get their immediate requirements of rice it was agreed that there should be distributing agency in each and every Panchayat area and that agency may be organised in consultation with the Panchayat Union Council, or Panchayat, preference being given to the Co-operatives. It was also agreed by the members that the left-over surplus stocks of paddy available with producers will also be procured for local offtake in the villages from which stocks are procured. Necessary arrangements have been accordingly made to open. Distributing Points at the rate of one for each Panchayat area and to arrange for distribution of rice and also wheat to non-producers in the villages.

There are 7 Municipalities, 30 Town Panchayats and 1,595 Village Panchayats in Thanjavur district. It has been proposed to issue identity cards in all Municipalities and in Town Panchayats. Identity cards have already been issued in Mayuram Municipality. The identity card will be issued to each head of the family and one litre of rice and one litre of wheat will be issued to each card. The situation is being carefully watched by the Collector and distribution is arranged according to the needs and with reference to availability of stocks in the local market. Rice is available in all parts of the

[Sri V. Ramaiah] [8th August 1966

district. But the open market price is a bit high when compared to procured stocks and hence poorer sections of the community look to Government agencies for supply of rice.

Now that agricultural operations have commenced it is expected that within a fortnight normalcy will prevail in rural areas. Then the demand will be localised to urban areas and the position can be managed with the stocks available. Every arrrangement has been made to see that there is no ' scarcity ' in any area.

## IV.—ANNOUNCEMENT.

### Election to the Senate of the Madurai University

MR. SPEAKER : I have to announce that the following candidates were validly nominated for the election of four Members to the Senate of the Madurai University :—

1. Sri Saw. Ganesan.
2. Sri R. Krishnaswami Naidu.
3. Sri R. Ponnappa Nadar.
4. Sri K. T. Kosalram.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., four, I hereby declare them to have been duly elected to the Senate of the Madurai University.

## V.—GOVERNMENT BILL.

### (1) The Madras Appropriation (No. 3) Bill, 1966 (L.A. Bill No. 15 of 1966).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Appropriation (No. 3) Bill, 1966 (L.A. Bill No. 15 of 1966) be taken into consideration.'

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Appropriation (No. 3) Bill, 1966 (L.A. Bill No. 15 of 1966) be taken into consideration.

*திரு. செ. மாதவன்* : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு துணை மதிப்பீட்டின்படி கேட்கப்பட்டிருக்கிற தொகை சம்பந்தப்பட்ட இந்த விவாதத்திலே நான் என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

சர்க்கார் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பிரசுரிக்கவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை எல்லாக் கட்சிகளும் வரவேற்றன. ஆனால் அப்படிப் புத்தகங்கள் வெளியிடும்போது பின்பற்ற வேண்டிய கொள்கைகளைச் சர்க்கார் சரிவர நிர்ணயிக்காத காரணத்தினால் இந்த முறையிலே பல தவறுகள் ஏற்படுவதை இங்கே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். உதாரணத்திற்கு, மதுரையில் நடந்த

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 6th August 1966.



8th August 1966] [திரு. செ. மாதவன்]

ஒரு நிகழ்ச்சி நம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தனிப்பட்ட ஜாதியினரைப் புண்படுத்தக் கூடிய முறையில் எழுதப்பட்ட புத்தகங்கள் கூட சர்க்காரால் அப்ரூவ் செய்யப்பட்டு, நகராட்சியில் . . .

*கனம் திரு. எம். பக்தவத்சலம்* : நான் விவரம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அது சர்க்கார் பிரசுரித்த புத்தகமா ? சர்க்கார் பிரசுரிக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற நூல் சர்க்கார் பிரசுரித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

*திரு. செ. மாதவன்* : கனம் முதல் அமைச்சர் அவர்கள் அம் மாதிரிக் கேட்பார்கள் என்று தெரிந்துதான் நான் ஆங்கில வார்த்தையை உபயோகப்படுத்தினேன். 'அப்ரூவ்' செய்திருக்கிறார்கள் என்று சொன்னேன் . . .

*கனம் திரு. எம். பக்தவத்சலம்* : எனக்கு ஆங்கிலம் அவ்வளவு தெரியாது. முதலிலே அவர்கள் தொடங்கியது, சர்க்கார் புத்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள் என்பது. அதனால் நான் விவரங்கள் தெரிந்துகொள்ள விரும்பினேன். எனக்கு அவ்வளவு ஆங்கிலம் தெரியாது.

*திரு. செ. மாதவன்* : சர்க்கார் அப்ரூவ் செய்யும் போது இப்படிப் பட்ட குறைபாடுகள் இல்லாமல் . . .

*கனம் திரு. எம். பக்தவத்சலம்* : சர்க்கார் அப்ரூவ் செய்வது என்பதும் இல்லை. டெக்ஸ்ட்-புக் கமிட்டி தான் அப்ரூவ் செய்கிறது.

*திரு. செ. மாதவன்* : டெக்ஸ்ட்-புக் கமிட்டி யாரால் நியமிக்கப் படுகிறது ? சர்க்காருக்கு அதில் பொறுப்பு இருக்கிறதா இல்லையா என்ற விளக்கமும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்தால் நலமாக இருக்கும். அதற்கு அமைச்சர்கள் பொறுப்பு இருக்கிறதா இல்லையா ? தவறுகள் ஏற்பட்டதற்கு அரசாங்கம் தான் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி வெளியிடப்படுகின்ற புஸ்தகங்கள், பிரிண்டு செய்யப்படுகிற புஸ்தகங்கள் சம்பந்தமாகக் கூட சர்க்காருக்கு நஷ்டம் வரக் கூடிய சூழ்நிலையும் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்காக சொல்வேன். சர்க்கார் வெளியிட்ட புத்தகங்களுக்கு கணக்குகள் வைக்கப்படாத காரணத்தினால், எவ்வளவு புத்தகங்கள் அச்சடித்தோம், எவ்வளவு வெளியிட்டோம் என்று கணக்கு வைக்க படுகிற முறையை பின்பற்றாத காரணத்தினால் இந்த சர்க்காருக்கு ரூ. 32,000 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 49,810 புத்தகங்கள் காணப்படாமல் போயிருக்கிற குறை இந்த அரசாங்கத்தைப்பற்றி வந்திருக்கிறது என்பதையும் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் பிரிண்டு செய்து வெளியிடுவதிலே காலதாமதம் ஏற்படுவதைப்பற்றி அடிக்கடி செய்திகள் வருகின்றன. கால தாமதம் ஏற்படுவதன் காரணமாக சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்

[திரு. செ. மாதவன்] [8th August 1966

படுகிறது, பிள்ளைகள் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமலும் போய் விடுகிறது என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1964-ம் ஆண்டில் 56,000 பிரதிகள் குறிப்பிட்ட காலத்தில் அச்சடிக்காத காரணத்தினால், விற்கப்படாமல் தேங்கிக்கிடக்கிறது. அதன் காரணமாக இந்தச் சர்க்காருக்கு ரூ. 36,400 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நமது முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இலவசமாக புத்தகங்கள் வழங்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு வற்புறுத்தியது. எப்படி வழங்க வேண்டும், அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்படவேண்டும் என்ற விளக்கமும் தந்தார்கள். அதற்கு வெளி நாடுகளிலிருந்து மத்திய சர்க்கார் மூலம் சப்ளை செய்யக்கூடிய பேப்பரை பயன்படுத்தி, இந்த சர்க்கார் இலவசமாக புத்தகங்களை வழங்கலாம் என்ற ஒரு திட்டத்தை மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு அறிவித்தது. 1962-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டு வரை கிட்டத்தட்ட ரூ. 55 லட்சம் விலை மதிப்புள்ள பேப்பர் சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டும், நம்முடைய அரசாங்கம் அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, அதைக் கொள்கை அளவிலும் கூட 1966-ம் ஆண்டு வரை ஏற்றுக்கொண்டு செயல்படவில்லை. அதிலே ரூ. 31 லட்சத்திற்கு பேப்பர் வாங்கி அதை விற்பதற்கு பயன்படுத்தியது. இம்மாதிரி புத்தகங்களை அச்சடித்து அவைகளை விற்பனை செய்வதற்காக பயன்படுத்தியது இந்த சர்க்கார் என்ற குற்றச்சாட்டையும் இங்கே வைக்க ஆசைப்படுகிறேன். அதே மாதிரி மீதி இருக்கக்கூடிய ரூ. 23 லட்சத்தை எந்தத் துறைக்கு பயன்படுத்தவேண்டும் என்று மத்திய சர்க்கார் விரும்பினார்களோ, அதற்காக ஒதுக்கிய துறைக்கு இந்தச் சர்க்கார் பயன்படுத்தாதது தவறு என்பதையும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். மீண்டும் மத்திய சர்க்கார் 1963-ம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் கூட இது சம்பந்தமாக இந்தச் சர்க்காருக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருந்தும், 1966-ம் ஆண்டு ஜனவரி வரை இந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு இந்தச் சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது 'போலீஸைப் பற்றி குறை கூறுகிறீர்கள், அதற்குப் பொறுப்பாளியாக இருக்கக்கூடிய எங்களைப் பற்றி குறை கூறுங்கள் என்று சொன்னார்கள். அது ஓரளவுக்கு உண்மை தான். அங்கே போலீசார் செய்யக்கூடிய தவறுகள் யாரால் ஏற்படுகின்றன? அதெல்லாம் சில அமைச்சருடைய தலையீட்டினால் தான் ஏற்படுகின்றன என்பது தான் பிரச்னை. ஒரு நிகழ்ச்சியை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதுகளத்தூர் பகுதியில் போலீஸ் இலாகா காங்கிரஸ் கட்சிக்கு சாதகமாகவும், எதிர்க்கட்சிக்கு பாதகமாகவும் ஒரு தேர்தல் சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்ற முறையில் நடந்துவருகிறது என்பது இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். பொறுப்புள்ள ஒரு பெரிய போலீஸ் அதிகாரி என்னிடமே நேரிடையாகச் சொல்லுகிறார்கள்,



8th August 1966] [திரு. செ. மாதவன்]

'நான் 1942-வது வருடத்திய காங்கிரஸ் கட்சி போராட்டத்தில் கலந்து கொண்டேன். நீங்கள் பி.காம், பி.எல். படித்திருக்கிறீர்கள்; நீங்கள் இந்தக் கட்சியில் இருக்கலாமா, காங்கிரஸ் கட்சி போல் ஒரு கட்சி உண்டா' என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்டவருக்கு, ஒரு பொறுப்புள்ள பெரிய போலீஸ் அதிகாரிக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டு அதே முதுகளத்தூரில் அவர் வைக்கப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை இந்த ஆட்சியில் நடைபெறுகிறது. இது முறை தானா? அதே போலீஸ் தலைமை அதிகாரி சிவகங்கை கோர்ட்டில் ஒரு வழக்கு நடத்தினார். போலீஸ் தரப்பில் சொல்லப்பட்ட சாட்சி பொய் சாட்சி என்று நான் கூறவில்லை. எப்படிப்பட்ட சாட்சியோ? போலீசுக்குக் தகுந்த முறையில் சாட்சி சொல்லவில்லை என்ற ஒரு காரணத்திற்காக போலிசார் அந்த சாட்சியை நீதி மன்றத்திற்கு வெளியே தாக்கி, அடித்தார்கள். யார்? போலீஸ் இலாகா. ஆகவே, அந்த சாட்சி நீதிபதியிடம் ஓடினார். நீதிபதியிடம் ஓடி தன்னை அடித்துக் காயப்படுத்தினார்கள் போலீசார் என்று சொன்னார். யாருக்குப் பயந்தோ என்னவோ தெரியவில்லை, அந்த நீதிபதி சேம்பருக்கு எழுந்து போய்விட்டார். அதே சாட்சியை நீதி மன்றத்தின் வாசலில் வைத்து போலிசார் தாக்கினார்கள். பட்டப் பகலிலே தாக்கி போலிசார் லாரியில் ஏற்றினார்கள். பக்கத்து டி.பி.-யில் வைத்து அடித்து நொறுக்கினார்கள். இது எல்லாப்பகுதிகளிலும் நடக்கக்கூடிய கண்காட்சியாக இருக்கிறது. இந்த நிலையிலே நடப்பதற்கு என்ன காரணம்? முதுகளத்தூர் பகுதியில் சர்க்கார் இதுபற்றி நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்? அதற்காக சர்க்கார் ஒன்றும் முயற்சி எடுக்கவில்லை என்றால் அதில் என்ன பொருள் என்பதையும் கனம் முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

இது முதுகளத்தூர் பகுதியில் மட்டுமல்ல; இந்தி எதிர்ப்புப் போராட்டம் சம்பந்தமான வழக்கு கரூரில் நடைபெறுகிறது. இது போன்ற நிகழ்ச்சிகள் இந்த ஆட்சியில் நடக்கின்றன. சாட்சிகளை நீதி மன்றத்தில் வைத்து அடிக்கக்கூடிய சூழ்நிலை இந்த ஆட்சியில் இருக்கிறது. இது நல்ல ஆட்சிதானா? இது நல்ல முறைதானா? சட்ட அடிப்படையில் முறைதானா என்று கருதிப்பார்க்க வேண்டும்.

டைரக்டர் ஆப் விஜிலன்சுக்குப் பதிலாக ஓம்புட்ஸ்மேன் வைக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தினோம். மாட்டேன் என்று சொன்னார்கள். தலைவர் மாறினார். வேறு ஒரு தலைவர் போட்டிருக்கிறார்கள். அதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. அமைப்பை மாற்றவில்லை. ஓம்புட்ஸ்மேன் ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையை நமது சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. எப்படிப்பட்ட தவறுகள் அங்கே ஏற்படுகின்றன என்பதைப்பற்றி எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். சாதாரணமான கேஸ் அல்ல, ஒரு பிரபல அலுவலரைப்பற்றிய வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தில் நம்முடைய சர்க்காருக்கு வழங்கிய சான்று ஒன்றை இங்கே படித்துக் காண்பிக்கிறேன்.

'Their Lordships observed that there had been a deliberate violation of the provisions of the Criminal Procedure Code and a departure from the recognised and lawful procedure for investigation.'

இந்த சர்க்கார் ஏற்று நடத்தக்கூடிய டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் இலாகாவிலே உள்ள திறமையைப்பற்றி நம்முடைய உயர்நீதி மன்றம் ஒரு பெரிய அதிகாரி, ஒரு தலைமை அதிகாரியினுடைய வழக்கில் இப்படி குறிப்பிட்டிருக்கிறது. இம்மாதிரி சர்ட்டிபி கேட்டை இந்த முதல் அமைச்சர் வாங்குகிறார்களா? இப்படிப் பட்ட நிலை இந்த இலாகாவில் இருக்கலாமா என்பதை நமது முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஹைக்கோர்டில் ஒரு வழக்கு இருந்தது. தீர்ப்பு கொடுக்கிறார்கள். தீர்ப்பிலே ஏதோ கருத்துக்களைத் தெரிவிக் கிறார்கள் அல்லது சில தீர்ப்புகள் வழங்கலாம். அதிலே அப்பீல் செய்யப்படுகிறது. இந்த வழக்கில் கூட அப்பீல் செய்யப்பட்டிருக் கிறது. இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் பேரில் ஏதோ குற்றம் சாட்டப்பட்டது போல் கனம் அங்கத்தினர் சொல்கிறார்கள். இது 'கன்டெம்ப்ட் ஆப் கோர்ட்' கூட ஆகக்கூடும் என்று தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

**திரு. செ. மாதவன் :** இந்த வழக்கு அப்பீலில் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அப்பீலைப் பற்றி மேலும் விளக்கம் கூற வில்லை முதல் அமைச்சர் அவர்கள். இந்தக் கேஸ் ரிமாண்டு செய்யப்பட்டது. ரிமாண்டு செய்யப்பட்ட பகுதியிலே இப்படி ஒரு ஆப்சர்வேஷன், சர்ட்டிபிகேட் இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரிமாண்டு செய்யப்பட்ட நிலையிலேகூட அப்பீல் செய்து கொள்ளலாம் என்பதையும் வழக் கறிஞராக இருக்கும் கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ள வேண்டும்.

**திரு. செ. மாதவன் :** எந்த நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப் பட்டது? உயர் நீதி மன்றத்தின் ஆப்சர்வேஷனை சர்க்கார் ஒத்துக் கொள்கிறார்களா? ஆப்சர்வேஷனை எதிர்த்து வழக்காடுகிறார்களா. என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதுவரையில் அதுபற்றி தகவலும் இல்லை.

அடுத்தபடியாக, அரிசனங்களின் நன்மைக்காக அரசாங்கம் திட்டங்களைத் தீட்டுகிறோம் என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான திட்டங்களில் ஊழல்கள் ஏற்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்கு ஒரு உதாரணம் கூறுவேன். 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ரூ. 15,000-க்கு 20 வீடுகள் கட்டப்பட்டன. அதே ஆண்டில், அடுத்த ஆண்டில் தள்ளி இல்லை, புயலால் அல்ல; மழையினால் அல்ல, திடீரென்று 19 வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. அதற்குப் பின்னாலே எப்பொழுதோ இடிந்துவிட்டது என்று குறிப்பிட் டார்கள் நமது சர்க்கார். ரூ. 15,000 செலவில் கட்டப்பட்ட வீடுகள்



இடிந்து விழுந்துவிட்டன என்று மூன்று ஆண்டுகள் கழித்து 1964-ல் கண்டுபிடித்தார்கள். அதற்குப் பின்னாலே அவைகளை ரிப்பேர் செய்வதற்கு மட்டும் ரூ. 24,000 செலவு. இதற்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட ஊழல்கள் அரிசன நல இலாகாவில் இருக்கின்றன. இதை அமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி தான் அணைக்கட்டு திட்டங்களை சரியாகக் கவனிக்கவில்லை. போடப்பட்ட அணைக்கட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து பரிசீலிக்கவில்லை. அப்படி பரிசீலிக்காத காரணத் தினால், பி.டபிள்யூ.டி.-யில் தவறுகள் காரணமாக ஏராளமான நஷ்டம் இந்த சர்க்காருக்கு ஏற்படுகிறது. பெரியார் டிவிஷனிலே 13 அணைக்கட்டுகள் தொடர்ந்து ரிப்பேர் செய்யப்பட முடியாத அளவுக்கு, விதிகளுக்கு முரணாக பி.டபிள்யூ.டி. நடந்து கொண்டுவந்திருக்கிறது. பி.டபிள்யூ.டி. அதைச் சரியாக செய்ய வில்லை என்பதைத்தான் ஆடிட் டிபார்ட்மெண்டு எடுத்துக்காட்டி யிருக்கிறது. திடீரென்று ஒரு நாள் சர்க்கார் உத்தரவு போட்டு, 10-00 a.m.
பல ஆண்டுகளாக ரிப்பேர் செய்யப்படாமல் இருந்ததை இருபதே நாட்களில் ரிப்பேர் செய்ய முயற்சி செய்து செயல் பட்டதால், ரூ. 5,33,000 செலவாகியிருக்கிறது. அதே போல அந்த இலாகாவில் இன்னும் எவ்வளவோ குறைபாடுகள். 253 டன் செமெண்டை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றியதில் 108 டன்களைக் காணோம். அதைப் பற்றிச் சர்க்கார் பரிசீலிக்கவில்லை. இந்த நஷ்டத்திற்கு பொறுப்பாளி யார்? கண்ட்ராக்டர் மீது நடவடிக்கை எடுத்து ரெகவர் செய்ய வழி இல்லை. யார் இதற்குக் காரணம்? அந்த இலாகா அதிகாரி மீது என்ன நடவடிக்கை இந்த சர்க்கார் எடுத்தது? எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறி விட்டது. அதே போலத்தான் காட்டிலாகாவில் ஒரு காண்டிராக்ட் விட்டார்கள். 'ரிமூவல் ஆப் பார்க் ஃப்ரம் வாட்டில் ட்ரீஸ்' என்று, அந்த வகையில் சர்க்காருக்கு வரவேண்டிய தொகை 8,80,000 ரூபாய்கள். அதை வசூலிக்க வில்லை. ஏன்? கம்பெனிக்கு பயமா? வசூலிக்கத் தவறியதற்குக் காரணம் என்ன? ஏன் எட்டு லட்ச ரூபாய் நஷ்டத்திற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை? அதே போலத்தான், பஸ் சர்விசிலும் ஆண்டுக்காண்டு நஷ்டம் வந்துகொண்டே இருக்கிறது. நஷ்டம் என்று எடுத்துக் காட்டப் பட்டதும், ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டில் பஸ் சார்ஜை அதிகப் படுத்த முன்வந்தார்கள். அந்த அதிகரிப்பினால் ஒரு லட்ச ரூபாய் அதிகம்வரும் என்று கணக்குப் போட்டார்கள். ஆனால், 1964-65-ஆம் ஆண்டு இந்த சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 19,97,000. ஆகவே, லாபம் வருவதற்குப் பதிலாக 19 லட்சம் நஷ்டம் வந்தது. அதற்குக் காரணம் என்ன? அவர்கள் எதிர்பார்த்தது 25 சத விகிதம் வருமான உயர்வு. ஆனால் ஏற்பட்டது 19 லட்சம் நஷ்டம். இப்படிப்பட்ட தவறுகள்—ஊழல்கள் என்று சொன்னால் கனம் முதல் அமைச்சர் கோபித்துக் கொள்வார்கள்—ஏற்படக் காரணம் யார்? என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

கிணறுகள் போடும் திட்டம் விவசாயிகளின் நன்மைக்காகச் செய்யப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். வரவேற்கிறோம். மத்திய சர்க்கார் திட்டப்படி மழை பெய்யாவிட்டாலும் ஊற்றிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டும். அதை ஏற்றுக்கொண்டு தண்ணீர் ஊற்றுக் கண்டுபிடிக்க மெஷினரி வாங்கி மத்திய சர்க்காரில் இருக்கிறது. நம்முடைய சர்க்காரால் எந்த வேலைகளும் செய்யப்படவில்லை. பப்ளிக் ஒர்க்ஸ் அமைச்சர் சாங்ஷன் செய்து இப்பொழுது பெறுவதற்கு முயற்சி செய்கிறோம் என்றார்கள். ஆனால், இதுவரை எந்தவித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதன் காரணத்தால், விவசாயக் கடன் பயனற்றதாகப் போய் விட்டது, கிணறு திட்டம் தோல்வியடையும் நிலையில் இருக்கிறது. அந்த திட்டத்தை சரியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆடிட் கூறியிருக்கிறது. அதையும் அமைச்சர் செயல் படுத்த வேண்டும் என்று கூறி முடிக்கிறேன்.

* திரு. கோ. சி. மணி: கனம் மன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே நடைபெறுகிற அப்ரோப்பிரியேஷன் பில் சம்பந்தப்பட்ட விவாதத்தில் எனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக இந்த தொடர் கூட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, நம்பிக்கை இருக்கிறது இந்த மந்திரி சபைமீது என்கிற அளவில், அந்தத் தீர்மானம் தோல்வியுற்று, நம்பிக்கையிருப்பதாக அறிவிக்கப் பட்டது. இந்த நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் உணவுப் பிரச்சினை சம்பந்தமாக அவதி ஏற்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தின் 41-வது ரூல் படி, காங்கிரஸ் கட்சி உறுப்பினரே ஏற்பட்டிருக்கிற நிலைமையைச் சுட்டிக்காட்டும் அளவுக்கு ஒரு நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் அந்த விதியின் பிரகாரம் நம்முடைய உணவு அமைச்சர் ஒரு நீண்ட பட்டியலையும் படித்துக் காட்டினார்கள். உள்ளபடியே தஞ்சை மாவட்டத்தில் பஞ்சாயத்துகளிலும், நகரங்களிலும் உணவுப் பண்டங்கள் வழங்கப்பட அடையாளக் கார்டுகள் தந்து, அரிசி வழங்கப்படும் என்று சொன்னார்கள். உள்ளபடியே, எனக்கு நேற்று இரவு வந்த தகவல்படி அமைச்சர் கூறியது நேர் மாறாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மக்களிடையே எத்தகைய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காணவேண்டும். ஒரு குடும்பத்தில் 6 பேர்கள், 7 பேர்கள் அல்லது 10 பேர்கள் இருந்தாலும் ஒரு லிட்டர் அரிசி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆடுதுறைப் பஞ்சாயத்தில் கார்டுகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே கிட்டத்தட்ட 15,000 மக்கள் வாழ்கிறார்கள். அந்த இடத்தில் இன்னும் அரிசி கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து நிர்வாகிகள், அதிகாரிகளையும் மற்ற டி.எஸ்.ஓ. முதலிய அதிகாரிகளைக் கேட்டால், அரிசி ஸ்டாக்கைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம், இரண்டு தினங்களில் தருகிறோம் என்று சொல்லக் கூடிய அளவில்தான் இருக்கிறது. கிரெடிட் கூட்டுறவு சொஸைடி மூலமாகக் கொடுக்க வேண்டும் என்றால், எந்த மூலதனத்தைக் கொண்டு, எப்படி வாங்கிக் கொடுப்பது என்று தவிக்கிறார்கள். நிதி வசதியில்லை என்று சொல்லுகிறார்கள். சிலர் சொந்தமாகப்





போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே என்னவோ அமைச்சர் நீண்ட பட்டியலைப் படித்துவிட்டார்கள். உணவு பிரச்னை பொறுத்த மட்டிலாவது உண்மையைச் சொல்லுங்கள். வேறு எதிலும் இல்லாவிட்டாலும், இதிலாவது இருக்கும் நிலைமையைச் சொல்லுங்கள். நம்பி இருப்பதற்கு ஏதாவது ஆதாரம் காட்டுங்கள். இன்னும் 120 நாட்கள் ஆகும் குறுவை மகசூல் ஆக, அறுவடை ஆக. அந்த 120 நாட்களுக்கு தஞ்சை கிராம, நகரங்களுக்கு நிச்சயம் அரிசி கிடைக்கும் என்கிற நம்பிக்கை ஏற்படச் செய்யுங்கள், எந்த அடிப்படையில் ஒத்துக்கொள்வது என்று எடுத்துச் சொல்லுங்கள். பட்ஜெட் விவாதத்தின்போது கனம் முதல் அமைச்சர் உணவுப் பண்டங்களை வாங்குவோம், அதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். 1966, மார்ச் 31 தேதி முடிய ரூ. 25 கோடி அளவுக்கு உணவுப் பண்டங்கள் இருப்பு இருக்கும் என்று நம்பலாம் என்று சொன்னார்கள். ஆக மார்ச் 31-ம் தேதி ரூ. 25 கோடிக்கு இருப்பும் இருந்திருக்கிறது. விவசாய அமைச்சரைக் கேட்டால், முதலாவது திட்டத்தில் ஆரம்பித்து மூன்றாவது திட்டம் வரை 20 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்கிறார்கள். கடந்த 15 ஆண்டு காலமாக உணவு நிலைகள் மாறி, பல பொருள்களையும் கலந்து தின்கும் பழக்கமும் ஏற்பட்டிருக்கிறது. அரிசியோடுகூட கோதுமை, கம்பு, கேழ்வரகு, ரவா, மைதா இவற்றையெல்லாம் கலந்து சாப்பிடுகிற அளவுக்கு உணவுப் பண்டங்கள் சாப்பிடும் வழக்கம் தானாகவே ஏற்பட்டுவிட்டது. உணவுச் சாலையில் ஆகட்டும், வீட்டிலாகட்டும், கோதுமை ஒரு வேளையோ அல்லது ஒரு உணவிலோ கலக்காமல் நாம் சாப்பிடுகிறதில்லை. அந்த அளவுக்கு மாற்றம் பரவலாக வந்திருக்கிறது. ஆக, உணவுப் பண்டங்களைக் கலந்து சாப்பிடும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தியும் அதிகரித்திருக்கிறது. ஆனால் கேட்ட வயிற்றுக்கு உணவு இல்லை. காரணம் என்ன? தயவு செய்து உறுதியாகச் சொல்லுங்கள், என்ன நிலை என்று சொல்லுங்கள். ஏதோ நாங்கள் கேட்பதற்காக பட்டியலைப் படித்து விட்டு, திருப்பிக் கேட்க எங்களுக்கு யோகியதை இல்லாமல், அந்தக் கணக்கு என்று காட்டிவிடுகிறீர்கள்.

**கனம் சபாநாயகர்:** 'காட்டிவிடுகிறார்கள்' என்று சொல்லுங்கள்.

திரு. கோ. சி. மணி: மன்னிக்கவேண்டும், காட்டிவிடுகிறார்கள். அதிகாரிகளைக் கேட்டாலும் விவரம் தெரிவதில்லை. தொலைபேசியில் கூப்பிட்டுப் கேட்டால், அதிகாரிகள் கிராமத்திற்கு வருகிறார்கள், வந்து பார்க்கிறார்கள், இருக்கும் கஷ்டத்தைக் கேட்கிறார்கள். ஆனால், கொடுக்கிறார்களா? இல்லை. என்ன சொல்லுகிறார்கள்? 'இருப்பதை வைத்துக்கொண்டு அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளுங்கள்.' என்கிறார்கள்- ஆடுதுறை போன்ற நகரத்திற்கு, 15,000 ஜனத்தொகை கொண்ட கிராமத்திற்கு ஏழு மூட்டை ஒரு நாளைக்குக் கொடுத்தால், அது சரியா? இதைக் கனம் சபாநாயகர் அவர்களே தாங்களே தயவு செய்து அவர்களுக்கு சொல்லுங்கள், எங்களாலெல்லாம் சொல்ல முடியவில்லை. உள்ளபடியே நான்

கேட்கிறேன். இந்தப் பிரச்சினை தஞ்சையிலே ஏற்பட வேண்டுமா? 13 லட்சத்து சொச்சம் ஏக்கர் நிலம் சாகுபடிக்குத் தயாராயிருக்கிற தஞ்சை என்று சொல்லுகிறார்கள். அந்தத் தஞ்சை மாவட்டத்தில் அரிசி கிடைக்கவில்லை. கேழ்வரகாவது கிடைக்குமா என்று பார்த்தால், அதுவும் கிடைக்கவில்லை. கம்பாவது தாருங்கள் என்றால், அதுவும் கிடைக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டு மக்கள் தின்னக்கூடிய பொருள் எதையாவது கொடுங்கள் என்று கேட்டால்கூடக் கொடுக்க வழி இல்லை என்றால் இந்த ஆட்சி நடந்து பயன் என்ன? எங்களுக்கு மட்டும் பதில் ஏதாவது சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் கேட்டால் ஏதாவது பதில் சொல்லி எங்களை உட்கார வைத்துவிடுவது மட்டும் தான் இவர்களுக்கு முறையா? இதுதான் இவர்களுக்கு நியாயமா? என்று கேட்கிறேன். இந்தப் பிரச்சினை தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே அப்போதைக்கப்போது ஏற்பட்டது; இது நிரந்தரமாகவே ஏற்பட்டுவிட்டது. குறுவை சாகுபடி 120 நாள் இருக்கிறது. இதுவரையில் சில அதிகாரிகள் கூட சொல்லுகிறார்கள். இப்பொழுது விவசாய வேலை ஆரம்பித்து விடுகிறார்கள். அங்கங்கே விவசாயிகளுக்குக் கூலி கொடுப்பார்கள். அதை வைத்துச் சமாளியுங்கள் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கும் நிலையில் கூட நெல் வைத்திருக்கும் பெரிய மிராசுதார்கள் மூட்டை ஒன்றுக்கு ரூ. 40, ரூ.45 என்ற விலையில் நெல் விற்கிறார்கள்.

இதைவிட இன்னொரு அநியாயம் இருக்கிறது. அதைக் குறித்து, அமைச்சரைச் சந்தித்து மனுக் கொடுக்கலாம் என்று இருக்கிறேன். கும்பகோணம் இரயில்வே ஸ்டேஷனுக்கும் குத்தாலம் இரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையே உள்ள இரயில்வே நிலையங்களில் ஏறத்தாழ ஆறு மாத காலத்திற்குள்ளே இருபதாயிரம் கிழங்கு மாவு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு, அங்கே எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் கிழங்கு மாவு அரைக்கும் மில் இல்லை. கிழங்கு விளையவில்லை என்றாலும் கிழங்கு மாவு மூட்டைகள் ஏறத்தாழ ஐம்பதாயிரம் மூட்டைகள் கூட இருக்கும் என்று கருதுகிறேன். திருநாகேஸ்வரம் இரயில்வே ஸ்டேஷனிலும், ஆடுதுறை இரயில்வே ஸ்டேஷனிலும் குத்தாலம் இரயில்வே ஸ்டேஷனிலும், மல்லியம் இரயில்வே ஸ்டேஷனிலும், ஒவ்வொரு இரயில்வே ஸ்டேஷனிலும் கிழங்கு மாவு மூட்டைகள் புக் செய்யப்பட்டு, இரயிலில் ஏற்றிச் சொல்லப்பட்டு திண்டுக்கல்லில் இறக்கப்பட்டிருக்கின்றன. திண்டுக்கல் வரையில் சென்றிருக்கின்றன. அங்கிருந்து வேறு இடங்களுக்கு—கேரளா போன்ற இடங்களுக்கு—அனுப்பப்படுவதற்காகக் கிழங்கு மாவு என்ற பெயரால் அரிசி மாவு அரைத்து ஏற்றியனுப்பியிருக்கிறார்கள். இந்த அமைச்சரவை மீதோ, அதிகாரிகள் மீதோ நான் குறை சொல்லவில்லை. நான் தொலைபேசி மூலமாக அங்குள்ள டி.எஸ்.ஓ. அவர்களுக்குத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். இரயில்வே அதிகாரிகளை நாங்கள் அணுகிக் கேட்டபோது, சரியான பதில் சொல்ல அவர்கள் மறுக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அரிசி மாவு அரைத்து



அவர்கள் கிழங்கு மாவு என்று பெயர் வைத்து அங்கிருக்கும் ரயில்வே அதிகாரியோடு தொடர்பு கொண்டு இரயில்களில் ஏற்றி அனுப்புகிறார்கள். ஆடுதுறையிலிருந்து அந்த மாவு புறப்பட்டு திண்டுக்கல் போயிருக்கிறது. அங்காவது அது பயன்படுகிறதா என்று பார்த்தால், அது அங்கும் பயன்படுவதில்லை. பக்கத்திலே கேரளாவிற்கு அனுப்பப்படுவதற்காக கிழங்கு மாவு என்ற பெயரால் அரிசி மாவு போய்க்கொண்டிருக்கிறது. அரிசி மாவு அரைக்க ஆரம்பித்த காரணத்தால், அந்தப் பகுதியில் ஒரு நெல் மூட்டை விலை 44 ரூபாய்க்கு விற்கிறது. நாற்பத்தி நான்கு ரூபாய்க்கு விற்பதற்குக் காரணம், மற்றவர்கள் சாதாரணமாக யாராவது கேட்டு வாங்கக்கூடிய அளவுக்கு விலை இல்லை. அவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதற்கு அவர்களே வாங்கிவிடுகிறார்கள். பத்துப் பதினைந்து பேர்கள் இதற்காக இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். தயவுசெய்து இதைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை விரைவில் உடனடியாகச் செய்யாவிட்டால் அந்தப் பகுதியிலே நிச்சயம் கொஞ்ச நஞ்சம் இருக்கிறதையும் அதிக விலை என்ற பெயரால் விற்றுவிடுவார்கள்; கொஞ்சங்கூட கிடைக்காது. அதிகாரி போய்ப் போய்த் திரும்பி வருகிறார். நெல் கிடைப்பதில்லை. அவர்கள் கொள்முதல் செய்ய வழி இல்லை. இதற்கும் காரணம் நிச்சயம் அதிகாரிகள் விலை அதிகம் தரமாட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் விற்றுவிடுகிறார்கள்.

இன்னொன்றையும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரிசனங்களுக்கு அதிகச் சலுகை செய்யவேண்டும் என்பது நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை என்றாலும், அரிசனங்களை இரண்டு பிரிவாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். கிறிஸ்தவ அரிசன் என்றும், இந்து அரிசன் என்றும் பிரித்திருக்கிறார்கள். கிறிஸ்தவ அரிசனங்களிலும் மிகவும் பிற்பட்ட ஏழைகள் இருக்கிறார்கள். அவர்கள் அதிகமான பலனை அடைய முடியாமல் இருக்கிறார்கள். பல கிறிஸ்தவ அரிசனக் குடும்பங்களைப் பலர் பார்த்திருக்கக்கூடும். அவர்களும் பிற்பட்ட நிலையில் மிகவும் ஏழை எளியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பாட்டன் தலைமுறையில் கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்பதற்காக, அவர்கள் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படுகிறார்கள். அரசாங்கச் சலுகைகளை அவர்கள் பெற முடியவில்லை. தயவு செய்து இனிமேலாவது அப்பட்டிப்பட்ட முறைகள் இல்லாமல் அவர்களுக்கும் மற்ற அரிசனங்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்பைச் சட்டத்தின் மூலம் செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*புலவர் கா. கோவிந்தன்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற நிதி ஒதுக்கல் மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தேர்வுகளை நடத்துகின்ற ஆணையாளர் அலுவலகத்தில் பணியாளர்களை அமைக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதி கேட்டிருக்கிறார்கள்.

[புலவர் கா. கோவிந்தன்] [8th August 1966

இப்பொழுது நடைபெறுகின்ற பள்ளிகளும் கல்லூரிகளும் ஒருசில தவிர்த்து மற்றவை எல்லாம் அரசாங்கமே நடத்துகின்ற நிலைக்கு வந்திருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் நடத்தினாலும், அரசாங்கம் நடத்தினாலும், அரசாங்கப் பொறுப்பில் இருக்கிற காரணத்தினால் அந்தப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் வேண்டிய கட்டடங்கள், ஆசிரியர்கள், மற்றப் பொருள்கள் எல்லாவற்றையும் தந்து நடத்துகிறவர்கள் அரசாங்கமாகவே இருக்கிறது. அப்படி அரசாங்கமே பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்திவிட்டு, அந்தப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்து வருகின்ற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற தேர்வுக் குழுவிலே அரசாங்கமே பொறுப்பு வகிப்பது என்று சொன்னால் அந்தத் தேர்வு முறை நல்ல முறையாக இருக்காது என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த நிலை ஏற்பட்டால், இப்பொழுது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியர்களை மாற்றுவது, பள்ளிக்கூடம் அமைப்பது என்ற இந்த முறையிலே எப்படி அரசியல் புகுந்து ஆளும் கட்சியிலே இருக்கும் உறுப்பினர்களும் அமைச்சர்களும் தலையிட்டுக் குழப்பத்தை உண்டாக்குகிறார்களோ அப்படிப்பட்ட நிலை தேர்வுகளிலும் உண்டாகிவிடுமானால், நாட்டில் கல்வித் தரத்தைப் பாழாக்கிவிடும். தேர்வு குழு அரசாங்கத்திற்கோ மற்றவர்களுக்கோ கட்டுப்படாது தனிக் குழுவாக இருக்க வேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஓரத்தூர் மாநில விதைப் பண்ணைக்கு அரசாங்கம் நிலம் எடுத்துக் கொண்டதற்காக நஷ்ட ஈடு தருவதற்காக இதில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தின் பரப்பு முப்பது ஏக்கரா ஆகும். அதற்கு நஷ்ட ஈடு ரூ. 13,975.22. ஏறத்தாழ ஏக்கராவிற்கு 280 ரூபாய் ஆகிறது. ஒரு ஏக்காராவிற்கு 280 ரூபாய் விதம் நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள். இந்த நிலை எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. இது உண்மையான கணக்கா, உண்மைக்கு மாறான கணக்கா என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். விதைப் பண்ணைகள் எதும் லாபகரமாக நடைபெறவில்லை. லாபகரமாக நடைபெறவில்லை என்பது மட்டுமல்ல, பயன்தரத் தக்க நிலையிலே கூட நடைபெற வில்லை. வடாற்காடு மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் வாலாஜா தாலுக்காவிலிருந்து ஆற்காட்டுக்கு வரும் வழியில் தொரைராஜ நகரத்தில் ஒரு அரசாங்க விதைப் பண்ணை இருக்கிறது. அரசாங்க விதைப் பண்ணையை இப்பொழுதான் ஆரம்பித்தார்கள். இப்பொழுது தான் அலுவலகக் கட்டடம் கட்டியிருக்கிறார்கள். இப்படி ஒன்று ஏற்பட்டு நடைபெற்றுக்கொண்டிருப்பதாகச் செய்தியைக் கேட்கிறதென்றால், அது எவ்வளவு பரிதாபமான செய்தி! ரோடு ஓரத்தில் கட்டடம்; ரொம்ப அழகான பெயர் தொரை ராஜநகரம். அரசாங்க விதைப் பண்ணை அவ்வளவும் பாழ். இந்த நிலையில் இருக்கிறது. அந்தச் செய்தி வருகிறது. அது உண்மையாக இருக்குமானால், அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். நல்ல நிலம் தானா, தண்ணீர் கிடைக்குமா? என்று இப்படி எல்லாவற்றையும் ஆராய்ந்து துவக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.



8th August 1966] [புலவர் கா. கோவிந்தன்]

ஆதிவாசி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஏழு பயிற்சி நிலையங்கள் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். வைத்தியநாதன் கமிட்டி 1963-இல் கருத்து தெரிவித்திருந்ததை மூன்று ஆண்டுகள் முயற்சி செய்து நிறைவேற்ற முன்வந்த மந்திரிசபை பாராட்டத்தக்கது தான். எல்லோருக்கும் மனை வழங்க முன்வருகிறார்கள். தேர்தல் நேரத்தின் போது எல்லோருக்கும் மனை வழங்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். ஆதி வாசிகளுக்கு மட்டுமல்ல, நிலமற்ற ஏழைகள் எல்லோருக்கும் மனை வழங்கப்போகிறார்களாம். ஆனால், ஆதிவாசிகள் நிலை என்ன ஆயிற்று? என்று கேட்டால், டாபேவான் கமிட்டியில் 15 கோடி ரூபாய் தேவை ஆதி வாசிகளுக்கு மனை வாங்கிக்கொடுக்க மட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 2,50,000 மனைகள் தேவை. அதுவும் நடைபெறவில்லை. நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தபோது, 1,500 மனைகள் வேண்டும் என்று ஐந்தாண்டுகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன், 200 மனைகள் கூட வழங்கவில்லை என்றார்கள். இப்பொழுது எல்லோருக்கும் மனை கொடுத்துவிடப் போகிறோம் என்று சொல்லிவிடலாம். ஆனால், தேர்தலுக்கு முன்னால் சொல்லிவிட்டால் நிறைவேற்ற முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த துறையில், அரிசன நல இலாக்கா இருக்கும் கட்டடத்திற்கு ரூ. 7,500 மாத வாடகை கொடுக்கிறார்கள். வருடத்திற்குக் கிட்டத்தட்ட லட்ச ரூபாய் அளவுக்கு வருகிறது. அந்தத் துறையில் என்ன நடைபெறுகிறது என்றால், பணம் இல்லை என்று நெருக்கடி நிலையைக் காட்டி; மனை வழங்குவதற்கு 'கட்'டை உத்தேசித்து, வீடு கட்டும் திட்டத்தை அடியோடு கைவிட்டுவிட்டார்கள். ஸ்காலர்ஷிப் புக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தையும் கட்டுப்படுத்திவிட்டார்கள். இப்படி எல்லாவற்றையும் கட்டுப்படுத்திவிட்டு அந்தக் கட்டடத்திற்கு மட்டும் வாடகைக்காக லட்சம் ரூபாய் கொடுக்கிற நிலை சரிதானா என்பதை சர்க்கார் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு அரிசி ஆலைக்கு முன் பணம் கொடுக்கப் போகிறார்கள். இதில் உள்ள குழப்பமான நிலையை உணரவேண்டும். உற்பத்தி செய்யப்படுகிற உணவு தானியங்களின் அளவைக் காட்டிலும் ஹல்லிங் கபாசிட்டி அதிகமாக இருப்பதாகச் சொல்லி புதிய அரிசி மில்களுக்கு அனுமதி வழங்கப்போவதில்லை என்று முன்பு குறிப்பிட்டார்கள். அதற்குமேல் எடுத்துச் சொல்லி பிறகு ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உள்ளவர்கள் நெல்லை அறைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனிட்டுக்கும் ஒரு அரிசி மில்லாவது சிறிய அளவில் அமைக்க அனுமதி வழங்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது மறுபடியும் பெரிய அளவில் ஆலை அமைக்கப்படும் என்று சொன்னால் அரசாங்கக் கொள்முதல் திட்டம் நீடித்து இருக்கப்போகிற ஒன்றா? இது நெடுநாளைக்கு நீடித்திருந்தாகவேண்டும் என்ற அடிப்படையில் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அரசாங்கக் கொள்முதல் திட்டம் கைவிடப்படுமானால் சில காலத்தில் இந்தப் பெரிய கூட்டுறவு அரிசி மில்கள் நிச்சயமாகப் பயன் அளிக்காது

[புலவர் கா. கோவிந்தன்] [8th August 1966

ஆகவே, இவ்வளவு பெரிய மூலதனத்தை இதற்காகச் செலவிட வேண்டியது அவசியமா என்பதை அரசாங்கம் சிந்தித்தாக வேண்டும் என்று சொல்கிறேன்.

அடுத்து, பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பில் திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ. வே. ரா. கல்லூரிக்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டப்பட்டு கிராமத்தில் உள்ள 42.97 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய இரண்டு லட்சத்து எண்பத்திரண்டாயிரம் ரூபாயும், நிலையான கட்டடங்களைக் கட்டுவதற்கு 6 லட்சம் ரூபாய் வழங்குவதற்கும் அனுமதி கோரியிருக்கிறார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போது ஒரு பள்ளிக்கூடத்திற்கு அவருடைய பெயரை வைக்கவேண்டுமென்றால் அதற்காகும் செலவில் பாதிப் பணத்தை அவர் கொடுக்க வேண்டும் என்பதாகப் பதில் சொன்னார்கள். இப்போது திருச்சி ஈ. வே. ரா. கல்லூரிக்கு நில ஆர்ஜிதம் செய்வதற்காக கிட்டத்தட்ட 3 லட்ச ரூபாய்களையும், நிலையான கட்டடத்தைக் கட்டுவதற்காக அரசாங்கம் 6 லட்சம் ரூபாய்களையும் வழங்க இருக்கிறது. இதற்கு ஈ. வே. ரா. பாதித் தொகையைக் கொடுத்திருப்பதனால் அந்தக் கல்லூரிக்கு அவரது பெயரை வைக்க முன் வந்தார்களா? அல்லது தங்களுக்கு எதிர்காலத்தில் அவர் செய்ய இருக்கிற உதவிகளுக்கு கையூட்டாக அவரது பெயரை வைக்க இந்த மந்திரிசபை முன் வந்திருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குறுவை நெல்லுக்கு போனஸ் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வடார்க்காடு மாவட்டப் பகுதியில் சம்பா அறுவடைக் காலத்தில் கிச்சிலி சம்பா என்பதாக ஒரு வகை ரகத்தைப் பயிரிடுவார்கள். அதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை போதாது என்பதாக அவர்கள் குறிப்பிட்டு வருகிறார்கள். குறுவைக்கு போனஸ் அளிக்கப்படுவதைப்போல போனஸ் என்ற பெயரில் இல்லாவிட்டாலும் அந்தக் கிச்சலிச்சம்பாவுக்கு க்விண்டாலுக்கு 3 ரூபாயோ, 4 ரூபாயோ கூட்டித்தரப்படும் என்கிற அறிவிப்பை இப்போதே சர்க்கார் செய்தார்களானால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் மிகவும் ஊக்கத்தோடு பயிர் செய்யத் தொடங்குவார்கள். இது நாற்றங்காலில் நாற்றுப் பாவுகின்ற நேரம். இப்போதே விலை உயர்த்தித் தரப்படும் என்பதைக் கூறிவிட்டால் நன்றாக இருக்கும். திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு கடலைப் பிண்ணாக்கு விலை ஏறியிருக்கிறதே என்று கேட்டபோது, அதற்கு என்ன செய்வது ஏ.டி.டி. போட்டுக்கொள்ளலாம் என்றார்கள். எவ்வளவு உரம் போடப்படுகிறதோ அவ்வளவுக்குத்தான் அது விளையும். விவசாயிகளுக்கு கடலைப் பிண்ணாக்கு விலையும், ரசாயன உரத்தின் விலையும் எட்ட முடியாத அளவுக்கு ஏறிக்கொண்டே போகிறபோது, நெல்லுக்கு விலையைக் கூட்ட முடியாது என்று சொன்னால் விவசாயிகள் நிலை என்ன ஆவது? ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் சில குறிப்புக்களைக் கொடுத்தார்கள்.



8th August 1966] [புலவர் கா. கோவிந்தன்]

தஞ்சாவூரில் இருக்கிற கொள்முதல் விலைக்கும், கன்னியாகுமரி விலைக்கும் எடுத்துக்கொண்டால் 7 ரூபாய்களுக்கு மேல் வித்தியாசம் இருக்கிறது. தஞ்சாவூர் விவசாயிகள் என்ன பாவம் செய்தார்கள்? நெல் கொள்முதல் விலை எல்லா இடங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு ஒரேமாதிரியாகத்தான் இருக்கவேண்டும். தஞ்சாவூர் நெல்லை கன்னியாகுமரிக்கு எடுத்துச்செல்கிறபோது ஆகிற ரயில் செலவை வேண்டுமானால் அங்கே உள்ளவர்கள் அதை வாங்கிச் சாப்பிடுகிறபோது கொடுக்கட்டும். அல்லது அரசாங்கமே ஏற்றுக்கொள்ளட்டும். தொகுப்பு விலை என்பதாக இப்படி ஓரிடத்திற்கும், இன்னொரு இடத்திற்கும் 7 ரூபாய் வித்தியாசம் எதற்காக இருக்கவேண்டும்? தஞ்சாவூர் விவசாயி என்ன பாவம் பண்ணிவிட்டான்? எல்லோருக்கும் ஒரே விலையைக் கொடுத்துவிட்டு இடையில் ஆகும் போக்குவரத்துச் சத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். வேண்டுமானால் வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் அதை ஏற்கும்படியாகச் செய்யவேண்டுமே தவிர, விவசாயிகள் தலையில் கை வைக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பில் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு ரூ. 9 லட்சம் வழங்குவதற்காக நமது முதல் அமைச்சர் அவர்கள் நிதி கேட்டிருக்கிறார்கள். நான் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது பேசிய காலத்திலேயே குறிப்பிட்டேன். இன்று ஜனநாயகம் என்ற தலைப்பில் ஜனநாயக சோஷலிசம் என்ற பெயரில் ஏழை பணக்காரன் என்ற நிலையற்றுப் போகச் செய்யவேண்டுமென்றால் அரசாங்கம் நிச்சயம் இதில் தக்க மாறுதல்களைச் செய்யவேண்டும். ஏழைகள் எல்லோருக்கும் கூட்டுறவு முறையினால் நல்ல பலன் கிடைக்கும் என்று சொன்னால் நல்லதுதான். கூட்டுறவு என்ற முறையில் கூட்டுறவு நூற்பாலையில் வேலை செய்கின்ற எல்லோருக்கும் பயன் அளிக்கக் கூடிய வகையில் அமைத்தாலும் பரவாயில்லை. ஆனால், ஒருசில முதலாளிகள் ஐந்து லட்சமோ, பத்து லட்சமோ போட்டுவிட்டாலும் அரசாங்கம் அவர்களுடைய கையிலே ஒரு கோடியை ஒப்படைத்துவிடுகிறது. கூட்டுறவு சென்ட்ரல் பாங்க் மூலமாக இருந்தாலும், கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைடி மூலமாக இருந்தாலும், அரசாங்க முதலீடாக இருந்தாலும் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்டு கார்ப்பரேஷன் கடனுதவியாக இருந்தாலும் அவை எல்லாம் பொதுமக்களுடைய பணம். யாரோ ஒரு சிலர் இரண்டு, மூன்று லட்சத்தைக் கொடுத்துவிட்டார் என்பதற்காக ஒரு கோடி சொச்சம் பணத்தை அவர்கள் கையில் கொடுத்து அவர்கள் இஷ்டத்திற்கு வாரி இறைக்க, தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்கிக்கொள்ள அரசாங்கம் துணை நிற்கக் கூடாது. அதற்காகத்தான் அன்றே நான் சொன்னேன். கூட்டுறவு சட்டத்தைத் திருத்த வேண்டும். யார் தொடர்ந்து ஒரு பீரியட் பதவியில் இருந்தாலும் இடையில் ஒரு பீரியட்டாவது அவர்கள் பதவியில் இருக்கக்கூடாது என்ற வகையில் சட்டம் செய்தால் தான் இன்றைக்கு அந்தத்துறையில் நடக்கிற கொள்ளைகளைத் தடுக்க முடியும். அப்படி இல்லாத வகையில் இப்படிக் கோடிக்

கணக்காக பொதுமக்கள் பணத்தை எடுத்து ஒருசிலரிடத்தில் கொள்ளை அடிக்க அள்ளி, அள்ளிக்கொடுப்பது நியாயமான முறை அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 'பல்வகை' என்ற தலைப்பில் சிறு சேமிப்புத் திட்டப் பிரசாரத்திற்காக நான்கு விளம்பர வண்டிகளை ஒரு லட்சத்து முப்பத்திநாலாயிரம் ரூபாய் செலவில் வாங்க இருக்கிறார்கள். சிறு சேமிப்பு நல்லது தான். இன்றையதினம் அகவிலை உயர்வினால் மக்கள் வாழ்க்கையே நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். சேமிப்புச் செய்ய முடியாதவர்களிடத்திலிருந்தும் கூட இன்றைய தினம் வற்புறுத்தி வாங்குகிறார்கள். அங்கங்கே விளம்பர போர்டுகள் எல்லாம் இருக்கின்றன. நட்ட இடம் இல்லை. நட்ட போர்டு கவிந்து கிடக்கிறது. சிறு சேமிப்பு என்ற வகையில் மக்களிடத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக வற்புறுத்தி வாங்கி 'பிச்சை எடுத்தாளும் பெருமாள், அதைப் பிடுங்கிற்றாம் அனுமார்' என்று சொல்வார்களே, அப்படி இன்றையதினம் பிரசார வண்டிகள் என்ற தலைப்பில் அந்தச் சிறிய சேமிப்புப் பணங்களும் கூட விரயமடிக்கப் படக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, கூட்டுறவு என்ற தலைப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக தணிக்கையாளர்களாக அனுப்பப்படும் பொருட்டு கூட்டுறவுத் துணைப் பதிவாளர்கள் பத்துபேர் புதிதாக நியமிக்க நிதி கோரியிருக்கிறார்கள். குற்றங்குறைகளைக் கண்டுபிடிக்க தணிக்கையாளர்கள் வேண்டியது தான். சோற்றிலே கல் இருந்தால் பொருக்கலாம். மணல் சோற்றிலே கல்லைப் பொருக்குவது என்பது முடியக் கூடியக் காரியமா? அந்தத் துறையில் இன்றையதினம் இருப்பது அத்தனையும் குற்றங்கள்தான். தணிக்கை முறையினால் இன்றைய தினம் அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகவேதான் சொல்கிறேன். ஒருவர் தொடர்ந்து மூன்றாண்டுகள் பதவி வகித்தார் என்றால் அடுத்த ஒரு பீரியட்டாவது அவர் பதவியில் இருக்கக்கூடாது என்ற வகையில் சட்டத்தைத் திருத்தினால் ஒழிய அவற்றில் உள்ள ஊழல்களை நிச்சயமாகத் திருத்த முடியாது. ஆகவே கனம் முதல் அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டத்திற்கு அத்தகைய திருத்தம் ஒன்றைத் தைரியமாகக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் சபை முன்பு வைக்கப்பட்டிருக்கிற நிதி ஒதுக்கீடு மசோதாவில் என்னுடைய கருத்துக்களை நான் கூறலாம் என்று நினைக்கிறேன். அரசாங்கம் பாக்டரி ஆக்டை அமல் செய்கிறார்கள். தொழிலாளர்களுக்கு என்று பல சட்டங்களைப் போட்டு நடத்துகிறார்கள். அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு எப்படி டியர்னஸ் அலவன்சு கொடுக்கவேண்டும் என்பதற்கு சட்டம் வைத்திருக்கிறார்கள். எப்ரல் மாதத்தில் இருக்கிற காஸ்ட் ஆப் லிவிங் இன்டக்ஸைவிட ஜூன் மாதத்து காஸ்ட் ஆப் லிவிங்



இன்டக்ஸ் அதிகமாக இருந்தால் அதிகத்திற்குத் தக்கவாறு அவர்களுடைய டி.ஏ. யையும் கூட்டி வழங்க வகை செய்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கச் சிப்பந்திகளாக இருக்கிறவர்களுக்கு அரசாங்க இலாக்காவில் வேலை செய்கிறவர்களுக்கு காஸ்ட் ஆப் லிவிங் இன்டக்ஸ்படி டி. ஏ. வழங்க ஏதாவது விதிமுறை வைத்திருக்கிறார்களா என்றால், இல்லை. போன எப்ரல் மாதத்தில் இருந்த விலைவாசிகளைவிட இந்த ஆகஸ்டு மாதத்தில் விலைவாசிகள் ஒரேயடியாக ஏறியிருக்கின்றன. தங்களுக்கு டி.ஏ.-ஐ உயர்த்தி தரவேண்டுமென்று அவர்கள் யாரிடம் சொல்வார்கள்? நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், "மே மாதத்தில்தானே கூட்டிக்கொடுத்தோம், அதற்குள் ஆகஸ்டு மாதத்தில் கொடுக்கவா? அரசாங்கம் அதைப் பார்த்துக் கொள்ளும். இந்த முன்னேற்றக் கட்சி அரசாங்க சிப்பந்திகளைப் புகழ்ந்து அவர்களிடத்தில் சில உதவிகளை எதிர்பார்க்கத்தான் இப்படிப் பேசுகிறார்கள்" என்று சொல்லக் கூடும். உண்மை அது அல்ல. ஆலை முதலாளிகளுக்கு, தொழில் நிறுவன முதலாளிகளுக்கு ஒரு சட்டம், அதேசமயம் நம்முடைய அரசாங்கத்தில் வேலை செய்கிற சிப்பந்திகளுக்கு விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் டி.ஏ.-ஐக் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்கே வழியில்லை என்றால் அது நியாயம் இல்லை. வெளியில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்டம் நமக்கும் வேண்டும். அவர்கள் இன்றையதினம் டிரேட் யூனியன் ஆக்டின் கீழும் வரவில்லை. ஸ்ட்ரைக் முதலியவைகளும் செய்ய முடியாது. பாட்ஜ் அணிந்து தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிப்பது என்றால் அது முதலமைச்சருக்குப் பிடிக்காது. எந்த முறையில் அவர்கள் கேட்பது? விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந் 10–30 a.m. தாற்போல அவர்களுடைய டி.ஏ.-ஐ உயர்த்தவேண்டும், உயர்த்த வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் மக்கள் தலையில் வரிப்பணமாக உயர்த்தவேண்டும் என்று நான் சொல்லவில்லை. விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். டிவால்யுவேஷன் வந்தது. விலை ஏறவில்லை என்று சொல்லலாம். டிவேல்யுவேஷன் வருவதற்கு முன்பு மணிலா எண்ணெய் என்ன விலை, இப்பொழுது என்ன விலை? டிவால்யுவேஷன் வருவதற்கு முன்பு முந்திரிப் பருப்பு என்ன விலை? இப்பொழுது என்ன விலை? டிவால்யுவேஷன் வருவதற்கு முன்பு அரிசி என்ன விலை? இன்றையதினம் என்ன விலை? டிவால்யுவேஷனுக்கும், உணவுப் பொருள்களுக்கும் ஒட்டுறவு இல்லை என்று பேசுவது சரியான முறையல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய பொருளாதாரத்தில் எங்காகிலும் ஒரு மூலையில் ஒரு பொருளின் விலைவாசி ஏறுகிறது என்றால் அதையொட்டி மற்றப் பொருள்களின் விலையும் ஏறத்தான் செய்யும். வேண்டுமானால் காலம்தாழ்ந்து ஏறலாம். ஆனால் எப்படியும் ஏறக்கூடிய நிலையில் ஒன்றுக்கொன்று பின்னிக் கிடக்கின்ற பொருளாதாரத்தில்தான் நாம் இருக்கின்றோம். எப்ரல் மாதத்தில் ரூ. 1.25 அல்லது ரூ. 1.50 க்குக் கிடைத்த அரிசி இப்பொழுது ரூ. 2.50 அல்லது 3.00 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது. எப்படி வாழமுடியும்? மந்திரிகள் கடைக்குப் போய் வாங்குகிறார்களோ என்னவோ மாறுவேடத்தில் சென்று வாங்கு

கிறார்களோ என்னவோ தெரியாது. கத்திரிக்காய் விலை வெண்டைக்காய் விலை, அரிசி, புளி, எண்ணெய் எல்லாப் பொருள்களின் விலை ஏறிவிட்டது. ஒரு வேட்டி எடுக்கவேண்டுமென்றால் கூட முன்பெல்லாம் 12 ரூபாய்க்குக் கிடைத்த மில் வேட்டி இப்பொழுது கிடைக்கவில்லை. 16, 17 ரூபாய்க்குக்கூட கிடைக்கவில்லை. 18 ரூபாய் அல்லது 19 ரூபாய் கொடுத்தால் உள்ளேயிருந்து கொடுக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இப்படியிருக்கும்பொழுது என்.ஜி.ஓ.-க்கள் அரசாங்க சிப்பந்திகள் எப்படி வாழ்க்கை நடத்தமுடியும் என்பதைப் பரிசீலனை செய்துபார்க்க வேண்டும். 120, 130, 160 ரூபாய் பெற்றுக்கொண்டு அவர்கள் ஏப்ரல் மாதத்தில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த வாழ்க்கையில் இப்பொழுது முக்கால் வாசி வாழ்க்கையைத்தான் நடத்தமுடிகிறது. கம்பெனியில் வேலைபார்த்தால் அது வேறு விஷயம், அல்லது வேறு இடங்களில் இருந்தாலும் அது வேறு மாதிரி, ஆனால் அரசாங்க சிப்பந்திகளின் நிலைமை எடுத்துக்கொண்டால் அவர்கள் கையை நீட்டவும் முடியாது, ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே, அவர்கள் வாங்குகிற சம்பளத்தை வைத்துக்கொண்டு நிம்மதியாக இருக்கவேண்டுமென்றால் எப்படி முடியும்? இது சம்பந்தமான பிரச்னை நம்மிடத்தில் மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இதற்குக் காரணம் மத்திய சர்க்கார்தான். பொறுப்பு நம்மோடு மட்டுமல்ல. கிரியேட்டட் மணி வெளியிடுவது ரிசர்வ் பாங்க் தான், நோட்டு அச்சடித்து விநியோகம் செய்வது மத்திய சர்க்கார்தான். கிரியேட்டட் மணி அதிகமாக சர்குலேஷன் ஆவதின் காரணமாக அடிஷனல் ரெஸ்பான்சிபிலிட்டிஸ் நீங்கள் ஏற்கவேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் நாம் கேட்கவேண்டும். அப்படிக் கேட்டால்தான் நிலைமை சீராகும். அகவே, என்.ஜி.ஓக்கள் சம்பந்தமாக அரசாங்கம் உடனடியாக முடிவு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு நாங்கள் எல்லாம் செய்கிறோம், செய்துகொண்டிருக்கிறோம் என்று மந்திரிகள் கூறுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் விவசாய மந்திரியாக இருந்தவர்கள், உள்துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது விவசாய மந்திரியாக இருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் கரும்பு உற்பத்தியாளர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். 1958, 59, 60, 61-ஆம் ஆண்டுகளிலே கரும்பு சப்ளை செய்ததற்கு இன்னும் சரியாக விலை கிடைக்காமல் இருக்கிறது. மூப்பாட்டன் காலத்திலே சப்ளை செய்ததற்கு, வருஷம் 6, 7 ஆகப்போகிறது, இன்னும் அடிஷனல் பிரைஸ் போட்டுக் கொடுக்கவில்லை என்று சரூர், குளித்தலை, நெல்லிக்குப்பம் இந்த இடங்களில் இருக்கின்றவர்கள் கேட்டார்கள். ஆனால் இன்னும் இந்த அரசாங்கம் அதைச் சரியாக வாங்கிக்கொடுக்கவில்லை. பாரி அண்ட் கம்பெனியார் டன்னிற்கு ஐந்து ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள், நாங்கள் 7, 8 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கு அரசாங்கம் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. மத்திய சர்க்காரிடத்திலே முறையிட்டபொழுது திரு. சி. சுப்பிரமணியம்



அவர்கள் முயற்சி காரணமாக அடிஷனல் பிரைஸஸ் கொடுக்கவேண்டும் என்று வைத்தார்கள். கரும்பு வாங்கிய பணம், லேபர் சார்ஜஸ் இவையெல்லாம்போக மீதியிருக்கும் லாபத்தை வைத்து இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று 1958, 1959 இரண்டு வருஷங்களுக்கு கொடுக்கவேண்டுமென்று அலவன்ஸ் பண்ணியிருக்கிறார்கள். அதன்படி பாரி அண்ட் கம்பெனியார் 56 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று அலவன்ஸ் பண்ணுகிறார்கள். ஆனால் அதை இம்ப்ளிமெண்ட் பண்ணாமல் இருக்கிறார்கள். இரண்டு வருஷத்திற்காகிலும் அந்த பாரி அண்ட் கம்பெனியார் கொடுத்தார்களா? அதை வாங்கிக்கொடுக்க இந்த மந்திரிசபை நடவடிக்கை எடுத்ததா? சட்டசபையிலே பேசுகிறார்கள், மந்திரிகள் இருக்கிறார்கள் இதுவரையில் ஒன்றும் நடக்கவில்லை. ஐம்பத்து ஆறு லட்சம் ரூபாய் பாரி அண்ட் கம்பெனி கொடுக்கவேண்டும். அதற்காக ஒரு சட்டத்தையாவது கொண்டு வருகிறார்களா அல்லது ரூலை அமெண்ட் பண்ணுகிறார்களா? ஒன்றும் கிடையாது. பாரி அண்ட் கம்பெனியார் 56 லட்சம் ரூபாய் கொடுக்கமுடியாது என்று சொல்லி மூவாயிரம் ரூபாய் கொடுத்து ரிட் போட்டிருக்கிறார்கள். அதை அன்றே கொடுத்திருக்கவேண்டியது. அப்படிக் கொடுக்காததால் இன்றைக்கு வட்டி என்ன ஆகிறது? ரிசர்வ் பாங்க் வட்டியென்றால் 6 சதவிகிதம், இரண்டு வருஷத்திற்கு 10 லட்சம் வீதம் வட்டி கொடுக்கவேண்டும். அவர்கள் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அரசாங்கம் அதில் நடவடிக்கை எடுத்து ஸ்டேயை ஏன் வெக்கேட் பண்ண முடியாது? நாங்கள் எல்லாம் சேர்ந்து திரு. மோகன் குமாரமங்கலத்தை இந்த வழக்கிற்காக வைத்தோம். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் முதலமைச்சர் அவர்கள் அவரை அட்வகேட் ஜெனரலாக்கினார்கள், ஏன் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கக் கூடாது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அட்வகேட் ஜெனரலாகவே இருந்து அவர்கள் இன்னும் விவசாயிகளுக்காக வாதாடலாம். ஆகவே அதிலும் குறைசொல்வதற்கு இடம் இல்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** ஐம்பத்து ஆறு லட்சம் ரூபாய் வரவேண்டுமென்றால் மற்றவர்களுக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அட்வகேட் ஜெனரலுக்கு ஸ்பெஷலாக ஏதாவது இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்து ஸ்டேயை வெக்கேட் பண்ண அரசாங்கம் இன்னும் முயற்சி எடுக்கவில்லை. ஆகவே, இனிமேலாவது முயற்சியெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரேரணையின்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெளிவுபடுத்தி அதற்கு நல்ல பரிகாரங்கள் வேண்டுமென கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சி செய்துவருகிற காரியங்களுள் மிகவும் பாராட்டத்தக்க ஒன்று என்று நான் கருதுவது கல்வெட்டுக்கள், பழஞ்சின்னங்கள் இவற்றைப் பாதுகாக்க அவற்றின் கருத்துக்களை எல்லாம் திரட்டி வெளியிடுதல் போன்ற மிக மிக இன்றியமையாத வரலாற்றுத் துறைக்கு அக்கறை காட்டி,

ஆர்வத்தோடு அதற்கு உதவுகின்ற ஒன்று. அந்தத் துறையிலே தமிழகத்திலே உள்ள மிகமிகப் பழங் கல்வெட்டுக்களிலே பெரும் பாலானவை மத்திய ஆட்சியின் ஆதிக்கத்தில் அல்லது காப்பில் இருந்து வருகின்றன. ஒரு சில அவர்கள் கண்ணுக்கும் தப்பித்துக் கொண்டு அங்கங்கேயே கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. சில கல்வெட்டுக்கள், சாஸனங்கள் முதலியன மிகப்பிராபல்யத்தை அடைந்திருக்கின்ற உண்மையை ஆளுங்கணத்தார்கள் அறிவார்கள். அவற்றுள்ளே ஒன்று கோவை மாவட்டத்திலே, ஈரோடு தாலுகாவிற்குள்ளே, ஈரோட்டிற்குப் பக்கத்திலே உள்ள அரச்சலூர் என்று சொல்லப்படுகின்ற ஒரு பகுதி. அதனுடைய உண்மை பெயர் அறச்சாலையூர் என்பது. .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இடையினம்தான் இப்பொழுது இருக்கிறது.

**திரு. சா. கணேசன்:** இடையினம்தான். இப்பொழுது இருக்கிறது, ஆனால் அங்கே சாலைகளே கிடையாது. உண்மையில் இருந்தது அறச்சாலையூர் என்ற பெயர்தான். அந்தக் கல்வெட்டுக்கள் சுமார் 1,500 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை என்பதும், அங்கே சில குறிப்பிட்ட எழுத்துக்களும், சில குறிப்பிட்ட தகவல்களும் கிடைக்கின்றன என்பதும் சமீபத்திலே மலேசியாவில் நடைபெற்ற கருத்தரங்கிலேயெல்லாம் புலப்படுத்தப்பட்டு வந்த ஒன்று. மீண்டும் ஒரு சில சர்ச்சைகளை, எழுத்துக்களின் பொருள் கொள்வதிலே ஏற்பட்ட இடையூறுகளையெல்லாம் பார்த்து வரலாம் என்று சமீபத்திலே சில நண்பர்களுடன், அமெரிக்காவிலிருந்து வந்த ஆந்த்ரோபாலஜி துறையைச் சேர்ந்த குமாரி பிருந்தா பெக் என்பவருடன் 6, 7 பேர்களும் சென்றோம் அந்த இடத்திற்கு. அங்கு போய் பார்த்தால் பழைய கல்வெட்டுக்கள் மேல் எல்லாம் கீலை ஊற்றியிருக்கிறார்கள்.

ஒரு காட்டுக்குள்ளே, மலையும், பாறையும், கல்லும் முள்ளும் கலந்தஇடத்தில் செல்ல வேண்டியிருக்கிறது. ஏதோ தாரை மட்டும் பூசியிருந்தால் கெரோசினையோ அல்லது பெட்ரோலையோ போட்டு எடுத்து விடலாம். ஆனால் சில இடங்களில் உளியைக் கொண்டு புதிய எழுத்துக்களை எழுதியிருக்கிறார்கள். அந்த இடம் 'டிஃபேஸ்' ஆகிவிட்டது. இது நமக்குத் தாங்க முடியாத நஷ்டமாகும். ரூபாய், அணா, பைசாவிலே ஒன்றும் தோன்றாது. ஆனால், இந்தக் கல்வெட்டுகள் முழுவதும் போய்விடுமானால் அந்த ஒரு அங்கம், பெரிய நீண்ட சங்கிலியிலே ஒரு வளையம் அறுபட்டுப் போன நிலைதான் ஏற்படும். அந்தத் துறையில் பயிற்சியும் அனுபவமும் உள்ளவர்கள் ஆராய்ச்சி செய்யவேண்டும். இதிலே சர்க்கார் அக்கறை செலுத்தி உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாக என்னுடைய கருத்தைப் புலப்படுத்திக் கொள்கிறேன். இது மாதிரியான பல சாசனங்கள், பல வரலாறுகள், கல்வெட்டுகள் பெரும்பாலும் ஆலயங்களிலே தான் காணப்படுகின்றன. பல பாடல் பெற்ற ஸ்தலங்களுக்குள்ள சிறப்பு வேறு வகையில் அதிகமானதாக இருக்கும்; அதை நான் குறை கூறவில்லை. ஆட்சேபிக்கவில்லை. பாடல் பெறாத ஆலயங்களில், காட்டுக்குள்ளே இருக்கின்ற ஆலயங்களில் பாடல் பெற்ற



ஸ்தலங்களில் இல்லாத செய்திகள், மிக இன்றியமையாதனவாக, பயனுடையவனவாக, நமது வரலாற்றைக் கற்பதற்கு அற்புதமான ஆதாரத்தோடு கூடிய பிடிப்போடு (அதாவது டாக்குமென்ட்) அமைந்திருக்கின்ற உண்மையை அறிவோம்.

அப்படி நேற்றுக் காலையில் ஓரிடத்திற்குப் போனோம். கனம் முதலமைச்சர் அவர்களுடைய ஜில்லாவிலே அற்புதமான ஒரு ஊர். மகேந்திர வர்மனோடு முதற்போர் புரிந்த, புலிகேசி போர் நடத்திய இடம். மணிமங்கலம் என்ற அந்தக் கிராமத்தை தாம்பரத்திலிருந்து எட்டு மைல்களுக்குள்ளாக அடைந்து விடலாம். அது ஒருகாலத்தில் சிறந்த நகரமாக இருந்திருக்க வேண்டும். அங்கு பெரிய அரச மரங்கள் காணப்படுகின்றன. நம்முடைய சென்னையிலுள்ள அடையாறு ஆலமரத்தைப் போன்ற பெரிய அரச மரத்தை இதுவரை நான் பார்த்தது இல்லை. ஐம்பது கார்களை அதனடியிலே நிறுத்தலாம். அங்கு சிவன் கோயில் மூன்று; விஷ்ணு கோயில் மூன்று; வின்னகரம் என்று சொல்வார்கள். அங்கே பார்க்கின்றபோது ஒரு பெருமாள் கோயிலுக்குள்ளே ராஜராஜன் மகன் ராஜேந்திரன் காலத்திய பல கல்வெட்டுக்களைப் பார்க்க முடிகின்றது. சிலவற்றின் பிரதியை நாங்கள் எடுத்து வந்தோம். அந்தக் கோயிலுக்குள்ளே போவதற்குள்ளே உயிர் போய்விடுகிறது. அவ்வளவு முள்; சீமைக் கருவேலை அந்தக் கோவிலுக்குள்ளேதான் விளைகிறதோ என்ற அளவுக்கு முள் வளர்ந்திருக்கிறது. கோபுரங்களின் மேல் எல்லாம் கூட விளைகிறது. நான் அரசாங்கத்திற்கு ஒரு ஆலோசனை கூறுகிறேன். பழைய கோயில்களை, பெரிய கோயில்களைப் புனருத்தாரணம் செய்ய, கும்பாபிஷேகம் செய்ய, வைஷ்ணவ பாணியில் சொன்னால் சம்ரட்சணம் செய்வதற்கு பிற நாட்டு உதவியைக் கொண்டும், நம்முடைய பொதுப் பணநிதிகளில் இருந்தும், நன்கொடைகளைக் கொண்டும் லட்சக் கணக்காகச் செலவழிக்கிறோம்; நான் அதைக் குறை கூறவில்லை. ஆனால் அதை விட முக்கியமானது 'மெயின்டினன்ஸ்'. அதற்கு 30 ரூபாய்க்கு ஒரு ஆள் போட்டுவிட்டால் கூடப் போதுமானது. புல் முளைக்காமல், முள் முளைக்காமல், விமானத்தில் முள் முளைக்காமல் பார்த்துக் கொண்டால் போதும். இதற்கு அரசு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்னொன்று, மணிமங்கலத்தில் இருக்கும் பெருமாள் கோயில் தமிழ் நாட்டு வரலாற்றுக்கே எடுத்துக் காட்டாக இருக்கிறது. சிவன் கோயிலும் அப்படித்தான். மேற்குக் கூடத்தின் பின் பக்கதில் மேற்குப் பார்க்க அர்த்தநாயகியும், லிங்கேசுவரர் அன்னையையும் காணப்படுகின்றனர். அதே போன்று திருமால் கோயில் கூடத்தில் விநாயகர் தெற்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பெருமாள் கோயிலுக்குள்ளே இதுவரை நான் தட்சிணா மூர்த்தியைக் கண்டதில்லை. என்னைப் பொறுத்தவரை இதுதான் முதல். இன்னும் பல இருக்கலாம்; இல்லையென்று சொல்லுவது அவ்வளவு சுலபமல்ல. சர்வமும் சர்வே செய்திருந்தால் இல்லை

யென்று சொல்லலாம். எனக்குத் தெரியாது, இதுதான் முதல் தடவை என்று கனம் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தச் சிவன் கோயிலிலே அற்புதமான ஒன்றைப் பார்த்தேன். அதை மேல்நாட்டவர்கள் பார்த்தால் லட்சம் ரூபாய் கொடுப்பார்கள். அது ஒரு அடிதான் இருக்கிறது. அந்தக் கோயிலில் பூசை செய்கிற குருக்கள் மிக நல்ல குருக்கள்; அவருடைய பெயர் தெரியாது, ஊர் தெரியாது; செம்மையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். வெள்ளைக்கல்லிலே (கிரானைட்) உள்ள சிற்பத்தைப் பார்த்தோம். அதன் அளவு அரை அடி அகலம், ஒரு அடி நீளந்தான் இருக்கும். அதற்குள்ளே பரமசிவன் பார்வதி, அதற்கடுத்தது சுப்பிரமணியம், அடுத்தது லட்சுமி இந்த மாதிரியாக அமைந்தது. மேலும் நான்கு உருவங்கள் எங்களால் 'டிசைபர்' பண்ணமுடியவில்லை. இதுமாதிரி ஒரு அற்புதமான சிற்பத்தகடு காணப்படுகிறது. இது மாதிரி தோற்றத்தோடு கூடிய பகுதி இதற்கு முன்னால் ஆந்திரத்திலே கிடைத்திருக்கிறது. தமிழகத்திலே இதுதான் முதலாவதாகக் கிடைத்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். இது போன்றவற்றையெல்லாம் பேணிக் காக்க அக்கறை எடுத்துக் கொண்டு உடனடியாகச் செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கெல்லாம் அடிப்படையான காரியத்தைத் தொடங்கிவிட்டார்கள் என்று அமைச்சரவையைப் பார்த்துக் கூறுகிறேன். இதற்குத் தக்க தனி இலாகாவை ஆரம்பித்து விட்டார்கள். அது மேலும் துரிதமாகவும், செம்மையாகவும் பணியாற்றக்கூடிய நெறிகளையும், வழிகளையும் வகுத்து அந்த பணியை மிக விரைவிலேயே, அடுத்த திங்களிலேயே, ஆவணி மாதத்திலேயே தொடங்கப்பட்டு 'சர்வே' நடந்து விடுமானால், ஐந்தாறு வருஷங்களுக்குள்ளே தமிழகத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் உள்ள கல்வெட்டுகள், சிற்பங்கள், வரலாற்றுக்குச் சாதகமான பிடிப்புகள் தொகுக்கப்பட்டு, வகுக்கப்பட்டு, பரிசிலிக்கவும் பட்டுவிடும் என்று கூறி இதற்கான வேலையை உடனடியாக ஆளும் கணத்தவர்கள், சிறப்பாக முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: கனம் சபாநாயகர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். உணவு உற்பத்தி சம்பந்தமாக எவ்வளவோ நல்ல காரியங்களை எல்லாம் செய்து நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தன்னிறைவு பெறக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு எங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் பருவ மழை தவறியதன் காரணமாக கொடிய பஞ்சம் வர இருந்தது. அப்படி இருந்தும் கூட இந்தச் சர்க்கார் எடுத்த நடவடிக்கை காரணமாக, குறிப்பாக நமது முதலமைச்சர் அவர்களுடைய சிரத்தையின் காரணமாக, குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டு பெரிய பஞ்சம் வரக்கூடிய நிலைமை கூடுமான வரை தவிர்க்கப்பட்டது என்று சொல்லமுடியும். இந்த ஆண்டு கூட துரதிருஷ்டவசமாக எங்கள் ஜில்லாவில் பருவ மழை தவறியிருக்கிறது. பாபநாசம்



அணைத் தேக்கத்தில் 70, 75 அடி தண்ணீர் இருக்க வேண்டியது தற்போது 25 அடிதான் இருக்கிறது. திருநெல்வேலி அம்பை போன்ற பகுதிகளில் நெல் ஒரு வேளை விளையாமல் போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. இருந்தாலும் எப்படியாவது எங்கள் ஜில்லாவுக்குக் கஷ்டம் வராமல் சர்க்கார் பார்த்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியில் உள்ள மானூர் யூனியன் ஒரு பஞ்சப் பிரதேசம். அங்கு கடந்த இரண்டு வருடங்களாக மழையே பெய்யவில்லை. அங்கு பஞ்ச நிவாரண வேலைகள் துவக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் என்ன காரணத்தினாலோ துவங்கப்படவில்லை. அது விட்டுப் போயிருந்தாலும் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அங்குள்ள குளங்களை ஆழப்படுத்தியும், அதிகமான கிணறுகளை வெட்டியும் கொடுத்து ஏற்பாடு செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முன்பு பஞ்சாயத்து யூனியன்களில் பழச்செடி, தென்னைமரச் செடி போன்றவைகளை நட்டு வந்தார்கள். இப்போது எதன் காரணமாகவோ நிறுத்தப்பட்டிருக்கிறது. முன்பு அதற்காக பாதி மான்யத் தொகை கொடுத்து வந்தார்கள். இப்போது கால் வாசி கொடுக்கலாமா என்று யோசனையில் இருப்பதாக அறிகிறேன். அப்படியானால் அங்குள்ள மக்கள் பழச்செடி போன்றவை நட முன்வரமாட்டார்கள், ஆகவே, முன்போல இருந்தால் நல்லது என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனை கொடுக்கப்படுவது என்பது ஏழைகளுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம். எங்கள் ஜில்லாவிற்கு கனம் முதல் அமைச்சர் அவர்களும், கனம் உள்துறை அமைச்சர் அவர்களும் வந்து 2,184 பேர்களுக்கு, ஏழை மக்களுக்கு, ஐந்து செண்ட் விதம் குடியிருப்பு மனைக்காக பட்டா கொடுத்தார்கள். அங்குள்ள மக்கள் சர்க்காரை வாழ்க வாழ்க என்று சொல்லி இந்த தாராள மனப்பான்மையைப் பற்றி பெருமையோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் ஒரு சில இடங்களில் வீட்டு மனைக்காக மனு போட்டு ரொம்ப காலதாமதமாகிறது. அதையும் பார்த்து வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சித்தன் குடியிருப்பு, திருவண்ணாதபுரம், மணிப்புரம், கருப்பன் துரை போன்ற கிராமங்கள் நன்செய் நிலத்தின் மத்தியில் இருக்கின்றன. அக்கம்பக்கத்தில் புன்செய்யே கிடையாது. அவர்களுக்கு இரண்டு செண்ட் விதம் கொடுத்தால் போதும் என்று சொல்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இதுவரை கொடுத்த மனைகளில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு கூட்டுறவு முறையில் எவ்வளவு சௌகரியங்கள் செய்து கொடுக்க முடியுமோ அப்படிச் செய்து கொடுத்தால் நல்லது.

எங்கள் பகுதியில் தாழையூத்தில் இந்தியா சிமெண்ட்ஸ் இருக்கிறது. அதில் எவ்வளவோ பேர்கள் வேலை செய்கிறார்கள். இருந்தாலும் அதனால். ஏற்படக் கூடிய கஷ்டத்தையும் இந்த இடத்தில் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [8th August 1966

அங்கிருந்து வரும் புகை காரணமாக கிட்டத்தட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட நன்செய் நிலங்களில் வர வர விளைச்சல் குறைந்து கொண்டே போகிறது. வைக்கோலைக்கூட மாடுகள் தின்பதில்லை. அங்கு மக்கள் குடியிருக்க கஷ்டமாக இருக்கிறது. புகையின் துர்நாற்றம் பத்து மைல் சுற்றளவிற்குப் போகிறது. முதல் அமைச்சர் அவர்கள் எங்கள் ராஜவல்லிபுரம் ஊருக்கு சேதுப் பிள்ளை ஞாபகார்த்த வாசகசாலை திறப்பு விழாவிற்கு வந்திருந்தார்கள். அவர்களே ஐந்து நிமிடங்கள் அந்தப் புகையின் கஷ்டத்தை அனுபவித்தார்கள். அப்ஸார்பர் போன்ற கருவிகளை ஏற்படுத்தியோ அல்லது வேறுமுறைகளைக் கையாண்டோ மூன்று கில்ன்களிலிருந்து வரும் துர்நாற்றமுள்ள தூசியை நிறுத்த முடியுமா என்று ஆலோசனை செய்ய வேண்டும். அந்த இடத்தில் மக்கள் வாழ முடியாமல், விவசாயம் செய்யமுடியாமல் கஷ்டப் படுகிறார்கள். அதற்கு எப்படியாவது ஏதாவது நிவர்த்தி செய்ய முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், சர்க்காரும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழையூத்து போலீஸ் சர்க்கிள் சரகம் இதற்கு முன்பு திருநெல்வேலி டிவிஷனோடு இருந்தது. ஏதாவது ஒரு காரியம் இருந்தால் அங்குள்ள டெப்டி சூபரின்டென்டென்ட் அதைக் கவனிக்கக்கூடியதாக இருந்தது. தச்சநல்லூரை எடுத்துக்கொண்டால் அது திருநெல்வேலிக்கு ஒரு மைலுக்குள் இருக்கிறது. இப்போது கோவில்பட்டி டிவிஷனோடு அதாவது 34 மைலுக்கு அப்பாலுள்ள டெப்டி சூப்பிரின்டென்டென்ட் சரகத்தோடு சேர்த்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். அதைப் பரிசீலித்து தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி நகரசபையைப் பொறுத்தவரையில் அது சம்பந்தமான வழக்கு இப்போது ஹைக்கோர்ட்டில் இருக்கிறது. அதுபற்றி நான் பேச விரும்பவில்லை. அதில் இல்லாத ஒரு காரியத்தை அமைச்சர் கவனித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலியில் ஒரு மருத்துவ ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு வேறு மருத்துவ ஆஸ்பத்திரியே கிடையாது. அப்படி அவர்கள் செல்ல வேண்டுமென்றால் பாளையங்கோட்டைக்குத்தான் வரவேண்டும். இதற்கு முன்பு இருந்த நகரசபைத் தலைவர்கள் எல்லாம் பொருள் காட்சி மூலம் பணம் சேர்த்து அதன் மூலம் இந்த நல்லதொரு ஆஸ்பத்திரியைக் கட்டி அங்குள்ள மக்களின் கஷ்டத்தை நீக்கினார்கள். கடந்த வருடம் நெல்லையில் முன்பிருந்த நகரசபைத் தலைவர் தலைமையில் ஒரு பொருள்காட்சி நடத்தினார். அதன் மூலம் லாபம் வந்த பணத்தை மருத்துவ ஆஸ்பத்திரி நிதிக்கு இன்னும் கொடுக்கவில்லை. முதலாவது கேட்கிறபோது, இந்தப் பணத்தில் எவ்வளவு மீதம் வந்தாலும் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள்

**கனம் சபாநாயகர் :** அது கோர்ட்டில் இருக்கிறது.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** இந்த விஷயம் கோர்ட்டில் இல்லை, அப்படியிருந்தால் பேசமாட்டேன்.



8th August 1966]

MR. SPEAKER : We do not know what points are going to be raised in the Court.

கோர்ட்டில் என்னவெல்லாம் பேசுவார்கள் என்று இப்போது தெரியுமா ?

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** கோர்ட்டில் இருக்கிற ஒன்பது பாயிண்ட்ஸில் இது இல்லை.

**கனம் சபாநாயகர் :** ஒன்பது பாயின்ட்ஸ்தான் இருக்கிறது என்பது எப்படித் தெரியும் ?

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** அந்தப் பணத்தை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாபுரம், திம்மராஜபுரம், கோட்டூர் ஆகிய கிராமங்களில் உள்ள கிணறுகளில் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. அவ்விடங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக, இந்த மூன்று ஊர்களையும் சேர்த்து, தாம்பரபரணி குடிதண்ணீர் திட்டத்தில் இவற்றையும் சேர்த்து போட்டால், அவர்களுக்கு நல்ல குடி-தண்ணீர் கிடைக்க வசதியாக இருக்கும். அதற்கும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். பரிசீலனை செய்கிறோம் என்று கூறி தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் விரைவில் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்களைப் பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் ஆபிசர்களாக 1961-ல் இருந்து நியமித்திருக்கிறார்கள். அவர்களை இன்னும் ரெகுலரைஸ் செய்யவில்லை என்று குறைபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரெகுலரைஸ் செய்யாமல் இருப்பது சரியல்ல. அதையும் பார்த்து ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவிலுள்ள பெண்கள் ட்ரெயினிங் ஸ்கூலுக்கு ஆயிரக்கணக்கான அப்ளிகேஷன்ஸ் வந்து எல்லோருக்கும் இடம் கிடைக்கவில்லை. அங்கு ஒரே ஒரு ட்ரெயினிங் ஸ்கூல்தான் இருக்கிறது. அதில் நாற்பது பேர்களைத்தான் சேர்க்க முடிகிறது. முனிஞ்சிப்பட்டியில் பெண்கள் ட்ரெயினிங் ஸ்கூல் கட்டுவதற்காக திரு. சங்கர ரெட்டியார் அவர்கள் கொடுத்த இடத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபாயில் கட்டடம் கட்டி, அது அப்படியே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி இந்த ஆண்டே அந்த இடத்தில் பெண்கள் ட்ரெயினிங் ஸ்கூலை ஏற்படுத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுத்தாறு அபிவிருத்தித் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இந்தப் பஞ்ச காலத்தில் அது வேண்டாம். மணிமுத்தாறு நதி பாயாத இடத்தில் கூட, அம்பாசமுத்திரத்தின் ஒரு பகுதியில் இந்தத் தீர்வை வசூல் செய்யப் போகிறார்கள். அங்குள்ள மக்களுக்கு இது தேவை இல்லை. அவர்களிடம் வசூலிப்பதும் சரியாகாது என்றே கருதுகிறேன். அமைச்சர் அவர்களும்

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [8th August 1966

அதைப் பரிசீலனை செய்து பார்ப்பதில் தவறில்லை என்று கூறி, எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் இருக்கிற 1966-67-ம் ஆண்டு துணை மதிப்பீடுகள் சம்பந்தமான நிதி ஒதுக்கீட்டு மசோதாவில் ஒரு சில வார்த்தைகள் தங்கள் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம் அரசாங்க ஊழியர்களுடைய அகவிலைப்படி விகிதங்களை உயர்த்தியதற்காக நம் கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே கடந்த பொது நிதிநிலை அறிக்கை விவாத நேரத்தில் அளித்த வாக்குறுதிக்கேற்ப அகவிலைப்படி விகிதங்கள் உயர்த்தப்பட்டிருப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒரு அம்சம். நம் குறிக்கோளின் முழு அளவையும் அவர்கள் எடுத்துக் காள்ளாவிட்டாலும், முதல் படியே அவர்கள் அதை ஒத்துக்கொண்டார்கள். அதற்காக நாமும் சர்க்கார் ஊழியர்களைப் போலவே நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் அகவிலைப் படியின் அளவைப் பற்றிச் சொன்ன நேரத்தில் இந்த மன்றத்தில் இன்னும் சில அபிப்ராயங்கள் சொல்லப்பட்டன. இன்று போய்க்கொண்டு இருக்கிற விலைவாசியில் இந்த அகவிலைப் படி மட்டும் போதாது. மத்திய அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படிக்கு சமமாக்கி விட்டோம் என்று சொல்லி விடுவது விவகாரம் முடிந்ததாகாது. இன்னும் ஹௌஸ் ரென்ட் அலவன்ஸ், சிடி காம்பன்சேடரி அலவன்ஸ் இவை சம்பந்தமாக நகர ஈட்டுபடி என்பது நம் மாநில சர்க்காரில் கிடையவே கிடையாது. வீட்டு வாடகைப்படியில் இன்னும் தார தம்மியம் இருந்து கொண்டிருக்கிறது என்ற பிரச்னையை எழுப்பியிருக்கிறோம். அதுபற்றி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்த்தோம். இன்னும் ஒதுக்கீடு இல்லாத நிலைதான் இருக்கிறது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல் இன்று அகவிலை உயர்ந்து கொண்டே இருக்கிறது. நாம் அகவிலைப் படியை உயர்த்துவது என்பதை தீர்மானிக்கும் முன்னரே திரு. சசீந்திர சவுத்திரி அவர்கள் ரூபாய் மதிப்பைக் குறைத்து விட்டார்கள். மதிப்புக் குறைவில்லை என்று பெரிய பொருளாதார மேதைகள் சொல்லலாம். இன்றைக்கும் அகவிலைப்படியை எப்படி உயர்த்தலாம் என்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக மத்திய சர்க்கார் சமீபத்தில் கூட, பத்து நாட்களுக்கு முன்னால் (மாஜி) பிரதம நீதிபதி திரு. கஜேந்திர கட்கர் அவர்களைத் தலைவராக கொண்ட கமிட்டியை அமைத்திருக்கிறார்கள் என்பதை நான் நமது முதலமைச்சர் அவர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அகவிலைப் படியைப் பொறுத்தவரை அது ஒரே இடத்தில் நிரந்தரமாக நிற்பதில்லை. இந்த மாநிலத்திலும் மத்திய சர்க்கார் ஊழியர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். நம்முடைய சர்க்கார் ஊழியர்கள் 2½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால், மத்திய சர்க்கார் ஊழியர்கள் 3 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள்.



8th August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

அகவிலைப் படியை ஏற்றும் போது மத்திய சர்க்கார் ஊழியர்கள் அனுகூலமடைகிறார்கள். ரயில்வே சர்வீஸில் இருக்கக்கூடியவர்கள், தபால் சர்வீஸில் இருக்கக்கூடியவர்கள், ஹார்பரில் இருக்கக் கூடியவர்கள், சுங்க வரி இலாகாவில் இருக்கக்கூடியவர்கள், இவர்கள் இந்த மாநிலத்தில் 3 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். கனம் திரு. பக்தவத்சலம் அவர்களின் சர்க்கார் ஊழியர்கள் 2½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால், மத்திய சர்க்காரிலுள்ள ஊழியர்கள் 3 லட்சம் பேர்கள் இதே மாநிலத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுவாடகைப்படி, நகர ஈட்டுப்படி வாங்குகிறார்கள் என்றால், அவர்களை விட முக்கியமாக இருக்கும் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு இப்படிப்பட்டச் சலுகைகள் வழங்குவதற்குக் கனம் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்கவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இப்போதிருக்கின்ற சம்பள விகிதங்கள் பழைய காலத்தில் போடப்பட்டவை. பழைய காலத்தில் என்று சொன்னால், விக்கிரமாதித்தன் காலத்தில் என்று சொன்னால் கூட யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அவ்விதம் பழங்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட சம்பளவிகிதங்கள் தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கின்றன. இது மிகக் குறைவாகவே இருக்கின்றது. சமீபத்தில் திரு. ராமுண்ணி மேனன் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட பே-கமிஷன் கூட சம்பளவிகிதங்களை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பரிசீலனை செய்யவேண்டும் என்று பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அந்த நிலைமையில் பார்க்கும்போது, இன்றைக்கு சம்பளவிகிதங்களில் இருக்கின்றன தார தம்மியம், நாட்டில் நிலவி வருகின்ற விலைவாசி உயர்வு இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து கொடுக்க வேண்டியது இந்த சர்க்காருடைய கடமை. சமுதாயத்தின் மற்ற பகுதி மக்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும், இந்தச் சர்க்கார் ஊழியர்களாவது விசுவாசமாக நடந்து கொள்ளுகின்ற அளவுக்கு அவர்களுடைய சம்பள விகிதத்தைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு பே-கமிஷனை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அகவிலைப் படியை சம்பளத்தோடு இணைக்கவேண்டும். முக்கியமாகச் சம்பள விகிதத்தில் தார தம்மியம் இருப்பது நல்லதல்ல என்பதை இந்த நிதி ஒதுக்கீடு செய்யும் நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பிற்பட்ட மக்களுக்காக நிதி ஒதுக்க வேண்டியது அவசியம், அவர்களுடைய சமுதாயப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். அவர்கள் மற்றவர்களைப்போன்று உயர் பதவிகளில் போகவேண்டும். சர்வீஸ் கமிஷன்களில் இவர்கள் உயர்வான பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இதற்கெல்லாம் சர்க்கார் திட்டங்கள் போட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். முக்கியமாக ஏழை அரிஜன மக்களுக்கு வீடுகட்டிக்கொள்வதற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே மாதிரி பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதுகிறவர்களுக்கு ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுத்துவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பில் காணப்படுகிறது. இவையெல்லாம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [8th August 1966

மகிழ்ச்சியான செய்திகள் தான், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாக கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவையெல்லாம் மிக ருசிகரமாகத்தான் இருக்கின்றன என்றாலும் நடை முறையில் எத்தனை பிற்பட்டமக்கள் முன் வந்திருக்கிறார்கள்? எத்தனை பேர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதியிருக்கிறார்கள்? நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிட்டேன், இப்போது அதைப்பற்றி குறிப்பிடக்கூடாது என்று சொல்வார்கள் அதிலுள்ள காரணங்களுக்காக அதைச் சொல்லுகிறேன். சமீபத்தில் லா-காலேஜில் 874 பேர்கள் மனுச்செய்திருந்தார்கள். அதில் பிற்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்களை எடுத்திருக்கிறார்கள்? ஏதோ பிற்பட்ட மக்களுக்குப் பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்போகிறோம் என்று சொல்லியிருப்பதைப் பார்த்தால் நன்றாகத்தான் இருக்கிறது. முக்கியமாக 16 சதவிகிதம் அரிஜனங்களையும் 25 சதவிகிதம் பிற்பட்டவர்களையும் சேர்க்கவேண்டும் என்று ஜி.ஓ. இருக்கிறது. ஆனால் எங்கே இது நடக்கிறது? மெடிக்கல் காலேஜ் ஆகட்டும், என்சினியரிங் கல்லூரி ஆகட்டும், கலைக்கல்லூரி ஆகட்டும், எங்கே அவ்விதம் சேர்க்கப்படுகிறார்கள். நான் இதைச் சொல்லுகிறேன் என்பதற்காகக் கோபித்துக்கொள்ளக் கூடாது. சட்டக் கல்லூரி தேர்வு விவகாரத்தில் இந்தச் சர்க்கார் போட்டிருக்கக்கூடிய சட்டத்தையே பகிஷ்கரித்து இருக்கிறார்கள். 16 சத விகிதம் என்று சொன்னால் நிச்சயமாக 32 பேர்களை, ஹரிஜன மாணவர்களை, வக்கீல் படிப்புக்குத் தேர்ந்தெடுத்திருக்கவேண்டாமா? நான்கு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஐந்தாவது ஆளாக வந்திருக்கும் சுப்பராமன் என்ற மாணவன் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இந்த மாணவன் பிற்பட்ட ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவன்தான். இப்படி நிலைமை இருக்கும்போது எங்கே பிற்பட்ட மக்களுக்கு ஊக்கம் காண்பிக்கப்படுகிறது? சட்ட கல்லூரியைப் பொறுத்தவரையில் மொத்தம் 200 பேர்களில் 32 பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். அவ்விதம் சேர்க்கப்படவில்லையே. இது எதைக்காட்டுகிறது? சிதம்பரத்திற்கு வந்த நந்தனை தடுத்து நிறுத்தியது போல், இவர்களையும் தடுத்தி நிறுத்தி ஆதி திராவிடனே! அரிஜனமகனே! உனக்கு எதற்காக வக்கீல் படிப்பு? என்று சொல்வது போல்தான் இருக்கிறது. இப்போது என்ன நடந்திருக்கிறது என்று கேட்டால் ஐந்தாறு பேர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லக்கூடும். ஆனால் உண்மையிலேயே சட்ட துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது. பெரிய வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வந்திருக்கிறார்கள். நான் கணக்குகளை எல்லாம் எடுத்துப்பார்த்தேன். அரிஜனங்களைச் சேர்ந்த வக்கீல்கள் தமிழ் நாட்டில் எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்று பார்த்தால், ஐம்பது பேர்களுக்குமேல் வந்திருக்கமாட்டார்கள். இதைப் பார்க்கும்போது, 32 பிற்பட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கும் போது, ஐந்தாவது மாணவனைக்கூட எடுக்கவில்லை என்றால் நிச்சயமாக தானே 'போட்ட சட்டத்தை பகிஷ்கரித்திருக்கிறார்களே தவிர, வேறு என்ன இருக்கமுடியும்?



8th August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

சட்டங்கள் இவ்வளவு இருந்தும், ஏன் இந்தக் கதவு திறக்கப்படவில்லை என்பதை நாம் நிச்சயமாக கேட்கத்தான் வேண்டும்.

இருபத்தைந்து லட்சம் ரூபாய் நில ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். நல்ல அபிலாஷைகள் தான். இரண்டு வருடங்களுக்கு முன்னால் திரு. பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு அரிஜனங்களுக்கு குடியிருப்பு மனை சம்பந்தமாக விசாரணை செய்து பரிசீலித்து ஒரு அறிக்யையைக் கொடுத்திருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள் அறிக்கையில்? இதைத் தேர்தல் நேரத்தில் பொதுமக்களுக்கு எதிர்க் கட்சிகள் அச்சிட்டுக் கொடுப்பார்களேயானால், மிகவும் உபயோகமாக இருக்கும். அவ்விதம் கொடுப்பதாக இருந்தால், இந்த அரசாங்கம் ஆயிரக் கணக்கான ஆதித் திராவிட மக்களுக்கு எவ்வளவு பெரிய அநீதியை செய்திருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள முடியும். இந்த மாநிலத்தில் 60 லட்சம் அரிஜனங்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களில் 35 லட்சம் பேர்களுக்கு இன்னும் குடியிருக்க வீட்டு மனை 16 அடி கூட கொடுக்கப்படவில்லை. சுடுகாட்டில்தான் இவர்களுக்கு இடமிருக்கிறதே தவிர, குடியிருப்பதற்கு இதுவரையில் நாட்டில் இடம் கொடுக்கப்படவில்லை. புலிக்கென்று குகை இருக்கிறது, எலிக்கென்று வளை இருக்கிறது, பாம்புக்கென்று புற்று இருக்கிறது. ஆனால் இந்த நாட்டில் உணவு தான்யங்களைப் பெருக்கிக்கொண்டிருக்கின்ற அரிஜனங்களில் 35 லட்சம் பேர்களுக்கு குடியிருக்க இடம் கிடையாது. நாங்கள் என்ன செய்வோம்? "பணம் வேண்டாமா" என்று கேட்கக்கூடும். அதற்கும் இந்தக் கமிட்டி தனது அறிக்கையில் கூறியிருக்கிறது, 15 கோடி ரூபாய் இருந்தால், இத்தனை பேர்களுக்கும் இரண்டு ஆண்டுகளில் நிலம் கொடுத்திருக்கலாம் என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சர்க்கார் இதை நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டும் இதில் இருக்கிறது. இந்த நிலையில்தான் 25 லட்சம் ரூபாய் ஏழை மக்களுக்காக நில ஆர்ஜிதம் செய்வதற்கு என்று இதில் ஒதுக்கியிருக்கிறார்கள். இதைப்பார்த்து என்ன சொல்வது. தேர்தல் பிரச்சாரம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது? ஏதோ அது வருகிறது, இது வருகிறது ஏழை மக்கள் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கப் போகிறோம் என்று அவர்கள் தலைவர் காமராஜ் அவர்கள் சொல்லிக்கொண்டு ஏழைமக்களை திருப்திப்படுத்துவதற்குத்தான் சொல்ல முடியுமே தவிர, இந்த 25 லட்சம் ரூபாயைக்கொண்டு உண்மையிலேயே என்ன செய்ய முடியும்? இதைச் சீக்கிரத்தில் செய்து காட்டவேண்டும் என்றால் வழியிருக்கிறது. அதையொன்றும் செய்யாமல் 25 லட்சம் ரூபாய் என்று மட்டும் சொல்வது, ஏதோ டோக்கனைத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இந்த நாட்டில், நன்றியுள்ள சமுதாயமாக இருக்கக்கூடிய இந்த அரிஜனமக்கள், பிற்பட்ட மக்கள், இன்றைக்கு ஆப்பிரிக்க நாட்டில் இருக்கின்ற நீக்ரோ மக்களுக்கும் கீழ்த்தரமான நிலையில் இந்த நாட்டில் இரண்டாம் தரம் அல்ல, மூன்றாம் தரமல்ல ஐந்தாம் தரம் ஸிட்டிஸனாக (குடிமகனாக) வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் நிலைமை என்ன? கனம்

*[திரு. கே. ஏ. மதியழகன்]* [8th August 1966

*உள்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். கடந்த வாரத்தில் திருவண்ணாமலை அருகில் இருக்கும் தண்டராம்பட்டு என்ற கிராமத்தில் தீண்டாமை சம்பந்தமாக அரிஜன மக்களுக்கும், மேல் ஜாதி வகுப்பினருக்கும் தகராறு ஏற்பட்டு அரிஜனச் சேரியை கொளுத்திவிட்டார்கள் மேல்ஜாதியினர். 242 குடிசைகள் வெந்துபோய்விட்டன. இந்த அநியாயம் செய்தவர்களை, இந்த அக்கிரமம் செய்தவர்களை கண்டுபிடித்து தண்டனை கொடுக்கவில்லை. ஏதோ வழக்குப் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடும். இவ்விதம் வெந்த குடிசைகளுக்கு இந்தச் சர்க்கார் 500 ரூபாய் கடனைக் கொடுத்திருக்கிறது. ஏன் இவர்களுக்கு கடனைக் கொடுக்க வேண்டும்? இந்தத் தொகையை இதற்கு காரணமாக இருந்த மேல்ஜாதியினரிடமிருந்து ஏன் வசூலிக்கக்கூடாது? 242 குடிசைகள் வெந்து போயிருக்கின்றன என்றால், அது சாதாரணமான செயல் அல்ல. இன்றைக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு 300 ரூபாய் சர்க்கார் கடன் கொடுத்திருக்கிறது என்றால், அதை திருப்பிக் கொடுக்கவேண்டும். இதை ஏன் உதவித் தொகையாகக் கொடுக்கக் கூடாது. சாதாரணமாக தீ விபத்து ஏற்படும்போது 20 ரூபாய் 30 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இது அவர்களுக்கு அரிசி வாங்குவதற்குக்கூட போதாது. சென்னையில் என்ன நடக்கிறது? தீ விபத்து நடக்கும்போது குடிசைகள் போய்விடுகின்றன. ஒரு குடிசைப் போடவேண்டுமென்றால், 100 ரூபாயிலோ அல்லது 200 ரூபாயிலோ ஒரு குடிசைப் போட்டுக்கொள்ள முடியாது. இது கனம் உள்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். அந்த முறையில் பார்த்தாலும் கூட, சர்க்கார் கொடுக்கின்ற இந்தக் கடனை மான்யமாகவாவது கொடுத்திருக்க வேண்டும். ஒரு பழமொழி சொல்வார்கள். . . . "கூரையில் ஏறி கோழியைப் பிடிக்க முடியாதவன், வானத்தைப் கிழித்து வைகுண்டம் காட்டுகிறேன்" என்றானும். அதுமாதிரித் தான் இருக்கிறது, இவர்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால். பிற்பட்ட மக்களுக்கோ அல்லது அரிஜன மக்களுக்கோ கோழியைக் கூட பிடித்துக் கொடுக்க முடியாதவர்கள் அவர்களைப் பார்த்து நாங்கள் வானத்தைக் கிழித்து வைகுண்டத்தைக் காட்டுகிறோம் என்று சொன்னால், அதை இந்த நாட்டில் விழிப்புணர்ச்சியுள்ள மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைத்தால், அது இந்தச் சர்க்கார் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கின்ற காரியமாகத்தான் இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.*

*அதைப்போலவே, மிக மிக முக்கியமான அம்சம் உணவுப் பிரச்னை. அது தான் இந்த நாட்டின் முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. இது குறித்து இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளையும், நடைபெறுகின்ற விவாதங்களையும் நான் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு இருக்கிறேன். அதோடு நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பதிலுரைகளையும், அவர்களுடைய கருத்துக்களையும் கவனித்துக்கொண்டிருக்கிறேன்,*



th August 1966] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

*அவர்களுடைய பேச்சை கேட்கும்போது, நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தை வேறு திசைக்கு திருப்பிக் கொண்டிருக்கிறார்கள், இந்த மன்றத்திற்குத் தவறான செய்திகளைத் தேடிக் கொடுக்கிறார்கள் என்பதை நான் மிகுந்த மனவேதனையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, யாரையும் கண்டனம் செய்யவேண்டும் என்ற கருத்தில் அல்லது யாரையும் குறைவாகப் பேசவேண்டும் என்ற கருத்தில் நான் சொல்லவில்லை. கனம் உணவு அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் எந்த அளவுக்கு உணவு தான்யங்கள் கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றி பதில் அளித்தார்கள். கனம் உறுப்பினர் திரு. தியாகராஜ பிள்ளை அவர்களே சொல்லுகிறார்கள், தஞ்சாவூரில் அரிசி கிடைக்கவில்லை என்று. அந்த அளவுக்கு பிரச்னை இருக்கிறது என்றால், இது சந்தோஷமான ஒரு செய்தியா? உண்மையான நிலைமையை நாம் கண்டு கொள்ள வேண்டாமா? ஏதோ தவறான படப் பிடிப்பைத்தானே இவர்கள் காட்டுகிறார்கள்? சேலத்திற்குப் போகின்ற வழியில் பொய்மான்கரடு என்ற இடத்தில் வந்தவுடன் பஸ்ஸில் போகின்றவர்கள் தாய்மார்கள் குழந்தைகளிடம் இதோ "மான், மான்" என்று காட்டுவார்கள். அந்தச் சேலத்து பொய்மான்கரடு போல் இருக்கிறது அமைச்சர்கள் வடித்துக்காட்டும் செய்தி அறிக்கைகள். நன்றாகப் போட்டார்கள் ஒரு பத்திரிகையிலே, 'விலைவாசி ஏறவில்லையாம்—முதல் அமைச்சர் அறிவிப்பு' என்று ஒரு பிரபலப் பத்திரிகை போட்டது. "பொய் மான்கரடு" உண்மையான மான் அல்ல; தோற்றம்தான்; அதன் பக்கத்தில் போனால் மண்டை தான் உடையும்; மான் ஒன்றும் இருக்காது. தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் கொடுத்ததும் சரி, குறுவை மகசூல் நன்றாக இருக்கிறது, பயிர் சாகுபடி நன்றாக இருக்கிறது என்று சொல்லுவதும் சரி, நாட்டின் நிலைமையை உணர்த்தாதது மட்டுமல்ல, அங்கு இருக்கும் மந்திரி திரு. சுப்பிரமணியம் அவர்களை நம்பிக் கொண்டு, அவர்கள் கொடுக்கும் புள்ளி விவரங்களை நம்பிக்கொண்டு, அமெரிக்காக்காரன் பி. எல். 480-ஐ நம்பிக்கொண்டு, அதை வைத்துக்கொண்டு இந்த நாட்டை வாழ வைக்கலாமென்று எண்ணிக்கொண்டு தவறான கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள். நான் வேதனையோடு சொல்லுகிறேன், நான் கும்பகோணத்திற்குப் போயிருந்தேன். கும்பகோணத்தில் க்யூ நிற்கிறார்கள். தானியக்களஞ்சியம் கும்பகோணம். அங்கே க்யூ நிற்கிறார்கள். தஞ்சையில் க்யூ நிற்கிறார்கள். சந்திரசேகரபுரம் கூட்டுறவு சொஸைட்டியில் ஒரு லிட்டர் அரிசி கொடுக்கிறார்கள். ஒரு லிட்டர் அரிசி எவ்வளவு நாட்களுக்கு வரும்? ஒரு வாரத்திற்கு ஒரு லிட்டர் அரிசி, அரசாங்கம் கொடுக்கும் ரேஷன் கோவிலிலே புளியோதரைக்கும், அக்காரவடிசலுக்கும் கொடுக்கும் அரிசியாக இருக்கிறதே தவிர, நாட்டு மக்களுக்கு உணவு கொடுக்கவேண்டிய முறையில் இல்லை. நாட்டு மக்களுக்கு உணவு கொடுக்கவேண்டிய அடிப்படையான பொறுப்பு சர்க்காருக்கு இல்லையா? பொறுப்பை அறிந்து செய்திருக்கிறோம், ஒழுங்காக நடைபெறுகிறது என்று சொன்னார்கள். நேற்றைய*

[திரு. கே. ஏ. மதியழகன்] [8th August 1966

தினம், எனக்குத் தகவல் வந்திருக்கிறது, கோயம்புத்தூருக்குப் பக்கத்தில், பெரியநாயக்கன் பாளையத்தில் ஒரு லிட்டர் அரிசி ரூ. 1-90-க்கு விற்றது. ஒரு லிட்டர் ரூ. 1-90. ஒரு படி அரிசி ரூ. 4-க்கு விற்கிறது. இன்றைக்கு இதை மறுக்க முடியுமா? ஒவ்வொரு ஊரிலும் அந்த மாதிரி விற்கிறது. தஞ்சையிலே வயல் வெடித்துக் கிடக்கிறது. வாய்க்கால்கள் வறண்டு கிடக்கின்றன. எல்லாம் வந்துவிடும் என்றால் எப்படி வரும்? ஒவ்வொரு இடத்திலும் இவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காட்டுகிற சித்திரமே தவறான சித்திரம்.

நாட்டு மக்களுக்கு உணவு கொடுக்க வேண்டிய அடிப்படைக் கடமை இருக்கிறது சர்க்காருக்கு. மக்களுக்கு வழங்காதது மட்டுமல்ல, தவறான கணக்குகளைச் சொல்லுகிறார்கள். குறுவை யில் லாபப் போகிறதா? தானியங்கள் கொள்முதல் செய்தார்கள். இப்போது ரூ. 13 கோடி கேட்கிறார்கள். என்ன தானியக் கொள்முதல் செய்தார்கள்? இப்போதே நஷ்டம். லோகல் ஃபண்ட் ஆடிட்டிலே ரூ. 5 லட்சத்துக்குக் கணக்கு வந்துவிட்டது. இன்னும் பல லட்சங்கள் நஷ்டம் வந்திருக்கிறது என்று கணக்குக் கொடுப் பார்கள். தானியங்களைக் கொள்முதல் செய்வதிலே தஞ்சையி லிருந்து தானியங்களை ஆவடி தானியக் கிடங்குக்குக் கொண்டு வந்தார்கள். ஆவடியில் கொண்டு வந்து இறக்க வேண்டும். ஆவடி யில் இறக்க வேண்டியதற்கு பதில் தாம்பரம் ரயில்வே நிலையத் திற்கு வந்தது. இன்னொரு பகுதி எக்மோருக்கு, பீச்சுக்கு வந்தது. அதைத் திரும்ப ஆவடிக்கு எடுத்துச் செல்லுவதில் ரூ. 2¼ லட்சம் நஷ்டம். இரண்டாவது ரக நெல் வாங்கியதற்கு முதலாவது ரக நெல்லுக்குக் கொடுக்க வேண்டிய விலையைக் கொடுத்த முறையில் நஷ்டம். சிதறியதில் நஷ்டம், இலாகாவில் உள்ளவர்கள் பயிற்சி பெற்று கற்றுக்கொள்ளுவதன் மூலம் நஷ்டம். இதிலே இப்பொழுதே இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

நான் நேற்று கோவை மாவட்டத்திற்கு போயிருந்தேன். அங்கு நான் பார்த்தேன், அங்கே தாராபுரம் மாஜி உணவு அமைச்சர் மன்றாடியாருடைய தலைநகரம். தாராபுரத்தில் ஒருவித அரிசி கொடுக்கிறார்கள். கனம் சபாநாயகர் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன், மாஜி உணவு அமைச்சர் பட்டக்காரர் வீட்டில் குதிரைக்குப் போடும் கொள்ளை விடமோசமாக இருக்கிறது. மாட்டுக்குத் தீனியாக போடுகிற தவிடு மாதிரி உள்ள அரிசி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரிசியினுடைய மாதிரி என்னிடம் இருக்கிறது. கனம் சபாநாயகர் அவர்கள் அதைச் சபையில் காண்பிக்கக் கூடாது என்று சொல்லுவார்கள். சபாநாயகர் அவர்கள் உத்தரவு கொடுத் தால் இங்கேயே காண்பிக்கலாம். அந்த மாதிரியை அமைச்சர் களுக்குக் கொடுக்க இருக்கிறேன். நான் சொல்லுவது உண்மை என்பதைக் காட்ட பத்திரிகைக்காரர்களுக்குக் கொடுப்பதற்காக வைத்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் திருமதி பார்வதி அர்ஜு



8th August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

னன் அவர்கள் வீட்டில் குதிரைக்குக் கூட அம்மாதிரிப் போட மாட்டார்கள். இதற்குப் பிறகு நியாய விலைக் கடைகளில் போய் நின்று ஒரு லிட்டர் அரிசி வாங்க வேண்டும்.

சர்க்காரிலே ரைஸ் மில் ஆரம்பித்தோமே! திருவாரூரில் ஒரு ரைஸ் மில் ஆரம்பித்தோம். மற்ற இடங்களில் 50 கலம் ஆனால் அங்கு 40 கலம் அரவை ஆகிறது. அரிசி அவல் மாதிரி இருக்கிறது. ராட்சஸ ஆலை என்று ஆரம்பித்த ஆலைகளில் அரிசி அவல் மாதிரி இருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்களுடைய படப்பிடிப்பு சரியான படப்பிடிப்பு; அவர்கள் பொருளாதார நிபுணராக இல்லாமல் இருக்கலாம். இன்றைக்கு இருக்கிற பயங் கரமான நிலையிலே சாதாரணமாக இரண்டு வேளைக்குக் கவளச் சோறு கூடக் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை மிகத் தெளிவாகக் கூறினார்கள்.

கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய ஊருக்குப் பக்கத்திலே வெள்ளவேடு என்ற ஒரு ஊர். அங்கு தெய்வயானை என்று ஒருவருடைய பெயர். அவளுக்கு 3 வயது, 5 வயது, 9 வயது இப்படி மூன்று குழந்தைகள். கோர்ட்டில் அவர்களே சொல்லி யிருக்கிறார்கள். அவர்களுக்குத் தண்டனை வந்திருக்கிறது. போன தேர்தலில் அவர்கள் ஓட்டுப் போட்டிருக்கலாம். பூந்தமல்லி அருகில் வெள்ளவேடு என்ற ஊர். இல்லை என்று அவர்கள் மறுப் பார்கள். செங்கற்பட்டு அருகில் நடந்தது. அந்த தெய்வயானை என்ற அம்மாள் மூன்று குழந்தைகளைக் கிணற்றில் போட்டார்கள். இவர்கள் விழுகிற நேரத்தில் யாரோ காப்பாற்றினார்கள். கொலை செய்தார்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டது.. தற்கொலை செய்து கொள்ள முயன்றார்கள் என்றும் குற்றச்சாட்டு வந்தது. அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் 'என்னுடைய புருஷனுக்கு வேலை இல்லை; பொருளாதார நிலைமை சரியாக இல்லை; வாரத்திற்கு ஒரு லிட்டர் அரிசி கொடுத்தார்கள்; இப்படிப்பட்ட இரக்கமற்ற நாட்டினிடத்தில், இந்த பூமியில் குழந்தைகளை விட்டு விட்டுச் செல்ல மனது இல்லை; என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங் கள்' என்று கூறியிருக்கிறார்கள். செங்கற்பட்டு வழக்கு மன்றத் திலே நடந்தது; தீர்ப்பிலே வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் நாடு முழுவதிலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலும், மற்ற மாவட்டங்களிலும் இருக்கின்றன.

இந்தப் பிரச்னையில், நான் நிச்சயமாகச் சொல்லுவேன், போனஸ் என்று சொல்லுகிறார்களே குறுவை நெல்லுக்கு, அதுவும் ப்ரொக்யூர்மெண்டும் ஒரு நாளும் பரிகாரம் ஆகாது. இதற்கு மழை பொய்த்தது காரணம் இல்லை. பதினெட்டு வருஷ கால மாகச் செய்த பயங்கரமான குற்றங்கள் ஒட்டுமொத்தமாக இன்றைக்கு பயங்கர பட்டினி, பசி இவைகளாக உருவெடுத்து இருக்கின்றன. இன்றைக்கு நான் அறைகூவிக் கேட்கிறேன், பஞ்சநாடு, கேரளநாட்டில் எவ்வளவு தானியம் கொடுக்கிறார்கள்? அந்த அளவாவது இங்கு உண்டா? ஐந்து அவுன்சானாலும், 6 அவுன்ஸ் ஆனாலும் 2 கோடி கேரளக்காரருக்குக் கொடுக்கிற அளவு

தமிழ் நாட்டில் உண்டா? ஸ்டாச்சுட்டரி ரேஷன், இன்ஃபார்மல் ரேஷன், ஃபேர் ப்ரைஸ் ஷாப் எல்லாம் வைத்திருந்தும் 2 கோடி கேரள மக்களுக்குக் கொடுக்கும் அளவு இருக்கிறதா? கேட்டால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் போடுகிறார்கள். முன்னே வாழைப்பழம் சாப்பிடுங்கள் என்று சொன்னார்கள். இப்போது கம்பு, சோளம் சாப்பிடுங்கள் என்று அதிகாரபூர்வமாகத் தீர்மானம் வருகிறது. இதெல்லாம் தற்செயலாக ஏற்பட்ட சம்பவங்கள் அல்ல. என்ன தவறுகள் செய்து விட்டார்கள்? ஒன்று, நிலச்சீர்திருத்தங்களை, அடிப்படைச் சீர்திருத்தங்களைச் செய்யவில்லை. உச்ச வரம்புச் சட்டம் என்பதைப் பற்றி திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களே மிகப் பெருத்த கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், பூதானத்திலேகூட 30,000 ஏக்கர் வரையில் கிடைத்தது, நிலச் சீர்திருத்தத்தினால் 5,000 ஏக்கர் கூடப் பெற முடியவில்லையே என்று பரிதாபமாகச் சொல்லியிருக்கிறார்கள். ப்ரொக்யூர்மெண்ட் செய்வதிலே பல தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்குச் சொல்லுகிறார்கள் ப்ரொக்யூர்மெண்ட் என்று. கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய மாவட்டத்தில் கடம்பத்தூர், பூந்தமல்லி, பொன்னேரி பகுதியில் காலாகாலத்தில் ப்ரொக்யூர்மெண்ட் நடந்ததா? வேறு ஜில்லாக்களில் உள்ள மிட்டா மிராசுகள், பெரிய நிலப் பிரபுக்களுக்கு அனுகூலமாக நடந்துகொள்ளவில்லை, கொள்ளை லாபக்காரர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள்; பதுக்கல்காரர்கள் இல்லை என்று ஊராகக் கமிட்டி நியமிக்கட்டும், பதுக்கல்காரர்களை கண்டுபிடித்து கொடுக்கிறோம். பதுக்கல்காரர்கள் இல்லாமல் கும்பகோணத்தில் எப்படி க்யூ நிற்கிறது; தஞ்சை மாவட்டத்தில் எப்படி க்யூ நிற்கிறது? பதுக்கல்காரர்கள் இல்லை என்பதல்ல மிராசுதார்களுக்கு அனுகூலமாக மாறி விட்டது இந்தச் சர்க்கார். இவ்வளவு பற்றாக்குறை இருப்பதற்கு அடிப்படையான காரணங்கள், கட்டாயமாக உணவு தானிய வர்த்தகத்தைச் சர்க்காரே எடுத்து, மொத்த வர்த்தகத்தைச் சர்க்காரே நடத்த ஏற்பாடு செய்யத் தவறிவிட்டது. அதேமாதிரி ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிக்குவேட் ரேஷன் கொடுக்க வேண்டிய சர்க்கார் தன்னுடைய கடமையில் தவறி விட்டது. இதெல்லாம் தற்செயல் சம்பவங்கள் அல்ல. அதேமாதிரி ப்ரொக்யூர்மெண்டில் மோனாப்பலி ப்ரொக்யூர்மெண்ட் செய்திருக்க வேண்டும். நாலு ஏக்கர் 5 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு விதி விலக்குக் கொடுத்துவிட்டு, ரெம்யூனரேட்டிவ் ப்ரைஸ் கொடுத்து பெரிய பெரிய மிட்டாக்கள், மிராசுகளிடமிருந்து நெல்லை வாங்கி மொத்த வியாபாரத்தைச் சர்க்கார் நடத்தியிருந்தால், இன்றைக்கு இந்த நிலை வந்திருக்காது. புள்ளி விவரங்கள் சரியாக இருந்ததா என்றால், அதுவும் தவறி விட்டது. மொத்தமாக ப்ரொக்யூர் செய்யவில்லை. உணவு தான்ய வர்த்தகத்தை சர்க்காரே நடத்தவில்லை. ஏழைக் குடியானவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக அமெரிக்காவிலிருந்து வருகிற பி. எல். 480 கடன், மிட்டா மிராசுதார்கள் கொடுக்கிற கடன் இவைகளை இந்த அரசாங்கம் நம்பியிருக்கும் வரையில், பட்டினிச்



சாவு இருக்கத்தான் செய்யும். பெரிய பயங்கரமான ஒரு ஆபத்து உருவெடுத்துக் கொண்டிருக்கிறது என்று தான் முன் அறிவிப்புக் கொடுக்கிறோம். இது போன்ற குறைகளை அகற்றவேண்டுமென்றால் தீவிரமாக உணவு தான்ய வர்த்தகத்தைச் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும், எல்லோருக்கும் ரேஷன் கொடுக்கவேண்டும். பதுக்கல்காரர்களையும், அக்கிரமக்காரர்களையும் ஒழிப்பதற்குப் பொது மக்கள் கமிட்டி அமைக்க வேண்டும். அப்பொழுது தான் பட்டினிச் சாவு தவிர்க்கப்படும், பஞ்சம் தவிர்க்கப்படும் என்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இது துணைமான்யங்களைப் பற்றிய அப்ரோபிரியேஷன் பில். நேற்று முன்தினம் இந்த மான்யங்களெல்லாம் விவாதிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டன. அதை ஒட்டிய மசோதா இது. அதுவும் துணைமான்யத்தைப்பற்றியது தான். துணைமானியத்தைப் பற்றிய இந்த மசோதா மீது ரொம்ப விரிவாக விவாதம் நடைபெற்றது. இதுவரையில் உள்ள சம்பிரதாயத்திற்கு, வழக்கத்திற்கு கொஞ்சம் மாறாகக் கூட நடைபெற்றது. நான் யார் பெயரிலும் குறை சொல்லவில்லை, குற்றம் சொல்லவில்லை. நடந்ததைச் சொல்கிறேன். அந்தமாதிரி நடந்ததற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. மூன்று நாட்களுக்கு நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது. அது போதவில்லை என்பது சில கனம் உறுப்பினர்களின் கருத்து. இது போதாது, இரண்டு மூன்று நாட்களுக்கு விவாதம் நடந்தது போதாது, சட்டமன்றக் கூட்டம் முடியும் வரைக்கும் கூட இதையே தொடர்ந்து விவாதிக்கலாம் என்று கருத்து கூட இருந்தது. ஆனால் வேறு அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. வேறு அலுவல்களைக் கவனிக்கவேண்டியிருந்தால் சில பேர்கள் அந்த விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள், 'இப்பொழுது என் கலந்து கொள்ளக்கூடாது? முன்னால் சொல்ல வேண்டிய கருத்துக்களை இப்பொழுது சொல்லிவிடலாம்' என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். இன்னும் அந்த விவாதத்தில் கலந்துகொண்டு, தங்கள் கருத்துக்கள், கண்டனங்கள், குற்றச்சாட்டுகள் எல்லாவற்றையும் தெரிவித்த கனம் உறுப்பினர்கள் மேலும் சொல்லலாமே என்ற வகையில் இந்த விவாதத்திலும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதை நான் புரிந்துகொள்ளாமல் இல்லை. அதையும் குறையாகச் சொல்லவில்லை. அவர்களுக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. இதெல்லாம் இந்த சமயத்தில் இங்கே பேசுகிற பேச்சு அல்ல. அப்ரோப்ரியேஷன் பில்லைப் பற்றி பேசுவது மாத்திரம்தான் இந்த மன்றத்திற்காகப் பேசுவது. இப்பொழுது உறுப்பினர்கள் பொதுவாக வேறு பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள், கண்டனத்தைத் தெரிவித்தார்கள். அம்மாதிரி உறுப்பினர்கள் பேசியது இந்த மன்றத்திற்காக இல்லை. மன்றத்திற்கு வெளியிலே அவர்கள் பேசுவார்களே, பிரசங்கம் செய்வார்களே, அதுமாதிரி இங்கேயும் பேசினால், அவர்கள் பேசியதை இன்னும் பத்திரி

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1966

கையிலே நன்றாகப் போடுவார்கள், அதெல்லாம் பத்திரிகையில் வெளிவரும், என்று அந்த வகையில் தான் அதற்காகத் தான் பேசியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லுவதற்கு இந்த மன்றத்தின் காலத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நாங்கள் அங்கே பேசிக்கொள்கிறோம். பத்திரிகையின் மூலம் இங்கே பேசப்பட்டது வெளிவருகிறது என்றாலும், திருப்பிச் சொன்னாலும் சரி, முன்பு பேசியது இல்லாமல் புதிதாக ஏதாவது சொல்லியிருந்தாலும் சரி, அவைகளையெல்லாம் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்பது அல்ல. அவைகளுக்கெல்லாம் அங்கே பதில் சொல்கிறோம். இந்த மன்றத்தின் நேரத்தை நான் இதற்கெல்லாம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இன்றைக்கு நடைபெற்ற, அனுசரிக்கப்பட்ட சம்பிரதாயத்தை ஒட்டி நானும் அம்மாதிரி செய்ய விரும்பவில்லை.

சாதாரணமாக, பொதுவாகக் கண்டனங்களும், தவறுகளும், பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால் இந்த மசோதாவுக்கு புறம்பான சில விஷயங்கள் சொல்லப்பட்டன. வெவ்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. கனம் உறுப்பினர் சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்களும் இந்த மசோதாவுக்கு புறம்பான விஷயத்தைச் சொன்னார்கள். என்றாலும் கூட, அவர்கள் சொன்னதின் நோக்கம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. அவர்கள் சொன்னது அரசாங்கத்தின் கவனத்தையும், பொது மக்களின் கவனத்தையும் ஈர்த்தது. அவர்கள் சொன்னது ரொம்ப முக்கியமான விஷயம். முக்கியமான விஷயம் என்றால், மசோதாவுக்கு புறம்பானது என்றாலும், சொல்வதில் தவறில்லை. சீரிய கருத்தோடு அவர்கள் அதைச் சொன்னார்கள். ஈரோட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற அரச்சலூர் பற்றி சொன்னார்கள். நாங்களும் அரச்சலூர் என்று தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். எத்தனையோ முறை நான் அங்கே போயிருக்கிறேன், கூட்டங்கள் நடத்தியிருக்கிறேன். சரியான பெயர் அறச்சாலையூர் என்று சொன்னார்கள். எங்கள் பக்கத்தில் இருக்கிற புலவர் கூட இதைப் பற்றி நினைக்கவில்லை, கவனிக்கவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் ஈரோடுக்குப் பக்கத்தில் இருக்கிறார். இது கருத்து நிறைந்த பெயர். சாதாரணமாகப் பெயர் மாற்றத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று நான் சொல்வது உண்டு. இது வரைக்கும் எங்கள் பக்கத்தில் இருக்கிற புலவர் கூட இதைக் கவனிக்கவில்லை. இது அவர் ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறது. இதைப்பற்றி தெரிந்தவுடன் அவர்கள் மேற்கொண்டு இதிலே அக்கறை எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

அவர்கள் அதேமாதிரி மணிமங்கலம் கோவில் பற்றியும் சொன்னார்கள். எத்தனையோ முறை நான் போயிருக்கிறேன். கோவிலுக்குப் போயிருக்கிறேன். அவர்களுக்கு இருக்கிற அவ்வளவு சூட்சுமமான கண்கள் எனக்கு இல்லை. அவர்கள் எப்படி பார்க்கிறார்களோ, அம்மாதிரி பார்ப்பதற்கு எனக்குக் கண் இல்லை. கண்ணாடி போட்டும், பவர்புல் கிளாஸ் போட்டும் அதையெல்லாம் நான் பார்ப்பதற்கில்லை. அதையெல்லாம் அவர்கள்



8th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

பார்த்திருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இதிலே இருக்கிற கல்வெட்டுகள், மற்ற சிற்பங்கள் இவைகளையெல்லாம் பாதுகாக்க வேண்டும் என்பதில் பொதுவாக மத்திய சர்க்கார் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள் என்றாலும், தமிழ் நாட்டிலே இவைகளில் பிரத்தியேகமான கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக தனியாக ஆர்கியலாஜிகல் இலாகாவே ஒன்று அமைத்திருக்கிறோம். இதிலெல்லாம் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். நான் சொல்வதைக் கனம் உறுப்பினர் அவர்கள் தவறுதலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் யாரையும் அப்படிச் சொல்லமாட்டேன். அவர்களுக்கு அரசியலில் எவ்வளவு ஈடுபாடு இருக்கிறதோ, இருக்கட்டும், அதை நான் குறைக்கவேண்டும் என்று சொல்லவில்லை. அரசியலை விட்டுவிட வேண்டும் என்று தவறுதலாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இம்மாதிரி விஷயங்களில் அவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாக அக்கறை எடுத்துக்கொண்டு, அரசாங்கத்திற்கு அவ்வப்பொழுது வழிகாட்டினால், யோசனை சொன்னால், அவர்களுடைய ஒத்துழைப்பை இன்னும் நாங்கள் பயன்படுத்திக்கொள்வோம் என்று தான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவின் மீது விவாதத்தைத் துவக்கிவைத்த கனம் உறுப்பினர் அவர்கள் பாடப்புத்தகங்கள் அச்சடித்து இலவசமாகக் கொடுப்பதற்குக் காகிதங்கள் வழங்கப்பட்டது பற்றி குறிப்பிட்டார்கள். காகிதங்கள் வழங்கப்பட்டது எவ்வளவு என்றால், நாம் அச்சடிக்க வேண்டிய அளவுக்கு காகிதம் வரவில்லை. ஓரளவுக்குத் தான் காகிதம் வந்தது. அந்தக் காகிதத்தை வைத்துக்கொண்டு, மொத்தம் எவ்வளவு செலவாகிறது என்பதைப் பார்த்து, லாபம் இல்லாமல் குறைந்த விலையிலே இந்தப் பாட புத்தகங்களை விற்பது என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். அதுவும் குறிப்பிட்ட சில பாட புத்தகங்களைத்தான் அரசாங்கம் ஆக்கி வெளியிடுகின்றது. மற்ற புத்தகங்களெல்லாம் அப்படியில்லை. ஆகையினால் காகிதத்தை ஏதோ விரயமாக்கியிருக்கிறோம், காகிதத்தைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை என்று நினைக்கவேண்டாம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் கனம் உறுப்பினர்கள், இப்பொழுது கடைசியாகப் பேசிய கனம் உறுப்பினர் திரு. மதியழகன் உள்பட அரிசியைப் பற்றித் தான் அதிகமாகச் சொன்னார்கள். அதுதான் எடுக்கும். அரிசி இல்லை, பட்டினிச்சாவு, தற்கொலை என்றெல்லாம் சொன்னால் பத்திரிகையில் வருகிறது. அப்படிச் சொன்னால்தான் எடுக்கும். அந்த நோக்கத்தோடுதான் சொன்னார்களே தவிர, ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது, பட்டினி வந்துவிட்டது, பஞ்சம் வந்துவிட்டது என்ற நிலைமையில் இல்லை. நான் முன்னமே சொல்லியிருக்கிறேன். வேறு சில காரணங்களுக்காகவும் தற்கொலை நடக்கலாம். உலகத்தில் வேறு சில நாடுகளில் அதிகமாகத் தற்கொலை நடக்கிறது. தற்கொலை செய்துகொள்வதற்கு வேறு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன, வறுமையும் இல்லாமல் இல்லை. வறுமையை நாம் பூராவாக அகற்றிவிட்டோம் என்று நான்

சொல்லவில்லை. வறுமை ஓரளவுக்கு இருக்கிறது. பூந்தமல்லிக்குப் பக்கத்தில் என்ன ஊரோ, தெரியவில்லை. வறுமை இருக்கிறது. இன்னும் எத்தனையோ தொல்லைகள் இருக்கின்றன. தற்கொலைக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் உணர்ந்து தான் வறுமையை எவ்வளவு சிக்கிரம் அகற்ற வேண்டுமோ, அவ்வளவு சிக்கிரம் அகற்றுவதற்குரிய திட்டங்களை உருவாக்கி, நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

இப்பொழுது தஞ்சையில் அரிசி இல்லை என்று சொன்னார்கள். உணவு அமைச்சர் அவர்கள் நிலைமையை விளக்கினார்கள். அதில் பலன் இல்லை என்று மீண்டும் எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஆனால் நான் ஒன்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகனுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். Whole rationing, wholesale control complete ஆக எல்லா அரிசியையும் வாங்கி, ஒரு முறை நடந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் நடந்தது. அப்பொழுது 6 அவுன்ஸ் ரேஷன் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது. அது இல்லை இப்பொழுது கையாளப்படுகிற முறை. அதற்கு அவசியம் இல்லை. அம்மாதிரிக் கொள்கையை இப்பொழுது நிறைவேற்றினால் அது மக்களுக்குத்தான் தொல்லை அளிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நீலகிரி, கன்யாகுமரி போன்ற சிறிதளவு பற்றுக்குறை உள்ள மாவட்டங்களில், கோவையில் பற்றுக்குறை இருக்கிறது, அம்மாதிரி சிற்சில இடங்களில் எல்லோருக்கும் இன்பார்மல் ரேஷனிங் முறையில் அரிசி கொடுக்கிறோம். கோவை நகரத்தில் ஸ்டாச்சுட்டரி ரேஷனிங், சென்னை நகரத்தில் ஸ்டாச்சுட்டரி ரேஷனிங் வைத்திருக்கிறோம். தஞ்சையில் தண்ணீர் எப்பொழுது வருமோ, தண்ணீர் வராவிட்டால் குறுவை கூட சாகுபடி செய்ய முடியாமல் போய்விடுமோ என்று அவர்கள் நெல்லை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அப்பொழுது தான் தட்டுப்பாடு வந்தது. இப்பொழுது குறுவை சாகுபடி செய்யத் தொடங்கிவிட்டார்கள். காவேரியிலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அது நம்பிக்கை தரக்கூடியதாக இருக்கிறது. பயிர் நன்றாக வரும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. ஆகையினால் கையிலே நெல் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அதை வெளியே கொண்டு வருவதற்கு முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு மேல் 'ப்ரொக்யூர்மெண்ட்' எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ, அதையும் செய்ய அரசாங்கம் தயங்காது. விற்கக் கூடியவர்கள், தங்களுடைய உணவு, மற்ற தேவைகளுக்குப் போக, அதிகமாக வைத்துக்கொண்டிருந்தால் அதையும் எடுக்க அரசாங்கம் தயங்காது. அப்பொழுது என்ன சொல்லுவார்கள்? தொல்லை கொடுக்கிறார்கள் என்று குறைகூறுவார்கள். தொல்லை கொடுக்க வேண்டும் என்று எண்ணம் இல்லை. நாம் 'ப்ரொக்யூர்மெண்ட் வித்தௌட் டியர்ஸ்' என்ற வகையில்தான் செய்கிறோம். தஞ்சை விவசாயிகள் ஒத்துழைத்திருக்கிறார்கள். இப்பொழுது ஒத்துழைப்பார்கள். கொஞ்சம்





தான் ப்ரொக்யூர் செய்கிறோம். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்தது என்று சொல்வதற்கில்லை. மொத்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு கொடுக்கிறோம் என்று சொல்வதற்கில்லை.

பொதுவாக, விதைப் பண்ணைகளைப் பற்றிச் சொன்னார்கள். அது லாபத்திற்கு என்று, தொழிலாக நடப்பதில்லை. அது ஒரு முக்கியமான திட்டம் என்று ஏற்றுக்கொண்டு அரசாங்கம் செயல்படுகிறது. ஆகவே, அதில் லாபம் வருவதற்கில்லை. ஆனால், முதலிலே குத்தகைக்கு நிலம் இல்லாமல் இருந்தது, திருந்தாமல் இருந்தது. கூடியவரையிலும் நல்ல நிலம் எடுக்கப்பட்டது. இப்பொழுது லாபம் கிடைக்கும் வகையில் பலன் தரும் வகையில் விதைப் பண்ணைகள் விளங்கி வருகின்றன.

வீட்டு மனை பற்றிச் சொன்னார்கள். கொடுத்தாலும் குற்றம், கொடுக்காவிட்டாலும் தவறு என்கிறார்கள். யாருக்குக் கொடுக்கவில்லை? இப்பொழுதும் அரிஜனங்களுக்குக் கொடுக்க பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். அதுவல்லாமல், மற்றவர்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள். ஹரிஜனங்களில் எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க முடியாது. கூடியவரைக்கும் செய்யப்படுகிறது. அது அல்லாமல், மற்றவர்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள்; அப்படி வீடு இல்லாதவர்களுக்கும், மனை வழங்குவது என்பதுதான் திட்டம். அதற்காகத்தான் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனநல இலாகா அலுவலகத்திற்கு வாடகை கொடுக்கிறார்கள் என்றால், வேறு கட்டடம் இல்லை. கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முடிந்துவிட்டால், அதற்குப் போய்விடுவார்கள். அதன்பிறகு வாடகை கொடுக்கமாட்டார்கள். குற்றம் சாட்டுவதென்றாலும், நல்ல பெரிய குற்றமாக சொன்னால் சரி, ஏதோ இதைச் சொல்லலாம், அதைச் சொல்லலாம், என்று எண்ணிக்கைக்காகச் சொல்லுகிறார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன், 1, 2, 4, 5, 8, 10, 15 என்று அந்த மாதிரி அடுக்கிக் கொண்டே போகிறார்கள். அதிலும், கொஞ்சம் அனலைஸ் செய்து பார்த்து பெரிய குற்றம், சிறிய குற்றம் என்று பாகுபடுத்தி குற்றம் சாட்டுவது நன்றாக இருக்கும். நாங்கள் குற்றங்களை அனுபவிக்கிறோம் என்றல்ல. வாடகை கொடுக்கிறார்கள் என்றால், என்ன செய்வது? வேறு இடம் இல்லை.

ஈ.வி.ஆர். கல்லூரி பற்றிச் சொன்னார்கள். ஒரு கல்லூரி தொடங்க ரூ. 5 லட்சம் நன்கொடை கொடுத்தால், அரசாங்கம் ஏற்று நடத்தும் என்று திட்டம் இருக்கிறது. அதிலே ஒருவராக இருந்தாலும் சரி, பல பேர்கள் சேர்ந்து கொடுத்தாலும் சரி, அவர்கள் என்ன பெயர் வைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களோ, அந்த வகையில் பெயர் வைக்கப்படுகிறது. இந்தப் பெயர் வைப்பதில் பிரத்தியேகமாக ஏதோ ஏற்பட்டிருக்கிறது என்று நினைப்பது தவறு என்று சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1966

காவேரியில் தண்ணீர் ஒரு மாத காலதாமதத்தில் விடப்பட்டது. குறுவை எதற்காகப் போடுவது என்று விவசாயிகள் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. விவசாயிகள் அதிகமாக குறுவை போட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அவா. அம்மாதிரி விவசாயிகள் முன்வரவேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு உற்சாகம் அளிக்க—அதற்கு முன்னேயே இன்செண்டிவ், சலுகை இருக்கிறது—அவர்கள் காவேரி டெல்டாவில் கொள்முதலுக்குக் கொடுக்கும்போது, ஒரு க்விண்டாலுக்கு ரூ. 3 கொடுப்பது என்று திட்டம் இருக்கிறது. கிச்சிலிச் சம்பா பற்றிக் குறிப்பிடப்பட்டது. கிச்சிலிச் சம்பா வேறு, குறுவை வேறு. அந்த வகையில் தான் கொடுக்கப்படும்.

அரிசி இல்லை என்கிறார்கள். அரிசி இருக்கிறது. பீதியை ஏற்படுத்துவது சரியில்லை. எல்லோருக்கும் அரிசியைக் கொடுப்பது என்று இப்பொழுது எடுத்துக்கொள்ளவில்லை. ஓரளவுக்குச் செய்கிறோம். கொள்முதல் என்றால், மொத்தத்தையும் எடுக்கவில்லை. விளைந்ததில் ஐந்தில் ஒரு பங்கு கொள்முதல் செய்யப்படுகிறது. மற்ற நான்கு பங்கு அவர்களிடமே இருக்கின்றன. "மார்கெட்டபிள் சர்ப்ளஸ்" வாங்கப்படுகிறது. அப்படி அதிகமாக அவர்களிடமே இருப்பது மார்க்கெட்டுக்கும் வருகிறது. சென்னை, கோவை முதலிய நகரங்களைப் பொறுத்தவரை ஸ்டாட்சுட்டரி ரேஷனிங் இருப்பதால் அங்கேயெல்லாம் விற்கமுடியாது. மற்ற இடங்களில் விற்கலாம். ஆகையினால் அரிசியில்லை யென்றால் அது சரியாகாது. இந்த முறையைத்தான் இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கையாண்டு வருகிறோம். வேறு இடங்களுக்கும் கொடுக்கிறோம். பற்றாக் குறையாக இருக்கும் மாவட்டங்களுக்கு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, சேலம் முதலிய மாவட்டங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்று பார்த்துக் கொடுக்கிறோம்; அதை நல்ல முறையில் நடத்துகிறோம்.

இப்பொழுதுகூடக் கேட்டார்கள், பற்றாக்குறை இல்லையென்றால் அப்பொழுது கண்ட்ரோல் எதற்காக என்று. பற்றாக்குறை இல்லை என்றால் என்ன? ஒரு லட்ச ஏக்கருக்கு பாயும் தண்ணீரை, திறந்து விட்டுவிட்டால், முதலில் ஒரு ஆயிரம் ஏக்கருக்குப் பாய்ந்துவிட்டு, வெள்ளமாகப் போய்விடும்; லட்சம் ஏக்கருக்கும் பயன்படாமல் போய்விடும். அதற்குக் கால்வாய் வெட்டி, எந்தப் பக்கம் திருப்புவது, எங்கே நிறுத்துவது என்றெல்லாம் வகைசெய்து அந்த முறையில் கவனம் செலுத்தியாக வேண்டும். அதைத்தான் செய்கிறோம்.

இன்னொன்று, கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி கூறியது, கனம் உறுப்பினர் திரு. மதியழகன் கூறியது, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்பற்றி. தேர்தல் வருகிறது. என்ன சொல்லித் திருப்திப்படுத்தலாம் என்று பார்க்கிறார்கள். திருப்தி, அதிருப்தியெல்லாம் நாம் செய்துவிடுவது அல்ல. அவர்களுக்கும் புத்தி இருக்கிறது. அவர்கள் நிலை என்ன என்று புரிந்துகொள்வார்கள். எதிர்க்கட்சியாலோ அல்லது எங்களாலோ திருப்தி, அதிருப்தியை ஏற்படுத்திவிட முடியாது. அவர்களுக்கும் புத்தி இருக்கிறது. ஆட்சி இயந்



8th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

திரத்தையே நடத்துகிறவர்கள், அவர்களுக்குத் தெரியும் எது நல்லது, எது கெட்டது, சாத்தியம் என்றெல்லாம். இங்கே சொல்லுவது பத்திரிகைகளில் வரும். ஆனால், அதிகப்பலன் ஏற்படாது. எவ்வளவு தூரம் அதிருப்தியை வளர்த்துவிடும் என்று அளவுகோல் போட்டுப் பார்க்க முடியாது. அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. நல்லது, கெட்டது தெரியும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பஞ்சப்படியைப் பொறுத்தவரையில், அரசாங்கம் அனுசரித்து வரும் கொள்கை தெரிந்ததே. மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு எந்த அளவுக்குப் பஞ்சப்படி கொடுக்கிறார்களோ, அந்த அளவுக்கு நாமும் கொடுக்கிறோம். அதற்கு முன்னேயே பே கமிஷன் போட்டு சம்பளத்தை உயர்த்தி விட்டோம். பே கமிஷனில் ஒரு சிபாரிசு வந்தது. அதைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டது. அப்படி ஏற்றுக்கொண்டதன்படி நாங்கள் நடந்து வருகிறோம். மத்திய சர்க்கார் எவ்வளவு பஞ்சப்படியை உயர்த்தினாலும், அதே மாதிரி பஞ்சப்படியை நாமும் கொடுக்க வேண்டும் என்கிற கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அனுசரித்து வருகிறது. எல்லா அரசாங்கமும் அதைச் செய்கிறார்கள் என்பதில்லை. வேறு சில மாநிலங்களில் அந்த வகையில் உயர்த்த முடியவில்லை. அவர்களுடைய பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை. அவர்களும்கூட எங்கள் பேரில் வருத்தப்படுகிறார்கள். "நீங்கள் உயர்த்திவிட்டீர்கள், நாங்கள் என்ன செய்வது" என்கிறார்கள். மத்திய சர்க்கார் உதவியும் அளிப்பதில்லை. நம்முடைய ஸோர்ஸைக் கொண்டுதான், இதைத் தவறாமல் செய்து வருகிறோம். வீட்டு வாடகை, சிடி காம்பன்சேடரி அலவன்ஸ் என்றெல்லாம் சொல்லலாம். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குச் செய்வதை நாம் செய்வது என்றால் சரியாகாது. அவர்கள் இன்றைக்கு இங்கே இருக்கிறார்கள். நாளை அவர்கள் கல்கத்தாவிற்கு, பம்பாய்க்கு, இராஜஸ்தானுக்குப் போகவேண்டும் என்றால் போகவேண்டும். ஆகவே, எல்லாவற்றிற்கும் மத்திய சர்க்காரை எடுத்துக் கொள்ளக்கூடாது. பஞ்சப்படி சம்பந்தப்பட்டவரையில், மத்திய சர்க்கார் என்ன செய்கிறார்களோ, அதை ஏற்று நடத்திக் கொண்டு போகிறோம். ஆங்கிலத்தில் சாதாரணமாக "ஆர்க்கனைசேஷன் ஆஃப் க்ரீவன்ஸெஸ்" என்று சொல்வதுண்டு. அதிருப்தியை எப்படி அதிகப்படுத்துவது? அதைச் சொல்லிப் பார்க்கலாமா? இதைச் சொல்லிப் பார்க்கலாமா என்று எதையாவது சொல்லி, அதிருப்தியை அதிகப்படுத்தவேண்டும் என்ற அந்த வகையில் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். இவர்கள் என்னதான் சொன்னாலும், வெளியில் இருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில். இவர்கள் எதற்காகச் சொல்லுகிறார்கள், எவ்வளவு தூரம் நடக்கும், எது தங்களுக்கு நன்மை அளிக்கக் கூடியது என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். கனம் அங்கத்தினர் இப்படி எல்லாம் சொல்லுவதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனென்றால், அப்படிச் சொல்லவேண்டியது அவருடைய முறைமை, அவருடைய உரிமை, அவருடைய திட்டம். அந்தக் திட்டத்தின்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th August 1966

படி சொன்னார்களே தவிர, வேறு வகையிலே இல்லை. இந்த நிலைமையை மேலும் நான் விளக்கவேண்டியதில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

அதிலே இன்னொன்றும் சொன்னார்கள். எப்போதெல்லாம் காஸ்ட் ஆஃப் லிவிங் இன்டெக்ஸ் உயருகிறதோ, அப்போதெல்லாம் தொழிலாளர்களுடைய பஞ்சப்படியை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் இருக்கிறது. அதே மாதிரி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குச் செய்யப்படுகிறதா? என்று கனம் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் சட்டத்தின்கீழ் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதிலே குறை ஒன்றும் இல்லை. அந்தச் சட்டத்தின்படி தொழிலாளர்களுக்குச் செய்வதில் கனம் உறுப்பினர் குறை சொல்லப்போகிறார்களா? சொல்லவில்லை. ஆனால், சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில், அவர்களை எப்படி நடத்துவது என்பது, அது ஒரு முறை. மத்திய அரசாங்கம் அப்போதைக்கப்போது பஞ்சப்படியை அவர்கள் ஊழியர்களைப் பொறுத்து உயர்த்துகிறார்கள். அப்பொழுது நாமும் உயர்த்திக்கொண்டு வருகிறோம். ஆகவே, மற்றத் தொழிலாளர்களுக்குச் செய்கிற மாதிரிச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு நாம் செய்யவில்லை என்று குற்றம் சொல்லுவதற்கு இடம் இல்லை என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவு ஸ்பின்னிங் மில்கள் முக்கியமாகக் கைத்தறி நெசவாளர்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கைத்தறியாளர்களுக்கு நூல் மலிவாகக் கிடைக்கவேண்டும், வேண்டிய உதவி அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற முறையில் ஸ்டேட் ஹாண்ட்லூம் சொஸைட்டி அதிலே ஈடுபட்டு, அந்த முறையிலேதான் அந்தக் கூட்டுறவு ஸ்பின்னிங் மில்கள் இயங்குகின்றனவே தவிர, யாருக்காகவோ—அவருக்கோ, இவருக்கோ—நடத்தப்படவில்லை. யாரையோ நமக்குப் பிடிக்கவில்லை, ஆகவே, கூட்டுறவு ஸ்பின்னிங் மில்லே வேண்டாம் என்றால், அது சரியல்ல. நமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்பதற்காக அவர் விரலை வெட்டிவிட முடியாது, மூக்கை வெட்ட முடியாது. நமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால், அது வேறு விஷயம். கூட்டுறவு ஸ்பின்னிங் மில்களுக்காக இன்னும் தொகை வேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள் என்றால், இப்பொழுது இருக்கும் 12,000 ஸ்பின்டில்களோடு இன்னும் 12,000 ஸ்பின்டில்ஸ் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகப் பணம் கேட்கிறார்கள்

சிறு சேமிப்பு இயக்கம் மக்களுடைய நன்மைக்காகத்தான் இருக்கிறது. அந்த இயக்கத்தின் மூலம் பணம் வருவது நல்லது. இப்பொழுது நெருக்கடியான நிலையில் ஓரளவு விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. மக்கள் கஷ்டப்படுகிறார்கள். என்றாலும், இந்தச் சமயத்தில்தான் இந்தச் சிறு சேமிப்பு இயக்கத்திற்கு மிகுந்த அவசியம் இருக்கிறது. இது மக்களுக்குப் பயன்படும் என்ற வகையிலே. போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்கள்



8th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ஐந்து ரூபாய், பத்து ரூபாய் இப்படி வாங்குவது நல்லது என்கிறோம். இதுதான் முக்கியமான திட்டம். க்ஷேம நலத் திட்டங்களுக்குப் பிரசாரம் எப்படி வேண்டியிருக்கிறதோ, அதே மாதிரி இந்தச் சிறு சேமிப்புத் திட்டத்திற்கும் பிரசாரம் வேண்டும். அந்த முறையில் தான் செய்கிறோம். ஆகவே, கனம் உறுப்பினர் கூறியதுபோல், பணத்தைப் பறிப்பது ஒன்றும் இல்லை.

ஆடுதுறையில் அரிசி இல்லை என்று ஒரு கனம் உறுப்பினர் சொன்னார். ஆடுதுறையைச் சேர்ந்த உறுப்பினராக இருப்பதால் அவர் அவ்வாறு சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்வதுதான் அவருடைய கடமை, அவ்வாறுதான் அவர் சொன்னார் என்று நான் நினைக்கிறேன். ஆடுதுறையில் அரிசி கிடையாது, எங்கிருந்தோ கொண்டுவர வேண்டும், நெல்லூர் அரிசியையோ அமெரிக்கன் அரிசியையோ, பர்மா அரிசியையோ கொண்டுவந்து அங்கே விநியோகிக்கவேண்டும் என்கிறார்கள். கனம் உணவு அமைச்சர் அவர்கள் சொன்னபடி ஒன்றிரண்டு நகரங்களில்தான ஓரளவு, முழு ரேஷன் என்று சொல்லலாமே தவிர, மற்ற இடங்களில் முழு ரேஷன் என்று சொல்ல முடியாது. ஓரளவு 'ஸப்ளிமெண்ட்' செய்கிற அளவுக்குத்தான் இருக்கிறது. ஆனால், கனம் உறுப்பினர் ஆடுதுறையில் அரிசி இல்லை என்று சொல்லலாம், நான்கு பேர்களை அழைத்துக்கொண்டும் வரலாம். நான் இந்த மன்றத்திற்கும், கனம் உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு மனிதன் கூட அரிசி இல்லாமல் பட்டினி கிடப்பதை இந்த அரசாங்கம் ஒரு பொழுதும் பார்த்துக்கொண்டிருக்காது. அந்தப் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த வாய்ப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த வசதி அரசாங்கத்திற்கு இருக்கிறது. அரிசி ஸ்டாக் இருக்கிறது. எங்கெங்கே எப்படி எப்படி விநியோகித்து மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யவேண்டுமோ, எங்கெங்கே நிவாரணம் அளிக்கவேண்டுமோ, அந்த இடங்களில் நிவாரணம் அளிக்க அரசாங்கம் தயங்காது என்று கூறி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1966 (L.A. Bill No. 15 of 1966), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1966 (L.A. Bill No. 15 of 1966), be passed."

The motion was put and carried and the Bill was passed.

(ii) THE MADRAS URBAN LAND TAX BILL, 1966 (L.A. BILL No. 10 OF 1966).

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras Urban Land Tax Bill 1966 (L.A. Bill No. 10 of 1966) be taken into consideration."

The Madras Urban Land Tax Act, 1963 (Madras Act 34 of 1963), provided for the levy of urban land tax at the rate of 0.4 per centum of the average market value, of the urban land. For determining the average market value, Madras City was divided into various zones and sub-zones. The Assistant Commissioner had to determine the highest and lowest market value of the urban land in a zone and he had also to determine the average market value of the urban land in a sub-zone. In determining the market value, the Assistant Commissioner should keep in view certain considerations. In Writ Petition No. 2191 of 1965, etc., on the file of the High Court the constitutional validity of the Madras Urban Land Tax Act, 1963 (Madras Act 34 of 1963), was attacked mainly on two grounds namely—

(1) The Act was beyond the legislative competence of the State Legislature, as it was not a law relating to tax on land under entry 49 of the State List, but was in effect and substance a law relating to tax on the capital value of the assets under entry 86 of the Union List;

(2) The Act was discriminatory and offended Article 14 of the Constitution. The High Court rejected the first contention and held that the Act was a tax on land and that it was open to the State Legislature in enacting a law under entry 49 of the State List to levy tax on the basis of the market value of the land. But in regard to the second contention, the High Court held that the levy of urban land tax on the basis of the average market value of the sub-zone was discriminatory and that therefore the Act violated Article 14 of the Constitution. The whole Act was therefore struck down. According to the view expressed by the High Court, it is necessary that the market value of each urban land should be determined and tax imposed on the basis of the market value of that particular land. The assessee should be in a position to make his representation before the market value of a particular land is determined. The Government examined the judgment of the High Court and decided to enact a new legislation in conformity with the decision of the High Court. Accordingly, the Madras Urban Land Tax Ordinance, 1966, was promulgated by the Governor on the 20th May 1966 and it was published in the *Fort St. George Gazette* Extraordinary, dated the 21st May 1966, as Madras Ordinance 3 of 1966. According to the provisions of Article 213 (2) of the Constitution, the Ordinance will cease to operate at the expiration of the

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 2nd August 1966.





period of six weeks from the reassembly of the Legislature. Therefore, the Ordinance has to be replaced by an Act of Legislature during this session. This Bill provides for the replacement of the said Ordinance.

The main provisions of the Ordinance were given retrospective effect from the 1st day of July 1963 on which date the earlier Act came into force in the City of Madras. Similarly, it is now proposed to give retrospective effect from the 1st July 1963 to the provisions of the Bill, expect a few sections.

The Bill provides for the determination of the market value of each urban land. Every owner of urban land liable to pay the tax should within the specified date furnish to the Assistant Commissioner a return in respect of the land giving certain particulars and indicating his own estimate of the market value of the same. The Assistant Commissioner would then determine the market value of the land after necessary enquiry. An appeal lies to the Tribunal against the order of the Assistant Commissioner determining the market value of the land and the urban land tax. Where no return is filed by the owner, the Assistant Commissioner can himself take action to determine the market value.

Clause 25 of the Bill enables the owner to apply to the competent authorities for addition of urban land tax to the annual rent. Under the earlier Act such application can be made only in cases where the urban land tax is in excess of the annual rent payable by the tenant. The Government have examined the question again, and have decided that wherever urban land tax is in excess of one half of the annual rent, the owner can move the competent authority for the enhancement of the rent by an amount not exceeding the difference between the urban land tax and one-half of the annual rent. Clause 25 accordingly provides for this. In other words, the idea underlying this provision is that in all cases, the owner is assured a minimum of 50 per cent of annual rent after paying the urban land tax.

Clause 26 relates to concession in the tax in respect of owner-occupied buildings. In the Original Act the time-limit for making application for such concession was only 15 days. It is now proposed to prescribe the time-limit in the rules to be framed under the proposed Act. Provision has been made in clause 47 that the amount already collected under the Madras Urban Land Tax Act, 1963 shall be deemed to be the urban land tax provisionally paid by the assessee and that such amount shall remain as security with the Government pending assessment of the tax in accordance with the provisions of this Bill.

(Mr. Deputy Speaker in the Chair)

After the assessment is made, the amount already paid will be adjusted towards the urban land tax due from the assessee and if the amount already paid is less, the difference will be recovered from the assessee and if the amount already paid is more, the difference will be refunded to the assessee. The Bill also seeks to repeal the Madras Urban Land Tax Act, 1963 (Madras Act 34 of

[Sri V. Ramaiah] [8th August 1966

1963), and the Madras Urban Land Tax Ordinance, 1966. According to sub-clause (2) of clause 48 of this Bill, notwithstanding such repeal, anything done or any action taken under the Ordinance including any notification issued, rules and appointments made and returns furnished shall be deemed to have been done or taken under this legislation. The other provisions of this Bill are similar to those in the Madras Urban Land Tax Act, 1963.

Sir, I have now briefly indicated the objects of this legislation. I request the House to accept the motion.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

" That the Madras Urban Land Tax Bill, 1966 (L.A. Bill No. 10 of 1966) be taken into consideration. "

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்திலே ஒரு சில கருத்துக்களைக் கூற அனுமதி கோருகிறேன். முதலிலே அர்பன் லாண்டு டாக்ஸ் ஆக்ட் என்று சட்டம் வந்தது. அந்தச் சட்டம் நீதி மன்றத்திற்குச் சென்றபோது, நிலத்தின் மதிப்பை நிர்ணயிப்பதில் பாரபட்சம் காட்டக்கூடிய நிலை சட்டத்தில் இருப்பதால், அது செல்லுபடியாகத் தக்கதல்ல என்பதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்த நிலையைச் சமாளிக்க இந்தச் சட்டத்தை அரசாங்கம் மீண்டும் கொண்டு வந்திருக்கிறது. எனக்கு இப்போது தோன்றுவது நாம் நிலத்தின் மதிப்பில் 4 சத விகிதம்தான் வரியாகப் போடுகிறோம் என்று சொன்னாலும், இது நடுத்தர மக்களுக்குச் சிரமம் விளைவிக்கக்கூடிய ஒன்றாகவேதான் இருக்கும் என்பதாகும். காரணம் முன்பு விற்ற விலை இப்போது இல்லை. ஐந்து மடங்கு, ஆறு மடங்கு என்பதாக நிலத்தின் விலை உயர்ந்துகொண்டே போய் இருக்கிறது. இருந்த போதிலும்கூட இதில் உள்ள சில சிக்கல்களைப் புரிந்துகொண்டால் மக்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், பல குடும்பங்கள் ஒரு வீட்டையே நம்பி ஜீவிக்கக்கூடியதாக இருக்கின்றன. அந்த ஒரு வீட்டில் இருந்து வரும் வாடகைப் பணத்தை வைத்துக் கொண்டே ஜீவிக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இரண்டு கிரவுண்டு, ஒரு கிரவுண்டிலே வீடு கட்டியிருக்கக்கூடிய ஒரே ஒரு வீட்டுக்காரருக்காவது விதிவிலக்கு என்று சொன்னால், ஓரளவு உண்மையில் நடுத்தர மக்கள் இதை வரவேற்பார்கள். பெயர் ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர, வாடகையைப் பெற்று, கார்ப்பரேஷனுக்கு வரியைக் கொடுத்துவிட்டு, மீதியைக் கொண்டு குடும்பங்கூட நடத்த முடியாத நிலையில்தான் பல பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் இந்த வரி நிச்சயமாகச் சுமையாகத்தான் இருக்கும். ஆகவே, இதுபோலச் சட்டம் கொண்டு வருவதற்குப் பதிலாக, ஏற்கனவே க்விட் ரென்ட் என்று வசூல் செய்து கொண்டிருந்தார்களே, அதையே நான்கு மடங்கு, மூன்று மடங்கு என்று உயர்த்தி நிர்ணயித்துவிடலாம் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரியை வசூலிக்க போர்ட் ஆப் ரெவின்யூவில்,



8th August 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

கமிஷனர் ஃபார் அர்பன் லாண்ட் டாக்ஸ், அசிஸ்டெண்ட் கமிஷனர் எல்லாம் போட்டு, பெரிய ப்ரொஸீஜரல் ஏற்பாடுகளையும், எஸ்டாபிளிஷ்மெண்டுகளையும் வைத்துக்கொண்டாக வேண்டும். இதன்மூலம் ஒரு கோடி வசூல் என்றால் செலவு 4 லட்சம். அதோடு நிற்காது, பதது லட்சம் ரூபாய்க்குப் போய்விடும். க்விட் ரென்ட் என்றால் கலெக்டரே ரெவின்யூ அதிகாரிகளைக்கொண்டு வசூல் செய்து விடுவார். அதைவிட்டு இப்படிக் கொண்டுவருவது வெறும் பீஸ்மீல் லெஜிஸ்லேஷனாகத்தான் இருக்கும். ஆகவே, இதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். நாம் முன்பு கொண்டு வந்த சட்டத்தை உயர்நீதி மன்றத்தார் தள்ளிவிட்ட காரணத்தினால் இதைக் கொண்டுவரும்போது இதில் சிக்கல்கள் இல்லாது, இந்த வரியை எப்படிச் சுலபமாக வசூலிக்கலாம் என்பதைப் பரிசிலித்து நல்லமுறையில் வேறுவிதமாகக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும்.

அடுத்தபடியாக வரும்போது, அப்போது சட்டம் கொண்டுவந்த போதே .4 சத விகிதம் என்பது கொஞ்சம் அதிகமானதுதான், சாதாரண நிலங்கள் கூட ஆறாயிரம், எட்டாயிரம் ரூபாய் என்று ஏறுகிறபோது இந்த வரியே 60 ரூபாய், 70 ரூபாய் என்று போய் விடும். அதுவும் இரண்டு கிரவுண்டு என்றால் 120, 140 ரூபாய்க்கு வரி போனால், அதை எவ்வாறு கட்டுவது என்பதைச் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வேறு பல தொல்லைகளும் அதிகரித்துவிட்டன. ஆகவே, இதை .1 சத விகிதம் என்பதாக எவ்வளவு குறைவாக முடியுமோ, அவ்வளவு குறைவாக வேண்டுமானால் வைப்பது நலமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இன்றையதினம் நகரில் பல கோயில்களுக்குச் சொந்தமான மனைக்கட்டுகள் இருக்கின்றன. நானே என்னுடைய சொந்த அனுபவத்தில் சொல்லலாம். புரசைவாக்கத்தை எடுத்துக்கொண்டால் கங்காதீசுவரர் மனைக்கட்டுகள்தான் புரசைவாக்கம் பூராவும். அறநிலையக் காரியங்களுக்காகவே ½ ரூபாய் வாடகையை உயர்த்தினாலும், அவற்றில் குடியிருப்பவர்கள் எதிர்க்கிறார்கள். தர மறுக்கிறார்கள். அவர்களிடத்தில் போய் இந்த அர்பன் லாண்ட் டாக்சையும் கட்டவேண்டுமென்று சொன்னால் முடியக்கூடிய காரியமா? செக்ஷன் 25-லே அம்மாதிரி மனை வாடகையைக் காட்டிலும் அதிகமாக வரித்தொகை இருக்குமானால், ஃபேர் ரென்ட் அதிகாரிகளுக்கு அப்பீல் செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. இதில் உள்ள ஒரு சிக்கலைப் புரிந்துகொள்ளவேண்டும்.

" Notwithstanding anything contained in the Madras City Tenants' Protection Act, 1921 (Madras Act III of 1922) or in the Madras Buildings (Lease and Rent Control) Act, 1960 (Madras Act 18 of 1960), where in any case the amount of the urban land tax payable in respect of any land under this Act is in excess of one-half of the amount of the annual rent payable in respect of such land or the building thereon under any of the said Acts, the Court, authority or officer empowered to fix the rent under any of the said

Acts, may, on application from the owner, add to the annual rent aforesaid, an amount not exceeding the difference between the urban land tax payable under this Act and one-half of the annual rent aforesaid.''

என்று இருக்கிறது. ஒவ்வொரு கேஸ் சம்பந்தமாகவும் அப்பீல் செய்துகொள்ள வேண்டுமென்றால், கோயில் மனைக்கட்டுகளைப் பொறுத்தவரையில் 200, 300 கேஸ்கள் என்று போடவேண்டியதாக இருக்கும். அதனால் எத்தனையோ தொல்லைகள் ஏற்படும். ஆகவே இந்த சட்டத்திலேயே, இந்த அர்பன் லாண்டு டாக்சை குடியிருப்பவர்களிடமிருந்தே வசூல் செய்துகொள்ள வகை செய்ய முடியுமா என்பதையும் பரிசீலிக்கவேண்டும். அறநிலையங்களுக்குச் சொந்தமான மனைகளில் இருந்து அவற்றுக்குப் போதுமான வருமானம் கூட வருவதில்லை. அவர்களை மொத்தமாக ரூபாய் இரண்டாயிரம் கட்டுங்கள், நாலாயிரம் கட்டுங்கள் என்று
12 00 noon. சொல்லிவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? ஏற்கனவே நோட்டீஸ் அப்படிததான் வந்தது. அந்த மாதிரி இல்லாமல் குடியிருப்பவர்களிடமே நேரிடையாக இந்த அர்பன் லாண்டு டாக்சை வசூலித்துக்கொள்ள ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அதே மாதிரி நல்ல காரியங்கள் அல்லது தர்மகாரியங்களுக்குக் கொடுத்திருக்கிற சொத்துக்களின்மேல் எக்ஸம்ப்ஷன் கொடுக்கிறார்கள். எக்ஸம்ப்ஷன் கொடுப்பதற்கு முன்னாலேயே கட்டிவிட்டுப் போ, அப்புறம் எக்ஸம்ப்ஷன் வாங்கிக் கொண்டு விடலாம் என்று சொல்கிறார்கள். எக்ஸம்ப்ஷனுக்கு ஒரு பிரைமா ஃபேஸி கேஸ் இருந்தால் எக்ஸப்ஷன் வரும் வரையில் ஸ்டே கொடுத்துவிடக்கூடிய அளவிலே இருந்தால் நல்லது. சொத்துக்களை எல்லாம் பள்ளிக்கூடங்களுக்கோ அல்லது ஆஸ்பத்திரிகளுக்கோ எழுதிவைத்துவிட்டு இருக்கிறவர்கள் எல்லாம் எக்ஸம்ப்ஷன் கேட்டு அரசாங்கத்திற்கு மனுச்செய்து வாங்கும்வரை கட்டாமல் இருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் அது சாலச் சிறந்ததாக இருக்கும். தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொத்துக்களைக் கொடுத்தவர்கள் எல்லாம் உடனே கட்டவேண்டுமென்று சொல்லிவிடுகிறார்கள். அதே நேரத்தில் எக்ஸம்ப்ஷன் கொடுப்பதற்காக அதிகாரி அதைப் பரிசீலனை செய்வதற்குக் காலதாமதம் ஆகிறது. இந்த கால தாமதத்தைப் பொறுக்க முடியாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் அப்படி அதிகமாகக் கட்டியிருந்தால், தேவையில்லாமல் கட்டியிருந்தால், திருப்பித் தருவோம் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்திற்குக் கட்டிய பணம் திரும்பி வருமா? அது யானை வாயில் போன கரும்பு மாதிரிதான். வாங்கும் போது அவசரமாக வாங்கிவிடுகிறார்கள், அவர்கள் திருப்பிக்கொடுக்கும்போது கசப்பாக இருக்கிறது. ரீஃபண்ட் கேட்டால் கேட்டவர் அடுத்த உலகத்திற்குப் போய்விட்டபிறகுதான் வரும்போல் இருக்கிறது, அல்லது ரீஃபண்ட் வாங்குவதில் ஏற்படும் தொல்லைகளைப் பார்த்தால் அவர் ரீஃபண்டே வேண்டாம் என்று சொல்லிவிடக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே அவர்கள் முதலில் கட்டிவிட்டாலும் பிறகு அதைத் திருப்பி வாங்குவதற்குப் படும் கஷ்டங்



களையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கொஞ்சம் அஜாக்கிரதையாகப் பணத்தைப் போட்டுவிட்டால் அந்த ஆபிசர்தான் பணத்தைக் கொடுக்கவேண்டும். ஆகையால் அவர் அதை யோசித்துத்தா செய்யவேண்டுமென்று நினைக்கிறார். இந்த நிலைமைகளையெல்லாம் பார்த்து, அர்பன் லாண்ட் டாக்ஸை இப்பொழுது கொண்டுவராமல் குவிட் ரெண்ட் கட்டுவதுபோன்று செய்துவிட்டால், அட்மினிஸ்ட்டிரேட்டிவ் மெஷினரி இதற்காகத் தனியாகத் தேவையில்லாமல் சுலபமாக வசூல் செய்யமுடியும். நகரசபைகள்தான் இப்பொழுது எஜுகேஷன் செஸ், லைப்ரரி செஸ் எல்லாம் வசூல் செய்கின்றன. அதைப்போல் இதையும் நகரசபையே செய்தால், டாக்ஸ் கமிஷனர் இவர்கள் எல்லாம் தேவையில்லை, அதிகமாகச் செலவில்லாமல் சிக்கனமாகவும் இருக்கும். நமக்கு வேண்டிய லைப்ரரி செஸ், எஜுகேஷன் செஸ் எல்லாவற்றையும் வசூல்செய்கின்ற பொறுப்பை அவர்களுக்கே விட்டிருப்பதைப்போன்று இந்த வீட்டு மனைக்கு வரிப்போடும் வேலையையும், அர்பன் லாண்ட் டாக்ஸையும் அவர்கள் வாங்கிக் கொடுத்துவிட வேண்டுமென்று செய்துவிடுவோமேயானால் அது சுலபமாக இருக்கும். இதற்காகத் தனியாக ஆபீஸர், கிளார்க் எல்லாம் தேவையிருக்காது. ஆகையால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதைக் காட்டிலும், அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி யோசித்துப் பார்த்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். அப்படியில்லாமல் அவர்கள் கட்டுவதைக் கட்டட்டும், பின்னால் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்று இந்த கஷ்ட காலத்தில் நகர மக்களுக்குக் கொடுத்து சமாளிக்கமுடியும் என்றால் கொடுக்கலாம். ஆகவே அமைச்சர் அவர்கள் இதை ஆர அமர யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டம் ஏற்கனவே இந்த மன்றத்தால் நிறைவேற்றப்பட்டு உயர்நீதி மன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் புத்துயிர் கொடுக்கின்ற நிலையிலே ஆர்டினன்ஸ் ஆகப் போட்டு இங்கே கொண்டுவந்து இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைப்பற்றி மற்ற முறையிலே சொல்ல விரும்பவில்லை. என்றாலும் பொதுவாக நாம் இயற்றுகின்ற சட்டங்கள் எல்லாம், இந்தச் சட்ட சபையிலே நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் எல்லாம் உயர்நீதி மன்றங்களிலும், சுப்ரீம் கோர்ட்டுகளிலும் அடிக்கடி ரத்து செய்யப்படக்கூடிய நிலைமையை முதலிலே இந்த அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்ற என்னுடைய யோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். லேண்ட் சீலிங்பில் ஆக இருந்தாலும் சரி, சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் ஆக இருந்தாலும் சரி, மற்றும் லேண்ட் அக்விசிஷன் ஆக்ட் ஆக இருந்தாலும்சரி, அல்லது டெனன்ட்ஸ் ஆக்ட் ஆக இருந்தாலும் சரி, ஒவ்வொரு சட்டத்தையும் நம்முடைய உயர்நீதி மன்றமும், சுப்ரீம் கோர்ட்டும் ஏன் தள்ளுபடி செய்கிறார்கள் என்பதை முதலிலே கவனிக்க வேண்டும். எந்தச் சட்டம் போட்டாலும் சரி, அதைத் தள்ளுபடி செய்துவிடுகிறார்கள். யார் இந்தச் சட்டத்தை எல்லாம் டிராஃப்ட் பண்ணுகிறார்கள்? லா டிபார்ட்மெண்டில் யார் இருக்கிறார்கள்? சட்டங்களை அலசிப்பார்த்து டிராஃப்ட் பண்ணுகிறார்களா? யார்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [8th August 1966

பண்ணுகிறார்கள்? ரெவின்யூ டிபார்ட்மெண்டிலிருந்தும், சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்தும் டிரான்ஸ்ஃபர்-ஆகி வந்தவர்கள் பண்ணுகிறார்களா? சட்டசபை நடக்கிறது என்றால், ஒரு வாரம் நடக்கிறது என்றால் எத்தனை லட்சம் ரூபாய் செலவாகிறது? சட்டம் வந்தபிறகு அதிகாரிகள், அர்பன் லாண்ட் டாக்ஸ் ஆபீசர் என்றெல்லாம் போட்டுவிடுகிறோம். ஆனால் இவ்வளவும் செலவு செய்து வசூல் செய்கிற சமயத்திலே யாராவது ஒருவர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களைப் போன்ற வக்கீல்களிடம் கொடுத்து கேஸ் போட்டால் ஹைக்கோர்ட்டில் ஸ்டே கொடுக்கப் பட்டுவிட்டால் அவ்வளவும் நஷ்டம் ஆகிவிடுகிறது.

அர்பன் லாண்ட் டாக்ஸ் பில்லைப்பற்றிப் பேசுகின்ற சமயத்திலே நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அட்வகேட்-ஜெனரல் இருக்கிறார், அவருக்குக் கீழே கவர்ன்மெண்ட் பிளீடர்ஸ் இருக்கிறார்கள். டிராஃப்ட் பண்ணப்படுகின்ற சட்டங்களை, அவையெல்லாம் 50, 60 பக்கங்கள்கூட இல்லை, மொத்தத்திலே 5, 6 பக்கங்கள் தான் இருக்கும், அவர்களுக்கு அனுப்பி, இப்பொழுது இருக்கிற டெஸிஷன்ஸ் பிரகாரம் இருக்கிறதா, ரூல்ஸ் பிரகாரம் இருக்கிறதா, கான்ஸ்டிட்டியூஷனின் ஆர்டிகிள்ஸ் பிரகாரம் இருக்கிறதா என்று ஏன் பார்த்துவிடக் கூடாது? ஸோன்ஸ் பிரிப்பதுபற்றிச் சொல்லப் பட்டது. ஊரூர், கோடம்பாக்கம்புதூர் போன்ற இடங்களைப் பற்றி ஜட்ஜ்மெண்ட் கொடுத்து அந்த ரூலே செல்லாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்க இலாகா எவ்வளவு சரியற்ற முறையிலே டிராஃப்ட் செய்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சட்ட மன்றத்திலே சொல்லியிருக்கலாம், திருத்தியிருக்கலாம் என்று சொல்வார்கள். இந்தச் சட்டத்தின் மீது திரு. மாதவன் அவர்கள் சொன்னார்கள், இது யூனியன் லிஸ்டிலே இருக்கவேண்டியது, ஸ்டேட் லிஸ்டிலே இருக்க வேண்டிய நிலையில்லை என்றும், இந்தச் சட்ட சபைக்கே இதைக் கொண்டுவர உரிமையில்லை என்றும் எடுத்துச் சொன்னார்கள். அப்பொழுது அவருடைய வாதம் சரியான வாதமா, இல்லையா என்று பரிசீலனை செய்வோம் என்றுகூடப் பார்க்காமல், வேண்டாம் கோர்ட்டிலே பார்க்கட்டும் என்று சொல்லிவிட்டார்கள். அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். ஹைகோர்ட் இருக்கிறது, பார்த்துக்கொள்ளட்டும், வருவது வரட்டும், போவது போகட்டும் என்று சொன்னார்கள். இப்படித்தான் சொல்கிறார்களே தவிர, கான்ஸ்டிட்யூஷன் பிரகாரம், லேட்டஸ்ட் ஜட்ஜ்மெண்ட் பிரகாரம் இது சரியாக இருக்கிறதா என்று பார்க்கிறார்களா? லேண்ட் சீலிங் பில் வந்திருக்கிறது. 1958-இல் கொண்டுவந்து 1961-இல் தான் அமலுக்கு வந்திருக்கிறது. எத்தனை ஏக்கர்கள் எடுத்துக்கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஒன்றையும் காணோம். ஹைகோர்ட்டுக்குப் போனால் தள்ளுபடி செய்கிறார்கள். ஹைகோர்ட்டிலும் சுப்ரீம் கோர்டிலும் இங்கே நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களைச் சல்லிசல்லியாக உடைக்கிறார்கள். இந்த இலாகா சரியில்லை. இந்த இலாகாவைச் சீர்திருத்தவேண்டும். லட்சக்கணக்கான பணம் செலவாகிறது.



8th August 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

சட்டம் கொண்டுவரவேண்டுமென்றால் ஒரு வாரம் எடுத்துக் கொண்டு எவிடன்ஸ் எடுத்து, ஸ்டாச்சூட் புக்கில் அது வந்து அதற்குப் பிறகு அது இம்ப்ளிமெண்ட் பண்ணுகிறபோது, லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழித்துச் செய்யப்பட்டும், அது நஷ்டமாகிறது என்று சொன்னால் இந்த இலாகா சரிவரச் செய்யவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த லா டிபார்ட்மெண்டை ரீஃபார்ம் பண்ணவேண்டும். அதிகாரிகளைப் பற்றி நான் சந்தேகமாகச் சொல்லவில்லை. அதிகாரிகள் நல்லவர்கள்தான். இந்த லேட்டஸ்ட் டெஸிஷன்களையெல்லாம் பார்த்து இம்ப்ளிமெண்ட் பண்ணவேண்டும். டிராஃப்ட் பண்ணுகிறவர் எல்.டி.சி. தான்; அவர் பி.எல். படித்திருப்பார்; சட்ட ஞானம் இருக்கிறதா இல்லையா என்று அசிஸ்டெண்ட் செகரட்டரியோ அல்லது டெபுடி செகரட்டரியோ வெரிஃபை பண்ணுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. மந்திரிகள் டிராஃப்ட் பண்ணுகிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன். லா டிபார்ட்மெண்ட் அனுப்புவதை அப்படியே வைத்துக் கொள்கிறார்கள். அதை அட்வகேட்-ஜெனரலினுடைய ஆலோசனைக்கு அனுப்புவதில்லை. இப்படிச் செய்தால் லட்சக்கணக்கான ரூபாய் வசூல் செய்வது நஷ்டம் ஆகிவிடுகிறது.

ஏன் அட்வகேட்-ஜெனரலுடைய அபிப்பிராயத்தைப் பெறாமல் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்? சரியாகப் பரிசீலனை செய்து கொண்டு வாராததன் காரணமாகப் பல லட்சக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை மீண்டும் எலக்ஷன் நேரத்திலேதான் கொண்டுவர வேண்டுமென்று கேட்டார்கள். இந்தச் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டம். இதைக் கொண்டு வந்ததிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. குறைபாடுகளை நீக்கி மீண்டும் சட்டமாகக் கொண்டு வருவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. இந்த மாதிரி நிலைமைகள் மீண்டும் ஏற்படாத வகையில், இந்த மன்றத்திற்குக் கௌரவம் தரும் வகையில் சட்டங்களை நல்லபடியாகப் பரிசீலனைசெய்து தாக்கல்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. மாதா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நகரப் புற நிலங்களுக்கு வரி போடக்கூடிய திருத்த மசோதா இந்தச் சபையின் முன் வந்திருக்கிறது. இதை முன்பு நன்றாகப் பரிசீலனை செய்துதான் கொண்டு வந்தோம். அவசரக் கோலமாகக் கொண்டு வரவில்லை. இப்போதும் அவசரக் கோலமாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்வது தவறு. ஏற்கனவே இயற்றப் பட்ட சட்டத்தின்படி, 'ஸோன்' ஆகப் பிரித்து வரி வசூல் செய்வது சரியல்ல என்று உயர்நீதி மன்றத்திலே கருத்துத் தெரிவித்த பிறகு, நாம் இன்று அதற்கேற்ற வகையில் சட்டத்தை மாற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். பழைய சட்டத்தின்படி ஏற்கனவே நாம் 30, 40 லட்சம் ரூபாய் வரையில் வசூலித்து விட்டோம். அவ்வாறு வசூலித்துவிட்ட பிறகு மீதி இருப்பவர்களுக்கு வசூலிக்காமல் இருப்பது சரியல்ல. நகரப் புற நிலங்களுக்கு வரி வசூலிப்பது

சரியா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. கிராமப் புறங்களில் உள்ள எல்லா நிலங்களுக்கு வரி விதித்திருக்கும்போது இதற்குப் போடுவதில் தவறு ஒன்றுமில்லை. அதிகமான வரி போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. விலை உயர்ந்துகொண்டே போவதற்குத் தகுந்தபடி போடப்படுகிறது. வியாபார அடிப்படையில் சேல்ஸ் டாக்ஸ் போடும்போது விலை எவ்வளவு உயருகிறதோ, அந்த அடிப்படையில்தான் போடப்படுகிறது. அதே அடிப்படையில் இதற்கும் போடப்படுவதில் தவறு இருக்க நியாயம் இல்லை. கோவில் நிலங்களில் குடியிருக்கிறவர்களிடமிருந்தே இந்த வரியை வசூலிக்க வேண்டுமென்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அது சரியல்ல. கோயில் நிலமாக இருந்தாலும், வேறு யார் நிலமாக இருந்தாலும், நிலம் யாருக்குச் சொந்தமோ அவர்களுக்குத்தான் வரி போட வேண்டும். சட்ட சபையில் செய்யப்படும் சட்டங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் ஹைகோர்ட் தெரிவிக்காமல் இருக்க வேண்டுமென்பது எந்த ஜனநாயக நாட்டிலும் இல்லை. சட்டசபையில் செய்யப்படும் சட்டங்கள் சரியா, தவறா என்று சொல்வதற்கு இந்த நாட்டு மக்களுக்கு உரிமை இருக்கிறது. அதன் மேல் தீர்ப்புக் கொடுப்பதற்கு நீதிபதிக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னது மாதிரி அவசரக் கோலமாகக் கொண்டு வரவில்லை.

இதிலே, இலாகா செய்த சட்டம் தவறு என்று சொல்லவில்லை. 'ஸோன்' ஆகப் பிரித்தது சரியல்ல என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதைச் சரி செய்யும் வகையில்தான் இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. இதைத் தள்ளிப்போடுவதோ, ஒத்திப் போடுவதோ முடியாத காரியம். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், தேர்தல் நேரத்திலே இதைக் கொண்டுவர வேண்டாமென்று கூறியதாக திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். தேர்தல் நேரமானாலும் எங்களுக்குப் பயம் இல்லை. நியாயமான சட்டத்தை, நியாயமான வரி விதிப்பை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நாங்கள் கொண்டுவரத் தயாராக இருக்கிறோம். தேர்தலுக்காக என்ற ஒரு நிலை எங்களுக்குக் கிடையாது. அந்த வகையிலே இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்று சட்டசபை அங்கத்தினர்கள் இதிலே பேசினார்கள். அதிலே இரண்டு பேர் 'அட்வகேட்ஸ்'. இந்தப் பிரேரணையை அவர்கள் நிச்சயமாகக் கவனித்திருப்பார்கள் என்ற நம்பிக்கையிலேதான் அவர்களுக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தினுடைய நோக்கத்தை எல்லாம் விட்டு விட்டு மூலச் சட்டத்திற்கே போய்விட்டார்கள். அவர்கள் மூலச் சட்டம் இந்தச் சபைக்கு வந்தபோது என்ன சொன்னார்களோ, அதே கருத்துக்களைத்தான் இன்றைக்கும் சொன்னார்கள். அதற்குள்ளே நான் திரும்பப் போய் விவரமாகப் பதில் சொல்லத்



தயாராக இல்லை. இதைப் பொறுத்தவரை இந்தச் சபை இதனை ஏற்கனவே ஏற்றுக் கொண்டது. இது நீதிமன்றத்திற்குச் சென்று அவர்கள் தீர்ப்புச் சொன்னதெல்லாம், இதிலே ஸோன், சப்-ஸோன் என்று இருக்கக் கூடாது, ஒரே ஸோனாகத்தான் இருக்கவேண்டும் என்றார்கள். ஹைகோர்ட்டின் அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை ஒத்திப்போட வேண்டுமென்று சொல்வது எல்லாம் சொத்து இருக்கக்கூடியவர்களுக்கு உள்ள ஆசைதான். அவர்களுக்கு, வரிப்போடாமலேயே இருந்தால் ரொம்பச் சந்தோஷமாக இருக்கும். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை சபை இதனை ஏற்றுக் கொண்டிருக்கிறபடியால் அதற்குள்ளே நாம் போக வேண்டிய அவசியமில்லை.

மற்றொரு கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதைப் பயன்படுத்தி, இலாகா செய்ததாக அவர்கள் நினைக்கக் கூடிய குறைபாடுகளை எல்லாம் சொன்னார்கள். இந்த மாதிரி ஒரு சட்டத்தைச் செய்யும்போது சர்வ ஜாக்கிரதையாக யார் யாருடைய ஆலோசனையெல்லாம் பெற வேண்டுமோ, அவற்றையெல்லாம் பெற்றுத்தான் கொண்டு வருகிறோம். இந்தச் சபையில் சட்ட அறிவுள்ள அங்கத்தினர்கள் எல்லாம் சேர்ந்து—சட்டம் படிக்காமல் இருந்தால்கூட—நடைமுறையில் தெரிந்திருப்பதை வைத்து நாட்டுக்கு எது தேவை என்று ஆராயப்பட்டுத்தான் நிறைவேற்றப்படுகிறது. குறைபாடுகள் இருந்து தீர்ப்புக்கள் சொல்லப்பட்டால் அதையும் நாம் ஆட்சேபிப்பதற்கில்லை. இந்தச் சமுதாயத்திற்கு என்ன செய்யவேண்டுமென்ற முறையில் நாம் இவற்றையெல்லாம் செய்கிறோம். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அட்வகேட் ஜெனரலைக் கேட்டீர்களா என்று கேட்டார்கள். மசோதாவாகக் கொண்டுவருவது ஒரு கட்டம். கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒன்றை ஞாபகத்தில் வைக்க வேண்டும். இந்தச் சபையில் அங்கத்தினர்களால் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட சட்டத்தின் ஒரு பிரிவின் பேரில்தான் ஹைகோர்ட்டில் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். சட்ட சபை சரியாகப் பரிசீலிக்கவில்லை என்று நான் நினைக்கவில்லை. லா டிப்பார்ட்மென்டில் அவர்களுக்கு இருக்கக்கூடிய திறமைக்கேற்றவாறு சட்ட விவரங்களைத் தொகுத்திருக்கிறார்கள். இவற்றை வகுக்கும்போது யார் யாரைக் கலந்து பேச வேண்டுமோ, அவர்களையெல்லாம் கலந்தாலோசிக்கிறோம். இதிலே எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறோம். அவர்கள் பக்கத்தைச் சேர்ந்த திரு. மாதவன் அவர்கள், 'இந்தச் சட்ட சபையே இதைச் சட்டமாக இயற்ற முடியாது' என்ற கருத்தைச் சொன்னார்கள் என்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. அதற்கு ஒன்றும் ஹைகோர்ட்டில் தீர்ப்புச் சொல்லவில்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இந்தச் சட்டசபைக்கு உரிமை இருக்கிறது என்று தீர்ப்புச் சொல்லிவிட்டார்கள்.

[திரு. வெ. ராமையா] [8th August 1966

அதனால் இப்போது இருக்கக்கூடியது, ஸோன், சப்-ஸோன் என்று இருப்பதை ஆட்சேபித்தால் தனியாக ஒவ்வொரு அஸெஸிக்கும் உரிமை கொடுக்கவேண்டுமென்று திருத்தம் வந்திருக்கிறது. இதில் சர்ச்சைக்குரிய விஷயம் இல்லை. திருமதி அனந்தநாயகி அவர்கள் நிச்சயமாக இந்தச் சட்டத்தில் எந்தத் திருத்தம் வந்தாலும் சரி அவர்கள் ப்ரின்சிப்பலை சொல்லிக்கொண்டேயிருப்பார்கள். இது வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு பிரச்னை. இதை சட்டசபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது அவர்களின் கருத்துக்குப் பொருத்தமாக இருக்காது. 'ஓனர் ஆக்குபையர்', வீடு வைத்திருப்பவர் குடியிருக்க என்ன விதிவிலக்கு என்றால் 26-வது பிரிவைப் பார்த்தால் அவர்களுக்கு ஓரளவிற்குச் சட்டத்திலிருந்து கொஞ்சம் சலுகை கொடுத்திருக்கிறோம். பரிபூரணமாகக் கொடுக்கும் அளவில் இல்லை. அதை சட்டசபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது புதுப் பிரிவு அல்ல. ஆகவே இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : 26-வது பிரிவுப்படி, ஓனர் ஆக்குபை செய்தால் 25 சத விகிதம் ரிடக்ஷன் இருக்கலாம் என்று சொன்னார்கள். கோவில் மனைக்கட்டுக்களை 'ஓன்' செய்திருக்கிறார்களே, அவர்களிடம் நேரிடையாக வசூலிக்கமுடியுமா?

In clause 6 it is stated, '. . . . . in the opinion of the Assistant Commissioner . . . . . such urban land would have fetched or fetch if sold in the open market . . .'

என்ற அளவில் அஸிஸ்டென்ட் கமிஷனருக்கு வரையறை மீறி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டும்.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member can have her say when that particular clause is taken up for consideration.

The question is—

'That the Madras Urban Land Tax Bill, 1966 (L.A. Bill No. 10 of 1966) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause 2.*

Mr. DEPUTY SPEAKER : The question is—

'That clause 2 do stand part of the Bill.'

திரு. மு. சண்முகம் : கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இந்த சபையின் அங்கீகாரத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் இந்த அர்பன் லான்ட் டாக்ஸ் பில் (எ. ஏ. பில் நம்பர் 10 ஆஃப் 1966) இரண்டாவது கிளாசின் மேல் நான் இந்தத் திருத்தத்தை பிரேரேபிக்கிறேன்.

"In item (13), after the word 'wet' wherever it occurs, add the words 'or dry'"



8th August 1966]

Sri M. RAJANGAM : Sir, I second it.

Sri DEPUTY SPEAKER : Now the clause and the amendment are before the House for discussion.

திரு. மு. சண்முகம் : இந்த அர்பன் லான்ட் டாக்ஸ் சட்டத்தை எடுத்துக் கொண்டிருப்பது, வீடுகள் கட்டுவதற்குள்ள மனைகள் மீது அதிக விலைமதிப்பு நகரப்புறங்களில் ஏற்படுவதினால் ஓரளவு அரசாங்கத்திற்கு வரி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்ற பொதுவான கருத்தில் இது நிறைவேற்றப்படயிருக்கிறது. நகரப்புறங்களில் உள்ள நிலங்கள் நன்செய் நிலமானாலும் சரி, புன் செய் நிலமானாலும் சரி அவற்றில் சாகுபடி செய்யப்படுமானால் அவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பிட்டிருப்பது, நன்செய் நிலங்களுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நகரப்புறங்களில் உள்ள நிலங்களில் புன் செய் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டு, அந்த நிலங்கள் வீடு கட்டலாயக்கில்லாத நிலையில் அநேகயிடங்களில் இருக்கின்றன. நன் செய் நிலங்களுக்கு அளிக்கப்படுகிற விதிவிலக்கு போன்று சாகுபடி செய்து கொண்டிருக்கக்கூடிய புன்செய் நிலங்களுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டியது நியாயமே. இதில் அதற்கு இடம் இல்லாதிருப்பதால் புன்செய் நிலங்களுக்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பது என் கருத்து. அதன்படித்தான் இத்திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : Sir, I am not accepting this amendment.

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clauses 3, 4 and 5 were put and carried.

*Clause 6.*

Mr. DEPUTY SPEAKER : The question is—

'That Clause 6 do stand part of the Bill'.

Srimathi T. N. ANANDANAYAKI : Sir, according to this clause, the Assistant Commissioner can fix any price for any land. In this clause it is stated that the Assistant Commissioner may fix the price of an urban land which 'would have fetched or fetch, if sold in the open market on the date of the commencement of this Act'. My submission is that this clause gives very wide powers to the Assistant Commissioner because he will not be in a position to know what exactly would be the open market value. So, he must be asked to fix the price of a land according to the rules to be framed under this Bill. Also, he must fix the value on the basis of the lands acquired by the Government. He must also take into consideration the documents like sale deeds in respect of the adjacent lands and also enquire from the people in that locality. It is only after a thorough enquiry, he must be asked to fix the price

[Srimathi T. N. Anandanayaki] [8th August 1966

of the land. Otherwise, what will happen is, he may fix a higher rate in certain places and a lower rate in certain other places. Thus, there is scope for whimsical rates being fixed by him and the High Court might say that they are discriminatory in nature. So, the rules may be framed under this Bill to guide the Assistant Commissioner in fixing the proper value of the land.

THE HON. SRI V. RAMAIAH : Sir, the very purpose of this Bill which is before this House is to do away with the discriminatory treatment which was pointed out by the High Court. Now, we are limiting it to each individual property. So, the Assistant Commissioner will bear in mind the value of the property and the sale deeds. Further, there is provision for an appeal which can be preferred by an individual. So, where is the question of giving wide powers to him?

Clause 6 was put and carried.

Clauses 7 to 27 were put and carried.

*Clause* 28.

MR. DEPUTY SPEAKER : In view of the decision already taken by the House in respect of the amendment to clause 2 moved by the hon. Member, Sri M. Shanmugam, the amendment given notice of by him to this clause is not necessary.

Clause 28 was put and carried.

*Clause* 29.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That Clause 29 do stand part of the Bill.'

* SRI V. SANKARAN : Mr. Deputy Speaker, Sir, in sub-clauses (*a*) and (*b*) of Clause 29, exemptions have been given to the lands owned by the State or the Central Government or the Corporation of Madras or a Municipal Council or a Township Committee or a Panchayat or Panchayat Union Council. But in sub-clause (*c*) it is stated that exemption would be given to 'any urban land set apart for public worship and is actually so used'. My submission is that any urban land owned by any religious institution or philanthropic institution should also be given exemption under this clause. There is also another difficulty if we have this restrictive clause saying that the land should actually be used for public worship. We find that in a number of temples, within the temple premises, some portions have been let out for having shops and other things. Therefore, it would be difficult to find out which portion of the temple premises is actually used for public worship and which portion, for remunerative purposes. If it is worded in a broader way such as 'any urban land owned by any religious or philanthropic institution', it will be all-comprehensive.



8th August 1966] [Sri V. Sankaran]

In clause 29 (j) (i), the words used are 'any urban land used for charitable purposes of sheltering destitute persons or animals'. Charitable purposes need not be only for sheltering destitute persons or animals, there may be ever so many other charitable purposes. Hence in the place of the present wording, the wording 'any urban land used for such charitable purposes as may be prescribed by the Government', may be substituted. More or less a similar wording is adopted in clause 29 (k) wherein it is said 'any urban land used by such philanthropic institutions as the Government may, by notification, specify'. When a land belonging to the Government or the Corporation of Madras is exempted, why should not the land of a religious or philanthropic institution be exempted ? That is my plea.

12-30 p.m.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I endorse the view expressed by Sri V. Sankaran regarding the grant of exemption to religious institutions. In the Zamindari and Inam Abolition legislations, we have provided for the grant of tasdik allowance to those religious institutions whose property has been acquired by the Government. In this Act, when we have exempted the land owned by the Government, the Corporation of Madras and some other bodies . . .

THE HON. SRI V. RAMAIAH : Hon. Member, Sri Sankaran did not mean that. His contention was that if there was any property within the temple earning a return, that should be exempted.

SRI V. SANKARAN : That is only an additional point. What I meant was that any land owned by a religious institution should also be exempted, when the Government have exempted the land owned by the Government, the Corporation of Madras, etc.

SRI C. CHIRANJEEVULU NAIDU : I would like the Hon. Minister to consider the question of exempting lands owned by religious institutions from the purview of this Act.

SRIMATHI T. N. ANANDANAYAKI : In this clause, there are so many sub-clauses. There are ever so many charitable purposes which are not covered by these sub-clauses. The list is not at all exhaustive. Instead of enumerating so many things and making the clause complicated, a new sub-clause (v) may be added after sub-clause (iv) to provide for exemption of 'any urban land set apart for any religious or charitable purposes' and the Government could have the right to prescribe which are the religious or charitable purposes. It is very difficult to enumerate all the religious or charitable purposes. My submission is that we can have one sub-clause instead of all these sub-clauses.

The HON. SRI V. RAMAIAH : Sir, I would like to point out that no amendments have been given notice of by any of the three advocate-members of this House which the Government can consider. I am not convinced by the arguments of the Members.

The subject matter of this Bill was gone into and discussed for a number of days and the provisions in this Bill have been embodied after a great deal of thought and consideration by this Honourable House. If the hon. Members have any suggestions for future action, let them take immediate steps to bring them to my notice and the Government will take action on them.

Clause 29 was put and carried.

Clauses 30 to 48 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : I move—

'That the Madras Urban Land Tax Bill, 1966 (L.A. Bill No. 10 of 1966) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS CULTIVATING TENANTS (PROTECTION FROM EVICTION) BILL, 1966.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Deputy Speaker, I beg to introduce the Madras Cultivating Tenants (Protection from Eviction) Bill, 1966, and move —

'That the Bill [a] be taken into consideration'.

There has been an unprecedented drought since last year and the cultivating tenants have not been able to pay the rents due to their landlords. Under the existing tenancy laws, the landlords could evict the cultivating tenants who are in arrears. In the interests of food production and of the general public, it was felt that the cultivating tenants should be spared the distractions and expenditure involved in eviction proceedings launched by the landlords. It was, therefore, considered necessary that immediate steps should be taken to bar and stay eviction proceedings against cultivating tenants who are in arrears with respect to the rent payable to the landlords. Accordingly, the Madras Cultivating Tenants (Protection from Eviction) Ordinance, 1966 (Madras Ordinance 2 of 1966) was promulgated by the Governor. The Ordinance provides for the protection from eviction of cultivating tenants who are in arrears with respect to the rent payable to the landlords. Under the Ordinance no application shall be made by a landlord for the eviction of a cultivating tenant from his holding or any part thereof on the ground that the cultivating tenant is in arrear with respect to the rent payable to the landlord and no cultivating tenant shall be evicted from his holding or any part thereof by or at the instance of his landlord whether in execution of a decree or order of a court or otherwise on the ground that the cultivating tenant is in arrear with respect to the rent payable to the landlord. The Ordinance further provides for stay of applications, suits and other proceedings for the eviction of a cultivating tenant on the ground that he is in arrear with

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary



respect to the rent payable to the landlord and pending before a Revenue Divisional Officer, court or other authority, as the case may be. However, all applications, suits and other proceedings for the eviction of a cultivating tenant on grounds of arrears of rent stayed under this Ordinance shall, after the expiration of this Ordinance, be proceeded with subject to the provisions of any law which may then be in force from the stage which had been reached when the application, suit or proceeding was stayed.

The Bill seeks to replace the Ordinance aforesaid. Under the Bill the protection from eviction will be in force for a period of two years commencing from the 29th April 1966 on which date the Ordinance was promulgated. The provisions of the Bill make it clear that the proposed Act applies to tenants under public trusts who are governed by the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Madras Act 57 of 1961).

It also confers similar protection on 'cultivating verumpattamdars' in the Gudalur taluk of the Nilgiris district who are governed by the provisions of the Malabar Tenancy Act, 1929 (Madras Act XIV of 1930).

Sir, I have now briefly indicated the objects of this legislation. I request the House to accept the motion.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Cultivating Tenants (Protection from Eviction) Bill, 1966 be taken into consideration".

திரு. செ. மாதவன்: கனம் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இடைக்கால நிவாரணமாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. விவசாயிகள் பருவ மழை தவறிய காரணத்தினாலோ அல்லது விளைச்சல் இல்லாத காரணத்தினாலோ துன்பப்படும்போது அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக அரசாங்கம் சட்டம் இயற்றுவதை நாங்கள் வரவேற்கிறோம். 1954-ம் ஆண்டு இதுபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது, அப்போது இருந்த சென்னை அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்தது. நிலச் சீர்திருத்தம் ஆனாலும் சரி, இனம் பிரச்னையானாலும் சரி, குடிவாரம்தாரர் மசோதா போன்ற சட்டமானாலும் சரி, சர்க்கார் அரை மனத்தோடு கொண்டு வருவதைத்தான் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று சொல்லுவார்கள். தேர்தலின்போது நிலச்சுவாந்தார் தயவும் வேண்டும், குத்தகைக்காரன் தயவும் வேண்டும் என்று இந்தச் சட்டம் அரைவேக்காடுச் சட்டமாக, அரைகுறையாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். 1954-ம் ஆண்டு கொண்டு வந்த சட்டமாவது முழுக்க முழுக்க விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கருத்திலே கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் இந்தச் சட்டம் கொண்டு வரக்கூடிய அடிப்படையே பருவ மழை தவறி விட்டது. விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். நிலச்சுவாந்தார்களுக்கு, மேல்வாரம்தார்களுக்கு வாரம் கொடுக்க முடியாத

நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு வசதி அளிக்கவேண்டும், வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதாகும். அந்த அடிப்படையில்தான் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்திலே எந்த அளவுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போதுதான் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. வாரம் கொடுக்காவிட்டால் அரியர்ஸ் இன் ரென்ட்டாக இருந்தால் அதை ஒரு காரணமாக வைத்து வெளியேற்றலாம் என்று கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட், 1955-ல் இடம் இருக்கிறது. அப்படி வெளியேற்ற ஆர்.டி.ஓ. கோர்ட்டுக்குப் போகவேண்டும். அரியர்ஸ் இன் ரென்ட்க்கு ஃபேர் ரென்ட் ஆக்டில் தாசில்தாரிடம் மனு போடலாம் அல்லது சிவில் கோர்ட்டில் பொதுச் சட்டத்தின்கீழ், காமன் லாவின் கீழ் வழக்கு போடலாம். இந்த மூன்று பிரிவுகளும் சர்க்காருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இப்போது ஆர்.டி.ஓ. கோர்ட்டுக்கு சென்று எவிக்ஷனுக்குப் போடக்கூடாது. எவிக்ஷனுக்குப் போடாமல் ஸ்டே கொடுக்கிறோம் என்று சட்டம் கொண்டு வந்திருப்பது விவசாயிகளுக்கு எந்த விதத்தில் நிவாரணம் என்று சிந்திக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அரசைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியே ஆட்சியில் இருந்தபோது 1954-ம் ஆண்டு டெம்பரரி ரிலீஃப் ஆக்ட் என்று அக்ரிகல்ச்சரிஸ்ட்சுக்காகக் கொண்டுவரப்பட்டது. அதிலே எவிக்ஷன் கருத்தும் அடங்கி இருந்தது. அதோடு விட்டுவிடவில்லை. அரியர்ஸ் ஆஃப் ரென்ட்டைக் கலெக்ஷன் செய்வதை ஸ்டே கொடுக்கவேண்டுமென்று அந்தச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ரெக்கவரி ஆஃப் டெப்ட் என்று கூறியிருந்தார்கள். டெப்ட் காரணமாக எவிக்ஷன் செய்ய முடியாது, கலெக்ஷன் செய்யவும் முடியாது என்று அன்றைக்குச் சட்டம் போட்டு, இன்றைக்கு அவசர அவசரமாக ஆர்டினன்ஸ் போட்டு, அதில் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு சட்டம் கொண்டுவருவதன் உள்நோக்கம் என்ன? அதுதான் புரியவில்லை. அந்தக் கருத்தைத்தான் திருத்தமாகக் கொடுத்திருக்கிறோம். அந்தக் கருத்தை எல்லா க்ளாசிலும் வற்புறுத்தவேண்டிய அவசியம் இருப்பதால் எல்லா க்ளாசுக்கும் திருத்தம் கொடுத்து இருக்கிறோம். இதை ஏற்றுக்கொள்ளுவதில் தவறு இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு, 1968-ம் ஆண்டு வரையில் இருக்கவேண்டுமென்று இடைக்கால நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இடைக்காலத்தில் எவிக்ஷனுக்குப் போடக் கூடாது என்று சொல்லும்போது, அரியர்ஸ் ஆஃப் ரென்ட்டுக்கும் போடக் கூடாது என்ற கருத்தைத் திருத்தச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளுவதில் என்ன தவறு இருக்க முடியும்? அடிப்படையில் என்ன வேறுபாடு இருக்க முடியும்? இரண்டுக்கும் ஒரே அடிப்படைதான். இரண்டு ஆண்டு காலம் தான்; நிரந்தரமாகச் சொல்லவில்லை. இடைக்காலத்திற்கு அரியர்ஸ் ஆஃப் ரென்ட்டுக்கு ஏற்கனவே டிக்ரி வாங்கியிருந்தாலும், அல்லது புதிதாக சூட் போடவோ, அல்லது பேரன்ட் ஆக்ட்டில் மனுப் போடவோ கூடாது என்று ஒப்புக்கொள்ளாவிட்டால், இது தேர்தல் ஸ்டன்ட், தேர்தலுக்காகக் கொண்டுவரப்படுகிறது என்ற நிலைமை ஏற்படுமே தவிர வேறு அல்ல. உண்மை நிலை அதுதான். சட்டம் வந்தவுடனே, ஆர்டினன்ஸ் பிறப்பித்தவுடனே சிவில் கோர்ட்டில் சூட்ஸ் மயமாக இருக்கிறது. சூட்ஸ் ஃபார் அரியர்ஸ் ஆஃப் ரென்ட், அப்பாயின்ட்மென்ட் ஆஃப் ரிசீவருக்குப் பெட்டிஷன் போட்டு, ரிசீவரைப் போட்டு கதிரை அறுக்கும் நிலைமை ஏற்பட்டது. அட்டாச்மென்ட் பிஃபோர் ஜட்ஜ்மென்ட் கூட ஏற்பட்டது. சர்க்கார் போட்ட சட்டம் விவசாயிக்குப் பலன் அளிப்பதற்குப் பதில், ஓட்டை ஏற்படுத்தி நிலச்சுவான்தார்களுக்குப் பலன் அளிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தினால் நிலச்சுவான்தார்கள் இந்தச் சட்டத்தைக் காட்டி விவசாயிகளை மிரட்டும் நிலைதான் உருவாகியிருக்கிறது. எங்கள் தரப்பிலிருந்து கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு இந்த ஷரத்தையும் சேர்த்து இந்தச் சட்டத்தைப் பூர்ணமாக, விவசாயிகளுக்கு நன்மை செய்யும் முறையில் உருவாக்கலாம். இது அல்ட்ரா வைர்ஸ் ஆஃப் தி கான்ஸ்ட்டிட்யூஷன் என்று சொல்ல முடியாது. ஏற்கனவே இந்த ஷரத்து செல்லுபடி ஆகிவிட்டது. ஹைகோர்ட்டில் அது செல்லும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு அந்த அதிகாரம் இல்லை என்றும் சொல்ல முடியாது. காரணம் இந்தச் சர்க்காரே முன்பு பிறப்பித்திருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு முழுக்க முழுக்க கொண்டு வந்தால் இதை மனப்பூர்வமாகப் பாராட்டுவோம் என்று சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.





*திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவித் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். குறிப்பாக மிகவும் எதிர்பார்த்திருந்த நேரத்தில் சர்க்கார் அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்தார்கள். இத்தகைய அவசரச் சட்டம் பிரகடனம் செய்யாதிருந்தால் ராஜ்யம் முழுவதிலும் விவசாயிகளுக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு, மிகவும் கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கும். ஆகவே, காலம் அறிந்து அத்தகைய அவசரச் சட்டம் செய்த அரசாங்கத்தை மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு ஆலோசனை; அவசரச் சட்டம் பண்ணிய காலம் அறுவடை காலத்திற்கு ஏறக்குறைய ஒரு மாத காலம் பிந்திப் போய்விட்டதாக என்னுடைய அபிப்பிராயம். ஏப்ரல் மாதத்தில் அவசரச் சட்டம் போட்ட பின்னர் இது போன்ற வெளியேற்றங்கள் இருக்க தடை இருந்தது. ஆனால், அதற்கு முன்பு 1-1½ மாத காலத்தில் வெளியேற்றப்பட்டிருக்கிறவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுக்க முடியும் என்று அரசாங்கம் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அத்தகைய நிலைமைகள் ஒன்றிரண்டு இருக்கலாம். இருந்தாலும் அப்பேர்ப்பட்டவர்களுக்கும் சிரமம் இல்லாமல் இருக்க, நிவாரணம் கொடுக்க வழிவகை செய்ய வேண்டியது அவசியம். குறிப்பாக 1374 பசலியில் ஏற்பட்ட மழையினால் நல்ல விளைவு இருந்தது. இருந்தாலும் 1375 பசலியில் பெரும்பாலான பகுதியில், குறிப்பாக தஞ்சை பகுதியில் விவசாயிகளுக்கு மிகுந்த சோதனை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் கொள்கை அளவில் தெளிவாகச் சொல்லியிருப்பதிலே கூட ஒருகாலும் இல்லாத

அளவுக்கு ஒரு கஷ்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவசரச் சட்டம் ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை கொள்கை அளவில் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற திருத்தங்களில் வார்த்தைகள் சரியானதுதானா என்று உன்னிப்பாக யோசிக்கலாம் அரசாங்கம். அவர்கள் சொல்லுகிற கருத்தை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அவசரச் சட்டம் பாதுகாப்புக் கொடுக்கக்கூடியது. வெளியேற்றுவதற்குத் தடைதான் கொடுக்க முடியும். இரண்டு ஆண்டுகாலம் வெளியேற்றாமல் தடுத்துக்கொள்ள முடியும். 1968-க்குப் பின் பழைய பாக்கியையும் சேர்த்து வசூலித்துக் கொள்ள தடை இல்லை என்றாலும், அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக விளைவு இருந்தால் நிலச்சுவானுக்கும், விவசாயிக்கும் கட்டுக்குத்தகைதாருக்கும் சுமுகமான நிலைமை ஏற்பட்டிருக்கும். கொடுக்கக் கூடிய நிலையில் விளைவு ஏற்பட்டிருந்தால் கொடுத்திருப்பார்கள். விளைவு இல்லாத இடத்தில்தான் பாக்கி கொடுக்கப்படாமல் இருந்திருக்கும். அரசாங்கம் தடுப்புச் சட்டத்தின் மூலம் விவசாயிகள் வெளியேற்றப்படுவதற்கு தடை விதித்திருந்தாலும் கூட, கூட்டுறவு இலாகா அல்லது வேறு பல இலாகாக்களின் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை விவசாயிகள் திருப்பிச் செலுத்தியாக வேண்டியிருக்கிறது. பாங்குகள் மூலம் கொடுக்கப்பட்ட கடன்கள் நிச்சயம் பல்வேறு இடங்களில் வசூல் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு சிரமம் இருந்தாலும் கூட விவசாயிகள் அந்தக் கடன்களை திருப்பிக் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. பெரும்பாலான இடங்களில் தடைகள் ஏற்படுத்தவில்லை. ரிசர்வ் பாங்கு கெடுபிடியின் காரணமாகவும், பாங்குகள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் காரணமாகவும் கிராமப்புறங்களிலுள்ள விவசாய பாங்குகள், கூட்டுறவு பாங்குகள் கொடுத்த கடன்களை பெரும்பாலும் வசூல் செய்கிற நிலைதான் இருக்கிறது. விவசாயிகளுக்கு அதனால் பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் விவசாயிகளை வெளியேற்றுவதற்கு தடை இருந்தாலும் கோர்ட்டு மூலம் எடுக்கப்பட்ட வேறு நடவடிக்கைகள் காரணமாக ஜப்தி, வாரண்டு இவைகளுக்கு இப்பொழுது தடை இல்லை. இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத்தில் கூட இத்தகைய பாதுகாப்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன நிவாரணம் செய்வது என்பது பற்றி அரசாங்கம் தீர்க்கமாக யோசிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

இப்பொழுது கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டமானது மிகவும் மனப்பூர்வமாக, நல்லெண்ணத்தோடு அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் யாரும் சந்தேகப்படவேண்டிய அவசியமே இல்லை. சந்தேகத்திற்கு இடம் இல்லாத ஒரு நல்ல சட்டம் இது. விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு சட்டம். இதிலே இருக்கும் சிரமங்களைக் குறைப்பதற்கு வழிவகைகள் தேடவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்கலாம். இதிலே



ஓட்டை இருந்தால், அதை அடைக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்கலாம். விவசாயிகள் மனதில் ஒரு தவறான கருத்தை உண்டுபண்ணக்கூடிய அளவுக்கு, சந்தேகம் உண்டுபண்ணக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் வருகிறது என்று ஒரு தூண்டுதல் செய்வது நல்லது அல்ல. இத்தகைய போக்கு வருந்தத்தக்கது என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு சொல்லிக்கொள்ளுகிறேன். நமது நல்லெண்ணத்தை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு, விவசாயிகளுக்கு பலன் அளிக்கக்கூடிய அளவுக்கு, விவசாயிகளுக்கு கஷ்டம் இல்லாத அளவுக்கு வழிவகைகள் செய்வதற்கு திருத்தம் அவசியம், அதற்கு இடம் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆலோசனை.

* **திரு. கோ. நாராயணசாமி நாயுடு**: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சென்ற 3, 4 மாத காலமாகவே வரவேண்டும் வரவேண்டும் என்று எதிர்பார்த்து, பல இடங்களில் இதற்காக சர்க்காரை அணுகி, என்ன செய்ய வேண்டுமோ அவைகளெல்லாம் செய்யப்பட்டு வந்தன. ஆரம்பத்திலிருந்து பல சந்தர்ப்பங்களிலும் அமைச்சர் அவர்களிடமும் சரி, முதல் அமைச்சர் அவர்களிடமும் சரி, தஞ்சை ஜில்லா பகுதிகளிலும், பல்வேறு பகுதிகளிலும் இது பற்றி கூறப்பட்டதன் காரணமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள், ஆனாலும் நாம் எதைச் செய்தாலும் தேர்தலுக்காகச் செய்கிறோம் என்று எதிர்க்கட்சியினர் சொல்கிறார்கள், அவர்கள் அதைத் தவிர வேறு முத்திரையடி வைத்திருக்கவில்லை. 1954-ம் ஆண்டில் தேர்தல் இல்லை. அப்பொழுதுதான் அதிகப்படியான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், அதற்கப்புறம் 40-60 சட்டம், பின்னர் 60-40 வாரச் சட்டம் இப்படி பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. ஆகவே, தேர்தலை மனதில் வைத்து நாம் இவையெல்லாம் செய்யவிளில்லை. சந்தேகக் கண்களோடு பார்க்கிறவர்களுக்கு எதைப் பார்த்தாலும் தேர்தல் என்றுதான் தோன்றும். இந்தச் சட்டம் வந்தால் நமக்கு ஆபத்து உண்டாகும், ஆபத்து உண்டாக்கும் என்று அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறவர்களுக்கு எதை எடுத்தாலும் சந்தேகம் தான் தோன்றும். சந்தேகமே ஒட்டிய ஒரு வியாதியாகி, அலர்ஜி என்று சொல்லுவார்களே அது மாதிரி ஆகிவிட்டது எதிர்க்கட்சியாருக்கு என்று நினைக்கிறேன். நாம் நல்ல எண்ணத்தோடுதான் சட்டம் செய்கிறோம். கிட்டத்தட்ட 13 சட்டங்கள் கொண்டு வந்திருக்கும் பொழுது. தேர்தல் நினைப்போடு அவைகளை கொண்டுவரவில்லை. இது ஆளுகின்ற சர்க்கார் கட்சியினுடைய கொள்கைகளிலே ஒன்று. நிரம்ப தீவிரமான ஒரு கொள்கை. அதை நாம் பரிபூரணமாக ஆக்க கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். ஏனென்றால் இது ஜனநாயகம். அவர்கள் நினைக்கிறபடி அல்ல, நாம் நினைக்கிறபடி அல்ல, அவர்களும் நாமும் இங்கே உட்காருவதற்கு. ஜனங்களிடையே திருப்தி உண்டாக்குவதன் மூலம்தான் சீர்திருத்தம் வரமுடியும். தேர்தலுக்காகவே

செய்தால்தான் அதில் என்ன பிசகு? நல்லதுதானே. தண்ணீர் பந்தல் வைப்பது நல்லவன் என்று சொல்வதற்காகத்தான் தண்ணீர் பந்தல் வைப்பது. நன்மைக்காக, ஆகவே அதில் குற்றம் காணாமல், அதற்கு ஆதரவு தந்து, வேண்டுமானால் அதனுடைய நோக்கத்தின் காரணத்தை உங்கள் மனதிற்குள் இஷ்டப்படி வைத்துக்கொள்ளுங்கள். அதை யாரும் தடுக்கப்போவதில்லை.

நண்பர் மாதவன் அவர்கள் சொன்னபடி இதிலே சில இடுக்குகள் இருக்கலாம். எந்தச் சட்டத்திலும் இடுக்குகள் இல்லாமல் இருந்தது என்று நாம் சொல்ல முடியாது. எல்லாச் சட்டங்களிலும் இடுக்குகள் இருக்கத்தான் இருக்கின்றன. இவ்வளவு நேரடியாகச் சொன்னபிறகு, அதற்கு ஓரளவு வேண்டிய திருத்தத்தைச் செய்து கொள்வார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. சென்ற நவம்பர் மாதத்திலிருந்து இதைத் திரும்ப, திரும்ப வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். மந்திரிமார்கள் வரும்பொழுதெல்லாம் நிலைமையை நேரில் கொண்டு காண்பித்திருக்கிறேன். இதற்குப் பரிகாரம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இதிலே ஒரு பெரிய தர்ம சங்கடம். சிறிய மிராசுதார்களுக்கு நெல் கொடுக்க முடியவில்லை. நெல் கொடுக்கப் படாவிடாலும், சர்க்காருக்கு சிறு மிராசுதார்கள் கிஸ்தி கொடுத்தாகவேண்டும். சர்க்காருக்கு கிஸ்தி கொடுப்பதற்குப் போதுமான அளவு அவர்களுக்கு வருமானம் இல்லை. அவர்கள் எங்கேயாவது கடன் வாங்கித் தான் கிஸ்தி கட்டவேண்டும். கிஸ்தி கட்டுவது மட்டுமல்லாமல் அவர்களுடைய சாப்பாட்டிற்கும் நிலமிருந்தும் சம்பாதிக்கவேண்டும். இது ஒரு பெரிய இடையூறு. நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டத்தில், சென்ற வருஷம் பஞ்சம் இருந்ததாலும் தண்ணீர் வராமல் இருந்ததினாலும், தண்ணீரில்லா கொடுமையின் காரணமாக விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இதற்குப் பரிகாரம் தேடவேண்டும் என்று நாம் சட்டத்திலே சொல்லியிருக்கிறோம். ஆனால் அளிக்கவேண்டிய நெல் தள்ளுபடி இல்லை. அப்படிச் சொன்னால் அது நியாயமாக இருக்க முடியாது என்றுதான் நான் நம்புகிறேன். யாரும், எந்த உழவனும் வீட்டுக்கு நெல் எடுத்துக்கொண்டுபோகவில்லை. நெல்லை எடுத்துக்கொண்டு போகாவிட்டாலும், பல சந்தர்ப்பங்களில், பல இடங்களில் சர்க்காரால் கிஸ்தி கூட வஜா செய்யப்பட்டிருக்கிறது. நிலத்தைவிட்டு வெளியேற்றுவதை தடுப்பதற்கு சட்டம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, முன்சீப் கோர்ட்டில் எங்கள் ஊரில் ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. எங்கள் ஊரில் அனபநாதபுரம், தர்மபாகம் வகையறா உழவர்களை தனித் தனியாகப் பிரித்து பஞ்சாயத்து கோர்ட்டில் வழக்கு போட்டிருக்கிறார்கள். ஏனென்றால் பஞ்சாயத்து கோர்ட்டு அவர்கள் செல்வாக்குக்கு உட்பட்டது. ஒன்று, இரண்டு, நான்கு என்று முதலில் தீர்ப்பு வாங்கிக்கொண்டு, உடனடியாக மற்றவைகளையும் கொடுப்பது என்ற ராஜ தந்திரத்தை அவர்கள் கையாளுகிறார்கள். முன்சீப் கோர்ட்டிலும் ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. நிலத்தைவிட்டு வெளியேற்றப்படாவிட்டாலும், ஜப்தி, வாரண்டு இப்படிப் பல விதமான தொல்லைகள் அவர்களுக்கு இருக்கின்றன.



இரண்டு வருஷங்களுக்கு விவசாயிகள் எந்தவிதமான தொந்தரவும் இல்லாமல் நிம்மதியாகச் சாகுபடி செய்வதற்கு நாம் வசதி செய்து கொடுத்தால்தான், நிச்சயம் பஞ்சத்திற்கு ஒரு பரிகாரம் காண முடியும். சிறிய மிராசுதார்களுக்கு வேண்டுமானால் சட்டத்தில் விதிவிலக்கு அளிப்பதுபற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. போலீஸ் ஜவான் என்று சொல்லிக்கொண்டு, எங்கள் பகுதியில் ஒரு சில பேர்கள், கிட்டத்தட்ட ஆள் 5½ அடி உயரம் இருப்பார்கள். போலீஸ் சட்டையும் போட்டுக்கொண்டு, 4, 5 பேனாக்களைச் சொருகிக்கொண்டு இருப்பார்கள்; இங்கும் இருக்காது, நிப்பும் இருக்காது. பகல் நேரத்தில் இப்படி முண்டாசு கட்டிக்கொண்டு கிராமங்களுக்கு வருவார்கள், 4, 5 பேர்கள் கள்ளுக்கடை வைத்துக் கொண்டிருப்பவர்கள், இவர்கள் போலீஸ்காரர்கள் என்று ஒரு பண வர்த்தமானம் கொடுப்பார்கள். பல இடங்களில் அவர்கள் பூசைகூட வாங்கியிருப்பார்கள். அதை வெளியிலும் சொல்லமாட்டார்கள். இப்படி முண்டாசு கட்டிக்கொண்டு ஒரு ஆசாமி வந்தால், பாக்கிக்காக ஜப்தியோ, வாரண்டோ எடுத்துக்கொண்டு வருகிறவர், போலீஸ் ஜவான், என்று விவசாயிகள் பயப்படுகிற நிலைமையை உண்டாக்கிவிட்டு, அதே சமயத்தில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொன்னால் அதில் எப்படி நியாயம் இருக்க முடியும்? அநேக இடங்களில் இப்படி விவசாயிகளுக்கு எதிராக ஜப்தி, வாரண்டுகள் பெற்றிருக்கிறார்கள். விவசாயிகள் என்ஜினுக்காக பெற்ற கடன், பில்டர் பாயிண்டுடன் போர் வெல் (Bore-well) -க்காக ஏற்கனவே பெற்ற கடன், வட்டிக்கு வட்டி கொடுப்பதற்காக வாங்கிய கடன் இதையெல்லாம் திருப்பிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி அதிசயங்கள் ஏற்படுகின்றன. இந்த பாக்கியெல்லாம் கொடுத்து விட்டால், அவர்கள் கையில் எதுவும் இருக்க முடியாது. எனக்கு முன்பு பேசிய நண்பர் ஆடுதுறையில் பஞ்சம், மாயவரத்தில் பஞ்சம், பாக்கி ஊரில் தஞ்சை ஜில்லாவில் பஞ்சம் என்று சொன்னார்கள். பஞ்சம் இல்லை; அரிசி கிடைக்கிறது. ரொம்ப விலை ஜாஸ்தியாக இருக்கிறது. நியாய விலைக்கு விற்கப்படுவதற்காகத்தான் நாம் நியாய விலைக்கடைகள் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் விவசாயிகள் கையில் என்ன இருக்கும்? கூட்டுறவு முறையில் வாங்கிய கடன்களையெல்லாம் பழைய காலத்தில் அரிச் 1-00
சந்திரனை கிட்டிகட்டி வாங்கியதுபோல் வாங்கிவிடுகிறார்கள். p.m.
அநேக இடங்களில். மற்ற இடங்களிலும் இம்மாதிரி இத்தனை நாள் வாங்கியிருப்பார்கள் என்று நம்புகிறேன். இன்னொரு பெரிய விபரீதம் என்னவென்றால், மிராசுதார், அளந்த நெல்லுக்கு சீட்டுக் கொடுப்பதில்லை. சீட்டுக் கேட்டால், நிலத்தைப் பறித்துக் கொள்வார்களோ என்கிற சந்தேகம் விவசாயிகளுக்கு. கர்ணம் எழுதிவைத்ததுதான் சரி என்று ஆகிவிடும். 'கர்ணம் வைத்ததே கணக்கு, கதிரவன் உதித்ததே கிழக்கு' என்பது போல, கர்ணம் ரொம்ப புத்திசாலியாக, அதை எழுதுவதே இல்லை. இந்த சாகுபடிக் கணக்கை எழுத முடியாது என்று அவர்கள் கூட்டம் போட்டு

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [8th August 1966

தீர்மானம் கூட போட்டிருக்கிறார்கள். ஆகவே, இதை ப்ளாங்காகவே வைத்திருப்பார்கள். எப்பொழுதெல்லாம், யார் யாருக்கு வேண்டுமோ அந்த வகையில், தனக்கு நன்மை பயக்கும் வகையில், செய்துகொள்வார்கள். இந்த மாதிரிப் பல இடங்களில் அந்தக் காலம் ப்ளாங்காகவே வைக்கப்பட்டிருக்கும்.

காளி என்கிற ஊரில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர் தலையிட்டார். வருஷத்திற்கு 10 பேர்களையாவது வெளியேற்றி, மிராசுதார்கள் கொடுக்கும் சௌகரியங்களை ஏற்றுக்கொள்வது—இதுதான் அவருடைய வேலை. அவருடைய இந்த மாதிரியான செயலால் இரண்டு காங்கிரஸ்காரர்கள் கூட கைது செய்யப்பட்டு விட்டார்கள். முப்பது வருஷமாகத்தானே விவசாயம் செய்து வருகிறார் என்று ஊரார்எல்லாம் சொன்னாலும், எனக்குத் தெரிந்தவர்களெல்லாம் சொன்னாலும், இன்னும் கிராமத்துப் பொது மனிதர்கள் எல்லாம் சொன்னாலும், கர்ணம் ஒப்புக்கொள்ளவில்லை, அவர் கணக்கில் இல்லை, ஆகவே, 30 வருஷமாக அவர் சாகுபடி செய்திருந்தாலும், விசாரித்ததில் கர்ணம் கணக்கில் இல்லை, ஆகவே, அவனை வெளியேற்றவேண்டும் என்று, போலீஸ்காரர்களோடு சென்று, அந்த முரட்டு ஆளை வெளியேற்றி, அது சம்பந்தமாக பக்தவத்சலம் என்பவரும், வைத்தியநாதன் என்பவரும் கைது செய்யப்பட்டு, மாயவரத்தில் வைத்து, பின்பு ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். சட்டத்திலே, வேண்டும்போது சர்க்கார் தலையிடலாம் என்று இருப்பதால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர்க்கலாம்.

ஏப்ரல் மாதம் 20-ம் தேதியிலிருந்து சட்டம் அமலாக வேண்டுமென்பது எதற்காக என்று புரியவில்லை. இந்தச் சட்டம் அமலுக்கு வருகிறபோது எப்படியிருந்தாலும், இப்பொழுது பசலி முடிகிறபோது என்று திருத்தி, மார்ச் 31-ம் தேதி அல்லது ஏப்ரல் 1-ம் தேதி என்று போட்டால் நலமாக இருக்கும். அது உழவர்களுக்கும் நலம்.

திருவழுந்தூர் கோவிலில் உள்ள ட்ரஸ்டிகள் புண்ணிய புருஷர்கள். அவர்கள் இந்த அரிசனங்கள் நிலத்தைச் சாகுபடி செய்யக் கூடாது என்று கிட்டத்தட்ட 30 பேர்களை வெளியேற்றியிருக்கிறார்கள். வேறு மதத்தவர்கள்தான் சாமிக்கு நல்லவர்கள் என்று இவர்கள் நினைத்தார்களோ என்னவோ. துலுக்க நாச்சியார் என்று வைஷ்ணவர்களுக்குத் தெரியும். அந்த வகையில், சாகிப்புகள், ஜைனர்கள் இவர்களாகப் பார்த்து, உள்ளூர்க்காரர்கள் வேண்டாம் என்று தீர்மானித்து, பெருமாளைப் பார்க்காதவர்களாக யாராவது இருக்கிறவர்களைப் பார்த்து நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று இந்த உத்தம ட்ரஸ்டிகள் செய்திருக்கிறார்கள். (குறுக்கீடு) பெருமாள் என்ன செய்வார், அவர் படியை தலையில் வைத்துப் படுத்து விட்டார். "குணதிசை முடியை வைத்து, குடதிசைபாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டி, தென் திசை இலங்கை நோக்கி" படுத்துவிட்டார். அவர் படுத்ததன் காரணமாக, பெருமாளுடைய பிரதிநிதியாக டிரஸ்டிகள் செயல்பட்டார்கள்.



8th August 1966] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு]

சட்டத்தை ஏப்ரல் 1-ம் தேதி என்று ஏன் போடவில்லை என்று தெரியவில்லை. ஏப்ரல் 20-ம் தேதி எப்படி வந்தது என்றும் தெரியவில்லை. இந்தப் பாதுகாப்புச் சட்டத்திற்கு பசலி முடிவிலிருந்து அமல் நடத்தினால் சரியாக இருக்கும் என்று எனக்கு தோன்றுகிறது.

பல விவசாயிகள் பசலி முடியும் போது, பழைய பாக்கிக்கும், சேர்த்து எவிக்ட் செய்யப்படுகிறார்கள். அப்படிப்பட்ட கேசுகள் முன்சிப் கோர்ட்டில் இருக்கிறது. 'நாலுகால் கோமாரியும் ஒரு காலில் இறங்கிற்றாம்' என்கிற முறையில் இருக்கிறது நிலைமை. இந்த ஆண்டு பாக்கிக்காக மட்டும் அல்லாமல், சென்ற பசலி பாக்கிக்காகவும் வெளியேறாமல் இருக்கும் நிலையை உண்டு பண்ண வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது வேறு யாரோ சொல்லி வருகிற சட்டம் அல்ல. இது நம் கட்சியினுடைய நெடுநாளையக் கொள்கை. அரசாங்கத்தை நடத்தும் காங்கிரஸ் கட்சியின் நீண்டநாளைய நோக்கம். அது தொடர்ந்து நடக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் பாக்கியிருக்கிறது. யாரோ சொல்லி நாம் செய்வது ஒன்றும் இல்லை. இவர்கள் கட்சிகள் பிறப்பதற்கு முன்பே, 1947-48-லேயே கட்சிக்குள்ளேயே தீர்மானிக்கப்பட்ட விஷயம் இது. உழவனுக்கு நிலம் சொந்தம் என்று சொன்ன ஒரே மனிதர் மகாத்மா காந்தி. வெகுகாலம் வரை அந்த வார்த்தை கோஷம் ஆக இருந்தது. இப்பொழுது நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். நல்ல நல்ல சட்டங்கள் 13 கொண்டுவரப்பட்டன. இது 14-வது சட்டம். தேர்தலுக்காகச் செய்கிறோம் என்றார்கள். தேர்தலைப்பற்றியும் நினைக்க வேண்டும். இப்படிப்பட்ட நல்ல சட்டங்கள் இன்னும் செய்யவேண்டும். சிறிய மிராசுதார்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்றால் அளிக்க வேண்டும். அவர்களுடைய நிலையை சிந்தித்துப்பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும். எப்படியிருந்தாலும் இது ஒரு பிரமாதமான சட்டம். இன்றைக்கு அதன் பலன் தெரியாவிட்டாலும், நாளாக நாளாக அதன் பலன் தெரியும். இரண்டு வருஷத்திற்குப் பிறகு என்ன என்பதைப் பற்றி அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம். இரண்டு வருஷத்தில் சமுதாயம் முன்னேறியிருக்கும்; சட்டத்தை அப்பொழுது சமுதாயம் ஒத்துக்கொள்ளும்; அப்பொழுது நல்ல முடிவு செய்யலாம். இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிற சர்க்காருடைய நல்லெண்ணத்தைப் பாராட்டி, சில அவசியமான திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* திரு. கோ. சி. மணி : கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவின் பேரில், எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. மாதவன் அவர்கள் பேசிய நேரத்தில், இதில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள். உள்ளபடியே நல்ல அனுபவம் வாய்ந்த எங்கள்பகுதி அங்கத்தினர் திரு. நாயுடு அவர்கள், எங்களுக்கு ஏதோ சந்தேக வியாதி இருக்கிறது என்று சொல்லி, அவரே அப்படி ஒன்றும் இல்லை என்று விளக்கியும் இருக்கிறார்கள். உள்ளபடியே அதற்கு

நன்றி தெரிவிக்கிறேன். அப்படி சந்தேக வியாதி இருக்குமேயானால், அது சர்க்காரிடத்தில் இருக்கும் சூது வியாதி மறையும் வரையில், இந்த சந்தேக வியாதியும் இருக்கும். அதற்குக் காரணம், சட்டங்களிலே இருக்கிற பல குறைகளைச் சொல்லுகிறோம். அதே நேரத்திலே வேறொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் எப்படி வளர்ந்தோம் என்று . . . . .

கனம் திரு. வெ. ராமையா : மசோதாவைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. கோ. சி. மணி : அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். அதனால்தான் நான் அதைப்பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம் என்றால், நாங்கள் சமீபத்தில் பிறந்திருக்கக் கூடாது என்பதல்ல. அரசாங்கம் கொண்டு வருகிற மசோதாக்களைப் பரிசீலித்து, சந்தேகக் கண்ணோடோ அல்லது நல்ல கண்ணோடோ, இருக்கும் குறைபாடுகளைச் சொல்வது எங்கள் கடமை. எல்லாவற்றையுமே தேவையில்லாதது என்றோ, அநியாயமானது என்றோ, நாங்கள் சொல்லவில்லை. இன்னின்ன குறைகள் இருக்கின்றன, அதில் இருக்கும் குறைகளை நீக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படிச் சொல்வதுகூடக் குற்றமா என்று தெரியவில்லை.

சாதாரணமாகப் பார்க்கும்போது, உழுது, உழுது பயிரிடும் விவசாயியின் மகசூல் ஜப்தி செய்யப் பட்டு, அவன் விதை, தகசுூலி ஃபர்ஸ்ட் க்ராப், ஸெகண்ட் க்ராப் எல்லாவற்றையும், அட்டாச் பண்ணி, அவன் அவதிப்படும் நிலைமைதான் இருக்கிறது. வெளியேற்றிவிட்டாலும், வேறு வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம். உழுது உழுது அவன் கொடுக்க வேண்டிய பாக்கியும் டிக்ரி ஆகி, மகசூலில் 60 சதவிகிதம் என்று சொல்லியும், 40 சதவிகிதம் வாங்கிக் கொள்ளும் மிராசுதார் அவனுடைய விதை, தசுகூலி எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அவன் சந்தி சிரிக்கும் அளவுக்குத்தான் சட்டம் அமைகிறது. ஆகவே, தயவுசெய்து, இதில் கட்சி மாச்சரியம் வேண்டிய அவசியம் இல்லை. வந்திருக்கும் சட்டத்தைப் பாராட்டுகிறேன். ஆனாலும் குறையிருக்கிறது. ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். சாதாரணமாக அனுபவம் இல்லாமல் கொடுக்கவில்லை. பாக்கியிருக்கிறது. ஒரே நாளில் முன்சீப் கோர்ட்டிலே டிக்ரி ஆகிவிடுகிறது. லீஸ்டீட் இருக்கிறது, கொடுக்கவில்லை என்பது ப்ரூஃப் ஆகிவிடுகிறது. உடனே டிக்ரி. அதை நிறைவேற்ற கையில் வைத்துக்கொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் மூன்று மாதத்தில் குறுவை அறுவடை ஆகவேண்டியதுதான்; அந்த டைம் பார்த்து, வசூல் செய்யப் புறப்பட்டுப் போகிறார்கள். பாதுகாப்புக் கொடுத்து என்ன புண்ணியம்? பழைய பகுதியையெல்லாம் கூடச் சேர்த்து வசூலிக்கிற கதைதான் வருகிறது. நான் கொடுத்திருக்கும் திருத்தத்திலே அதைத்தான் சொல்லியிருக்கிறேன். அந்த அளவிற்குச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர, வேறு கண்ணோட்டம் இல்லை. நாங்கள் திருத்தம் கொண்டுவந்து, அதை





அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுவதால், எங்களுக்கு ஏதோ நல்ல பெயர் வந்துவிடும், தேர்தல், அது இது என்று மனத்திலே வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் கவலைப்பட வேண்டாம். அரசாங்கமே சட்டத்தை உரிய முறையில் மாற்றிக் கொள்ளுகிறோம் என்று 'அஷ்யூரன்ஸ்' தந்துவிட்டால், என்னுடைய திருத்தத்தை நான் வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதிலே பார்க்கவேண்டியது இந்தக் கட்சியா, அந்தக் கட்சியா என்பது இல்லை. இந்தச் சட்டம் வருவதற்கே முக்கிய நோக்கம், மனைக்கட்டை விட்டு சாகுபடியாளர்கள் வெளியேற்றப்படக் கூடாது என்பதுதான். கனம் உறுப்பினர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, ஏற்கனவே 13 சட்டங்கள் இந்த வகையில் கொண்டுவந்திருக்கிறோம், இப்பொழுது கொண்டு வருவது 14-வது சட்டம் என்று சொன்னார்கள். இந்தச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதன் நோக்கம் விவசாயிகளாக இருந்தால் அவர்கள் வைத்திருக்கும் மனைக்கட்டுகளிலிருந்தும், உழும் நிலங்களிலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்படக் கூடாது என்பதுதான். இத்தனை சட்டம் வைத்திருந்தும், இருபது, முப்பது வருஷங்களாகப் பகுதி வாங்காமலிருந்து விட்டு, இப்பொழுது மட்டும் பகுதி வாங்குவதென்றால் அது மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதாகும். தேவஸ்தான நிலம், மடங்களின் நிலம் இவற்றைப் பொறுத்து உள்ள பகுதியையெல்லாம் பல வருஷங்களுக்குச் சேர்த்து, ஐந்து தினங்களுக்குள் கட்ட வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்து, இன்ன இன்ன தேதியிலிருந்து இவ்வளவு பகுதி கொடுக்கவேண்டும் என்று பத்து, ஐந்து, எட்டு என்று போடப் போவதாக இருந்தால் மறுபடியும் இப்படிப் பட்ட சட்டம் கொண்டுவரவேண்டியதில்லை. கொண்டுவந்திருக்கிற சட்டத்தைச் சரியாகச் செய்யவேண்டும். பாதிக் கிணறு தாண்டுகிற கதையாக இருந்தால் பல் உடைபட்டுவிடும். பாதிக் கிணறு தாண்டுகிற முயற்சியைச் சர்க்கார் தயவு செய்து விட்டு விட்டு முழுதாகத் தாண்டவேண்டும். இல்லையென்றால், முழுப் பலன் ஏற்படாது. இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கவில்லை. சட்டத்தின் நோக்கமே விவசாயிகளைப் பாதுகாப்பதற்காகத்தான் என்று சொல்லுவதற்குப் பயன்படுமேயல்லாது, எழுதிக் காட்டுவதற்குப் பயன்படுமே அல்லாது, உள்ளபடியே நோக்கம் நிறைவேறுமா என்றால், நோக்கம் கொஞ்சமும் நிறைவேறாது என்று நான் தாழ்மையாகச் சொல்லுகிறேன். இந்தச் சட்டத்தில் அவ்வளவு ஓட்டைகள் இருக்கின்றன. பழைய சட்டங்களைவிட இது மிகவும் ஆபத்தானது. இதை நிறைவேற்றுவதற்கு முன்பு, இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அரியர்ஸை வசூலிப்பதற்காக என்று எந்தக் கோர்ட்டில் பெட்டிஷன்கள் இருந்தாலும், அவற்றையெல்லாம் 'ஸ்டே' செய்து விடவேண்டும். அந்த அளவுக்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. கோ. சி. மணி] [8th August 1966

கனம் உறுப்பினர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசும் போது, இந்தச் சட்டத்தை ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து அமலுக்கு வந்ததாகக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்கள். அதை மார்ச்சிலிருந்து ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் வரும்படியாகச் செய்தால், ஓரளவு நிரந்தரமாக இருக்கும். இதைச் சொன்னவர் தி.மு.க. உறுப்பினரா, ஆகவே, அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் கருதி ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். இத்தனை சட்டங்கள் செய்து நாட்டில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளித்துவிட்டோம் என்று சொன்னாலும், இப்பொழுது கொண்டு வந்திருக்கும் சட்டத்தால் நிச்சயம் பலன் ஏற்படாது. நாங்கள் எதைச் சொன்னாலும், அதை எண்ணிக்கை பலத்தைக்கொண்டு ஆளும் கட்சியினர் மறுத்துவிடலாம் என்றாலும், நான் பின்னால் கொண்டுவர இருக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிவில் கோர்ட் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லாத வகையில் இந்தச் சட்டம் திருத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Deputy Speaker, I welcome the Bill which is before this House for consideration. It is a fact that the cultivating tenant is protected from eviction. At the same time I would request the Government to consider whether they could not give some protection in the matter of recovery of rent also, and whether any reliefs could not be given as far as the previous falsi is concerned because there have been no crops and the Government themselves have accepted that there have been drought and adverse seasonal conditions. The prevalence of drought conditions is itself the reason why the Government have come forward with this Bill. Whenever there is a drought, remission of land revenue used to be given. The Hon. Minister may say that there are other steps for the landlord to take to get remission. I would respectfully submit to the Government that the Revenue Department has completely lost sight of the adangal particulars. No azmoish is being done. Jamabandies are held, but no jamabandi officer goes and verifies the actual cultivation position. When there were adverse seasonal conditions, I have written to the Government to ask the Revenue Department officers to look into the condition of the produce and grant remission. The Government have appointed the District Revenue Officers. But they do not look into the azmoish and over azmoish. That is the position. If the Government feel that there have been drought conditions, remission should have been granted.

The Government have come forward to protect the tenant. The position of both the tenant as well as the landlord should be sympathetically considered. There have been a number of instances where the tenant has been giving trouble persistently to the landlord by not paying the rent due to him. The landlord has to go to a court of law to recover the rent due to him. In this, the Revenue



8th August 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

Divisional Officer is authorised to evict, and an appeal lies only to the High Court. The Government could consider whether the appeal should not lie to the District Court itself.

In conclusion, I request the Government to consider whether any relief in recovery by postponement cannot be granted in portion to the extent to which there has been failure of crops as assessed by the Revenue authorities. With these words I commend the Bill.

திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு 1966-ம் ஆண்டு சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு) மசோதாவை ஆதரிக்கிறேன். சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும். அந்தப் பாராட்டுதலுக்கு அவர்கள் உரியவர்கள் என்பதை யாரும் மறுக்க இயலாது. எனக்கு முன்பே பேசிய மாயவரம் கனம் அங்கத்தினர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் சொன்னதுபோல், ஏப்ரல் 20-ந் தேதிக்குப் பிறகு என்றிருப்பதை, அதற்கு முன்னாலே தள்ளிவிட்டால், இடைக்காலத்தில் வெளியேற்றப்படுகிறவர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு இருக்கும். ஆகவே, இது வரவேற்கத்தக்கது. ஏனென்றால், 20-ந் தேதிக்குப் பிறகு இருக்கிறவர்களுக்கு ஒரு சலுகையும், அதற்கு முன்னால் இருக்கிறவர்களுக்கு அந்தச் சலுகை இல்லாமல் போவதுமான நிலைமை இருப்பது அவ்வளவு சிறப்பாக இருக்காது. 1968-ம் ஆண்டு வரையில் அவர்களுக்குப் பாதுகாப்பு தருகிறோம். 1968-ம் ஆண்டு முடிந்தவுடனே, இந்த இரண்டு வருஷங்களுக்கான அரியர்ஸைச் சேர்த்துக் கூட்டிப்போட்டு, எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாகக் கட்டு என்று விவசாயிகளிடம் சொன்னால், அது சாகுபடியாளர்களுக்குக் கஷ்டம் தரக்கூடியதாக இருக்கும். அதையும் அரசாங்கம் யோசிக்கவேண்டும். காத்திருந்துவிட்டு, எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு, ஒரே நாளில் அரியர்ஸைக் கட்டித் தீரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரு வருஷ அரியர்ஸையே கட்ட முடியாதவர்கள் 1966-லிருந்து 1968 வரை உள்ள அரியர்ஸையும், அதற்கு முன்னுள்ள அரியர்ஸையும் கட்டவேண்டும் என்றால், அவர்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகையால், 1968-க்குப் பிறகு ஏதாவது அரியர்ஸ் இருந்தால், அதை இன்ஸ்டால்மென்டில் கலெக்ட் செய்ய முடியுமா என்று யோசித்து, இந்தச் சட்டத்தில் அவ்வாறு இடம் கொடுத்துவிட்டால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்தபடியாக, கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் சொன்னது மாதிரி, ஏதாவது அரியர்ஸ் ஆப் ரென்டை சிவில் கோர்ட் மூலமாக வசூலிப்பதற்கு நிலச் சொந்தக்காரர்கள் முன் வந்தால், அதற்கும் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் யோசிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். வலது கையால் கொடுத்த தருமத்தை இடது கையால் பறிப்பது போல் இருக்கக்கூடாது.

[திருமதி டி. என். அனந்தநாயகி] [8th August 1966

இவ்வளவு பாதுகாப்பு கொடுத்துவிட்டு, அதில் இப்படி இருப்பதற்கு ஏதாவது காரணம் அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும். அதைப்பற்றி அரசாங்கம் உணர்ந்து பார்த்தே ஒரு முடிவுக்கு வந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சூழ்நிலை நமக்கு விளங்கக்கூடும். அரசாங்கத்தின் நல்ல எண்ணத்தை யாரும் தவறாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் ஆர்டினன்ஸ் அரசாங்கம் பிறப்பித்தார்கள். 'தேர்தல் ஸ்டண்ட்' என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் சொல்லலாம். நாங்களா மழை பெய்ய வேண்டாம் என்று சொன்னோம்? பஞ்சம் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டு இந்தச் சட்டத்தை நாங்கள் கொண்டு வந்தோம் என்று எதிர்க் கட்சியினர் சொல்வது மாபெரும் தவறு. எல்லாவற்றையும் தேர்தல் ஸ்டண்ட் என்று அவர்கள் சொல்வார்களானால், அவர்கள் தான் தேர்தலை நினைத்துக்கொண்டு இப்படியெல்லாம் சொல்லுகிறார்களோ என்று நாம் பரிதாபப்பட வேண்டும். கால நிலையையொட்டி, இன்றைக்குள்ள சூழ்நிலையைச் சமாளிக்க அரசாங்கம் என்றைக்கும் தயங்காது. அரசாங்கம் கொண்டுவந்த இந்தச் சட்டத்தைக் குறித்து சாகுபடியாளர் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், இன்னும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் அரசாங்கம் தீர்க்கும் வகையில் சிந்தித்துப் பரிகாரம் காண்பது வரவேற்கத்தக்கது. அதைச் செய்வார்களானால், சாகுபடியாளர்களுக்குப் பெரிய சலுகை செய்தவர்கள் என்ற பெயருக்கு ஆளாவோம். இந்த நல்ல கருத்தினைக்கொண்ட சட்டத்தைக் கொண்டு வந்த அமைச்சர் அவர்களைப் பாராட்டி என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது சபை முன்பு வைத்திருக்கக்கூடிய மசோதா எந்தத் தன்மையில் அமைந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ நிலச் சீர்திருத்தச் சட்டங்களைப் போல இதையும் சேர்த்து அவற்றோடு கொண்டு வந்திருப்பதாக இதைச் சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். கடந்த வருஷத்தில் நம் ராஜ்யம் பூராவும் ஒரு பரவலான வரட்சி நிலைமை இருந்தது. பருவ நிலை சரியாக இல்லை. அதிலும் விசேஷமாக தஞ்சாவூர் ஜில்லாவைப் பொருத்தவரையில் போதுமான மழை இல்லை. காவேரியிலும் தண்ணீர் வரவில்லை. அந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்து பார்த்தபோது விவசாயிகளுடைய பிரதிநிதிகள், மற்றவர்கள் எல்லாம் வந்து சொன்னார்கள். அரசாங்கப் பிரதிநிதிகளும் சொன்னார்கள். நிலத்தில் இருந்து குடியானவர்கள் வெளியேற்றப்படாமல் பாதுகாப்பு அளிக்க மற்ற சட்டங்கள் இருக்கின்றன என்றாலும், இந்த வருடத்தில் பரவலாக பருவ மழைக்கோளாறினால் ஏற்பட்டுள்ள நிலைமையை உத்தேசித்து



8th August 1966] [திரு. வெ. ராமைய்யா]

விசேஷமாக சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்றார்கள். இந்த வருஷம் விவசாயிகளுக்கு ஏராளமான செலவு, கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தனித்தனியாக ஒவ்வொரு குடியானவர்களும் கோர்ட்டுக்குப்போய் தாங்கள் இவ்வருஷத்திய பாக்கிக்காக நிலத்தில் இருந்து வெளியேற்றப்படாதிருக்கப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளவேண்டும் என்பது இல்லாமல் இருக்கத்தான் அரசாங்கம் இதுபோன்ற ஒரு விசேஷ சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. கனம் அங்கத்தினர் சிரஞ்சீவுலு நாயுடு குறிப்பிட்டதுபோல நிலச்சொந்தக்காரர்களுக்கும் பருவக் கோளாறினால் ஏற்பட்ட கஷ்டத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இந்த வருஷத்திற்கு இதுபோன்ற ஒரு விசேஷ ஏற்பாடு தேவையாக இருந்தது. ஏதோ ஒரு பகுதியில் ஏற்பட்டதற்கு இப்படிக் கொண்டுவருவானேன் என்று சொல்ல முடியாது. முந்தின வருஷம் திருநெல்வேலி ஜில்லாவில் பருவக் கோளாறு ஏற்பட்டது. நாம் கொண்டுவரவில்லை. ஆனால், இந்த வருஷம் ராஜ்யம் பூராவும் பரவலாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவுகளை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆகவே, இந்த வருட பாக்கிக்காக நிலத்தில் இருந்து யாரும் வெளியேற்றப்படக்கூடாது என்பதற்காக இதுபோன்ற ஒரு சட்டத்தை அரசாங்கமே முன்வந்து கொண்டுவர வேண்டியதாக ஏற்பட்டது. அடுத்து ஒரு பருவ காலத்திற்குப் பாதுகாப்பு இருந்தால் போதும். எதற்கும் பாதுகாப்பாக இருக்கட்டும் என்பதாக இரண்டு வருஷம் போட்டிருக்கிறோம். ஆகையால் தான் நான் உறுதியான முறையில் சொல்ல முடியும். யார் யாருக்குப் பாதுகாப்பு தேவையோ அவர்கள் இந்தச் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் இது ஒரு விசேஷச் சட்டம் என்பதை உணரவில்லை. ஏதோ 13—வது சட்டத்தோடு 14-வது சட்டம் என்பதாக நினைத்துப் பேசினார்கள். இல்லை என்றால் அவர் சொன்ன வாதங்களுக்கு இதில் இடமே இல்லை. இதைத் தேர்தல் ஸ்டன்ட் என்பதாக எல்லாம் வருணித்திருக்க அவசியம் இல்லை. தேர்தலுக்கும், இந்தச் சட்டத்திற்கும் சம்பந்தமே இல்லை. பாதுகாக்கப்படவேண்டிய விவசாயிகள் நிச்சயமாக இந்தச் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்வேன்.

கனம் உறுப்பினர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் இதை இரண்டு வருஷங்களுக்கு ஒத்திவைப்பானேன். ஒரேயடியாக வைத்துவிடலாமே என்றார்கள். இந்த வருஷமே நிலைமை சீர்திருந்திவிடும் என்று நினைக்கிறேன். காவேரியில் ஜலம் வந்துவிட்டது. இதுபோன்ற அவசரச் சட்டத்திற்கே இனி இடம் இல்லாமல் இருக்கவேண்டுமென்று அவரும் வேண்டிக்கொள்ள வேண்டும். நானும் வேண்டிக்கொள்கிறேன். அத்தகைய சூழ்நிலையே நமக்குத் தேவையில்லை. கடந்த பருவ காலத்தில் ஏற்பட்ட சோதனையின் விளைவாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட வேதனையைக் கொஞ்சம் உடனடியாகக் குறைப்பதற்காகத்தான்

[திரு. வெ. ராமையா] [8th August 1966

அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இதற்கு எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாக நான் வேண்டிக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : தலைவர் அவர்களே, இரண்டு வருஷங்களுக்குப் பின்னால் இந்த வரி பாக்கியை வசூல் செய்யப் போகிறார்களா ? அல்லது வஜா செய்யப் போகிறார்களா ? அதைக் கிளாரிஃபை செய்யவேண்டும்.

கனம் திரு. வெ. ராமையா : அதற்கு இப்போதே சட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையில் நடந்துகொள்வார்கள்.

திரு. கோ. நாராயணசாமி நாயுடு : இந்தச் சட்டத்திற்கு ஏப்ரல் 20-ம் தேதி என்பதற்குப் பதிலாக ஏப்ரல் முதல் தேதி என்றே ஆயுள் கொடுக்கலாம். பத்து இருபது நாட்களில் ஒன்றும் வந்து விடாது என்று நினைக்கிறேன்

கனம் திரு. வெ. ராமையா : இந்தத் தேதியைப் பொறுத்த வரையில் பலவிதமான விவரங்களையும் சேகரம் பண்ணித்தான் நிர்ணயித்திருக்கிறோம்.

MR. DEPUTY SPEAKER : The question is —

'That the Madras Cultivating Tenants (Protection from Eviction) Bill, 1966 be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause 2.*

MR. DEPUTY SPEAKER : The question is —

'That clause 2 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :—

'In sub-clause (a) of clause 2, after item (ii), add the following as item (iii) :—

" (iii) a cultivating tenant as defined in sub-clause (*b*) of clause (1) of Section 2 of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956) and ". '

SRI S. ARUMUGAM : Sir, I second it.

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

*Clause 3.*

MR. DEPUTY SPEAKER : The question is-

'That clause 3 do stand part of the Bill.'



8th August 1966]

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :—

'Add the following as item (iv) at the end of clause 3 :—

" (iv) no suit for the recovery of arrears of rent shall be instituted, no application for the execution of a decree for payment of money passed in a suit for the recovery of arrears of rent shall be made against a cultivating tenant in any civil or revenue court.

*Explanation.*—A suit shall be deemed to be a suit for the recovery of arrears of rent notwithstanding that other reliefs are prayed for in such suit and a decree shall be deemed to be a decree for payment of money passed in such suit notwithstanding that other reliefs are granted by such decree :

Provided that a suit for possession of land shall not be deemed to be a suit for recovery of arrears of rent by reason merely of mesne profits being also prayed for in such sut ".'

SRI S. ARUMUGHAM : Sir, I second it.

திரு. செ. மாதவன் : கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப்பற்றி ஏற்கனவே பேசியாகிவிட்டது. அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது இது ஒரு நடைமுறைச் சட்டம், மற்ற சட்டங்களைப் போல நிரந்தரத்தன்மை வாய்ந்தது அல்ல என்று குறிப்பிட்டார்கள். அதைத்தான் நாங்களும் திருப்பித் திருப்பிச் சொல்கிறோம்.'It is only for a short period '. இதனால் விவசாயிகளுக்கு நாம் எத்தகைய அனுகூலத்தை ஏற்படுத்த நினைக்கிறோமோ, அதை ஏற்படுத்த முடியாது. நான் சொன்ன கருத்தை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அத்தனை பேரும் ஆதரித்தார்கள். ஆனால் ரெவின்யூ அமைச்சரிடம் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லவில்லை. நான் பேசும்போது உள்துறை அமைச்சர் அவர்கள் கூட ஆதரவாகச் சிரித்தார்கள். அவர் குடிசைவாழ் பகுதியில் இருந்து வந்துள்ளவர். அவருக்கு நான் சொல்வதை உணர்ந்துகொள்ள முடியும் இந்தச் சட்டத்தில் உள்ள அனுமலி இதுதான். திரு. கோசல்ராம் அவர்களும் கூட வற்புறுத்திச் சொன்னார்கள். 1375 ஆம் பசலிக்கு பாக்கி இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இரண்டாண்டுக்குப் பிறகு என்ன ஆவது ? அந்தப் பாக்கியைக் காட்டியே அவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்ற இப்போதுள்ள சட்டப்படி இடம் கொடுத்து விடுகிறது. அப்போது அது பாக்கி 'It is called arrears'. ஆகவே, அந்த விவசாயியை நிலத்தில் இருந்து வெளியேற்ற That will be a ground for eviction. அத்தகைய அனுமலி இந்தச் சட்டத்தில் இருக்கிறது. கேஸ் ஃபார் எவிக்ஷனுக்கு எங்கும் போக வேண்டியதில்லை. இந்த பாக்கியே போதும். இந்தச் சட்டத்தில் அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அவசரம் அவசரமாக டிராப்ட் செய்திருக்கிறார்கள். அரைகுறை

யாகச் செய்திருக்கிறார்கள். அதைத் திரு. கோசல்ராம் அவர்களே எடுத்துக் காண்பித்தார்கள். ஆகவே எனது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1-30 p.m. **திரு. கே. டி. கோசல்ராம:** கனம் உதவிசபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு ஏற்கனவே சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே சட்டத்தில் இருக்கக்கூடிய அரியர்ஸ் இருக்கக்கூடியவர்களுக்கு அவர்களைக் கோர்ட்டில் சூட் ஃபைல் பண்ணி எவிக்ட் பண்ணலாம் என்று இருக்கிறது. அரசாங்கத்தினுடைய நோக்கம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்பதுதான். அந்த நோக்கத்திற்கு மாசு கற்பிக்க முடியாது. ஆகவே ரூல் மேக்கிங் பவர்ஸை உபயோகப்படுத்தியாவது அவர்களுக்கு ரெமிஷன் கொடுப்பதற்கு எப்படி எப்படியெல்லாம் ரூல்ஸ் போடலாமோ, அப்படிச் செய்தால், அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதை அரசாங்கத்திற்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் கோசல்ராம் அவர்கள் குறிக்கிட்டதனால் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பருவ நிலைமை சரியில்லாமல், விளைச்சல் இல்லாத இடங்களிலே தான் அப்படிக் கொடுக்கப்படும். விளைந்தாலும் விளையாவிட்டாலும் எல்லாவற்றிற்கும் ரெமிஷன் கொடுக்க வேண்டுமென்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். இப்பொழுது அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுத்தான் இருக்கிறது. நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், அவர்களுடைய ப்ரொட்டக்ஷனுக்குத் தாமதமாக இருக்கும் என்பதற்காகத் தான் இந்த ப்ரொட்டக்ஷன் இப்பொழுது கொடுத்திருக்கிறோம். மற்றபடி சொல்லக்கூடிய சர்ச்சைகளுக்கு எல்லாம் இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்திலேயே பாதுகாப்பு இருக்கிறது. மேலும் பாதுகாப்புக் கொடுப்பதற்குக் கோர்ட்டுகள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி:** கனம் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இருதரப்பிலும் கேட்ட கேள்விகள் சில யோசனைகள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே பதிலாக நடைமுறையில் சட்டத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூடாது என்று ஏற்கனவே சட்டம் இருக்கிறது. இருந்தாலும் முக்கியப் பிரச்னையாக இருப்பது விளைச்சல் கணக்குத்தான். இரண்டு வருஷம் கழித்து என்ன பண்ணுவது, மூன்று வருஷம் கழித்து என்ன பண்ணுவது என்று அதனால்தான் இப்பொழுதே பார்க்கிறோம். மகசூல் கணக்கில் எவ்வளவு சதவிதம் விளையவில்லையென்றும், சுத்தமாக எவ்வளவு விளையவில்லையென்றும் கணக்குகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கும். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால்



என்ன என்ன தாலுகாகளில் பஞ்சம், எங்கெங்கே தண்ணீர் வாராததினால் விளைச்சல் குறைந்திருக்கிறது, விளைச்சல் இல்லை என்ற கணக்கு அரசாங்கத்திற்குத் தெரியும். விளைவிலே குறைவு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தாலே எத்தனை சதவிதம் எங்கெங்கே விளைச்சல் குறைந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அங்கங்கே மொத்த விளைவிலே 40 சதவிதம் அல்லது 60 சதவிதம் கணக்கை வைத்து ரெமிஷன் கொடுத்தால், அவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** முக்கியமாக நான் ஒன்றும் பதில் சொல்வதற்கு இல்லை. எத்தனை சதவிதம் விளைந்தது, எந்தப் பகுதிகளில் விளைவு இல்லை என்பதற்கெல்லாம் அங்கங்கே கணக்கு இருக்கிறது. அவர்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். மொத்தமாக எல்லாவற்றிலும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்வதற்கே இடமில்லை.

**திரு. கோ. சி. மணி:** இப்பொழுது சட்டமிருந்தாலும் இதனால் பெருவாரியாக கோர்ட்டில் செலவு ஆவதால், அப்படி செலவு ஏற்படக்கூடாது என்பதால்தான், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். விளைந்ததா, விளையவில்லையா, எவ்வளவு விளைந்தது, வில்லேஜ் பூராவும் விளைந்ததா? தாலுகா பூராவும் விளைந்ததா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் தகராறுகள் வரும். ஆகவே, அதுமாதிரிச் செய்யாமல் சர்க்காரே அதைச் செய்வதற்கு முன்வரலாம் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

The amendment was put and lost.

Clause 3 was put and carried.

MR. DEPUTY SPEAKER: Now it is 1-30 p.m. Shall we continue the consideration of the remaining clauses by sitting for some more time.

THE HON. SRI V. RAMAIAH: Yes, Sir.

*Clause 4.*

MR. DEPUTY SPEAKER: The question is—

"That clause 4 do stand part of the Bill"

SRI K. S. MANI: Sir, I move—

'Substitute the following for the existing clause 4—

"4. Stay of applications and suits for eviction and for recovery of arreas of rent.—(a) All applications under the Tenants' Protection Act or under Chapter III of the Public Trusts Act and all suits, proceedings in execution of decrees or orders and other proceedings for the eviction of a cultivating tenant on the ground that he is in arrear with respect to the rent payable to the landlord or the public trust as the case may be,

[Sri K. S. Mani] [8th August 1966

(b) all suits for the recovery of arrears of rent and all applications for the execution of decrees for payment of money passed in suits for the recovery of arrears of rent and pending before a Revenue Divisional Officer, authorized officer, court of other authority as the case may be,

shall stand stayed." '

SRI S. MURUGAIYAN : I second the amendment.

The amendment was put and lost.

Clause 4 was put and carried.

Clauses 5 to 8 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

'That the Madras Cultivating Tenants (Protection from Eviction) Bill, 1966, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER : The next Bill on the agenda is the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966. Sri A. G. Balakrishnan has given notice of an amendment to it. He has informed me that he has to go away and has gone out. Hence, the Bill may be taken up to-morrow.

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-36 p.m. The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 98. *Notification issued with G.O. Ms. No. 1854, Home, dated the 6th June 1966 making certain amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published with Home Department Notification S.R.O. No. A-291 of 1960, dated the 18th August 1960, at pages 3–121 of the Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the 14th September 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*



8th August 1966]

* 99. *Notification issued with G.O. Ms. No. 1103, Revenue, dated the 4th April 1966 regarding the exemption granted to Sri Nemili Alavandar Naicker Charities, Mahabalipuram, Chingleput taluk and district to enable the trustees to draw travelling allowance and dearness allowance from the funds of the institution for attending the meeting of the Board of Trustees or other purposes of administration of the said charities. [Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act XXII of 1959).]*

* 100. *Notification issued with G.O. Ms. No. 1795, Revenue, dated the 23rd May 1966 appointing certain persons as members of the Area Committee, Ramanathapuram. [Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act XXII of 1959).]*

* 101. *Notification issued with G.O. Ms. No. 1797, Revenue, dated the 23rd May 1966 appointing certain persons as members of the Area Committee, Madurai. [Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act XXII of 1959).]*

* 102. *Notification issued with G.O. Ms. No. 1429, Home, dated the 3rd May 1966 making an amendment to the Home Department Notification II-1 No. 1657 of 1961, dated the 6th April 1961, published at page 544 of Part II-Section 1 of the* Fort St. George Gazette, *dated the 19th April 1961. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

* 103. *Notification issued with G.O. Ms. No. 1513, Home, dated the 10th May 1966 exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, in respect of Morris 10 van gifted to the Blue Cross of India, Madras, from the date on which the vehicle was put on road and for so long as it is used as a mobile dispensary and ambulance for animals. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

104. *Notification issued with G.O. Ms. No. 1215, Rural Development and Local Administration, dated the 11th May 1966 regarding the alteration of the name of the Municipality of Allinagaram in Madurai district as the Municipality of Theni. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

105. *Notification issued with G.O. Ms. No. 1699, Rural Development and Local Administration, dated the 12th July 1966 regarding the dissolution of the Sedapatti Panchayat Union Council with effect on and from the 15th July 1966 and its reconstitution with effect on and from the 15th July 1967. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

## B. Reports, Notifications and other Papers.

23. *Notification issued with G.O. Ms. No.* 1934, *Industries, Labour and Housing* (*Labour*), *dated the* 26*th April* 1966 *making an amendment to the Madras Payment of Wages Rules*, 1937, *published with late Development Department Notification No.* 133, *dated the* 20*th February* 1937, *at pages* 356–359 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 23*rd February* 1937, *as subsequently amended, the same having been previously published as required by sub-section* (5) *of section* 26 *of the Payment of Wages Act*, 1936 (*Central Act IV of* 1936).]

† 24. *The Madras Motor Vehicles* (*Taxation of Passengers and Goods*) *Amendment Bill*, 1966 (*L.A. Bill No.* 13 *of* 1966) *with Annexure*.

* Placed on the Table of the house on 6th August 1966.
† Despatched to Members on 5th August 1966.



## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 194 at page 3.]

STATEMENT.

| Name of the district. | Loan granted for starting alternative industry. Number of persons who have applied for changing the industries from the one for which the loan was originally granted. | Action taken on the applications. | Loan granted for starting alternative trades. Number of persons who have applied for changing the trade from the one for which the loan was originally granted. | Action taken on the above applications. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| Madras .. | Nil. | Nil. | 81 | All the 81 persons have been permitted to change the trades. |
| Chingleput .. | Nil. | Nil. | 65 | All have been permitted to change the trade. |
| Salem .. | Nil. | Nil. | 53 | All the cases are under inspection. Action will be taken by the Assistant Director on receipt of inspection reports from the Special Revenue Inspectors. |
| Dharmapuri .. | 3 | Action is being taken by the Assistant Director to ratify the action of the 3 persons. | 80 | All the 80 persons have been permitted to change the trade. |

| Name of the district. (1) | Loan granted for starting alternative industry. Number of persons who have applied for changing the industries from the one for which the loan was originally granted. (2) | Loan granted for starting alternative industry. Action taken on the applications. (3) | Loan granted for starting alternative trades. Number of persons who have applied for changing the trade from the one for which the loan was originally granted. (4) | Loan granted for starting alternative trades. Action taken on the above application. (5) |
|---|---|---|---|---|
| South Arcot .. | Nil. | Nil. | 550 | All the persons have been granted permission to change the trade. |
| North Arcot .. | 15 | 15 persons to whom loans were granted for starting alternative industry have requested permission to run alternative trades. The Assistant Director has already been instructed that he may issue necessary amendment to the original order treating the loan as having been granted for starting alternative trade provided he is satisfied that the borrower is running the trade satisfactorily. | 79 | The Assistant Director is considering the requests of the goldsmith for approval of the change in the trades and the change will be approved by him, if the displaced goldsmiths are found to be conducting any of the authorized trades satisfactorily. |
| Coimbatore .. | Nil. | Nil. | 54 | Change of trade in all the 54 cases have been permitted. |
| Thanjavur .. | Nil. | .... | Nil. | .... |
| Tiruchirappalli .. | Nil. | .... | Nil. | .... |
| Madurai .. | 2 | The requests of the borrowers have been complied with and revised proceedings have been issued. | 699 | Change of trade has been permitted in all the 699 cases. |
| Ramanathapuram .. | Nil. | .... | Nil. | .... |
| Kanyakumari .. | 1 | Loan in this case was granted under State Aid to Industries Act, for starting Agricultural Implements Industries. His request for starting a coffee hotel was rejected. | 17 | All were permitted to run the trades requested for by them. |
| Tirunelveli .. | 1 | A loan of Rs. 2,000 was granted for starting an iron articles industry, | 28 | Change of trade has been permitted in all the 28 cases. |

| Name of the district. (1) | Loan granted for starting alternative industry. Number of persons Who have applied for changing the industries from the one for which the loan was originally granted. (2) | Loan granted for starting alternative industry. Action taken on the applications. (3) | Loan granted for starting alternative trades. Number of persons who have applied for changing the trade from the one for which the loan was originally granted. (4) | Loan granted for starting alternative trades. Action taken n the above applications. (5) |
|---|---|---|---|---|
| The Nilgiris .. | Nil. | whereas the borrower has utilised the loan for running a grocery shop. Show cause notice is being issued to start the industry for which the loan was granted. .... | 3 | Change of trade has been permitted in all the 3 cases. |



| மாவட்டத்தின் பெயர். (1) | மாற்றுத் தொழிலைத் தொடங்க வழங்கப்பட்ட கடன். பொற்கொல்லர்களுக்குத் தொழில் புரிவதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில் முதலில் குறிப்பிட்ட தொழிலை மாற்றிக்கொள்ளவதற்கு மனுச் செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை. (2) | மாற்றுத் தொழிலைத் தொடங்க வழங்கப்பட்ட கடன். மனுக்களின் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை. (3) | மாற்று வணிகம் தொடங்க வழங்கப்பட்ட கடன். பொற்கொல்லர்களுக்கு வணிகம் செய்வதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில் முதலில் குறிப்பிட்ட வணிகத்தை மாற்றிக்கொள்ளவதற்கு மனுச் செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை. (4) | மாற்று வணிகம் தொடங்க வழங்கப்பட்ட கடன். மனுக்களின்மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை. (5) |
|---|---|---|---|---|
| சென்னை .. .. .. | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | 81 | வணிகத்தை மாற்றிக்கொள்ள 81 பேர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| செங்கற்பட்டு .. .. .. | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | 65 | வணிகத்தை மாற்றிக்கொள்ள 65 பேர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| சேலம் .. .. .. .. | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை | 53 | மனுக்கள் ஆய்வில் இருக்கின்றன. தனி ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களிடமிருந்து ஆய்வு அறிக்கைகள் வரப்பெற்றவுடன் உதவி நெறியாளர் நடவடிக்கை எடுப்பார். |
| தர்மபுரி .. .. .. | 3 | 3 பேர்களின் செயல்களுக்கு ஒப்புதல் அளிக்க உதவி | 80 | வணிகத்தை மாற்றிக்கொள்ள 80 பேர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

| மாவட்டத்தின் பெயர். | மாற்றுத் தொழிலைத் தொடங்க வழங்கப்பட்ட கடன். | | மாற்று வணிகம் தொடங்க வழங்கப்பட்ட கடன். | |
|---|---|---|---|---|
| | பொற்கொல்லர்களுக்குத் தொழில் புரிவதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில் முதலில் குறிப்பிட்ட தொழிலை மாற்றிக்கொள்வதற்கு மனுச் செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை. | மனுக்களின் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை. | பொற்கொல்லர்களுக்கு வணிகம் செய்வதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில் முதலில் குறிப்பிட்ட வணிகத்தை மாற்றிக்கொள்வதற்கு மனுச் செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை. | மனுக்களின்மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | நெறியாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார். | | |
| தென் ஆர்க்காடு .. .. | ஒன்றுமில்லை | .... | 550 | வணிகத்தை மாற்றிக்கொள்ள அனைவருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| வடஆர்க்காடு .. .. | 15 | மாற்றுத் தொழிலைத் தொடங்கக் கடன் வழங்கப்பட்ட 15 பேர்கள் மாற்று வணிகம் நடத்த அனுமதி வேண்டியுள்ளனர். வேறு வணிகத்தை நடத்துவதற்காகக் கடன் வழங்கப்பட்டது எனக் கருதி முதல் ஆணையில் அவசியமான திருத்தத்தைச் செய்யலாம் என உதவி நெறியாளர் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளனர்; ஆனால், கடன் பெறுவோர் மாற்று வணிகத்தைத் திருப்திகரமாக நடத்துகிறார்கள் என அவர் சந்தேகமறத் தெரிந்து கொள்ளவேண்டும். | 79 | வணிகத்தை மாற்றியுள்ளதற்கு ஒப்புதல் அளிக்குமாறு பொற்கொல்லர்கள் வேண்டியுள்ளனர். அவற்றை உதவி நெறியாளர் ஆலோசித்து வருகிறார். வேலையிழந்த பொற்கொல்லர்கள் அனுமதிக்கப்பட்ட வணிகத்தைத் திருப்திகரமாக நடத்துகின்றனர் என்று அவர் தெரிந்து கொண்டால் மேற்படி மாற்றங்களுக்கு அவர் ஒப்புதல் அளிப்பார். |
| கோயம்புத்தூர் .. | ஒன்றுமில்லை | .... | 54 | மாற்று வணிகத்தை நடத்த 54 பேர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| தஞ்சாவூர் .. .. | ஒன்றுமில்லை | .... | ஒன்றுமில்லை .. | .... |
| திருச்சிராப்பள்ளி .. | ஒன்றுமில்லை | .... | ஒன்றுமில்லை .. | .. |
| மதுரை .. .. | 2 | கடன் பெற்றவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. திருத்த உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. | 699 | வேறு வணிகத்தை மேற்கொள்ள 699 பேர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது |
| இராமநாதபுரம் .. | ஒன்றுமில்லை | .... | ஒன்றுமில்லை .. | .. |

| மாவட்டத்தின் பெயர். | மாற்றுத் தொழிலைத் தொடங்க வழங்கப்பட்ட கடன். பொற்கொல்லர்களுக்கு தொழிற் புரிவதற்காக கடன் வழங்கப் பட்டுள்ளவர்களில் முதலில் குறிப் பிட்ட தொழிலை மாற்றிக்கொள்வ தற்கு மனுச் செய்துள்ள நபர் களின் எண்ணிக்கை. | மாற்றுத் தொழிலைத் தொடங்க வழங்கப்பட்ட கடன். மனுக்களின் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை. | மாற்று வணிகம் தொடங்க வழங்கப்பட்ட கடன். பொற்கொல்லர்களுக்கு வணிகம் செய்வதற்காகக் கடன் வழங்கப் பட்டுள்ளவர்களில் முதலில் குறிப் பிட்ட வணிகத்தை மாற்றிக்கொள் வதற்கு மனுச் செய்துள்ள நபர் களின் எண்ணிக்கை. | மாற்று வணிகம் தொடங்க வழங்கப்பட்ட கடன். மனுக்களின்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கன்னியாகுமரி .. | 1 | வேளாண்மைக் கருவிகள் செய்யும் தொழிலைத் தொடங்க, தொழில்களுக்கு அரசாங்க உதவியளித்தல் குறித்த சட்டத்தின் கீழ் இவருக்குக் கடன் வழங்கப்பட்டது. காப்பி ஹோட்டல் ஒன்றை நடத்த அனுமதி வழங்குமாறு அவர் செய்த மனு தள்ளப்பட்டது. | 17 | அவரவர்கள் கேட்டுக்கொண்ட வணிகத்தை நடத்த அவரவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| திருநெல்வேலி .. | 1 | இரும்புப் பொருள்கள் தொழிற்சாலை ஒன்றை நடத்த ரூ. 2,000 கடன் வழங்கப்பட்டது. ஆனால், அவர் அதைப் பலசரக்குக் கடை ஒன்றை நடத்தப் பயன்படுத்திக் கொண்டார். எதற்காகக் கடன் வழங்கப்பட்டதோ அந்தத் தொழிலை ஏன் தொடங்கவில்லை என்பதற்குக் காரணங்கள் காட்டுமாறு அவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. | 28 | மாற்று வணிகத்தை நடத்த 28 பேர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| நீலகிரி .. .. | ஒன்றுமில்லை | .... | 3 | மாற்று வணிகத்தை மேற்கொள்ள 3 பேருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 71 at page 13.]

(*a*) Yes.

(*b*) The Government have sanctioned a scheme with four Employment Officers functioning at Madras, Coimbatore, Tiruchirappalli and Madurai to start with for attending to the following items of works :—

(a) arranging training programme for post which require some training;

(b) arranging short courses in general knowledge and interview approach for candidates who have to appear before the Public Service Commission examinations;

(c) employment counselling to Harijan candidates in order to make them apply for second and third group jobs; and

(d) liaisons with private employers so as to enable the Scheduled Caste candidates to get some posts in the private sector.

The Director of Employment and Training has also issued instructions to the four Employment Officers to implement two separate schemes drawn up for.—

(1) Candidates desirous of competing the Madras Public Service Commission examinations of Group II and Group III services; and

(2) Candidates to be sent through Employment Exchanges appearing for interview.

The duration of the special training course will be for three months before the commencement of the competitive examinations, etc., with thirty students at a time who will be trained by the Employment Officers. In this connection, the Government have sanctioned an amount of Rs. 11,250 to meet the expenditure on the following items :—

| | | RS. |
|---|---|---|
| 1. | Lodging facilities at Rs. 20 for 30 candidates for 3 months at Madras .. .. .. | 1,800 |
| 2. | Lodging facilities at Tiruchirappalli at Rs. 15 per candidate for 30 candidates for 3 months .. .. .. .. | 1,350 |
| 3. | Boarding charges at Rs. 45 per mensem for 30 students for 3 months in Madras City .. | 4,050 |
| 4. | Boarding charges at Rs. 35 per mensem per candidate for 30 candidates for 3 months at Tiruchirappalli .. .. .. .. | 3,150 |
| 5. | Travelling Allowance (to and fro) at Rs. 10 per student and other incidental charges at Rs. 5 per student for 30 students at 2 centres .. .. .. .. .. | 900 |
| | Total .. | 11,250 |



In addition to the above mentioned scheme, this Government have also recently approved a scheme for the setting up of a pre-examination Training Centre at Madras City to train up Scheduled Castes and Scheduled Tribes for all-India Service Competitive Examinations (I.A.S., I.P.S., I.F.S. and other Central Services Examinations) to be conducted by the Union Public Service Commission. The Government have sanctioned the opening of the Centre for 60 students with necessary staff and other facilities. The cost involved in the scheme is Rs. 1,97,000 (Recurring Rs. 1,78,000 and Non-recurring Rs. 19,000). The Training Centre will be under the control of the Director of Harijan Welfare.

(அ) ஆம்.

(இ) முதலில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் பணியாற்றும் நான்கு வேலைவாய்ப்பு அதிகாரிகளைக் கொண்டு கீழ்க்கண்ட வேலைகளைக் கவனிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது :—

(அ) சிறிது பயிற்சி தேவைப்படுகிற பதவிகளுக்காகப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.

(ஆ) அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளில் கலந்துகொள்பவர்களுக்குப் பொது அறிவில் குறுகிய கால பாட முறைக்கு ஏற்பாடு செய்தலும், பேட்டிக்கான பயிற்சி அளிப்பதும்.

(இ) ஹரிஜன நபர்கள், இரண்டாவது, மூன்றாவது தொகுதி வேலைகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்வது சாத்தியமாக இருக்கும் வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு குறித்த ஆலோசனை வழங்குதல் ;

(ஈ) ஹரிஜன நபர்கள், தனியார் துறையில் சில பதவிகளைப் பெறுவதற்காக, தனியார்துறை தொழிலதிபர்களுடன் தொடர்பு கொள்ளுதல்.

வேலை வாய்ப்பு—பயிற்சித்துறை நெறியாளர் நான்கு வேலை வாய்ப்பு அதிகாரிகளுக்கு இரு தனிப்பட்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்றும்படி ஆணையிட்டுள்ளார். கீழ்க்கண்டவர்களுக்கு அத்திட்டங்கள் பொருந்தும் :—

(1) தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம் II, III தொகுதிப் பணிகளுக்காக நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் நபர்கள்.

(2) போட்டிக்குச் செல்வதற்காக வேலை தேடித்தரும் நிலையங்கள் மூலமாக அனுப்பப்படும் நபர்கள்.

போட்டித் தேர்வுகள் தொடங்குவதற்கு முன்பு மூன்று மாதங்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். ஒரு தடவையில் 30 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகாரிகள் பயிற்சி அளிப்பார்.

இவ்வகையில் பின்வரும் இனங்களில் ஏற்படும் செலவுகளுக்காக அரசாங்கம் 11,250 ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| 1 சென்னையில் 30 மாணவர்களுக்கு மாதம் ரூ. 20 செலவில் 3 மாதங்களுக்குத் தங்கும் வசதியளித்தல். .. .. .. .. .. | 1,800 |
| 2 திருச்சிராப்பள்ளியில் ஒருவருக்கு ரூ. 15 வீதம் 30 மாணவர்களுக்கு 3 மாதங்களுக்கு தங்கும் வசதியளித்தல் .. .. .. .. .. | 1,350 |
| 3 சென்னை நகரில் 30 மாணவர்களுக்கு 3 மாதத்திற்கு மாதம் 45 ரூபாய் வீதம் உணவுச் செலவு .. .. .. .. .. .. | 4,050 |
| 4 திருச்சிராப்பள்ளியில் 30 மாணவர்களுக்கு 3 மாதங்களுக்கு மாதம் 35 ரூபாய் வீதம் உணவுச் செலவு .. .. .. .. .. .. | 3,150 |
| 5 இரண்டு நிலையங்களிலும் 30 மாணவர்களுக்கு ரூ. 10 வீதம் (போகவர) பயணப்படியும் ரூ. 5 வீதம் மற்ற இடைநிகழ் செலவுகளும் .. | 900 |
| மொத்தம் .. | 11,250 |

மேற்கூறிய திட்டத்தைத்தவிர, மத்திய அரசினர் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்.) அனைத்து இந்தியப் பணிகள் போட்டித் தேர்வுகளுக்கு ஹரிஜன மாணவர்களுக்கும், ஆதிவாசி மாணவர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக தேர்வுப் பயிற்சி நிலையம் (Pre-examination centre) ஒன்றை சென்னையில் ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றிற்கும் அண்மையில் அரசாங்கம் ஏற்பளித்துள்ளது. அந்த நிலையத்தில் 60 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் அவசியமான பணியாளர்களுடனும் மற்ற வசதிகளுடனும் அது நிறுவப்படுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 1,97,000 (தொடர் செலவு ரூ. 1,78,000, தொடராச் செலவு ரூ. 19,000) செலவாகும். இந்தப் பயிற்சி நிலையம் ஹரிஜன நல நெறியாளரின் மேற்பார்வையில் இருக்கும்.





## APPENDIX III.

[*Vide* answer to Starred Question No. 218 at page 19.]

The rates are at the pool price applicable for each district.

The rates of pool prices for boiled rice and raw rice in the various districts are furnished below:—

| Name of district. | Price per quintal. Fine variety. | | | | Price per quintal. Medium variety. | | | | Price per quintal. Coarse variety. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Boiled Rice. (1) | | Raw Rice. (2) | | Boiled Rice. (3) | | Raw Rice. (4) | | Boiled Rice. (5) | | Raw Rice. (6) | |
| | RS. | P. | RS. | P. | RS. | P. | RS. | P. | RS. | P. | RS. | P. |
| 1 North Arcot .. | 75 | 95 | 78 | 45 | 66 | 24 | 68 | 74 | 64 | 30 | 66 | 80 |
| 2 South Arcot .. | 75 | 95 | 78 | 45 | 66 | 24 | 68 | 74 | 64 | 30 | 66 | 80 |
| 3 Thanjavur .. | 74 | 01 | 76 | 51 | 64 | 30 | 66 | 80 | 62 | 20 | 64 | 86 |
| 4 Tiruchirappalli .. | 76 | 92 | 79 | 42 | 67 | 21 | 69 | 71 | 65 | 27 | 67 | 77 |
| 5 Madurai .. | 78 | 86 | 81 | 36 | 69 | 15 | 71 | 65 | 67 | 21 | 69 | 71 |
| 6 Tirunelveli .. | 79 | 83 | 82 | 33 | 70 | 12 | 72 | 62 | 68 | 18 | 70 | 68 |
| 7 Ramanathapuram .. | 78 | 86 | 81 | 36 | 69 | 15 | 71 | 65 | 67 | 21 | 69 | 71 |
| 8 Kanyakumari .. | 80 | 80 | 83 | 30 | 71 | 09 | 73 | 59 | 69 | 15 | 71 | 65 |
| 9 Coimbatore .. | 79 | 83 | 82 | 33 | 70 | 12 | 72 | 62 | 68 | 18 | 70 | 68 |

The pool prices for supply made in the shape of paddy is as follows:—

| | *Per quintal.* RS. | P. |
|---|---|---|
| Fine .. .. .. | 55 | 27 |
| Medium .. .. .. | 52 | 15 |
| Coarse .. .. .. | 50 | 08 |

அந்தந்த மாவட்டத்திற்குப் பொருந்துகிற தொகுப்பு விலை (Pool price) வீதப்படி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது.

வெவ்வேறு மாவட்டங்களில் புழுங்கலரிசி, பச்சரிசி ஆகியவற்றின் தொகுப்பு விலை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மாவட்டத்தின் பெயர். (1) | ஒரு குவிண்டல் அரிசி விலை. உயர்ந்த ரகம். | | | | ஒரு குவிண்டல் அரிசி விலை. நடுத்தர ரகம். | | | | ஒரு குவிண்டல் அரிசி விலை. மட்ட ரகம். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புழுங்கலரிசி. (2) | | பச்சரிசி. (3) | | புழுங்கலரிசி. (4) | | பச்சரிசி. (5) | | புழுங்கலரிசி. (6) | | பச்சரிசி. (7) | |
| | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. |
| 1 வட ஆர்க்காடு .. | 75 | 95 | 78 | 45 | 66 | 24 | 68 | 74 | 64 | 30 | 66 | 80 |
| 2 தென் ஆர்க்காடு .. | 75 | 95 | 78 | 45 | 66 | 24 | 68 | 74 | 64 | 30 | 66 | 80 |
| 3 தஞ்சாவூர் .. | 74 | 01 | 76 | 51 | 64 | 30 | 66 | 80 | 62 | 26 | 64 | 86 |
| 4 திருச்சிராப்பள்ளி .. | 76 | 92 | 79 | 42 | 67 | 21 | 69 | 71 | 65 | 27 | 67 | 77 |
| 5 மதுரை .. | 78 | 86 | 81 | 36 | 69 | 15 | 71 | 65 | 67 | 21 | 69 | 71 |
| 6 திருநெல்வேலி .. | 79 | 83 | 82 | 33 | 70 | 12 | 72 | 62 | 68 | 18 | 70 | 68 |
| 7 இராமநாதபுரம் .. | 78 | 86 | 81 | 36 | 69 | 15 | 71 | 65 | 67 | 21 | 69 | 71 |
| 8 கன்னியாகுமரி .. | 80 | 80 | 83 | 30 | 71 | 09 | 73 | 59 | 69 | 15 | 71 | 65 |
| 9 கோயம்புத்தூர் .. | 79 | 83 | 82 | 33 | 70 | 12 | 72 | 62 | 68 | 18 | 70 | 68 |

நெல்லாக வழங்குவதற்குத் தொகுப்பு விலைகள் கீழ்க்கண்டவாறு :—

| | குவிண்டல் ஒன்றுக்கு ரூ. | பை. |
|---|---|---|
| உயர்ந்த ரகம் .. .. .. | 55 | 27 |
| நடுத்தர ரகம் .. .. .. | 52 | 15 |
| மட்ட ரகம் .. .. .. | 50 | 08 |

## Appendix IV.

[*Vide* answer to Starred Question No. 238 at page 32.]

All the Water-supply and Drainage Schemes of Municipalities and Urban Panchayats in Madurai district and Ramanathapuram district (East) will be executed by the Public Health Engineering Division at Madurai.

The Water-supply and Drainage Schemes, which are now under execution by the Public Health Engineering Division, Madurai, are detailed below:—

1. Madurai Water Supply Improvements Project.
2. Paramakudi Water Supply Scheme.
3. Aruppukottai Water Supply Scheme.
4. Madurai Drainage Scheme.
5. Tirumangalam Partial Drainage Scheme.
6. Devakottai Pilot Water Supply Scheme.
7. Palani Water Supply Improvements Scheme.
8. Dindigul Water Supply Scheme.
9. Dindigul Wayside Villages Water Supply Scheme.
10. Kodaikanal Water Supply Scheme.
11. Allinagaram Water Supply Scheme.
12. Composite Water Supply Scheme for Cumbum Valley Panchayats, etc.

மதுரையில் உள்ள பொதுநலப் பொறியியற் கோட்டம், மதுரை, இராமநாதபுரம் (கிழக்கு) மாவட்டங்களில் உள்ள நகராண்மைக் கழகங்களிலும், நகரப் பஞ்சாயத்துக்களிலும் எல்லாக் குடிநீர் வழங்கல், வடிகால் திட்டங்களையும் செயல்படுத்தும்.

மதுரையில் உள்ள பொதுநலப் பொறியியற் கோட்டம் தற்போது செயல்படுத்தும் குடிநீர் வழங்கல், வடிகால் திட்டங்கள் பின்வருமாறு :—

1. மதுரை, நீர் வழங்கு விரிவுத் திட்டம்.
2. பரமக்குடி நீர் வழங்கு திட்டம்.
3. அருப்புக்கோட்டை நீர் வழங்கு திட்டம்.
4. மதுரை வடிகால் திட்டம்.
5. திருமங்கலம் பகுதி வடிகால் திட்டம்.
6. தேவக்கோட்டை நீர் வழங்கு முன்னோடித் திட்டம்.
7. பழனி நீர்வழங்கு விரிவுத் திட்டம்.
8. திண்டுக்கல் நீர்வழங்கு திட்டம்.
9. திண்டுககல் வழியோரக் கிராமங்கள் நீர் வழங்கு திட்டம்.
10. கொடைக்கானல் நீர் வழங்கு திட்டம்.
11. அல்லிநகரம் நீர் வழங்கு திட்டம்.
12. கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பஞ்சாயத்துகளுக்கான கூட்டு நீர் வழங்கு திட்டம்.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 9th August 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock. Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Bifurcated course in education*

* 241 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when has the bifurcated course of studies in Secondary Schools been introduced in the State; and

(*b*) whether Service Rules have been framed for the staff appointed under the said course in Government Secondary Schools?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The introduction of bifurcated courses in Secondary Schools was ordered by Government in 1948–49.

(*b*) No.

**திரு. வை. சங்கரன்:** ஆரம்பிக்கப்பட்ட இந்த கோர்ஸிலுள்ள ஆசிரியர்களுக்கு இன்றுவரை சுமார் 18, 19 ஆண்டுகளாக சர்விஸ் ரூல்ஸ் இன்னும் ஃபிரேம் பண்ணாத காரணத்தால், அவற்றில் உள்ள பல லீவ் பெசிலிடீஸ், பர்மனன்ட் ஆவது முதலிய எல்லா வித வசதிகள் இல்லாத காரணத்தை முன்னிட்டு உடனடியாக சர்விஸ் ரூல்லை ஃப்ரேம் பண்ணுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சர்விஸ் ரூல்ஸ் இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

*Archaeological exploration*

* 242 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the notice of the Government has been drawn to the conclusions reached by Dr. Yves Martin of the Institute of Physics of the Globe Paris, after his recent archæological exploration in South India that interesting finds may be forthcoming if archaeological exploration is undertaken in a distance of 30 feet from the beach sands of Kaveripattinam; and

(*b*) if so, the steps proposed to be taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The excavation programme at Kaveripattinam has been stopped this year by the Central Archaeological Survey due to emergency. The Special Officer for Archaeology, Madras, has stressed the importance of continuing the excavation at Kaveripattinam during the Central Advisory Board of Archaeology meeting held at Poona and the Director-General of Archaeology in India has assured that the excavation will be resumed as soon as financial position improves.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, காவிரிப்பூம்பட்டினத்திலே கடற்கரை ஓரங்களில் சுமார் 30 அடி அளவில் சோதிப்பது மட்டும்தான் இங்கு காணப்படுகிறது. கடற்கரையிலிருந்து உள்ளே 1½ மைல் தூரத்திலே மிகப் பழங்காலத்து பெரும் கோயில் இருப்பதும், இப்போதும் அங்கு ஏராளமான மீன்கள் இருந்து அதைப் பிடிப்பதற்குச் செல்லுகின்றவர்கள், முக்குளித்து அங்கு இருக்கும் செம்பு விக்கிரகங்கள், கற்சிலைகள் ஆகியவற்றை எடுத்து வந்து பக்கத்தில் உள்ள ஆலயங்களில் வைக்கப்பட்டிருப்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றதா ? அப்படியானால் அங்கே ஆராய்ச்சி நடத்துவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் இனிமேலாவது வகுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த ஆராய்ச்சி பரிபூர்ணமாகத்தான் இருக்கவேண்டும். இந்த ஆராய்ச்சி வேலை தொடங்கிவிட்ட பிறகு வேறு என்ன வகையிலே செய்யலாம் என்பது கவனிக்கப்படும்.

**திரு. வை. சங்கரன் :** டாக்டர் வேஸ் மார்ட்டின் அவர்கள் கண்டு ஆராய்ந்து என்ன என்ன பொருள்கள் கிடைக்கின்றன, என்ன என்ன பொருள்களைப் பார்க்கமுடியும் என்று சொல்லியிருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்களுடைய பூர்வாங்கமான ஆராய்ச்சிதான் இது. என்ன என்ன சொல்லியிருக்கிறார்கள் என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** நம்முடைய தமிழ்நாட்டிலே எந்தெந்த இடங்களுக்கு எல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு அவர்கள் சென்றார்கள் ? அது சம்பந்தமாக அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

### *Institute of Library Science*

* 243 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have set up any Institute in the State for imparting training in Library Science to untrained librarians working in libraries under the District and Local Library Authorities; and

(b) if so, the details thereof?





THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The Government have sanctioned a scheme, as an experimental measure for one year, for the setting up of an Institute of Library Science to give training to the unqualified Librarians employed under the Local Library Authorities and to meet the required number of qualified librarians under the Development programmes of the Local Library Authorities. The Institute is to function as one of the wings of the Connemara Public Library and under the overall charge of the Director of Public Libraries. The duration of the training course is three months and the first training course for a batch of 30 trainees commenced on 21st March 1966.

**திரு. வை. சங்கரன் :** தனியார் நூல் நிலையங்கள், தனிப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள் இவைகளில் இருக்கிற நூல் நிலையங்களில் லைப்ரேரியன்ஸ் அன்க்வாலிபைடாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் தகுதி பெறவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்த ட்ரெயினிங் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

### பொம்மை ஆட்டக் கலை

* 244 *கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) பழங்கால தமிழ்நாட்டின் கலைகளில் ஒன்றான பொம்மை ஆட்டக் கலையை ஊக்குவிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?*

*(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) In 1965 the Government sanctioned a scheme for the establishment of a Training Centre for manufacture of Leather Puppetry. The total expenditure for two years for this scheme is Rs. 31,200. Six students are undergoing training in leather puppetry at the Central Leather Research Institute, Adyar, for a period of two years on payment of stipend of Rs. 75 per mensem each. The scheme is being implemented by the Madras Natya Sangh with the grant sanctioned by this Government.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த பொம்மை ஆட்டங்கள் இரண்டு வகையாக நடைபெறுகின்றன. இராக்காலங்களில் திரை கட்டி நிழல்படமாக காண்பிப்பது ஒன்று. கயிறு கட்டி அதன் மூலமாகவும் பொம்மலாட்டம் காண்பிக்கிறார்கள். இவற்றில் எதை அரசாங்கம் ஊக்குவிக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தக் கேள்வி பொம்மலாட்டத்திற்குத் தோல் பொம்மைகளைத் தயார் பண்ணுவது பற்றியது. இரண்டு விதமான பொம்மலாட்டத்திற்கும் இது பயன்படும்.

## இந்திய தேசப் படம்

*245 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசியில் உள்ள ஒரு லித்தோ அச்சகத்தில் காஷ்மீர் பகுதியை இந்திய நாட்டின் பகுதியாகக் குறிப்பிடாத இந்திய தேசப் படங்கள் அச்சிடப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Action has been taken to prescribe the publication, printing, sale or distribution of such or similar map under rule 45 (1) of the Defence of India Rules, 1962.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இதைப் பிரசுரித்த அச்சகத்தின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? எத்தனை தேசப்படங்கள் பிரசுரிக்கப்பட்டன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த அச்சகத்தின் மூலம் பிரசுரம் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு விசாரித்ததில் தெரியாமல் பிரசுரம் செய்தோம் என்று அவர்கள் மன்னிப்பு கேட்டார்கள். அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது.

**திரு. எஸ். முருகையன் :** இதை முதலிலே கண்டுபிடித்தது நம்முடைய அரசாங்கமா ? அல்லது மத்திய அரசாங்கமா? அல்லது பாகிஸ்தானிலிருந்து வந்த செய்தி மூலம் தடை செய்யப்பட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. சா. கணேசன் :** தேசப் படங்கள் அச்சிட்டு அவற்றை வெளி நாடுகளில் வழங்கி "இந்தத் தேசப் படங்கள் இந்தியாவில் அச்சடிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்தே காஷ்மீர் பகுதிகள் எங்களைச் சேர்ந்தது என்பது புலனாகவில்லையா ?" என்று, அவை மூலம் எடுத்துக்காட்ட பாகிஸ்தானின் சதி ஆலோசனையின் மூலம் செய்யப்பட்டது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** படம் பிரசுரிக்கப்பட்டதற்கு இரண்டு நோக்கம் இருக்கலாம். ஒன்று, விற்கப்படக்கூடியதைப் போட்டு விற்கவேண்டும் பணம் சம்பாதிக்கவேண்டுமென்று இருக்கலாம். இன்னொரு நோக்கம், நம் நாட்டிற்குத் துரோகம் விளைவிக்கும் நோக்கமாக இருக்கலாம். கனம் உறுப்பினர் கூறியபடி சதியாக இருந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அம்மாதிரி ஒன்றும் புலப்படவில்லை. ஏதோ தெரியாமல் பிரசுரித்தோம் நாங்கள் இனிச் செய்யமாட்டோம் என்று கூறினார்கள். அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை எச்சரிக்கை விடுக்கப்பட்டது.



**திரு. வை. சங்கரன் :** இராமநாதபுரத்தில் 121 இஸ்லாம் என்ற ஒரு காலண்டர் வெளியிட்டிருப்பதைப்பற்றி—

" The State Government has prohibited the import of the Calendar 121 Islam having a map depicting Jammu and Kashmir as a separate entity and not as part of India. The calendar has been printed and published by a Litho press in Ramanathapuram district in Madras ".

என்ற செய்தி 29—7—1966 பத்திரிகையிலே வந்து இருக்கிறது. அப்படிச் செய்தது இந்த லித்தோ பிரஸ் தான். அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்தப் படங்களை அச்சடிப்பதற்குத் தனியார் ஆர்டர் கொடுத்தார்களா ? அல்லது சொந்தக்காரர்களே பிரசுரித்தார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரசுரித்ததற்கு அச்சகத்தின் சொந்தக்காரர்கள் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்கள்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தேசப் படங்கள் அச்சடிக்கப்பட வேண்டுமென்றால் அரசாங்கத்தின் முன் உத்தரவு பெற்று பிரசுரிக்க வேண்டுமென்றிருக்கிறதா ? இனிமேலாவது அம்மாதிரி முன் உத்தரவு பெறுவதற்கு உத்தரவு போடுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தப் படத்திற்குச் சர்க்காரின் முன் உத்தரவு வேண்டுமென்று ஒன்றும் இல்லை.

**திரு. எம். எஸ். மணி :** அந்த அச்சக உரிமையாளர் உடனடியாகக் கைது செய்யப்படாததற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கேஸ் போடுவதாக இருந்தால் தான் கைது செய்யவேண்டும். அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டது.

## இலஞ்ச ஒழிப்புச் சட்டம்

*246 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் இன்றுவரை நமது மாநிலத்தில் இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின்கீழ் (விஜிலேன்ஸ்) அரசாங்க உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் முறையே கைது செய்யப்பட்டு, வழக்கு தொடுத்து, தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை பேர்கள் இதனால் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டார்கள் ?

(உ) போலீஸ் இலாகாவில் மட்டும் எத்தனை பேர் நீக்கப்பட்டார்கள் ?

(எ) இந்தச் சட்டத்தை மேலும் கடுமையாக்க அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டா ?

[9th August 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

| (1) | Gazetted officers. (2) | Non-gazetted officers. (3) |
|---|---|---|
| (a) Number arrested .. | 14 | 93 |
| Number prosecuted .. | 5 | 37 |
| Number punished .. | 2 | 21 |
| (b) Number of persons dismissed or removed from service .. | Nil. | 7 (after conviction). |
| (c) Number of persons dismissed or removed in Police Department .. .. .. | Nil. | Nil. |

(d) The Central Government are concerned with this.

**திரு. செ. மாதவன் :** இந்தக் குற்றத்தைக் கண்டு பிடிக்கும் இந்த இலாகாவிலே போலீஸ் துறையிலிருந்து ஒருவரும் கண்டு பிடிக்கப்படவில்லை என்று கூறினார்கள். இதற்கு என்ன காரணம்? இதை ஏற்றுக் கொண்டிருப்பதே போலீஸ் இலாகா என்ற காரணமா அல்லது வேறு காரணமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த இலாகாவைப் பொறுத்த வரை போலீசாரிடத்திலே பட்சபாதம் ஒன்றும் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** போலீஸ் இலாகாவிலே பட்சபாதம் இல்லையென்று சொன்னார்கள். காவேரிப்பாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மீது நானே ஒரு புகார் விஜிலன்ஸ் கமிஷனுக்கு அனுப்பினேன். அப்படியானால் இது பட்சபாதமில்லையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் எந்தக் கருத்து வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளலாம்.

### தமிழ் வளர்ச்சி

* 247 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன், திரு. கே. ஏ. மதியழகன் } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் ஐந்து லட்ச ரூபாய் எந்தெந்த வகையில் செலவிடப்படுகிறது ?

(இ) தமிழ் பேசப்படாத பிற மாநிலங்களில் தமிழைக் கற்றுக்கொடுக்க இம்மாநில அரசுக்கு ஆண்டொன்றுக்குச் செலவாகும் பணம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A statement is placed on the table of the House.

(b) About Rs. 22,400.

* Printed as Appendix I on pages 980–981.



9th August 1966]

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த அறிக்கையில் சங்க இலக்கியங்களுக்கு உரைகள் வெளியிடுவதற்காக 7,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. இந்தத் தலைப்பில் என்னென்ன நூல்களுக்கு உரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது நான் 22,400 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக சாங்ஷன் செய்யப்பட்ட திட்டங்களும் அவற்றிற்காகத் தமிழ்நாடு அரசாங்கம் வழங்கிய மானியத் தொகையும் பின்வருமாறு :—

## PART I.

*Grants sanctioned under the Government of India's Scheme "Development of Modern Indian Languages" :—*

| | Schemes. | Amount sanctioned. |
|---|---|---|
| 1 | Compilation and publication of Children's Encyclopaedia in Tamil (scheme undertaken by the Tamil Academy, Madras). | Rs. 50,000 (during 1965–66). |
| 2 | Bringing out lucid commentaries for all Sangam Classics (scheme undertaken by the Madras Presidency Tamil Sangam). | Rs. 7,800. |
| 3 | Publication of the Tamil version of the Book "The Way We Live". | Rs. 825. |
| | Scheme for the study, interpretation and publication in Tamil of the inscriptions and the History of Saivism and Vaishnavism (scheme undertaken by the Tamil Varalatru Kazhagam, Madras). | Rs. 35,000 (During 1965–66). |
| 5 | Publication of first supplement to Tamil Encyclopaedia by the Tamil Academy, Madras. | Rs. 46,500. |

## PART II.

*Grants sanctioned for other schemes :—*

| | Schemes. | Amount sanctioned. RS. |
|---|---|---|
| 1 | Publication of a journal "Tamil Culture" by the Academy of Tamil Culture. | 14,708 (Recurring grant to meet the entire net deficit incurred by the institution subject to the limit of Rs. 3,500). |

[9th August 1966

| Schemes. | Amount sanctioned. |
|---|---|
| | RS. |
| 2 Award of prizes for best books in Tamil (scheme undertaken by Tamil Development and Research Council). | 10,000. |
| 3 Conducting Tamil classes for foreigners on scientific lines (schemes undertaken by the Academy of Tamil Culture.) | 1,500. |
| 4 Publication of books in the four South Indian Languages by the Southern Languages Book Trust. | 60,000. |
| 5 Publication of a Book on Evolution of style in Chola Art and Architecture by Sri S. R. Balasubramanyam. | 2,500. |
| 6 Running of Bureau of Tamil Publications. | 11,50,000. |
| 7 Preparing Easy Commentaries for Thiruvachagam, Thirukkural and Naladiar with Lexicon and Concordance (5-year project) (scheme undertaken by the Madras Presidency Tamil Sangam). | 6,000. |
| 8 20th Century Tamil Literature for preparing and printing (8 Volumes). (scheme undertaken by the Madras Presidency Tamil Sangam). | 8,000 |

**புலவர் கா. கோவிந்தன் :** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் படித்தது சபை முன் வைக்கப்பட்ட அறிக்கையிலேயே இருக்கிறது. என்னுடைய கேள்வி—சங்க இலக்கியங்களுக்கு உரைகள் வெளியிடுவதற்காக 7,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தலைப்பில் என்னென்ன நூல்களுக்கு உரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒவ்வொரு சங்க நூலாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை என்னென்ன எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தமிழ்க் கலைமன்றம் "தமிழ்ப் பண்பாடு" என்ற பத்திரிகையை வெளியிடுவதற்காக அந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிகரப் பற்றுக்குறை முழுவதையும் ஈடுகட்டுவதற்காக அளிக்கப்பட்டுள்ள நடைமுதல் மானியம் ரூ. 3,500 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பத்திரிகையை நடத்துபவர்கள் யார் ? நஷ்டம் வந்ததால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா ? தமிழ் இலக்கியத்திற்காக வருகின்ற இப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு எல்லாம் பண உதவி செய்யப்படுமா ?



9th August 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுக்க முடியும் என்று கூற முடியாது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு தகுதியுள்ள பத்திரிகையாக இருந்தால் பார்த்து உதவி அளிக்கப்படும்.

## நபி நாயகத்தின் படம்

* 248 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நபிகள் நாயகம் அவர்களின் படத்தை கல்கி பத்திரிக்கையில் வெளியிட்டிருப்பதைக் கண்டித்து அப்பத்திரிகையின்மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இலங்கையிலிருந்து O.M, கலிபா என்பவரிடமிருந்து சர்க்காருக்கு சமீபத்தில் ஏதேனும் முறையீடு வந்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்.

(இ) இது பற்றி விளக்கம் தருமாறு "கல்கி" ஆசிரியர் கேட்கப்பட்டார். முஸ்லீம் சகோதரர்களது மத உணர்ச்சிகளைப் புண்படுத்துவது நமது நோக்கமல்ல என்றும் கதையின் கருத்தை வலியுறுத்தவே பட விளக்கம் தரப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். படிப்பவர் உள்ளத்தில் நபிகள் நாயகத்தின் உயர்ந்த கொள்கைகளைப் பதிய வைக்கவேண்டும் என்ற உண்மையான நம்பிக்கையுடனும் உயர்ந்த எண்ணத்துடனும் அப்பட விளக்கம் வெளியிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மற்றும், இத்தகைய தவறு இனி நேராது என்றும் உறுதியளித்துள்ளார். ஆசிரியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இது பற்றிய விஷயம் முடிவடைந்ததாகக் கருதப்பட்டது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** உருவமற்ற தெய்வத்தை வழிபடக்கூடிய இஸ்லாமிய சகோதரர்களுடைய உள்ளம் இந்தப் படத்தால் புண்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் கல்கி எடிட்டருக்குத் தகவல் தெரிவித்து அந்தப் பத்திரிகை இனிமேல் இத்தகைய படங்களை வெளியிடாது என்ற முறையில் பத்திரிகையில் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கூற அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் தெரிவித்ததைத்தான் இங்கே தெரிவித்திருக்கிறேன்.

## *Deputy Inspectors of Schools*

* 249 *Q.*—Sri M. S. SELVARAJAN : Sri G. GOMATHISANKARA DIKSHITHAR : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of posts of School Assistants and Deputy Inspectors, Grade I, in the State;

(b) the number among them that are vacant;

(c) the dates from which they are so vacant; and

(d) the steps taken to fill up the vacancies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 339.

(b) 57.

(c) The posts are vacant from various dates ranging from 1st November 1956 to 25th March 1966.

(d) As many as 169 vacancies in Grade I posts have been filled up recently on 30th March 1966. The remaining 57 vacancies will be filled up as soon as possible.

*திரு. எம். எஸ். செல்வராஜன் :* வெகு நாட்களாக இந்த ஸ்தானங்கள் காலியாக இருக்க ஏதாவது விசேஷ காரணங்கள் இருக்கின்றனவா? அந்தப் பரிட்சாதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் சம்பளம் கவர்ச்சிகரமானதாக இல்லையென்ற காரணமா?

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* தகுதி பெற்றவர்கள் இந்த வேலைக்கு வர வேண்டும். சம்பளம் போதாது என்பது மட்டும் காரணமாக இருக்க முடியாது. வேறு காரணங்களும் இருக்கலாம். சம்பளப் பிரச்சினையைப் பொறுத்தவரை அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. இதை மாற்றுவது எல்லாம் பே கமிஷன் மொத்தமாகத்தான் கவனிக்கவேண்டும். இப்போது இந்த ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்பதைப் பற்றிக் குறிப்பிட்டேன்.

### லேபர் கோர்ட்டுகள்

** 250 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களிலுள்ள லேபர் கோர்ட்டுகளில் 1962-ம் ஆண்டு ஜனவரி முதல் 1965 டிசம்பர் வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(இ) ஒவ்வொரு ஆண்டிலும், முடிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

*திரு. ஆ. தங்கவேலு :* தொழில் கோர்ட்டுகளில் தொழிலாளர்களின் வழக்குகள் இவ்வளவு காலத்திற்குள் முடியவேண்டுமென்று ஏதாவது விதி இருக்கிறதா? இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வழி செய்யப்படுமா?

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* இந்தக் கோர்ட்டுகள் நீதிபரிபாலனம் செய்யக்கூடியவை. அரசாங்கம் இன்ன தேதிக்குள் வழக்கை முடிக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்ப முடியாது.

[a] Printed as Appendix II on pages 982-988.



அது முறையல்ல. கூடியவரையில் தாமதமின்றித் தீர்க்கப்பட வேண்டுமென்ற கருத்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. தாமதத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

*திரு. எம். எஸ். மணி :* இந்த லேபர் கோர்ட்டுகள் பற்றாக் குறையாக இருப்பதால்தான் வழக்குகள் தீர்க்கப்படுவதில் தாமதப்படுகின்றது என்று கூறப்படுகிறது. ஆகவே, மேலும் இரண்டு கோர்ட்டுகளை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* இந்த விஷயம் அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு லேபர் கோர்ட்டுகள் அதிகப்படுத்தப்பட்டுத்தான் வருகின்றன.

### பொய்ச் சான்றிதழ்கள்

** 251 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) S.S.L.C. தேரியதாக பொய் சர்ட்டிபிகேட்டுகள் பலரிடம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அகப்பட்டவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) It is under investigation and hence it is not desirable to disclose any information.

*திரு. ஆ. தங்கவேலு :* இந்த வழக்கு விசாரணையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் பொய் சர்ட்டிபிகேட்டுகள் பெற்று அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டு மூன்று ஆண்டுகளாகவே இது காலம் கடத்தப்பட்டு வருகிறது. இதில் டைரக்டர் ஆஃப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் சம்பந்தப்பட்டு இருப்பதால் காலம் கடத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் :* வழக்கு பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு மேல் விவரங்கள் இப்போது கூறுவது முறையல்ல.

### *Minimum Wages Committee*

* 252 Q.—SRI R. ABDUL KHALEEL : Will the Hon. the Chief Minister be pleased to state—

Whether there is any proposal to enhance the rates of daily allowance fixed for the members of Minimum Wages Committee constituted in 1965 for fixing minimum rates of wages to the employees of the Beedi and Tobacco manufacturing industries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

[9th August 1966

### *Gratuity rules*

*253 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the gratuity rules for the State Government servants, to be in conformity with those applicable to the Union Government servants; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The matter is under the consideration of the Government.

(*b*) Does not arise.

**திரு. வை. சங்கரன் :** *இப்போதுள்ள நிலையில் மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குள்ள க்ராச்யூட்டி ரூல்ஸுக்கும் நம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குள்ள க்ராச்யூட்டி ரூல்ஸுக்கும் என்னென்ன வேறுபாடுகள் இருக்கின்றன ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The maximum ceiling fixed by the Government of India for payment of gratuity is Rs. 10.000 or 12 months' pay whichever is less. But, this is restricted for the State Government employees to Rs. 2,400 or 12 months' pay whichever is less.

### *Tagore Centenary Memorial Theatre*

*254 *Q*.—SRI M. KALYANASUNDARAM :<br>SRI SAW GANESAN :<br>SRI A. K. SUBBIAH :<br>SRI K. A. MATHIALAGAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the construction of Tagore Centenary Memorial Theatre at Madras was commenced;

(*b*) the present stage of construction;

(*c*) the total amount of expenditure incurred so far in respect of the construction;

(*d*) the extent of Central assistance obtained so far; and

(*e*) the particulars of the estimate of the Theatre?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In March 1961.

(*b*) Pile foundations for the Auditorium block as well as the Stage block have been completed and the construction of the dressing block has been completed.

(*c*) Rs. 6·02 lakhs.

(*d*) Rs. 2·5 lakhs.



9th August 1966]

(*e*) The original estimate of Rs. 9 lakhs was subsequently revised as Rs. 15·32 lakhs taking into account the cost of furnishing, fabrics, sculptural and painting works, etc. Now the estimate has to be revised to include additions like store shed, Road, Car Park, etc. It may come to Rs. 22 lakhs.

**திரு. சா. கணேசன் :** *பிற மாநிலங்களில் எல்லாம் தாகூர் மெமோரியல் ஹால் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இங்கு இதைக் கட்டும்போது தியேட்டர் கட்டாமல் மேக்-அப் ரூம், க்ரீன் ரூம் மட்டும் கட்டி, அவை செம்மையாக செய்யப்பட்டிருந்தும் நாடக அரங்கு இல்லாமையினால் அந்த இடங்கள் தீய அல்லது கொடிய காரியங்களுக்கு இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்ற செய்தி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? அப்படியானால் அதன் மீது கவனம் செலுத்தி, தக்க பாதுகாப்புக் கொடுத்து வேலையைத் துரிதமாக நடத்த முடிவு செய்ய வழிவகை வகுத்திருக்கிறதா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *தாமதத்திற்கு முக்கிய காரணம் நிதி நிலைமை. எஸ்டிமேட் அதிகப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து வேலை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. ஓரளவு வேலையும் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் நன்கொடை வசூலித்து இதைப் பூர்த்தி செய்யவேண்டு மென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.*

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** *தாகூர் நினைவுச் சின்னங்கள் உலகில் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. அவற்றை சமீபத்தில் ஐரோப்பா சென்றிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பார்வையிட்டிருப்பதாக செய்தி வந்தது. உலகில் உள்ள அப்படிப்பட்ட நினைவுச் சின்னங்களின் மாதிரிகளைத் தருவித்து அவற்றை அரங்கில் காட்சியாக வைக்க இதோடு சேர்த்து ஏற்பாடு செய்வார்களா ? அல்லது ஒரு பகுதியில் அந்த மாதிரிகளை கட்டட வடிவில் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *தாகூர் சென்டினரி தியேட்டரை பொறுத்தவரையில் முன்பே ப்ளான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் ரிவைஸ் செய்யப்பட்டிருக்கிறது. முடிப்பது தான் பிரச்னை.*

**திரு. சா. கணேசன் :** *இந்த அரங்கம் இந்தியாவின் மிகப் பெரும் கலைஞராகிய தாகூரின் பெயரால் கட்டப்படுவதால் கலைப்பண்பாடு கள், அழகு, வசதி போன்ற அனைத்தும் ஒருங்கே பொருந்தியிருக் கக்கூடிய எண்ணத்தோடு பிற நாடுகளுக்கும் சென்று பல கட்டடங் களைக் கணித்து வரும்படி இதற்காக ஒரு பொறியியலார், என்ஜினியர் அனுப்பப்பட்டாரா ? அவர் அனுப்பப்பட்டு அதன் மீது ப்ளான் போடப்பட்டு அந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டதா அல்லது நிறைவேற்றப்படுகிறதா, எவ்வளவு காலத்திற்குள் அது முடியும் ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *எல்லாம் பரிசீலனை செய்யப் பட்டு ப்ளான் எல்லாம் முடிவாகிவிட்டது. எடுத்துக் கட்ட பணம் வேண்டும், கட்டி முடிக்க வேண்டும், அவ்வளவுதான்.*

[9th August 1966

*Political Sufferers' Association.*

*255 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have examined the request contained in the Memorandum submitted to the Chief Minister by the Political Sufferers' Association of the Tirunelveli district recently; and

(*b*) if so, the details of action taken on the various suggestions contained in the Memorandum ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The memorandum is being examined by the Government.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Has any representation been made on behalf of Political Sufferers to provide pension for them and will the Government sympathetically consider the request made by the Political Sufferers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I said that the memorandum was being examined. The Government have been examining what kind of relief may be given to political sufferers who have taken part in the freedom movement and who are now in a destitute condition.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** அந்த மெமோரான்டத்தில் எல்லா அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார்களா? அப்படியானால் இப்போது மத்திய அரசாங்கத்திலிருந்து வழங்குவது போக மீதிப் பேர்களுக்கும் ராஜ்ய அரசாங்கத்திலிருந்தேனும் கொடுக்க யோசனை செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசியல் தியாகிகளுடைய குழந்தைகளுக்கு இப்போது ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டுத்தான் வருகிறது.

**திரு. வை. சங்கரன்:** இப்போதுள்ள நிலையில் மத்திய சர்க்கார் எஜுகேஷன் கன்ஸெஷன் கொடுக்கும்போது பொலிடிகல் ஸஃபரர் என்றால் ஆறு மாதங்களுக்கு மேல் சிறைவாசம் செய்திருந்தால்தான் அவர் பொலிடிகல் ஸஃபரர் என்ற வியாக்கியானம் இருக்கிறது. ஆறு மாதம் சிறையில் இருந்திருந்தால்தான் அவர்கள் பொலிடிகல் ஸஃபரர் என்ற முறையில் விதியிலிருக்கிறது. அந்த விதியைத் தளர்த்த அரசாங்கம் சிபார்சு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசியல் தியாகிகள் என்றால் யார் அரசியல் தியாகியாகக் கருதப்படுவது, அவர்களுக்கு என்ன உதவி அளிப்பது என்டதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.



9th August 1966]

*Neyveli Lignites*

*256 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the hypothesis, recently enunciated by the reputed chemist Padmasri Dr. N. M. Godbole that the waters of the Bay of Bengal were seeping through the subsoil right up to Neyveli below the lignite beds thereat, and

(*b*) if so, the study and examination made thereof and the conclusion arrived threat ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) Investigations made and the data collected by the Neyveli Lignite Corporation Limited so far do not indicate any possibility for sea water to contaminate the artesian reservoir under the existing conditions or in future.

**திரு. வை. சங்கரன்:** அவர்கள் எந்தக் காரணங்களைக் காட்டி இதுபோன்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள்? அவை என்ன என்று அறியலாமா? இல்லை என்று சொல்ல என்னென்ன காரணங்களை சர்க்கார் கூறுகிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** டாக்டர் காட்போல் அவர்கள் சொல்வது underground storage is inexhaustible; இதுதான் முக்கியமாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

**வேளாண்மைக் கருவிகள் செய்யும் பிரிவு**

* 257 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள அரசினர் விவசாயக் கருவிகள் செய்யும் தொழிற்சாலையில் Farm Implements Unit தற்காலிக அடிப்படையில் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்களா?

(இ) ஆமெனில், எத்தனைபேர்கள், எவ்வளவு காலமாக வேலை செய்கிறார்கள்?

(உ) அவர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) to (*c*) At present there is no categorisation of workers as permanent or temporary in the Farm Implements Unit, Tiruchirappalli. There are 151 persons employed in the Unit. 107 persons have put in more than one year service and 44 less than one year.

**திரு. து. ப. அழகமுத்து:** அந்த 'பார்ம் இம்ப்ளிமென்ட்ஸ் யூனிட்டில்' நீண்ட நாட்களாக தாற்காலிகமாக வேலை செய்து வருவதாக தொழிலாளர்கள் கம்ப்ளெயின்ட் செய்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். என் இந்த முறை கையாளப்படுகிறது?

[9th August 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது தகவல் கொடுத்திருக்கிறேன். தொழிலாளர்கள் என்ன சொன்னாலும் என்னிடமுள்ள தகவலைக் கொடுத்திருக்கிறேன்.

### இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை

*258 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மெஷின் கருவிகள் தொழிற்சாலை நிறுவுவதற்கு என்னென்ன அடிப்படை ஏதுக்கள், சாதனங்கள் தேவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following are the basic criteria for starting a Machine Tool Factory :—

About 30 to 50 acres of land,

About 2 lakh gallons of water per day,

About 5,000 KVA of Power,

Transport facilities like Railway connection, highways,

Nearness to a Sea Port and Air-Port,

Proximity to facilities for castings, forgings, machining, flame hardening, melting finishing, heat treatment, etc.,

Proximity to the consuming centre, and

Proximity to a number of engineering industries.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** நம் ராஜ்யத்தில் அதை எங்கேயாவது நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அதற்கு வெளியார் உதவி ஏதாவது இருக்கிறதா? உத்தேச எஸ்டிமேட் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Madras State Industrial Corporation, இன்டஸ்ட்ரியல் லைசென்ஸுக்கு Government of India -க்கு அப்ளை செய்திருக்கிறது. இந்த அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது.

### *Marine Engineering College*

*259 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have received any representation from one Sri Arumugasamy Nadar of Tuticorin for starting a Marine Engineering College in Tuticorin during 1963, 1964 and 1965;

(b) if so, the action taken thereon; and

(c) the details of offer made by the said Sri Arumugasamy Nadar, for the purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) No action is possible in the matter since no decision has been taken to open an Engineering College in the district.

(c) Properties worth about Rs. 5 lakhs and fetching an annual income of about Rs. 20,000 were promised as donation for the College.



9th August 1966]

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கப்பற் பொறியியல் கல்லூரி நிறுவ உத்தேசமாக எவ்வளவு செலவிடப்பட வேண்டியதிருக்கும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா? என்ஜினியரிங் கல்லூரி நிறுவும்போது ஒரு பகுதியாக இத்தகைய பொறியியல் கல்லூரியையும் வைத்துக்கொள்வது என்பது சர்க்கார் ஆலோசனையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிக்கேள்வி வேண்டும்.

### பொற்கொல்லர்கள்

*260 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொற்கொல்லர்களுக்கு, தொழில் செய்வதற்காக வழங்கப்பட்ட கடன்களுள், தொழிலை மாற்றிக் கொண்டதன் காரணமாக பணத்தைத் திரும்பக் கட்டுமாறு எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது?

(இ) பெற்ற கடன் தொகையை மாற்றிக்கொண்ட தொழிலுக்கே கொடுத்ததாக பாவிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(உ) இல்லையெனில், பல தவணைகளில் வசூலிக்க ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Eight persons.

(b) No, Sir.

(c) Loans which are not utilised for the specific purpose for which they were sanctioned will be foreclosed and the entire dues to Government are liable to be summarily recovered in such cases.

**திரு. வை. சங்கரன் :** விலைவாசி காலநிலை காரணமாக இந்தக் கடன் தொகையிலிருந்து எடுத்து வேறு தவறுகச் செலவழித்துவிடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இன்றைக்கு இருக்கின்ற நிலைமையை அனுசரித்து, இப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது சலுகை அளிக்க சர்க்கார் முன் வருமா? 9-00 a.m.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நிலைமை எவ்வளவு தான் கெட்டுப்போயிருந்தாலும், ஒரு தொழிலுக்கு என்று கடன் வாங்கி அதை வேறு விதமாகச் செலவு செய்வது என்பது சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயம்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** சார், ஆரம்ப காலத்தில் குறிப்பிட்ட தொழிலுக்கு என்று கடனை வாங்கி, பின்னால் வேறு ஒரு தொழிலுக்கு உபயோகித்தால், கடன் வாங்கிய முழு தொகையையும் ஏக காலத்தில் திருப்பிக் கட்டவேண்டும் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி கடன் தொகையை தவணைகளாக திருப்பி செலுத்தலாம் என்றும், வேறு தொழிலுக்கு மாற்றிக்கொள்ளலாம் என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பு ஒரு முறை விடை அளித்திருக்கிறேன். ஒரு தொழிலுக்கு வாங்கிய கடனை வேறு தொழிலுக்கு உபயோகித்துக்கொள்ளவேண்டும் என்றால், அதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறாமல் வைப்பதாக இருந்தால் வாங்கிய கடன் முழுவதையும் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### அரிசனங்களுக்கு பஸ் உரிமம்

*** 261 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலிருந்து இதுவரைக்கும் அரிஜனங்களுக்கு கூட்டுறவு முறையில் கூட்டுறவு முறை இல்லாமல் கொடுக்கப்பட்டுள்ள பஸ் ரூட்டுகள், முறையே எத்தனை, மாவட்டவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the Table of the House.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் 12 மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் கோயம்புத்தூர், வட ஆற்காடு, திருநெல்வேலி இந்த மூன்று மாவட்டங்களிலும் தான் கூட்டுறவு முறையில் பஸ் ரூட் பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலிருந்து அரிஜனங்கள் கூட்டுறவு முறையில் பஸ் சர்விஸ் நடத்துவதற்கு முன் வரவில்லையா, அல்லது பஸ் ரூட் கேட்டு அரசாங்கத்தால் கொடுக்கப்படவில்லையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது இருக்கின்ற சட்டப்படி ஒரு சிலருக்குத்தான் கொடுக்கலாம் என்று முடிவு செய்வதற்கில்லை. மத்திய அரசாங்கத்தினிடம் இதைப்பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தின் சட்டம், இதை எந்த முறையில் திருத்தலாம் என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டத்தில் இடமில்லையென்றாலும், இனிமேல் திருத்தப்படுவதில், அரிஜனங்களுக்கு பெர்மிட் கொடுப்பதற்கு தனியாக இடம் பெறுமா ? இதன் அடிப்படையில் விதிமுறை செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டத்தை எப்படி மாற்றி அமைப்பது என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. 100-ல் பத்து வீதம் அதிகப்படுத்துவதாக இருந்தால், அதை அரிஜனங்களுக்கு என்று எப்படி ப்ரிஃபரன்ஸ் கொடுப்பது என்பதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** சார், மற்ற இலாகாக்களில் எல்லாம் அரிஜனங்களுக்கு சலுகை காட்டுவது போல், பஸ் ரூட் பெர்மிட் கொடுப்பதிலும் அரிஜனங்கள் அப்ளிகேஷன் செய்திருந்தால், இதில் ஓரளவுக்கு சட்டத்தில் இடம் இல்லையென்றாலும் ஒரு கன்வென்ஷன் என்ற முறையில் அரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று ஆர்.டி.ஏ.-க்களுக்கு உத்தரவோ அல்லது சர்குலரோ அனுப்பப்படுமா?

[a] Printed as Appendix III on pages 989-990.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உயர்நீதி மன்றங்களில் இதைப்பற்றி தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன, கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன, அரசாங்கம் இம்மாதிரி செய்வதற்காக ஆர்.டி.ஏ.-க்களுக்கு உத்தரவு போடுவது முறை அல்ல என்று.

### நிலவியல் ஆராய்ச்சி

*** 262 கேள்வி:—திரு. எம். எஸ். செல்வராஜன்**
**திரு. வை. சங்கரன்** } கனம் முதல் அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் பூகர்ப்ப சர்வே மேற்கொள்ளும்படி, ஐக்ய நாடுகள் சங்க நிபுணர் குழுவினரை நமது ராஜ்ய அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்பேரில் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவர்களது ஆராய்ச்சியின்பேரில் அறிக்கை ஏதேனும் சமர்ப்பித்துள்ளனரா ?

(உ) அவ்வறிக்கையின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government have requested the United Nations Special Fund to afford assistance for undertaking intensive geological investigations in the State and they have to take a decision on the request.

(*b*) & (*c*) Do not arise.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஸார், ஏற்கனவே பூகர்ப்ப சர்வே செய்திருந்தும், இப்போது நடத்துகின்ற சர்வேயில், புதிய கண்டுபிடிப்புகள் துலங்குகின்றன. இதிலிருந்து ஏற்கனவே நடத்திய சர்வே குறைபாடு உள்ளது என்று கொள்ளலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதில் 'டீட்டெய்ல்ட் இன்வெஸ்டிகேஷன்' முன்பு செய்தது 'ப்ரிமெச்சூர்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### மின்சார மோட்டார் பம்புகள்

*** 263 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64, 1964-65 ஆகிய ஆண்டுகளில் திருச்சி மாவட்டம் பெரம்பலூர், முசிரி ஆகிய ஒவ்வொரு வட்டங்களிலுள்ள குடியானவர்களுக்கு எத்தனை மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்பட்டது ?

(இ) வாங்கப்பட்ட பம்பு செட்டுகளில் இதுவரை எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது ?

[9th August 1966

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

**திரு. து. ப. அழகமுத்து :** ஸார், இந்த அறிக்கையின்படி, முசிரி, பெரம்பலூர் இந்த இடங்களில் 1963-64-ல் மொத்தம் 638 பம்பு செட்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டு, 579 பம்புசெட்டுகளுக்குத் தான் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1964-65-ல் 1,033 பம்பு செட்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டு இதுவரை 483 பம்புசெட்டு களுக்கு மட்டும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் மின்சார இணைப்புக்கள் காலதாமதம் ஆவதால் பயன் படுத்தாமலேயே இதற்கென்று வாங்கிய கடனைத் திரும்பக் கட்டு கின்ற தவணை வருகின்ற நிலைமையிருக்கிறது. காரணம் ஒரு டிப்பார்ட்மெண்டோடு இன்னொரு டிபார்ட்மெண்ட் கோ-ஆர்டி னேஷன் இல்லாமல் இருக்கிறது. இந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒரு இலாகாவுக்கு இன்னொரு இலாகா வோடு கோ-ஆர்டினேஷன் இல்லை என்று சொல்வது சரியல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மின்சார போர்ட் தலைவரிடம் இதிலுள்ள கஷ்டத்தைப் பற்றியும், காலதாமதத்தையும் எடுத்துச் சொல்லி, இதைத் தவிர்க்க முன் வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். மணி :** பெரம்பலூர் வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு கடன் கொடுப்பதை தற்காலிகமாக நிறுத்தியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் அரசாங்கம் கடன் கொடுப்பதற்கு ஏன் தயங்கு கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அழகமுத்து அவர்கள் ஏற்கனவே கொடுத்திருக்கின்ற பம்புசெட்டுகளுக்கே ஏன் மின்சார இணைப்புக் கொடுக்கப்படவில்லை என்று கேட்கிறார்கள். இன்னும் புதிதாக பம்புசெட்டுகள் கொடுத்தால் இந்தக் குறை இன்னும் ஜாஸ்தியாகும். கொடுக்கப்பட்ட மோட்டார்களுக்கு இணைப்பு கொடுத்ததற்குப் பின்னால் கடன் கொடுப்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

## சுப்பையா நகர்

*** 264 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், கிளியனூரை அடுத்த தானமா ரியத்தில் சுப்பையா நகர் என்பதொன்றை கனம் சுகாதார அமைச்சர் திறந்து வைத்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் முழு விபரம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

a Printed as Appendix IV on page 991.



9th August 1966]

(இ) திண்டிவனம் தாலுகாவிலுள்ள கிளியனூர் கிராமத்தின் குக்கிராமமாகிய தேவமானியத்தில் 'சுப்பையா நகர்' என்ற பெயரில் கிளியனூர் ஹரிஜன நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்தை 11-1-1965-ல் பொது நல அமைச்சர் திறந்துவைத்தார். அச்சங்கத்தின் உறுப்பினர்கள் 20 பேருக்கு ஒவ்வொருவருக்கும் 4 ஏக்கர் வீதம் இடைக்கால நில ஒப்படை ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஒரு கிராமத்திற்குப் பெயர் வைக்கும்போது, அங்கேயிருக்கக்கூடிய வீடுகளில் குடியிருக் கின்றவர்களுடைய எண்ணத்தை அனுசரித்து பெயர் வைப் பார்கள். இந்த இடத்தில் கிராமம் என்று கூட இல்லாத நிலையில் 'சுப்பையா நகரம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இப்படிப்பட்ட ஊரோ அல்லது வீடுகளோ இல்லாமல் இப்படி பெயர் வைக்கக் காரணம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்குள்ள மக்கள் அபிப்பிராயப்படி பெயர் வைக்கிறார்கள். இந்த இடத்தில் வேண்டுமென்றே சுப்பையா நகர் என்று பெயர் வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்த சுப்பையா என்பவர் அரசியல் தியாகியா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவசியமா, அவசியமில்லையா என்பதைப்பற்றி லான்ட் காலனைஸேஷன் செய்யப்போகும் மக்களுடைய மனதைப் பொறுத்தது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** நான் கேட்டது அதுவல்ல. . .

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த நகரத்திற்கு பெயர் வைக்கப்பட்டிருக்கின்ற 'சுப்பையா' என்பவர் அரசியல் தியாகியா, அவர் யார்?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த சமயத்தில் அங்கு கலெக்டராக வேலை பார்த்து வந்தவர்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், ஏற்கனவே சென்னை மாநகரத்தில் ராஜரத்தினம் என்பவருடைய பெயரை வைத்த நேரத்தில் அரசாங்கம் ஒரு உத்தரவிட்டிருந்தது. அதாவது பொது இடங்களுக்கு சர்க்கார் அதிகாரிகளுடைய பெயர்களை வைக்கக்கூடாது என்று உத்தரவிட்டு இருந்தது. இதில் அந்த உத்தரவு அனுசரிக்கப்பட்டதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தக் தகவல் இப்போது என்னிடம் இல்லை. . .

**கனம் சபாநாயகர் :** யார் இந்த இடத்திற்கு எல்லாம் பெயர் வைப்பது? யாருக்கு இந்த அதிகாரம் இருக்கிறது?

**திரு. இராம. அரங்கண்ணல் :** அந்தந்த ஊர்க்காரர்களே பெயர் வைக்கிறார்கள். ஆனால் சர்க்கார் அதிகாரிகளுடைய பெயர் இருந்தால் அதை அனுமதிக்கக்கூடாது என்று சர்க்கார் இதற்கு முன்னால் உத்தரவிட்டிருக்கிறார்கள். . .

[9th August 1966

**கனம் சபாநாயகர் :** இதற்கென்று தனியாக ஏதாவது சட்டம் இருக்கிறதா ?

**திரு. இராம. அரங்கண்ணல் :** இதற்கு முன் சென்னைமா நகரத்தில் ராஜாரத்தினம் என்பவருடைய பெயர் வைத்த காலத்தில். . .

**கனம் சபாநாயகர் :** அது வேறு விஷயம். நான் கேட்பது என்னவென்றால் சாதாரண கிராமங்களில் அங்கேயிருக்கின்றவர்கள் என்னென்ன பெயரையோ வைத்துக்கொள்கிறார்கள். ஏதாவது ஒரு ஊரில் ' சபாநாயகர் நகர் ' என்று பெயர் வைத்துக் கொண்டால் நான் என்ன பண்ணுவது? (திரு. இராம அரங்கண்ணல் : சபாநாயகர் அவர்களை அதிகாரி என்று எடுத்துக் கொள்வதற்கில்லை.) இதற்கென்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்று தான் கேட்டேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், சர்க்கார் அதிகாரிகளுடைய பெயர்களைப் பொது இடங்களுக்கு வைக்கக் கூடாது என்று சர்க்கார் முன்பு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி யாராவது அதிகாரிகளுடைய பெயர்களை உபயோகப்படுத்துவதாக இருந்தால் அதை அங்கிருக்கின்ற சர்க்கார் அதிகாரி தடுத்திருக்க வேண்டும். அந்த முறையில் சுப்பையா என்பவர் மாவட்ட கலெக்டராக இருந்திருந்த நேரத்தில் தன் பெயரை வைக்கப்போகிறார்கள் என்பதைத் தெரிந்து அதை மறுத்திருக்கவேண்டும். அந்த முறையில் சர்க்கார் உத்தரவு இதில் மீறப்பட்டிருக்கிறதா என்பது தான் என்னுடைய கேள்வி.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், இந்த இடத்தில் சர்க்கார் பட்டா வழங்கும்போது எந்தவிதமான பெயரும் போடப்படவில்லை. பட்டா எல்லாம் வழங்கிய பின்னால் அங்குள்ள ஜனங்கள் ஜில்லா கலெக்டர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று விரும்பி அவ்விதம் வைத்திருக்கிறார்கள். பட்டா வழங்குவதற்கு முன் சுப்பையா நகர் என்று பெயர் போட்டு கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அரிசன சேவக் சங்கம்

* 265 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) சென்னையிலுள்ள ஹரிஜன சேவக் சங்கம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம் ஆகிய ஒவ்வொன்றிற்கும் 1965-66-க்கு அரசாங்கத்தால் எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டது ?

(இ) மேற்படி நிறுவனங்கள், அளிக்கப்பட்ட நிதி உதவியை எவ்வாறு செலவு செய்தன என்ற விவரம் சபைமுன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) சபைமுன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

a 991–993வது பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



9th August 1966]

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இந்த இரண்டு சங்களுக்கும் 1965-66-ல் ஹரிஜன சேவக் சங்கம், சென்னை-க்கு ரூ. 9,000 கொடுக்கப்பட்டிருக்கிறது, தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம், சென்னைக்கு ரூ. 11,900 கொடுக்கப்பட்டிருக்கிறது இந்த சங்கங்கள் சர்க்கார் அங்கிகாரம் பெற்றனவா ? அவைகளில் நிர்வாகிகள் யார் ? கொடுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்று, தணிக்கை செய்பவர் யார் என்று கூறுவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த இரண்டு ஸ்தாபனங்களும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள். தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்திற்குத் தலைவர் திரு. என். எம். ஆர். சுப்பராமன்; தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கத்திற்குத் தலைவர் மதிப்புக்குரிய அங்கத்தினர் பரமேஸ்வரன் அவர்கள்.

**திரு. வை. சங்கரன் :** ஸார், ஹரிஜன சேவக் சங்கத்தினால் நடத்தப்படும் மாணவ விடுதிகளில் மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் உதவியானது சர்க்காரால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ளதைவிட 2-3 ரூபாய் குறைவாக இருப்பதாகக் குறை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? மெயின்டினன்ஸ் கிரான்ட்டும் குறைவாக இருக்கிறது என்ற குறை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதை அரசாங்கம் பரிசிலித்ததா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே அரசாங்கம் பரிசீலனை செய்தது. அரசாங்கத்தின் நிதி நிலை காரணமாக உயர்த்த முடியவில்லை. நிதி நிலையைப் பொறுத்து பின்னால் பார்க்கலாம்.

### *Pay scales of Police personnel*

* 266 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have proposed to increase the pay scales of Police personnel in the State; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) அரசாங்கம் 'ஹெட் கான்ஸ்டபிள்கள்', 'போலீஸ் கான்ஸ்டபிள்கள்', 'லான்ஸ் நாயக்குகள்', 'நாயக்குகள்', ஆகியோரின் சம்பள விகிதத்தைப் பின் வருமாறு மாற்றியமைத்துள்ளது:—

| | முந்திய சம்பள விகிதம். | புதிய சம்பள விகிதம், |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 'போலீஸ் கான்ஸ்டபிள்கள்' 'லான்ஸ் நாயக்குகள்' | 65—1—70—2—90 | 70—1—75—2—95 |
| 'ஹெட் கான்ஸ்டபிள்கள்' 'நாயக்குகள்' | 85—2—105 | 90—2—110 |

மேலே குறிப்பிடப்பட்ட புதிய சம்பள விகிதம், 1-6-1966 முதற் கொண்டு, அதாவது 1-7-1966-ல் வழங்கவேண்டிய 1966 ஜூன் மாதச் சம்பளத்திலிருந்து செயலுக்கு வந்தது. போலீஸ்

துறையில் ஹெட்கான்ஸ்டபிள்கள் நிலைக்கு மேற்பட்ட பிற பணியாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. வை. சங்கரன்:** போலீஸ் அலுவலர்கள் வெளியிடங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் குறைவாக இருக்கிறது என்று முன்பே கூறப்பட்டது. அவைகளையும் அதிகரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஓரளவு கூட்டியிருப்பதாக ஞாபகம். தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

### *Chemical fertilisers*

* 267 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that two wagon loads of about 810 bags of chemical fertilisers were seized recently at Somanur Railway Station, near Coimbatore by the Vigilance Cell of the C.I.D. Police as booked without valid permits; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) A case against the persons who booked the fertilisers for contravening provisions of the Fertiliser Control Order, 1957 has been filed and is pending disposal in the District Magistrate's Court at Coimbatore.

**திரு. வை. சங்கரன்:** யார் அந்த நபர்கள்? அதோடு ரெயில்வே அதிகாரிகளும் உடந்தை என்று விசாரித்துக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கேஸ் கோர்ட்டில் இருப்பதால் இப்போது சொல்லுவதற்கில்லை.

### *சிதம்பரம் தாலூகாவுக்கு டிராக்டர்கள்*

* *268* **கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியம்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலூகாவிற்கு 1965-66-ல் விவசாயத்திற்காக வாடகைக்கு விடும் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட டிராக்டர்கள் எத்தனை?

**கனம் திரு. பூ. கக்கன்:** இரண்டு.

### *Water for irrigation*

* 269 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any scheme has been envisaged and undertaken to tap underground water to supplement irrigation in the various delta-areas of the State; and

(*b*) if so, the details thereof?





THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The following schemes have been envisaged or undertaken to tap ground water to supplement irrigation in this State.

(1) The United Nations Development Programme Ground Water Project, which envisages the investigation of Ground Water potentialities in the region in and around Madras City, Palar river basin, Neyveli area and Cauvery Delta is under execution from 17th March 1966.

(2) A comprehensive survey and investigation of ground water in Madras State is proposed to be undertaken with the assistance of Government of India. This survey will cover dry areas in Coimbatore, Tiruchirappalli, North Arcot, Chingleput and Ramanathapuram districts and part of Tirunelveli and Kanyakumari districts during the Fourth Five-Year Plan, where surface water availability is limited.

(3) A scheme for ground water investigation and construction of tube wells in the Thanjavur district, for the improvement of agriculture, irrigation and drainage in the delta for being proposed for World Bank Aid is also under contemplation.

(4) A scheme of the Agriculture Department for sinking filter points in Thanjavur district is in operation now and so far a total number of 2,027 filter points have been sunk. During the Fourth Five-Year Plan period 5,500 borewells, 50 State tube wells and 2,000 filter points are to be sunk throughout the State. About 300 bore wells are proposed to be sunk in the year 1966–67 in Thanjavur district.

**திரு. வை. சங்கரன்:** ஒவ்வொரு இடத்திலும் அந்த ஆராய்ச்சியை இந்தக் காலவரையறைக்குள் முடிக்கவேண்டுமென்று ஏதாவது உத்தேசிக்கப் பட்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா:** இது போன்ற ஆராய்ச்சிக்கெல்லாம் காலவரையறையை முன் கூட்டியே சொல்லிவிட முடியாது. கிடைக்கக் கூடிய விவரங்களை வைத்துத் தொடர்ந்து செய்யவேண்டும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** திருநெல்வேலி ஜில்லாவில் எந்தப் பகுதிகளில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது? அது பலன் அளிப்பதாக இருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா:** பல ஸ்கீம்கள் உருவாகும்போது சில வரண்ட பகுதிகளாகப் பார்த்து ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** இந்த மாதிரி குழாய்க்கிணறுகள் இறக்கி மின்சார மோட்டார்கள் வைத்தும் இது வரையில் கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவைகளுக்கு கனெக்ஷன் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[9th August 1966

**கனம் திரு. வெ. ராமைய்யா:** நான் இப்போது பதில் சொன்னது பூராவும் மிகத் தீவிரமான ஆராய்ச்சித் திட்டங்கள். கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்வி தற்சமயம் ஃபில்ட்டர் பாயின்டஸ் பம்ப்செட் வைத்து கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருப்பது பற்றியது. அதைப்பொறுத்த வரையில் மின்சார போர்டோடு கலந்து தொடர்ந்து பரிசிலனை செய்து கனெக்ஷன் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**திரு. செ. மாதவன்:** பூமிக்கு அடியில் உள்ள தண்ணீர் ஓட்டத்தைக் கணக்கெடுத்துக் கண்டுபிடிக்க நவீன சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டனவா? அவைகளின் பலன் கிடைத்திருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** அந்த அடிப்படையில்தான் இந்த இந்த ஆராய்ச்சிகள் நடக்கின்றன. யுனைட்டெட் நேஷன்ஸ் ஸ்பெஷல் ஃபண்டிலிருந்து கருவிகள், யந்திரங்கள் கிடைத்து ஆராய்ச்சிகளெல்லாம் நடந்திருக்கின்றன.

### கிராம அதிகாரிகள் வேலை நீக்கம்

*270 கேள்வி.—**திரு. செ. மாதவன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு, பிப்ரவரி திங்களில் ஏராளமான கிராம அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா?

(இ) அதன் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) No, Sir.

(b) Does not arise.

### *Tharumathupatti-Panrimalai road*

*271 *Q.*—SRI S. NANJUNDA ROW: Will the Hon. the Minister for Food be pleased to state whether the Government have proposed to include the formation of a new road to Panrimalai from Tharumathupatti in Dindigul taluk in the Fourth Plan?

THE HON. SRI V. RAMAIAH: The work of forming a road from Mallayapuram in the plains to Panrimalai and on to Pachalur has been proposed in the draft Fourth Five-Year Plan. The work will be taken up for execution, subject to availability of funds and its relative priority.

### ஸ்ரீகாளத்திநாதர் கோயில் நிலம்

*272 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகா பனப்பாகம் கிராமத்திலுள்ள ஸ்ரீகாளத்திநாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பஞ்சாயத்து போர்டு பலவந்தமாக



9th August 1966]

எடுத்துக்கொண்டதை எதிர்த்து அக்கோயில் நிர்வாகியாரால் மனு ராணிப்பேட்டை ரெவின்யூ டிவிஷனல் ஆபிசருக்கு ஏதேனும் 10-3-1965 அன்று கொடுக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) The inam in question has vested in the Government free of all encumbrances with effect from 15th February 1965 according to Section 3 (b) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. The Assistant Settlement Officer, Madras, has been requested to initiate action under the provisions of the Act.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இன்னும்கூட கோவில் நிலத்தை பஞ்சாயத்து போர்டு ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. கோவில் நிர்வாகிகள் அரசாங்கத்திற்கு ஏதாவது தாக்கீது அனுப்பி வைத்தார்களா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** நான் சொன்ன விவரத்தைவிட மேலே ஒன்றும் இல்லை.

### தாம்பிரபரணி கால்வாய்

*273 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி கால்வாய்களின் புனரமைப்பு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டனவா?

(இ) இல்லை எனில் காரணமென்ன, எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

(உ) மேற்படி கால்வாய் வேலைகள் புனரமைப்பிற்காக பொதுப்பணித் துறை ஸ்பெஷல் டிவிஷன் ஒன்றும் நிறுவும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை. இவ்வேலைகள் சிறிய பாசன விசேஷ திட்ட நிர்வாக பொறியாளரால் செயலாக்கப்படுகின்றன.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** இவ்வேலைகளுக்கெல்லாம் மொத்தத்தில் எவ்வளவு தொகை எஸ்டிமேட் செய்யப்பட்டிருக்கிறது? வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 2-3 ஆண்டுகள் ஆகியும் பூர்த்தியாகாத காரணம் என்ன? தண்டத் தீர்வைக்கும் கால்வாய் புனரமைப்புக்கும் சம்பந்தம் இருப்பதால் துரிதமாக வேலையை முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

[9th August 1966

கனம் திரு. வெ. ராமையயா: மொத்தம் எவ்வளவு அனும திக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இந்த வேலைகள் நிர்ணயிக்கப்பட்ட முறைப்படித்தான் நடந்துகொண்டி ருக்கின்றன.

### நாங்குநேரி தாலூகா

* 274 கேள்வி.—திரு. எ. சுவாமிதாஸ்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) நாங்குநேரி தாலுகாவை கன்னியாகுமரி மாவட்டத் துடன் இணைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

(இ) ஆமெனில், எப்போது இணைப்பு ஏற்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (a) No.

(b) Does not arise.

### அரசாங்க பஸ்களால் விபத்துகள்

* 275 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:

(அ) 1964-65-ல் சென்னை நகரத்தில் ஓடும் அரசாங்க பஸ்களில் அடிபட்டவர்கள், காயம் பட்டு இறந்தவர்கள் முறையே எத்தனை பேர்கள்?

(இ) இறந்தவர்கள், காயம் அடைந்தவர்கள் யாருக்கேனும் நஷ்டஈடு கொடுக்கப்பட்டுள்ளதா? ஆமெனில் எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH: (a) Number of persons injured—265. Number of persons injured and died—18.

(b) Yes. Compensation has been paid in 13 cases. The total amount paid is Rs. 37,940.57.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்த விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் அரசாங்க பஸ்களை வேகமாக ஓட்டுவது தான் என்று புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? வேகமாக ஓட்டுவதைக் கொஞ்சம் மெதுவாக ஓட்டும்படி சர்க்கார் சிபார்சு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையயா: வேகமாக ஓட்டுவது மட்டும் காரணமாக இருக்க முடியாது வேறுபல காரணங்கள் இருக் கின்றன.

### Food poisoning

* 276 Q.—SRI V. SANKARAN:
SRI T. P. ALAGAMUTHU:
SRI A. K. SUBBIAH:
SRI M. KARUNANITHI:
} Will the Hon. the Minister for Public Health be pleased to state—



9th August 1966]

(a) whether it is a fact that an incident of food poisoning occurred in a Government Girls' High School Hostel at Usilampatti, Madurai district;

(b) if so, the details thereof and the causes therefor; and

(c) the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Yes.

(b) 341 inmates developed vomiting after taking Chapathi and Tomato chatini. The samples of prepared food 'Chapathi', tamarind, turmeric, raw tomato, groundnut oil, wheat, wheat flour were sent to the Forensic Laboratory, Madras, and to the King Institute, Guindy, for analysis. The Government Analyst, King Institute, Guindy, has stated that the samples of wheat and wheat flour have been analysed and found to be free from chemical poisons. The samples of prepared food 'Chapathi', tamarind, turmeric, raw tomato, and groundnut oil are found on analysis to be normal.

(c) The District Health Officer, Ramanathapuram in charge for Madurai district has taken all precautionary measures in the matter.

திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி எப்படி ஏற்பட்டது? இந்த உணவை அந்தப் பள்ளியில் யார் கொடுத்தது? அதுபற்றி விசாரிக்கப்பட்டதா? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: புட் பாய்ஸனிங் இல்லை என்று சொன்னார்கள். இன்டைஜெஷனால் வாந்தி வந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, எல்லோரும் சௌகரியமாக வந்து சேர்ந்துவிட்டார்கள். காரணம் என்னவென்றால் பையன்கள் அன்று சாயந்திரம் வேர்க்கடலையை வேகவைத்து சாப்பிட்டிருக்கிறார்கள். அதற்கப்புறம் சப்பாத்தி, சட்னி எல்லாம் சாப்பிட்டதால், அஜீர்ணம் ஏற்பட்டு வாந்தி எடுத்திருக்கிறார்கள். புட் பாய்ஸனிங்குக்கும் அதற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இவ்வளவு மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியபடி எல்லா மாணவர்களும் வேர்க்கடலையைச் சாப்பிட்டார்களா, அல்லது வேகவைத்த வேர்கடலையும் அந்த உணவோடு சேர்த்து கொடுக்கப்பட்டதா? அல்லது அந்த உணவு சப்ளை செய்த காண்டிராக்டருடைய கோளாரின் காரணமாகத் தான் இந்த பாய்ஸனிங் ஏற்பட்டதா? என்பதையும் விசாரித்தார்களா? பிரகாஷனரி ஆக்ஷன் எடுத்துவிட்டால் மட்டும் போதாது. மூல காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து, அந்த காண்டிராக்டை கான்ஸல் செய்தாரா அந்த அதிகாரி என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: காண்டிராக்ட் பேஸிஸில் சாப்பாடு போடுகிற ஹாஸ்டல் அல்ல அது. அங்கேயே காய்கறி விளைகிறது. சமையல்காரர்களும் இருக்கிறார்கள்.

[9th August 1966

பையன்களும் 'பை டர்ன்ஸ்' சமைக்கிறார்கள். சாயந்திரம் எல்லா ஹாஸ்டலிலும் வழக்கமாக டிபன் கொடுப்பது போல, அன்றைக்கு டிபன் வேர்க்கடலை இருந்தது. எல்லா பையன்களும் சாப்பிட்டார்கள். இரவு உணவோடு வேர்க்கடலை சேர்த்துக் கொடுக்கப்படவில்லை. மூலகாரணம் அஜீரணம். வேறு ஒன்றும் இல்லை.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** கனம் தலைவர் அவர்களே, 341 பேர்களும் வேர்க்கடலையைச் சாப்பிட்டவர்கள் இல்லை. ஒரு சில பேர்களுக்குத் தான் அந்தக் கடலை கிடைத்தது. அது ஒரு உணவாகக் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் கூட, அங்கே சமையல் அறை மிகவும் அசுத்தமான நிலையில் இருக்கிறது. அங்கிருக்கிற நச்சுப்பொச்சு விழுந்திருக்கிறது காய்ந்த எண்ணெயில் என்ற நிலை தான் அங்கு சொல்லப்படுகிறது. இனியாவது அந்த இடத்தில் சமையல் அறையை சமையலுக்கு லாயக்கு உள்ளதாக ஆக்குவதுபற்றி அரசாங்கம் முயற்சிக்குமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அங்கு இருக்கக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகம். அதற்கேற்றபடி வசதி இல்லை. அது உண்மை. சமையல் அறை ரொம்ப சுத்தமானது தான். நான் நேரில் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** இனிமேலாவது அந்தச் சாப்பாடு ஆபீசர் சப்பாத்தியும் வேர்கடலையும் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போடுவாரா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சப்பாத்தியுடன் கூட வேர்க்கடலை கொடுக்கவில்லை என்று தான் சொன்னேன். ஆகவே, இனிமேல் அம்மாதிரி கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போடுவதற்கு இடமில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, 341 பேர்கள் பாதிக்கப்பட்டனர் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 341 பேர்களுக்கும் அஜீரணம் காரணமாக இது ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். அஜீரணம் என்பது உடற்கூறைப் பொருத்த ஒன்று. எல்லோருக்கும் அஜீரணம் எப்படி ஏற்படமுடியும்? எல்லோருமே அளவுக்கு மீறி உண்டார்களா? ஒரு சிலர் தான் அளவுக்கு மீறி உண்டிருப்பார்கள். அவரவர்கள் அவரவரது வயிற்றுக்கு வேண்டிய அளவு தான் உண்பார்கள். அதனால் எல்லோருக்கும் அஜீரணம் காரணம் என்று கூறமுடியுமா? உணவில் நஞ்சு ஏதாவது கலந்து இருந்திருந்ததா என்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டதா? அப்படி ஆராய்ச்சி செய்யப்பட்டு அஜீரணம்தான் காரணம் என்ற அளவுக்கு பதில் வந்திருக்கிறதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அஜீரணத்தினால் முதலில் 20, 25 பேர்கள் வாந்தி எடுத்திருக்கிறார்கள். அங்கே பாத்ரூமில் சரியான வசதி இல்லை. ஒருவர் பின்னால் ஒருவர் சென்றதால் இன்பெக்ஷன் காரணமாக வாந்தி எடுத்திருக்கலாம். ஆனால் அஜீரணத்தினால்தான் இதெல்லாம் ஆயிற்று. இந்த புட்



9th August 1966]

எல்லாம் கிண்டியிலும் சரி, போரென்ஸிக் லேபோரட்டரியிலும் சரி அனலிஸிஸ் பண்ணி வந்திருக்கிறது. இதுவரையில் பாய்ஸனிங் ஒன்றுமில்லை என்று ரிப்போர்ட்டு வந்திருக்கிறது. நானும் மறுநாள் போய் பார்த்தேன். பையன்கள் நல்ல ஹெல்தியாகத் தான் இருந்தார்கள்.

* 277 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to undertake a study of infections of Selmonella (food poisoning group organisms) in the State; and

(b) if so, the details thereof and the nature of work to be carried on thereat?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சங்கரன் :** ஃபுட் பாய்ஸனிங் என்பது குறிப்பாக மாணவர்களுடைய விடுதிகளில் ஏற்படுவதன் காரணமாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து ஆராய்ச்சி செய்வதற்கு அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்யுமா?

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள் முன்பு கேட்ட மூலக் கேள்வியையே திருப்பிச் சொல்லுகிறார்கள். முன்பு ஆங்கிலத்தில் போட்ட கேள்வியைத் தமிழில் கேட்கிறார்கள்.

*Paucity of X-ray Films*

* 278 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware of the delay and the consequent suffering and hardship caused to patients in need of neuro-surgical and thoracic-surgical treatment due to paucity of X-Ray Films in Hospitals in the State: and

(b) if so, the measures the Government have proposed to take for assuring adequate supply of the same?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) இம் மாநிலத்தில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில், 1965 நவம்பர் முதல் 1966 ஜனவரி வரை X-கதிர் பிலிம்களுக்குத் தட்டுப்பாடு இருந்த போதிலும், மூளை அறுவைச் சிகிச்சை, அல்லது மார்புப் பகுதி அறுவைச் சிகிச்சை தேவைப்பட்ட நோயாளிகளுக்கு அதனால் இடர்ப்பாடு ஏற்பட்டதாக அரசாங்கத்தின் கவனத்திற்குத் தகவல் எதுவும் கொண்டுவரப்படவில்லை.

(இ) X-கதிர் பிலிம்களுக்குள்ள தட்டுப்பாட்டினைப் போக்குவதற்காக, இந்திய அரசைச் சேர்ந்த சுகாதார அமைச்சகத்திற்கும், இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாடு அதிகாரிக்கும் எழுதப்பட்டுள்ளது. பிலிம்கள் வழங்கும் நிறுவனங்களின் பிரதி

[9th August 1966

நிதிகளும், மருத்துவ மனை அதிகாரிகளுடன் ஒத்துழைத்து, தங்குதடையின்றி பிலிம்களைத் தொடர்ந்து வழங்கிவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளினால் நிலைமை மிகவும் சீரடைந்துள்ளது. மருத்துவ மனைகளுக்கும் போதுமான X கதிர் பிலிம்கள் தற்போது கிடைத்து வருகின்றன.

*Army Medical Corps*

* 279 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have proposed to introduce new concessions by way of incentives to doctors offering to join the Army Medical Corps; and

(b) if so, the details thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) & (b): The Government granted the following concessions to induce doctors to join the Army Medical Corps:—

(i) A family allowance of Rs. 250 per mensem to the doctors of the Madras Medical Service whether temporary or regular who joined the Army.

(ii) Reservation of 50 per cent of vacancies in the cadre of Assistant Surgeons for doctors who rendered military duty in connection with the emergency which arose in 1962 and 1965.

திரு. வை. சங்கரன்: இந்த பாமிலி அலவன்ஸ் ரூ. 250 போன ஆண்டு செப்டம்பரிலிருந்து இதுவரைக்கும் கொடுக்கப்படவில்லை, அவர்களுக்குச் சேரவில்லை என்ற புகார் வந்திருக்கிறதா? அதை சர்க்கார் பரிசீலித்து வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மாதிரியான தகவல் கிடைக்கும்பொழுது அவ்வப்பொழுது கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

*Medical Colleges*

*280 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of posts in the cadre of Reader and Assistant Reader sanctioned in the Department of Pharmaceutics in Madurai Medical College; and

(b) the reason for the delay, if any, in appointing candidates to those sanctioned posts?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) Three posts of Readers and seven posts of Assistant Readers.

(b) Appointments to these posts could not be made as qualifications, method of recruitment, etc., had to be settled first.



9th August 1966]

திரு. செ. மாதவன்: இப்படி போஸ்டுகள் அனுமதிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே சொன்ன மாதிரி இந்த மெதெட் ஆப் ரெக்ரூட்மெண்டு, குவாலிஃபிகேஷன் இவைகளையெல்லாம் டிஸைட் பண்ணின பிறகுதான், அவர்களை அப்பாயிண்ட் செய்ய முடியும்.

* 281 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 கல்வியாண்டிலிருந்து 1965 கல்வியாண்டுவரை எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில், ஆதித்திராவிட மாணவர்கள் எத்தனைபேர்?

(உ) எத்தனை சதவிகிதம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) 1,841.

(இ) 164.

(உ) 9 சத விகிதம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் இடம் கொடுக்கும்பொழுது 16 சதவிகிதத்திற்குக் குறையாமல் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். மொத்தம் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று வெளிவந்த டாக்டர்கள் 1,841 பேர்களில், 164 பேர்கள்தான் ஆதிதிராவிடர்கள் என்று சொல்கிறார்கள். சதவிகிதத்தைக் கேட்டால் 9 சதவிகிதம் சொல்லியிருக்கிறார்கள். பதினாறு சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பதினாறு சதவிகிதத்தினருக்கு அட்மிஷன் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தும், சிலர் தேறவில்லை என்றால் யார் பொறுப்பு? அதனால் தான் 9 சதவிகிதம் இருக்கிறது.

* 282 Q.—Sri K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of students admitted in Medical Colleges in the State in 1965–66, from among the Harijans, the Backward Communities and Forward Communities?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஹரிஜனங்கள் 135.

பின்னிலை வகுப்பினர் 230.

முன்னிலை வகுப்பினர் 554.

[9th August 1966

திரு. கி. இரா. சம்பந்தம் : சார், இந்த அரிசனங்களுக்கு என்று
9-30 a.m. ஒதுக்கப்பட்ட சதவிகிதம் மாணவர்கள் எடுக்கப்பட்டார்களா? எடுக்கப்படாத சதவிகிதம் மற்ற முற்போக்கு மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா அல்லது பார்ஃக்வேர்ட் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதத்தில் முழுக்க முழுக்க அவர்கள் எடுக்கப்பட்டார்கள். அதோடு அல்லாமல், மெரிட் பேஸிஸில் ஜெனரல் பூலிலும் எடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய 16 சதவிகிதம் எந்தவகையிலும் குறைக்கப்படவில்லை.

* 283 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Central Government have offered any financial aid to the State Government for starting new medical colleges; and

(*b*) if so, the action taken by the State Government thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) The details regarding the new medical colleges to be started during the Fourth Five-Year Plan period have been furnished to the Government of India.

திரு. வை. சங்கரன் : எந்த அடிப்படையில் இந்த உதவி மத்திய சர்க்காரால் கொடுக்கப்படும், இத்தனை கல்லூரிகளுக்கு என்று அல்லது ஒரு கல்லூரிக்கு இவ்வளவு என்று?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான்காவது திட்டத்திலே இந்தியா பூராவிற்கும் 39 மருத்துவக் கல்லூரிகளுக்கு உதவியளிக்க வேண்டும் என்பது திட்டம். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் மூன்று கல்லூரிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆனால், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியும் நான்காவது திட்டத்தில் வருவதாக இருந்தது, மூன்றாவது திட்டத்திலேயே வந்துவிட்டது. இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கு அவர்களுடைய கன்கரன்ஸைக் கோரி எழுதியிருக்கிறோம். அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம்.

### குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை

* 284 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடிய தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட ஆண், பெண் முறையே எத்தனை பேர்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A statement * is placed on the Table of the House.

* Printed as Appendix VI at pages 993-994.



9th August 1966]

திரு. சோ. ஆறுமுகம் : ஆண்களைவிட பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கை எடுப்பது நலம் என்ற கருத்து இருக்கிறது. ஆனால், இந்த அறிக்கையில் பெண்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ மனைக்குச் சென்றால், ஒரு நாளைக்கு 20 பேர்களுக்குத்தான் சிகிச்சை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, இதற்கென்று தனியாக ஒரு ஆஸ்பத்திரியை வைக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பெண்கள், ஆண்கள் இரண்டு பேர்களுமே செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. அதிகம், குறைவு என்பதெல்லாம் அவரவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. இன்றைக்கு இருக்கக்கூடிய மருத்துவ மனைகளில் ஸ்பெஷலாக டாக்டர்கள் போட்டு, இதற்கென்று தனியாக டைம் வைத்துக் கொண்டு அறுவை சிகிச்சை செய்கிறார்கள். பெண்கள் குறைவாக இருக்கிறார்கள் என்றால், அதற்கு ஆண்கள்தான் காரணம் என்று நினைக்கிறேன்.

திரு. செ. மாதவன் : குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் 'லூப்' முறையை அமல்படுத்த மத்திய சர்க்கார் ஏதாவது திட்டம் வகுத்து நிதி ஒதுக்கியிருக்கிறதா? நம் மாநில அரசு எந்த வகையில் அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 'லூப்' முறையை மத்திய சர்க்கார் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் அவசரப்பட்டுச் செய்ய வேண்டாம் என்று மூன்று ஜில்லாக்களில் மட்டும், ஸ்பெஷலிஸ்டுகள் இருக்கும் தாலூகா, ஜில்லா ஆஸ்பத்திரிகளில் செயல்பட்டு வருகிறது. மற்ற இடங்களுக்கு மெதுவாக எக்ஸ்டென்ட் செய்ய வேண்டும் என்கிற உத்தேசம் இருக்கிறது.

### பாலர் விகாரம்

* 285 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை கோட்டையில் வேலை செய்யும் திருமணமான பெண்களின் நலனுக்காக பாலர் விகாரம் (                ) ஒன்றை கோட்டையில் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

(இ) ஆமெனில் எப்போது நிறுவப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணிசெய்தால் குடும்பப் பொருளாதாரம் நல்ல முறையில் அமையும் என்று அதிகமாகப் பெண்கள் பணிமனைகளில் பணிபுரிந்து வருவதால், இன்றைக்கு செக்ரடேரியட்டில் கூட அதிகமாகப் பெண்கள் பணி புரிந்து வருவதை

முன்னிட்டு, அவர்கள் அடிக்கடி தங்கள் குழந்தைகளைப் பார்த்து வந்தால் நல்ல முறையில் பணிபுரிவார்கள் என்ற உத்தேசத்திலாவது, இங்கெல்லாம் பாலர் விடுதிகள் ஏற்படுத்த நம் சுகாதார அமைச்சர் முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த உத்தியோகம் செய்யும் பெண்களுடைய சௌகரியத்திற்காக 'க்ரீசே' ஆரம்பிக்க வேண்டியதுதான். ஆனால், இங்கே கோட்டையில் ஆரம்பிப்பது உசிதம் இல்லை என்று நினைக்கிறேன்.

### *Beggar Homes*

* 286 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the estimated number of able bodied, diseased, and invalid beggars respectively found in Madras City; and

(b) the number of Care Homes together with their capacities to take in these beggars?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) முறையே 1,256, 274, 288.

(இ) சென்னையில் இரண்டு பிச்சைக்கார விடுதிகள் உள்ளன. சென்னை கார்ப்பரேஷன் பிச்சைக்கார விடுதியில் 300 நபருக்கும் தயாசதன் விடுதியில் 600 நபருக்கும் இடமுள்ளன.

திரு. வை. சங்கரன்: சென்னையை எடுத்துக் கொண்டால் 1,800 பேர்களுக்கு மேல் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் உடல் நலம் குன்றியவர்களும், உடல் நலம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்காக தனித்தனி ஹோம்கள் வைத்திருக்கிறோம். இவர்களை தரப்படி சட்டத்தின் கீழ் பிடித்து வைக்க சர்க்கார் என்னென்ன ஏற்பாடு செய்கிறார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதற்கெல்லாம் என்னென்ன செய்யவேண்டும் என்று பார்த்து 'பெக்கர் ந்யூசன்சை'ப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: சார், சென்னை நகரத்தில் நிறைய பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தடுக்க என்ன திட்டம் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மெட்ராஸ் ப்ரிவென்ஷன் ஆப் பெக்கிங் ஆக்ட், 1945, என்கிற சட்டத்தை அமண்ட் செய்து, 1—5—1966 முதல் அமலுக்கு வந்திருக்கிறது. அந்தச் சட்டப் பிரகாரம் அவர்களை, ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஹோம்களில் பிடித்து வைக்க வேண்டும். பிடித்துப் போடுகிறோம். உடல் நலம் உள்ளவர்களுக்கு ஏதாவது உத்தியோகம் வாங்கிக் கொடுக்க வேண்டும். பிடித்துக் கொண்டு வைத்தாலும் அவர்கள் ஓடிப் போய் விடுகிறார்கள். போலீஸ் உதவியோடு என்னென்ன செய்ய வேண்டுமோ அந்த வகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



### *Government Hospitals*

* 287 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the attention of the Government has been drawn to the fact that due to low voltage electric supply there have been occasional breakdown of power supply hampering operation cases and also to the non-usage of the modern sterilizer gifted by the World Health Organisation in Kumbakonam Government Hospital, and if so, the action proposed thereon?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : The low voltage electric supply or the occasional breakdowns of power supply has not, in any way handicapped operation cases in the Government Hospital, Kumbakonam. The bowl steriliser supplied to the hospital by the UNICEF is not indispensable for surgery cases. However, action to obtain high voltage (440 volts) electric supply for the equipment is being taken.

திரு. வை. சங்கரன்: இந்த ஸ்டெரிலைசர் வெகுமதியாகக் கிடைத்தும் இன்னும் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கிறது. பின்னால் அது ரிப்பேர் ஆனாலும், ரிப்பேர் செய்வது கஷ்டமாக இருக்கலாம். ஆகவே அதை சீக்கிரத்திலேயே பயன்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எப்படிப் பயன்படுத்த வேண்டுமோ அந்த வகையில் செய்வார்கள். அதற்கு இன்னும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

* 288 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the scheme for the construction of a taluk Headquarters Hospital at Paramakudi will be executed soon on the land already handed over to the P.W.D.; and

(b) if so, the present stage of the construction?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலுள்ள தாலுகா தலைமையிட அரசாங்க மருத்துவ மனையில் 32 படுக்கை வசதிகளுடன் கொண்ட புதிய கட்டிடங்களை ரூ. 8.38 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டுவதற்கான வரை படங்களும் மதிப்பீடுகளும் மருத்துவப் பணி நெறியாளரிடமிருந்து வந்துள்ளன. அவை இப்பொழுது பரிசீலனையில் உள்ளன.

* 289 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the taluks in Ramanathapuram district in which taluk Headquarters Hospitals have been constructed and are functioning; and

(b) whether steps will be taken to provide such hospitals in the remaining taluks also during the Fourth Plan period?

[9th August 1966

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) A Government Hospital is functioning in each of the following taluk headquarters in Ramanathapuram district :—

Sivaganga, Mudukulathur, Aruppukottai, Sathur and Srivilliputhur.

(b) The other taluk headquarters in the district namely, Tirupathur, Tiruvadanai and Paramakudi have each at present a Government dispensary. The question of conversion of these dispensaries into hospitals by providing additional buildings is under consideration.

*290 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கோட்டூர், திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி ஆகிய வட்டங்களில் முறையே எத்தனை ரூரல் டிஸ்பென்சரிகள் (Rural Dispensaries) உள்ளன?

(இ) அவைகளில் டாக்டர்கள் இல்லாத மருத்துவ மனைகள் எத்தனை, அதன் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) (1) கோட்டூர் வட்டாரம்—3 (2) திருத்துறைப்பூண்டி வட்டாரம்—1. (3) மன்னார்குடி வட்டாரம்—4.

(இ) மருத்துவர்கள் இல்லாத மருத்துவ மனை 1. உரிய கல்வித் தகுதி பெற்ற ஏற்ற மருத்துவர்கள் கிடைக்காமையே இதற்குக் காரணம்.

*Laboratory for testing medicines*

*291 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to set up laboratories for testing medical drugs in the State; and

(b) if so, the details thereof and their proposed location?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b) There was a proposal to establish a drug testing laboratory at the Chingleput Medical College campus during 1966–67 at a cost of Rs. 16.35 lakhs non-recurring and Rs. 5.20 lakhs recurring. In view of the heavy cost involved in the proposal and the need for economy in expenditure, the proposal has been deferred for the present.

திரு. வை. சங்கரன்: நம்முடைய ராஜ்யத்தில் பலவிதமான மெடிகல் ட்ரக்ஸ் தவறாக வரும்படியான நிலைமை இருப்பதைக் கருதியாவது அவற்றைப் பரிசோதனை செய்வதற்காக ஒரு ட்ரக் டெஸ்டிங் லாபரட்டரி வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?



9th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நம்முடைய ராஜ்யத்தில் நிதி வசதி சற்று அதிகரிக்கும்போது இதைப்பற்றியும் அரசாங்கம் யோசனை செய்யும்.

*Forestry Mission*

*292 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any survey team consisting of F.A.O. experts on Forestry deputed by the World Bank to carry out a pre-investment survey for forest-based industries in India visited forest areas in Madras State; and

(b) if so, the recommendations made by them?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) A Forestry Mission of the World Bank inspected the plantations near Madras on 16th May 1966 and the industrial plantations in the Nilgiris district on 20th May 1966 to consider the possibility of getting aid for selected forestry projects from the International Bank for reconstruction.

(b) The recommendations made by the Mission are not known to this Government.

திரு. வை. சங்கரன்: நம்முடைய ராஜ்யத்தைப் பொருத்த வரையில், உலக பாங்கின் காட்டு வளக் குழு என்ன சிபார்சுகள் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தக் குழுவினர் தங்களுடைய ரிப்போர்ட்டை சென்ட்ரல் கவர்ன்மென்டுக்கு அனுப்பி வைக்கவேண்டும். சென்ட்ரல் கவர்ன்மென்டுக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. அவர்களுக்குக் கிடைத்து, அவர்கள் மூலமாக ராஜ்ய சர்க்காருக்கு அந்த ரிப்போர்ட் வரவேண்டும்.

*Lime stone deposits*

*293 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any limestone deposits have been discovered in Ettimadai Walayar and Chavadiparai areas in Coimbatore district, and

(b) if so, the estimated extent thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) Yes, Sir.

(b) The total reserves of cement grade limestone have been estimated to be 2.4 million tonnes of which 2 million tonnes occur in the Ettimadai village and about 4 lakhs tonnes in the Chavadiparai area.

[9th August 1966

*திரு. வை. சங்கரன்* : சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? அப்படி என்றால், எந்த அளவில், எங்கே தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்** : இதைப் பொருத்த அளவில் சிறிய ப்ளாண்ட் கூட வைக்க முடியும் என்ற அபிப்பிராயம் இல்லை எப்பொழுது, எங்கே என்பதைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

*Powerlooms*

* 294 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the present policy of the Government regarding introduction of powerlooms in the Handloom sector of the State?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The question of evolving a policy regarding the introduction of additional powerlooms in the handloom sector is under consideration.

*திரு. வை. சங்கரன்* : விசைத் தறிகள் சம்பந்தமாக இதுவரை இருந்துவந்த கொள்கைக்கும் இனி வருக்கக்கூடிய கொள்கைக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்குமா? இதில் ஏதாவது மாறுதல் உண்டா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்** : நம்முடைய ராஜ்யத்தில் 12,500 விசைத்தறிகளில் 50 சத விகிதத்தை சொஸைடிகளுக்கும், 50 சத விகிதத்தை தனிப்பட்டவர்களுக்கும் கொடுக்கவேண்டும். அதுபற்றி டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் விரிவான அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறார். அவருடைய ஸ்கீம் வந்த பிறகு, அதன் மீது என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யலாம்.

*திரு. எம். எஸ். செல்வராஜன்* : விசைத்தறிகளை ஒதுக்கீடு செய்யும்போது, பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் நாடு திரும்பியவர்கள் கொடுத்துள்ள கோரிக்கைகளையும் கவனித்து, அவர்களுக்கும் விசைத்தறிகள் ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்** : டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸினுடைய ஸ்கீம் என்ன என்று பார்த்து, எப்படி 'அலாட்' செய்யவேண்டும் என்று அவர் அபிப்பிராயம் தெரிவிக்கிறாரோ அதன்படி செய்யலாம். கனம் அங்கத்தினர் சொன்ன அபிப்பிராயமும் அவருக்கு இருந்தால் பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்திருப்பவர்களுக்குக் கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை.



9th August 1966]

*Oil exploration*

* 295 *Q.*—SRI M. KALYANASUNDARAM : SRI K. S. MANI : } Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the details of the present stage of oil exploration in Cauvery Delta; and

(*b*) the results of investigation so far made?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்** : (அ) & (இ) எண்ணெய், இயற்கை வாயுக் கமிஷன், எண்ணெய் இருக்குமிடத்தை கண்டு பிடிப்பதற்காக, டிரில்லிங் பணியை முதன் முதலில் பட்டுக்கோட்டைப் பகுதியில் 1963-ம் ஆண்டில் துவக்கியது. இங்கு இரு கிணறுகள் அமைக்கப்பட்டன. இக்கிணறுகளிலிருந்து பூமிக்கடியில் உள்ள மண் அடுக்குகளின் அமைப்பு, அவற்றின் வயது, நிலைமை முதலியவை குறித்த புவியியல் சம்பந்தமான தகவல்களைக் கணிசமான அளவில் தெரிந்து கொள்ள முடிந்தது. மூன்றாவது கிணறு திருப்பூண்டி அருகே 1,141 மீட்டர் ஆழத்திற்கு அமைக்கப்பட்டது. பூமிக்கடியில் நீரகக் கரிமம் இருப்பதற்கான நேரடியான அறிகுறிகள் எதுவும் இக்கிணறுகள் மூலம் காணப்படவில்லை. பூமிக்கடியில் உள்ள மண் அடுக்குகள் பற்றி மேற்கொண்டும் தகவல்கள் சேகரிப்பதற்காக காவிரி சங்க முகத்தில் தஞ்சாவூர், கந்தர்வக்கோட்டை முதலிய இடங்களின் அருகே மேலும் சில கிணறுகள் அமைக்க கமிஷன் உத்தேசித்துள்ளது. காரைக்கால் பகுதியில் தோண்டியுள்ளதைப்போலவே இதுவரையில் இரண்டு ஆழமான கிணறுகள் துளையிடப்பட்டுள்ளன. முதல் கிணறு தஞ்சாவூர் மாவட்டத்தில் திட்டச்சேரி கிராமத்தின் அருகே 1,770 மீட்டர் ஆழத்திற்குத் துளையிடப்பட்டது. இச்சங்கமுகத்தில் நீரகக் கரிமம் இருப்பதற்கான அறிகுறிகள் இக் கிணற்றின் மூலம் காணப்பட்டன. இரண்டாவது ஆழமான கிணறு புதுச்சேரி மாநிலத்தில் நிரவி கிராமத்தின் அருகே 1,704 மீட்டர் ஆழத்திற்குத் துளையிடப்பட்டது மூன்றாவது ஆழமான கிணறு நாகூருக்கு வடக்கே துளையிடப்பட்டு வேலை நடந்தேறி வருகிறது. இப்பகுதியில் எண்ணெய் எடுத்துச் சேகரிப்பதற்கான நிலைமை சாதகமாக உள்ளது என்று இதுவரை சேகரித்துள்ள தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

*திரு. வை. சங்கரன்* : எண்ணெய் எடுப்பதற்குத் துளையிடும் கருவிகளும் மற்ற சாதனங்களும் 'மாடர்னைஸ்டு' ஆக இல்லை. தாமதத்திற்கு அதுவும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறதே. அது வாஸ்தவமா? அப்படியென்றால், ட்ரில்லிங் மெஷினரி போன்றவற்றை மாடர்னைஸ்டாக வாங்கி உபயோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்** : இருக்கும் மெஷினரிகளை வைத்து வேலைகளெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இவை சரியாக இல்லை, போதவில்லை என்கிற தகவல் என்னிடம் இல்லை.

[9th August 1966

திரு. சா. கணேசன் : காரைக்கால்-நாகப்பட்டினம் சாலையில் உள்ள எண்ணெய்ச் சோதனைச்சாலையில் எந்த அளவிலே வேலை முடிந்திருக்கிறது, பயன் எவ்வளவு கிடைக்கும் என்று கணிக்கப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Two deep wells have so far been drilled on the Karaikal structure. The first well was drilled to a depth of 1,770 metres near village Thittachery, Tanjore district and it gave indications of the presence of hydrocarbons in this basin. The second deep well was drilled near village Niravi of Pondicherry State, to a depth of 1,704 metres.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தினுடைய கடற்கரைப் பகுதி எண்ணெய் வள ஆராய்ச்சியில் ரஷ்யக் கப்பல்கள் ஐக்கிய நாட்டு உதவியின் பேரில் ஈடுபட்டிருந்ததாகச் செய்தி வந்ததே, அதுபற்றித் தகவல் ஏதாவது உண்டா? விவரங்கள் கிடைத்தனவா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தற்போது இங்கே அதைப்பற்றிய விவரம் ஒன்றும் இல்லை.

கட்டாயச் சேம நிதி

* 296 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: }
திரு. ஆ. தங்கவேலு : } கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) யுத்தகாலத்தில் கட்டாய சேமிப்பு நிதியாக ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளிடம் வசூலான தொகை எவ்வளவு ?

(இ) அத்தொகையைத் திரும்பக் கொடுத்துவிடும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்களா ?

(உ) அத்தொகை முழுமையும் திரும்பக் கொடுக்கப்பட்டு விட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஸ்தல ஸ்தாபன ஊழியர்களிடமிருந்து பிப்ரவரி 1963 முதல் மார்ச்சு 1966 வரை கட்டாய சேமிப்பு நிதியாக ரூ. 1,77,29,456.88 வசூல் செய்யப்பட்டது.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கட்டாய சேமிப்பு நிதியை திரும்பக் கொடுக்கிறபோது, சர்க்காரின் பங்குத் தொகையையும் அதோடு சேர்த்துக் கொடுப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : "திருப்பிக் கொடுக்கவில்லை" என்றுதான் நான் பதிலளித்தேன். சிப்பந்திகள் ரிடையர் ஆகும் போது பென்ஷன் வாங்கும் சமயத்திலோ அல்லது இறந்ததற்குப் பிறகு அவர்களுக்குரிய தொகை எப்படி எப்படிக் கொடுக்க வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றனவோ அவற்றை அனுசரித்து அவர்களுக்குக் கொடுக்கப்படும்.



*Roads in Ramanathapuram district*

* 297 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the District Development Council, (East) Ramanathapuram has sent a resolution requesting formation of several roads last year (in 1965) in East Ramnad area; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI S. M. A. MAJID : (a) Yes, Sir.

(b) Out of 31 works mentioned in the resolution, only 18 works are included under "Other Roads". Eleven are already there in the priority list for III Plan works recommended by the District Development Council and *seven* have been proposed in the Draft IV Plan. Out of 212 works in III Plan priority lists pertaining to all Development Districts, only 11 works could be sanctioned in III Plan and the remaining works will have to be sanctioned in IV Plan period, before sanctioning the works included in IV Plan.

SRI C. SRINIVASAN : What are the eleven works that are sanctioned and what are the seven works that are not sanctioned?

THE HON. SRI S. M. A. MAJID : Only the numbers are available with me and not the names of the works.

* 298 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to improve and lay the road from Ilayangudi in Paramakudi taluk to Maravamangalam near Kalayarkoil in Ramanathapuram district; and

(b) if so, whether priority will be given for this work in the 4th plan?

THE HON. SRI S. M. A. MAJID : (a) Yes, Sir.

(b) This work has been given 2nd priority in the list of new works for III Plan recommended by the District Development Council. It is likely to be sanctioned during IV Plan when 2nd priority works are considered.

SRI R. V. SWAMINATHAN : Since this road is very important and since it links my constituency of Sivaganga with the Paramakudi constituency represented by Sri C. Srinivasan, will the Government give priority to this work ?

THE HON. SRI S. M. A. MAJID : Only after the spill over works from the Third Plan are completed, works in the Fourth Plan will be undertaken.

### அரசாங்க ஊழியர்கள் குறைப்பு

* 299 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி, திரு. கரு. சீமைச்சாமி, திரு. செ. மாதவன் } : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில், இந்த ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து, அரசாங்கத்தில் பணிபுரியும் குமாஸ்தாக்கள் ஆட்குறைப்பு செய்யப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்களை வேலையிலிருந்து எடுத்துவிட முடிவு செய்யப்பட்டுள்ளது, மாவட்டவாரியாக?

(உ) இதனால் அரசாங்கத்திற்கு மீதமாகும் தொகை எவ்வளவு?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ)—(உ) சபை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, 1—10—1965-க்குப் பின்னாலே வேலையில் சேர்ந்துள்ளவர்கள் வேலை இழக்க நேரிடும் என்பதாக முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தேதிக்குப் பிறகு நியமிக்கப்பட்ட குமாஸ்தாக்கள் மட்டும் தான் வேலையில் இருந்து நீக்கப்படுவார்களா? அந்தத் தேதிக்குப் பின்னால் ஆபீசர் க்ரேடில் அதிகமான பேர்கள் வேலையில் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அவர்களும் வேலையை இழக்க நேரிடுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்போது இந்த ஏற்பாட்டினால் வேலையை இழக்கத்தான் வேண்டும் என்ற நிலை இல்லை. 1—10—1965-க்குப் பிறகு தாற்காலிகமாக வேலையில் சேர்க்கப்பட்டவர்கள் பாதிக்கப்படலாம் என்பது தான். அவர்கள் எப்படி இருந்தாலும் சர்வீஸ் கமிஷனிலிருந்து ஆள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவுடன் பாதிக்கப்படக்கூடியவர்கள்தான். அத்தகையவர்கள் ஒரு சிலர் பாதிக்கப்படலாம் என்பதுதான். இப்போது உடனடியாகப் பாதிக்கப்பட்டாலும் காலிஸ்தானம் விழுந்தவுடன் அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**திரு. செ. மாதவன்:** நிர்வாகச் சீர்திருத்தம் காரணமாக யாரும் வேலையை இழக்கும்படியாகச் செய்யக்கூடாது என்பதாக மத்திய சர்க்கார் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறதே, அந்த யோசனையை இந்தச் சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மத்திய சர்க்கார் நமக்கு ஒன்றும் சொல்லவில்லை. இந்தச் சர்க்கார் கருத்தே அதுதான். அது அமல் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சிக்கனச் சீரமைப்பு காரணமாக ஜில்லா தோறும் உள்ள கிராம வெட்டியான்கள், தலையாரிகள் கூட பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிற செய்தி அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க என்ன ஏற்பாடு செய்யப்படும்?

* 994–995-ம் பக்கங்களில் ஏழாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கிராம உத்தியோகஸ்தர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா, இல்லையா என்கிற விவரம் என்னிடம் இல்லை. அதற்கும் இந்த நிர்வாகச் சீரமைப்புக்கும் சம்பந்தம் இல்லை. இதன் மூலம் யாரும் வேலை இழக்க நேரிடாது. அரசாங்க விதிகளின் கீழ் தாற்காலிக வேலைக்கு அதிகாரிகள் தாற்காலிகமாகச் சிலரை நியமித்துக்கொள்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக வைத்துக் கொள்ளப்படவேண்டும் என்று சொல்ல முடியாது. எப்போது தாற்காலிகமாக சில ஆட்கள் தேவைப்படுகிறதோ, அப்போது தாற்காலிகமாக நியமித்துக் கொள்கிறார்கள்.

* 300 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க இலாகாக்களில் சிக்கன நடவடிக்கை எடுத்ததின் பலனாக வேலை இழக்கும் சிப்பந்திகளுக்கு மாற்று உத்தியோகங்கள் அளிப்பதற்கு அரசாங்கம் திட்டம் வகுத்து உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ)—(இ) 1—10—1965 தேதியன்று அல்லது அதற்குப்பிறகு நியமிக்கப்பட்ட உபரிப்பணியாளர்கள் மட்டுமே ஆட்குறைப்புத் திட்டத்தின்படி வேலையிழப்பர். இவர்களும், சிவில் சப்ளைத்துறை, வேளாண்மைத்துறை போன்ற பல வேறு துறைகளில் அனுமதிக்கப்பட்டுவருகிற புதிய பதவிகளில் நாளடைவில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கத் தனி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய அளவில் ஆட்குறைப்புத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

## UNSTARRED QUESTIONS.

*Wild Birds and Animals Protection Act.*

1\. *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

The forests, tanks, water sources and other sites in the State declared to be areas, wherein shooting of birds or wild animals are prohibited under Wild Birds and Animals Protection Act.

*A.*—The particulars are appended.

விவரங்கள் பின் இணைப்பில் [a] கொடுக்கப்பட்டுள்ளன.

*Procurement and distribution of foodgrains.*

2\. *Q.*—SRI S. J. RAMASWAMY: Will the Hon. the Minister for Food be pleased to state:—

(*a*) the number of wholesale and retail licences granted for the procurement and distribution of foodgrains in the State so far, district-wise;

(*b*) the number of defaulters among them;

[a] Printed as Appendix VIII on pages 995–998.

[9th August 1966

(c) the number of cases filed consequently; and

(d) the number ended in conviction, cancellation of licences, etc.

*A*.—(*a*) *to* (*d*). A statement[a] is placed on the Table of the House.

(அ) முதல் (எ) வரை : சபைமுன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### தொழிற் பயிற்சி பள்ளிகள்

3. கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத் தொழில் அமைச்சர் கேள்வி எண் 127-க்கு 28—2—1966-ல் அளித்த பதிலை யொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள தொழிற் பயிற்சி பள்ளிகள் 30-ம் எங்கெங்கு அமைந்துள்ளன ?

(இ) அந்தத் தொழிற்பயிற்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் (பள்ளிவாரியாக) எத்தனை பேர் ?

(உ) அதில் ஆதித் திராவிட மாணவர்களும், ஆதிவாசி மாணவர்களும் முறையே எத்தனை பேர்கள் ?

ப.—மன்றத்தின்முன் விவர அறிக்கை[aa] ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

*A*—A statement[aa] is placed on the Table of the House.

### அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பு

4. கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னையிலிருக்கும் அங்கஹீனமானவர்களுக்கு வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் சென்னைக்கு வெளியிலிருப்பவர்களும் பதிவு செய்யலாமா ?

(இ) ஆம் எனில் அந்த ஸ்தாபன ஆரம்பத்திலிருந்து, வெளி ஜில்லாக்களிலிருந்து வேலை கோரி பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்களுள் வேலை பெற்றோர் எத்தனை பேர் ?

(எ) அந்த ஸ்தாபன ஆரம்பத்திலிருந்து வேலை கோரி பதிவு செய்து கொண்டவர்கள் மொத்தம் எத்தனை பேர் ?

(ஐ) அவர்களுள் வேலை பெற்றோர் எத்தனை பேர் ?

---

a Printed as Appendix IX on pages 999-1003

aa Printed as Appendix X on pages 1004-1008



9th August 1966]

ப.—(அ) ஆம்.

(இ) சென்னை நகருக்கு வெளியே வசித்துவரும் அங்கஹீன மாணவர்கள் 169 பேர் வேலை தேடித்தரும் விசேஷ வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 30—6—1966 வரை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

(உ) இரண்டு பேர்.

(எ) 1,520 பேர்.

(ஐ) 472 பேர்.

(*a*) Yes.

(*b*) The total number of the physically handicapped living outside Madras City registered with the Special Employment Office till 30th June 1966 is 169.

(*c*) Two.

(*d*) 1,520.

(*e*) 472

### பஸ் நிலையம், குருந்தன்கோடு

5. கேள்வி—திரு. எ. சுவாமிதாஸ்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், திங்கள் சந்தையில் குருந்தன் கோடு பஞ்சாயத்து யூனியன் கட்டும் பஸ் நிலையம் கட்டி முடிப்ப தற்குக் காலதாமதமாவது ஏன் ?

ப.—தல்லாகுளம் பஞ்சாயத்து திங்கள் சந்தையில் கட்டிய பஸ் நிலையம் 1966-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2-ந் தேதியன்று திறந்து வைக்கப்பட்டது.

The bus stand at Monday Market constructed by the Thala-kulam Panchayat has been opened on the 2nd March 1966.

**[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTION.

### FAILURE TO ANNOUNCE DATE OF LETTING OUT OF WATER FROM THE LOWER BHAVANI PROJECT

MR. SPEAKER: Sri K. R. Nallasivam has given notice of an adjournment motion.

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கீழ்பவானி வாய்க்காலில் வழக்கமாக ஆகஸ்டு 1-ஆம் தேதி முதல் 15-ம் தேதிக்குள் தண்ணீர் விடுகிற பழக்கம் உண்டு. போதுமான தண்ணீர் நீர்த்தேக்கத்தில் இல்லாத காரணத்தினால், இவ்வாண்டு

[திரு. க. ர. நல்லசிவம்] [9th August 1966

எப்போது தண்ணீர் விடப்படும் என்பதே இதுவரை தெரியாமல் இருந்து வருகிறது. அதில் இருக்கக்கூடிய சிக்கலைப்பற்றி ஏற்கெனவே நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். எப்போது எந்தப் பகுதியில் தண்ணீர் விடப்போகிறார்கள் என்பதை முன்கூட்டியே அறிவித்தால்தான் விவசாயிகள் அதற்குத் தக்க முன்னேற்பாடான காரியங்களைச் செய்துகொள்ள முடியும். கடந்த வருஷத்தில் இந்தமாதிரியாக முன்கூட்டி அறிவிக்காத காரணத்தினால் பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று கீழ் பவானி மேல் அணை மின்சாரத் திட்டத்திலிருந்து எப்போது தண்ணீர் விடப்படும்? கீழ் அணையில் இருந்து எப்போது திறந்துவிடப்படும்? இரண்டாவது, எப்போது எந்தப் பகுதிக்குத் தண்ணீர் விடப்படும் என்பது முன்கூட்டியே தெரிவித்தாகவேண்டும்.

இவ்வாண்டு விவசாயிகள் மழையை நம்பி ஒரு லட்சம் ஏக்கராவுக்கு மேல் உள்ள நிலங்களைச் சாகுபடி செய்ய முடியாத நிலைமையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். கோபி தாலுக்காவில் இருந்து கடிதங்கள்கூட வந்திருக்கின்றன. தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் கூகலூர் பகுதியில் ஹரிஜனங்கள் 22 பேர்கள் தங்கள் தலைமயிரை மொட்டை அடித்து விற்று—இரண்டு நாட்களாவது ஜீவிக்கலாம் என்பதாக—வாழ்ந்துகொண்டிருப்பதாக விண்ணப்பத்தில் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, கீழ் பவானிப் பாசனத்தில் எந்த முறை நிலங்களுக்கு எப்பொழுது தண்ணீர் விடப்படும் என்று சர்க்கார் அறிவிப்பு இன்னும் வெளியிடப்படாததால், இந்த முறைப் பாசனம் பெறும் பகுதிக்கு நாற்றுவிட முடியாமலும், தண்ணீர் பெறாத பகுதியில் மழையை நம்பிப் பயிரிட முடியாமலும் விவசாயிகள் தத்தளித்துக்கொண்டிருக்கும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிலைபற்றி விவாதிக்கச் சபையின் நடவடிக்கையை ஒத்தி வைக்கக் கோரி என்னுடைய தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கனம் உறுப்பினர் குறிப்பிட்ட விஷயம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. கலெக்டர் அவர்களுடைய கவனத்தில் இருந்து வருகிறது. சம்பந்தப்பட்ட பிரதம என்ஜினியர் கவனத்தில் இருந்து வருகிறது. எப்போது தண்ணீர் விடுவது என்பது நீர்த்தேக்கத்தில் இருக்கக்கூடிய நிலைமையை ஒட்டி முடிவு செய்யப்படவேண்டிய விஷயம். என்னைப் பொறுத்த வரையில், கலெக்டர் அவர்களுடன் அவ்வப்போது கலந்து பேசி வருகிறேன். இதில் தவறுகள் ஒன்றும் ஏற்படவில்லை. நீர்த்தேக்கத்தில் இருக்கிற தண்ணீரை எவ்வளவுதூரம் சாகுபடி செய்வதற்கு உபயோகப்படுத்திக் கொள்ள முடியும் என்று பார்த்து முடிவு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இதுபற்றியும் முடிவு எடுக்கும்போது முன்கூட்டியே விவசாயிகளுக்கு சாவகாசம் இருக்கத் தக்க வகையில் அறிவிக்கப்படும். இதைப்பற்றி முன்பும் குறிப்பிட்டிருக்கின்றேன். இதில் தவறு ஒன்றும் ஏற்பட்டு



9th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

விடவில்லை. இயற்கை எவ்வளவு தூரம் நமக்கு உதவுகிறதோ அவ்வளவுதூரம் அதன் உதவிகளை நாம் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். அது விஷயத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: This is not a matter for an adjournment motion. So, I withhold my consent to it.

## III—GOVERNMENT MOTIONS

### (1) SUSPENSION OF RULE 41 (3).

MR. SPEAKER: We have got two notices under Rule 41. Therefore the Hon. Leader of the House may move that Rule 41 (3) be suspended for to-day.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, under rule 244 of the Assembly Rules, I move—

'That sub-rule (3) of Rule 41 of the Madras Legislative Assembly Rules, in so far as it requires that not more than one matter shall be raised under Rule 41 at the same sitting, be suspended'.

The motion was put and carried unanimously.

## IV.—CALLING ATTENTION TO

### (1) CRITICAL FOOD SITUATION IN THE NILGIRIS DISTRICT.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, நீலகிரி மாவட்டம் முழுவதற்கும் இன்னும் ஒரு மாதம் உணவு அளிக்கக் கூடிய தானியங்கள்கூட அங்கே உள்ள உணவுதானியக் கிடங்குகளில் இல்லை என்கிற விவரம் தெரிகிறது ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் அரசாங்கக் கிடங்குகளில் உணவு தானியங்கள், அந்த மாவட்ட மக்களின் தேவையை ஒரு மாத காலத்திற்குக்கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு மிகக் குறைந்த அளவே உள்ளது பற்றியும், அரிசிப் பங்கீட்டு அளவைக் குறைத்ததன் விளைவாக மலைத்தோட்டத் தொழிலாளர்கள் இன்னல் அடைந்துள்ளது பற்றியும் ஆன பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை நான் கனம் உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: The present stock of rice in the Nilgiris district is 2,100 tonnes and this will last for about three weeks on the basis of the existing off-take. A quantity of about 4,000 tonnes will be moved to the district during August 1966. With the receipt of these allotments the food position in the district will be eminently satisfactory and no apprehension need be felt by this House regarding the supply of rice to Nilgiris. Perhaps an unfortunate impression has been created by the announcement of the

[Sri V. Ramaiah] [9th August 1966

Collector of Nilgiris that there has been a reduction of the quantum of rice given to the estate and project labour by 200 grams, i.e., from 1,800 to 1,600 grams. The present ration to the estate labour is 1,600 grams even after reduction which is higher than what is permitted in statutory areas of Madras City and Coimbatore viz., 1,400 grams. The Collector has given in lieu of this an extra quantity of 250 grams of ragi or cholam according to the preference of the consumer. Thus more gram is being issued to the estate labour.

10-00 a.m. In this connection, I wish to add that the issue of 1,800 grams of rice did not have the concurrence of the Government and the Collector has acted rightly in standardising the issue in consideration of the difficulty caused to the State by the delayed release of Mettur water. The stocks of Ragi, Milo and Wheat in the district are quite good as indicated below :—

| | | |
|---|---|---|
| Ragi | ... ... ... ... ... ... | 1,735 tonnes. |
| Milo | ... ... ... ... ... ... | 926 tonnes. |
| Wheat | ... ... ... ... ... ... | 371 tonnes. |

(2) FIRE ACCIDENTS AND CRIMES IN USILAMPATTI.

*திரு. பி. கே. மூக்கையா தேவர் :* கனம் தலைவரவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 7-8-1966 இரவு ஒன்றரை மணிக்குத் திடீரென்று தீப்பிடித்திருக்கிறது. உசிலம்பட்டி கண்மாயக் கரையில் ஏற்பட்ட இந்த தீயில் இருபதுக்கு மேற்பட்ட கடைகள் எரியுண்டிருக்கின்றன.

இது ஏதோ தற்செயலாக நடைபெற்றது எனக் கருதுவதற்கு இடமில்லை. சென்ற சில வாரங்களாக உசிலம்பட்டி வட்டார முழுவதிலும் தீ வைத்தல், கூட்டங்களைப் பலாத்காரமாகக் கலைத்தல், கல்வீச்சு, பயங்கரமான ஆயுதங்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாக்குதல் முதலிய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. உசிலம்பட்டிப் பகுதியில் மட்டும் ஒரு சில மாதங்களில் 10 கொலைகள் நடந்திருக்கின்றன. ஒரு சில கேசுகள் கூடக் கண்டுபிடிக்கப்படவில்லை. பஞ்சாயத்துத் தேர்தலின்போது லைசென்ஸ் இல்லாத ரிவால்வர் வைத்திருந்தவர்களைக் கையோடு டிப்டி சூப்பிரண்டெண்ட் அவர்களே கைது செய்தார். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது போன்ற விவரங்கள் அமைச்சர் அவர்களுக்கு மனுவின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. துரித நடவடிக்கை எடுக்காத காரணங்களால் சட்ட விரோத சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெறுகின்றன. இச் சம்பவங்களால் பொதுமக்கள் பெரிதும் பீதியடைந்திருக்கின்றனர். அவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு கனம் உறுப்பினர் அவர்கள் இது பற்றி என்னிடம் பிரஸ்தாபித்தபொழுது தகவல் சேகரித்து நான்



9th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒரு அறிக்கை சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்தேன். சம்பந்தப்பட்ட ஸ்தல அதிகாரிகளை விபரங்கள் கேட்டு, விவரங்கள் வந்திருக்கின்றன. இந்த விவரங்களின்படி பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டி ஏற்பட்டு கட்சி மனப்பான்மை, கட்சி எதிர்ப்பு மனப்பான்மை ஏற்பட்டு இதிலே முக்கியஸ்தர்கள் எல்லாம் ஈடுபட்டு பலாத்காரத்தில் இறங்கி பலாத்காரத்தைத் தொடர்ந்து பிரயோகித்துக்கொண்டு வருகிற நிலைதான் அங்கே இருக்கிறது. ஆனால், போலீசார் சும்மா இல்லை, அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. பலாத்காரம் நடைபெறுகிறது என்பதைப்பற்றி மேலும் உடனடியாக அவர்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள்; எடுத்துக்கொள்வார்கள். பரிசீலனை செய்யும் இந்த நிலையிலே மேலும் இதைப்பற்றிய விவரங்கள் கூறுவது உசிதமல்ல என்று கருதுகிறேன். மற்றவர்களும் இதிலே தொடர்ந்து கவனம் செலுத்திப் பரிசீலனை செய்து எந்தவிதமான தாட்சண்யமுமில்லாமல் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் கூறிக் கொள்ளுகிறேன்.

V.—PRESENTATION OF REPORTS

(1) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

(2) REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

*திரு. இராம அரங்கண்ணல் :* கனம் தலைவரவர்களே, அரசாங்க உறுதி மொழிகள் பற்றிய குழுவின் ஒன்பதாவது அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.

III.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That under rule 21(3) of the Madras Legislative Assembly Rules, item V in the Agenda for the day be taken up before item IV.'

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS,

(1) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER-CESS (AMENDMENT) BILL, 1966 (L.A. BILL NO. 11 OF 1966).

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment Bill *, 1966 (L.A. Bill No. 11 of 1966) be taken into consideration.'

---

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 2nd August 1966

[Sri V. Ramaiah] [9th August 1966

As a general principle, if on account of the levy of water rate in a project, there has been an increase in the assessment or water-cess by over 60 per cent, the project concerned is being exempted from the scope of the Madras Additional Assessment and Additional Water-Cess Act, 1963 (Madras Act VIII of 1963), and such projects are mentioned in Schedule I to the Act. In the Vidur Reservoir Project, water-cess is being levied at Rs. 10 per acre which results in an increase of more than 60 per cent in wet assessment or water-cess. It was, therefore, decided to exempt the Vidur Reservoir Project from the provisions of the Madras Additional Assessment and Additional Water-Cess Act, 1963. Accordingly, a notification was issued under section 13(1) of the Act by which the Vidur Reservoir Project was added as item 10 of Schedule I to the Act. The Bill seeks to give effect to the addition made by the notification.

Sir, I request the House to accept the motion.

MR. SPEAKER: Motion moved—

'That the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966 (L.A. No. 11 of 1966) be taken into consideration.'

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் தலைவரவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்த நீர்வரி உயர்வை வீடூர் நீர்த்தேக்கத்திலே உள்ள நிலங்களுக்கு நிறுத்திவைக்கிற அளவுக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அந்தத் திருத்தத்திற்கு இன்னொரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தம் 'It shall be deemed to have come in to force on the first day of July 1962.' என்று இருக்கிறது. ஆனால் அது அமலுக்கு வந்தது 1962-இல். நல்ல எண்ணம் கொண்டு வீடூர் ரிசர்வாயரின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு ஒரு நல்ல உபகாரம் செய்கின்ற அளவுக்கு இந்தத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு எஃபெக்ட் கொடுப்பது 1962-லேயிருந்து கொடுத்தால் நல்லது. இந்தத் திருத்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் எஃபெக்ட் 1962-லேயிருந்து கொடுத்தால் அதனால் சர்க்காருக்கும் சங்கடம் இல்லை, நமக்கும் சங்கடம் இல்லை. அங்கே இருக்கிற மக்களும் வாழ்த்துவார்கள். 1962-லே அமலுக்கு வந்த பிறகு 1962-லே வசூல் செய்ய வில்லை, 1963-லே வசூல் செய்யவில்லை, 1964-லே வசூல் செய்யவில்லை. 1965-லே வசூல் செய்யவில்லை. ஆனால் இப்பொழுது இந்த ஆண்டு ஒரே நேரத்தில் எல்லா பாக்கியையும் சேர்த்து கணக்குப் போட்ட காரணத்தாலே எல்லாவற்றையும் வசூல் செய்ய ஆரம்பித்ததினாலே சங்கடமான நிலையில் நெருக்கடி தாங்கமுடியாமல் பொதுமக்கள் எல்லோரும் அமைச்சர் அவர்களைக் கூப்பிட்டு விளக்கினார்கள். அந்த விளக்கத்தையொட்டி அமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள நிலையை நேரிலே பார்த்தபிறகு விவசாயிகளுக்குப் பாதகம் விளைந்து இருக்கிறது என்பதை உணர்ந்து நல்ல எண்ணத்தோடு இதைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். இந்தத் திருத்தம் 1966 ஏப்ரலில் இருந்து அமலுக்கு வரும் என்று சொல்லப்பட்டதை மாற்றி வீடூர் ரிசர்வாயர் என்றைக்கு அமலுக்கு வந்ததோ, அன்றையத் தேதியிலிருந்து



9th August 1966] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

அமலுக்கு வரும் என்று வைத்து விட்டால் நலமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு நான் முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இதனுடைய பிரின்சிபல் ஆக்ட் 1963-ஆம் வருஷத்திய சட்டம், 12-வது, 13-வது பிரிவுகளின் கீழே திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. இந்தத் திட்டம் 1962 ஜூலையிலிருந்துதான் அமலாக்கப்பட்டது. அதற்குப் பின்னால் பல பசலிகளுக்கு வசூல் செய்வதற்காகச் சென்றார்கள். வீடூர் ரிசர்வாயர் விவசாயிகள் எல்லாம் சேர்ந்து அரசாங்கத்திடம் முறையிட்டார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்கள்கூட வந்து பார்வையிட்டதாகவும் தெரிவித்தார்கள். அடிஷனல் அசெஸ்மெண்ட்டு போட்டார்கள். தண்ணீர் தீர்வை அதிகமாகப் போடப்பட்டதை இந்த ப்ராஜக்டுக்கு எக்செம்ப்ட் செய்யவேண்டுமென்று இப்பொழுது அரசாங்கம் திருத்தம் கொண்டுவருகிறது. இதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். சட்டம் போட்ட பிறகு அதிலிருந்து பல பசலிகளுக்கும் சேர்த்து இப்பொழுது வசூலிக்கப்படுகிறது அடிஷனல் அசெஸ்மெண்ட். இது 1966-லேயிருந்து அமலுக்குக் கொண்டுவரப்படுகிறது. 1962 ஜூலையிலிருந்து அதாவது 1372-வது பசலியிலிருந்து இதற்கு விதிவிலக்கு அளிக்க முடியுமா என்று பரிசீலிக்கவேண்டும்.

ஆனால், சட்டத்தின் 13-வது பிரிவுப்படி "The Government has got the power to omit or add" என்றுதான் இருக்கிறது. ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்க ஏற்கனவே உள்ள சட்டப்படி இடம் இல்லை. அப்படி ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுப்பது என்றால் பாக்கிகளை என்ன செய்வது என்பதற்குச் சட்டத்தில் இடம் இல்லை. சர்க்கார் எக்சிக்யூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷன் மூலமாக இதைப் பரிசீலிக்க வழி செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். அது சில பேரிடத்திலிருந்துதான் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அமைச்சர் அவர்கள் அங்கு சென்று வந்த பிறகு வசூல் செய்வது நிறுத்தப்பட்டிருக்கிறது. எல்லா இடத்திலும் வசூல் செய்யப்படவில்லை ; எல்லாப் பசலிக்கும் வசூல் செய்யப்படவில்லை. ஆகவே, அந்தக் கருத்தை மனத்தில் கொண்டு எக்சிக்யூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மூலமாகத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். அந்த பிராஜக்ட் சம்பந்தப்பட்ட வரையில் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய தொந்தரவை அரசாங்கம் பரிசீலித்து ஒரு முடிவுக்கு வந்து இப்போது இந்த மசோதா பிரேரணை செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டது, இதற்கு முன்பே வசூலிக்காமல் தடை செய்யப்பட்டிருக்கக் கூடிய நிலையில் இருக்கக்கூடியவர்களுக்கு என்ன நிவாரணம் கிடைக்கும் என்ற கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். இதெல்லாம் அரசாங்கத்தின் தொடர்ந்த பரிசீலனையில் இருக்கிறது. இதிலே ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

[திரு. வெ. ராமைய்யா] [9th August 1966

எனக்கு சட்ட ஆலோசகர் சொல்லியது, எக்சிக்யூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷன்படி இதைச் செய்து விடலாம் என்பதாகும். அங்கிருக்கக் கூடிய விவசாயிகளுடைய கஷ்டத்தை உடனடியாகப் போக்கும் வகையில்தான் இந்த மசோதா வந்திருக்கிறது.

MR. SPEAKER: The question is—

'That the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966 (L.A. No. 11 of 1966) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

*Clause 1.*

MR. SPEAKER: The question is—

'That clause 1 do stand part of the Bill.'

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே என்னுடைய திருத்தத்திலே அடங்கியுள்ள கருத்தை கனம் அமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொல்லி இருப்பதால், என்னுடைய திருத்தத்தை நான் பிரேரேபிக்கவில்லை.

Clause 1 was put and carried.

The Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move—

'That the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 11 of 1966) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS (TRANSFERRED TERRITORYI LUXURY TAX ON TOBACCO (VALIDATION) BILL, 1966 (L.A. BILL No. 9 OF 1966).

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

(2) THE MADRAS (TRANFERRD TERRITORY) LUXURY TAX ON [obacco (Validation) Bill *, 1966 (L.A. Bill No. 9 of 1966) be aken into consideration.'

Till the end of 1957, licence fees were being levied on tobacco ı the former Travancore-Cochin areas and the vend of tobacco of ll kinds was prohibited except under a licence. In the Travancore rea the fees were being levied under the Tobacco Act of 1087 nd the rules made thereunder. The system of levying licence fees n tobacco was introduced in the Travancore area with effect

**Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 2nd August 1966.**



9th August 1966] [Sri M. Bhaktavatsalam]

from the 17th August 1950 and was continued up to the 31st December 1957 in the transferred territory of Kanayakumari district and Shencottah taluk of Tirunelveli district which originally formed part of the former Travancore-Cochin State.

When the Constitution of India came into force, the Travancore-Cochin State became a Part 'B' State. The Finance Act, 1950 (Central Act XXV of 1950) extended the Central excise and Salt Act, 1944 (Central Act I of 1944) to the Travancore-Cochin State with effect from the 1st April 1950. On an appeal from some of the tobacco dealers in Kerala, the Supreme Court in Abdul Kadir *vs.* State of Kerala (A.I.R. 1962, S.C. 922) considered the validity of the rules under which the licence fees were being levied in the former Travancore-Cochin areas. The Supreme Court held that when the Central Excise and Salt Act, 1944, was extended to the Travancore-Cochin State by the Finance Act, 1950, which specifically provided for the repeal of the corresponding law, the Tobacco Acts of Travancore and Cochin stood repealed with effect from 1st April 1950 and that consequently the rules made thereunder, according to which the licence fees were levied, were invalid *ab initio*. Consequent on the decision of the Supreme Court, many tobacco dealers in the transferred territory have claimed refund of the licence fees imposed and collected under the impugned rules. The claims received so far amount to Rs. 2,04,020. The Government of Kerala have, so far as dealers in Kerala State are concerned, enacted the Luxury Tax on Tobacco (Validation) Act, 1964 (Kerala Act 9 of 1964) to provide for the levy of a luxury tax on tobacco and for the validation of the levy and collection of fees for licences for the vend and stocking of tobacco for the period from 17th August 1950 to the 31st December 1957. In order to avoid the necessity for this Government to make heavy refunds of licence fees paid during the period from the 17th August 1950 to the 31st December 1957 in the transferred territory and as there is also no justification to make such refunds as the licence fees would have been added to the price of tobacco and ultimately passed on to the consumers, the Government have decided to undertake the present validating legislation similar to Kerala Act 9 of 1964. The Bill will be applicable to the transferred territory of Kanyakumari district and Shencottah taluk of the Tirunelveli district.

The Bill provides for the levy of a luxury tax on tobacco in the form of a fee for licence for the vend and stocking of tobacco in the transferred territory at such rates as may be prescribed, not exceeding the rates specified in the Schedule, for the period from the 17th August 1950 to the 31st December 1957. Clause 4 of the Bill empowers the Government to make rules in respect of the matters specified in the clause. But the rules and notifications specified in sub-clause (5) of the clause and issued under the Tobacco Act of 1087 (Travancore Act I of 1087) shall be deemed to be rules issued under this clause and shall be deemed

[Sri M. Bhaktavatsalam] [9th August 1966

to have been in force at all material times for the purposes of levy and collection of licence fees for the vend and stocking of tobacco. Clause 5 validates the levy and collection of all fees for licences for the vend or stocking of tobacco for the period from the 17th August 1950 to the 31st December 1957.

With these words, Sir, I commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER: The question is—

'That the Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco (Validation) Bill, 1966 (L.A. Bill No. 9 of 1966) be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 5 and the Schedule were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That the Madras (Transferred Territory) Luxury Tax on Tobacco (Validation) Bill, 1966 (L.A. Bill No. 9 of 1966) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

## VII—ANNOUNCEMENTS.

### (1) THE MADRAS PRIVATE EDUCATIONAL INSTITUTIONS (REGULATION) BILL, 1966 (L.A. BILL NO. 14 OF 1966).

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras Private Educational Institutions (Regulation) Bill, 1966 (L.A. Bill No. 14 of 1966).

## VI—GOVERNMENT BILLS—cont.

### (3) THE MADRAS PRIVATE EDUCATIONAL INSTITUTIONS (REGULATION) BILL, 1966 (L.A. BILL NO. 14 OF 1966).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I beg to move—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of 18 Members (12 Members of the Legislative Assembly and 6 Members of the Legislative Council) to consider the Madras Private Educational Institutions (Regulation)



9th August 1966] [Sri M. Bhaktavatsalam]

Bill @ 1966 (L.A. Bill No. 14 of 1966) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1. Sri M. S. Selvarajan.
2. Sri R. S. Arumugam.
3. Sri M. Alagiriswamy.
4. Srimathi A. Suares.
5. Sri G. Rajaram.
6. Sri N. Mahalingam.
7. Sri P. Ramachandran.
8. Sri K. A. Mathialagan.
9. Pulavar K. Govindan.
10. Sri A. P. Dharmalingam.
11. Sri Rama. Arangannal.
12. Sri Saw. Ganesan.

Sir, hon. Members are aware that in this State there are many un-recognised educational institutions run by private individuals and organisations under different names. The existence of such unrecognised institutions affects seriously the quality and standards of education. Most of the students join the institutions misled by the attractive prospectuses issued by the managements and some of the institutions even purport to award diplomas or certificates giving an impression that such diplomas or certificates are recognised by the State and Central Governments. At present, there is no law to control or regulate such unrecognised institutions. As such, the Government or the educational authorities in this State are not in a position to take effective action against such institutions. Hence, an urgent need for the regulation and control of such institutions is felt.

To secure the above object, the Government of India at the instance of the Central Advisory Board of Education prepared and sent a Model Bill for the consideration of the State Governments. This Government had also constituted a committee with the Director of Technical Education as the Chairman to consider the question. The Committee after making a study of the problem recommended the undertaking of legislation based on the Model Bill of the Government of India with suitable modifications to suit local conditions. According to the recommendation of the Committee, it is proposed to regulate by legislation the establishment and running of private educational institutions.

The salient features of the Bill are as follows :—

It seeks to regulate the establishment and maintenance of any college, school or other institution, whether or not called a tutorial college or school established and run with the object of preparing

*Published in the *Fort St. George Gazette* Extraodionary, dated 5th August 1966.

[Sri M. Bhaktavatsalam] [9th August 1966

or guiding its students for any certificate or degree, if it is not already recognised, maintained or approved by the Government or maintained or approved by, or affiliated to, any University. To achieve the above purpose, provision has been made for the establishment and maintenance of such institutions only with the permission of the competent authority and in accordance with the terms and conditions specified in such permission. The managers of all institutions to be newly established and of existing institutions having more than fifty students or whose annual income exceeds three thousand rupees are required to prepare a scheme of management and submit it to the competent authority along with the application. The Bill also provides for the payment of an application fee and the depositing of a security and the refund of a portion of the application fee and the entire or any portion of the security deposit in the event of refusal of permission. Provision has been made for the publication in the *Fort St. George Gazette*. on or before the 1st day of June in each year of a list containing the names of all educational institutions granted permission during the preceding year and a list of educational institutions in respect of which such permission has been cancelled during the said period.

The Bill also provides for the audit of the accounts by the auditors appointed by the competent authority and the payment of the remuneration of the auditor by the manager of every educational institution. Provision has also been made for annual and special inspections of educational institutions and for issue of directions for the rectification of defects. He is also provides for the exemption by the Government, of any educational institutions or class of educational institutions from all or any of the provisions of the proposed Act.

Sir, I request the House to accept the motion.

MR. SPEAKER: The motion is before the House for discussion.

திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, கல்வித்துறையில் இந்த ஒரு சிறிய திருத்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்ததைப் பாராட்டி வரவேற்கிறோம். இப்படித் தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்கக் கூடிய அல்லது ஆரம்பித்திருக்கக் கூடிய கல்வி ஸ்தாபனங்களை எல்லாம் சர்க்கார் ஒரு சட்டதிட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும் என்ற கருத்தை மத்திய அரசாங்கமும் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. இந்த மன்றத்திலும் எடுத்துக் கூறப்பட்டது. நம் கனம் முதல் அமைச்சர் அவர்கள் உறுதி தந்தார்கள். அந்த உறுதியை நிறைவேற்றக் கூடிய முறையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். தனிப்பட்டவர்கள் நடத்தக் கூடிய பள்ளிகள் சிறிது காலத்திற்கு முன்னால் கல்விக்காக கல்வி ஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கவேண்டும் அல்லது புதுக் கல்வி ஸ்தாபனங்கள் மூலம் சமுதாயத்திற்கு உதவி செய்யவேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் பள்ளிகள் பெருகி வந்தன. ஆனால், சமீப காலத்தில் இந்தக் கல்வி ஸ்தாபனங்கள் மூலம் லாபம் சம்பாதிக்க



9th August 1966] [திரு. செ. மாதவன்]

லாம் என்ற வியாபார நோக்கோடு ஆரம்பித்து இருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். அப்படி ஆரம்பித்திருக்கக் கூடிய கல்வி ஸ்தாபனங்கள் எல்லாம் சட்டதிட்டத்தின்கீழ் கட்டுப்படாத நிலையில் விளங்கி வருவதையும் பார்க்கிறோம். அவர்கள் மாணவர்களுக்கு உண்மையாகவே நன்மை செய்கிறார்களா, கல்வி ஸ்தாபனங்களில் போதுமான கட்டுத்திட்டங்கள் இருக்கின்றனவா, நல்ல ஸ்டான்டேர்ட் உருவாக வழியிருக்கிறதா என்றால் அவையெல்லாம் சந்தேகத்திற்குரிய நிலையில் இருக்கின்றன. அந்தக் கருத்துக்களை எல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன்.

இச்சட்டம் கொண்டுவரப்படுவதற்கு ஒரு காரணத்தை அடிக்கடி சொல்லி வந்திருக்கிறோம். கல்வி ஸ்தாபனங்களில் மாணவர்களிடத்தில் எந்தெந்த முறையில் பணம் வசூலிக்கவேண்டும் என்ற ஒரு நியதி வகுக்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்தி வந்திருக்கிறோம். குறிப்பாக, தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய கல்வி ஸ்தாபனங்களில் அந்த ஸ்தாபன உரிமையாளர்கள் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் ஷஷ்டியப்தபூர்த்திக்குக் கூட வசூலிக்கக் கூடிய நிலைமை, கட்டணம் மூலம் சட்டப்படி வசூலிக்கக் கூடிய நிலை எல்லாம் இருக்கிறது. தற்சமயம் அதைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தப் பகுதியில், எந்த ப்ரொவிஷனில் இடம் இருக்கிறது என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. அந்தக் கருத்தையும் இந்தப் பொறுக்குக் குழு கவனித்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனிப்பட்டவர்கள் நடத்தக் கூடிய கல்லூரிகளில் டுட்டோரியல் காலேஜுகளும் சேர்க்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பாராட்டத் தக்கதொரு செய்தியாகும். அண்மைக் காலத்தில் டுட்டோரியல் காலேஜஸ் அதிகமாகப் பெருகி வந்திருக்கின்றன. அவற்றையும் சட்டதிட்டத்தின்கீழ் கட்டுப்படுத்தவேண்டுமென்ற யோசனை மிகவும் நல்ல யோசனை.

இன்னொன்று, இப்போது ரெகக்னைஸ்ட் அல்லாத பள்ளிகளுக்கும் ரெகக்னிஷன் உள்ள பள்ளிகளுக்கும் எப்படி உறவு முறை இருக்க வேண்டும் என்பதில் சமீப காலத்தில் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. ரெகக்னிஷன் இல்லாத பள்ளிக்கூடங்களில் படிப்பவர்களை ரெகக்னைஸ் செய்த பள்ளிக்கூடங்களில் சேர்க்கக் கூடாது என்ற எக்ஸிக்யூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அப்போதைக்கப்போது ஆங்காங்குள்ள டி. ஈ. ஓ.-க்களால் பிறப்பிக்கப்படுகின்றன. இதனால் குழப்பம் ஏற்படுகிறது. படித்த மாணவர்கள் படித்து முடிந்த பிறகு என்ன செய்வது என்ற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இந்த இரண்டுவிதமான பள்ளிக்கூடங்களுக்கும் உள்ள உறவுமுறை எப்படியிருக்கவேண்டும் என்பதை இதில் தெளிவாக்கி விட்டால் நல்லது.

இந்தச் சட்டத்தின்கீழ் யார் இந்தச் சட்டதிட்டங்களை அமல்படுத்தவேண்டும்? இப்போது கல்வி இலாகாவில் ஆங்காங்குள்ள டி. ஈ. ஓ.-க்கள்தான் காம்பிட்டன்ட் அத்தாரிட்டி என்று சட்டத்தில் போடப்பட்டிருக்கிறது. அதில் யார் யார் என்பதைத் தெளி

வாக விதிகளில் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பொதுவாக, இந்தச் சட்டத்தின் நோக்கத்தை வரவேற்று, இப்போது ஆரம்பிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிற ஸ்தாபனங்களுடைய நடைமுறை அக்கவுன்ட்சை ஆடிட் செய்வது இதைப் பற்றியெல்லாம் சட்டத்தில் இடம் இருக்கிறது. நடைமுறைகளைக் கூடத் தெளிவாக அமைத்து நடைமுறைகள் மூலம் இந்தக் கல்வி ஸ்தாபனங்களில் ஊழல்கள் ஏற்படாமல் கல்வி ஸ்தாபனங்களை வியாபார நோக்கோடு பயன்படுத்தாமல் இருப்பதற்கு மெயின்டினன்ஸ் ஆஃப் அக்கவுன்ட்ஸ் மிக இன்றியமையாதது. அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெப்பாசிட் ப்ரொவிஷன் போடப்பட்டிருக்கிறது; அது வரவேற்கத் தக்க செய்தியாகும். ஆரம்பித்ததற்குப் பின்னால் இந்தக் கல்வி ஸ்தாபனங்களை நிர்வகிக்க முடியாத ஒரு சூழ்நிலை அந்த ஸ்தாபன உரிமையாளர்களுக்குச் சில இடங்களில் ஏற்படுவதையும் பார்க்கிறோம். அப்படி ஏற்பட்டுவிட்டால் அந்த ஸ்தாபனத்தின் டெப்பாசிட் மூலம் சர்க்காரே ஏற்று அந்த ஸ்தாபனங்களை நடத்த வேண்டும் என்ற ப்ரொவிஷன் இல்லை என்று கருதுகிறேன். அதற்கும் வழிவகை செய்தால் நல்லது. டெப்பாசிட் கட்டுவது அல்லது சில சமயங்களிலில் செக்யூரிடி கொடுக்கிறார்கள். அப்படி செக்யூரிடி கொடுத்து கல்வி ஸ்தாபனங்களை ஆரம்பித்ததற்குப் பின்னால் அதை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அந்தக் கல்வி ஸ்தாபனங்களைக் கான்சல் செய்துவிடலாம் என்ற ப்ரொவிஷன் இருக்கிறது. அப்படி கான்சல் செய்வதற்குப் பதிலாக டெப்பாசிட் தொகையைப் பயன்படுத்தி, சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துவதற்கு வாய்ப்பும் வசதியும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று நமது ராஜ்யத்தில் ஏராளமான டுட்டோரியல் காலேஜ்கள், எஸ்.எஸ் எல்.ஸி., பி.யு.ஸி. பி.ஏ., பி.எஸ்.ஸி.,போன்ற வகுப்புகளுக்கெல்லாம் பயிற்சி அளிக்கும்படியான அளவில் வந்துவிட்டன. இவற்றை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையான நோக்கம் என்று நான் நினைக்கிறேன். பிற ராஜ்யங்களிலுள்ள நிலைமையைப் பார்த்தால், டிப்ளொமா அல்லது சர்ட்டிபிகேட் போன்றவற்றை எல்லாம் கொடுக்கக்கூடிய ஸ்தாபனங்கள் அதிகமாக இருக்கின்றன. அது போன்ற ஸ்தாபனங்கள் நமது ராஜ்யத்தில் இல்லை என்று நினைக்கிறேன். பிற ராஜ்யங்களில் இத்தகைய ஸ்தாபனங்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பாதகம் இந்த ராஜ்யத்தில் இல்லை. குறிப்பாக, டுட்டோரியல் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன, இவற்றைச் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்துவது அவசியம் என்றுதான் நினைக்கிறேன்.

டுட்டோரியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்திலுள்ள மாணவர்களுக்கு ஓரளவுக்கு அவை நன்மை புரிந்துகொண்டுதான் வருகின்றன. மாணவர்கள் நேரடியாகப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். பரீட்சையின் அடிப்படையில் எந்த அளவுக்கு டுட்டோரியல் மூலமாகப் பயிற்சி



கொடுக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, பூரணமாக இதை அகற்றுவது நன்மை என்று சொல்லிவிடமுடியாது. ஏனென்றால் பரீட்சையில் ஃபெயிலாகக் கூடிய மாணவர்கள் இப்படிப்பட்ட டுட்டோரியல் காலேஜில் சேர்ந்துதான் அதிகமான சதமானம் தேறுகிறார்கள். அந்த அளவில் இப்படிப் பட்ட டுட்டோரியல் காலேஜ்களின் தேவையை நாம் மறுக்க முடியாது. அதே சமயத்தில், டுட்டோரியல் கல்லூரிகள் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும். ஒழுங்கான முறையில் நடத்தப்படவேண்டும். இப்போதுள்ள நிலையை எடுத்துக்கொண்டால், டுட்டோரியல் காலேஜ் நடத்துவது என்பது ஒரு 'என்டர்பிரைஸ்' மாதிரி ஆகிவிட்டது. தனியாக, பெரிய தொழில் நடத்துவது போன்று டுட்டோரியல் காலேஜ் ஆரம்பித்துப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கிறார்கள். வியாபாரத்திலும் மற்றத் தொழில்களிலும் சம்பாதிப்பது போன்று, இதிலும் ஒரு சிலர் ஏராளமான பணம் சம்பாதித்து வருகிறார்கள். முக்கியமாக இது எந்த அளவில் நடத்தப்படவேண்டும் என்பதற்கு ஒரு அடிப்படை இருக்க வேண்டும். பிற ஸ்தாபனங்களை நடத்துவதற்கு மானேஜ்மென்ட் கமிட்டி இருப்பது போல் இதை நடத்துவதற்கு மானேஜ்மென்ட் கமிட்டி வேண்டும் என்று இந்தச் சட்டத்தில் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தகுந்த அம்சம். அதே போன்று என்ன 'ஃபீஸ்' வாங்குவது என்பதும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் கட்டுப்படுத்தப் பட்டால் அதற்கு மேல் கட்டணம் வாங்க முடியாது. ஆகவே, இதில் கட்டுப்பாடு, ஒழுங்கு, நியதி இருக்கவேண்டும் என்ற அளவில் இச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இதே போன்றுதான் பல இடங்களில் ஏதோ சில ஸ்தாபனங்களில் படித்துவிட்டு ஆஸ்பத்திரிகளை வைத்து நடத்துகிறார்கள். டுட்டோரியல் கல்லூரி நடத்தப்படுகிறது என்றால் அது நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும், நல்ல முறையில் செயல்படுத்தப்படவேண்டும். அதே சமயத்தில் இவற்றினுடைய தேவையை நாம் மறக்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்த முறையில் வந்திருக்கின்ற சட்டம் வரவேற்கப்பட வேண்டிய சட்டம் என்று கூறி அதை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கின்ற இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு விடப்போவதன் காரணமாகப் பொதுமக்களுடைய கருத்தையும் அறிந்து மேலும் இதைச் செம்மைப்படுத்துவதற்கு வழிகோலும் என்ற வகையில் இது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

கனம் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து பேசிய உரையில் இந்த மாநிலத்தில் பல்வேறு கல்வி நிலையங்களைத் தனிப்பட்ட முறையில் பலர் வைத்துக்கொண்டு அரசாங்கத்தினுடைய அனுமதி பெறாமல் நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதே போன்று கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் குறிப்பிட்டது போன்று பல்வேறு பட்டங்கள், சர்டிபிக்

கேட்கள் வழங்குகிற நிலையங்கள் இந்த மாநிலத்தில் அதிகம் இல்லை என்றாலும் மற்ற, பயிற்சி நிலையங்கள் இங்கு ஏராளமாக அமைந்துள்ளன. அதே நேரத்தில் பிற மாநிலங்களிலிருந்து படித்து, டிகிரி, டிப்ளோமாக்கள், பெறுகின்ற அளவில், நேரடியாகவோ தபால் மூலமாகவோ பயிற்சிகொடுத்து இப்படிப்பட்ட பட்டங்கள் பெறக்கூடிய சூழ்நிலை இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு ஏதாவது கட்டுப்பாடு இருக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. அதற்குரிய வகையில் இந்த அரசாங்கம் இந்திய அரசாங்கத்தோடு ஆலோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையின்பேரில்தான் இப்படிப்பட்டதொரு மசோதா கொண்டுவரப்படுகிறது என்பது கனம் முதலமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திலிருந்து தெரிகிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்தோடு ஆலோசனை செய்த பிற மாநிலங்களுக்கும் ஏதாவது கட்டுப்பாடு கொண்டுவருவதன் மூலம்தான் இந்தச் சட்டத்தினுடைய முழு நோக்கமும் நிறைவேற முடியும். அப்படிப்பட்டதொரு கட்டுப்பாடு கொண்டுவரப்படாமல் இருக்குமோயானால், இந்த மாநிலத்திலுள்ளவர்கள் பிற மாநிலங்களிலுள்ள இத்தகைய நிலையங்களிலிருந்து பயிற்சி பெறுவதற்கு முற்படக்கூடும். ஆகவே, பிற மாநிலங்களையும் கட்டுப்படுத்துகின்ற அளவுக்குச் சிபாரிசு செய்ய வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த வகையில் இந்த மசோதா மிக முக்கியமானதொன்று.

அரசாங்கத்தினுடைய அனுமதியின்றி இத்தகைய பள்ளிகள் வந்துகொண்டிருக்குமானால், அதன் மூலம் மக்களை ஏமாற்றக்கூடும். குறிப்பாக வைத்தியத் துறையில் வைத்தியப் பயிற்சியை ஆங்காங்கு இருக்கக்கூடிய பயிற்சி நிலையங்கள் ஒரு வாரம், இரண்டு வாரம் என்று பயிற்றுவித்து அதற்கென்று தனியாக சர்டிபிக்கேட் கொடுத்துவிடுகிறார்கள். இதை வைத்துக்கொண்டு டாக்டர்கள் என்று போட்டுக்கொண்டு மக்களை ஏமாற்றுகின்ற சூழ்நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. அவற்றையும் கட்டுப்படுத்துவதற்கும், இருக்கின்ற முறைகளைச் செம்மைப்படுத்துவதற்கும் இத்தகைய மசோதா உதவியாக இருக்கும், அந்த வகையில் இது வரவேற்கக்கூடியதொன்றாகும். இப்போதிருக்கின்ற நிலையில் அரசாங்கம் வைத்திருக்கின்ற கல்லூரிகளைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு டுட்டோரியல் கல்லூரிகள் வளர்ந்துகொண்டு வருகின்றன. இவற்றுக்கு எந்தவிதமான கட்டுப்பாடோ, முறையோ இல்லாத காரணத்தினால், தோற்றுப்போன மாணவர்களைத் தேர்வு பெறச் செய்வதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் செயலாற்றுகிறது என்று சொல்லிக்கொண்டு, வியாபார நோக்கத்தோடு பல இடங்களில் இப்படிப்பட்ட நிலையங்கள் செயலாற்றி வருவதைப் பார்க்கிறோம். இவ்விதம் நடத்துகின்றவர்களுக்குப் போதுமான தகுதி, முறைகள் கட்டுப்பாடு ஏதாவது இருக்கின்றனவா என்றால் இல்லை. அரசினர் நடத்துகின்ற கல்லூரிகளைப் போன்று டுட்டோரியல் நிலையங்களிலும் 3,000, 4,000 என்று மாணவர்கள் இருப்பதும் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் இருப்பதாலும், ஓராண்டு, இரண்டு கல்லூரிகளில் கொடுக்கவேண்டிய கட்டணத்தைவிட





இரண்டு மடங்கு, மூன்று மடங்கு பயிற்சிக் கல்லூரிகளில் வசூலிக்கின்ற சூழ்நிலையும் இருந்துகொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துகின்ற நிலையிலும், மாணவர்கள் நிலையைச் செம்மையாக்குவதற்கும், இத்தகைய மசோதா பயனுள்ளதாக இருக்கும். அந்த முறையில் இது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

ஆகவே, இத்தகைய பயிற்சி நிலையங்கள் ஒரு கட்டுப்பாட்டுக்கு வந்து, அதற்கான விதிகள் ஏற்பட்டு, கட்டணங்கள் வசூல் செய்வதற்குக் கட்டுப்பாடு, விதிகள் இவற்றை ஏற்படுத்துவதில் மூலமாகச் செம்மையான முறையில் இதைக் கொண்டுவருவதற்கு இத்தகையதொரு மசோதா மிகத் தேவையாகும். மேலும், டுட்டோரியல் கல்லூரிகளில் பயிலுகின்றவர்கள் அதன் மூலமாக வெற்றி பெறுவதற்குரிய வகையில், பரீட்சையில் வரக்கூடிய கேள்விகள் இவை, இவை என்று எடுத்துக்கொண்டு முன்பாகவே சொல்லப்படுகின்றன. குறைந்தது 30 கேள்விகளைச் சொல்லி, அவற்றில் 15, 20 கேள்விகள் வந்துவிடும், அதற்குரிய விடைகளைக் கற்றுக்கொடுக்கின்ற விதத்திலும் இது அமைகின்றது. அதன் மூலமாகக் கல்வியின் தரம் கீழே போவதற்கும் இடமேற்படுகிறது. ஆகவே, இத்தகையதொரு சூழ்நிலையைக் கட்டுப்படுத்தவும், செம்மைப்படுத்தவும், வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தவேண்டும் என்கின்ற நிலைமை இருக்கிறது. மேலும், இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்குப் போகின்ற தன்மையில் இருக்கின்ற காரணத்தால், பொதுமக்களும் பல்வேறு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் இந்தப் பிரச்னையின் மீது தங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கூறுவதற்கும் வழிசெய்யப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், இந்த மசோதாவை வரவேற்று, இங்கே கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுகின்ற வகையில் வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தைத் துவக்கிய கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் இந்த மசோதாவின் அடிப்படையான கருத்துக்களை ஆதரித்து வரவேற்றுப் பேசினார்கள். அதுபற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இந்த மசோதாவை வரவேற்றுப் பேசினார்கள். கனம் உறுப்பினர் திரு. சங்கரன் அவர்கள் டுட்டோரியல் கல்லூரிகள் இருக்கின்ற நிலைமையைப்பற்றிக் கூறிவிட்டு, அவற்றுக்கு இந்த மசோதாவின் மூலமாக ஏதாவது பாதகம் வந்துவிடுமோ என்ற கவலையையும் தெரிவித்தார்கள். இத்தகைய டுட்டோரியல் கல்லூரிகள் மூலம் மாணவர்களுக்கு, மற்றவர்களுக்குப் பாதகம் வந்துவிடும். அதைத் தவிர்க்கவேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்தும். டுட்டோரியல் கல்லூரிகள் இயங்க வேண்டும் என்றால் அதற்கென்று ஒரு முறை இருக்கவேண்டும். இப்போதுள்ள நிலையில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றே தெரியாது. அவ்விதம் இல்லாமல் 'ரெக்கக்னைஸ்ட் இன்ஸ்டிட்யூஷன்' என்றால் அரசாங்கம்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th August 1966

கவனித்துக்கொள்கிறது. இல்லை என்றால் ரெகக்னிஷன் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் நிபந்தனை விதிக்கிறார்கள், கவனித்துக் கொள்ளுகிறார்கள், கண்காணித்துக்கொள்ளுகிறார்கள்; ஆடிட் கூட இருக்கின்றது. டுட்டோரியல் காலேஜ் என்று ஒன்றும் இல்லை. ஏதோ டுட்டோரியல் காலேஜ், அல்லது வேறு ஸ்தாபனத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டது என்று ஒன்றும் இல்லை. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டபடி, மத்திய அரசாங்கமே இந்த யோசனையைக் கூறியது. அதற்கு முன்னால் சென்ட்ரல் போர்டு ஆஃப் எஜுகேஷனால் கூறப்பட்டது. அதிலே மாநில அமைச்சர்கள் இருக்கிறார்கள், மத்திய அரசாங்க அமைச்சர்கள் இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் கல்வி நிபுணர்கள் இருக்கிறார்கள்; கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அதில் மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சர் அவர்கள், 'தனிப்பட்டவர்கள் அங்கீகாரம் இல்லாமல் கல்வி ஸ்தாபனங்களை நடத்திக்கொண்டுபோவது தவறு; அதனால் கல்வித் துறையில் பெருத்த பாதகம் ஏற்படுகிறது; இதற்குச் சட்டம் செய்ய வேண்டும்; இந்த நிலையைத் தவிர்க்கவேண்டும்' என்று சொன்னார்கள். அந்தக் கருத்தைப் பல்கலைக் கழக வைஸ்-சான்ஸ்லர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதையொட்டித்தான் மத்திய அரசாங்கம் ஒரு மாடல் மசோதாவைத் தயாரித்து அனுப்பியது. அதையொட்டித்தான் இப்போது இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மற்ற மாநிலங்களில் இந்த மாதிரி மசோதாவை நிறைவேற்ற வேண்டுமே என்ற கவலை தெரிவித்தார்கள். இந்த மாநிலத்தில் நடைபெறுகிற கல்வி ஸ்தாபனங்கள் கண்காணிக்கப்படவேண்டும். அவை கட்டுத்திட்டங்களுக்கு அடங்கவேண்டும். அவை தவறு செய்வதை, மாணவர்களுக்குப் பாதகம் செய்வதைப் போக்கவேண்டும் என்பதுதான் நோக்கம். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு மாநிலங்களில் இப்படியே விடப்பட்டிருந்தால் அங்கிருந்து நம் மாணவர்கள் டிகிரி, டிப்ளோமா வாங்கிக்கொண்டு வந்தால் என்னசெய்வது என்று சொன்னார்கள். அதுவும் வாஸ்தவம்தான். நம் மாநிலத்தில் உள்ள ஸ்தாபனங்கள் கண்காணிக்கப்படவேண்டும் என்பதுதான் மசோதாவின் கருத்து. இது மத்தியக் குழுவில் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். மற்ற மாநிலங்களிலும் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். இது புதுக் கருத்தாக இருப்பதால், ரெகக்னிஷன் இல்லாத ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டம் செய்வதாக இருப்பதால் இதைப் பொறுக்குக் குழுவுக்கு விட வேண்டும், இந்த மன்றத்தின் பிரதிநிதிகள், அந்த மன்றத்தின் பிரதிநிதிகள் கொண்ட ஜாயின்ட் செலக்ட் கமிட்டி வைத்து இதை ஆராய்ந்தே சட்டம் செய்வோம் என்றுதான் இந்தப் பிரேரணையைப் பிரேரேபித்தேன். பொறுக்குக் கமிட்டியிலும் இதைப் பற்றி எவ்வாறெல்லாம் திருத்துவது, எவ்வாறெல்லாம் அமைப்பது என்று ஆராய்ந்து, இதிலே அனுபவப்பட்டவர்கள்



9th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

பொறுக்குக் குழுவில் இருக்கிறார்கள், அவர்கள் கவனித்து இயன்ற அளவு திருத்தம் வேண்டுமென்றால் செய்வார்கள் என்று நம்புகிறேன். இம்மசோதாவிற்கு ஆதரவு அளித்ததற்காக மன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொண்டு இந்த மோஷனை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The question is—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of 18 members (12 members of the Legislative Assembly and 6 members of the Legislative Council) to consider the Madras Private Educational Institution (Regulation) Bill, 1966 (L.A. Bill No. 14 of 1966) and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joinnt Select Committee :—

Sri M. S. Selvarajan.
Sri R. S. Arumugam.
Sri M. Alagiriswamy.
Srimathi A. Suares.
Sri G. Rajaram.
Sri N. Mahalingam.
Sri P. Ramachandran.
Sri K. A. Mathialagan.
Pulavar K. Govindan.
Sri A. P. Dharmalingam.
Sri Rama. Arangannal.
Sri Saw. Ganesan, '

The motion was put and carried.

MR. SPEAKER: Under Rule 139 (1) of the Assembly Rules, I nominate the Hon. Chief Minister as a member of the Joint Select Committee.

## III.—GOVERNMENT MOTIONS—*cont.*

### (3) AMENDMENT TO RULE UNDER THE MADRAS DISTRICT MUNICIPALITIES ACT, 1920.

THE HON. SRI S. M. A. MAJID: Sir, I move—

'That the following draft of an amendment to sub-rule (1) of rule 8 of Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920) proposed to be made by the Governor of Madras under sub-section (1) of Section 305 of the said Act be approved'.

### DRAFT.

In exercise of the powers conferred by sub-section (1) of section 305 of the Madras District Municipalities Act, 1920 (Madras Act

V of 1920), the Governor of Madras hereby makes the following rule altering Schedule IV to the said Act :—

*Rule*

In rule 8 of Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), after sub-rule (1), the following sub-rule shall be inserted, namely :—

'(1-A) (*a*) Notwithstanding anything contained in sub-rule (1), the State Government may, for sufficient cause, from time to time, by order,—

(i) postpone the general revision of assessment books, or

(ii) stay the proceedings relating to the general revision of assessment books,

for a period of one or more half-years at a time but not exceeding in any case four half-years :

Provided that such postponement or stay shall not affect any subsequent general revision of assessment books.

(*b*) Where the stay is vacated or the period of stay expires, the State Government may direct that proceedings for the general revision of assessment books shall be either commenced *de novo* or continued from the stage at which such proceedings were stayed.'

Under Rule 8 (1) of Schedule IV to the Madras District Municipalities Act, 1920, the assessbent books of property shall be completely revised by the Executive Authority once in every five years. In connection with the recent revisions made by certain municipalities, a large number of representations have been received by the Government from the ratepayers in a number of municipalities and from certain municipal councils stating that the quinquennial revision of property tax made with effect from 1st April 1966 has been unduly high and arbitrary, that the matter should be carefully re-examined and that the revision should be postponed. Schedule IV aforesaid as it stands does not empower the Government to postpone the quinquennial revision of property tax.

In the case of the Corporation of Madras, there is, however, a provision empowering the Government to direct the Commissioner that the general revision of assessment books, which is to be made in any year, shall be postponed for such period as they think fit and that such postponement shall not affect subsequent general revisions. It is therefore considered necessary and desirable that in the case of the District Municipalities also, power should be taken for the Government to direct for sufficient cause the postponement of the general revision. Accordingly it is proposed to make a provision in the Madras District Municipalities Act empowering the Government to postpone the general revision of assessment books or stay the proceedings relating to the general revision of assessment books for a period of one or more half-years at a time but not exceeding in any case four half-years. It is further proposed to provide that such postponement or stay shall not affect any subsequent general revision of assessment books. Provision is also proposed to be made so as to empower the Government to direct that the proceedings for the general revision of assessment books shall be either commenced *de novo* or continued from the stage at which the proceedings were stayed, where the stay is vacated or the period of stay expires.



Under section 305-A of the Madras District Municipalities Act, 1920, adraft of the proposed rules shall be laid before each of the Houses of the State Legislature and their approval obtained. I ask for the approval of the House accordingly.

The motion was put and carried.

VI—GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS DISTRICT MUNICIPALITIES BILL, 1966 (L.A. BILL NO. 12 OF 1966).

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I move—

'That the Madras District Municipalities Bill *, 1966 (L.A. Bill No. 12 of 1966) be circulated for the purpose of eliciting opinion thereon.'

The traditions of local self-Government are very old in this State. The pattern of municipal administration in vogue at present has existed for over a century. Municipal administration in its present form was inaugurated in the then Madras Presidency in 1850 with the enactment of the Improvements in Towns Act (India Act XXVI of 1850).

Subsequently several amendments to the law relating to municipal administration were made; but in 1884, a marked improvement in the constitution and powers of Municipal Councils was made and the Madras District Municipalities Act, 1884, was passed.

The report of the Royal Commission on Decentralisation published in 1909 recommended relaxation of Governmental control over local authorities, putting the finances of the local authorities on a sound footing and placing the number of elected members on a substantial basis. The real stimulus for local self-goverment came with the publication of the Report on Indian Constitutional Reforms in 1919. Local Self-Government became a transferred subject in the diarchical system of Government introduced in the provinces under the Government of India Act, 1919. The District Municipalities Act of 1884 was repealed in 1920 and a new Act was enacted. This new Act introduced major changes in the constitutional structure of the councils. By the amending Act of 1930, the system of nomination of councillors was completely done away with and representation was given to the minorities by means of reservation. A further amendment was made in 1933 when the system of appointment of commissioners was introduced. By 1950, all municipal councils were completely democratised.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 3rd August 1966

[Sri S. M. A. Majid] [9th August 1966

Though the Madras District Municpalities Act, 1920, has been amended several times, a compresensive review of its working was not undertaken till 1946. Several amendments were proposed by the Government in 1946 for decentralisation of the powers. With a view to reorganise the municipal administration, the Government appointed a committee in 1949 with the late Sri C. S. Rathnasabhapathi Mudaliar, then Chairman, Municipal Council, Coimbatore, as Chairman, to examine the provisions of the existing law and to suggest amendments thereto. Some of the recommendations of the said Committee were embodied in the White Paper on the Reform of Local Administration in this State. A Joint Committee of both the Houses was also appointed to assist the Minister for Local Administration in finalising the proposals contained in the White Paper.

Later on, a draft Bill to amend the Madras District Muncipalities Act, 1920, was prepared in 1961 taking into account the recommendations made by the Committee constituted in 1949 and the proposals contained in the White Paper on the Reform of Local Administration and with reference to the suggestions made by the Departmental Conference of Officers.

However, the Legislature Committee deferred the consideration of the said Bill. As considerable difficulties have been experienced in the working of the present Act and as the provisions have been found to be inadequate in certain respects, the present Bill has been prepared having the draft Bill of 1961 as the basis for amendment. Further, certain provisions in the laws relating to municipalities in other States such as Uttar Pradesh, Maharashtra, West Bengal, Punjab which are not found in the existing Act have been incorporated, with suitable modifications, in this Bill. The Bill seeks also to give effect to the adoption of decimal system of coinage and metric system of weights and measures. Suitable amendments have also been made pursuant to the declaration of Tamil as the official language. In view of the comprehensive nature of the amendments proposed, it has been decided to repeal and re-enact the present Madras District Municipalities Act.

I would like to mention in brief some of the salient features of the Bill.

The Bill contains provisions to improve the administrative efficiency of municipal councils and to improve the method of recruitment to services under the municipal councils. These questions have been engaging the attention of the Government for a long time. After careful consideration, it has been decided that for this purpose, the State Government should have the power to constitute any class of officers or servants of municipal councils into a civil service for the State of Madras. To ensure that recruitment is fair and impartial and that selections are made on merit, consultation with the Madras Public Service Commission has been provided for in regard to the posts under municipal councils. At the same time, power has been taken for the



9th August 1966] [Sri S. M. A. Majid]

Government to exclude certain posts from the purview of the Commission. I would like to mention here that similar provision has been made recently in the Madras City Municipal Corporation Act, 1919 in respect of the posts under the Madras City Corporation. As consultation with the municipal councils entails inordinate delay in the transfer of officers and servants of municipal councils, it is proposed to dispense with such consultation. Necessary provision in this behalf and in respect of certain other points relating to establishment under municipal councils has been made in clauses 92 to 102 of the Bill.

At present, there is not adequate provision for cancellation of resolutions of municipal councils which are in contravention of any rule, notification, direction, etc., made or issued under any other Act or under the provisions of the Madras District Municipalities Act or which, in the opinion of the Government, is undesirable. An enabling provision has now been incorporated in this Bill for cancellation of such resolution.

With a view to tone up the collection of taxes in Municipalities, it is proposed to adopt the following devices :—

(a) Dispensing with the service of demand notice for collection of property tax and intimation by notice to the owner or occupier of the property when the assessment of property tax becomes final in respect of the rate of tax payable in respect of such property.

(b) To deduct profession tax from the salaries of the employees by the employer and to remit the same to the local authorities.

(c) To levy interest at a rate not exceeding ten per cent per annum in case of default of payment of all taxes due to municipal councils.

(d) With a view to augment the financial resources of the municipal councils, it is proposed to make provisions for the levy of additional property tax in respect of premises used for certain specified purposes in addition to the fees charged for any licence and the property tax. Provisions have also been proposed to be made for registration of animals and carriages and for the levy of tax on advertisements. The Council is empowered to set up boardings and levy fees thereof.

The Bill seeks to achieve the above objects. With these words, I commend the motion for the acceptance of the House.

SRI K. A. MATHIALAGAN : Sir, the Hon. Minister has not moved the motion standing in his name, viz.,

'That the Madras District Municipalities Bill, 1966 (L.A. Bill No. 12 of 1966) be circulated for the purpose of eliciting opinion thereon.'

MR. SPEAKER : He first moved the motion and then spoke on it.

Now, the motion is before the House for discussion.

* திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னால் முன்மொழிந்திருக்கிற மாவட்ட நகராட்சி மசோதாவை, மசோதாவுக்கு அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை நான் வரவேற்கிறேன். மசோதாவை வரவேற்பதற்கும், மசோதாவில் திருத்தத்தை வரவேற்பதற்கும் பெரிய வித்தியாசம் நிச்சயம் இருக்கிறது. இந்தச் சட்டமன்றத் தொடரில் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய கருத்துக்கு ஒன்றிய வகையிலே அவர்களை நான் ஆதரிப்பதற்கான ஒரு வாய்ப்பை இந்தக் கூட்டம் முடிகிற கடைசிக் கட்டத்தில் அளித்ததற்காக கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கும் கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மசோதாவின் நோக்கங்கள் என்ன வென்பது பற்றி நம்முடைய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நான் கனம் முதல் அமைச்சர் அவர்களுடன் நேற்று தனியாகப் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் இந்த மசோதாவைப் பொதுமக்களின் கருத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற திருத்தத்தை நாங்கள் கொடுக்கலாம் என்று கருதுகிறோம், அல்லது பொறுக்குக் குழுவுக்காகிலும் அனுப்பலாம் என்று கருதுகிறோம் என்று சொன்னேன். இது ஒரு திருத்த மசோதா கூட அல்ல. இந்த ஆக்டையே ரெப்பீல் செய்துவிட்டு, புதியதாகவே ஒரு சட்டம் எனாக்ட் பண்ணுகிற காரியம் இது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்கச் சார்பிலேயே இப்படி ஒரு திருத்தத்தை கொடுப்பதாக இருக்கிறோம் என்று சொன்னார்கள்.

உண்மையிலேயே நம்முடைய சர்க்கார் போடுகிற கிராமப் பஞ்சாங்கம் என்று சொல்கிற அளவுக்கு, பெரிய பஞ்சாங்கம், ரயில்வே கைடு அளவுக்கு இப்படி ஒரு பெரிய மசோதாவை அள்ளித் தெளித்த அவசரக் கோலம் என்ற முறையில், தங்களுக்கு மெஜாரிடி இருக்கிறது என்று வழக்கம்போல் அவசர அவசரமாகப் பாஸ் செய்துவிட வேண்டும் என்று கருதியிருந்தால், உண்மையிலேயே அதை நாங்கள் சகித்துக் கொண்டு தான் இருக்க வேண்டியிருக்கும் என்று கருதினால் அது சரியல்ல. ஏனென்றால் இப்போதே பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருந்தால் அதுஒரு பெரிய தவறான காரியமாக இருந்திருக்கும். பொது மக்கள் கருத்தை அறிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பை அளித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு எங்களுடைய கட்சியின் சார்பிலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொது மக்கள் கருத்து அறிய இந்த மசோதா அனுப்பப்படுவதை நான் ஆதரிக்கிறேன்.

ஆனால், இந்த மசோதாவைப் பார்க்குமிடத்து, இது ஒரு பயங்கரமான மசோதா, பிற்போக்கான மசோதா. இந்தச் சர்க்கார் தொடர்ந்து செய்து கொண்டு வருகிற காரியங்களையே திரும்பவும் செய்து கொண்டு வருகிறது. இது பெரிய காரியம். நோக்கம் புனிதமான நோக்கம். 18, 20 வருஷ காலமாக முனிசிபல் சேர்மன்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும், அதிக



அதிகாரங்கள் கீழேயுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு பரவலாக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. 1946-ம் வருடத்திலிருந்து கனம் முதல் அமைச்சர் அமைச்சராகப் பதவி வகிக்க ஆரம்பித்த காலத்திலிருந்தே அவருடைய முதல் அமைச்சர் பதவி முடிகிற காலம் வரையில் 20 வருஷ காலமாக, இதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து, சிந்தித்து, திரு. ரத்தினசபாபதி முதலியார் கமிட்டி, மற்ற கமிட்டிகள் இதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து, அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. வெள்ளை அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காரியங்களெல்லாம் மிகத் தெளிவான காரியங்களாக இல்லை. (குறுக்கீடு). 'நீங்கள் வந்து செய்யுங்கள்' என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நான் சொல்ல வேண்டியதை அவர்கள் சொல்லி விட்டார்கள். நாங்கள் வந்து செய்ய வேண்டிய ஒரு காரியமாக இருப்பதன் காரணமாக, இது இப்பொழுது 6 மாதங்களில் முடிகின்ற காரியம் அல்ல. இனிமேல் வருகிற சர்க்காருக்கு ஒரு தவறான சட்டத்தைச் செய்து கொடுக்கக் கூடாது. முன்னேற்றக் கழக அரசாங்கமாயிருந்தாலும்சரி, காங்கிரஸ் அரசாங்கமானாலும் சரி, காங்கிரஸ் ஆட்சி நிச்சயம் கிடையாது—இருந்தாலும்கூட, முன்னேற்றக் கழக அரசாங்கமாக இருந்தாலும்கூட, சாதாரணமாக முனிசிபாலிட்டிகளுக்கு அதிகாரத்தை அதிகமாக வழங்க வேண்டுமென்று சொல்லுகிறோம். நோக்கம் சரியானதாக இல்லை. முனிசிபாலிடிகளையெல்லாம் கலைத்து டவுன்ஷிப் ஆகச் செய்திருக்கிறார்கள் சர்க்கார். இப்பொழுதே அந்த மாதிரி நிலைமைகள் இருக்கின்றன. மேட்டூரை டவுன்ஷிப் ஆக மாற்றியிருக்கிறார்கள். கொடைக்கானலை டவுன்ஷிப் ஆக்கிவிட்டார்கள். இப்படி அபாயகரமான நிலையில் அதிகாரங்களைக் கமிஷனர்களுக்கும், கலெக்டர்களுக்கும் கொடுக்கக்கூடிய சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இதுதான் அதிகாரத்தைப் பரவலாக வழங்குவதா ? இந்த மசோதா இப்பொழுது பொது மக்களின் கவனத்திற்குப் போகிறது. இதையெல்லாம் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பார்கள். இதை மூன்று அம்சமாக பிரித்துக்கொள்ளவேண்டும். இது பொது மக்களின் கருத்தை அறிந்துகொள்வதற்காக விடப்பட்டிருக்கிற ஒரு பெரிய மசோதா. இருபது வருஷங்களாக இதைப்பற்றியெல்லாம் விவாதம் நடந்திருக்கிறது. அந்த முறையிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவை நான் இன்னும் சரியாகப் படிக்கவில்லை. ஒரு நாளைக்கு 50 பக்கம் படித்தால்கூட 7 நாட்கள் ஆகும். பாகவதம் மாதிரி இருக்கக்கூடிய ஒரு பெரிய மசோதா. இது ஒரு பெரிய அபாயகரமான, பிற்போக்கான மசோதா. இது காங்கிரஸ் சர்க்காருக்கு மட்டுமல்ல. பின்பு வேறு ஒரு சர்க்கார் வரலாம். அந்த சர்க்காருக்கும் இந்த அதிகாரங்கள் கூடாது என்பதுதான் என் கருத்து. இதிலே பல அபாயகரமான அம்சங்கள் இருக்கின்றன. 11-00 a.m.

இன்றைக்கு இருக்கும் நிலையை எடுத்துக் கொண்டால், முனிசிபாலிடிகளுக்கு நிதியைப் பெருக்க பல யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. தொட்டால் வரி, திரும்பினால் வரி என்று

[திரு. கே. ஏ. மதியழகன்] [9th August 1966

சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது போட்டிருக்கும் வரிகள் போதாது என்று இன்னும் புதுப்புது வரிகளைப் போடச் சொல்லு கிறார்கள். அவற்றில் ஒன்று 'லெவி ஆஃப் சானிடேஷன் செஸ்' அதன் பிறகு தொழில் வரி; ஒருவன் எங்கே தொழில் செய்கிறானோ அங்கேயே வசூல் செய்வது என்று போட்டிருக்கிறார்கள். இது வரையில் மனிதர்களுக்குத்தான் வரி என்று பார்த்தோம்; இன்றைக்கு மாட்டுக்கு வரி, ஆட்டுக்கு வரி, பன்றிக்கு வரி, குதிரைக்கு வரி, கழுதைக்கு வரி, இன்னும் பலவற்றிற்கு வரி என்று சொல்லியிருக்கிறார்கள். அதே மாதிரி சின்னச் சின்ன வியாபாரிகள் மூட்டைகள் வைத்திருந்தால், கடை வைத்திருந் தால், அப்பளம் வைத்திருந்தால் என்று எவ்வளவோ வரி சொல்லுகிறார்கள். வருமானத்தைப் பெருக்க வேறு எவ்வளவோ வழிகள் இருக்கும்போது, இதை யெல்லாம் பார்த்தால் ஆச்சரிய மாக இருக்கின்றது. நான் கேலிக்காகச் சொல்லவில்லை. ஒத்துக் கொள்ளுகிறோம், அதிகாரங்கள் கொடுக்க வேண்டும், பரவலாக்கப் பட வேண்டும். நாங்கள் ஃபைனான்ஸ் கமிஷனிடம் கூடச் சொல்லி யிருக்கிறோம். இன்றைக்கு விற்பனை வரி போடுகிறோம். அதில் ஒரு பங்கு நகர சபைகளுக்கு அலொகேட் செய்யப்பட வேண்டும். இன்கம் டாக்ஸிலே மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் பெறுவதுபோல, எக்சைஸ், எஸ்டேட் ட்யூட்டிகளிலிருந்து மாநில அரசு பெறுவது போல நகரசபைகள் இந்த வரி இனங்களிலிருந்து பெறும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால், மாடுகளையும், ஆடுகளையும், பன்றிகளையும் வரிக்கு உள்ளாக்க வேண்டியதில்லை. இதே மன்றத்திலேகூடச் சொல்லியிருக்கிறேன்.

எப்படி, ஸ்டேட் லிஸ்ட், யூனியன் லிஸ்ட், கன்கரன்ட் லிஸ்ட் என்று மூன்று லிஸ்டுகள் இருக்கின்றனவோ, அதேபோல லோகல் பாடிகள் லிஸ்டு என்று இன்னொன்றும் சேர்க்க அரசியல் சட்டத் தையே திருத்த வேண்டும் என்று சொல்லியுள்ளேன். இதைத்தான் காந்திஜி அவர்களும் அதிகாரம் பரவலாக இருக்க வேண்டும் கிராமங்கள் வளரவேண்டும் என்று சொன்னார்கள். அந்த வகையில் நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த வழிகளை விட்டு விட்டு, வண்டிக்கு, மாட்டு வண்டிக்கு, சைகிளுக்கு என்றெல்லாம் வரி போடு என்கிறார்கள். மாட்டு வண்டியும் சைக்கிளும் ஏழைகளுடைய வாகனங்கள். கனம் திரு. ராஜமன்னார் அவர்கள் ஃபைனான்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் நிதி ஆதாரங்கள் இருக்கும் நிலைகளை ஆராய வேண்டும் என்று சொன்னார்கள். அந்த வகையில் இந்தச் சர்க்காரோ அல்லது வருகிற சர்க்காரோ செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த முறையில் இந்த மசோதா விலேயே திருத்தங்கள் செய்ய வேண்டும்.

கமிஷனர், அவருக்கு மேலே கலெக்டர் நியமிக்கிற அதிகாரிகள் என்று இருக்கிறார்கள். கலெக்டருக்கு அதிகாரம், முதல் அமைச் சருக்கு அதிகாரம், ஆளும் கட்சிக்கு அதிகாரம் கொடுக்கும் மசோ தாவாகத்தான் இது இருக்கிறது. அதைப்பற்றியும் யோசிக்க வேண்டும்.



9th August 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

அதே மாதிரி இன்னொரு கருத்தும் இருக்கிறது. மூன்று வருஷம் கவுன்சில் என்பதை 4, 5 வருஷம் என்று ஆக்க வேண்டும் என்கிற கருத்தும் இருக்கிறது. அதிகாரத்தை அதிகமாக எடுத்துக் கொண்டு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. அதைத் தடுக்க இந்த மசோதாவில் வழி செய்ய வேண்டும். இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? 'கன்ட்ரோலிங் அதாரிடி' என்கிறார் கள். கன்ட்ரோல் செய்வதுதான் இவர்கள் அதிகாரம். தலைப்பே அப்படி இருக்கிறது. கன்ட்ரோலிங் அதாரிடி என்பதிலே, 'power to suspend or cancel resolutions, etc., under Act' என்று 38-வது செக்ஷனிலே இருக்கிறது. அதாவது—

"Government may, by order in writing—

(i) suspend or cancel any resolution passed, order issued, or licence or permission granted, or

(ii) prohibit the doing of any act which is about to be done or is being done in pursuance or under colour of this Act, if, in their opinion—

(a) such resolution, order, licence, permission or act has not been legally passed, issued, granted or authorised,

(b) such resolution, order, licence, permission or act is in excess of the powers conferred by, or in contravention of this or any other Act or of any rule, notification, regulation or by-law made or issued under this or any other Act or an abuse of such powers or is considered by the Government to be otherwise undesirable" .... என்றிருக்கிறது. இவைகளை யெல்லாம் ஒத்துக்கொள்ளுகிறேன். இந்த செக்ஷனைக் கூட ஒத்துக்கொள்ளு கிறேன். ஆனால், என்ன வாசகம் போட்டிருக்கிறார்கள்?

'If.... such resolution, order, licence, permission or act is in excess of the powers conferred by or in contravention of this or any other Act or of any rule, notification, regulation or by-law made or issued under this or any other Act', என்று அப்படிச் சட்டத்திற்கு விரோதமாக, முரணாகச் செய்திருந்தால் அல்லது or an abuse of such powers என்ற மூன்றையும் ஒத்துக்கொள் ளுகிறேன். 'contravention' ஆக இருந்தாலும் சரி; 'excess of the powers conferred' ஆக இருந்தாலும் சரி; 'abuse of such powers' ஆக இருந்தாலும் சரி ஆனால் கீழே கூறப்போகும் இந்த வாசகம் ஒரு தூக்குக் கயிறு போல அமைந்திருக்கிறது. இது என்ன சாதாரண வாசகமா? 'is considered by the Government to be otherwise undesirable' என்றிருப்பது, எவ்வளவு தெளிவாக இருக்கிறது. இதை துஷ் பிரயோகம் செய்யமாட்டார்களா? இது என்ன சாதாரண வாசகமா? தூக்குக் கயிறு போலல்லவா இருக்கிறது. ஜனநாய கத்திற்கே தூக்குக் கயிறு போல் இருக்கிறது. 'is considered by the Government to be otherwise undesirable' என்பதிலே "otherwise undesirable" என்று இருக்கிறதே, இதன் விளக்கம் என்ன? கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்குத் தியாகிகள் நினைவு நாள் எவ்வளவு பேர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தி

யத்தை எதிர்த்து சுதந்திரத்திற்காகத் தூக்கு மேடையில் ஏறினார்கள், தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டார்கள், உயிர், துறந்தார்கள்? அவர்களுடைய நினைவாக இன்றைக்கு மாலையில் கூட பரங்கிமலையில் ஒரு மைதானத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களும் சேர்ந்து 109 செடிகளை நடப் போகிறார்கள். இந்தச் சுதந்திரம் என்ற உணர்ச்சியை கண்ணீராலும், செந்நீராலும் பல தியாகிகள் வளர்த்திருக்கிறார்கள் . . . .

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதியின் பேரில் நிலைமையை விளக்க விரும்புகிறேன். மசோதாவை நேரிடையாக விவாதித்து, சட்டமாகக் கொண்டு வருவதும் உண்டு. அப்படிச் சில சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, சில மசோதாக்களைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டு, அவர்கள் பரிசீலித்துச் சட்டமாக நிறைவேற்றுவதும் உண்டு. அப்படிப் பொறுக்குக் குழுவிற்குப் போகும்போது, அடிப்படையான சில கருத்துக்களில் பொறுக்குக் குழு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று எடுத்துச் சொல்வதும் உண்டு. இப்பொழுது கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மசோதா, பப்ளிக் ஒபினியனுக்கு விடலாம் என்று கோரி சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இது பெரிய மசோதா, சிக்கல்கள் நிறைந்த மசோதா. நீண்ட காலமாகவே மாறுதல்கள் செய்யப்பட வேண்டிய மசோதா. ஆகவே, அதைப் பப்ளிக் ஒபினியனுக்கு விடவேண்டும் என்கிற பிரேரணையைச் செய்திருக்கிறார்கள் அதன்பேரில். இவ்வளவு பேச வேண்டிய அவசியம் இல்லை. எதையெல்லாமோ கனம் அங்கத்தினர் பேசுகிறார்கள். ஒன்று சொல்ல விரும்புகிறேன், இந்த மசோதாவைப் பப்ளிக் ஒபினியனுக்கே விடவேண்டாம் என்று சொன்னால் கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் சொல்ல விரும்புகிறேன், இதை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறோம். அதற்குப் பிறகு கனம் அங்கத்தினர் கனவு காண்பதுபோல நடந்தால், அவர்கள் இந்த இடத்தில் இருந்துகொண்டு இந்த மசோதாவைக் கொண்டு வரட்டும். ஆகவே, இதன்பேரில் இவ்வளவு தூரம் பேச வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கமே பப்ளிக் ஒபினியனுக்கு விடுகிறோம் என்று சொல்லுகிறோம். மக்கள் சிந்திக்கட்டும், சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்கட்டும், கருத்துக்களைத் தெரிவிக்கட்டும் என்று அரசாங்கம் செய்கிறது. ஏதோ தவறுதல் நடந்துவிட்டது போலப் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. வேண்டுமென்றால், எதிர்க் கட்சி விரும்பினால், இந்த மசோதாவை இப்பொழுதே—அதிக நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை—வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறோம். அவர்கள் ஆட்சி ஏற்று நடத்தும்போது, அதைச் செய்யட்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இவ்வளவு கோபம் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு வரவேண்டியதற்கான காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. இந்த மசோதா பொது மக்களுடைய அபிப்பிராயத்திற்காக



விடப்பட்டு, பொதுமக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கக்கூடிய நிலையில், பொது மக்களுக்கு உள்ள உரிமை சட்டசபை உறுப்பினர்களுக்கு இல்லையா என்று நான் கேட்கிறேன். பொது மக்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை எழுதி அனுப்பலாம் என்னும் போது, பொதுமக்களுக்கு இருக்கிற அத்தகைய உரிமை, லட்சக் கணக்கான மக்களுடைய ஓட்டுகளைப் பெற்று, அவர்களுடைய பிரதிநிதிகளாக இங்கே வந்துள்ள உறுப்பினர்களுக்கு இல்லையா என்று நான் கேட்கிறேன். "அதர்வொய்ஸ் அன்டிஸைரபிள்" என்ற வாசகத்தை எப்படி பயன்படுத்தக் கூடும் என்பதற்கு உதாரணங்களைத்தான் நான் குறிப்பிட்டேன். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய உருவப் படத்தை வைக்க வேண்டும் என்று உடுமலைப்பேட்டை முனிசிபாலிடி தீர்மானம் போட்டது. அந்தப் படம் அங்கே வைக்கப்படக் கூடாது என்ற அளவிற்கு "அதர்வொய்ஸ் அன்டிஸைரபிள்" என்ற வாசகம் பயன்படுத்தப்படுகிறது. இப்படியெல்லாம் உதாரணங்கள் இருக்கின்றேன். இப்படியெல்லாம் இந்த வாசகம் துஷ்பிரயோகம் செய்யப் பயன்படும் என்பதற்காகத்தான் நான் சொல்ல வந்தேனே தவிர, வேறொன்றுமில்லை. இந்த மசோதாவை முதல் அமைச்சர் அவர்கள், "வாபஸ் பெறவேண்டுமானால் வாபஸ் பெற்றுவிடுகிறேன்" என்று கோபப்பட்டுச் சொல்லுவதைப் பார்க்கும்போது, எந்த நல்ல கருத்துக்கு இதைக் கொண்டுவருகிறார் என்று தெரியவில்லை. நான் தியாகிகளைப்பற்றிச் சொன்னேன். இப்படியெல்லாம் "அதர்வொய்ஸ் அன்டிஸைரபிள்" என்று எழுதி வைத்து விடுகிறார்கள் என்று சொன்னேன். உடுமலைப்பேட்டை முனிசிபாலிடியில் முத்துராமலிங்கத் தேவர் படத்தைத் திறந்து வைக்கவில்லை. அதற்கு இத்தகைய காரணம் சொல்லப்படுகிறது. முத்துராமலிங்கத் தேவர் தியாகி இல்லையா என்று நான் கேட்கிறேன். ஆனால், காமராஜ் வளைவு கட்டலாம் என்று வந்தது. அறுபதாயிரம் ரூபாய், எழுபதாயிரம் ரூபாய் பணம் முனிசிபாலிடியிலிருந்து எடுத்து திருச்சி முனிசிபாலிடியில் காமராஜ் வளைவு கட்டலாம் என்று தீர்மானித்து அது பாதியிலே அப்படியே நிற்கிறது. அது 'அன்டிஸைரபிள்' இல்லையா? எது டிஸைரபிள், எது அன்டிஸைரபிள் என்பதை விளக்க வேண்டும் என்பதற்காகப் பேசினேனே தவிர, பேசவேண்டாம் என்றால், பேசாமல் இருந்து விடுகிறேன். சட்டசபையைக் கூட்டாமலிருந்தாலும்கூட, அதற்கும் நான் தயார்தான். கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது, எனக்கு ஆவேசம் வந்துவிட்டதாகச் சொன்னார்கள். நான் என்ன ஆவேசமாகப் பேசிவிட்டேன்? நான் என்ன ஆத்திரமான விவரத்தைப் பேசிவிட்டேன்? 'அதர்வொய்ஸ் அன்டிஸைரபிள்' என்ற வாசகத்தை இரண்டு இடங்களில் எப்படி வெவ்வேறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு உதாரணம் சொல்லலாம் என்று நான் நினைத்தேன். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய படத்தை ஒரு முனிசிபாலிடியில் வைக்க வேண்டும் என்று அந்த முனிசிபாலிடியில் தீர்மானம் போட்டார்கள். அவரும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொள்ளவில்லையா? முத்துரங்க முதலியார் அரங்கத்தைத் திறந்து வைக்கிறார்கள். நான் தலை வணங்குகிறேன். முதலமைச்சருடைய குடும்பம்

சுதந்திரத்திற்காகப் போராடிய குடும்பம். நன்றி செலுத்துகிறேன். ஆனால், முனிசிபாலிடியில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களே என்பதை உதாரணத்திற்காகச் சொன்னேனே தவிர, வேறு எதற்காகவும் அல்ல. அதற்காகக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளுவானேன் ?

**கனம் சபாநாயகர் :** இருவரில் யாருக்குக் கோபம், யாருக்கு ஆவேசம் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த விஷயத்தை நான் இரண்டே நிமிடங்களில் விளக்கியிருப்பேன். "அதர்வொய்ஸ் அன்டிஸைரபிள்" என்ற வாசகத்தை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதை விளக்கி, என்னிடம் இருக்கும் தகவலைத் தெரிவிக்க விடாமல், எரிமலை போல் குறுக்கிட்டு . . .

**கனம் சபாநாயகர் :** இங்கே ஒன்றும் எரிமலை வராது.

**திரு கே. ஏ. மதியழகன் :** வீணான வாதத்தைக் கிளப்பிப் புயலாக்கியிருக்க வேண்டியதில்லை. கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல வரி இனங்களை விதிக்கக்கூடிய வகையிலும், நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ளக்கூடிய வகையிலும், அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இந்த மசோதா புனர்ப் பரிசீலனை செய்யப்பட வேண்டும். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். எங்களுடைய ஆட்சி வந்தால் கூட, இந்த அதிகாரங்கள் எல்லாம் பரவலாக முனிசிபாலிடிகளுக்குத் தரப்படும். அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாத அளவிற்கு, பரவலாக நிதி ஆதாரங்கள் பெருக வேண்டும். சுகாதார வசதி, பாதுகாக்கப்பட்ட குடி நீர் வசதி, அளிக்கத்தக்க வகையில் சினிமாக் கொட்டகைகள் அமைப்பது, மின்சார விநியோகப் பொறுப்பு முதலிய வகைகளில் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ளத்தக்க அளவுக்கு முனிசிபாலிடிக்குப் பரவலான அதிகாரங்களைக் கொடுக்கும் வகையில் இந்த மசோதா நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும். இதைப் பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு அனுப்புவதன் மூலம் அவர்களும் நல்ல வகையில் கவனிப்பார்கள். பத்திரிகைகளிலும் இதைப்பற்றி நல்ல விவாதத்தைத் தொடங்க வேண்டும். அந்த வகையிலே இந்தச் சட்ட மன்றத்தின் அடுத்த கூட்டத்தில், இந்த அமைச்சரவையில் பதவிக் காலம் முடிவதற்குள்ளாகவே— அவர்களுக்கே இந்தப் பெருமை இருந்துவிட்டுப் போகட்டும், இந்த நல்ல செயலைச் செய்துவிட்டுப் போகட்டும் என்று கூறி என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பிரேரேபித்து, இதைப் பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்காக விடவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தைக் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் ஆதரிக்கிறாரா என்பது





சந்தேகம்மாகத்தான் இருக்கிறது. அவருடைய சந்தேகத்தைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஓரளவு புரிந்து கொண்டு, வேறு நினுசாக விளக்கினார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

இந்த மசோதாவின் "ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்"ஸைப் படித்துப் பார்த்தால், இந்த மசோதா எவ்வளவு கஷ்டப்பட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பது புரியும். சுமார் இருபது வருஷங்களாகப் பல மந்திரி சபைகளினுடைய அபிப்பிராயங்களைக் கருத்திற்கொண்டு, லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் பொறுப்பில் இருந்த பல மந்திரிகளுடைய அபிப்பிராயங்களையும் எடுத்துக் கொண்டு இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல மந்திரிகளுடைய கைங்கரியம் சேர்ந்து சிறந்த வகையில் இந்த மசோதா உருவாகியிருக்கிறது. இந்நாட்டிலுள்ள முக்கியமான பிரச்சினைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரிக் கஷ்டப்பட்டுத் தயாரித்த ஒரு மசோதாவை எந்த மந்திரியும் தானே நிறைவேற்றி, அதனுடைய பலன்களைப் பொதுமக்களும், முனிசிபாலிடிகளும் அனுபவிக்க வேண்டும், சட்டம் நடைமுறைக்கு வர வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். அதுதான் வழக்கம். அதைத் தடுப்பதற்கு எதிர்க் கட்சியினர் 'டைலேடரி டாக்டிக்ஸ்'ஸை உபயோகப்படுத்தி "இந்த மசோதாவைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விட வேண்டும்" என்று கேட்டுக்கொள்ளுவது சாதாரண வழக்கம். ஆனால், அதற்கு மாறாக, இந்த மசோதாவைப் பொருத்த வரையில், இந்த மசோதாவைப் பிரேரேபித்த அமைச்சர் அவர்களே, இதைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விட வேண்டும் என்று பிரேரேபித்திருக்கிறார்கள். இது அவசியமா என்பது எனக்குப் புரியவில்லை. இது மிகவும் கஷ்டப்பட்டு, மிகுந்த கவனம் செலுத்தித் தயாரிக்கப்பட்ட ஒரு மசோதாவாகும். இந்த மசோதாவைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடுவதனால் என்ன பலன் ஏற்படும் என்பதில் எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடுவதென்றால், இந்த மசோதா இப்பொழுது வந்திருக்க வேண்டியதில்லை. ஏன் இவ்வாறு சொல்லுகிறேன் என்றால், இந்தச் சட்டசபை தன்னுடைய ஐந்தாவது ஆண்டின் இறுதியில் இருக்கிறது. இன்னும் சில மாதங்கள் தான் இருக்கின்றன. அதை அடுத்து, தேர்தல் வரப் போகிறது. அதற்குள்ளாக, பொதுஜனங்கள் அபிப்பிராயம் தெரிவித்து, அதற்குப் பிறகு சட்டசபையில் அதைப் பிரேரேபித்து, பிறகு செலக்ட் கமிட்டிக்கு விட்டு, அவர்கள் பரிசிலனை செய்து, அதன் பிறகு சட்டசபைக்கு வந்து நிறைவேறுவது என்றால், அது இந்தச் சட்டசபையின் பதவிக் காலத்திற்குள் முடியாது என்று தான் நான் நினைக்கிறேன். ஆனால், என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இவ்வளவு பிரயாசை எடுத்துக் கொண்டு, இருபது வருஷங்களாகக் கவனம் செலுத்தி, இந்த நாட்டிலுள்ள முக்கியமான பெரிய தலைவர்கள், முனிசிபாலிடிகளில் அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் இவர்களுடைய கருத்துக்கள் அடங்கிய இப்படிப்பட்ட ஒரு முக்கியமான மசோதாவைச் சும்மாத் தள்ளிவிடக் கூடாது என்பதுதான். ஏதோ எதிர்க்கட்சியினர் கனவு காண்பது

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [9th August 1966

போல், அவர்கள் ஒன்றும் பதவிக்கு வரப்போவதில்லை, அவர்கள் பதவிக்கு வந்தால், இது வரவும் வராது. காங்கிரஸ் மந்திரி சபைதான் வரப்போகிறது என்பது நிச்சயம். அந்த மந்திரி சபைக்கு இத்தகைய கஷ்டமான வேலையைக் கொடுக்க வேண்டாம். இதை இந்த மந்திரி சபையே நிறைவேற்றிவிட வேண்டும். தேர்தலுக்குப் பிறகு வரும் மந்திரி சபை சிறு திருத்தங்கள் ஏதாவது தேவையானால், கொண்டுவரலாம். ஆனால், நான் என்னுடைய யோசனையைத் தங்கள் மூலமாக முதல் அமைச்சர் அவர்களுக்கும், ஸ்தல ஸ்தாபன இலாக்கா அமைச்சர் அவர்களுக்கும் சமர்ப்பிக்கின்றேன். இப்பொழுதுள்ள பிரேரேபணையை மாற்றிக் கொண்டு, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும். செலக்ட் கமிட்டிக்கு விட்டு, அங்கே இது பரிசிலனை செய்யப்பட்டு, அடுத்த கூட்டத்திலேயே இதைக் கொண்டு வந்து, இந்த வருஷத்திற்குள் இதைச் சட்டமாக இங்கே நிறைவேற்றிவிட வேண்டும். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பேசும் போது, ஆட்டுக் குட்டிக்கு வரி, மாட்டுக்கு வரி, கழுதைக் குட்டிக்கு வரி, கோழிக் குஞ்சுக்கு வரி என்றெல்லாம் சொன்னார்கள். இதெல்லாம் இப்பொழுது இருந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த வரியெல்லாம் முனிசிபாலிடி போடலாம் என்று உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. வரி போட வேண்டுமென்றால் முனிசிபாலிடி வரி போடலாம். வேண்டாம் என்றால் போட வேண்டாம். முனிசிபாலிடிக்கு சுயாட்சி உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் எல்லா உரிமைகளும் இருக்கின்றன. இன்னும் அதிக உரிமை வேண்டுமென்றால், அதையும் செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்து, அதற்கும் இடமளிக்கலாம். இந்த மசோதாவைக் கொண்டு வந்ததன் மூலம் அமைச்சர் அவர்கள் மகத்தான ஒரு பணியைச் செய்திருக்கிறார்கள். கனம் அமைச்சர் திரு. மஜீத் அவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டு இதைக் கொண்டு வந்திருப்பதால், இந்தச் சந்தர்ப்பத்திலேயே இதை நிறைவேற்றுவதற்கான முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதைத் தேர்தலுக்குப்பின் இன்னொருவர் நிறைவேற்ற வேண்டும் என்று விட்டுவிடுவது நியாயம் இல்லை என்று தெரிவித்து, இந்த மசோதாவை இந்தச் சபை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் தலைவர் அவர்களே, விவாதத்திலே குறுக்கிட்டுப் பேசிய கனம் முதல் அமைச்சர் அவர்கள், இந்த மசோதாவை, விரும்பினால், வாபஸ் பெற்றுக் கொள்ளுவதற்குத் தயார் என்று பேசினார்கள். அந்த அளவிற்கு அவர்கள் ஏன் பேசினார்கள் என்று எண்ணுகின்ற நேரத்தில், இந்த மசோதா எந்த அடிப்படை நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பது நன்றாக விளங்குகிறது.

நண்பர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டபடி, இந்த மசோதாவை கனம் அமைச்சர் திரு. மஜீத் அவர்களுடைய ஆட்சிக் காலத்திற்கு உள்ளாகவே கொண்டுவர வேண்டும் என்று நோக்கம் இருந்திருக்குமானால், இவ்வளவு சிரமப்பட்டு, இவ்வளவு



9th August 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

பெரிதாக, கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளுக்கு பிறகு கொண்டுவரப்படுகிற இந்தத் திருத்த மசோதாவினை இன்னும் விரிவாகவே தயாரித்துக் கொண்டு வந்திருக்கலாம்.

இந்தத் தொடர்க் கூட்டத்தை ஆரம்பித்து வைத்த கவர்னர் பெருமான் அவர்கள், தங்களுடைய உரையிலேயே குறிப்பிட்டார்கள். இந்தத் தொடரில் நகராட்சித் திருத்தச் சட்டம் வரும் என்ற வாசகம் அவருடைய உரையில் இருந்தது. நான் கூடக் கருதினேன். இந்தத் திருத்தச் சட்டம் இன்னும் விரைவாகவே கொண்டுவரப்படும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இந்தச் சட்டமன்றம் முடிகிற இந்தத் தொடரில் இன்றைய தினம் கடைசி நாளாக இருக்கிறது. இதைப் பொதுமக்கள் கருத்துக்கு அனுப்பி, அவர்கள் கருத்துக்கள் கிடைத்ததற்குப் பிறகு அக்டோபர் அல்லது நவம்பரில் இன்னொரு கூட்டம் இருக்கலாம் என்று நினைக்கிறேன்—அப்போது இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புப்படியாக இருக்கும். அதற்குள் தேர்தல் வேலைகள் மும்முரமாகிவிடும். அப்போது இந்த மசோதாவை நன்கு பரிசிலிக்க நேரம் இருக்குமா, இருக்காதா என்பதே தெரியாது. ஆகவே, 1967 தேர்தலுக்குப் பிறகு கவனித்துக் கொள்ளலாம் என்று விட்டுவிடக்கூடிய சூழ்நிலையில் இந்தத் திருத்த மசோதா இன்றையதினம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது.

இந்தத் திருத்த மசோதாவின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். உள்ளாட்சித்துறை சம்பந்தப்பட்ட திருத்தச் சட்டம் வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அப்படி ஒரு திருத்தச் சட்டம் செய்வதை நல்லமுறையில் பரிசிலனை செய்வதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் காலத்தில் கொண்டுவரப்படாமல் கடைசி நேரத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதுபற்றிய குறிப்பிலேயே கூடச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு, மூன்று தடவைகள் முன்பே கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்பட்டதாகவும், பிறகு தள்ளி வைக்கப்பட்டது என்ற குறிப்பு இருக்கிறது. ஆக அதே கதியில் தானா இப்போதும் இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும்? அதைச் சொல்கிற போது அவ்வளவு அவசரம் அவசரமாக முதல் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு இந்த மசோதாவை எதிர்க்கட்சிகள் விரும்பினால் வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயார் என்று சொன்னதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கடந்த 25 ஆண்டுகளாக உள்ள பிரச்சினைகளை எல்லாம் நன்றாக ஆராய்ந்து, ரத்னசபாபதி முதலியார் கமிட்டி சிபார்சுகளை எல்லாம் நன்றாகப் பரிசிலனை செய்து—உள்துறை அமைச்சர் அவர்களும், இலாக்காவினரும் இந்த ஐந்தாண்டு காலமாக ஆராய்ந்து, தயாரிக்கப்பட்டு கொண்டு வந்திருக்கிற மசோதாவை 'எதிர்க்கட்சிகள் விரும்பினால் வாபஸ் வாங்கி விடலாம்' என்று சொல்கிற அளவுக்கு இருப்பதன் அர்த்தத்தைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது.

இந்தத் திருத்தச் சட்டத்தில் பொதுமக்களுடைய கருத்தைத் தெரிந்து கொண்டு சிலபல மாற்றங்களைச் செய்து நிறைவேற்றவும் வழி இருக்கிறது. எங்கள் கட்சி துணைச்செயலாளர் குறிப்பிட்டது போல இந்தத் திருத்தச் சட்டம் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு வருகிறபோது முழுமையான சட்டமாக வந்திருக்குமானால் எல்லோரும் ஏற்றுக்கொள்ளலாம்.

நாம் இன்றையதினம் உள்ளாட்சித் துறைக்கு ஏராளமான அதிகாரங்கள் வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆங்காங்கு பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் நிறுவியிருக்கிறோம். கார்ப்பரேஷன் இருக்கிறது. உள்ளாட்சித்துறைக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும், உள்ளாட்சித்துறை விரிவாக்கப்படவேண்டும் என்ற தத்துவத்தை ஒப்புக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் பார்க்கிறபோது இந்தத் திருத்தச் சட்டம் முற்போக்கான எண்ணங்கள் உள்ளடங்கினதாகவும், உள்ளாட்சிக்கு நல்ல அதிகாரங்களும், வாய்ப்புகளும் தரக்கூடிய சட்டமாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன்.

நான் இந்த மசோதாவுடன் கூட இன்னொரு திருத்த மசோதாவையும் எதிர்பார்த்தேன். அப்படி ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்படும் என்பதாகப் பலதடவை சொல்லப்பட்டிக்கிறது. அது நமது சென்னை மாநகராண்மைக் கழக திருத்த மசோதாவாகும். ஏற்கனவே நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நகராண்மைக்கழக சட்டம் வெள்ளை அறிக்கையின் பேரில் திருத்தப்பட்டது. அந்தத் திருத்தங்கள் நடைமுறையில் எப்படி இருக்கின்றன என்று பரிசீலித்து, அதனால் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கேற்ற வகையில் இன்னொரு திருத்த சட்டம் வரும் என்று எதிர்பார்த்தோம். வெள்ளை அறிக்கையின் விளைவாக கார்ப்பரேஷன் சட்டம் திருத்தப்பட்டதன் காரணமாக இன்றையதினம் நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறுவதற்கான நிலைமை இல்லை என்பதை நாங்களும், நகராண்மைக் கழகத்தில் நல்ல அனுபவம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்களும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். பல ஓட்டைகள் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியாத அளவுக்குக் கோளாறுகள் எல்லாம் வந்த வெள்ளை அறிக்கையின் விளைவாகக் கிடைத்துவிட்டன. அவற்றைத் திருத்துவதற்கு சென்னை மாநகராண்மைக்கழக திருத்த மசோதா ஒன்றும் இந்த மசோதாவுடன் கூட கொண்டுவரப்படும் என்று எதிர்பார்த்தோம். அதை அவர்கள் செய்யவில்லை. அதைச் செய்யாதது என்ன காரணத்தினாலோ என்று புரியவில்லை.

நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம், நண்பர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்தத் திருத்தச் சட்டத்தில் நிறைய ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன. இதுபற்றி பொதுமக்களுடைய கருத்துக்களையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நண்பர் சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல்—இந்த திருத்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் செலெக்ட் கமிட்டி மூலமாகவே பொதுமக்களுடைய





அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவும் நிறைய வாய்ப்பு இருக்கிறது. வேறு சில மசோதாக்களுக்கும் அத்தகைய சூழ்நிலை செலக்ட் கமிட்டியில் கிடைத்திருக்கிறது. இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் செலக்ட் கமிட்டியார் பொதுமக்களுடைய கருத்தைத் தெரிந்துகொள்ள முடியும். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர் ஆகியோருடைய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள முடியும். பொதுமக்களுடைய அபிப்பிராயங்களையும் தெரிந்து இந்தத் திருத்த மசோதாவைப் பரிசிலிக்கக் கூடிய வாய்ப்பு பொறுக்குக் குழுவுக்கு உண்டு.

இளமைத் துடிப்புள்ள நமது உள் ஆட்சித்துறை அமைச்சர் அவர்கள், நீண்ட வயதான இந்தத் திருத்த மசோதாவை ஒத்திப் போடுகின்ற வகையில் கொண்டு வந்திருக்கிறார்களே என்று சொல்லி என் உரையை நான் முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு இப்போதே விடவேண்டுமென்று சொன்னால் அதற்கும் தயார். இந்தத் திருத்த மசோதாவே வேண்டாம் என்று சொன்னாலும் இதை வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயார். எதிர்க்கட்சிக்கு என்ன வேண்டும், என்ன வேண்டாம் என்பதுதான் தெரியவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** என்னுடைய தனிப்பட்ட கருத்து இவ்வளவு பிற்போக்கான மசோதாவை கனம் முதல் அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்கிக் கொள்வதாக இருந்தாலும் அதை எங்கள் கட்சி ஆதரிக்கும் என்று கருதுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் இதைச்சொல்லி எதிர்க்கட்சி உரிமைகளை மிரட்டுவது அவர்கள் வகிக்கிற அந்தஸ்துக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்கு இருக்கிற அந்தஸ்து எனக்கு இருக்கிறது. எதிர்க்கட்சியினர் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றுதான் நான் கேட்டேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** மசோதாவை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்றாலும் வாங்கிக்கொள்ளட்டும். எனக்குக் கவலை இல்லை.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I welcome this comprehensive, legislation regarding municipalities. The Chamber of Chairmen of Municipal Councils has been making several suggestions year after year and they have been requesting the Government to bring in a comprehensive legislation regarding municipalities. Without the opposition moving that the Bill be referred to a Joint Select Committee and some Member moving an amendment that the Bill be circulated for eliciting public opinion thereon, the Government of their own accord have come forward to move that the Bill be circulated for eliciting public opinion. I welcome this gesture. Except for a few provisions the Government could have brought forward a Bill to amend the

[Sri C. Chiranjeevulu Naidu] [9th August 1966

existing District Municipalities Act, Anyway, it is a comprehensive Bill and I welcome it. When this Bill becomes an Act, I am sure it will help to promote efficient administration by municipalties and auger well for the future of this State.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் திரு. மஜீத் அவர்கள் இந்த மசோதாவைத் தயாரிப்பதற்கு எவ்வளவு சிரமமும், காலமும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இதைப் பார்க்கும்போது தெரிந்து கொள்ளலாம். இருபது வருடங்களாக இதுபற்றி விரிவாக ஆராய்ச்சி நடந்து வந்தது என்பதும் இருக்கட்டும். இவ்வளவு சிரமப்பட்டு இந்த மந்திரிசபை தயாரித்துள்ள இந்த மசோதாவை பொதுஜன அபிப்பிராயத்திற்காக விட வேண்டும் என்பது அவசியம் இல்லை என்பது என் கருத்து. சாதாரணமாக செலக்ட் கமிட்டி கூடும்போது பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளவும் வசதி இருக்கிறது. ஓரிடத்தில் உட்கார்ந்தோ அல்லது மாநிலத்தை மூன்றாகப் பிரித்து மூன்று இடங்களில் உட்கார்ந்தோ, எத்தனையோ மசோதாக்களைப் பொருத்தவரையில் பொறுக்குக் குழுவினர் பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மசோதா எத்தனையோ காலமாக ஆராய்ந்துகொண்டு வரப்பட்டுள்ள மசோதா. மிக நுட்பமாக அதிகாரிகளால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ள மசோதா. நண்பர் மதியழகன் குறிப்பிட்டுள்ளது போல ஒன்றிரண்டு இடங்களில் திருத்தம் செய்யப்படக்கூடியதாகவும் இருக்கலாம். ஜனநாயகப் பண்புக்கு உகந்த எத்தனையோ ஷரத்துக்கள் இந்த மசோதாவில் அமைந்திருக்கின்றன. ஜனநாயகப் பண்புக்கு விரோதமான இடங்கள் இருக்குமானால் அதை செலெக்ட் கமிட்டியில் திருத்திக் கொள்ளவும் வசதி இருக்கும். எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் செலெக்ட் கமிட்டியில் இருப்பார்கள். நானும், எதிர்க்கட்சியினர்களுடன் எத்தனையோ செலக்ட் கமிட்டிகளில் பணியாற்றியிருக்கிறேன். செலெக்ட் கமிட்டிக்கு என்று போனவுடன் அங்கே கட்சிப் பாகுபாடே பார்ப்பது கிடையாது. கூடுமான வரையில் மக்களுக்குச் சாதகமானவைகள் என்ன என்னவோ அவைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஒன்றிரண்டு விஷயங்களில் வேண்டுமானால் டிபரன்ஸ் ஆப் ஒப்பினியன் இருந்திருக்கக்கூடும். இந்த மசோதாவையும் செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பினால் நல்லமுறையில் பரிசீலிக்க வாய்ப்பு இருக்கிறது.

இந்த மசோதாவை எதிர்க்கட்சிக்காரர்கள் அரசியலுக்குப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டுதான் கனம் முதல் அமைச்சர் அவர்களும் 'எதிர்க்கட்சியினர் என்ன சொன்னாலும் அதைச் செய்கிறேன்' என்று குறிப்பிட்டார்கள். இதை ஊர் மக்களுடைய அபிப்பிராயத்திற்கு விடுவதாக இருந்தாலும், ஜாயின்ட் செலெக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொன்னாலும், வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டுமென்றாலும் தயார்



9th August 1966] [திரு. கே. டி. கோசல் ராம்]

என்று சொன்னார்கள். காரணம் அவர்களுக்குத் தெரியும். எவ்வளவு சிரமப்பட்டு இந்த அமைச்சரவை இந்த மசோதாவைத் தயாரித்திருக்கிறது என்பது. ஆகவே இதை ஜாயின்ட் செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பினால்—பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அவசியம் இருந்தால் இரண்டு மூன்று இடங்களில் வேண்டுமானாலும் உட்கார்ந்து மக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளலாம். அதுதான் தலைசிறந்தது. நண்பர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களும் இப்போதே ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இதை ஜாயின்ட் செலெக்ட் கமிட்டிக்கு விட்டால் வரப்போகிற செஷனுக்கு முன்னால் முடித்து விடலாம். அடுத்த அசெம்பளிக் கூட்டத்திலேயே இந்த மசோதாவை நிறைவேற்ற வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி 11.30 a.m.
முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புதிய மசோதாவை மனமார வரவேற்கிறேன். 1920-லே இதனுடைய மூலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1946-க்குப் பின்னர், 1947-லே சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னரே ஒரு பெரிய மாறுதலைப் பெற்றிருக்கிறோம் எல்லா இடங்களிலும் அரசியல் துறையைப் பொறுத்தவரையில், ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்புக்கள் அதிகரித்திருக்கின்றன. நகராட்சிகளை எடுத்துக்கொண்டால் அரசாங்கம் கொடுக்கின்ற மானியம், கடன் இவற்றை வைத்துத்தான் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். பெரிய நகராண்மைக் கழகம் என்று சொல்லக்கூடிய சென்னையிலே கூட அரசாங்கம் கொடுக்கின்ற மானியம், கடன் இவற்றை வைத்துத்தான் சம்பளம் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுடைய பைனான்ஸ் அதாவது பொருளாதார நிலையை சீர்ப்படுத்துவதற்கு, செம்மைப்படுத்துவதற்கு ஏற்ற நிலைமை அங்கு உருவாக்கப்படவில்லை. இந்த நிலையிலே சென்னை நகராண்மை கழகம் இருக்கிறது என்றால் இன்னும் மற்ற பல முனிசிபாலிட்டிகள் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

ஸ்தல ஸ்தாபனங்கள் அவர்களுக்கு வேண்டிய வருவாயைப் பெற்று அதை ஒழுங்காகச் செலவழித்து மக்கள் என்ன என்ன எதிர்பார்க்கிறார்களோ அவற்றைச் செய்துகொடுக்கக்கூடிய முறையிலேதான் இது வகுக்கப்பட்டிருக்கிறது. ஸானிடேஷன் செஸ் என்று புதிதாகப் போட்டிருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்கள் இருப்பதே முக்கியமாக சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காகத் தான். ஆனால் அதைவிட்டுவிட்டு வேறு வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே ஸானிடேஷனுக்கு முக்கியத்துவம் கொடுத்து செஸ் வரி வசூலிப்பதின் மூலம் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கு வழியிருக்கிறது. யாத்திரிகர்கள் வரக்கூடிய இடங்களிலேகூட சுகாதார வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. பல யாத்திரிகர்கள் கூடுகின்ற இடங்களிலேயெல்லாம்கூட ஸானிடேரி பெஸிலிட்டிஸ் இல்லாத காரணத்தாலே பொதுமக்க

[திருமதி டி. என். அனந்தநாயகி] [9th August 1966

ளுடைய சுகாதாரம் எவ்வளவு பாதிக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே இந்த வசதிகளையெல்லாம் துரிதப்படுத்துவதற்கு இந்த மசோதா ஒரு வழி செய்கிறது. வாய்க்கால் வசதி சுகாதார வசதி இவற்றிற்குப் பணம் இல்லாமல் இருக்குமானால் அவற்றை ஏற்படுத்த பணம் பொதுமக்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே இந்த வேலைகளையெல்லாம் துரிதப்படுத்துவதற்குத் தகுந்தவாறு ஸ்தல ஸ்தாபனங்களின் வருவாயை அதிகப்படுத்தக்கூடிய நிலை இந்த மசோதாவிலே இருக்கிறது.

எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் இதிலே அது இருக்கிறது இது இருக்கிறது என்று எதைஎதையோ சொல்லி, பின்னால் நீங்கள் இருப்பீர்களா, நாங்கள் இருப்போமா என்றெல்லாம் மாத்தடி ஜோஸியர் சொல்கிறமாதிரி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் இங்கே சட்டசபையிலே வந்து சொல்லவேண்டியவையல்ல. ஏதோ அவர்கள் தங்களுடைய நப்பாசையினால் அவர்கள் அதையெல்லாம் இங்கே சொல்லி தங்களுடைய ஆசையை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று நினைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மக்களுக்கு எது சாதகமாக இருக்கிறது என்பதைத்தான் பார்க்கவேண்டும். 1946-க்குப் பின்னரே ஸ்தல ஸ்தாபன முறைகளிலே அனுபவம் படைத்தவர்களைக்கொண்டு, இதற்காகப் பல கமிட்டிகளைப் போட்டு ஒரு மசோதாவாகச் செய்து நல்லமுறையில் இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். என்னுடைய கட்சியைச் சேர்ந்த திரு. கே. டி. கோசல்ராம் அவர்களும், திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களும் இதை பப்ளிக் ஒபினியனுக்கு விட்டால் காலதாமதம் ஆகிவிடலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே, இதை பொறுக்குக் கமிட்டிக்குக் விட்டு, ஸ்தல ஸ்தாபனங்களிலே அனுபவம் உள்ளவர்கள், சிவில் அசோஸியேஷன்லில் உள்ள பொதுமக்களின் பிரதிநிதிகள், இன்னும் சுகாதார விஷயங்களுக்காக சங்கங்கள் வைத்திருக்கிறார்கள், அந்த சங்கங்களுக்கு எல்லாம் அழைப்புவிட்டு எல்லோரையும் கலந்துகொண்டு என்ன என்ன செய்யலாம் என்று யோசித்துச் செய்தாலும் கூட இது துரிதமாக ஆகிவிடும். ஆகவே, பப்ளிக் ஒபினியனுக்கு விடாமல் பொறுக்குக் கமிட்டிக்கே விட்டு, அந்த கமிட்டியே இதைத் தீர விசாரித்து சிறப்பான முறையிலே நகரசபைகள் மசோதாவை மறுபடியும் நல்ல முறையிலே கொண்டுவருவதற்கு மீண்டும் பரிசீலனை செய்வது அவசியம் என்று நினைக்கிறேன். ஆகவே, கனம் முதலமைச்சர் அவர்களும், ஸ்தல ஸ்தர்பன அமைச்சர் அவர்களும் இதைச் சிந்தித்துப்பார்த்து பப்ளிக் ஒப்பினியனுக்கு விடுவதைக் காட்டிலும், இரண்டு சபைகளிலே உள்ள பொதுமக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு, இன்னும் ஸ்தல ஸ்தாபனத் துறையிலே அனுபவமுள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களையும் இன்னும் பல பொதுமக்கள் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒரு கமிட்டி போட்டு அதில் இந்த மசோதாவைச் சீர்படுத்திச் செம்மைப்படுத்திக் கொண்டுவரலாம் அதன்பிறகு இதை ஏற்றுக் கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.



9th August 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, சென்னை நகராட்சிமன்றங்கள் பற்றிய இந்த மசோதாவைப் பொதுமக்களுடைய கருத்தறிய விடப்படவேண்டுமென்ற தீர்மானத்தை உள் ஆட்சித்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கிறார்கள். நகராட்சி மன்றங்கள் சீர்படுத்தப்படவேண்டும்; நகர மன்றங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும்; அவற்றினுடைய வசதிகளும் வாய்ப்புக்களும் செம்மைப்படுத்தப்படவேண்டும்; நகரமன்றங்கள் இயங்குகின்ற தன்மையில் பல மாறுதல்கள் வேண்டுமென்ற கருத்துக்களை இந்த மன்றத்தைச் சேர்ந்த எல்லாக் கட்சி உறுப்பினர்களும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அடிப்படைச் சட்டத்திலேயே பல குறைபாடுகள் இருக்கின்றன, அவை நீங்கினால்தான் நகராட்சி மன்றங்கள் செம்மையான முறையில் இயங்கமுடியும் என்ற கருத்தையும் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். இப்பொழுதுள்ள நகராட்சி மன்றச் சட்டம் ஒழுங்குபடுத்தப்படவேண்டுமென்ற கருத்திலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதற்குச் சில காலத்திற்கு முன்னாலேயே தெரிவிக்கப்பட்டுஇருந்தால் இதைப்பற்றிப் போதுமான அளவுக்கு விவாதிக்கப்பட்டு நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். இதை இப்பொழுதே சட்டமாகக் கொண்டுவராமல், பொதுமக்களுடைய கருத்தறிய விட்டு, பிறகு பொறுக்குக் குழுவிற்குவிட்டு அதன்பிறகு நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அந்த அளவுக்கு அது வரவேற்கத்தக்க ஒன்றுதான். எப்படியும் நகராட்சி மன்றங்களுடைய சட்டம் திருத்தப்படவேண்டும் என்று பல கோரிக்கைகள் வருகின்றன என்ற காரணத்தால் திருத்தப்படவேண்டியது அவசியந்தான், ஆனால் சில காலத்திற்கு முன்னால் கொண்டுவந்திருந்தால் இதைப்பற்றித் தெளிவாக விவாதிப்பதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கும். பொதுமக்களுடைய கருத்தறிந்து பிறகு பொறுக்குக் குழுவிற்கு விடாமல், பொதுமக்கள் கருத்தை மட்டும் தெரிந்துகொண்டு பிறகு அவசரம் அவசரமாக முடிவெடுத்து உடனடியாக அதைச் சட்டமாகச் செய்வதன் மூலம் எதிர்பார்த்த பலன்கள் எல்லாம் பெற்றுவிடமுடியும் என்ற சூழ்நிலையை எதிர்பார்க்கமுடியாது. பொறுக்குக் குழுவிற்கு விட்டால், பொதுத் தேர்தல் காரணத்தால் அந்தக் குழுவின் ஆயுட்காலம் முடிந்துவிட்டால் பிறகு இதை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படாமல் போய்விடும். பொறுக்குக் குழுவிற்குமட்டும் விட்டு அதன்மூலம் தெரிவிக்கப்பட்ட கருத்தைச் சட்டமாகக் கொண்டுவரலாம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுமக்கள் கருத்திற்கு விட்டு விடவேண்டுமென்பதுபற்றிப் பலரும் எடுத்துச்சொன்னார்கள், பொதுமக்கள் கருத்திற்கு விட்டால் அவரவர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

நகராட்சி மன்றச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சியினர் பலரும் அதிலே மாறுதல்கள்வேண்டுமென்று கூறுகின்றனர். பொதுமக்களுடைய கருத்தையறியாமல் நேரடி

யாக மசோதாவாகக் கொண்டுவந்தால் அதிலே வேறு பல குறைபாடுகள் இருக்கலாம், அவற்றை அறிய மறுபடியும் பொது மக்கள் கருத்துக்கு விடவேண்டும். அப்படியில்லாமல் பொதுமக்களுடைய கருத்தறிய விட்டு, பிறகு பல்வேறு குழுக்களினுடைய கருத்துக்களையும் அறிந்து அதன்பிறகு மசோதாதாகக்கொண்டுவருவது தான் நல்லது. பொதுமக்கள் கருத்தையறிந்தபிறகு பொறுக்குக் குழுவிற்கு விடுவதன்மூலம் இந்த மன்றத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து எல்லோரும் கூடியிருந்து முடிவுசெய்தால் செம்மையாகச் செய்யமுடியும். சில காலத்திற்கு முன்னதாகவே கொண்டு வந்திருந்தால் பொதுமக்களின் கருத்தறிந்து அதன்பிறகு பொறுக்குக்குழுவின் ஆலோசனைக்குவிட்டு பிறகு சட்டமாகக் கொண்டு வரக்கூடிய வாய்ப்பு இருந்திருக்கும். பொறுக்குக்குழுவிற்கு மட்டும் விடுகின்ற சூழ்நிலை திருப்திகரமாக இருக்காது. ஆகவே பொதுமக்களுடைய கருத்தறியவிட்டு, பிறகு பொறுக்குக் குழுவின் கருத்தறிந்து அதன்பிறகு மசோதாவாகக் கொண்டுவர வேண்டுமென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நண்பர் திரு. மதியழகன் அவர்கள் இதிலே உரிமைகள் பறிக்கப்படுகின்றன சில பல விதிகள் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி பொதுமக்களுக்கு விடப்பட்டு வந்த கருத்துக்களை ஆராயும் பொழுதும் சரி, பொறுக்குக் குழுவிற்கு விட்டு அதை ஆராயும் பொழுதும் சரி, சிந்திக்கவேண்டும். சாதாரணமாக, சட்ட மன்றங்கள், பாராளுமன்றங்களிலே கட்சி மாச்சரியங்களின் அடிப்படையிலே. கட்சிக் கருத்துக்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றின் அடிப்படையிலே விவாதங்கள் நடைபெறுவதும், அந்த விவாதங்களின் அடிப்படையிலே சட்டங்களை உருவாக்குவதும், நிறைவேற்றுவதும் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற நிலை இருக்கின்றது. ஆனால் நகராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்களில் அரசியல் கட்சிக் கருத்துக்களுக்கு, கட்சி மாச்சரியங்களுக்கு அவசியம் இல்லையென்ற கருத்தை ஆளுங் கட்சியினர், எதிர்க் கட்சியினர் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். நகராட்சி உள்ளாட்சி மன்றங்களில் எல்லாம் மக்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வசதி வாய்ப்புக்கள் பெருகச் செய்யவேண்டும். மிக முக்கியமாக, கட்சி மாச்சரியங்கள் நகராட்சி, உள்ளாட்சி மன்றங்களுடைய செயல்களைப் பாதிக்காத அளவுக்கும், அதே நேரத்தில் நகராட்சி, உள்ளாட்சி மன்றங்களுடைய உரிமைகள் பெருகும் அளவுக்கும் வாய்ப்பு, வசதிகள் செய்யப்பட வேண்டும். ஏற்கனவே, வழங்கப்பட்ட உரிமைகள் நகராட்சித் தலைவரிடமிருந்து பறிக்கப்பட்டு கமிஷனரிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் தரக்கூடிய சூழ்நிலை சில ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் மேல் நாடுகளில் பார்ப்போமானால், உள்ளாட்சி, நகராட்சி மன்றங்களுக்கு நிரம்ப அதிகாரங்கள் வழங்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையைத்தான் பார்க்கிறோம். வழங்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் செம்மையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்ற நிலையை அரசாங்கம்



கண்காணிக்க வேண்டியது அவசியந்தான். எவ்வளவுக்கெவ்வளவு கண்காணிப்பு இருந்தாலும், உள்ளாட்சி, நகராட்சி மன்றங்களுக்கு உரிமைகள் அதிகமாக வழங்கப்பட வேண்டும்.

துரதிருஷ்டவசமாக, கட்சி மாச்சரியங்கள் ஏற்பட்டுவிடுகிற காரணத்தால் கட்சி அடிப்படையில் உள்ளாட்சி நகராட்சி மன்றங்கள் இயங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சட்ட மன்றம், பாராளுமன்றம் ஆகியவைகளில் கட்சிகளின் அடிப்படையில் கருத்துக்கள் விவாதிக்கப்படுகின்றன. ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் விவாதித்து முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இங்கே சபாநாயகர் இடை நின்று பொறுப்பான முறையில் சபையை நடத்திச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் நகராட்சி மன்றங்களை எடுத்துக் கொண்டால், சேர்மன் அண்டு கவுன்சிலர்ஸ் என்ற இரண்டு பிரிவுதான் இருக்கிறது. ரூலிங் பார்ட்டி, அப்போசிஷன் பார்ட்டி என்ற அளவுக்குப் பிரித்து வைப்பதற்கான சூழ்நிலைகள் இல்லை. ஆளுங்கட்சி என்று இருக்கக்கூடிய கட்சியில் ஒருவர்தான் தலைவராக வருவார். அவர்தான் தீர்ப்பு வழங்குகின்றவராகவும் இருப்பார். இருபத்திரெண்டு பேர் கொண்ட ஒரு நகராட்சி மன்றத்தில் எதிர்க்கட்சியினர் 5 பேர் என்றும்; 17 பேர் கொண்ட கட்சியிலிருந்து தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால், அவரால் எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படுகிற தீர்மானங்களும், மற்றவைகளும் அனுமதிக்கப் படாத சூழ்நிலையே இருக்கிறது. எதிர்க்கட்சியால் கொண்டு வரப்படும் எந்தத் தீர்மானமும் ஆளுங்கட்சி வெறிபிடித்த, கட்சி மாச்சரியம் கொண்ட தலைவரால் அனுமதிக்கப்படுவதே இல்லை. இதுதான் தகராறுக்கான அடிப்படைக் காரணம். இந்தச் சிக்கல்களைப் போக்க என்ன வழி காண வேண்டுமென்பதற்கு இந்தச் சட்டம் வழி வகுக்கக்கூடியதாக அமைய வேண்டும். இந்த மாதிரி நிலைமையில் ஆளுங்கட்சித் தலைவருக்கே முழு அதிகாரமும் என்ற நிலையிலே மாற்றம் செய்யலாம். சட்டசபையில் இரண்டு பேருக்கும் பொதுவாக சபாநாயகர் இருக்கிறார்; தீர்ப்பு இரண்டு பேருக்கும் பொதுவான முறையிலே அளிக்கப்படுகிறது. ஆனால் நகராட்சி மன்றங்களில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அங்கே ஆளுங் கட்சித் தலைவருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டால் காரியங்கள் செம்மையாக நடைபெற முடிவதில்லை; நகராட்சிக் கமிஷனருக்கும், தலைவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டால் நகராட்சி மன்றம் செம்மையாகச் செயல்பட முடிவதில்லை. ஆளுங்கட்சித் தலைவரும், கமிஷனரும் ஒன்றாகச் சேர்ந்து கொள்வார்களானால் உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தக் குறைபாடுகளை எல்லாம் போக்க இந்தச் சட்டம் வழி வகுக்க வேண்டும். உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படக் கூடாது. ஒவ்வொரு உறுப்பினருடைய கோரிக்கையும் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு நகராட்சி மன்றங்கள் செயல்பட முனைந்தால்தான் பணிகள் செவ்வனே நடைபெறமுடியும். ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி என்றும், 'நீயா? நானா? நீங்களா? நாங்களா?' என்று

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [9th August 1966

முறையிலே மாச்சரியங்களுக்கு இடம் இல்லாது, அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாத வரையில்தான் நகராட்சி மன்றங்கள் ஊர் நன்மையைக் கருதி பணியாற்ற முடியும். அதற்கு இடம் வகுக்கத் தக்க வகையில் சட்டதிட்டங்கள் அமைய வேண்டும். இன்று எந்தக் கட்சியினர் இருக்கிறார்கள், நாளை யார் வருவார்கள் ; நாளை மறுநாள் யார் வருவார்கள் என்றெல்லாம் பார்க்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது. யார் இருந்தாலும் செம்மையான முறையில் துஷ்பிரயோகம் செய்ய முடியாத வகையில் சட்ட திட்டங்கள் அமைய வேண்டும். நல்ல நோக்கங்கள் நிறைவேறுவதற்கு வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

கனம் உறுப்பினர் மதியழகன் அவர்கள் சுட்டிக் காட்டியது போல் நகராட்சியின் வருமானம் வரியின் மூலமாக மட்டுமல்லாது வருமானம் தரக்கூடிய தொழில்களை ஏற்று நடத்துவதற்கான வாய்ப்புகளும் ஏற்பட வேண்டும். மக்கள், மத்திய ஆட்சி வரி, மாநில ஆட்சி வரி நகராட்சி வரி ஆகிய மூன்று வரிகளைச் செலுத்த வேண்டிய கட்டத்தில் இருக்கிறார்கள். ஆகவே, நகராட்சியின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய வகையில் எப்படி மார்க்கெட்டுகளின் மூலம் நகராட்சி வருமானத்தைப் பெற்று வருகிறதோ அதே போன்று பல துறைகளின் மூலம் நகராட்சியினுடைய வருமானம் பெருகுவதற்குகான வாய்ப்புக்களை ஏற்படுத்தித்தர வேண்டும். அரசாங்கம் எவ்வளவு மிடுக்கான கண்காணிப்பை வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளட்டும், ஆனால் அதே சமயத்தில் நகராட்சி மன்றங்களில் உரிமைகள் அதிகரிக்கப்பட வேண்டும். கட்சி மாச்சரியங்கள் இன்றி செம்மையாகப் பணியாற்ற வழி வகைகளை வகுக்க வேண்டும். இந்தக் கருத்துக்கள் நிறைவேறக்கூடிய அளவில் இந்த மசோதா அமைந்திருக்கவில்லை. ஆகவே, பொதுமக்களுடைய கருத்தை அறிந்து தான் திருத்தங்கள் செய்து சட்டமாக்க வேண்டிய நிலை இருக்கிறது.

எனவே அது மட்டுமல்லாமல் பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதின் மூலம் பல அரசியல் கட்சிகள் கருத்துக்களை அறிய வழியுண்டு என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இங்கு கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் உரிமை பறிக்கப்படாமல் திறமைகள் வளர்க்கப்படுகிற நிலையில், கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிற நிலையில், கட்சி மாச்சரியங்களின் அடிப்படையில் இயங்காமல் சிக்கல்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று கண்டறிந்து அவற்றைப் போக்க வழிவகைகள் காணவேண்டுமென்று கூறிப் பொது மக்களின் பார்வைக்கு இதை விடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற கட்டம் இருக்கிற காரணத்தினால், இப்பொது பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதானால், வருகிற பொதுத் தேர்தலுக்கு முன்னால் பொறுக்குக் கமிட்டி கூடி ஆர, அமர யோசித்துச் செய்யலாம் என்ற நிலை இந்தக் கட்டத்தில் இல்லை. ஆறு மாதங்கள் அல்லது ஒரு ஆண்டுக்கு முன்பே இது கொண்டு வரப்பட்டிருந்தால் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு,



9th August 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பொறுக்குக் கமிட்டி பொதுமக்களின் கருத்துக்களைப் பெற வாய்ப்பிருக்கும். ஆனால் இன்றைய நிலையில் பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதனால் நாம் எதிர்பார்க்கிற பலனை பெறமுடியாது என்ற நிலையில் இந்தச் சட்டத்தை பொது மக்களின் பார்வைக்கு விட்டு அவர்களின் கருத்துக்களை அறிந்து பின்னர் அதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, அதற்குப் பிறகு இந்த மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் செய்யவேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டு வந்து, பொது மக்களின் அபிப்பிராயத்திற்கு விட வேண்டுமென்று நான் கோரி, விவரமான அளவில் இந்த மசோதாவில் என்னென்ன முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன என்பதையும் தெளிவுபடுத்தி, முன்பு ஸ்தல ஸ்தாபனத் துறையில் சம்பந்தப்பட்டவர்கள், ஈடுபாடு கொண்டவர்கள் என்னென்ன கருத்துக்களைக் கொண்டார்கள் என்பதையும் படித்தேன். நீண்ட நாட்களாக அபிலாஷையுடன் இந்த மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று நல நிர்வாகத் துறையில் இருந்தவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டாலும் அந்த முயற்சியில் வெற்றி அடைய முடியவில்லை. ஓரளவு இரண்டு மூன்று வருடங்களுக்கிடையில் மிகவும் சிரமப்பட்டு என் இலாகாவினர் எல்லோருடைய ஒத்துழைப்புடன் இந்த மசோதாவைத் தயாரித்தோம். ஆறு மாதங்களுக்கு முன்பு இதைக் கொண்டு வந்திருந்தால் இதை செலெக்ட் கமிட்டிக்கு விட்டிருக்கலாம். அதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். என் பொறுப்பை அவர்கள் குறைத்து விட்டார்கள். இப்போது இதில் க்ளாஸ் பை க்ளாஸாக விவாதம் ஒன்றும் இல்லை. திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்ட அளவில் புது மசோதாவாக ஒன்றும் இல்லை. எக்ஸிஸ்டிங் ஆக்டிலே இருக்கிறது.

இம் மசோதா கொண்டு வருவதால் வரி அதிகமாகப் போட வேண்டுமென்ற பேச்சுக்கு இடமில்லை. முனிசிபாலிட்டியில் சர்ப்ளஸ் பைனான்ஸ் இருந்து, அவர்கள் வரி வேண்டாமென்று சொன்னால் நாங்களும் வேண்டாமென்று சொல்லி விட்டுவிடுகிறோம். நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை. வரி போடுவது என்றால் ஆடு மாடுகளுக்கெல்லாம் வரி போடப்போகிறார்கள் என்றெல்லாம் தேர்தலை முன்னிட்டு சொல்ல வேண்டாம். 1962-ல் பார்த்தோம். இதில் புதிதாக வரி அம்சங்கள் கொண்டு வந்துள்ளதாக நினைக்க வேண்டாம். பொதுமக்கள் ஏமாந்து விடமாட்டார்கள். வரியைப் பெருக்குவதில் எல்லோருக்கும் பங்கு இருக்கிறது. புது வரி விதிக்கும் அம்சங்கள் இந்த மசோதாவில் எதுவும் இல்லை. சானிட்டரி செஸ் ஒன்று தான் கொடுத்திருக்கிறோம். இன்டஸ்ட்ரீஸில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆயிரம் பேர்கள் இருந்தால், ஆயிரம் பேர்கள் வேலை செய்தால் ஆளுக்கு ஒரு ரூபாய் என்று 1,000 ரூபாய் எம்ப்ளாயியிடமிருந்து வாங்கும் முறையில் சிரமம் ஏற்படுகிறது. ஒரேயடியாக 'எம்ப்ளாயர்' இடமிருந்து வசூலிப்பது என்பதை நிர்வாக அதிகாரிகள், சேர்மன்கள் இவர்கள் கூறியதால் இப்படிக் கொண்டு வந்திருக்கிறோம். வருமானத்தை

[திரு. சே. ம. அ. மஜீத்] [9th August 1966

எப்படிப் பெருக்குவது, அப்பில் கமிட்டி என்றெல்லாம் இருக்கிறது. இப்போதுள்ள சட்டப்படியுள்ள அதிகாரங்களைப் பறிக்கவில்லை. அது எந்தக் கிளாஸிலும் இல்லை. பத்து ரூபாய் விட்டு வரி என்றிருந்தால் இப்போதும் பத்து ரூபாய் இருக்கும். அப்பீல் கமிட்டியில் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் மூன்று பேர்கள் இருக்கிறார்கள். 25 ரூபாய் போட்டால் அதில் 50 சதவிகிதம் குறைப்பது அல்லது பழைய நிலையில் கொண்டுவரக்கூடியது என்றெல்லாம் அவர்கள் செய்யலாம். ப்ராப்பர்ட்டி டாக்ஸை ரிவைஸ் செய்து வருவாயைப்பெருக்கலாம். ஆனால் இதில் புதிதாக வரி விதிக்கும் அம்சம் இல்லை. எல்லாம் கையாள்பவர்கள் கையில் இருக்கிறது. மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்சேஷனில் இருந்து கிடைப்பது, எக்சைஸ் ட்யூட்டியில் இருந்து கிடைப்பது இவற்றில் பங்கு வேண்டும் என்றார்கள். அவர்கள் பேசியதற்காக இதை விளக்கமாகச் சொன்னேன்.

இந்த மசோதாவைத் தயாரிப்பதில் என்னுடைன் ஒத்துழைத்த என் இலாகாவினருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்; இதை பப்ளிக் ஒப்பினியனுக்கு விடும்போது சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு தங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இல்லை என்று நினைக்கவேண்டாம். சட்டசபை அங்கத்தினர்கள், மேல்சபை அங்கத்தினர்கள், சேர்மனாக இருந்து பணியாற்றியவர்கள், முன்னாள் கவுன்சிலர்கள், தற்போதைய கவுன்சிலர்கள், பொது மக்கள் எல்லோரும் ஒப்பினியன் சொல்லலாம். நிறைவு பெறக்கூடிய அம்சங்களாக இருந்தால் ஸ்ட்ரெயிட்டாகக் கொண்டு வரலாம்; அல்லது, செலக்ட் கமிட்டிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற அபிப்பிராயம் இருந்தால் அந்த நேரத்தில் அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறி; இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras District Municipalities Bill, 1966 (L.A. Bill No. 12 of 1966) be circulated for the purpose of eliciting opinion thereon.'

The motion was put and carried.

## VII.—ANNOUNCEMENTS—*cont.*

### (2) ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON ESTIMATES.

### (3) ASSOCIATION OF COUNCIL MEMBER WITH THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

MR. SPEAKER : I have to announce to the House that the following messages have been received from the Hon. Chairman, Madras Legislative Council :

(1) "This House nominates the following two Members of the Council to associate with the Committee on Estimates of the Legislative Assembly for the year 1965–66 in the vacancies



9th August 1966] [Mr. Speaker]

caused by the expiration of the term of office of Sri M. Subbiah Chettiar and Srimathi S. Manjubashini with effect from the afternoon of 20th April 1966.

1. Sri D. Santosham.
2. Srimathi S. Manjubashini."

(2) "This House nominates the following one Member of the Council to associate with the Committee on Public Accounts of the Legislative Assembly for the year 1965–66 in the vacancy caused by the expiration of the term of office of Sri S. K. Sambandhan with effect from the afternoon of 20th April 1966 :

Sri A. R. Damodaran."

## VIII.—POINT OF PROPRIETY RE. BREACH OF CONVENTION IN PREMATURE PUBLICATION OF CONTENTS OF NO-CONFIDENCE MOTION IN THE PRESS.

MR. SPEAKER : Members are aware that the Hon. Chief Minister raised a matter of breach of convention in that the No-confidence Motion, as well as the text and contents of the motion tabled by the Leader of the Opposition were published in the Press before it was brought before the House for leave being granted. The Leader of the Opposition stated that he was not in any way responsible for the publication of the facts contained in the notice. I take his word and I have nothing to doubt about it.

Before I started an enquiry, the Secretary, Legislative Assembly Department, came forward and informed me that he was met by the Press people on 30th July and that he was responsible for giving out some general information about this motion.

Further, the file is not treated as confidential or secret. As it passed through several persons in the Office, we are not able to fix definitely the person who gave it to the Press, apart from the general information which was, admittedly, given by the Secretary. Now, I have given strict instructions to the Office that hereafter such files should be treated as 'Most Confidential' and that no such lapses should occur again. Therefore, I think that we can leave the matter there.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த "மோஷன்" சம்பந்தமாக நம் சீஃப் மினிஸ்டர் அவர்களுடைய அலுவலகத்திற்கும் ஒரு காப்பி அனுப்பப்படுகிறது. அங்கிருந்து ஏதாவது வெளியே போவதற்கான நிலைமை பற்றியும் செயலாளர் ஆராய்ந்தாரா? அவர்கள் கொடுத்தார்கள் என்று மட்டும் சொல்லுகிறார்கள். ஒரு காப்பி முதல் அமைச்சர் அவர்கள் ஆபீசுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

[9th August 1966

MR. SPEAKER : As it is, I have told the House that till now the file on such matters is not treated as confidential or secret. There are several possibilities. There are our typists, there are other typists. We do not know who gave that information. I have not gone into all those things. The Secretary, Legislative Assembly Department, straightforwardly informed me that he gave some general information about the motion to the press inadvertently or lightheartedly when they met him. Therefore, I thought that it was not necessary to go into this matter further. Hereafter, the matter will be treated in a most confidential manner.

12-00 noon SRI K. A. MATHIALAGAN : My point is that a copy is sent to the Hon. Chief Minister. There is a likelihood . . . . .

MR. SPEAKER : I have quite understood the point raised by the hon. Member.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *நான்தான் பிரச்னையைக் கொண்டு வந்தேன். இதை நான் அலுவலகத்தில் பார்ப்பதற்கு முன்பாகவே பத்திரிகைகளில் பார்த்தேன்.*

MR. SPEAKER : The Hon. Chief Minister said that he read all those details in newspapers while he was in Delhi to attend a meeting.

I am unable to find out even small lapses in the Assembly Department. If there are small lapses in the Chief Minister's Department or the office of the Leader of the Opposition, how can I go into them ? I leave it at that. Hereafter, I will see that it is properly done.

### VI.—GOVERNMENT BILLS—*cont.*

### (5) THE MADRAS MOTOR VEHICLES (TAXATION OF PASSENGERS AND GOODS) AMENDMENT BILL 1966 (L.A. BILL NO. 13 OF 1966).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill,[a] 1966 (L.A. Bill No. 13 of 1966) be taken into consideration.'

(MR. Deputy Speaker in the Chair.)

According to the second proviso to section 3 of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952), no tax shall be levied on any passenger, luggage or goods carried by a stage carriage, if the total distance

[a] Published in the Fort St. George Gazette Extraordinary, dated 4th August 1966.



9th August 1966] [Sri M. Bhaktavatsalam]

permitted to be covered by such stage carriage in a day does not exceed 80 kilometers. Similar concession is not available in the Mysore State under the law in force in that State. The Mysore Government did not accept the suggestion of this Government to amend their law also for granting such a concession. Consequently, stage carriages belonging to operators in this State plying their buses in the Mysore State have to pay the tax even for shorter distances. It is therefore proposed to withdraw the concession provided in the second proviso to section 3 of Madras Act XVI of 1952 and this withdrawal will also bring some additional revenue to Government not only from inter-State operators but, from the intra-State operators also.

The Government of Madras decided in consultation with the Government of Andhra Pradesh that the principle of single point taxation be adopted with effect from the 1st April 1962 in respect of tax collected under the Motor Vehicles Taxation laws of the two States. Pursuant to the above decision, this Government in G.O. Ms. No. 2724, Home, dated the 24th August 1963 comitted with effect from the 1st April 1962 sub-rule (5) of rule 1 in the Schedule to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952), to enable the collection of tax under that Act from the 1st April 1962 in respect of vehicles coming from the State of Andhra Pradesh. Similar amendment was also made by the Andhra Pradesh Government. Some operators took up the matter to the High Court, Madras, and challenged the validity of the amendment with retrospective effect. The High Court has held that the Government cannot make a rule with retrospective effect in the absence of a provision in the Act, expressly or by necessary implication, enabling the Government to make a rule with retrospective effect and that therefore the rule made by the Government in the Government Order in so far as it relates to the omission of sub-rule (5) of rule 1 in the Schedule to Madras Act XVI of 1952 with retrospective effect is invalid. The Court has further held that the repeal of the sub-rule is effective only on and from the 24th August 1963, and that therefore the demand made on the petitioners for payment of tax under section 3 or compounding fee under section 4 (1) of the said Act for the period prior to the 24th August 1963 is without the authority of law. Government have decided to legalise the levy of the tax and for that purpose to provide for the issue of rules with retrospective effect and also for the validation of the tax or fee already levied.

Section 8 of the Act provides for the assessment of tax which has escaped assessment. Such assessment could be made within one year from the expiry of the month for which the tax was due. In certain cases, assessment of the tax which has escaped assessment could not be made within the period prescribed in the said section 8. In order to ensure no loss of revenue on this account, Government have decided to enlarge the period of limita-

[Sri M. Bhaktavatsalam] [9th August 1966

tion mentioned in section 8 of the Act from one year to five years as in the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959) for assessing the tax which has escaped assessment.

The Bill is intended to give effect to the above decisions. I request the House to accept the motion.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

'That the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill, 1966 (L.A. Bill No. 13 of 1966), be taken into consideration.'

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தை, இது கொண்டு வந்திருக்கின்ற முறையையும் கொள்கையையும் ஆட்சேபிக்கின்ற முறையில், நான் எதிர்க்கின்றேன். இந்தச் சட்டம் கொண்டு வருவதற்குண்டான காரண காரியங்களை விளக்குகிற சமயத்தில், ஒரு சட்டம் இருக்கிறது, அந்தச் சட்டத்தில் ரூல் மேக்கிங் பவர் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ரூல் மேக்கிங் பவர் இல்லாத சமயத்தில் ரூலை போட்டிருக்கிறார்கள். அந்த ரூலின் அடிப்படையில் வரியாக கம்பௌன்டிங் பீஸ், போன்று பல இடங்களில் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்தில் ரூல் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு பவர் இல்லை என்று தெரிவதனால் இதில் கீழ் ரூல்ஸ்-ஐப் போட்டு வசூல் பண்ணுகின்ற முறை மிகத் தவறானது, சட்டத்திற்குப் புறம்பானது என்று கருதி, அதை செலுத்தக்கூடியவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் செல்லுகிறார்கள். நீதிமன்றத்தில் இவர்கள் சொல்லக்கூடியதை ஏற்றுக்கொண்டு வசூல் செய்யப்படுகின்ற முறை, தவறானது என்று ஹைக்கோர்ட் நீதிபதிகள் முடிவு செய்கிறார்கள். இவ்விதம் முடிவு எடுத்த பின்னால் மீண்டும் வசூல் செய்வதற்கும் ஏற்கனவே வசூல் செய்ததை 'ரீ வாலிடேட்' செய்வதற்கும் இந்த அரசாங்கம் சட்டம் கொண்டு வருகிறது என்றால் அது முறையற்ற சட்டம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உயர் நீதி மன்றம் இருக்கிறது, ஒரு சட்டத்தைப் பற்றிச் சொல்லும் போது, அதிலுள்ள தவறான அம்சங்களை எடுத்துத் தெரிவிப்பதற்காக 'ரிட் ஜூரிஸ்டிக்ஷனை' உபயோகப் படுத்தி பாதிக்கப் பட்டவர்கள் ஹைக்கோர்ட்க்கு எடுத்துச் செல்லுகிறார்கள். அதில் தவறு இருக்கிறது என்று கோர்ட் சொன்ன பின்னால் 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுத்துத் திருத்துவதற்கு அரசாங்கம் சட்டம் கொண்டுவந்துவிடுவது என்று சொன்னால் யாரும் ஹைக்கோர்ட்க்குப் போக முன் வர மாட்டார்கள். உயர்நீதி மன்றத்திற்கு மற்றவர்கள் மதிப்பும் மரியாதையும் கொடுப்பதற்கு முன்னால் அரசாங்கம் மதிப்பும் மரியாதையும் கொடுக்கவேண்டும். உயர்நீதிமன்றம் விசாரித்து ஒரு 'டெஸிஷன்' கொடுத்த பின்னால் அதை அப்படியே ஏற்றுக் கொள்வது தான் முறையாக இருக்க முடியும். இந்த வழக்கில்.*



9th August 1966] *[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]*

The High Court, Madras, has held in Chittoor Motor Transport Services by its Managing Partner, C. P. Sarathy Mudaliar (vs. Regional Transport Officer, Chingleput and other writ petition Nos. 823, 876, 877, etc., of 1963), that the Government cannot make a rule with retrospective effect. *என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.*

*ரிட் போடப்பட்டு, அரசாங்கத்தின் தரப்பில் கவர்ன்மென்ட் ப்ளீடர் டிஃபென்ட் பண்ணியிருக்கிறார்கள். அதன் பின்னால் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது. இவ்விதம் தோல்வி கண்ட பின்னால் ஹைக்கோர்ட் அதிகாரத்தை 'கர்டெயில்' பண்ணுவது மாதிரி இப்படிப்பட்ட திருத்த மசோதா கொண்டு வருவது தவறான முறை. இவர்கள் சொல்லியிருக்கிற 'ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ்' என்ன போட்டிருக்கிறார்கள்? இப்படி ஏற்பட்ட தவறினால் இத்தனை லட்சம் ரூபாய் 'ரீஃபன்ட், செய்யவேண்டியிருக்கிறது என்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை. ஏதோ 20 ஆயிரம் ரூபாய் வரும் என்றால் அரசாங்கத்தை 'ஸேப் கார்டு' பண்ணிக்கொள்ளுகின்ற முறையில் 'ரீபண்டு' செய்துவிட வேண்டும். அது ஹைக்கோர்ட் ஜட்ஜ்-களுக்கும் பெருமை அளிக்கக்கூடியதாக இருக்கும். தவறான முறையில் வசூல் செய்த பணம் எவ்வளவு திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும் என்று இதில் சொல்லவில்லை. இதையெல்லாம் விளக்கத்தில் சொல்லாமல் 'ரீ வாலிடேட்' செய்யவேண்டும், சட்டத்தில் முன்னால் சொல்லப்படவில்லை, ஆகவே இப்பொழுது 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்துத் திருத்தவேண்டும் என்று சொல்லி மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்தைப் பொறுத்தவரை 1962-ஏப்ரல் முதல் தேதி தான் இப்போதுள்ள உறுப்பினர்கள் பதவியில் வந்திருக்கிறார்கள். அதற்காக என்ன சொல்லுகிறார்கள்? 1962-ம் ஆண்டு ஏப்ரலில் இது நிறைவேற்றப் பட்டதாகக் கருத வேண்டுமாம். இடையில் வந்தது எல்லாம் எங்கேயோ போய்விட்டது. நாலரை ஆண்டுகளாக வசூல் பண்ணினது, கொடுத்தது எல்லாம் போய்விட்டது. இப்போது யாரைப் போய்க் கண்டுபிடிக்கப்போகிறார்கள்? யார், யார் எந்தெந்த பஸ் கம்பெனிகளை வைத்திருந்தார்கள், யார் யார், யாருக்கு விற்றார்கள், எப்போது விற்றார்கள்? இப்போது போய்ப் பார்த்தால் ப்ரோப்ரைட்டர்கள் மாறியிருப்பார்கள். யாரிடத்தில் போய் இப்போது வசூல் செய்வது? பஸ் ஆப்பரேட்டர்கள், இன்றைக்கு வைத்திருக்கிறவர்கள் நாளைக்கு யாரிடமோ விற்றுவிடுகிறார்கள். அன்றைக்கு பணம் கொடுக்கவேண்டிய பஸ் ஆப்பரேட்டர் வேறொருவரிடத்தில் விற்று விட்டார் என்றால், இன்றைக்கு பஸ் வைத்திருக்கின்ற ஆப்பரேட்டர்களிடம் போய் வசூல் செய்வது என்பது முடியுமா? நீதி மன்றம் இதைப்பற்றி முடிவு கட்டிய பிறகு ரீ வாலிடேட் செய்யவேண்டும் என்று,*

Sections 3 and 4 shall be deemed to have come into force on **the 1st April 1962.**

*என்கின்ற முறையில் திருத்தம் கொண்டுவருவது தவறான முறையாகும். உயர்நீதிமன்றத்தின் முடிவுகளுக்கு அரசாங்கம் மதிப்பு அளிக்கவேண்டியது முக்கியமாகும். வேண்டுமென்றால் அரசாங்கம்*

அப்பீல் செய்யலாம். அதை நான் வரவேற்கிறேன். அப்பீல் செய்யலாம். ஹைக்கோர்ட்டில் ரிட்டில் ஜட்ஜ்மெண்ட் கொடுத்தால், ரிட் அப்பீல் போடலாம். அதுவும் இல்லை என்றால் ஸ்பெஷல் லீவ் வாங்கிக்கொண்டு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம். இப்படியே நீதியின் பெயரால் கடைசி வரையில் அப்பீல் பண்ணலாமே தவிர, ஒரு ஜட்ஜ்மெண்ட் கொடுத்து விட்டால், அரசாங்கத்திலிருந்து வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலை வருமே, சூட் போட்டுவிடுவார்களே, டிக்ரி வாங்கி விடுவார்களே, ஒரு லட்சம், இரண்டு லட்சம் திருப்பித் தரவேண்டிய நிலைமை வருமே, அதற்காக வாலிடேட் பண்ணவேண்டும், சட்டம் கொண்டுவர வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திலே கொடுக்கிற முடிவுகளை, தங்களுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, தங்களுக்கு இருக்கிற சட்டசபை அதிகார வரம்பைப் பயன்படுத்தி, சட்டத்தைச் செல்லுபடியாக்கி, தவறான முறையில் செல்லுகிறார்களே என்று பொது மக்கள் கருதுவார்கள். கான்ஸ்டிட்யூஷனில் ஃபண்டமெண்ட்டல் ரைட்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஃபண்டமெண்ட்டல் ரைட்ஸை நிர்ணயித்து ஆர்ட்டிகிள் 226-ல் கொடுத்திருக்கிறார்கள். இங்கே ஹைக்கோர்ட்டுக்குச் செல்லுகிறார்கள் என்றால், வக்கில் வைத்து வாதாடினால் கட்டிய பணம் 20,000 ரூபாய் திரும்பக் கிடைக்காதா, 30,000 ரூபாய் திரும்பக் கிடைக்காதா என்று சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளைக் கண்டு பிடித்து, சட்டத்தில் பவர் இல்லாதபோதே ரூல் போட்டு வசூல் செய்யப்பட்ட பணம் திருப்பித் தரப்படும் என்று ஹைக் கோர்ட்டில் ரூபாய் 1,000, ரூபாய் 2,000 செலவு செய்து வழக்குப் போடுகிறார்கள். அதிலே வெற்றியும் கண்டுவிடுகிறார்கள். அரசாங்கம் தோல்வி கண்டுவிடுகிறது. மீண்டும் அதைக் கொண்டு வருவது மிகவும் தவறான முறை; உயர்நீதி மன்றத்தில் கொடுக்கும் முடிவுகளை மாற்றும் முறையில் கொண்டுவரப்படுகிறது. இதைத் தான் ஆட்சேபிக்கிறோம். பொதுவான கருத்துக்கள் சிறந்ததாக இல்லை.

ஸேல்ஸ்-டாக்ஸ் ஆக்ட்டிலே ஒரு வருஷம் என்று இருந்ததை ஐந்து வருஷங்களாகக் கொண்டு வந்ததை எதிர்த்தேன். ஐந்து வருஷங்களுக்கு முன் ஒரு பார்ட்னர்ஷிப்பாக இருந்திருக்கலாம். அப்புறம் கலைக்கப்பட்டிருக்கலாம். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஒன்றும் இல்லாமல் இருக்கலாம். அப்போது எப்படிக் கொடுக்க முடியும்? வாசலை விற்றுத்தான் கொடுக்க வேண்டிய நிலைமை வரலாம். பஸ் டிரான்ஸ்போர்ட் வைத்துக் கொண்டிருந்தால் ஒரு வருஷத்தில் ஆர்.டீ.ஓ. ஏன் அஸெஸ் செய்யக் கூடாது? அதிகாரிகள் பேரில் நடவடிக்கை எடுக்காமல், 5 வருஷம் வரையில் பீரியட்டை எக்ஸ்டெண்ட் செய்வது அஸெஸ்மெண்ட் அதிகாரிகள் தூங்குவதற்குத் தலையணை போடுவது மாதிரி இருக்கிறது. ஒரே வருஷத்தில் போடுவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? ஒரு பஸ் ஆப்பரேட்டர் இருந்திருக்கலாம்; மூன்று வருஷங்களுக்கு முன் உரிமையாளராக இருந்திருக்கலாம்; அவர் விற்றுவிட்டுப் போயிருக்கலாம். இன்றைக்கு பஸ் வாங்கியிருக்கிறவன் கொடுக்க





வேண்டுமென்றால் என்ன நியாயம்? அதை எப்படி வசூல் செய்வது? ஆகையால், இந்த லிமிட்டேஷன் பீரியட்டை, 1 வருஷம் என்பதை 5 வருஷம் என்று கொண்டு வருவதன் நோக்கத்தையும், இந்த அடிப்படையையும், இதைக் கொண்டு வந்து உயர் நீதி மன்றத் தீர்ப்புகளை முரண் ஆக்குவதையும் கடுமையாக எதிர்த்து என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை எதிர்க்கிற கனம் உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞரும் ஆவார்கள். வழக்கறிஞர் என்பதுதான் அவர் மனத்தில் இருந்தது. அவர்கள் இந்த மன்ற உறுப்பினர் என்பதை மறந்துவிட்டார்கள். வழக்கறிஞர் என்பது தான் அவர் மனத்தில் இருக்கிறது; ஏன் என்றால் சில நாட்கள் தானே இந்த மன்றத்தில் பணியாற்றுவது; ஆகையால் வழக்கறிஞர் என்ற நினைவே அவர்களுக்கு வருகிறது.

**Sri V. KRISHNAMOORTHY:** I am only pointing out the injustice ....

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மன்ற உறுப்பினர்களுக்கும், வெளியில் இருக்கிறவர்களுக்கும். வெளியில் இருக்கிற வழக்கறிஞர்களுக்கும், கான்ஸ்டிட்யூஷன் அருமையை உணர்ந்தவர்களுக்கும், மக்களுடைய உரிமைகளை உணர்ந்தவர்களுக்கும் ஒன்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றம் மக்கள் பிரதிநிதித்துவம் கொண்டது. இதுதான் சுப்ரீம், ஸாவரின் அத்தாரிட்டி. நம்முடைய அரசியலமைப்பில் பார்லிமெண்ட்டுக்கு எப்படி சுப்ரீம் ஸாவரின் அத்தாரிட்டி இருக்கிறதோ, அதே மாதிரி இந்த மன்றத்திற்கும் சுப்ரீம் ஸாவரின் அத்தாரிட்டி இருக்கிறது. அப்படி ஸாவரின் அத்தாரிட்டி இரண்டு பங்காக இருக்கிறது. இந்த மன்றத்திற்கு ஸாவரின் பவர் இருக்கிறது. ப்ரொவின்ஷியல் அட்டானமி என்பது மட்டும் அல்ல. அந்த அத்தாரிட்டி யாருக்கு இருக்கிறது? இந்த மன்றத்திற்கு இருக்கிறது; வழக்கறிஞர்களுக்கு இல்லை. கோர்ட்டுக்குக் கூட இல்லை. நாம் சட்டம் செய்கிறோம். சட்டம் செய்தால், சட்டத்தின் கருத்து என்ன, விளக்கம் என்ன, இதற்கு இடம் கொடுக்கிறதா, இதற்கு இடம் கொடுக்கவில்லையா என்று விளக்கம் கூறுவது ஹைக்கோர்ட். அதிலே ஹைக்கோர்ட் சுப்ரீம். எந்தவிதத்திலும் தவறு ஏற்படக்கூடாது, சரியான நீதி செலுத்தப்படவேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருக்கிறோம். இந்த மன்றமும் ஹைக் கோர்ட்டின் மதிப்பையும், உரிமையையும் பாதுகாக்கவேண்டும். அதைச் செய்யவேண்டியதும் இந்த மன்றம் தான்; அதிலும் குறைவு இல்லை. சட்டம் செய்கிற உரிமை நமக்கு இருக்கிறது. அந்தச் சட்டத்தில் என்ன இடம் கொடுக்கிறது, என்ன இடம் கொடுக்கவில்லை என்று தீர்ப்புக் கொடுக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி செலுத்துகிறார்கள். அது ஹைக்கோர்ட்டாக இருக்கலாம்; சுப்ரீம் கோர்ட்டாக இருக்கலாம். அதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும்; இந்த மன்றமும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதைப் புரிந்து

[திரு. எம். பக்தவத்சலம்] [9th August 1966

கொள்ளாதவர்கள் அவமதிப்பதாகச் சொல்லலாம். வழக்கறிஞர்கள் என்ற ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு பேசினால் எப்படி வேண்டுமானாலும் வாதாடலாம். அந்த முறையில் சொல்லாமே தவிர, நீதி மன்றத்திற்கு எந்த விதத்திலும் குறைவு ஏற்படுத்த வேண்டுமென்று நாம் விரும்ப மாட்டோம்; இந்த மன்றமும் விரும்பாது. இந்த மன்றத்திற்குச் சட்டம் செய்யும் உரிமை இருக்கிறது. அந்தச் சட்டத்தில் எப்படி இருக்கிறது, அந்த மாதிரி செய்ய முடியுமா, முடியாதா என்று சொல்லும் உரிமை நீதி மன்றத்திற்கு இருக்கிறது. சட்டத்தைத் திருத்துவது இந்த மன்றத்தின் உரிமை. மக்களுக்குச் சரியானபடி என்ன செய்வது என்று முடிவு செய்வது இந்த மன்றமே தவிர வேறு யாரும் அல்ல. கோர்ட்டார் செய்வது இன்டர்ப்ரிட்டேஷன். இன்டர்ப்ரிட்டேஷன் செய்து அதற்கு ஏற்றவாறு நீதி செலுத்தவேண்டும். அது கோர்ட்டார் உரிமை. இந்தச் சட்டத்திற்கு என்ன விளக்கம் கொடுத்தார்களோ அதை ஒப்புக்கொள்ளுகிறோம். அதை ஏற்றுக் கொண்டு சட்டத்தை மாற்றுவதற்காகக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு எல்லா உரிமையும் இருக்கிறது. அதனால் இதில் ஒன்றும் தவறுதல் இல்லை. எல்லாம் தெளிவாக இருக்கிறது.

ஒரு ஆண்டுக்குப் பதில் ஐந்து ஆண்டுகள் என்பது விற்பனை வரிச் சட்டத்தில் இருக்கிறது. ஒரு ஆண்டு என்று இருப்பதால் பாதகம் ஏற்படுகிறது. சர்க்காருக்கு வரவேண்டிய வருவாய் பாதிக்கப்படுகிறது. நியாயமாக வரவேண்டிய வருவாய் பாதிக்கப் படுகிறது. நியாயமாக வரவேண்டியதை அவர்களே வைத்துக் கொள்ளட்டும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். விற்பனை வரிச் சட்டத்தில் போட்டிருக்கிற மாதிரித்தானே தவிர வேறு இல்லை என்று சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill, 1966 (L.A. Bill No. 13 of 1966) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Amendment Bill, 1966 (L.A. Bill No. 13 of 1966) be passed.

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn *sine die.*

The House then adjourned *sine die.*



## IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 106. *Notification issued with G.O. No. 1749, dated the 28th May 1966 making certain amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published with Home Department Notification S.R.O. No. A-291 of 1960, dated the 18th August 1960, at pages 3 to 121 of the Rules Supplement to Part V of the Fort St. George Gazette, dated the 14th September 1960, as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937.)]*

* 107. *Notification issued with G.O. P. No. 1040, Revenue, dated the 29th March 1966 exempting with effect on and from the 1st April 1966 all sales of paddy, rice, milk and certain grains from the tax payable under the Madras General Sales Tax Act, 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959.)]*

*108. *Notification issued with G.O. Ms. No. 1698, Rural Development and Local Administration, dated the 12th July 1966, regarding the dissolution of the Rajasingamangalam Panchayat Union Council, Ramanathapuram district with effect on and from the 15th July 1966 and its reconstitution with effect on and from the 15th July 1967. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958.)]*

### B. Reports, Notifications and other papers.

25. *List of Unstarred Questions and Answers from Nos. 1 to 5.*

† 26. *The Madras Private Educational Institutions (Regulation) Bill, 1966 (L.A. Bill No. 14 of 1966.)*

† 27. *The Madras Appropriation (No. 3) Bill, 1966 (L.A. Bill No. 15 of 1966.)*

‡ 28. *The Madras District Municipalities Bill, 1966 (L.A. Bill No. 12 of 1966).*

* 29. *The Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Madras for the year 1963-64.*

30. *The Report of the Committee on Government Assurances (Ninth Report).*

31. *The Report of the Committee on Estimates on the Hindu Religious and Charitable Endowments (Administration) Department.*

---

* Laid on the Table of the House on 8th August 1966.
† Despatched to Members on 6th August 1966.
‡ Despatched to Members on 7th August 1966.

## இணைப்பு—II

[890-ம் பக்கத்தில் 250 என் நட்சத்திரக் குறியிட்ட கேள்விக்கான பதிலைக் காண்க].

1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் உள்ள கால அளவில் (ஆண்டு வாரியாக) சென்னை தொழிலியர் நடுவர் மன்றத்துக்கும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதி மன்றங்களுக்கும் விசாரணைக்காக அனுப்பப்பட்ட, அவற்றால் தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைக் காட்டுகிற விவர அறிக்கை :—

| | 1-1-1962 முதல் 31-12-1962 வரை. | | 1-1-1963 முதல் 31-12-1963 வரை. | | 1-1-1964 முதல் 31-12-1964 வரை. | | 1-1-1965 முதல் 31-12-1965 வரை. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. | தீர்வு காணப் பட்டவை. | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. | தீர்வு காணப் பட்டவை. | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. | தீர்வு காணப் பட்டவை. | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. | தீர்வு காணப் பட்டவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-வது பிரிவின்கீழ்— | | | | | | | | |
| தொழிலியல் நடுவர் மன்றம், சென்னை. | 66 | 58 | 50 | 50 | 55 | 54 | 57 | 54 |
| தொழிலாளர் நீதி மன்றம், சென்னை. | 74 | 68 | 63 | 65 | 69 | 55 | 97 | 68 |
| தொழிலாளர் நீதி மன்றம், மதுரை. | 36 | 23 | 40 | 50 | 42 | 60 | 32 | 18 |
| தொழிலாளர் நீதி மன்றம், கோயமுத்தூர். | 59 | 71 | 27 | 35 | 40 | 48 | 58 | 49 |
| மொத்தம் .. | 235 | 220 | 180 | 200 | 206 | 217 | 244 | 189 |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-வது பிரிவின்கீழ்— | | | | | | | | |
| தொழிலியல் நடுவர் மன்றம், சென்னை. | 106 | 124 | 19 | 13 | 200 | 210 | 36 | 30 |
| தொழிலாளர் நீதி மன்றம், சென்னை. | 42 | 52 | 28 | 14 | 8 | 19 | 26 | 24 |
| தொழிலாளர் நீதி மன்றம், மதுரை. | 9 | .. | 9 | 17 | 4 | 4 | 9 | 5 |
| தொழிலாளர் நீதி மன்றம், கோயமுத்தூர். | 2 | 1 | 1 | 2 | 4 | 4 | 4 | 3 |
| மொத்தம் .. | 159 | 177 | 57 | 46 | 216 | 237 | 75 | 62 |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 33(A) பிரிவின்கீழ்— | | | | | | | | |
| தொழிலியல் நடுவர் மன்றம்' சென்னை. | 5 | 6 | 17 | 13 | 10 | 9 | 10 | 13 |
| தொழிலாளர் நீதி மன்றம், சென்னை. | 22 | 17 | 19 | 18 | 36 | 8 | 21 | 46 |
| தொழிலாளர் நீதி மன்றம், மதுரை. | 24 | 3 | 23 | 42 | 6 | 7 | 14 | 9 |
| தொழிலாளர் நீதி மன்றம், கோயம்புத்தூர். | 4 | 1 | 6 | 9 | 4 | 4 | 3 | 1 |
| மொத்தம் .. | 55 | 27 | 65 | 82 | 56 | 28 | 48 | 69 |

| (1) | 1-1-1962 முதல் 31-12-1962 வரை. | | 1-1-1963 முதல் 31-12-1963 வரை. | | 1-1-1964 முதல் 31-12-1964 வரை. | | 1-1-1965 முதல் 31-12-1965 வரை. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. (2) | தீர்வு காணப்பட்டவை. (3) | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. (4) | தீர்வு காணப்பட்டவை. (5) | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. (6) | தீர்வு காணப்பட்டவை. (7) | அனுப்பப்பட்டவை அல்லது தாக்கல் செய்யப்பட்டவை. (8) | தீர்வு காணப்பட்டவை. (9) |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 33 (C) (2) பிரிவின்கீழ்— | | | | | | | | |
| தொழிலாளர் நீதி மன்றம், சென்னை. | 673 | 939 | 618 | 654 | 987 | 622 | 1,166 | 1,213 |
| தொழிலாளர் நீதி மன்றம், மதுரை. | 231 | 236 | 264 | 351 | 241 | 312 | 883 | 330 |
| தொழிலாளர் நீதி மன்றம், கோயம்புத்தூர். | 286 | 292 | 610 | 591 | 176 | 217 | 989 | 225 |
| மொத்தம் .. | 1,190 | 1,467 | 1,492 | 1,596 | 1,404 | 1,151 | 3,038 | 1,768 |
| குறைந்த அளவுக் கூலிச் சட்டத்தின் 20-வது பிரிவின்கீழ்— | | | | | | | | |
| தொழிலாளர் நீதி மன்றம், சென்னை. | 10 | 17 | 7 | 7 | 39 | 13 | 10 | 20 |
| தொழிலாளர் நீதி மன்றம், மதுரை. | 11 | 19 | 17 | 16 | 19 | 25 | 31 | 26 |
| தொழிலாளர் நீதி மன்றம், கோயம்புத்தூர். | 33 | 31 | 39 | 41 | 9 | 9 | 23 | 20 |
| மொத்தம் .. | 54 | 67 | 63 | 64 | 67 | 47 | 64 | 66 |



சென்னையிலுள்ள தொழிலாளர் கூடுதல் நீதிமன்றத்திக்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட வழக்குகள் (சென்னை தொழிலாளர் நீதிமன்றத்திலிருந்து மாற்றப்பட்ட வழக்குகளும் இவற்றுள் அடங்கும்)—அந்த நீதிமன்றம் தீர்ப்பளித்த வழக்குகள்—இவற்றின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை :—

| (1) | 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் தேதியிலிருந்து 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் தேதி (பிற்பகல்) வரை. | | 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் தேதியிலிருந்து 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி (பிற்பகல்) வரை. | |
|---|---|---|---|---|
| | விசாரணைக்கு அனுப்பப்பட்ட வழக்குகள். (2) | தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள். (3) | விசாரணைக்கு அனுப்பப்பட்ட வழக்குகள். (4) | தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள். (5) |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-வது பிரிவின் கீழ். | 40 | 21 | 53 | 9 |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-வது பிரிவின் கீழ். | 3 | 1 | 8 | .. |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-ஏ பிரிவின் கீழ். | 6 | 1 | 14 | 1 |
| தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (2) பிரிவின் கீழ். | 150 | 135 | 406 | 188 |
| குறைந்த அளவுக் கூலிச் சட்டத்தின் 20-வது பிரிவின் கீழ். | .. | .. | .. | .. |

*Statement showing the number of cases referred to and disposed of by the Industrial Tribunal, Madras, Labour Court at Madras, Madurai and Coimbatore, during the period from 1st January 1962 to 31st December 1965, yearwise.*

| | From 1st January 1962 to 31st December 1962. | | From 1st January 1963 to 31st December 1963. | | From 1st January 1964 to 31st December 1964. | | From 1st January 1965 to 31st December 1965. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | Referred to or filed. (2) | Disposed of. (3) | Referred to or filed. (4) | Disposed of. (5) | Referred to or filed. (6) | Diposed of. (7) | Referred to or filed. (8) | Disposed of. (9) |
| *Under section* 10 *of the Act*— | | | | | | | | |
| Industrial Tribunal, Madras .. | 66 | 58 | 50 | 50 | 55 | 54 | 57 | 54 |
| Labour Court, Madras .. .. | 74 | 68 | 63 | 65 | 69 | 55 | 97 | 68 |
| Labour Court, Madurai .. .. | 36 | 23 | 40 | 50 | 42 | 60 | 32 | 18 |
| Labour Court, Coimbatore .. | 59 | 71 | 27 | 35 | 40 | 48 | 58 | 49 |
| Total .. | 235 | 220 | 180 | 200 | 206 | 217 | 244 | 189 |
| *Under section* 33 *of the Act*— | | | | | | | | |
| Industrial Tribunal, Madras .. | 106 | 124 | 19 | 13 | 200 | 210 | 36 | 30 |
| Labour Court, Madras .. .. | 42 | 52 | 28 | 14 | 8 | 19 | 26 | 24 |
| Labour Court, Madurai .. .. | 9 | .. | 9 | 17 | 4 | 4 | 9 | 5 |
| Labour Court, Coimbatore .. | 2 | 1 | 1 | 2 | 4 | 4 | 4 | 3 |
| Total .. | 159 | 177 | 57 | 46 | 216 | 237 | 75 | 62 |
| *Under section* 33 (*a*) *of the Act*— | | | | | | | | |
| Industrial Tribunal, Madras .. | 5 | 6 | 17 | 13 | 10 | 9 | 10 | 13 |
| Labour Court, Madras .. .. | 22 | 17 | 19 | 18 | 36 | 8 | 21 | 46 |
| Labour Court, Madurai .. .. | 24 | 3 | 23 | 42 | 6 | 7 | 14 | 9 |
| Labour Court, Coimbatore .. | 4 | 1 | 6 | 9 | 4 | 4 | 3 | 1 |
| Total .. | 55 | 27 | 65 | 82 | 56 | 28 | 48 | 69 |
| *Under section* 33-*C* (2) *of the Act*— | | | | | | | | |
| Labour Court, Madras .. .. | 673 | 939 | 618 | 654 | 987 | 622 | 1.166 | 1,213 |
| Labour Court, Madurai .. .. | 231 | 236 | 264 | 351 | 241 | 312 | 883 | 330 |
| Labour Court, Coimbatore .. | 286 | 292 | 610 | 591 | 176 | 217 | 989 | 225 |
| Total .. | 1,190 | 1,467 | 1,492 | 1,596 | 1,404 | 1,151 | 3,038 | 1.768 |
| *Under section* 20 *of the Minimum Wages Act*— | | | | | | | | |
| Labour Court, Madras .. .. | 10 | 17 | 7 | 7 | 39 | 13 | 10 | 20 |
| Labour Court, Madurai .. .. | 11 | 19 | 17 | 16 | 19 | 25 | 31 | 26 |
| Labour Court, Coimbatore .. | 33 | 31 | 39 | 41 | 9 | 9 | 23 | 20 |
| Total .. | 54 | 67 | 63 | 64 | 67 | 47 | 64 | 66 |

*Statement showing the number of cases referred to (including those transferred from the Labour Court, Madras) and disposed of by the Additional Labour Court, Madras.*

| | From 14th September 1964 to 10th March 1965 *afternoon*. Number of cases. | | From 15th October 1965 to 31st December 1965 *afternoon*. Number of cases. | |
|---|---|---|---|---|
| | Referred. | Disposed of. | Referred. | Disposed of. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. Under section 10 of the Industrial Disputes Act. | 40 | 21 | 53 | 9 |
| 2. Under section 33 of the Industrial Disputes Act. | 3 | 1 | 8 | .. |
| 3. Under section 33-A of the Industrial Disputers Act. | | | | |
| 4. Under section 33-C (2) of the Industrial Disputes Act. | 6 | 1 | 14 | 1 |
| 5. Under section 20 of the Minimum Wages Act. | 150 | 135 | 406 | 183 |
| | .. | .. | .. | .. |



## APPENDIX III.

[*Vide* Answer to Starred Question No. 261 at page 898.]

*Number of permits granted to Harijans who have formed Co-operative Societies or to those Harijans who have not formed Co-operative Societies during the Third Plan period from 1st April 1961 to 31st March 1966.*

| Serial number and name of the district. | 1961-62. | | 1962-63. | | 1963-64. | | 1964-65. | | 1965-66. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Co-operative concerns. | Others. | Co-operative concerns. | Others. | Co-operative concerns. | Others. | Co-operative concerns. | Others. | Co-operative concerns. | Others. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 Coimbatore | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1* | .. |
| 2 North Arcot | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 3 Tiruchirappalli | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| Total .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 2 | 1 | 1 |

*Permit sanctioned on 22nd April 1966 to the Erode Co-operative Motor Transport Society, Limited, for Harijans on the route Erode to Kambiliampatti. Vehicle yet to be produced by the Society.

1—4—1961-லிருந்து 31—3—1966 வரையுள்ள மூன்றாவது திட்டக் காலத்தில் ஹரிஜனங்களுக்குக் கூட்டுறவு முறையில்/கூட்டுறவு முறை இல்லாமல் கொடுக்கப்பட்டுள்ள பர்மிட்டுகளின் எண்ணிக்கை:—

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | 1961-62. | | 1962-63. | | 1963-64. | | 1964-65. | | 1965-66. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கூட்டுறவு நிறுவனங்கள். | மற்றவை. | கூட்டுறவு நிறுவனங்கள். | மற்றவை. | கூட்டுறவு நிறுவனங்கள். | மற்றவை. | கூட்டுறவு நிறுவனங்கள். | மற்றவை. | கூட்டுறவு நிறுவனங்கள். | மற்றவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 கோயம்புத்தூர் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1* | .. |
| 2 வட ஆர்க்காடு | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 3 திருநெல்வேலி | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. |
| மொத்தம் | .. | 1 | .. | .. | .. | .. | .. | 2 | 1 | 1 |

*ஈரோட்டிலிருந்து கம்பிளியம்பட்டிக்குச் செல்லும் பஸ் வழித்தடத்தில் அரிஜனங்களுக்காக ஈரோடு கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்க லிமிடெட் என்னும் நிறுவனத்துக்கு 22—4—1966 அன்று பர்மிட் வழங்கப்பட்டுள்ளது. இச் சங்கம் வாங்கிய பஸ்ஸினை இன்னும் கொண்டுவந்து காட்டவில்லை.



## APPENDIX IV.

[*Vide* Answer To Starred Question No. 263 at page 899.]

STATEMENT.

| | 1963-64. | | 1964-65. | |
|---|---|---|---|---|
| | Number of electric motors sanctioned | Number energised. | Number of electric motors sanctioned. | Number energised |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| Musiri .. | 254 | 242 | 230 | 98 |
| Perambalur .. | 384 | 337 | 803 | 385 |
| Total .. | 638 | 579 | 1,033 | 483 |

விபர அறிக்கை.

| | 1963-64. | | 1964-65. | |
|---|---|---|---|---|
| | அனுமதி வழங்கப் பட்ட மின்சார மோட்டார்களின் எண்ணிக்கை. | மின்சக்தி இணைப் புக் கொடுக்கப் பட்ட வற்றின் எண்ணிக்கை. | அனுமதி வழங்கப் பட்ட மின்சார மோட்டார்களின் எண்ணிக்கை. | மின்சக்தி இணைப் புக் கொடுக்கப் பட்ட வற்றின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| முசிறி .. | 254 | 242 | 230 | 98 |
| பெரம்பலூர் .. | 384 | 337 | 803 | 385 |
| மொத்தம் .. | 638 | 579 | 1,033 | 483 |

## APPENDIX V.

[*Vide* Answer to Starred Question No. 265 at page 902.]

(a) The Government have sanctioned a sum of Rs. 9,345·43 as lump-sum grant to the Harijan Sevak Sangh, Madras, and a sum of Rs. 11,904 to the Madras State Depressed Classes League, Madras, for the year 1965-66 for carrying on propaganda for the removal of untouchability.

[9th August 1966

(*b*) The Government have specified that the lump-sum grants sanctioned to these organisations should be utilised on the following items of expenditure :—

*Harijan Sevak Sangh, Madras.*

| | RS. |
|---|---|
| (1) Supply of pamphlets .. .. | 3,025·85 |
| (2) Conduct of bhajans and dramas .. | 2,829·9 |
| (3) Opening of libraries .. .. | 2,323·61 |
| (4) Employment of clerk-*cum*-typist .. | 1,116·00 |
| (5) Audit fees .. .. .. | 50.00 |
| Total .. | 9,345·43 |

*Madras State Depressed Classes League, Madras.*

| | RS. |
|---|---|
| (1) Supply of pamphlets to villages on removal of untouchability | 4,231·00 |
| (2) Conduct of bhajans, dramas, etc., in villages .. | 4,231·00 |
| (3) Opening of libraries in villages for eradicating untouchability .. | 2,326·00 |
| (4) Appointment of typist-*cum*-clerk on Rs. 93 per mensem in the Head-quarters .. .. .. .. | 1,116·00 |
| Total .. | 11,904·00 |

The audit reports of these organisations as to how they haves utilised the lump-sum grants sanctioned to them during 1965–66 are awaited by the Government. On receipt of the audit reports from them, the Government will consider the payment of lump-sum grant to these organisations during the current year, viz., 1966-67.

(அ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதற்காக சென்னையிலுள்ள ஹரிஜன சேவக் சங்கத்திற்கு மொத்த மானியமாக ரூ. 9,345·43-ம் சென்னையிலுள்ள தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கத்திற்கு ரூ. 11,904-ம் 1965–66-ம் ஆண்டுக்காக அரசாங்கம் அனுமதி வழங்கியது.

(இ) இந்த நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மானியத் தொகைகளைக் கீழ்க்கண்ட செலவினங்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது:—

**ஹரிஜன சேவக் சங்கம், சென்னை.**

| | ரூ. | பை. |
|---|---|---|
| (1) துண்டு வெளியீடுகள் வழங்குதல் .. .. | 3,025 | 85 |
| (2) பஜனைகளும் நாடகங்களும் நடத்துதல் .. .. | 2,829 | 97 |
| (3) நூலகங்கள் ஏற்படுத்தல் .. .. .. | 2,323 | 61 |
| (4) தட்டச்சர்-எழுத்தரை வேலைக்கமர்த்தல் .. .. | 1,116 | 00 |
| (5) தணிக்கைக் கட்டணம் .. .. .. .. | 50 | 00 |
| மொத்தம் .. | 9,345 | 43 |



9th August 1966]

**தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம், சென்னை.**

| | ரூ. | பை. |
|---|---|---|
| (1) தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாகக் கிராமங்களுக்குத் துண்டு வெளியீடுகள் வழங்குதல் .. | 4,231 | 00 |
| (2) கிராமங்களில் பஜனைகளும், நாடகங்களும் நடத்துதல் .. .. .. .. .. | 4,231 | 00 |
| (3) தீண்டாமை ஒழிப்பிற்காகக் கிராமங்களில் நூலகங்கள் ஏற்படுத்துதல் .. .. .. | 2,326 | 00 |
| (4) இந்தத் தலைமையிடங்களில் மாதம் ரூ. 93 சம்பளத்தில் தட்டச்சர்-எழுத்தரை நியமித்தல் .. | 1,116 | 00 |
| மொத்தம் .. | 11,904 | 00 |

இந்த நிறுவனங்கள், 1965-66ல் தங்களுக்கு அளிக்கப்பட்ட மொத்த மானியத் தொகைகளை எவ்வாறு பயன்படுத்தின என்பது சம்பந்தமாய் அரசாங்கம் தணிக்கை அறிக்கைகளை அவைகளிடமிருந்து எதிர்பார்க்கிறது. அவைகளிடமிருந்து தணிக்கை அறிக்கைகள் வந்ததும் நடப்பு ஆண்டாகிய 1966–67-க்கு இந்த நிறுவனங்களுக்கு மொத்த மானியம் அளிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும்.

## APPENDIX VI.

[*Vide* answer to Starred Question No. 284 at page 914]

*Number of sterilisations done for the period from January 1964 to August 1965 in all medical institutions in the State.*

| | Men. | Women. | Total. |
|---|---|---|---|
| Madras City .. .. | 10,805 | 2,439 | 13,244 |
| North Arcot .. .. | 3,402 | 671 | 4,073 |
| Chingleput .. .. | 334 | 98 | 432 |
| South Arcot .. .. | 4,254 | 157 | 4,411 |
| Salem .. .. | 5,012 | 343 | 5,355 |
| Coimbatore .. .. | 2,423 | 1,021 | 3,444 |
| Nilgiris .. .. | 1,627 | 134 | 1,761 |
| Thanjavur .. .. | 8,774 | 364 | 9,138 |
| Tiruchirappalli .. .. | 2,121 | 281 | 2,402 |
| Madurai .. .. | 12,000 | 990 | 12,990 |
| Ramanathapuram .. .. | 6,882 | 135 | 7,017 |
| Tirunelveli .. .. | 3,385 | 166 | 3,551 |
| Kanyakumari .. .. | 4,603 | 327 | 4,930 |
| | 65,622 | 7,126 | 72,748 |

[9th August 1966

இம்மாநிலத்திலுள்ள எல்லா மருத்துவ மனைகளிலும், 1964-ம் ஆண்டு ஜனவரி முதல் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு வரை செய்த குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகளின் விவர அறிக்கை:—

| | ஆண்கள். | பெண்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| சென்னை மாநகரம் .. .. | 10,805 | 2,439 | 13,244 |
| வட ஆர்க்காடு .. .. | 3,402 | 671 | 4,073 |
| செங்கற்பட்டு .. .. | 334 | 98 | 432 |
| தென் ஆர்க்காடு .. .. | 4,254 | 157 | 4,411 |
| சேலம் .. .. | 5,012 | 343 | 5,355 |
| கோயம்புத்தூர் .. .. | 2,423 | 1,021 | 3,444 |
| நீலகிரி .. .. | 1,627 | 134 | 1,761 |
| தஞ்சாவூர் .. .. | 8,774 | 364 | 9,138 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 2,121 | 281 | 2,402 |
| மதுரை .. .. | 12,000 | 990 | 12,990 |
| இராமநாதபுரம் .. .. | 6,882 | 135 | 7,017 |
| திருநெல்வேலி .. .. | 3,385 | 166 | 3,551 |
| கன்னியாகுமரி .. .. | 4,603 | 327 | 4,930 |
| | 65,622 | 7,126 | 72,748 |

## APPENDIX VII.

[Vide Answer to Starred Question No. 299 at page 924.]

Based on the recommendation of the High Power Committee for Economy and Administrative Reorganisation, the Government of Madras have recently issued orders imposing a cut of 7½ per cent in the Clerical (Assistants and Clerks) strength of all offices in Madras State subject to the proviso that fractions arising while working out the cut may be ignored. As such, this order will be applicable only to those offices in which the clerical strength is more than 14.

2. The total number of the Clerks and Assistants likely to be rendered surplus because of the application of the 7½ per cent cut was initially estimated at 1,200. With a view, however, to minimise the hardships likely to be caused to these surplus hands, it was ordered that only such of those surplus hands appointed after 1st October 1965 are to be retrenched straightaway, while the remaining surplus hands are to be continued in their respective positions and absorbed against future vacancies either in their own Department or elsewhere. It was also ordered that wherever special difficulties were encountered in giving effect to the cut in full, these difficulties should be reported to the Government immediately, so that the actual number to be reckoned as surplus will be settled by the Secretary concerned in consultation with the Head of Department and the Secretary, Finance Department, taking into account the special difficulties mentioned by the Head of Department. On the basis of such discussions in a number of



9th August 1966]

Departments, like the Police and High Court, the number reckoned as surplus in these Departments ultimately has worked out to much less than 7½ per cent. Since on the average, about 3,500 clerks are recruited annually by the Madras Public Service Commission for filling up new posts as well as vacancies caused by retirements, promotions, etc., in the various Government offices, it will be clear that most of the staff who are listed out as surplus are likely to be absorbed against future vacancies before the end of the current year itself. Further, the Clerks who are likely to be straightaway retrenched by the implementation of the 7½ per cent cut would in most cases be the Emergency hands who would in any case have been ousted once the approved candidates of the Madras Public Service Commission become available.

3. As far as possible the surplus staff will be absorbed against vacancies arising in the Districts in which they are now serving. Lists of surplus staff are under preparation in each District and full particulars of the district wise surplus staff have not yet been collected.

4. Since most of the surplus hands will be continued in their respective positions till they are absorbed against future vacancies, the savings anticipated due to the implementation of the 7½ per cent cut would take some time to fructify fully. The present estimate of total saving that is likely to be achieved is about Rs. 20 lakhs.

## APPENDIX VIII.

[*Vide* Answer to Unstarred Question No. 1 at page 925.]

Wild Life is protected in all the Reserve Forests throughout the Madras State. Wild Life Sanctuaries and the following areas have been closed to shooting and special protection has been given to wild life :—

1. Mudumalai Wild Life Sanctuary including Avarahalla Reserved Forest in the Nilgiris district.

2. Tiger Sanctuary comprising of Papanasam and Singampatti Reserved Forest.

3. Deer Park, Guindy.

4. Vedanthangal Water Bird Sanctuary.

5. Kodiakadu Reserved Forest.

6. Coimbatore South Division.

7. Kukkal Reserved Forest in Kodaikanal Range.

8. Shevaroys North Range, Attur Range, Namakkal Range of Salem South Division.

9. Patrakad, Veerappanur, Mulakad Reserved Forests of Polur Range, Malayalam Reserved Forest, Puthur and Thellai Reserved Forests of Santhavasal Range of Vellore East Division.

] 9th August 1966

10. Veerapuli Reserved Forest of Kulasekaram and Azhakiyapandiapuram Ranges in Kanyakumari District.

11. Singarapet Reserved Forest, Singarapet Extension Reserved Forest, Mambakkam and Mambakkam Extension Reserved Forest, Govindapuram Reserved Forest, art of inner Javadi Reserved Forest in Tirupattur Range, Ponniar Reserved Forest of Sathanur Range of Vellore west Division.

12. Reserved Forests in Anchetty Range of Salem North Division.

13. Attur Ghat Reserved Forest and its extension, Kurchi and Pungamaduvu in Shevaroys North Range of Salem South Range of Salem South Division.

Nagalur Reserved Forest, Pattimedu Reserved Forests and its extension, Aruna, Thumbal and Jadayagoundan in Attur Range of Salem South Division.

Ariyursholai, Pulyansholai and Shelur Reserved Forests and its extension of Salem South Division.

14. Whole of Satyamangalam Range of Coimbatore North Division.

15. The entire Reserved Forests in Tirunelveli and Kanyakumari Districts.

2. Besides the protection given to the Wild Life in the areas mentioned in paragraph 1 above, the following have been declared as water fowl refuges and birds resorting to these place have been protected under the Wild Birds and Animals Protection Act.

| | District. | Name of water fowl refuge. |
|---|---|---|
| 1 | Chingleput .. .. | Arapakkam lake.<br>Chembarambakkam. |
| 2 | North Arcot .. .. | Kaveripakkam. |
| 3 | South Arcot .. .. | Kazveli Swamp.<br>Thennagaram lake.<br>Veeranam lake. |
| 4 | Thanjavur .. .. | Point Calimere.<br>Muthupet.<br>Talanayar. |
| 5 | Madurai .. .. .. | Vaigai Dam. |
| 6 | Ramanathapuram .. .. | Nenmeni lake. |
| 7 | Tirunelveli .. .. | Kundakulam.<br>Moonradaippu.<br>Gangaikondan.<br>Seethaparapanellur. |
| 8 | Tiruchirappalli .. .. | Devarayan Eri. |



9th August 1966]

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒதுக்கக் காடுகளில் உள்ள வன விலங்குகள் பாதுகாக்கப்படுகின்றன. வன விலங்குகளுக்கான காப்பிடங்களிலும் கீழ்க்கண்ட இடங்களிலும் விலங்குகளைச் சுடுவது தடை செய்யப்பட்டுள்ளது. வன விலங்குகளுக்குத் தனிப்பட்ட பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளது :—

1. நீலகிரி மாவட்டத்தில் உள்ள அவலாஞ்சி ஒதுக்கக்காடு உட்பட முதுமலை வன விலங்குக் காப்பகம்.

2. பாபநாசம், சிங்கம்பட்டி ஒதுக்கக்காடு அடங்கிய புலிகள் காப்பகம்.

3. மான் பூங்கா, கிண்டி.

4. வேடந்தாங்கல் நீர்ப்பறவைக் காப்பகம்.

5. கொடியக்காடு ஒதுக்கக்காடு.

6. கோயம்புத்தூர் தெற்குக் கோட்டம்.

7. கோடைக்கானல் சரகத்தில் உள்ள கூக்கல் ஒதுக்கக்காடு.

8. சேலம் தெற்குக் கோட்டத்தைச் சேர்ந்த சேர்வராயன் வடக்கு வனச்சரகம், ஆத்தூர் வனச்சரகம், நாமக்கல் வனச்சரகம்.

9. வேலூர் கிழக்குக் கோட்டத்தைச் சேர்ந்த போளூர் வனச் சரகத்திலுள்ள பட்ரகாடு, விரப்பனூர், மூலக்காடு ஒதுக்கக் காடுகள், சந்தவாசல் வனச்சரகத்திலுள்ள மலையாள ஒதுக்கக்காடு, புத்தூர், நெள்ளை ஒதுக்கக்காடுகள்.

10. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குலசேகரம், அழகிய பாண்டியபுரம் வனச்சரகங்களிலுள்ள வீரபுலி ஒதுக்கக்காடு.

11. வேலூர் மேற்குக் கோட்டத்தைச் சேர்ந்த, திருப்பத்தூர் வனச்சரகத்திலுள்ள சிங்காரப்பேட்டை ஒதுக்கக்காடு, சிங்காரப் பேட்டை விஸ்தரிப்பு ஒதுக்கக்காடு, மாம்பாக்கம் ஒதுக்கக்காடு, மாம்பாக்கம் விஸ்தரிப்பு ஒதுக்கக்காடு, கோவிந்தாபுரம் ஒதுக்கக் காடு, ஜவ்வாது ஒதுக்கக்காட்டின் உட்பகுதி, சாத்தனூர் வனச் சரகத்திலுள்ள பொன்னியாறு ஒதுக்கக்காடு.

12. சேலம் வடக்குக் கோட்டத்தைச் சேர்ந்த அன்செட்டி வனச்சரகத்திலுள்ள ஒதுக்கக்காடுகள்.

13. சேலம் தெற்குக் கோட்டத்தைச் சேர்ந்த சேர்வராயன் வடக்குச் சரகத்திலுள்ள ஆத்தூர் மலை ஒதுக்கக் காடும், அதன் விஸ்தரிப்பும், குறிச்சி, மங்க மடுவும் ;

சேலம் தெற்குக் கோட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர் வனச்சர கத்திலுள்ள நாகலூர் ஒதுக்கக்காடு, பட்டிமேடு ஒதுக்கக்காடும், அதன் விஸ்தரிப்பும், அருணை, தும்பல், ஜடய கவுண்டன் ஒதுக்கக் காடுகள்.

சேலம் தெற்குக் கோட்டத்தைச் சேர்ந்த அரியூர் சோலை, புளியன்சோலை, சேலூர் ஒதுக்கக்காடுகள்.

14. கோயம்புத்தூர் வடக்குக் கோட்டத்தைச் சேர்ந்த சத்தியமங்கலம் வனச்சரகம் முழுவதும்.

15. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள ஒதுக்கக்காடுகள்.

2. மேலே 1-வது பாராவில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் வன விலங்குகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பினைத் தவிர அடியிற் கண்ட இடங்கள் நீர்ப்பறவைக் காப்பிடங்கள் என அறிவிக்கப் பட்டு அந்த இடங்களுக்கு வரும் பறவைகளுக்கு 1912-ம் ஆண்டு காட்டுப் பறவைகள்—வன விலங்குகள் காப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது :—

| | மாவட்டத்தின் பெயர். (1) | நீர்ப்பறவைகள் காப்பிடங்களின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | செங்கற்பட்டு .. .. | ஆரப்பாக்கம் ஏரி, செம்பரம்பாக்கம். |
| 2 | வட ஆற்காடு .. .. | காவேரிப்பாக்கம். |
| 3 | தென் ஆற்காடு .. | கழுவெளி சதுப்பு நிலம்.<br>தென்னகரம் ஏரி.<br>வீராணம் ஏரி. |
| 4 | தஞ்சாவூர் .. .. | கோடிக்கரை.<br>முத்துப்பேட்டை.<br>தலைஞாயிர். |
| 5 | மதுரை .. .. .. | வைகை அணை. |
| 6 | இராம்நாதபுரம் .. | நென்மேனி ஏரி. |
| 7 | திருநெல்வேலி .. | குந்தகுளம்.<br>மூன்றடைப்பு.<br>கங்கைகொண்டான்.<br>சீதாபரப்ப நெல்லூர். |
| 8 | திருச்சிராப்பள்ளி .. | தேவராயன் ஏரி |



## APPENDIX IX.

[*Vide* Answer to Unstarred Question No. 2 at page 9255.]

(*) *The number of wholesale and retail licences granted for procurement and distribution.*—

<table>
<tr><th>Details. (1)</th><th>Madras. (2)</th><th>Coimbatore. (3)</th><th>Thanjavur. (4)</th><th>The Nilgiris. (5)</th><th>Ramanathapuram (6)</th><th>Tiruchirappalli. (7)</th><th>North Arcot. (8)</th><th>South Arcot. (9)</th><th>Madurai. (10)</th><th>Tirunelveli. (11)</th><th>Chingleput. (12)</th><th>Kanyakumari. (13)</th><th>Dharmapuri. (14)</th><th>Salem. (15)</th></tr>
<tr><td>1 Number of wholesalers under Madras Foodgrain Dealers' Licensing Order, 1964 ..</td><td rowspan="2">1,480</td><td>47</td><td>1</td><td>3</td><td>..</td><td>35</td><td>7</td><td>402</td><td>3</td><td>534</td><td>3</td><td>7</td><td>46</td><td>298</td></tr>
<tr><td>2 Number of retailers under Madras Foodgrain Dealers' Licensing Order, 1964 ..</td><td>238</td><td>15</td><td>344</td><td>178</td><td>49</td><td>3</td><td>202</td><td>338</td><td>1,077</td><td>129</td><td>32</td><td>90</td><td>567</td></tr>
<tr><td>3 Number of wholesalers under Madras Paddy and Rice Dealers' (Licensing and Regulation) Order, 1965 ..</td><td rowspan="2">1,053</td><td>339</td><td>928</td><td>3</td><td>154</td><td>604</td><td>759</td><td>317</td><td>160</td><td>229</td><td>630</td><td>43</td><td>16</td><td>1,282</td></tr>
<tr><td>4 Number of retailers under Madras Paddy and Rice Dealers' (Licensing and Regulation) Order, 1965 ..</td><td>361</td><td>292</td><td>844</td><td>264</td><td>230</td><td>154</td><td>234</td><td>317</td><td>725</td><td>626</td><td>70</td><td>138</td><td>365</td></tr>
<tr><td>5 Number of procuring agents appointed .. ..</td><td>..</td><td>135</td><td>..</td><td>1</td><td>77</td><td>135</td><td>226</td><td>164</td><td>153</td><td>135</td><td>121</td><td>36</td><td>31</td><td>52</td></tr>
</table>

| Details. (1) | Madras. (2) | Coimbatore. (3) | Thanjavur. (4) | The Nilgiris. (5) | Ramanathapuram (6) | Tiruchirappalli. (7) | North Arcot. (8) | South Arcot. (9) | Madurai. (10) | Tirunelveli. (11) | Chingleput. (12) | Kanyakumari. (13) | Dharmapuri. (14) | Salem. (15) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (a) Number of dealers appointed for distribution of foodgrains under family card system and other purposes .. .. | 1,345 | 820 | .. | 344 | 393 | 457 | .. | 1 | 348 | 1,562 | 189 | 390 | 102 | 688 |
| (b) *The number of defaulters among them—* | | | | | | | | | | | | | | |
| Defaulters .. .. .. .. .. | .. | -76 | 40 | 13 | .. | 17 | 661 | 607 | 47 | 600 | 3 | .. | 13 | 306 |
| (c) *The number of cases filed consequently; and—* | | | | | | | | | | | | | | |
| Number of cases filed consequently .. .. .. .. | .. | .. | .. | .. | .. | 2 | .. | 9 | .. | 7 | .. | .. | .. | 2 |
| (d) *The number of cases ended in conviction, cancellation of licences, etc.—* | | | | | | | | | | | | | | |
| (a) Conviction .. .. .. | .. | 3 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| (b) Cancellation of licence .. | .. | 4 | 2 | 2 | .. | .. | 18 | 25 | 14 | 6 | 1 | .. | .. | .. |
| (c) Forfeiture of deposit .. .. | .. | 63 | 23 | 4 | .. | 8 | 638 | 1 | 9 | 543 | 1 | .. | .. | 1 |
| (d) Suspension of licence .. | .. | .. | 9 | 2 | .. | 8 | 5 | .. | 21 | .. | .. | .. | .. | 1 |
| (e) Imposition of fines .. .. | .. | .. | .. | 5 | .. | 1 | .. | 226 | 3 | 2 | .. | .. | 13 | 302 |
| (f) Warning .. .. .. | .. | .. | 6 | .. | .. | .. | .. | 90 | .. | 44 | .. | .. | .. | .. |
| (g) Pending .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 265 | .. | 1 | 1 | .. | .. | .. |
| (h) Acquital .. .. .. | .. | 6 | .. | .. | .. | .. | .. | .. | .. | 4 | .. | .. | .. | .. |



(அ) உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் உரிமம் வழங்கப்பட்ட மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் இவர்களின் எண்ணிக்கை—

| விவரங்கள். (1) | சென்னை. (2) | கோயம்புத்தூர். (3) | தஞ்சாவூர். (4) | நீலகிரி. (5) | இராமநாதபுரம். (6) | திருச்சிராப்பள்ளி. (7) | வட ஆர்க்காடு. (8) | தென் ஆர்க்காடு. (9) | மதுரை. (10) | திருநெல்வேலி. (11) | செங்கற்பட்டு. (12) | கன்னியாகுமரி. (13) | தர்மபுரி. (14) | சேலம். (15) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு 1964-ம் ஆண்டு உணவு தானிய வியாபாரிகள் உரிமம் வழங்கல் ஆணையின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட மொத்த வியாபாரிகளின் எண்ணிக்கை. | 1,486 | 47 | 1 | 3 | .. | 35 | 7 | 462 | 3 | 534 | 3 | 7 | 46 | 298 |
| 2. தமிழ்நாடு 1964ம் ஆண்டு உணவு தானிய வியாபாரிகள் உரிமம் வழங்கல் ஆணையின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட சில்லறை வியாபாரிகளின் எண்ணிக்கை. | | 238 | 15 | 344 | 178 | 49 | 3 | 202 | 333 | 1,077 | 128 | 32 | 99 | 567 |

(அ) உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் உரிமம் வழங்கப்பட்ட மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் இவர்களின் எண்ணிக்கை—தொடர்ச்சி.

| விவரங்கள். (1) | சென்னை. (2) | கோயம்புத்தூர். (3) | தஞ்சாவூர். (4) | நீலகிரி. (5) | இராமநாதபுரம். (6) | திருச்சிராப்பள்ளி. (7) | வட ஆர்க்காடு. (8) | தென் ஆர்க்காடு. (9) | மதுரை. (10) | திருநெல்வேலி. (11) | செங்கற்பட்டு. (12) | கன்னியாகுமரி. (13) | தர்மபுரி. (14) | சேலம். (15) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. தமிழ்நாடு 1965-ம் ஆண்டு நெல்-அரிசி வியாபாரிகள் (உரிமம் வழங்கல் முறைப்படுத்தல்) ஆணையின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட மொத்த வியாபாரிகளின் எண்ணிக்கை. | 1,053 (3 & 4) | 339 | 928 | 3 | 154 | 604 | 759 | 317 | 160 | 229 | 630 | 43 | 16 | 282 |
| 4. தமிழ்நாடு 1965-ம் ஆண்டு நெல்—அரிசி வியாபாரிகள் (உரிமம் வழங்கல்-முறைப்படுத்தல்) ஆணையின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட சில்லறை வியாபாரிகளின் எண்ணிக்கை. | .. | 361 | 292 | 344 | 264 | 230 | 154 | 234 | 317 | 725 | 626 | 70 | 138 | 365 |
| 5. நியமிக்கப்பட்ட கொள்முதல் முகவரிகள். | | 135 | .. | 1 | 77 | 135 | 226 | 164 | 153 | 135 | 121 | 36 | 31 | 52 |
| 6 குடும்பக் கார்டு முறை மூலம் உணவு தானியம் வழங்குவதற்காகவும் ஏனைய காரியங்களுக்காகவும் நியமிக்கப்பட்ட வியாபாரிகளின் எண்ணிக்கை. | 1,345 | 820 | .. | 344 | 393 | 457 | .. | 1 | 348 | 1,562 | 189 | 390 | 102 | 688 |



| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (இ) அவர்களுள் உரிம நிபந்தனைகளை மீறி நடந்தவர்களின் எண்ணிக்கை— | | | | | | | | | | | | | | |
| விதிகளை மீறி நடந்தவர்கள். | .. | 76 | 40 | 13 | .. | 17 | 661 | 607 | 47 | 600 | 3 | .. | 13 | 306 |
| (உ) அதன் காரணமாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை— | | | | | | | | | | | | | | |
| அதன் காரணமாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | .. | .. | .. | .. | .. | 2 | .. | 9 | .. | 7 | .. | .. | .. | 2 |
| (எ) தண்டனை வழங்குவதில், உரிமங்கள் ரத்து செய்வதில் முடிவுற்ற வழக்குகளின் எண்ணிக்கை— | | | | | | | | | | | | | | |
| (a) தண்டனை. | .. | 3 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| (b) உரிமங்களை ரத்து செய்தல். | .. | 4 | 2 | 2 | .. | .. | 18 | 25 | 14 | 6 | 1 | .. | .. | .. |
| (c) வைப்பீட்டுத் தொகை பறிமுதல். | .. | 63 | 23 | 4 | .. | 8 | 638 | 1 | 9 | 543 | 1 | .. | .. | 1 |
| (d) உரிமம் செயல்படுவதைச் சிறிதுகாலம் நிறுத்திவைத்தல். | .. | .. | 9 | 2 | .. | 8 | 5 | .. | 21 | .. | .. | .. | .. | 1 |
| (e) அபராதம் விதித்தல். | .. | .. | .. | 5 | .. | 1 | .. | 226 | 3 | 2 | .. | .. | 13 | 302 |
| (f) எச்சரித்தல். | .. | .. | 6 | .. | .. | .. | .. | 90 | .. | 44 | .. | .. | .. | .. |
| (g) முடிவுறுமல் இருப்பவை. | .. | .. | .. | .. | .. | .. | .. | 265 | .. | 1 | 1 | .. | .. | .. |
| (h) விடுதலையில் முடிந்தவை. | .. | 6 | .. | .. | .. | .. | .. | .. | .. | 4 | .. | .. | .. | .. |

# APPENDIX X.

[*Vide* Answer to Unstarred Question No. 3 at page 926]

## *Engineering Trades.*

| Serial number and name of Industrial Training Institute. | District in which located. | February 1965 Session (Seniors): Sanctioned seats for the session. | Number admitted. | Scheduled Caste candidates admitted. | Scheduled Tribe candidates admitted. | November 1965 Session (Juniors): Sanctioned seats for the session. | Number admitted. | Scheduled Caste candidates admitted. | Scheduled Tribe candidates admitted. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 North Madras, Madras-21 | Madras | 220 | 233 | 28 | .. | 196 | 211 | 28 | .. |
| 2 Guindy, Madras-32 | Do. | 368 | 298 | 24 | 3 | 272 | 204 | 44 | .. |
| 3 Stree Seva Mandir, Madras-17. | Do. | 32 | 24 | .. | .. | 32 | 16 | .. | .. |
| 4 Chingleput | Chingleput district | 140 | 150 | 19 | .. | 124 | 125 | 21 | .. |
| 5 Katpadi | North Arcot | 148 | 157 | 19 | 2 | 148 | 163 | 25 | .. |
| 6 Tiruvannamalai | Do. | 136 | 145 | 2 | .. | 136 | 150 | 17 | .. |
| 7 Cuddalore | South Arcot district | 172+ 15* | 182+ 15* | 31 | 1 | 172+ 15* | 178+ 15* | 26 | .. |
| 8 Ullundurpet | Do. | 128 | 154 | 24 | 1 | 128 | 134 | 25 | .. |
| 9 Salem | Salem | 144 | 124 | 27 | 2 | 144 | 147 | 24 | .. |
| 10 Mettur Dam | Do. | 136 | 146 | 15 | .. | 136 | 112 | 17 | .. |
| 11 Hosur | Do. | 128 | 152 | 4 | 2 | 168 | 154 | 17 | .. |
| 12 Coimbatore | Coimbatore | 200 | 39 | 6 | 1 | 232 | 223 | 15 | .. |
| 13 Dharapuram | Do. | 128 | 102 | 10 | .. | 128 | 97 | 8 | .. |
| 14 Erode | Do. | 104 | 49 | 8 | .. | 176 | 140 | 15 | .. |
| 15 Coonoor | Nilgiris | 140 | 100 | 19 | .. | 140 | 94 | 14 | .. |
| 16 Tiruchirappalli | Tiruchirappalli | 136 | 147 | 21 | .. | 168 | 181 | 33 | .. |
| 17 Ariyalur | Do. | 136 | 140 | 18 | .. | 136 | 149 | 24 | .. |
| 18 Pudukottai | Do. | 112 | 114 | 9 | .. | 160 | 171 | 24 | .. |
| 19 Thanjavur | Thanjavur | 132 | 141 | 15 | .. | 132 | 140 | 18 | .. |
| 20 Nagapattinam | Do. | 172+ 15* | 174+ 15* | 28 | .. | 172+ 15* | 187+ 15* | 26 | .. |
| 21 Madurai-7 | Madurai | 304 | 270 | 35 | .. | 336 | 303 | 38 | .. |
| 22 Dindigul | Do. | 136 | 140 | 13 | .. | 136 | 131 | 39 | .. |
| 23 Theni | Do. | 108 | 113 | 7 | .. | 164 | 135 | 12 | .. |
| 24 Virudhunagar | Ramanathapuram | 148 | 122 | 12 | .. | 144 | 122 | 17 | .. |
| 25 Paramakudi | Do. | 132 | 118 | 16 | .. | 132 | 100 | 17 | .. |
| 26 Karaikudi | Do. | 100 | 69 | 3 | 1 | 180 | 117 | 4 | .. |
| 27 Pettai | Tirunelveli | 160 | 192 | 18 | .. | 160 | 183 | 23 | .. |
| 28 Tiruchendur | Do. | 128 | 147 | 9 | .. | 128 | 130 | 8 | .. |
| 29 Tuticorin at Pettai | Do. | 128 | 155 | 16 | .. | 152 | 166 | 8 | .. |
| 30 Nagercoil | Kanyakumari | 136 | 130 | 16 | .. | 136 | 149 | 14 | .. |
| | Total .. | 4,492+ 30* | 4,327+ 30* | 482 | 13 | 4,768+ 30* | 4,642+ 30* | 601 | .. |

* Pondicherry State candidates.

*Non-Engineering Trades (August 1965 Session).*

| Serial number and name of Industrial Training Institute. (1) | District in which located. (2) | Sanctioned strength. (3) | Number admitted. (4) | Scheduled Caste candidates admitted. (5) | Scheduled Tribe candidates admitted. (6) |
|---|---|---|---|---|---|
| 1 Industrial Training Centre, Stree Seva Mandir, Madras-17. | Madras .. .. | 192 | 124 | 30 | .. |
| 2 Madurai .. .. .. .. .. .. | Madurai .. .. | 96 | 23 | 5 | .. |
| Total .. | | 288 | 147 | 35 | .. |

* *N.B.*—Admissions in Non-Engineering Trades are made once in a year and in Engineering Trades once in nine months.

பொறியியல் வாணிபம்.

| தொடர் எண்ணும், தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பெயரும். (1) | அமைந்துள்ள மாவட்டம். (2) | 1965, பிப்ரவரியில் தொடங்கிய படிப்புக்காலம் (முதுநிலை மாணவர்கள்). மேற்படி காலப் பகுதிக்கு அனுமதியுள்ள இடங்களின் எண்ணிக்கை. (3) | படிக்கச் சேர்த்துக் கொள்ளப்பட்டோர். (4) | படிக்கச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரிஜன மாணவர்கள். (5) | படிக்கச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆதி வாசி மாணவர்கள். (6) | 1965, நவம்பரில் தொடங்கிய படிப்புக்காலம் (இளநிலை மாணவர்கள்). மேற்படி காலப்பகுதிக்கு அனுமதியுள்ள இடங்களின் எண்ணிக்கை. (7) | படிக்கச் சேர்த்துக் கொள்ளப்பட்டோர். (8) | படிக்கச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரிஜன மாணவர்கள். (9) | படிக்கச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆதி வாசி மாணவர்கள். (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வட சென்னை, சென்னை 21. | சென்னை .. .. | 220 | 233 | 28 | .. | 196 | 211 | 28 | .. |
| 2 கிண்டி, சென்னை-32. | டிடு .. .. | 368 | 298 | 24 | 3 | 272 | 204 | 44 | .. |
| 3 ஸ்ரீ சேவா மந்திர், சென்னை-17. | டிடு .. .. | 32 | 24 | .. | .. | 32 | 16 | .. | .. |
| 4 செங்கற்பட்டு .. | செங்கற்பட்டு .. | 140 | 150 | 19 | .. | 124 | 125 | 21 | .. |
| 5 காட்பாடி .. .. | வட ஆற்காடு .. | 148 | 157 | 19 | 2 | 148 | 163 | 25 | .. |
| 6 திருவண்ணாமலை .. | டிடு | 136 | 145 | 12 | .. | 136 | 150 | 17 | .. |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 கடலூர் .. .. | தென் ஆற்காடு .. | 172+ 15* | 182+ 15* | 31 | 1 | 172+ 15* | 178+ 15* | 26 | .. |
| 8 உளுந்தூர்பேட்டை. .. | டிடு .. | 128 | 154 | 24 | 1 | 128 | 134 | 25 | .. |
| 9 சேலம் .. .. | சேலம் .. .. | 144 | 124 | 27 | 2 | 144 | 147 | 24 | .. |
| 10 மேட்டூர் அணை .. | டிடு .. | 136 | 146 | 15 | .. | 136 | 142 | 17 | .. |
| 11 ஓசூர் .. .. | டிடு .. | 128 | 152 | 4 | 2 | 168 | 154 | 17 | .. |
| 12 கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர் .. | 200 | 139 | 6 | 1 | 232 | 223 | 15 | .. |
| 13 தாராபுரம் .. .. | டிடு .. | 128 | 102 | 10 | .. | 128 | 97 | 8 | .. |
| 14 ஈரோடு .. .. | டிடு .. | 104 | 49 | 8 | .. | 176 | 140 | 15 | .. |
| 15 குன்னூர் .. .. | நீலகிரி .. .. | 140 | 100 | 19 | .. | 140 | 94 | 14 | .. |
| 16 திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி .. | 136 | 147 | 21 | .. | 168 | 181 | 33 | .. |
| 17 அரியலூர் .. .. | டிடு .. | 136 | 140 | 18 | .. | 136 | 149 | 24 | .. |
| 18 புதுக்கோட்டை .. | டிடு .. | 112 | 114 | 9 | .. | 160 | 171 | 24 | .. |
| 19 தஞ்சாவூர் .. | தஞ்சாவூர் .. | 132 | 141 | 15 | .. | 132 | 140 | 18 | .. |
| 20 நாகபட்டினம் .. | டிடு .. | 172+ 15* | 174+ 15* | 28 | .. | 172+ 15* | 187+ 15* | 26 | .. |
| 21 மதுரை .. .. | மதுரை .. .. | 304 | 270 | 35 | .. | 336 | 303 | 38 | .. |
| 22 திண்டுக்கல் .. | டிடு .. | 136 | 140 | 13 | .. | 136 | 131 | 39 | .. |
| 23 தேனி .. .. | டிடு .. | 108 | 113 | 7 | .. | 164 | 135 | 12 | .. |
| 24 விருதுநகர் .. | இராமநாதபுரம் .. | 148 | 122 | 12 | .. | 144 | 122 | 17 | .. |
| 25 பரமக்குடி .. .. | டிடு .. | 132 | 118 | 16 | .. | 132 | 100 | 17 | .. |
| 26 காரைக்குடி .. | டிடு .. | 100 | 69 | 3 | 1 | 180 | 117 | 4 | .. |
| 27 பேட்டை .. .. | திருநெல்வேலி .. | 160 | 192 | 18 | .. | 160 | 183 | 23 | .. |
| 28 திருச்செந்தூர் .. | டிடு .. | 128 | 147 | 9 | .. | 128 | 130 | 8 | .. |
| 29 தூத்துக்குடி, பேட்டையில் .. | டிடு .. | 128 | 155 | 16 | .. | 152 | 166 | 8 | .. |
| 30 நாகர்கோயில் .. | கன்னியாகுமரி .. | 136 | 130 | 16 | .. | 136 | 149 | 14 | .. |
| | மொத்தம் .. | 4,492+ 30* | 4,327+ 30* | 482 | 13 | 4,768+ 30* | 4,642+ 30* | 601 | .. |

* புதுச்சேரி மாநிலத்திலிருந்து வந்த மாணவர்கள்.

பொறியியல் அல்லாத வாணிபப் படிப்பு (1965 ஆகஸ்டில் தொடங்கிய படிப்புக்காலம்).

| தொடர் எண்ணும், தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பெயரும். (1) | அமைந்துள்ள மாவட்டம். (2) | அனுமதியளிக்கப்பட்ட மொத்த இடங்கள். (3) | படிப்புக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். (4) | சேர்த்துக்கொள்ளப் பட்ட ஹரிஜன மாணவர்கள். (5) | சேர்த்துக்கொள்ளப் பட்ட ஆதிவாசி மாணவர்கள். (6) |
|---|---|---|---|---|---|
| 1 தொழிற்பயிற்சி நிலையம், ஸ்ரீ சேவா மந்திர் (பெண்டிர்க்காப்பகம்), சென்னை–17. | சென்னை .. | 192 | 124 | 30 | |
| 2 மதுரை .. .. .. | மதுரை .. .. | 96 | 23 | 5 | .. |
| | மொத்தம் .. | 288 | 147 | 35 | .. |

முக்கிய கவனிப்பு.—பொறியியல் அல்லாத வாணிபப் படிப்பில் ஓராண்டுக்கு ஒரு முறை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பொறியியல் வாணிபப் படிப்பில் ஒன்பது மாதங்களுக்கு ஒருமுறை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

600 009 ★ 137849